தாமரை

மலர் [illegible] இதழ் 1 - 12

ஜனவரி - டிசம்பர் 1970

PART. II

சென்னை

1970

Documentation Done

R.K. 4461
P

ாதிகள் இருமுறை
க்.1,1970. 35காசு

தமிழரசு

475



உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2





சேலம் உருக்காலைத் திட்டத் துவக்க விழாவில் தலைமையமைச்சர் திறந்து வைத்த நினைவுத்தூண்.

தமிழரசு

மலர் 1 1970 அக்டோபர் 1 இதழ் 7

இந்த இதழில்

காந்தியடிகள் கனவை நனவாக்கும் தமிழ்நாடு

சேலம் கனிந்தது
நீ எங்கே நான் அங்கே
சிங்கார வீடுகட்டச் செங்கல் சூளை
வாராயோ தோழி
இந்த மாதத்தில் என்ன செய்யலாம்
'தலை' யான செய்தி
காந்தி அண்ணல் காண வந்தால்
பழச்சாறு பருகலாமா

ஒட்டுநரே உரிமையாளர்
சீரணி விழாக்கள்
மற்றும் வழக்கமான சிறப்புகளுடன்

முதல்வர் எழுதும் தொடர் கட்டுரை
இனியவை இருபது

முகப்பில் :
அண்ணல் காந்தியடிகள்
பிறந்தநாள் விழா அக். 2

கடைசி அட்டையில் :
சேலம் திட்டத் துவக்க விழாவில்
தொழிலமைச்சர், தலைமையமைச்சர்,
முதலமைச்சர், ஆளுநர்,
மத்திய இரும்பு உருக்கு அமைச்சர்.

காந்தியடிகள் கனவை நனவாக்கும் தமிழ்நாடு

"உரிமையிழந்து, வாழ்விழந்து கிடந்த நாட்டை உயர்த்தத் தோன்றிய உத்தமர் காந்தியடிகள், களராகிக் கிடந்த சமூகத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டு, அதைப் புதுப்பிக்க உறுதி பூண்டு உழைத்தவர். அவரால் நாம் இன்று உரிமை வாழ்வின் இனிமையை அனுபவிக்கிறோம்.

"அவர் வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டிய தூய்மையும், அன்பும், சமூக உணர்வும், நாட்டுப் பற்றும், தாய் மொழிப் பற்றுமே இன்று நம்மை ஓரின மக்களாகப் பிணைத்து நமக்குள் ஒற்றுமையை வளர்த்து வருகின்றன.

"அவர் இறுதி மூச்சுள்ளவரை போராடினார். அந்நியரை எதிர்த்து அவர் நடத்திய போராட்டந்தான் முற்றுப் பெற்றதேயொழிய, தாய் நாட்டுமக்களிடையே மண்டிக்கிடந்த அறியாமையையும், குறுகிய மனப்பான்மையையும், தன்னலத்தையும், சாதி சமய வேற்றுமைகளையும் எதிர்த்து அவர் நடத்திய போராட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லை.

"போர்க்களத்தில் வீர மரணம் எய்தும் மாவீரனைப் போன்று அவர் மறைந்துவிட்டார், அந்தக்கணத்தில் இருந்து அந்தப் போராட்டத்தை அவர் நம்மிடையே விட்டுச் சென்றுள்ளார். அவர் வழி நடந்து, அவரது தூயஉள்ளத்தையும், தொண்டு மனப் பான்மையையும் பெற்று, ஓயாது உழைத்து அந்தப் போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவது ஒன்றுதான் அவருக்குக் காட்டும் சிறந்த நன்றியாக இருக்கும் என நான் கருதுகிறேன்."

அண்ணலின் நூற்றுண்டு விழாத் தொடக்கத்தின் போது அமெரிக்க மருத்துவ மனையிலிருந்து அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் விடுத்தசெய்தியின் ஒரு பகுதி இது. ஆண்டு இரண்டுக்கு முன்பு அண்ணா விடுத்த செய்தியை, அவர் அடிச்சுவட்டில் இயங்கும் தமிழ்நாடு அரசு செயல் படுத்திக் காட்டுவதில் வியப்பேதுமில்லையே!

அன்று, அண்ணல் அறப் போராட்டத்தைத் தென் ஆப்பிரிக்க நாட்டில் தொடங்கிய போது அவர் உடனிருந்து உற்றுழி உதவியவர்கள் தமிழர்கள்.

இன்று, காந்தியடிகள் கனவையெல்லாம் நனவாக்கிக் காட்டுபவர்களும் தமிழ் நில மக்களேயாவர்.

வகுப்புக் கலவரங்களை, வேற்றுமைகளை அடியோடு வெறுத்தார் அண்ணல். வகுப்பு ஒற்றுமைகளில் முன்னணியில் நிற்கிறது தமிழ்நாடு.

இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களிலேதான் உள்ளது என்றார் உத்தமர் காந்தியடிகள்.

கிராமங்களின் மேம்பாட்டுக்காகத் தமிழ்நாடு நிறைவேற்றிவரும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களை இந்தியாவிலுள்ள எல்லா மாநிலத்தவர்களும் புகழ்ந்துரைக்கின்றனர்.

கிராமக் கைத் தொழிலாகட்டும் கதர்த் தொழிலாகட்டும் எதிலும் தமிழ்நாடு முதன்மை வகிக்கிறது.

கல்லூரிகளிலும் பயிற்று மொழி, தாய்மொழியாக இருக்கவேண்டும். தாய்மொழிக் கல்வியே வலிவான அறிவு வளர்ச்சிக்கு அடித்தளம் ஆகும் என்ற அண்ணலின் கொள்கையைச் செயலாக்குவதில் முன்னணியில் நிற்கிறது தமிழ்நாடு.

பிற்பட்டமக்களின் முன்னேற்றத்தைப் பெரிதும் வேண்டினார் காந்தியடிகள்.

பிற்பட்டமக்களின் நலத்தை வளர்த்திடத் தமிழ்நாட்டில் தனியானதொரு துறை; திட்டங்கள்.

மதுவிலக்குத் திட்டமாகட்டும் தீண்டாமை ஒழிப்பாகட்டும் காந்தியக் கொள்கைகள் எதிலும் ஏனைய மாநிலங்களுக்குத் தமிழ்நாடுதான் முன்னோடி.

ஏழை மக்களுக்குப் பட்டா நிலம் சட்டத்தின் மூலம் வழங்குவதில்—

எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, மின்சார வசதி பெருக்குவதில்—

உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதில்—

எல்லா மக்களும் கல்வியைப் பெற இலவசக் கல்வியை அளிப்பதில்—

காந்தியடிகள் கண்ட புதிய சமுதாயத்தை உருவாக்கி வருகிறது தமிழ் நாடு அரசு!

அவர் கனவை எல்லாம் நம் அரசு நனவாக்கி வருவதில் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் பெருமை உண்டு.

அந்தப் பெருமித உணர்வோடு, அனைத்து இந்தியாவுக்கும் வழிகாட்டும் வழியில் அனைத்துக் கட்சியின் சார்பில் அண்ணலின் பிறந்த நாள் விழாவை மிகச் சிறப்பாக ஆண்டு தோறும் கொண்டாடுகிறது நம் அரசு.

இந்த நேரத்தில் அண்ணலின் நூற்றுண்டு விழாவின் போது கடந்த ஆண்டில் நம் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டதை நினைவு கூர்வோம்:—

"காந்தியடிகளின் இலட்சியங்கள் சாகா வரம் பெற்றவை!

அவர் கொள்கைகள் நிலைத்து நிற்பவை!

அவர் தியாகம், காலத்தின் சுழற்சியில் உதயக் கதிர்போல் ஒளிவிடும் தன்மையுடையது!

அவர் வாழ்வு ஒரு வழிகாட்டி!

அவர் எளிமை; இனிமை—எல்லாமே உலகத்தைக் கவர்ந்தவை!

அவர் எண்ணங்கள் ஈடேற;

ஏழ்மை நாட்டை விட்டகல;

அவர் ஏற்றிய விளக்கின் ஒளி அனைவருக்கும் கிட்ட

பாடுபடுவோம்!

பணிபுரிவோம்!"

அண்ணல் மொழி

ஒரு புறம் மாட மாளிகைகளும் மறுபுறம் புறாக் கூண்டுகள் போன்று இருக்கும் குடிசைகளும் உள்ள அவலக் காட்சி, சுதந்தர நாட்டில் ஒரு நாள் கூட நீடித்து இருக்கக் கூடாது. பணக்காரனுக்கு உள்ளதைப் போன்றே உரிமைகள் ஏழைக்கும் தரப்பட வேண்டும்.

• • •

மாப்பிள்ளை மணவறைக்குப் போவது போல் மக்களுக்காகச் சிறை செல்லப் பழகிக்கொள்ள வேண்டும்.

• • •

தமிழ் மக்கள் எனது குருதிக் கலப்புற்ற உடன் பிறந்தவர்கள். தென்னாப்பிரிக்காவில் உரிமைப் போரில் தமிழ் மக்கள் புரிந்த துணையைப் போல வேறெந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

• • •

பணக்காரனாக இருப்பதைவிட ஏழையாக இருப்பதே பாக்கியம் என்பதை நான் உணருகிறேன். செல்வத்தைவிட வறுமையின் பயன்கள்உண்மையானவை.

• • •

இதுவரை நாம் பெண்களை இழிவாகக் கருதிவந்த காரணத்தால் நாம் இப்போது திறமையான பெண்கள் கிடைக்குமிடங்களில் ஆண்களுக்குப் பதிலாகப் பெண்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். பெண்களுக்குக் கல்வியளித்து நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்வதற்குத் தகுந்த திறமையை அளிக்க வேண்டும். இந்தச் சீர்திருத்தத்தை ஆண்கள் செய்ய வேண்டியது மிக அவசியம். இப்படி அவர்கள் செய்வது பெண்களின் பரிவுக்காகச் செய்வது அன்று. வெகு காலமாகச் செய்யத் தவறிவிட்ட நியாயத்தைச் செய்வதற்கேயாகும்.

5. இன்றைய இத்தாலி . . .

கடல் அலையென உயர்ந்தும், வீழ்ந்தும் இத்தாலி நாட்டின் அரசியல் மாறுதல்கள் அந்நாட்டுக் களம்புகு வீரர்களால் அமைந்த அத்தியாயங்களைப் பற்றி நான் கூறுவதற்கு முன்பு இன்று கண்ட இத்தாலியின் அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளை விவரித்து விடுவது நலமன்றோ !

இன்று இத்தாலியக் குடியரசு, தன் எல்லைக்குள்ளேயே தனி உரிமை ஆட்சி பெற்ற குடியரசான ஸான்மரினேவையும், தனி உரிமை ஆட்சி பெற்ற வாடிகன் நகரத்தையும் பெற்றதாக அமைந்துள்ளது.

நேப்பிள்ஸ், லெக் ஹார்ன், லாஸ்பீஜியா, ஜினோவா, ஸவோனு ஆகிய எழில்மிகு இயற்கைத் துறைமுகங்கள் இத்தாலியின் மலைப்பாங்கான மேற்குக் கடற்கரையை, அணி செய்து கொண்டிருக்கின்றன. தாழ்வான ஏட்ரியாடிக் கடற்கரை, வெனிஸ், பேரி, பிரிண்டிஸி, டாரண்டோ ஆகிய இயற்கைத் துறைமுகங்களால் சூழப் பெற்றிருக்கிறது.

இத்தாலிய நாடு முழுவதும் இத்தாலி மொழி தான் ஆட்சி மொழியாகும். இது பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகிற மொழி. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மொழி பேசப்பட்டாலும், டஸ்கனி நாட்டு மொழியான டஸ்கன் தரம் வாய்ந்த இத்தாலி மொழியெனக் கூறப்படுகிறது. பீட்மாண்ட் பகுதிகளில் பிரெஞ்சு மொழி பேசப்படுகிறது. அயோஸ்டா பள்ளத்தாக்கில் இது இரண்டாவது ஆட்சி மொழியாக விளங்குகிறது. மேல்அடிகே பகுதிகளில் ஜெர்மன் மொழி பரவலாகப் பேசப்படுகிறது. லத்தீன்; வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் பேசப்படுகிறது.

நடைபெறுகின்ற நாளேடுகளாயினும், கடைகளில் காணப்படுகின்ற நூல்களாயினும் இத்தாலிய மொழியிலேயே இருந்திடக் காண்கிறோம். உலகத் தொடர்பிற்குத் தேவையான ஆங்கில மொழியின் உபயோகம் அந்தத் தொடர்பிற்குரிய துறைகளின்பால்தான் காணப்படுகிறதே தவிர, பிற இடங்களில் எல்லாம், தங்கள் தாய்மொழியிலேயே அனைத்தையும் சாதிக்கலாம் என்ற அழுத்தமான எண்ணம் இத்தாலி நாட்டில் இருந்திடுகின்றது.

ரோமன் கத்தோலிக்க மதம் அரசாங்கம் பின்பற்றும் மதமாக அமைந்துள்ளது. இத்தாலியர்களில் 99 சதவிகிதத்தினர் ரோமன் கத்தோலிக்கர்கள்தான்.

1861-ஆம் ஆண்டு தொடங்கி, நடந்து வந்த சட்ட வரம்பிற்குட்பட்ட முடியாட்சியை ஒழித்து, நேர்முக வாக்குமூலமாக இத்தாலிய மக்கள் 1946 ஜூன் 2-ம் நாளன்று குடியரசு உருவாக்கினர். அதே வேளையில் அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட்டது. இது புதிய அரசியல் அமைப்புக்கு ஒப்புதல் அளித்தது. அந்த ஒப்புதல் 1948 ஜனவரி 2-ம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது.

இத்தாலியக் குடியரசுக்கு ஒரு தலைவர் உண்டு. இவர் நாடாளுமன்றத்தில் மேலவை, கீழவை மன்றங்களின் மூன்றில் இரண்டு பகுதியினரால் தேர்ந்தெடுக்கப்படுவார். இவருடைய பதவிக் காலம் ஏழு ஆண்டுகளாகும். இந்த வாக்கெடுப்பில் மேலவை, கீழவை மன்றங்கள் மாத்திரமல்லாமல் இத்தாலியப் பகுதி ஒவ்வொன்றிலிருந்தும் மூன்று பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.

முசோலினியின் வீழ்ச்சி 1943-ல் ஏற்பட்ட பிறகு, முதன் முதல் அமைக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பாசிசத்திற்கு முந்தியிருந்த அரசியல் கட்சிகளின் கூட்டணியான தேசீய விடுதலைக் குழுக்களாக இருந்தன. ஆயினும் 1946-ம் ஆண்டிற்குப் பிறகு அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடந்து இத்தாலியில் உள்ள அரசியல் கட்சிகள் மூன்றாகத் தொகுக்கப்பட்டன. அவை இடதுசாரிக் கட்சி, நடுநிலைக் கட்சி, வலதுசாரிக் கட்சிகளாகும்: இதற்கிடையில், காஸ்பரி என்பாரின் தலைமையில் ரோமன் கத்தோலிக்கர்களுடைய ஆதரவு பெற்ற கிறித்துவ டெமாகிரடிக் கட்சி தனிப்பட்ட மாபெரும் கட்சியாக வளர்ந்துள்ளது.

1948, 1953, 1958 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் இந்தக் கட்சி அதிகாரத்தில் நிலைத்து நின்ற போதிலும் கொள்கைச் சண்டைகள் அவ்வப்போது அதன் வலிவைக் குறைக்கக் காரணம் ஆயின. இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி, அங்குள்ள பலம் பொருந்திய கட்சிகளில் இரண்டாவது கட்சியாகும்.

மேற்கு ஐரோப்பாவிலுள்ள பொதுவுடைமைக் கட்சிகளில் இது தான் மிகப் பெரியதாகும். சோஷலிசக் கொள்கையுடன் அரசியல் விவகாரங்களில் ஈடுபடுகின்ற இரண்டு போட்டிக் கட்சிகள் உள்ளன. ' இவ்விரண்டில் பெரிய கட்சி சோஷலிஸ்ட் கட்சியாகும். இன்னொரு கட்சி சோஷியல் டெமாகிரடிக் கட்சியாகும். இத்தாலிய அரசியல் களத்தில் இந்தக் கட்சிகள் தவிர ரிபப்ளிக் கட்சி, லிபரல் கட்சி, ராடிகல் கட்சி என்ற கட்சிகள் இயங்குகின்றன.

நான் சென்றிருந்த நேரத்தில் இத்தாலியில் கிறித்துவ டெமாகிரடிக் கட்சியைச் சேர்ந்த அரசு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அனைவருக்கும் வேலை வாய்ப்பு; பொருளாதார நிலையில் இத்தாலியின் வடக்கு, தெற்கு இவற்றிற்கு இடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை அறவே நீக்குவது; தொழில் துறைக்கும், வேளாண்மைத் துறைக்குமிடையே உள்ள வருமான ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவது; சமுதாயத்தில் எல்லா நிலையினருக்கும் சம வாய்ப்புகள் அளிப்பது, இந்த அரசின் கொள்கைகள் எனக் கூறப்படுகிறது. சமாதானம், பாதுகாப்பு, சுதந்திரம் ஆகியவற்றிற்குத் தொடர்ந்து பாடுபடுவது தான் இத்தாலியின் அயல்நாட்டுக் கொள்கையாக இருந்துவருகிறது.

நான் சென்றிருந்த நேரத்தில் இந்த அரசுக்கு ஒரு நிலையான தன்மை இருக்குமா என்பது



ஐயப்பாட்டிற்கு உரியதாகவே இருந்தது. இந்த நாடு தனது வேளாண்மைப் பொருளாதாரத்தைச் சமன்படுத்தும் வகையில் பல்வேறு துறைகளில் பரந்த தொழிற்சாலை உற்பத்தித் திறனும் கொண்டுள்ளது. இந்த நாட்டின் மொத்த உழைப்புச் சக்தியில் 38.2 சதவிகிதம் வேளாண்மையிலும், 33.1 சதவிகிதம் தொழில் துறையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. பண்ணைத் தொழில்கள் மத்தியப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் அமைந்துள்ளன. தொழில் வளம் வடக்குப் பகுதியிலே பெரிதும் பெருகியுள்ளது.

இத்தாலிய உழவர்களில் 50 சதவிகிதத்தினர் சராசரி, தலைக்கு 1.2 ஏக்கர் பரப்புடைய சொந்த நிலத்தில் பயிர்த் தொழில் புரிகின்றனர். இத்தாலியத் தொழிற்சாலைத் தொழிலாளர்களில் 76 சதவிகிதம் பேர் சிறு தொழில்களில் அதுவும் இரண்டு பேருக்கு மேற்படாமல் வேலையளிக்கும் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். கனரகத் தொழிற்சாலைகள் மிகப் பெரும் அளவில் அமைந்துள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தத்தொழில் வியப்பூட்டும் வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த நாடு, தனக்கு வேண்டிய இயற்கைப் பொருட்களில் நிலக்கரியை 90 சதவிகிதமும், பெட்ரோலியம், பருத்தி, செம்பு, பாஸ்பேட் கற்கள், கம்பளி, இரும்பு ஆகியவற்றில் மிகப் பெரும் பகுதியையும் இறக்குமதி செய்தாக வேண்டும். இங்கு கந்தகம், பாதரசம், ஈயம், துத்தநாகம், சலவைக் கல் படிவங்கள் வெட்டியெடுக்கப்படும் மிகச்சில கனி வளங்களே உள்ளன.

இந்த நாட்டின் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 2 கோடியே 15 லட்சமாகும். இவர்களில் 1 கோடியே, 90 லட்சம் பேர் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். மிச்சம் உள்ளோர் பயிர்த் தொழிலிலும் ஏனைய பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

நான்கு பெரிய தொழிற் சங்கங்கள் இந்த நாட்டில் உண்டு. அவற்றில் மொத்தம் சுமார் 60 லட்சம் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர் என்று மதிப்பிடப்படுகிறது. ஒரு வாரத்தில் ஆறு நாட்கள் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். ஒரு நாளைக்கு 8 மணி நேரம் அவர்கள் வேலை செய்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 16 விடுமுறை நாட்கள் உள்ளன. அவற்றில் நான்கு நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாட்களாகும். தொழிலாளர்களாக அமர்த்தப்படுவதற்குரிய குறைந்த அளவு வயது 14 ஆகும். மகளிரும் சிறுவரும் இரவு நேரப் பணிகளில் ஈடுபடுவது இத்தாலியத் தொழிற்சாலைகளில் தடுக்கப்படுகிறது.

அரசியலிலும், பொருளாதாரத்திலும் தொழில், விவசாயம் ஆகியவற்றிலும் இத்தகு சூழ்நிலைகளைக் கொண்ட இத்தாலி நாட்டில், செம்மன்றம் (ரெட் ஹால்) என்று அழைக்கப்படும் இடத்தில் தான் ரோம் நகராட்சியின் சார்பில் என்னை வரவேற்றுப் பதக்கம் ஒன்றினைப் பரிசாக அளித்தார்கள். செம்மன்றத்தில் கண்ணைப் பறிக்கும் ஓவியங்களும், காலத்தின் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் சிற்பங்களும் எங்கள் கவனத்தை ஈர்த்தன. அங்கு தோண்டியெடுக்கப்பட்ட சலவைக் கற்கள் ஏதும் வீணாகவில்லை. அனைத்தும் ஏதாவது ஒரு சில உருவில் நின்று கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

ரோம் நாட்டு வீரர்கள் சந்தித்த போர்க்களங்களையும் அதில் விழுப் புண்களை ஏற்ற வீரமறவர்களையும் செம்மன்றத்தில் மணி மண்டபங்களில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்த காட்சியை விவரிக்கவே இயலாது. ஒரு பெரும் சுவர் முழுவதும் தீட்டப்பட்டிருந்த போர்க்களக் காட்சி ஒன்றினைக் காணும்போது நாமும் அந்தப் போர்க்களத்தில் ஒரு பகுதியில் நிற்கிறோம் என்ற உணர்வு தான் எனக்கு ஏற்பட்டது. அந்த ஓவியத்தை அப்படியே புகைப்படமாக எடுத்துக் கொண்டு வந்தேன். அதனை அனைவரும் அறிய வெளியிடலாம் என்ற என் ஆசை நிறைவேறவில்லை. காரணம், எத்தனையோ நூற்றுக்கணக்கான புகைப்படங்களுக்கிடையில் அது சிக்கிக் காணாமல் போய் விட்டதோ, அல்லது என்னுடன் வந்தவர்கள் அதனை எங்கு மறதியாக விட்டு விட்டார்களோ தெரியவில்லை.

செம்மன்றத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சற்று நேரம் ரோமாபுரியின் சாலைகளில் நடக்கலாம் என்று தீர்மானித்தோம். நமது தமிழகத்தில் சாலைகளில் தாராளமாக நடந்து செல்வது என்பது எனக்கு முடியாத காரியம் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஒருவர் கண்ணில் பட்டால் போதும், மளமள வென்று நூற்றுக்கணக்கானோர் என்னைச் சூழ்ந்து கொண்டு [illegible]

பித்துவிடுவார்கள் அந்த நிலை, ரோமில் இருக்காது என்ற தைரியத்தில் சாலைகளில் நடந்து சென்றோம். சுதந்திரம் பெற்ற பறவை போல் எனக்கு ஒரு உணர்ச்சி. ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் சில பேர் எங்களைச் சூழ்ந்து கொண்டு எங்கள் பின்னே வரத் தொடங்கினார்கள். அடடா, இங்கும் நம்மைத் தெரிந்தவர்கள் இருக்கிறார்களே என்று நான் ஆச்சரியம் அடைந்தேன். மகிழ்ச்சியும் கொண்டேன். ஆனால் அந்த ஆச்சரியமும், மகிழ்ச்சியும் நீண்ட நேரம் நிலைத்து நிற்கவில்லை. காரணம், சூழ்ந்து வந்தவர்கள் என் மனைவியையே ஆர்வத்தோடு பார்த்தார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன். என் மனைவியின் பொட்டும், புடவையும் அந்த நாட்டு ஆடவர், பெண்டிருக்கு வியப்புக்குரியவைகளாகத் தோன்றுகின்றன. "பரவாயில்லை! தமிழ்நாட்டில் நான் வெளியில் நின்றால் மக்கள் என்னைப் பார்க்கிறார்கள்; இங்கு எல்லாரும் உன்னைப் பார்க்கிறார்கள்'' என்று என் துணைவியிடம் நான் கூறினேன்.





சில சாலைகளில் நடந்துசென்ற பிறகு மீண்டும் காரில் ஏறி எஃப்.ஏ.ஓ. அலுவலகத்திற்குச் சென்றோம். உணவு, விவசாய முன்னேற்றத்திற்கென அமைந்துள்ள இந்த நிறுவனத்தில் உள்ள அதிகாரிகள் எங்களை வரவேற்று மகிழ்ந்ததோடு அல்லாமல் ஒவ்வொரு அதிகாரியும் என்னிடத்திலே பல கேள்விகளைக் கேட்டு விளக்கங்களைத் தெரிந்து கொள்கிற ஒரு விவாத மன்றத்தையும் அமைத்துவிட்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய டாக்டர் பொதுவால் என்ற பொருளாதார நிபுணர் அங்கு உயர்ந்த அதிகாரியாக இருக்கிறார். எஃப். ஏ. ஓ. நேராகப் பல திட்டங்களுக்குப் பண உதவி செய்ய முடியவில்லை என்றாலும், அகில உலக வங்கியின் மூலமாக விவசாய வளர்ச்சிக்குப் பண உதவி ஏற்பாடு செய்ய முன் வருகிறது என்பதை அவர் விளக்கிச் சொன்னார்.

485

இதனைக் குறிப்பிட்டு, விழாத் தலைவரான முதல்வர் பேசும்போது, ''திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தமிழகம் வரும்போதெல்லாம் ஏதாவது புதுமைகள் செய்து விட்டுத் தான் வருவது வழக்கம்.

சென்ற தடவை வங்கிகளைத் தேசியமயமாக்கிவிட்டு வந்தார். இப்போது ராஜ மானியத்தை நிறுத்தி விட்டு வந்திருக்கிறார்.

சென்ற முறை தமிழகத்திற்கு வரட்சி நிவாரணப் பணிகளுக்காக 16 கோடி ரூபாய் தந்தார்.

இப்போது சேலம் இரும்பாலையைத் தந்திருக்கிறார்.

அடுத்த முறை வரும்போதும் தமிழகத்திற்கு ஏதாவது தந்து விட்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழக மக்கள் நன்றியுள்ளவர்கள். அதனால்தான் திருச்சியிலிருந்து சேலம் வரும் வரை சுமார் 100 மைல் தூரத்திற்கு வழிநெடுகிலும் லட்சக்கணக்கான மக்கள் கூடி நின்று, இந்தியாவின் பிரதமராம், நேருவின் அன்பு மகளை மலர்கள் தூவி வரவேற்றனர். மலர் மாலைகளைக் குவித்தனர்.

அம்மையாரும் காரிலே கிடந்த மலர்களையும் மலர்மாலைகளையும் மக்கள் மீது தூவித் தனது அன்பை வெளிப்படுத்தினார்.

மலர்களை அள்ளி மக்கள்மீது வீசியதுபோல, கஜானாவிலே இருக்கும் பணத்தை எடுத்துத் தமிழக அரசுப் பக்கம் வீசக்கூடாதா என்று கேட்டுக் கொள்கிறேன். மலர்களெல்லாம் பணமாகக் கூடுமென்றால் உங்களுக்கும் தரக் கூடுமென்று, அம்மையார் கூறக் கூடும்.

தமிழக மக்கள் நன்றி மறவாதவர்கள் என்பதனைக் காலை முதல் மக்கள் காட்டிய வரவேற்பிலிருந்து அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்.

இந்த சேலம் ஆலையைக் கொண்டு வந்த பெருமையிலே பாதிப் பங்கிற்குச் சொந்தக்காரரர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் என்றால் மிகையாகாது. நான் நன்றி உணர்வுடன் அவரையும், முன்னாள் காங்கிரஸ் அரசையும், அன்றைய முதல்வர்கள் திரு.காமராஜர், திரு. பக்தவத்சலம் ஆகியோரையும், எங்களது அண்ணா கற்றுத் தந்த பண்புடன் நன்றி கூறவும், பாராட்டவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாகவும் சிறப்பாகவும் இந்தியப் பிரதமருக்கு 4 கோடி தமிழ் மக்கள் சார்பில் நன்றி கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ஆலையில் எங்களுக்கும் பங்கு இருக்க வேண்டும் என்பதைப் பாரதப்பிரதமரிடம் நினைவு படுத்துகிறேன். இதன் மூலம் பல துணைத்தொழில்கள் உருவாக முடியும். அதற்கான அனுமதிகளை உடனுக்குடன் அளிக்க வேண்டுமென்றும் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கோள்கிறேன்.

இப்போது பிரதமருக்கு மூன்று மாங்கனிகளைத் தந்தார்கள். அவை, சாதாரணப் பொருட்களல்ல! ''கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த தமிழ் மக்களின் இதயத்தைத் தான் அளித்திருக்கிறோம்'' என்று தனது பாராட்டையும், தமிழ் மக்களின் நன்றியுணர்வையும் தெளிவாக—சிறப்பாக எடுத்துரைத்தார், தமிழக முதல்வர்.

தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் பேசும்போது, ''தமிழ் நாட்டின் தொழில்துறை வளர்ச்சியில் இது ஒரு புதிய அத்தியாயம். மக்களின் கனவு உண்மையிலேயே இன்று நிறைவேறி விட்டது'' என்றார்.

தமிழகத் தொழிலமைச்சர் திரு. மாதவன் அவர்கள் பேசுகையில் ''உருக்கு, தேவையான அளவு இல்லாத காரணத்தால் தமிழகத்தில் பல சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இருக்கும் இரும்புக் கனிகளும் வெளிநாட்டுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தமிழகத்தில், தொழில் நுணுக்கப்பொறியாளர்கள், டிப்ளமா பெற்றோர் ஆகியோர் சுமார் 15,000 பேர்கள் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். படித்த இளைஞர்கள் மூன்றரை லட்சம் பேர் வேலையின்றி இருக்கின்றனர்.

நிறையத் தொழில்கள் ஏற்பட்டால் இந்த நிலை மாறும். கச்சாப் பொருட்கள் இல்லாமையும், மைய அரசிடம் தொழில்களுக்கான உரிமம் (லைசென்ஸ்) பெறுவதிலுள்ள சிரமம் ஆகியவையே இதற்கு இடையூறாக அமைந்துள்ளன.

இந்த இரும்பாலையைத் தனி வாரியத்தின் கீழ்க் கொண்டுவரும் படியும், இதில் தமிழகத்திற்குப் பங்கு தரும்படியும் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று கூறினார்.

இரும்பாலையைத் துவக்கி வைத்தபிரதமர்திருமதி இந்திரா காந்தி அவர்கள் பேசியதாவது :

''தமிழ் நாட்டிற்கு இது மிக முக்கியமான நாள். மக்கள் மத்தியில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதோடு நாட்டிலுள்ள வெவ்வேறு பகுதிகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளையும் நீக்குவதும் முக்கியமானதாகும்.

கடும்பணி புரியும் தொழிலாளர்கள்

நிர்வாகம்-தொழிலாளர் ஆகியோரிடையே நல்ல ஒத்துழைப்பு இருந்தால்தான் உலகிலேயே நாம் உருக்கு உற்பத்தியில் முன்னணியில் நிற்க முடியும்.

சேலம்உருக்காலையில் உற்பத்தி செய்யப்படும் உருக்கு, இந்த மாநிலம் மட்டுமின்றி நாடு முழுவதின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும்.

இந்த ஆலையின் மூலம் மக்களுக்கு ஒளி மயமான எதிர்காலம் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேன்!'' என்று வாழ்த்தினார்.

சேலத்து மாங்கனிபோல், சேலத்து இரும்பும் பார் புகழப் பெற்றது ; வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இதனை விழாவிற்கு வருகை தந்திருந்த லட்சக்கணக்கான மக்களுக்கு எடுத்துரைத்தார், தமிழக முதல்வர். ''இந்தியாவுக்குப் படையெடுத்து வந்த அலெக்சாண்டர் மன்னருக்கு, அவரிடம் தோல்வி கண்ட மன்னன் போரஸ் ஒரு வீரவாள் தந்தானென்றும், அந்த வீரவாள் சேலத்து இரும்பால் செய்தது, மிக்க வலிமை வாய்ந்தது என்றும் டாக்டர் பாலிகா குறிப்பிட்டிருக்கிறார்'' என்ற வரலாற்று உண்மையினை எடுத்துக் கூறினார், முதல்வர்.

மாவீரன் அலெக்சாண்டரின் வீரத்திற்கு அணிகலனாக அமைந்திட்ட வாளினை உருவாக்க உதவிய சேலத்து இரும்புக்கனி வளம் பற்றி அப்பகுதி மக்கள் நூறு ஆண்டுகளுக்கு மேலாகவே அறிந்திருந்தனர். 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அங்கு வாழ்ந்த அருணாசலம் ஆசாரி என்பவர் இரும்புக் கனிகளை உருக்கி, அதிலிருந்து மண் வெட்டி, அரிவாள் போன்ற மக்களின் அன்றாடத் தேவைக்கான பல இரும்புக்கருவிகளைச் செய்து வந்துள்ளார்.

தமிழகம் வந்த பல வெள்ளையர்களையும் சேலத்து இரும்புக் கனி கவர்ந்தது. கிழக்கிந்தியக்கம்பெனியில் அதிகாரியாகப் பணியாற்றியதிரு.ஜோசய்யாமார்ஷல் ஹித் சேலத்துக் கனிப்பாறைகளிலிருந்து இரும்பு த்யாரிக்கலாமென்பதைக் கண்டறிந்தார். 1830-ல் போர்டோ நோவா இரும்பு-உருக்கு நிறுவனம் என்ற தொழிற்சாலை திரு. ஹித் அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்டது. அங்கு உருக்கப்பட்ட இரும்பிலிருந்து 1850-ல் கட்டப்பட்ட இரும்பு ரெயில்வே பாலம் இன்றும் இங்கிலாந்து நாட்டில் எஃகு போன்ற உறுதியுடன் உள்ளது என்று கூறப்படுகிறது. ஆனால் இந்த நிறுவனம் 1866-ல் மூடப்பட்டு விட்டது.

இதுதான் கனி வளமிக்க கஞ்சமலை



3ள



வட இத்தாலி, பொருளா தாரத் துறையிலே முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்றும், தென் இத்தாலி, பின் தங்கியிருக்கிறது என்றும் ஒரு அதிகாரி கூறியபோது, ''வடக்கும் தெற்கும் எங்கும் இப்படித் தான் இருக்கும் போலிருக்கிறது'' என்று நான் கூறிய பதிலை அனைவரும் சிரிப்பொலியோடு வரவேற்றார்கள்.

அதிகாரிகளில் ஒருவர் இந்திய ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதாகக் கூறப்படுவதாகவும், ஒற்றுமையின்மையும், ஏழ்மையும் நீக்க முடியாத பிரச்சினையாகவே இருப்பதாகவும் கூறப்படுவதைக் குறிப்பிட்டு, அது பற்றி என் கருத்தைக் கேட்டார். அதற்கு நான் சொன்ன பதில்: ''இடதுசாரிகளும், வலதுசாரிகளும் தங்களுடைய கொள்கைகளில் அதிதீவிர மோகம் கொண்டிருப்பதால் வறுமை ஒழிப்புச் சற்று சிரமமாக இருக்கிறது. இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை காணச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன'' என்பதாகும். இறுதியாக அந்தக் கூட்டத்தில் நான் குறிப்பிட்ட வாசகங்கள்: ''இத்தாலிய அரசில் நிலையான தன்மை இல்லை என்றாலும், பொருளாதார வளர்ச்சி செம்மையாக உள்ளது. ஆனால் இந்தியாவைப் பொறுத்த மட்டில் அந்தப் பொருளாதார வளர்ச்சி செம்மையான வகையில் உள்ளதாக நான் சொல்வதற்கில்லை. அதற்கு இத்தாலி கையாண்டுள்ள வழி முறைகளை இந்தியாவும் பின்பற்றவேண்டும் என்ற கருத்தை இந்திய அரசுக்கு நான் தெரிவிப்பேன்.''

எஃப்.ஏ.ஓ. நிறுவனத்தின் வரவேற்பிற்குப் பிறகு மீண்டும் நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம்.

ரோம் நகரத்தில் குடியாட்சிச் சதுக்கம் (ரிபப்ளிக் ஸ்கொயர்) என்ற இடம் மாலை நேரத்தில் கண்டு களிக்க வேண்டிய உற்சாகமிக்க இடங்களில் ஒன்றாகும். அங்கு தான் சித்திரம் எழுதும் ஒரு இளைஞன் எனக்குத் திடீர் நண்பன் ஆனான்.

(தொடரும்).

" எத்தனையோ விழாக்களுக்குத் தலைமை தாங்கியிருக்கிறேனென்றாலும் இந்த விழாவில் தலைமை தாங்குவதில் புதியதோர் உணர்ச்சியும், புதிய மகிழ்ச்சியும் அடைகிறேன்.

சேலம் மாவட்டம் மட்டுமல்ல ! செந்தமிழ்த் திருநாடே இன்று பூரிப்பில் ஆழ்ந்திருக்கிறது என்றால் மிகையாகாது ! '' என்று குறிப்பிட்டார், தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

16—9—1970 அன்று சேலம் கரிச்சிப்பட்டியில் நடந்த சேலம் உருக்காலைத் திறப்பு விழா நாலுகோடித் தமிழர்களின் நீண்டகாலக்கனவு நனவானதைக் கொண்டாடும் திருநாள் என்பது அன்று பேசிய முக்கிய பிரமுகர்கள் அனைவரின் பேச்சிலும் எதிரொலித்ததோடு, சேலம் நகரின் வீதி தோறும், நல்லதொருவிளக்கமாய் அமைந்திருந்தது. வழி நெடுகத் தோரணங்கள், அலங்கார வளைவுகள் முக்கிய சாலைகளை அலங்கரித்திருந்தன. மத்தியானம் 2 மணியிலிருந்தே திருவிழாப் பார்க்கச் செல்வது போல் மக்கள் ஆயிரக்கணக்கில் வந்த வண்ணம் இருந்தனர்.

'' சேலத்து இரும்பு கண்ட செம்மலே! '' என்று முதல்வரை வரவேற்று நின்றது ஒரு வளைவு. ' முத்தமிழ்க் காவலரே வருக' என்றது மற்றொரு வளைவு. இந்தியப் பிரதமரை வரவேற்று நின்றன வேறு சில வளைவுகள்.

'' நீராரும் கடலுடுத்த நில மடந்தைக்கெழில் ஒழுகும் சீராரும் வதனமெனத் திகழ் பரதகண்டமிதில்'' எனும் தமிழ்ப் பண்ணுடன் அன்றைய விழா தொடங்கியது. இந்தியத்தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் உருக்காலையைத் துவக்கி வைப்பதைக் குறிப்பிடும் வகையில், தமிழக அரசின் கோபுரச் சின்னத்தை மத்தியிலே கொண்ட 35 அடி உயர அசோக ஸ்தூபியினைத் திறந்து வைத்தார். இரும்புக் கனியைத் தோண்டுவதைக் குறிக்கும் வகையில் தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் ஒரு பொத்தானை அழுத்த, கஞ்சமலையில் அதிர் வேட்டு வெடித்து, கனிப் பாறைகள் சுக்கு நூறாகச் சிதறி விழுந்தன.

இரும்புக்கனி தர இதயங் கனிந்ததைப் போற்றும் வகையில், பிரதமருக்கும், முதல்வருக்கும், சேலத்து மாங்கனிகளை (வெள்ளியினால் செய்து தங்க முலாம் பூசப்பட்ட மூன்று மாங்கனிகளை) வழங்கினார், சேலம் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. ராசாராம்.

வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட இரும்புக்கனி படிந்துள்ள கற்கள்.

அதைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக, இந்தக் கனிவளத்தினைப் பயன்படுத்த ஆராய்ச்சிகள் பல நடந்தன. இத்திட்டம் பற்றி ஆய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி திரு. தஸ்தூர் அண்ட் கம்பெனியை மைய அரசு பணித்தது. 'பேசிக்' என்ற ஆங்கில அமெரிக்க உருக்குப் பணிகள் நிறுவனம் உருக்காலைக்குத் தகுந்த இடம் எது என்று ஆய்ந்தது.

ஆனால், சேலம் உருக்காலைத் திட்டம் முழு உருப்பெறாமல் ஆய்விலேயே கானல்நீர் போல் போய்க்கொண்டிருப்பதைக் கண்ணுற்ற இன்றையத் தமிழக அரசு இத்திட்டத்தினை விரைவில் செயல்படுத்த மைய அரசை இடையறாது வலியுறுத்தி வந்தது. அதன் பலனாக 1970 ஏப்ரல் திங்கள் 17-ம் நாள், பாராளுமன்றத்தில், சேலம் உருக்காலைத் திட்டம் நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறும் என்ற நற்செய்தியைப் பிரதமர் இந்திரா காந்தி அறிவித்தார். அதன் தொடர் நிகழ்ச்சியாகத் தான் மேலே குறிப்பிட்ட விழா நடைபெற்றது.

110 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படவிருக்கும் இந்த உருக்காலை, முதல் கட்டத்தில் ஆண்டுக்கு 5 லட்சம் டன்னில் தொடங்கிப் பின்னர், படிப்படியாக 10 லட்சம் டன்னுக்கு உயர்ந்து, இறுதியில் ஆண்டுக்கு 30 லட்சம் டன் உருக்கு தயாரிக்கும் நிலையினை எய்தும்.

கனிவளம் நிறைந்த கஞ்சமலை சேலத்திலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 4 மைல் நீளமும் 2 மைல் அகலமும், 3,000 அடி உயரமும் உள்ள இந்த மலையில் சுமார் 14 கோடியே 40 லட்சம் டன் இரும்புக் கனிகள் பாறையாகப் படிந்து கிடக்கின்றன.

அதிலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்திலுள்ள கொடுமலை, தீர்த்தமலைப் பகுதிகளில் சுமார் 17 கோடி டன் இரும்புக்கனிகளும், பெருமலை, ராசிபுரம், நாமக்கல் பகுதியில் சுமார் 19 கோடி டன் கனிகளும் பரந்து கிடப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே தமிழகத்தில் சுமார் 50 கோடி டன் இரும்புக் கனிவளம் உள்ளது எனலாம். இவை சுமார் 150 ஆண்டுகள் வரை தோண்டி எடுக்கும் அளவிற்கு உள்ளன.

பாறைகளை உடைத்து இரும்பை உருக்கி எடுப்பதற்குப் பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக்கல், பாக்சைட், மாக்னசைட், மாங்கனீஸ், பென்டோனைட், நீர், மின்சாரம் ஆகியவை தேவை.

இதில், பழுப்பு நிலக்கரி, நெய்வேலியிலிருந்து கிடைக்கிறது. சுண்ணாம்புக்கல், பாக்சைட், மாக்னசைட், ஆகியவை சேலம் மாவட்டப் பகுதிகளிலேயே ஏராளமாக உள்ளன. தேவையான தண்ணீரை அருகிலேயுள்ள மேட்டூர் அணையிலிருந்து பெறலாம். இதற்குத் தேவையான 97 மெகவாட் மின்சாரத்தை சென்னை மின் உற்பத்தி நிலையத்திலிருந்து பெற முடியும்.

மாங்கனீசை மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த தமுக்காரிலிருந்தும் பென்டோனைட்டை ராஜஸ்தானிலிருந்தும் பெறலாம்.

உருக்காலை நிறுவ ஏழு இடங்களை ஆய்வு செய்ததில் கஞ்சமலைப் பகுதியே மிகவும் பொருத்தமுள்ளதாக அமைந்தது. ஏனெனில் மற்றப் பகுதிகளைவிட இது குறைந்த செலவில் எல்லாப் பொருட்களையும் கொண்டு வரவும், தயாரித்த உருக்கினைத் தேவையுள்ள தென்னகப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லவும் மையப்பகுதியாக அமைந்துள்ளதே காரணம்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே சேலம் உருக்காலைக்குத் தான் போக்குவரத்துச் செலவு மிகவும் குறைவாகயிருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஏற்கனவேயுள்ள உருக்காலைகளில் ரூர்கேலா உருக்காலையில் 1 டன் உருக்கினைத் தயாரிக்க 880 கிலோ மீட்டருக்குப் போக்குவரத்துச் செலவாகிறது. துர்க்காபூர் உருக்காலைக்கு 881 கிலோ மீட்டரும், பொக்காராவிற்கு 842 கிலோ மீட்டரும், பிலாய்க்கு 1,617 கிலோ மீட்டரும் தேவை.

அதேபோல் இனித் தொடங்கவிருக்கும் உருக்காலைகளில், விசாகப்பட்டினம் ஆலைக்கு 3,090 கிலோ மீட்டரும், ஹாஸ்பெட் ஆலைக்கு 3,298 கிலோ மீட்டரும் கோவாவிற்கு 4,216 கிலோமீட்டரும் ஆகும்.

ஆனால் சேலம் இரும்பாலைக்கு 116 கிலோ மீட்டர் அளவே போக்குவரத்து தூரமாகும். மற்ற எல்லா உருக்காலைகளையும் கணக்கிடும்போது இதற்காகும் போக்குவரத்துச்செலவுகள் மிகவும்குறைவாகும். சேலத்தில் மீட்டர்கேஜ், பிராட்கேஜ் ஆகிய இருரெயில்வே வசதிகளும் உள்ளது மற்றொரு சிறப்பாகும்.

கஞ்சமலையில் கிடைக்கும் இரும்புத் தாதுக்களில் பாஸ்பரசும், கந்தகமும் மிகவும் குறைந்த அளவில் உள்ளன. இவ்வகையில் அமைந்திருப்பது தனித்தன்மையுள்ள உருக்கினைத் தயாரிக்க (Special Steel) மிகவும் உகந்தது. இந்த உருக்கு,கார்கள், உந்துகள்தயாரிக்கவும், கார் பாகங்கள் தயாரிக்கவும், ராணுவத் தேவைகளுக்கான பொருட்களைத் தயாரிக்கவும் மிகவும் உகந்தது. தற்போது நமது நாட்டில் இத்தகைய பொருட்களின் உற்பத்தி மிகவும் தேவைப்பட்டவொன்றாக இருப்பதால், இவ்வகை உருக்கு மிக இன்றியமையாத தேவையாக உள்ளது.

ரூர்கேலாவிலுள்ள ஆலை, தட்டையான பொருட்களும், குழாய்களும் தயாரிக்க உதவுகிறது.

பிலாய் ஆலையின் மூலம் ரெயில் தண்டவாளங்கள், கம்பிகளுக்கான தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்றன.

இவ்வாறு வெவ்வேறு பகுதியிலுள்ள ஆலைகள் மாறுபட்ட தன்மையுள்ளதாக உள்ளன. எனவே சேலம் உருக்காலையில் தயாராகும் உருக்கிற்குக் கணிசமான தேவையிருக்கும்;

இத்திட்டம் தொழில் துறையினையும் பொருளாதாரத்தையும் பெரிதும் மாற்றி அமைக்க உதவும். எஃகுத் தொழிலின் வளர்ச்சியினைப்பொறுத்தே பிறதொழில்களின் வளர்ச்சியும் உள்ளது. ஏனைய தொழில்களின் வளர்ச்சிக்கு, இரும்பு எஃகு ஆலைகளின் வளர்ச்சி பெரிதும் துணை நிற்கிறது. இரும்பாலை பிற தொழில்களை வளப்படுத்துகிறது. பிற தொழில்களைப் பயன்படுத்தித் தன்னையும் வளர்த்துக் கொள்கிறது. தொழில்கள் ஒன்றுக்கொன்று உறுதுணை புரிகின்றன. அதற்கு இரும்பும் எஃகும் துணை நிற்கின்றன.

இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் நிகழ்த்திய தொழிலாராய்ச்சியில், பிற தொழில்களைப்பெருக்கும் பேராற்றல் இரும்பாலைகளுக்கே உள்ளது என்பது உறுதி செய்யப்பட்டது. வளர்ந்து வரும் நாடுகள், வளர வேண்டிய நாடுகள் அனைத்தும் இரும்பு எஃகுத் தொழிலின் முதன்மையினை உணர்ந்து, அதில் பேரார்வம் காட்டுகின்றன: இதன் முதன்மையினை உணர்ந்து தென் அமெரிக்காவிலுள்ள பெரு, கொலம்பியா போன்ற நாடுகள், சுட்ட நிலக்கரி போன்ற மூலப் பொருட்கள் இல்லாத நிலையிலும் எஃகுத் தொழிலைத் தொடங்கத் திட்டமிட்டன. இழப்பு ஏற்படும் என்ற ஐயப்பாடான நிலையிலும் கூட எஃகாலைகளைத் தொடங்கி விட்டன. பிலிப்பைன்ஸ், இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், சிரியாபோன்ற வளர்ந்து வரும் நாடுகள் உள்நாட்டிலேயே எஃகுத் தொழிலை வளர்த்து வருகின்றன;

தொழிற்சாலை, குடியிருப்பு நகரம், ரெயில்வே சைடிங், துணைத் தொழில்கள் ஆகியவை சேர்ந்து சுமார் 16,000 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவிருக்கும் சேலம் உருக்காலையில் 5,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். எந்தத் தொழில் துவக்க வேண்டுமென்றாலும், அதன் அடிப்படை உருக்கு. தொழில்கள் பல்கிப் பெருக உருக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

பொதுவாக உருக்காலையில் ஒரு தொழிலாளிக்கு வேலை வாய்ப்பு ஏற்படுமானால், உருக்கைச்சார்ந்து தோன்றும் துணைத் தொழில்கள் மூலம் பத்து முதல் பதினைந்து பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். எனவே உருக்காலை மூலம்5,000பேர்களுக்கும், துணைத் தொழில்களின் மூலம் நாடெங்கும் சுமார் 50,000 பேருக்கு மேலும் வேலை தரவிருக்கும் இந்த சேலம் உருக்காலை;

இந்திய நிபுணர்களாலேயே அமைக்கப்படவிருக்கும் சேலம் உருக்காலை, இந்தியாவிலேயே மிக சிறந்த ஆலையாக அமையும்என்று நம்பப்படுகிறது. மத்தியஅரசின் இரும்பு எஃகு அமைச்சர் திரு. பா. ரா. பகத் அவர்கள் குறிப்பிட்டது போல "தமிழக மக்களுக்கே உரித்தான திறமை, ஒழுங்கு ஆகியவற்றுடன் இந்த முயற்சி முழு வெற்றியடையுமென்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை."

எதிர் காலத் தமிழகத்தின் தொழில்வளர்ச்சிக்குத்தக்கதோர் சுரங்கமாக, சேலம் இரும்பாலை அமைந்திருக்கிறது. தமிழக மக்களுக்கு சேலம் இரும்பாலை பிறந்த சேதி, கரும்பாக இனிக்கும் என்பதில் ஐயமில்லை.

கனிப் பாறைகளை உடைக்க வெடி வைக்கிறார்கள்.

கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் ~ வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

வெளியீடு:

கதர் கிராமத் தொழில் துறை
உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

புதுயுகம் பிறந்தது!

வளர்ந்து வரும் தென்னகத்தில் தொழில் வளர்ச்சிக்கு, சேலம் இரும்பாலை பெரும் வாய்ப்பினை உருவாக்குகிறது. இந்தியாவிலுள்ள பிற இரும்பாலைகளைவிட, சேலம் இரும்பாலை குறைந்த செலவில் பொருள் பெருக்கும் வாய்ப்புடையது. உயர்தரப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குரிய மூலப் பொருட்கள் கிடைக்கின்றன.

ஒரு கனிச் சுரங்கத்தின் பயனும் சிறப்பும் நாம் அதனைப் பயன் படுத்தும் விதத்தைப் பொறுத்துள்ளது. கனி வளத்தை எடுக்கும் முறையும், உருக்கும் முறையுமே ஒரு கனிச் சுரங்கத்தின் லாப, நட்டத்தைப் பெருக்குவதாகும். ஒரு முறையில் உருக்கும் போது கனிவளம் நமக்கு லாபமாக அமையலாம். வேறு முறையில் அது இழப்புக்கு இடமளிக்கலாம். அமெரிக்காவில் தாழ்ந்த ரகக் கனி வளமுடைய சுரங்கங்கள் கூட இரும்பு உற்பத்திக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

சிறு தொழில்கள் மட்டுமல்ல; திட்டங்களின் அடிப்படையான பொறியியல் தொழில்களும் வளர்ச்சியடையும் யந்திர சாதனங்களின் பாகங்களை உற்பத்தி செய்யப் பொறியியல் தொழில்கள் இன்றியமையாதவை.

1961-ல் தொழில் பொருளாதார மதிப்பீட்டுக் குழுவினரால் சிபாரிசு செய்யப்பட்ட பொறியியல் தொழில்களில் சில, உருக்கு வார்ப்புத் தொழில், உருக்கு உலைக்களம், கலப்பு உலோகக் கருவி உற்பத்தி, தனி எஃகுத் தொழில் போன்றவையாகும்.

உருக்கி உருமாற்றத்தக்க இரும்பு வார்ப்புக்கள் மிகவும் தேவைப்படுகின்றன. இருப்புப் பாதை, பேருந்து, தந்தி, மின்சாரம் போன்ற பல்வேறு துறைகளுக்கும் தேவைப்படும் இரும்பு வார்ப்புகள் ஆண்டொன்றுக்கு ஏழாயிரம் முதல் எண்ணாயிரம் டன்களாகும். நாள்தோறும் 10 டன் வீதம் வார்ப்பு இரும்பு உற்பத்தி செய்யப்படுமானல்- நம் மாநிலத்தின் தேவை நிறைவேறும். சேலம்-நெய்வேலி பகுதிகளில் இதற்குரிய தொழிலைத் துவக்கலாம்.

தனி உருக்கு, கலப்பு உலோகக் கருவிகள் 9000 டன் தேவைப்படுகின்றன. தற்சமயம் இவை பெரும்பாலும் பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு மட்டும் ஆண்டு தோறும் 15 லட்ச ரூபாய்க்கு 280 டன் தனி உருக்கு இறக்குமதி செய்கிறது. கலப்பு உலோகத் தொழில் ஒன்று சேலம்-நெய்வேலிப் பகுதியில் தொடங்கப்பட்டால், தமிழகத்தின் தேவையோடு இந்தியா முழுமைக்கான தேவையினையும் நிறைவேற்றி, பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் துணை புரியும். நினைவுக்கெட்டாத காலம் முதல் கிரேக்க ரோமானிய எகிப்திய நாட்டவர்க்கு நம் சேலம் இத்தகைய தரமான எஃகினை வழங்கி வந்திருக்கிறது என்பது நானிலம் அறிந்த உண்மை. மூன்று கோடி ரூபாய் செலவில் 2000 டன் உற்பத்திக்கான ஆலை ஒன்றைத் தொடங்கலாம்.

சாம்பல் நிற இரும்பு வார்ப்புகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பெரிய வகை, நடுத்தர வகை, சிறிய வகை என மூன்று வகைகள். பெரிய வகைக்கான தொழிலைச் சென்னையிலும், நடுத்தர சிறிய வகைக்குரிய தொழிலைக் கோயம்புத்தூரிலும் தொடங்கலாம்.

இருப்புப்பாதை, பேருந்துகள் ஆகியவற்றுக்குத் தேவைப்படும் எஃகு வார்ப்புகள் பேரளவு பிற நாடுகளிலிருந்து

புன்னகை மலர்ந்தது!

தொழில்யுகம் எழுந்தது!

இறக்குமதி செய்யப்படுகின்றன. இத்துறை இந்தியா தன் தேவையை உள்நாட்டிலேயே நிறைவேற்றிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை ! இருப்புப்பாதைத் தளவாடக் குழு வலியுறுத்தியுள்ளது. இருப்புப் பாதைத் துறையின் தேவை ஆண்டு தோறும் 42,000 டன் எஃகு ஆகும். இந்தியாவில் கிடைப்பது 31,000 டன்களே. ஆகவே, மேலும் 13,000 டன் உற்பத்திக்கான தொழிலைச் சேலம் பொறியியல் பகுதியில் ஏற்படுத்தலாம்.

1962-63-ல் நாட்டுக்குத் தேவைப்படும் எஃகு வார்ப்பு 85,000 டன்னாக இருக்கும் என்று கணிக்கப்பட்டது. ஆகவே, 1,58,000 டன் உற்பத்தி செய்யும் தொழில் ஒன்றைச் சேலம்-நெய்வேலிப் பகுதியில் ஏற்படுத்துவதற்குத் தக்க திட்டம் உருவாகும்.

தேசிய நடைமுறைப் பொருளாதார ஆய்வுக் குழு, ஆண்டுக்கு 6,000 டன் எஃகு வார்ப்பு உற்பத்திக்கான ஏற்பாட்டை வலியுறுத்தியது. நாளடைவில் அதைப் பெருக்கிக் கொள்ளலாம். மேலும், யந்திரங்கள், ஊர்திகள், சைக்கிள், ஸ்கூட்டர் ஆகியவற்றின் தேவைகளை நிறைவேற்றுவது பற்றிப் பின்னர் திட்டமிடப்படும்.

யந்திரக் கருவிகள், நெசவாலைக் கருவிகள், அலுமினியத் தொழில், மின் துறைக் கருவிகள், குழாய்கள், மின் காப்புக் கருவிகள் போன்ற பலவற்றை உருவாக்கும் தொழில்களைப் பெருக்குவதற்கு வாய்ப்பு உள்ளது. டீஸல் யந்திரங்கள், சர்க்கரை ஆலைகளுக்குரிய யந்திரங்கள், விவசாயத்திற்குரிய யந்திரங்கள் ஆகிய பலவும் இங்கேயே உருவாக்கப்பட வேண்டும் என்று பொருளாதாரக் குழு பரிந்துரை கூறியுள்ளது.

மாநிலத்தில் பொறியியல் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கு வார்ப்பு உலைக் களங்கள் இல்லாமையே காரணம் என்று தேசியக்குழு தெரிவித்துள்ளது. இத்தகைய தடைகளை நீக்கும் வகையில் எஃகு வார்ப்புகள், கலப்பு உலோக வார்ப்புகள் போன்றவை ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்குச் சேலம் பெரிதும் துணை நிற்கும் என்றும் கோவையும் சென்னையும் சில வகைகளில் துணையாகும் என்றும் தேசியக் குழு கருதுகிறது.

சேலம் இரும்பாலை மட்டுமல்லாமல், சேலத்திலும், கோவையிலும் வார்ப்பிரும்புக் கூடங்கள் அமைக்கப்பட வேண்டுமெனத் தேசியக்குழு கருதுகிறது. தொழில்களைப் பரவலாக்குவது சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று தேசியக் குழு கருதுகிறது. தென்னகத்தின் மாஞ்செஸ்டர் ஆகிவிட்ட கோவையைப் புறக்கணிக்க முடியாதெனவும் குழு கருதுகிறது. அதன் அண்டை மாவட்டம் இயற்கை வளத்தைப் பெருக்கிவருவதால், கோவையில், அடிப்படையான பொறியியல் தொழில்கள் பல தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் தொழில் வாய்ப்புகளை மிகுதியாகக் கொண்டுள்ளது. அதற்கான இயற்கை வளம் சேலத்தில் தேங்கிக் கிடக்கிறது. இத்தகைய வளங்கொழிக்கும் சேலம், நெய்வேலிப் பகுதி தமிழகத்தின் ரூர்கேலாவாகி விடலாம்; ஆக வேண்டும்.

பல்வேறு தொழில்களுக்குத் தேவைப்படும் பல வகை எஃகு வார்ப்புகளை ஆக்கும் உலைக் களங்கள் பல சேலத்தில் ஏற்படவேண்டும்.

துயர்யுகம் தொலைந்தது!

கதரிலும் முதலிடம்

" குறுக்கு முறிய நெய்த கதராடை—கும்பிக்
கொதிப்பை அடக்கி நெய்த கதராடை
மறுத்திதைத் தள்ளாமல் வாங்குவீரே—எங்கள்
வயிற்றின் பசிதணியச் செய்குவீரே "

என்ற கவிமணியின் கவிதைமணி ஓசை வானொலியின் வாயிலாக அக்டோபர் இரண்டாம் நாள் காற்றிலே மிதந்து வந்து கருத்தைக் கவர்கின்றது. சின்னஞ் சிறிய இழைகளை இணைந்து வண்ண ஆடை ஆக்குவது போலச் சிதறிக்கிடந்த இந்திய மக்களைச் சாதியாலும் சமயத்தாலும் பிளவுபட்டுக் கிடந்த இந்திய மக்களை ஒன்றாய் இணைக்க நாமிருக்கும் நாடு நமதென்பதனை உணர்த்த, ஒன்று பட்டாலுண்டு வாழ்வு என்பதனைத் தெளிவிக்கக் காந்தியடிகள் கையாண்ட சுதேசி இயக்கத்தின் முதற் கருவி கதர் இயக்கமே. " ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே " என்ற பாட்டுடன் இல்லங்களில் எல்லாம் இராட்டினங்கள் இயங்கின. மாதரார் கரத்திலும் மற்றையோர் கரங்களிலும் ராட்டினம் தவழ்ந்தன. அந்நிய உடை அணிதல் அடிமை மோகத்தின் அடிப்படை என்பதை உணர்ந்த அண்ணல் காந்தி இந்திய நாட்டுப் பொருள்களையே பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை மக்கள் மனத்திலே எழுப்பினார். மக்களது மானத்தைக் காக்கும் உடைக்கும் மாற்றாரை எதிர்பார்த்து நிற்றல் நாணத்தக்க நிலையல்லவா என்பதை எடுத்துக் காட்டினார்.

சுதந்தர தாகம் மக்கள் மனத்தே பொங்கி எழும்பியது ; விடுதலை வேட்கை கொழுந்து விட்டு வளர்ந்தது ; விடுதலை, விடுதலை என்பது வீட்டிலும் நாட்டிலும் முழங்கியது ; பட்டி தொட்டிகளிலும் அது பரந்தது. இச்சூழ்நிலையில் அகில இந்திய அடிப்படையில் கதர் இயக்கம் செழித்தோங்கி வளர்ந்தது.

தென்னகப் பெரியார் ஈ. வெ. ரா., பேரறிஞர் அண்ணா, தமிழ்த்தென்றல் திரு. வி. க., கவிஞர் பாரதி போன்ற பெருமக்களும் கதர் இயக்கத்திற்கு ஆதரவு காட்டினர்.

நாடு விடுதலை பெற்றது ; காங்கிரஸ் ஆட்சி மத்திய அரசிலும் மற்ற மாநிலங்களிலும் காலூன்றியது ; எனினும் இந்தியத் துணைக் கண்டத்தில் அரசுத்துறைகளுள் ஒன்றாகவே கதர்த்துறையையும் முதன் முதலாக அமைத்த பெருமை தமிழகத்தையே சாரும். அண்ணல் காந்தியடிகளின் ஆசியுடன் 1947-ம் ஆண்டு தமிழக அரசு கதர்த் துறையைத் துவக்கியது.

கடந்த இருபதாண்டுக் காலத்தில் கதர்த் தொழில் தமிழகத்தே படிப்படியாக வளர்ந்தோங்கி வந்திருக்கிறது ; சிற்றூர்களில் வாழும் ஆயிரமாயிரம் ஏழை மக்களுக்குத் தொழில் வாய்ப்பை இத்துறை வழங்கி வருகிறது. உழவர்கள் தம் ஓய்வு நேரத்தே ஊதியம் தேடி வாழ்வை வளப்படுத்தக் கதர்த் தொழில் உதவுகிறது. சோம்பியிராமல், பொன்னான பொழுதை வீணாகப் போக்காமல், சுறுசுறுப்புடன் பல்லாயிரவர் வாழ்க்கைத் துணை வருவாய் பெறக் கதர்த் தொழில் பயன்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரை, இன்று எழுபத்து ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நூற்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். கதர்த் துணி நெசவாளர்களோ ஏறக்குறைய நாலாயிரவராவர். இவ்வாறு நூற்று நெய்யப்பட்ட கதர்த்துணிகளை மக்களுக்கு வழங்க 169 விற்பனை நிலையங்கள் மாவட்டமெங்கும் பணியாற்றுகின்றன. தமிழகத்தில் உற்பத்தியிலும் விற்பனையிலும் முன்னணியில் நிற்பது குமரனை ஈன்ற கோவை மாவட்டமே.

தமிழகத்தே காங்கிரஸ் ஆட்சி மாறியது ; அண்ணாவின் தமிழரசு அமைந்தது ; காந்தியார் வகுத்த கதர்த் திட்டம் என்னாகுமோ எனக் கலங்கினர் சிலர் ; ஏழைகளின் துயர் துடைக்கும் அண்ணா பாமரர்களின் தோழரான பேரறிஞர் அண்ணா, பல்லாயிரக் கணக்கானவர்க்கு வாழ்வளிக்கும் கதர்த் தொழிலுக்கு முன்னைய அரசைவிட ஊக்கமும் ஆக்கமும் முன்வந்து அளித்தார். அறிஞர் அண்ணாவும் அவரது அரசியல் தந்தை பெரியாரும் கட்டி வளர்த்த கதர்த் தொழிலைத் தமிழக அரசு மேலும் போற்றி வளர்க்கத் தலைப்பட்டது. 10 லட்ச ரூபாய் மானியமும் வழங்கியது. இந்த 1970-ம் ஆண்டைய தீபாவளியிலே சுமார் மூன்று கோடி ரூபாய்க்குக் கதர்த்துணி விற்பனையாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது கதர்த்துறையில் வெற்றி மேல் வெற்றியல்லவா ?

தமிழக மக்களின் தேவை கதர்த் துணியைப் பொறுத்தவரையில்நாள்தோறும் பெருகிவருகிறது. இங்கு உற்பத்தி செய்யும் துணிகள் போதவில்லை ; எனவே, உத்திரப்பிரதேசம், மைசூர் முதலிய இடங்களிலிருந்து கதர்த் துணிகள் வாங்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

நூற்கும் தொழிலாளர் நாளொன்றுக்குச் சராசரி ரூ. 2 ஊதியம் பெறுகின்றார் ; நெய்வோர் பெறும் சராசரி நாள் ஊதியம் ரூ. 5.

பஞ்சால் ஆக்கப்படும் கதர்த்துணிகளுடன் கதர்ப் பட்டும் உற்பத்தி செய்யப்படுகின்றது. கடந்த தீபாவளியின் போது ரூபாய் அறுபது லட்சத்திற்கும் மேற்பட்ட கதர்ப்பட்டு விற்பனையாயிற்று. தமிழகத்திற்கு வாழ்வளிக்கும் சீரிய தொழில்களிலே கதர் உற்பத்தியும் ஒன்றென்பதை நாம் மறந்து விடலாகாது.

காந்தியடிகளின் நினைவாக, ஏழைகளுக்கு வாழ்வளிக்கும் கதர்த் தொழிலுக்கு ஊக்கமும் ஆக்கமும் ஊட்டும் வகையில் கதர்-கைத்தொழில் வாரம் கொண்டாடுவது மட்டற்ற மகிழ்ச்சி ; கதர்த் தொழில் வளர உதவுவது மக்கள் கடமை.



சேலம் இரும்பெடுத்துச் செய்திட்ட போர்வாள்

புலவர் கரந்தை கணேசன்

குறிப்பு.—அரசினர் விவரத் தொகுப்புச் சுவடி (Gazette) ஒன்றிலிருந்து இச் செய்தி எடுக்கப்பட்டது.

பேர்வாய்ந்த பிலிப்பென்பான் பெற்ற மைந்தன்,
பெருமைமிகும், அலெக்சாண்டர் என்ற வீரன்
சீர்வாய்ந்த புசாபெலிஸ் குதிரை யேறிச்
சென்றிட்டான் சினத்தீயைக் கண்ணில் தேக்கி,
நீர்சூழ்ந்த சிற்றாசியா- சிரியா, சோலை
நிழல்கிடைக்கா நாடான பாலத் தீனம்,
யார்கண்டும் பிரமிக்கும் பிரமிட் நாடாம்
இறவாத புகழ்கொண்ட எகிப்தும் வென்றான் !

வென்றவனே ஆப்கானித் தானம் சென்றான் !
வீரத்தை ஆங்காங்கே விளைத்து வந்தான் !
அன்றவனே படைத்தலைவன் தன்னை நோக்கி,
'' அடுத்தபடித் துருக்கியரை வீழ்த்த வேண்டும் ;
நின்றபடி மரமிருக்கும் ; நீயும் நானும்
நீள்மரமா நின்றிருக்க ? '' என்றே அந்தக்
குன்றுநிகர் தோள்குலுங்கக் கொதித்தான், '' என்றன்
குறிக்கோளே பொங்குகங்கைக் கரைதான் '' என்றான்.

"வருகின்றான் அலெக்சாண்டர் கைபர் தாண்டி
வரவேற்போம் நா"மென்றே விரைந்தான் அம்பி
''வருகின்றான் வருகின்றான் பகைவன் என்றால்
வரவேற்க ஓடுவதோ வீரம் ! நம்வாள்
தருகின்ற வரும்படியைப் பெறட்டும், இந்தத்
தரையின்மேல் அவன்தலையோ உருண்டோ டட்டும்.
எருவாக அவனுடலின் எலும்பும் தோலும்
இங்கேயே புதையட்டும் !" என்றான் போரஸ்.

பொருதுவதே போராகும், பொருத்த முள்ளோர்
பொருதுதலே அதற்குரிய சட்ட மாகும்.
விருதுபெற வெற்றிபெற வேண்டும் என்றே
வீணாக நெறிதவறிப் புரிகின் றார்போர் !
கருதிடுக வீரமிதே யென்றால் ; கள்ளன்
கருக்கிருட்டில் திருடுவதும் தீரம் தானே !
பெருகிவரும் எண்ணமெனும் சுமையால் போரஸ்
பிடித்திருந்த வாள்விட்டான் பிடிபட் டானே !

நொடிப்போதில் நடந்துவிட்ட நிகழ்ச்சிக் காக
நூறுமுறை துடிதுடித்தான் மான மன்னன் !
துடித்தென்ன ? விழிப்பின்றேல் வீழ்ச்சி யுண்டே !
சூட்டுக்கோல் பகைமறவர் சூழ்ந்தார் நன்றே !
"பிடிபட்டாய் என்றாலும் போரஸ் உன்றன்
பேராற்றல் படையுடைக்கும் ஆற்றல் கண்டேன்,
பிடிபட்டேன் அதனுள்ளே ! அடியேன் சொல்வேன்,
பெரும்பகைவன் யெனினும்நீ வீரன் !'' என்றான்.

இடியேறு போல்வந்த இலைவேல் வீரர் ;
எதிர்வைத்தார், 'இவன்வாளும் முடியும்' என்றார்.
"முடிமோகம் என்தாகம்'' என்றே சொல்லி
முடியதனை அவனெடுத்துப் பார்த்தான் ; வைத்தான் !
கடிதாக அவன்கரங்கள் வாளைத் தூக்கிக்
கண்முன்னே நிறுத்திடவே, நின்று போனான் !
நெடிதாக அவ்வாளின் நுனியைத் தொட்டான் !
நெஞ்சத்தில் வியப்பேற விரைவைத் தொட்டான் !

"செய்திறனால் இதுபெரிதாம், வடித்து வார்த்த
செயல்நுட்பம் நூதனமாம், உறுதி ஒன்றே
பொய்த்திறனே இதிலில்லை யென்று கூறும்
பொய்யல்ல என்வாளும் இதன்முன் இல்லை !
மெய்யமையச் சொல்வாய்நீ ; கேட்கின் றேன்நான் !
மேதினியில் எங்கிதனைப் பெற்றாய் ?'' என்றான்.
"பொய்யெனவே என்புகழைப் புதைத்து விட்டு
புகழ்கின்றாய் ; வாள்பற்றிப் புகலென் கின்றாய் !

தெற்குண்டு, தென்றல்சூழ் மன்ற லுண்டு
திசையுண்ட தமிழுண்டு, தெளிவு முண்டு,
நெற்குன்றம் பலவுண்டு, நேர்த்தி யுண்டு,
நெருப்புக்கண் வீரர்வழி நிலையாய் உண்டு,
சொற்குன்றாச் சுவைப்புலவர் பாட லுண்டு,
சொல்வேன்யான் தமிழ்நாடாம் அதன்பேர் ; ஆங்கே,
கற்குன்றம் சூழ்ந்திருக்கும் சேர ளத்தில்
கஞ்சமலை இரும்பெடுத்து வடித்த" தென்றான் !

சேரளம்—தற்காலச் சேலமே அக்காலச் சேரளமாகும்

எல்லோரும் விரும்புவது, மேன்மையானது, முதன்மையானது

அசோக் லேலண்ட் காமெட்...பயணிகள் போக்குவரத்திற்கு. இந்தியா முழுவதும் அரசினர் போக்குவரத்து நிர்வாகங்கள், மற்ற போக்குவரத்து நிர்வாக உரிமையாளர்கள் விரும்பித் தேர்ந்தெடுப்பது.

சிறப்பான காரணங்கள்

அடிக்கடி நிறுத்திச் செல்வதாயிருந்தாலும் நெடுந்தூரம் செல்வதாயிருந்தாலும். ஏற்படும் பளுவைச் சுலபமாக சமாளிக்கிறது.
அதன் பூரண ஏர்ப்ரேக்குகள் பத்திரமாகவும் உடனடியாகவும் நிறுத்த வகை செய்யும். பராமரிப்புச் செலவு மிக குறைவு...மாற்று உறுப்புகளின் தேவை சொற்பம்...பழுதுகள் ஏற்படுவதில்லை. எண்ணைச் செலவில் மிகச் சிக்கனம்.
இப்போது அறிவீர்கள்...அது சக்தி மிக்க, பத்திரமான வண்டி என்பதையும் அதிக பளு ஏற்றிச்செல்ல சளைக்காதது என்பதையும்.

இதையே வாங்குங்கள். ஓர் அணியையே உருவாக்குங்கள். இதற்காக வருந்தமாட்டீர்கள்

வன்மை...நம்பகம்...சிக்கனம்
உள்ள

அசோக் லேலாண்ட் காமெட்

ASHOK TRUCKS BUSES LEYLAND

தயாரிப்போர்: அசோக் லேலண்ட் லிமிடட், எண்ணூர். சென்னை 57

AL-5003 Rev

இரும்பின் கதை

— மு. காணிமுத்து —

இன்றை நாளில் எத்துறைக்கும் இன்றியமையாப் பொருள்களாக இருந்து வருவன இரும்பும் அதன் கலவையான எஃகும் ஆகும். மனிதனின் கற்காலம் முடிந்ததுமே எஃகின் கதை இந் நிலவுலகில் தொடங்கிவிட்டது எனலாம். இரும்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சிறந்த கலப்பு உலோகமாக இன்று எஃகு திகழ்கிறது. குழம்பாக உலையிலிருந்து வடிக்கப்படும் எஃகு இன்று அழகுக் கோபுரங்களாக, வியப்பை வாரியிறைக்கும் விந்தைப் பாலங்களாக, வானளாவும் கட்டடங்களைத் தாங்கும் விட்டங்களாக, பல தரப்பட்ட கருவிகளாக, எண்ணிலடங்காப் பொருட்களின் மூலமாக உருவெடுத்திருக்கிறது. இத்தகு முக்கியத்துவத்தைப் பெற்ற எஃகு, ஆண்டு ஒன்றுக்குச், சுமார் 26,00,00,000 டன், உலகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

உலோகங்கள் எல்லாவற்றிலும் எஃகு நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையை மிகுதியாக உடையது. கண்ணுடியை அறுக்குமளவுக்குக் கடினப் பொருளாகவும், காகிதங்களைக் கோக்க உதவும் மடிப்புக் கம்பி போன்ற மெல்லிய பொருளாகவும் பயன்படுகிறது. மோட்டார் கார்களின் வில் அச்சைப் போன்ற நெகிழும் தரத்திலும், புகைவண்டிச் சக்கரத்தைப்போல் கடினமான தரத்திலும் எஃகு உற்பத்தி செய்யப்படுகிறது.

இரும்பையும் எஃகையும் மனிதன் எங்கு, எப்பொழுது, எவ்வாறு கண்டுபிடித்தான் என்று வரையறுத்துக் கூற இயலாத அளவுக்கு அவற்றின் வரலாறு தொன்மை பயப்பதாய் இருக்கிறது. இதன்தொடக்கம் பற்றிய செய்திகள் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கிடைக்கிறதேயன்றித் தொடர்பாகக் கிடைக்க வில்லை. என்றாலும் பழம் பெரும் நாகரிகங்களின் தொட்டிலாக விளங்கிய நாடுகளெல்லாம் இரும்பைப் பயன்படுத்தி வந்திருக்கின்றன என்ற உண்மை மட்டும் வலிவு பெற்று நிற்கிறது.

கி.மு. 500-க்கு முன்பே இரும்பிலிருந்து எஃகு செய்யும் வழியை தூரக் கிழக்கு நாடுகள் அறிந்திருந்தன என்று தற்காலத்திய சரித்திர ஆசிரியர்கள் உறுதியாக நம்புகின்றனர். மண்ணுக்கடியிலிருந்த இரும்பை மனித சமுதாயத்திற்குப்பயன்படுத்திய பெருமை தமிழகத்தைச் சார்ந்ததாகும். வளம் கொழிக்கும் பொன்னி நதிக்கரையில் அமைந்திருக்கும் திருச்சிராப்பள்ளியில் தமிழன் இரும்பை எஃகாக மாற்றி உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெருமை எய்தினன் என்று கி.மு.384-ல் வாழ்ந்த அரிஸ்டாட்டில் தன் நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழகத்து எஃகு பல நூற்றண்டுகளாகப் புகழ் பரப்பி நின்றது. டமாஸ்கஸ், டொலிடோ போன்ற நகரத்து வணிகர்கள் தமிழகத்து எஃகை வாங்கிச் சென்று கீர்த்தி மிக்க டெமாஸ்தனிஸ் வாட்களைச் செய்ததாகச் சரித்திரம் பறை சாற்றுகிறது. ஏறத்தாழ 16ஆம் நூற்றண்டு வரை தமிழகத்தில் இவ் வாணிபம் செழிப்பாக நடைபெற்று வந்திருக்கிறது. குறிப்பிட்ட வெப்ப நிலையில் வாளை வெப்பப்படுத்தித் தண்ணீரில் குறிப்பிட்ட நேரம் அவித்தால் வாளின் ஓரத்தில் கடினமும், நீல நிறமும்தோன்றும். இந் நீல நிறம் பற்றித்தான் ''டெமாசின்'' என்ற சொல்லே தோன்றியது. ''டெமாசின்'' என்றல் நீல நிறமுடைய ஓரத்தைக் கொண்ட உறுதியான வாள் என்று பொருளாகும். இத்தகு சிறப்பான முறையை மேல் நாட்டவர்கள் தமிழர்களிடமிருந்து கற்றுக் கொண்டார்கள். இம்முறையின் போக்குகளைப் பற்றித்தான் அரிஸ்டாட்டில் தன் நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார். இம்முறையில் செய்யப்பட்ட வாட்கள் பிடியும், நுனியும் ஒன்றகச் சேருமளவுக்கு வளைக்கவும், அதே போழ்து மிகச் சிறந்த பதமான ஓரத்தைக் கொண்டதாகவும் இருந்தன. இக்காலத்தில் கூட அத்தகைய பதமான வாட்களைச் செய்ய இயலாது எனப் பொறியியல் வல்லார் கருதுகின்றனர்.

அக்காலத்தில் வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களைக் காட்டிலும் எஃகுதான் மிகவும் மதிப்புள்ள உலோகமாகக் கருதப்பட்டது. தமிழகம் பிற நாடுகளோடு கொண்ட பண்டமாற்று வணிகத்தில் எஃகு பெரும் பங்கு வகித்தது. தமிழகத்து எஃகினல் செய்யப்பட்ட அறுவை மருத்துவக் கருவிகள் மிகவும் புகழ் வாய்ந்தவை என்று கி.மு. 400-க்கும் கி. மு. 300-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட மருத்துவ நூல்கள் காட்டுகின்றன.

''ஸ்டீல்'' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருள் ''நிலைத்தது'', ''உறுதியானது'' என்பதாகும். தொடக்ககாலத்திலிருந்தே எஃகு, மனித வாழ்க்கையில் தொடர்புகொண்டிருந்தது என்ற உண்மையை இது வலியுறுத்துவதாக இருக்கிறது. கி.மு. 6000-லிருந்து கி.மு. 5000 ஆண்டுக்குள் செய்யப்பட்ட எஃகுப் பொருட்களும், கட்டில்களும் எகிப்து நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டாலும் அக்காலத்தில் எஃகு பெரும்பாலும் அணி, மணிகள் செய்யக் கூடிய உலோகமாகவே பயன் பட்டது.

திறந்த கணப்பு முறை 1862-ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. 20-ஆம் நூற்றண்டின் தொடக்கத்தில் மின்சாரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் மின் உலை மூலம் எஃகு செய்யப்பட்டது.

இவ்வாறு பல புகழ்ச்சிக்குரிய வரலாற்று வரிகளைக் கொண்ட இரும்பு தமிழகத்தில் சேலம் மாவட்டம் சேர்வராயன் மலைத் தொடர்களில் படர்ந்து கிடக்கிறது. நெய்வேலி நிலக்கரியும், சேர்வராயன்மலை இரும்பும் எதிர்காலத்தில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குப்பெருந்துணை புரியும் என்பதில் நமக்கு நல்ல நம்பிக்கையுண்டு.

"ஏ புள்ளே ! செங்கமலம் ! அங்கே ஏன் வாய் பார்த்துக்கிட்டு நிற்கிறே ! சட்சட்னு செங்கல்களை அள்ளிக் கொலுத்துக்கார் கிட்டே கொடு !......என்ன. சிலுவை முத்து, அது என்ன பனை வெல்லம்னு நினைச்சியா, இரண்டு தட்டுதட்டினு நொறுங்கிப்போக. அது யந்திரச் சூளை செய்த கல்லு அய்யா ! உன் சாந்துக் கரண்டிதான் உடையுமே ஒழிய செங்கல்லு உடையாது ! ஆமாம்....!''

''அது என்ன சாமி, அதிசயச் செங்கல், உடையாத செங்கல்!"

'' வாங்க ! வாங்க ! ஹெட் கிளார்க் அய்யா வாங்க ! எங்கே இந்த வெயிலிலே சைக்கிளில் கிளம்பிட்டீங்க ?''

'' கோடம்பாக்கம் புதூரிலே வீடு கட்டலாம்னு உத்தேசம் ! அதுக்காக அலைஞ்சிகிட்டிருக்கேன் ! ஆமா...... உடையாத செங்கல்னு சொன்னீங்களே ! அது என்ன ?''

'' அதுவா, வந்து... முதலில் உங்க காலடியிலே கிடக்கிற செங்கல்லைத் தூக்கிப் பாருங்க!''

'' அடேயப்பா எவ்வளவு கனம் ! ''

'' ஆமாம் மூன்றரைக்கிலோ எடை ! சாதாரணச் செங்கல்லை விட 10 மடங்கு அதிகப் பலமுள்ள செங்கல் அது !''

''நல்ல சரக்குத்தான் எங்கே வாங்கினீங்க ?''

'' திருமழிசையிலே அரசாங்க யந்திரச் செங்கல் தொழிற்சாலையிருக்கு. அங்கே வாங்கினேன்!''

'' என்ன சாமி காது குத்துறீங்க ! அரசாங்கச் செங்கல் சூளையா ? ''

'' பேப்பர் படிச்சாத்தானே உலக விஷயம் தெரியும். வீட்டை விட்டா ஆபீசு ! ஆபீசிலிருந்து சைக்கிளை மிதிச்சா வீடு ! சொல்றேன் கேட்டுக்குங்க. அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் இருக்காருல்லே, அவரு 1968 ஏப்ரலில் அதைத் துவக்கி வைச்சாரு ! யூகோசுலாவியாவிலேயிருந்து வந்த யந்திரத்தை வைச்சு சுமார் 75 லட்ச ரூபாய் முதலீடு போட்டுத் தமிழ் நாடு அரசு துவங்கியதுதாங்க இந்தத் தொழிற்சாலை. நவீன முறையிலே, அங்கே செங்கல் தயாரிக்கிறாங்க. ஒரு நாளைக்கு சுமார் 66,000 செங்கல் தயாரிக்கலாம். இதுவரைக்கும் 176 லட்சம் செங்கல் தயாரிச்சிருக்காங்க. பதினாறேகால் லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆகியுள்ளது. அது மட்டுமல்ல, இன்னும் கொஞ்ச நாளிலே இதே மாதிரி இன்னொரு செங்கல் தொழிற்சாலையையும் தமிழக அரசு துவக்கப் போறாங்களாம் !"

'' அது சரி சாமி ! விலை எப்படி ?''

'' ரொம்ப மலிவு ; ஆயிரத்துக்கு 90 ரூபாய் !''

'' அதை எப்படிச் சாமி மலிவுன்னு சொல்றீங்க ! வெளிச் செங்கல்களெல்லாம் ரூ. 80 85-க்கும் கம்மியாத்தானே விற்குது !"

'' அங்கேதான் இருக்கு விஷயம் ! நான் அப்ப சொன்னேனே இது ரொம்பப் பலமான செங்கல்னு! சாதாரணச் செங்கல்கள் ஒரு சதுர அங்குலத்திற்கு 120 பவுண்டு பாரத்தைத்தான் தாங்கக் கூடியது ! ஆனா யந்திரச் செங்கல் 6,000 பவுண்டைத் தாங்கும். இது நல்லா பலமா இருக்கிறதனாலே, சில சுவர்களுக்கு மற்றச் செங்கல்கள் ஒன்றரையோ, அல்லது 2 செங்கல் பத்தியோ வைப்பதற்குப் பதில் இதில் ஒரு பத்தி வைச்சால் போதும். அதோட இந்தச் செங்கலுக்கு உட்பக்கம் மட்டும் சிமிண்டோ சாந்தோ பூசினால் போதும். ! வெளிப் பக்கம் பூசவே தேவையில்லை !''

'' நீங்க ஒரு பக்கம் சாமி ! வெளிப்பக்கம் பூசாக்காட்டி வீடு அழகாவேயிருக்காதே !"

'' நீங்கதான் ஒரு கர்நாடகப் பேர்வழி ! உலகத்திலேயே வேறு எந்த நாடுகளிலும் செங்கல் சுவர் மீது சாந்து பூசுவதே கிடையாது தெரியுமா ? அழகு கெட்டிடும்னு அப்படியே விட்டு விடுவாங்க ! நம்ம ஊரிலேதான் செங்கல் சுவர் மீதும் பூசறாங்க! ஆனா சாதாரண செங்கல்களுக்கு அது தேவையாயிருக்கலாம் ! யந்திரத்தில் செய்த செங்கல்லுக்கு அது தேவையில்லை ! அதோடே மாடர்ன் கட்டிடக் கலையின் அழகே அப்படியே வெளியே பூசாமே விடுறதுதான் அய்யா! சந்தேகமிருந்தா அண்ணா நகரிலே பெரிய அதிகாரிங்க கட்டுறாங்களே, அந்த வீட்டைப் போய்ப் பாருங்க ! பாதி வீடுகளிலே செங்கல்லைச் சுற்றி ஒரு ' ஒயிட் லைன் ' அடிச்சிருப்பாங்க அவ்வளவுதான் ! அது வீட்டின் அழகைப் பிரமாதமா தூக்கிக் காட்டும் !

''அப்போ மலிவுதாங்கிறீங்க''

'' ஆமா அய்யான்னா ! எட்டுக்கு ஒரு பங்கு மீதம் ஆகும் இந்தச் செங்கல்லைப் பயன்படுத்தினா ! அதாவது மற்றச் செங்கல்களைப் பயன்படுத்தினா 8,000 ரூபாய் ஆனா இதில் 7,000 ரூபாய்க்கே கட்டிடலாம்."

என்ன செங்கமலம் ! மச்சான் கிட்டே கொஞ்சறே! கல்யாணம் பண்ணினத்துக்கு அப்புறம் கொஞ்சலாம் ! இப்போ வேலையைக் கவனி ! வெயிலேறுமுன்னாலே கிடுகிடுன்னு நடக்கட்டும் !''

'' ஆமா, ஒரு சந்தேகம் ! இந்தச் செங்கல்களை யாராவது இதுக்கு முந்தி வாங்கிப் பயன்படுத்தியிருக்காங்களா ? நீங்கதான் முதலிலேயா?........''

''கல்பாக்கம் அணுமின்சார நிலையம் இருக்குதில்லா, அதற்கு வாங்கியிருக்கிறாங்க. அரக்கோணம் தமிழ் நாடு அரசாங்கத் தொழிற்சாலைக்கு வாங்கியிருக்காங்க. இப்படி அரசாங்கம், தனியாருன்னு பலபேர் வாங்குறாங்க. இப்போ கைவசம் 4½ லட்சம் செங்கல் இருக்கு. ஆனா ஆர்டர் எவ்வளவுக்கு வந்திருக்கு தெரியுமா ? ஐந்து லட்சத்துக்கு வந்திருக்கு ! நல்ல கிராக்கி !''

'' கிராக்கி வந்தா விலையைக் கூட்டிடுவாங்க இல்லையா ?''

'' ஊகூம் ! இந்தத் தொழிற்சாலையை அரசாங்கம் துவக்கியதன் நோக்கமே, செங்கல் விலையைக் கட்டுப்படுத்தணுங்கறத்துக்குத்தான். நீங்க போனாலும் ஒரே விலைதான். உங்க பையனை அனுப்பினாலும் ஒரே விலைதான் !''

'' எனக்குப் பையன் இல்லையே ! அவ்வளவும் பொண்ணுங்கதான் ! ''

'' அடடா ஒரு பேச்சுக்குச் சொன்னேங்க ! "

''அது சரி இந்த செங்கல் தொழிற்சாலையை நீங்க பார்த்திருக்கீங்களா ?

'' நான் நேரிலே போய்தானே ஆர்டர் கொடுத்தேன் ! பிரம்மாண்டமா இருக்கு !''

'' எப்படி வேலை நடக்குது !''

'' முதலில் களியைத் தோண்டி எடுத்து தனி ரெயிலில் (சிறிய டீசெல் ரெயில்)தொழிற்சாலைக்கு எடுத்து வாறாங்க ! அப்புறம் அதை மணலோடு கலந்து யந்திரங்களில் கொட்டுறாங்க ! அது மணலையும் களியையும் கலந்து நன்றாக அரைச்சுச் செங்கல்லா அறுத்து அனுப்புது. அதை

நர்ஸ் ! என்ன இது ! இந்த 'பெட்' காலியாயிருக்கு ! ஆபரேஷன் செய்றதுக்காக வந்திருந்த அந்த பேஷன்ட் எங்கே போயிருக்கிறாரு ?

ஒண்ணுமில்லே டாக்டர் ! இதுதான் நீங்க செய்யப்போற முதல் ஆபரேஷன்னு சொன்னேன்../.அவ்வளவுதான் அந்த மனுஷர் ஓடியே போயிட்டாரு !

மூன்று நாட்கள் காயவைக்கிறாங்க ! அப்புறம் காளவாய்க்குள்ளே கொண்டு போய் வைக்கிறாங்க ! அங்கே எட்டு நாட்கள் சுட்ட பின் வெளியே கொண்டு வர்றாங்க ! முக்கால்வாசி வேலைகள் யந்திரத்தினாலேயே நடக்கின்றன.''

'' ஒரே ரகச் செங்கல்தானா?''

'' மூன்று ரகம். ஒண்ணு 9 அங்குல நீளம், நாலரை அங்குல அகலம், மூன்று அங்குலஉயரம். அடுத்தது 190 மில்லி மீட்டர் நீளம், 90 மில்லி மீட்டர் அகலம், 90 மில்லி மீட்டர் உயரம் உள்ளது. இன்னொரு வகை சற்றுக் கனம் குறைந்தவை. அவை மாடிகள் கட்டுவதற்காகத் தயாரிக்கப்படுகின்றன. அதுபோக மஞ்சள், சிவப்பு, மண் நிறம், நீலம், பச்சை இப்படிப் பல நிறங்களிலும் செங்கல் தயாரிக்கத் திட்டம் போட்டிருக்காங்க. மாதிரி செங்கல்களைப் பார்த்தேன். அற்புதமாக இருக்கு ! அடுத்த வருடம் அதைத் தயாரிக்கப் போறாங்களாம். வீட்டின் முன்புறப் பகுதிகளை அலங்கரிக்க அவை பிரமாதமாக இருக்கும்.!"

'' இந்தத் தொழிற்சாலை எந்தப் பக்கம் இருக்குன்னீங்க ?''

'' திருமழிசையில் இருக்கு. சென்னையிலிருந்து 16 மைல் இருக்கும். பூந்தமல்லியிலேயே இருந்து 2 மைல் தொலைவில் செம்பரம்பாக்கம் ரோட்டு மேலே இருக்குது.''

'' ஆமா, அவ்வளவு தூரத்திலே இருந்து கொண்டு வர வண்டி வசதி ?''

'' அதைப்பற்றிக் கவலையை விடுங்க ! அவங்களே லாரி வைச்சிருக்காங்க. அதோடே காண்டிராக்ட் லாரிகளும் ஏற்பாடு பண்ணித் தருவாங்க. எல்லாம் நியாயமான கூலிதான் !''

''நீங்க சொன்னதைக் கேட்டப்புறம் என் வீடு கட்டக்கூட இந்த அரசாங்க யந்திரச் செங்கல்லைத்தான் வாங்கணும்னு முடிவு பண்ணிட்டேன் ! அப்புறம் நான் வரட்டுங்களா ?''

'' போயிட்டு வாங்க. வணக்கம் !''

'' வணக்கம் !''

ஓட்டுநரே உரிமையாளர்

திருவேங்கடம் பேசுகிறார்:

நான் கனவிலும் நினைக்கவே இல்லை! இப்ப நினைச்சாக் கூட, கனவு மாதிரி என் கண் முன்னே நிழலாடுது!

இந்தத் தொழிலுக்கு நான் வந்து சேர்ந்து பதினொரு வருசம் ஆகுது. நான் முதலில் டாக்சி டிரைவரா சேர்ந்தப்போ, வருங் காலத்தில் சொந்தத்தில் ஒரு டாக்சி வாங்குவேன்னு நினைச்சுப் பார்த்தது கூடக் கிடையாது. அவ்வளவு ஏழ்மை! தரித்திர மான நிலைமை!

"டாக்சி டிரைவர்னா அவனுக்கென்ன? தினம் பத்து ரூபாய் சம்பாதிக்கிறான்! மாதம் 300 ரூபாய்க்குக் குறைவில்லை!" என்று சாதாரணமா பொது மக்கள் எங்களைப்பற்றி நினைக்கிறாங்க. அது ஒரு தப்பான கணக்குங்க!

மாதத்திலே எனக்குப் பன்னி ரெண்டு அல்லது பதின்மூன்று நாள்தான் டாக்சி டிரைவர் வேலை கிடைக்கும். ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் வீதம் மாதம் 120, 130 சம்பாதிப்பேன். காலையிலே வண்டியிலே ஏறி உட்கார்ந்தா இரவு பத்து மணி வரை வேலை இருக்கும். ஒரே பேஜாரு. வேளா வேளைக்குச் சாப்பிட முடியாது. பார்க்கிற ஓட்டலில் ஏதாவது தின்னு வைக்கணும். அந்த வகையில் தினம் ஐந்து, ஆறு ரூபாய் போயிடும். வீட்டுக்குப் போய்ச் சேரும் போது 4 ரூபாய் தான் கையிலே இருக்கும். ஆக 120 ரூபாய் சம்பாதித்தாலும் வீட்டுக்கு மாதம் சேருவது சுமார் 60 அல்லது 65 ரூபாய்தான்.

ஏன் இப்படீன்னு கேட்பீங்க. சென்னையிலே சுமார் 2,000 டாக்சிகள் இருக்கின்றன. ஆனால் டிரைவர்கள் சுமார் 17,000பேர் இருக்கிறார்கள். வெளியே கார் ஓட்டிக்கிட்டு இருக்கிற டிரைவருக்கு, திடீர்னு டாக்சி ஓட்டணுங்கிற ஆசை வந்திடும். எங்க முதலாளிங்களும் உடனே புது டிரைவருங்களைப் போட்டுடுவாங்க. அதனால் எங்களுக்கு மாதம் முழுசும் வேலை கிடைப்பதில்லை.

இப்படி ஒரு மோசமான நிலைமையில் வாழ்ந்தேன். எனக்கு மனைவியும் இரண்டு பெண்களும் இருக்கிறாங்க. அவங்களுக்குச் சரியாச் சாப்பாடு போட முடியாமே, துணி மணி வாங்கிக் கொடுக்காமே திண்டாடிக்கிட்டிருந்தேன். வாழ்க்கை முழுசும் இப்படியே நரகமா வாழ வேண்டியது தானா என்று வெறுப்பாயிருந்தது.

முன்பு திரு. என். வி. நடராசன் அவர்கள் எங்க சங்கத்திற்குத் தலைவரா வந்ததும் ஒரு புதுத்திட்டம் கொண்டு வந்தாரு! அதுதான் டாக்சி டிரைவர்கள் தவணை முறையில் டாக்சி வாங்கும் திட்டம். கூட்டுறவு முறையில் இந்தக் கார்களை வாங்கி டிரைவர்களுக்குக் கொடுக்கலாம்னு அண்ணா தீட்டிய திட்டம் அது. இந்தத் திட்டத்தின் மீது கலைஞர் கருணாநிதியும் (அப்போ அவரு பொதுப் பணி அமைச்சரா இருந்தாரு) என். வி. என். னும் ரொம்ப அக்கறை காட்டினாங்க. ஏன், இப்பக் கூட, திரு. என். வி. என். எங்களை மறக்கலீங்க. அவர் அமைச்சருன்னே நினைக்க மாட்டாரு. திடுதிப்புன்னு எங்களைப் பற்றியும் சங்கத்தைப் பற்றியும் விசாரிப்பாரு. உரிமையோடே விரட்டுவாரு. மிரட்டுவாரு.

அவர் முயற்சியினாலே துவக்கப் பட்ட இந்தத் திட்டம், டாக்சி டிரைவர்களாகிய எங்கள் அனைவருக்கும் புது வாழ்வையும் புதிய நம்பிக்கையையும் கொடுத்திருக்குதுங்க.

இந்தத் திட்டப்படி முதலில் 'டாக்சி டிரைவர் கூட்டுறவு சங்கத்'திற்கு ரூபாய் 3,000 கட்டணும். உடனே நமக்கு புது ஃபியட் டாக்சி ஒண்ணு தந்திடுவாங்க. அப்புறம் தினம் தினம் தவணைத் தொகையைக் கட்டி 60 மாதத்துக்குள் மொத்தத் தொகையையும் அடைச்சுடணும்.

இந்தத் திட்டத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதும் எனக்கு இதில் சேர்ந்து சொந்த டாக்சி வாங்க மிகவும் ஆசையாக இருந்தது. ஆனால் பணத்திற்கு எங்கே போவது? நான் கையைப் பிசைந்தேன்!

என்னுடைய கஷ்டத்தை உணர்ந்த எங்க அப்பா—அவர் ரெயில்வேயில் கூலியா வேலை பார்க்கிறார்—அவரு கஷ்டப்

பட்டுச் சேர்த்த பணம் ஆயிரம் ரூபாயை எனக்குத் தந்தார். நான் முதலில் அதைக் கொண்டு வந்து சங்கத்தில் கட்டினேன். அப்புறம் சிறுகச்சிறுக மிச்சம் பிடித்து மீதி இரண்டாயிரம் ரூபாயையும் கட்டினேன்.



1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ம் நாள் என் வாழ் நாளிலேயே மறக்க முடியாத பொன்னான நாள். அன்று தான் நம்ம முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எனக்கும் என் போன்ற தோழர்களுக்கும் எங்கள் சங்கச் சார்பிலே 25 புத்தம் புதிய ஃபியட் டாக்சிகளை வழங்கினார். எனக்கும் ஒரு டாக்சியை-எனக்கென்று சொந்த டாக்சியை வழங்கினார்.

அது மட்டுமா, அன்று டாக்சிகளை வழங்கியதும் ஒரு டாக்சியிலே ஏறிச் சவாரி செய்தாரே, அது என்னுடைய டாக்சிதாங்க! முதலமைச்சரை அருகில் வைத்து ஓட்டிச் செல்வதற்கு எனக்குக் கிடைத்த பாக்கியத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதுங்க.

இப்போ நான் வெறும் டாக்சி டிரைவர் இல்லீங்க. எனக்குன்னு ஒரு சொந்த டாக்சி இருக்கிறது. எனது மூன்றாவது பெண் அது. ஆமா, என் பெண் போல-கண் போல அதைப் பாவிக்கிறேன், நான்.

முன்பெல்லாம் மாதம் பன்னிரண்டு, பதின்மூன்று நாள்தானே வேலை இருக்கும்னு சொன்னேன். இப்போ மாதம் 5 நாள் லீவு எடுத்துக்கிறேன். மீதி 25 நாள் வேலை இருக்கு. 25 நாட்களும் தினம் நான் தவணைப்பணம் கட்டியது போக மீதி 10 ரூபாய் கிடைக்கும். ஆக மாதம் ரூ. 250 கிடைக்குது. அதோடு மாதம் ஆக ஆக, தவணைத் தொகை தானாகக் குறையும் ; எனவே போகப் போக இன்னும் அதிகத் தொகை கிடைக்கும்.

ஐந்து நாள் லீவு எடுப்பேன்னு சொன்னேனே ! அப்போ வண்டி சும்மா தூங்காதுங்க. வண்டி வாங்காத மற்ற உறுப்பினர்களுக்கு என் வண்டியைக் கொடுப்பேன்.

வண்டி வாங்காத உறுப்பினர்கள் என்று சொன்னேனே ! ஆமாம். எங்கள் கூட்டுறவுச் சங்கத்தில் மொத்தம் 135 பேர்கள் உறுப்பினர்கள். இன்னும் 100 பேர் ரிசர்வ் பட்டியலில் இருக்கிறார்கள். இதுவரை நாற்பது பேருக்கு டாக்சிகள் வழங்கப்பட்டுள்ளன. (15 பழைய டாக்சிகள்) அடுத்த மாதம் இன்னும் 25 புதிய ஃபியட் டாக்சிகள் வருகின்றன. 1971 முடிவதற்குள் சுமார் 250 டாக்சிகள் அதாவது எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள், எங்களது கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபடும் தலைவர் ஜி. நீலமேகமும் துணைத்தலைவர் ராமலிங்கமும். டாக்சிகள் வாங்குவதற்குத் தேவையான பணத்தை, கூட்டுறவு வங்கி கடனாகக் கொடுத்து உதவுகிறது. வெறும் டாக்சி டிரைவர்களாக இருந்த எங்களை டாக்சி சொந்தக்காரர்களாக்கிய புரட்சித் திட்டமிது.

தினம் தினம் டாக்சியை எடுக்கும்போது என் மனம் அன்புத் தெய்வம் அண்ணாவை நினைவு கூர்கிறது. தந்தையைப் போன்ற பரிவுடன் எங்கள் நல்வாழ்வைப் பேணும் கலைஞரையும், திரு என். வி. நடராசனையும் நினைக்கின்றது. நன்றி உணர்வால் என் நெஞ்சம் நிறைகின்றது.

தமிழகத்துச் சிலைமீது வெளிநாட்டார் மோகம் !

தமிழகத்துச் சிற்பக்கலைக்கும், செயல் திறனுக்கும் பழங்காலந் தொட்டுச் சிறப்புண்டு. ரோமாபுரி வணிகர்கள், தமிழகத்திலிருந்து முத்துடன், வரலாற்றுச் சின்னமான சிலைகளையும் விருப்பமுடன், வாங்கிச் சென்றதாகச் சரித்திரம் கூறுகிறது. அந்தப் பழம் பெருமையை இன்றும் காக்கிறது தமிழகம்.

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, 'ப்ரான்ஜ்' (Bronze) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் வெண்கல உலோகத்தில் செய்யப்பட்ட 400 சிலைகளைத் தனக்கு அனுப்பும்படி ''இந்திய ஏற்றுமதி அபிவிருத்திக் கழகம்'' தமிழக அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளது.

வெளி நாடுகளில் நடைபெற்ற உலோகச் சிலைக் கண்காட்சிகள், இந்தச் சிலை ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்திருக்கின்றன. இந்தத் தகவலைத் தமிழகச் சட்டத் துறை அமைச்சர், திரு. மாதவன் அண்மையில் சட்டமன்றக் கூட்டத்தில் தெரிவித்தார்.

561

பொம்மை

கைத்தொழில் அங்காடியை அலங்கரிக்கும் அழகுப் பதுமைகள் போன்ற அந்தப் பொம்மைகள் அனைவரையும் கவர்கின்றன.

சேலை உடுத்தி நாணி நிற்கும் தமிழகப் பெண்மணியைப் பிரதிபலிக்கும் பொம்மை, கேரளத்துக் கட்டழகியை நினைவுபடுத்தும் பொம்மை, காஷ்மீரத்துக் கன்னி, மணிபுரி மாது, பரத நாட்டியம் ஆடிடும் பாவை, வேய்ங்குழல் ஊதி நிற்கும் கண்ணன், கதகளி உடையிலே களி நடம் புரியும் கலைஞன் ஆகிய இன்னபிற உருவங்களை அப்படியே தத்ரூபமாகப் படம் பிடித்துக்காட்டும் பல பொம்மைகள் எவரையும் மயக்க வல்லன. இல்லத்தை எழில்படுத்த இதனை எடுத்துச் செல்பவர் பலர். இந்த நாட்டின் கை வண்ணத்தின் நினைவுச் சின்னமாக, இதனை விலை கொடுத்து வாங்கிச் செல்லும் வெளி நாட்டவர் பற்பலர்.

இதனை எப்படிச் செய்வது ? அது தெரிந்தால் நாமும் வீட்டிலேயே இதுபோல் பல கலை வண்ணப் பொம்மைகளைத் தயாரிக்கலாமே என்று ஏங்கிடும் ஏந்திழையர் பலர்.

ஆமாம் ! இந்தப் பொம்மைகளைத் தயாரிப்பது சிறந்ததொரு குடிசைத் தொழில். பெண்டிர் தமது ஓய்வு நேரத்தைப் பயனுறச் செலவிட நல்ல கைத் தொழில். அதிலும் பொறுமையின் சின்னமாக விளங்கும் பெண்டிர்க்கு அவர்தம் கை வண்ணத்தினை வெளிப்படுத்திட அருமையான கலையும் கூட !

இந்த நல்ல நோக்கத்தின் அடிப்படையில்தான், சென்னை ஹாமில்டன் வாராவதியிலுள்ள காவலர் இல்லப்பகுதியில் ஒரு பொம்மைப் பயிற்சி நிலையத்தை நிறுவியிருக்கின்றனர், தமிழ்நாடு அரசின் மகளிர் நலத்துறையினர்.

1970, பிப்ரவரித்திங்கள் 4-ஆம் நாள் துவக்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையம் காவலர்களின் மனைவியர், மகளார் பயன் பெறுதற் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது, தற்போது அங்கு 13 பேர் பயிற்சி பெறுகின்றனர். அவர்களுக்கு, அரசு, மாதம் 20 ரூபாய் உதவித் தொகை வழங்குகிறது.

1962 ஆம் ஆண்டு ஜப்பானிய பொம்மை நிபுணர்கள் சென்னைக்கு வந்து பயிற்சி அளித்தபோது, அவர்களிடம் பயிற்சி பெற்ற கோவிந்தம்மாள் இந்த நிலையத்தினருக்குப் பொம்மை செய்யும் கலையினைச் சொல்லித் தருகிறார்.

பொம்மைகள் செய்யத்தேவையானவை, பொம்மையின்

தலைகள். இவை, சென்னை எழும்பூரில் உள்ள கலை, கைத்தொழில் கல்லூரியிலிருந்து வாங்கப்படுகின்றன. அடுத்தது, தலைமயிர் (அடியில் வைப்பதற்குக் கொண்டா என்று சொல்லப்படுகிற சாதாரண கறுப்பு நூலையும், மேலே வைப்பதற்கு 'கிரேப் ஹேர்' என்ற விலையுயர்ந்த மயிரையும் பயன்படுத்துகின்றனர்). இவை தவிர, அழகிய டிசைன்கள் உள்ள துணிகள், பார்டருக்கான லேஸ்கள், கழுத்தில், காதில் அணியத் தேவையான பாசிகள், பொம்மைகளை நிறுத்தி வைக்க ஸ்டாண்ட், பொம்மைகளின் உள்ளே அடைக்கச் சக்கைகள், கை, கால்களுக்குப் பயன் படுத்தும் கம்பிகள் இப்படிப் பலவகைப் பட்ட பொருட்கள் தேவைப்

படுகின்றன. இவை அனைத்தையும் கடைகளிலிருந்து வாங்கி வந்து வைத்து மாணவியருக்குப் பயிற்சியளிக்கின்றனர். இவர்கள் தயாரிக்கும் பொம்மைகளின் அடக்க விலை சுமார் 10 ரூபாயிலிருந்து 50 வரை ஆகிறது (கூலி, லாபம் எதுவும் சேராமல்).

ஓராண்டுப் பயிற்சி பெற்று வெளி வரும் பெண்கள் தங்களது ஓய்வு நேரங்களில் மாதம் சுமார் 5 முதல் 10 வரை பொம்மைகள் செய்ய முடியும். அதன் மூலம் சுமார் 80 முதல் 100 ரூபாய் வரை ஓய்வு நேர ஊதியமாகப் பெற முடியும். மாதர்களின் இந்தப் பணி அவர்களது உள்ளத்திற்கும், உழைப்பிற்கும். உற்சாகம் தருவதாகும்.

பயன்மிகு பருத்தி

" பருத்திச் செடியும் பால் மாடும் உள்ளவனுக்குப் பஞ்சமில்லை " என்று சொல்லுவார்கள். பருத்திச் செடியும் பால்மாடும் தொடர்ந்து உழவர்களுக்குப் பயனளித்து வருவதனாலேயே இந்தப் பழமொழி எழுந்தது போலும். எனவே, நீங்களும் பருத்தியைச் சாகுபடி செய்து, பயனடைய வேண்டுமென்பதற்காகச் சில குறிப்புகள் படைத்துள்ளோம்.

குளிர்காலப் பருத்தி விதைக்கப் புரட்டாசி மாதம் மிகவும் சிறந்தது. குளிர்கால இறவை கம்போடியாப் பருத்தி சாகுபடியாகும் கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் 165 நாட்கள் வயதுடைய எம்.சி.யு.5 பருத்தியைச் சாகுபடி செய்து பெரும்லாபம் பெறலாம்.

குளிர்கால மானாவாரி கம்போடியாப் பருத்திச் சாகுபடியாகும் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் ' லட்சுமி ' பருத்தி சாகுபடியாகும் கரிசல் மண் நிலங்களில், புதிதாக வெளியிடப்பட்டுள்ள ' பாரதி ' பருத்தியைப் பயிரிட்டு ஏக்கருக்கு ரூ. 200 அதிக லாபம் பெறலாம். மேற்படி மாவட்டங்களிலும், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும் செவ்வல் மண் பகுதிகளில் எம்.சி.யு. 1 அல்லது எம்.சி.யு. 5 பருத்தியைப் பயிரிடலாம்.

கருங்கண்ணிப் பருத்தி சாகுபடியாகும் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மாவட்டங்களில் 'கே 7' என்னும் 195 நாட்கள்வயதுடைய பருத்தியைச் சாகுபடி செய்து பயனடையலாம்.

பருத்தி சாகுபடி செய்ய வயலை நன்கு புழுதியாகுமாறு இரும்புக் கலப்பையால் உழவு செய்யவும். இறவைப் பருத்திக்குக் கடைசி உழவில் 12 கிலோ தழைச்சத்து, 7 கிலோ மணிச்சத்து, 7 கிலோ சாம்பல் சத்து ஆகிய இரசாயன உரங்களை இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு செய்யவும். பின்பு இறவைப் பருத்திக்கு 75 சென்டி மீட்டர் (2½ அடி) இடைவெளிக்கு ஒரு பார் வீதம் அமைக்கவும்.

மானாவாரி கம்போடியாப் பருத்திக்கும், மானாவாரி கருங்கண்ணிப் பருத்திக்கும் கடைசி உழவிலோ, அல்லது விதைப்பதற்கு முன்போ 16 கிலோ தழைச்சத்து, 8 கிலோ மணிச்சத்து கொடுக்கும் இரசாயன உரங்களை இட்டு மண்ணுடன் நன்கு கலக்கும்படி உழவு செய்யவும்.

இறவைப் பருத்தி சாகுபடி செய்ய ஏக்கருக்கு 9 கிலோ விதையும், மானாவாரிப் பருத்திக்கு ஏக்கருக்கு 7 கிலோ விதையும் விதைக்க வேண்டும். விதைப்பதற்கு முன் விதைகளை அக்ரசான் மருந்துடன் கிலோவுக்கு 2 கிராம் வீதம் கலக்கவேண்டும். அதன் பின்பு மாட்டுச் சாணம் செம்மண் கலந்த பசையுடன் விதைகளைக் கலந்து, விதைகளின்மேல் உள்ள பஞ்சுகளைக் கைகளால் தேய்த்து நீக்கி விட்டு, நிழலில் உலர வைக்கவேண்டும்.

மானாவாரியாக எம்.சி.யு. 1, எம்.சி.யு. 5 ஆகிய பருத்திகளைப் பயிரிட வரிசைக்கு வரிசை 45 முதல் 60 சென்டி மீட்டர் (1½ அடி முதல் 2 அடி) இடைவெளியும், குழிக்குக் குழி 25 சென்டி மீட்டர் (10 அங்குலம்) இடை வெளியும் இருக்குமாறு விதைகளை விதைக்க வேண்டும். பருத்தி சாகுபடி பற்றிய விவரங்களை மேலும் அறிய 'தமிழரசு' இதழைத் தொடர்ந்து படியுங்கள்.

503

நீ எங்கே நான் அங்கே

தஞ்சாவூர் ரெயில் நிலையம், ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் ரெயிலில் வந்த பிரயாணிகளை வரவேற்கிறது. வந்திறங்கியோர் பலர் வரவேற்க வந்தவர் சிலர். வழியனுப்ப வந்தவர் ஏனையவர்.

கூட்டத்தின் மத்தியில் ஓர் ஆணும் பெண்ணும் ! இணை என்று சொல்வது தவறு ! அந்த மங்கையைப் பார்த்தால் சந்தேகமேயில்லை, ''செல்வி'' தான்; '' திருமதி '' அல்ல! கல்லூரி மாணவி போன்ற நளினமான உடலமைப்பு! உடை அமைப்பு !

அவன், இளங்கோ—அப்படித் தான் அவனது 'ஜேம்ஸ் பாண்ட் ' பெட்டியின் மீது



பொறிக்கப்பட்டுள்ளது. இன்றைய இளைஞனை நினைவுபடுத்தும் ' கிருதா '! வீரம் செறிந்த மீசை ! தோளிலே ' காமிரா'.

அவள், தன் பெட்டி படுக்கைகளைத் தூக்கிச் செல்லும் போர்ட்டரைப் பின்தொடர்ந்தாள் ! அவன் அவளைத் தொடர்ந்தான். ரெயில் பயணக் காதலோ ?



ஊகூம் . . . அப்படியும் தெரியவில்லை ! கண் சாடை ! இனிய புன்னகை ! ஒன்றையும் காணோம்.

பூச்சரங்களைக் கண்டதும் பூவையின் இதழ் தாமரை மலரைப் போல் மலர்ந்தது. பக்கத்துக்கடையில் பழம் வாங்கும் சாக்கில் மங்கையின் மீது கண்ணோட்டமிட்டபடியே இருந்தான், இளங்கோ !

'' இங்கே நல்ல தங்குமிடம் எது ?''

''அரசர் சுற்றுலா மாளிகை''.

பூவை வாங்கிக்கொண்டு பின்பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவன் தன்னைப் பின் தொடரவில்லை என்று தெரிந்ததும் ஒரு நிம்மதியான பெருமூச்சு வெளிப்பட்டது. அவள் அரசர் சுற்றுலா மாளிகை சென்றாள்.

அறை எண் 31. பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே செல்கிறாள், மங்கை. அறையை நோட்டமிடுகிறாள் ! மேஜை, நாற்காலி, சாய்வு நாற்காலி, கட்டில், மின்சார விசிறி! ஆம் குறைந்த வாடகையில் நிறைந்தவசதி.

மங்கைவெளியே புறப்படத் தயாரானாள் ! அறையைப் பூட்டிவிட்டுத் திரும்பியவளுக்குஒரு சிறுஅதிர்ச்சி! எதிரே இளங்கோ குளித்துவிட்டுச், சிரித்தபடியே சீட்டி அடித்துக் கொண்டு வந்தான். 32-ம் அறைக்குள் அவன் நுழைவதைக் கண்டதும் அறையைக் காலி செய்துவிடலாமா என்று ஒரு சிறு எண்ணம் அவள் உள்ளக் கமலத்தில் மலர்ந்தது. 'உம்... இந்தச் சுண்டெலிக்குப் பயந்து ஓடுவதா ? அதையும் தான் பார்த்துவிடுவோமே !'

அவளது உள்ளம் தைரியம் கூறிற்று.

அவள் தனது சுற்றுலாவைத் தொடர்ந்தாள்.

அரசர் விருந்தினர் மாளிகையின் அருகிலுள்ளது, அரசினர் கைத்தொழில் அங்காடி ! அழகிய கைவண்ணப் பொருள்களுடன்சிலர்வெளிவருவதைக் கண்டதும்,மங்கையும் உள்ளே சென்றாள்!வாயிலில் அலங்காரமாகவுள்ள குத்து விளக்கும் ஆடலரசனின் நடனத்தோற்றமும், விளக்கேந்திய சிலைப் பாவைகளும் அவளை வரவேற்றன.

அப்பப்பா ! எத்தனை விதமான கைவண்ணப் பொருள்கள்! யானைத்தந்தம், சந்தனக் கட்டைகள், கருங்காலி மரம் முதலியவற்றில் கடைந்தெடுக்கப்பட்ட புலிகள், மான்கள், யானைகள், கொம்புகளில் செய்த பறவைக் கூட்டங்கள், விதவிதமான பொம்மைகள், அழகுச் சாதனங்கள், அணங்குகளை அலங்கரிக்கும் ஆபரணங்கள், பதுமைகள்போன்ற அழகுச்சிலைகள்! தஞ்சாவூர், சுவாமிமலை, கும்பகோணம் முதலிய இடங்களில் இயங்கும் கைத்தொழிற் கூடங்களிலிருந்து இந்த அழகுப் பொருட்கள் வந்து குவிந்திருந்தன.

இல்லங்களின் எழிலைக் கூட்ட, நண்பர்களுக்குப் பரிசளிக்க, எத்தனை விதமான எழிலுருவங்கள் !

ஒரு தொழிலதிபர், அமெரிக்கத் தொழிற்கூடப் பிரதிநிதிக்குப் பரிசளிக்கத் தஞ்சைப் பெரிய கோவிலின் ' பித்மாடல் ' ஒன்றை 105 ரூபாய் கொடுத்து வாங்கினார். மருத்துவமனைத் தாதியர் மூவர் நகைகளை முற்றுகையிட்டு நின்றனர். பொம்மையை வாங்கலாமா என்ற ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர் ஒரு இளம் தம்பதியர்..

' பளிச் பளிச் '—பிளாஷ் லைட்டின் ஒளி மின்னியது. மங்கை திரும்பிப் பார்த்தாள். அந்த இளம் தம்பதியரைப் படமாக்கிக்கொண்டு நின்றான் இளங்கோ.

அவள் திரும்பிப் பார்த்ததைக் கண்ணுற்றதும், நல்ல சந்தர்ப்பம் என எண்ணிக்கொண்டு, '' நான் அவர்களைப் படமெடுத்தேன், உங்களை அல்ல !'' என்று மழுப்பினான். அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

அவன் அங்கிருந்து சென்றுவிட்டான் என்பது தெரிந்தபின் தான் அவளுக்கு ' மூட் ' வந்தது.

கடையைச் சுற்றிப் பார்த்த மங்கையை அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அழகிய வீணையும், மிகச் சிறப்பான வேலைப்பாடுகள் உள்ள தஞ்சாவூர்த் தட்டும் மிகவும் கவர்ந்தன !

'' ஏன் இதைத் தஞ்சாவூர்த் தட்டு என்கிறார்கள்? '' மங்கை விற்பனையாளரைக் கேட்டாள்.

'' தஞ்சாவூரில் மட்டுமே தயாரிப்பதால்''.

'' எதனால் தஞ்சாவூரில் மட்டுமே செய்யப்படுகிறது ?''

'' அந்தக் காலத்தில் இந்தக் கலையினை நாலு குடும்பத்தினர் மட்டும் செய்து வந்திருக்கின்றனர், மன்னர்களுக்காக! எனவே, இது வேறு எங்கும் பரவவில்லை !''

'' அந்தக் காலமென்றால்....''

'' அதுவா ? மன்னர் சரபோஜி (கி.பி. 1712-1728) காசிக்குச் சென்று திரும்பிய போது பித்திரித் தட்டு (Bidri Plates) கொண்டுவந்ததாகவும் அதைப் பார்த்துச் செய்யும்படிக் கம்மாளர்களைக் கேட்டுக் கொண்டதாகவும் சொல்லுகிறார்கள்.

ஆனால், ஆராய்ச்சியாளர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பித்திரித் தட்டிற்கும், தஞ்சாவூர்த் தட்டுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. பித்திரித் தட்டுகளில் வெறும் பூ வேலைப்பாடுகள்தான் உள்ளன. ஆனால், தஞ்சாவூர்த் தட்டுகளில் பூ வேலைகள் மட்டுமல்ல, கோபுரங்கள், கடவுளர்களின் திருவுருவங்கள், பொறிக்கப்படுகின்றன.

பித்திரித் தட்டில் பள்ளமாகக் கோடுகள் போடப்பட்டு அதன் மீது பூ வேலைகள் செய்யப்படுகின்றன. அதாவது பூ வேலைகள் தட்டின் பரப்பின் மட்டத்தில் இருக்கும்.

> இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம், அதிலே நியாயமிருக்கிறது. கப்பல்கள் வேண்டுமென்று கேட்கலாம், அந்தத் துறையிலே இன்னும் நாம் தேர்ச்சி பெறவில்லை என்பதால் ! ஆனால் சோறு போடு என்று அன்னியரிடம் கேட்பது ?
>
> —பேரறிஞர் அண்ணா

ஆனால், தஞ்சாவூர்த் தட்டுகளிலோ, உருவங்கள் வார்த்தெடுக்கப்பட்டுத் தட்டின் மீது பதிய வைக்கப்படுகின்றன.

எனவே, இதன் தோற்றம் சோழர் காலத்திலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். சரபோஜி மன்னர் காலத்தில் இது மிகவும் ஊக்குவிக்கப்பட்டிருக்குமென்பது தான் பொருத்தமாக இருக்கும் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

ஆமாம், இந்தத் தஞ்சாவூர்த் தட்டு, வீணை எல்லாம் எங்கே செய்கிறார்கள் ? என ஆவலோடு கேட்க, விற்பனையாளர் முகவரிகளைக் குறித்துத் தந்தார்.

இளங்கோ தன்னைப் பின் தொடர்கிறானா என்று பார்த்துவிட்டு, வாடகைக் காரில் ஏறினாள் மங்கை. பாவம், அவள் வருமுன்னாலே இளங்கோ ஸ்கூட்டரில் சென்றது அவளுக்கு எங்கே தெரியும் ?

ஒரு சிறிய வீடு ! வீடு என்று கூடச் சொல்ல முடியாது ! மூங்கில்கள் வைத்து அடைக்கப்பட்ட தச்சுப் பட்டறை ! அங்கே ஒரு பெருந் தச்சர் ! பலா மரத்தில் வீணையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்.

தனது வேலைகளுக்கிடையே மங்கையின் கேள்விகளுக்கும் பதில் தருகிறார், அந்தப் பெரியவர்.

தஞ்சாவூரில் 40 குடும்பத்தினர் இந்த வீணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஒரு வீணை செய்ய ஒரு மாதம் பிடிக்கும் ரூ. 250 முதல் ரூ. 500 வரை விலை. ஒரு வீணையில் சுமார் 40 பொருட்கள் (பலாமரம், மான் கொம்பு, கருங்காலிக் கம்பு முதலியன) உள்ளன. இதனை விற்பனை செய்து தர '' இசைக் கருவிகள் தொழிலாளர் குடிசைத் தொழிற் சங்கம் '' உள்ளது. மலேசியா, இலங்கை, அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குக் கூட இந்த வீணை அனுப்பப்படுகிறது. வீணை தவிரத் தம்புரா, கஞ்சிரா, மிருதங்கம் ஆகியவற்றையும் செய்கின்றனர். அரசு இதற்காக ரூ. 40,000 நிதி அனுமதித்துள்ளது. ஆண்டொன்றுக்கு இங்கு ரூ, 40,000 மதிப்புள்ள இசைக் கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. 1967 முதல் லாபத்தில் நடைபெறுகிறது. மங்கை திரட்டிய குறிப்புகள் இவை.

மீண்டும் ' பளிச் பளிச் ! மங்கை கோபத்துடன் திரும்பிப் பார்த்தாள். அங்கே இளங்கோ நாணிக் கோணியபடி நின்றான். முகத்திற்குப் பதிலாக அவள் கண்கள் சிவந்தன. வாய், பேச அல்ல, ஏசத் துடித்தது ! ஆனால், சூழ்நிலையை முன்னிட்டு அடக்கிக் கொண்டாள்.

அடுத்த தெருவுக்குப் பயணம். அங்கு ராமதாஸ் என்ற இளைஞர்,—பல வெளிநாட்டுத் தலைவர்கள், மன்னர்கள், மகாராணிகள் கையில் பரிசுப் பொருளாகத் தவழத் தகுதி பெற்ற தஞ்சாவூர்த் தட்டினை உருவாக்கிக் கொண்டிருந்தார். மங்கையைக் கண்டதும் ராமதாசும் அவரது சகோதரிகளும் கை கூப்பி வரவேற்றனர்.

பத்து வயதிலிருந்தே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதாக விவரித்தார் ராமதாஸ். தந்தையிடமிருந்து கற்றது. முன்பு ரகசியமாக இருந்த இந்தத் தொழில் இப்போது சுமார் 70 குடும்பங்கள் ஈடுபடக்கூடிய அளவில் வளர்ந்துள்ளது என்று பெருமையுடன் குறிப்பிட்டார், அந்தக் கைவினைஞர். தஞ்சாவூர்த் தட்டு; குறுக்களவு சுமார் 5 அங்குலம் முதல் 24 அங்குலம் வரை பல வகைகளாகச் செய்யப்படுகிறது. 5 ரூபாயிலிருந்து 500 வரை விலையுள்ளது.

தற்போது தட்டு மட்டுமின்றி, செம்புகள், பிளாஸ்டிக் மூடிகள், சிகரெட் பெட்டிகள் இப்படிப் பல தயாரிக்கப்படுகின்றன. பொதுவாகப் பித்தளைத் தகட்டின் மீது, செம்பு, வெள்ளி, ஆகியவைகளில் பூ வேலைகள் உருவங்கள் செய்து பற்ற வைப்பது வழக்கமாகவுள்ளது.

மீண்டும் ' பளிச் பளிச் '! இம்முறை மங்கையால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. விரைந்து வெளியேறிவிட்டாள். அவள் கண்கள் எதையோ தேடின. ஆம்! தொலை பேசியைத்தான்! அதோ! அந்தக் கடையில் ஒன்று உள்ளது. மங்கை போனில் பேசினாள். வேறு யாருடன் பேசியிருப்பாள்? போலீசுடன்தான்!

' டக் 'கென்று வைத்துவிட்டு டாக்சியில் புறப்பட்டாள் தொழிற்பேட்டை நோக்கி. அவளைத் தொடரவிருந்த இளங்கோவை இரு காவலர்கள் தடுத்து நிறுத்தினர். மங்கைக்கு மிகுந்த உற்சாகம்.

அவளது டாக்சி 22 ஏக்கர் பரப்புள்ள அந்த அரசினர் தொழிற்பேட்டையை வந்தடைந்தது. அங்கு உள்ள தொழிற் கூடங்கள் மொத்தம் 9. அதில் மூன்று, அரசினரின் தொழிற் கூடங்கள். ஒன்று சைக்கிள் இணைப்பகம். மற்றவை கருவிகள் தயாரிக்கும் கூடங்கள். வாளி தயாரித்தல், வர்ணங்கள் தயாரித்தல், எவர்சில்வர் பாத்திரங்கள், மருத்துவக் கருவிகள், திருகுகள் போன்றவை தயாரிக்கும் தனியார் துறைகளும் உள்ளன.

அனைத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டுத் தொழிற்கூட அதிகாரியைச் சந்திக்க வந்தாள், மங்கை. அங்கே விடாக்கண்டன் இளங்கோ புன்னகை முகத்தினனாய்க் கொலு வீற்றிருந்தான், அதிகாரி அருகே ! பக்கத்தில் போலீஸ் இல்லாதது, மங்கைக்குச் சற்று ஆச்சரியத்தைத் தந்தது.

> இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் பி. ஏ. பட்டதாரி டிராக்டர் ஓட்டுவதையும், எம்.ஏ. பட்டதாரி அறுவடை செய்வதையும் பார்க்கலாம். படித்தவன் உழவேண்டும், உழுபவன் படிக்க வேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க—உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்.
>
> — பேரறிஞர் அண்ணா

'' எப்படித்தப்பி வந்தீர்கள்?'' கிண்டலாகக் கேட்டாள் மங்கை.

'' எங்கிருந்து ? '' அதிகாரி குறுக்கே கேட்டார்!

'' ஓ ! அதுவா ? ஒரு வளவள நண்பரிடம் பேச்சில் மாட்டிக் கொண்டேன் ! அதைத்தான் குறிப்பிடுகிறாள் மங்கை '' என்று இளங்கோ மழுப்பினான்.

''ஏற்கனவே இருவருக்கும் பழக்கம்தானா ? அப்படியானால் மிஸ். மங்கை (ஆம் ! அதுதான் மங்கையின் பெயர்) நீங்கள் கேட்ட விவரங்களை இளங்கோவிடம் கொடுத்திருக்கிறேன் ! பெற்றுக் கொள்ளுங்கள் !''

வேறு வழியின்றித் தலை அசைத்தாள், மங்கை.

இருவரும் வெளியே வந்தனர். அந்தப் பெண் புலி பாயுமுன் ஆண் சிங்கம் இளங்கோ சரண் அடைந்துவிட்டான்.

'' மிஸ் மங்கை ! நான் ஒரு பத்திரிகை நிருபர். கல்லூரி மாணவி ஒருவர் தஞ்சைக் கலைப் பொருட்களை ரசிப்பதுபோல் ஒரு கட்டுரை திரட்ட வந்தேன் ! தஞ்சை ரெயில் நிலையத்தில் உங்களைப் பார்த்ததுமே வேறு ஆளைத் தேட வேண்டாம், உங்களையே பயன்படுத்தலாமென்று ஆசைப் பட்டேன் ! உங்களிடம் சொல்லாமல் தொடர்ந்ததற்கு மன்னிக்கவும் !''

'' நோ....நோ....நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும். நான், நீங்கள் யாரோ ரவுடியாக்கும், என்னைப் பின் தொடர்ந்து வருகிறீர்களே என்று தப்பாக எடை போட்டு விட்டேன்.''

'' ஆமாம் , நீங்கள் எதற்குத் தொழிற்கூடங்களைச் சுற்றி வருகிறீர்கள்?''—பேச்சை வளர்க்க இளங்கோ ஒரு கேள்வியைத் தொடுத்தான்.

''தஞ்சாவூரின் வேளாண்மைச் சிறப்பு அனைவருக்கும் தெரியும். எனவே, கைவண்ணப் பொருட்கள், சிறு தொழில்கள் வளர்ச்சி பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை தயாரிக்க நான் இங்குவந்தேன்!''

'' அம்மா ! புறப்படலாமா?'' டாக்சிக்காரர் நினைவுபடுத்தினார்.

'' இல்லேப்பா ! நீ பணத்தை வாங்கிக்கொண்டு போகலாம்!'' இளங்கோ பதில் சொன்னான்.

'' நான் எப்படிப்போவதாம்?''

'' இப்படி! '' ஸ்கூட்டரை ஓட்டுவது போல் கை சாடை காட்டினான் இளங்கோ! இருவரும் சிரித்தார்கள்.

> இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம் குடும்பக் கணக்கு
> இதில் குசேலனுடன் போட்டியிடல் கொடுமைக் கணக்கு.
>
> —முதல்வர் கலைஞர்





PSG

அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

விவரங்களுக்கு எழுதுங்கள்:

பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

the hallmark of high standard

விற்பனைக் கிளைகள்:

311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.
பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.
13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.

VSK PSG 213

507

"ஏன் தம்பி, நம் தொழிற்சாலையில் வேலை பார்க்கிற தொழிலாளர்களுக்குக் கையுறை (கிளவுஸ்) வாங்கணும். எங்கே வாங்கலாம் ?"

" அதுவா, சென்னை எழும்பூரில் ஹால்ஸ் சாலையில் சிறுவர் மருத்துவமனை அருகே கஸ்தூரிபா நிலயம் என்ற பெயரில் ஒரு மகளிர் மன்றம் இருக்கிறது. அவர்கள் நிறையத் தயாரிக்கிருர்கள். ரெயில் பெட்டித் தொழிற்சாலை, அடிசன்ஸ், டி.ஐ.சைக்கிள் தொழிற்கூடம், பெஸ்ட் அண்டு கம்பெனி போன்ற நிறுவனங்கள் கூட அவர்களிடம்தான் வாங்குகிருர்கள்!"

" அப்படியா ? போன் நம்பர் என்ன சொன்னீங்க ? "

"அங்கே தொலைபேசி கிடையாது. ஆனல் அந்த மன்றத்தை நடத்துகிற செயலாளர்கள்

கையுறைக்குத் தோல் வெட்டப்படுகிறது.

ஹலோ! கையுறை தேவை!

திருமதி டபிள்யூ. ஆர். ஜெயம்மா, திருமதி ராஜம்மாள் வேணுகோபால் இருவருக்கும் தொலைபேசிகள் உள்ளன. திருமதி ஜெயம்மாவின் எண் 86162; திருமதி ராஜம்மாவின் எண் 63245".

" அப்படியா, இதோ போன் செய்கிறேன் ! எட்டு, ஆறு, ஒண்ணு, ஆறு, இரண்டு...... எங்கேஜ்டாயிருக்கே !

" அடுத்த எண்ணைப் பார்ப்போம். 63245............

"ஹலோ ! யாரு........... திருமதி ராஜம்மாள் வேணுகோபால் இருக்காங்களா ? "

" ஆமா, ராஜம்மா தான் பேசுகிறேன் ! என்ன வேணும்."

" எனக்கு லெதர் கிளவ்ஸ் வேண்டியிருக்கு. உங்களாலெ சப்ளை பண்ண முடியுமா ? என்ன விலை கேப்பீங்க ?"

" தரத்திற்குத் தகுந்தபடி ஐந்திலிருந்து ஏழரை ரூபாய் வரை இருக்கு. எவ்வளவு வேணும் ? "

" எனக்கு 250 வேணும் ! இப்போ ஆர்டர் கொடுத்தா எப்போ செய்து தருவீங்க ? !!

" இங்கு 25 பெண்கள் வேலை செய்கிருங்க. மாதம் 2,000 கையுறை தயாரிப்பார்கள். ஒரு நாளைக்கு சுமார் 100 செய்வார்கள். உங்களுக்கு அவசரமா வேணும்னு கொஞ்சம்

கையுறையைத் தைக்கிருர்.



அதிக நேரம் வேலை பார்க்கச் சொல்லி இரண்டு நாளிலே சப்ளை பண்ணுகிறோம். இப்போ திருப்தி தானே !''

'' திருப்திதான் ! ஆமா.... உங்கள் தொழிற்கூடம் ரொம்ப நாளா இருக்குதோ, எனக்குத் தெரியவே தெரியாதே ! ''

'' 1958-லே சேவை மனப் பான்மையுள்ள வள்ளி ஆச்சி, டாக்டர் சாவித்திரி ஆகிய இருவரும் சேர்ந்து எங்க நிலையத்தை ஆரம்பிச்சாங்க. அப்போ இங்கு தையல் வகுப் போடு, செருப்பு, தோல் பை, பர்ஸ் முதலியவை தயாரித்து வந்தார்கள். பிளாஸ்டிக் பொருட்களுக்கு மவுசு வந்த பிறகு இவைகளுக்கு கிராக்கி குறைந்து விட்டது. அப்புறம் அந்தத் தயாரிப்புகளை நிறுத்தி விட்டோம். சமீபத்தில்தான் இந்தத் தொழிலை ஆரம்பித் தோம். எங்க செயலாளர் திருமதி ஜெயம்மாவுடன் பேசினீர்களா ? அவங்கதான் இதில் தீவிரமா ஈடுபட்டிருக் காங்க. நல்ல தரமான தோல் களைப் பார்த்து வாங்குவது, பெரிய தொழிற்சாலை அதிபர் களைச் சந்தித்துத் தோல் கை யுறைகளுக்கு ஆர்டர் வாங்குவது எல்லாம் அந்த அம்மா தான். ''

'' இது, பாராட்ட வேண்டிய விஷயம் தான். இதுக்கு அரசாங்க உதவி ஏதாவது.......... ''

'' தமிழக சமூகநல வாரியம், எங்களுக்கு ரூ. 16,000 உதவி செய்தனர். அதைக் கொண்டு தையல் யந்திரங்களை வாங்கி இதனை ஆரம்பித்தோம். பயிற்சிக் காலத்தில் இந்தப் பெண்களுக்கு மாதம் 15 ரூபாய் கொடுக்கி றோம். பயிற்சி முடிந்து நிரந் தரமா வேலை செய்யத் துவங்கி யதும் மாதம் ரூ. 85 வரை தருகிறோம். உங்களை மாதிரி புது ஆர்டர்கள் நிறைய வந்தா வழக்கத்திற்கு அதிகமா மாலை யில் வேலை செய்வார்கள். அதற்குத் தனியாக மாதம் 10, 15 ரூபாய் கொடுப்போம். இது தவிர அதிக அளவில் தொழில் நடந்து லாபம் வந்தால் அதைப்பகிர்ந்து இந்தப் பெண்களுக்கு மூன்று மாதம் போனஸ் வழங்குகிறோம். ''

'' அடடே ! பிரமாதம் ! நீங்க வேறு ஏதாவது தயாரிக்கிறீர் களா ? ''

'' வேலை செய்யும்போது அணியும் மேலுடை தயாரிக்கி றோம். காடாத் துணியில் பை தயாரிக்கிறோம், டி. ஐ. சைக்கிளின் ஆர்டரின் பேரில். ''

'' பரவாயில்லையே ! அது எங்களுக்குத் தேவையிருக்கு. முழுவதும் பெண்களே நடத்தும் நல்ல பணி இது. இங்கு மட்டும்தான் இம்மாதிரி, பெண் களே, கையுறை தயாரிக்கும் தொழில் நடைபெறுகிறது என்று நினைக்கிறேன். இது பாராட்டப்பட வேண்டியது. ஆதரிக்கப்பட வேண்டியது.... நன்றி..வணக்கம்........''.

ஓம் : தத் : ஸத் :

நல்வாழ்வுப்பணி

"சித்த மருத்துவத்தின் சிறப்பு"

சித்தர்களின் அளவிலாப் பெருமைக்குச் சிறந்த அத்தாக்ஷி

கே. டி. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின்

மேல்மாயில் மருந்து

பதிவு செய்யப்பட்டது.

நீடித்த நாட்பட்ட தீராத சரும ரோகங்களுக்குச் சிறந்த நிவாரணி

கருநிற, செந்நிறப் படைகள், தடிப்புகள், குத்தல், வலி, சொறி (சரும சம்பந்தம்), படைகளில் திமிர் உண்டாகுதல், ஊசி குத்தினும் வலி தோன்றாமை, நெருப்புப்பட்டு கொப்புளங்கள் ஏற்படுவது தெரியாமை, துர்நீர் சர்வாங்கமும் பரவி ரத்தத்தில் கலந்து மதமதப்பு உண்டாகுதல் (நரம்பு சம்பந்தம்), கை விரல்கள் மடங்குதல், கொப்புளம் கிளம்புதல், நாசி அடைத்தல், பாதத்தில் குழிப்புண் உண்டாகுதல், கால்கைகளின் விரல்கள் தேய்வுற்று பாதிக்கப்படுதல், மூக்கில் சொட்டை ஏற்படுதல், பார்ப்பவர்கள் சகிக்கொணாத ரணங்கள் (அஸ்தி சம்பந்தம்) இவைகட்கு மிகச்சிறந்த நிவாரணி.

1 மண்டலம் (40 நாள்) எண்ணெயும் லேகியமும் ரூ. 12·00; தபால் செலவு ரூ. 3·00

ஸ்நானத்திற்கு சிரேஷ்டமான ஸ்ரீபரமாத்ம தைலம் 8 அவுன்ஸ் ரூ. 6·00; தபால் செலவு ரூ. 2·00

சித்தர் டாக்டர்

கே. டி. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி & சன்ஸ்,

5/22, மேல்மாயில் போஸ்ட், வட ஆற்காடு மாவட்டம்.



ஆருயிர்த் தோழி அமுதாவிற்கு,

நான் எங்கேயிருந்து கடிதம் எழுதுகிறேன், தெரியுமாடீ ! சினிமாவிலே ''டூயட் சீன்களிலே'' சாத்தனூர்க் காட்சிகளைப் பார்த்துவிட்டு நாமெல்லாம் ஒரு நாளைக்கி 'பிக்னிக்' போகணும்னு சொல்லுவாயே, அந்தச் சாத்தனூர் அணையிலிருந்துதான் எழுதறேன் !

உன்னையும் கூட்டிக்கொண்டு போகலியேன்னு வருத்தப்பட்டுக் கொள்ளாதே, அமு ! இது ஒரு திடீர் 'சான்ஸ்'. நாங்க இங்கே திருவண்ணமலைக்கு ஓர் உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக வந்தோம். அப்பா என்ன நினைத்தாரோ ! சாத்தனூர் போகலாம்ணுர். எங்களுக்கெல்லாம் பெரு மகிழ்ச்சி....... திருவண்ணமலையிலிருந்து சாத்தனூர் 20 மைல் தான். அடிக்கடி பஸ் இருக்கு. உடனே எல்லாரும் புறப்பட்டு வந்துட்டோம்!

பஸ் நேரே அணைக்கட்டு அருகிலேயே கொண்டு வந்து விட்டுட்டுது. ஆகா ! என்ன இனிமையான காட்சிகள் ! மாணவன், தெய்வமகன், அக்கா தங்கை, துலாபாரம் படங்களிலேபார்த்து ரசித்தோமே அந்த இடங்களையெல்லாம் கண்ணெதிரிலேகண்டு களித்தேன் ! நீயும் கூடயிருந்திருந்தா எப்படி இருந்திருக்கும், தெரியுமா ?

அணையின் நீளம் 2558 அடி. அதாவது சுமார் அரை மைல். அத்தனை தூரமும் வண்ணப்பூக்கள் நிறைந்த சிறு சிறு பூங்காக்கள். பச்சைப்பசேலென்ற புல்வெளிகள்: விதவிதமாகப் பூத்துக் குலுங்கும் நூறு வகையான பூஞ்செடிகள்; அழகான சிலைகள்!

ஒருபெண் கையில் குடத்தோடு நிற்கிறாள். அந்தக்குடத்திலிருந்து தண்ணீர் பாய்கிறது. ஒரு பையன் தாகம் தீர நீர் அருந்துகிறான். பெண் பொய்; பையன் மெய். ஆமாம் பெண்ணாக நிற்பது சிலை தான்.

குறுமுனி அகத்தியர் கையில் கமண்டலத்துடன் நிற்கிறார். அதுவும் சிலையே! ஒரு கரடி கையிலிருந்து தண்ணீர் கொப்புளிக்கிறது: சர்க்கஸ் கரடி என்று நினைக்காதே! இது சிலைக்கரடி!

அழகிய மேற்கத்தியப் பெண்ணின் சிலை ஒன்று பூஞ் செடிகளுக்கு மத்தியில் நிற்கிறது. அதைச் சுற்றிப் பலர் வேடிக்கை பார்த்தபடி நின்றனர், நாங்கள் போகும்போது. அவர்கள் கோவையிலிருந்துவந்தவர்களாம். 60 பேர் ஒரு சுற்றுலாப் பேருந்தில் வந்திருக்கிறார்கள். அந்தச் சிலையின் உடையின் நிறத்தில் புடவை எடுத்தால் உன் நிறத்திற்கு அற்புதமாக இருக்கும். பூங்காக்களின் நடுவே பல இடங்களில் சிமிண்டில் செய்யப்பட்ட பல வகை இருக்கைகள் போடப்பட்டுள்ளன. சில இடங்களில் அழகிய குடையின் கீழும், பூவட்டங்களின் அடியிலும் மேடை அமைத்து அந்த இருக்கைகளைப் போட்டுள்ளனர், சுற்றுலாப் பயணிகள் அமர்ந்து அழகை ரசிப்பதற்காக!

பக்கத்திலேயே சிறுவர்கள் வேடிக்கை பார்ப்பதற்காகச் சிறு சிறு மிருகக் காட்சி சாலைகளும் உள்ளன! ஒரு இடத்தில் ஒரு கரடி இருக்கிறது. இன்னொரு இடத்தில் ஏழெட்டு மான்கள், பயணிகள் கொடுக்கும் இலைகளை ஆவலோடு வாங்கிப் புசிக்கின்றன. முயல்கள், புறாக்கள், மயில்கள், மலைப்பாம்பு, மீன்கள் ஆகியவையும் உள்ளன.

அணை ஓரத்தில் சின்ன ரெயில் ஓடுகிறது. நாங்கள் அதில் ஏறி 'ஜம்' என்று ஒரு சுற்றுச் சுற்றி வந்தோம். சென்னையிலிருந்து வந்த ஒரு குழுவினரும் எங்களோடு இந்தச் சிறுவர் ரெயிலில் வந்தார்கள். கட்டணம் ஒரு ஆளுக்கு 35 காசு. அதிலே கார்டு யார் தெரியுமா? என் தம்பி பாலு இல்லே, அவன் உயரம் தான். ஆமா 2 அடி உயரம் இருக்கிற ஒரு ஆளுதான் கார்டு. பெயர் பலராமன்: வயது 37; எனக்கு நம்பவே முடியல்லே! ஒரே வேடிக்கையாயிருந்தது,

ரெயில் மாதிரி அணையிலே 'போட்' விடறத்துக்கும் வசதி இருக்கிறது. இதற்காகப் படகுத் துறை வச்சிருக்காங்க. 60 காசு கொடுத்தா அரை மணிநேரம் சுற்றலாம்: நீ, திருமணமாகித் தேனிலவுக்கு வருவே பாரு, அப்போ மறந்திடாமே அரை மணி நேரம் படகிலே சுற்று, உன் கண்ணான கணவனுடன் ! என்னைப் பற்றிக் கேக்கிறியா ? வெவ்வெவ்வே-அப்புறம், விஷயத்துக்கு வருவோம்.

மையப் பக்கத்தில் உள்ள சாத்தனூர் அணைக்கட்டுக் காட்சிகளை இந்தக் கட்டுரை விளக்கிச் சொல்கிறது.

அணை மேலே உள்ள பாதையில் நின்று பார்த்தால் ஒரு பக்கம் அணையில் தேங்கி நிற்கும் நீர். அதனையும் தாண்டி இயற்கையின் பேரெழிலை எடுத்துக் காட்டும் தீவு போன்ற திட்டுக்கள். இந்தப்பக்கம் பார்த்தால், வர்ணக் கோலம் போட்டது போன்ற பூங்காக்கள். நெடிதுயர்ந்த அசோக மரங்கள், பசுஞ் சோலைகள். நான் சற்று நேரம் என்னையே மறந்து விட்டேன் அமுதா !

எவ்வளவு நேரம் அங்கேயே நிற்பது ? கீழே இறங்கி வந்தோம். மேலே இருந்து கீழே பார்த்தாயிற்று. கீழே இருந்து அணையைப் பார்க்க வேண்டாமா ? அதற்காக ஒரு 'வியூடவர் '—கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் பக்கத்திலேயே நீச்சல் குளமும் இருக்கிறது. அருமையாக நீந்திக் குளிக்கலாம். ஒரு ஆளுக்குக் கட்டணம் 25 காசு தான்.

ஒரு ரவுண்டு சுற்றிட்டு வந்ததும் உனக்குக் கடிதம் எழுத உட்கார்ந்திட்டேன். இன்னும் இரண்டு நாள் தங்கி, நல்லா சுற்றிப் பார்த்தாத் தான் எனக்குத் திருப்தியா யிருக்கும். தங்குவதற்கு இடம் இருக்கான்னு கேட்கிறியா ? நீ கணக்குப் படிக்கிறவளாச்சே ! அதுனலதான் எல்லாம் கணக்காகச் சொல்றேன் !

இதோ ! அப்பா, பொதுப் பணித்துறை உதவிப் பொறியாளரிடம் தான் பேசிக் கொண்டிருக்கிருர். கேட்டுச் சொல்லிவிடுகிறேன்......இங்கு மொத்தம் 70 அறைகள் இருக்காம். ஒரு ரூபாயிலிருந்து நாலே கால் ரூபாய் வரை வாடகை. அறைகளில் குளிக்கக் கொள்ள எல்லா வசதிகளும் உள்ளன. இந்த அறைகள் மூலம் அரசாங்கத்துக்கு மாதம் 2,000 ரூபாய் வருமானம் கிடைக்குதாம். சென்ற வருடம் நடந்த சினிமாப் படப்பிடிப்புகள் மூலம் ரூ. 12,000 வருமானம் வந்ததாம். அடியே, சாப்பாட்டு ராமி, இங்கு மூன்று ஓட்டல்களும் இருக்கின்றன.

மாதம் சுமார் 12,000 சுற்றுப் பயணிகள் வருவார்களாம். பஸ்களும் கார்களும் வந்து போன வண்ணமாக இருக்கின்றன. சனி, ஞாயிறு நாட்களிலும், பொது விடுமுறை நாட்களிலும் தான் நிறையக் கூட்டம் வருமாம். அதனலே சனி, ஞாயிறு இரவுகளில் அணை முழுவதிலும் அமைக்கப்பட்டுள்ள மின்சார அலங்கார விளக்குகளை எரிய விடுகிருர்கள். பார்க்கக் கண் கொள்ளாக்காட்சியாக இருக்கிறது. இதற்காக மூன்றே கால் லட்ச ரூபாய் செலவில் ஒளி அமைப்பு வேலைகள் கடந்த ஓராண்டு காலமாக நடக்கிறதாம்.

அணையைப் பற்றி மற்றவிவரம் தேவையா ? தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்த அணை 1954-ம் ஆண்டில் 289 லட்சரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டது. நீர் மட்டம் 119 அடி. தற்போது 80 அடி தண்ணீர்தான் இருக்கிறது. நவம்பர் முடிவிலிருந்து டிசம்பர் முடிவு வரை அணையில் தண்ணீர் நிரம்பி வழியுமாம். இதிலிருந்து 21,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சலாம். தற்போது நிலக்கடலை போன்ற பயிர்களுக்காக சுமார் 9,000 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் விடப்படுகிறது.

பயிர் வளம் பெருக்கும் பாசனத் திட்டமாயிருப்பதோடு, இந்தச் சாத்தனூர் அணை, சுற்றுலா வருபவர்களுக்கு ஒரு சொர்க்கமாகவும் உள்ளது.

நீ கணவரோடு வர்றியோ, இல்லையோ ; நாமெல்லோரும் கிறிஸ்துமஸ் விடுமுறைக்குக் கண்டிப்பாக சாத்தனூர் அணைக்கட்டுக்குச் சுற்றுலா வரணும். இன்னெரு தடவை இந்த இயற்கை எழிலை அள்ளிப் பருகணும். அது தான் என் ஆசை ! எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது, தெரியுமா ? சொல்லித் தெரியாதடி இந்த சிங்காரச் சாத்தனூரின் அருமை ! வந்து அனுபவித்தால் தான் தெரியும் !

உன் அன்புத் தோழி,
தேன்மொழி.

சாத்தனூர்,
19—8—1970.

தமிழரசு

—சந்தா—

ஓர் ஆண்டு.... ரூ.8·00

அரை ஆண்டு...ரூ.4·00

தனிப்பிரதி...35 காசுகள்

விவரங்களுக்கு:-

இயக்குநர்,

செய்தி, விளம்பரத்துறை,

தமிழ் நாடு அரசு – சென்னை, 9

வண்ணப் படங்களில்

39 ஆம் பக்கத்தில்

* சேலம் இரும்பாலைத் திட்டத்தைக் கனிய வைத்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும், இடைவிடாது முயன்று பெற்ற தமிழக முதல்வர் அவர்களுக்கும், தங்க முலாம் பூசிய வெள்ளி மாங்கனிகளைப் பரிசளித்து மகிழ்கிருர் சேலம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு கே. இராசாராம்.

42 ஆம் பக்கத்தில்

* சேலம் உருக்காலைத்திட்டத் துவக்கவிழாவில் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், முதல்வர் கலைஞர், மத்திய அரசு இரும்பு உருக்கு அமைச்சர் ப. ரா. பகத், தமிழகத் தொழிலமைச்சர் திரு. செ. மாதவன் ஆகியோர்.
* துவக்க விழாவிற்குத் திறந்த ஜீப்பில் பிரதமரும், ஆளுநரும், முதல்வரும் ஊர்வலமாக வரும் காட்சி.
* முதல்வர் தலைமை உரை ஆற்றுகிருர்.
* உருக்காலையைத் துவக்கி வைப்பதைக் குறிக்கும் வகையில் பிரதமர், அசோக ஸ்தூபியைத் திறந்து வைப்பதை, முதல்வர் ஆளுநர், மத்திய அமைச்சர் ஆகியோர் ஆர்வத்துடன் பார்க்கின்றனர்.
* விழாவிற்கு வருகை தந்திருந்த மக்கட் கூட்டத்தினரில் மகளிர் பகுதி.


சாத்தனூர் அணை
SATHANUR DAM





பூவோ பூவு...!

மாலே நேரம்! மாம்பலத்திற்கே உரிய தனி எழிலுடன் திகழ்ந்தது சென்னே, தியாகராய நகர்.

பனகல் பூங்காவின் அருகே வந்ததும், அந்தச் சுற்றுலாப் பேருந்து நின்றது. பட்டுப் பூச்சி போன்ற மாணவியர் கிண்கிணியின் நாதம் போலச் சிரிப்பொலி தவழ வெளி வந்தனர். பட்டுப்பூச்சி பறந்து செல்வது, மலர்களே நோக்கித் தானே! இவர்களும் கூடை கூடையாக வைக்கப்பட்டிருந்த பூக்களே மொய்த்தனர்.

ஜாதி மல்லிகை வாங்கிஞள், சரசு! மதுரை மல்லிகை வாங்கிஞள், மாலதி! கனகாம்பரத்தை விலே விசாரித்தாள், கவுதமி.

ரோஜாவை வாங்கித் தலேயில் சூடாமல் வாயில் போட்டுச் சுவைத்தாள் மற்ருெரு மாணவி.

'' அடி, அதற்குள் பசி வந்துட்டுதா ? ''

'' ஏண்டி, அவள் பெயரை மறந்துட்டியா ? அவள் அபிராமியில்லேடி ! சாப்பாட்டு ரர்மி! எது கிடைத்தாலும் பிச்சு, வாயிலெ போட்டுடுவாள்!''

'' ஏண்டி, நம்ம டீச்சருக்கு அந்த ஒற்றை ரோஜா அழகா இல்லே ? ''

'' போடி இவளே ! அது ரோஜாவே யில்லே. ''

'' வேறு என்னவாம் ? ''

'' ஏதோ ஒரு பெயர், சட்னு நினேவுக்கு வரலே ! அதோ டீச்சர் வர்ருங்க ! அவங்களேயே கேட்போம் ! ஏன் டீச்சர் நீங்க வச்சிருக்கீங்களே பூ ; அதன் பெயர் என்ன ? ''

'' அதன் பெயர் 'டாலியாஸ்' மஞ்சள், சிவப்பு, ஊதா, வெள்ளே இப்படிப் பல அழகான நிறங்களில் கிடைக்கிறது. சென்னேயிலே இப்போ இந்த பூ வைச்சுக்கிறதுதான் 'பேஷன்'.''

'' ஆமாம் டீச்சர் ; நான் கூட அப்போ பார்த்தேன். காலேஜ் கெர்ல்ஸ் இதைத்தான் தலேயில் வைச்சுட்டுப் போருங்க. கூடைக்கொண்டை போடறவங்க காதோரம் வைச்சிருந்தா அழகா இருக்கு பார்ப்பதற்கு!''

'' ஆமாம் டீச்சர் ; இந்தப் பூக்கள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன?''

'' அது விரிவாச் சொல்ல வேண்டிய விஷயம்! எல்லாரும் பஸ்லே ஏறுங்க! நான் விளக்கமாச் சொல்லிக்கிட்டு வர்றேன் ! ஏய் கீதா இன்னுமா, பூ, பேரம் பேசி வாங்கலே ! ''

'' அவள் எதுலேயுமே லேட் தான் டீச்சர் ! அவள் பிறந்ததே நாலாவது குழந்தையா! குடும்பக் கட்டுப்பாட்டு எல்லேயைத் தாண்டிப் பிறந்தவள் ! ''

கலகல சிரிப்பொலி காற்றில் மிதக்க, மாணவியர் பேருந்தில் புகுந்தனர்.

"டிரைவர்! நேரே மீனம்பாக்கம் விமான நிலையம் போகட்டும்!'' ஓட்டுநருக்கு உத்தரவிட்ட ஆசிரியை லீலா தங்கசாமி, பூக்களைப் பற்றி வகுப்பு அறை பாணியிலேயே தொடங்குகிறார் :—

''பூக்களில் இரண்டு வகை உண்டு! ஒன்று வணிகப்பூக்கள். அதாவது விற்பனை நோக்கத்துடன் பயிர் செய்யப்படுபவை. முல்லை, மல்லிகை, சாமந்தி, கனகாம்பரம் இந்த வகையைச் சேர்ந்தவை. அடுத்தது அலங்காரப் பூக்கள். வீடுகள், அலுவலகங்கள், பெரிய ஓட்டல்கள்,



ஆகிய இடங்களில் அழகுக்காகவும் அலங்காரத்திற்காகவும் பயன்படுத்தக்கூடியவை. ரோஜா லில்லிப்பூ, ஜெர்பேரா, கிளாடியோலாஸ், கார்னேஷன் அகாஃபந்தஸ், வாட்சோனியா என்று இந்தப் பூக்களுக்குப் பெயர்.

இதில் வணிகப் பூக்கள், அதாவது முல்லை, மல்லி முதலியன. மதுரை, கோவை, சென்னை ஆகிய நகரங்களில் சுற்று வட்டாரங்களில் ஏராளமாகப் பயிரிடப்படுகின்றன.

இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் எல்லா மலர் வகைகளும் 20,000 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படுகின்றன. இதில் ரூ. 9 கோடி மதிப்புள்ள 11,000 டன் பூக்கள் கிடைக்கின்றன. மல்லிகை, முல்லை, கனகாம்பரம் போன்றவை 80 சதவீதம் தமிழ்நாட்டில் தான் கிடைக்கின்றன. அலங்காரப்பூக்கள் ஊட்டி, கொடைக்கானல் மற்றும் பெங்களூர், வடநாட்டில் காஷ்மீர், டார்ஜிலிங் ஆகிய பகுதிகளில் பயிரிடப்படுகின்றன.

நம்ம ஊர்களில் பெரும்பாலும் இந்த வணிகப் பூக்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. பெண்கள் தலையில் வைப்பதற்கும், கோயில்களுக்கும், திருமணங்களுக்கும் அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுகிறது. அலங்காரப் பூக்கள் பயன்படுத்தப்படுவது மிகமிகக் குறைவு! பெரிய பங்களாக்கள், விருந்துகள் முதலியவைகளில் மாத்திரமே அலங்காரப் பூக்களைக் காணலாம். ஆனால் மேல் நாடுகளில் அப்படி அல்ல. இந்த அலங்காரப் பூக்கள் மிகுந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன.''

''வெள்ளைக்காரிங்க கூட தலையிலே பூ வைப்பாங்களா டீச்சர்?''—மக்கு மல்லிகாவின் கேள்வி.

"தலையிலே வைக்கமாட்டாங்க! எல்லா வகை விழாக்களிலும், பண்டிகை நாட்களிலும் வீடுகளை இந்த அலங்காரப் பூக்களால் அழகு படுத்துவர். பிறந்த நாட்களின் போது பூக்கொத்துக்களை அன்பளிப்பாக வழங்குவார்கள். அதே போல் பெரிய மனிதர்களைப் பார்க்கப் போகும் போது, மருத்துவமனையிலிருக்கும் நண்பர்களை உடல் நலம் விசாரிக்கும்போது மலர்களை அன்புடன் வழங்குவர். இப்படித் தரும்போது அது ஒரு பூ என்றால் கூட இதற்கு மிகுந்த மதிப்பு உண்டு. ஆனால் காம்பு நீளமான பூக்களையே பயன்படுத்துவார்கள். பிறப்பு இறப்பு ஆகிய நிகழ்ச்சிகளுக்கும் அங்கு மலர்கள் பயன்படுத்தப்படுகின்றன.''

''பெண்கள் பூச்சூடிக்கொள்வதே கிடையாதா, டீச்சர்?''

''உண்டு! ஆனால் தலையில் அல்ல! முக்கியமான விருந்துகளுக்குச் செல்லும்போது 'அர்சிட்' என்ற ஒருவகைப் பூக்களை உடையின் மீது அணிந்து செல்வார்கள்.

இந்த அலங்காரப் பூக்களைச் சாகுபடி செய்வது, ஒரு சிறந்த, மிக நுட்பமான கலையாக, பெருந்தொழிலாக, அயல் நாடுகளில் வளர்ந்துள்ளது. இம்மாதிரிப் பூக்களை விற்பதற்கென்றே தனிக் கடைகள் அங்கு இருக்கும். அது தவிர ஏற்றுமதிக்காகவே தனியாகவும் பயிர் செய்கின்றார்கள். நெதர்லாந்து நாட்டில் பலவிதமான பூக்கள் பயிரிடப்படுகின்றன. அதில் 75 சதவீதம் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இஸ்ரேல் நாடு மட்டும் ஆண்டு தோறும் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள அலங்காரப் பூக்களை ஏற்றுமதி செய்கிறது.''

''நம்ம நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆகுதா டீச்சர் ?''

''இதுவரை பெரிய அளவில் ஒன்றுமில்லை. சென்ற ஆண்டு வெளிநாட்டில் நடந்த பூக்கண்காட்சிக்கு ரோஜா, வாட்சோனியா, அகாஃபந்தஸ், கிளாடியோலாஸ் என்ற நாலு வகைப் பூக்களை மத்திய அரசின் வர்த்தகக் குழு (State Trading Corporation) அனுப்பியது. மேற்கு ஜெர்மனியிலிருந்து நாளொன்றுக்கு 3,000 மலர்களுக்கும் ஹங்கேரியிடமிருந்து வாரமொன்றிற்கு 10,000க்கும், இங்கிலாந்து, பிரான்சு, சுவிட்சர்லாந்து, செக்கோஸ்லோவாகியா ஆகிய நாடுகளிலிருந்து மொத்தம் 5 லட்சம் ரோஜாப் பூக்களுக்கும் ஆர்டர் வந்துள்ளன. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டில் சிறிது ஏற்றுமதியாகும்.''

''அது ஏன் டீச்சர் ஒரு வருஷம் கழிச்சு . . . ?''

''வெளிநாடுகளில் இந்த அலங்காரப் பூக்கள் ஏராளமாகப் பயிராகின்றன. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் டிசம்பர் முதல் மார்ச் வரை குளிர் பருவமாக யிருப்பதால் இந்த மலர்ச் செடிகளைப் பயிரிட முடியாது. ஏனெனில் அப்போது நிலத்தைப் பனி மூடிவிடும். எனவே, பயிர்களெல்லாம் குளிர்ச்சியினால் மாண்டு விடும். அதனால் இந்தப் பருவ காலங்களில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சுவீடன், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் இந்த அலங்காரப் பூக்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றன. நம்ம ஊரில் ஊட்டி, கொடைக்கானலில் உள்ள பருவ நிலை இந்தக் காலங்களில் அலங்காரப் பூக்கள் பயிரிட மிகவும் உகந்த காலமாக உள்ளது."

''எந்த மாதிரி நிறம் அவங்களுக்குப் பிடிக்கிறது டீச்சர்?''

''இளம் சிவப்பு (Pink) தங்க நிறம், வெள்ளை ஆகியவைதான் அவர்களுக்குப் பிடித்த நிறம். அதிலும் குறிப்பாக ரோஜா வகைகளில்.''

''ரோஜா அங்கு என்ன விலையிருக்கும் டீச்சர்?''

''ஜெர்மனியர்கள் இந்திய ரோஜாவிற்கு குளிர் பருவ காலத்தில் 100-க்கு 150 ரூபாய் வரை கொடுக்கத் தயாராக உள்ளனர். அதாவது ஒரு ரோஜாவின் விலை ஒன்றரை ரூபாய். கார்னேஷன், சாமந்தி ஆகியவைகளுக்கு ஒரு டஜனுக்கு ரூ. 72 வீதமும், கிளாடியோலாஸ், ஜெர்பிரா ஆகியவற்றிற்கு ஒரு டஜனுக்கு ரூ. 12 முதல் 24 வரையும் அங்கு விற்கப்படுகின்றன. மற்ற ஐரோப்பிய நாடுகளில் காரனேஷன் என்ற மலருக்கு 100-க்கு ரூ. 15 முதல் 70 வரையும், சாமந்திக்கு 100-க்கு ரூ. 50 லிருந்து 175 வரையும் கொடுக்க முன் வருவதாகத் தெரிகிறது. ஆர்ச்சிட் என்ற பூ ஒன்றுக்கு ரூ. 20 கூடத் தருவார்களாம்."

''அடேங்கப்பா! நம்ம ஊரில் 10 காசுக்கு 4 ரோஜா விற்குதே."

''அது சாதாரண ரோஸ்! ஏற்றுமதி ரக ரோஜா ஊட்டியில் ஒரு டஜன் ஒரு ரூபாய் முதல் 3 ரூபாய் வரை விற்கும்."

''ஏற்றுமதி ரகம்னு என்ன டீச்சர்?''

''ஏற்றுமதிக்கான அலங்காரப் பூக்கள்சில தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். வெளிநாட்டவர்கள் விரும்பும் நிறத்திலிருக்க வேண்டும். காம்புடன் சேர்ந்த பூ 75 சென்டி மீட்டர் நீளம் இருக்க வேண்டும். வெட்டும் போது பூக்கள் விரிந்திருக்கக் கூடாது. மொட்டாக இருக்க வேண்டும், ஆனால் 24 மணிநேரத்தில் விரியக் கூடியதாக இருக்க வேண்டும்.''

''எதற்கு 24 மணி நேரம்?''

''வெளி நாடுகளுக்கு விமானம் மூலம் தானே பூக்கள் போகின்றன. காலையில் அல்லது முற்பகல் 10, 11 மணிக்கு மதுரை, கோவையிலிருந்து விமானத்தில் ஏற்றினால், சென்னை வந்து, பின் வேறு விமானம் மூலம் பிற்பகலில் அல்லது மாலையில் பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகியநகரங்களுக்கு வந்து சேரும். அடுத்த விமானத்தில் ஏற்றினால் மறுநாள் காலையில் மேற்கு ஜெர்மனியிலோ, பிரான்சிலோ தமிழ் நாட்டு மலர்களைப் பார்க்கலாம்!''

''டீச்சர்! டீச்சர் . . . விமான நிலையம் வந்திட்டுது."

''லட்சுமி! அதோ அந்த கவுண்டரில் போய் 30 டிக்கட் வாங்கு. மெள்ள; எல்லாரும் அமைதியா, நாகரிகமா நடந்துக்கணும்."

''டீச்சர், அதோ! விமானத்தில் கூடை கூடையா ஏற்றுகிறார்களே! அதுகூட இந்தப் பூதானா!''

''அவை அலங்காரப் பூக்கள் அல்ல! மல்லி, சாமந்தி போன்றவை. பம்பாய், டில்லி ஆகிய பகுதிகளுக்கு அனுப்புகிறார்கள்.''

''தினம் எவ்வளவு அனுப்புவார்கள்?''

''மதுரையிலிருந்து நாள் தோறும் சுமார் 900 கிலோ பூக்கள் விமானத்தில் வருகின்றன. கோவையிலிருந்து 300 கிலோ வரும். சென்னை வட்டாரத்திலுள்ளதைப் பெரும்பாலும் சென்னை நகரிலேயே விற்றுவிடுகிறார்கள். தற்போது இவர்கள் பயிரிடும் பூச்செடிகள் 3 மாதங்கள் தான் பூக்கக்கூடியன. அரசினர் மலர் ஆராய்ச்சிப் பண்ணையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள புதியரக மல்லியைப் பயிரிட்டால் 6 மாதங்கள் தொடர்ந்து பூ கிடைக்கும்.''

''டீச்சர் விமானம் போடற சத்தத்திலே நீங்க சொல்றதே காதிலே விழலே.''

''அது காரவல் விமானம், அப்படித்தான் இரையும்.''

''டீச்சர் இந்த அலங்காரப் பூக்களை யார் பயிரிடுகிறார்கள்? அரசாங்கமா?''

''ஊட்டி, கூனூர், கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் உள்ள

அரசினர் பூங்காக்களில் ரோஜாப் பூக்கள் மட்டும் சுமார் 500 வகைகள் இருக்கும். மற்ற அலங்காரப் பூக்கள் 100 வகைகள் உள்ளன. இவற்றில் பல, ஏற்றுமதிக்குத் தகுந்தவை. இந்த அலங்காரப் பூக்களைத் தனியார்களும் பயிரிடலாம். சில ரகங்களை ஊட்டி, கொடைக்கானல், கூனூர், கோத்தகிரி போன்ற மலைப்பகுதிகளில் பயிரிடலாம். அஸ்டார்ஸ், சாமந்தி ஆகியவைகளை கோவை, மதுரை பகுதிகளில் பயிரிடலாம். ஆர்கிட்ஸ், ஸ்டிரெட்டிசா போன்றவை ஏற்காடு, ஏலகிரி, கொல்லி மலை பகுதிகளில் நன்கு வளரும். இதற்காக அரசினர் மலர்கள் ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று கோவையில் உள்ளது. சென்னையை அடுத்த வண்டலூரில் கூட 40 ஏக்கர் நிலத்தில் மலர்ப் பண்ணை ஒன்றினை ஏற்படுத்தத் தமிழக அரசு வேளாண்மைத் துறை திட்டமிட்டுள்ளது.''

''டீச்சர்! இந்த ஏற்றுமதியில் அரசு ஏன் அவ்வளவு ஆர்வம் காட்டுது?''

''இது விவசாயிகளுக்கு நல்ல வருமானம் தரக்கூடியது. உதாரணமாக, மற்ற பயிர்கள் பயிரிட்டால் ஏக்கருக்கு 1,000 அல்லது அதிக பட்சம் 2,000 ரூபாய்தான் வருமானம் வரலாம். ஆனால் ஒரு ஏக்கரில் ரோஜா சாகுபடி செய்தால் ரூ.15,000 வரையும்; கிளேடியோலஸ், டாலியாஸ் வகைகளில் ஏக்கருக்கு 10,000 முதல் 12,000 ரூபாய் வரையிலும் நிகர லாபம் பெறலாம். மற்றப் பூக்கள் மூலம் ஏக்கருக்கு ரூ. 5,000 வருமானம் கிடைக்கும். அலங்காரப் பூக்கள் சாகுபடி செய்யச் செலவு ஏக்கருக்கு 1,500 அல்லது 2,500 வரை தான் ஆகும். அதுவும் பெங்களூர் பூக்களைவிட நம்ம தமிழ்நாட்டு அலங்காரப் பூக்களுக்கு வெளிநாட்டில் அதிகக் கிராக்கி இருப்பதாகத் தெரிகிறது. எனவே விவசாயிகள் விஞ்ஞான ரீதியில் தரமான பூச்செடிகளைப் பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும். நமது நாட்டு ரோஜா மலர்களையும் மற்ற அலங்காரப் பூக்களையும் வருக! வருக! என வரவேற்க மேலை நாட்டினர் ஆவலோடு உள்ளனர்.''

—என்று பெருமிதத்துடன் கூறிய ஆசிரியை, தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஏழாகியது. குழந்தைகள் அனைவரையும் பேருந்துக்குள் செல்லுமாறு கட்டளையிட்டார். அடுத்த பத்து நிமிடங்களில் அந்த உல்லாசப் பேருந்து தனது பயணத்தைத் தொடர்ந்தது.

இந்த மாதத்தில் என்ன செய்யலாம்?

உழவுத் தொழிலைப் பொறுத்த வரையில் புரட்டாசி மாதம் மிகவும் முக்கியமான மாதமாகும். ஏனெனில், புரட்டாசி மாதத்தில் தான் தமிழ் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சம்பா நடவு செய்யப்படுகிறது; குறுவை நெல் அறுவடைக்கு வருகிறது; பின் சம்பா அல்லது தாளடிக்கு நாற்று விடப்படுகிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நெல் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்கு இம்மாதத்தில் ஓய்வு கிடைக்காது. குளிர்காலக் கம்போடியாப் பருத்தி, மானாவாரி கருங்கண்ணிப் பருத்தி சாகுபடி செய்யவும் புரட்டாசி மாதமே ஏற்றது. தென் மாவட்டங்களில் மானாவாரியாகச் சோளம், கம்பு, குதிரைவாலி ஆகிய சிறு தானியங்களை விதைக்கவும், சேலம், கோயம்புத்தூர், வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் மானாவாரியாகச் சாமை விதைக்கவும் புரட்டாசி மாதமே சிறந்தது. மாநில மெங்கும் மானாவாரியாகத் தினை, உளுந்து, கொள்ளு ஆகியவைகளை விதைக்க இம்மாதமே பொருத்தமானது. எனவே, புரட்டாசி மாதத்தில் கீழே பரிந்துரைக்கப்படும் திருந்திய சாகுபடி முறைகளை மேற்கொண்டு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குமாறு உழவர் பெருமக்கள் அனை[illegible]ம் கேட்டுக்கொள்கின்றோம்.

நெல்

''புரட்டாசி நடவு பொன்னாக விளையும்'' என்பது உலகறிந்த உண்மையாகும். ஆகவே ஆவணி மாதத்தில் நாற்று விடப்பட்ட அதிசயநெல் ஐ.ஆர். 8, ஜெயா, ஐ.ஆர். 5, கோ-25, கோ-32, ஜி.இ.பி. 24, பி.சி.பி. 1 கோ-19 கோ-30 ஆகிய நெல் வகைகளின் நாற்றுகளை புரட்டாசி மாதத்திலேயே நட்டு விடுதல் நல்லது. "சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுத வேண்டும்'' என்பது போல, நாற்று நடுவதற்கு முன்பாக நடவு வயலைத் தயார் செய்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். அப்பொழுதுதான் குறிப்பிட்ட வயதில் நாற்றுகளை நட முடியும். எனவே, நடவு வயல் தயார் செய்வதில் உடனடியாகக் கவனம் செலுத்துங்கள்.

"அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்'' என்று ஆழ உழ வேண்டிய அவசியத்தை அன்றே தமிழறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஆகவே ஆழ உழுவதற்கு இரும்புக் கலப்பையைப் பயன்படுத்துங்கள். 4 முறை சாதாரணக் கலப்பையால் உழுவதை விட 2 முறை இரும்புக் கலப்பையால் உழுவதே சிறந்தது. நடவு வயலைத் தயாரிக்க இரும்புக் கலப்பையால் 3 முறை உழவு செய்யுங்கள். டிராக்டர் மூலம் உழவு செய்வதாகயிருந்தால், டிராக்டரில் கூண்டுச் சக்கரத்தை இணைந்து, நிலத்தின் குறுக்கும் நெடுக்குமாக 2 முறை உழுது பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப்படுத்தவும்.

"ஏரினும் நன்றும் எருவிடுதல்'' என்று அன்றே சொன்னார் நம் திருவள்ளுவர். "எரு செய்வதை இனத்தான் செய்யான்'' என்பது பழமொழி. எனவே நடவு வயலுக்கு எருவிடுவதில் மிகுந்த கவனம் செலுத்துங்கள். பசுந்தாள் உரம் கிடைக்குமானால் ஏக்கருக்கு 2,300 கிலோ (5 வண்டி) வீதம், நடவு வயலுக்கு இட்டுத் தழைமிதிக்கும் கருவி அல்லது பர்மியச் சட்டத்தால் தழைகளை நன்கு சேற்றில் அழுந்தும்படிச் செய்யுங்கள். பசுந்தாளுரம் கிடைக்காவிட்டால், ஏக்கருக்கு 10 வண்டி நன்கு மக்கிய தொழு எரு அல்லது கம்போஸ்டு எரு இட்டுச் சேற்றுடன் நன்கு கலக்குமாறு செய்ய வேண்டும். கடைசி உழவின்போது மணிச் சத்து, சாம்பல் சத்து உரங்களை இடவும். டிராக்டர் உபயோகித்து உழவு செய்தால், இரண்டாவது உழவிற்கு முன்பு மணிச் சத்து, சாம்பல் சத்து உரங்களை இட வேண்டும்.

"தமிழரசு" ஆகஸ்ட்/16 இதழில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவு மணிச்சத்து, சாம்பல்சத்து கிடைக்கக் கீழ்க்கண்ட உரங்களை இட வேண்டும்.

சூபர் பாஸ்பேட்

ஐ.ஆர். 8, ஜெயா.	220 கிலோ.
ஐ. ஆர். 5	130 கிலோ.
கோ-25, கோ-32	130 கிலோ.
கோ-30, ஜி.இ.பி.24, கோ-19, பி.ஏ.எம்.3, பி.சி.பி. 1 ..	90 கிலோ.

முரியேட் ஆப் பொட்டாஷ்

ஐ.ஆர்.8, ஜெயா.	60 கிலோ
ஐ. ஆர். 5	35 கிலோ.
கோ-25, கோ-32	23 கிலோ.
கோ-30, ஜி.இ.பி.24, கோ-19, பி.ஏ.எம்.3, பி.சி.பி. 1	11 கிலோ.

தழைச்சத்து உரத்தை, நடுவதற்கு முன்பு வயலில் இடவும். தழைச்சத்து உரமளிக்க அமோனியம் சல்பேட், அல்லது யூரியாவை உபயோகிக்கலாம். ஐ.ஆர். 8, ஜெயா நெல் வகைகளுக்கு 250 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 110 கிலோ யூரியா போடவும். ஐ.ஆர். 5 நெல்லிற்கு 135 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 60 கிலோ யூரியா தேவை. கோ-25, கோ-32 நெல் வகைகளுக்கு 85 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 37 கிலோ யூரியா இடவும். மேலே கூறப்பட்டுள்ள இதர நெல்

521

வகைகளுக்கு 35 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 15½ கிலோ யூரியா உரமிடவும்.

நடவு வயலைத் தயாரித்து உரமிட்டபின், நாற்றுகளைக் குறிப்பிட்ட வயதில் (நாளில்) பறித்து நட்டுவிட வேண்டும். நெல்லின் வயது 5 மாதம் என்றால், நாற்றின் வயது 5 வாரங்களுக்குஅதிகமாகக் கூடாது. பொதுவாக ஒரு மாத வயதுநெல்லுக்கு ஒருவார நாற்று என்ற அடிப்படையில் நாற்றின் வயதைக் கணக்கிட்டுக்கொண்டு அந்த நாளுக்குள் நாற்றைப் பறித்து நட்டு விடுதல் வேண்டும். ஆனால் நாற்றுவிட்ட 26 முதல் 28 நாட்களில் ஐ. ஆர். 8, ஜெயா ஆகிய வகைகளையும், 28 முதல் 30 நாட்களில் ஐ. ஆர். 5, நெல்லையும், 40 முதல் 45 நாட்களில் கோ-25, கோ-19 வகைகளையும், 30 முதல் 35 நாட்களில் ஜி. இ. பி. 24, கோ-30, பி. ஏ. எம். 3 நெல்லையும், 35 முதல் 40 நாட்களில் பி. சி. பி. 1-யும் நட்டு விடுதலே சிறந்தது. இதற்கேற்ப நாற்றுகளைக் குறிப்பிட்டவயதில் பறித்து நட்டு விடுங்கள்.

நாற்றுகளைப் பறிக்கும் போது வேர் அறுந்து விடாமலும், தண்டு ஒடிந்து விடாமலும் கவனமாகப் பறிக்க வேண்டும். நாற்றின் வேர்களிலுள்ள சேற்றை அகற்ற நாற்றுக்களைத் தரையிலோ அல்லது குச்சியிலோ அடித்தல் கூடாது. நாற்று முடிகளைக் கட்ட நாற்று களையே வளைத்துக் கட்டக் கூடாது. நாற்றுகளைக் கட்டுவதற்கு வாழை நாரையோ அல்லது வைக்கோலையோ உபயோகிக்கவும்.

நாற்றுகளைப் பறித்த பின், நாற்றுகளை வரிசையில் நடவு செய்யுங்கள். வரிசையில் நடவு செய்வதால், கீழ்க்கண்ட நன்மைகள் ஏற்படும்.

* பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான கதிரவனின் ஒளியும் காற்றும் எல்லாப்பயிர்களுக்கும் சமமாகக் கிடைத்திடும்.

* களை எடுத்தல், உரமிடுதல், மருந்து தெளித்தல் ஆகிய வேலைகளை எளிதில் செய்ய முடியும்.

* ஜப்பானியக் களை எடுக்கும் கருவிகளை உபயோகித்து, களை எடுக்கவும், பயிர் வரிசைகளுக்கிடையே மண்ணைக் கிளறிவிடவும் முடியும்; இதனால் புதிய வேர்கள் கிளைக்கவும், தூர்கள் அதிகமாகக் கிளைக்கவும் வழி ஏற்படுகிறது.

* எல்லாப் பயிர்களும் ஒரே யளவாக நிலத்திலிருந்து சத்துக்களை எடுத்துக் கொண்டு, ஒரே மாதிரியாக வளர்ந்து, வாளிப்பான கதிர்களைக் கொடுக்கும்.

* வரிசை நடவு செய்யப்பட்ட வயலில், போதுமானவெளிச்சமும் காற்றோட்டமும் இருக்குமாதலின் பொதுவாக எலிகளால் ஏற்படும் சேதம் மிகவும் குறைவு.

* வரிசையில் நடவு செய்யக் கயிறு பிடித்தோ அல்லது 'மார்க்கர்' என்னும் கோடு கிழிக்கும் கருவியால் நடவு வயலில் அடையாளக் கோடு கிழித்துக் கொண்டோ நடவு செய்யலாம்.

வரிசைக்கு வரிசை 8 அங்குலமும், பயிருக்குப் பயிர் 4 அங்குலமும் இடைவெளி கொடுத்து மேற்கூறிய எல்லா நெல் வகைகளையும் (கோ-25 தவிர) நடவுசெய்யவும். கோ-25 நெல்லிற்கு மட்டும் வரிசைக்கு வரிசை 8 அங்குலமும், பயிருக்குப் பயிர் மட்டும் 5 அங்குமும் இடைவெளி விடவும். நடவு செய்யும்போது குழிக்கு 2 நாற்றுகள் வீதம் வைத்து நடவு செய்யவும்.

நடவுசெய்யும் முறை பற்றி ஜப்பானிய நிபுணர்களின் கருத்து

பொதுவாக நம் நாட்டில் நாற்றுகளை மிகவும் ஆழமாக நட்டு விடுவதாகவும், நடும்பொழுது நாற்றுகளைக் கட்டைவிரலால் அழுத்துவதாகவும் அதனால் நாற்றுகள் வளைந்து விடுவதாகவும், அதன் காரணமாகப் பயிர்களின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுவதாகவும் பின்னால் மகசூல் குறைந்து விடுவதாகவும் ஜப்பானிய நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நாற்றுகளை 3 சென்டி மீட்டர் ஆழத்தில் நடுவதே போதுமானது. நடும் பொழுது பயிர்களைக்கட்டைவிரல், ஆட்காட்டி விரல், நடுவிரல் ஆகியவைகளின் இடையே, பயிர்களின்வேர் நடுவிரல் நுனியில் இருக்குமாறு வைத்துச் சேற்றுக்குள் அழுத்த வேண்டும். அவ்வாறு பயிர்களை அழுத்தும் போது, பயிர்களை விரல்களின் நுனி பாதுகாக்க வேண்டும்.

இதுவே நடுவதற்குச் சிறந்த முறை என்று ஜப்பானிய வல்லுநர்கள் கூறுகிறார்கள். இம் முறை முதலில் சற்றுக் கடினமாக இருந்தாலும், நாளடைவில் பழக்கத்திற்கு வந்துவிடும். "முயற்சி திருவினை ஆக்கும்" என்பது போல், இம்முயற்சி உழவர் பெருமக்களுக்குத் திருவினைச் சேர்க்கும். எனவே இம்முறையை நம் நாட்டிலும் மேற்கொண்டு உழவர் பெருமக்கள் பெரும் பயன் பெறலாம்.

"பயிர் கிளைத்தால் ஆச்சு, களை கிளைத்தால் போச்சு" என்ற பழமொழிக்கேற்ப, நடவு செய்த 15-ம் நாள் களை எடுக்கவும். வரிசை நடவுசெய்திருந்தால் களை எடுக்கும் கருவியை உபயோகித்து வரிசைகளுக்கு இடையில் வயலைக் கிளறிவிட்டுக் களை எடுக்கவும்.

குறுவை நெல்—இம்மாதத்தில் ஆடுதுறை-27, கோ-29, கருணை, ஐ. ஆர்-8, ஜெயா, பத்மா ஆகிய குறுவை நெல் வகைகளை அறுவடை செய்யலாம். அறுவடையின்போது மழையிருந்தால், மழையினால் அறுவடை பாதிக்கப்படும். குறிப்பாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவைஅறுவடை மழையினால் பாதிக்கப்படலாம். ஆனால் தஞ்சாவூர் மாவட்ட உழவர் பெருமக்கள், குறுவை நெல் மழையினால் நனைந்தாலும் கவலைப்படத் தேவை இல்லை. நனைந்த நெல்லை, நெல் உலர்த்தும் இயந்திரங்களுக்கு அனுப்பி, உலர்த்தி, தூற்றி, சுத்தமாக்கிக்கொள்ளலாம். மற்ற மாவட்டங்களில் நெல் மணிகள் முதிர்ந்தவுடனே அறுவடை செய்துவிடவேண்டும். மிகவும் முதிர்ந்து விட்டால், நெல் மணிகள் உதிர ஆரம்பிக்கும். எனவே நெல் மணிகள் உதிர்ந்து சேதமாவதைத் தடுக்கத், தக்க சமயத்தில் அறுவடை செய்யுங்கள்.

பின் சம்பா அல்லது தாளடி

இம்மாதத்தில் பின் சம்பா அல்லது தாளடிப் பட்டத்திற்கு கோ-25, கோ-32, அம்பை-5 (ஏ. எஸ். டி. 5) ஆகியவைகளை நாற்றுவிடலாம். திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பிசானம் பருவத்திற்கும் தற்பொழுது நாற்று விடலாம். பிசானம் பருவத்திற்கு அம்பை 5, அம்பை-11, அம்பை-13, கோ-25 ஆகியவைகளை நாற்று விடலாம்.

சோளம்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் புரட்டாசி மாதத்தில் மானாவாரி சோளம் விதைப்பது வழக்கம். இப் பகுதிகளில் கே-3 (பெரிய மஞ்சள் இருங்கு) என்னும் பொறுக்கு விதையை விதைக்கலாம்.

வயலை நாட்டுக் கலப்பையாலோ அல்லது சிறிய இரும்புக் கலப்பையினாலோ 2 அல்லது 3 முறை உழவு செய்யவும். ஏக்கருக்கு 10 வண்டி நன்கு மக்கிய தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு இட வேண்டும். ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்தும், 9 கிலோ மணிச்சத்தும் கொடுக்கும் இரசாயன உரங்களை அடி உரமாக இடவும்.

கே. 3 சோள விதையை ஏக்கருக்கு 7 கிலோவீதம் விதைக்கவும். விதைகளை அக்ரசான் அல்லது செரசான் அல்லது டி. எம். டி. டீ. மருந்துடன், ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கலந்தே விதைக்க வேண்டும். மருந்து கலந்த விதைகளைக் கையினால் தூவியோ அல்லது 'கொர்ரு' கலப்பையினாலோ அல்லது விதைக்கும் கருவியினாலோ விதைக்கலாம். மழை ஈரம் காய்வதற்குள், பெரும் பரப்பில் வரிசையில் விதைத்திட 'கொர்ரு' கலப்பை அல்லது விதைக்கும் கருவி ஏற்றது.

கையினால் தூவி விதைத்தால், 8 அடி தூரத்திற்கு ஒரு வரிசை மொச்சை விதைக்கலாம். வரிசையில், விதைத்தால் 4 வரிசை சோளத்திற்கு, ஒரு வரிசை மொச்சை விதைக்கலாம். இவ்வாறு செய்வதால் உழவர் பெருமக்களின் வருமானம் பெருகும்.

கே. 3 சோளத்தை வரிசையில் விதைத்தால், வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளியும் வரிசையில் பயிருக்குப் பயிர் 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும் கொடுக்க வேண்டும். விதைத்த 20-வது நாளுக்குள் களை எடுக்கவும். களை எடுக்க களைக்கொட்டு களையோ அல்லது 'தந்துலு' என்னும் கருவியையோ அல்லது புஞ்சை நிலத்தில் களை எடுக்கும் கருவியையோ உபயோகிக்கவும். இதனால் களைகளை அகற்றுவதுடன், மண்ணின் ஈரத்தைக் காக்கவும் முடியும். கையினால் விதைத்திருந்தால், களை எடுத்த பின், அதிகமாக உள்ள பயிர்களைக் கலைக்கலாம். பயிர் கலைப்பதை, விதைத்த 20 நாட்களுக்குள் முடித்துவிடவேண்டும்.

கம்பு.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் கரிசல் நிலங்களில் இம் மாதத்தில் மானாவாரியாகவிதைப்பதற்கேற்ற உயர் விளைச்சல் ரகமான எச்.பி. 3 கம்பு விதைப்பதே சிறந்தது.

கரிசல் மண் நிலங்களில் மானாவாரியாகப் பயிரிடப்படும் நாட்டுக் கம்பு, கே. 1 கம்பு ஆகியவைகள் ஏக்கருக்கு 200 முதல் 323 கிலோ தானியமே கொடுக்கும். ஆனால் எச். பி. 3 கம்பு சாகுபடி செய்தால் ஏக்கருக்கு சராசரியாக 1,154 கிலோகிராமும், உச்ச அளவாக 1,300 கிலோகிராம் வரையும் தானிய மகசூல் கிடைக்கும்.

எச்.பி. 3 கம்பு விதைக்க நிலத்தை நன்கு புழுதியாக உழுது ஏக்கருக்கு 10 வண்டி நன்கு மக்கிய தொழு எருவையோ அல்லது கம்போஸ்ட் எருவையோ போடவும். ஏக்கருக்கு 16 கிலோ தழைச் சத்தும், 8 கிலோ மணிச் சத்தும் அளிக்கக்கூடிய இரசாயன உரங்களை அடி உரமாக விதைக்கும் பொழுது இடவும்.

எச்.பி. 3 கம்பு விதைகள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்குகளில் கிடைக்கும். சான்றிதழ் பெற்ற விதைகளையே விதைக்க வேண்டும். மருந்து கலக்காத விதையானால் அக்ரசான் அல்லது கேப்டான் அல்லது டி.எம்.டி.டீ. மருந்துடன் 1 கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து வீதம், கலந்து விதைக்க வேண்டும்.

ஏக்கருக்கு 1 முதல் 1½ கிலோ விதையை 'கொர்ரு' கலப்பையால் வரிசை வரிசையாக விதைக்கவும். வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1½அடி) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 15 சென்டி மீட்டர் (½ அடி) இடைவெளியும் விட்டு விதைக்கவும். விதைத்த 15-வது நாளில் 'தந்துலு' என்னும் கருவியாலோ அல்லது நாட்டுக் கலப்பையாலோ' பயிர் வரிசைகளுக்கு இடையில் பயிர் உழவு செய்யவும். விதைத்த 20-வது நாளில் வரிசையில் பயிருக்குப் பயிர் 15 சென்டி மீட்டர் (½ அடி) இடைவெளி விட்டு அதிகமாக உள்ள பயிர்களைக் கையினால் அகற்றிவிட வேண்டும் வரிசை வரிசையாக விதைக்காமல், விதைகளைக் கையினால் தூவி விதைத்திருந்தால், பயிருக்குப் பயிர் 15 சென்டி மீட்டர் இடைவெளி இருக்குமாறு செய்து மற்றவைகளைக் கலைத்துவிட வேண்டும்.

தானே பயிரிட்டு வளரும் நிலம், தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தையைப்போல! நிலத்தைக் குத்தகைக்கோ வாரத்திற்கோ விட்டால், நிலத்திலே பயிர் வளராது என்பதில்லை — வளரும் — ஆனால் அதிலே வாஞ்சையிருக்காது.

இம்மாதத்தில் மாநிலமெங்கும் இறவையாகப் பயிர் செய்ய 'எக்ஸ் 3' என்னும் ஒட்டு வீரியக் கம்பு ஏற்றது. ஏக்கருக்கு 3 கிலோ விதையே போதுமானது. இறவையில் எக்ஸ் 3 கம்பு பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச்சத்து 9 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும்.

ராகி.

சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, திருச்சி மாவட்டங்களில் இம்மாதத்தில் கோ-2 ராகியை இறவையாகப் பயிரிடலாம். 3 சென்ட் நாற்றங்காலில் 1½ கிலோ விதையை நாற்று விட்டு, நாற்று விட்ட 20 நாட்களில் நடவு செய்யவும். நடவு வயலுக்கு அடியுரமாக ஏக்கருக்கு 9 கிலோ தழைச் சத்து, 9 கிலோ மணிச்சத்து, 9 கிலோ சாம்பல் சத்து இடவும். நாற்றுகளை 6 அங்குலம் × 6 அங்குலம் இடைவெளியில் நடவு செய்யலாம்.

தினை.

மாநிலமெங்கும் மானாவாரியாக இம் மாதத்தில் கோ-3 தினை விதைக்கலாம். ஏக்கருக்கு 10 கிலோ விதை விதைக்கவும். 1 கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் மருந்து வீதம் கலந்து விதைகளை விதைக்க வேண்டும். கோ 3 தினை விதைக்க மானாவாரி சோளத்திற்குத் தயாரிப்பது போல் தயாரித்து, அதற்குப் பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்களை அடியுரமாக இடவேண்டும். கொர்ரு கலப்பையால் வரிசையில் விதைக்கவும். வரிசைக்கு வரிசை 10 அங்குலமும், வரிசையில் பயிருக்குப் பயிர் 4 அங்குலமும் இடைவெளி விட்டு விதைக்கவும். கையினால் விதைத்தால், பயிருக்குப் பயிர் 4 அங்குலம் இருக்குமாறு விதைக்கவும். மானாவாரி சோளத்திற்குச் செய்வது போலவே இதற்கும் களை எடுக்கவும்.

சாமை.

மானாவாரியாக கோ-1 சாமையை சேலம், கோயம்புத்தூர், வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் விதைக்கவும். தினைக்குச் சொல்லப்பட்ட சாகுபடிக் குறிப்புகளையே இதற்கும் மேற்கொள்ளலாம்.

குதிரைவாலி.

தென் மாவட்டங்களில் அண்மையில் வெளியிடப்பட்ட கே. 1 குதிரைவாலியை, ஏக்கருக்கு 5 கிலோ வீதம் விதைக்கலாம். இதனால் தற்பொழுது சாகுபடியில் உள்ள நாட்டு ரகங்களை விட 23 சதம் அதிக மகசூல் பெற முடியும்.

உளுந்து, கொள்ளு.

இம்மாதத்தில், ஏக்கருக்கு 10 வண்டி கம்போஸ்ட் அல்லது தொழு எரு, 4½ கிலோ தழைச் சத்து, 9 கிலோ மணிச்சத்து ஆகியவைகளை அடியுரமாக இட்டு, 8 கிலோ கோ-1 உளுந்து அல்லது கோ-1 கொள்ளு விதையை மானாவாரியாக விதைத்து மகசூலைப்பெருக்கலாம்.

அண்ணலின் அமுத மொழி!

ஆலயஞ் சென்று தேங்காய் உடைப்பதோ, கற்பூரம் கொளுத்துவதோ, கடவுள் பணியாகா. ஒவ்வொரு உயிரும் கடவுள் உருவமெனக் கருதி, அவ்வுயிர்கட்கு அன்புப் பணி செய்வதே கடவுள் பணியாகும்.

* * *

உண்மையான ஜனநாயகத்தைப் பற்றிய நம்முடைய கனவு நனவாக வேண்டுமானால், நாம் என்ன செய்ய வேண்டும்? எளிய தாழ்ந்த இந்தியனையும் பெரிய மனிதனோடு ஒப்ப நினைத்து அவனும் இந்த அரசை நடத்துபவனென்று எண்ண வேண்டும்.

* * *

தீமை செய்தவர்க்கும் நன்மை செய்தால் தான் நல்லவன் என்பதற்கு அர்த்தமுண்டு. நன்மை செய்தவனுக்கு மட்டுமே நன்மை செய்தால், அது வெறும் வியாபாரமே யாகும். எவ்விதப் பெருமையும் இடையாது.

பகுத்தறிவுக்கு எட்டாத ஒன்றில் நம்பிக்கை வைப்பது குருட்டுத்தனமான நம்பிக்கையாகும்.

* * *

உயிரை இழக்கத் துணியாத கோழையிடம் அகிம்சையைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. அகிம்சை ஆண்மையின் அணிகலன்.

* * *

அகிம்சை என்பது அஞ்சா நெஞ்சமுள்ள வீரர்களுக்கே உரிய ஆயுதம்; கோழைகளுக்கல்ல.

* * *

மக்கள் உள்ளத்திலின்று வெகுளியையும் வெறுப்பையும் விரட்ட வேண்டுமானால், அமைப்பு வேலையில் அரசாங்கமும் முனைய வேண்டும். அமைப்பு வேலை என்னும் அஸ்திவாரத்தின் மேல் அமைந்த கட்டடந்தான் ஒன்று பட்டு உருக்குலையாதிருக்கும்.

யானையார் பேட்டி தருகிறார்!



மக்களுக்குப் பகுத்தறிவு இருக்கிறதாம்; விலங்குகளாகிய எங்களுக்கு இல்லையாம்; பிறருடைய பொருளுக்கு ஆசைப்படக்கூடாதாம்; பிறரை வேலை வாங்கிப் பிழைக்கக் கூடாதாம்; தன்னுயிரைப் போல் மன்னுயிரையும் நேசிக்க வேண்டுமாம், "எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி." இதெல்லாம் எவ்வளவு பெரிய வேதாந்தம்; கேட்க இனிமையாக இருக்கிறது; ஏன்? பேசவும் சுவையாக இருக்கிறது; இவ்வளவு வேதாந்த அறிவுரை பேசும் மக்கள் "சொல்லுதல் யாவர்க்கும் எளிய" என்பதை மறந்து விட்டார்கள்; நாங்கள் எங்கேயோ பிறந்தோம்; எங்கேயோ வளர்ந்தோம். இயற்கை எங்களுக்கென ஓங்கிய மலைகள், குன்றுகள், சோலைகள், காடுகள், ஓடைகள், அருவிகள் எல்லாம் தந்திருக்கிறது. இந்த இரக்கமுடைய (!) மக்களின் கண்ணிலே நாங்கள் பட்டு விட்டால் பாவம் என எங்கள் இயற்கை அன்னை கருதினாள். எங்கோ எங்களில் சிலர் குகையிலே முனிவர்களைப்போல் வாழ்கின்றனர்; வேறு சிலர் அடர்ந்த மரக்காடுகளிலே மறைந்து காலம் தள்ளுகின்றனர்; மற்றும் சிலர் ஓடைகளின் ஓரங்களிலே, புல்லடர்ந்த புதர்களிலே பரந்த பசிய வெளிகளிலே நாங்களும் உண்டு, எங்கள் வாழ்வும் உண்டு என்று ஒதுங்கி வாழ்கிறோம். ஒரு நேர உணவுக்காக இந்த மனிதர்களின் மாளிகையை நாடியதுண்டா? குளிரும் பனியும்

கொடுமையாகத் தாக்கினாலும் போர்வை கேட்டுப் போனதுண்டா? ஏதோ பேகன் ஒருவன் எங்கள் தோழன் மயிலுக்குப் போர்வை ஒன்று வழங்கிவிட்டானாம்! போதும்! போதும்! கேவலம் இந்தப் போர்வை கொடுத்த கொடையை இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பாட்டுகளால் பாடிக் கொல்லுகிறார்கள். மேடையிலே முழங்கிக் கொல்கிறார்கள்; ஆனால் நாங்கள் நாள்தோறும் இந்த மனித இனத்துக்கு வழங்குவதைக் கொஞ்சமாவது நன்றியுடன் எண்ணுகிறார்களா? நன்றிதான் வேண்டாமையா? எங்களைக்கொன்று குவிக்காமல் இருக்கலாமல்லவா?

எங்கள் இனத்திலே மிகவும் சாதுவானது பன்றி; இந்த இரக்கமுள்ள மனிதர்கள் எங்கள் ஊருக்கு—அதாவது அவர்கள் காடென்று அழைக்கிறார்களே அந்த—எங்கள் நாட்டிற்கு வந்தார்கள். தீ வைத்தார்கள்; ஐயா! இப்போதும் அதை நினைத்தால் என் வயிற்றில் தீப் பிடிக்கிறது. அதிலே எங்கள் பன்றித் தோழர்கள் மூவர் அகப்பட்டு விட்டார்கள். அதிலே வெந்துவிட்டார்கள். அருளுடைய மனிதர்கள் உயிரோடு எங்கள் தோழர்களைக் கொளுத்தி விட்டார்கள்; பிறகு ஆத்திரம் தாங்காமல் எம் பன்றித் தோழர்களை இழுத்தார்கள்; நெருப்பிலே வெந்து ஆருதிருந்த அந்த உடலில் அவர்கள் விரல்கள் புகுந்து விட்டன; சூடு தாங்காமல் ஆ! என்று விரலை வெளியே இழுத்து வாயிலே வைத்து விட்டார்கள். பன்றித் தோழரின் உடல் ஊன் சுவையை அன்றுதான் உணர்ந்தார்கள்; அந்நாள் முதல் எங்களுக்குச் சனியன் பிடித்தது; பன்றியைச் சுவைத்த அவர்கள் நாக்கு எங்களில் பலரையும் தின்ன ஆரம்பித்துவிட்டது. நாட்டை விட்டுக் கூட்டம் கூட்டமாக எங்களைத் தேடி வந்தார்கள். கல்லாலும் கம்பாலும் எங்களைக் கொன்றனர்; வில்லாலும் வேலாலும் வீழ்த்தினர்; இதோடு நிற்கவில்லை. துப்பாக்கி என்று ஒரு கருவியைக் கொண்டு வந்து தூரத்திலிருந்தே சுட்டுக் கொன்றனர். எங்கள் காட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருகின்றனர்; நாங்கள் பதுங்கியிருந்த பாறைகளையும் குகைகளையும் வெடிமருந்தால் உடைத்தனர்; கண்விழியா எங்கள் குட்டிகளைக் கவர்ந்து சென்றனர்; எங்களில் சிலரின் தோலை உரித்துப் போர்த்தினர்; நகங்களைக் கவர்ந்தனர்; கொம்புகளைக் கொண்டனர்; மயிரை வெட்டினர்; பல்லைப் பிடுங்கினர்; அவர்கள் புலனடக்கித் தவம் செய்ய எங்கள் தோழரின் புலித்தோலும் மான்தோலுந்தான் வேண்டுமாமே! என்ன தவமய்யா இது! அவர்கள் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எங்கள் தோழராகிய புலியாரின் பல் வேண்டுமாமே! புலிப்பல் தாலி என்று அவர்களே புகழ்ந்து கொள்கிறார்கள்; என்ன! கொடுமை! எங்களில் புலியாரோ, கரடியாரோ எங்கள் உறைவிடத்தை விட்டுத் தப்பித் தவறி அவர்கள் ஊருக்குச் சென்றுவிட்டால் எங்களைச் சித்திரவதை செய்து விடுகிறார்கள். 'ஒருகுலத்துக்கு ஒரு நீதி'.

இப்படியெல்லாம் எங்கள் உறைவிடங்களாகிய காட்டை எரித்து, அழித்து எங்கள் இனத்தவரிலே பல்லாயிரக் கணக்கானவரைக்கொன்று, காட்சிச் சாலை என்ற பெயரிலே எங்களைக் கம்பிக் கூண்டுகளிலே சிறைப்படுத்தி — வேடிக்கை காட்ட எனச் சர்க்கஸிலே எங்களை அடிமையாக்கி வரும் இந்த 'நாகரீகம்' மிக்க மக்களுக்கு எங்களிடம் பாசமாம்; இரக்கமாம்; அருளாம்; அன்பாம்; எங்களுக்கென்று சரணாலயம் அமைத்துத் தந்திருக்கிறார்களாம்! என்னால் பேச முடியவில்லை; கண்ணீர் வருகிறது; தோழர் யானையாரைக் கேளுங்கள்; அவரே சொல்லுவார்; "நெஞ்சு பொறுக்குதில்லையே; இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்" என்று சொன்ன அந்தச் செஞ்சொற் புலவன் பாரதி எங்களிடம் அன்புள்ளவன்; வாழைப்பழமும் தேங்காயும் ஆண்டவனுக்கு வழங்குமுன் எங்கள் தோழன் யானைக்குக் கொடுத்த உத்தமன்; அவனுக்கு நாங்கள் தீங்கிழைத்துவிட்டோம்; உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்து விட்டோம்; அந்த மகாகவியை மதம் பிடித்த எங்கள் யானைத் தோழன் செய்த............ நாக்கு எழவில்லை மேலே பேச; அதன் பயனைத்தான் இன்று நாங்கள் அனுபவிக்கிறோம். சரி; யானைத் தோழரே! நம் ஊருக்கு விருந்தினராக வந்திருக்கும் இவர் ஏதோ நம்மைப் பற்றி அறிய விரும்புகிறாராம்; அவர்களுக்கு உதவுங்கள். உங்கள் மூதாதை பாரதிக்குச் செய்த பழிச்செயலை மீண்டும் செய்து விடவேண்டாம்; "யானை அறிந்தறிந்தே கொல்லும் பாகனை" என்று சமண முனிவனே உங்களைப்பற்றிச் சான்றிதழ் வழங்கிவிட்டான்; சரி; நடப்பது நடக்கட்டும்"

இப்படிச் சொல்லிக்கொண்டு என்னை யானையாரிடம் அறிமுகப்படுத்திவிட்டுத் தந்திரமுள்ள நரியார் மறைந்து விட்டார்.

சரணாலயத்தேயுள்ள யானைத் தோழர் என்னை நிமிர்ந்துபார்த்தார்; திடீரெனத் தும்மினார் யானையார்; என்னைத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது; 'அஞ்சி அஞ்சிச் சாவார்' என்று அமரகவி என்னை நினைத்துத்தான் எழுதினாரோ?

யானையார் பேசுகிறார்: நீங்கள் -அதாவது மனிதனாகிய நீ-என்னுடைய சாம்ராஜ்யத்திற்கு வந்திருக்கிறாய்; உன் மனித இனம் எங்களுக்குத் தனிப்பட்ட முறையில் செய்து வரும் கொடுமைகள் பலப்பல; காட்டிலே கூட்டம் கூட்டமாய்த் திரியும் எங்கள் இனத்தைக் கவர அவர்கள் செய்யும் நயவஞ்சகம் உங்களுக்குத் தெரியாததல்ல; எங்கள் ஊருக்குள்ளே பரந்த வெளியில் படையெடுத்துப் பள்ளம் தோண்டி அதனை மென்பலகையால் மறைக்கிறார்கள்; அதன் மீது கரும்பும் தென்னையும் பொய்யாக நட்டு வைத்து விட்டுப் பரணிலே மறைந்து பறைகளை முழக்குகிறார்கள்; ஓசை கேட்டுக் கலைந்து ஓடி வரும் நாங்கள் கரும்பையும் தென்னையையும் ஆசையுடன் தின்ன வந்து பள்ளத்திலே வீழ்ந்து விடுகிறோம் 'பழகியவர்க்குப் பள்ளம் தோண்டுவதில்' பலே கெட்டிக்காரர்கள் இந்த மனிதர்கள்; தப்பித் தவறிப்பள்ளத்திலே விழுந்த நாங்கள் சும்மா இருப்போமா? கரைகளைக் கொம்பால் குத்துவோம்; மண்ணைச் சாய்ப்போம்; மேலே ஏற முயல்வோம்; ஆனால் எங்களைக் கைதூக்கிவிட அவர்கள் முயலாமல் தடுத்துப் பள்ளத்திலே பட்டினி போடச் செய்வார்கள்; உடல் வலிமை தளர்ந்து உள்ளம் சோர்ந்து 'ஆவி அகத்ததோ புறத்ததோ' என்னும் நிலைமையில் இருப்போம் அல்லவா? அப்போது எங்கள் இனத்தாரைக் கொண்டு வந்து எங்களுக்கு ஆசை காட்டுவார்கள். வயிற்றுப் பசி காரணமாக முன்பு பள்ளத்தில் வீழ்ந்தோம்; இப்போதோ காதல்பசி வசப்பட்டு எங்கள் இனத்தார் உதவி கொண்டு மேலே வந்து சேருகின்றோம்; முனிவர்களே இந்தப் பசியால் தவம் குலைந்து ஊர்வசி, திலோத்தமை என்று ஊர்சிரிக்க ஓடினார்களாமே! அந்த விசுவாமித்திரன் விஷயம்தான் உங்களுக்குத் தெரியாதா? பின் எங்கள் நிலை சொல்லவும்வேண்டுமா? ஆசைகளால் மோசம் போனோம்; மனித இனத்துக்கு அடிமையானோம்.

என்ன மனிதத் தோழரே! விழிக்கிறீர்; ஒன்றும் தெரியாதவர் போலப் பாசாங்கு செய்கிறீரே; எங்களிற் சிலரைக் காட்டை விட்டு நாட்டிற்கும் கொண்டு வந்தனர்; கோவிலிலே கொண்டு வந்து கட்டினர்; குழந்தைகளைச் சுமக்க வேண்டும்; அரையணாக் காசுக்காக வந்தவர்களையெல்லாம் துதிக்கை தூக்கி அவர் தலையில் வைத்து ஆசீர்வதிக்க வேண்டும்; அந்தத் துதிக்கை வளைந்து வளைந்து நோவதை உங்கள் இனம் உணர்வதில்லை; ஏதோ சர்க்கரையும் தேங்காயும் தருவார்கள்; அதிக வேலை இல்லை, உண்மைதான்; ஆனால் அடிமை வாழ்வுதானே; எங்களில் வேறு சிலரை வேலைக்கும் பயன்படுத்துகின்றனர். காட்டிலே வெட்டப்படும் பெரிய மரத்தடிகளைக் கயிற்றிலே கட்டிவிடுவார்கள்; அவற்றை எங்கள் பற்களால் கடித்து இழுத்துக்கொண்டு வரவேண்டும். உண்ணுதற்கு இயற்கை கொடுத்த வாயை உங்கள் மனிதர்கள் எப்படி உபயோகிக்கிறார்கள்; என்ன சும்மா வாயை மூடிக் கொண்டிருக்கிறீர்களே! எங்களில் இன்னும் சிலரைச் சர்க்கசில் வேடிக்கை காட்டக் கொண்டு போய்விடுகிறார்கள்; ஒரே மரக் கட்டையின்மீது நான்கு கால்களையும் ஒன்றாய்ச் சேர்த்து உடம்பை அடக்கி ஒடுக்கி எங்களை அந்தக்கருப்புச் சட்டையும் முறுக்கு மீசையுமுள்ள சர்க்கஸ்காரர் நிற்கச் செய்யும்போது இப்படி வாழ்வதை விடப் பிராணனையே விட்டுவிடலாமா என்றே தோன்றும். இது என்ன வாழ்வு; இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்த முதுமலைச் சரணாலய வாழ்வு பரவாயில்லை; இந்தியாவிலேயே மிகச் சிறந்த சரணாலயம் இந்த முதுமலைச் சரணாலயமே என்றுதான் சொல்லவேண்டும். எந்த விதத் தடையுமில்லாமல் ஒரே இடத்தில் நாங்கள் கூட்டம் கூட்டமாய் வாழ்கிறோம். இந்தச் சரணாலயத்தைப் பார்த்தீர்களா? தமிழகத்தின் வடமேற்கெல்லையில் மைசூர், கேரள மாநிலங்களை ஒட்டி 3,000 அடி உயரத்தில் உள்ள மலைக்காடுகளில் உள்ள இந்தச் சரணாலயம் 124 சதுர மைல் பரப்புள்ளது; நீலகிரி மாவட்டத்திலே கடலூர் பகுதியில் தான் இருக்கிறோம்; என்ன உங்களுக்கு பூ நூல் போடுக்கிறேனா? எங்கள் சரணாலயப் பெருமையைப்பற்றிப் பேசுவதில் எனக்கும் மகிழ்ச்சிஉண்டல்லவா? அப்புறம் சொல்கிறேன்; கேளுங்கள்; என்ன? பசிக்கிறதா? இளநீர் கொண்டு வரட்டுமா? கரும்பு தரட்டுமா?"



நான் உண்மையாகவே களைத்திருந்தேன்; இந்த யானையார் கூறும் கதை சோகமாகத்தான் இருக்கிறது; தன்னலமுற்ற மனிதர்கள் பிறவிலங்குகளை அடிமைப்படுத்துவது கொடுமைதானே! இயற்கை அன்னை அளித்த இனிய காட்டிலே வாழவேண்டிய இந்த யானைகளை நாட்டிலே கொண்டு வந்து வாட்டி அடிமைப்படுத்துவது பாபம் தானே! என எண்ணிக் கொண்டிருக்கும்போது அந்த யானை நான்கு இளநீர்களை என் முன் கொண்டுவந்து மெல்லெனத் துதிக்கையால் வைத்தது; 'இன்னா செய்தார்க்கும் இனியன செய்யும்' அதன் இயல்பு என்னைக் கவர்ந்தது.

"இளநீரைப் பருகுங்கள்" என்று சொல்லிவிட்டு யானை பேச்சைத் தொடர்ந்தது. "இந்த முதுமலைச் சரணாலயம் உதகை-மைசூர் சாலையில் உதகமண்டலத்திலிருந்து 42 மைல் தொலைவில் அமைந்துள்ளது. மைசூர் அல்லது உதகமண்டலம் ஆகிய இடங்களிலிருந்து இச்சரணாலயத்திற்கு பஸ் மூலமாக வரலாம்; மைசூரிலிருந்து 58 மைல் தூரம் உள்ளது. இதன் மிக அருகிலுள்ள விமான நிலையம் கோயம்புத்தூர்; புகை வண்டி நிலையம் உதகமண்டலம்; எங்கள் குட்டிகளும் விமானத்தில் அயல் நாடுகளுக்குப் போனதுண்டு; பண்டித நேரு தன் செல்லமகள் பெயராகிய 'இந்திரா' எனும் பெயரைச் சூட்டி எங்கள் குட்டிகளில் ஒருத்தியை ஜப்பானுக்கு அனுப்பியது இப்போது நினைவுக்கு வருகிறது. அங்கே எவ்வளவு நல்ல வரவேற்பு எங்கள் இனத்திற்குக் கிடைத்தது தெரியுமா? சரி; அது கிடக்கட்டும்; இந்தச் சரணாலயத்தைப் பாருங்கள்; அடர்த்தியான காடுகள்; மிக்க நலமுடைய மரங்கள்; பல விந்தைச் சுவையுடைய கனிகள்; எந்தப் பக்கத்தையும் மறைக்கும் மலைகள்; அங்கே பாடி நகர்ந்துவரும் நதிகள்; நெஞ்சில் கனல் மணக்கும் மலர்கள்; நீளக்கிடக்கும்

மலைத் தொடர்கள். இப்படி ஆறுகளும் அருவிகளும், குளம், குட்டைகளும் இருப்ப தால் எங்கள் சொந்த இடமாகவே இந்தச் சரணாலயம் பொலிகிறது. இங்கே நாங்கள் 50-க்கும் மேற்பட்டவர்கள் வாழ்கிறோம்; இங்கு நாங்கள் சுதந்திரமாகவே சுற்றித் திரிகிறோம்; எங்களைக் காண நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் உங்களினத்தவர்கள் வருகிறார்கள்; வந்தவர்களை வரவேற்பதில் எங்களுக்குச் சமமாக நீங்கள் இருக்க மாட்டீர்கள்; விருந்தினர்கள் உங்கள் இல்லங்களுக்கு வந்தால் காரிலே ஊரைச் சுற்றி நீங்கள் காட்டலாம்; நாங்களோ எங்கள் தலையிலே சுமந்து எங்களிடத்தை, எங்களினத்தாரை, எங்களோடு வாழும் 100-க்கும் மேற்பட்ட துள்ளித்திரியும் புள்ளிமான் கூட்டங்களை, 80-க்கும் மேற் பட்ட காட்டெருமைகளை · இன்னும் பலவகைப்பட்டவர்களையெல்லாம் காட்டு கிறோம்; ஆனால் எங்கள் மாவட்ட வன விலங்கு அதிகாரிக்கு முன்னரே தெரிவித்து விடவேண்டும்: எங்களை அடக்கி ஆள்வ தால் அவர் அதிகாரிதானே!''



''ஆமாம்! அன்பு யானையாரே! உங்கள் வாழ்க்கை சோகமாகவும் உருக்கமாகவும் இருக்கிறது; ஆனால் எப்போது உங்களைப் பார்க்கமுடியும்? எப்போதும் பார்க்கலாமா?''

''என்ன! நாங்கள் நுழைவுச் சீட்டா கேட்கிறோம்; வசதியான காலமென்றால் உங்களுக்கும் நல்லது தானே! ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை பருவகாலம் நன்றாக இருக்கும்; காலை ஆறு மணி முதல், 9 மணி வரை, முடிந் தால் உங்கள் தோழர்களை அழைத்து வாருங்கள்; என்ன! காலையில் எழுந்திருக்கக் கஷ்டமா? மாலையில் தான் வாருங்களேன். மாலை மூன்று மணி முதல் 5 மணிக்குள்ளாக வாருங்கள்; மற்றநேரங்களில் நாங்கள் அந்தரங்கமாகப் பல பேசிக் கொண்டிருப்போம்; விளையாடிக் கொண்டிருப்போம்; அப்போது——நீங்கள் பார்க்க,....''

''ஆமாம்; யானைத்தோழரே! நீங்கள் இனம் பெருக்குவதுபற்றி . . ?''

''அதுவா? சொல்கிறேன்; உங்களைப் போலக் "கலகலெனப் பொல பொலெனப் புற்றீசல் போல" நாங்கள் பெறுவதில்லை; மிகக் குறை வாகவே பெறுவோம்; இதற்கு மாத்திரை களோ, நிரோத்தோ, கருப்பச் சிதைவுகளோ கையாள்வதில்லை; புலனை வென்றே வாழ்கிறோம்; பகுத்தறிவு இப்போது யாருக்கெனப் பகுத்தறிந்து கொள்ளுங்கள்; ஒரு புலவர் கூட எங்கள் இனத்தைப் பற்றி '' பன்றி பல ஈன்று மென்ன ; குஞ்சரம் ஒன்று ஈன்றதனல் பயனுண்டாமே '' என்று பாடியிருக்கிறார்.

மன்னர் படையிலே, பழங்காலத்திலே முன்னின்று போராடிய பெருமை எங்களுக்கு உண்டு ; '' யானை இருந்தாலும் ஆயிரம் பொன் ; இறந்தாலும் ஆயிரம் பொன் '' என்பது முதுமொழி. அதனால்தான் ஆசை பிடித்த மனித இனம் நாங்கள் இருப்பதை விடக் கொன்றே ஆயிரம் பொன்னைப் பெற்றுக் கொள்கிறதோ '' என்று கூறிக்கொண்டே சரணாலயத்தில் தன் கூட்டத்தில் சென்று அந்த யானையார் மறைந்துகொண்டார்.

—(பாசொலி)

தொலைபேசி எண்: 94 தந்தி: லாக்ஸ்

க. காளியப்ப நாடார் அன் சன்ஸ்

194, 196, மேற்கு ரத வீதி

(தபால் பெட்டி எண் 22)

திண்டுக்கல்

திண்டுக்கல் உறுதியான பூட்டு ரகங்கள், ஏசியன் பெயின்ட்ஸ், G.K.W. போல்ட்ஸ், நட்ஸ், ரிவிட்டுகள், கார்போரண்டம் யுனி வர்சல் லிமிடெட், 'அஜாக்ஸ்' மெருகுத்தாள், சார்மினர் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டுத் தகடு கள், குழாய்கள் மொத்தமாகவும் சில்லறை யாகவும் கிடைக்கும்.

இண்டி பொறியியற் கல்லூரி யின் நீச்சல் தடாகம் களைகட்டி நின்றது. சுற்றிலும் ஆடவரும், பெண்டிரும், சிறுவர், சிறுமியரும் வேடிக்கை பார்த்தபடி நின்ற னர். அங்கே நீச்சலடிப்பது யார்? மாணவரோ, மாணவியோ அல்ல ! ஒரு சைக்கிள் ! அதன் மீது மாணவர் ஒருவர் அமர்ந்து லாவக மாக சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்தார். தண் ணீரைக் கிழித்துக் கொண்டு சைக்கிள் பாய்ந்தோடியவாறு இருந்தது.

மாணவரின் முகத்திலே பெருமித ரேகை நெளிந் தோடியது. அவரே செய்த சைக்கிள் அல் லவா ! மகிழ்ச்சி ஏற்படு வது இயற்கைதானே ! முன்னே இரண்டும், பின்னே இரண்டுமாக நான்கு தகர மிதப்பு களைப் பயன்படுத்தி அவர் இந்தத் தண்ணீரில் ஓடும் சைக்கிளைத் தயாரித்திருந் தார்.

மற்றொரு பகுதியில் ஒரு வகுப்பறையிலிருந்து மற்றொரு கட்டடம் செல்ல ஒரு வேடிக்கை யான சைக்கிளைப் பயன் படுத்திக் கொண்டிருந் தார், மற்றொரு மாணவர். அந்த சைக்கிளில் 'சோபா'வில் சாய்வதுபோலச் சாய்ந்தபடியே செல்லலாம்.

இன்னுமொரு தொழிற்கூடத் தில் ஒரு மாணவர் ஒரு சுவிட் சைப் போட ஒரு யந்திர மனிதன் தானாக நடை போட்டான்.



மின்சாரப் பிரிவில், ஒரு குழந்தை தொட்டிலில் படுத் திருந்தது. அதனருகே சென்று '' அம்மா !'' என்று கத்தினால் தொட்டில் தானாக ஆடியது மின்சார விசிறி தானாக இயங்கித் தென்றலை வீசியது ; வானொலிப் பெட்டி மெல்லிசையை வழங் கியது. தாயில்லாத வேளையில் தொட்டிலில் படுத்துறங்கும் குழந்தை அழுதால், மின்சார உதவியால் தானாக இந்தனை செயல்களையும் இயக்க முடியும் என்பதெல்லாம் காட்டி, மாண வர்கள் அமைத்திருந்த மாயத் தொட்டில் அது. தொட்டிலில் போடப்பட்டிருந்தது பொம் மைக் குழந்தை. !

'' எனக்கும் அப்படி ஒரு தொட்டில் செய்து தா '' என்று ஆவலோடு கேட்டாள் அருகில் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற ஐந்து வயதுச் சிறுமி !

'' ஒரு எஞ்சினியரைப் பார்த் துக் கட்டிக்கோ ! இப்படித் தாலாட்டுப் பாடும் தொட்டில் செய்து தருவார் !'' என்று அவ ளுக்குப் பதில் தந்தார், குறும்புக் காரத் தாத்தா !

'' போ! தாத்தா! எனக்கு இப்பவே வேணும் !'' என்று பிடி வாதம் பிடித்தாள் அந்த விவரம் புரியாத சிறுமி!

175-வது ஆண்டு விழாவினைக் கொண்டா டும் முகத்தான் சென்ற 4-9-70 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிண்டி பொறியியற் கல்லூரிப் பொருட் காட்சியின் சில சிறப்புக் காட்சிகள் மேலே தரப் பட்டவை.

இவை தவிர, ரிப்பன் பாலம், மின்சாரப் படி கள் (எஸ்கலேட்டர்), காவிரி அன்னை, விசிலடித் தால் வாயைத் திறக்கும் மாய தேவதையின் பிரம் மாண்டமான தலை உருவம், இரும்புக் கோபுரம், மின் அணுக் களின் ஜாலங்கள்போன்ற அரிய காட்சிகளும் அங்கு இடம் பெற்றிருந்தன.



பொருட்காட்சியில் எல்லாரையும் கவர்ந்த மற்றொன்று, ஆளில்லாமல் தூரத்திலிருந்து இயக்கும் தன்மையால் (Remote Control) தானே ஓடிக்கொண்டிருந்த கார் ஆகும்.

பொருட்காட்சியின் மற்றொரு கூடத்தில் இக்கல்லூரியின் பழைய மாணவர்களில் சுமார் பத்துப் பேர்கள் தங்களது தயாரிப்புகளை அல்லது தாங்கள் விற்பனை செய்யும் பொருட்களை அங்கு காட்சிக்காக வைத்திருந்தனர்.

இது பற்றிக் குறிப்பிடும்போது, ''இக் கல்லூரியில் தனிப்பட்ட முறையில் கடைசியாகப் பொருட் காட்சி நடத்தியது 1952-ல் தான். அதன் பிறகு 1956-ல் ஒரு பொருட் காட்சி நடந்தது. ஆனால், அது பல்கலைக் கழகச் சார்பில் எல்லாக் கல்லூரிகளும் கலந்துகொண்ட பொருட் காட்சி. எனவே, 175-வது ஆண்டினைக் கொண்டாடும் இத் தருணத்தில் மாணவர்களின் செயல்திறனைக் கண்டறியவும், ஆற்றலை வெளிப்படுத்தவும், தக்க விதத்தில் விழாவினைக் கொண்டாட, இவ்வாண்டு இந்தப் பொருட்காட்சியை ஏற்படுத்தினோம். முழுக்க முழுக்க இது மாணவர்களின் சாதனையே ஆகும்.

பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பில் சிறிது மந்த நிலை ஏற்பட்டதாகக் கருத்து உலவி வருகிறது. அதனைக் களைந்திட, பொறியியல் படிப்பு முடித்து வெளியேறியதும் சிறு தொழில்கள் துவங்குவதே சிறந்த வழி என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. நமது அரசும் விரைவாக அதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எனவே, வெளியில் அவர்களுக்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறு சிறு தொழிலில் ஈடுபட்டவர்கள் முன்னேறியுள்ளனர் என்பதனைக் காட்டவும் மாணவர்களை ஊக்கப்படுத்தவும், சென்னையிலும் சுற்றுப் புறத்திலுமுள்ள பழைய மாணவர்களை அழைத்து அவர்களையும்இந்தப்பொருட்காட்சியில் கலந்து கொள்ள வேண்டினோம். எங்களதுஆசைபொய்யாகவில்லை. எங்களது மாணவ மணிகள் இந்தப் பொருட்காட்சிக்காக இரவு பகலாகக் கண் துஞ்சாது அரும் பாடுபட்டு, பல அரிய பொருட்களை உருவாக்கியிருந்தார்கள்.

இந்தப் பொருட்காட்சியில் அவர்கள் காட்டிய கைத்திறன், அவர்களுக்கு ஒளி வீசும் எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையை எங்களுக்கும், அந்த மாணவ-மாணவியருக்கும் உறுதியாக ஏற்படுத்தியுள்ளது!'' என்று பெருமிதத்தோடு கூறினார் கல்லூரி முதல்வர் திரு கே. எஸ். ஹெக்டே.

1794-ம் ஆண்டு மே திங்கள் 17-ம் நாள் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் துவக்கப்பட்ட இதுவே இந்தியாவிலே உள்ள பொறியியற் கல்விக் கூடங்களில் முதலாவதாகும்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் முதலாக யந்திரப் பொறியியல் (1894) மின்சாரப் பொறியியல் (1930), தொலை தகவல்—நெடுஞ்சாலைப் பொறியியல் (1945) ஆகியவற்றைத் துவக்கிய பெருமையும் இக் கல்லூரியையே சாரும்.

1794-ல் எட்டுப் பேர்களுடன் துவக்கிய இக் கல்விக் கூடத்தில் இன்று சுமார் 1,900 மாணவர் பயிலுகின்றனர். ஆண்டு தோறும் சுமார் 300 மாணவர் பட்டம் பெற்று வெளியேறுகின்றனர்.



பருகப்பருக இனிக்கும் பழரச பானம் (ஜூஸ்) சிறுவர் மட்டுமின்றிப் பெரியவர்களும் வெயில் காலங்களில் தாகம் தணிய அருந்தி மகிழ்வது.

கடைகளில் அழகான புட்டிகளில் பழரசங்கள் அடைக்கப்பட்டு விற்பனை ஆகின்றன. உணவு விடுதிகளில் அருந்துவதற்குப் பழரச பானங்கள் கலந்து தருகின்றனர். ஆனால் இவை சற்று விலை அதிகம். விலை அதிகம் என்பதோடு பொதுவாக இவைகளில் 'எசென்ஸ்' அதிக அளவில் கலந்திருக்குமேயொழிய, பழங்கள் குறைவாகவே இருக்கும்.

எனவே, சுவையுள்ள, சத்துள்ள பழ ரச பானங்களை இல்லத்தரசிகள் தங்களது இல்லங்களிலேயே தயாரிக்கலாம்.

சில காலங்களில் சில பழவகைகள் சற்று மலிவான விலைக்குக் கிடைக்கின்றன. உதாரணமாக ஏப்ரல்-மே மாதங்களில் மாம் பழம் ஏராளமாகக் கிடைக்கிறது. வேறு சில காலங்களில், சாத்துக்குடி, திராட்சை, அன்னாசி, தக்காளி போன்ற பழங்கள் மலிவாகக் கிடைக்கலாம். அந்தந்தக் காலங்களில் அந்தப் பழங்களை வாங்கிப் பழச்சாறு தயாரிக்கலாம்.

சென்னை எழும்பூரில் அரசினர் சிறுவர் மருத்துவ மனைக்கு அருகிலுள்ள கஸ்தூரிபா நிலையத்தினர் தங்களது உறுப்பினர்களுக்குப் பழரசம் எப்படித் தயாரிப்பது என்றுபயிற்சி தருவதோடு, உறுப்பினர்கள் பழமும், சர்க்கரையும் கொண்டு வந்தால் பழரச பானம் தயாரித்தும் கொடுக்கிறார்கள். உறுப்பினருக்கு ஆண்டுக்கட்டணம் ரூ. 3. பழரசம் தயாரிக்க ஒரு பாட்டிலுக்கு 35 காசு வசூலிக்கிறார்கள். அங்குச் சென்னையின் பல்வேறு பகுதியிலுள்ள மகளிர் சுமார் 200 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். மகளிர் மட்டுமே இங்கு உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர். இங்கு உறுப்பினர்களுக்குக் கற்றுத்தரப்படும் பானம் ஜாம் வகைகள் இங்கே தரப்படுகின்றன./

கிரேப் ஜூஸ்:

தேவை :

திராட்சைப் பழம் 1 கிலோ (ஆரஞ்சு, அன்னாசிப்பழமாக இருந்தால் தோலும் சக்கையும் அதிக அளவு இருப்பதால், சாற்றைத்தான் கணக்கிட வேண்டும்).

தண்ணீர்	1 கிலோ.
சர்க்கரை	2 கிலோ.
சிட்ரிக் ஆசிட்	4 தேக் கரண்டி
சோடியம் பென் சோயட்.	1¼ தேக் கரண்டி

(கடைசி இரண்டும் கடையில் வாங்கலாம்).

செய்முறை :

தண்ணீரையும் சர்க்கரையையும் சிட்ரிக் ஆசிடையும் கலந்து (புளிப்பான பழமாகயிருந்தால் 2கரண்டி சிட்ரிக் ஆசிட் போதும்) அடுப்பில் வைக்கவும். தண்ணீர் சூடாகிச் சர்க்கரை கரைந்ததும் (பாகு ஆக வேண்டியதில்லை) அடுப்பிலிருந்து இறக்கிச் சுத்தமாக வடிகட்டி ஆறவைக்கவும். நன்றாக ஆறியபின் அதில் தோல், விதைகள் நீக்கிப் பிழிந்து வைத்திருக்கும் பழச்சாற்றைக் கலக்கவும். அத்துடன் கிரேப் எசென்ஸ் (இதுவும் கடையில் வாங்கலாம்) 4 தேக்கரண்டி கலந்தால் நல்ல நிறமாகவும் வாசனையாகவும் இருக்கும். பழரசம் கெட்டு விடாமலிருக்க ஒரு தேக்கரண்டி சோடியம் பென்சோயட் சிறிது வெந்நீரில் கலந்து, தயாரித்து வைத்துள்ள பழரசத்துடன் சேர்த்துக் கொள்ளவும்.

இதனை பாட்டிலில் அடைத்து வைத்திருந்தால் சுமார் 6 மாதத்திற்கு மேல் கெட்டுப்போகாமல் இருக்கும்.

தேவைப்படும்போது ஒரு பங்கு பழரசத்திற்கு இரண்டு பங்கு தண்ணீர் சேர்த்து அருந்தினால் அருமையாக இருக்கும். இதே பக்குவத்தில் சாத்துக்குடி, கமலா ஆரஞ்சு, மாம்பழம், அன்னாசிப்பழம் ஆகியவற்றிலும் பழரச பானங்கள்தயாரிக்கலாம்.

தக்காளி ஜாம்.

தேவை :

தக்காளி	1 கிலோ.
சர்க்கரை	1 கிலோ.
சிட்ரிக் ஆசிட்	1 தேக் கரண்டி
பொட்டாசியம் மெட்டா பை சல்பேட்.	ஒரு சிட்டிகை.

செய்முறை :

தக்காளிப் பழங்களைத் தோலையும் விதைகளையும் நீக்கிவிட்டு நன்றாகக் கடைந்து வைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் சர்க்கரையையும் சேர்த்து அடுப்பில் வைக்க வேண்டும். நன்றாகக் கொதித்து இளம் பாகுப் பருவம் வரும்வரை (கரண்டியில் கோதினால் ஒட்டிக்கொண்டு வரும் பக்குவம் வரை) கொதித்த பின் இறக்கி விடவும். நன்றாக ஆறிய பின் பாட்டிலில் எடுத்து வைத்துக் கொள்ளவும். அது கெடாமல் இருப்பதற்காக ஒரு சிட்டிகை பொட்டாசியம் மெட்டா பைசல்பேட் எடுத்து ஜாம் மீது தூவவும். இதுவும் 6 மாதத்திற்கு மேல் கெட்டுப் போகாமல் இருக்கும்.

இட்லி, தோசை, சப்பாத்தி, ரொட்டி ஆகியவைகளுடன் சேர்த்துச் சாப்பிட இந்த ஜாம் மிகவும் சுவையாயிருக்கும்.

இதே பக்குவத்தில், பலவகைப் பழங்களைச் சேர்த்து ''மிக்சட் ஜாம்'' தயாரிக்கலாம். உதாரணமாக, 6 வாழைப்பழம், 2 மாம்பழம், 1 ஆப்பிள், 1 கொய்யா, 1 அன்னாசிப்பழம், 4 ஆரஞ்சு, 200 கிராம் திராட்சை, 100 கிராம் செரி ஆகியவற்றைக் கலந்து அதற்கு சரிக்குச்சரியாகச் சர்க்கரை சேர்த்து ஜாம் செய்யலாம்.

தக்காளி கச்சப்.

தேவை :

பெரிய தக்காளி	1 கிலோ.
சக்கரை	100 கிராம்
மசாலா (ஸ்பைஸ்ட்) வெனிகர்.	100 கிராம்
உப்பு	தேவையான அளவு.

செய்முறை :

தக்காளியைத் தோல் நீக்கித் துண்டு துண்டாக வெட்டி அடுப்பில் வேக விடவேண்டும். கொழ கொழவென்று வெந்தபின் உப்பு, சர்க்கரை, மசாலா, வெனிகர் எல்லாம் கலந்து அந்தக் கலவை மூன்றில் ஒரு பங்காக வற்றும் வரை கொதிக்க வீட வேண்டும். அதன் பின் இறக்கி வைத்து, ஆறியபின் ஒரு பாட்டிலில் போட்டு வைத்துப் பயன்படுத்தவும்.

இதுவே தக்காளி கச்சப். சப்பாத்தி, பூரி, ரொட்டி (பிரெட்), இட்லி முதலியவைகளுக்குத் தொட்டுச் சாப்பிட இது மிகவும் நன்றாக இருக்கும். அதிலும் மசாலா வாசனைப் பிரியர்களை இது வெகுவாகக் கவரும்.

குறிப்பு : இம்முறைகளில் வீட்டிலேயே, பழரச பானம், ஜாம் முதலியவைகள் தயாரித்தால் செலவு மிகவும் குறையும். கடையில் சுமார் நாலு, நாலரை ரூபாய்க்கு வாங்கக்கூடிய இவற்றை வீட்டில் சுமார் இரண்டரை ரூபாய் செலவுக்குள் தயாரித்து விடலாம்.



பழச்சாறு தயாரிப்புப் பயிற்சி நடைபெறுகிறது.

''வயிற்றுக்குச் சோறிடவே வேண்டும், இங்கு வாழும் மாந்தருக்கெல்லாம்'' என்று பாடினார் பாரதியார். அவ்வாறு செய்ய வேண்டுமானால் வயல் வளம் பெருக்க வேண்டும்; அதற்கு இரசாயன உரமிடுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

விளைச்சலில் 40 சத அளவை மண்ணின் வளமும், இரசாயன உரமுமே கொடுக்கின்றன என்பது ஆராய்ச்சியின் முடிவாகும். இன்று தமிழ்நாட்டு உழவர் பெருமக்களால் பெரிதும் விரும்பப்படும் உயர்விளைச்சல் வகைகள் அதிகவிளைச்சலைக்கொடுப்பதற்குக் காரணமே, அவைகள் அதிக அளவு உரத்தை ஏற்றுக்கொள்ளும் சக்தியைப் பெற்றிருப்பதேயாகும்.

சென்ற ஆண்டில், பல உழவர் பெருமக்கள் உயர்விளைச்சல் நெல் வகைகளைப் பயிரிட்டு ஏக்கருக்கு 4 டன், 4½ டன், 5 டன் என்றெல்லாம் மகசூல் பெற்றுள்ளார்கள். இதிலிருந்து இரசாயன உரங்களும், உயர் விளைச்சல் வகைகளுமே தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க வழி வகுக்கும் என்பது புலனாகிறது. ஆனால், பொதுவாக உயர் விளைச்சல் வகைகளுக்கு இரசாயன உரமிடச்செலவு அதிகம் ஆவதாகவும், அதுவும் குறிப்பாக அதிசய நெல் ஐ.ஆர். 8-க்கு இரசாயன உரமிட மிகவும் அதிகச் செலவு ஆவதாகவும் பெரும்பாலான உழவர் பெருமக்கள் கருதுகிறார்கள்.

இரசாயன உரங்களில் அமோனியம் சல்பேட், யூரியா என்ற உரங்களே உழவர் பெருமக்களிடையே மிகவும் பிரபலமடைந்துள்ளன. தழைச்சத்தை மட்டுமே கொண்டுள்ள அமோனியம் சல்பேட், யூரியா ஆகியவைகளை மட்டும் உரமிடப் பயன்படுத்தினால், எதிர்பார்க்கும் மகசூல் கிட்டாது. மணிச்சத்தும், சாம்பல் சத்தும் போதுமான அளவுக்கு இட்டால் தான் மகசூல் பெருகும். எனவே தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, ஆகிய மூன்றுசத்துகளையும் பயிர்களுக்கு அளிக்க வேண்டுமானால் யூரியா, அமோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட், மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய நேரடி இரசாயன உரங்களையோ, தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகிய மூன்றும் கலந்த கலப்பு உரங்களையோ, அமோனியம் பாஸ்பேட், டை-அமோனியம் பாஸ்பேட், என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் போன்ற கூட்டு உரங்களையோ இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வுரங்களைப்பயன்படுத்தி 3 சத்துக்களையும் பயிர்களுக்கு அளிக்க, செலவு அதிகமாவதாக பெரும்பாலான உழவர் பெருமக்கள் கருதுகிறார்கள்.

'டை-அமோனியம் பாஸ்பேட்' என்னும் கூட்டுஉரம், பற்றிப் பலர் அறியாததனாலேயே, உரமிடும் செலவு அதிகமாவதாக நினைத்துக்கொள்கிறார்கள். உரமிடும் செலவைக் குறைத்து, நிகர லாபத்தைப் பெருக்கிட 'டை-அமோனியம் பாஸ்பேட்' மிகவும் துணை புரியும்.

'டை-அமோனியம் பாஸ்பேட்' என்ற கூட்டு உரம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் சக்தியைக் கொண்டுள்ளது; தழைச்சத்துடன், மணிச்சத்தையும்ஒருங்கே பெற்றுள்ளது. இதில் 18 சதம் தழைச் சத்தும், 46 சதம் மணிச் சத்தும் அடங்கியுள்ளது. அமோனியம் சல்பேட் அல்லது யூரியாவுடன் சூப்பர் பாஸ்பேட்டைச் சேர்த்து உரமிடுவதைவிட, டை-அமோனியம் பாஸ்பேட்டை உரமிட பயன்படுத்துவது மிகவும் சிக்கனமாக உள்ளது.

ஒரு மெட்ரிக் டன் எடையுள்ள டை-அமோனியம் பாஸ்பேட்டின் விலை ரூ. 1,098-88. அமோனியம் சல்பேட், யூரியா ஆகியவைகளின் விலையுடன் ஒப்பிட்டால், இவ்விலை மிகவும் அதிகமாகவே தோன்றும். ஆனால், உண்மையிலேயே அமோனியம் சல்பேட், யூரியா ஆகியவைகளை விட, டை-அமோனியம் பாஸ்பேட் விலை மலிவானது! எப்படி?

'டை-அமோனியம் பாஸ்பேட்டில் அடங்கியுள்ள பயிருணவுச் சத்துக்களின் (Plant-nutrient Contents) அளவை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டால், விலை மலிவானது என்ற உண்மை விளங்கும். ஒரு மெட்ரிக் டன் (1,000 கிலோ) டை-அமோனியம் பாஸ்பேட்டில் 180 கிலோ தழைச் சத்தும், 460 கிலோ மணிச் சத்தும், அடங்கியுள்ளன. இதே அளவு சத்தை 900 கிலோ அமோனியம் சல்பேட்டும், 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் சேர்ந்தே கொடுக்கக்கூடும். எனவே, 1 மெட்ரிக் டன்டை-அமோனியம் பாஸ்பேட்டிற்கு, 900 கிலோ அமோனியம் சல்பேட்டும், 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் சேர்ந்தே சமமாகும். அது போலவே, 410 கிலோ யூரியாவும், 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் சேர்ந்தே 1 மெட்ரிக் டன் டை-அமோனியம் பாஸ்பேட்டிற்குச் சமமாகும்.

900 கிலோ அமோனியம் சல்பேட்டின் விலை ரூ. 502-11 ஆகிறது. 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டின் விலை ரூ. 980-38 ஆகிறது. ஆக இரண்டும் சேர்ந்து ரூ. 1,482-49 ஆகிறது. ஆனால் ஒரு டன் டை-அமோனியம் பாஸ்பேட்டின் விலை ரூ.1,098-88தான்

ஆகிறது. எனவே ரூ. 399-60-ஐ மிச்சப்படுத்தலாம்.

அதுபோலவே, 41௧ இலோ யூரியாவின் விலை ரூ. 391-19-யும், 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டின் விலை ரூ. 980-33-யும் சேர்த்தால் மொத்தச் செலவு ரூ. 1,371-56 ஆகிறது. ஆனால் ஒரு மெட்ரிக் டன் டை-அமோனியம் பாஸ்பேட்டின் விலை ரூ. 1,098-88 தான் ஆகிறது. இம்முறைப்படி பார்த்தாலும் ரூ.272-68-ஐ மிச்சப்படுத்தலாம்.

எனவே, அமோனியம் சல்பேட் அல்லது யூரியாவுடன் சூப்பர் பாஸ்பேட்டைச் சேர்த்து இடுவதை விட, டை-அமோனியம் பாஸ்பேட் இடுவதால் ஒரு மெட்ரிக் டன்னிற்கு சுமார் ரூ. 272·00 முதல் ரூ. 400·00 வரை உரத்திற்கு ஆகும் செலவைக் குறைக்கலாம்.

அடுத்து, ' அதிசய நெல் ' ஐ.ஆர். 8-க்கு டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தினால் ஏக்கருக்கு என்ன செலவாகும் என்பதையும், இதர இரசாயன உரங்களைப் பயன்படுத்தினால் ஏக்கருக்கு என்ன செலவாகும் என்பதையும் கவனிப்போம். ஐ.ஆர். 8 நெல்லிற்கு 75 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து, இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இந்த அளவுச் சத்துக்களை அளிக்க என்னென்ன உரங்களை இடலாம், அவைகளுக்கு ஆகும் செலவு என்ன என்பதை கீழ்க் கண்ட முறைகள் விளக்கும்:

*முறை 1 : 76 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் (ரூ. 83-52), 135 கிலோ யூரியா (ரூ. 128-81), 58 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 31-40) ஆகிய உரங்களை ரூ. 243-73 செலவில் இடலாம்.

*முறை 2: 165 கிலோ யூரியா (ரூ. 157-42), 220 கிலோ சூப்பர் பாஸ்பேட் (ரூ. 75-02), 58 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களைப் பயன்படுத்தி ரூ. 263-84 செலவில் உரமிடலாம்.

*முறை 3 : 127 கிலோ யூரியா (ரூ. 121-07), 146 கிலோ 12:24:12 காம்ப்ளெக்ஸ் (ரூ. 138-27), 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 16-24) ஆகியவைகளை இட ரூ. 275-58 செலவு ஆகும்.

*முறை 4 : 127 கிலோ யூரியா (ரூ. 121-07), 125 கிலோ 14:28:14 காம்ப்ளெக்ஸ்(147·00), 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 16-24) ஆகிய உரங்களுக்கு ரூ. 284-31 ஆகும்.

*முறை 5 : 104 கிலோ யூரியா (ரூ. 99-23), 175 கிலோ அமோனியம் பாஸ்பேட் (ரூ. 158-47), 58 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 31-40) ஆகியவைகளுக்கு ரூ. 289-10 செலவு ஆகும்.

*முறை 6 : 88 கிலோ யூரியா (ரூ. 83-96), 250 கிலோ 14:14:14 காம்ப்ளெக்ஸ் உரமிட செலவு ரூ. 298-73 ஆகும்.

*முறை 7 : 375 கிலோ அமோனியம் சல்பேட் (ரூ. 195-27), 220 கிலோ சூப்பர் பாஸ்பேட் (ரூ.75-02), 58 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 31-40) ஆகிய உரங்களை இட ரூ. 301-69 ஆகும்.

*முறை 8 : 88 கிலோ யூரியா (ரூ. 83-96), 234 கிலோ 15:15:15 காம்ப்ளெக்ஸ் (ரூ. 220-88) ஆகிய உரங்களுக்கு ரூ. 304-84 ஆகிறது.

*முறை 9 : 115 கிலோ யூரியா (ரூ. 109-75), 390 கிலோ 6:9:6 கலப்பு உரம் (ரூ.206-70), 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 10-83) ஆகியவைகளுக்கு ரூபாய் 327-26 ஆகும்.

*முறை 10 : 88 கிலோ யூரியா (ரூ. 83-96), 390 கிலோ 9:9:9 கலப்பு உரம் (ரூ. 250-38) ஆகிய உரங்களுக்கு ரூ. 334-34 ஆகிறது.

ஐ.ஆர். 8 நெல்லிற்கு மேற்கூறிய 10 முறைகளில் உரமிட முடியுமெனினும், முறை 1-ல் கூறப்பட்டுள்ளது போல் டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தி உரமிடுவதே மிகவும் சிக்கனமானது என்பது தெளிவாகிறது. கலப்பு உரங்களைப் பயன்படுத்தும்போது உரமிடும் செலவு உச்ச அளவாக இருக்கிறது என்பதும் புலனாகிறது. இதிலிருந்து டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தி ஐ.ஆர். 8 நெல்லிற்கு உரமிடுவதால், ஏக்கருக்கு குறைந்தது ரூ. 20-00 முதல் ரூ. 95-00 வரை மீதமாகும் என்பது தெரிய வருகிறது. எனவே, டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தி உரமிடுவதே மிகவும் சிக்கனமாக உள்ளது என்பது தெளிவாகிறது.

இதுபோலவே நிலக்கடலை, கரும்பு, கேழ்வரகு, மற்றும் இதர உயர்விளைச்சல் வகைப் பயிர்களுக்கும் டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தி உரமிடும் செலவைக் குறைக்கலாம்.

இப்படிப் பலவகையிலும் பயனளிக்கும் டை-அமோனியம்பாஸ்பேட்டைப் பயன்படுத்தி, உரமிடும் செலவைக் குறைத்து, உற்பத்தியைப் பெருக்கி, நிகர லாபத்தைஅதிகமாக்கிக்கொண்டு வளமாக வாழுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

பார்க்.·.பேர் பொருட்காட்சி

தமிழகத்து மக்களின் உள்ளங்களை எல்லாம் கவர்ந்திழுக்கும் பார்க்.·.பேர் பொருட்காட்சி வழக்கம்போல் டிசம்பர் மாதக் கடைசியில் தொடங்கப்படுகிறது.

கடைகள், அரங்குகள் அமைக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

முதல் வகுப்புக் கடைக்கு வாடகை ரூ. 250.

இரண்டாம் வகுப்புக் கடைக்கு வாடகை ரூ. 200.

கடை 10 அடி நீளம் 10 அடி அகலம் கொண்டது.

மொத்த வாடகையில் 50 சதவீதம் முன்பணமாகச் செலுத்த வேண்டும்; கடை ஒதுக்கப்பட்டவுடன் மீதி 50 சத வீதத்தையும் கட்ட வேண்டும்.

ரேக்ளா விளையாட்டு, காவடி, கரகம், பொய்க்கால் குதிரை நடனம் ஆகியவை பார்க்.·.பேரின் தனிச் சிறப்பு.

எண்ணற்ற மக்கள் கண்டுகளிக்கும் கண்காட்சி இது ஒன்றே.

விவரங்களுக்கு

அரன் அலி-ஆர். எஸ். கன்னையா, ஜே. பி.

சிறப்புச் செயலாளர்கள்

எஸ். ஐ. ஏ. ஏ. லிமிடெட்

சென்னை-3.



கடந்த கால நிகழ்ச்சிகளை மறந்துவிடாமல், இன்றைய நிலை கண்டு இறுமாப்பு அடைந்துவிடாமல், எதிர்காலத்தை எண்ணிப் பார்த்து இன்றைய தமிழ் நாடு அரசு செயல்படுகிறது என்பதற்கோர் எடுத்துக்காட்டு இது !

நேற்றைய நிலை.

தமிழ்நாட்டில் உணவுதானிய உற்பத்தி
(லட்சம் மெட்ரிக் டன்களில்).

1950-51 (திட்ட காலத்திற்கு முன்பு)	31·63
1955-56 (முதல் திட்ட இறுதியில்)	45.45
1960-61 (இரண்டாம் திட்ட இறுதியில்)	53·13
1965-66 (மூன்றும் திட்ட இறுதியில்)	50·60
1969-70 (சென்ற ஆண்டில்)	63·00

இன்றைய நிலை.

தீவிர சாகுபடித் திட்ட வெற்றியால் தீர்ந்தது உணவு கட்டுப்பாடு ! கட்டாயக் கொள் முதல் நிறுத்தப்பட்டுவிட்டது !! தமிழ் நாட்டிற்குள் எங்கு வேண்டுமானாலும் தடையின்றி அரிசி எடுத்துச் செல்லலாம் !!! இந்த ஆண்டில் (1970-71) உயர் விளைச்சல் தரும் வகைத் திட்டத்தையும், பல பயிர் சாகுபடி திட்டத்தையும் விரிவுபடுத்துவதன் மூலமாகவும், இரசாயன உர உபயோகத்தை மேலும் தீவிரப்படுத்துவதன் மூலமாகவும் 67 லட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

நாளைய திட்டம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1973-74) 79 லட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 18 அவுன்சு உணவு தானியம் கிடைக்கவும், பருவநிலை பாதகமானால் ஏற்படும் தேவைக்காக 10 லட்சம் டன்களை இருப்பு வைக்கவும், விதைத் தேவைக்காக 1.5 லட்சம் டன்களை உபயோகிக்கவும், 3 லட்சம் டன்களை வெளி மாநிலங்களுக்கோ அல்லது வெளி நாடுகளுக்கோ ஏற்றுமதி செய்யவும் வழி பிறக்கும். எனவேதான் தமிழ் நாடு அரசு உணவு உற்பத்தியில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.



ஜனதிபதி திரு. வி. வி. கிரி அவர்கள் செப்டம்பர் 27, 1969-ல் துவக்கி வைத்ததிலிருந்து எங்கள் வளர்ச்சி தங்கு தடையின்றி சென்றுகொண்டிருக்கிறது.
ஆறு பொருட்கள் உற்பத்தியுடன் தொடங்கிய நாங்கள், இன்று உற்பத்தி செய்வது 11 பொருட்கள்: பெட்ரோல், சமையலுக்கு உதவும் எரி வாயு, டீஸல் எண்ணெய், உயர்ரக கெரோஸின், விமான எரிபொருள் எண்ணெய், ஜெட் எரி பொருள் எண்ணெய், தொழிற்சாலைகளுக்குத் தேவையான எரிபொருள் எண்ணெய், நாஃப்தா, உராய்வு தடுப்பு எண்ணெய்ப் பொருள்கள், தார், கந்தகம்.

போக்குவரத்துச் சாதனங்கள், இல்லங்கள், விவசாயத்துறை, தொழிற்சாலைகள் இவற்றுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி—அத்தனைக்கும் நாங்கள் அளிப்பது-சக்தி.

மதராஸ் ரிஃபைனரி இந்தியாவின் ஒன்பதாவது எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை — ஆனல் பலவிதங்களில் இது முதலாவதாக இருக்கிறது.

- முதன் முதலாக ஹைட்ரஜன் யூனிட் கொண்டது
- முதன் முதலாக 11 கிரேடுகளில் லியூப் பேஸ் ஸ்டாக் கொண்டது
- முதன் முதலாக கந்தகத் தயாரிப்பு யூனிட் கொண்டது
- முதன் முதலாக எல்.பி.ஜி.யை (சமையலுக்கு உதவும் எரிபொருள்) துவக்கத்திலேயே உற்பத்தி செய்தது
- இங்கு செய்யப்படும் சுத்திகரிப்பு முறைகளில் ஒன்று இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் பெட்ரோலியமால் அனுமதி வழங்கப் பெற்றது
- முதன் முதலாக 48.5% மதிப்புள்ள சுதேசி பொருட்களைக் கொண்டு எழுந்த ஆலை இது

MRL—வளரும் தொழில் பிரதேசத்தில் கேந்திரமாக விளங்குகிறது

MRL—வயதில் சிறியது. வளர்ச்சியிலோ மிகப்பெரியது

மதறாஸ் ரிஃபைனரீஸ் லிமிடெட்
சென்னை

FOSMR-1496TMA

கைது செய்தவர்க்குப் பதக்கம்!

கரு நீலப்பட்டாடை உடுத்தி வான மங்கை எழிலுக்கு எழில் கூட்டிக் கொண்டிருந்தாள். 'சில்'லென்ற குளிர்ந்த காற்று கூடியிருந்த மக்களின் உள்ளங்களிலே புல்லரிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. பாலக்காட்டுப் பள்ளத்தாக்கு வழியாகப் புகுந்து கோவை மாநகர மக்களின் நாடி, நரம்புகளையெல்லாம் வருடி விடும் குளிர்ந்த காற்று மனோரம்யமான கிளுகிளுப்பை ஊட்டிக் கொண்டிருந்த மாலை வேளை. கோவை நகரின் காவல்துறைப் பயிற்சித் திடல் புதுமணப் பெண் கோலம் பூண்டிருந்தது. நாட்டுக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கத் திடலைச் சுற்றிப் பறந்து கொண்டிருந்த வண்ண வண்ணக் கொடிகள் காற்றிலே நாட்டியமாடிக் கொண்டிருந்தன.

நாள் செப்டம்பர் 15. அறிஞர் பெருந்தகை பிறந்த நாள். தமிழகக் காவல்துறைப் படையினருக்குத் தமிழக முதல்வரின் விருதுகள் வழங்கும் விழா, அன்று, கோவை மாநகரில். திடலின் ஒரு மருங்கில் அமர்ந்திருந்த மக்கள் கூட்டம்—அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகரப்பிரமுகர்கள், பெண்டிர், சின்னஞ்சிறுசுகள்—அத்தனை பேரின் விழிகளும் ஒரே திசையை எதிர் நோக்கிக்கிடந்தன. சரியாக மணி ஐந்து............'' கலைஞர் வந்து விட்டார்'' என்று கூறிக் கொண்டே தனது இருக்கையிலிருந்து குதித்து எழுந்து நின்றார் அருகிலிருந்த என் நண்பர்!

தமிழக முதல்வரின் [illegible] கார் உள்ளே நுழைந்தது. கூடியிருந்த மக்கள் வெள்ளத்திடையே ஒரே ஆரவாரம்! தூய வெள்ளுடை அணிந்த காவல்துறை அதிகாரிகள், மோட்டார் சைகிள்களில் முன்னும் பின்னும் அணியாக வர, முதல்வர் பவனி வந்தது கண் கொள்ளக் காட்சியாக இருந்தது.........

திடலில் போடப்பட்ட மேடை மீது நின்று, காவல் படையினரின் கம்பீரமான அணி வகுப்பு மரியாதையை முதல்வர் ஏற்றுக் கொள்கிறார். திடலெங்கும் ஊசி விழுந்தால் கூடக் கேட்கும்படியான நிசப்தம்..........அணி வகுப்பு வீரர்களின் காலணி ஓசை தவிர............வேறு ஓசையே கிடையாது..... பாண்டு வாத்தியப் பிரிவினர் வண்ண உடை அணிந்து அழகாக அணி வகுத்துச் செல்கின்றனர். அவர்கள் எழுப்புகின்ற இனிய பாண்டு வாத்திய ஒலி...... ..காவல்துறை வீரர்களின் கண்ணைக் கவரும் அணி வகுப்பு.....முதல்வர் கம்பீரமாகக் காவல்துறைப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்!

காவல்துறைத் தலைமை அதிகாரி தமிழக முதல்வரை வரவேற்றுப் பேசுகிறார். ''அரசுக்கும் மக்களுக்கும் காவல் துறையினர் கடமை உணர்வுடனும், உள்ளத்தூய்மையுடனும், நம்பிக்கைக்கும் பாத்திரமாகவும் பாடுபடுவார்கள்'' என்ற உறுதிமொழியினைத் தமிழக முதல்வருக்கும், மக்களுக்கும் அளிக்கிறார் அவர். சீரிய பணியாற்றிய காவல் துறை வீரர்களுக்கு வீரப் பதக்கங்களையும், சிறப்புப் பதக்கங்களையும் வழங்க வேண்டுமென முதல்வரை அவர் கேட்டுக் கொள்கிறார். விருது பெறும் ஒவ்வொரு வீரரின் குண நலன்களையும் செயல் திறனையும் பற்றித் தன் கம்பீரக் குரலில் அவர் படிக்க, விருது பெறும் வீரர்கள் ஒவ்வொருவராக வந்து முதல்வரிடமிருந்து பதக்கங்கள் பெற்ற காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்!

வீரப்பதக்கங்களை நான்கு பேருக்கும், தன்னிகரற்ற பணிக்காகச் சிறப்புப்பதக்கங்களை 20 பேருக்குமாக, ஆக மொத்தம் 24 வீரர்களுக்கு முதலமைச்சர் விருதுகள் வழங்குகிறார். பதக்கங்களை வழங்கிய பின் முதலமைச்சரின் கம்பீரக் குரல் ஒலிபெருக்கி மூலமாகப் பரவி வந்து, கூடியிருந்தோரின் செவிகளிலே தேன் மழை போல் பொழிகிறது. முதலமைச்சர் உரையாற்றுகிறார் :—

காவற் படையினரின் அணிவகுப்பு. முதல்வர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.



" அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் நான் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு காவல் துறையில் வீரச் செயல் புரிந்தவர்களுக்கு ஊக்கம் அளிக்க இப்படி ஒரு பரிசளிப்பு விழா நடத்த வேண்டுமெனக் காவல்துறைத் தலைமை அதிகாரியிடம் கேட்டுக் கொண்டேன். இந்தப் பரிசு, முதல் அமைச்சர் பதக்கம் என்ற பெயரில் அண்ணா பிறந்த நாளில் வழங்கப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தேன். என் கருத்தை ஏற்று, சென்ற ஆண்டு சேலத்திலும், இவ்வாண்டு கோவையிலும் சிறப்பாக இவ்விழா நடந்தேறியுள்ளது.

"தமிழ்நாடு காவல்துறை, அனைத்திந்தியாவிலும் சிறப்புடையது... சென்ற ஆண்டு சேலத்தில் இவ்விழா நடைபெற்ற பொழுது நடந்த ஒரு சம்பவம் இன்றும் என் நெஞ்சத்தில் பசுமையாக இருக்கிறது. அவ்விழாவில் ஒரு விதவை அம்மையார் பதக்கம் வாங்கினார்கள். கொடியவன் ஒருவனைப் பிடிக்கும்பொழுது, தன் கடமையே பெரிதாகக் கருதி உயிரைத் துச்சமாக எண்ணிச் செயலாற்றும்பொழுது உயிர் நீத்தார், அந்த அம்மையாரின் கணவர். உறுதியான குணமும் உத்தமச் சிந்தனையும் படைத்த காவல்துறையைச் சார்ந்த அந்த வீரத்திருமகனாரின் சார்பாகத் தன் கணவனைப் பறிகொடுத்த அந்த அம்மையார் மேடை மீது வந்து பதக்கம் பெற்ற காட்சி இன்னும் என் கண் முன்னால் இருக்கிறது...... அப்படிப்பட்ட கடமை உணர்வுகளை நெஞ்சத்திலே பதித்துக்கொண்ட வீரர்களைக் கொண்டது நம்முடைய காவல்துறை. மிகவும் சிறப்பான முறையில்அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். சென்னைக் கோடம்பாக்கத்தில் பதுங்கி மறைந்து கொண்டு சதி ஆலோசனை செய்து கொண்டிருந்த ஆந்திராவைச் சேர்ந்த புரட்சிவாதிகளை அற்புதமான முறையில் மடக்கிப் பிடித்துத் தமிழ்நாட்டினுடைய பெருமையினையே உயர்த்தியுள்ளார்கள்.

தன்னிகரற்ற பணிக்காகக் குற்றப் புலனாய்வுத்துறை ஆய்வாளர் திரு. பழனிதுரை மீனாட்சிசுந்தரம் பரிசு பெறுகிறார்.

" எதிர்க்கட்சியில் நான் இருந்த பொழுதும் காவல்துறையினரைப் பாராட்டியுள்ளேன். ஆட்சிக்கு வந்த பொழுதும் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். எனக்கும் காவல்துறையினருக்கும் நிறையத் தொடர்பு உண்டு. இப்பொழுது நான் வரும்பொழுது முன்னும் பின்னும் போலீசார் புடைசூழ வந்ததை நீங்கள் பார்த்தீர்கள். முன்பு நான் எதிர்க் கட்சியில் இருந்த பொழுதும், பாளையங்கோட்டைச் சிறைக்கு என்னைக் கொண்டு போன போதும், இப்படித் தான் முன்னாலும், பின்னாலும் புடைசூழ அவர்கள் வரத் தான் செய்தார்கள்.

" இன்று இங்கே பதக்கங்களைப் பல வீரர்கள் பெற்றனர். அதிலே தாசையா என்று ஒருவரும் பதக்கம் பெற்றார். அவர் பதக்கத்தை என்னிடமிருந்து பெறும்பொழுது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. என்னையுமறியாமல் சிரித்து விட்டேன். அவருக்கும் விஷயம் புரிந்திருக்கும் ! நான் மதுரையில் சட்ட எரிப்புப் போராட்டம் நடத்திய பொழுது என்னைக் கைது செய்தவர் அவர் ! சிரிப்பு வராமலிருக்குமா ? இப்படிப் பல சுவையான சம்பவங்களை நாம் பொது வாழ்வில் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

" காவல்துறை பொதுவானது......கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது. அரசின் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும், அமைதியை நிலை நிறுத்தி, மக்களின் வாழ்வுக்குப் பாதுகாப்பு அளித்துத் தரவேண்டிய கடமை உணர்ச்சியுடன் பணியாற்ற வேண்டியவர்கள் காவல்துறையினர். தமிழகக் காவல்துறை அனைத்திந்தியாவிலும் சிறப்புடையதாகத் திகழ்வது கண்டு பெருமை அடைகிறேன்.

" உங்களது தலைமை அதிகாரி சில கோரிக்கைகளை இங்கே வைத்தார்கள். அவர் மிகவும் தந்திரசாலி. ஆயிரக்கணக்கானவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு சொன்னால் ' இல்லை ' என்று சொல்ல மாட்டார்கள் என்று இங்கே சொன்னார்கள். அதில் ஒன்று போலீஸ் கமிஷன் அறிக்கை மிக விரைவில் வந்து நிறைவேற்றப்பட வேண்டும் என்பது. சேலம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு நடந்த பரிசளிப்பு விழாவில் அறிவித்தபடி போலீஸ் கமிஷன் நிறுவப்பட்டு உள்ளது. வெகு விரைவில் கமிஷனிடமிருந்து அறிக்கை கிடைக்கும். அந்தப் பரிந்துரைகளை இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று முதலமைச்சர் கூறி முடித்தாரோ இல்லையோ........கூடியிருந்தோர் மகிழ்ச்சிப் பெருக்கினால் எழுப்பியகரவொலி தமிழக முதல்வர் மீது மக்கள் கொண்டுள்ள பாசத்திற்கும் குறிப்பாகக் காவல் துறையினர் கொண்டுள்ள நன்றியுணர்ச்சிக்கும் மரியாதைக்கும் சான்றாகத்திகழ்ந்தது!

கரவொலி அடங்கியதும் மேலும் முதலமைச்சர் சொன்னார்—" மற்றும் காவல்துறையினருக்கு

நிலப்பட்டா வழங்குதல், வீட்டுமனை வசதி இவைகளைப் பற்றிப் பரிசீலித்து மனம் நிறைவு பெறத் தக்க வகையில் ஆவன செய்வேன்.

"மக்களுடன் காவல் துறையினர் ஒத்துழைக்க வேண்டும். பொதுமக்களும் காவல்துறையினருடன் ஒத்துழைக்க வேண்டும். காவல்துறையினரும் நம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான். சமுதாயப் பாதுகாப்புப் பணியில் தான் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.



தன்னிகரற்ற பணிக்காகத் தலைமைக் காவலர் திரு. அ. மாணிக்க நாயுடு பரிசு பெறுகிறார்.

விழாப்பதக்கம் பெற்றவர்களுக்கு என் பாராட்டுதல்கள். மற்றவர்கள் எல்லாம் பரிசு பெறத் தங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். "

முதலமைச்சரின் உரை முடிந்ததும், நாட்டுப் பண் இசைக்கப்பட்டு...........விழா இனிது நிறைவு பெற்றது.

கண்ணுக்கு விருந்தாய், கருத்துக்கும் விருந்தாய் அமைந்து விட்ட நல்லதொரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மனநிறைவுடன் நான் வீதியில் நடை போட்டேன்.

காவல்துறையினருக்குத் தமிழக முதல்வரின் விருதுகள்

(15—9—1970).

விருது பெற்ற வீரர்கள் :

வீரப்பதக்கம் பெற்றவர்கள் :—

1 திரு. ஆர். செல்லையா, காவலர், படைக்கலந் தாங்கிய சிறப்புக் காவற்படை, ஆவடி.

2. திரு. டி. நடராசன், காவல்துறை ஆய்வாளர் சிறப்புப் பிரிவு, (குற்றப்புலனாய்வுத் துறை).

3. திரு. ஏ. இராமசாமி, காவல்துறை ஆய்வாளர், தனிப்பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறை.

4. திரு. எஸ். கணேசன், காவல்துறை ஆய்வாளர், சென்னை மாநகரக் காவல்துறை.

சிறப்புப் பதக்கங்கள் பெற்றவர்கள் :—

(தன்னிகரற்ற பணிக்காக அளிக்கப்பட்டது)

1. திரு. நாராயண வஸ்தாது, துணைக் கண்காணிப்பாளர், வட ஆர்க்காடு மாவட்டம்.

2. திரு. கே. நாராயணசாமி, கண்காணிப்பாளர், தென்ஆர்க்காடு மாவட்டம்.

3. திரு. பி. அப்துல் மஜீது, துணைக்கண்காணிப்பாளர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4. திரு. எம். வேலுச்சாமி, உதவித்தளவாய், மலபார் சிறப்புக் காவல்படை முதல் அணி, (நேபாவிற்கு முதன்மையில் சென்றவர்).

5. திரு. எம்.எஸ். சுப்பிரமணியம், கோட்ட தீயணைப்புப்படை அதிகாரி, திருச்சி.

6. திரு. ஆர். கோவிந்தராஜுலு, ஆய்வாளர், குற்றப்புலனாய்வுத் துறை, சென்னை.

7. திரு. டி. தாசையா, ஆய்வாளர், திருநெல்வேலி மாவட்டம்.

8. திரு. ஆர். எச். டெய்லர், ஆய்வாளர், ரயில்வே காவல்துறை மாவட்டம், தமிழ்நாடு.

9. திரு. கே.கே. செந்தாமரை சேஷன், ஆய்வாளர், தஞ்சாவூர் மாவட்டம்.

10. திரு. வி. எஸ். கந்தசாமி, ஆய்வாளர், உணவுப் பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறை.

11. திரு. வி. முத்தையா, ஆய்வாளர், ஒழுக்கம் கண்காணிப்பு, இலஞ்ச ஒழிப்பு.

12, திரு. எஸ். நடராசன், ஆய்வாளர், உயர் நீதி மன்றத்துப் பிரிவு, சென்னை.

13. திரு. பி. மீனாட்சிசுந்தரம், ஆய்வாளர், சிறப்புப்பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை, சென்னை.

14. திரு. பி.ஜே. மானுவல், சேம ஆய்வாளர் சென்னை மாநகரக் காவல்துறை.

15. திரு. சி. அரங்கநாதன், ஜமேதார், படைக்கலந்தாங்கிய சிறப்புக் காவல்படை, ஆவடி.

16. திரு.எம். சோமசுந்தரம், உதவி ஆய்வாளர், குற்றப்புலனாய்வுத் துறை.

17. திரு. ஆர். மாணிக்க நாயுடு, தலைமைக் காவலர், இலஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு இயக்குநர் அலுவலகம்.

18. திரு. ஆர். கருப்பையா, தலைமைக் காவலர், இராமநாதபுரம் மாவட்டம்.

19. திரு. எம்.டி. சுப்பிரமணியம், காவலர். செங்கற்பட்டு கிழக்கு மாவட்டம்.

20. திரு. கே. வேலாயுதம், காவலர், நீலகிரி மாவட்டம்.

எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்

செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு. எதிர்காலம் பற்றிய அச்சமில்லை. புன்னகையுடன் வருங்காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இனபச் சூழ்நிலை எப்படி வந்தது ? பிறக்கும் போதே அதிர்ஷ்டத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர் ? இல்லை.

வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்றோர், திட்டமிட்டும் பொருளைச் சேர்த்தனர், திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய் குறைவாக இருப்பினும், குடும்பம் விரிவாகவில்லை. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர்; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில பதது லடசம் பேர் குடும்ப நலத் திட்டத்தால் பயனடைந்துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்று இன்னுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்றோரும் குழந்தைகளும் இனிமைமிக்க எதிர்காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்.

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம்; பாதுகாத்திடுங்கள்! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள்; நண்பர்களிடம் கேளுங்கள்!

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள். பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனிவு காட்டுவர்; கருத்துரை தருவர், கருவிகளும் கிடைக்கும்; பயன் பெறுக!

திட்டமிட்ட குடும்பம தெவிட்டாத இன்பம்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

செப்டம்பர் 15, தமிழகத்தின் தவப்புதல்வன் பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாள். ஏழை, எளிய மக்கள் ஏற்றம் பெறத் தமது வாழ்வையே பணயம் வைத்துப் பாடுபட்ட ஏந்தலின் பிறந்த நாளன்று கோவை மாநகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. கொங்கு நாட்டு மக்களுக்கு அன்று இரட்டிப்பு மகிழ்ச்சி. அண்ணா வழி நடக்கும் தானைத் தலைவராம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கோவைக்கு வருகை தந்திருந்தார். அன்று அண்ணா பிறந்த நாள்; முதல்வரின் வருகை; எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தது போல் ஒரு சிறப்பு நிகழ்ச்சி அன்று கோவையில் நடைபெற்றது. சிறுவாணி குடிநீர்த் திட்டக் கால்கோள் விழா சீருடனும் சிறப்புடனும் அன்று மாலை கோவை பாரதி பூங்காவில் நடைபெற்றது. கோவை நகர மக்களின் நீண்ட நாளைய கனவு நனவாகிய திருநாள் அன்று; ரூபாய் ஆறரைக் கோடி செலவில் உருவாகும் சிறுவாணி குடிநீர்த் திட்டம்; நீண்ட நெடு நாட்களாகச் செயல்படாமல் தேக்க நிலையில் இருந்துவிட்ட ஒரு பிரச்னைக்கு விடிவு பிறந்தது அன்று. இத்திட்டத்திற்குத் தன்னுடைய பொற்கரங்களினால் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டிய பொழுது, கூடியிருந்த மக்கள் கூட்டம் மகிழ்ச்சிப் பெருக்கினால் எழுப்பிய ஆரவாரமும் கையொலியும் வானையே அதிர வைத்தன.

மக்கள் கொண்ட மகிழ்ச்சிக்குக் காரணம் இல்லாமலில்லை. வளர்ந்து வரும் கோவை நகரின் குடிநீர்ப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக நீண்ட நெடு நாட்களாக இருந்து வந்துள்ளது. தொழில் துறையில் ஏறு நடை போடும் கோவைப் பகுதி மக்கள், உழைப்புக்குப் பெயர் போனவர்கள். அக் கரிசல் நில மக்களின் உழைப்புத் திறனால், கோவைப் பகுதியே பொன் கொழிக்கும் பூமியாக மாறி வருகிறது. உழைக்கும் கரங்கள் ஊரையே உயர்த்தி வருகின்றன. அவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள். இயற்கை அவர்களுக்குக் கை கொடுக்கிறது. பாலக்காட்டுக் கணவாய் மூலம் கோவை நகரை வந்து தழுவும் குளிர்ந்த காற்று—தமிழகத்தில் எந்த நகரத்திலும் காணமுடியாத, கிடைக்க இயலாத தட்ப வெப்ப நிலை கோவை நகரைச் சொர்க்க புரியாக மாற்றியமைக்கச் சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. தொழில் வளத்தில் கோவைக்கு நிகர் கோவை தான். அந்தப் பகுதியிலே மக்கள் கடுமையாக உழைக்கிறார்கள்; அயராது உழைக்கிறார்கள் ; வளம் கொழிக்கிறது ; வாழ்வு சிறக்கிறது. கொங்கு நாட்டு மக்களின் தங்கமான மனம்—சீரிய விருந்தோம்பல் பண்பு ; வாழ்விலே முன்னேற வேண்டும் என்பதிலே அவர்களுக்கு உள்ள வலுவான பிடிப்பு : அத்தனைச் செல்வங்கள் இருந்தும் கோவை நகரச் சுற்றுப்புற மக்கள்—போதிய குடிநீர் வசதி இல்லாமல் அவதியுறும் நிலை நீண்ட நெடுநாட்களாகவே நிலவியுள்ளது. இந்நிலையை நன்கு உணர்ந்த மக்கள் அரசு—தமிழக அரசு—இக்குறையினைப் போக்க, கோவை நகர மக்களின் நீண்ட நெடுநாள் தேவையை -நியாயமான கோரிக்கையைத் தீர்த்து வைக்கத் திட்டம் ஒன்றினைத் தீட்டிச் செயல்படுத்த முன் வந்துள்ளது. அத்திட்டம் தான் கோயமுத்தூர் குடிநீர்ப் பெருக்குத் திட்டம் ! அத்திட்டத்திற்குத் தான் தமிழக முதல்வர் கோவை

நகரில் 15—9—70-ல் அடிக்கல் நாட்டினார்.

" கோவை மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழும் நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். கோவையில் குடி தண்ணீருக்குக் கடந்த பல ஆண்டுகளாகத் தீராமல் இருந்த சிறுவாணிப் பிரச்னை தீர்க்கப்பட்டு, அதன் பலனை இந்தப் பகுதி மக்கள் அடைகின்ற பூரிப்பில் இந்த விழா, மிகுந்த உற்சாகம் அளிப்பதாக அமைந்து இருக்கிறது " என்று தமிழக முதல்வர் தன் உரையின் துவக்கத்தில் குறிப்பிட்டார். உண்மை. நீண்ட நெடு நாட்களாகத் தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சினை சிறுவாணி பிரச்சினை. " பெயர்தான் சிறுவாணியே தவிர இப்பிரச்சினை கொடுத்த கஷ்டங்கள் பெரிய அளவாகும் " என்றார் முதல்வர். இக்கூற்றில் புதைந்துள்ள வரலாற்றுப் பின்னணி சுவையானது.

' சிறுவாணி ' உலகப்புகழ் பெற்றது. சிறுவாணி நீர் அத்துணை சுவையுடையது. உலகத்திலேயே கிடைக்கின்ற சுவையான நீர்களில் சிறுவாணியில் கிடைக்கின்ற நீரும் ஒன்றாகும். நமது நாட்டிலும் சிறுவாணி நீர்தான் மிகுந்த சுவையானது என்கிறார்கள். கோவை சிறுவாணித் தண்ணீர் குடிக்கக் குடிக்கச் சுவை தரும்! ஆனால், அதிகமாகக் கிடைப்பதில்லை. நல்லவை அத்தனையும் அப்படித்தானே! மனிதர்களானாலும் சரி, மற்ற பொருள்களானாலும் சரி, நல்லவை அதிகமாகக் கிடைப்பதில்லை; அரிதாகவே கிடைக்கின்றன. சிறுவாணி நீரும் இதற்கு விலக்கல்ல!

மேலே மலைச் சாரலில் அட்டப்பாடி பள்ளத்தாக்கு வழி நிறைந்து ஓடுகிறது சிறுவாணி ஆறு. கோவை நகரிலிருந்து சிறுவாணி 20 மைல்களுக்கு அப்பால் உள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் பகுதி அப்பகுதி. அச்சிறுவாணி நதியிலிருந்து கோவை நகரத்துக்கான குடி நீர்த் திட்டம் 1931-லிருந்து செயல்பட்டு வருகிறது. சிறுவாணி நதியின் குறுக்கே உள்ள சிறு அணையின் மூலம் நீரைத் தேக்கிச் சுரங்கப் பாதையின் வழியாக ஒரு பகுதியைக் கோயமுத்தூர்ப் பக்கமாக நொய்யல் பள்ளத்தாக்குக்குக் கொண்டு வரப்படுகிறது. சுரங்கப்பாதை வழி கொணர்ந்த நீர் சுமார் ஒரு மைலுக்கு மேலுள்ள ஆணையாறு சிற்றாறுக்கு இயற்கையான படிவழி மூலம் கொண்டுசெல்லப்படுகிறது. அங்கு இரு வடி நீர்த் தேக்கத் தொட்டிகளில் நீர் வடிகட்டப்பட்டு 18 அங்குல வார்ப்பு இரும்புக் குழாய்கள் மூலம் சுமார் 21 மைல்களுக்கப்பால் உள்ள கோவை நகருக்குக் கொண்டு வரப்படுகிறது.

மேற்கூறியவாறு உருவாக்கப்பட்டு 1931-லிருந்து செயல்பட்டு வரும் இக்குடிநீர்த் திட்டம் நகரத்தினரில் ஒரு இலட்சம் மக்களுக்குத் தலைக்கு 20 காலன் என்ற அளவில் வழங்குவதற்காகத்தான் அன்று நிர்மாணிக்கப்பட்டது. சிறுவாணி நதியில் சரியான, பெரிய அளவில் நீர்த் தேக்க அமைப்பு இல்லாததால், இத்திட்டம், ஆற்றுவழி செல்லும் நீரைப் பொறுத்துத்தான் உள்ளதாகும். மற்றும் கோடைக் காலங்களில் சிறுவாணி நதிக்கு முக்கிய நீர் நிலையான முந்திக் குளம் நீர்வீழ்ச்சி வரண்டு போகும் தன்மையுடையது. இன்றுள்ள சிறுவாணி குடிநீர் வழங்கும் திட்டம், கோவை நகரைப் பொறுத்தவரையில் ' யானைப் பசிக்குச் சோளப் பொறி ' போட்ட கதை தான்! இன்று கோவை நகரின் மக்கட்தொகை சுமார் 3·5 இலட்சமாகும். எல்லா மக்களுக்கும் போதிய குடிநீர் வழங்க வேண்டுமென்றால் சுமார் 90 இலட்சம் காலன் குடிநீர், நாள் ஒன்றுக்குத் தேவைப்படும். இன்றுள்ள திட்டப்படி, நாள் ஒன்றுக்கு 50 இலட்சம் காலன் நீர்தான் கிடைக்கிறது. இதனால் மக்களின் குடிநீர்த் தேவையைச் சரிவரப் பூர்த்தி செய்ய இயலவில்லை. கடந்த இருபது ஆண்டுகளாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வந்தும், முழுக்க முழுக்க இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை. ஆனால், இன்றையத் தமிழக அரசு எடுத்துக் கொண்ட பெருமுயற்சியினால் இன்று இப்பிரச்சினைக்கு விடிவு தோன்றியுள்ளது. சிறுவாணி நீர்ப் பிரச்சினை மிகச் சிக்கலான பிரச்சினை. தமிழகம், கேரளம், இரு மாநிலங்களும், கூடிப் பேசித் தீர்வு காண வேண்டிய பிரச்சினையாகி விட்டபடியால், உடனடியாகத் தீர்வு காண முடியவில்லை.

கோவை நகரத்துக்கும், சுற்றுப்புற கிராமங்களுக்குமான குடிநீர்த் தேவையினை 1951 முதல் 1981 வரைக்கும் பூர்த்தி செய்யும் அளவுக்கு 125 லட்சம் காலன் நீர் விநியோகிக்க, சிறுவாணி நதியின் குறுக்கே தக்கதொரு நீர்த் தேக்கம் கட்டுதல் என்பது இத்திட்டத்தின் முக்கிய கூறாகும். கேரள மாநிலத்துடன் தமிழகப் பகுதிகள் இணைக்கப்பட்ட பின்பு சிறுவாணி நதியும், அணையைச் சார்ந்த இடமும் கேரள அரசின் எல்லைக்குட்பட்டதாகி விட்டன. ஆகவே, இதற்காகக் கேரள அரசின் ஒப்புதல் வாங்க வேண்டி வந்தது. இரு மாநில அரசுகளுக்கிடையே இது குறித்துத் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடந்தன. சிறுவாணித் திட்டக் கால்கோள் விழாவில் தமிழக முதல்வர் இதுபற்றிக் குறிப்பிடும் பொழுது " பரம்பிக் குளம் ஆளியாறு திட்டம் பற்றிப் பேசினால் ' சிறுவாணித் திட்டம் எங்கே ?' என்பார்கள். சிறுவாணித் திட்டம் பற்றிப் பேசினால் 'பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் எங்கே ?' என்பார்கள். அந்த வகையில் ஒன்றோடொன்று இணைந்த பிரச்சினைகள் இவை ; பரம்பிக்குளம் ஆளியாறு, சிறுவாணித் திட்டங்கள் பற்றி இரு மாநில அரசுகளும் இறுதிப் பேச்சு வார்த்தைகள், நடத்தி வெற்றி கண்டோம். அதன் பயன்தான் இன்று இங்கு நடக்கும் கால்கோள் விழா " என்று குறிப்பிட்டார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம் சிறுவாணிப் பள்ளத்தாக்கில் 6,500 இலட்சம் கன அடி கொண்ட நீர்த் தேக்கத்தைக் கட்டி, குடிநீர் எடுக்க வசதியுள்ள அமைப்பு மூலம் தற்போதுள்ள சுரங்கப்பாதை வழியே கோவை மாவட்ட எல்லைக்குள் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படும். சுத்திகரிக்கப்பட்ட பின்னர் 33 அங்குல விட்டமுள்ள குழாய் மூலம் நீர், கோவை நகருக்குக் கொணர்ந்து விநியோகிக்கப்படும். கோவை நகரத்துக்கும், நகரை ஒட்டியுள்ள சுற்றுப்புறச் சிற்றூர்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, மக்களின் நெடு நாள் குடி நீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும்.

இத்திட்டத்திற்கு முதலீட்டுத் தொகையாக ரூ. 6.33 கோடி ரூபாயும், ஆண்டொன்றுக்குப் பராமரிப்புச் செலவுக்கு ரூ. 15 இலட்சமும் ஆகும்.

	ரூபாய் இலட்சத்தில்.
முன்னோடி வேலைகளுக்காக.	93·802
தலைமைக் குடிநீர் நிலையம் அமைக்க	188·843
குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க.	56·000
தலைமையிடத்திலிருந்து கோவை நகருக்குக் குடிநீர் கொண்டுவரும் குழாய்க்காக.	206·400
அரசுச் செலவுகள்	84·947
	632·992

இம்முழுத் திட்டத்தையும் மூன்று வகையாகப் பிரித்துச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது கிடைக்கும் குடிநீர் அளவு ஐந்து மடங்கு அதிகமாகும்.

இத்திட்டத்தின் கால்கோள் விழாவில் தமிழக முதல்வர் அவர்கள் பேசும்போது ஒரு சுவையான நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார்கள்.

" நீதிக்கட்சி ஆட்சி செய்த காலத்தில் முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் குடி தண்ணீர்த் திட்டத்துக்கு இங்கே இதே இடத்தில் 1935-ல் அடிக்கல் நாட்டினார் என்பதைப் பார்க்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நீதிக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல்வனாக இங்கே வந்து சிறுவாணி குடி நீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் !

"பனகல் அரசர் நீதிக்கட்சிக் காலத்தில் முதல்வராக இருந்தார். நான் பள்ளியில் படிக்கும் பொழுது அவர் வாழ்க்கைச் சரித்திரத்தைத் துணைப்பாடப் புத்தகமாக வைத்திருந்தார்கள். அவருடைய சரிதத்தை மனப் பாடம் செய்து ஒப்புவித்துப் பள்ளியில் முதல் மார்க் வாங்கினேன். அதே பனகல் அரசர் அடிக்கல் நாட்டிய இடத்திற்கருகில் முதலமைச்சராக வந்து அடிக்கல் நாட்டும் வாய்ப்புக் கிடைத்ததை நினைக்கும்பொழுது நான் மிகவும் கொடுத்து வைத்தவன் என்றே நினைக்கிறேன்."

மேலும் அவர் பேசுகையில், " ஒரு மாதம் கழித்துக் கருணாநிதி அடிக்கல் நாட்டினாரே, எங்கே தண்ணீர்? என்று கேட்பார்கள். அப்படிக் கேட்பவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தத் திட்டம் நிறைவேற 1½ ஆண்டுகள் ஆகலாம். அப்பொழுது நானும் வந்து உங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்வேன்........" என்று குறிப்பிட்டார்.

பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக்பாட்சா தலைமையில் நடைபெற்ற இவ்விழா கோவை நகர வரலாற்றில், ஒரு மைல் கல் ; முக்கியமான திருப்பு முனையாகும்! இத்திட்டத்திற்குப் பச்சைக் கொடி காட்டியாகிவிட்டது. நீண்ட நெடுங்காலமாகத் தேங்கிக் கிடந்த ஒரு பிரச்சினைக்குத் தமிழக அரசு தீர்வு கண்டு விட்டது! கோவை நகர மக்களின் நீண்ட காலக் கனவு இன்று நனவாகத் தொடங்கி விட்டது ! உழைப்புக்குப் பெயர் பெற்ற கோவை மாவட்டம், குறிப்பாகக் கோவை நகரம், தொழில் துறையிலும் மற்றத் துறைகளிலும் மேலும் மேலும் ஏற்றம் பெறவும், செல்வம் கொழிக்கவும், வளம் பெருகவும் காரணமாக அமைந்து அவற்றிற்கு வழி வகுத்துத் தரும் சிறுவாணி குடி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட தமிழக அரசினை இதயப் பூர்வமாகப் பாராட்டுகிறது. குடும்பம் குடும்பமாகப் பல்லாயிரக் கணக்கான கோவை மக்கள் அக்கால்கோள் விழாவிலே இதயப் பூரிப்புடன் மகிழ்ச்சி பொங்கக் கோலாகலமாகக் கலந்து கொண்டதே, அதற்கு அசைக்க முடியாத சான்றாகும் !

சீரணிச் செய்திகள்

சீரணிப் படையினர் பார் புகழும் வண்ணம் பல நல்ல பணிகளைச் செய்து வருகின்றனர். அவர்கள் உழைப்பால் உருவான பள்ளிக் கட்டடங்கள் பல; சாலைகள் ஏராளம்.

மாவட்டந்தோறும் ஆர்வமுள்ள இளைஞர்களும், பெண்களும் இந்தச் சீரணியில் சேர்ந்து மக்களுக்குச் சீரிய தொண்டாற்றி வருகிறார்கள்.

20 9-1970 ஞாயிறு அன்று சென்னை பெரம்பூர் பகுதியிலுள்ள டாக்டர் பெசண்ட் நகரில் துப்புரவுப் பணி தொடக்க விழா, சீரணிச் சார்பில் நடந்தது. இந்த விழாவில் வேளாண்மை, அரிசனநல அமைச்சர் திருமதி த்தியவாணிமுத்து அவர்களும், ரணி அமைச்சர் திரு. என்.வி. டராசன் அவர்களும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் மண் வெட்டியால் குப்பை கூளங்களை அள்ளிக் கூடையில் கொட்ட, அதனை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் எடுத்துச்சென்று அப்புறப்படுத்தினார்கள். பின்பு இருவரும் நீண்ட துடைப்பத்தினை எடுத்துத் தெருக்களைத் துப்புரவு செய்தார்கள்.

இதைத் தொடர்ந்து ஏராளமான சீரணித் தொண்டர்கள் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டார்கள்.

அண்ணலின் திட்டத்தை நிறைவேற்றும் சீரணிச் செல்வங்கள்



20-8-1970 அன்று தர்மபுரியில் மாவட்ட சீரணித் துவக்க விழா நடந்தது. தமிழகக் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மாவட்ட சீரணியை அங்கு துவக்கி வைத்தார்கள். பிற்பட்டோர் மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் திரு. என்.வி. நடராசன் அவர்கள் இந்த விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள்.

இத்துவக்க விழாவோடு மாவட்ட குடும்ப நலக் கருத்தரங்கும் சேர்ந்து நடைபெற்றது.

இதையொட்டி, சுமார் இரண்டாயிரம் சீரணித் தொண்டர்கள் அணிவகுப்பு நடத்தினர். அவர்களது ஊர்வலத்தில், சீரணியினரின் தொண்டு, குடும்ப நலத் திட்டம், மாவட்டத்திலுள்ள வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றைச் சித்தரிக்கும் அலங்கார வண்டிகளும் இடம் பெற்றன.

இந்த பிரம்மாண்டமான அணிவகுப்பினைஅமைச்சர்கள் பார்வையிட்டுப் பாராட்டினர்.

இந் நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட படங்கள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.



[சென்னை பெரிய மருத்துவ மனையின் தனி விடுதி ஒன்றில் மோட்டார் சைக்கிள் விபத்தினால் பாதிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மாணவன் மாணிக்கம் படுக்கையில் சாய்ந்து கொண்டிருக்கிறான். கலைக் கல்லூரியில் படிக்கும் அவன் நண்பன் கண்ணப்பன் வருகிறான்]

கண்ணப்பன் : மாணிக்கம் ! எப்படிடா இருக்கே? எனக்குத் தெரியவே தெரியாது. இப்போதுதான் ஊரிலிருந்து வருகிறேன். வந்ததும் இந்த அதிர்ச்சியான செய்தியைக் கேள்விப்பட்டேன். எனக்கு ஒரு கடிதம் எழுதக் கூடாதா?

மாணிக்கம் : வாடா கண்ணப்பா! உன்னைப் பார்த்ததுமே எனக்கு உற்சாகமாகஇருக்கிறது. நீ கல்லூரிக்கு விடுமுறை எழுதிக் கொடுத்து விட்டு, உடம்பு சரியில்லாத உன் தாயைப் பார்க்கப் போனாய். நான் கடிதம் எழுதி உன்னை அதிர்ச்சியுற வைக்கலாமா?

க. : நன்றாகத்தானிருக்கிறது! துக்கத்தில் துணையிருக்கத்தான் நண்பன் வேண்டும். நீ என்ன சொன்னாலும்எனக்குச் சமாதானமாகாது. ஆமாம்! ஒரு மாதத்துக்கு முன்னாலே ஒரு நாள் எங்கள் கல்லூரி விடுதி நாளுக்கு உன்னை விருந்தினனாகக் கூப்பிட்ட போது நீ என்ன சொன்னாய்? ''நானும், என் மோட்டார் சைக்கிளும் போட்டி போட்டுக்கொண்டு கீழே உருண்டு விழுந்தோம். மோட்டார் சைக்கிள் நசுங்கியது. எனக்கு, சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டுள்ளன. என்னுடைய மோட்டார் சைக்கிள் ஓர்க்ஷாப்பிலும், நான் சிராய்ப்புப் பிளாஸ்டருடன் கல்லூரி விடுதியிலும் கிடக்கிறோம்'' என்று சொன்னாய். இதற்குள் நீ எப்படி இரண்டாவது தடவையாக இன்னொரு விபத்தைச் சந்திக்க நேர்ந்தது ?

மூளையில் ஏற்பட்டுள்ள மாறுதலைக் கண்டறிய பரிசோதனை (E.E.G.) நடைபெறுகிறது.

மா. : அதுதான் ஆச்சரியமான விஷயம்! எந்த விபத்தில் கையும், காலும் போகாமல் தப்பித்துக் கொண்டு நகைச்சுவையாக உன்னிடம் வர்ணித்தேனோ, அதே விபத்து தான் இத்தனை நாள் கழித்து என் உயிருக்கு உலை வைக்கப் பார்த்தது!

க. : இது என்னடா வேடிக்கை!

மா. : வேதனையான வேடிக்கைதான்! அன்று பெரிய மருத்துவ மனைக்குப் புறப்பட நேரமாகிவிட்டதே என்று கொஞ்சம் வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்றேன். இரு-சக்கர வண்டியில் இந்த வேகமும் அவசரமும் ஆபத்தில் தான் போய் முடியும் என்பது நம்மில் பலபேருக்குத் தெரியும். தெரிந்தும் அப்படித்தான் செல்கிறோம்! எதிரில் வந்த ஒரு லாரியையும், பக்கத்தில் வந்த ஒரு டாக்சியையும் கண்டு திசை திருப்ப வழியில்லாமல், அவற்றில் மோதி, விபத்து உண்டாகி விடுமோ என்று நடுங்கி, நடைபாதைப் பக்கம் 'சட்'டென ஒடித்த போது நானும், மோட்டார் சைக்கிளும் ஒன்றாக விழுந்தோம். விழுந்த வேகத்தில் நினைவற்றுச் சிறிது நேரம் அதே இடத்தில் கிடந்திருக்கிறேன். சுற்றிலும் கூடிய கூட்டத்தில் சிலர் பரிவுடன் என்னை ஆசுவாசப் படுத்தி, ஆறுதல் கூறி, சிறிது நேரம் அமரச் செய்து சோடா வாங்கிக் கொடுத்தார்கள். எனக்கு அப்படி ஒன்றும் உடலிலோ, தலையிலோ, பெரிய காயங்களோ, எலும்பு முறிவோ ஏற்படவில்லை. ஆனால் உடம்பில் அங்குமிங்குமாய் இலேசான உரசல்கள்தாம். என் ''டெரிலீன் பேன்ட்'' தரையில் தேய்ந்து கிழிந்து துடையில் சிராய்ப்புக் காயம் பட்டிருந்தது. மோட்டார் சைக்கிள் நசுங்கல்கள் கண்டிருந்தாலும் நல்ல நிலையிலிருந்தது. எனவே நான் எழுந்து மோட்டார் சைக்கிளிலேயே மருத்துவ விடுதிக்குச் சென்றேன். அவசர சிகிச்சைப் பகுதியில் (Casuality Department) தடுப்பு ஊசி போட்டுக் கொண்டேன். பிறகு வழக்கம் போல் எனக்குரிய வார்டு வேலைகளுக்குச் சென்றேன். அன்றுதான் என்னை உன் விடுதி விருந்துக்கு அழைத்தாய் !

க. : அதற்கு நீ நகைச்சுவையாகச் சொன்னதை விளையாட்டுக்கு மிகைப் படுத்திச் சொல்கிறாய் என்று இருந்து விட்டேன். அப்புறம் இரண்டு, மூன்று வாரம் கழித்துத்தான் நான் ஊருக்குப்போனேன்.

மா. : ஆனால் உண்மையில் அந்தநிகழ்ச்சிக்குப் பின் ஒன்றுமே நேராதது போல்தான் மிகவும் நலமாக இருந்தேன் நான். வழக்கம் போல் மருத்துவ மனைக்கும், மருத்துவக் கல்லூரிக்கும் சென்று கொண்டுதானிருந்தேன். இப்படியே ஒரு மாதம் சென்றுவிட்டது. பூரண நலத்துடன் தான் அந்த ஒரு மாதமும் இருந்தேன். நடந்த விபத்தையே நான் மறந்து விட்டதாகக் கூடச் சொல்லலாம். அப்புறம் கொஞ்சம், கொஞ்சமாகத் தலைவலி ஆரம்பமாகியது. அவ்வப்போது தூக்கமும், மயக்கமுமாக ஒரு குழம்பிய நிலை இருந்தது. பின் சற்றைக்கெல்லாம் பழையபடி சீராகிவிடும். இப்படி மாறிமாறி இந்நிலை நீடித்து என்னை வாட்டி எடுக்க ஆரம்பித்தது. சினிமாவுக்கோ, கடற்கரைக்கோ நண்பர்கள் அழைத்தால் உற்சாகமாகக் கிளம்பும் நான் மந்தத்தோடு இருக்க ஆரம்பித்தேன். முதலில் இது குறித்து நான் அத்தனை கவலையுறவில்லை. ஆனால் இந்நிலை தொடரவே, உள்ளத்தில் அச்ச உணர்வு தோன்ற ஆரம்பித்தது. உடம்பில் ஏதோ ஒரு நோய் உறைந்துள்ளது என்று சந்தேகப்பட்டேன். அதை நிரூபிப்பது போல் ஒரு வாரத்திற்குப் பின் என் வலது கையும், வலது காலும் சற்று பலவீனமாகி விட்டதை உணர்ந்தேன். பேசும் சக்தியும் சற்று பாதிக்கப்பட்டது.

க. : அடடா! இத்தனை விஷயம் நடந்திருக்கிறதேடா? துணைக்கு ஒரு ஆளில்லாமே எப்படித் தவிச்சிருப்பே நீ?

மா. : அதெல்லாம் ஒன்றுமில்லேடா. நீ அதை நினைத்து வேதனைப்படாதே! நான் பேசும் சக்தியை இழக்க ஆரம்பிக்கிறேன் என்றதுமே

புற்றுநோயுள்ள தசையை எடுத்து மைக்ரோடோம் (Microtomo) என்ற நவீன கருவியில் சோதனை செய்யப்படுகிறது.

என்னுடன் படிக்கும் மற்ற மருத்துவ மாணவர்கள் என்னை நியூரோ ஸர்ஜனிடம் (Neuro Surgeon) அழைத்துச் சென்றார்கள். நடந்ததனைத்தையும் அவரிடம் தெரிவித்தேன். தலை முதல் கால் வரை என்னைப், பூரணமாகச் சோதித்தனர். இரவு, பகல் என்று பாராமல் என் நாடித் துடிப்பு, இரத்த அழுத்தம், கண்களில் பாப்பாவின் அளவு (Size of pupils) கண்களின் ஆழத்தில் கண் நரம்பின் தோற்றம் (Fundus examination), என் உணர்வு நிலை முதலிய எத்தனையோ விஷயங்கள் தொடர்ந்து குறிக்கப்பட்டன.

E.E.G. பரிசோதனை நடைபெறுகிறது.



நோயாளிக்கு மூளையில் அறுவை சிகிச்சை நடத்துகின்றனர்.

தலையைப் பல கோணங்களில் எக்ஸ்ரே எடுத்தார்கள். நரம்பு மண்டலத்தைச் சூழ்ந்துள்ள நீர் (Cerebro spinal fluid) பரிசோதிக்கப்பட்டது. மூளையின் நுண்ணிய மின்னலைகளில் காணும் மாறுதல்களை அறிய எலக்ட்ரோ என்கெஃபலோ கிராபி (Electro encephalography--E.E.G.) எடுக்கப் பட்டது. கரோடிட் ஆன்ஜியே கிராபி (Carotid Angiography) யும், வென்ட்ரி குலோகிராபியும் (Ventre culography) மூளைக்குமேல், தலை எலும்புக்குக் கீழ் இடது பக்கத்தில் தோன்றியிருந்த இரத்தக் கட்டியைத் தெள்ளெனக் காட்டி நியூரோ ஸர்ஜனின் கண்டுபிடிப்பை (Diagnosis) உண்மையென நிரூபித்தன.

க. : மூளையில் இரத்தக் கட்டியா? நினைக்கவே பயமாக இருக்கிறதடா?

மா. : உடனே இரத்தக் கட்டியை அகற்றி என்னைப் பிழைக்கச் செய்ய ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அதற்குப் பின் என்ன நடந்தது என்று உனக்குக் தெளிவாக விளக்கிச் உணர்வில்லை...... சில மணி நேரத்திற்குப் பின்னர் எனக்கு உணர்வு வந்தபோது நான் பின் சிகிச்சை விடுதியில் (Post Operative Ward) இருப்பதை உணர்ந்தேன். மூளை மேல் அமர்ந்திருந்த பெரிய இரத்தக் கட்டி அகற்றப்பட்டதறிந்து அதிர்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவுமிருந்தது.

என்னதான் நானும்மருத்துவக் கல்வி பயிலும் மாணவன் என்றாலும், எனக்கும் ஓர் அச்சம் ஏற்பட்டது. இன்னும் சற்றுக் காலதாமதமாகியிருந்தால் .. ? கண்ணப்பா! நீ என்னை விடக் கடுமையாகக் கண்மண் தெரியாமல் மோட்டார் சைக்கிள் ஓட்டுவாயே...... நீ தயவு செய்து இரும்புத் தொப்பி (Helmet) வாங்கி வைத்துக் கொள். கூடவே வேகத்தைச் சீராக்கிக்கொள். என்ன? சுவரை வைத்துத்தானே சித்திரம் வரைய வேண்டும்? கொஞ்சம் முன்னதாகக் கிளம்பினால் நிதான வேகத்தில் எங்கும் போகலாம். நேரத்தைக் கடத்திவிட்டுத் தாமதத்தைத் தவிர்க்க வேகமாகத் துடிதுடிப்பும், பரபரப்புமாகப் போகும்போது நாம் செல்கிறோம் என்று இப்போது தான் எனக்குப் புரிகிறது!

க. : அதிருக்கட்டும். இப்போது உனக்கு உடம்பு நன்றாக இருக்கிறதா?

மா. : ஓ! என் தலைவலி, குழப்பம், பலவீனம் எல்லாம் இருந்த இடமே தெரியவில்லை. நான் ஒரு புது மனிதனாய், மறுபிறவி எடுத்த நிலையில் இருக்கிறேன். நான் மட்டுமா? என்னைப்போல் எத்தனையோ விபத்துக்குள்ளானவர்கள் இங்கு வந்து புத்துயிர் பெற்றுச் செல்கின்றனர். விபத்து என்று மட்டும் இல்லை. வலிப்பு நோய்களுக்கும், (Epilepsy), மூளைக்குள் அபாயகரமாகத் தோன்றும் கட்டிகளுக்கும், ஆபத்தை விளைவிக்கும் இன்னும் எத்தனை. எத்தனையோ மூளை, தண்டுவடம் (Spinal cord) நரம்பு சார்ந்த நோய்களுக்கும் இங்கு தரப்படும் சிகிச்சை ஒப்பற்றது. நுண்ணிய கருவிகளைக் கொண்டு, அதைக் காட்டிலும் நுண்ணிய அளவுகளைக் கணக்கிட்டு, மூளையின் ஆழத்தில் செய்யப்படும் ஸ்டீரியோ டாக்சிக் ஸர்ஜரி (Steriotaxic surgery) மூளை சார்ந்த சில நோய்களுக்கு அருமருந்தாக அமைகிறது. இந்த நியூராலஜி-நியூரோ ஸர்ஜரி டிபார்ட்மென்டைச் சேர்ந்த (Neurology—Neuro surgery Department) ஸர்ஜன்களும், ஃபிசிஷியன்களும் செய்யும் சேவை ஒப்பற்றது. அதன் தலைமையாளர் புரபசர் டாக்டர் பி. ராமமூர்த்தியை நீ பார்த்திருக்கிறாயல்லவா?

கா. : பார்த்ததில்லை. ஆனால் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

மா. : ஆசியாவிலேயே தலைசிறந்த நியூரோ ஸர்ஜன்களில் ஒருவராகக் கருதப்படுகிறார் அவர்...... அதோ........ தெரிகிறதே ....உயர்ந்த ஒரு புதுக்கட்டடம்! அது தான் நியூராலஜி பிளாக்! அது அவரின் பெருமுயற்சியால் உருவானது. அந்த உயர்ந்த கட்டடத்தில் தான் இனி தலைசிறந்த திறமையாளர்களின் சீரிய பணி தொடரப்


பாப்பா! எனக்கு ஒரு தமிழ்நாடு கொடு!
தமிழக அரசு பரிசுச்சீட்டு
ஒரு ஒரிசா, ஒரு பஞ்சாப், ஒரு கேரளா இப்படி ரகத்துக்கு ஒன்னைக் கொடு!
1
என்னப்பா நீ வெறும் தமிழ்நாடுதானு? மற்றது வாங்கறதில்லையா??
மற்றது லாட்டரி சீட்டுங்க! தமிழ்நாடுதான் பரிசுச் சீட்டு! நிச்சயம் பரிசு தரும்.
2
லட்சுமி! இந்தா பரிசுச் சீட்டு! பத்திரமாப் பூட்டி வை
3


ரவிக்கைத் துணி வாங்கித் தான்னு நாலு மாதமாக் கேக்கிறேன். ஒன்னை யும் காணோம் ஒளக்கும்....
பரிசு அடிக்கட்டும் புள்ளே! பட்டாடையா தருகிறேன்.
4
லட்சுமி! பரிசுச் சீட்டு முடிவுகள் பேப்பரிலே வந்திருக்கு. நம்ம சீட்டை எடு.
கொண்டா மச்சான்! பக்கத்து வீட்டு அக்கா பதறமெ பார்க்கட்டும்.
ஆமா! உனக்கு 'வீக் பாடி' மயக்கம் போட்டுடுவே! நானே பார்க்கிறேன்
5
லட்சுமி! உனக்குப் பரிசு விழுந்திருக்கு! பத்தாயிரம் ரூபாய்!
6
கோ...

அண்ணன் வந்தார்

அண்ணு அவர்களின் உருவத்தையும் கல்லறையையும் மிக அழகாக அச்சிட்டிருக்கும் உங்களுக்கு நன்றி. அவர் தம் செவ்வாழை கதையையும் பொன் மொழிகளையும் தனித்தனியே பல பக்கங்களில் இடம் பெறச் செய்த உங்களுக்குப் பாராட்டு. நானும் என் குடும்பத்தினரும் இவ்விதழைப் படித்துக் கண்ணீர் சிந்திஞேம். தமிழ்த்தெய்வமான அண்ணனே சில மணி நேரம் எங்களுடன் அளவளாவியதைப் போன்ற பூரிப்பைப் பெற்ருேம்.

—இரா. தாமோதரன்,
சென்னை-12.

அங்கேயும் பாரதக் கதை!

ரோமாபுரி மன்னர்கள் எந்த அளவுக்குக் கொடியவர்களாகக் காட்சி தந்திருக்கிருர்கள் என்பதை முதல்வர் கலைஞரின் 'இனியவை இருபது' தெளிவாக்கியுள்ளது. பாரதக் கதைகள் நமது பாரதநாட்டில் மட்டுமல்ல—வெளிநாட்டிலும் உண்டு என்பதை முதல்வர் சுட்டிக் காட்டியிருப்பது சுவையாக உள்ளது.

—சண். நவநீதன்,
வத்தலக்குண்டு.

இனிப்புக் கலவை.

அறிஞர் அண்ணுவின் (சிறு கதை) செவ்வாழைப் பழமெடுத்து, முதல்வர் கலைஞரின் பயணக்கட்டுரைத் தேன் கலந்து, கவிஞர் பலரின் கற்கண்டுக் கவிதைகளையும் சேர்த்து, வள்ளுவர் வழி நின்று, குடும்ப நலக் குறளைச் சர்க்கரையெனக் கலந்து, பெரியார் போற்றிய தமிழக அரசுச் சாதனையைப் பன்னீரெனத் தெளித்து 'அபிஷேகமாய்' தந்திருந்தீர்கள்—படித்துச் சுவைத்தேன் ; மனம் மகிழ்ந்தேன்.

—எஸ். கோதண்டபாணி,
சத்தியமங்கலம்.

சிட்டுக் குருவிகளின் பாராட்டு !

'சிட்டுக் குருவிகள் சிரிக்கின்றன'—சுவையான சிறுகதை. ஆற்றெழுக்கு நடை—சிந்தையைக் கிளறச் செய்து, பகுத்தறிவுத் தத்துவத்தைப் போதிக்கும் இனிமை மிகு சொல்லோவியம்! எழுதிய மறைமலையாருக்கு எங்கள் பாராட்டு.

—செல்வராஜ், மீஞ,
மாஞமதுரை.

'பிலிம்' காஞ்சி போற்றுதும்!

'தமிழரசு' செப்டம்பர் 16-ஆம் தேதி இதழில் வெளிவந்த "புலமைக்காஞ்சி போற்றுதும்" கட்டுரை என்னைப் பெரிதும் கவர்ந்தது. காஞ்சியின் வரலாற்றுச் சிறப்பினை வடித்துத் தந்ததோடு தமிழகத் தலைமகனும் அண்ணுவின் வாழ்க்கையிலுள்ள சிறப்பு நிகழ்ச்சிகளைப்பற்றிய நிழற்படங்களை திரைப்படங்கள் (பிலிம்) போல் அமைத்து வெளியிட்டிருந்தது, 'தமிழர'சின் எழிலை மேலும் பன் மடங்கு உயர்த்திக் காட்டியது.

—சா. ராஜேந்திரன்,
சேலம்-3.

சுருக்கமான விளக்கம்

ஒன்பது பக்கத்தில் விளக்க வேண்டிய விவரங்களை ஒன்பதே வட்டங்கள் போட்டுத் தெளிவாக்கி விட்டீர்கள். " சட்டத்தின் துணைகொண்டு பட்டா பெற்ருேர் " விவரத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

இப்படி எதையும் தெளிவாய் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்வதில் 'தமிழரசு'க்கு நிகர் வேறெதுவுமே கிடையாது.

—எஸ். ஆறுமுகம்,
கே. கந்தையா, மதுரை-1.

மனுத் தேதி தேவை!

ஓவியக் கல்லூரி பற்றிய செய்தியை விரிவாக வெளியிட்ட தாங்கள் அந்தக் கல்லூரியில் சேர்வதற்கு எப்போது மனுக் கொடுக்க வேண்டும்" என்பதையும் சொல்லியிருக்கக் கூடாதா?

—ரமாதேவி, அம்பத்தூர்.

எண்ணெய்க்குப் பாராட்டு

தீபாவளிதினத்தில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்குரிய காரணம் உவமைக் கவிஞர் சுரதாவின் 'ஆற்ருேரம்' என்ற கவிதையைப் படித்த பின்னர்தான் தெளிவாகியது. தீபாவளி தினம்—எள்ளுக்கும் அதன் வழியாகக் கிடைக்கும் எண்ணெய்க்கும் விழா எடுத்த நாள் என்பதை வரலாற்றுச் சான்று கொண்டு நிறுவியிருக்கும் சுரதாவுக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

—சுந்தர், இளங்கோவன்,
கோவை-3.

அனைவரும் உறவினர்

'தமிழரசு' இதழ் ஓர் பொது இதழ் என்பதை செப்டம்பர் 16 இதழ் நிரூபித்து விட்டது. அண்ணு அவர்களை அட்டைப்படத்தில் தாங்கி வெளி வந்திருக்கும் அந்த இதழின் உள்ளே பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் உருவப்படம் இடம் பெற்றதும், சுவாமி விவேகானந்தருக்கு ஆலயம் அமைத்த வரலாறும் தெளிவாக்கப்பட்டு இருப்பது இதற்குச் சான்று !

—கே. நாராயணசாமி,
கும்பகோணம்.

படித்தோம்

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை.

உங்களை வாழவைக்கும்

நீங்களே!



வாய்ப்பு உங்கள் பக்கம் அமைந்துவிட்டால் வாழ்க்கையை வளப்படுத்த அதிகச் செலவில்லை. ஒரே ரூபாயில் நீங்களும் லட்சாதிபதியாக முடியும்! நினைவில் வையுங்கள் : தமிழ் நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம்தான் எண்ணிக்கையில் அதிகப் பரிசுகளை வழங்குகிறது.

அதிக உணவு, உடை, நல்ல வீடுகள், இலவசக் கல்வி, தேவையான மருத்துவ வசதிகள் எல்லாம் சரிவரக் கிடைப்பதற்காக தேசியத் திட்டங்களில் உங்கள் முதலீடு செலவழிக்கப்படுகிறது.

நாடு வளமாக உங்கள் பணம் பயன்படட்டும். ஒவ்வொரு வரிசையிலும் ஒரு லட்சம் அடையலாம்.

25-வது குலுக்கலுக்கான
பரிசுகளின் மொத்தத் தொகை : ரூ. **17,50,000**

ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு ஒரு லட்சம்

குலுக்கல் தேதி: **25-10-1970**

தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இது வரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள் : 185 பேர்

பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது.
ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9
★ 5 வரிசை வெளியீட்டுக்குட்பட்டது.

உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2



மலிவு விலை
நகர்ப்புற வீடு

உறுதியானது, நிலையானது-ஆனாலும் மலிவானது

சங்கர் சிமெண்ட்

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

IS 269 ISI

இந்தியா சிமேண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2
23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1444TM

தமிழரசு

மலர் 1 1970 அக்டோபர் 16 இதழ் 8

20 OCT 1970

இந்த இதழில்

கொண்டாட வேண்டிய விழா
வெளிநாடு செல்லும் மின்கோபுரம்
வழிகாட்டும் தமிழ் நாடு
ஞானோதயம்
நெசவாளர் நண்பன்
கல்கத்தா செல்லும் கட்லா
சூழ்நிலையின் கைதிகள்
கண்ணான கண்ணல்லவோ
மதுரையில் சுற்றுலா மாநாடு
மற்றும் வழக்கமான சிறப்புப் பகுதிகளுடன்

முநல்வர் எழுதும் பயணக்கட்டுரை

இனியவை இருபது

முகப்பில்: சென்னையில் நடைபெற்ற அண்ணல் காந்தியடிகள் 101-வது பிறந்தநாள் விழா அணிவகுப்பில் பங்கேற்ற கிராம வளர்ச்சித் துறையின் அலங்கார ஊர்தி.

தென்னாப்பிரிக்க நாட்டில் காந்தியடிகளுடன் அறப்போரில் ஈடுபட்ட தமிழர்களான தில்லையாடி வள்ளியம்மை, நாராயணசாமி, நாகப்பன் ஆகியோரின் தியாகத்தை எடுத்துரைத்தது இவ்வூர்தி.

தமிழரசு

Registered No. M. 8657

தமிழரசு

திங்கள் இருமுறை அக்.16,1970·35காசு

20 OCT 1970



6. திவோலித் தோட்டத்தில்

குடியாட்சிச் சதுக்கம் எனப்படும் அந்த இடம் மாலை நேரத்தில் களை கட்டிவிடுகிறது. குடும்பம் குடும்பமாகக் குழந்தை குட்டிகளோடு நூற்றுக்கணக்கில் மக்கள் அங்கே வருகிறார்கள். சாலையோரத்தில் நடைபாதைகளில் மேஜை நாற்காலிகள் போடப்பட்டு அவர்கள் சிற்றுண்டி அருந்துகிற காட்சி; அந்த நேரத்தில் அவர்தம் மழலைச் செல்வங்கள் அந்தச் சதுக்கத்தில் ஓடி விளையாடும் காட்சி; சதுக்கத்தின் நடுவிலே யிருக்கும் வேலைப்பாடுகள் நிறைந்த அற்புதச் சிற்பத்திலிருந்து நீரூற்றுப் பெருக்கெடுக்கும் காட்சி; சதுக்கத்தின் ஓர வட்டாரங்களில் அழகு மிகுந்த சிறுசிறு கடைகள் அமைந்துள்ள காட்சி; அனைத்தும் எங்கள் உள்ளம் கொள்ளை கொண்டன.

தளதளவென்று தக்காளிப் பழங்கள் போல் சிவந்து, குறு குறு நடை பயின்ற குழந்தைச் செல்வங்களோடு நான் கொஞ்சி விளையாடினேன். அவைகளும் ஒரு வேற்று மனிதனைப் பார்ப்பதில் ஏற்படும் அச்சம் ஏதுமின்றி என்னிடம் சிரித்து மகிழ்ந்தன.

அப்போது நடைபாதையின் ஓரத்தில் ஒரு இளைஞன் அந்தச் சதுக்கத்தில் உள்ள கட்டடங்களை ஒருமுறை உற்றுப் பார்த்தவாறும், தொடர்ந்து தன் கையிலே வைத்துள்ள ஒரு பாத்திரம் போன்ற உலோகத்தின் உட்புறத்தில் ஏதோ எழுதியவாறும் இருந்ததை நான் கண்டேன். இடையிடையே அவ்விடத்தில் ஓரிரு இளைஞர்கள், பெண்கள்வந்து நிற்பதும், அவன் ஈடுபட்டிருக்கிற வேலையைக் கவனிப்பதும், அவனோடு சற்று உரையாடுவதும், அதன் பிறகு அவனை விட்டு அகன்று கொண்டிருப்பதும் என் உள்ளத்தில் கேள்விகளை எழுப்பின. அருகே போய்ப் பார்த்தால் என்ன என்ற ஆவல் தூண்ட நானும் அவனிடம் சென்றேன். அந்த இளைஞன் ஒரு ஓவியக்காரன் என்பது நெருங்கிச் சென்றதும் எனக்குப் புரிந்துவிட்டது. மிகச்சிறிய கண்ணாடித் துண்டுகளிலும், உள்ளங்கை அகலமுள்ள அட்டைகளிலும், கை நகத்தின் அளவுள்ள சிறு உலோகப் பொருள்களிலும் அவன் ஓவியங்களை வரைந்துகொண்டிருந்தான்.

அவனுக்கு எதிரேயிருந்த நீரூற்று, அழகான கட்டடங்கள் இவைகளெல்லாம் அவன் தீட்டும் ஓவியங்களில் இடம் பெற்றன. வானளாவிய அந்த மாடமாளிகைகளில் எப்படித்தான் அவ்வளவு விரைவாகவும், எழிலாகவும் இயற்கை அமைப்பு சிறிதும் கெடாமலும், வண்ணம் குலையாமலும் கண்ணைப் பறிக்கும் விதத்தில் அவனால் ஓவியமாகத் தீட்ட முடிந்ததோ எனக்கும் புரியவில்லை. நான் ஆவலோடு

தெருவோரத்து ஓவியன்

அந்த ஓவியங்களைப் பார்ப்பதை மகிழ்ச்சியோடு கவனித்த அந்த இத்தாலிய இளைஞன் என்னுடன் வந்திருந்த இத்தாலிய நண்பர்களிடம் இவர் யாரென்று விசாரித்தான். அவர்கள் என்னை அறிமுகப்படுத்தியதும் பூரிப்போடு வரவேற்றான். அவன் எழுதிய ஓவியம் ஒன்றினை நான் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டேன். அப்படி வீதி தோறும் செல்வதும், ஆங்காங்குள்ள கவின்மிகு காட்சிகளைத் தன் கை வண்ணத்தால் ஓவியமாக்குவதும், அவைகளை உடனடியாக விற்றுப் பணம் சேர்ப்பதும் அவனது அன்றாடத் தொழில் என்பதை எனக்கு நண்பர்கள் விளக்கிய போது, எப்படியாவது உழைத்து, உழைப்பின் பயனை அனுபவித்திட வேண்டும் என்ற ஆசை மேல்நாட்டு இளைஞர்களிடத்தில் பெரும்பாலும் இருக்கிறது என்பதற்கு அந்த ஓவியக்கார இளைஞன் ஒரு உதாரணமாகத் திகழ்ந்தான்.



"சிற்பங்கள் சிலவற்றை வாங்கினோம்"

நான் காசு கொடுத்து வாங்கிய ஓவியம்போக, மற்றொரு சித்திரத்தையும் அவன் எனக்கு அன்பளிப்பாகத் தந்தான். அருகிலிருந்த எனது செயலாளரிடம் முதல்வரின் புகைப்படம் ஒன்று எனக்குத் தருவீர்களா என்று கேட்டான். அவரும் தன்னிடமிருந்த ஒரு புத்தகத்தின் பின்புறம் அச்சடிக்கப்பட்டிருந்த என் புகைப்படத்தைக் கொடுத்தார். அதற்குப் பிறகு நாங்கள் சாலையோரத்தின் சிற்றுண்டி விடுதிக்குச் சென்று விட்டோம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த இளைஞன் இத்தாலி மொழியும், ஆங்கிலமும் பேசக்கூடிய தனக்குத்தெரிந்த ஒருவரைக் கூட்டிக்கொண்டு நாங்கள் இருந்த இடத்திற்கு ஓடோடி வந்தான். அவனது இத்தாலியப் பேச்சை அவன் நண்பர் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க, நான் பதில் கூற, சிறிது நேரம் சுவையான கட்டம்.



திவோலித் தோட்டத்து நீரூற்று

அன்புள்ளத்தோடு அந்த ஓவியன் முதலில் என் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட என் புகைப்படத்தில் என் கையெழுத்தைப் போட்டுத் தருமாறு கேட்டான்.

கலையுள்ளங்கள் ஒன்றையொன்று புரிந்து கொள்ளும் போதும், மதித்திடும்போதும் ஏற்படுகின்ற உணர்ச்சிக்கு அளவுண்டா?

சதுக்கத்தில் சந்தித்த அந்த ஓவியன் 500 ஆண்டுகளுக்கு முன்னால் ரோமாபுரியில் வாழ்ந்த ஓர் அமர ஓவியனை, உலகப் புகழ் பெற்ற மைக்கேல்ஏஞ்சலோவை, என் நினைவுக்குக் கொண்டு வரத் தவறவில்லை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பதைப் போல் பிளாரன்சில் ஒரு எளிய குடியில் பிறந்து, சிற்பியாக மலர்ந்து, ஓவியனாக மாறி, உலகத்தில் தலைசிறந்த கட்டடக்கலைஞனாக உருவெடுத்த மைக்கேல் ஏஞ்சலோ ரோமாபுரியின் மறுமலர்ச்சி இயக்கத்தின் ஒப்பற்ற கதாநாயகர்களில் ஒருவன். உலகத்தைப் புரிந்து கொள்வதற்கு முன்னாலேயே கையில் உளியை எடுத்துவிட்ட ஏஞ்சலோவிற்கு இளமையிலே ஒரு தணியாத ஆசை ஏற்பட்டதாம்.

மனித உணர்ச்சிகளையும், அசைவுகளையும் சற்றும் மாறாமல் அப்படியே சிலைகளில் சித்தரிக்க வேண்டும். அதற்காக மனித உடலில் படர்ந்து உணர்ச்சிகளையும், அசைவுகளையும் வெளிப்படுத்துகின்ற தசைகளையும், நரம்புகளையும் அதன் அமைப்புகளையும் நேரடியாகக் கண்டறிய வேண்டும் என்ற ஒரு ஆவல் அவனுக்கு ஏற்பட்டது. விநோதமான ஆசைதான் அது. ஆனால் அதை அவனுக்குநிறைவேற்றி கொடுக்க ஒரு ஆலயப் பொறுப்பாளர் துணைக்கு வந்தார். அவரிடம் சாவியைப் பெற்றுக் கொண்டு ஆலயத்தின் சவக் கிடங்கிற்குள் நுழைந்து விட்டான் மைக்கேல் ஏஞ்சலோ!



நள்ளிரவு நேரம். நடுங்கும் கரங்களில் மின்னிக் கொண்டிருந்த மெழுகுவத்தியை மேசை மேல் வைத்துவிட்டு அங்கிருந்த சவப்பெட்டிகளில் ஒன்றைத் திறந்து, தான் கொண்டு வந்த கத்தியால் பிணத்தை அறுக்கஆரம்பித்தான். மார்பகத்தில் புதையுண்டு கிடந்த இதயம், அதனைச் சுற்றியிருந்த எலும்புக் கூடு, தசைநார்கள், நரம்புகள், நாளங்கள் இவற்றை மங்கிய ஒளியில் ஆராய்ந்தான் மைக்கேல்.

மெழுகுவத்தியின் ஒளி மங்கி மடிவதற்கு முன்னால், அறைக்குள் யாராவது புகுந்து அவனைக் கையும் களவுமாகப் பிடிப்பதற்கு முன்னால், தன்னுடைய அறுவைப் பாடத்தை முடித்துக் கொள்ள வேண்டும். சவத்தை அறுப்பதே சட்டவிரோதமாகக் கருதப்பட்ட காலத்தில், அதிலும் ஒரு ஆலயத்தில் புதையுண்டிருந்த சவப் பெட்டியில் கை வைப்பது என்பது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை அவன் உணர்ந்திருந்த காரணத்தால், படபடக்கும் இதயத்தோடு அப்படியொரு பயங்கரமான பணியில் ஈடுபட்டான். அந்தப் பணியில் அவன் வெற்றி பெற்ற போது அவனுக்கு 16 வயது நிரம்பவில்லை. கலைப் பணி என்பது எளிதல்லவே! முள்ளுக்கிடையே மலரைப் பறிப்பது போலவும், மூச்சை அடக்கி முத்தை எடுப்பது போலவும், அலையும் காற்றுக்கிடையே அகல் விளக்கை அணையாது காப்பது போலவும், சோதனைகளுக்கிடையே அல்லவா கலையை வளர்க்க வேண்டியிருக்கிறது!

மைக்கேல் ஏஞ்சலோ வாழ்ந்த காலம் அரசியல் சூறுவளியில் சிக்கி இத்தாலிய நாடு சுழன்று கொண்டிருந்தது. அடுத்தடுத்து மாறிய போப்பாண்டவர்களால் ஏற்பட்ட போராட்டங்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சியால் நடந்த கலவரங்கள் இவைகளுக்கிடையே மனச்சஞ்சலமின்றிக் கலைப்பணி புரிந்த கலைஞன் மைக்கேல் ஏஞ்சலோ!

சாகாத புகழ்பெற்ற அவனைப் பற்றியும், சதுக்கத்தில் சந்தித்த அந்த இளம் ஓவியனைப் பற்றியும் நினைத்தவாறே மெய்ம்மறந்து நின்றிருந்த எனக்கு அடுத்துச் செல்ல வேண்டிய நிகழ்ச்சி பற்றி நண்பர்கள் நினைவூட்டினார்கள்.

அன்றிரவு இந்திய தூதுவரக நண்பர்கள் அளித்த விருந்தொன்றில் இத்தாலிய நண்பர்கள் பலரும், தொழிலதிபர்களும், அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். இத்தாலி நாட்டின் பொருளாதாரம், இந்தியப் பொருளாதாரம் தமிழகத்தின் முன்னேற்றத் திட்டங்கள் இவைபற்றி அப்போது கலந்துரையாற்றினோம். அங்குள்ள இந்தியத் தூதுவரகத்தில் பணியாற்றும் நண்பர் வைத்தியநாதன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பது மட்டுமல்ல; தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதில் எனக்கொரு தனி மகிழ்ச்சி. அவர் ஒரு கள்ளங் கபடமற்ற மனிதர். மனத்தில் நினைத்ததை அப்படியே கொட்டி விடுவார். சொன்னதையே பல முறை சொல்லிக் கொண்டிருந்தாலும் செய்யவேண்டியதைச் செய்வதில் அதிக அக்கறை கொண்டவர். இத்தாலிய நாட்டுப் பழக்க வழக்கங்களில் அவர் ஊறித் திளைத்திருந்தாலும் தமிழ்நாட்டிலிருந்து சென்றிருந்த என்னை ஒரு தமிழ் நாட்டுக் குடும்பத்தில் வரவேற்பது போலவே வரவேற்று மகிழ்ந்தார்!

இந்தியாவில் மதுவிலக்குத் திட்டம் அமுல் நடத்தப்படும் விதம் பற்றி அந்த விருந்தில் பேச்சு எழுந்தது. பேச்சு எழுந்ததற்கான காரணத்தை நான் விளக்கத் தேவையில்லை விருந்திற்கு வந்திருந்த இத்தாலிய நாட்டுக்காரர்களுக்கு மதுவகைகள் வழங்கப்பட்டபோது அவர்கள் எங்கள் குழுவினர் ஒதுங்கி நிற்பதைப் பார்த்து வியந்து போனார்கள். அதன் காரணமாக அவர்களில் பலர் மதுவிற்குப்

பதிலாக எங்களைப் போலவே பழச் சாறுகளை அருந்தினார்கள். இந்தியா முழுமையும் மது விலக்குத் திட்டம் இப்போது அமுலில் இருக்கிறதா என்று அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொன்ன பதில் "காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலத்திலும், மதுவிலக்குச் சட்டத்தை முதலில் அமுல்படுத்திய ராஜாஜி பிறந்த தமிழகத்திலும் ஆக இந்த இரண்டு மாநிலங்களிலும் தான் இன்றைக்கு மதுவிலக்கு விடாப்பிடியான கொள்கையாக இருந்துவருகிறது. மற்ற மாநிலங்களில் முழுமையாக மதுவிலக்கு அகற்றப்பட்டுவிட்டது. வேறு சில மாநிலங்களில் தளர்த்தப் பட்டு வருகிறது. தமிழ்நாடு பெரிய வருமானத்தை இழந்து, அதே நேரம் மக்களுக்காகப் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஏற்ற நிதி வசதி இல்லாத நிலைமையில், மதுவிலக்குத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. ஆனால் இதை எவ்வளவு நாளைக்குத் தொடர முடியும் என்ற ஐயப்பாடும், ஆகவே இதனை அகற்றிவிட வேண்டும் என்ற கருத்துகளும், தமிழ்நாட்டிலுள்ள பல கட்சிக்காரர்களிடமிருந்து இன்றைக்கும் எழுந்த வண்ணம் இருக்கின்றன."

இந்த விளக்கத்தைக் கேட்டு அவர்கள் சமாதானம் அடைந்ததாக எனக்குத் தெரியவில்லை, ஏனென்றால் அவர்கள் மதுஅருந்துவது, ஓய்வு கால உல்லாசப் பயணத்தில் ஈடுபடுவது, உழைப்பது எல்லாவற்றிலும் ஒரு வரைமுறையை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவாதத்தின் மூலம் அதைத்தான் அவர்கள் எனக்கு விளக்கினார்கள்.

ரோமாபுரிக்கு அருகே உள்ள காண வேண்டிய இடங்களில் திவோலித் தோட்டம் என்பது ஒன்றாகும். அத்தோட்டத்திற்கு வருபவர்களில் பெரும்பாலோர் அமெரிக்க நாட்டுக்காரர்கள். அதனைப் பார்ப்பதற்கு ரோமிலிருந்து மாலை 4 மணிக்குப் புறப்பட்டோம். போகும்வழியில் தொழிற்சாலையொன்றினைப் பார்வையிடுவதற்கான நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இருமருங்கிலும் வண்ணக் குன்றுகளும், வாவிகளும், ஓடைகளும்நிறைந்த சாலை வழியே திவோலிக்குச் சென்றோம். திவோலிக்குச் சென்ற பிறகுதான் இத்தாலியில் உள்ள இந்திய தூதுவராலயத்தின் நண்பர் எங்களுக்கு அன்று இரவு 8 மணிக்கு ரோம் நகரத்தில் தூதுவரக விருந்து ஒன்று இருக்கின்றது என்பதை நினைவுபடுத்தினார். திவோலித் தோட்டத்தைப் பார்ப்பதற்கு 8 மணிக்கு மேல்தான் முடியும். அங்கிருந்து திரும்பி ரோமுக்கு வந்துவிட்டு மறுபடியும் திவோலிக்குச் செல்வது என்பது இயலாத காரியம். திவோலித் தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பதா அல்லது ரோம் நகரத்து விருந்திற்குச் செல்வதா? இந்நக் கேள்விக்கு விடையை வெகு விரைவிலேயே நான் கண்டுவிட்டேன். அது தான் திவோலித் தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பது என்பது. அதனைச் சுற்றிப் பார்த்த பிறகு தான், நாவிற்கு இனிய விருந்து வேறு ஒரு நாள் கிடைக்கும்; ஆனால் இந்தக் கண்ணுக்கு இனிய விருந்தை, கருத்திற்கு இனிய விருந்தை இன்னொரு முறை காண்பது என்றால் முடிகின்ற காரியமா என நாங்கள் எண்ணிக் கொண்டோம்.

அகன்றுபடர்ந்து அழகுக்கோலம் காட்டிக் கொண்டிருக்கும் அந்தத் தோட்டம் சரித்திர முத்திரைகளை எங்கு பார்த்தாலும் கொண்டிருந்தது. தோட்டத்திற்குள்ளே நுழைவதற்கு நீண்ட 'கியூ' வரிசை நின்று கொண்டிருந்தது. நல்லவேளை, எங்களுக்கு அந்த வரிசையில் நிற்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

தோட்டத்திற்குள்ளே நுழைவதற்கு முன்பு பழைய கால மண்டபங்கள் பலவற்றிற்குள்ளே புகுந்திடவும், நூற்றுக்கணக்கான பட அமைப்புகளைக் கண்டிடவும் வேண்டும். மண்டபங்கள் ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும்;

தோட்டத்தில் எரியும் விளக்குகளின் ஒளியும், அந்த ஒளியில் நெளியும் செடிகொடிகளின் எழிலும், அந்த எழிலுக்கு எழில் ஊட்டும் ஏற்றமிகு ஓவியங்களும், எங்கு பார்த்தாலும் சதங்கை ஒலிப்பது போல் எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும் சிறு சிறு நீரூற்றுகளும் எங்களைத் திகைக்க வைத்தன.

நடந்து கொண்டேயிருக்கிறோம். எவ்வளவு தூரம் நடந்து வந்தோம் என்றே தெரியவில்லை. ஒரு பெரிய நீர்வீழ்ச்சி! அதைச் சுற்றிலும் நூற்றுக் கணக்கான மக்கள், இளங்காதலர்கள், இனிய மழலைச் செல்வங்களோடு கூட்டம் கூட்டமாகக் குடும்பத்தினர்; அந்த நீர்வீழ்ச்சியை இரவு முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருக்கிறது. அதற்கு ஒளியூட்டும் வகையில் அமைக்கப்பட்டிருந்த விளக்குகளின் அழகுதான் என்னே!

உயர்ந்த பாறையொன்றிலிருந்து தண்ணீர் கொட்டிக் கொண்டிருக்கிறது. வட்டவடிவமான அந்தக் கல்லில் விழுந்து கொண்டிருக்கும் தண்ணீருக்கும் பாறைக்கும் இடையில் நடந்து செல்வதற்கான ஒரு பாதை. அந்தப் பாதையில் நடந்து செல்வதை வெளியிலிருந்து பார்ப்பதில் என்னதான் உள்ளக் கிளர்ச்சி! நாங்களும் நீர்வீழ்ச்சிக்குள்ளே அந்தப் பாதையில் நடந்து சென்று பார்த்தோம்.

சற்று நேரத்திற்கெல்லாம் திரைப்படம் பிடிப்பவர்கள் நடிக, நடிகைகளுடன் வெளிப்புறக் காட்சிக்காக அந்த நீர்வீழ்ச்சியின் பக்கம் வந்தார்கள். படப் பிடிப்பு நடைபெறுவதையும் சற்றுநேரம் பார்த்துவிட்டு திவோலித் தோட்டத்தின் வேறு பகுதிகளுக்கு நாங்கள் சென்றோம்.

ரோமாபுரிக்குச் செல்கின்ற தமிழ்நாட்டார் சிலர் திவோலித் தோட்டத்தைப் பார்க்காமல் இருந்திருக்கக்கூடும். அவர்கள் மறுமுறை செல்வார்களானால் திவோலியைப் பார்ப்பதைத் தங்கள் வாழ்நாளில் ஒரு பெரும் பேறாகக் கொண்டிட வேண்டும். தோட்டத்திலிருந்து திரும்பும் வழியில் தோட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள சிறுசிறு கடைகள் எங்கள் கண்களை ஈர்த்தன. கண் சென்ற பக்கம் கால்களும் சென்றன. மிகக் குறைந்த விலையுள்ள விளையாட்டுப் பொம்மைகள் சிலவற்றையும், இத்தாலிய நாட்டுச் சிற்பங்கள் சிலவற்றையும் அந்தக் கடையில் நாங்கள் வாங்கினோம். கடைகளைவிட்டு நகர்ந்து நாங்கள் வந்த போது அங்கிருந்த ஒரு விளம்பரம் எங்களது கவனத்தை ஈர்த்தது. தானாகவே இயங்கும் புகைப்படக் கருவி மூலம் போட்டோ எடுத்துக் கொள்ளும் சாதனம் அது. தெருவோரத்தில் கட்டப்பட்டிருந்தது ஒரு கூண்டு. அந்தக் கூண்டிற்குள்ளே சென்று, குறிப்பிட்ட நாணயத்தை அங்குள்ள ஒரு கருவியிலே போட்டால் உடனே நம்மை அந்தக் கருவி புகைப்படம் எடுக்கிறது. நாம் வெளியே வந்து நின்றால் எடைபார்க்கும் இயந்திரத்திலே இருந்து சீட்டு வந்து விழுவதைப் போல் ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் நம்முடைய புகைப்படம் வெளியே வந்து விழுகிறது. அந்தத் தானே இயங்கும் புகைப்படக் கூண்டிற்குள் நானும் சென்று புகைப்படம் எடுத்துக் கொண்டேன். என் மனைவியும் அவ்வாறே!

இப்படித் தெருவோரத்துக் கூண்டொன்றில் புகைப்படம் எடுத்துக்கொள்கிற சுதந்திரம் தமிழ்நாட்டில் தாராளமாகக் கிடைக்குமா எனக்கு! அந்தச் சுதந்திர உணர்ச்சியோடு ஏற்பட்ட பெரு மகிழ்ச்சியில் தானே இயங்கும் கருவி தந்த புகைப்படங்களை ரசித்தவாறு ரோம் நகர் புறப்பட்டோம்.

(தொடரும்)

உலகப் புகழ் பெற்ற ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோ.

கொண்டாட வேண்டிய விழா

அதிகாலை மூன்று மணி.

மூலை முடுக்குகளில் உள்ள டீக்கடைகளைக் கூட மூடியாயிற்று. சென்னை நகரம் முழுமைக்கும் ஆழ்ந்த உறக்கம்.

ஆனால் சிலர் மட்டும் அந்த நேரத்திலும் தூங்காமல் இருந்தார்கள். அதற்கு முந்திய ஓரிரு இரவுகளிலும் கூட அவர்கள் தூங்கவில்லை.

காரணம்—விடிந்தால் காந்தியடிகள் பிறந்த நாள் விழா. விடிவதற்குள் எஞ்சியுள்ள எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட வேண்டும்.

சிறுவர் அரங்கத்துக்குப் பக்கத்தில் ஏராளமான விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பகல் போல் வெளிச்சம்! ஓவியர்கள், தச்சர்கள், மேற்பார்வையாளர்கள் என்று பலரும் ஓடியாடி வேலை செய்து கொண் டிருந்தனர்.

பல அலங்கார வண்டிகளை உருவாக்கும் பணி நடைபெற்றுக் கொண் டிருந்தது.

அங்கு மட்டுமல்ல, சாரதா ஸ்டுடியோ, ஏ.வி.எம்., ஜெமினி, சத்யா, வீனஸ் கம்பைன்ஸ், இன்னும் வேறு பல ஓவியக்கூடங்கள் அனைத்திலும் கடைசி நேர வேலைகளில் ஒரு வேகம்.

காந்தியடிகளின் கொள்கைகளை விளக்கும் வகையில் 32 அலங்காரவண்டிகள் உருவாக்கப்பட்டு வந்தன. இதில் பத்து வண்டிகளுக்கு மேல் தனியார் துறையினைச் சேர்ந்தவை.

''முப்பத்திரண்டு அலங்கார வண்டிகளா? அடேயப்பா!'' என்று வியந்தார் ஒருவர்.

ஆம்! இது வியந்து பாராட்டத் தக்க ஒரு காரியம் தான். அதிலும் 'விழாவில் கலந்து கொண்டு அலங்கார வண்டிகளைத் தயாரித்திட வேண்டும்' என்று முதல்வர் கலைஞர் விடுத்த வேண்டுகோளை ஏற்று, போட்டி போட்டுக் கொண்டு வந்த தனியார் துறையினரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதே போல், பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றிய பல்வேறு அரசாங்கத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளின் உழைப்பையும் யாரும் மறக்க முடியாது.

ஒவ்வொரு அலங்கார வண்டியும் காந்தியடிகளை ஒவ்வொரு கோணத்தில் பிரதிபலிப்பதாய் இருந்தது. இந்த முப்பத்திரண்டு வண்டிகளையும் ஒரு முறை ஆற அமர நிதானமாகப் பார்த்துவிட்டால், காந்தியடிகளின் அரசியல், சமுதாய, பொருளாதாரக் கருத்துக்கள் என்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு விடலாம் என்று கூறினால் அது மிகையாகாது.

இந்த வண்டிகளுக்கு இடை இடையே பள்ளி - கல்லூரி மாணவ, மாணவிகள், தொழிலாளர்கள், சாரணப் படையினர், மகளிர், காவற் படையினர், சேரணித் தொண்டர்கள் என்று பலரும் கலந்து கொள்ளும் ஊர்வலம். ஏறக்குறைய இது மூன்று மைல் நீளத்துக்குவரும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஊர்வலத்தைவிட இது பெரியது-மிகப் பெரியது.

ஆம்! இதற்கு முன்பு எப்போதும் கொண்டாடப்படாத அளவுக்குக் காந்தியடிகள் விழா சீரோடும்-சிறப்போடும் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் தமிழகத்தில் கொண்டாடப் பட்டது.

காந்தியடிகளின் விழா மட்டுமல்ல - நாட்டு விடுதலை நாள் விழாவும் அப்படித்தான்.

காரணம், முதல்வர் கூறியது போல், 'விடுதலை நாள்—தேசியத் திருநாள்; காந்தியடிகள்—தேசியத் தந்தை' என்பது தான்.

இந்த இரு விழாக்களைக் கொண்டாடுவதிலும் தமிழக அரசு ஒரு புதிய மரபினை உருவாக்கியிருக்கிறது.

விடுதலை நாள் விழாவையும், காந்தியடிகள் பிறந்த நாள் விழாவையும் தமிழக அரசானது அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் தொண்டர்களுடனும் சேர்ந்து கொண்டாடியிருக்கிறது கடந்த ஆண்டும், இந்தஆண்டும். காந்தியடிகள் காண விரும்பியது இந்த ஒற்றுமையைத் தானே! அந்த ஒற்றுமை இலக்கணத்துக்கு 'இலக்கியம்' கண்டிருக்கிறது நமது அரசு.

* * *

அக்டோபர் இரண்டாம் நாள் காலை ஏழு மணியிலிருந்து சென்னை அரசாங்க மாளிகையில் உள்ள காந்தி இல்லத்தில் இடைவிடாத நூற்பு - வழிபாடு தொடங்கியது.

பிற்பகல் மூன்று மணி.

மவுண்ட் சாலை, ஜெமினி முனையில் திருவிழாக் கோலம்! காரணம், அங்கிருந்துதான் ஊர்வலம் தொடங்குகிறது—கடற்கரையில் உள்ள சீரணி அரங்கை நோக்கி!

சரியான எதிர்வெய்யில்; இருப்பினும் சாலையின் இருமருங்கிலும் மக்கள் வெள்ளம் திரளத் தொடங்கியாயிற்று.

தேனாம்பேட்டை மத்திய அலுவலகக் கட்டடப் பகுதியில் ஊர்வலம் தயாராக நிற்கிறது. அங்கேயும் ஆயிரமாயிரம் மக்கள்.

தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் நான்கு மணிக்கு இந்த ஊர்வலத்தினைத் தொடங்கி வைத்தார். அதற்கு முன்பு விழாவினைப் பற்றி ரத்தினச் சுருக்கமாக அவர் பேசுகையில்,

''அண்ணல் காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்திடும் வகையில் தமிழக அரசு இந்த விழாவை இவ்வளவு சிறப்போடு கொண்டாடுவது பாராட்டுக்குரியதாகும்'' என்று கூறினார்.

அதற்குப் பிறகு ஊர்வலம் தொடங்கியது.

பல கலைஞர்களின் உழைப்பாலும் கற்பனைத் திறனாலும் உருவான அலங்கார வண்டிகள் மக்களின் கண்களுக்கும், சிந்தனைக்கும் விருந்தாக அமைந்தன.

திரு ஏ. எல். எஸ். அவர்களின் நிறுவனம், திரு சுந்தர்லால் நகாதா அவர்களின் நிறுவனம், கல்வித்துறை, ஏ.வி.எம். நிறுவனம், தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியம், அரிசன நலத்துறை, ஜெமினி நிறுவனம், கிராம நல வளர்ச்சித் துறை, சிறுசேமிப்பு நிறுவனம். கூட்டுறவுத் துறை, தொழில்

துறை, சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத்துறை, வேளாண்மைத் துறை, வீனஸ் நிறுவனம், பின்னி நிறுவனம், சென்னை மாநகராட்சி, சீரணி, பொதுப் பணித்துறை, மீன் துறை, சிம்ஸன், அசோக் லேலண்டு நிறுவனம், தமிழ் நாடு மின் வாரியம், செய்தி-விளம்பரத் துறை, மகளிர் நலத்துறை, போக்குவரத்துத் துறை, நெடுஞ்சாலை-கிராமப் பணித் துறை, இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம், திரு. மகாலிங்கம் அவர்களின் நிறுவனம், சத்யா நிறுவனம், டி.வி.எஸ். நிறுவனம், காவல் துறை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆகியவை அலங்கார வண்டிகள் தயாரித்து அளித்திருந்தன.

இப்படி நான்கு மணிக்கு அங்கே தொடங்கிய ஊர்வலம், கடற்கரையில் உள்ள சீரணி அரங்கத்துக்கு வந்து சேரும் பொழுது இரவு ஏழு மணியாகி விட்டது.

கடற்கரையிலோ, 'ஜே..ஜே' என்று கூட்டம்.

மாலை ஐந்து மணியிலிருந்தே நகரின் நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் வரத் தொடங்கிவிட்டார்கள்.

ஒரு பெண்மணி, இடுப்பில் குழந்தையைத் தூக்கிக்கொண்டு, காலையிலேயே கிளம்பிவிட்டார் வியாசர்பாடியிலிருந்து. நடந்தே வந்திருக்கிறார். அண்ணனுக்கு எடுக்கப்படும் விழாவினைக் காண அவ்வளவு ஆர்வம்!

நிறையக் கூட்டம் வரும் என்பதால் மகளிர் அமர்வதற்கென்று பாதுகாப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மற்றும் எங்கு நின்றாலும் பார்க்கிற மாதிரி—சொற்பொழிவைக் கேட்கிற மாதிரி விளக்குகளும், ஒலி பெருக்கிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

சீரணி அரங்குக்கு ஊர்வலம் வந்து சேர்ந்ததும், கடற்கரையில் நிரம்பி வழிந்த கூட்டம் இரு மடங்காகப் பெருகிவிட்டது: ஐந்துலட்சம்! ஆனாலும்வருவோர் போவோர்க்கு ஒரு தொல்லையும் ஏற்படாதபடி, மகளிர்க்கும், குழந்தைகளுக்கும் இட நெருக்கடி நேர்ந்து விடா வண்ணம் காவல் துறையினர் மிகவும் உதவியாக இருந்தார்கள்.

இதற்கு முன்பே அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கினார்கள். தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடுவதற்கென்று திரு. டி. எம். சௌந்தரராசன்வந்து விட்டார். அவரோடு சேர்ந்து திருமதி பி. சுசீலாவும் பாடுவதாக இருந்தது. ஆனால் அவரைக் காணோம்.

ஊர்வலம் வருகிற வழியாகத்தான் அவர் வரவேண்டியிருந்தது. ஆனால் ஊர்வலத்தில் வந்த மக்கள் வெள்ளத்தைக் கடந்து காரில் வர முடியாமல் போய்விடவே, காரை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு, உரிய நேரத்துக்குள் நடந்தே வந்து சேர்ந்து விட்டார்.

"நீராரும் கடலுடுத்த நில மடந்தைக்கு.." என்று தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்தினை டி. எம். எஸ்ஸும், சுசீலாவும் பாட, முதல்வரின் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் பொதுக் கூட்டம் தொடங்கியது.

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களான திருவாளர்கள் சங்கரய்யா, ம.பொ.சி., ஏ. கே. சுப்பையா, கே. ஆர். நல்லசிவம், எம். எம். பீர்முகமது, கோ. பூவராகன், கே. பி.எஸ். மணி, ஏ. ஆர். மாரிமுத்து, பி. கே. மூக்கையாத் தேவர், கே. விநாயகம், சட்டமன்ற மேலவை உறுப்பினரான திரு எஸ். எஸ். ராமசாமி படையாச்சி ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்கள்.

"எந்தக் காரியத்தையும் தொடங்குவதற்கு முன்பு விநாயகரை வணங்கி விட்டுத் தொடங்குவது வழக்கம். அதனால் திரு. விநாயகம் அவர்களே இந்தக் கூட்டத்தைத் தொடங்கி வைக்கவேண்டும்" என்று முதல்வர் நகைச்சுவையோடு கூறினார்.

அதன்படிகாங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு விநாயகம் தான் முதலில் பேசினார். கடைசியில் பேசியவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

தலைவர்கள் அனைவரும் காந்தீயத்தின் சிறப்பினைப் பற்றிச் சுருக்கமாகவும் அழகாகவும் எடுத்துரைத்தார்கள்.

முடிவில், முதல்வர் அவர்கள் கருத்துரை தந்தார்கள்.



"இங்குள்ள பல கட்சியினர் காங்கிரசிலிருந்து பிரிந்து சென்றவர்கள் என்றாலும்—பிரிந்து சென்றவர்களின் உள்ளத்தை விட்டுக் காந்தியார் பிரியவில்லை. எனவே தான் எல்லாரும் இந்த விழாவில் பங்கெடுக்கிறார்கள்.

ஆக, காலம் மாறிவிட்டது என்பது எங்களைப் பொறுத்த வரை சரியல்ல.

ஆகவே இதை மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் காண வேண்டும்—என்று கூறினார்கள்.

அந்த அடிப்படையில் இந்த அரசு கதர்த் திட்டத்தை ஊக்குவித்து வருகிறது என்பதற்கு ஒரு புள்ளி விவரத்தை இங்கே தருகிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்—கதர் விற்பனை 1966-ஆம் ஆண்டில் 156 லட்சம் இருந்தது.

இதே போன்று—காந்தியார் நேசித்த கிராம மக்கள்—உழைப்போர்— கைத்தறியாளர் ஆகியோரின் நலனிலும் அக்கறை கொண்டு—அவர் வழி நின்று பணிகள் ஆற்றி வருகிறோம்.

பிற்படுத்தப்பட்ட—தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தமிழக அரசு எத்தனையோ நல்ல பல திட்டங்களை அளித்திருக்கிறது.



நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கதர்த் திட்டம் போன்ற காந்தீயத் திட்டங்களைக் கைவிடுவோமோ-என்ற அச்சமும் ஐயமும் பலரிடம் எழுந்ததுண்டு.

ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள்—இந்தத் திட்டம் பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. உழைத்து வாழும் உணர்வைப் போதிக்கிறது.

67-ஆம் ஆண்டு 202 லட்சம்; 68-ஆம் ஆண்டு 280 லட்சம்; 69-ஆம் ஆண்டு 221 லட்சம்; 70-ஆம் ஆண்டு 273 லட்சம்—அளவில் அது உயர்ந்துதான் வருகிறது.

காந்தியடிகளின் புனிதமான திட்டம் எந்த அளவுக்கு உற்சாகப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இதிலிருந்து காணலாம்.

அந்த மக்கள்பால் அன்பு கொண்ட நாட்டின் தந்தை காந்தியாரின் நினைவாக நல்லதொரு திட்டத்தை இந்த நல்ல நாளில் அறிவிக்கவிரும்புகிறேன்:

தமிழகத்தைச் சார்ந்த ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்லூரிப் புகுமுக வகுப்பில் (பி. யு. சி.) முதலாவதாகத் தேறும் ஒரு மாணவனுக்கும் ஒரு மாணவிக்கும் மாதம்

569

எச்.பி. 3 கம்பு சாகுபடி செய்யப்படும் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள வேளாண்மைக் கிடங்குகளிலெல்லாம் தேவையான அளவு எச்.பி. 3 கம்பு விதைகளை வாங்கி இருப்புவைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட வியாபாரிகளுடனும் தேசீய விதைக் கழகத்திடமும் போதிய எச்.பி. 3 கம்பு விதை இருப்பு உள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய விதை, உரம், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், குறுகிய காலக் கடன் ஆகிய அனைத்திற்கும் ஆவன செய்யப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தில் பங்கு கொண்டு பயன் பெறுவீர் என்று தென் பாண்டி நாட்டவரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து எச்.பி. 3 கம்புக்கு உரிய ஒருமித்த செய் நேர்த்தி முறைகளை (Package of practices) ஒரு சிறிது விளக்கிட விரும்புகின்றேன்.

எச்.பி. 3 கம்பு பயிரிடுவதற்கு ஏற்ற பருவம் அக்டோபர் முதல் ஜனவரி வரையாகும். இதன் வயது 85 நாட்கள். நிலத்தை நன்ருக உழுது, ஏக்கருக்கு 5 டன் கம்போஸ்ட் உரமிட்டு மண்ணுடன் நன்ருகக் கலக்குமாறு செய்ய வேண்டும். விதைக்கும் முன்பு அடி உரமாக ஏக்கருக்கு 16 கிலோ தழைச் சத்து உரமும், 8 கிலோ மணிச்சத்து உரமும் இடவேண்டும். ஏக்கருக்கு 1 முதல் 1¼ கிலோ விதையை விதைக்கவேண்டும். வரிசைக்கு வரிசை 45 செ.மீ. இடை வெளியும், பயிருக்குப் பயிர் 15 செ.மீ. இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். தந்துலு என்னும் கருவி கொண்டு 2 முறை பயிர் வரிசைகளுக் கிடையில் மண்ணைக்கிளறி விட வேண்டும். சைரம் (Zirum) என்னும் மருந்தை பூ பூக்கும் சமயத்தில் அதாவது விதைத்த 45-வது நாளிலும், 55-வது நாளிலும் ஆக 2 தடவை தெளித்துத் தேன்துளி (Ergot) நோயைக் கட்டுப்படுத்தலாம்.

தற்பொழுது கூறப்பட்ட ஒருமித்த செய் நேர்த்தி முறைகளை மேற் கொண்டு 1.5 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் எச்.பி. 3 கம்பு சாகுபடி செய்தால் குறைந்தது ஏக்கருக்கு 250 கிலோ அதிக உற்பத்தி வீதம், 1.5 லட்சம் ஏக்கரிலும் 37,500 மெட்ரிக் டன் கம்பு அதிகமாக உற்பத்தி யாகக்கூடும். குறைந்த அளவாக 1 மெட்ரிக் டன் விலை ரூ. 600 என்று கொண்டால், 37,500 மெட்ரிக் டன் கம்பின் விலை 2.25 கோடி ரூபாயாகும். இவ் வருமானம், பொருளாதார நிலையில் பின் தங்கிய பகுதி மக்களுக்குக் கிடைக்க விருப்பதால், அவர்களின் வாழ்வு வளம் பெறும்; நாடும் நலம் பெறும்.

எனவே, இறுதியாக இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் கரிசல் மண்ணில்மானாவாரியாக சாகுபடி செய்து வரும் உழவர் பெருமக்கள் அனைவரையும் எச்.பி. 3 கம்பு பயிரிடும் தீவிரத்திட்டத்தில்பங்குபெற்றுப் பயனடையுமாறு அன்புடன் வேண்டுகிறேன். உங்களுக்கு வேண்டியவைகளைச் செய்து தர, தேவையானவைகளைக் கொடுத்து உதவ,வேளாண்மைத் துறை காத்துக் கொண்டிருக்கிறது. "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்பது போல், வாய்ப்புள்ள போதே பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்வு வளம் பெறுமாளுல், நாடும் நலம் பெறும். எனவே, உங்களுக்காகவும், நாட்டிற்காகவும், எச்.பி. 3 கம்பு தீவிரத் திட்டத்தில் பங்கு கொள்ளுங்கள் என்று மீண்டும் அன்புடன் அழைக்கின்றேன்.

(இணை வேளாண்மை இயக்குநர் திரு. எஸ். எம். சுலைமான் அவர்கள் திருச்சி வானொலியில்ஆற்றிய உரை.)

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு.... ரூ.8·00
அரை ஆண்டு...ரூ.4·00
தனிப்பிரதி...35 காசுகள்

விவரங்களுக்கு:-

இயக்குநர்,
செய்தி, விளம்பரத்துறை,
தமிழ் நாடு அரசு - சென்னை,9

பொதுமறைபோல் பொதுவானவர்

காந்தியார் அவர்கள் ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமானவர் அல்லர். அவர் எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவர். திருக்குறள் எப்படி உலகத்தார் அனைவருக்கும் பொது நூலாகஇருக்கின்றதோ அதுபோல் காந்தியடிகள் எல்லாக் கட்சிக்கும் பொதுவானவர். எனவேதான் இந்த விழாவை இத்துணை சிறப்போடு கொண்டாடுகின்ருேம்.

சென்ற ஆண்டும் இந்த விழா சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டது. அதே போல் இந்த ஆண்டும் சென்ற ஆண்டை விஞ்சும் வகையில் காந்தியடிகளின் வாழ்க்கையை—அவர் கருத்தைச் — சித்திரிக்கும் வகையிலான சிறப்பான அலங்கார ரதங்களை நாம் ஊர்வலத்தில் பார்த்தோம்.

இந்த விழா, கட்சி வேறுபாடற்ற முறையில், இந்தியன்-தமிழன் என்கிற உணர்வோடு கொண்டாடப்படும் விழாவாகும்.

—தமிழக முதல்வர்
2—10—70



ஒன்றுக்கு நூறு ரூபாய் உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். அவர்கள் பட்டப் படிப்பு ஆரம்பச் செலவுகளுக்காக 500 ரூபாயும் அளிக்கப்படும்.

ஏற்கனவே, அவர்களுக்குக் கிடைத்துவரும் வேறு உபகாரச் சம்பளச் சலுகைகளை இது பாதிக்காது.

இந்த உபகாரச் சம்பளம் அதிகபட்சம் ஆறு ஆண்டுகள் வரை தரப்படும்.

இந்த உபகாரச் சம்பளம் காந்தியடிகள் நினைவு உபகாரச் சம்பளம் என்று அழைக்கப்படும்.

காந்தியடிகள் மிகுந்த அக்கறை காட்டிய, தாழ்த்தப்பட்ட மக்களின் நலனைக் கருதியும் — அவரது நினைவு தொடர்ந்து நம்மிடையே நிலவிடவும் இந்த காந்தியடிகள் நினைவு உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறது.

நமக்காக விடுதலையைத் தேடித் தந்து—நமது நல்வாழ்வுக்காக அரும்பாடுபட்டு—நமக்காகவே செத்துக் காட்டிய காந்தியார் அவர்களின் நினைவு —நமது நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கவேண்டும்! முடிந்த அளவு அவர் காட்டிய பாதையில் நடந்து — மக்களின் நல்வாழ்வுக்கு நாம் பணியாற்றிட வேண்டும்—என்ற சூளுரையை நாம் இந்த நல்ல விழாவில் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

முதல்வரின் உரை முடிந்ததும், 'மெல்லிசை மன்னர்' என்று பாராட்டப்படும் திரு எம். எஸ். விஸ்வநாதன்தமது குழுவினரைக் கொண்டு இன்னிசை விருந்து வழங்கினர். திரு டி. எம். சௌந்தரராசன், திரு சீர்காழி கோவிந்தராசன், திருமதி பி. சுசீலா, செல்வி எல். ஆர். ஈஸ்வரி ஆகியோர் தேன்மாரி பொழிந்தார்கள்.

இவ்வாறு காலை ஏழு மணியிலிருந்து இரவு பதினொரு மணி வரை நடந்த காந்தியடிகள் பிறந்த நாள் விழாவினைப் பார்த்தவர்களுக்கு நிச்சயம் ஒரு கேள்வி எழத்தான் செய்யும்.

'இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலாவது, இவ்வளவு சிறப்பாகக் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடியிருப்பார்களா? இனிமேலாவது கொண்டாடுவார்களா?' என்பது தான் அந்தக் கேள்வி!

அனேகமாக, 'இல்லை' என்பது தான் அதற்குப் பதிலாக இருக்கும்!





மானாவாரிப் பகுதிக்கு உயர்விளைச்சல் திட்டம்

"புன்செய் விளையின் பஞ்சம் தீரும்" என்பது பழமொழி. ஆனால் அப் பழமொழியில் எவ்வளவு உண்மையும், அனுபவமும் உள்ளடங்கியுள்ளன என்பது ஆராய்ந்து பார்ப்போர்க்கு நன்கு புலனாகும்.

இப்பழமொழியின் உண்மையை உணர்ந்தே இன்றையத் தமிழ்நாடுஅரசு, புன்செய்ப்பயிர்களின் உற்பத்தியில் உழவர் பெருமக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துவதற்கான புன்செய் நிலங்களுக்குரிய நிலவரியை இரண்டாண்டுகளுக்கு முன்பே நீக்கியது. தற்பொழுது புன்செய் நிலப்பயிர்களின் விளைச்சலைப் பெருக்குவதில் தமிழ்நாடு அரசு வெகு ஆர்வம் காட்டி வருகிறது.

ஏனெனில், தமிழ்நாட்டில் பயிரிடப்படும் மொத்த நிலப் பரப்பில் 60 சத அளவிற்கு மேற்பட்டுப் புன்செய்நிலங்களாக இருக்கிறது. அதாவது மாநிலத்தில் பயிர் செய்யப்படும் 160 லட்சம் ஏக்கர் பரப்பில், 100 லட்சம் ஏக்கர்கள் புன்செய் நிலங்களாக உள்ளன. பெரும்பாலான உழவர் பெருமக்கள் இந்தப் புன்செய் நிலங்களையே நம்பி இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் மொத்த உணவு தானிய உற்பத்தியில் 48 சத அளவினை மானாவாரியாகச் சாகுபடியாகும் புன்செய் நிலங்களே அளிக்கின்றன. எனவேதான், தமிழ்நாடு அரசு, புன்செய் நிலங்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

புன்செய் நிலப்பயிர் சாகுபடி தமிழ்நாட்டிற்குப் புதிதல்ல. மண்வளப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலமும், மண்ணிலுள்ள ஈரம் ஆவியாய்ப் போய்விடாமல் காக்கும் பொருட்டு மழை நீர் மண்ணில் நன்ருக இறங்க வகை செய்வதன் மூலமும், புன்செய் நிலச் சாகுபடியை மேம்படுத்தி வருகிறோம். ஆயினும் உயர் விளைச்சல் தினுசுகளைப் புன்செய் நிலத்தில் சாகுபடிக்குக் கொண்டு வருதலே பெரும் பயன் நல்குமாதலின், இந்த ஆண்டில் முதன் முறையாக மானாவாரிப் பகுதிக்குத் தனிப்பட்ட உயர் விளைச்சல் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது.

இத்திட்டம் இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் கரிசல் நிலப் பகுதியில் வாழும் உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டி, இம்மாவட்டங்களில் செயல் படுத்தப்படும். இத்தீவிரத் திட்டத்தின் கீழ் 1·5 லட்சம் ஏக்கர்களில் இந்த ஆண்டில் எச். பி. 3 என்னும் உயர் விளைச்சல் தினுசு கம்பு பயிரிடப்படும். சாத்தூர் மாவட்ட வேளாண்மைப் பகுதியில் அருப்புக்கோட்டை, சிவகாசி, சாத்தூர், திருவில்லிபுத்தூர், விருதுநகர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் கரிசல் மண் பகுதியில் 50,000 ஏக்கர் பரப்பிலும், சங்கரன் கோவில் மாவட்ட வேளாண்மைப் பகுதியில் கோவில்பட்டி, குருவிகுளம், ஒட்டப்பிடாரம், புதூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 90,000 ஏக்கர் பரப்பிலும், தூத்துக்குடி மாவட்ட வேளாண்மைப் பகுதியில் புதுக்கோட்டை, செய்துங்கநல்லூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 10,000 ஏக்கர் பரப்பிலும் இத் திட்டம் செயல்படுத்தப் படும்.

கரிசல் மண்ணில் மானாவரியாகப் பயிரிடுவதற்கு ஏற்ற தினுசாக எச். பி. 3 கம்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதற்குக் காரணம் எச். பி. 3 கம்பின் சிறப்புக் குணங்களேயாகும்.

எச்.பி./ 3 கம்பு மிகுதியான பயன் தரக் கூடியது; பெரும்பாலும் பூச்சிகளால் தாக்கப்படுவதில்லை; பயிர் நோய்களைத் தாங்கிக் கொள்ளும் சக்தியுடையது. உவர் களர் நிலங்களிலும் மற்ற ரகங்களைக் காட்டிலும் நன்கு பயிராகும் தன்மையுடையது. இத்தகைய சிறப்புத் தன்மைகளைப் பெற்றிருப்பதாலேயே மானாவாரிப் பகுதிக்கு ஏற்ற தனிப்பட்ட உயர் விளைச்சல் தினுசாக எச்.பி. 3 கம்பு தேர்தெடுக்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கர் எச். பி. 3 கம்பு மானாவாரியில் பயிரிட சுமார் ரூ. 185 ஆகும். ஒரு ஏக்கரிலிருந்து குறைந்த அளவு 800 கிலோ கிராம் தானியம் கிடைக்கும். இதிலிருந்து குறைந்த அளவு ரூ. 450 வருமானம் கிடைக்கும். எனவே நிகர லாபம் ஏக்கருக்கு ரூ. 265 கிடைப்பது உறுதி. தற்பொழுது நாட்டு தினுசு கம்புகளைப் பயிரிட்டு ஏக்கருக்கு ரூ. 50 முதல் ரூ. 75 வரை நிகர லாபம் பெற்று வரும் உழவர் பெருமக்களுக்கு ரூ. 265 வரை நிகர லாபம் கிடைக்குமாதலின் கரிசல் நிலத்தில் மானாவாரியாக நாட்டுத் தினுசு கம்பு பயிரிட்டு வயிற்றுக்கும் வாய்க்கும் பற்ருத நிலையில் வாழுகின்ற உழவர்பெருமக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு, எச்.பி. 3 கம்பு ஓர் வரப்பிரசாதம் என்ருல் மிகையல்ல.

ஆனல் கரிசல் மண் பகுதியில் ஓராண்டு கம்பும், மறு ஆண்டு பருத்தியும் என்று மாற்றிமாற்றி பயிரிட்டு வர வேண்டும். இதனல் நிலவளம் குன்ருது பாதுகாக்க இயலும். அதே நேரத்தில், வணிகப் பயிரான பருத்திக்கும் முக்கியத்துவம் அளித்ததாக இருப்பதுடன் உழவர் பெருமக்களின் பொருளாதார நிலையும் உயர்ந்திடக்கூடும். கம்பின் வேர் மேல் மட்டத்திலேயே படரக்கூடியதாகையாலும், பருத்தியின் வேர் ஆழமாகச் சென்று பரவக் கூடியதாக இருப்பதாலும் கம்புக்குப் பிறகு பருத்தி, பருத்திக்குப் பிறகு கம்பு என்ற பயிர் மாற்றுத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்



செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு. எதிர்காலம் பற்றிய அச்சமில்லை. புன்னகையுடன் வருங்காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இன்பச் சூழ்நிலை எப்படி வந்தது? பிறக்கும் போதே அதிர்ஷ்டத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர்? இல்லை.

வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்றோர், திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்தனர், திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய் குறைவாக இருப்பினும், குடும்பம் விரிவாகவில்லை. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர்; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில் பத்து லட்சம் பேர் குடும்ப நலத் திட்டத்தால் பயனடைந்துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்றா இன்னுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்றோரும் குழந்தைகளும் இனிமைமிக்க எதிர்காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்.

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம்; பாதுகாத்திடுங்கள்! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள்; நண்பர்களிடம் கேளுங்கள்!

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள். பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனிவு காட்டுவர்; கருத்துரை தருவர்; கருவிகளும் கிடைக்கும்; பயன் பெறுக!

திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

"தங்கவேலு... நல்ல ஹோட்டலாப்பாத்து வண்டியைக்கொஞ்சம் நிறுத்து. ஒரு காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம். ரொம்ப அசதியா இருக்கு...".

பெரிய ஹோட்டல் ஒன்றின் முன்னால் வண்டி வந்து நின்றது. லேசான தலைவலி. காலையிலேயிருந்து ஒரே அலைச்சல். வண்டியை விட்டு இறங்கினேன். கோவை மாநகருக்கே உரித்தான மாலை நேரக் குளிர்ந்த காற்று.. உடலுக்கும் உள்ளத்திற்கும் இதமாக இருந்தது.

தித்திக்கும் சிறுவாணித் தண்ணீர்; வெய்யிலே தெரியாத மனோரம்யமான தட்ப நிலை. கோவை மாநகர மக்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று எண்ணிக்கொண்டே வண்டியை விட்டு இறங்கினேன். ஹோட்டலை ஒட்டி ஒரு பெரிய கடை. கடையின் முகப்பிலே பெரிதாகத் தொங்கிக் கொண்டிருந்த பலகை என் கவனத்தைக் கவர்ந்தது. "பொருள்கள் சிந்தாமணி விலைக்கே கிடைக்கும்" என்ற எழுத்துக்கள்/ பொறிக்கப்பட்டிருந்தன. அந்தப் பலகையில்!

அருமையான காப்பி வந்தது. குடித்துக் கொண்டே "என்ன நரேந்திரன்! பக்கத்துக்கடையில் 'சிந்தாமணி விலைக்கே கிடைக்கும்.' என்று போர்டு போட்டிருக்கிறதே..! அப்படியென்றால் என்ன பொருள்?" என்றேன்.

நரேந்திரன் உள்ளூர்க்காரர்.. சிரித்துக் கொண்டே பதில் சொன்னார், "அதுங்களா ... ஒன்றுமில்லை.. கோயமுத்தூரிலே உள்ள கூட்டுறவுச் சிறப்பங்காடி 'சிந்தாமணி' யைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்களே..! ரொம்ப ஜோரா நடக்குது. நல்ல தரமான பொருள்களை நயமான விலையில்.. நம்பிக்கைக்குப் பாத்திரமான முறையில் 'சிந்தாமணி'யில் விற்கிறார்கள்.. மக்கள் கூட்டம் அங்கு அதிகமாகச் செல்லவே.. மற்ற கடைக்காரர்கள் பார்த்தார்கள். ஏதேது நம்ப 'பிசினஸ்' நடக்கணும்னா சிந்தாமணி விலைக்கே விற்றால்தான் முடியும் என்று "சிந்தாமணி விலைக்கே கிடைக்கும்" என்று போர்டு போட்டிருக்கிறார்கள். அதுதானுங்க.."

"அப்படியென்றால் அந்தச் சிந்தாமணிக்கு நாமும் போய்ப் பார்க்கணுமே..."

"போகவேண்டிய இடந்தான் நாளைக்குப் போகலாம்.."

கோவை மேட்டுப்பாளையம் ரோடு.. ஒளி உமிழ் விளக்குகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கின்றன. பெரிய நகரத்தில் மாலை நேரங்களில் உள்ள வழக்கமான கலகலப்பு . . . கம்பீரமான கட்டடம்.. "சிந்தாமணி" என்ற நியான் எழுத்துக்கள் விளக்கொளியில் கவர்ச்சியான தோற்றத்துடன் காட்சி அளிக்க, கட்டடத்தினுள் நுழைந்தோம். ஒரு கடை மாதிரியே தெரியவில்லை. குடும்பம் குடும்பமாக மக்கள் வருகிறார்கள். கார்களில் வருகிறார்கள், ஸ்கூட்டர்களில் வருகிறார்கள்; சைக்கிள்களில் வருகிறார்கள்; நடந்து வருகிறார்கள்; தேர்த் திருவிழாவுக்கு வருவது போல் வருகிறார்கள், "சிந்தாமணி"க் கூட்டுறவுச் சிறப்பங்காடிக்கு! 'சிந்தாமணி'க்குச் சென்று பொருள்கள் வாங்குவதைக் கோவை மக்கள் ஒரு வாடிக்கையாகவே கொண்டுள்ளனர். திரள் திரளாக வந்து பொருள்களை வாங்குகிறார்கள்.

மேலை நாடுகளில் 'டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ்' என்பார்

கள். எந்தப் பொருள் வேண்டு மாளுலும்ஒரே இடத்தில்கிடைக்கும். அங்கே..! அந்த 'மாடலில்' நம்நாட்டில் சிறப்பங்காடிகள் தோன்றியுள்ளன. தமிழகத்தில் நடைபெறும் கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளிலே கோவை 'சிந்தாமணி' தலை சிறந்து விளங்குகிறது. சிந்தாமணி'யில் ஒரு நாளைக்கு என்ன விற்பனையாகிறது தெரியுமா? கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் மொத்த விற்பனை 36 இலட்சம் ரூபாய்! வாரத்தில் செவ்வாய்க்கிழமை விடுமுறை போக மற்ற நாட்களில் கடந்த ஆகஸ்ட் மாத மொத்த விற்பனை 36 இலட்ச

ரூபாய்! நாள்தோறும் ஒன்றே கால் இலட்சம் ரூபாய்க்குமேல் விற்பனையாகிறது!

இந்தச் சிந்தாமணிச் சிறப்பங்காடிக்கு மட்டும் ஏன் இவ்வளவு சிறப்பு? எப்படி இவ்வளவு பெரிய அளவில் வியாபாரம் நடக்கிறது? ஏன், மக்கள் சிந்தாமணியை நாடி இவ்வளவு பெருவாரியாக வருகிருர்கள்? சிந்தாமணி சீருடனும் சிறப்புடனும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருவதற்கு என்ன காரணம்?

ஒரே வரியில் இந்த வெற்றியின் இரகசியத்தை எடுத்துச் சொல்லி விடலாம்.

''சிந்தாமணிச்சிறப்பங்காடியில் வாங்குபவர்களின் பணம் சிந்தாமல், சிதருமல் செலவாகிறது''

கோவை நகரிலும் சுற்றுப்புறங்களிலும் சிந்தாமணி என்பது பழகிப்போன ஒரு வழக்குச் சொல்லாக அமைந்துவிட்டது.

குடும்பம் குடும்பமாக 'சிந்தாமணி'யை நோக்கிச் செல்கிருர்கள்! 'சிந்தாமணி' செல்லும் பொழுது தங்களுடைய உறுப்பினர் அட்டையை மறக்காமல் எடுத்துச் செல்கிருர்கள்! மலிவான, நியாயமான விலை, சீரிய கொள்முதல் கொள்கை— பொருள்களை விஞ்ஞான முறைப்படித் தரமான முறைகளில் சேகரித்து வைத்தல்—ஊழியர்களின் அயராத உழைப்பு— கனிவான வரவேற்பு—எல்லாப் பொருள்களும் ஒரே இடத்தில் கிடைப்பது—இவையே சிந்தாமணியின் வெற்றிக்குக் காரணம என்கிருர் 'சிந்தாமணி'யில் மக்கள் தொடர்பு அதிகாரியாக உள்ள திரு இராம. காசிநாதன்.

'' இந்தச் சிந்தாமணிச் சிறப்பங்காடியில் மொத்தம் 16 பிரிவுகள் உள்ளன. (1) மளிகை, (2) அரிசி, (3) துணி வகைகள், (4) வாசனை அலங்காரப்பொருட்கள், (5) வீட்டு உபயோகத்திற்கான பொருள்கள், (6) காய்கறிகள், பழங்கள், (7) மருந்து, (8) முட்டை, (9) புத்தகம், (10) மின் சாதனங்கள், (11) மேஜை, நாற்காலி வகைகள் (12) பொம்மைகள், தோல் பொருட்கள் (13)விவசாய சேவா நிலையம், (14) இண்டேன் வாயு, (15) சிற்றுண்டிச் சாலை, (16) கார்களுக்கு வேண்டிய துணைக்கருவிகள்என்று மொத்தம் 16 பிரிவுகள் உள்ளன. கோவை காந்திபுரத்தில் சிந்தாமணியின் கிளை ஒன்று உள்ளது. அங்கு 10 பிரிவுகள் உள்ளன. மொத்த விற்பனையில் மூன்றில் ஒரு பங்கு மளிகைச் சாமான்களும், ஐந்தில் ஒரு பங்கு துணி வகைகளும் ஆகும். மளிகைச் சாமான்களும் துணி வகை மட்டும் மொத்தவிற்பனையில் பாதிஆகும். மற்றும் கல்வி நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் நடத்தும் உணவு விடுதிகளுக்கு மாதக் கடன் தவணை முறையில் 'சிந்தாமணி' சரக்குகள் வழங்குகின்றது.

''சிந்தாமணியின் சிறப்புக்குச் சிறந்த காரணம் அதன் சீரிய கொள்முதல் கொள்கை. இங்குக் கொள்முதல், பின் முதலை உத்தேசித்துக் காலத்தே செய்யப்படுகிறது. எங்கு, எப்படி, எப்பொழுது, எவ்வளவு என்று தீர யோசித்துத் திட்டமிட்டுத் திறம்படச் சரக்குகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. ஆங்கிலத்தில் ''Efficient purchase is half sold'' என்று ஒரு பழமொழி உண்டு. கலப்படமற்ற தரமான பொருள்களே வாங்கப்படுகின்றன. எந்த இடத்தில் தரமான பொருள் நியாயமான விலையில் கிடைத்தாலும், கொள்முதல் செய்யப்படுகின்றது. முடிந்த வரையில் எல்லாப் பொருள்களும் உற்பத்திக் கேந்திரங்களிலோ அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்தோ நேரிடையாகவே வாங்கப்படுகின்றன. இடைத்தரகர்கள் ஒதுக்கப்படுகிருர்கள். பொருள்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து நுகர்வோர் (consumers) கைக்கு நேரிடையாக மாறுகிறது.

'' மலிவு விலை என்பதைப் பற்றி ஒரு விளக்கம் கூறக் கடமைப் பட்டுள்ளேன். நியாய விலை மலிவான விலையாக இருக்கலாம். தனியார் துறையினருடன் போட்டியிட்டு வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமென்பதற்காகப் பொருள்களின் விலைகளைக் குறைப்பது சிந்தாமணியின் நோக்கமன்று.

"இன்னொரு சிறப்பு அம்சத்தையும் குறிப்பிட வேண்டும். கொள்முதலுக்குப் பின் சரக்குகள் விஞ்ஞான முறைப்படிக் கட்டப்பட்டுள்ள நவீனக் கிடங்குகளில் சேகரித்துப் பாதுக்காக்கப்படுகின்றன. கொள்முதல் செய்யும் விவசாய விளை பொருட்கள், நயப்படுத்தி—தூசி புடைத்து, கல் மண் பொறுக்கி—பிற பொருள் நீக்கி—சீராக எடை போட்டுக் கண்ணுடித் தாள் பைகளில் எடைவாரியாக அடைத்து அங்காடியில் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. இவ்வேலைகள் நம்பிக்கையான, நாணயமான தொழிலாளர்களைக் கொண்டு தகுந்த மேற்பார்வையின்கீழ் நடைபெறுகின்றன. ஒரு தடவை பைகளில் அடைக்கப் பெற்ற பொருட்கள் (பைகளைக் கிழித்தாலொழிய) வெளியில் எடுக்கவோ அல்லது அவற்றுடன் பிற பொருட்களைச் சேர்த்திடவோ இயலாது!

"மிகக் குறைந்த இலாபத்தில் சரக்குகள் விற்கப்படுகின்றன. இரண்டு சதவிகித லாபம் மட்டும் வைத்து விற்கப்படுகின்றன.

'' ஊழியர்கள் ஆர்வத்துடன் உழைக்கிருர்கள். வியாபாரத்தில் விற்பனைக் கலை தான் அடித்தளம். கனிவான சொல், இன்முகம், சலியா உழைப்பு, பதட்டமில்லாத தன்மை விற்பனையை உயர்த்திவிடுகின்றன. சிந்தாமணியின் விற்பனை சேவை உணர்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

''கோவை நகரைச் சுற்றியுள்ள ஊர்ப்புற மக்கள் சிந்தாமணிக்கு வந்து பொருள்கள் வாங்கிப்போக இலவசப் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிந்தாமணியின் சிங்காரப் பேருந்து கோவையைச் சுற்றியுள்ள ஒவ்வொரு புறநகர்ப் பகுதிக்கும் சென்று வாடிக்கையாளர்களை இலவசமாக ஏற்றி வந்து திரும்பவும் இருப்பிடம் சேர்க்கிறது. ஒவ்வொருநாள் ஒவ்வொரு திசையில் செல்கிறது. மொத்தத்தில்

வாரத்தில் கோவை நகர ஊர்ப்புறப்பகுதிகள் அத்தனைக்கும் இப்பேருந்து செல்கிறது. இலவசமாக இப்பேருந்தில் வீடு போய்ச் சேர. ஒவ்வொருவரும் குறைந்த பட்சமாக 5 ரூபாய்க்கு சிந்தாமணியில் பொருள்கள் வாங்கியிருக்க வேண்டும். அவ்வளவுதான்!

"பொருள்கள் வாங்கும் உறுப்பினர்களுக்கு இரண்டு சத விகிதம் கழிவுத் தொகை அளிக் கப்படுகிறது.

"1969-70-ல் மட்டும் இப்ப டிப் பொருள்கள் வாங்கியதில் கழிவுத் தொகை என்ற வகையில் ரூ. 3,67,869 கொடுக்கப்பட்டுள்ளது!

"சிந்தாமணி தொடங்கி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. 1969-70-ல் மட்டும் நிகர லாபம் 4·49 இலட்சம் ரூபாய்! இன்று வியாபாரம் பெருமளவில் நடைபெறுகிறது. 2—9—1970 அன்று மட்டும் சிந்தாமணி (கிளை உட்பட) மொத்த வியாபாரம் எவ்வளவு தெரியுமா? இரண்டு இலட்சத்து பதின்மூன்றுயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தைந்து ரூபாய்! உறுப்பினர்கள் அதிக மாகச் சேர்ந்துகொண்டேயிருக் கின்றனர். 30—6—1970 அன் றுள்ள நிலையில் 17,521 உறுப்பி னர்கள் சேர்ந்துள்ளார்கள். உறுப் பினர்கள் பங்கு மூலதனம் ரூ.1,80,380. 'பி' வகுப்பு உறுப் பினரின் பங்கு ஒன்றின் மதிப்பு ரூபாய் பத்து.

"சிந்தாமணியின் மற்றொரு சிறப்பான பணி, விவசாயத்திற்கு வேண்டியவைகளை விற்பதுஆகும். சுற்றுப்புறங்களில் உள்ள விவசா யிகள் விவசாயக் கருவிகள், பொறுக்கு விதைகள், உரங்கள், மருந்துகள் முதலியவைகளை நம்பிக்கையாகவும், மலிவாகவும், வாங்கிச் செல்கின்றனர்.



"திருமணம் முதலான சடங்கு களுக்குப் பொருள்கள் வாங்கு வோருக்குக் கூடியவரையில் சாமான்கள் இலவசமாக ஏற்றிச் சென்று அவரவர் இல்லங்களில் இறக்கப்படுகின்றன. 'சிந்தா மணி' ஈட்டும் இலாபத்தில் ஒரு பகுதி உறுப்பினராய் சேர்ந்துள்ள வாடிக்கையாளர்களுக்குப் பங்கு ஈவுத் தொகையாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. மற்றும் ஒரு பகுதி, கல்வி, பொதுச் சுகா தாரம், மருத்துவ வசதி போன்ற சமுதாய நலக் காரியங் களுக்குச் செலவிடப்படுகிறது. "சிந்தாமணி"யின் இலாபம் மக் கள் நலனுக்கே செலவிடப்படு கிறது." என்கிறார் திரு. காசிநாதன்

சுருக்கமாகச் சொன்னால், 'சிந்தாமணி' வியாபாரத்தில் ஒரு நேர்மையான புதுப் பாதை யையே வகுத்துக் கொடுத்துள் ளது என்றும், கூட்டுறவுத் துறைக்குச் சிற்சில நேரங்களில் ஏற்படும் கெட்ட பெயரை அடியோடு போக்கிவிட்டது என்றும் துணிந்து கூற முடிகிறது.

உன்னதமான பணி!

"....சாதாரண மனிதனை— கீழ்த்தட்டு மனிதனை—உயர்த் தும் பணியில் நாம் எங்கிருந் தாலும் ஈடுபட வேண்டும். அந்த மனிதன்தான் இந்த நாட்டின், பிற நாடுகளின், முதுகெலும்பாய் இருப்பவன். இந்த மனிதன் தனக்கு இழைக்கப்படும் அநீதியை உணர்ந்து கொள்ளத் துவங்கி விட்டான். அதன் விளைவாகக் கிளர்ச்சிகளும், மோதல்களும் ஏற்படுகின்றன.

உறுதி எடுத்துக்கொள் ளுங்கள்—நாம் பின் தங்கப் போவதில்லை. நமது சாமான்ய மனிதனை இடர்ப்பாடான நிலை யில் விட்டுச் செல்லப் போவ தில்லை.

கண்ணியமிக்க பரம்பரையின் வழித் தோன்றல்களாகிய நீங்கள்தான் இந்த உன்னத மான பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் நீங்கள் காணும் வெற்றியில்தான், இந்த நாட் டின் எதிர்காலமே இருக்கிறது.

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை— குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை—தனது குழந்தை கள் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனி தப் பணியில் ஈடுபட வாரீர்.",

பேரறிஞர் அண்ணா.

[அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை. 18-11-1967.]

"அத்தான்! இதோ பெட் காப்பி! எழுந்திருங்க! குடிச்சுட்டு அப்புறம் படுத்துக்கலாம்!" செல் லமாகத் தட்டுகிறாள், இல்லத் தரசி!

"ஆவ். . .!" உடம்பை சோம்பல் முறித்தபடியே அன்பு மனைவி தன் ஆசைக் கரங்களில் ஆவி பறக்க ஏந்தி நிற்கும் காப்பியை வாங்கி ஆனந்தமாகப் பருகுகிறார் சுகவாசி சுந்தரம்.

"டேய் பையா! உடுப்பி கடை யிலே போயி பஸ்ட் கிளாஸா ஒரு காப்பி வாங்கிவா பார்க்கலாம்!" லாட்ஜில் காலந்தள்ளும் கட்டைப் பிரம்மச்சாரி கந்தசாமி, காலை யிலே வழக்கமாக இசைக்கும் சுதி கெட்ட சங்கீதம்:

"இறங்கி வாங்க பிரதர்! ப்ளாட்பாரத்தில் போயி காப்பி குடிச்சிட்டு வரலாம்!"

"நீங்க போங்க! நான் இன் னும் பல் தேய்க்கலே!"

"நீங்க ஒரு பட்டிக்காடு! காலை யில் காப்பி குடிக்க பல்லை வேறு தேய்க்கணுமா? வாங்க! வாங்க!" ரெயில் நிலையங்களில் வாடிக்கை யாகக் கேட்கும் நகைச்சுவை.

"இத்தோடு பதினைந்தாவது காப்பி ஆச்சு! காப்பி உள்ளே போனால் தான் கற்பனை வளமே சுரக்கிறது." —எழுத்தாளர் ஏகாம்பரத்தின் அனுபவ ரசம்.

"மேஸ்திரி ஐயா, உடம்பிலே தெம்பேயில்லை. ஒரு அரைக் கப் காப்பி சாப்பிட்டுட்டு வந்துடு றேன்!"-கட்டடம் கட்டும் சிற்றாள் கடும் பசிக்கிடையே கூறுகிறார்.

காப்பியே மெய்யடா!

இப்படி வாழ்க்கைத் தளத்தி லுள்ள எல்லாரது வாழ்விலும் பின்னிப்பிணைந்து, "காயமே இது பொய்யடா! காப்பியில் ஓடும் மெய்யடா!" என்றபுதுமொழியை உருவாக்கியுள்ள காப்பியின் வர லாறு சுவை மிக்கது. கவரக் கூடியது.



சேலத்திலிருந்து ஏற்காடு செல் பவர்கள், மலையில் 3,000 அடிக்கு மேல் ஏறியதும் பாம்புபோல் வளைந்து வளைந்து செல்லும் சாலை யின் சரிவுகளில் காண்பது கொத் துக் கொத்தாகக் காய்த்துத் தொங்கும் காப்பிச் செடிகளே!

சேர்வராயன் மலைப் பகுதி களில் மட்டும் 1,106 காப்பித் தோட்டங்கள் உள்ளன. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 2 ஆயிரம் முதல் 2,500 டன்கள் வரை தரமான காப்பிக்கொட்டைகள் இந்த காப்பித் தோட்டங்கள் மூலம் கிடைக்கின்றன. 2,500 டன் காப்பிக் கொட்டை கிடைக்கிறதென்றால் சுமார் 15,000 டன் பழங்கள் உற்பத்தி யாகின்றன என்று பொருள். அதாவது பழங்களில் ஆறில் ஒன்று அல்லது ஐந்தில் ஒருபங்கு தான் கொட்டைகள் தேறும்.

சேலம் மாவட்டத்தில் அரபிகா என்ற உயர்ந்த ரக காப்பிக்கொட் டைகள் உற்பத்திசெய்யப்படுகின் றன. மாவட்டத்தில் காப்பி உற் பத்தியாகும் தோட்டங்களின் மொத்தப் பரப்பு 4,011 ஹெக் டேர். அதாவது சுமார் 10,000 ஏக்கர்கள்.



உயர்ரகக் காப்பிச்செடி நாற்றங்கால்.

இலை உதிர் நோய்.

பொதுவாக காப்பிச் செடிகளை 'இலை சீர்கேடு நோய்' தாக்குவது உண்டு. இந்த நோய் வந்தால் முதலில் இலைகள் உதிரும். அதன் பின் படிப்படியாக பலன் தருவது நின்று விடும். 1868-ஆம் ஆண்டு முதன்முதலில் இலங்கையிலுள்ள காப்பித் தோட்டங்களில் பரவியது. பின் கீழ்த்திசை நாடுகளைப் பாதித்தது. இந்த நோய், பொதுவாக கென்ட் என்ற பழைய ரக காப்பிச் செடிகளையே தாக்குகிறது.

எனவே இந்த நோய் வந்து விட்டால் காப்பி மகசூலை அது பெரிதும் பாதிக்கும். இதற்காக, காப்பி வாரியத்தினர், ஏற்காட்டில் ஒரு ''காப்பி செயல்முறைப் பண்ணை''யை ஏற்படுத்தியுள்ளனர். 21 ஏக்கர் உள்ள இந்தப் பண்ணையில் இலை சீர்கேடு நோய் தாக்காத எஸ். 795 என்ற புதிய ரக காப்பிச்செடியை கண்டு பிடித்துள்ளனர். இதற்கான பொறுக்கு விதைகளைப் பண்ணையிலே முளைக்கப் போட்டு காப்பி நாற்றுக்களை வளர்த்து தோட்டக்காரர்களுக்கு விலைக்குக் கொடுக்கின்றனர்.

100 செடிகள் ரூ 22·50க்கு விற்பனையாகும். இந்தச் செடிகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. ஏனெனில் 'இதில் நோய்த் தடுப்புச் சக்தியிருப்பதோடு நன்றாக வளர்ந்து அதிக பலன்தரக் கூடியது. அதனால் இந்த நாற்றுக்களை லாரி லாரியாக வாங்கிச் செல்கின்றனர் காப்பித் தோட்டக்காரர்கள். பழைய கென்ட் ரகக் காப்பிச்செடிகளைப் பயிரிட்டவர்கள் படிப்படியாக இந்தப் புதிய ரகச் செடிக்கு மாற்றி வருகிறார்கள்.

40 ஆண்டுகள் பலன் தரும்.

காப்பிச் செடி நட்டபின் நாலாவது ஆண்டில் பலன் தரத் தொடங்கும். தொடர்ந்து 40 ஆண்டுகள் பலன் தரும்.

செடிகள் மரம் போல் மேலோங்கி வளர்ந்தால் அதிகப் பலன் தருவதில்லை. எனவே மேல் நோக்கிச் செல்லும் தளிரைக் கிள்ளி எடுத்து விடுகிறார்கள். அதன் காரணமாகச் செடியின் பக்கவாட்டில் பல கிளைகள் விடுகின்றன.

மார்ச்-ஏப்ரல் மாத வாக்கில் இந்தக் கிளைகளின் கணுக்களில் ஏராளமான பூக்கள் பூக்கின்றன. பின் காய்கள் தோன்றும். நல்ல காய்ப்பு என்றால் ஒரு கொத்தில் 12 முதல் 15 காய்கள் இருக்கும். அதோடு கொத்துக்கள் நெருங்கிய அடுக்குகளாக, கிளை தாங்காத அளவு காய்த்துத் தொங்கும்.

செடி நன்றாகக் காய்க்கவும் நல்ல தரமான கொட்டைகளாகக் கிடைக்கவும் செடிகளின் மீது என். பி. கே. என்ற ரசாயன உரத்தைத் தெளிக்கிறார்கள். இதன் மூலமாக இந்த உரச்சத்து செடிக்குக் கிடைக்கிறது.

செக்கச் சிவந்த பழம்.

நவம்பர் மாத வாக்கில் பழங்கள் நல்ல சிவப்பு நிறத்தில், பறிக்கும் பக்குவம் அடைகின்றன. அந்தப் பருவத்தில் ஏராளமான பெண்களை நியமித்து இந்தப் பழங்களைப் பறிக்கிறார்கள்.

பழங்களிலிருந்து கொட்டைகளை எடுப்பதில் இரு முறை உண்டு. ஒன்று பழங்களை வெயிலில் காயவைத்துப் பின் தோல்களை நீக்கும் 'செரி' முறை.

அடுத்தது. பழங்களைத் தண்ணீரில் போட்டுயந்திரங்கள் மூலமாகத் தோலை நீக்கிய பிறகு கொட்டைகளை உலர்த்தும் முறை.

காபிச் செடியிலிருந்து பழங்களைப் பறித்தல்.

இந்தச் செயல் முறைப்பண்ணையில் இரண்டாவது முறையைத் தான் பின்பற்றுகிறார்கள்.

இவ்வாறு உலர்த்தப்பட்ட காப்பிக்கொட்டைகளைப் பல நிறுவனங்கள் வாங்கி 'பிபெரி', 'பிளான்டேஷன்-ஏ' என்று தரம் பிரித்து விற்பனை செய்கின்றன.

தமிழ் நாட்டில் சேர்வராயன் மலைப்பகுதி தவிர, பழனி, ஆனை மலை, நீலகிரி போன்ற மலைப்பகுதிகளிலும் காப்பிக் கொட்டை உற்பத்தியாகிறது. ஏன் மலைப் பகுதிகளில் மட்டும் என்ற வினா எழலாம். காப்பிச் செடி, சுமார் 3,000 முதல் 5,000 அடி உயரமுள்ள மலைச் சரிவுகளில் தான் நன்றாக வளர்ந்து பலன் தரும். அதோடு ஆண்டுக்கு 60 அங்குல மழையும் தேவை.

இந்தியாவில் உற்பத்தியாகும் காப்பிக் கொட்டையில் 40 சதவீதம் அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி போன்ற வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு சுமார் 16கோடி ரூபாய் அந்நியச் செலாவணி நமக்குக் கிடைக்கிறது.

சேர்வராயன் மலைப் பகுதிகளில் மட்டும் காப்பித் தோட்டங்கள் சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினைத் தருகின்றன.

உள்ளத்திற்கும், உடலுக்கும் உற்சாகம் தரும் காப்பி, அந்நியச் செலாவணியை, கோடிக்கணக்கில் அள்ளித்தரும் காப்பி; ஆயிரமாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை தரும் காப்பி. எனவே இந்தக் காப்பி உற்பத்தி பல்கிப் பெருகட்டும்! செழித்தோங்கட்டும்!

வயது 2,820!

காஃபி கி.மு. 850-ல் அதாவது சுமார் 2,820 ஆண்டுகளுக்கு முன்பே கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அரேபிய ஆடு மேய்ப்பவன் 'கால்டி' என்பவன் தன்னுடைய ஆடுகள் ஒருவகைச் செடிகளின் பழங்களைச் தின்ற பின் உற்சாகமாகத் துள்ளித் திரிவதைக் கண்டானாம். உடனே தானும் அந்தப் பழங்களைப்பறித்துச் சுவைத்தானாம். அவனுக்கு மனத்தில் மிகுந்த உற்சாகம் ஏற்பட்டதாம். உடனே தனது கண்டு பிடிப்பைப் பற்றிக் கிராமத்து மக்களுக்குச் சொல்ல, ஆடிப்பாடி மகிழ்வுடன் சென்றானாம். அவன் தான் காஃபியைக் கண்டு பிடித்த முதல் மனிதன் என்பது கதை.

எதியோப்பியாவிலுள்ள கஃப்பா என்ற ஊரின் பெயரிலிருந்து இதற்கு காஃபி என்று பெயர் வந்ததாகவும் கூறுவர்.

காஃபி கண்டு பிடித்தது கி.மு. 850 என்றாலும் 17-ம் நூற்றாண்டில்தான் ஐரோப்பியப் பகுதிகளில் காஃபி அருந்தும் பழக்கம் பரவலாயிற்று. அமெரிக்காவில் கி.பி. 1607-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

காஃபியில் மொத்தம் 25 வகைகள் உண்டு.

காஃபிச் செடி சுமார் 30 அடி உயரம் வளரக் கூடியது. ஆனால், மகசூல் வசதிக்காக மேல் நோக்கிச் செல்லும் தளிரைக் கிள்ளி விட்டுச் செடிபோல் வளர்க்கிறார்கள்.

காஃபியின் பூ வெள்ளை வெளேரென்று மல்லிகைப் பூப்போலிருக்கும். காய் பச்சை நிறத்திலும், பழம் சிவப்பாகவும் இருக்கும்.

இதோ ஒரு புது நெல்

அனைத்து நாட்டிலும் அதிக அளவு மகசூலை அளித்து ''அதிசய நெல்'' என்ற சிறப்புப் பெயர் பெற்றது ஐ.ஆர். 8. ''அரிசி பெரியது; சாப்பாட்டிற்கு ஏற்றதல்ல; மார்க்கெட்டில் நல்ல விலைக்குப் போகவில்லை'' என்ற எதிர்ப்புகளுக்கு இடையேயும் இந்நெல் தமிழ் நாட்டின் பெரும் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டது. இந்த நெல் அளித்த அமோக விளைச்சலே, தமிழ்நாட்டில் உணவுக் கட்டுப்பாடு நீக்கத்திற்கு மூல காரணமாகும். ஆயினும் தமிழ் நாடு அரசு, ஐ.ஆர். 8 நெல்லை விடத்தரமான புதிய நெல்தினுசுகளை உருவாக்கவும், வெளி நாட்டுத்தினுசுகளை வரவழைத்து அவை பொருத்தமானவைகளாக இருந்தால் தமிழ் நாட்டில் பயன் படுத்தவும் தொடர்ந்து முயன்று வருகிறது.

ஐ.ஆர். 8 நெல்லிலிருந்த குறைகளே இல்லாத தரமான உயர் விளைச்சல் நெல் தினுசை உருவாக்க, பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனம் முயன்று வந்தது. சன்னமான அரிசியையும், குருத்துப் பூச்சியின் தாக்குதலுக்கு இலக்காகாத தன்மையையும் கொண்ட டி.கே.எம். 6 (சன்ன சொர்ணவாரி) என்ற தமிழ் நாட்டு நெல்லையும், ஐ.ஆர். 262-24-3 என்ற நெல்லையும் கரு ஒட்டு சேர்த்து ஐ.ஆர். 20 என்ற நெல்லை அந்நிறுவனம் உருவாக்கியது.

ஐ. ஆர். 20 நெல்லைக் கொணர்ந்து கோயம்புத்தூரில் உள்ள நெல் அபிவிருத்திப் பண்ணையில் 1969-ம் ஆண்டு கோடைப் பயிராகச் சாகுபடி செய்து பார்க்க தமிழ் நாடு அரசு ஆவன செய்தது. அப் பரிசோதனையில் ஐ.ஆர். 20 நெல் 110 சென்டிமீட்டர் உயரம் வளர்ந்து 125 நாளில் முதிர்ச்சி அடைந்து அறுவடைக்கு வரும் என்பதும், ஹெக்டருக்கு 6.5 மெட்ரிக் டன் மகசூல் அளிக்க வல்லது என்பதும் புலனாகியது. மேலும், இந்நெல்லை பூச்சிகளும், நோய்களும் தாக்காது என்பதும் தெரியவந்தது. அந்தப் பரிசோதனையில் கிடைத்த விதையைக்கொண்டு தமிழ்நாட்டின் பலவேறு இடங்களில் முந்திய சம்பா, பிந்திய சம்பா ஆகிய பருவங்களில் நடத்தப்பெற்ற பரிசோதனைகளில், ஐ.ஆர். 20 நெல் ஹெக்டருக்கு சராசரியாக 5,331 கிலோ மகசூல் அளித்துள்ளது. ஆனால், அப் பரிசோதனைகளிலெல்லாம் ஐ.ஆர். 8 நெல் ஹெக்டருக்கு சராசரியாக 5,263 கிலோ மகசூலே கொடுத்துள்ளது. காஞ்சீபுரத்திலுள்ள அரசினர் விதைப் பண்ணையில் ஐ.ஆர். 20 நெல், ஹெக்டருக்கு 7,166 கிலோ மகசூல் கொடுத்துள்ளது.

ஐ.ஆர். 20 நெல், டி.கே.எம்.6 நெல்லின் அரிசியைப் போலவே நல்ல தரமான அரிசியும், ஐ.ஆர். 8 நெல்லை விட பூச்சி, பூஞ்சாள நோயை எதிர்த்து நிற்கும் சக்தியும் கொண்டு சிறந்து விளங்குகிறது. ஐ. ஆர். 8 நெல்லின் சாகுபடிக் குறிப்புகளையே இதற்கும் மேற்கொள்ளலாம். நீங்களும் ஐ.ஆர். 20 நெல் பயிரிட்டுப் புது வாழ்வு பெறும் நாள் அண்மையில் வரவிருக்கிறது!

பசிப்பிணி தீர்ப்போம்!

அறுவடைக்குப் பிறகு, ஆனால், உண்ணப்படுவதற்கு முன்பு, உணவு தானியங்களைக் கொஞ்ச நாட்களுக்கோ, அல்லது நீண்ட நாட்களுக்கோ வெவ்வேறு நிலைகளில் இருப்பு வைக்க நேரிடுகிறது. உலகில் உற்பத்தியாகும் மொத்த உணவு தானியங்களில் 5 முதல் 10 சத அளவு பூச்சிகளால் சேதமடைவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

உணவு தானியங்களைப் பொறுத்த வரையில் அறுவடை முதல், இருப்பு வைக்கப்படும் காலம் முடிய ஏற்படும் சேதத்தினை மதிப்பிட இந்திய உணவு மற்றும் வேளாண்மை அமைச்சகத்தால் 1967-ல் அமைக்கப்பட்ட குழு, இந்தியாவில் மட்டும் ஆண்டுதோறும் இவ்வகையில் 73 லட்சம் மெட்ரிக்டன் உணவு தானியங்கள் சேதமாகின்றன என்று தெரிவித்துள்ளது.

பூச்சிகளின் தாக்குதல், முளைத்துவிடுதல், பூஞ்சாளத் தாக்குதல், முளைக்கும் தன்மை இழத்தல், அழுகிப் போதல், பூச்சிகளின் எச்சம், இறந்த உடல்கள், உரிந்த தோல்கள் ஆகியவைகளினால் தூய்மை இழத்தல், ஆகிய காரணங்களினால் மேற்படி 73 லட்சம் மெட்ரிக் டன்கள் சேதமடைகின்றன.

இச் சேதாரங்களைத் தவிர்த்தால், வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளைக்கு 18 அவுன்சு உணவு தானியம் என்ற வீதத்தில் ஏறத்தாழ 4 கோடி மக்களுக்கு (குழந்தைகள் உட்பட) ஒரு ஆண்டு காலத்திற்கு உணவளிக்க முடியும். எனவே, உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துவதைப் போலவே, உழவர்கள் உற்பத்தி செய்தவைகளைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்!

இதை அறியும்போது

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்டு
ஊறும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆறுங் கிளையோ டயின்று

—என்ற பழம் பாடல் நினைவுக்கு வருகிறதல்லவா!

திருநெல்வேலியிலிருந்து குற்றாலம் செல்லும் சாலையில் ஆறாவது மைலில் அமைந்திருக்கும் ஊர் அபிசேகப்பட்டியாகும்.

அதனை மேம்போக்காக நோக்குவார் யாருக்கும் அங்கு ஓர் ஊர் இருப்பதைத் தெரிந்து கொள்ள முடியாது. காரணம், அங்கே கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரிவது வரண்ட பெரிய நிலப்பரப்பும், விட்டு விட்டுக் காணப்படும் காட்டு மரங்களுமாகும். சாலையின் வலது பக்கத்தில் தொடங்கி வடமேற்காக உள்ள மேட்டுப்பாங்கான இடம்வரை அமைந்துள்ள 2,080 ஏக்கர் நிலப்பரப்பில்தான் திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணை அமைந்துள்ளது.

கால்நடைகளே நமக்குப் பாலைத் தருகின்றன. அப்பாலைக் கொண்டுதான் மக்கள் கடவுளுக்கு அபிசேகம் செய்வது வழக்கம். அபிசேகப்பட்டி என்ற பெயர் இருந்ததால் கால்நடைப் பண்ணை அமைந்ததோ, அல்லது பால்வழங்கும் கால்நடைப் பண்ணை அமைந்ததால் அவ்விடத்திற்கு அபிசேகப்பட்டி என்ற பெயர் வந்ததோ என எண்ணி வியக்குமாறு இதிலே எதிர்பாராத ஒற்றுமை நிலவுகின்றது.

இங்குள்ள கால்நடைப் பண்ணையில் செம்மறியாடு, மாடு, பன்றி, கோழி ஆகியவைகள் இடம் பெற்றுள்ளன. இம்மாநிலத்திலேயே முதன் முதலில் அமைக்கப்பட்ட ஒரூர் கால்நடைப் பண்ணை எண்ணிக்கையில் பெரியது என்றாலும், பரப்பளவில் அபிசேகப்பட்டிப் பண்ணை மிகப் பெரியதாகும். இப்பெரும் பரப்பில் கட்டடங்களும், பாதைகளும் 50 ஏக்கர் பரப்பளவை உட்கொண்டுள்ளன. வடக்கிலிருந்து கிழக்காகச் சரிந்திருக்கும் நிலப்பரப்புப் பெரிதும் கரிசல் வாகாகவே உள்ளது. மழைக் காலங்களில் உண்டாகும் காட்டாறுகளால் இரண்டு இடங்களில் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் பெய்யும் மழையின் சராசரி அளவு 25''. இயற்கையான குளம், குட்டைகள் இங்கே இல்லை எனினும், குறைந்த நீரைக்கொண்டுள்ள கிணறுகள் பாசனத்திற்கு உதவுகின்றன. மேல் பரப்பில் சில அங்குலம் தவிர பெரும் பகுதி கற்பாறையாய் அமைந்துள்ளது. இதில் கால் நடைகளுக்கான தீவனங்கள் சிறிது பயிரிடப்படுகின்றன. அருகில் அமைந்துள்ள மழை நீர்த் தேக்கம் இங்குள்ள கால்நடைகள் குளிப்பாட்டப்படவும், நீர் அருந்தவும் பயன்படுகிறது.

உயர் ரகக் கால்நடைகளை அதிகம் உற்பத்தி செய்து, வட்டாரக் கால்நடைப் பண்ணையினை உயர்த்துவதே இப்பண்ணை தொடங்கியதன் நோக்கமாகும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 15—4—1964-ல் இப்பண்ணை தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் இது கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடம் இருந்த கால் நடைகளைக் கொண்டு தொடங்கப்பட்டது. இதற்கான நிலத்தை வழங்கியவர் ஒரு திவான் என்று கூறப்படுகிறது. பொருளாதாரச் சிக்கல் காரணமாக அது மூடப்பட்ட காலை மாநில அரசு தலையிட்டு, பண்ணைக்கான கட்டடங்களோடு கூடிய நிலப்பரப்பை எடுத்துக் கொண்டது. அதனை அடுத்து, உணவு விவசாயத் துறையினால், கோழி வளர்ச்சிப் பண்ணை ஒன்று தொடங்கப்பட்டு 23—3—1965-லிருந்து தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது. அத்துடன் 1—2—1965 முதல் செம்மறி ஆட்டுப்பண்ணை ஒன்றும் செயல்படத் தொடங்கியது. இத்தீவிரத் திட்டத்தின்கீழ்த் தொடங்கப்பட்ட மூலைக்கரைப்பட்டி ஆட்டுப்

பண்ணை மூடப்பட்டு, அங்குள்ள ஆடுகள் அபிசேகப்பட்டிப் பண்ணையுடன் இணைக்கப்பட்டன. 1967-ஆம் ஆண்டு முதல் இப்பண்ணையின் பாதுகாப்பு, திருநெல்வேலி மாவட்டக் கால்நடைக் கண்காணிப்பாளரின் கீழ் இயங்கி வருகின்றது.

இருபத்துமூன்று நிரந்தர ஊழியர்களைக்கொண்டு இயங்கும் இப்பண்ணைக்குக் கால்நடைமருத்துவம் கற்ற கண்காணிப்பாளர் ஒருவர்அமர்த்தப்பட்டுள்ளார். ஆட்டுப் பண்ணை, மாட்டுப் பண்ணை, பன்றிப்பண்ணை, கோழிப்பண்ணை ஆகிய நாற்பிரிவுகளைக் கொண்டு இக்கால்நடைப் பண்ணை சிறப்புற நடைபெறுகின்றது.

1966-இல், 1,034 செம்மறி ஆடுகளைக் கொண்டு தொடங்கப் பெற்ற இப்பண்ணை, இவ்வாண்டில் 1,235 ஆடுகளைப் பெற்றுள்ளது. பிறப்பு 736 ஆக இருக்கையில், இறப்பு 83 என்றுள்ளது. இப் பண்ணையிலிருந்து வேறு பண்ணைக்கு அனுப்பப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை 10. இனவிருத்திக்காகத் தனியார் ஆட்டுப் பண்ணைக்கு விற்பனை செய்யப்பட்ட ஆடுகள் 272. ஏலத்தில் விடப்பட்ட ஆடுகள் 360 ஆகும். இவை நீங்க, எஞ்சிய ஆடுகளின் எண்ணிக்கை 1,666 ஆகிறது.

ஆடுகளுக்கு நோய்வரின், அவைகளைத் தனியே பிரித்து, காதில் எண்ணிட்டு, மருந்து



கொடுத்துத் தனியே அடைத்து வைக்கப்படுகிறது. நலம் பெறும் வரையில் அவைகளை மற்ற ஆடுகளோடு சேர்ப்பதில்லை. நூறு, நூறாகப் பிரித்து, ஆடுகளை இப்பண்ணைக்குரிய பரந்த நிலப்பரப்பில் மேய்ச்சலுக்கு அனுப்பப்படுகின்றது. ஆடுகளை மேய்க்கும் கூலியாட்களை அண்டைக் கிராமங்களிலிருந்து அமர்த்தப்படுகிறது.

1965-ல் 221 மாடுகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பண்ணை இன்று 337 உயர் ரக மாடுகளைக் கொண்டு செயல்படுகிறது. 1969-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 80 கன்றுகள் ஈன்றன. இப்பண்ணையிலிருந்து 8 உயர்ரகமாடுகள் அபிவிருத்தியின் பொருட்டு வெளியாருக்கு விற்கப்பட்டன. 43 மாடுகள் ஏலத்தில் விற்கப்பட்டன. வேறு பண்ணைகளுக்காக 44 மாடுகள் அனுப்பப்பட்டன. இறப்பு 31. இவை நீங்க எஞ்சியுள்ளவை 295 ஆகும். இங்கே உள்ள உயர்ரகங்களில் 'சிந்தி', 'முர்ரா' இனங்கள் குறிப்பிடத்தக்கன. அரசின் கொள்கை, அதிகம் பால் கொடுக்கும் சிந்தி, தார்பார்கர் இன மாடுகளையும், முர்ரா எருமைகளையும் அபிவிருத்தி செய்வதாகும். ஆனால் விவசாயிகள் விரும்புவது காங்கேயம், உம்பளச்சேரிக் காளைகளே ஆகும். கால்நடை மருத்துவரைக் கொண்டுள்ள இப்பண்ணைபோல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கால்நடை மருத்துவமனை அமைப்பது அரசின் திட்டமாகும். இத் திட்டம் இன்று பெரிதும் வெற்றிகரமாகச் செயல்படுகின்றது. உயர்ந்த இனப் பொலி காளைகளைக் கொண்டும், செயற்கை முறையிலும் கருத்தரிப்பு செய்யப்படுகிறது.

இங்குள்ள கறவை மாடுகளைக் கொண்டு ஆரம்பத்தில் 55,518 கிலோகிராம் பால் எடுக்கப்பட்டு, பகுதி மக்களுக்கு விற்கப்பட்டது. இன்று 92,075 கிலோகிராம் பால் எடுக்கப்படுகின்றது. இவ்வாறு பெறப்படும் பால், அருகிலுள்ள கூட்டுறவுப் பால் வழங்



கும் சங்கத்திற்கு அனுப்பப்பட்டு மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் விரும்பி உட்கொள்ளுவது வெள்ளைப் பன்றி மாமிசமாகும். அதில் காரணமில்லாமலும் இல்லை. வெள்ளைப் பன்றியின் ஊன் உடலுக்கு மிகுந்த குளிர்ச்சியைத் தருவதோடு, நிறைய கொழுப்புச் சத்தை அளிக்கின்றது. வெள்ளைப் பன்றி, நாட்டுப் பன்றியைப் போலல்லாது முற்றிலும் காய்கறி, புல் இவைகளையே உண்ணுகின்றது. ஒவ்வொரு பன்றியும் ரூ. 500-க்கு மேல் விலையாகின்றது. இத்தகைய விலையுயர்ந்த வெள்ளைப் பன்றிகள் 63 இப் பண்ணையில் இருக்கின்றன. இதன் உபயோகம் இத்தகு உயர் இனப் பெருக்கத்தை ஊக்குவிப்பதே ஆகும்.

அறிவியல் பெரிதும் வளர்ந்துள்ள இன்றும் விலங்குச் செல்வம் நமது நாட்டில் கிராமப் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பு போன்று விளங்குகின்றது. கால்நடைப் பிரச்சினை நம் நாட்டில் வளர்ந்திருக்கின்ற நிலையிலும், தமிழ்நாடு அரசு அதிலிருந்து விடுபட இது போன்ற பல கால்நடைப் பண்ணைகளைப் பல மாவட்டங்களிலும் இன்று சிறப்புறச் செயல் படுத்தி வருகின்றது. தமிழகத்தில் தற்போது ஏறத்தாழ 1 கோடி மாடுகளும், 25 லட்சம் எருமைகளும், 80 லட்சம் செம்மறியாடுகளும், 114 லட்சம் கோழிகளும் இருக்கின்றன. கால்நடைகளின் முன்னேற்றத்தில் தான் கிராமங்களின் பொருளாதார முன்னேற்றம் இருக்கின்றது என்பதை நம் அரசு உணர்ந்து துரிதமாய்ச் செயல்படுகின்றது. கிராமங்கள் முன்னேறினால் தானே நாட்டுப் பொருளாதாரம் வளரும்? அப்போதுதானே அரசியல் விடுதலை பெற்ற நம் நாடு பொருளாதார விடுதலை பெற்றதாகும்.

1965-ஆம் ஆண்டில் 99 கோழிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பண்ணை இன்று 3,543 கோழிகளைக் கொண்டுள்ளது.

டிக்கெட் பரிசோதகர்: ஏனய்யா! ரயிலிலே பிரயாணம் செய்யணும்னு டிக்கெட் எடுக்கணுங்கிறது தெரியாதா?

பிரயாணி: அது தெரியும் சார்! ஆனா நீங்க இந்த வண்டியிலெ வருவீங்கங்கிறது தெரியாது.



இத்தொகை இதன் துரித வளர்ச்சியைக் காட்டுகிறது. கோழிகளை வளர்ப்பது போன்ற கடினமான வீட்டுப்பணி வேறெதுவும் இல்லை என்பதை இத் தொழிலை மேற்கொண்டுள்ளவர் அறிவர். இந்தப் பண்ணையில் 'ஒய்ட் லெக்கான்' என்னும் உயர் இனக் கோழிகள் அதிகமாக உள்ளன. சமாதானத்தின் தூதுவர்கள் போல் அவைகள் காட்சியளிக்கின்றன. இங்குள்ள கோழிகள் பொதுவாக இரண்டு வகைப் படுத்தப்பட்டுள்ளன. ஒன்று இனவிருத்திக்குப் பயன்படுவனவாகும்; மற்றொன்று உணவுப் பொருளாக உபயோகிக்கும் முட்டைகளைத் தருவதாகும். வயதடைந்தவுடன் பெண் கோழிகள், தாமே ஆண் சேர்க்கையின்றி முட்டையிடும். அம்முட்டைகள் குஞ்சுகளைத் தர முடியாது. இனச் சேர்க்கையால் உண்டாகும் முட்டைகளே குஞ்சுகளைத் தரும். 'இன்குபேட்டர்' என்னும் இயந்திரத்தைக் கொண்டு செயற்கை முறையில் குஞ்சு பொரிக்கப்படுகிறது. ஏறத்தாழ 96° எப். உஷ்ண நிலையில் வைத்திருந்தால் சரியாக 21-வது நாள் குஞ்சு வெளியாகின்றது.

1970-ஆம் ஆண்டில் இதுவரை சேகரிக்கப்பட்ட முட்டைகள் 72,844 ஆகும். இதில், இப் பண்ணையில் உள்ள இன்குபேட்டரில் குஞ்சு பொரிக்க வைக்கப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை 12,604. இதிலிருந்து வெளி வந்த குஞ்சுகள் 7,087. பொது மக்களுக்கு உணவிற்காக விற்கப்பட்ட முட்டைகள் 50,577. வெளியார் பண்ணைக்குக் குஞ்சு பொரிப்பதற்காக விற்கப்பட்ட முட்டைகள் 3,211. இப் பண்ணையைச் சுற்றியுள்ள கிராமங்களில் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு இங்கிருந்து உயர் இனக்கோழிகளை, இனவிருத்திக்காக மக்களுக்கு விற்கின்றனர். உணவிற்காகவும் முட்டைகள் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனர்.

டாக்டர்: காலிலே எப்படி அடி பட்டுது . . .?

அடிபட்டவர்: மனைவியை உதைக்கிறதா நினைச்சு கனவிலெ கட்டில் காலை எட்டி உதைச்சுட்டேன் . . !

கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப்
பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

கதர் கிராமத் தொழில் துறை
௨, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

15 லட்ச ரூபாய்த் திட்டமிது. இன்னும் இரண்டு ஆண்டுக்குள் இத்திட்டம் செயல் படுத்தப் படும்.

இந்தத் திட்டம் வந்ததும் இங்கு நூற்ற நூல்களைப் பாவு போட்டு நூலுக்குப் பதிலாகப் பாவாகவே நெசவாளர்களுக்கு வழங்குவோம். சாதாரணமாக நெசவாளர்கள் போடும் பாவு 120 மீட்டர்தான் அதிக அளவு இருக்கும். ஆனுல் இந்தப் பாவுகளை, விசைத்தறிகளுக்குத்தான் பயன்படுத்த முடியும். அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தில் சுமார் 12,500 விசைத் தறிகள் ஏற்படுத்தத் திட்டமிருக்கிறது. இதில் குறைந்தது 1,000 விசைத் தறிகளுக்காவது இந்த ஆலையிலிருந்து பாவு உற்பத்தி செய்து கொடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நிறைவேறிஞல், இப்போதிருக்கும் நாலு வழி முறை மாறி, நாம் நூற்கும் நூல்களை நமது நெசவாளர்களே, பயன்படுத்தித் துணி நெய்து, நெசவாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் துணிகளை விற்பனை செய்யும் முறை வரும். இது ஜப்பான் நாட்டில் நடைமுறையில் இருக்கும் முறை.''

''ஆமாம்! இங்கு எத்தனை பேர் பணியாற்றுகிறூர்கள்?'' தொழிலாளர்களைப் பற்றிக் கேட்டதும் இளைஞரான அந்த நிர்வாக இயக்குநர் முகத்தில் பூரிப்பு ஏற்படுகிறது.

''தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமுள்ள நல்லுறவு இங்கிருப்பதுபோல் வேறெங்கும் நீங்கள் பார்க்க முடியாது. எங்கள் தொழிலாளர்கள் அவ்வளவு சுமுகமாகப் பணியாற்றுகிறூர்கள்.

''மொத்தம் 344 பேர்கள். 8 மணி நேரம் வேலை வீதம் 3 ஷிப்ட் நடைபெறுகிறது. முன்பு, வாரத்திற்கு 6 நாள் ஓடிக்கொண்டிருந்தது. 1969 ஆகஸ்ட் முதல், வாரத்தில் 7 நாட்களும் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. தேசிய விடுமுறை நாட்களில் மட்டும் மில் ஓடாது. மற்ற நாட்களில் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும்.

''இங்கு குறைந்த சம்பளம், அதாவது சுத்தம் செய்யும் தொழிலாளி பெறுவது ரூ. 205 என்றூல் பார்த்துக் கொள்ளுங்களேன்.

தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கத் திட்டமும் உள்ளது.''

''ஆலை லாபத்தில்" தானே ஓடுகிறது?'' என்று முக்கியமான கேள்வியைப் போடுகிறூம்.

''ஓடுகிற ஒவ்வொரு நிமிடத்திற்கும் 2 ரூபாய் லாபம் கிடைக்கிறது. ஒரு நாளைக்கு 3,000 ரூபாய் லாபம். ஒரு மாதத்திற்குச் சுமார் ஒரு லட்ச ரூபாய் கிடைக்கும். இந்த ஆலையில் இன்னும் 7,040 கதிர்கள் அதிகப்படுத்தலாம். (அதாவது தற்போது உள்ளதைப் போல் அரைப் பங்கு அதிகமாக) இதற்காக மத்திய அரசை அணுகியிருக்கிறூம். அவர்கள் உரிமம் (லைசென்ஸ்) கொடுத்தால், இன்னும் அதிக அளவு உற்பத்தி செய்ய முடியும், அதிக லாபமும் காட்டுவோம்!'' என்று அவர் முத்தாய்ப்பு வைத்தார்.

செயல் திறனேடு இயங்கும் இந்த ஆலையைப் பார்க்கும் போது நமது உள்ளம் மகிழ்வால் நிறைகிறது.

பார்க்ஃபேர் பொருட்காட்சி

தமிழகத்து மக்களின் உள்ளங்களை எல்லாம் கவர்ந்திழுக்கும் பார்க்ஃபேர் பொருட்காட்சி வழக்கம்போல் டிசம்பர் 23-ம் நாள் தொடங்கப்படுகிறது.

கடைகள், அரங்குகள் அமைக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

முதல் வகுப்புக் கடைக்கு வாடகை ரூ. 250.

இரண்டாம் வகுப்புக் கடைக்கு வாடகை ரூ. 200.

கடை 10 அடி நீளம் 10 அடி அகலம் கொண்டது.

மொத்த வாடகையில் 50 சதவீதம் முன்பணமாகச் செலுத்த வேண்டும்; கடை ஒதுக்கப்பட்டவுடன் மீதி 50 சத வீதத்தையும் கட்ட வேண்டும்.

ரேக்ளா விளையாட்டு, காவடி, கரகம், பொய்க்கால் குதிரை நடனம் ஆகிய இலவசக் காட்சிகள் பார்க்ஃபேரின் தனிச் சிறப்பு.

65 ஆண்டுகளாக எண்ணற்ற மக்கள் கண்டுகளிக்கும் கண்காட்சி இது ஒன்றே.

விவரங்களுக்கு

அசன் அலி, ஆர். எஸ். கன்னையா, ஜே.பி.

கௌரவச் செயலாளர்கள்

எஸ். ஐ. ஏ. ஏ. லிமிடெட்

சென்னை-3.

இன்றைய உலகின் மிகப்பெரிய தொழில் எது தெரியுமா?

சுற்றுலாதான் உலகில் மிகப் பெரிய தொழில் என்று சொன்னுல் வியப்பாயிருக்கின்றதல்லவா?

ஒரு காலத்தில் உலகத்தின் மிகப் பெருந் தொழிலாக "மண் எண்ணெய்த் தொழில்" இருந்தது. ஆனுல், இன்று அப்பெருந்தொழிலை விட இரண்டு மடங்கு பெரியதாக "சுற்றுலா" வளர்ந்துள்ளது. இப்பொழுது உலகெங்கும் சுற்றுலாவுக்குச் செலவிடப்படும் தொகை ரூ. 11,000 கோடி ஆகும். இன்னும் ஐந்தாண்டுகளில் இத் தொகை 75 சத வீதம் அதாவது ரூ. 18,000 கோடி அளவுக்கு வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறுகிய காலத்தில் நிரம்ப அந்நியச் செலாவணியைத் திரட்டித் தரும் துறையாகச் சுற்றுலாத் துறை திகழ்கிறது. மிகுந்த வருமானம் தரும் துறையும் இது தான்.

எடுத்துக்காட்டாக யூகோஸ்லேவியா 1968-ஆம் ஆண்டில் சுற்றுலாவுக்காக ரூ. 38·3 கோடி ரூபாய் செலவு செய்தது. அந் நாட்டுக்குக் கிடைத்த வருமானம் ரூ. 140·3 கோடி. கிடைத்த லாபம் 250 சத விதம்.

ஸ்பெயின் நாடு ஒவ்வொரு ஆண்டும் தன் சுற்றுலா வருமானத்தால் நம் நாட்டு பிலாய் போன்ற இரண்டு உருக்கு ஆலைகளைக் கட்டும் அளவுக்கு வருவாயைத் திரட்டியுள்ளது.

பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுலாத் துறையே பெரும் செல்வத்தைத் திரட்டித்தரும் துறையாக அமைந்துள்ளது.

நம் நாட்டில் சுற்றுலாத்துறை வளர்ந்திருந்தாலும் ஏனைய நாடுகள் போல் மிக அதிகமாக வளரவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

1968-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி ரூ. 26·42கோடி. 1969-70ஆம் ஆண்டு, சுற்றுலா மூலம் கிடைத்தது ரூ. 33 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்தியச் சுற்றுலாத் துறையின் சார்பில் பொது மக்களின் கருத்தறியும் கழகம் தருகின்ற தகவல்கள் சுவையாக உள்ளன. அதே நேரத்தில் நாம் சுற்றுலாத் துறையை முற்றிலும் மறந்தோம் என்பதையும் உணர்த்துகிறது. சில சுவையான செய்திகள் இதோ:—

இந்தியாவுக்கு வரும் வெளி நாட்டுப் பயணி ஒருவரின் சராசரிச் செலவு ரூ. 1,367. அவர் தங்கும் நாட்கள் 23. நமக்கு அதிக வருவாய் கிடைப்பது அமெரிக்கச் சுற்றுலாப் பயணிகள் மூலமே யாகும்.

இந்தியாவுக்கு வரும் வெளி நாட்டுப் பயணிகள் தம் சுற்றுலா மிகவும் இனிமையானது என்றும் நினைவிலிருக்கும் தன்மையுடையது என்றும் புகழ்ந்துள்ளனர்.

1969-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த அயல் நாட்டுப் பயணிகளின் தொகை 2·45 இலட்சமாகும். அவர்களில் 48,080 பேர் தமிழ் நாட்டுக்கு வந்தனர். தமிழ் நாட்டுக்கு வந்தவர்களில் அமெரிக்கப் பயணிகளே அதிகம். அவர்களை அடுத்து இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி போன்ற ஏனைய ஐரோப்பிய நாடுகளின் பயணிகளும் வந்து சென்றனர்.



"அப்பா ! கைத்தறிப் பொருட்காட்சிக்குப் போகலாம்பா !" செல்வ மகளின் அன்புக் கோரிக்கையை அவரால் தட்ட முடியவில்லை.

அன்றுதான் கிடைத்த தீபாவளி ஊக்க ஊதியம் 'சரி' என்று சொல்ல அவருக்குத் தெம்பைக் கொடுத்தது.

உள்ளே எட்டிப் பார்த்தபடி "என்ன மரகதம், பொருட்காட்சிக்குப் புறப்படுகிறாயா ?" என்று மனைவியிடம் கேட்டார். மகளைத் தூண்டி விட்டதே மரகதம் தானே ! இருக்கிற புடைவையில்நல்லதாக ஒன்றைக் கட்டிக் கொண்டு தயாராக நின்றாள்.

கை வீசியபடியே அவர்கள் கைத்தறிப் பொருட்காட்சிக்குச் சென்றனர்.

வண்ணக்குழல் மின் விளக்குகள், செவிக்கினிய இசைப் பாடல்கள், பொருட்காட்சிக்கு வருவோரின் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளித்துக் கொண்டிருந்தன.

காரிலே வந்திறங்கும் காரிகைகள் ; கரம் இணைத்துச் செல்லும் புது மணமக்கள் ; மனத்திலே நிறைய ஆசையும் கையிலே கொஞ்சம் பணமும் வைத்துக் கொண்டு எதை வாங்குவது என்று தெரியாமல் தனது பெரிய குடும்பத்துடன் திண்டாடும் சம்சாரி; இத்தனையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு சுற்றி வரும் இளைஞர் கூட்டம்;

விற்பனைக்கு அனுப்ப நூற்கண்டுகள் தயார்.

இப்படிப் பலரக மாந்தர் பொருட்காட்சி அரங்குகளை மொய்த்தபடி இருந்தனர்.

மரகதம்மாள் குடும்பத்தினரும் இந்த மக்கள் வெள்ளத்துடன் வந்து கலந்தனர்.

எந்தக் கடைக்குப் போகலாம் என்று அவர்கள் சிந்திக்கு முன் எதிரே 'அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்' என்ற பெரிய பெயர்ப் பலகை அவர்களைக் கவர்ந்தது. எத்தனை ரகமான துணிகள் !

'டூபைடு', 'புல் வாயில்' என்று சொல்லப்படும் மெல்லிய மில் துணிகளையும் மிஞ்சும் வகையில் அழகிய சேலைகளும், ரவிக்கைத் துணிகளும் அங்கு அலங்கரித்து நின்றன. 60 இழை, 80 இழை, 100 இழை சேலைகளும், வேட்டிகளும் அதில் விரவிக்கிடந்தன.

ஆமாம்! எந்த ஊரில் பொருட்காட்சி நடந்தாலும், அங்கு இந்த அம்மாப்பேட்டை கைத்தறித் துணிகள் முதலிடம் பெறுவதைக் கண்டிருக்கலாம்.

புகழ்பெற்ற இந்த அம்மாப்பேட்டையின் மகுடம் போல் அமைந்திருக்கிறது, சேலம் கூட்டுறவு நூற்பாலை.

நுழைவாயிலைத் தாண்டியதும் அழகிய பூஞ்செடிகள் நம்மை வரவேற்கின்றன. பூஞ்செடிகளைத் தாண்டி எழிலான கட்டடத்தில் அமைந்திருக்கிறது ஆலை. ஆலையின் அழகினைப்போல் உட்புறமும் சுத்தமாக, சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு பெரிய இயந்திரம் மூன்று வகைப் பருத்திகளை ஒன்றாக இணைக்கிறது. தூசிகளைத் தனியே நீக்குகிறது.

அடுத்த கூடத்திலுள்ள 28 இயந்திரங்கள் இந்தப் பஞ்சுகளை ஒரு விரல் பருமனுள்ள திரிகளாக்குகின்றன.

அடுத்த கூடத்தில் ஓர் இயந்திரத்தில் 8 திரிகள் ஒன்றாக்கப் படுகின்றன. பின் மற்றொரு இயந்திரம் இந்தத் திரிகளிலுள்ள நீளம் குறைந்த இழைகளையெல்லாம் சீப்பு வாருவது போல் வாரி எடுத்து விடுகின்றது. மற்றொரு இயந்திரம் சிறிய திரி போலாக்குகிறது.

அடுத்துள்ள கூடத்தில் நூற்பு நடைபெறுகிறது. கதிர்களில் (முன்பு கம்புக் கதிர்கள், தற்போது பிளாஸ்டிக்கினால் ஆகிய கதிர்களும் பயன்படுத்தப்படுகின்றன) நூல்கள் தாமாகச் சுற்றப்படுகின்றன.

கடைசிக் கூடத்தில் கைத்தறிகளுக்கான சிறிய கதிர்களிலுள்ள நூற்கண்டுகள், விசைத்தறிகளுக்கான பெரிய நூற்கண்டுகள் தனித்தனியாகப்

இழையைச் சரிபார்க்கிறார், நிர்வாக இயக்குநர்.

பிரித்து எடை போட்டுக் கட்டப்படுகின்றன.

சிரித்த முகத்துடன், சுறுசுறுப்புடன் ஒவ்வொரு இயந்திரத்தைப் பற்றியும் நமக்கு விவரித்துக் கொண்டு வருகிறார், நூற்பாலையின் நிர்வாக இயக்குநர் திரு. திவான் முகமது.

நூற்பாலையைப் பற்றிய விவரம் கேட்டதும், ஆர்வத்துடன் பதில் தருகிறார்.

"நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மற்ற கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்ட நெசவாளர்கள், தமிழக அரசு ஆகியோர் கூட்டுச் சேர்ந்து முதலீடு செய்து, கூட்டுறவு முறையில் 1 — 6 — 1964-ல் ஆரம்பிக்கப்பட்டது இந்த நூற்பாலை.

பம்பாய், ஆமதாபாத் பகுதிகளில் நூற்பாலைகள் வேறு வழியில் இயங்குகின்றன. அங்கு பஞ்சு, ஆலைக்கு வந்து விட்டால், வெளியே வரும்போது நெய்த துணிகளாகத்தான் வரும்.

ஆனால், தமிழ்நாட்டு ஆலைகளுக்குப் பஞ்சு, கோவை, ராஜபாளையம் தவிர, மராட்டியம், குஜராத், மைசூர் ஆகிய மாநிலங்கள் மற்றும் சூடான், எகிப்து, கிழக்கு ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற வெளி நாடுகள் ஆகியவற்றிலிருந்தும் வாங்கப்படுகிறது. வாங்கிய பஞ்சு இங்குள்ள நூற்பாலைகளில் நூலாகி மீண்டும், பம்பாய், ஆமதாபாத் போன்ற நகர்களுக்குச் செல்கின்றது. அங்கு துணியாகி மீண்டும் அவை தமிழகத்தில் விற்பனைக்கு வருகின்றன.

இது நாலு வழிப்பாதை போல் உள்ளது. இந்நிலையை மாற்ற இப்போது புதிய திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. சேலம் கூட்டுறவு நூற்பாலையை ஒட்டி இன்னொரு நூற்பாலை கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 12,000 கதிர்களுடன் இயங்கிய இந்த ஆலையில் தற்போது 14,080 கதிர்கள் உள்ளன.

மாதம் ஒன்றுக்கு 6 லட்சம் ரூபாய்க்கும், ஆண்டுக்கு சுமார் 75 லட்சம் ரூபாய்க்கும் இங்கு நூற்கப்படும் நூற்கண்டுகளை விற்கிறோம்.

தற்போது 60-ம் எண், 80-ம் எண், 100-ம் எண் நூல்கள் மட்டும் இந்த ஆலையில் நூற்கப்பட்டு நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் அதை வைத்துப் பாவு போட்டுக் கைத்தறியில் துணி நெய்கிறார்கள்.

பஞ்சுகளைச் சுத்தம் செய்து பாய்போல் சுருட்டுகிறது, இயந்திரம்.

இந்தியாவைக் காணவேண்டுமென வந்தவர்களின் தொகையே 52 சதவிகிதமாகும். பிற பயணிகள் மற்ற நாடுகளுக்குச் செல்லும் வழியில் இந்தியாவைப் பார்த்துச் சென்றவர்களே ஆவர்.

விமானம் மூலம் வந்தவர்கள் 83·9 சதவிகிதம். கடல் வழி வந்தவர்கள் 11·1 சத விகிதம். தரை வழியே வந்தவர்கள் 5 சத விகிதம்.

இந்தியாவுக்கு வருவோர்க்கு விமானப் பயணத் தொடக்கத்திற்கு ஏற்ற இடமாக டெல்லி முதலிடம் வகிக்கிறது. அடுத்த இடத்தைப் பம்பாய் பெறுகிறது. விரைவில் சென்னையிலும் சர்வதேச விமான நிலையம் அமைந்துவிடும். அதன் பிறகு நாமும் வெளிநாட்டுப் பயணிகளை அதிகம் எதிர்பார்க்கலாம்.

எல்லா நாட்டினருக்கும் விமானப் பயணமே விரும்பத் தக்கதாக அமைந்துள்ளது. வசதியும் விரைவும் உள்ளதால் விமானப் பயணமே எல்லாராலும் விரும்பப்படுவதாக இருக்கிறது.

இந்தியாவில் சுற்றுலாவினரை ஈர்க்கும் பெருநகரங்களில் முதன்மையானவை ஆக்ரா, கல்கத்தா, சென்னை, வாரணாசி, ஜெய்ப்பூர் ஆகியவையாகும்.

தென்னகத்தில் அயல்நாட்டுச் சுற்றுலாக்காரர்களை மிகவும் கவருமிடங்கள் தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளன. அவைகளில் நம் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

தொன்மை வாய்ந்த கோயில்கள்,

கலைக் கருவூலங்கள், வரலாற்றுச் சின்னங்கள்,

இயற்கை எழில் குலுங்கும் இடங்கள்

இப்படிப் பல்வேறு பகுதிகள் சுற்றுலாக்காரர்களைக் கவருவதற்கு வாய்ப்பு உண்டு.

நம் நாட்டிலுள்ள 'சுற்றுலா' இடங்களுக்குப் போதிய விளம்பரமில்லை என்று பொதுப்படையாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. அதைத் தவறு என்றும் சொல்லிவிட முடியாது. எனவே நம் நாட்டிலுள்ள சுற்றுலா இடங்களுக்கு உரிய விளம்பரங்கள் அளிக்கவேண்டும்.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் உறைவிடம், உணவு விடுதிகள் போன்ற சுற்றுலா வசதிகளைப் பெருக்கிட வேண்டும்.

சுற்றுலாத் தேவைகளை முற்றிலும் மறந்தோம் என்ற எண்ணத்தை மாற்றிடப் புதிய திட்டங்களை வகுத்து வருகிறது நம் அரசு.

சின்னஞ் சிறிய இத்தாலி நாட்டுக்குத் தனது புராதனப் பெருமையால் சுற்றுலா மூலம் கிடைக்கும் வருமானம், மிகப் பெரிய அமெரிக்காவில் சுற்றுலா மூலம் கிடைக்கும் வருமானத்தைவிட அதிகம்.

இத்தாலி போன்று மிகுந்த பழமை வாய்ந்த-புராதனப் பெருமை மிக்க நம் நாடும் சுற்றுலா மூலம் மிகுந்த பொருளீட்ட வாய்ப்புக்கள் ஏராளம்! ஏராளம்!!

அவ்வாய்ப்புக்களைச் சீரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு, நம் நாட்டில் சுற்றுலாத் துறையை வளர்க்க வேண்டியது நம் கடமையாகும்.

அனைத்து இந்திய சுற்றுலா வளர்ச்சிக் குழுவின் 14-வது கூட்டம் மதுரையில் இத் திங்கள் 17-ஆம் நாள் துவங்கி 21-ஆம் நாள் வரை நடைபெறவிருக்கிறது.

மைய அரசு சுற்றுலா அமைச்சர் திரு. கரன்சிங் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் குழுக் கூட்டத்தை மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் தொடங்கி வைக்கிறார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து, அனைத்து மாநில சுற்றுலா அமைச்சர்கள், சுற்றுலா இயக்குநர்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு துறையைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் சுற்றுலா வளர்ச்சிக்கான முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விளையாட்டு வினையாக வேண்டும்!

'விளையாட்டு வினையாக வேண்டும்!' வேடிக்கையான விருப்பம்—மேலெழுந்த வாரியாகப் பார்த்தால்! விபரீதமாகவும் சிலர் கருதக்கூடும். ஆனால் உறுதியாகச் சொல்லிவிட்டார் முதல்வர். "விளையாட்டு வினையாக வேண்டும்" என்று! காரணத்தையும் அவரே சொல்கிறார். "வினை என்றால் செயல்—இந்த விளையாட்டு வெறும் விளையாட்டாக இருந்து வீணாகி விடக்கூடாது. இத்தகைய விளையாட்டுகளால் நல்ல உடலும், உள்ளமும், படைத்த வீரர்கள் உருவாகி அவர்கள் நாட்டுக்குப் பயன்படும் செயல் வீரர்களாக வேண்டும்—ஆகவே சொல்கிறேன், விளையாட்டு வினையாகட்டும்" என்று!

எங்கே இந்த இலக்கிய ஆராய்ச்சி என்கிறீர்களா? பட்டிமண்டபம் எதுவோ நடத்திய கருத்தரங்கில் அல்ல; புலவர்கள் அவையில் நிகழ்த்திய பேருரையிலும் அல்ல; ஒரு விளையாட்டு அரங்கில். விளையாட்டு அரங்கில் இலக்கியமணம் கமழும் சொல் விளையாட்டு!

29-9-1970 அன்று மாலை எழும்பூர் விளையாட்டு அரங்கில் அறிஞர் அண்ணா நினைவு ஆக்கிப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட மாண்புமிகு முதல்வர் கலைஞர் இந்த அரிய கருத்துரையை எடுத்துரைத்தார். அவருடைய சொற் சிலம்பத்தில் மயங்கியவர்களில் நானும் ஒருவன். விளையாட்டரங்கிலுமா இந்தச் சிலம்பம் என்று எண்ணி எண்ணி வியந்த வண்ணம் மெல்ல வந்து கொண்டிருந்தேன். என் மனத்தில் ஏதேதோ இலக்கியச் சிந்தனைகள். அதனால் கொஞ்சம் சூழ்நிலையையும் மறந்தவனாகவே வந்துகொண்டிருந்தேன்.

பக்கத்திலே ஒரு கார் வந்து நின்றது. "என்ன போய் வரட்டுமா?" என்று கேட்கிறார். ஆம்; முதல்வர்தான்! இரண்டு சொல் பேசுவதற்குக்கூட உடனே நான் தயாரில்லை. நான்தான் சற்று நேரத்திற்கு முன் நடந்த "வினை" ஆராய்ச்சியில் மூழ்கிக் கிடக்கிறேனே! கார் மறைந்த பிறகும் என் நினைவு, 'வினை'யை விட்டு விலகவில்லை.

எப்படியோ தெரியவில்லை! இந்த வினை, பொல்லாத பொருளைப் பெற்றுவிட்டது. இடைக் காலத்தில் "அவனா? வினையாயிற்றே!", "என் வினை உன்னைச் சும்மா விடாது", "வினைப்பயன்" என்பன போன்ற தொடர்களும், சொல்லாட்சியும் ஒருவனை இழித்துப் பேசவே பயன்படுகின்றன. ஒரு காலத்தில் நல்ல பொருளில்

பேராசிரியர்

மா. கி. தசரதன் எம். ஏ.

பயன்பட்ட அந்தச் சொல் இப்படி வேறான பொருளிலும் வழங்கக் காணுகிறோம்.

சொற்கள் காலந்தோறும் பொருளில் மாற்றம் பெறுவது இயல்புதான். 'பொடி', 'பொன்', 'நெய்' போன்ற சொற்கள் பழங் காலத்தில் வழங்கிய பொருளில் இன்றைக்கு வழங்குவது இல்லை. அவை போலவே இந்த வினையும் இன்று வேறு பொருளில் வழக்குக்கு வந்து விட்டது.

இன்றைக்கும் வினை என்பது இலக்கணத்தில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. இலக்கணப் புலவரின் தெய்வமாக வினைச்சொல் விளங்குகிறது என்கிறார் 'பல்லார்ட்' என்னும் மேற்கு நாட்டு மொழி நூல் அறிஞர். ஒரு சொற்றொடரில் உயிரானது வினைச் சொல்தான். பெயர்ச் சொல் இல்லாமல், அடைமொழிகள் இல்லாமல் பேசலாம், எழுதலாம். ஆனால், வினைச் சொல் இல்லாமல் பேசினால், எழுதினால் அது பொருள் புலப்படுத்துவதாக ஆவதில்லை. சொற்றொடரும் முடிவு பெறுவதில்லை.

வாழ்வுக்கு வழி வகுத்த வள்ளுவரும் வினையைவிட்டவர் அல்லர். வினைத் தூய்மை, வினைத் திட்பம், வினை செயல் வகை என்று அதிகாரம் அதிகாரமாக வினையின் பெருமையை எடுத்துரைக்கக் காண்கிறோம்.

அது மட்டுமா, 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்ற பாடலைப் பாடிய பெருங்கடுங்கோ எனும் புலவர் குறுந்தொகையில் அறுதியிட்டுக் கூறுகிறார்.

இவ்வளவெல்லாம் இருந்தும் எப்படியோ, வினை, வேறான பொருளைப் பெற்றுவிட்டது. மாண்புமிகு முதல்வர், வினைக்கு உரிய பழைய பொருளையே பழமொழியில் பாருங்கள் என்று ஓர் ஆராய்ச்சியை மிகச்சாதாரணமாகச் சொல்லிவிட்டார்!

விளையாட்டரங்கிற்குப் போன எனக்கு இந்த 'வினை' பிடித்துவிட்டது?

முதல்வரின் முத்திரை இதுமட்டுமா? இல்லை இல்லை!

அன்று ஆட்டத்தில் ஈடுபட்ட இரயில்வே அணி, இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை அணி ஆகிய இரண்டுக்கும் வெற்றி தோல்வி என்பது இல்லாமல் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. காசு போட்டுப் பார்த்து யார் வென்றவர் என்று தீர்மானிக்க வேண்டிய நிலை வந்து விட்டது.

விழாவுக்குத் தலைமை தாங்கிய தொழிலதிபர் மகாலிங்கம் அவர்கள் ஒரு நாணயத்தைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு "பூவா—தலையா—எது வேண்டும் ?" என்று கேட்கிறார். இரயில்வே 'பூ' வேண்டும் என்கிறது; இணைப்புப் பெட்டியினர் 'தலை' வேண்டும் என்கின்றனர்.

காசு விண்ணை நோக்கி எழுந்து மண்ணில் விழுகிறது.

'பூ'
இரயில்வே வென்றது !

முதல்வர் சொல்கிறார், "இது நாணயத்தால் தீர்மானிக்கப்பட்ட வெற்றி. ஆகவே நாணயமான வெற்றி" என்று! "தலை கேட்டவர்களுக்கு வெற்றிகிடைக்கவில்லை. ஏனென்றால், தலை கேட்பது வன்முறையல்லவா ?" என்கிறார்.

அடுத்து இப்படிப் பல! விளையாட்டரங்கிலும் இந்த இலக்கிய மணமா என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். என் மகிழ்ச்சி மேலும் பெருகியது— மாலை செய்தி இதழ்களைக் கண்டதும் !

இனி' செங்கை' என்றே வானொலியில் சொல்வார்கள் என்பதைப் படித்தேன்.

"இந்தப் 'பொல்லாத' மனிதர் எதனையும் விளையாட்டாகவே தொடங்கி, வினையாக்கிவிடுகிறாரே"—என்று எண்ணினேன். விளையாட்டு வினையாக வேண்டும் என்பது மேலும் பொருள் பொதிந்த உரையாக என் மனத்தில் பளிச்சிட்டது. அடிக்கடி இப்படி 'வினையாகட்டும்' என்று விரும்பினேன் !

பாடல் பெற்ற ஆறு

கூவத்தின் பழைய பெயர் 'கூகம்' என்ற உண்மை திருஞானசம்பந்தர் பாடலால் தெரிய வருகின்றது.

சென்னையில் இருந்து அரக்கோணம் செல்லும் இருப்புப் பாதையில் கடம்பத்தூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து தெற்கே ஆறு கல் தொலைவில் கூவம் என்று ஓர் ஊர் உள்ளது. இதற்குத் திருவிற்கோலம் என்றும் பழம்பெயர் ஒன்று உண்டு. தொண்டை நாட்டின் ஐந்து பெருங்கோயில்களில் ஒன்று இங்கு உள்ளது.

இவ்வூருக்கு அண்மையில் தான் கூவம் ஆறு ஓர் ஏரியில் இருந்து புறப்படுகின்றது. எனவே, இந்த ஆறும் கூவம் என்று பெயர் பெற்றது போலும் !

சோலைகள் சூழ்ந்த எழில் கொஞ்சும் ஊர் என்று திருஞானசம்பந்தர் இந்த ஊரை வர்ணிக்கின்றார்.

முந்தினான் மூவருள்
முதல்வன் ஆயினான்
கொந்துலாம் மலர்ப்பொழில்
கூக மேவினான்
அந்திவான் பிறையினான்
அடியர் மேல்வினை
சிந்துவான் உறைவிடம்
திருவிற் கோலமே

ஊர்ப் பெயர் கூகம் என்று உரைக்கப் பெறுவதால் அதைச் சார்ந்த ஆற்றுப் பெயரும் கூகம் என்றே அழைக்கப்பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்ச் சான்றோர் ஒருவரின் திருவாக்கோடுதொடர்புடைய ஓர் ஆறு, சென்னை நகரில் இதுகாறும் நாற்றம் அடித்துக்கொண்டு இருந்தது. இதை நாற்றமெடுக்க விட்டு நமக்கென்ன என்று இருப்பது நம் முன்னோர்க்கு நாம் செய்யும் மரியாதை ஆகாது. மேலும், இது மக்கள் உடல் நலத்திற்குப் பெருந்தீங் குவிளைவிக்கும்.

இதை உணர்ந்து அப் பழம் பெரும் ஆற்றின் சீரமைப்புத் திட்டத்தை மேற்கொண்டு உள்ள தமிழக அரசைத் தமிழ்ச் சான்றோர் சார்பில் நின்று வாழ்த்துவோமாக.

(கு. சிவஞானம், எம்.ஏ.)

மையப் பக்கத்தில் மதுரைக் காட்சிகள்

அனைத்திந்திய சுற்றுலா வளர்ச்சிக் குழுவின் பதினான்காவது குழுக்கூட்டம் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்டத்தின் காட்சிகள்.

1. கோடைக்கானலில் உள்ள அருவி.
2. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திலுள்ள ஒரு சிற்பம்.
3. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் முழுமையான மேற்புறத் தோற்றம்.
4. அழகர் கோவில்.
5. பெரியாறு ஏரி தோற்றம்.
6. பெரியாறு மின்விசைநிலையம்.
7. வைகை அணை.
8. மீனாட்சி திருக்கல்யாண ஓவியம்.
9. மதுரை நகரிலுள்ள காந்தி மியூசியம்.
10. மதுரை மாரியம்மன் தெப்பக்குளம்.
11. திருப்பரங்குன்றம் ஆலயம்.
12. திருமலை நாயக்கர் மகால்.
13. பழனி மலைமீது செல்லும் மின்சார ஊர்தி.


AND ENVIRONS

பட விளக்கம்

39-ஆம் பக்கத்தில்

1. திண்டுக்கல்லில் தந்தை பெரியார் உருவச்சிலையை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

2. மாநிலங்களின் நீர்ப் பாசனத் துறை மின்துறை அமைச்சர்களின் ஐந்தாவது மாநாட்டினை உதகையில் 24—9—1970 அன்று தமிழக ஆளுநர் துவக்கி வைத்தார். மைய அரசு அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களும் மாநில அமைச்சர்களும் உள்ளனர்.

3. 4, 5, 6, 7 படங்களில் சென்னையில் நடைபெற்ற சோவியத் நாட்டு கிராமிய நடனக் குழுவினரின் நடனக் காட்சிகளையும் குழுத் தலைவிக்கு. முதலமைச்சர் பரிசளிப்பதையும் காணலாம்.

42-ஆம் பக்கத்தில்

1. மைய அரசு நிதியமைச்சர் ஒய். பி. சவாண், தமிழக முதல்வர், சென்னையில் நடைபெற்ற திரைப்படத் தொழில் நுட்பக் கலைஞர்கள் சங்க விழாவில்.

2. நியூசிலாந்து நாட்டுத் தூதுவர் திரு பி. எஸ். லெண்டிரம், முதல்வரைச் சந்தித்தார்.

3. பஞ்சாப் மாநிலப் பொதுத் தொடர்புச் சுற்றுலா அமைச்சர் திரு. தர்லோக் சந்த் சிங் ரியாஸ்தி, முதல்வரைச் சந்தித்தார்.

4. சைதையில் நடைபெற்ற குடும்ப நல இருவார விழாவில் முதல்வர் பரிசு வழங்குகிறார்.

5. சோவியத் நாட்டின் புதிய தூதுவர் திரு ஹார் செய்கோ தமிழக முதல்வரை அவரது இல்லத்தில் சந்தித்தார்.

6. ராஜஸ்தானிச் சங்க விழாவில் முதல்வருடன் திரு சுந்தரலால் நகாதா.

செங்கல்பட்டு மாவட்டம், கால்வாய்க்கண்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஸ்ரீராம். பயிர்த் தொழில் செய்யும் போது அவரது வலது கண்ணில் ஓலை அடித்து விட்டது. மறுநாள் கண்ணில் மிகுந்த குத்தல் எடுத்தது. வேதனை தாங்க முடியாமல் கண் பார்வை இழந்த நிலையில் அவர், சென்னை எழும்பூர் மருத்துவ

கண்ணில் அடிபட்டவருக்கு 'எக்ஸ்ரே' எடுக்கப்படுகிறது.



547

மனைக்கு வந்தார். அங்கு தகுந்த பரிசோதனைக்குப் பின் கண்ணில் காளான் பூத்துள்ளது (fungus) கண்டு பிடிக்கப்பட்டது. அதற்குத் தேவையான மருந்து போடப்பட்டு, அறுவைச் சிகிச்சையும் நடந்தது. இழந்த பார்வையை மீண்டும் பெற்றார் அந்த இளைஞர்.

இதுபோல், பட்டாசு கொளுத்தியதால் கண்ணில் காயம்பட்டோர். கண்படலம் (Cataract) உள்ளோர், கண்ணில் புண் ஏற்பட்டு, பார்வை இழந்தோர், கண் நீர் அழுத்த நோய், சத்துக் குறைவால் ஏற்படும்நோய், இமை இளைப் படலம், கண்ணாடி அணிய வேண்டிய குறைபாடுகள் இப்படி நாள் தோறும் சுமார் 800க்கும் மேற்பட்ட கண் பிணியாளர் எழும்பூரிலுள்ள அரசினர் கண் மருத்துவ மனைக்குச் சிகிச்சை பெற வருகின்றனர்.

செழித்து வந்துள்ள மரங்களிடையே செங்கல் கட்டடங்களில் அமைந்துள்ள இந்த மருத்துவ மனை உலகிலேயே இரண்டாவதாகத் தோன்றிய கண் மருத்துவ மனையாகும். 1804-ல் லண்டனில் கண் வைத்தியத்திற்கென்று ஒரு மருத்துவ மனை ஏற்பட்டது. அதன் பின் 1819-ல் ராபர்ட் ரிச்சர்ட்சன் என்ற கண் மருத்துவ நிபுணரின் முயற்சியால் கிழக்கு இந்தியக் கம்பெனியினால், இந்தக் கண் மருத்துவமனை சென்னை ராயப்பேட்டையில் நிறுவப்பட்டது. கண் மருத்துவத்திற்கென்றே இது தனியாக இயங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாகப் பல நாடுகளில், மற்ற மருத்துவ மனைகளின் ஒரு பிரிவாகவே கண் மருத்துவம் இயங்கி வருகிறது.

கண் வங்கியை உருவாக்கிய டாக்டர் முத்தையா.

கண் பரிசோதிக்கப்படுகிறது.

துவக்கத்தில் அது எந்த இடத்திலிருந்தது என்பது தெரியவில்லை. ஆனால், 1820 ஜூன் திங்களில் அது, தற்போது 'தினத் தந்தி' அலுவலகம் உள்ள இடத்திற்கு இடம் பெயர்ந்தது. பின் 1886ல் தற்போது எழும்பூர், மார்ஷல் சாலையிலுள்ள இடத்திற்கு நிரந்தரமாக மாற்றப்பட்டது. பல மேலை நாட்டு டாக்டர்களின் இடையறா முயற்சியால் மென் மேலும் வளர்ந்து வந்தது. இந்த மருத்துவமனையின் முதல் இந்தியக் கண்காணிப்பாளர் டாக்டர் கே. கோமன் நாயர் ஆகும். அவருக்குச் சில காலத்திற்குப் பின்னால் கண்காணிப்பாளரான டாக்டர் ஆர். ஈ. எஸ். முத்தையா பல அற்புதமான சாதனைகளைப் புரிந்தார். கண் மருத்துவ நிபுணரான லெப். கர்னல் ஆர். ஈ. ரைட் என்பவரால் இளம் பிராயத்திலிருந்தே பயிற்சியளிக்கப்பட்ட டாக்டர் முத்தையா இங்கு 1948-ல் கண் வங்கியை (Eye Bank) ஏற்படுத்தினார். அதன் பயனாக 1948 ஜனவரித்திங்களில், முதல் மாற்றுக் கண் பொருத்தும் அறுவைச் சிகிச்சை (Corneal Transplantation) நடத்தப்பட்டது. கண் நோய் மருத்துவ அதிகாரிகளை வெளிநாட்டுக்குப் பயிற்சிபெற அனுப்புவது, கண்ணாடி விற்பனையாளர்களுக்கு (Optician) பயிற்சிப்பள்ளி ஏற்படுத்துவது, மருத்துவமனையை விரிவுபடுத்த நிலம் வாங்குவது, கிராமங்களில் கண்நோய் சிகிச்சை செய்ய நடமாடும் மருத்துவ மனை ஏற்படுத்துவது ஆகியவை டாக்டர் முத்தையாவின் திட்டங்களே. 1956-ல் அவர் எதிர்பாராத விதமாக மரணம் அடைந்தது இத் துறைக்குப் பேரிழப்பாக அமைந்தது.

தற்போது டாக்டர் ஜே. ஈ. ஆப்ரகாமின் திறமை மிக்க நிர்வாகத்தில் இயங்கும் இந்த மருத்துவமனையின் கடந்த நான்கு ஆண்டுச் சாதனைகள் மிகவும் குறிப்பிடத்தகுந்தன.

முதலமைச்சருக்குக் கடந்த பல ஆண்டுகளாகக் கண்ணில் தொந்



தரவு ஏற்படும்போது மருத்துவம் செய்து வருபவர் என்ற முறையில் முதலமைச்சர் அவர்களின் மேலை நாட்டுச் சுற்றுப் பயணத்தின் போது உடன் சென்று வந்தவர், டாக்டர் ஆப்ரகாம்.

இந்த மருத்துவ மனையின் எதிரில் ரூ. 18.75 லட்ச ரூபாய் செலவில் புதிய இரண்டு மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதில், வெளியிலிருந்து வரும் நோயாளிகள் (Out-patients) பார்க்கப்படுவதற்கும் மற்றும் பல துறைகளுக்கும் தனித் தனியே அரங்குகள் உள்ளன.

உலகத்திலேயே மிகப் பெரிய கண்மருத்துவ மனைகளுள் ஒன்றான இதன் 150-வது ஆண்டு விழா சென்ற ஆண்டு நடைபெற்றது. விழாவினைத் தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் தொடங்கிவைக்க, தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இந்தப் புதிய கட்டடத்தை 1969-ம் வருடம் டிசம்பர் மாதம் 10-ம் தேதி அன்று திறந்து வைத்தார்.

தற்போது 326 படுக்கை வசதியுள்ள இந்த மருத்துவ மனையில் மேலும் 200 படுக்கைகள் ஏற்படுத்த முடிவாகியுள்ளது. இதற்காக இந்தப் புதிய கட்டடத்தில் 8 லட்ச ரூபாய் செலவில் மாடி கட்ட அரசு அ மதித்துள்ளது. விரைவில் இந்தக் கட்டடம் உருப் பெறும்.

இந்தியாவில் கண் மருத்துவப் படிப்பில் சான்றிதழ் படிப்பினை (Diploma Course) ஒன்று ஏற்படுத்திய முதல் மருத்துவ மனை என்ற பெருமையும் இதற்கு உண்டு.

இங்கு கண் மருத்துவத்தில் தொழில் உரிமைப் படிப்பு (L.O.) 1926-லும், சான்றிதழ் படிப்பு (D.O.) 1942-லும், அறுவைச் சிகிச்சையில் முது நிலைப் படிப்பு (M.S.) 1948-லும் துவக்கப்பட்டது. அதோடு சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி ஆகியவைகளில் பயிலும் 4-வது ஆண்டு மருத்துவக் கல்வி மாணவர்கள், கண் மருத்துவப் படிப்பிற்காக இங்கு அனுப்பப்படுகின்றனர்.

இந்த மருத்துவ மனையில் 1948-ஆம் ஆண்டு, கண் வங்கி துவக்கப்பட்டது. இறந்த இரண்டு மணி நேரத்திற்குள் இறந்தவரின் உடலிலிருந்து கண்ணை எடுத்துப் பனிக் கட்டியில் வைத்துப் பாதுகாப்பதே இந்தக் கண் வங்கியின் பணியாகும். அவ்வாறு கொண்டு வரப்பட்ட கண்களை இரண்டு நாட்களுக்குள் பயன்படுத்தி ஆக வேண்டும். அப்போது தான் நோயாளிக்குப்பார்வை கொடுக்க முடியும். 48 மணி நேரம் கடந்து விட்டால் இந்தக் கண் பயன் படாது.

இந்தக்கண் மாற்று அறுவைச் சிகிச்சை எப்படி நடக்கிறது என்பது மிகவும் வியத்தகு செயலாகும்.

முழுக் கண்ணும் அப்படியே மாற்றப்படுவது இல்லை. அவ்வாறு மாற்றினால் அதை நோயாளியின் உடல் ஏற்றுக்கொள்வதில்லை.

கண்ணில் திரை படர்ந்துவிடும் (Opagueornea) நிலையை மாற்றுவதற்கே இந்தக் கண்மாற்று அறுவைச் சிகிச்சை (Corneal transplantation or corneal grafting) செய்யப்படுகிறது. முதலில் நோயாளின் திரை படர்ந்த கரு விழித் தோலை நீக்கிவிட்டுப் புதிய கண்ணிலுள்ள அதே அளவுள்ள கருவிழியை அகற்றி அதை இதில் பொருத்தி மிக நுண்ணிய தையல் போடப்படு

கிறது. அறுவைச் சிகிச்சைமுடிந்து குணமான பின் நோயாளி இழந்த தனது பார்வையைப் பெறுகிறார்.

இதற்குக் கண் வழங்குபவர் யார்? இறந்தவர்கள் தான் வழங்க முடியும். மருத்துவ மனைகளிலுள்ள அனாதை உடல்களிலிருந்து எடுக்கப்படுவது உண்டு. அதே போல் சிலர் உயிரோடு இருக்கும்போதே, இறந்த பின் தனது கண்ணை வேறு யாருக்காவது பயன்படுத்தும்படி நன்கொடை வழங்குவதுமுண்டு.

ஆனால் நம் நாட்டிலுள்ள மூடப் பழக்கவழக்கங்கள் காரணமாகச் சில குடும்பத்தினர் நன்கொடையாளரின் கண்ணை அவர் இறந்த பின் எடுக்கவிடுவது கிடையாது. உடலைச் சிதைப்பது பாவம்என்று கருதுவதே இதற்குக் காரணம். 'செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி' என்பது முதுமொழி. இறக்கும் மாந்தர் மனித குலத்திற்குக் கண் ஒளி தருவதை விடச் சிறப்பான

599

ஒரு நோயாளிக்குக் கண் பரிசோதனை செய்வதைக் கண் மருத்துவ மாணவ-மாணவியர் பார்வையிடுகின்றனர்.

நன்மை அல்லது நன்கொடை வேறு எதுவாக இருக்க முடியும் என்பதனை அவர்கள் எண்ணிப் பார்த்திலர். சென்ற ஆண்டு இலங்கையிலிருந்து விமானம் மூலம் சில கண்கள் நன்கொடையாக வந்ததாலும், இங்கும் சில கிடைத்ததாலும் சுமார் 30 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு 30 பேர் கண்பார்வை பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆனல் இவ்வாண்டு கண்கள் கிடைப்பது அரிதாக உள்ளன. இதுவரை சுமார் 5 அறுவைச் சிகிச்சைகளே நடந்துள்ளது.

இந்த மருத்துவ மனை செய்யும் மற்ருேர் அரும்பணி, கிராமம் கிராமமாகச் சென்று, கண்நோய்களைத் தீர்ப்பதாகும். அதற்காக நடமாடும் மருத்துவ மனை வண்டியுள்ளது. சென்னையைச் சுற்றிப் பல மைல் சுற்றளவில் உள்ள சில ஊர்களுக்கு, ஆண்டுக்கு நான்கு முறை இந்தக் கண் மருத்துவமுகாம் போடப்படுகிறது. ஒரு முகாமில் 15 நாள் தங்குகிருர்கள். அறுவைச் சிகிச்சைகள், மருந்தளிப்பது, கண்ணுடிகள் வழங்கல் போன்றவை நடத்தப்படுகின்றன. அறுவைச் சிகிச்சை மாத்திரம் 4 நாட்கள் நடத்தப்படுகின்றன. அதில் பெரும்பாலானவை கண் திரைப்படலம் (Cataract) நோய்க்கான அறுவைச் சிகிச்சையே! மருத்துவமனைக் கண்காணிப்பாளரும், ஓர் அறுவைச் சிகிச்சை டாக்டரும் இதை நடத்துகிருர்கள்.

கடந்த முகாம் நாமக்கல்லில்சென்ற மாதம் 9-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. சிறு அறுவைச் சிகிச்சைகள் தவிர 'காடராக்ட்' சிகிச்சை மட்டும் 311 செய்யப்பட்டது. அரிமா சங்கத்தினர் இலவசமாகக் கண்ணுடிகள் வழங்கினர்.

முன்னேறி வரும் விஞ்ஞான யுகத்தில் ஆராய்ச்சி முக்கிய அங்கம் வகிக்கிறது. அதுவும் குறிப்பாக மருத்துவத் துறையில் மிகவும் முக்கியமானதாகும்.

எனவே கண் மருத்துவத் துறையில் ஆராய்ச்சிக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

பொதுவாகக் கண்ணில் காளான் பூப்பதுபோல் (fungus) ஒரு நோய் ஏற்படுகிறது. இது பெரும்பாலும் (90 சதவீதம்) விவசாயிகளைத் தான் பாதிக்கிறது. மண் தழை அல்லது ஓலை முதலியவைகள் கண்ணில் பட்டு இந்த நோய் ஏற்படுகிறது. இதைக் குணப்படுத்துவதற்கான ஆய்வு இங்கு நடத்தப்படுகிறது. 1968-லிருந்து இதற்கான சிகிச்சை நடந்து வந்த போதிலும் தொடர்ந்து இது ஆராய்ச்சியிலுள்ளது. இந்திய வைத்திய ஆய்வுக் குழுவின் (Indian Council of Scientific Research) சார்பில் இந்த ஆய்வு நடக்கிறது. இந்த ஆய்வுக்காக சீமை எலிகளைப் (Guineapig) பயன்படுத்துகிருர்கள்.

மற்றும் கண் திரைப் படலம். (Cataract), கண் நீர் அழுத்தம் போன்ற நோய்களுக்கும் மாநில அரசின் சார்பில் இங்கு ஆய்வுகள் நடந்து வருகின்றன.

கண் அறுவைச் சிகிச்சையில் நிபுணராகவும், இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தின் முக்கிய ஆய்வாளராகவும் இப்பிரிவில் பணியாற்றி வந்த டாக்டர் இ. பாலகிருஷ்ணன் 6-10-70 அன்று மாரடைப்பினல் எதிர்பாராத விதமாக இயற்கையெய்தினர். அவரது மறைவு இந்த மருத்துவ மனைக்கும், இந்த ஆய்வுப் பிரிவுக்கும் இழப்பாகும்.

கண்நோய் வந்தவர்களைக் கண்ணின் மணிபோலப் பாவித்துச் சிகிச்சை செய்து வரும் இந்த மருத்துவ மனை வள்ளுவனின்

''நோய்நாடி நோய்முதல் நாடி
அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

என்ற வாய்மொழிப்படிச் செயல்படுகிறது என்று கூறலாம்,

கண் நோய் ஆய்வுக்காக, சீமை எலியைப் பயன்படுத்துகிருர், ஆய்வாளர்.



வெளிநாடு செல்லும் மின் கோபுரம்



" யாரது தம்பியா ! வாங்க ! வாங்க ! எங்கே இப்படி குடும்பத்தோட வந்துட்டுப் போறீங்க ! எனக்கு ஒரு தகவல் சொல்லி அனுப்பியிருக்கக்கூடாதா ?''

'' நான் வேலை மேலே வரலீங்க, மணியக்காரரே! நம்ம பையனுக்குப் பெண் பார்க்க வந்தோம் ! எல்லாம் சுமுகமா முடிஞ்சுது ! ஊருக்குத் திரும்பிக்கிட்டிருக்கோம். ஆமாங்க...... உங்க இரண்டாவது பையன் என்ன பண்ருன் ?''

'' மேட்டூர் அணையிலே வேலை பார்க்கிருனுங்க !''

'' மெக்கானிக்கல் எஞ்சினியரிங் படிச்சிட்டு அணையிலே என்ன பண்ருன் ?''

'' பையனுக்கு அணையிலே வேலையில்லீங்க. அங்கேயே பக்கத்திலே தமிழ் நாடு சிறு தொழில் வாரியத்தின் தொழிற்கூடம் இருக்கிறது. அதில வேலை பார்க்கிருன்.

தம்பி, நீங்க மேட்டூர் போயிருக்கீங்க அல்லவா ? அணையை ஒட்டி, பாலத்தைக் காவிரி ஆறு கடந்ததும், எதிர்ப்புறமா ஒரு பெரிய தொழிற்சாலையிருக்கும். அதுதான் அந்தத் தொழிற்சாலை, ஸ்டிரக்சரல் அண்டு கால்வனைசிங் தொழிற்கூடம்னு பெயர். இரும்புச் சாமான்களுக்கு அலுமினிய முலாம் பூசுவது, மின்சாரக் கம்பங்கள், பெரிய கட்டடங்களின் கூரைகளுக்கான உத்திரம், சட்டங்கள் முதலியவைகளை அங்கு தயாரிக்கிருர்கள்.

முலாம் பூசுகிறதைப் பார்த்தாலே வேடிக்கையாயிருக்கும். 21 அடி நீளம், 3 அடி அகலம் 4அடி ஆழமுள்ள பெரிய தொட்டி ஒன்றிருக்கிறது. அதில் சுமார் 48 டன் துத்தநாகத்தைக் கொதிக்க வைக்கிருர்கள். துத்தநாகம், வெள்ளிப் பாகு மாதிரி கொதித்துக் கொண்டிருக்கிறது. எந்த இரும்புச்சாமான் ஆனலும் சரி, அது சுமார் 20 அடிக்குக் குறைஞ்சு இருந்தா, அதை மின்சார பளு தூக்கும் இயந்திரத்தின் (கிரேன்) மூலமாக அப்படியே தூக்கி இந்தத் துத்தநாகக் குழம்பிற்குள் முக்கி எடுக்கிருர்கள். அவ்வளவுதான் வெள்ளை வெளேரென்ற முலாமுடன் அந்தப் பொருள் வெளி வருகிறது. இப்படி முலாம் பூசுகிறதினலே இரும்புக் கம்பங்கள் அல்லது வேறு எந்த இருப்புக் கருவிகளானலும் அவை துருப்பிடிக்காமல் இருக்குமாம்.''

''ஆமாம்! கட்டடங்களுக்குச் சாமான்கள் செய்வதாகச் சொன்னீர்களே ! அது என்ன ? ''

'' பெரிய தொழிற்சாலையில் பார்த்திருப்பீர்களே, மேலே காங்கிரிட்டால் கட்டாமல், இரும்பு உத்திரம், சட்டங்களை ஏற்றி அதன் மீது ஆஸ்பெஸ்டாஸ் கூரைகளைப் போட்டிருப்பார்களல்லவா ? அதற்கான சட்டங்களைத் தயாரிக்கிருர்கள். தமிழகத்திலுள்ள பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகளின் மேல்புற அமைப்புகள் இவர்கள் கைவண்ணமே ! இதனலே செலவும் சுருக்கம். வேலையும் சீக்கிரம் முடிஞ்சிடும். அப்படியே எடுத்து போல்டுகளைப் போட்டு முடுக்க வேண்டியது தானுங்களே !

அது போக மின்சாரக் கம்பங்கள், அதாவது கோபுரம் மாதிரி அமைப்புடனிருக்குமே பெரிய கம்பங்கள், அவைகளையும் செய்து மின்சார வாரியங்களுக்கு சப்ளை செய்கிருர்கள்''

'' தமிழக மின்சார வாரியத்திற்குத் தானே ? ''

'' சரியாப் போச்சு போங்க. இவங்க ஆந்திரா, கேரளா, மைசூர், ஹரியாஞ, பஞ்சாப், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆகிய மாநிலங்களுக்கெல்லாம் உயர் அழுத்த, கீழ் அழுத்த (H.T. & L.T.) மின்சாரக் கோபுரங்களையும் மற்ற துணைக் கருவிகளையும் அனுப்புகிருர்கள். சமீபத்தில் இவர்கள் செய்து கொண்டிருக்

கும் "டிரான்ஸ் மிஷன் லைன் டவர்"களும் துணை மின்நிலைய அமைப்புகளும் குவைத் நாட்டிற்கும், நைஜீரியாவிற்கும் போகப் போகின்றன. குவைத்திற்கு 60 லட்ச ரூபாய் மதிப்புள்ள 4,500 டன் சாமான்களும், நைஜீரியாவிற்கு 60,000 ரூபாய் மதிப்பில் 25 டன் பொருட்களும் தயாரிக்கிறார்கள்."

"எப்படி மேலை நாடுகளை விட்டு விட்டு நம்மிடம் வந்திருக்கிறார்கள்?"

"முக்கியமான கேள்வி தம்பி. நம்ம நாடு தொழில் திறமையில் பின் தங்கி விடவில்லை. சுறுசுறுப்புடனும் ஆர்வத்துடனும் பணியாற்றினால் நாமும் மற்ற நாடுகளுடன் போட்டி போடலாமென்பதற்கு இது ஒரு உதாரணம். குவைத், நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு மின்சாரப் பொருட்கள் தேவை என்று 'குளோபல் டெண்டர்' பத்திரிகைகளில் வந்தது. அதற்குப் பல நாடுகளிலுள்ள நிறுவனங்கள் முயன்றதில், சென்னையிலுள்ள ஈசன் இன்ஜினியரிங் என்ற தனியார் நிறுவனத்திற்கு அந்தப் பணி கிடைத்தது. அதில் ஒரு பகுதி வேலையை அவர்கள் இந்தத் தொழிற் கூடத்திற்குத் தந்திருக்கிறார்கள்.

"இன்னொரு முக்கிய விஷயம் தெரியுமா? சமீபத்தில்கூடத் தென்னகரெயில்வேயினர் 'மைக்ரோவேவ்' என்ற நவீன முறையில் தந்திப் போக்குவரத்து ஒன்று அமைத்திருக்கிறார்கள். இது திருப்பதி, ஏற்காடு, ஏலகிரி, கொடைக்கானல் இவை போன்ற மலைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட நுண்ணிய யந்திரங்களை ஜப்பான் நாட்டு மிட்சூய் கம்பெனியார் நிறுவினர். இதற்காக கோபுர அமைப்புள்ள தந்திக் கம்பங்களை இந்த மேட்டூர் தொழிற்கூடம் சப்ளை செய்தது. இந்தக் கோபுரங்கள் சுமார் 50 மீட்டர் முதல் 80 மீட்டர் வரை மிக உயரமாக உள்ளன."



இரும்பு மின் கோபுரத்தின் ஒரு பகுதி அலுமினிய முலாம் பூசப்படுகிறது.

"ஆண்டுக்கு எவ்வளவு உற்பத்தியாகிறது?"

"1969-70-ல் சுமார் ஒன்றேகால் கோடிக்கு உற்பத்தி செய்துள்ளது இந்த நிறுவனம். பொதுவாக மிகவும் நல்ல முறையில் இயங்குவதாக எனக்குப் படுகிறது. இப்போது சேலம் உருக்காலை தொடங்கப் பட்டிருப்பதால் இந்தத் தொழிற்சாலையின் எதிர்காலம் இன்னும் வளமா இருக்கும்னு தொழிற்சாலை மேலாளர் திரு. நீலமேகம் அபிப்பிராயப்படுகிறார்!"

"பையன் வேலை பார்க்கிற இடம் முன்னேற்றமான இடம்னு சொல்லுங்க. அப்போ, கையோடே ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் போடறதுதானே!"

"ஊகூம், அது இப்போ கூடாதுங்க! பையன் வேலையில் நிரந்தரமாகி வாழ்க்கையிலும் நல்லா அனுபவப்பட்ட பிறகு தான் திருமணம். அதுக்கு முன்னாலே பிள்ளையும் குட்டியுமா ஆகிறது அவனுக்கும் நல்லதில்லே! நாட்டுக்கும் நல்லதில்லே!"

"நீங்க சொல்றதும் ஒருவகையில் சரிதான். எதையும் திட்டமிட்டுத்தான் செய்யணும். அப்படிச் செய்யலேன்னா வாழ்க்கையே தொல்லையாத்தான் இருக்கும் . . . சரி . . . நேரமாயிடுத்து, நாங்க புறப்படுகிறோம்."

"சரி தம்பி, உங்களாலே இன்னைக்கித் தமிழ்நாடு அரசு சிறு தொழில் வாரியத்தைப் பத்திக் கொஞ்சம் நினைக்க முடிஞ்சது . . . . போயிட்டு வாங்க!"

'குவைத்' நாட்டிற்கு அனுப்புவதற்கான மின்கோபுரங்கள் தயாராகின்றன.



வழிகாட்டும் தமிழ்நாடு

காந்தியடிகள் இராட்டையை உள்ளச் செழிப்புக்கும், சமுதாய மேம்பாட்டுக்கும், அரசியல் விழிப்புக்கும், பொருளாதாரச் சமத்துவத்துக்கும் உதவுகின்ற முழுமையான ஒரு சாதனமாக அறிமுகப்படுத்தினார்.

இராட்டையை அகிம்சையின் சின்னமாகக் காட்டினார். அதில் முதலாளி, தொழிலாளி என்ற வர்க்க பேதத்துக்கே இடமில்லை. சுரண்டலுக்கோ, இடைத்தரகர்களின் லாவண்யத்துக்கோ அதில் இடம் கிடையாது. ஐந்தரை இலட்சம் சிற்றூர்களை உள்ளடக்கிய இப் பெரும் இந்திய நாட்டின் ஏழ்மையையும் வேலையின்மையையும், வேலையிருந்தும் போதிய ஊதியமின்மையால் படுகின்ற அவதியையும் அவர் கண்டார். இராட்டையின் மூலம் அவர்களுடைய கவலையைப் போக்கிச் சோம்பலை விரட்டிப் புத்துணர்வூட்டினார். இந்தியா முழுமையும் நூற்பாளர்களைத் தோற்றுவித்துச் சர்க்கா சங்கங்கள் அமைத்தார். இனத்தால், மொழியால், பண்பாடுகளால் வேறுபட்டபல்வேறு தரப்பட்ட மக்களையும் ஒன்றுபடுத்தி, ஒருவழிப்படுத்தி, ஒருமைப்பாடு காண அதுவும் ஒரு சாதனமாக அப்பழுக்கில்லாத இந்தியாவின் உயிராக அமைந்தது. காந்திய ஊழியர்கள், கதரும் இந்திய விடுதலையும் பின்னிப் பிணைந்திருப்பதாக உணர்ந்தனர். குவியல் முறைப் பொருளாதாரத்தில், செல்வம் ஒரு இடத்திலேயே குவிக்கப்படுதல், ஒரு சிலரே இலாபம்அடைந்து பெரும் முதலாளிகளாக உருவாதல் முதலான கேடுகளைப் போக்கப் பரவல் முறை மூலம் தொழில் அபிவிருத்தி காணவும், சுதேசி இயக்கத்துக்கு வெற்றி தேடவும், நாடு தன் நிறைவு பெறவும், பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் அடையவும் இராட்டையே அருமையான சாதனமாக இருப்பதை விளக்கிக் காட்டினார்.

1963ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், டெல்லி பாராளுமன்றத்தில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், மக்கள் பெருக்கம் மிகுந்த இந்திய நாட்டில், பெரிய தொழில்களையும் சிறு தொழில் வளர்ச்சியையும் ஒப்பிட்டுப் பேசினார். "நான் காந்திஜியைப் பற்றியும் அவர் மேற்கொண்ட கொள்கைகளைப் பற்றியும் நினைத்துப் பார்க்கிறேன். முழுக்க முழுக்கப் புதிய இயந்திரங்களை வரவேற்பவன் நான். ஆயினும், இன்றைய நிலையில், புதிய சகாப்தத்தில் நாம் எவ்வளவுதான் முன்னேறிய போதிலும், பெருமளவு மக்கள் தொகையினர் இன்னும் அப் பலன்களைப் பெற முடியவில்லை. ஆகையால், துணிந்து சில நடவடிக்கைகள் எடுப்பது அவசியமே. சிறு தொழில்களுக்கு ஊக்கமளிப்பது இன்றியமையாததே. அதனால் உற்பத்தி குறையலாம்; அல்லது தற்கால நவீன யுக்திகளுக்கு—படைப்புகளுக்கு இணையாமல் இருக்கலாம். தரம் குறைந்திருக்கலாம். என்றாலும் அதைப் பற்றிக் கவலையில்லை."

தமிழ்நாடு—கதர் இயக்கம் செழித்து வளர்வதற்குரிய வளமான நிலமாகத் திகழ்ந்ததை காந்தியாரே வியந்து பின்வருமாறு புகழ்ந்திருக்கிறார். "கதர் இயக்கம் தீவிரமாகப் பரவுவதற்கு வழிவகைகளைத் தெரிந்தெடுத்து எல்லா ஒத்துழைப்பையும் நல்கும் சென்னை மாநில அரசின் உண்மையான கதர் நம்பிக்கையை நான் பலபடப் பாராட்டுகிறேன். மிகவும் மோசமான நிலையில் ஒதுக்கப்பட்டுவிட்ட கிராமங்களின் புனருத்தாரணத்துக்காக, மிகப் பெரிய அளவில் இத்திட்டத்தை மேற்கொண்டு, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் வெகுவாக முன்னேறி, முன்னோடியாகத் திகழ்வது கண்டு பெருமையடைகிறேன்."

கதர்த் திட்டந்தைத் தாமே மேற்கொண்டு செயல்படுத்தி வந்த சென்னை மாநில அரசு, 1959ஆம் ஆண்டு அரசுச் சட்டம் 18-ன் பிரகாரம், கதர் கிராமத் தொழில் வாரியத்தைஅமைத்துத் திட்டத்தை முழுமையாக ஒப்படைத்தது. 1959 ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் கீழ் செயல்பட்டு வரும் கதர் வளர்ச்சியை நோக்கும்போது, வளர்பிறையாக ஆண்டுதோறும் மிகத் தீவிரமாக வளர்ந்து வருவதை நாம் காணலாம். பேரறிஞர் அண்ணா அவர்கள் அமைச்சரவையின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது பலர் பயந்ததற்கு மாறாகத் 'தென்னாட்டுக் காந்தி' யெனப் போற்றப்பட்ட அப் பெருந்தகையாளர் மிகச் சிறப்பாகக் கதர்த் திட்டத்தை மேற்கொண்டு, முன்னிலும் செம்மையான வளர்ச்சியைக் காட்டினார்.

திட்டத்தின் முன்னேற்றத்தைக் காணப் புகுமுன் இதனைச் செயல்படுத்துவதற்கான வருவாயின் விவரத்தை அறிந்து கொள்வது நல்லது.

திட்டக் குழுவின் சிபாரிசுப்படி 1953-ல் அகில இந்திய கதர் கிராமத் தொழில் வாரியம் தோற்றுவிக்கப்பட்டுச் செயல்பட்டது. 1957-ல் நடுவண் அரசு திட்டமிடவும் நிறைவேற்றவுமான சட்ட பூர்வமான குழுவாக அனைத்திந்திய கதர் கிராமத்தொழில் குழுவை ஏற்படுத்திச் செயல்பட்டு வருகிறது. அதன்மூலம் பெருமளவுத் தொகை, மான்யமாகவும் கடனாகவும் தமிழகத்துக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நூல் உற்பத்தி.

தற்போது இருபதுக்கு மேற்பட்ட பிரதான உற்பத்திக் கேந்திரங்களும், சுமார் 120 உபகிளைகளும் நூல் உற்பத்தியைத் தீவிரப்படுத்துகின்றன. நூலின் தரத்தை உயர்த்துவதற்கும்,

முழுநேர வேலை வாய்ப்பு நல்கி, தினம் இரண்டு ரூபாய்க்குக் குறையாமல் நூற்பாளர்கள் கூலி பெறும் வகையிலும், இரண்டாண்டுகளுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்ட டெக்ஸ்டூல் இராட்டைகள் இப்பொது பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் சுமார் எழுபது கிராம நிலையங்கள் இவ்வகையில் இயங்கி வருகின்றன. 6 கதிர், 12 கதிர் இராட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டு பரீட்சார்த்தமாக அவைகளும் இயங்கி வருகின்றன.

நூற்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நூற்பாளர்களும், கதர் நெசவு செய்யும் நெசவாளர்களும் நூற்புக் கூலியாகவும் நெசவுக் கூலியாகவும் 1967-68-ல் ரூபாய் 103 இலட்சமும், 1968-69-ல் 133 இலட்சமும், 1969-70-ல் 140 இலட்சமும் பெற்றிருக்கிருர்கள். அனைத்திந்தியாவிலும் 1965-66-ல் 16 இலட்சம் நூற்பாளர்கள் பகுதி நேர ஊழியராக வேலை பார்த்திருக்கின்றனர்.

கதர் உற்பத்தியும், விற்பனையும்.

கடந்த ஆண்டுகளில் நூலின் தரம் உயர்ந்திருக்கிறது. ஆகவே கதரின் தரமும் உயர்ந்திருக்கிறது. நூற்றுக்கணக்கான ரகங்களில் வண்ணக் கலவையில் அச்சிடப்பட்ட கதர்த் துணிகள் தற்போது விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தரமான, விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட வெள்ளைத் துணிகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அனைத்திந்தியாவிலும் ஒரு இலட்சம் நெசவாளர்கள் இத்தொழிலில் முழுநேர ஊழியம் செய்து வருகின்றனர்.

அனைத்திந்தியாவிலும் 1965-66ல் 760 இலட்சம் சதுர மீட்டர் கதர் உற்பத்தியாகியிருக்கிறது. 1953-54-ல் ரூ. 2·2 கோடியாக இருந்த கதர் விற்பனை 1966-67-ல் 28 கோடிக்கு உயர்ந்திருக்கிறது.

தீபாவளியின்போது பிரத்தியேகத் தள்ளுபடி அனுமதித்து கதர் விற்பனை தீவிரப்படுத்தப்பட்டுவருகிறது. இங்ஙனம் காந்தி பிறந்த நாள், தீபாவளி காலங்களில் 1967-ல் 156 இலட்சங்களும், 1968-ல் 228 இலட்சம் மதிப்புள்ள கதர் பட்டு வகையருக்களும் தமிழகத்தில் விற்கப்பட்டுள்ளன. 1969-ல் பிரத்தியேக விற்பனைக் காலத்தில் வாரியத்தின் ஊழியர்கள் கதர் விற்பனையில் அயராது ஈடுபட்டமைக்காக தமிழ் நாடு அரசு முன்வந்து ஒவ்வொருவருக்கும் இருபத்தைந்து ரூபாய் மதிப்புள்ள கதர்த் துணிகளை முதல் முறையாகப் பரிசளித்துச் சிறப்பளித்ததும் ஊழியர்கள் மனமுவந்ததும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. கடந்த மூன்ருண்டுகளில்தான், ஊழியர்களின் பதவிக்கு உத்தரவாதம் தந்து பல பதவிகளையும் நிரந்தரம் செய்ததோடு, வருடாந்தரச் சம்பள உயர்வுபோன்ற சலுகைகளை அவ்வப்போது வழங்குவதிலும் தீவிரம் காட்டியிருக்கிறது.

குறளகம்.

சென்னை எஸ்ப்ளனேடு பகுதியில் ரூ. 76·93 இலட்சம் செலவில் கட்டடம் கட்டிக் ''குறளகம்'', என்ற பெயரை இட்டு 14-1-68 அன்று, மறைந்த முதல்வர் அண்ணு அவர்கள், முன்னுள் உள்ளாட்சி அமைச்சர் திரு. மா. முத்துசாமி ஆகியோர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இதில் ஏப்ரல் முதல் நவம்பர் 1968 வரை ரூ. 12·20 இலட்சமும், டிசம்பர் முதல் மார்ச்சு 1969 வரை ரூ. 5·02 இலட்சமும் மதிப்புள்ள பொருள்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன: நடப்பு ஆண்டில் 37 இலட்சம் விற்பனை எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதிரியே வாரியத்துக்குச் சொந்தமான கதர் கைத்தொழில் அங்காடிகள் திருச்சியிலும், கோவையிலும் அழகுற அமைந்து செயல்பட்டு வருகின்றன.

—கு. செல்லசாமி

உரமூட்டும் நாள் !

மறைந்த காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் பொருள் இதுவாகவே இருக்க வேண்டும். அவர் இறவாப் புகழ் பெற்ருர் என்பதனை எடுத்துரைக்கும் நாள் மட்டுமல்ல இது. அவருடைய எண்ணங்களை ஏற்றுக் கொண்டவர் நாங்கள், எனவே அவர் காண விரும்பிய மாண்பு பிறந்திடப் பணிபுரிவோம் என்ற உறுதி பெற உரமூட்டும் நாள் இது.

அவருடைய நாட்களில் அவர் குரல் கேட்டு, அன்னிய அரசு வெருண்டோடிற்று; ஆனல் ஓட்டப்பட வேண்டியவை பல இருக்கின்றன. பொய்ம்மையும் கயமையும், கல்லாமையும் இல்லாமையும், சாதிப்பித்தமும் வகுப்பு மாச்சரிமும், வெருண்டோட வேண்டும். அதற்குத் தேவைப்படும் தூய்மையும் வாய்மையும், அஞ்சாமையும் பணியாற்றும் தன்மையும் நம் ஒவ்வொருவருக்கும் இன்று பிறந்திட வேண்டும்; அதற்கே இன்று காந்தி அடிகள் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.

காந்தி அடிகள் மறையவில்லை; நம்மோடு இருக்கிருர், நம்முள் இருக்கிருர், நம்முடன் கலந்து விட்டார் என்று எண்ணுதல் வேண்டும். அவருடைய, எண்ணங்கள் மடிந்திடவில்லை; அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்ற உறுதி பிறந்திட வேண்டும்.

“பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்க வேண்டும். மக்களில் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்பது இருக்கக்கூடாது; எல்லாச் சமூகத்தினரும் இணைந்து வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன். இதுவே உலக உத்தமர் காந்தி அடிகளின் இலட்சியம்” என்று பண்டித நேரு அவர்கள் கூறியதை இங்கு நினைவுபடுத்துகிறேன்.

—பேரறிஞர் அண்ணு

ஞானோதயம்

சோம. மகாதேவன்

அந்திப் பொழுதிலேயே மொட்டை மாடியில் கட்டிலைத் தூக்கிப் போட்டுப் படுத்துவிட்டார் பொன்னுச்சாமி.

மாநகரின் நெருக்கடியான பகுதியில், மூன்ருவது மாடியில், இரண்டு ஒட்டுக்குடித்தனத்துக்கு மத்தியிலே பொன்னுச்சாமியின் ஏகபுத்திரன் நீலமேகமும் குடி இருக்கிருன். அவனுக்கு இங்கே உத்தியோகம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னதாகத் தனது மனையாள் மீனுட்சியையும் அழைத்துக்கொண்டு, இங்கே மகன் வீட்டுக்கு விருந்தாட வந்தவர் பொன்னுச்சாமி, இன்றைக்கு மகனைத் தனியே விடுத்துத் திரும்பிப்போக முடியவில்லை—நிம்மதியாக.

பொன்னுச்சாமிக்குத் தெற்கே விவசாயத் தொழில். குத்தகை நிலத்தில் பாடுபட்டு, இன்று, சொந்தமாக நான்கு ஏக்கர் நன்செய்யும், வீடும், மாடு மனையும் கட்டுக்கோப்பாக இருக்கிறது. மக்கட் செல்வம் என்பதில், அக்காளும் தம்பியுமாக இருவரேதான். மூத்தவள் சிவகாமியைக் கட்டிக் கொடுத்து, அவள் வரையிலும் கவலை இல்லை என்பதில் நிம்மதி.

இப்போது, தனித்திருமகன் நீலமேகத்தை நினைக்கும்போதுதான், பொன்னுச்சாமிக்குப் பெருமூச்சுப் பீரிட்டுக் கொண்டு வருகிறது.

மகன் எப்படியெல்லாமோ வாழ வேண்டுமென்று மனத்தளவில் கோட்டைகட்டிப்பாடுபட்டு, மகனைக் கல்லூரி முடியப் படிக்கவைத்தார். பட்டம் பெற்று, மகன் கருப்பு அங்கியிலே வந்து நின்றபோது, கட்டித் தழுவிப் பூரித்துப் போனுர் பொன்னுச்சாமி. அதே கையோடு மகனுக்குத் திருமணத்தையும் முடித்துவைத்து, தனது லட்சியத்தையே எட்டிப் பிடித்துவிட்டதைப் போல, இந்த உத்தியோகத்தையும் மகனுக்குத் தேடிவைத்து, நூற்றுக் கணக்கான மைல்களைக் கடந்து, இங்கே மகனைத் தனிக்குடித்தனம் வைத்தபோது, இரண்டு நாட்கள் தங்கிவிட்டுப் போனவர் பொன்னுச்சாமி.

இடையிலே, இரண்டாண்டு காலமாக, அடுத்தடுத்து வந்த விவசாய வேலைகளால், மகனது குடித்தனப் பாங்கை வந்திருந்து பார்க்கும் வாய்ப்பு ஏற்படவில்லை.

இரண்டாவது முறையாக, இங்கே காலடிவைத்த நாளையிலிருந்தே பொன்னுச்சாமிக்கு நிம்மதி இல்லை.

தான் எதையோ நினைக்க—அதற்கு நேர் மாருக, மகன் எதிலோ சிக்கிக்கொண்டிருப்பதாகப் பட்டது பொன்னுச்சாமிக்கு. மௌனமாகவே, இன்று நடப்பதையும், நாளை நடக்கப் போவதையும், குறை-நிறை என்பதைக்கொண்டு, கூட்டிக் கழித்துக் கணக்கிட்டுக் கொண்டிருந்தார் அவர்.

மகனைப் படிக்கவைத்து, எதையெல்லாமோ எட்டிப் பிடித்து விட வேண்டுமென்ற ஆவேசத்தோடு, செய்த முயற்சிகளையும், செலவழித்த பணத்தையும், இப்பொழுது நினைத்துப் பார்த்தால், வேதனையோடு சிரிப்புத்தான் வருகிறது.

சிந்தனையில் மூழ்கியவாறு, நீலவானில் சிதறிக்கிடக்கும் விண்மீன்களையே பார்த்துக் கொண்டிருந்த பொன்னுச்சாமி, பின்னுல் ஆளரவம் கேட்டுத் தலையை மட்டும் தூக்கிப் பார்த்தார்.

அவரது மனையாள் மீனுட்சி, படியேறி வந்த களைப்போடு, ஆடியசைந்து வரும்போதே அவளது குரல் முந்தி வந்துவிட்டது.

''சத்தமில்லாம இங்கே வந்து படுத்திட்டிங்களா?'' என்று கேட்டுக்கொண்டே பக்கத்தில் வந்து நின்ருள்.

பொன்னுச்சாமி தலையை மட்டும் திருப்பிப் பார்த்தவர் ஒன்றும் பேசாமலே சாய்த்துக் கொண்டார்.

''வந்துதான் பக்கத்திலே நிக்கிறேனே—வாயைத் திறந்தாவது பேசுறிங்களா? ஏன் தான் உங்களுக்கு இப்படி வாயடைச்சுப் போயிருக்கோ!” என்று அங்கலாய்த்துக்கொண்டே, அவளும் கட்டிலருகே உட்கார்ந்து கொண்டாள்.

பேரன் பேத்தியென்று எடுக்கும் பருவம் வந்துவிட்டபோதும், மீனுட்சிக்குச் சூது வாது தெரியாது. ஆரம்ப காலத்திலேயே இல்லாளை அழவைப்பதென்பது பொன்னுச்சாமிக்குச் சுலபமான தாகும்.

அவர் வாய் திறக்காதபோது, அவள் ஆத்திரத்தோடு ஆரம்பித்தாள்.

''ஒரு வாரத்திலே திரும்பிரலாம்ன்னு சொல்லிட்டு வந்திங்களே, வந்து எத்தனை நாளாகுது? அங்கே மாடு மனை காடு கரையெல்லாம் எப்படி இருக்கோ'' என்று கவலையோடு சொன்னாள்.

பொன்னுச்சாமி ஒருச்சாய்ந்து படுத்தபடியே, உள்ளங்கையில் தலையைச் சாய்த்துக்கொண்டு, அவளைப் பார்த்தார்.

''ஏன்......இங்கே இருக்க உனக்குப் பிடிக்கலையா'' என்று கேட்டார்.

''பிடிக்கத்தான் இல்லை. என்ன இருந்தாலும் நம்ம ஊராகுமா?'' என்றாள் மீனாட்சி.

''இனிமே......நாம எப்பவும் இங்கே தானே இருக்கப் போறோம்! கிராமத்துக்குப் போகணும்கிற நினைப்பை விட்டுப்போடு'' என்று சாவதானமாகவே சொன்னார் பொன்னுச்சாமி.

மீனாட்சி திடுக்கிட்டவளாகத் திரும்பினாள்.

''என்னது...... இங்கேயே இருக்கப் போறமா? அங்கே வயக்காடெல்லாம் என்னாகுறது? நாம இல்லாமக் களம் சேருமா?'' என்று கேட்டாள்.

பொன்னுச்சாமி எழுந்து, கட்டிலிலேயே காலைத் தொங்க விட்டு உட்கார்ந்தார்.

''உங்கிட்டேயும் சொல்லித் தான் ஆகணும்; நானே எதுக்கு உள்ளுக்குள்ளேயே கவலைப்பட்டு உருகணும்'' என்று பீடிகையோடு ஆரம்பித்தார்.

''என்ன விடுகதை போடுறீங்களா?'' என்று திருப்பிக் கேட்டாள் மீனாட்சி.

''உங்கிட்ட விடுகதை போடுற வயசா எனக்கு? இங்கே காலடி வச்சதிலேயிருந்து இந்தக் கவலையிலே தான் நான் உருகிக்கிட்டிருக்கேன். எத்தனை நாளைக்கி இப்படியே இருக்க முடியும்? இப்பத்தான் இந்தக் கட்டிலிலே எனக்கு ஞானோதயம் ஆகியிருக்கு. உன் மகன் கிட்டயும் சொல்லிப் போடனும்ன்னு முடிவுக்கு வந்திருக்கேன்'' என்று பொன்னுச்சாமி மேலும் சொன்னார்.

''என்னத்தைச் சொல்லப் போறிங்க'' என்று பதட்டத்தோடு குறுக்கிட்டாள் மீனாட்சி.

''சொல்லத்தானே போறேன்! முதல்லே கீழே போய்......நீலமேகத்தையும் மருமகளையும் வரச்சொல்லு. நீயும் வா'' என்றார் பொன்னுச்சாமி.

''நீங்க என்னதான் சொல்லப் போறிங்களோ—எனக்கு ஒன்னும் புரியலையே'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் மீனாட்சி.

"உனக்கு என்னிக்குத்தான் எது தான் புரிஞ்சது" என்ற பொன்னுச்சாமியின் வார்த்தைகளைக் கேட்டு, ஏதேதோ முணகியவாறு மீனாட்சி படிக்கட்டுகளை நோக்கி நடந்தாள்.

* * * * *

கீழே மாடிப்படிகளை ஒட்டினாற் போலிருக்கும் பகுதியே நீலமேகத்தின் குடியிருப்பு. எதிரெதிராக இரண்டு அறைகள்—இடையிலே தாழ்வாரம். இதற்குள்ளாகத்தான் வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை சாதனங்களும் அடங்க வேண்டும்.

அப்பாவும் அம்மாவும் வந்ததிலிருந்தே படுக்கக் கொள்ளச் சங்கடம்தான். கிராமத்திலே சத்திரம் மாதிரிப் பெரிய வீடு. நீலமேகத்தை இப்போது பல கவலைகள் சூழ்ந்து கொண்டன. சக்கரம் சுழலுவதைப் போல, மாதக் கடைசியில், கடைநிலை ஊழியர்களிலிருந்து, அதிகாரிகள் வரை எல்லாரையும் ஒட்டிக் கொள்ளும் கவலைதான்!

முப்பது நாட்களை எண்ணி முடித்து வாங்கும் சம்பளத்தில், மூன்றிலொரு பாகம் வீட்டு வாடகையாகப் போக, மீதமிருப்பது சர்க்கரையாகக் கரைந்து விட்டபோது—இந்தக் கடைசி வாரத்தில் மூச்சுத் திணறுகிறது.

அப்பாவும் அம்மாவும் வந்து உட்கார்ந்திருக்கும் போது, கையைப் பிசைந்து கொண்டிருக்க முடியுமா? நேற்று முன்தினம் அவனுக்கும், மனையாள் துளசிக்கும் மட்டும் தெரிந்ததாக, கை வளையல்கள் மார்வாடியின் கடையிலே தஞ்சம் புகுந்து, நோட்டுகள் கைக்கு வந்தன. ஏற்கனவே துளசியின் பத்துப் பவுன் சங்கிலி மோதிரம், எல்லாமே மார்வாடியிடம் வட்டி கட்டிக்கொண்டு வரும் வரை பத்திரமாகவே இருக்கும்.

கணவனின் கெஞ்சுதலுக்காக, நகைகள் பெட்டியிலே இருப்பதாக மாமியாரிடம் சொல்லி வைத்தாள் துளசி. இன்னமும் மாமனாரின் காதுகளுக்கு எட்டவில்லை.

அப்பாவுக்குத் தெரிந்து விடக் கூடாதே என்பதில் மிகவும் கவனத்துடன் இருந்தான் நீலமேகம். சிறுவயதில் தகப்பனிடம் இருந்த பய பக்தி இன்றளவும் அப்படியேதான் இருக்கிறது அவனிடம்.

இரவிலே சாப்பிடும் போதே, ''அப்பா சங்கிலியைப் பத்தி என்னமும் கேட்டாரா?'' என்று விசாரித்தான்.

''இல்லையே!'' என்றாள் துளசி.

''நல்ல வேளை......நான் பயந்துக்கிட்டே இருக்கேன்'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான் அவன்.

துளசி புத்திசாலிப் பெண்.

''எப்ப இருந்தாலும் சொல்லித்தானே ஆகணும். இல்லையின்னா நீங்க திருப்பப் போறீங்களா?'' என்று கேட்டாள்.

''திருப்பத்தான் போறேன், பாரேன்.''

அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''மேலும் மேலும் கடன் வாங்காம இருந்தாப் போதாதா?''

சாப்பிட்டு எழுந்து, கைகளைத் துடைத்துக் கொண்ட நீலமேகம், ''மெதுவாத்தான் பேசேன்'' என்று சொல்லி அவளது வாயைப் பொத்தினான்.

அதற்குள்ளாக, மீனாட்சி படியிறங்கிவரும் சந்தடி கேட்டுத், துளசி விலகி நின்றாள்.

நிலைப்படியோரமாக வந்து நின்ற மீனாட்சி, மேல் மூச்சு வாங்க ''உங்கப்பா கூப்பிடுறாரு, உன்னையும் தாம்மா'' என்று அழைப்பையும் விடுத்தாள்.

அவனும், அவளும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

''எதுக்கும்மா கூப்பிடுறாரு'' என்று குரலைத் தணித்துக் கொண்டே கேட்டான் மகன்.

''அது எதுக்கோ. எனக்கு எதுவும் புரியலே'' என்று சொல்லிவிட்டுப் பெற்றவள் திரும்பியபோதே, நீலமேகத்துக்குக் 'குப்' பென்று வியர்த்தது.

படியேறி வந்து நின்றவர்களை அமைதியாகவே ஏறிட்டுப் பார்த்தார் பொன்னுச்சாமி.

நீலமேகம் சற்று எட்டத்திலேயே பணிவோடு நின்றான்.



''இப்படி முன்னாலே வந்து உட்காரு, முகம் தெரியணும் எனக்கு'' என்றார் பொன்னுச்சாமி.

நீலமேகம், திகைப்புடன் முன்னால் வந்து உட்கார்ந்தான்

மனைவியைத் திரும்பிப் பார்த்த பொன்னுச்சாமி, ''ஏன்....நீயும்—உட்காரேன். எல்லாரும் சாப்பிட்டாச்சில்ல'' என்று கேட்டுக்கொண்டார்.

''இன்னிக்கு எப்படியோ தான் பேசுறிங்க.'' என்று பொரிந்து கொண்டே, துளசியோடு சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டாள் மீனாட்சி.

''கொஞ்ச நேரத்துக்குப் பேசாமத்தானே இரு. அப்புறம் ......நீயே பேசு" என்ற பொன்னுச்சாமி, மகனது பக்கமாத் திரும்பியபடி சொல்ல வேண்டியதை ஆரம்பித்தார்.

601

''இப்ப நானும் உங்கம்மாவும் கிராமத்துக்குப் போக முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, உன் கூடவே நிரந்தரமாத் தங்கும்படியா இருந்தா...., கடைசி வரைக்கும் உன்னுலே கொண்டு செலுத்த முடியுமா?'' என்று நேரிடையாகவே கேட்டு நிறுத்திஞர்.

''என்னப்பா.... இப்படிக் கேக்குறிங்க. என் · உயிரே உங்களோடது" என்று சிரமத்துடனே சொல்லி, மென்று விழுங்கிஞன் நீலமேகம்.

''ஆமடா....! கேட்க வேண்டிய கட்டம் இப்பத்தான் வந்திருக்கு. இப்ப ஒருமிக்கச் சொல்லப்போறதைச் சிறுகச் சிறுகச் சொல்லி இருக்கலாம். உன் மனசு வேதனைப்படும்கிறதை நினேச்சுத் தயக்கத்திலேயே நாள் கடந்து போச்சு. ஒரு விதத்திலே எனக்கு நிம்மதி. அந்த விவசாயத்திலே உருண்டு புரண்டு உன்னே இந்த உத்தியோகம் பாக்குற அளவுக்குப் படிக்க வச்சிட்டேன். அந்தக் கலப்பை பிடிக்கிற பிழைப்பை விட்டுத் தொலேத்தாலும், உன்ஞேட சம்பாத்தியம் இருக்குங்கிற தைரியம் இருக்கு'' என்ருர்.

அவர், ஆரம்பத்தில் சொன்னதை நினேக்காமலே, ''புதிர் போட்டே பேசுறிங்களே. விவசாயத்தை ஏன் விட்டுத் தொலேக்கணும்'' என்று இடையிலே பாய்ந்தாள் மீஞட்சி. இதே கேள்வியுடனே நீலமேகமும் தகப்பனே ஏறிட்டுப் பார்த்தான்.

''நிலம் இருந்தாத்தானே விவசாயம் செய்ய முடியும்? வாங்கி இருக்கிற கடனுக்கு.... நிலம் பூராவையும் வித்துக் கொடுக்கத்தான் சரியாயிருக்கும்" என்று அவர் சொல்லி வந்த போது, ''நிசமாத்தான் சொல்றிங்களா?— நானறியாம எந்தக் கடனே வாங்குனிங்க'' என்று கேட்டு, பதட்டத்தோடு குறுக்கிட்டாள் மீஞட்சி.

''இவன் படிச்சு முடிக்கிறதுக்குள்ளே எத்தனே ஆயிரம் செலவாகி இருக்கு? சிவகாமி கல்யாணத்துக்கு வாங்கின கடன் வேறே'' என்று பதட்டமில்லாமலே சொன்ஞர் பொன்னுச்சாமி.

நீலமேகம் வாய் திறக்கவில்லே.

நிலமெல்லாம் மூழ்கிப்போகும் அளவுக்கா கடன் இருந்தது? இதை ஆற அமரச் சொல்லுகிருரே அப்பா!

நெஞ்சினுள் ஏற்பட்ட நடுக்கத்தில் அவனது கண்கள் கலங்கின.

''படிப்புக்கு, கல்யாணத்துக்கெல்லாம், அப்பப்ப நெல் வித்த பணத்தைத்தானே செலவழிச்சோம்'' என்று கொதிப்போடு கேட்டாள் மீஞட்சி.

''எல்லாத்துக்கும் தான்! ஆயிரம், ரெண்டாயிரம்ன்னு வாங்கினது இப்ப மொத்தம் கூடிப்போச்சு.

''அள்ளாமக் கொள்ளாம— சொத்துமில்லே சுகமும் இல்லேன்னு சொல்றிங்களே'' என்று அழுகையும் குமுறலுமாகச் சொல்லித் துவண்டு போனவளாகக் கட்டில் காலின் மீது சாய்ந்து விட்டாள் மீஞட்சி.

''வசதியுள்ள பட்டதாரிகள் ஏழைப் பட்டதாரிகளுக்கு வழி விடவேண்டும்; அப்போதுதான் வேலேயில்லாத் திண்டாட்டம் ஓரளவு நீங்கும்"—என, தமிழக முதல்வர், மதுரைப் பல்கலேக் கழகப் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரையை அடிப்படையாக வைத்து உருவாக்கப் பட்டிருக்கிறது, இந்தச் சிறு கதை.

நீலமேகத்துக்கோ இது பேரிடியாகவே இருந்தது. கிராமத்திலிருந்து, அரிசி, பருப்பு, அத்தனேயும் வரும்போதே.... நான்கு மாதத்திற்கு ஒரு நகையாக வெளியேறிக் கொண்டிருக்கும் போது, அந்தப் பிடிப்பும் இல்லேயென்ருல், நிரந்தரமாகவே ஏற்படப்போகும் வறட்சியில் பொழுது கழிவது போராட்டமாகவே தான் இருக்கும்.

நினேக்கும் போதே நீலமேகத்துக்குக் கண்கள் இருண்டு வந்தன. பேச வாயெழவில்லே;

எதிரில், குனிந்த தலே நிமிராமல் இருந்த மகனேயே பார்த்துக் கொண்டிருந்த பொன்னுச்சாமி, ''என்னடா திகைப்பா இருக்கா? முகத்திலே தெளிவையே காணலேயே'' என்று கேட்டார்.

''இல்லேயே''என்ற நீலமேகம், முகத்தைத் துடைப்பதுபோல் கண்களேத் துடைத்துக் கொண்டான்.

''நிலத்தை உழுது பாடுபட்டு, அதிலே வர்ற பலனே வச்சுத்தான் குடும்பத்தை இது வரைக்கும் நல்ல முறையிலே கட்டிக் காத்து, இந்த அளவுக்குக் கொண்டார முடிஞ்சது. பல லட்சத்திலே ஒருத்தஞ.... இங்கே குடியிருந்து, நீ பாக்குற இந்த உத்தியோகத்தை வச்சு...... உன்னளவுக்கே நிம்மதியாப் பிழைக்க வழி இல்லாம இருக்கிறே!'' என்றவர் மருமகளின் பக்கமாகத் திரும்பி, ''என்னம்மா.... கல் முகப்பு வச்ச சங்கிலி, பெட்டியிலே பத்திரமாகத்தானே இருக்கு?'' என்று கேட்டார்.

கிராமத்திலிருந்து எதுவுமே வராமல், இருப்பதைக் கொண்டு எல்லாவற்றையும் சமாளிக்க முடியுமா என்ற திகைப்பில் மூழ்கி இருந்த துளசி, திடுக்கிட்டாள்.

நேருக்கு நேராகக் கேட்கும் போது மறைக்க முடியுமா?

நீலமேகத்தைத் திரும்பிப் பார்த்தாள். அவன் குனிந்த தலே நிமிரவில்லே.

''அதைப் போன வருஷமே அடகு வச்சிருக்கு'' என்று மெதுவான குரலில் சொன்ஞள் துளசி.

''அதுக்குத் துணேயா...... நாங்க வந்த பிறகு வளேயலும் போயிருக்கு! இன்னம் ரெண்டு வருஷத்திலே எதுவுமே மிச்சமிருக்காது. இப்ப, நான் பார்த்த வரைக்கும் இது உறுதியாத் தெரியுது. குறையையும் நிறையையும் கணக்குப்போட்டுப் பார்த்துத்தான் இப்ப நான் முடிவுக்கு வந்திருக்கேன்'' என்ருர்.

துளசி பதைக்கும் நெஞ்சுடனே எட்டிப் பார்த்தாள். நீலமேகமும் தகப்பனே நிமிர்ந்து பார்த்தான்.

''நீ நிக்கிற பிழைப்பு நிறை போகாது. பேசாம ஊருக்கு வந்து உள்ள விவசாயத்தைப் பாரு!'' என்ருர்.

குளிர்ந்த பேச்சு வருவதைக் கேட்டு, நிமிர்ந்து உட்கார்ந்த மீஞட்சி, ''நிலமெல்லாம் கடனுக்குள்ளே போயிட்ட பிறகு— அங்கே எந்த நிலத்திலே நிக்கிறது'' என்று அவசரத்துடன் கேட்டாள்.

பொன்னுச்சாமி சிரித்தார்.

''மகஞேட தைரியத்தை எடைபோட்டுப் பார்க்கத்தான் அப்படிச் சொல்லிவச்சேன். இந்த ரெண்டு வருஷத்துக்குள்ளே இவ்வளவு கடனே வாங்கிப் போட்டு குனிந்த தலே நிமிராம இருக்கான். நான் இது வரைக்கும் எந்தக் கடனேயும் வாங்கலே; எல்லாத்தையும் யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். சுதந்திரமா, நம்ம வரப்பு மேலே நிக்கறப்ப, நம்ம பின்னுலே நாலு பேரு வருவாங்க. விவசாயம் செய்யிறதுக்கு வசதி இருக்கிறப்ப, அதை மறந்திட்டு, உழுது விதைக்க நிலமில்லாதவன், வேறு பிழைப்புக்கு வழியில்லாதவனுடைய இடத்தையும் இங்கே அடைச்சுக்கிட்டு ஏன் வெந்து சாகணும்? அடமானத்திலே நிக்கிற நகையெல்லாம் திருப்பிக்கிட்டு, கிராமத்துக்கே வந்து விவசாயத்தைப் பார்க்கச் சொல்லு! அப்பத்தான் இருக்கிற நிலம் எப்பவும் நம்ம கையிலே இருக்கும்'' என்ருர்.

நீலமேகத்துக்கு இந்த முடிவு சிறந்ததாகவே பட்டது. மகிழ்ச்சியோடு தலேயைக் குலுக்கிஞன்.

''கொஞ்ச நேரத்திலே எல்லாத்தையும் கண் கலங்க வச்சுப் போட்டிங்களே. இந்த முடிவை முன்னுலேயே செய்திருக்கலாமில்ல. சும்மா வயலு வரப்பிலே நிக்கறதுக்கு இவ்வளவுக்குப் படிக்கணுமாக்கும்'' என்று கேட்டாள் மீஞட்சி.

''ஏன் படிச்சவன் கலப்பை பிடிக்கக் கூடாதுன்னு இருக்கா? படிச்சதையெல்லாம் அதிலே காட்டட்டுமே! ஒண்ணுக்கு நாலா விளேயட்டுமே! நீயும் மருமக கையிலே சாவியைக் கொடுத்துப்போடு. ரெண்டு பேரும் திண்ணேயிலே உக்காந்துக்குவோம்.'' என்று பொன்னுச்சாமி சொன்னதைக் கேட்டுத் துளசி, மாமியாரைப் பார்த்துச் சிரித்தாள்.

துளசியைத் திரும்பிப் பார்த்த நீலமேகத்துக்கும் சிரிப்புத்தான் வந்தது.

இன்றைக்கு, அந்தக் கிராமப் பஞ்சாயத்துக்கு, நீலமேகம் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்ட தலேவர்.

''என் மகன் படிச்ச படிப்பு நம்ம கிராமத்துக்குப் பயன் படுது'' என்று சொல்லும் போதெல்லாம் பொன்னுச்சாமிக்கு எல்லே இல்லாத பெருமை! மகிழ்ச்சி.

நல்ல மருந்து

நாம் குப்பையென ஒதுக்கும் குப்பைமேனி குப்பை கூளத்திலேயும் முளேக்கும்; துளிர்க்கும்; வளரும்; ஆஞல் அதன் பயன் மிகவும் பெரிது.

இதன் இலே இருக்கிறதே; அதஞல், தந்த மூல ரோகம், தீச்சுட்ட புண், வயிற்று வலி, வாத ரோகம், ரத்த மூலம், நமைச்சல், குத்தல், கபம் முதலியன நீங்கும்.

இந்த இலேச்சாற்றுக்கு மலத்தைப் போக்கும் குணம் உண்டு; கொஞ்சம் கூடுதல் பருகிஞல் வாந்தி உண்டாக்கும்; குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டியளவு கொடுக்க வாந்தியாகும். கோழையை அறுத்து வெளியாக்கும். குப்பைமேனியிலேயை அரைத்து மேக ரணங்களுக்கும், விஷக்கடிகளுக்கும் வைத்துக் கட்டக் குணமுண்டாகும்; இதன் இலேயைச் சுண்ணும்புடன் கூட்டி அரைத்து, பூரான், வண்டு, குளவி முதலியவற்றின் கொட்டு அல்லதுகடி இடங்களுக்கு மேலே தடவக் குணமுண்டாகும். இந்த இலேச் சாற்றுடன் உப்பும் கூட்டி அரைத்துச் சொறி, சிரங்கு முதலியவற்றிற்குப் பூசித் தேய்த்து நீராடக் குணமுண்டாகும்; இந்த இலேயை உலர்த்திய தூளேத் தீப்பட்டபுண், நீடித்த நோயில் படுக்கையில் கிடந்ததஞல் ஏற்பட்ட புண் ஆகியவற்றிற்கு மேலே தூவ, புண் ஆறும். பைத்தியத்திற்கு இதன் இலேச்சாறு ஒரு அவுன்ஸ் வடிகட்டி அதனுடன் மூன்று குன்று மணி எடை சாப்பாட்டு உப்பையும் கலந்து கரைத்து வைத்துக்கொண்டு நோயாளியைப் படுக்க வைத்து மூக்கின் இரு துளேகளிலும் ஐந்து அல்லது ஆறு துளி விடவும்; மூக்கிலிருந்து சளியும் தீ நீரும் வெளியாகும். உடனே குளிர்ந்த நீரைத் தலேயில் கொட்டி நீராட்டவும்; இப்படி மூன்று நாட்கள் காலேயில் செய்துவரத் தலேயிலுள்ள தீய நீரை வெளியாக்கி மூளேயைத் தூய்மை செய்து மனக் கோளாற்றை மாற்றும்.

இந்தக் குப்பை மேனியை ஆய்ந்து உலர்த்தி இடித்துப் பொடியாக வைத்துக் கொண்டு வேளேக்கு மூன்று சிட்டிகை அளவு காலே மாலே உண்டுவர, மூல நோய் நீங்கும்.

உலர்த்தின பத்து வேர்களே, மண் பானேயில் போட்டு நான்கு குவளே தண்ணீர் ஊற்றிக் கொதிக்க வைத்து, அது நான்கில் ஒரு பாகமாக வற்றி வரும் போது இறக்கி, ஆற வைக்கவும். பின் நன்ருய்க் கசக்கிப் பிழிந்த சாற்றில் ஒரு குவளே காலேயில் வெறும் வயிற்றில் சாப்பிட, இரண்டு மூன்று முறை மலம் கழியும்; புழு, பூச்சிகள் வெளியாகும். வாரம் ஒரு முறை என்ற முறையில் மூன்று வாரம் உண்ண, உடல் நன்கு வளரும்.

''நல்ல மருந்திம் மருந்து-சுகம் நல்கும் ,வைத்திய நாத மருந்து'' என்ற வள்ளலார் பாடலே 'குப்பைமேனி'க்குக் கூறலாம்.

609

கல்கத்தா செல்லும் கட்லா

கல்கத்தாவில் ஒரு பெரிய ஓட்டலின் மாடி. வங்காளத் தம்பதியர் உணவு அறையில் முள் கம்பிகளின் உதவியால் உணவருந்திக் கொண்டிருக்கின்றனர். ''ஆஹா என்ன சுவையான மீன் பொரியல்!'' என்று கணவரிடம் கூறுகிறார் அந்த நாகரீக மாது! அவர் சொல்வதை ஆமோதிப்பது போல் தலையை ஆட்டிக் கொண்டே மீன் உணவினைச் சுவைக்கிறார்அவரது கணவர்.

ஆனால் அவர்கள் அறிய மாட்டார்கள் அவர்கள் சுவைத்து உண்ட அந்த மீன்,மேட்டூர் அணையில் கொழுத்து வளர்ந்த கட்லா மீன் என்று.

ஆமாம். மேட்டூர் அணையில் அன்றாடம் பிடிக்கப்படும் மீன்களில் சுமார் 45சதவீதம் மீன்கள் கல்கத்தாவிற்குச் செல்கின்றன. மேட்டூர் அணையிலுள்ள கட்லா, வங்காளக் கெண்டை ஆகியவற்றை வங்காளிகள் மிகவும் விரும்பி வாங்குவதே இதற்குக் காரணம். வெண் கெண்டை, கெழுத்தி, வாழை, சொட்ட வாழை, அறிஞ்சான், திலேப்பி போன்ற மீன்களும் இங்கே பிடிக்கப்படுகின்றன.

கல்கத்தா தவிர பெங்களூர், திருச்சூர், சென்னை ஆகிய பகுதிகளுக்கும் இங்கு பிடிக்கப்படும் மீன்கள் அனுப்பப்படுகின்றன.

மேட்டூரில் மீனவர்களுக்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் உள்ளது. இதில் 808 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 290 பேர்கள் மேட்டூரில் மீன் பிடிக்க அனுமதி (லைசென்ஸ்) பெற்றவர்கள். இவர்கள் அணை நீரில் ஆங்காங்கே மீன்களுக்காக நைலான் வலைகளை விரித்து வைத்திருப்பார்கள்.

தினம் காலையில் மூன்று மணியளவில் பரிசலில் இருவர் ஏறி வலை விரித்துள்ள பகுதிக்குச் செல்வர். அதில் வீழ்ந்திருக்கும் மீன்களை அள்ளிப் பரிசலில் போட்டுக் கொண்டு திரும்புவர். தமிழக மீன் வளத் துறையைச் சேர்ந்த ஒரு படகு சென்று இந்த மீன்களைச் சேகரித்துத் திரும்பும்.

ஒவ்வொரு மீனவரும் எவ்வளவு மீன்களைப் பிடித்துத் தந்தார் என்பது ஆங்காங்கே படகுத் துறைகளில் எடைபோடப்பட்டுப் பதிவேடுகளில் எழுதி வைக்கப் படும்.

இவ்வாறு சேகரிக்கப்படும் மீன்களை மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் பெற்றுக் கொள்கிறது. இதற்காக உயர்ந்த ரக மீன்களுக்கு கிலோவுக்கு ரூ. 1.26-ம், சிறிய ரக மீன்களுக்கு கிலோவிற்கு 76 காசு வீதமும் மீனவர்களுக்குத் தரப்படுகின்றன.

பின், இந்த மீன்கள், இதற்காக விளம்பரம் மூலம் குத்தகை எடுத்துள்ள விற்பனையாளர்க்கு மொத்தமாக (கிலோவிற்கு ரூ. 1.45 வீதமும் 0.81 காசு வீதமும்) விற்கப்படுகின்றன.

அந்த விற்பனையாளர் அதை வாங்கி அது கெட்டுப்போகாமலிருக்கப் பனிக்கட்டித் தூள்கள் போட்டு 'பார்சல்' செய்து கல்கத்தா, பெங்களூர், திருச்சூர் சென்னை போன்ற நகரங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

''ஆமாம், தினம் எவ்வளவு மீன்கள் பிடிப்பார்கள்?'' என்று நீங்கள் ஆவலோடு கேட்பது புரிகிறது.

பொதுவாக,அணையில் தண்ணீர் குறைவாக உள்ள நாட்களில் தான் (பிப்ரவரி முதல் ஜூலை வரை)அதிக மீன்கள் கிடைக்கும். இந்தக் காலங்களில் ஒரு நாளைக்கு சராசரி 2,500 கிலோ மீன்கள் பிடிபடும். மற்ற காலங்களில் சராசரி சுமார் 200 கிலோ கிடைக்கும்.

திறமையுள்ள சில மீனவர்கள் ஆண்டுக்கு சுமார் 10,000 ரூபாய்க்கு மேல் சம்பாதிப்பதும் உண்டு என்று தெரிகிறது. சென்ற ஆண்டு ஆண்டியப்பன் என்பவர் 17,000 ரூபாய்க்கு மீன் விற்றுள்ளார்.

கூட்டுறவுச் சங்கத்திற்குக் கிடைக்கும் லாபத்தில் ஆண்டு தோறும் மீனவர்களுக்கு அவர்கள் பிடித்த மீன்களுக்குத் தக்கபடி ஊக்கத் தொகை வழங்கப் படுகிறது.

கூட்டுறவு விற்பனைச் சங்கத்தினால் ஏதாவது நன்மை ஏற்பட்டுள்ளதா என்று அருகில் நின்ற மீனவரைக் கேட்டோம். பச்சையப்பன் என்ற அந்த மீனவர் மேட்டூரை அடுத்த செம்படப் பாளையத்தைச் சேர்ந்தவர். அவர் கூறினார்:—

''நான் முப்பது வருஷமா மீன் பிடிக்கிறேனுங்க. எங்க குடும்பமே பரம்பரை பரம்பரையா மீன் பிடிக்கிறது தானுங்க. இந்தக் கூட்டுறவுச் சங்கம் வருகிறதுக்கு முன்னாலே, நான் அல்லது என் சம்சாரம் யாராவது மீன்களைக் கூடையிலே தூக்கிக்கிட்டுப் போயி மேட்டூரிலே விற்போம். கிராக்கியிருந்தா பணம் கிடைக்கும். இல்லாட்டா கிடைச்சது லாபமுன்னு சல்லிசா விற்றிட்டு வருவோம். ரொம்பக் கஷ்டமான நிலைமை.

''ஆனால் சங்கம் வந்தப்புறம் காசு வசதி நன்றாக இருக்கிறது. விற்பனைப் பொறுப்பை அவங்க ஏற்றுக்கிறாங்க. பணத்தைப்பற்றி நாங்க கவலைப் படத் தேவையில்லீங்க.

''அதோடே எங்களுக்கு வலை பின்ன நைலான் நூல் குறைந்த விலையில் தர்றாங்க. பரிசல் மற்றவை வாங்க நீண்டகாலக் கடனாக ரூ. 200 தர்றாங்க,'' என்று உற்சாகத்துடன் தெரிவித்தார் பச்சையப்பன்.

''நீங்கள் ஆண்டுக்கு எவ்வளவு மீன் பிடிப்பீர்கள்?'' என்று கேட்டதற்கு, ''சென்றஆண்டு ரூ. 2,000-த்திற்குப் பிடித்தேன். வலையைப் புதுசா கிழியாமே வச்சிருந்தா நிறைய மீன் விழும். அதோடே நிறைய இடங்களில் வலை விரிச்சு சுறுசுறுப்பாத் திறமையாயிருந்தா நிறைய மீன் கிடைக்கும்,'' என்று விளக்கம் தந்தார் பச்சையப்பன்.



பிடிபட்ட மீன்கள் படகுகளில் ஏற்றப்படுகின்றன.

மீன் வளம் பெருக்கும் தமிழ் நாடு அரசின் மீன் வளத்துறையினர் என்ன செய்கின்றனர் தெரியுமா?

நல்ல தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்கின்றனர். இதற்காக 25 அடி அகலமும், 30 அடி நீளமுமுள்ள தொட்டிகளில் நீர் நிறைத்துச் சத்துள்ள உணவு போட்டு, மீன் குஞ்சுகளை வளர்க்கின்றனர். ஒரு தொட்டியில் சுமார் ஒரு லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன. நாற்பது நாட்களில் அந்த மீன்கள் 2 அங்குல நீளம் வளர்ந்ததும் அணையில் கொண்டு போய் விடப் படுகின்றன.

மீன் வளத்துறையிடம் ஒருமீன் பதனிடும் அறை உள்ளது. விற்பனையாளர்கள் தேவைப்பட்டால் சில சமயங்களில் மீன்களை இங்கு சில நாட்கள் வைத்திருக்கலாம்.

அதோடு போக்குவரத்திற்காக இரண்டு உந்துகள் (வேன்கள்) வைத்துள்ளனர். வாடகையின் பேரில் இவை கூட்டுறவுச் சங்கத்திற்கோ, அல்லது விற்பனையாளர்களுக்கோ தரப்படுகின்றன.

மீனவர்களின் வாழ்வுக்குப் பாதுகாவலர்களாக உள்ள இந்த மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கமும், மீன் வளத் துறையும் மீனவர்களின் நண்பர்கள் போல் செயல்படுவது மகிழ்ச்சி தருவதாகும்.

மீன்களைப் பிடித்துப் பரிசலில் எடுத்து வருகின்றனர்.



இந்த விவசாயிகளிடையே போதுவாகக் காண்பது என்ன?



ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்ப் செட்டும், அதன்மூலம் கிடைத்த சுபிட்ச வாழ்வும்.

நாடெங்கும் உள்ள விவசாயிகளின் வாழ்வை வளம் கொழிக்க வகை செய்வது, பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும் நம்பகமான ஓர்த்திங்டன் - சிம்ப்ஸன் பம்பு செட்டுகள்.

ஈடு இணையற்றது என்ற புகழ் பெற்ற 'மானேபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்டிரிப்யூகல் பம்புகளையும் பெஸ்ட் அளிக்கிறது. ஓர்த்திங்டன் - சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப் - பாட்டுடன் தயாரிக்கப்படுபவை, விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப் பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது, பெஸ்ட்!



BEACON

பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.

(ஸ்தாபிதம்: 1879)
13/15, நார்த் பீச் ரோடு,
சென்னை - 1

தமிழ்நாட்டில் கிளைகள்:
6/434, திருச்சி ரோடு, கோயம்பத்தூர்
49 - D, மதுரை ரோடு, திருச்சி - 1.

FocusBC191Tam

611

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே!

"தமிழ்மொழி போல் இனிதாவது எங்குங் காணோம்" என்னும் தொடரில் பாரதியாரின் உள்ளம் பளிச்சிடுகிறது. அதன் கருத்தில் மிடுக்கு மட்டும் அன்று, மெய்ம்மையும் ஒளிவிடுகிறது. அம்மெய்ம்மைக்கு முடிசூட்ட முனைந்த பாரதியார்,

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே"

—என்று தெளிவாகக் குரல் கொடுத்தார். அவர் குரலுக்கேற்பத் தமிழ்ச்சொல் உயர்வுடையதே. அவ்வுயர்வை எக்கோடியில்—எக்கோணத்தில் நின்றும் காணலாம். ஒரு கோணத்தில் நின்று காண்போம்!

சொல் ஒரு நெல்.

நெல்லைக் குறிக்கும் சொற்கள் பலவற்றில் 'சொல்' என்னும் சொல்லும் ஒன்று.

"அரி சொல்லு விரீகி சாலி வளர்செந்நெல் லாம்"

—என்று பட்டியலிடுகிறது சூடாமணி நிகண்டு. இவ்வகையில் 'சொல்' என்ற தமிழ்ச்சொல்லுக்கு 'நெல்' என்றொரு பொருள் உண்டு. நெல்லின் விளக்கத்தைச் சொல்லொடு இயைத்துக் காணின் சொல்லுக்கு நெல்லென்ற பொருளால் அமையும் உயர்வு தனித்துத் தென்படும்.

நெற்பயிர் பூத்துக் கருப் பிடித்துக் காயாகவே நின்று விட்டால் அது கருக்காய். கரு முற்றினால் மணி பிடித் திருக்கிறது என்பர். முற்றுவது முத்து. இதுகொண்டுதான் நெல்லில் முத்துப் பிறக்கும் என்றனர். முத்துத் தோன்றும் இருபது இடங்களைக் குறிக்கும் தனிப்பாடல் ஒன்று,

"கந்தரம் சாலி கழை கன்னல் ஆவின்பல்"

—என்று சாலி நெல்லைப் பட்டியலில் இணைக்கிறது. "மாரியம்மனுக்கு முத்துப் போடுக" என்று ஞாயிறு தோறும் அரிசி கேட்பதை இன்றும் வழக்கில் கேட்கிறோம்.

முத்தாம் மணியான அரிசி பிடித்துத் திரண்டு விளங்குவதே நெல். இவ்வியையுடையதே சொல்லும். நெற்பயிர் அடிநிலத்தினின்று முளைக்கும்; சொல்லின் மூலமாம் ஒலியணுவும் அடிவயிற்றினின்று முளைக்கும். முளைத்த நெல் தழைத்து வளரும்; முளைத்த ஒலியணு நிறையுயிர் முயற்சியால் திரண்டு தழைக்கும். தழைத்த பயிர், மண் வளம், நீர், வெயில், காற்று ஆகியவற்றால் பூக்கும், சொல்லுக்குரிய எழுத்துக்களின் ஒலியுரு நெஞ்சு, கழுத்து, மண்டையுச்சி, மூக்கு எனும் நான்கிடத்து மலரும். மலரது சுண்ணச் சேர்க்கையின் இணைப்பு முயற்சியால் கருப்பிடிக்கும். உதடு, நாக்கு, பல், மேல்வாய் என்னும் உறுப்புக்களின் முயற்சியால் சொல்லின் கருவாம் எழுத்தொலி உண்டாகும். நெற்கரு, பயிரின் பல்வகை ஊட்டச் சேர்க்கையால் காயாகும்; சொற்கரு தனி எழுத்து, எழுத்துக்களின் ஒலிச்சேர்க்கையால் சொல்லுருப்பெறும். நெற்கரு காயாகவே நின்றுவிடின் அது கருக்காய்-பதர்-பதடி; சொற்கரு பொருளற்று எழுத்துக்களின் கூட்டலாகவே நின்றுவிடின் அது- உளறல்-கத்தல்-உறுமல்; சொல்லாகாது.

கோவை இளஞ்சேரன்

கரு முற்றித் திரண்டு பொன்னிறம் காட்டின் அது நெல்;

பொருள்முற்றிக் கருத்துத் திரண்டு ஒலிநயங் காட்டின் அது சொல்.

பாவேந்தர் அவர்கள், "கருந்தமிழ்ச் சொல்லுக் குள்ளே கருத்துக்கள் இருத்தல் போலே"-என்றார்.

செஞ்சொல் ஒரு செந்நெல்.

கருத்துடைய சொல், பயன் விளைப்பதாகவும் அமையவேண்டும். அந்நிலையில்தான் சொல் தன் இயல்பில் நிறைவு பெற்றதாகும். பயன் விளைக்காத சொல்லைப் பயன் விளைக்காத கருக்காயோடு ஒப்பிடுவர். 'பயன் விளைக்காத சொல்லை மேலும் மேலும் விரும்பிக் கூறுபவனை மாந்தரினத்துள் பிறந்த மகன் என்று சொல்லாதே ; மக்களினத்துத் தோன்றிய பதடி-பதர் என்று சொல்லுக' என்பர் திருவள்ளுவப் பெருந்தகையார்.

உள்ளீடில்லாத நெல் பதர் ;

உள்ளீடில்லாத சொல்லும் பதர்.

காயவைத்துத் தூற்றிப் பதர் போக்கிய நெல்லையே தூற்றிய செந்நெல் என்பது போல, பயனின்மை நீக்கிய சொல்லைக் கூறவந்த சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர்,

''பதர் அறு திருமொழி''—என்றார்.

சொல்-சொலி.

நெற்பயிரின் தொடர்பிலும் சொல் இடம் பெறுதலைக் காணலாம். நெல்தாளின் உட்புறத்திலும், மூங்கிலின் உட்புறத்திலும் மென்மையாக உரியும் வெண்மைத் தோலைச் 'சொலி' என்பர்.

''கழைபடு சொலி''-என்கிறது புறநானூறு.

''காம்பு சொலித்தன்ன'' — என்கிறது சிறுபாணாற்றுப்படை.

சொல்-களை.

பயிரின் நடுவே வளரும் புல் முதலியவற்றைக் 'களை' என்கிறோம். அவற்றை நீக்குதலைக் 'களை கட்டல்' என்கிறோம். இக் களைகட்டல் என்பதற்கு வேறு ஒரு சொல் இலக்கியங்களில் கையாளப்படுகிறது. அச்சொல், 'சொல்' என்பதன் அடியாக அமைந்த 'சொல்லிய' என்னும் சொல். நண்பருக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கத் தொடங்கினான் எனக் குறிக்க எண்ணிய சிந்தாமணி ஆசிரியர்,

''துணைவனார்க் குற்ற துன்பம் சொல்லிய தொடங்கினானே''—என்றார்.

புறாவின் துன்பத்தை நீக்கிய மாமன்னன் சிபியின் செய்தியை, ''புறவின் அல்லல் சொல்லிய''-என்றார் ஆவூர் மூலங்கிழார்.

'' பண்டைச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய'' என்பது ஔவையின் தொடர்.

களை கட்டலைச் சொல்லோடு இயைத்து அறநெறிச்சார ஆசிரியர் முனைப்பாடியார் பேசுகிறார். அறத்தைப் பயிராக உருவகித்துப் பாடும் அவர், இன்சொல்லை விளைநிலமாக்கி, வன்சொல்லைக் களையாக்கி, உண்மைச் சொல்லை எருவாக்குகிறார் :

'இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி''

என்பது அவர்தம் பாட்டு.

சொல் நிழல்.

நெற்கதிர் பல்லுயிர்களையும் ஓம்பிப் பசி என்னும் வெம்மை போக்கிப் பேணி, உணவு என்னும் நிழலைத் தருவதால் ''அலகு உடை நீழல்''—என்று குறித்தார் திருவள்ளுவர்.

இதுபோன்றே, மக்களை ஒலி இனிமையால் ஓம்பிப் பேணிச் 'சோர்வு' என்னும் வெம்மை போக்கி 'இனிமை' என்னும் நிழல் தரும் சொல்லின் பயனை வைத்துச் ''சொன்னிழல்'' என்றனர், கோவூர் கிழார்;

''சொன்னிழல் இன்மையின் நன்னிழல் சேர''
-என்றார்.

சோற்றுக்குள் சொல்.

நெற்பயனால் ஆக்கப்படும் உணவைக் குறிக்க, சொன்றி என்றொரு சொல் உண்டு.

''சொன்றிப் பெருமலை தின்று'' என்று கூறுகிறது கல்லாடம்.

''புன்புல வரகின் சொன்றியொடு பெறுவை''-என்கிறது புறம். நெல்லிலிருந்தும், பிற பயிர்களிலிருந்தும் உருவாகும் உணவைக் குறிக்க எழுந்த சொல்லாம் 'சொன்றி'யில் சொல், என்பது வேர்ச் சொல்லாக அமைந்துள்ளமை நோக்கத் தக்கது. சோற்றுக்குள்ளே சொல் ஒலிக்கிறது.

சொல்-வித்து.

நெல் பயிர்; சொல்லையும் பயிராகக் கண்டனர். நிலத்தில் விதையை வித்தி நெல்லை விளைப்பது போன்றே, செவியில் சொல்லைப் பெய்து பயன் விளைப்பர்.

செவியை நிலமாகவும், சொல்லை வித்தாகவும், பயன் நிறைவேறுதலைப் பயிர் விளைவாகவும் உருவகம் செய்தனர் புலவர் :

''செவிமுதல் வயங்குமொழி வித்தி

உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளம்''
-என்கிறார் ஔவையார்.

''செவிமுதல் வித்திய பனுவல் விளைந்தன்று''
-என்கிறார் பெருஞ்சித்திரனார்.

புலவர் உழவராகிறார்.

சொல்லை வழங்கலை நெற்பயிர்த் தொழிலாகக் கண்டவர்கள் சொல் விளைக்கும் புலவனை உழவனாகக் கண்டமையை,

''வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை

-எனுங் குறள் விளக்குகிறது.

சொல் ஏராகிறது. புலவர் உழவரானார்.

இதற்குப் பொருந்த அறிவை-புலனை ஏராக வைத்துப் ''புலன் உழுது உண்மார்''

-என்றார் கோவூர்கிழார்.

சொல்லாடல் ஓர் உழவுத்தொழில்.

இவற்றையெல்லாம் ஒருசேர நோக்கி ஒரு காட்சியாக்குகிறார் கலித்தொகை ஆசிரியர் :

புனலூர் என்றொரு சிற்றூர். அவ்வூரில் ஒரு விருந்துக் காட்சி. அவ்விருந்தும் ஒரு கூட்டாஞ்சோற்று விருந்து. உணவை ஆக்குகின்றவர் ; படைக்கின்றவர் ; உண்கின்றவர் யாவரும் புலவர்கள். இச்செயல்கள் மட்டுமல்ல ; நிலத்தைப் பண்படுத்தி வயலாக்குகின்றவர்களும் அவர்களே. கலப்பை கொண்டு உழுகின்றவர்களும் அவர்களே. நெல்லை விதைத்துப் புதுச்சுவையோடு உணவாக்குகின்றவர்களும் அவர்களே. கூடி உண்கின்றவர்களும் புலவர்களே.

இதில் ஒரு புதுமை. பயிர்த்தொழிலோ வள வயல் ஆக்குதலும், நீர் பாய்ச்சுதலும், உழுதலும் முதலிய செயல்களால் வெவ்வேறு பருவத்தில், காலத்தில், நேரத்தில் நிகழ்வது. ஆனால், இப்புலவர்கள் செய்யும் உழவுத் தொழில் ஒரே நேரத்தில் எல்லாச் செயல்களையும் கொண்டது. இப் புதுமையைக் காண்போம் :

புலவர்களால் பண்படுத்தப்பட்ட வயல் செவி. ஆம், யாவரது செவிகளுமே வயல்கள். எத்தகைய வயல்? கரம்பைச் செதுக்கிக் களர் ஒதுக்கித் தள்ளி வயலைப் பண்படுத்துகின்றமை போன்று, வன்சொல் கேளாமல் 'செதுக்கி' யொதுக்கிப் பயனில் சொற்களைக் கேளாமல் 'களைந்து' விலக்கிச் செப்பஞ் செய்யப்பட்ட புலவர்களது செவிகளாகிய வயல்கள். (''செதுமொழி சீத்த செவி செறுவாக'') முன்னையச் சான்றோர்தம் பொன்மொழிகளை வைத்து இப்புலவர்கள் பனுவல் பாடுகிறார்கள். அம்முதுமொழியே நீராகப் பாய்ச்சப்படுகிறது. நல்ல நூல்களைப் பயின்ற அறிவுடை நாவே கலப்பை. அக்கலப்பை கொண்டு உழுகின்றார்கள். (''முதுமொழி நீரா புலன் நா உழவர்'') புதுமை நயமும் சுவையும் திகழும் புதுமொழிகளாம் ஒன்பான் சுவை உணவைக் கூட்டி உண்ணுகின்றார்கள். இப்புலவர்கள் வாழும் ஊரின் பெயர் புனலூர். ஊரின் பெயரும் வயலுக்கினிய நீர்-புனம் அமைந்த பெயர். ஊர் புனலாக இருந்தால் கரை வேண்டுமன்றோ? புனலூருக்குக் கரையாக அவ்வூர்க் கோட்டை மதில் சூழ்ந்துள்ளது. (''புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர்'')

கலித்தொகை ஆசிரியரது வாய்மொழியை ஒன்று கூட்டிக் காண்போம் :

''செதுமொழி சீத்த செவிசெறு வாக,
முதுமொழி நீரா, புலனா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ்
புனலூர்.''

இப்பாடல் அமைந்த பகுதி மருதக்கலி. சொல் என்னும் நெல் விளையும் பாடல் மருதக் (மருதம்-பகுதியைக் குறிக்கும் பெயரன்றோ?) கலியுள் அன்றி வேறெங்கு அமையும்?

இவ்வாறு நெல்லொடு சொல் தொடர்பாக ஓரிடத்தில் மட்டும் அமையின் அதை ஆழ்ந்த நிறை வழக்காகக் கொள்ள இயலாது. பலரது உள்ளத்தும் இவ்வெண்ணம் அவ்வப்போது ஊறி நின்றுள்ளதை இலக்கியங்களில் காணலாம். இவ்வகையில் சிலம்பின் ஆசிரியர் இளங்கோவடிகள் பேச்சைக் கேட்போம் :

செங்குட்டுவன் கனக விசயரை வென்றான். வென்றியைத் தமிழக மன்னர்க்கு அறிவிக்கச் செய்தான். சோழ பாண்டியர் தம் மாற்றம் சேரனுக்குச் சினத்தை மூட்டியது. அங்கமர்ந்திருந்த மாடல மறையவன் அமைதிப்படுத்தி,அறிவுரைபுகல்கிறான். அவ்விடத்தை வாய்ப்பாகக் கொண்டு இளங்கோவடிகள் சொற்பயிரை விளைக்கின்றார் :

'மறையோன் மறை நா உழுது வான்பொருள்
இறையோன் செவி செறுவாக வித்தலின்
வித்திய பெரும்பதம் விளைந்து பதம் மிகுத்துத்
துய்த்தல் வேட்கையில் சூழ்கழல் வேந்தன்''

மாடலன் வாய்வழி இளங்கோவடிகள் பேச்சில் நாக்கு ஏராக உழுகின்றது. செவி வயலாகின்றது. பொருள் விதையாகின்றது. பயன் விளைவாகின்றது; வேட்கை உண்ணலாகின்றது.

இவ்வாறு, சொல் நெல்லாய், வளர்ந்து பயிராகும் வரலாற்றின் படிகளில் ஏறுவோம் :

சொல்	நெல்
செஞ்சொல்	செந்நெல்
பயனில்சொல்	பதர்
வன்சொல்	களை
சொல்	சொலி
சொல் நிழல்	கதிர் நிழல்
சொல்	சோறு (சொன்றி)
சொல்	வித்து
சொல்லும் நாக்கு.	உழும் ஏர்
சொல்லாடல்	உழவுத் தொழில்
புலவர்	உழவர்

இப்படிகளில் ஏறுங்கால் படிப்படியாகத் தமிழ்ச் சொல்லின் உயர்வைக் காண்கிறோம்.

நெல்லின்கோணத்தில்,நின்று,சொல்லைக் காணுங்கால் தோன்றும் சொல்லின் உயர்வை, உள்ளத்தில் கொண்டு இக்காலச் சொற்களின் வரலாற்றை ஆய்வது நற்பயன் தரும். இக்கட்டுரை முன்னுரைக் கட்டுரை. இதைத் தொடர்ந்து ஒவ்வொரு சொல்லின் வரலாற்றையும் சொற்கள் மருவுதலால் உருமாறியுள்ளமையையும், அதனால் பொருள் சிதைந்து வருகின்றமையையும், சொல்லின் வேரைக் காண்பதால் நற்பொருளினை உணர்ந்து, தெளிய இயல்வதையும் மேற்கொள்ளலாம்.

உலக வங்கித் தலைவரின் உதவி



தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சிக்காகக் குழாய்க் கிணறுகள் அமைக்க எந்த அளவு உதவி செய்ய முடியும் என்பதனை ஆய்வு செய்ய உலக பாங்க் ஒரு குழுவினைத் தமிழகத்திற்கு அனுப்பியது.

திரு. கிருஸ்டோபர் எச். வால்டன் அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் திரு. இ. ஏ. பாப், திரு. ஆர். ரோஸி, திரு. ஜே. எம். டேனியல், திரு. பி. தாமஸ் ஆகியோர் உறுப்பினர்கள். இந்தக் குழுவினர் தஞ்சை, திருச்சி, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்தனர்.

சுற்றுப் பயணம் முடிந்து சென்னை திரும்பிய அந்தக் குழுவினர் தமிழக முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களைச் சந்தித்துப் பேசினர். அப்போது வேளாண்மை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களும், கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களும் தலைமைச் செயலரும் உடன் இருந்தனர்.

பேச்சு முடிவில் திரு. வால்டன் அறிவித்ததாவது : ''வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் குறித்துத் தமிழக அரசு அதிகாரிகள், வங்கிகள், நிலவள வங்கிகள் ஆகிய பலதரப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சு நடத்தினோம்.

குழாய்க்கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் வெட்டி, நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவது, நிலங்களைச் சமப்படுத்திப் பயன்படுத்துவது, வேளாண்மைக்கு நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவது ஆகிய திட்டங்களுக்கு உதவலாமென முடிவு செய்தோம். எங்கள் முடிவுகளை அறிக்கையாக உலக பாங்கிக்குச் சமர்ப்பிப்போம்.

அதன்படி தமிழ்நாட்டு அரசுக்கு ஒரு கணிசமான தொகையை உதவ முடிவு செய்துள்ளோம். ஏறத்தாழ 40 முதல் 45 கோடி ரூபாய் வரை உதவி செய்யும்படி அந்த அறிக்கையில் நாங்கள் உலக பாங்கிக்கு எடுத்துக் கூறுவோம்.

இந்த அறிக்கையினை உலக பாங்க் பரிசீலனை செய்து முடிவு செய்யும். இந்த உதவி ஆறு மாத காலத்திற்குள் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும்.

விவசாயிகளுக்குச் செய்யப்படும் இந்த உதவி, விவசாயிகளுக்கான மறுநிதி வாரியம், நிலவள வங்கிகள், மற்ற வங்கிகள் ஆகியவை மூலம் வழங்கப்படும். மழை இல்லாத காலத்தும் விவசாயிகள் நல்ல முறையில் வேளாண்மை செய்யப் பாசன வசதிக்கு இந்த நிதி உதவித் திட்டம் உதவும்.''

குளத்து மீனைக் கிணற்றில் விட்டால் அது நிறம் மாறுகிறது.

காடே அதிரக் கர்ஜிக்கும் சிங்கம், சர்க்கஸ்காரரின் சாட்டைக்குப் பயந்து, ஆட்டி வைத்தபடி ஆடுகிறது.

விலங்குகள் மட்டுமல்ல. மனிதர்கள், அதுவும்குறிப்பாக இளஞ்சிறுர்கள், சூழ்நிலையால் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் நல்ல வழியில் செல்வதும், கெட்ட செயல்களில் ஈடுபடுவதும், பெரும்பாலும் சூழ்நிலையைப் பொறுத்ததே!

எடுத்துக் காட்டாக, இதோ சில சிறுவர்களின் வாழ்க்கையைப் பாதித்த நிகழ்ச்சிகள் :

அந்தச் சிறுவனுக்கு வயது 12. தந்தை ஆஸ்துமா நோயாளி. அவன், தாய் தந்தையருக்குத் தெரியாமல் பள்ளிக்கு மட்டம் போடலானான். பள்ளி நேரங்களில் பூங்காவிற்கு செல்லும்பழக்கம் ஏற்பட்டது. அங்கு அவனுக்குச் சில கயவர்களின் தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் அவனை 'பிக் பாக்கெட்' அடிக்கப் பழக்கினார்கள்.

கூட்டமுள்ள இடத்தில்அவனது கைகளுக்கு வேலை தரப்படும். அகப்பட்டதை எடுத்து கயவனிடம் கொடுக்க வேண்டியது. அவனை உற்சாகப் படுத்துவதற்காக அக் கயவன் அச்சிறுவனுக்கு சாப்பாடு, குடி, சினிமா, சிகரெட் எல்லாம்கொடுத்துஅவனை மயக்கி வந்தான். பையனுக்கு கெட்ட தொடர்பு ஏற்பட்டதை அறிந்த தாய், அந்தத் தொடர்பை அறுத்துக் கொள்வதற்காக, அவனுக்கு ஒரு ரூபாய்க்குக் கடலை மிட்டாய் வாங்கித் தெருவில் சென்று விற்க அனுப்பினாள். ஆனால் கயவர்கள் அவனை அந்தத் தொழிலில் செல்ல விடவில்லை. மிட்டாய் முழுவதையும்அவர்களே வாங்கிக் கொண்டு பணத்தைத் தாயிடம் கொடுத்து விட்டு மீண்டும் அவர்களது ' தொழிலில் ' ஈடுபட அழைத்துச் சென்றனர். சில சமயம் ஒரே நாளில் ரூ. 500 கூட இந்தச் சிறுவன் 'பிக் பாக்கெட்' அடிப்பதுண்டு. எனவே நல்ல வருவாய் கொண்டு வரும் இச் சிறுவனை இழக்க அந்த வெட்டிக் கும்பல் விரும்பவில்லை.

ஒரு முறை அவன் அதில் ஈடுபட மறுத்தபோது, அவனைப் பயமுறுத்துவதற்காக வயிற்றில் கத்தியால் ஒரு கீறு கீறிவிட்டான் அந்தமுரடர்களில்ஒருவன். பெற்றோர்களையும் பயமுறுத்தினான். சிலந்தி வலையில் பட்ட ஈ போல, அவர்களது வலையில் மீள முடியாது திணறினான், அச் சிறுவன்.

அப்போது, சென்னை அண்ணா நகரில் உலகத் தொழில் கண்காட்சி நடந்த சமயம். அங்கு ஒரு கூடாரத்தில் டெலிவிஷன் பார்த்த கூட்டத்தில் ஒருவரது பைக்குள் கையைப் போட்டு பணப்பையை எடுத்து விட்டான் சிறுவன். துரதிர்ஷ்ட வசமாக-அல்ல-அதிர்ஷ்ட வசமாக பக்கத்தில் நின்ற நண்பர் அதைப் பார்த்து விட்டார். பையன் போலீசிடம் ஒப்படைக்கப்பட்டான். எப்போதுமே சிறுவனைத் தொடர்ந்தே கயவன் வருவது வழக்கம். ஆனால் சிறுவன் போலீசில் சிக்கியது தெரிந்ததும் அவன் அந்த இடத்தை விட்டு நழுவி ஓடி விட்டான். சிறுவனிடமிருந்த ரூபாய் 140 கைப்பற்றப் பட்டது. அவன், நீதி மன்றத்தில் நின்றான், குற்றவாளியாக! பள்ளி செல்ல வேண்டிய அப் பாலகனைச் சூழ்நிலை குற்றவாளிக் கூண்டிலே ஏற்றிவிட்டது.

மற்றொரு சிறுவன், அவனுக்கு வயது 17. பெரிய இடத்துப் பையன். பெரிய அதிகாரியாக இருந்த அப்பா இறந்து விட்டார். வீடு, தியாகராய நகரில்; பள்ளி நண்பர்களிடம் ஆனந்தமாக கிரிக்கெட் விளையாடி வந்த அவனது பாதை மாறியது. கெட்டவர்கள் தொடர்பு ஏற்பட்டது. திருடுவதற்குப் பழகினான்.

ஒரு நாள் இரவு, புதிய வீடு ஒன்றில் கட்டடம் கட்டச்சாமான்கள் போடப்பட்டிருந்தன. அது, அவனது பள்ளி நண்பனின் வீடு தான். பழக்கப்பட்ட இடம்தான்; பள்ளி நண்பன், அவனது அம்மா, அப்பா அனைவரும் அவனுக்குப் பழக்கமானவர்கள். இருப்பினும் திருடர்களுக்குத் துணையாக அந்த வீட்டில் புகுந்து சாமான்களைத் திருடினான். அகப்பட்டுக்கொண்டான். நல்ல நண்பர்களை விட்டு விட்டுத் திருடர்களை நண்பனாகக் கொண்டதால் அவன் திருடனாக மாறினான்!

• • •

அந்தப் பெண்ணுக்குப் பதினேழு வயது. திருமணமானவள். குழந்தை ஒன்றும் உண்டு. சுமாரான குடும்பத்தைச் சேர்ந்த அவள் எட்டாவது வகுப்பு வரை படித்திருந்தாள். அவளுக்குத் தாய்-தந்தை, கிடையாது. சகோதரர்கள் நல்ல நிலையில் இருந்தும் ஏனோ எழுத்தறிவு இல்லாத தொழிலாளிக்கு அவளை மணம் முடித்துக் கொடுத்தனர். ஆனால் புகுந்த வீட்டில் அவளது வாழ்க்கை துயரமிக்கதாக இருந்தது.

இவளும் ஒரு தொழிற்சாலையில் வேலையில் சேர்ந்தாள். அது ஆண்களும் பணியாற்றும் தொழிற்கூடம். எனவே அதிலும் குறை கண்டாள் மாமியார். இவள் தொழிற்கூடத்தைச்சேர்ந்த ஆண்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகப் பழி சுமத்தினாள்.

இந்தச்சந்தர்ப்பத்தில் மாமியார் நடத்தி வந்த 'சீட்டுக் கம்பெனி' நொடித்தது. சீட்டுக் கட்டியவர்கள் நெருக்கினர். இதற்கும் மருமகள் மீதே பழிபோட்டாள் மாமியார். இவள் காலை வைத்த காலந் தொட்டே அடுத்தடுத்து நட்டம் வருவதாகத் திட்டினாள்.

அதோடு நின்று விட வில்லை. அவளையும் அவளது கைக் குழந்தையையும் அனாதையாக் விட்டு விட்டு மாமியாரும் கணவரும் ஊரை விட்டே எங்கோ ஒருநாள் ஓடிவிட்டனர்.

தனது துயர் மிக்க நிலை பற்றி ஆந்திராவில் நல்ல உத்தியோகத்திலிருக்கும்தனது அண்ணனுக்குப் பல முறை அந்தப் பெண் எழுதிப் பார்த்தாள். பலனில்லை. முடிவில் அபய நிலையத்தில் சேர்க்கப் பட்டாள். சூழ்நிலை அவளை அந்த நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியது.

• • •

இவர்கள் மட்டுமல்ல. இது போல் சூழ்நிலையின் சதியால் குற்றவாளிகளாகும் இளஞ்சிறார்கள் பலர். ரெயிலில் டிக்கெட் எடுக்காமல் போவது முதல், அடிதடிக் கத்திக் குத்தில் ஈடுபடுவது வரை பலவகையான இளஞ்சிறுவர்கள் உண்டு. இதில் சிலர் மூளைக்குறைபாடு உள்ளவர்களாக இருப்பர். மற்றவர்கள் பெரும்பாலும் சந்தர்ப்பத்தின் பிடியினால் இந்தக் குற்றங்களில் ஈடுபடுவர்.

இப்படிப்பட்ட சிறுவர் சிறுமிகளின் மன நிலையை உளவியல் (Psychology) முறையில் ஆய்வு செய்துகண்டுபிடி[illegible] அவர்களைத் திருத்தி நல்ல வ[illegible]ல் நெறிப் படுத்த உள்ளது தான் ''சிறுவர்களை நெறிப் படுத்தும் கழகம் (Juvenile Guidance Bureau) சென்னை எழும்பூர், முதன்மை மாநில நீதிபதி (Chief Presidency Magistrate) கோர்ட்டை ஒட்டி உள்ள சிறிய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியரும் உளவியல் துறைத் தலைவருமான டாக்டர் டி.ஈ. சண்முகத்தை கவுரவ இயக்குநராகவும், செல்வி பெற்றி டேவிட்டை பகுதி நேர உளவியல் நிபுணராயும் கொண்ட இந்தக் கழகத்தின் நிர்வாகக் குழுவின் தலைவர் தலைமை மாநில நீதிபதி திரு. எஸ். நடராஜன். குழுவின் துணைத் தலைவராக இருப்பவர் டாக்டர் திருமதி ஜெயலெட்சுமி ராவ் ஆவார்.

இந்தியாவிலே முதலில் தோன்றியது என்ற பெருமை இந்தக் கழகத்திற்கு உண்டு. 1955-ல் திருமதி கிளப்வாலா ஜாதவ், டாக்டர் சி. டி. போயஸ் இருவரும் சேர்ந்து இந்தக் கழகத்தைத் துவக்கினர். தமிழக அரசின் உதவியைக்கொண்டு நடத்துவரும்

இளங்குற்றவாளியை, இயக்குநரும் உளவியல் நிபுணரும் ஆய்வு செய்கின்றனர்.

இந்தக் கழகம், அமைப்பில் சிறிய தானாலும் ஆற்றிவரும் பணி மிக மிகப் பெரியது, பாராட்டுக்குரியது.

இதேபோல் . வேலூரிலும் மதுரையிலும் சிறுவரை நெறிப் படுத்தும் கழகம் உள்ளது. ஆமாம், இந்தக் கழகம் என்ன பணி செய்கிறது?

கோர்ட்டுக்குக் கொண்டு வரப்படும் 7 முதல் 18 வயது வரையுள்ள இளங்குற்றவாளிகளை அப்படியே விசாரித்துத் தீர்ப்புக் கூறி விடுவதில்லை. விசாரணைக் காலத்தில் சிறுவர்கள் மாம்பலத்திலுள்ள வரவேற்பு இல்லத்திலும் (Reception House) சிறுமிகள் சேத்துப்பட்டிலுள்ள இல்லத்திலும் வைக்கப்படுகிறார்கள்.

அப்போது அவர்கள் ஆய்வுக்காக, அதாவது எந்த நிலையில் அச்சிறுவன் அந்தக் குற்றத்தில் ஈடுபட்டான், அவனைத் திருத்த இயலுமா, என்பதனை ஆய்ந்தறிய இந்தக் கழகத்திற்கு அனுப்புகின்றனர்.

அவர்களைச் சோதித்துப் பார்ப்பதற்கு இங்கு நான்கு ஆய்வு அதிகாரிகள் உள்ளனர். எம். ஏ. படித்து விட்டு, ஆராய்ச்சியில் (Research) ஈடுபட்டுள்ள மாணவர்களே அவர்கள். தற்போது திருவாளர்கள் ஜயச்சந்திரன், பி. நடராஜன், கே. சொக்கலிங்கம், செல்வி எஸ். பார்வதி ஆகியோர் கவுரவ ஆய்வு அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். செவ்வாய், சனி ஆகிய இரு நாட்களில் காலை நேரங்களில் மட்டும் இவர்கள் ஆய்வு நடத்துகின்றனர். மற்ற சமயங்களில் பகுதி நேர உளவியல் நிபுணரே இதனைக் கவனிக்கிறார்.

அவர்கள் இந்தச் சிறுவர் சிறுமிகளைப் பலவிதத்தில் சோதனை செய்கின்றனர். இந்த ஆய்வு ஒரு வாரம் முதல் இரண்டு வாரமோ தேவைப்பட்டால் மேலும் சில நாட்களோ நடத்தப்படும். சிறுவர்களின் மனபயம் நீங்கித் தெளிவாக உண்மையினை எடுத்துக் கூறும் நிலையை அடைவதற்கே இவ்வளவு நாட்கள் தரப்படுகின்றன. இதற்காக அவர்களை விளையாட விட்டு அன்பொழுகப் பேசி அவர்களுடன் பழகுகின்றனர். இந்த ஆய்வு அதிகாரிகள்.



தன் மகனின் நடத்தைப்பற்றி, ஆய்வு அதிகாரியிடம் தெரிவிக்கிறார் தந்தை

பலவகையான சோதனைகள் உண்டு. ஒன்று, புத்திசாலித்தனத்தைச் சோதிப்பது. ஏதாவது விளையாட்டுப் பொருட்களைக் கொடுத்து அதனை வீடு மாதிரி, பொம்மைகள் போல் அடுக்கச் சொல்வது இதில் அடங்கும். மற்றொன்று தொழில் மனப்பாங்கைக் (aptitude) காணுவதற்கான ஆய்வு. பலவிதமான தொழில்களைப் பற்றிய படங்களைக் காட்டி, எந்தத் தொழிலில் அவர்கள் மனம் ஈடுபடுகிறது என்பதைக் கண்டறிவது. அடுத்தது, குண நலனை (Personality) ஆய்வது. ஏதாவது படத்தைக் காட்டி அது பற்றிச் சிறிய கதை எழுதச்சொல்வது. குண நலனுக்குத் தக்கபடி, சோகக் கதை, அடிதடிக்கதை, ஆனந்த முடிவுள்ள கதை இப்படி பல வகையில் அச் சிறுவர்கள் எழுதுகின்றனர்.

இதற்குச் சான்றாக ஒரு சிறுவனைக் குறிப்பிடலாம்.

அவனுக்கு வயது 12 இருக்கும். தாய் தந்தையை இழந்த அனாதை. அனாதைப் பள்ளியொன்றில் படித்து வந்தான். அங்கு அவன் சரியாக நடத்தப்படாததால் தற்கொலை செய்ய முயன்றான். அவன் மீது தற்கொலை முயற்சிக் குற்றம் சுமத்தப்பட்டு இந்தக் கழகத்திற்குக் கொண்டுவரப்பட்டான்.

அவனிடம் சில படங்கள் காட்டப்பட்டன.

ஒன்று, ஒரு பெண் சோகமாக இருக்கும் படம். அதற்கு அவன் எழுதியுள்ள கதை பின்வருமாறு:-

பத்மாவின் விதி (அவன் தந்த தலைப்பு.)

''பத்மாவிற்குத் தாயில்லை; ஆனால் தந்தை மட்டும் இருந்தார். தந்தை கூலி வேலை செய்தேனும் காசு கொண்டுவந்து கொடுப்பார். இதை, பத்மா, பொருள் வாங்கிச் சமைத்து தன் தந்தைக்கும் கொடுத்துத் தானும் சாப்பிடுவாள். மனைவி இறந்து சுமார் 4 வருடங்கள் ஆயிற்று.

தந்தை மறுமணம் செய்து கொள்ளலாமே என்று விரும்பினார். திடீரென்று ஒரு நாள் அவர் ஊரைவிட்டே போய் விட்டார்.

அவர் திரும்பி வரவே இல்லை. இதை நினைத்து நினைத்து பத்மா அழுதுகொண்டேயிருக்கிறாள்.

உங்களுக்கு நோய் வரலாம். அதற்கு நீங்கள் மருந்து சாப்பிட்டால் குணமடைவீர்கள். ஆனால் பத்மாவின் வியாதியை யாராலும் குணப்படுத்த முடியாது! யாராவது, நான் குணப்படுத்துவேனென்று கூறுபவர்கள் இருந்தால் இதில் தங்கள் பெயரைக் குறிக்கலாம்.''

சவாலுடன் அந்தக்கதையை முடிக்கிறான் நாலாவது வகுப்புப் படித்து வந்த அந்தச் சிறுவன். இதுபோல் வேறு இரண்டு படங்களுக்கும் வேறு விதக் கதைகள் எழுதியிருக்கிறான்.

இதில் முக்கியக் குறிப்பு என்னவென்றால், அவன் அனாதையானபடியால் அவன் எழுதியுள்ள ஒவ்வொரு கதையிலும் வரும் பாத்திரங்களை அனாதைகளாக—தாய்-தந்தை இழந்தவர்களாக—சோகத்தில் உள்ளவர்களாகவே படம் பிடித்துக் காட்டுகிறான்.

• • • •

இந்த ஆய்வுகள் நடத்தியபின் இந்தச் சிறுவர்கள் பற்றிய அறிக்கையை இந்த அதிகாரிகள் தயாரித்துக் கழகத்திடம் ஒப்படைக்கிறார்கள். உளவியல் நிபுணர் அதனை நன்றாக ஆய்ந்து, தனது கருத்தினைத் தெரிவிக்கிறார். அதன் பின்னர் சில சிறுவர்கள் அறிவுரை வழங்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படுகின்றனர். வேறு சிலர் அரசின் சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளுக்குச் சில ஆண்டுகள் அனுப்ப சிபாரிசு செய்யப்படுகின்றனர். மூளைக் குறைபாடு உள்ள சிறுவர் சிறுமியர் பால விகார் அனுப்பப்படுகின்றனர்.

தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, தஞ்சை, தட்டப்பாரை, மூங்கிலடி ஆகிய இடங்களிலும் மற்றும் 13 இடங்களிலும் சீர்திருத்தப் பள்ளிகள் உள்ளன. மேலும் 11 இடங்களில் வரவேற்பு இல்லங்கள் உள்ளன.

இக்கட்டுரையில் முதலில் குறிப்பிடப்பட்ட 'பிக் பாக்கெட்' பழக்கமுள்ள சிறுவனை ஆய்ந்த ஆய்வு அதிகாரி ஜெயச்சந்திரன், பையனின் வீடு, பெற்றோர்கள், அவனது சுற்றுப் புறங்கள், அவன் விளையாடும் பூங்கா அனைத்தையும் சுற்றிப் பார்த்து, விரிவாக ஆய்வு செய்துள்ளார். பெற்றோர்களை விசாரித்ததில், முரடர்களுக்குப் பயந்து, தங்களால் அவனைத் திருத்தவோ, பாதுகாக்கவோ முடியாத நிலையிலிருப்பதாகப் பெற்றோர்கள் கூறி விட்டனர். பையனும் தனது குற்றங்களை ஒப்புக் கொண்டு எங்காவது சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் இருக்க ஒத்துக் கொண்டான். அதன்படி அவன் அனுப்பி வைக்கப்பட்டான்.

அதே போல் அந்தப் பெரிய இடத்துப் பையனும்—கட்டுப்பாட்டிற்குத் தந்தை இல்லாததால் சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கே அனுப்பப்பட்டான்.

அந்தப் பெண்மணியை ஆய்வு செய்தபோது, தான் தன்னோடு வேலை பார்த்தவர்களுடன் தகாத தொடர்பு ஏதும் கொள்ளவில்லை என்றும், தனது மாமியார் வீட்டினரின் தொல்லையும், தனது சகோதரர் யாரும் ஆதரவு தராததையும் எடுத்துக் கூறினாள். தனக்கு ஏதாவது வேலை வாங்கித் தந்தால் ஒழுங்காக வேலை செய்யத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டாள். அதன் பேரில் சென்னையிலுள்ள தனவந்தரான சிந்திக்காரர் ஒருவர் வீட்டில் இந்தக் கழகத்தின் முயற்சியால் அவள் வேலைக்குச் சேர்க்கப்பட்டாள்.

இன்று, அவள் அந்த வீட்டில் வேலைக்காரியாக மட்டுமில்லாமல் குடும்பத்தில் ஒரு பெண் போல் நல்ல முறையில் நல்ல நிலையில் இருக்கிருள்.

தற்கொலை முயற்சி செய்த பையனுக்கு, ஆதரவிற்கு யாருமில்லாததால் அவன் செங்கல்பட்டிலுள்ள சிறுவர் சீர்திருத்தப்



சிறுவனின் அறிவுக் கூர்மையை ஆய்வு அதிகாரி ஆய்வு செய்கிருர்

பள்ளிக்கு அனுப்பப் பட்டான். எங்கு சென்ருலும் தனது வாழ்வில் அக்கறை காட்டிய இந்தக் கழகத்தை அந்தப் புத்திசாலிச் சிறுவன் மறக்கவில்லை. விடுதியின் பகுதி நேர உளவியல் அதிகாரி செல்வி பெற்றி டேவிட்டிற்கு, "அன்புள்ள அக்கா, நான் இங்கு நலமாக யிருக்கிறேன்" என்று செங்கல்பட்டு பள்ளியிலிருந்து அன்பொழுக அஞ்சல் தீட்டியிருக்கிருன், சமீபத்தில்.

சீர்திருத்தப்பள்ளிகளில் இந்தச் சிறுவர் சிறுமியருக்கு நெசவு, தையல், நூல் நூற்றல், பின்னல் வேலைகள், பாய் நெசவு, மரத்தொழில், உலோகத்தொழில் கொத்து வேலை, தோட்ட வேலை, வேளாண்மை, கோழி வளர்த்தல் போன்ற பல தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன. கல்வியில் ஆர்வம் உள்ளவர்கள் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர்.

வெளியே சென்ற பின் அவர்கள் திருந்துகிருர்களா ? இந்தக் கழகத்தின் அறிவுரைகளைச் சீர்திருத்தப் பள்ளிகளும், பெற்ருேர்களும் பின்பற்றினுல் நிச்சயம் அவர்கள் திருந்துவார்கள், சந்தேகமே யில்லை என உறுதியாகக் கூறுகிருர், இயக்குநர் டாக்டர் சண்முகம்.

அவர் சொல்வதை ஆமோதிப்பது போல் தனது அனுபவத்திலிருந்து ஒரு சம்பவத்தை எடுத்துத் தருகிருர், ஜெயச்சந்திரன்.

அந்தப் பையனுக்கு வயது சுமார் 14 இருக்கும். மைசூர் மாநிலத்தைச் சேர்ந்தவன் ; சென்னைக்கு ஓடி வந்து வீட்டு வேலைகள் செய்துபிழைத்து வந்த அவன், வேலை செய்த வீட்டிலேயே பாத்திரங்களைத் திருடி விட்டான்.

இங்கு வந்த அவனை ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கினுர்கள். திருடுவது தவறு, நேரிய வழியிலே செல்ல வேண்டும் என்று எடுத்துக் கூறினுர்கள். கபடமில்லா அவன் உள்ளம் அதை ஏற்றுக்கொண்டது. அவன் ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டான். அவன் ஊரை விட்டு இங்கு வந்து ஏழு ஆண்டுகளாகி விட்டிருந்தன. இடைக்காலத்தில் அவன் தாய் தந்தையர் இறந்து விட்டனர். அங்கு சென்றபின்தான் இவனுக்கு அந்தச் செய்தி தெரிய வந்தது. ஆதரவுக்கு யாருமே யில்லை. பல நாள் பட்டினிக்குப் பின் சென்னைக்கு வந்து சேர்ந்தான்.

திருந்தி விட்ட அந்தச் சிறுவன் வேறு எங்கும் செல்லவில்லை. நேராக இந்தக் கழகத்தின் வாயிலில் வந்து விழுந்தான். நிலைமையை எடுத்துக் கூறினுன். எனக்கு ஏதாவது தகுந்த வேலை வாங்கித் தாருங்கள் என வேண்டினுன். ஆய்வாளரின் முயற்சியில் ஒரு ஓட்டலில் வேலை வாங்கித் தரப்பட்டது.

சிறிது காலம் அங்கு பணியாற்றிய பின்னர் பெங்களூர் சென்று பிழைக்க விரும்புவதாகத் தெரிவித்தான். அதன்படி அங்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

"தற்போது அங்கு ஒழுங்காகப் பணியாற்றுவதோடு மாலை நேரப் பள்ளியிலும் படித்து வருவதாகக் கடிதம் எழுதியிருக்கிருன்." —ஆர்வத்தோடு சொன்னுர், ஆய்வு அதிகாரி.

ஆமாம், திருடுகிறவர்கள், தவறு செய்த சிறுவர்கள் ஆகியவர்களைத்தான் இவர்கள் ஆய்வு செய்கின்ருர்களா? அல்ல! பெற்ருேருக்கும், மற்ருேருக்கும் பிரச்சினையாகவுள்ள எந்தச் சிறுவர் சிறுமிகளையும் உளவியல் முறையில் ஆய்வு செய்து அறிவுரை வழங்குகின்றனர்.

எடுத்துக் காட்டாக, ஒரு பணக்கார வீடு; தந்தைக்கும் அவரது 13 வயதுப் பையனுக்கும் அடிக்கடி மோதல்.

இதற்குக் காரணம், பையன் சற்று அளவுக்கு மீறிய புத்திசாலி. அப்பா, தனது அறிவினைக் குறைத்து மதிப்பிடுவது அவனுக்குப் பிடிப்பதில்லை. அதனுல் அவர்களுக்குள் அடிக்கடி சச்சரவு.

மகனிடம் குறையிருப்பதாக நினைத்த தந்தை இந்தக் கழகத்தை அணுகினுர். இதனை ஆய்வு செய்த பின், தந்தை தனது மகனுடைய மனத்தினை அறிந்து செயல் படவில்லை என்பது தெரிந்தது: எனவே, அந்தத் தந்தைக்கு அறிவுரை வழங்கப்பட்டது;

பிள்ளைகளை நடத்தும் முறை என்ன என்பதைப் பெற்ருேர் சரிவரத் தெரிந்து கொள்ளாததாலே இந்தத் தவறு ஏற்படுகிறது என்பது சுட்டிக்காட்டப்பட்டது:

உதாரணமாக, "பீரோவைத் திறந்து கண்ணுடியை எடுத்து வா" என்று சொன்னுல் அந்தப் பையனுக்குப் புரியும். அதற்குப் பதில், "இதோ சாவி. இதை எடுத்துக் கொண்டு இப்படி நடந்து, அடுத்த அறை சென்று சாவியைக் துவாரத்தில் விட்டுத் திருப்பு. அப்போது கதவு திறக்கும். அதைத் திறந்து அதற்குள் உள்ள டிராவைத் திறந்து கண்ணுடியை எடுத்து வா" என்று ஒன்றும் தெரியாத சின்னப் பாப்பாவுக்குச் சொல்வது போல் சொன்னுல், அந்தப் புத்திசாலிச் சிறுவன் எரிச்சல் அடைகிருன், என்று சொன்னதும், தந்தைபுரிந்து கொண்டார். இனி அவனது இயல்பு அறிந்து நடக்கிறேன் என்று கூறி விடை பெற்ருர்.

இப்படிப் பல பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்து, நல்ல முறையில் அறிவுரை வழங்குகிறது சிறுவரை நெறிப்படுத்தும் இந்தக் கழகம்.

பொதுவாகச் சிறுவர்கள் கெட்ட பழக்கத்தில் ஈடுபடுவதற்கு முக்கிய காரணங்கள்: பள்ளிக்கூடம் செல்லாமல் மட்டம் போடுவது ; கெட்டவர்களுடன் தொடர்பு கொள்வது ; வேலையில்லாமல் திரிவது; பெற்ருேரின் மேற்பார்வையில்லாதது ஆகியவையே என்பது இவர்களது ஆய்வுகளிலிருந்து வெளிப்படும் உண்மை.

யேல், ஹார்வேர்ட் போன்ற மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்களிலெல்லாம் இது போன்ற ஆய்வுக்கழகங்கள் உண்டு. வெளி நாட்டவர் இதனை நன்கு பயன்படுத்திப் பலன் பெறுகின்றனர் என்று கருத்துத் தெரிவித்தார் இயக்குநர்.

கழகத்தின் கவுரவச் செயலாளரான திருமதி இளப்வாலா ஜாதவ், இதுபற்றிக் குறிப்பிடும் போது "இந்தக் கழகம் பதினைந்து ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இங்கு பணியாற்றுபவர்கள் மிகுந்த அக்கறையுடன் உள்ளனர். ஆனுல் அதற்கேற்ற வசதிகள் இல்லை. முன்பு இங்கு ஒரு முழு நேர உளவியல் நிபுணர் இருந்தார். இப்போது அதைப் பகுதி நேர அதிகாரியாக மாற்றிவிட்டார்கள். மீண்டும் முழு நேர அதிகாரியாக நியமித்தால் நல்லது. அப்போது தான் இதில் முழு கவனம் செலுத்த முடியும்" என்ருர்.

எந்தப் பலனையும் கருதாது சேவை மனப்பான்மையுடன் இந்த நிலையத்தார் பணியாற்றுவது உண்மையிலேயே பாராட்டத்தக்கது ஆகும்.

வெண்பாப் போட்டி-2

ஈற்றடி

சாதனைக் கிடுண்டோ சாற்று !

முடிவு நாள் : 2—11—1970

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
" தமிழரசு " அலுவலகம்,
அரசினர் அச்சகம்,
சென்னை-1.

கண்ணான கண்ணல்லவோ!

அவருக்கு வயது 20. சென்னை மாம்பலத்தில் வசிப்பவர். சினிமாவில் சேர வேண்டுமென்று நெடுநாளாக ஆசை. பல திரைப்பட நிறுவனங்களில் ஏறி இறங்கினார். ''நீங்கள் நடிப்பதா? நகைச்சுவை வேடத்தில் வேண்டுமானால் நடிக்கலாம்!'' என்று நகைச்சுவையோடு கூறித் திருப்பி அனுப்பி விட்டார், ஓர் இயக்குநர்.

அதற்குக் காரணம் அவருக்கு கருட பார்வை (Squint eye) இருந்ததே. அதன் காரணமாக இளைஞர் சோர்வுற்றார். தனது கண் பார்வையை நேராக்க—சீராக்க வழியேயில்லையா என்று ஏங்கினார்.

முடிவில், சென்னை எழும்பூரில் உள்ள கண் மருத்துவ மனைக்குச் சென்றார். அங்கு அவரது கண் பரிசோதனை செய்யப்பட்டது. அவரது கண்ணுக்கு மருத்துவ மனையிலுள்ள நவீன இயந்திரத்தின் மூலம் சுமார் ஒரு மாதகாலம் பயிற்சி அளிக்கப்பட்டது. அதன்பின் அவருக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது. ஒரு பக்கம் ஒதுங்கியிருந்த கண், அதன் மூலம் நேராக்கப் பட்டது. இரு கண்களும் ஒருமுகமான பார்வையைப் பெற்றன.

அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டபின்மீண்டும் அவரது கண்ணுக்கு, முன்போல் ஒரு மாதகாலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இரு கண்களும் சரிவர இயங்குவதற்காக இந்தப் பயிற்சி தரப் பட்டது. பயிற்சி முடிந்து சீரான கண் பெற்று வெற்றிப் புன்னகையுடன் அவர் வீடு திரும்பினார்.

இன்று அவருக்குத் தெலுங்குப் படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. அவரது நெடு நாளைய ஆவலும் நிறைவேறியது.

மற்றொருவர். பொறியியல் பட்டம் (B. E.) பெற்றவர். வேலைக்கு மனுச் செய்திருந்தார். ஆனால் அவரது கண் பார்வை 'கருட பார்வை'யாக இருந்ததால் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தோல்வி அவருக்கு மனச்சோர்வைத் தரவில்லை. எப்படியும் கண் பார்வையைச் சரி செய்து மீண்டும் வேலைக்கு முயற்சி செய்வது என்று முடிவு செய்தார்.

எண்ணித் துணிந்தபின், எழும்பூர் கண் மருத்துவ மனையை அடைந்தார். அவருடைய கண் பார்வையை நேர் செய்ய முடியும் என்ற ஊக்கம் தரும் பதிலைத் தந்தார், டாக்டர்.

அவரது கண்ணுக்குப் பயிற்சி தொடங்கியது. மிகுந்த ஆர்வம் காரணமாக யாருடைய உதவியையும் எதிர் பாராமல் அவராக வந்து இயந்திரத்தின் முன் அமர்ந்து பயிற்சி பெறலானார்.

இவ்வாறு நான்கு மாதம் பயிற்சி பெற்றபின் அவர் அறுவைச் சிகிச்சைக்குத் தயாரானார். அறுவைச் சிகிச்சை மூலம் அவரது கண், சரி செய்யப் பட்டது. மீண்டும் வேலைக்கு மனுச் செய்தார். இம்முறை வெற்றி கிட்டியது. இன்று அரசின் துறை ஒன்றில் அவர் பொறியியலாளராகப் பணியாற்றி வருகிறார்.

ஒன்றரைக் கண் என்று சொல்லப்படும் கருட பார்வையுள்ள குழந்தைகளைப் பெற்றுள்ள பெற்றோருக்கு இது மிகவும் ஆறுதலான செய்தியாக இருக்கும். ஆம்; கருட பார்வை என்பது நிவர்த்தி செய்யக்கூடியயதே!

'' சிறு வயதிலேயே அதாவது குழந்தைக்கு இரண்டு அல்லது மூன்று வயது இருக்கும்போதே கண் மருத்துவ மனைக்கு எடுத்து வந்தால் இந்தச் சிகிச்சை செய்வது மிகவும் சுலபம். அறுவைச் சிகிச்சைக்குத் தேவையில்லாமல், வெறும் பயிற்சி மூலமாகவே கண்களைச் சரி செய்து விட முடியும்.

கருட பார்வையை நீக்குவதற்குப் பயிற்சி தரப்படுகிறது.

"இந்தக் கோளாறு ஏற்படுவதற்குப் பல காரணங்கள்; சில குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே கண்ணில் 'கண் படலம்' (Cataract) ஏற்பட்டு விடும். கண்ணுக்குள் ஒளி செல்லாததால், கண் ஒன்றரைக் கண் பார்வையாக மாறி விடுகிறது.

இந்தப் பார்வை....



....இப்படி மாற்றப்பட்டது.

"சிலருக்குச் சிறுவயதில் காய்ச்சல் வந்து, அதன்மூலம் வலிப்பு ஏற்பட்டு, ஒரு கண் பார்வை ஒரு புறமாகச் சாய்ந்துவிடுவதும் உண்டு

"சில குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே தூரத்துப் பார்வை தெரியாமல், அந்தக் கோளாறிலிருந்து, இந்த மாற்றம் ஏற்படுவதும் உண்டு.

எனவே இந்த மருத்துவ மனைக்கு வந்ததும் நோயாளி எந்த வயதினரானாலும் முதலில் எதனால் இந்தக் கருட பார்வை ஏற்பட்டது? பரம்பரையாக வந்ததா, மற்ற ஏதாவது காரணமா? ஒரு கண் தான் பாதிக்கப்பட்டுள்ளதா? அல்லது இரு கண்களுமா? என்பதனை முதலில் சோதனை செய்கிறோம்.

"கண்பார்வை குறைவாகஇருந்தால் அதை நிவர்த்திக்க முதலில் கண்ணாடி போடப்படுகிறது. பின்பு, கருட பார்வைக்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

"சாதாரணமாக, நமது குடும்பங்களில் யாருக்காவது கருட பார்வை யிருந்தால், அதை அதிர்ஷ்டம் எனக்கருதிச் சிகிச்சை செய்யாமல் பெற்றோர் விட்டு விடுகின்றனர். இதனால் இந்தக் கருட பார்வையுள்ளோரின் முகம், சற்று அழகு குறைந்து வாழ்நாள் முழுவதும் அதே நிலையில் இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

"அதை விடுத்து, சிறு வயதிலேயே கொண்டுவந்தால் எளிதாகச் சரி செய்ய முடியும். மற்றப்படி எந்த வயதினரானாலும், இந்தக் குறைபாட்டை அறுவைச் சிகிச்சை மூலம் சரி செய்து விடலாம்'' என்று நம்பிக்கையுடன் தெரிவிக்கிறார், கண் மருத்துவ மனையின் கண் காணிப்பாளர் டாக்டர் ஜே. ஈ. ஆப்ரகாம்.

எங்கள் நல்வாழ்த்துக்கள்!

யுனைடெட் இந்தியா ரோலர் ப்ளவர் மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்.

1/4 சூரிய நாராயணசெட்டி தெரு,
சென்னை–81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்'' மார்க் மைதா, சூஜி
மற்றும்
'கப்பல்' மார்க் ஆட்டா,
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்.

கோபுரம் மார்க் மைதா

கோபுரம் மார்க் சூஜி

தொலைபேசி எண்: 52670—52671—52672—52673

தந்தி: MONARCH

SARATH



சிறு நிலக் கிழார்களுக்கான திட்டம்

இந்தியாவில் உள்ள மொத்த சாகுபடிப் பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு, ஐந்து ஏக்கருக்குக் குறைவான சிறு சிறு பண்ணைகளின் தொகுப்பாகவே உள்ளது. ஆனால் இந்தியாவில் உள்ள உழவர் பெருமக்களின் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் சிறு அளவு நில முடையவர்களாகவே உள்ளனர். சிறுநிலக்கிழார்களும் அறிவியல் அடிப்படையில் சாகுபடிசெய்தால்தான் உற்பத்தி பெருகும் என்பது வெள்ளிடை மலையாகும். அவ்வாறு வேளாண்மை செய்ய வேண்டுமானால், அவர்களுக்கு நிதி உதவி செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால், ''பசுமைப் புரட்சி'' என்பது உண்மையானதாக இருக்க முடியாது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பம் முதல் சென்ற 19 ஆண்டுகளில் மத்திய அரசும், மாநில அரசுகளும் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களிலும், நீர்ப்பாசனத் திட்டங்களிலும் 5,000 கோடி ரூபாயைச் செலவு செய்திருந்த போதிலும், சிறிய அளவில் நிலம் வைத்துள்ள உழவர்களது நலனுக்காகக் குறிப்பிட்ட எந்தத் திட்டமும் இது வரை செயல்படுத்தப்படவில்லை. இவ்வாறு தொடர்ந்து சிறுநிலக் கிழார்கள் புறக்கணிக்கப்பட்டு வருவது வேளாண்மை உற்பத்தியைப் பெரிதும் பாதிப்பதுடன், சமுதாயப் பொருளாதார நிலைமையில் மிகுந்த ஏற்றத் தாழ்வையும் ஏற்படுத்தக்கூடும் என்ற கருத்து பரவலாக ஏற்பட்டது.

இதை உணர்ந்தே இந்திய அரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 67·5 கோடி ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் மத்திய அரசுப் பணித்திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. மாநிலத்திட்ட வரம்புக்கு மேற்பட்டு, மத்திய அரசிடமிருந்து முழுநிதி உதவி இதற்குக் கிட்டும். சிறுநிலக் கிழார்களுக்காக 45 திட்டங்களை ஏற்படுத்தி சிறு நிலக்கிழார் மேம்பாட்டுச் செயலாண்மை நிலையங்களை அமைத்துப் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்படும்.

சிறு நிலக்கிழார் மேம்பாட்டுச் செயலாண்மை நிலையம் (Small Farmer's Development Agencies) கீழ்க்கண்ட பணிகளைச் செய்யும்.

1. சிறுநிலக் கிழார்களைத் தேர்ந்தெடுக்கும்.

2. சாகுபடித் தேவைப் பொருள்களான விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி,பூஞ்சாள மருந்துகள், கருவிகள் ஆகியவை கிடைத்திடச் செய்யும்.

3. தொழில் நுணுக்க உதவிகளை அளிக்கும்.

4. கடன் வசதிகளைச் செய்து கொடுக்கும்.

5. வெவ்வேறு வேளாண்மை—பருவ நிலைகளுக்கும் ஏற்றவாறு முதலீடு செய்வதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும் உரிய மாதிரிப் பண்ணைத் திட்டங்களைத் தயாரிக்கும்.

6. புதிய சாகுபடி முறைகளை உருவாக்கும்.

ஐந்து ஏக்கர் புன்செய் நிலம், 2½ ஏக்கர் நன்செய் நிலம் என்ற அளவிற்குள் நிலம் உடைய உழவர்கள் இத்திட்டத்தின் கீழ்ச் சிறு நிலக்கிழார்களாகக் கருதப் படுவார்கள்.

சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டத்தை தமிழ் நாட்டில் தென்னார்க்காடு, திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, தென்னார்க்காடு மாவட்டத்திற்கான வரைவுத் திட்டத்தை மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பியுள்ளது. மற்ற இரு மாவட்டங்களுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தென்னார்க்காடு மாவட்டத்தில் 34 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களும் பயன்பெறும். இத்திட்டத்தை நிறைவேற்ற முதல் ஆண்டில் (1970-71) 6 வட்டாரங்களும், 2-ம் ஆண்டில் 10 வட்டாரங்களும், 3-ம் ஆண்டில் 10 வட்டாரங்களும், 4-ம் ஆண்டில் (1973-74) 8 வட்டாரங்களும் எடுத்துக்கொள்ளப்படும். இதனால் நான்காம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் தென்னார்க்காடு மாவட்டம் முழுவதும் பயனடையும். சிறுநிலக்கிழார் மேம்பாட்டுச் செயலாண்மை நிறுவனமே 2-வது, 3-வது, 4-வது ஆண்டில் செயல்படுத்துவதற்கான வட்டாரங்களைத் தேர்ந்தெடுக்கும். இந்த ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்றக் கடலூர், நெல்லிக்குப்பம், திருநாவலூர், உளுந்தூர்ப்பேட்டை, வானூர், மைலம் ஆகிய ஆறு வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

எனவே இத்திட்டம் அளிக்கவிருக்கும் சலுகைகளை நன்கு பயன்படுத்திப் பெரும்பயன் பெறுமாறு சிறுநிலக்கிழார்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

கோவிலுக்கொரு மருத்துவமனை

சென்னை அரும்பாக்கத்தில் எட்டரை லட்ச ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையை —9—1970 அன்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் றந்து வைத்தார்கள். தமிழகக் கல்வி பொதுநல அமைச்சர் நாவலர் நடுஞ்செழியன் அவர்கள் இவ் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள்.

சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யுனானி ஆகியவை இடம் பெறும் ம்மருத்துவமனையில் 100 படுக்கை வசதியுள்ளது. இதில் 60 ஆடவக்கும், 40 பெண்டிருக்கும் இளஞ்சிறார்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நாள்தோறும் 1,000 நோயாளிகள் இந்த மருத்துவமனைக்கு, சிகிச்சை பறுதற்பொருட்டு வருகை தருகின்றனர்.

விழாத் தலைவரான கல்வி, பொதுநல அமைச்சர் தமது உரையில் றிப்பிட்டுள்ளதாவது: '' இந்த மருத்துவமனை அரசாங்கத்தின் ரவணைப்பிலே உருவாகியிருக்கின்றது.

''ஆண்டுக்கு ஒருலட்சரூபாய்க்கு மேல் வருமானமுள்ள ஒவ்வொரு கோயிலிலும் ஒரு சித்த மருத்துவ மனை இருக்க வேண்டும், என்று தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான பணிகளை அறநிலையப் பாதுகாப்புத் துறை மேற்கொண்டிருக்கிறது.

''தமிழகத்தில் லட்ச ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள கோயில்கள் 49 உள்ளன. எனவே, 49 சித்த மருத்துவ மனைகளை உருவாக்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்திய மருத்துவம், இந்த நாட்டு மக்களுக்கு ஏற்ற மருத்துவமாகும். இந்த நாட்டின் தட்ப, வெப்பம், உணவு முறை, உடல் பாகுபாடு ஆகியவற்றிற்கேற்ப அவற்றை ஆராய்ந்து வளர்த்து வந்த முறையாகும். இந்த மருத்துவத்தின் மூலம் நல்ல மருந்துகள், மிக மலிவாகக் கிடைக்க வாய்ப்புண்டு.

இந்த அரசு மருத்துவத்துறையில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. 1966-67-ல் 16 கோடி ரூபாய் மருத்துவத்திற்காகச் செலவு செய்யப்பட்டது. இப்போது 1970-71-ல் 25 கோடி ரூபாய் செலவிடுமளவிற்கு இந்த அரசு மருத்துவத் துறையில் மேலோங்க முயற்சி எடுத்து வருகிறது ''.

இவ்வாறு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

முதல்வர் அவர்கள் பேசும் போது, ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள கோயில்களில் சித்த வைத்திய மருத்துவமனை அமைக்கும் திட்டத்தைக் குறிப்பிட்டார்.

"9 ஏக்கர் நிலத்தில்மூலிகைகள் வளர்க்கப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தஞ்சை சரசுவதி மகால், நூல் நிலையத்தில் உள்ள சித்த மருத்துவ நூல்கள் ஆராயப்படுகின்றன. பிணிகளைக் குணப்படுத்துவதில் சித்த வைத்தியம் தலைசிறந்தது என்பதனை மக்களுணர்ந்து ஆர்வத்துடன் அதை நாடி வரும்படிச் செய்ய வேண்டும் '' என்றும் குறிப்பிட்டார்.

அன்பு மனைவியிடம் விடை பெற்றுச் சாக்குகளைக் கட்டி மூட்டையாக எடுத்துக்கொண்டு களத்து மேட்டிற்குப் புறப்பட்டார் திரு கணேசன்.

'' ஆ ! அம்மா ! வலி தாங்க முடி முடியலையே '' என்ற வார்த்தைகளைக் கேட்டதும் களத்து மேட்டிற்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த கணேசனின் கால்கள் மேலும் நடக்கமுடியாமல் தயங்கி நின்றன. விடியற்காலை முதல் பிரசவ வேதனையினால் அவதிப்பட்டுவந்த அருமை மனைவியின் அவலக் குரலைக் கேட்டதும் கணேசனின் உள்ளம் துடிதுடித்தது. பிரசவ வேதனையைப் பற்றிப் பலர் கூறியுள்ளதைக் கணேசன் கேள்விப்பட்டிருந்தாலும், அவரது மனைவியின் அவலக் குரலைக் கேட்ட போதுதான் அதன் பயங்கரம் அவருக்குப் புரிந்தது. களத்து மேட்டிற்குச் செல்வதா? வேண்டாமா ? என்று மனங் குழம்பிய நிலையில் கணேசன் நின்றார்.

'' நீ போய் உன் வேலையைப் பாரு தம்பி ! பிரசவம் என்றால் இப்படித்தான் இருக்கும் ! நீ இங்கே இருக்கக் கூடாது ; போ தம்பி !'' என்று ஒரு பெரிய அம்மா சற்றுக் கோபமாகச் சொன்னார்கள்.

'' நீயே போகாவிட்டால் நானே உன் கையைப் பிடித்து வீட்டைவிட்டுவெளியேஇழுத்துக் கொண்டு போய் விட்டுவிடுவேன்'' என்பது போலிருந்தது அந்த அம்மாவினுடைய கடுமையான பார்வை. கணேசன் வேண்டா வெறுப்பாக வீட்டின் உள்ளேயிருந்து வெளியே வந்ததுதான் தாமதம், கதவு சாத்தப்பட்டுவிட்டது. ஆனால், மனைவியின் கதறல் ஒலி மட்டும் நன்கு கேட்டுக்கொண்டேதான் இருந்தது. கணேசன் திண்ணையில் உட்கார்ந்துவிட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் கதவு திறக்கப்பட்டது. கணேசன் ஆவலுடன் திண்ணையிலிருந்து எழுவதற்கும், அந்தப் பெரிய அம்மா வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

'' ஏன் தம்பி கணேசா! நீ இன்னும் இங்கேதான் இருக்கிறயா ? நீ போய் வேலையைப் பாரு தம்பி! இப்பொழுதுதான் வலியே ஆரம்பிச்சிருக்கு. அனேகமாகப் பிரசவம் சாயந்திரம்தான் ஆகும். நாங்க பார்த்துக்குவோம், நீ போப்பா'' என்றுகூறிவிட்டு அந்த அம்மா அங்கேயே நின்றுவிட்டார்கள்.

வேறு வழியின்றி கணேசன் களத்துமேட்டிற்குப் புறப்பட்டார். ஒரு பர்லாங் தூரத்திலேயே களத்துமேட்டில் ஏராளமான கூட்டம் கூடியிருந்தது கணேசனுக்குத் தெரிந்தது.

'' நீங்கள் புதிதாகப் பயிரிட்ட ஐ. ஆர். 8 நெல்லின் மகசூலைக் காணப் பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் ஊராட்சி மன்றத் தலைவர்களும், உழவர்களும் நாளைக்கு வரப்போகிறார்கள் '' என்று முன்தினமே வேளாண்மை வளர்ச்சி அலுவலரும், ஊர்ப் பணியாளரும் கூறிஇருந்தது, கூட்டத்தைக் கண்டபோதுதான் கணேசனின் நினைவிற்கு வந்தது. கணேசன் களத்துமேட்டை நோக்கி விரைந்து நடந்தார்.

நல்ல வேளை அவர்கள் இன்னும் வரவில்லை. கணேசன் பெருமூச்சு விட்டுக் கொண்டார். ஆனால் உள்ளூர் உழவர்கள் கூடியிருந்தனர். அதில் ஒரு பெரியவர், '' என்னப்பா இவ்வளவு தாமதமா வர்றே ?நெல்லடிக்கிற இடத்தில் நிலத்துக்காரன் இருக்கவேண்டாமா?'' என்றார்.

'' நீங்க இவ்வளவு பேர் இருக்கும்போது யாருங்க திருடிவிடப் போகிறாங்க ? வீட்டில் மனைவிக்கு உடம்பு சரியில்லை. அதனால் மனசு சரியில்லை.... '' என்று கூறி முடிக்கு முன்னர்......

பக்கத்து ஊர்களிலிருந்து 50, 60 பேர்களை அழைத்துக் கொண்டு ஊர்ப்பணியாளரும் வேளர்ண்மை வளர்ச்சி அலுவலரும் வந்தனர். கணேசன், ''எல்லாருக்கும் வணக்கம் '' என்று கூறினார். அவர்களும் '' வணக்கம் '' என்று கூறிவிட்டு அருகிலிருந்த மரத்தடியில் அமர்ந்தனர்.

'' கணேசனுக்கு மொத்தம் 10 ஏக்கர் நிலம் இருக்குதுங்க. இதுவரை சாதாரண நெல் வகைகளைத்தான் சாகுபடி செய்துவந்தார். புதிதாக வந்துள்ள உயர் விளைச்சல் நெல் ஐ. ஆர். 8-ஐப் பயிரிட்டுப் பார்க்குமாறு யோசனை கூறினேம். அவரும் எடுத்த எடுப்பிலேயே மிகவும் துணிச்சலாக 10 ஏக்கரிலும் ஐ. ஆர். 8 நெல்லைப் பயிரிட்டார். நேற்று அறுவடை முடிந்துவிட்டதுங்க. எவ்வளவு மகசூல் காணப் போகிறது என்பதை இன்று நீங்களும் காண வேண்டும்; கணேசனைப் போல் நீங்களும் துணிந்து ஐ. ஆர். 8 நெல் பயிரிட முன்வர வேண்டும் எ பதற்காகவே உங்களையெல்லாம் இங்கு அழைத்து வந்துள்ளோம் '' என்றார் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்.

பக்கத்து ஊர்களிலிருந்து வந்தவர்களில் சிலர், நெல்மணிகளைக் கையில் எடுத்துப் பார்த்தனர் ; சிலர் உமியை நீக்கி அரிசியை எடுத்துத் தின்று பார்த்தனர்.

நெல் அடிக்கும் வேலை வெகு மும்முரமாக நடந்துகொண்டு இருக்கிறது. ஒரு பக்கம் நெல் அடிக்கப்படுகிறது. மறு பக்கம் மாடுகளைக் கொண்டு பிணை அடிக்கப்படுகிறது. இன்னொரு பக்கத்தில் நெல் தூற்றப்படுகிறது. மற்றொரு பக்கத்தில் உழவர்கள் கேட்ட வெவ்வேறு பிரச்சினைகளுக்கு வேளாண்மை வளர்ச்சி அலுவலர் விளக்கமளித்துக்கொண்டிருக்கிறார்.

நெல்லடிக்கும் வேலையும், தூற்றும் வேலையும் முடிந்துவிட்டது. பிணையில் கிடைக்கும் நெல்லை எடுத்துத் தூற்றி மொத்த நெல்லையும் அளந்து மூட்டைகளாகக் கட்ட வேண்டியதுதான் பாக்கி. மத்தியானச் சாப்பாட்டிற்கு வேலையாட்கள் கலைந்தனர். அங்கு வந்திருந்த பக்கத்து ஊர்களின் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும், உழவர்களுக்கும், வேளாண்மை வளர்ச்சி அலுவலர், ஊர்ப் பணியாளர் ஆகியவர்களுக்கும் களத்து மேட்டிலேயே ஐ. ஆர். 8 பொங்கலிட்டுச் சாம்பார் வைத்துப் பரிமாறப்பட்டது. சுருக்கமாகச் சொல்லப்போனால் களத்து மேடே ஒரு விழாக் கோலத்தில் இருந்தது.

ஆனால், கணேசன் முகத்தில் களையே இல்லை. அவரது இதயமெல்லாம் மனைவிக்கு எப்பொழுது குழந்தை பிறக்குமோ என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தது. மனைவியின் நிலைமையை அ ந்து வருவதற்கென்றே ஒரு பையனை அடிக்கடி வீட்டிற்குத் துரத்திக்கொண்டிருந்தார். அப்பையன் ஒவ்வொரு முறையும் திரும்பி வந்து '' இன்னும் பிரசவம் ஆகவில்லை '' என்றே கூறிக் கொண்டிருந்தான்.

மத்தியானச் சாப்பாடு முடிந்து வெற்றிலை போட்டுக் கொண்டு மீண்டும் வேலையாட்கள் வேலையைத் துவங்கினர். வயது முதிர்ந்த வேலையாட்கள் ஐவர் நெல்லை அளந்து அளந்து சாக்குகளில் போட்டார்கள். மற்ற வேலையாட்கள் மூட்டைகளைக் கட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

'' என்னங்க கணேசன். மகசூல் எவ்வளவு மூட்டை வரும் என்று நினைக்கின்றீர்கள்?'' என்றார் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்.

'' என்னுடைய மதிப்பு சுமார் 350 மூட்டைகள் கிடைக்கும் என்பதுதானுங்க. உங்களுடைய மதிப்பு என்ன சார்?'' என்றார் கணேசன்.

'' என்னுடைய கணக்கின்படி 420 மூட்டைகள் (60 படிகள் கொண்டவை) கிடைக்கும். அதற்கு மேல் கிடைக்குமே தவிர குறையக் காரணமில்லை '' என்றார் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்.

அளந்து முடித்ததும், ஊர்ப் பணியாளர் மொத்தத்தைக் கூட்டி '' 425 மூட்டை'' என்று அறிவித்தார்.

''அண்ணே அண்ணிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. அண்ணி நல்லாப் பேசறாங்களாம். உங்களிடம் சொல்லிவிட்டு வரச்சொன்னாங்க'' ஒரு பையன் வேகமாக ஓடிவந்து சொன்னான்.

கணேசனுக்கு 425 மூட்டை நெல் கிடைத்ததுடன், ஆண் குழந்தையும் பிறந்துவிட்டது! கணேசனின் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருகியது. ''அப்பாடா'' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டார். தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து நெற்றியிலிருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக் கொண்டார். கணேசன் முகத்திலே இருந்த கவலை மறைந்தது. அது கண்ட எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

களத்துமேட்டில் இருந்த அனைவருக்கும், கணேசன் தன் கையினாலேயே சர்க்கரை வழங்கினார். உள்ளூர்க்காரர்கள் எல்லாரும் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டு வீட்டிற்குத் திரும்ப ஆரம்பித்தனர். பக்கத்து ஊர்களிலிருந்து வந்தவர்களும், வேளாண்மை வளர்ச்சி அலுவலரும், ஊர்ப் பணியாளரும் கணேசனிடம் விடை பெற வந்தனர்.

'' நாங்களெல்லாம் புறப்படுகிறோம். இனிமேலாவது கவலையில்லாமல் இருப்பீங்க என்று நம்புகின்றேன் '' என்றார் வேளாண்மை வளர்ச்சிஅலுவலர்.

'' சார் நீங்க சொன்ன ஆலோசனையைக் கேட்டதனால் தான் எனக்குப் பெரும் மகசூல்

கிடைத்தது. சாதாரண நெல்லைப் பயிரிட்டிருந்தால் ஏக்கருக்கு 15 முதல் 20 மூட்டை வீதம் 10 ஏக்கரிலும் 150 அல்லது 200 மூட்டைகள்தான் கிடைத்திருக்கும். உங்க யோசனையின்படி நான் ஐ. ஆர். 8 நெல் பயிரிட்டதால்தான் எனக்கு 425 மூட்டை நெல் கிடைத்துள்ளது. உங்க உதவியையும் ஊர்ப் பணியாளர் உதவியையும் நான் என்றும் மறக்க மாட்டேனுங்க! அடுத்தபடியாகவும், ஐ. ஆர். 8 நெல்தான் சார் பயிர் செய்யணும்; இன்னும் ஒரு வாரம் கழித்து அலுவலகத்திற்கு வருகிறேன், சார். நல்ல விதை, மருந்தெல்லாம் கொடுங்க சார்'' என்றார் கணேசன்.

'' உங்க உழைப்பும் முயற்சியும் வீண் போகவில்லே. முயற்சி திருவினை ஆக்கும் என்ற வள்ளுவரின் வாக்குப்படி உங்களுடைய முயற்சி உங்களுக்குத் திருவினை—செல்வத்தை—சேர்த்துள்ளது. தொடர்ந்து முயற்சியுடன் பாடுபட்டு உங்கள் வீட்டையும், நாட்டையும் செழிக்கச் செய்யுங்கள். உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் எப்பொழுதும் காத்துள்ளோம். அடுத்த வெள்ளிக்கிழமை அலுவலகத்துக்கு வாங்க. தேவையானதை வாங்கிவரலாம்; அப்போ நாங்க வரட்டுங்களா?'' என்றார் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்.

'' சரிங்க. எல்லாருக்கும் நன்றிங்க. போயிட்டு வாங்க '' என்றார் கணேசன்.

இதுவரை நீங்கள் படித்தது கற்பனையல்ல. உண்மையில் நடந்த சம்பவமேயாகும்.

வட ஆர்க்காடு மாவட்டம், களம்பூர் கிராமத்தில் உள்ள இளம் உழவர் பெருமகன் திரு கணேசனைப் பற்றியே இதுவரை படித்தீர்கள்.

425 மூட்டை நெல்லையும் மூட்டை ரூ. 60-00 வீதம் (அப்போதைய விலை) விற்றார். அதிலிருந்து அவருக்கு ரூ. 25,500-00 வருமானம் கிடைத்தது. வைக்கோலை ரூ. 4,000-00க்கு விற்றார். 10 ஏக்கரில் ஐ. ஆர். 8 நெல்

> **கல்கத்தாவில் இலவசத் தமிழ்ப் பள்ளி**
>
> கல்கத்தாவில் 14-10-70 முதல், இலவசத் தமிழ்ப் பள்ளி துவக்கப்பட்டிருக்கிறது. கல்கத்தாவில் உள்ள அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்படும் இந்தப் பள்ளியின் பெயர் "அறிஞர் அண்ணா—நேத்தாஜி, முத்துராமலிங்கத் தேவர் இலவசத் தமிழ்ப்பள்ளி" என்பதாகும்.
>
> மேற்கு வங்காளத்தின் முன்னாள் முதல்வர் திரு. அஜாய் முகர்ஜி அவர்கள் இந்தப் பள்ளியைத் துவக்கி வைத்திருக்கிறார்.

சாகுபடி செய்ததனல் அவருக்கு ரூ. 29,500-00 கிடைத்தது. அதில் சாகுபடி செலவு ரூ. 4,500-00 போக, அவருக்கு நிகர லாபமாக ரூ 25,000-00 கிடைத்தது.

இந்த லாபத்தைக் கொண்டு மேலும் 5 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ளார். அடுத்த பருவத்திலும், அதற்கடுத்த பருவத்திலும் ஐ.ஆர். 8 நெல்லையே சாகுபடி செய்தார். தற்பொழுது அவரிடம் 15 ஏக்கர் நிலமும் மூன்றுபம்புசெட்டுகளும்உள்ளன. ஐ.ஆர். 8 நெல் பயிரிடுவதற்கு முன் அவரிடம் 10 ஏக்கர் நிலமும், ஒரே ஒரு பம்பு செட்டுமே இருந்துள்ளது.

தற்பொழுது ஒரு டிராக்டர் வாங்கவும் முன்பணம் கட்டியுள்ளாராம். விரைவில் அவருக்கு டிராக்டர் கிடைக்கவிருக்கிறதாம். மொத்தத்தில் கணேசனின் வாழ்வில் வளமே மலர்ந்துள்ளது.

திரு கணேசன், '' என்வாழ்வு வளம் பெற்றதற்குக் காரணம் ஐ. ஆர். 8 நெல்லே '' என்று கூறுகிறார். ஐ. ஆர். 8 நெல் செய்த நன்றியை மறவாமல்—களத்தில் ஐ. ஆர். 8 நெல் அடித்துக் கொண்டிருந்த பொழுது ஆண் குழந்தை பிறந்ததால்—என்னுடைய குழந்தைக்கு '' ஐயாரெட்டு ''என்றே பெயரிட்டுள்ளேன் '' என்று கூறுகிறார்.

குழந்தைக்கு ஒரு நெல்லின் பெயரை வைத்துள்ளது உலகில் வேறெங்கிலும் இதுவரை நடைபெறாத நிகழ்ச்சியாகும். இதுவரை இல்லாத ஒரு நிகழ்ச்சியை— வரலாற்றைப்—படைத்த கணேசன், தான் நன்றி மறக்காதவர் என்பதையும், தான் ஒரு புதுமை விரும்பி என்பதையும் நிரூபித்துவிட்டார்.

அண்மையில் இவரைப் பேட்டி காண வந்த யு.எஸ்.ஐ.டி. அமெரிக்க நிபுணர்களும் இவரைப் பாராட்டியுள்ளனர்.

இவரைப்போல் எல்லோரும் உழைத்தால் வீடும் நாடும் செழிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்றே கூறலாம். புதுவாழ்வு மலர்ந்திட வேண்டுமானல் திரு கணேசனைப்போல் அனைவரும் உழைப்போமாக!



வாழ்த்துப் பத்து

பூவாரும் சோலைப் புகழ் மேவும் காவிரிநீர்
நாவாரச் சென்னை நகர்மக்கள்—ஓவாதே
உண்டு களிக்க உயர்ந்த பெருந்திட்டம்
கொண்டுவந்த நல்லரசே ! வாழ்.

ஏத்தும்தென் பாண்டி எழிலார் முனையிலுள்ள
தூத்துக் குடியாம் துறைமுகத்தைப்—போர்த்தேதான்
ஆழ்கடல் திட்டமதாய் ஆக்கும் தமிழரசே
வாழ்கநீ என்றும் வளர்ந்து.

கன்னட நாடென்றார் ; களிதெலுங்கு தேசமென்றார்
சென்னைமா காணமெனச் செப்பிவந்தோம்—இந்நிலையை
மாற்றித் தமிழ்நாட்டின் மானத்தைக் காத்திட்ட
ஆற்றலமை நல்லரசே வாழ்.

ஆலைபல இங்கே அடைத்துக் கிடந்ததனல்
வேலையின்றி மக்கள் வெதும்பினர்—சாலவே
அன்ன திறக்க அரும்பணிகள் ஆற்றியிட்ட
என்னரசே வாழ்க இனிது.

தண்ணார் தமிழகத்தில் டால்மியா புரமிருத்தல்
எண்ணுகின்ற மக்கட் கிழுக்கென்றே—பண்ணரும்
கள்ளக் குடியென்று கண்களிக்க மாற்றுவித்த
தெள்ளு தமிழரசே வாழ்.

ஆண்டு பலவாக ஆகா தெனப் பலரும்
ஈண்டுரைத்த சேலம் இரும்பாலை—வேண்டுவிதம்
பெற்றுவந்த நல்லரசே பேரூழிக் காலம் வரை
உற்றிங்கே வாழ்க உயர்ந்து.

சென்னைமா காணமெனச் சென்றபல ஆண்டுகளாய்ப்
பன்னிவந்த நாட்டின் பழிப்பெயரை—அன்னைத்
தமிழ்நா டெனவாக்கித் தாய்மொழியைப் போற்றும்
அமுதத் தமிழரசே வாழ்

வாழா மகள்போல மண்டிக் கிடந்திட்ட
பாழாம் நிலங்கள் பலவற்றைத்—தாழாமல்
ஏழையர்க்கே ஈந்திட்ட எங்கள் தமிழரசே
வாழியவே என்றும் மகிழ்ந்து.

திக்கெல்லாம் போற்றுதிரு நெல்வேலி ஊர்முதலாய்
மக்கள் வணங்கும் குமரிவரை—தக்க
தொடர்வண்டிப் பாதை தொடங்கிப் பணிசெய்
இடர்களையும் எம்மரசே வாழ்.

தாய்மொழியும் ஆங்கிலமும் தக்கஇரு கண்களென
ஆயும் அறிஞர் அறைந்திட்ட—மாயாத
உண்மை நிலையை உணர்ந்து செயற்படுத்தும்
வண்ணமத் தமிழரசே வாழ்.

பாசொலி


இன்றே வளரும் மாத சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து வளமான வாழ்வு பெறுங்கள்
இன்றைய சேமிப்பு நாளைய வாழ்வுக்குப் பாதுகாப்பு
1
உங்கள் பிள்ளைகள் பேரில் மாதம் இருபது ரூபாய்க்கு ஒரு வளரும் மாத சேமிப்பு சேருங்களேன்! நாளைக்கு அவங்க பெரியவங்க ஆகும் போது பயன்படும்
அவன் பாடறதைக் கேட்டீங்களா?
நாடகமே உலகம் நாளை நடப்பதை யாரறிவார்?
2
நாளைய வாழ்வு நிலையாக இருக்கணும்ங்கிறதுக்குத்தான் சேமிக்கச் சொல்கிறோம். பக்கத்து வீட்டு பரமசிவம் கூட பதினைந்து வருடமா சேமிக்கிறார்
அவர் பரமகஞ்சன்! வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாத மனுசன். எனக்கு இன்றைய வாழ்வுதான் முக்கியம்!
3
சில மாதங்களுக்குப் பின்...
சினிமா டிராமா ஓட்டல் சிகரெட் என்று எவ்வளவு விரயம் பண்றீங்க? வயசு வந்த பெண்ணிருக்கே! பையனை மேல் படிப்புக்கு அனுப்பணுமே! அதை கவனிக்கிறதே இல்லை
என்னடி புதுசா ஞானோதயம்?
4
நீங்க ஏதோ கொடை வள்ளல் மாதிரி பக்கத்து வீட்டுக்காரரை பரமகஞ்சன்னு சொன்னீங்களே! நினைவு இருக்கா?
அதுக்கு இப்போ என்னடி வந்துச்சு?
5
ஒரு சிரமும் படாமே அவரு பொண்ணுக்கு நல்ல இடத்திலே கச்சிதமா கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணியிருக்கார் கையிலே சேமிப்புப் பணம் இருந்ததினாலே....
அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்
6
குமார்—

அண்ணலை மறவாத் தமிழரசு

அக்டோபர் முதல் தேதி இதழ் கண்டேன்; மெய்மறந்துவிட்டேன்; முகப்பிலுள்ள அண்ணலின் உருவம்—அந்தப் பொக்கை வாய்ச் சிரிப்பு மன்னரின் வடிவம் எங்களது இதயத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டது. அண்ணலை மறவாமல் அவருக்கு அஞ்சலி செய்த 'தமிழரசு'க்குப் பாராட்டு பாராட்டு, பல கோடிப் பாராட்டு.

—கி. கிருஷ்ணகுமார்,
கும்பகோணம்.

கனிந்த சேலம்

'சேலம் கனிந்தது' படித்தேன். முயற்சி மெய்வருந்தக் கூலிதரும் என்று வள்ளுவர் சொல்லிச் சென்றது மெய்தான் என்பதை உணர்ந்தேன். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்காக வள் வர் அவ்வாறு எழுதியுள்ளார் என்பது விளங்குகிறது. சாதனை செய்வதில் திறமை படைத்தது தமிழகஅரசு என்பதை, சேலம் கனிந்தது கட்டுரையின் வாயிலாகத் தெரிவிக்கும் 'தமிழரசு' வாழ்க, வளர்க!

—அம்பிகாபதி,
தென்மாப்பட்டு.

மணம் தந்த பூ

பூவைப் பற்றி 'பூ' என எண்ணியிருந்தேன். அடேயப்பா .. ரோஜாப் பூக்களில் மட்டும் 500 வகைகளா? வியப்பாக இருக்கிறது. 'பூவோ பூவு' கட்டுரையைப்படித்துவியப்பிலாழ்ந்தேன். கட்டுரை கருத்து மணத்தை அள்ளித் தந்தது.

—மல்லிகா, மதுரை.

தலைக்கு முதலிடம்

'தலை'யான செய்தி கட்டுரை படித்தேன்; அநேக செய்திகளைத் தெரிந்து கொண்டேன். அசட்டையாக இருப்பதனால் எவ்வளவு ஆபத்து வருகிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். தலைக்குள்ள தலைமைஇடத்தைஎண்ணித்தான், நமது முன்னோர்கள் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று சொல்லி வந்தார்களோ!

—சுப்பையன், வெம்பூர்.

சாத்தனூர் போவேன்!

அக்டோபர் 1-ந்தேதி 'தமிழரசு' இதழின் நடுப் பக்கத்தில் சாத்தனூர் அணையின் எழில்மிகு காட்சிகளை, எங்கள் எண்ணமெல்லாம் அலைய, எப்போது சென்று பார்ப்போம் என ஏங்கும்வண்ணம் வெளியிட்டு எங்கள் இதயத்தைக் கொள்ளைகொண்ட தமிழரசின் சேவையை எப்படிப் பாராட்டுவது என்றே புரியவில்லை. வாழ்க!

—சா. மு. வச்சிரவேலன்,
மாடப்பள்ளி.

இடம் பெறுக் குறை

பூத்து மணம் 'பரப்பும்' புது மலராக, அறிவுக்கு விருந்து தரும் ஆக்க மலராக, பல்துறை சார்ந்த முத்தான கருத்துக் குவியல்களைக் கொத்தோடு கொண்டு வந்து தரும் 'தமிழரசின்' பொலிவுக்கும் எழிலுக்கும் காரணமாக விளங்குபவர்கள் வாழ்த்துக்கும் வணக்கத்துக்கும் உரியவர்கள்.

வெளி நாட்டுப் பயணிகளை ஈர்க்க வல்ல பல பகுதிகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ள இவ்வரிய இதழ் இங்குள்ள இந்தியத் தகவல் இலாகா நூலகத்தில் இது வரை இடம் பெறாதது பெரும் குறைபாடே.

—கே. ;ர். எம். ஜக்கரியா,
கோலாலம்பூர்.

எனது உணர்வு

'தமிழரசு' ஏழு இதழ்களையும் பார்த்தேன். படித்தேன். தமிழகத்தின் எல்லாத் துறைகளின் வளர்ச்சியையும் புள்ளிவிவரங்களுடன் வெளியிட்டிருக்கிறது வெளி மாநிலங்களில் இருக்கும் நமக்குத் தமிழகத்தின் வளர்ச்சியைத் திரைப்படம் போல் காட்டும் பத்திரிகை 'தமிழரசு' ஒன்றே. தமிழரசு படிப்பதனால் தமிழகத்தில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது! வாழ்க தமிழரசு! வளர்க அதன் பணி.

—எச். அப்துல்லா.
விஜயவாடா—1.

அனைத்தும் பிடிந்தம்!

நான்ஒரு பத்திரிகைப் பித்தன். பத்திரிகைகளை எடுத்து எனக்குப் பிடித்தமான பகுதிகளை மட்டுமே தேர்ந்தெடுத்துப் படிப்பேன். ஆனால் 'தமிழரசு' இதழ் வந்தாலோ, முழுக்க முழுக்கப் படித்துவிடுவேன். ஆம், அத்தனையும் எனக்குப் பிடித்த அம்சங்கள். 'தமிழரசு' ஒரு தலை சிறந்த பத்திரிகை. எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

—கோபு. தேவராசன்,
கோனூர் பாளையம்.

தனி இடம் உறுதி!

வெளி நாட்டுப் பத்திரிகைகளுக்கு இணையாக உயர்ந்த தாளில் நிறையப் பக்கங்களுடன் குறைந்த விலையில் செழிக்கச் செழிக்கச் செய்திகளுடன் வெளி வருகின்ற 'தமிழரசு' பற்றி இப்போதே ஆருடம் சொல்கிறேன், குறித்து வைத்துக்கொள்ளுங்கள். தொடர்ந்து இதே போல வருமானால் பத்திரிகை உலகிலேயே 'தமிழரசு' ஒரு தனி இடத்தையே பிடிக்கும். இது உறுதி.

—எஸ். எஸ். மணி
திருவனந்தபுரம்.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக, எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை 1.

உங்களை வாழவைக்கும்

நீங்கள்!



வாய்ப்பு உங்கள் பக்கம் அமைந்துவிட்டால் வாழ்க்கையை வளப்படுத்த அதிகச் செலவில்லை. ஒரே ரூபாயில் நீங்களும் லட்சாதிபதியாக முடியும்! நினைவில் வையுங்கள்: தமிழ் நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம்தான் எண்ணிக் கையில் அதிகப் பரிசுகளை வழங்குகிறது.

அதிக உணவு, உடை, நல்ல வீடுகள், இலவசக் கல்வி, தேவையான மருத்துவ வசதிகள் எல்லாம் சரிவரக் கிடைப்பதற்காக தேசியத் திட்டங்களில் உங்கள் முதலீடு செலவழிக்கப்படுகிறது.

நாடு வளமாக உங்கள் பணம் பயன்படட்டும்.
ஒவ்வொரு வரிசையிலும் ஒரு லட்சம் அடையலாம்.

25-வது குலுக்கலுக்கான
பரிசுகளின் மொத்தத் தொகை: ரூ. 17,50,000

ஒவ்வொரு வரிசைக்கும் முதல் பரிசு ஒரு லட்சம்

குலுக்கல் தேதி: 25-10-1970

தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இது வரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள்: 185 பேர்

பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது.
ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

★ 5 வரிசை வெளியிடுக்குட்பட்டது.

Registered No. M. 8657

கலையெழில் குலுங்கும் தமிழகம் வருக!

பழம்பெரும் பண்பாடு, அழிவிலா [illegible]

விருந்தோம்பலில் சிறந்தோங்கும
தமிழ்நாடு வரவேற்கின்றது.

சென்னை ● மாமல்லபுரம் ● காஞ்சீபுரம் ● வேடன்தாங்கல் ● சிதம்பரம் ● தஞ்சை ● சீரங்கம் ● இராமேசுவரம் ● மதுரை ● குற்றாலம் ● கன்னியாகுமரி ● உதகை ● கொடைக்கானல் ● ஏர்க்காடு...

இயக்குநர், செய்தி, விளம்பர, சுற்றுலாத்துறை, சென்னை-9.

தமிழரசு

திங்கள் இருமுறை நவ. 1, 1970 • 35 காசு

R.R. 470/70
4 - NOV 1970



உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2

635

மலர் 1 1970 நவம்பர் 1 இதழ் 9

நாவலர் தாயகம் வந்தடைந்தார்
அகர முதல எழுத்தெல்லாம்
தொழிலே துணை
பல்லைப் பாதுகாப்போம்
பட்டுப் பூச்சி பார், பார்!
பரிசுக்குப் பரிசு
ஏரிக்காடு
கூடித் தொழில் செய்தால்
கோடி நலம் பெறலாம்
பிச்சைக்காரர் மறுவாழ்வு
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண்போம்
பூவேதான் பூவை
வெண்பாப் போட்டி
முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

4 - NOV 1970
எழும்பூர், சென்னை

அடுத்த இதழ்?

லண்டன் வானொலியில் நாவலர் பேட்டி

வெளிநாட்டு அரசுகளின் அழைப்பின் பேரில் மேலை நாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட தமிழகக் கல்வி, பொதுநல அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு பம்பாய் சென்று ஜெர்மனி வழியாக செப்டம்பர் 22-ஆம் நாள் பாரிஸ் போய்ச் சேர்ந்தார். அமைச்சருடன் அவரது துணைவியார் டாக்டர் (திருமதி) விசாலாட்சி நெடுஞ்செழியன், பள்ளிக்கல்வி இயக்குநர் திரு எஸ். வி. சிட்டிபாபு ஆகியோரும் சென்றனர்.

பாரிஸ் நகரில் ''யுனெஸ்கோ''வின் கல்விப்பிரிவினரால் நடத்தப் பட்ட சிறப்புக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். யுனெஸ்கோவின் துணை இயக்குநர் டாக்டர் மால்கம் ஆதிசேசையாவுடன் பேச்சு நடத்தினார். தமிழகத்தில் யுனெஸ்கோவின் நிதியுதவியுடன் துவக்க விருக்கும் அனைத்துலகத் தமிழ்க் கல்வி நிலையத்தினை 1971 ஜூலைத் திங்களுக்குள் நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த நிறுவனத்திற்கு 'யுனெஸ்கோ' சுமார் 3 லட்சம்] ரூபாய் (40,000 டாலர்) நிதியுதவி தரவிருக்கிறது.

அங்கிருந்து 1970-ம் ஆண்டு செப்டம்பர்திங்கள் 28-ஆம்நாள் அன்று அவர்கள் லண்டன் மாநகர் வந்தடைந்தார்கள். விமான தளத்தில் இங்கிலாந்து நாட்டுத் தகவல் நிலையம், வெளிநாடு காமன்வெல்த் உறவு அலுவலகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும், லண்டன் வாழ் தமிழ்மக்களும் அவர்களை மன மகிழ்வுடன் வரவேற்றனர்.

அங்கு அவர், இங்கிலாந்து நாட்டின், பொதுநல-சமூகப்பாது காப்பிற்கான மாநில அமைச்சர் அபெர்டேர் பிரபுவைச் சந்தித் தார். கல்வி இலாகா அதிகாரி களையும் சந்தித்து உரை யாடினார். அங்குள்ள சில பள்ளிகள், மருத்துவ மனைகள் ஆகியவற்றைப்பார்வையிட்டார். லண்டன் தமிழ்ச் சங்கத்தினர் அமைச்சருக்கு ஒரு வரவேற்பு விழா ஏற்பாடு செய்தனர். பாராட்டுகளுக்குப் பதிலளிக்கை யில் இத்துணைத் தொலைவில் தமிழ்ச் சங்கம் அமைத்து நடத்தி வருவது பாராட்டுக் குரியது என்றும், தமிழ்ச் சங்கத் திற்கு உதவத் தமிழக அரசும், கல்வி நிறுவனங்களும் முன் வரும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். அங்கு பி. பி. சி.க்கும் பத்திரிகையாளர்களுக் கும் அவர்பேட்டி தந்தார்.

லண்டனிலிருந்து விமானம் மூலம் அமைச்சர், குழுவினருடன் அமெரிக்க நாட்டிற்கு 25-ஆம் நாள் செப்டம்பர் 1970 அன்று பயணமாயினர். அந்நாட்டில் அமெரிக்க அரசு அவருக்காக 20 நாள் சுற்றுப்பயணத்திற்கான சிறப்பான சில ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

நியூயார்க் நகரிலுள்ள தமி ழன்பர்களும், மாணவர்களும், பாரதி சங்கத்தினைச் சேர்ந்த வர்களும், கென்னடி விமான நிலையத்திற்குத் திரளாக வந் திருந்து அமைச்சரின்குழுவினரை வரவேற்றனர்.

நியூயார்க்கில் அமைச்சர் அவர்கள் 'கேர்' நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தைப் பார் வையிட்டார். அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். தஞ்சா வூரில் பள்ளிக்கூடங்களுக்காக வெற்றிகரமாக நடைபெறும் நடமாடும் ஆய்வுக் கூடத் திட்டத்தை (Mobile Laboratory Project) மற்றப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் படிக் கல்வி அமைச்சர் கேட்டுக் கொண்டார். அதனைப் பரி சீலனை செய்வதாக அதிகாரி உறுதி கூறினார். ''யுனிசெஃப்'' அலுவலகத்தையும் அமைச்சரின் குழுவினர் பார்வையிட்டனர். கிராமங்களில் பொதுநலத் திட் டம் பற்றி அங்கு பேசப்பட்டது.

அங்கிருந்து செப்டம்பர் 29-ம் நாள் அவர்கள் வாஷிங்டன் நகருக்குச் சென்றனர். அங்கு அவர்கள், தேசீயக் கல்விக் கழகம், அமெரிக்கக் கல்வி அலுவலகம், தேசீயப் பொது நல நிலையம் மற்றும் பல கல்வி-பொது நலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைப் பார்வையிட் டார்கள்.

கொலம்பியா பல்கலைக் கழக வானொலி நிலையத்தினர் அமைச்சரைப் பேட்டி கண்டு அதனை ஒலி பரப்பினர்.

அமெரிக்காவில், பஃபலோ என்ற பகுதியிலுள்ள குடி யிருப்புகள் அமைக்கும் திட்டத் தினைக் கல்வி அமைச்சர் பார்வை யிட்டார்.

சிக்காகோவிலுள்ள பாரதி கலாச்சாரக் கழகத்தினர் ஏற் பாடு செய்த, திரளான மக்கள் கூட்டத்தில் அமைச்சர் சிறப் பாக உரையாற்றினார்.

அங்கிருந்து அக்டோபர் திங்கள் 14ஆம் நாள் புறப்பட்டு, டோக்கியோ, ஆங்காங், பாங் காக், கோலாலம்பூர், சிங்கப்பூர் ஆகிய நகர்களுக்குச் சென்று விட்டு அக்டோபர் 28-ம் நாள் தாயகம் வந்தடைந்தார்.

பிரிட்டனின் உடல் நலத்துறை அமைச்சர் லார்டு அபர்டேருடன் நமது கல்வியமைச்சர் நாவலர், அவர்தம் துணைவியார், தமிழகக் கல்வி இயக்குநர் சிட்டிபாபு ஆகியோர்.



7. ரோமாபுரியின் பொற்காலம்

திவோலித் தோட்டத்தில் தானேஇயங்கும்புகைப்படக்கருவியில் எடுத்துக் கொண்ட படங்களைரசித்தவாறே ரோமாபுரிக்குக் காரில் திரும்பினேம். என் மனம் என்னும் கேமரா, ரோம் நாட்டு வரலாற்று நாயகர்களின் படங்கள் சிலவற்றை என் முன் விரித்து வைத்தது.

''என்றும் அழியாத நகரம்'' (Eternal City) என்று ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்பட்ட அந்த மண்ணின் கதைதான் எவ்வளவு விசித்திரமானது—எவ்வளவு சுவையானது!

ஜூலியஸ் சீசர், அந்தோணி, புருட்டஸ், பாம்பே, கிளியோபாத்ரா, அகஸ்டஸ், கிளாடியஸ், நீரோ, மார்கஸ் அரிலியஸ் போன்ற பண்டைய ரோமானியர்களின் வரலாறும்; கரிபால்டி, மாஜினி, முசோலினி ஆகியோர்களின்வாழ்க்கையும்; ரோம்நாட்டு அரசவையில் பாண்டிய மன்னனின் தூதுவர் இடம் பெற்றிருந்த காட்சியும், அந்நாட்டிற்கும் தமிழகத்திற்கும் ஏற்பட்டிருந்த தொன்மையான உறவும்; வியாபாரத் தொடர்பும் என் மனத் திரையில் தோன்றி மறைந்தன.

''நீரின்வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின்வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும்
பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும்
அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல்
துகிரும்
கங்கைவாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத்துஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய
ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை
மறுகு''

என்ற பட்டினப் பாலையின் பாடலில் வரும் பண்டையத் தமிழகத்தின் வாணிகச் சிறப்புகளும் என் நினைவிற்கு வந்தன.

''அருந்தமிழ் இலக்கணம்
ஐந்தையும்
விரித்து விளக்கினன் வீரமா
முனியே''

என்று இன்றும் போற்றப்படும் பெஸ்கி அடிகளார் தைரியநாதர் என்ற பெயர் தாங்கி,

''ஈரறமும், முச்சீரும், சுகமோர்
ஏழும்
நிமிர் இத்தாலிய நாட்டிலிருந்து''

போந்த வீரமாமுனிவரும், அவருக்கு முன்னரே தமிழ்நாடு வந்த, தத்துவபோதகர் என்று தம்மைக் கூறிக்கொண்ட, ''ராபர்ட் டி நோபிலி'' என்ற பெரியாரும், இத்தாலி நாடு தமிழகத்துக்கு அளித்த நன்முத்துக்கள் ஆவர். கொற்கை முத்தை நாம் முன்பு அனுப்பியதற்குப் பதில் காணிக்கையாக இவர்களை இத்தாலிய அன்னை, தமிழன்னையின் தொண்டுக்கு அனுப்பினள் போலும்!

நன்றி மறவாத தமிழகம் ''சதுரகராதி'' ஆசிரியரின் தொண்டுக்கு வணக்கம் செய்யுமுகத்தான், அன்னாரது உருவச்சிலையை இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழகக் கடற்கரையில் அமைத்த காட்சியும் என் மனக்கண் முன் தோன்றி மறைந்தது.

கிரேக்கமும் ரோமும் ஜனநாயகத்தின் நொட்டில்கள் என்று போற்றப்படுகின்றன. கிரேக்கத்தில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் பேரறிஞன் கூறிய கருத்தொன்று என் நினைவுக்குவந்தது.

''மக்களாட்சியை ஏற்ற ஒரு நாடு, சுழன்றடிக்கும் அலைகளுக்கிடையேமிதந்திடும் ஓர் அழகான கப்பல். அலைகளின் அசைவிற்கேற்பக் கப்பல் ஆடுவது போல மாறுகின்ற மக்களின் கருத்துக்களுக்கேற்ப ஆட்சியும் மாறிக் கொண்டிருக்கும்.''

பிளேட்டோவின் இந்தக் கூற்றிற்கு ரோம் நாட்டின் வரலாறு ஓர் அரிய விளக்கப் பாடமாக அமைந்தது. ரோமானியர்கள் கி.மு. 509-ல் குடியரசை நிறுவினர்.

அதுமுதல் செனேட் சபையின் செல்வாக்கு வலுத்தது. செனேட்டில் பிரபுக்களின் ஆதிக்கமே இருந்தது. எனவே பொதுமக்கள் கூடிக் கான்சிலியம் பிளிபஸ் என்னும் மக்கள் மன்றத்தை நிறுவினர்.

செனேட்டின் சார்பில் இரு ''கான்சல்கள்'' நாட்டை நிர்வகித்தனர்.

மக்கள் சபையின் சார்பில் ''டிரிப்யூன்கள்'' நியமனம் செய்யப்பட்டன.

முதலில் பெயரளவில் அமைந்திருந்த மக்கள் அவை, டிரிப்யூன்களின் வீரத்தாலும் விவேகத்தாலும் வளர்ச்சி பெற்று, செனேட்டுக்குச் சமமான செல்வாக்கினைப் பெற்று விளங்கியது.

கான்சல்களும் டிரிப்யூன்களும் ரோமாபுரிக்கு வெளிநாடுகளில் வெற்றியை ஈட்டித் தந்தனர்.

வெற்றி பெருகப் பெருக செனேட்டின் தரம் குறையலாயிற்று. செனேட் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சுயநலமிகளின் கூடாரமாயிற்று. மக்கள் அவையும், வேலையற்றவரின் இருப்பிடமோ என எண்ணிடும் அளவுக்கு மாறலாயிற்று.

கி.மு. இரண்டாம் நூற்றுண்டில்—"ஆட்சிச் சக்கரத்தை யார் இயக்குவது?" என்பதில் அதிகாரப் போட்டிகள் இரண்டு சபைகளுக்குமிடையே வலுத்தன. கிராக்கஸ் என்பவன், பிறப்பால் ஓர் பிரபு தான் என்ருலும், நசுக்கப்பட்ட ஏழைமக்களுக்காகக் கொதித்தெழுந்தான். . மக்கள் அவை அவனுக்கு ஆதரவு அளித்தது. நில உச்ச வரம்புச்சட்டம் ஒன்று இயற்றி, உபரி நிலங்களை, ஏழையருக்கு அளித்திட எண்ணிஞன்.

பிரபுக்கள் இவன் உயிரைக் குடித்தனர்.



மாவீரன் ஜூலியஸ் சீசர்

நாடெங்கும் கலகங்கள்—உட்பூசல்கள் தோன்றின.

மாரியஸ் என்ருெரு வீரன் மக்கள் அவையின் சார்பாக எழுந்தான்.

சல்லா என்னும் ஒரு காளை செனேட்டுக்காகப் போராடிஞன்.

சமஆற்றலுடைய வீரர்களால் நாடு ரணகளமாகி இரத்தவாடை வீசிக்கொண்டிருந்த காலத்தில், ரோமாபுரியின் அரசியல் வானில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓர் மாமறவன் உதயமாஞன்.

அவன் பெயர் தான் ஜூலியஸ் சீசர்!

கிரேக்கம் என்றவுடன் நம் கண்முன்ஞல் எப்படி அலெக்சாண்டர் தோன்றுகிருனே, அது போல 'ரோம்' என்றவுடன் நம் நினைவுத் திரையில் வந்து நிற்பவன் ஜூலியஸ்சீசர்!

சீசரின் அரசியல் வாழ்க்கை வரலாற்றுத் தொடக்கம் பதினேழாவது வயதில் அவனுக்கு நிகழ்ந்த திருமணத்தின் போது ஏற்பட்டது. சின்ஞவின் மகள் கார்னீலியாவை மணந்தபொழுது சீசர் சல்லாவின் சீற்றத்திற்கு ஆளாஞன். சின்ஞ, சல்லாவின் எதிரியான மாரியசின் முகாமில் இருந்தவன்.

"மணத்தை முறித்துக் கொண்டு சின்ஞவின் மகளைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிடு" என்ருன் சல்லா. மனம் ஒப்பவில்லை சீசருக்கு. அதற்காக அவன் நாட்டை விட்டே வெளியேற வேண்டியிருந்தது.

கிரேக்கம் போஞன் சீசர். அங்கே தத்துவம் பயின்ருன். "கேட்டார்ப் பிணித்துக் கேளாரும் வேட்பமொழிந்திடும்" சொல்லாற்றலையும் பெற்றிட்டான். அழகாகப் பேசுவதை அருங்கலையாகப் பயின்று வந்தகாலம் அது.

சின்ஞட்களுக்குப் பின்னர், சல்லா மன்னித்துவிடவே, தாயகம் திரும்பிய சீசர் அரசியலில் ஈடுபடலாஞன்.

அரசின் பொதுப்பணிகளுக்கும், பொழுதுபோக்கான வீர விளையாட்டுப் போட்டிகளுக்கும் நிர்வாகியாக நியமிக்கப்பட்ட சீசரின் புகழ் ஓங்கி வளர்ந்தது. கான்சலுக்கு அடுத்ததான பரீட்டர் என்ற உயர்பதவியைப் பெற்ருன் சீசர்.

அப்பொழுது ரோமாபுரியில் மற்றுமிருவரின் ஆதிக்கமும் வளர்ந்து வந்தது.

ஒருவன், பொன்னும், மணியும், பொருளும் மிகப்படைத்த கிராசஸ். மற்றவன், ஆசியா மைனர் போர்க்களத்தில் பெரும்புகழ் பெற்ற பாம்பே என்னும் வீரன். இருவருடனும் இணைந்து செயல்பட்டு மூவர் அணி (First Triumvirate) அமைத்தான் சீசர். வெகுவிரைவில் செனேட்டின் அதிகாரத்தை மூவர் அணி வளைத்தது.

சீசரைக் கான்சலாக ஏற்கும் அளவுக்கு செனேட்டின் குரல்வளை நெரிக்கப்பட்டது.

அடுத்த பத்து ஆண்டுகளில் பிரிட்டனிலும் பிரான்சிலும் வெற்றிப் பவனி வந்தான் சீசர். அட்லாண்டிக் கடற்கரைக்கும் ரைன் நதிக்கும் இடையே எட்டு ஆண்டுகள் சீசர் காட்டுமிராண்டிகளை எதிர்த்துக் கடுமையாகப் போரிட்டு வென்ருன்.

அடுக்கடுக்காக அவன் பெற்ற வெற்றிகள் கிராசசுக்கும் பாம்பேக்கும் அதிர்ச்சியைத் தந்தன. சீசர் வளர்ந்தால் தங்கள் வாழ்வுக்கு ஆபத்து என்று அச்சம் கொள்ளலாயினர். தன்னுடைய சதித்திட்டம் செயலாவதற்கு முன்ஞல் கிராசஸ் மாண்டு போஞன். ஆஞல் பாம்பேயோ, சீசரைக் கவிழ்க்கும் தருணத்தை எண்ணிக் காத்திருந்தான்.

இடையருத போர்க்களங்களில் ஈட்டிய பெரும் வெற்றிகளுடன் கி.மு. 49-ல் தாயகம் திரும்பிக் கொண்டிருக்கிருன் சீசர்.

வேறு நாட்டு மக்களாக இருந்திருந்தால் என்னென்ன செய்திருப்பர்?

வழியெல்லாம் வண்ண மலர்களைத் தூவியிருப்பர்.

தோரணங்கள் கட்டித்—

தெருக்களைத் தூய்மையாக்கிக்—

கோலமிட்டு, மங்கல ஒலிகள் எழுப்பி,

மக்கள் மகிழ்ந்திருப்பர்.

பாவையர் ஆரத்தி எடுத்திருப்பர்.

பாவலர் பரணிகள் பாடியிருப்பர்.

"பாரெல்லாம் வென்றவனே! உன்னை மன்னஞகப் பெற என்ன பேறு பெற்ருேம்!" என்று பரவசமடைந்திருப்பர்.

ஆஞல் ரோமாபுரியில் நடந்ததோ வேறு!

"மகத்தான வெற்றியோடு வருகிருனே!

மன்னஞகலாம் என்ற எண்ணம் எழுந்திருக்குமோ?

பேரழகி கிளியோபாத்ரா

எம்மை அசைப்பவர் எவருமிலர் என்கின்ற ஆணவம் துளிர்த்திருக்குமோ?"

என்று சிந்திக்கத் தொடங்கியது செனேட் சபை. மக்கள் அவையிலும் இத்தகு சிந்தனைகள் கொந்தளித்தன.

மக்களாட்சியின் மேல் அத்தனை பற்று அவர்களுக்கு! சந்தர்ப்பம் நோக்கிக் காத்துக் கொண்டிருந்த பாம்பே இந்தச் சந்தேகங்களைப் பயன்படுத்திக் கொண்டான். எனவே தான்—

ஆணை பறந்தது சீசருக்கு—

சேனையைக் கலைத்து விட்டுத் தாயகத்தின் எல்லையில் நுழையும்படி!

சீசரா பணிபவன்?

தலைநகரை நோக்கிப் படையுடன் நடந்தான்.

அறுபது நாட்கள் செனேட்டுடன் போர் நடத்திய பிறகு நாடு அவன் வசமாயிற்று. கோலாகலமாக வரவேற்கப்பட்டான் சிங்கம் நிகர் சீசர். செனேட் அவன் கைப்பாவை ஆயிற்று!

அதனை ஆலோசனை மட்டும் கூறும்சபையாக மாற்றி, அனைத்து அதிகாரங்களையும் தானே ஏற்ருன் சீசர். மக்கள் பிரதிநிதி என்ற போர்வையில் தான் ஓர் முடிசூடா மன்னஞஞன். ஐந்து ஆண்டுகள் தான் ஆண்டான் அவன். ஆஞல் அதற்குள்ளே அழியாத புகழ் முத்திரைகளைப் பொறித்தான் சீசர். ஊழலையும் ஊதாரித்தனத்தையும் ஒழித்தான். உண்மை ஊழியம் புரிவோருக்குப் பதவிகள் தந்தான். "சென்றேன்— கண்டேன்— வென்றேன்" என்று செனேட்டுக்குச் சேதி அனுப்புமளவுக்கு மேலும் பல நாடுகளை வென்ருன்.

உள்நாட்டுப் போரில் தோற்ற பாம்பே, நாடுவிட்டு நாடு புறமுதுகு காட்டி ஓடிக் கொண்டிருந்தான். அவனைப் பூண்டோடு ஒழித்திட விரும்பிய சீசர் பாம்பேயைத் தொடர்ந்து அலெக்சாண்டிரியா சென்ருன். அங்கு ஒரு மாளிகையில் தங்கியிருந்த பொழுதுதான் கிளியோபாத்ரா அவனுக்கு அறிமுகப்படுத்தப்பட்டாள். விண்ணும் மண்ணும் அதிர வெறியாட்டம் ஆடிவரும் வீரர்களின் வாள் வீச்சுக்கும் அஞ்சாத வீரன். வேல் விழியாளின் முன்பு வீழ்ந்து விட்டதற்கு ரோம் நாட்டுச் சரித்திரத்தில் இது போன்ற ஆதாரங்கள் நிரம்ப உண்டு.

அரியணையை விட்டு விரட்டப்பட்ட கிளியோபாத்ராவுக்கு மணிமுடி தந்த சீசர், அவளுக்குத் தன் மனத்திலும் இடம் தந்தான். ரோமுக்கு அவளையும் அழைத்து வந்தான்.

சீசரின் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. "மக்களாட்சி முறைக்கு எதிரான ஓர் ஆட்சியா?" என்ற குமுறல்கள் ஒருபுறம்.

"அன்னை பூமியின் மானத்தை அழகி ஒருத்தியிடம் அடகு வைத்து விட்டானே?" என்ற பொருமல்கள் ஒருபுறம்.

அவனிடம் தோற்று, மன்னிப்புப் பெற்று, நண்பரைப் போன்று நடித்து வாழ்ந்த நயவஞ்சகர்களின் சதிகள் ஒருபுறம்.

இவற்றுக்கிடையே சற்றும் அஞ்சாமல் ஏறு நடைபோட்டு வந்தான் சீசர்.

ஒருநாள்-கி.மு. 44ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் – தீய கனவு கண்டதாகத் தன் மனைவி தடுத்தும் கேளாமல், செனேட் சபைக்குச் சென்றான் சீசர்.

அங்கே –

'தொழுத கையுள்ளும் படையொடுக்கிய' பகைவர்கள் அவனைத் தாக்கினர்.

எதிர்த்துப் போராட எண்ணிய சீசர் தன்னைச் சுற்றிலும் நோக்கிய பொழுது திடுக்கிட்டான்.

அவன் வாளால் வெட்டப்படுவதைக் கண்டும் செனேட் உறுப்பினர்கள் வாளா நின்றிருந்தனர்.

அவன் கண்முன்னால் உருவிய கத்தியுடன் நண்பன் புருட்டஸ்—

"புருட்டஸ் நீயுமா? . . . அப்படியானால் சீசர்! நீ மடியலாம்" என்றான்! ஒன்றல்ல, இரண்டல்ல, இருபது இடங்களில் கத்திகள் பாய்ந்தன.

அந்தக் களம் கண்ட மாவீரனின் உடலே இப்பொழுது ஒரு போர்க்களம் போலக் காட்சியளித்தது.

சீசர் மாண்டான்.

ஆனால்....

சீசரின் சாவின்மூலம் எதனைச் சாதிக்கலாம் என்று புருட்டசும் அவனுடைய தோழர்களும் கூறி வந்தார்களோ, அது–இறுதிவரை நிறைவேறவேயில்லை. சீசரின் பிணத்தினை வைத்துக்கொண்டு நாவன்மை படைத்த அந்தோணி நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க சொற்பொழிவு, மக்களுக்கு சீசரின் மீது அனுதாபத்தைத் திரட்டியது. மக்களாட்சி என்ற மணி விளக்கு சீசரின் காலத்தில் மங்கலாக எரிந்தது என்பது உண்மைதான். ஆனால் அவனுக்குப் பிறகு அது அணைந்தே போயிற்று.

சீசருக்குப் பிறகு ரோமில் தோன்றியது முடியாட்சிதான். அந்த முடியாட்சியின் முதல் மன்னனும் சீசரின் வாரிசுதான். ஆக்டேவியன் என்பது அவன் பெயர். அவன் சீசரின் சுவீகார மகனாவான். இங்ஙனம் சீசரின் நெடிய நிழல் அவன் மறைவுக்குப் பிறகும் ரோமாபுரி வரலாற்றில் தொடர்ந்து விழுந்து கொண்டிருந்தது.

இத்தாலி நாட்டு வீரமா முனிவர்

அந்தோணிக்குத் தன் தங்கை ஆக்டேவியாவை மணமுடித்துக் கொடுத்தான் ஆக்டேவியன். அந்தோணி அரசியலில் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தான். ஆனால் மணமான மூன்றாவது ஆண்டில் – எகிப்து நாட்டின் பெயர் பெற்ற எழிலரசியான கிளியோபாத்ராவுக்கு இரண்டாவது பதியானான் அந்தோணி.

கிளியோபாத்ராவுக்குச் சீசரின் அருகில் அமர்ந்து, ரோமாபுரியைத் தான் ஆளவேண்டும் என்ற ஓர் ஆசை இருந்தது. சீசரின் மறைவுக்குப் பின்னர் அந்த விருப்பம் ஒருவாறு நிறைவேற அந்தோணியைக் கருவியாக்கிக் கொண்டாள்.

கடமைகளை மறந்த அந்தோணிக்கு ரோமாபுரியில் ஆதரவு குன்றியது. அக்ரிப்பாவின் தலைமையில் ஆக்டேவியனின் படை ஆக்டியம் என்னும் இடத்தில், அந்தோணி-கிளியோபாத்ராவின் படைகளைப் புறங் கண்டது.

அந்தோணி தோற்று ஓடினான்.

"சில ஆண்டுகளுக்கு முன்னால் அரசியாக ரோமாபுரி சென்றேன். இப்பொழுது ஆக்டேவியன் அழைக்கிறான் அடிமையாக வருமாறு! அன்பரே; இந்த மடல் தங்களுக்குக் கிடைக்கும் பொழுது இந்தப் பாவியின் ஆவி பிரிந்திருக்கும்!" என்று அந்தோணிக்கு ஓலை ஒன்று அனுப்பினாள் கிளியோபாத்ரா. அந்தோணி தானும் இறக்க நினைத்துத் தன்னை வதைத்துக் கொண்டபிறகுதான் கிளியோபாத்ரா இன்னும் இறக்கவில்லை என்பது தெரிந்தது. அவளிடம் தன்னை எடுத்துச் செல்ல ஆணையிட்ட அந்தோணி இறுதியில் அவள் மடியில் படுத்தவாறே உயிரை விடுத்தான். பின்னர் கிளியோபாத்ராவும் தற்கொலை செய்துகொண்டதாக வரலாறும், இலக்கியமும், வழிவழி வரும் கதைகளும் பேசுகின்றன. இருவருடைய உடல்களையும் அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்ய உத்தரவிட்டு ஆக்டேவியன் ரோமுக்குத் திரும்பிய பொழுது அவனுக்கு 33 வயது தான்! ரோமாபுரியின் செனேட் சபை மிக்க நன்றியுணர்வுடன் அவனை முதல் மன்னனாக ஏற்றுக் கொண்டு மணி மகுடம் சூட்டி அவனுக்கு அகஸ்டஸ் என்ற பெயரினையும் அளித்தது. ரோமாபுரி வரலாற்றில் இந்த அகஸ்டஸ் ஆண்ட காலம் பொற்காலம் என்று போற்றப்படுகிறது.

(தொடரும்)

பொற்காலம் காணப் புதிய திட்டங்கள்!

உணவு உற்பத்தியில் தமிழ்நாடு அரசின் சாதனைகளால்

எங்கும் பசுமைப் புரட்சி! எண்ணற்ற புதிய முயற்சி!!

மதுரை மாவட்டத்தில்
பெரியாறு வளர்ச்சித் திட்டம் ரூ 425 இலட்சம்
மருதாநதித் திட்டம்................ ரூ 62 இலட்சம்

திருநெல்வேலி மாவட்டத்தில்
கறுப்பாநதித் திட்டம்................ ரூ 140 இலட்சம்

தருமபுரி மாவட்டத்தில்
தொட்டஹல்லித் திட்டம்........ ரூ 100 இலட்சம்

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில்
பிளவுக்கால் திட்டம்........... ரூ 75 இலட்சம்

மைய அரசு நீர்ப்பாசனக்குழு அனுமதி கிடைத்தவுடன் தொடங்க இருக்கும் இத்திட்டங்களால் பயனடையும் நிலத்தின் பரப்பளவு

40,000 ஏக்கர்.

'பற்றாக்குறை', 'பஞ்சம்' என்ற சொற்களைப் பறந்தோடச் செய்து புதிய சரித்திரத்தை உணவு உற்பத்தியில் உருவாக்கிக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசின் சாதனைப் பட்டியல் வளரப் பாடுபடுவோம்! பயனடைவோம்!!

குமார்—

"அகர முதல எழுத்தெல்லாம்" என்று தொடங்கி, வையகம் வாழக் குறள் பாக்களைத் தந்தார், வள்ளுவப் பெருந்தகை.

இன்று, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பிற மாநிலங்களுக்கு வழி காட்டியாக அமையும் வகையில், பசுமைப்புரட்சியின் ஆணிவேராக, மிகச் சிறிய நிலக் கிழார்களும் பயன்பெறும் வண்ணம், நீர்ப்பாசனக்கூட்டுறவுக் கழகத்தைத் தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது, அகரம் கிராமத்திலே!

அகரம், செங்கை மாவட்டம் திருவள்ளூர் வட்டத்திலே உள்ள சிற்றூர். சுற்றிலும் பச்சை வர்ணம் பூசியது போன்ற நெற்பயிர் நிறைந்த பூமி. அங்கு அரசுக்குச் சொந்தமான 43 ஏக்கர் தரிசு நிலம்; இதுவரை வெறும் மேய்ச்சல் காடாகயிருந்த இடம். புதிய, புரட்சிகரமான திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அகரத்தைச் சேர்ந்த 26 சிறுநிலக் கிழார்கள் ஒன்று சேர்ந்து இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்தை ஏற்படுத்தியுள்ளனர். சிறுநிலக் கிழார் என்றால் ஒவ்வொருவரும் அரை ஏக்கர், ஒரு ஏக்கர், 2 ஏக்கர் என்று மிகக் குறைந்த நில உடைமை உள்ளவர்கள். அவ்வூரைச் சேர்ந்த திரு டி. ராகவன் என்பவரைத் தலைவராகக் கொண்டு, இந்தக் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சேர்ந்துள்ள உறுப்பினர்களில் அலமேலு அம்மாள், பச்சை அம்மாள் என்ற இரு விதவைத் தாய்மார்களும் உள்ளனர்.

இக்கூட்டுறவின் பணி என்ன? பயன் என்ன?

தமிழகத்தில் பசுமைப்புரட்சியினை ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு பல திட்டங்களை முனைப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அதிலொன்று, பூமியின் கீழ் மட்டத்திலுள்ள நீரைப் பயன்படுத்திப் பாசன வசதியினைப் பெருக்குவது. அதற்காகத் தமிழகத்தில் உள்ள 173 ஆரம்ப நிலவள வங்கிகளும், புதிய கிணறுகள் வெட்ட, பழைய கிணறுகளை ஆழப்படுத்த, இறைவைக் குழாய்களை அமைக்க, நிலக் கிழார்களுக்கு நீண்ட காலக் கடன் தருகின்றன. நிலக்கிழார்கள் தங்களது நிலங்களை அடமானம் வைத்து இக்கடன்களைப் பெறுகின்றனர்.

சிறுநிலக் கிழார்களுக்கென இது ஏற்பட்டிருந்த போதிலும், 50 செண்ட், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று நிலம் வைத்திருப்பவர்கள் இதன் மூலம் பயனடைவதில்லை; பெரும்பாலும் 5 ஏக்கர் நிலத்திற்கு மேலுள்ள நிலக்கிழார்களே இதன் மூலம் பயன் பெறுகின்றனர்.

ஆனால், 3 ஏக்கருக்கும் குறைவான சிறுநில உடைமைகள் தான் நம்நாட்டில் பெரும்பாலும் உள்ளன. எனவே, இத்தகைய உழவர் சமுதாயத்திற்கு உதவும் பொருட்டுத் தமிழ்நாடு அரசு ஒரு புதிய திட்டத்தினை உருவாக்கியுள்ளது.

இத்திட்டத்தின்படி, கூடியவரை ஒரே இடத்தில் அமைந்திருக்கும் நிலங்களின் உரிமையாளர்களைக் கூட்டாகச் சேர்த்து ஒரு பொது நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம் அமைக்கப்படும்.

இவர்கள் புதுக் கிணறுகள் வெட்ட, குழாய்க் கிணறுகள் அமைக்க, விசை ஏற்றங்கள் (பம்பு செட்கள்) நிறுவிடத் தேவையான பணத்தினை ஆரம்ப நிலவள வங்கியிடமிருந்து நீண்ட காலக் கடனாக, இந்த நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம் பெறும்.

ஒவ்வோர் உறுப்பினரும் தனது நிலத்தின் அளவிற்கேற்பக் கடன் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவற்றை ஆண்டுதோறும் இலகுவான தவணை முறையில் திருப்பித் தருவர்.

இதன் மூலம் மழை பொய்த்தாலும் பாசன வசதி நிச்சயமாக இருக்கும். இரு போகம் விளைவிக்க முடியும். ஒரு போகம் மூலம் ஒரு ஏக்கர் நிலத்தில் நிகர வருமானம் ரூ. 200 கிடைக்கும். மறுபோகம் நெல் விளைவிப்பதின் மூலம் ஆண்டுக்கு நிகர வருமானம் ரூ. 800 ஆக உயரும். எனவே இத்திட்டம் மூலம் ஆண்டுக்கு ரூ. 600 வருமானம் அதிகரிக்கும்.

இதன் முன்னோடித் திட்டம் அகரம் கிராமத்தில் தொடங்கப்பட்டது. அங்கு ஒரு குழாய்க் கிணறு அமைத்துத் தரப்பட்டுள்ளது. இந்தக் குழாய்க் கிணறு சுமார் 40 ஏக்கர் நிலத்தில் இரு போகம் விளைவிக்கத் தேவையான அளவு நீர்ப்பாசனம் வழங்கப் போதுமானது ஆகும்.

இதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் இத்தகைய நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களையும் குழாய்க்கிணறுகளையும் ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் துவக்க விழா 14—10—1970 அன்று அகரத்தில் நடைபெற்றது. இதற்காக ஏற்படுத்தப்பட்ட குழாய்க் கிணறு அருகே துவக்க விழா மேடையும், பந்தலும் அமைக்கப்பட்டிருந்தன. சுமார் 3 பர்லாங் தூரத்திற்கு வயல் வெளியின் மத்தியில் புதிய சாலை அமைக்கப்பட்டிருந்தது. வழிநெடுகத் தோரணங்களும், பலவண்ணச் சுவரொட்டிகளும் அலங்கார வரவேற்புகளும் மட்டுமின்றித் தங்களுக்கு வரவிருக்கும் புது வாழ்வினை எண்ணி மகிழும் அகரம் சுற்றுப் பகுதி உழவர் குடிப் பெருமக்கள் ஆயிரக்கணக்கில் வழி நெடுகக் கூடி நின்று, முதலமைச்சருக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும் மகத்தான வரவேற்பளித்தனர். விழாவிற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து குழுமியிருந்தனர். இத்தகைய சிற்றூரில், இவ்விழாவினைக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சீதாராமதாஸின் திறமையை எடுத்துக் கூறுவதாகயிருந்தது இந்த விழா!

விழாவிற்குத் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமை தாங்க, மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் இத்திட்டத்தினைத் துவக்கி வைத்தார்கள்.

ஆளுநர் அவர்கள் ஒரு பொத்தானை அமுக்கியதும் குழாய்க் கிணற்றிலிருந்து குற்றாலம் அருவி போல் தண்ணீர் கொட்டியது. கூடியிருந்த மக்களின் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியில் பொங்கியதைப் பிரதிபலிப்பது போல் இது அமைந்திருந்தது.

விழாவிற்குத் தலைமை தாங்கிய முதல்வர் பேசியதாவது:—

"இந்த அரசு கிராம மக்களுடைய வாழ்வை மையமாக வைத்துத் திட்டங்கள் பலவற்றைத் தீட்ட வேண்டும் என்று எண்ணியுள்ள அரசு. ஒரு நாட்டின் செழிப்பைக், கொஞ்சம் பளபளப்பாக இருக்கிற நகரங்களைப் பார்த்து மாத்திரம் கணக்குப் போட



முடியாது. அந்தப் பளபளப்பிற்குக் காரணமாக இருக்கிற சிற்றூர், பேரூர்களில் வாழும் மக்களுடைய நிலையும் மேம்பாடு அடைய வேண்டும். அதற்காகத்தான் எங்களுடையதலைவர் அண்ணா அவர்கள் ஏழை எளிய மக்கள் பயன் பெறத்தக்க வண்ணம் கூட்டுறவு இயக்கம் பணியாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார். பாசன வசதிகளை மேலும் பெருக்க, பூமிக்கடியில் இருக்கிற நீரை எடுத்து அதை ஏழை எளிய மக்கள் துய்க்கிற அளவிற்குச் செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அரசாங்கம் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கு அடையாளம் தான் நிலவள வங்கிகள் நாட்டில் பணியாற்றுகிற நிலை. நிலவள வங்கிகள் மூலம் ஏழை எளிய மக்கள் பயன்பெற முடியுமா? சில வரைமுறைகளின் அடிப்படையில்தான் கடன்களைப் பெற முடியும். அதற்காக எடுக்கப்பட்டிருக்கும், அடுத்த முறை தான், இன்று தொடங்கும் நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம். அந்தக் கழகத்தின் மூலம் இன்று முதன் முதலாகப் பணியாற்றத் தொடங்கியிருக்கிற இந்த நீரேற்றக்குழாய்.

ஐந்து ஏக்கர் நிலம், அல்லது அதற்கு மேல் நிலம் படைத்தவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவு. மற்றவர்களெல்லாம் 1 ஏக்கர், 2 ஏக்கர் என்ற அளவில் உள்ளவர்கள். 80 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள், இப்படிப்பட்டவர்கள் தான்! அவர்கள் இந்த நீர்ப்பாசன வசதியைப் பெறுவது முடியாத காரியமாக இருந்தது. கிராமங்களில், சண்டை சச்சரவுகள், போராட்டங்கள், இல்லாமை, வறுமை இவைகளால் தாக்கப்பட்டுத் தங்கள் நிலங்களின் பயனை அடைய முடியாமல், இருக்கிற நிலத்தை அடமானம் வைத்து விட்டு, வட்டியைக் கட்ட வயல்வெளிகளில் வேலை செய்து கொண்டிருக்கும் நிலை, நாட்டில் இருக்கிறது. அதிலிருந்து சாதாரண ஏழை எளிய மக்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது தான். கூட்டுறவு இயக்கம். இதன் மூலம் நாட்டில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திப் பெரும் வெற்றியை ஈட்டிட வேண்டும் என்பது எண்ணமாகும்.

இதற்கான அவசரச் சட்டம் வெகு விரைவில் வரவிருக்கிறது. இதற்கிடையில் தமிழ் நாடு எங்கும் இது போன்ற கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்களை ஆரம்பிக்க இருக்கிறோம், என்ற செய்தியை அறிவிக்க அடையாளமாகத்தான் இந்த விழா இன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர் மாதவன் குறிப்பிட்டதைப் போல், கூட்டுறவுத் துறைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் எப்போது பார்த்தாலும் கூட்டுறவு—கூட்டுறவு என்று உச்சரித்துக் கொண்டே இருப்பவர்கள்.

சட்ட சபையில் அவர் பேரவைத் தலைவராக முதன் முதலாக வந்து நுழைந்ததும் 'அகர முதல எழுத்தெல்லாம், ஆதி பகவன் முதற்றே உலகு' என்ற திருக்குறளைச் சொல்லி நிகழ்ச்சியினைத் தொடங்கினார். அப்படிச் சட்டசபை நிகழ்ச்சியை 'அகரம்' என்ற திருக்குறளைச் சொல்லித் தொடங்கிவைத்ததைப்போலவே, இன்றும் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத்தை 'அகரம்' என்ற இந்த ஊரில் தொடங்கி வைத்துத், தான் பேரவைத் தலைவராக இருந்ததை நினைவூட்டிக் கொண்டிருக்கிறார்.

சிறு விவசாயிகள் பயன் பெறத்தக்க வகையில், 26 பேர்கள் கிட்டத்தட்ட 43 ஏக்கர் நிலத்தில் பாசன வசதியைப் பெறத்தக்க வகையில், உள்ளது. இதைப்போலவே இந்தப் பகுதியில் அரிசன மக்கள் நூற்றுக்கணக்கானோர் பாசன வசதியைப் பெறுகிற அளவிற்குக் கூட்டுறவுத் துறை, முயற்சியைத் தொடங்கி இருக்கிறது.

அரசு நல்ல திட்டங்களைத் தீட்டி வருகிறது. இங்கும் தொடர்ந்து அடுத்தபடியாக அரிசன மக்கள் பயனடையப் போகிறார்கள் என்பதை நான் கேள்விப்பட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அரிசன மக்களுக்கு வழங்கி இருக்கிற பல்வேறு சலுகைகளில் இதுவும் ஒரு சலுகையாகும்.

இந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் இரண்டரை லட்சம் ஏக்கர் நிலம், பட்டா செய்து தரப்பட்டிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வீட்டு மனை, பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள காட்டு நிலங்கள் பற்றி நமது ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டது போல் 4 மாதங்களுக்கு முன் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். காடுகள் என்ற பெயரில் உள்ள இடங்கள் உண்மையிலேயே காடுகளாக இருந்தால் பரவாயில்லை. ஆனால், காடுகள் என்ற பெயரால் சில மேடுகள்; பயன் தரக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தத்தக்க வகையில் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அந்த வேலை இப்போது முடிவுறும் நிலையில் இருக்கிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் இந்த ஆட்சி, நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. நீர் தேவையா? நெல் பயிர் செய்யக் கடன் வேண்டுமா? ஆக இவை யாவும் செய்யத்தான் இன்று இந்தக் கூட்டுறவுத் துறை மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாடு முழுவதும் இன்று தொடங்குவது போல் திட்டங்கள் பல தொடங்கப்பட விருக்கின்றன. அதன் மூலம் சிறு சிறு விவசாயிகள் ஆயிரக்கணக்கானோர் பயன்பெற இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

இவ்வாறு கூறி, சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. வி. எம். அண்ணாமலையிடம்இந்தக்குழாய்க் கிணற்றுக்கான உரிமைச் சீட்டினை முதல்வர் வழங்கினார். விழாவினைத் தொடங்கி வைத்த ஆளுநர் அவர்கள் ''இந்தியத் துணைக்கண்டத்தில் 70 சதவீதம் மக்களுடைய நில உடைமை 5 ஏக்கருக்கும் குறைந்ததேயாகும். எனவே, சிறு நிலக்கிழார்கள் விசை ஏற்றம் அல்லது குழாய்க் கிணறு ஏற்படுத்துவது என்பது முடியாததாகும். அதற்குக் கூட்டுறவுதான் சரியான வழி. மக்களாட்சி நாட்டில், அதிலும் குறிப்பாக இந்தியாவில், கூட்டுறவு இன்றியமையாத வொன்றாகும். எனவே இத்துவக்க விழாவினைப் பல திட்டங்கள் தொடர்ந்துவரும் என நான் நம்புகிறேன்.

நான் சமீபத்தில் திருச்சிக்குச் செல்லும்போது பெரும்பகுதி நிலம் வெறும் தரிசாகக் கிடப்பதைக் கண்டேன். அரசாங்க நிலமானாலும், தனியார் நிலமானாலும், தரிசாக, காடாக எந்த விளைச்சலுமின்றி இருக்கும் நிலங்களை அரசாங்கம் கணக்கெடுத்து அதனைப் பயிரிடும் நிலமாக்க வேண்டும். அதில் 50 சதவீதம் நிலத்தினை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால் கூட அவர்கள் வேலை வாய்ப்புப் பெற வசதியளிக்கும்'' என்று குறிப்பிட்டார்.

கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் இத்திட்டத்தினை விளக்கிப் பேசினார்கள். அவர்கள் கூறும் போது :

''இந்த நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம், அரை ஏக்கர் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று உள்ள சிறு சிறு விவசாயிகளுக்கென்றே ஏற்பட்டது. முன்னோடியாக அகரத்தில் தொடங்கி யிருக்கிறோம். தமிழ் நாடு முழுவதும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தக் குழாய்க் கிணறுகள் தோண்ட முடிவு செய்துள்ளோம்;

முடியுமா? என்று கேட்டால் முடியும் என்று சொல்லுவேன்.

தற்போது நம்மிடம் குழாய்க் கிணறுகள் தோண்டும் பழைய இயந்திரங்கள் 50-ம், புதிய இயந்திரங்கள் 51-ம் உள்ளன. இவை மூலம் ஆண்டுக்குச் சுமார் 800 குழாய்க் கிணறுகள் தோண்ட முடியும். இன்னும் சில இயந்திரங்கள் வாங்க முடிவு செய்துள்ளோம். ஆக 200 இயந்திரங்கள் இருந்தால் தேவையான குழாய்க் கிணறுகளை வேகமாக அமைக்க முடியும்.

இதற்குத் தேவையான பணம் இருக்கிறதா?

பணம் நிலவள வங்கி மூலம் கொடுக்க முடியும். இந்த வங்கியிலிருந்து ஒரு கோடி ரூபாய் கடனாக நிலக்கிழார்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். பெரிய விவசாயிகளுக்குத்தான் இதுவரை கொடுத்திருக்கிறார்கள். அரை ஏக்கர், ஒரு ஏக்கர் உள்ள சிறிய விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்று நிலவள வங்கித் தலைவரிடம் கேட்டால், இல்லை என்று தலையசைத்து விட்டார். பணம் வாங்க ஆளில்லை என்கிறார்.

எனவே சிறு நிலக்கிழார்களை ஒன்று சேர்த்துக் கூட்டுறவு முறையில் விரைவாகச் செயல்படுத்திட முற்பட்டுள்ளோம்.



பேரறிஞர் அண்ணு அவர்கள் முன்பு சொன்ன திட்டமிது. அதை அணுவளவும் பிசகாமல் பின்பற்றுகிருேம். இந்த அரசு விரைந்து செயல்படும் திறன் உடைய அரசு என்பதை மற்ற மாநிலக்காரர்களும் சொல்லுகிருர்கள். நமது முதலமைச்சர் அவர்கள் பந்தயக் குதிரை மாதிரி ஓடுகிறவர்கள். அவர்களோடு சேர்ந்து நாமும் பின்னுல் ஓட வேண்டும்.

இதோ திட்டத்தைத் தந்து விட்டோம். இனி அதனை வெற்றியுடன், நடத்தித் தர வேண்டிய பொறுப்பு விவசாயிகளுடையது. நீங்கள் கூட்டுறவுக் கழகம் அமைத்து எங்களிடம் பணத்திற்கு வாருங்கள்; நாங்கள் உங்களுக்கு உதவுகிருேம்.

தரிசாகக் கிடப்பது விளை நிலமாக வேண்டும். ஒரு போகம் இரு போகமாகவும், இரு போகம் முப்போகமாகவும் மாற வேண்டும்; உற்பத்தி பெருக வேண்டும்; பசுமைப் புரட்சி ஓங்க வேண்டும்!''

இவ்வாறு அமைச்சர் ஆதித்தனுர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

உணவு அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகையில், 'இத் திட்டத்தின் நோக்கம், வருங்காலம் சிறுசிறு விவாயிகளுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அமைய வேண்டுமென்பது தான். இது விவசாயிகளுக்கு வரப்பிரசாதம் போன்ற ஒரு திட்டமாகும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த ஆண்டு உணவு உற்பத்தி அதிகமானதன் காரணமாக விவசாயிகளுக்குக் கொள் முதல் விலையில் ஒரு ரூபாய் அதிகம் தர முடிந்தது. இன்னும் உணவு உற்பத்தியைக் கூடுதலாகச் செய்வோமானுல் வெளி மாநிலங்களுக்கும் நமது உணவு தானியங்களை விற்க முடியும். அவ்வாறு விற்கும்போது வெளி மாநிலத்தாரிடம் கொஞ்சம் அதிக விலை கொடுங்கள் என்று சொல்லமுடியும்.

இந்த அரசிற்கு ஒரு பெரிய பொறுப்பு உள்ளது. ஒன்று விவசாயிகளுக்கு — அவர்களது உற்பத்திக்கு உரிய விலை தந்து பாதுகாக்க வேண்டியது. அடுத்தது உணவுப் பொருட்களை வாங்கும் மக்களும் அதிக விலை கொடுக்க நேரா வண்ணம் விலைவாசியைக் கட்டுப்படுத் வேண்டிய நிலை.'' என்று குறி பிட்டார்கள்.



நீர்ப்பாசனக் கூட்டுறவ கழகத்தினைத் தொழில் அமை சர் திரு. செ. மாதவன் அவர்க துவக்கி வைத்தார்கள். அவ கள் பேசும்போது ''சென்னை லிருந்து அகரம் வரை வ யெல்லாம் மகிழ்ச்சி பொங் நின்ற மக்கள் கூட்டத்தினை கண்டோம். அகரம் என் துவங்குகிற காரணத்தால் ஈர யிரம் ஆண்டுக்கு முன் தி வள்ளுவர் அகரத்தில் தொட கிப் புகழ்மிக்க திருக்குறளை தந்தது போல் இத்திட்டமு தமிழகமெங்கும் பரவும் என பதில் சந்தேகமில்லை.

நிலத்தை நம்பியிருப்பவ னுக்கு நிலம் கிடைக்கவேண்டும் தமிழகத்தில் அரசுக்குச் சொந் மான நிலம் 7 லட்சம் ஏக்க இருக்கிறது. இதுவரை இரண்டரை லட்சத்துக்குப் மேல் ஏழை விவசாயிகளுக்கு கொடுத்து விட்டோம். இன்னும் கைவசம் இருப்பது நாலரை லட்சம் ஏக்கர். ஆயினும் தமிழகத்தில் நிலத்தை நம்பி வாழ்வோர் 30 லட்சம் பேர். 30 லட்சம் எங்கே? நாலரை லட்சம் எங்கே?

அதிலும் பெரும்பாலான பகுதிகளில் பருவ மழையில்லாத காலத்தில் நிலங்களுக்கு எவ்வாறு நீர்ப் பாசனம் செய்யப் போகிருேம்? இதில் போட்ட பணத்தைத் திரும்பப் பெற முடியுமா? என்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இதுவரை நிலத்தை அடமானம் வைத்துத் தான் கடன் பெற முடியும். இந்த நிலை மாற அவசரச் சட்டம் கொண்டு வருகிருேம். (கூட்டுறவுச் சட்டம் பற்றிய இந்த அவசரச் சட்டத்தை 17-10-70 அன்று தமிழ் நாடு அரசு பிறப்பித்துள்ளது) அதன் மூலம் நிலத்தின் சொந்தக்காரர்கள் நிலத்தை அடமானம் வைக்காமலேயே கடன் பெற முடியும். விவசாயிகள் நலனுக்காக எத்தனை கிணறுகளுக்கு உதவி செய்ய இந்த அரசு தயாராக உள்ளது? புள்ளி விவரத்தோடு சொல்லுவதானுல் 1966-67-ல் இதற்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த

வெற்றிநடை போடும் கருணு

தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை-27 நெல்லின் சராசரி மகசூல் சென்ற ஆண்டில் ஏக்கருக்கு 1·3 டன் அளவில்தான் இருந்தது. இந்த ஆண்டில் ஆடுதுறை-27 நெல்லை விட அதிக மகசூல் அளிக்கும் ' கருணு ' நெல்லை, தஞ்சை மாவட்டத்தில் சுமார் 15,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடத் திட்டமிடப் பட்டது. தஞ்சை மாவட்டத்தில் ' கருணு ' நெல்லின் சராசரி மகசூலை ஏக்கருக்கு 1·75 டன் அளவிற்கு மேல் பெற முயற்சி செய்யப் பட்டது.

சுமார் 20,000 ஏக்கர் பரப்பில் ' கருணு' பயிரிடப்பட்டுள்ளதாகச் செய்தி கிடைத்துள்ளது. மாயவரம் வேளாண்மைப் பகுதியில் ' கருணு ' நெல் சராசரியாக ஏக்கருக்கு 2 முதல் 2·4 டன் மகசூல் கொடுத்துள்ளது. (மாடு கட்டிப் பிணை அடித்தபின் கிடைக்கும் நெல் இந்தக் கணக்கில் சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.)

தஞ்சாவூருக்கு அருகில், ஒரு தேசிய செயல் விளக்கத் தளையில் ' கருணு ' பயிரிடப்பட்டிருந்தது. அத் தளையில் ' கருணு ' நெல்லிற்குப் பரிந்துரைக்கப் பட்ட எல்லா செய்நேர்த்தி முறைகளும் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அந்தத் தேசிய செயல் விளக்கத் தளையில் ஏக்கருக்கு 3·5 டன்னுக்கு மேலும் மகசூல் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

இதையெல்லாம் நோக்கும் போது, ' கருணு ' தமிழ்நாடெங்கும் ஒரு புதிய வரலாற்றைப் படைக்கப் போகிறது என்பது புலனுகிறது.

நிலமில்லா ஏழைகளுக்கு முதல்வர் நிலப்பட்டா வழங்குகிருர்.

ஆண்டு 18 கோடி ரூபாய் அளவில் கொடுக்க இந்த அரசு தயாராக உள்ளது.

முன்பு அரிசி கிடைக்காத நிலையிருந்தது. இன்று உணவு அமைச்சரைப் பார்த்து ''உணவு உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம். அதனை விற்றுத் தாருங்கள்'' என்று விவசாயிகள் கேட்கிற அளவிற்கு உணவுத் தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது.

இத்திட்டம் தண்ணீர்ப் பஞ்சமுள்ள மாவட்டங்களுக்கு மிகவும் தேவை.

ஒவ்வொரு ஏரியும் கூட்டுறவுச் சங்கத்தின் சொத்தாகவேண்டும். ஒவ்வொரு விவசாயியும் கூட்டுறவுக் கழக உறுப்பினராக வேண்டும்'' இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

இந்த விழாவினைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு நிலப்பட்டாவினை முதல்வர் வழங்கினுர். நிலப்பட்டா பெற்ருேர், 2,062 பேர்; வீட்டுமனைப் பட்டா பெற்ருேர் 453 பேர்.

இந்தக் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத் தலைவர் திரு டி. ராகவன் ஒரு பட்டதாரி. சுமார் 20 ஆண்டுகளாக விவசாயத்தில் ஈடுபட்டுவருபவர். இத்திட்டம் பற்றி அவரைப் பேட்டி கண்டதில் அவர் கூறியதாவது: ''அமைச்சர் ஆதித்தனுர் அவர்கள் இத்திட்டத்தை எனக்குக் கூறினுர்கள். ஏன் உங்களூரில் தொடங்கக் கூடாது என்று கேட்டார்கள். நானும் ஒப்புக்கொண்டேன். இது வரை நாங்கள் எங்கள் பயிர் விளைச்சலுக்கு வானத்தைப் பார்த்து நின்ருேம். சில சமயங்களில் பெரிய விவசாயிகளிடம் வாடகைக்கு நீர்பெற்றுப் பாசனம் செய்தோம். மழை பெய்யாவிட்டால் எங்கள் பயிர் தீய்ந்து விடும். இனி அந்தக் கவலையில்லை. மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் பாசனத்திற்கு நீர் உள்ளது. சிறு விவசாயிகளுக்கு வாழ்வளிக்கும் இத்திட்டத்தைக் கொண்டுவந்த தமிழ்நாடு அரசை எவ்வளவு பாராட்டினுலும் தகும்'' என்று வாயார உளமார வாழ்த்தினுர்.

'' மின்சாரம் வழங்குவதிலும், நவீன முறையைப் பரப்புவதிலும், கிராமங்களை முன்னேற்றமடையச் செய்வதிலும் தமிழ் நாடு முன்னணியில் நிற்கிறது. நன்மை வசதியுடையவர்களுக்கே போய்ச் சேருகிறது. ஆனுல் தமிழ்நாட்டில் புதிதாகத் தொடங்கப்படும் இத்திட்டம் எல்லாத் தரப்பு மக்களுக்கும் நல்வாய்ப்புகளை அளித்துத் துணை செய்வதாக உள்ளது.''—இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் இந்த விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழக அரசு கொண்டுவந்துள்ள இத் திட்டம்தான் இவ்வகையில் முதல் திட்டமாகும். பிற மாநிலங்களுக்கு முன்னேடியாக உள்ள இத்திட்டம் வளரட்டும்!

கதர்-கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் – கதர்ப்பட்டு
சோப்பு – தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம்-வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும் பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

வெளியீடு:

கதர் கிராமத் தொழில் துறை

உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

மாலை 6 மணி இருக்கும். அண்ணா சாலை, களை கட்டிக்கொண்டிருந்தது. பகல் ஆட்டம் விட்டு விட்டார்கள். சினிமா பார்த்த கூட்டம்; சினிமாவுக்குப் போகும் கூட்டம்; அலுவலகம் விட்டுச் செல்வோர்; அங்காடிகளை நோக்கிப் படை எடுப்போர்; பொழுது போக்குவதற்கென்றே வருவோர்; பல்வேறு மக்கள்; பல்வேறு உணர்ச்சிக் குவியல்கள்; அது ஒரு சிறு உலகம். புது நாகரிகம் என்பதன் பேரால் முகிழ்த்தெழும் பல்வேறு ஆசாபாச உணர்வுகள். அத்தனையும் பிய்த்து உதறிக்கொண்டு பிளாட்பாரங்களிலே—பேருந்துகள் நிற்கின்றன இடங்களிலே—கடைகளிலே—எங்கும் பொங்கி வழிந்துகொண்டிருந்த மாலை வேளை. மனித உணர்வுகளின் அடித் தளத்தைக் கிண்டிக் கிளறிக் கிறங்க வைக்கின்ற பெரிய பெரிய சினிமா போஸ்டர்கள். சிறிய சிறிய விஷயங்கள், பெரிய பெரிய படங்களில்! இன்றைய நகர வாழ்க்கையின் அடையாள முத்திரைகள்! மனிதனின் ஆசாபாசங்களுக்கு, உணர்வுகளின் நெளிவு சுளிவுகளுக்கு நல்ல வேட்டை! டீக்காக டிரஸ் செய்துகொண்டு நாலைந்து வாலிபர்கள்! எதிர்காலச் சிற்பிகள்—ஆபாசத்தின் எல்லையையே தொட்டுப் பார்க்கும் திரைப் படப்போஸ்டர் ஒன்றை விழுங்கி விடுவதுபோல் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். படிப்பதில், நல்வாழ்வு வாழ்வதில், இல்லாத அக்கறை, துடிப்பு! உழைக்கும் கரங்கள், படிக்கும் சமுதாயம்—அக்குவேருக அலசிக்கொண்டிருந்தது அந்தப் போஸ்டரை! இன்றைய இளைஞர் உலகின் இதயத் துடிப்பே அத்தகைய போஸ்டர்களில்தான் அடங்கியுள்ளதோ என்ற பிரமையைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது!

"என்ன பார்க்கிறீர்கள்?"

யாரோ என் முதுகைத் தட்டியது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தேன். நண்பர் ஆறுமுகம் நின்றுகொண்டிருந்தார். இந்த ஆறுமுகம் ஒரு சிறு தொழிலதிபர். பலநாடுகள் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு வந்தவர். நல்ல சிந்தனையாளர்; கலகலவென்று பேசுவார்; கருத்துச் செறிவு இருக்கும் அவரது பேச்சில்!

"ஒன்றுமில்லை; வணக்கம்! இந்தப் போஸ்டரைப் போய் இப்படி விழுந்தடித்துக் கொண்டு பார்க்கிறார்களே? அதுவும் போதாதென்று விமர்சனம் வேறு; பார்த்தீர்களா? இளைஞர்கள் இப்படிச் சுவர் மருங்கிலும், பிளாட்பாரங்களிலும், பஸ் ஸ்டாப்புகளிலும் நின்றுகொண்டு, நேரத்தைக் கெடுத்துக்கொண்டு, மனத்தைக் கெடுத்துக்கொண்டு, வெட்டி அரட்டை அடிக்கிற நிலை—இந்த நாட்டைப் பிடித்த சாபக்கேடோ என்னமோ தெரியவில்லை!"

"உங்கள் கவலை எனக்குப் புரிகிறது! என்ன செய்யச் சொல்கிறீர்கள்? தனி மனிதர் ஒவ்வொருவரும் இந்த மனச் சீரழிவைப் பற்றி உணர வேண்டும். நினைக்க வேண்டும். காலம் பொன் போன்றது. கடமை கண் போன்றது. இந்த மணி வாசகம் சிலருக்கு மட்டும் இருந்து பயன் இல்லை. ஒவ்வொருவர் உள்ளத்திலும் பசுமரத்தாணிபோல் பதிந்து வாழ்வுக்கு வழி காட்ட வேண்டும். இப்படிப் படித்த இளைஞர்கள் வெட்டி நேரம் போக்குவது—எதிலும் ஒரு பிடிப்பில்லாமல் குதர்க்கவாதம் பேசிக்கொண்டு—குட்டை குழப்புகிற அவல நிலை—நம் நாட்டில் இன்று ஒரு பெரிய



பிரச்னையாகவே வளர்ந்துவிட்டிருக்கிறது...... — அரசு எவ்வளவு நல்லகாரியம் செய்தும் என்ன பயன்? கோடி கோடியாக நாட்டின் நல்வாழ்வுக்காகச் செலவு செய்தும் என்ன பயன்? மக்களிடையே கடமை உணர்வு மங்கி வருகிறதே! 'நமக்கென்ன' என்ற சுயநல மனப்பாங்கு— பிடிப்பில்லாத ஒரு மெத்தனம்—சமுதாயத்தின் ஆணி வேரையே ஆட்டி வைக்கிறது. அதோ அந்த உத்தமர்—மௌண்ட் ரோடின் மையத்தில் சிலையாக நிற்கிறரே-இந்த நாட்டின் நல்வாழ்வுக்காகத் தன் அறிவை, தன் உழைப்பை, தன் வாழ்நாளை, சகலத்தையும் பணயமாக வைத்து, இன்று இலக்கியமாகவே ஆகிவிட்ட இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற தலைவர் என்ன சொன்னுர் தெரியுமா?'' —நண்பர் ஆறுமுகத்தின் பேச்சில் சூடு பிடித்து விட்டது.

நான் புரிந்துகொண்டேன்.

நண்பர் சற்று நிறுத்திவிட்டு, மறுபடியும் ஆரம்பித்தார்.

'' ஜப்பான் நாட்டிற்கு நான் அண்மையில் சென்றிருந்தேன். சென்ற போரில் ஜப்பான் நாடு தரை மட்டமாக்கப்பட்டது தெரியுமல்லவா? போரின் கோரக்கரங்கள் அந்த நாட்டின் குரல்வளையையே பிடித்து நெருக்கி விட்டன...... நகரங்கள் அழிக்கப்பட்டன. எல்லாம் அழிந்தன. அழிக்கப்பட்டன. இத்தனை அழிவுகளுக்கிடையேயும் ஒன்று மட்டும் அசையாமல், ஆடாமல், அப்படியே உறுதியாக நின்றது. ஜப்பானிய மக்களின் உள்ள உறுதி மட்டும் அசையாமல் நிலைத்து நின்றது. அவர்கள் மீண்டும் உழைத்தார்கள். கடுமையாக உழைத்தார்கள். இந்தச் சில பல ஆண்டுகளில் தரை மட்டமாகிவிட்ட தங்கள் நாட்டை மீண்டும் சொர்க்கபுரியாக மாற்றியமைத்து விட்டார்கள். இன்று தொழில் வளர்ச்சியிலே ஜப்பான் உலக நாடுகளிடையே தலை நிமிர்ந்து நிற்கிறது. பொருளாதார நிபுணர்களுக்கு இன்று ஒரு புதிராகவே விளங்குகிறது ஜப்பான். உலகிலே கப்பல் கட்டும் துறையிலும், வானொலிப் பெட்டிகள் தயாரிப்புத் துறையிலும் முதன்மையிடம் பெற்று விளங்குகிறது. அமெரிக்காவிற்கு அடுத்தபடி கார்கள் தயாரிக்கும் நாடு ஜப்பான்தான். அதிகமான துணிகள் ஏற்றுமதி செய்யும் நாடு ஜப்பான். இரும்பு உருக்கு உற்பத்தியில் ஆசியாவில் முதல் இடம் வகிக்கும் நாடு ஜப்பான். சிறு தொழில் வளர்ச்சியில் ஜப்பான் நாடு தான் முதலிடம் வகிக்கிறது. வீட்டுக்கு ஒரு தொழிற்சாலை அமைத்து விட்டார்கள் அங்கே. நாம் நின்று பேசிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் ஜப்பான் நாட்டில் ஒரு டிரான்சிஸ்டர் செய்து நம்முன் கொண்டு வந்து வைத்து விடுவார்கள். இதில் ஒரு விசித்திரம் என்னவென்ருல் இவை எதற்கும் ஜப்பான் நாட்டில் மூலப்பொருள்களே கிடையாது. இரும்புக் கனி, நிலக்கரி, பஞ்சு, அலுமினியக் கனி அனைத்தையும் அந்த நாடு வெளி நாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்கிறது. மூலப்பொருள்களை இறக்குமதி செய்து, விற்பனைப் பொருள்களை உற்பத்தி செய்து, உலகில் முதன்மை பெற்று ஒரு நாடு விளங்குகிறது என்ருல், அதற்கு ஒரே ஒரு விடை தான் உண்டு. அதுதான் அந்த நாட்டு மக்களின் உழைப்பு, உழைப்பு. இந்த நாட்டைப்போல் வேலை வெட்டி இன்றி மூலைக்கு மூலை மக்கள் கூடி நின்று அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் நிலைமையை அந்த நாட்டில் காணவே முடியாது. அவர்கள் உழைக்கிருர்கள்; கடுமையாக உழைக்கிருர்கள். '' செய்யும் தொழிலே தெய்வம் '' என்ற தாரக மந்திரத்தை நெஞ்சிலிறுத்திக் கடுமையாக உழைக்கிருர்கள். வீட்டுக்கு ஒரு தொழிற்சாலை ....இது தான் அவர்களுடைய வெற்றியின் இரகசியம்.'' பேரறிஞர் அண்ணு இதைத்தான் சொன்னுர். நம் தமிழகத்திலும் வீட்டுக்கு ஒரு தொழிற்சாலை உண்டு பண்ண வேண்டும் என்று அவர் கனவு கண்டார். செந்தமிழ் நாட்டில் என்ன இல்லை? மூலப்பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. மக்கள் சக்தி அதிகமாக இருக்கிறது. அறிவுத் திறனில் நாம் யாருக்கும் குறைந்தவர்களில்லை. பார்க்கப்போனுல் நம் இந்திய நாட்டைவிட எட்டு மடங்கு சிறியது ஜப்பான். நம்மிடமிருக்கும் குறையெல்லாம், நம்மிடையே மனவளம் இல்லை; ஆர்வம் இல்லை; வீண் பொழுது போக்கி, இன்பம் காண்பதிலேதான் நிறைவு அடைகிருேம்.

"நம் அரசு, சிறு தொழில் வளர்ச்சியில் தீவிரக் கவனம் செலுத்துகிறது. சிறு தொழில்கள் ஆரம்பிக்க, வேண்டிய உதவிகளைச் செய்கிறது. பண உதவி செய்கிறது; தொழில் நுட்ப ஆலோசனை கூறுகிறது; மற்ற எல்லா உதவிகளையும் தருகிறது. மக்கள் தான் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். படித்த இளைஞர்கள் சிறு தொழிலில் பெருவாரியாக ஈடுபட வேண்டும். படிப்பது வேலைக்குப் போகத்தான் என்ற தவருன எண்ணம் போக்கப்படல் வேண்டும். வாழ்க்கையை அனுபவிப்பது என்பது வேறு; வாழ்க்கையை வீணடிப்பது என்பது வேறு இல்லையா ?''

'' சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு நம் தமிழக அரசு என்ன செய்கிறது ? நான் கொஞ்சம் பணம் வைத்திருக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஏதாவது தொழில் செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் எனக்கு இருக்கிறது. மேற்கொண்டு அதைச் செயல்படுத்த நான் என்ன செய்ய வேண்டும் ? யாரை அணுக வேண்டும் என்று தெரியவில்லை. விளக்கமாகச் சொன்னுல் பயனுள்ளதாக இருக்குமல்லவா ?''

'' அருமையான கேள்வி கேட்டீர்கள்; சொல்கிறேன். சிறு தொழில் துவங்க அரசு உதவி செய்கிறது என்று சொன்னேன். முதலில் சிறு தொழில் என்ருல என்ன என்று சொல்கிறேன்.

ஒரு தொழிற்சாலையில் எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்தாலும், அதில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள், கருவிச் சாதனங்கள் (Machinery and equipment) இவைகளில், மொத்த மூலதன முதலீடு ரூ. 7.5 லட்சத்திற்கு மேற்படாதிருந்தால் அதனை ஒரு சிறு தொழில் எனலாம். நிலத்தின் மதிப்பு, கட்டடத்தின் மதிப்பு, மற்றும் தொழிலை நடத்த வேண்டிய நடைமுறை மூலதனம் இவையெல்லாம் முதலீட்டை நிர்ணயிக்கும்போது கணக்கில் சேர்க்கப்படுவதில்லை. இயந்திர சாதனங்களில் முதலீட்டில் உச்ச அளவான பாகங்களையும் துணைக் கருவிகளையும் தயாரித்து அளிக்கும் துணைத் தொழில்கள் (Ancillary Industries) எனப்படும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் ரூ. 10 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது: அதாவது இத்தகைய தொழில் நிறுவனங்களில் இயந்திர சாதனங்களின் மீதான மொத்த மூலதன முதலீடு ரூபாய் 10 லட்சத்திற்கு மேற்படாமலிருந்தால். அவையும் சிறுதொழில்களாகவே கொள்ளப்படும்

கைத்தறி, விசைத்தறி, கிராமக் கைத்தொழில்கள், கைத்திறத் தொழில் (Handicrafts), கயிறு, பட்டு போன்ற தனிப்பட்ட அங்கங்களின் நிர்வாகத்திற்குட்பட்ட தொழில்கள் சிறுதொழில் திட்டத்தில் சேர்க்கப்படுவதில்லை.

மத்திய அரசும், மாநில அரசும் சிறு தொழில்களின் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் பல்வேறு உதவித் திட்டங்களைத் தொடங்கி, நடத்தி வருகின்றன.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர்; ஈரோடு, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் இதன் நிலையங்கள் (Extension Centres) உள்ளன. இவை அளித்து வரும் உதவிகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

தொழில் நுட்ப ஆலோசனை, பொது (தொழில் நுட்ப) வசதிகள் கிடைப்பதற்கான உதவி, தொழிற்பயிற்சி வசதிகள், பரிசோதனை வசதிகள், தயாரிக்கும் பொருளை விற்பதில் உதவி ஆகியவைகள்.

லாபகரமான சிறு தொழிலைத் தேர்ந்தெடுத்தல், பொருத்தமான இயந்திர சாதனங்களை நிறுவுதல், உற்பத்தி நுணுக்கங்கள், மூலப்பொருள்களைப் பக்குவப்படுத்துதல், தயாரிக்கப்படுகின்ற பொருள்கள் நல்ல தரமுள்ளவையாக உள்ளனவா எனப் பரிசீலிக்க, அங்கீகரிக்கப்பட்ட தரப் பரிசோதனை முறைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு இந்நிலையத்திலிருந்து ஆலோசனை பெறலாம். சிறு தொழிலதிபர்களுக்குத் தேவையான திட்ட அறிக்கைகள் (Project Reports), தொழில் நுட்ப விவரங்களடங்கிய அறிக்கைகள் (Schemes and Technical Bulletins) இவைகளையும் இந்நிலையம் . தயாரித்து வழங்குகிறது.

சாத்தியமானால், சிறு அளவில் உற்பத்தி முறைகளையும் செய்து காட்டுகிறது.



இயந்திரங்கள், பாகங்கள் இவற்றின் அமைப்புப் பற்றிய வரைவுகள் (Designs and Drawings) வழங்குதல், மற்றும் அச்சுகள் (Dies) கருவிகள், இயந்திர அமைப்புக்கான உபகரணங்கள் (Jigs and Fixtures) உள் உறுப்புகள் முதலியவற்றைத் தயாரிப்பதற்குரிய பட்டறை வசதிகளைச் செய்து கொடுப்பது இந்த உதவியில் அடங்கும். தேவைப்படும் பொழுது முடிந்த அளவுக்கு மூல முன் மாதிரிகளையும் (Proto—types) தயாரித்துக் கொடுக்கிறது. இந்த வசதிகளைச் சிறு தொழிலதிபர்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தின் பேரில் செய்து தருகிறது.

தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனை (Productivity) அதிகரிப்பதற்கான இந்நிலையத்திலும் மற்றும் இதன் கிளை நிலையங்களிலும் உள்ள பட்டறைகளில், அடிப்படைத் தொழில்களில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. மேலும், மின் முலாம் பூசுதல், தோல் பதனிடுதல், பாத ஆணிகள் செய்தல், ஒளி விளக்குகள் (Neon and glow signs) மற்றும் கண்ணாடியாலான ஆய்வுக்கூட உபகரணங்கள் (Scientific glass Apparatus) செய்வது போன்ற சில தொழில்களில் தனிப்பட்ட முறையில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இவையன்றி, சிறு தொழிலதிபர்களின் வசதிக்காகத் தொழில் வியாபாரம் முதலியவைகளை நிர்வகிப்பது பற்றியும் பயிற்சியளிக்கப்படுகிறது.

இந்நிலையத்தைச் சார்ந்த பரிசோதனைச் சாலைகளில் குறைந்த கட்டணத்தில் பரிசோதனைகள் செய்து கொள்ள வசதியளிக்கப்பகிறது.

சிறு தொழிலதிபர், குறிப்பிட்ட ஒரு பொருளுக்கு மார்க்கெட்டில் உள்ள விற்பனை வாய்ப்புகளைப் பற்றித் தகவல் கோரினால், இந்நிலையம் தகவல்களைச் சேகரித்து வழங்குகிறது. ஒரு சிறு தொழிலதிபர், குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில் தனது பொருள் விற்பனையை அதிகரிக்க விரும்பி, அதற்காக அப் பொருள் விற்பனைக்கு அப்பகுதியில் உள்ள வாய்ப்பினைப் பற்றி அறிய விரும்பி இந்நிலையத்தை அணுகினால், இந்நிலையம் ஆய்வு நடத்தி விற்பனைக்குள்ள வாய்ப்பினைத் தெரிவிக்கிறது. இந்த ஆய்வினை நடத்துவதற்கு ஒரு பொருளுக்கு ரூபாய் 250 எனக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

மாநிலத்தின் சிறு தொழில் அபிவிருத்தியோடு நேரடியான தொடர்பு கொண்டிருப்பது மாநிலத் தொழில் வாணிகத் துறையேயாகும். சிறு தொழில்களைப் பொறுத்தவரை இதன் முக்கிய பணிகளாவன :

1. தொழிற்பேட்டைகளில், தொழிற்சாலைக் கட்டடங்களும், திருத்திய மனைகளும் ஒதுக்குதல்.

2. பொது (தொழில் நுட்ப) வசதிகள் அமைத்துக் கொடுப்பது.

3. மிகக் குறைந்த அளவில் கிடைக்கும் மூலப் பொருள்களைச் சிறு தொழில்களுக்குப் பகிர்ந்து அளிப்பது.

4. மாநில அரசுத் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ்க், கடனுதவி வழங்குவது.

மாநில அரசுத் தொழிலுதவிச் சட்டத்தின் கீழ், தகுதி வாய்ந்த சிறு தொழில்களுக்குக் கீழே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காகக் கடனுதவி அளிக்கப்படுகிறது.

நிலம் வாங்குதல், தொழிற்சாலைக் கட்டடம் கட்டுதல், இயந்திரங்கள், தளவாடங்கள், கருவிகள் முதலியன வாங்குதல், ஏற்கனவே உள்ள கடனைத் தீர்ப்பது போன்றவற்றிற்கும் மற்றும் நடைமுறை மூலதனத்திற்கும் கடன் வழங்கப்படுகிறது. தவிர்க்க முடியாத நிலைகளில் மட்டுமே, நடைமுறை மூலதனத்திற்கான கடன் வழங்கப்படுகிறது. அதுவும் புதிய தொழில்களைத்

துவக்குபவர்களில், தகுதி வாய்ந்தவர்களுக்கு மட்டும் தான் இந்த உதவி கிடைக்கும்.

தொழில் நிறுவனத்தின் சொத்துக்கள் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியை மட்டுமோ கடன் வழங்கும் அதிகாரிகள் தேவையெனக் கருதும் அளவிற்கு அடமானமாக ஏற்றுக் கொண்டு அதன் பேரில் கடன் கொடுக்கிறார்கள். தொழில் நிறுவனத்திற்குச் சொந்தமாயிருக்கும் அசையாச் சொத்துக்களாகிய நிலம், கட்டடம், இயந்திரங்கள், தளவாடங்கள் இவைகளையும் கடனுக்கு ஈடாகக்கொடுக்கலாம். தொழில் நிறுவனத்தின் சொத்துக்கள், மற்றும் துணை ஈடாக வைக்கப்படுகின்ற இதர சொத்துக்கள் இவற்றின் நிகர மதிப்பில் 75 சத வீதம் வரை கடன் வழங்கப்படும்.

இச்சட்டத்தின்கீழ், ஒரு தொழில் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படக்கூடிய கடன் தொகையின் உச்ச அளவு ரூபாய் 2 லட்சமாகும்.

ரூபாய் 50,000 வரையிலான கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு வட்டி 6·75 சத வீதமாகும். ரூபாய் 50,000க்கும் மேற்பட்டு ரூபாய் 2 லட்சம் வரையிலான தொகைக்குத் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள வட்டி ஆண்டொன்றுக்கு 7·75 சதவீதமாகும்.

இச்சட்டத்தின்கீழ்ப் பெறும் கடன் தொகையைக் கடன் வழங்கும் அதிகாரி நிர்ணயிக்கும் காலவரையறைக்குள், வருடாந்திர சம தவணைகளில் திருப்பிச் செலுத்துதல் வேண்டும். ஆனால் கடன் தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்தும் காலம் 10 ஆண்டுகளுக்கும் மேற்படலாகாது.

பொதுவாக இந்திய ஸ்டேட் பாங்க், சிறு தொழில்களின் நடைமுறை மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கெனக் குறுகிய காலக் கடன் (Short term loan) வசதியளிக்கிறது. இந்தக் குறுகிய காலக் கடன் தொகைகளை ஓராண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்திவிட வேண்டும். இதனைப் புதுப்பித்தும் கொள்ளலாம். நிலையாய் அமைந்த சிறு தொழில்களுக்கு அவைகளது தயாரிப்பைப் பெருக்கவும், நவீன இயந்திரங்களை நிறுவி, தொழிலைச் சீரமைக்கவும் ஸ்டேட் பாங்க் இடைக்காலக் கடன் வழங்குகிறது. இத்துடன் தொகை 10 வருட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

கிராமத் தொழில்கள், தனியார் சிறு தொழில் நிறுவனங்கள், கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் இவைகளுக்கு 1922-ம் ஆண்டின் தமிழக அரசாங்கத் தொழில் உதவிச் சட்டத்தின்கீழ்அவர்களது தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குதல், நில உரிமை பெறல், தொழிற்கூடக் கட்டடங்கள் உருவாக்குவது போன்ற செயல்களுக்கும் மற்றும் நடைமுறை மூலதனச் செலவுக்கும் அரசாங்கம் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வசதியளித்துக் கடன் வழங்குகிறது.

அரசு உதவியைப் பெறுவதற்கு யார் யாருக்கு மனுச் செய்துகொள்ள வேண்டும் என்ற விவரங்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

விண்ணப்பித்துக்கொள்ள வேண்டிய அலுவலர்.	வழங்கப் படும் கடன் தொகையின் உச்ச வரம்பு ரூபாய்.
(1) குடிசைத் தொழில் அலுவலர், தஞ்சாவூர், உதக மண்டலம், மதுரை, திருநெல்வேலி.	2,000 வரை
(2) சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி தொழில் வணிக இயக்குநர்கள். (வேலூர், சென்னை-2, கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சிவகங்கை, நாகர்கோவில், செங்கல்பட்டு மாவட்ட உதவி தொழில் வணிக இயக்குநர் அலுவலகம், சென்னை-2ல் உள்ளது)	500 வரை
(3) வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மண்டலத் துணைத் தொழில் வணிக இயக்குநர்கள்.	7,500 வரை
(4) இயக்குநர், தொழில் வணிகத் துறை, சேப்பாக்கம், சென்னை-5.	7,500 முதல் 2 லட்சம் வரை

வழங்கப்பெற்ற கடன் தொகை ஐந்து முதல் பத்து வருட சமமான தவணைகளில் வசூலிக்கப்படும். கடன் பெற விரும்பும் தொழில் நிறுவனங்கள், அதற்கென நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்ப நமூனக்களைச் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சிறு தொழில் வளர்ச்சியில் அரசு மிகுந்த அக்கறையுடன் பணியாற்றி வருகிறது. படித்த இளைஞர்கள், குறிப்பாகத், தொழிற்படிப்புப் படித்தவர்கள், இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தனியாகச் செய்ய முடியவில்லையென்றால், நாலைந்து பேர் சேர்ந்து இத்துறையில் ஈடுபடலாம்.

'' உழைப்புக்கு மதிப்பளிக்கும் நாடு தான் உலகில் முன்னேற்ற முடியும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். அறிவுத் திறன் இருக்கிறது. ஆர்வம் தான் வேண்டும். இந்த ஆர்வத்தீயை நல்ல நல்ல திட்டங்கள் மூலம் நம் ' தமிழக அரசு ' அணையாத ஒளியாக மாற்றியமைக்க அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டு வருகிறது. மக்கள் உள்ளத் தூய்மையோடு உழைத்தால்—வெட்டிப் பேச்சுக்கோ, திண்ணை வேதாந்தத்திற்கோ, இடமில்லாமல் விரட்டி விடலாம். அணுகுண்டால் அழிந்து கிடந்த ஜப்பான் நாட்டைத் தொழில் மயமாக மாற்றியமைத்தது அந்த நாட்டு மக்களின் உழைப்புச் சக்திதானே ! '' என்று தமது நீண்ட விளக்கவுரையை முடித்தார் நண்பர் ஆறுமுகம்.

'' உங்கள் விளக்கத்திற்கு நன்றி '', என்று கூறிவிட்டு நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டேன்.

651



பல்லைப் பாதுகாப்போம்

முத்துப் பல், மோகனப் புன்னகை என்றெல்லாம் பாராட்டப்படுகின்ற பல்லின் நல் வனப்பு, முகத்திற்கு அழகு தருவது மட்டுமல்ல; உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்காமல் இருக்கவும் முக்கியமான ஓர் உறுப்பாகும்.

பல்லில் சொத்தை விழுந்தால் அழுக்குகள் சேர்ந்தால், அதன் மூலம் வயிற்றிலும் உடலின் பிற பாகங்களிலும் பல கோளாறுகள் ஏற்பட ஏதுவாகின்றது.

பல் சொத்தை ஆவதற்குப் பல காரணங்கள் உண்டு.

பொதுவாக, அதிகமான இனிப்புகள் சாப்பிடுவதும் ஒரு காரணம். சாக்லேட், ஐஸ் க்ரீம், மற்றும் மாவுப் பதார்த்தம், சர்க்கரை சேர்ந்த பலகாரங்கள்ஆகிய வற்றைச் சாப்பிட்டு விட்டு வாயினை நன்கு கொப்பளிக்கா விட்டால், அவை ஒட்டிக்கொள்வதுண்டு. அதே போல் இரவில் சர்க்கரை கலந்த பாலை அருந்திவிட்டு, வாயைத் துலக்காமல் தூங்குவது நம்மில் பலருடைய பழக்கம். இது தீமையே!

இவ்வாறு வாயைச் சுத்தமாக வைக்காதிருந்தால் அந்த இனிப்புப் பண்டங்கள் வாயில் ஒட்டியிருந்து புழுக்களை உற்பத்தி செய்கின்றன. நாளடைவில் அந்த நுண்ணிய புழுக்கள் பல்லைக் குடைந்து சொத்தைப் பல்லை ஏற்படுத்துகின்றன; இந்த நோய் சிலருக்குப் பாரம்பரியமாக வருவதும் உண்டு. பற்களின் அமைப்பைப் பொறுத்தும், பல் வளர்ச்சியிலுள்ள குறைபாடுகளைப் பொறுத்தும் ஏற்படுவதுண்டு. நோய்வாய்ப் படும் போது பற்களைச் சுத்தமாகப் பேணிக் காக்காததாலும் சொத்தைப் பல் ஏற்பட நேரிடும்.

ஆரம்ப காலத்தில் சொத்தைப் பல் ஏற்படவிருக்கும் பாகத்தில் மங்கல் நிறம் அல்லது கறுப்பு நிறப் புள்ளிகள் தோன்றும். சூடான அல்லது மிகக் குளிர்ந்த பானங்கள் அருந்தும் போது அந்தப் பல்லில் பட்டதும் கூச்சம் கொடுக்கும்.

நாளடைவில் அதில் சிறிது பள்ளம் ஏற்பட்டுச் சாப்பிடும் ஆகாரம் அதில் போய்த் தங்கிக் கொள்ளும். அது வாய் நாற்றத்தையும், குடைச்சலையும், பல் வலியையும் தரும்.

முதலிலேயே கவனிக்காமல் வளர விட்டுவிட்டால், நான்கைந்து ஆண்டுகளானதும் இந்தப் பற்கள் மிகுந்த தொல்லை தரும். தாங்க முடியாத வலியினை ஏற்படுத்தும். புழுக்கள் ரத்தத்தில் ஊடுருவிச் சென்று பிற பாகங்களையும் பாதிக்கும். சில சமயங்களில் ஈறும் கன்னமும் வீங்கி உணவு உட்கொள்ள முடியாத நிலையினை உண்டாக்கும்.

நாம் உண்ணுகின்ற உணவினை நோய் தாக்காமலிருக்க வேண்டியது அவசியமாகையால் பல் நோய்களை உடனடியாகக் கவனிக்க வேண்டும்!


சொத்தைப் பல்லை அடைக்கும் பகுதி.

பல் பிடுங்குமுன் மரத்துப்போவதற்காக ஊசி போடப்படுகிறது.

பல் நோய்களைக் கவனிப்பதற்கென்று சென்னையில் தனியாக அரசின் மருத்துவ மனை, கோட்டை இரயில் நிலையத்திற்கு எதிர்ப்புறத்தில் உள்ளது.

புதிய கட்டடத்தில் இயங்கும் இந்த மருத்துவ மனையில் மற்றொரு புதுமையும் உண்டு.

பல் நோயாளிகள் வந்ததும், அவர்களை வரவேற்று, உரிய இடத்திற்கு அழைத்துச் சென்று உதவிட அங்கேயே ஒரு தலைமை மருத்துவத் துணையாளர் (Head Nurse) இருக்கிறார். அதோடு, பல் மருத்துவ மனையின் கனிவான, அதே சமயம் கண்டிப்பான கண்காணிப்பாளர் டாக்டர் இராமச்சந்திரன் அவ்வப்போது நடவடிக்கைகளைக் கண்காணிக்கிறார். இதன் காரணமாக, அங்கு நோயாளிகள் பதிவு செய்யப்படுதல், சோதனைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுதல் ஆகியவை தங்கு தடையின்றி ஒழுங்காக, ஒரே சீராக நடைபெறுகின்றன.

நோயாளிகளுடன் வருபவர்கள் வரவேற்பு அறையில் நிறுத்திவைக்கப்படுகின்றனர். நோயாளிகளுடன் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இதனால், வீணாகக் கூட்டம் சேருவது தடுக்கப்படுகிறது. பணிகளும் விரைவாக நடைபெறுகின்றன. நாளொன்றுக்குச் சுமார் 600-க்கும் மேல் நோயாளிகள் வந்தாலும்கூட மிக விரைவில் அவர்கள் கவனிக்கப்பட்டு இல்லம் திரும்புகின்றனர்.

இங்குப் பதிவு செய்யப்பட்ட பல் நோயாளி முதலில் பக்கத்திலுள்ள ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பப்படுகிறார். அங்கு அது என்ன வகைப் பல் நோய் என்பது ஆய்வு செய்யப்பட்டுச் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்.

எடுத்துக் காட்டாக, ஒருவருக்குச் சொத்தைப் பற்கள் இருந்து, அதுவும் ஆரம்பக் கட்ட நோயாக இருந்தால் பல் அடைக்கும் பகுதிக்கு அனுப்பப் படுகிறார். அங்கு அவருக்கு எந்தத் தேதியில் பல் அடைக்கப் படும் என்பதைக் குறித்துத் தருகிறார்கள். தற்போது அங்கு கிட்டத்தட்ட ஒரு மாதம் வரை பல் அடைக்கப்பட வேண்டியவர்களின் பட்டியல் குறிப்பிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பல் அடைக்கும் பகுதிக்குச் சென்றால், பக்கத்திற்கு 12 இயந்திரங்களாக மொத்தம் 24 இயந்திரங்கள் உள்ளன. பல் டாக்டர்களின் மேற்பார்வையின் கீழ், பல் மருத்துவ மாணவ, மாணவியர் இங்கு சொத்தைப் பற்களை அடைக்கின்றனர். முதலில் பல்லிலுள்ள சொத்தைப் பாகங்களும், புழுக்களும் துப்புரவாக நீக்கப்பட்டுப், பின் அதில் பல்லைப் போன்ற கடினமான பொருளைக் கொண்டு அந்தப் பகுதி நன்கு அடைக்கப்படுகிறது. டாக்டர்களும் இந்தப் பல் அடைத்தல் பணியினைச் செய்கிறார்கள்.

இந்தப் பகுதியில் பல் அடைப்பது மட்டுமின்றி, அரைகுறையாக உடைந்துபோன பற்களுக்குத் தொப்பி போல் வைத்துக் குறை பாகத்தை நிறைவு செய்வதும் உண்டு.

அடுத்த கூடத்தில் சொத்தைப் பற்களைப் பிடுங்கும் ஒரு பகுதியுள்ளது. ஐந்தாண்டுக்கு மேல் காலதாமதமான சொத்தைப் பற்கள் அடைக்கக் கூடிய நிலையைத் தாண்டிவிட்டால், இனி எடுத்துத்தான் ஆகவேண்டும் என்று டாக்டர்கள் முடிவு செய்தால், அப் பற்கள் இங்கு அகற்றப் படுகின்றன.

விபத்துக்களில் சிக்கி, அதனால் சில பற்கள் பாதிக்கப்பட்டுப் பற்கள் செத்துவிடுவதும் உண்டு. இந்தப் பற்கள் சாம்பல் நிறமாக மாறிவிடும். இதனையும் இப் பிரிவில் அகற்றி விடுகின்றனர். இப் பகுதியிலும் சுமார் 20-க்கும் மேற்பட்ட இயந்திரங்கள் உள்ளன.

இந்த மருத்துவ மனையில் மொத்தம் ஏழு துறைகள் இருக்கின்றன.

1. ஆய்வுப் பகுதி.

2. சொத்தைப் பற்களை அடைப்பது, உடைந்த பற்களைச் சரி செய்வது.

3. சொத்தைப் பல்லைப் பிடுங்குவது, விபத்துக்களால் பாதிக்கப்பட்ட பற்களைப் பிடுங்குவது.

4. ஈறு நோய்களைக் கவனிப்பது; பற்களைச் சுத்தம் செய்வது; காரைகளை அகற்றுவது.

5. தெத்துப் பற்களை நீக்கிச் சரி செய்வது. (கோணல் மாணலாகப் பல்லுள்ள பெண்கள் அவை தமது அழகைக் குறைப்பதால் அவற்றை நீக்குவதற்கு இங்கு வருகின்றனர். எனவே, இதை அழகு செய் துறை எனலாம்.)

6. கதிரியற் பிரிவு. இங்கு விபத்துக்கள் மற்றவைகளால் பாதிக்கப்படும் பற்கள் 'எக்ஸ்ரே'

சொத்தைப் பல்லை அடைக்கிறார் டாக்டர்

எடுத்துப் பார்க்கப்படுகின்றன. இதற்காகச் சிறிய 'எக்ஸ்ரே' படங்கள் (பிலிம்) உள்ளன.

7. பொய்ப் பல், பிளாஸ்டிக் காது, மூக்கு முதலியவை கட்டும் பிரிவு.

இவை தவிரக் குழந்தைகளுக்குப் பல் நோய் வராமல் (வரும் முன் காக்கும்) பாதுகாக்கும் பகுதியும் உள்ளது. இங்கு சுமார் ஒன்றரை வ்யது முதல், அதாவது பல் முளைக்கும் பருவந் தொட்டு, உள்ள சிறுவர் சிறுமியருக்குப் பற்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. பல்லில் நோய் வராமல் தடுப்பதற்கு இப்பிரிவு பெரிதும் பயன் படுகிறது.

பிற அரசு மருத்துவ மனைகளில் உள்ளது போல் இங்கும் 200 ரூபாய்க்குக் கீழ் வருவாய் உள்ள வர்களுக்கும், அரசிதழ்ப் பதிவு பெருத அரசு ஊழியர்களுக்கும் இலவசமாகச் சிகிச்சை அளிக்கப் படுகின்றது.

இந்த மருத்துவ மனையுடன் பல் வைத்தியக் கல்லூரியும் இணைக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுப் பட்டப் படிப்பான (B. D. S.) இதில் ஆண்டுக்கு 45 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இரண் டாண்டு பட்ட மேல் படிப்பும் இங்கு உள்ளது.

முத்துப் பற்களைப் போல் எழிலாகத் தூய்மை யாகத் திகழ்கிறது இந்த மருத்துவ மனை.

வின்டெக்ஸ்

விசயமங்கலம், தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம்
லிட்: A. A. 245

விசயமங்கலம் (அஞ்சல்), ஈரோடு (வட்டம்),
கோயமுத்தூர் மாவட்டம்.

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள், வேட்டிகள், தரத்திற்கும் நவீன ரகத்திற்கும் கெட்டிச் சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் மிகச் சிறந்தவை.

தமிழ்நாடு அரசினரால் முதற் பரிசுகளும் அனேக கண்காட்சிகளில் நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லா விற்பனை நிலையங்களிலும் எங்கள் ஜவுளிகள் கிடைக்கும்.

எப்பொழுதும் 'வின்டெக்ஸ்' பெட்ஷீட் ரகங்களையே வாங்குங்கள்.

T. P. பஞ்சாபகேசன், செயலாளர்.
V. C. சின்னசாமி, தலைவர்.

ரோம் நாட்டு மாமன்னன் டைபீரியன் சீசரின் பிறந்த நாள் விழா, பார்த்தோர் வியத்தகு அளவிற்குக் கோலாகலமாகக் கொண்டா டப்பட்டது. மன்னருக்கு வாழ்த்துக் கூற வந்த பிரபுக்கள், வணிகர் குலக் கோமான்கள்; அவர்தம் துணைவியர் மட்டுமல்ல: வாழ்த்த வந்திருந்த குடி மக்கள் அனைவரும் உடுத்தி யிருந்த விலை உயர்ந்த பட்டாடைகள் கூட மன்னனின் கவனத்தைக் கவர்ந்தன.

கிரேக்கத்தில் இத்தகைய பட்டாடைகள் கிடையாதே. இதை எங்கிருந்து பெற்றனர் என்பதை அறிய ஆவல் கொண்ட மன்னன் அருகிலிருந்த அமைச்ச ரிடம் அதுபற்றி வினவினான்.

அது தமிழகத்திலிருந்து வரு கிறதென்றும்; எடைக்கு எடை பொன் கொடுக்க வேண்டிய அளவு மிக விலை உயர்ந்தது என்றும் அமைச்சர் அறிவித்தார்.

அந்த அளவு தமிழகத்தின் பட்டாடைகள் திரை கடல் தாண்டிப் புகழ் பரப்பி நின்றன. பாலாவி யன்ன பட்டாடை நெய்தனர், பண்டைத் தமிழர் கள். ஏசு கிறிஸ்து பிறப்பதற்கு 4,000 ஆண்டுகளுக்கு முன்ன தாக, அதாவது இற்றைக்குச் சுமார் 6,000 ஆண்டுகட்கு முன்பாகவே இந்தியாவில் பட்டுத் தொழில் சிறப்புற விளங்கியது என்றும் இங்கிருந்து மெள்ள மெள்ளப் பாரசீகம், மத்திய ஆசியப் பகுதிகளுக்குப் பரவிய தாகவும் வட மொழி இலக்கி யங்கள் கூறுகின்றன.

பட்டின் தோற்றம் பற்றி மற்றொரு கதையும் உண்டு. சீனத்திலிருந்தே பட்டு தோன்றி யது என்பதே அது.

கி.மு. 2,640-ல் (சுமார் 4,600 ஆண்டுகளுக்கு முன்) சீனவை ஹ்வாங்டி என்ற சக்கரவர்த்தி ஆண்டு வந்தார். மன்னரின் மனைவி 'சிலிங்' ஒரு நாள் மாலையில் அரண்மனையிலுள்ள தோட்டத்தில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தாள். அப்போது அங்கிருந்த முசுக்கட்டைச் செடி யொன்றில் ஒரு புழுவானது அழகிய இழைகளால் கூடு கட்டுவதைக் கண்டாள். கூட் டின் அழகை வியந்து செடியி லிருந்து கூட்டை எடுத்துத் தேநீரில் போட்டாள். பின் இழையின் ஒரு முனையினைப் பிடித்துப் பிரித்து எடுத்தாள். மிக மெல்லிய அழகிய இழை வரு வதைக் கண்ணுற்ற இராணி இந்த எழிலான இழையினால் துணி நெய்து உடுத்தினால் எவ்வாறு இருக்கும் என்று எண்ணிப் பார்த்தாள்.

இராணியின் எண்ணத்தை அறிந்த மாமன்னன் அரண் மனையைச் சேர்ந்த தோட்டத்தில்

முசுக்கட்டைச் செடிகளைப் பயிரிடச் செய்தான். பல்லாயிரக்கணக்கான பட்டுப் புழுக்களை வளர்க்கவும் ஏற்பாடு செய்தான். தலை சிறந்த சீன நெசவாளர்கள் அந்தப் பட்டு நூல்களைக் கொண்டு பட்டாடை நெய்தனர். இது தான் பட்டின் வரலாறு என்று சீனத்துச் சரித்திரம் கூறுகின்றது.

சீன மொழியில் அதற்கு 'சி' என்ற பெயரிட்டனர். 'சி' விளையும் நாடே சீனம் ஆயிற்று என்றும் கூறப்படுகிறது. அதற்குப்பின் அங்கிருந்து இந்தியாவுக்குப் பட்டுத் தொழில் பரவியதாக அந்தக் கதை கூறுகிறது. சீனத்து இளவரசியார் பட்டுப்பூச்சியின் முட்டைகளையும் முசுக்கட்டை விதைகளையும் தனது சிகையலங்காரத்தில் மறைத்து வைத்து இந்தியாவிற்குக் கடத்திக் கொண்டு வந்ததாகவும் அக்கதை மேலும் கூறுகிறது.

பிற்காலத்தில் அது ரோமாபுரி, கிரேக்கம் போன்ற மேலை நாடுகளுக்கும் பரவியது. துவக்கக் காலத்தில் அது மிகவும் அதிக விலைக்கு விற்றதால், பட்டு உடுத்துவது மிகப் பெரிய ஆடம்பரமாகக் கருதப்பட்டது.

ஜஸ்டீனியன் என்ற மன்னன், பட்டுத் தொழிலை, அரசுக்குச் சொந்தமான தொழிலாக்கினான். கான்ஸ்டாண்டிநோபிள் அரண்மனைக்குள்ளேயே கைத்தறிகளை நிறுவி, மகளிரைக் கொண்டு பட்டு நெசவினைச் செய்து வந்தான், அந்த மன்னன்.

பூம்புகாரில் சோழ காலப் பெண்டிர் பகலில் பட்டாடையும், இரவில் பருத்தியாடையும் உடுத்தி வந்தனர் என்று நமது பட்டினப்பாலை போன்ற பண்டை நூல்கள் கூறுகின்றன.

பார் புகழ் பெற்ற இந்தப் பட்டு நூல் உற்பத்தியில் இன்று தமிழகம் முனைந்து ஈடுபட்டுள்ளது.

தமிழகத்தில் ஏர்க்காடு, ஒசூர், தாளவாடி, கொல்லிமலை, வெண்ணை மங்கலம், தங்கனிக்கோட்டை, கூனூர் போன்ற 15 இடங்களில் தமிழக அரசின் பட்டுப் பண்ணைகள் உள்ளன.

ஏர்க்காட்டிலுள்ள அரசினர் பண்ணைகளில் ஜப்பான்-சீன ரகப் பட்டுப் பூச்சிகளை அதிக

அளவு உற்பத்தி செய்து அவற்றை ஒசூரிலுள்ள அரசினர் பட்டுப்பண்ணைக்கு அனுப்புகின்றனர். அங்கு இந்த ரக ஆண் பூச்சியையும், தமிழகப் பெண் பட்டுப் பூச்சியையும் சேர்த்துக் கலப்பினப் புழுக்களைத் தயாரிக்கிறார்கள். பின் அந்தக் கலப்பினப் புழுக்கள் கட்டும் கூட்டைப் பக்குவப்படுத்தி அதிலிருந்து ஏராளமான பட்டு நூல்களை எடுக்கிறார்கள்.

பிறப்பு வளர்ப்பு

பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்வது எப்படி? முதலில்

பட்டுக் கூடுகள்.



பட்டுப் பூச்சிகளை ஓர் அட்டைப் பலகையில் வைத்து அதன்மீது மேல் பாகம் திறந்துள்ள 'கப்' போன்ற ஒரு குவளையால் மூடி வைக்கின்றனர். ஒரு குவளையில் ஒரு பூச்சி வீதம் சுமார் 25 பூச்சிகள் வைக்கப்படுகின்றன.

அவ்வாறு வைக்கப்பட்ட ஒவ்வொரு பூச்சியும் 400 முதல் 500 வரை முட்டையிடும். ஒரு தட்டில் மொத்தம் சுமார் 10,000 முட்டையிருக்கும்.

முட்டையிட்ட 10-வது நாளில் முட்டையிலிருந்து வெளிவரும் புழு, சிறிய எறும்பு அளவிலிருக்கும்.

அப்போது புழுக்களுக்கு, முசுக்கட்டையின் தளிர் இலைகளைச் சிறிது சிறிதாக நறுக்கிப் போடுவார்கள். இதற்காக ஏர்க்காட்டில் ஆறே கால் ஏக்கர் பண்ணையுள்ளது. அதில் 5 ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டைச் செடிகள் உள்ளன. புழு வளர வளர ஏராளமாக இந்த இலைகளை உட்கொண்டு 30 நாட்களில் ஒரு விரலளவு பெரிதாகி விடும். அதாவது பிறந்த போது இருந்ததைவிட 10,000 மடங்கு பெரிதாகிறது.

புழு உட்கொண்ட ஆகாரம் ஜவ்வு போன்று மாறிவிட்டால், அது கூடு கட்டும் பருவம் அடைந்து விட்டது என்று தெரிந்துகொள்ளலாம். அப்போது புழு ஒருவித மினுமினுப்புடன் தோன்றும். புழுவிலிருந்து பட்டும் வெளிவரத் துவங்கும்.

இந்தப் பருவத்தில்தான் அது கூடுகட்ட ஆரம்பிக்கும். இவ்வாறு கூடுகட்டும் பருவத்தில் பட்டுப்பூச்சியை 'சந்திரைக்' என்று சொல்லப்பட்ட மூங்கில் கீற்றுத் தட்டில் அல்லது 'மௌன்டேஜுகள்' என்ற மூங்கில் கீற்றுத் தட்டுகளில் எடுத்து வைப்பார்கள். அங்கு ஒவ்வொரு புழுவும் தன்னைச் சுற்றி ஒரு வெண்மை நிறமான நூலினால் கூடு கட்டும். இந்தக் கூடுதான் பட்டு நூல் கூடு. ஒரு கூடு கட்ட 24 மணி நேரம் முதல் 30, 35 மணி நேரம் வரை ஆகும். ஏர்க்காட்டில் உள்ளது விதைப் பண்ணையான படியால் இங்கு பட்டுநூல் தயாரிப்பதில்லை.

இங்கு தயாராகும் முட்டைக் கூடுகளில் ஒவ்வொரு முறையும் விதைக்காக (பூச்சிகளுக்காக) சுமார் 20 கூடுகளை எடுத்து வைத்துக் கொண்டு மீதியைக் கூடுகட்டிய 5 நாட்களில் ஒசூருக்கு அனுப்பி விடுகின்றனர். ஆண்டுக்குச் சுமார் ஒரு லட்சம் விதைக்கூடுகள் ஒசூருக்கு ஏர்க்காட்டுப் பண்ணையிலிருந்து அனுப்பப்படுகின்றன.

ஆண் பூச்சிகளும் பெண் பூச்சிகளும் சுமார் 5 அல்லது 6 மணி நேர சேர்க்கைக்குப் பின் சுமார் 400 முதல் 500 முட்டைகள் வரை யிடுகின்றன.

இவற்றிலிருந்து வரும் கலப்பினப் புழுக்கள் கட்டும் கூடுகளையே பட்டுக்குப் பயன்படுத்துகின்றனர்.

தரமான ஒரு கூட்டைப் பிரித்தால் சுமார் 500 மீட்டர் நீளப் பட்டு நூல் கிடைக்கும். சில மேலை நாட்டு ரகங்களில் 800 முதல் 1200 மீட்டர் வரை நூல் கிடைப்பதும் உண்டு.

பட்டு நூலின் தரம் நீளத்தில் மட்டுமல்லாமல் எடையைப் பொறுத்தும் உள்ளது. பட்டுப் புழுக் கூடுகளை ஜப்பானில் ஏழு ரகங்களாகப் பிரிக்கின்றனர். 32 செண்டிகிராமுக்கும் எடைக்கு மேலுள்ளது சிறந்த ரகம். 27·5 செண்டி கிராமிலிருந்து 32 செண்டி கிராம் வரை உள்ளது, முதல் ரகம். இப்படி மொத்தம் ஏழு ரகங்களாகப் பிரிக்கப்படுகின்றன. கடைசி ரகம் 15 செண்டி கிராமுக்கும் குறைந்த எடையுள்ளதாகும். தற்போது தமிழ் நாட்டில் ஒசூர், தாளவாடி போன்ற பகுதிகளிலிருந்துசுமார் இரண்டே முக்கால் லட்ச ரூபாய் மதிப்புள்ள பட்டு நூல்கள் கிடைக்கின்றன. சுமார் 20,000-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தமிழகத்திற்குத் தேவையான பட்டு நூல்களில் 99 சதவீதம் பெங்களூரிலிருந்துதான் வாங்கப் படுகிறது.

பட்டு உற்பத்தியை அதிகப் படுத்த, தமிழக அரசு சுமார் 55 லட்ச ரூபாய் செலவில் புதிய திட்டமொன்றை வகுத்து வருகிறது. இத்திட்டப்படி சுமார் 7000 ஏக்கர் நிலத்தில் முசுக்கட்டைச் செடி பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக ஒசூர் பகுதியில் கடந்த இரண்டு மாத காலமாக ஒரு திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி அரசாங்கம் தரும் நிலத்தில் பாதியிடத்தில் முசுக்கட்டைச் செடி பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு நிலத்தைக் குத்தகைக்கு விட அரசு முன் வந்துள்ளது.

பொதுவாகக் கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,000 அடி உயரமுள்ளதும், ஆண்டுக்குச் சுமார் 30 அங்குலம் மழை பெய்யக்கூடியதுமான பகுதிகளில் இந்தத் தொழில் சிறப்பாக வளர மிகுந்த வாய்ப்பு உண்டு.

அதனால் வெப்பம் மிகுந்த பகுதிகளை விட்டு விட்டுக் குளிர்ந்த மலைப் பகுதிகளில் இத்தொழிலில் அதிகக் கவனம் செலுத்தி முன்னேற்றுதற்குத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

குறுநிலக் கிழார்களுக்கான திட்டம்

மிகக்குறைந்த நிலங்களை உடைய குறு நிலக் கிழார்களுக்கும், பண்ணைத் தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்கும் திட்டம் ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூபாய் 47·5 கோடி ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் குறுநிலக் கிழார்களுக்கும், தமது வருமானத்திற்கு வேளாண்மையைப் பெரிதும் நம்பியிருக்கும் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் நன்மைபயக்கும்.

தீவிர சாகுபடி முறைகளின் மூலம் உற்பத்தியைப் பெருக்க, குறுநிலக் கிழார்களுக்குத் துணை புரிவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். குறுநிலக் கிழார்களுக்கும், பண்ணைத் தொழிலாளர்களுக்கும் பயனளிக்கக்கூடிய கோழி வளர்ப்பு அல்லது பால்பண்ணை போன்ற வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய நடவடிக்கைகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

2 ஏக்கர் வரை நன்செய் நிலமும், 4 ஏக்கர் வரை புன்செய் நிலமும் உள்ள குறுநிலக்கிழார்களும், வசிப்பதற்கு வீட்டுடன் பண்ணை வேலை செய்வது மூலமாக 50 சதம் அல்லது அதிக வருமானமும் உடைய பண்ணைத் தொழிலாளர்களும் இத்திட்டத்தினால் பயன் பெறுவார்கள். குறு நிலக்கிழார்களில் ஒரு ஏக்கர் வரை நன்செய் நிலமும், 2 ஏக்கர் வரை புன்செய் நிலமும் உள்ளவர்களே முதலில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு திட்டத்திலும் 20,000 குடும்பங்கள் இடம் பெறும்.



சேலம் மாவட்டத்திற்கு ஒரு திட்டமும், வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒரு திட்டமும் தீட்டப்பெற்று மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஒவ்வொரு திட்டத்திற்கும் மானியம் கொடுக்கும் வகையில் மத்திய அரசுக்கு ஏற்படும் செலவு ரூபாய் 1 கோடியாகும். மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் இத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

இதோ, பராமரிப்புத் தொல்லையற்ற, நடைமுறைக்குதவும் நிரந்தரமான கூரையமைப்புச் சாதனம்

எவரெஸ்ட் ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட்

அலைவடிவக் கூரைத் தகடுகள்
வளைவுள்ள கூரைத் தகடுகள்



மற்றெந்தக் கூரையமைப்புச் சாதனங்களையும் விட, எவரெஸ்ட் வளைவுள்ள கூரைத் தகடுகளும், அலைவடிவக் கூரைத் தகடுகளும் எவ்வளவு மேம்பட்டது என்று பாருங்கள்:
● தகடுகளை ஒருங்கிணைப் பதித்து கூரைகளை அமைப்பது எளிது. ● வளைவுள்ள கூரைத் தகடுகள் தாமாகவே நிலைபெற வல்லவை. மரச் சட்ட வேலைப்பாடோ, விலையுயர்ந்த எஃகுக் கட்டுமானங்களோ தேவைப்படா. ● சீதோஷ்ண நிலைகளும் பூச்சிகளும் ஊடுருவ முடியாது. பராமரிப்புத் தொல்லையே இல்லை. ● துருவினாலோ, அரிமானத்தினாலோ சேதமடையாதவை—உண்மையில் வயதேற ஏற வலுவேறும். சிர்கேடோ, ஒழுகலோ, பகுதிகளைப்புதுப்பித்தலோ இருக்கவே இருக்காது. ● தீயினால் பாதிக்கப்படாதவை. சேதங்கள் நேராது. மேலான பாதுகாப்பு. ● நிரந்தரமானவை—ஆயுட்கால முழுதும் நீடித்திருப்பவை.

எவரெஸ்ட்
ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் தயாரிப்புகள்.

நாடுநெடுகப் பரவிய வினியோக அமைப்பையும், தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப உதவியையும் பின்பலமாகக் கொண்டுள்ளன.

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் லிட்,
(டர்னர் & நியூவால் க்ரூப்பின் ஒரு உறுப்பினம்)
பம்பாய் • கல்கத்தா • ஜபல்பூர் • சென்னை • நியூ டெல்லி
போத்தனூர் (கோயம்புத்தூர் மாவட்டம்).

Q.12 TM

"அமுதா! அமுதா! இங்கே வா! உனக்கு என்ன வாங்கி வந்திருக்கிறேன் பாரேன்!"

"என்னமோ எனக்குப் பட்டணத்திலிருந்து தங்கச் சங்கிலி வாங்கி வந்துவிட்ட மாதிரி ஒரே அமர்க்களப் படுத்துகிறீர்களே! ஏதோ இரண்டு பழம் வாங்கி வந்திருப்பீர்கள்! அவைகளைக் கொடுக்க அவசரமா? நான் இப்போ வரமுடியாது! கொஞ்சம் பொறுங்க அத்தான்! முதலில் காப்பி சாப்பிடுங்க!! அப்புறமா நீங்க வாங்கி வந்துள்ளதையெல்லாம் மெதுவாகப் பார்த்துக் கொள்கின்றேன்."

"காப்பியும் வேண்டாம், ஒன்றும்வேண்டாம்; உன் வேலையைப் பாரு."

"உங்களுக்குக் காப்பி தயாரித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் அவசரப்படுத்தினீர்கள். அதனால் தான் உடனே வரமுடியவில்லை. இதற்குப் போய் கோபித்துக் கொண்டீர்களே! நீங்க வராவிட்டாலும், நானே காப்பியை எடுத்துக் கொண்டு உங்க இடத்திற்கே வந்துவிட்டேன். காப்பி ஆறிப் போய்விடும். சாப்பிடுங்க அத்தான்!"

"சரி, கீழே வைத்துவிட்டுப் போ; நான் சாப்பிட்டுக் கொள்கின்றேன்."

"முதலில் நீங்க கூப்பிட்ட காரணத்தைச் சொல்லுங்க. அப்புறம் நான் போகின்றேன்."

"இந்த அட்டைப் பெட்டியில் என்ன இருக்கு என்று பாரு!"

"ஏதோ நகை வாங்கிக் கொண்டு வந்திருப்பீர்கள் போலிருக்கு. பட்டணத்தில் ஏதாவது 'ரோல்டுகோல்டு' நகை, விலை மலிவாகக் கிடைச்சுதாக்கும்!"

"எது 'ரோல்டு கோல்டு'? நல்லாப் பாரு; அசல் தங்கம்!" என்று கோபமாக நகைப்பெட்டியைத் திறந்து காட்டினான் முத்து.

"என் அத்தான் இன்றைக்குத்தான் மிகவும் நல்ல அத்தான்!" என்று நகையைக் கண்ட ஆசையில் அமுதா கூறினாள்.

"என்ன தம்பி முத்து! உன் மனைவி உனக்கு 'ஐஸ்' வைக்கிற மாதிரி இருக்கு! என்ன விஷயம்?"

என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்துவிட்டார் ஆறுமுகம்.

"வாங்க அண்ணே! வணக்கம்! உட்காருங்க அண்ணே. உங்களைப் பார்த்து நீண்ட நாளாச்சு. இந்தப் பக்கமே வரக்காணுமே!

அமுதா, அண்ணனுக்கும் காப்பி கொண்டுவா !''

''ஏதோ மகிழ்ச்சியாப் பேசிக் கொண்டிருந்தீர்கள். சிவ பூஜையில் கரடி புகுந்த மாதிரி நான் வந்து விட்டேன். என்னால் உங்களுக்கு இடைஞ்சல் வேண்டாம். நான் அப்புறமா வருகிறேன் தம்பி !'' என்று கூறிவிட்டு ஆறுமுகம் திரும்பிச் செல்ல முயன்றார்.

'' உங்களால் எங்களுக்கு எந்த வித இடையூறும் இல்லிங்க அண்ணே ! நீங்க உட்காருங்க .''

''காப்பி சாப்பிடுங்க மாமா!'' என்று கூறி ஒரு தம்ளரில் காப்பியைக் கொண்டு வந்து கொடுத்தாள் அமுதா.

முத்துவும் ஆறுமுகமும் காப்பியை ஆற்றிக் குடித்தனர். அதன் பின் முத்து, நகைப் பெட்டியைத் திறந்து ''இந்த நகை நல்லா இருக்கா பாருங்க அண்ணே! சென்னையிலிருந்து வாங்கி வந்தேன். இதைப் பார்த்து விட்டுத்தான் அமுதா என்னைப் புகழ்ந்து கொண்டிருந்தாள் !'' என்றார்.

நகையை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு '' உன் மனைவியே நீ வாங்கி வந்த நகையைப் புகழ்ந்து விட்ட பிறகு நான் என்ன தம்பி குறை சொல்ல முடியும்? நகை ரொம்ப அழகா இருக்கப்பா ! என்ன விலைக்கு வாங்கி வந்தே?'' என்று கேட்டார்ஆறுமுகம்.

'தொள்ளாயிரம் ரூபாய் ஆகுது அண்ணே!'

''ஏன் ? தம்பி ! இவ்வளவு ரூபாயை நகைக்காகச் செலவழிக்கலாமா? ஒரு நிலத்தை வாங்கியிருக்கக் கூடாதா? இப்படிக் கேட்கின்றேனே என்று நீ கோவிச்சுக்காதே அமுதா ! எல்லாம் உங்க நன்மைக்காகத் தான் சொல்றேன் !''

''நான் இவ்வளவு விலைக்கு வாங்கச் சொல்லவில்லை மாமா! அவருடைய விருப்பத்திற்கு வாங்கி வந்துள்ளார். நீங்களே நல்ல புத்தி சொல்லுங்க மாமா!' என்று கோபமாகக் கூறிவிட்டு அமுதா உள்ளே சென்று கொண்டிருந்தாள்.

'' வாயாடி ! இப்ப கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் 'தங்கச் சங்கிலியா வாங்கி வந்திருக்கின்றீர்கள்?' என்று கோபமாகக் கேட்டாய். இப்பொழுது பழியை என்மேல் போட்டுவிட்டுப் போகிறாயா? போ! போ! அப்புறம் பேசிக் கொள்கின்றேன் !'' என்றான் முத்து.

ஆறுமுகம், நகையை முத்துவிடம் திருப்பிக் கொடுத்தார். முத்து அதை அட்டைப் பெட்டியில் வைத்து மூடிவிட்டு ''என்ன காரியமா வந்திங்க? சொல்லுங்க அண்ணே !'' என்றான்.

''குறுவையிலே உனக்கு ஏக்கருக்கு 60 மூட்டை வீதம் நெல் கண்டு முதல் கிடைச்சுதாமே ! ஏக்கருக்கு ரூபாய் 400 செலவு செய்தும் எனக்கு 20 மூட்டைக்கு மேல் கிடைக்கவில்லை தம்பி ! நான் பிள்ளை குட்டிக்காரனாச்சே! எனக்கும் அந்த ரகசியத்தைச் சொல்லியிருக்கக் கூடாதோ ? நானும் உன்னால் பிழைச்சிருப்பேனே !''

'' இதில் ஒன்றும் ரகசியமே இல்லே அண்ணே! நான் உயர் விளைச்சல் தரும் அதிசய நெல் ஐ. ஆர். 8 சாகுபடி செய்தேன். நீங்க ஏதேனும் நாட்டு ரக நெல்லைச் சாகுபடி செய்திருப்பீர்கள். அதுதான் வேறுபாடு. நான் தான், நீங்க நாற்று விடுவதற்கு முன்பே 'ஐ.ஆர். 8' விதை தருகிறேன். அதைச் சாகுபடி செய்யுங்கள், என்று உங்களிடம் சொன்னேனே உங்களுக்கு ஞாபகம்-இல்லையா?''

''ஆமாம், தம்பி ! நீ வற்புறுத்திச் சொல்லியது இப்பத்தான் ஞாபகத்துக்கு வருது. உன் பேச்சைக் கேட்டிருந்தால் எனக்கும் அதிக மகசூல் கிடைச்சிருக்கும் ! ஐ.ஆர். 8 நெல் சாகுபடி செய்யச் செலவு என்ன ஆச்சு? வரவு என்ன ஆச்சு? கொஞ்சம் விவரமாகச் சொல்லு தம்பி !''

''அண்ணே! நான் நாலு ஏக்கரில் ஐ.ஆர். 8 சாகுபடி செய்தேன். எனக்கு ஏக்கருக்குச் சராசரியாக 75 கிலோ கொண்ட மூட்டை 60 ஆகியுள்ளது. அதாவது ஏக்கருக்கு 4,500 கிலோ நெல் விளைந்துள்ளது. மூட்டை ரூபாய் 36 வீதம் அவைகளை விற்று விட்டேன். அதிலிருந்து ஏக்கருக்கு ரூபாய் 2,160 கிடைத்தது. ஆனால் நான் ஏக்கருக்குச் செலவு செய்தது ரூபாய் 600. எனவே ஏக்கருக்கு நிகர லாபமாக ரூபாய் 1,560 எனக்குக் கிடைத்துள்ளது. 4 ஏக்கரிலிருந்தும் கிடைத்த மொத்த லாபம் ரூ. 6,240. அந்தப் பணத்தைக் கொண்டு போய்தான் ஒரு டிராக்டர் வாங்க அட்வான்சு, ரூபாய் 3,000 கட்டிவிட்டு, ஒரு மோட்டார் வாங்கிக்கொண்டு, இந்த நகையையும் வாங்கி வந்தேன்!''



குழந்தை பிறப்பதைத் தடுக்க அறுவைச் சிகிச்சை, லூப் முறை, வில்லைகள் உட்கொள்ளுதல் போன்றவை தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

இதில் வில்லைகளைப் பெண்கள் மாதத்தில் 25 நாட்கள் தவறாது உட்கொள்ள வேண்டியுள்ளது. சில சமயங்களில் உட்கொள்ள மறந்து விட்டால் கருத்தரிக்க ஏதுவாகலாம். அதோடு, நாள்தோறும் உட்கொள்வது சிலருக்குச் சிரமமாயிருக்கலாம்.

எனவே, தற்போது கருத்தடை ஊசி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஊசிக்கு டோபா (Dopa) என்று பெயரிட்டுள்ளனர். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெருமளவு பயன் படுத்திப் பரிசீலனை செய்யப்பட்டுள்ள இந்த ஊசியைப் பெண்களுக்குப் போட்டால் மூன்று மாத காலம் கர்ப்பம்ஆக மாட்டார்கள். எனவே மூன்று மாதத்திற்கு ஒரு முறை இந்த ஊசியைப் போட்டால் போதுமானது. இந்த ஊசி முறை இந்திய விஞ்ஞான ஆய்வுக் கழகத்தினால் (Indian council of scientific research) பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

விரைவில் சென்னையில் இந்த ஊசித் திட்டம் செயல்படுத்தப்படும்.

'' நீ செய்தது மிகவும் சரி தம்பி ! இதை முன்பே சொல்லியிருந்தால், இவ்வளவு செலவு செய்து ஏன் நகை வாங்கி வந்தாய் என்று அமுதாவின் முன்னால் கேட்டிருக்க மாட்டேன். அமுதா வேறு உன்மேல் கோபமாகப் போய் உள்ளது !''

''அமுதாவுக்கு விவரத்தை இன்னும் சொல்லவில்லை. விவரம் தெரிந்தால் அவளும் நான் செய்தது சரி என்றே சொல்லுவாள்.''

'' ஐ. ஆர். 8 நெல்லுக்கு மார்க்கட் இல்லை என்று சொல்றாங்களே என்று நம்பி, நான் ஏமாந்துவிட்டேன்.''

''அதெல்லாம் மிகவும் தப்பான கருத்து அண்ணே! நீங்க சன்னமான நாட்டு ரக நெல்லைப் பயிர் செய்துள்ளீர்கள். உங்களுக்குக் கிடைத்தது 20 மூட்டை. ஒரு மூட்டை ரூபாய் 50 வீதம் விற்றாலும், உங்களுக்குக் கிடைக்கப் போவது ரூபா 1,000. அதில் செலவு ரூபாய் 400 போக லாபம் 600 ரூபாய் தான் கிடைக்கும். ஐ.ஆர். 8 நெல் விலை எவ்வளவு தான் குறைந்தாலும், மூட்டை ரூபாய் 30 விலைக்குக் கீழே போகாது. அதேபோல் மிகவும் குறைந்த மகசூலாகக் கொண்டாலும், ஐ.ஆர். 8 நெல் ஏக்கருக்கு 45 மூட்டைக்குக் குறையாமல் கொடுக்கும். எனவே, குறைந்த விலையும், குறைந்த மகசூலும் கிடைப்பதாகக் கொண்டாலும் கூட, ஐ.ஆர். 8 நெல் மூலம் ஒரு ஏக்கரிலிருந்து ரூபாய் 1,350 கிடைக்கும். அதில் செலவு ரூபாய் 600 போக நிகர லாபம் ரூபாய் 750 கிடைக்கும். மார்க்கட்டில் அதிக விலை போகும் சன்னமான நாட்டு ரக நெல்லைப் பயிரிடுவதைவிட, ஐ.ஆர். 8 நெல் பயிரிடுவதால் ரூபாய் 150 அதிக லாபம் கிடைக்கும். இந்த விவரமெல்லாம் எனக்கு முன்பே தெரிந்திருந்தால் இன்னும் நான்கு ஏக்கரில் ஐ.ஆர். 8 நெல் சாகுபடி செய்திருப்பேன் !''

குதிரை இழுத்த இரயில்



1825-ம் ஆண்டுக்கு முன் உலகத்தில் எந்தப் பாகத்திலும் புகை வண்டி கிடையாது. குதிரையும், குதிரை வண்டிகளும் தான் அதற்குமுன் அமைந்திருந்த விரைவான போக்குவரத்து வசதிகள்.

1825-ல், முதல் புகை வண்டி இங்கிலாந்தில் ஓடியது.

அமெரிக்காவில், 1830-ல் இரயில் வண்டி வந்த போதிலும், ஆரம்ப காலத்தில் அது குதிரைகளினால் தான் இழுக்கப்பட்டது.

இந்தியாவில், பம்பாயில் 16—4—1853-ல் புகை வண்டிப் போக்குவரத்துத் துவக்கப்பட்டது. ஆனால் வெள்ளோட்டம் 1852 நவம்பர் மாதத்திலேயே நடைபெற்றது.

தமிழகத்தைப் பொறுத்த வரை, புகை வண்டி 1-4-1856-ல் தோன்றியது. வியாசர்பாடிக்கும்வாலாஜா ரோட்டிற்கும் (ஆர்க்காடு) இடையே உள்ள 63 மைல் தூரத்தில் இந்த முதல் புகை வண்டி ஓடியது.

'' சரி, போனது போகட்டும் தம்பி ! அடுத்த தடவை ஐ.ஆர். 8 நெல் பயிரிடும்போது நீ, எனக்கும் தெரிவித்து விட வேண்டும்.''

'' நம்ம சம்பா நெல்லெல்லாம் டிசம்பர் மாதத்தில் அறுவடைக்கு வந்துவிடும். அடுத்து வருகிற நவரைப் பட்டத்தில் ஐ. ஆர். 8 நெல் பயிரிடத் திட்டமிட்டுள்ளேன். சென்ற ஆண்டு கூட நவரைப் பட்டத்தில் தமிழ் நாட்டில் ஏறத்தாழ ஏழு லட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8 நெல் சாகுபடி செய்யப்பட்டதாகப் பத்திரிகையில் படித்தேன். எனவே இந்த ஆண்டு நவரைப் பட்டத்தில் நாமும் ஐ. ஆர். 8 நெல் பயிர் செய்வோம் அண்ணே !''

'' சரி தம்பி இனிமேல் நீ சொல்றபடிதான் சாகுபடி செய்யப் போறேன். இப்போ சம்பா நடவு செய்து முடித்துவிட்டேன். குறுவை அறுத்த வயலில் தாளடி பயிரிட நினைக்கின்றேன். ஒரு ஏக்கரில் இறைவைப் பருத்தி சாகுபடி செய்துள்ளேன். ஐப்பசி மாதத்தில் என்னென்ன செய்யணும் என்பதையும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு தம்பி !''

'' சம்பா நடவெல்லாம் முடித்து விட்டதாகச் சொன்னீர்கள். நடவு செய்த 15-வது நாள், களை எடுக்க வேண்டும். களை எடுத்த பின்பு அன்றே பூச்சிகளையும், நோய்களையும் தடுக்க மருந்து தெளிக்க வேண்டும். கோ-25 நெல்லிற்கு மட்டும் நடவு செய்த 21-ஆம் நாளில் மருந்து தெளிக்க வேண்டும். என்ன மருந்து தெளிக்க வேண்டும், எவ்வளவு தெளிக்க வேண்டும் என்பதை நமது ஊர்ப் பணியாளரையோ அல்லது வேளாண்மை வளர்ச்சி அலுவலரையோ கேட்டு அறிந்து செய்வதே நல்லது.''

''ஏன்? தம்பி! சம்பாவுக்கு நான் இதுவரை மேல் உரம் போட்டதே இல்லை. இந்தத் தடவை போடலாம் என்று நினைக்கின்றேன். நீ என்ன சொல்றே ?''

'' மேலுரமிடுவதால் மிகுந்திடும் மகசூல் என்பது அனுபவப் பூர்வமாகவும், ஆராய்ச்சி மூலமாகவும் கண்ட உண்மைங்க. நடவு செய்த 21-வது நாளில் முதல் முறையாக மேலுரமிட வேண்டும். ஐ. ஆர். 8, ஜெயா ஆகிய நெல்லிற்கு ஏக்கருக்கு 15 கிலோ தழைச் சத்தளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 32½ கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். ஐ. ஆர். 5 நெல்லிற்கு ஏக்கருக்கு

9 கிலோ தழைச் சத்தளிக்க 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். கோ-25, கோ-32 நெல்லிற்கு ஏக்கருக்கு 5½ கிலோ தழைச் சத்து அளிக்க 27½ கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 12 கிலோ யூரியாவை மேலுரமாகப் போட வேண்டும். நாட்டு ரகங்களுக்கெல்லாம் ஏக்கருக்கு 4 கிலோ தழைச் சத்து அளிக்க 20 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 8½ கிலோ யூரியாவை மேலுரமாகப் போடணும் அண்ணே!''

'' இரண்டாவது முறை எப்பொழுது களை எடுப்பது, மருந்து தெளிப்பது, இரசாயன உரமிடுவது என்பதையும் கூறிவிட்டால் நல்லது!''

''நடவு செய்த 30-ம் நாளில் 2-வது முறை, களை எடுக்க வேண்டும். ஆனல் ஐ. ஆர். 8, ஜெயா நெல்லிற்கு நடவு செய்த 40-வது நாளிலும், ஐ. ஆர். 5 நெல்லிற்கு நடவு செய்த 35-வது நாளிலும் களை எடுக்கவேண்டும். ஐ. ஆர். 8, ஜெயா ஆகிய நெல்லிற்கு நடவு செய்த 30-வது நாளிலும், கோ-25 நெல்லிற்கு 42-வது நாளிலும், மற்ற ரகங்களுக்கு முதல் மருந்து தெளித்த 20-வது நாளிலும் 2-ம் முறையாக மருந்து தெளிக்க வேண்டும். இரண்டாவது முறையாக முன் கூறிய அளவு இரசாயன உரங்களைப் பயிர், சூல்கட்டும் பருவத்தில், அதாவது தொண்டைக் கதிர் சமயத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு மேலுரமாக இட வேண்டும்.''

''தாளடிக்கு என்ன ரகம் போடப் போறே தம்பி ?''

''நான் ஐ. ஆர். 5 என்ற நெல்லை நாற்று விட்டுள்ளேன். நீங்க என்ன ரகத்தை நாற்று விட்டீர்கள் ?''

'' இன்னும் நான் நாற்றுவிடவில்லை தம்பி ! அதுபற்றி உன் யோசனையைக் கேட்கத்தான் தம்பி உன்னைத் தேடி வந்தேன்.''

'' அப்ப நீங்க நாற்று விட வேண்டாம் அண்ணே ! என்னிடம் 2 ஏக்கருக்குத் தேவையான நாற்று மீதமாகி விடும். யாருக்காவது கொடுக்கலாம் என்றே கிடைத்த நெல் முழுவதையும் நாற்றுவிட்டு வைத்துள்ளேன். உங்களுக்குத் தேவையான நாற்றுகளை நானே கொடுத்துவிடுகிறேன். நான் அவ்வப்போது சொல்ற மாதிரி நீங்களும் செய்யணும்; சரிதானே அண்ணே !''

'' சரி தம்பி ! நீ போய்ச் சாப்பிடு. அப்புறம் பேசிக் கொள்வோம்'' என்று எழுந்தார் ஆறுமுகம்.

'' இருங்க அண்ணே ! ஐ. ஆர். 5 நெல், பருத்தி பற்றிய விவரமெல்லாம் ' தமிழரசு ' என்ற இப்புத்தகத்தில் வெளியாகி உள்ளது. படித்துப் பாருங்க '' என்று கூறித் தன்னிட மிருந்த ' தமிழரசு ' இதழை ஆறுமுகத்திடம் கொடுத்தான் முத்து.

'' மிகவும் நன்றி தம்பி !'' என்று கூறிவிட்டு ஆறுமுகம் விடை பெற்றுச் சென்றார்.

உள்ளே சென்ற முத்து, மனைவியிடம் தங்கச் சங்கிலியைக் கொடுத்து "அமுதா ! இந்த நகை ஏன் வாங்கி வந்தேன் தெரியுமா? ஐ. ஆர். 8 நெல் பற்றிப் பத்திரிகையில் வெளியாகியிருந்த செய்தியைப் படித்துவிட்டு அந்த நெல்லைப் பயிரிடுமாறு என்னைத் தூண்டியதே நீ தானே! அதனால் தான் ஐ. ஆர். 8 நெல் விற்ற பணத்திலிருந்து டிராக்டருக்கு முன்பணம் கட்டிவிட்டு, மோட்டார் வாங்கிக் கொண்டு, மீதி இருந்த பணத்தில் இந்த நகையை வாங்கி வந்தேன். நம் திருமணத்திற்குப் பிறகு நான் வாங்கி வந்துள்ள முதல் நகையே இதுதானே!''

'' பெண்ணுக்குப் பொன் நகை பெரியதல்ல அத்தான் ! புன்னகையே பெரியது !'' என்று கூறிக்கொண்டே அமுதா உள்ளே சென்று எதையோ எடுத்துத் தன் இடையில் மறைத்து வைத்துக் கொண்டு முத்துவின் அருகே வந்தாள்.

> **குடும்பநல கிராமம்**
>
> ஏர்க்காடு வட்டாரத்தில் பட்டிப் பாடிதரப்பு என்ற கிராமம் உள்ளது. இங்குள்ள மணமான ஆடவர்களில் 95 சதவீதம் குடும்ப நலத் திட்டத்திற்காக அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். இதன் மூலம். இது மற்ற கிராமங்களுக்கு முன்மாதிரியாகவுள்ளது.

'' அத்தான் ! உங்கள் கண்களை நன்றாக மூடிக் கொள்ளுங்கள் ! உங்களுக்கு நான் ஒரு பரிசு தரப் போகிறேன்.''

அன்புக் கட்டளைக்குக் கட்டுப்பட்டுக் கண்களை மூடிக்கொண்டே இருந்தான், முத்து.

'' அத்தான் ! இப்பொழுது கண்களைத் திறந்து பாருங்கள் !''

அழகிய கைக் கடிகாரத்தைக் கண்டதும் முத்துவின் முகம் மலர்ந்ததுடன், வியப்பினால் விரிந்தது.

'' ஏது அமுதா இந்த வாட்ச்?''

'' நான் நம்ம வீட்டுப் புழக்கடையில் காய்கறித் தோட்டம் போட்டுக் காய்களை விற்று வந்தேனல்லவா ? அதிலிருந்து கிடைத்த பணத்தை அவ்வப்போது தபாலாபீசில் சிறு சேமிப்பாகக் கட்டி வந்தேன். தபால் ஆபீசில் 300 ரூபாய் சேர்ந்திருந்தது. நேற்றைய முன்தினம் ஊரிலிருந்து என் தம்பி வந்தான். அவனிடம் உங்களுக்கு ஒரு வாட்ச் வாங்க வேண்டுமென்று சொன்னேன். அவனுக்குத் தெரிந்த ஒரு கடையில் புது வாட்ச் வந்திருப்பதாகவும், ரூபாய் 250 கொடுத்தால் வாங்கிவிடலாமென்றும் சொன்னான். தபாலாபீசிலிருந்து 250 ரூபாயை வாங்கி வந்து தம்பியிடம் கொடுத்தனுப்பினேன். அவன் நேற்று இந்த வாட்சை வாங்கிவந்து கொடுத்து விட்டுப் போனான்.''

'' அமுதா! நீ மிகவும் கெட்டிக்காரி ! பரிசுக்குப் பரிசு அளித்து விட்டாய் !'' என்று கூறிவிட்டு முத்து சாப்பிட ஆரம்பித்தான்.

தங்கச்சங்கிலியின் பளபளப்பை அடிக்கடி பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் முத்து. அவனுக்கு அன்பு மனைவி அமுதா படைத்த சோறும் அமுதமாகவே இருந்தது ! கைக்கடிகாரத்துடன் உள்ள கணவன் அவளுக்கோ அழகுத் தெய்வமாகவே காட்சியளித்தான் !



ஏர்க்காடு அண்ணா பூங்கா அருகே வந்து நின்றது அந்த ஊர்தி. பிரபல திரைப்பட இயக்குநர் இளந்திரையன், உதவி இயக்குநர் உத்தமராயன், ஒளிப்பதிவாளர் உலகளந்தான் ஆகியோர் ஊர்தியிலிருந்து வெளிப்போந்தனர்.

இயக்குநர் அந்த இடத்தில் நின்றபடியே ஒரு கண்ணோட்டம் விட்டார். '' ஆகா என்ன அருமையான இடம் ! '' என்று அவர் வாய் முணுமுணுத்தது.

மேட்டுப்பகுதியில் பூங்கா. எதிரே படகுத்துறை உள்ள பெரிய ஏரி. ஏரியில் சுற்றுலா வந்த புதுமணமக்கள் இருவர் படகுச் சவாரியை அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஏரியின் பின்னணியிலே குன்று போல் சிறிது உயர்ந்த இடத்தில் மரங்களிடையே வட்டார வளர்ச்சி அதிகாரியின் அலுவலகக் கட்டடம். பூங்காவின் அருகே தேநீர் விடுதி. பக்கத்திலேயே காஃபி வாரியத்தின் காஃபித் தோட்டம். இவைதான் அவரை அவ்வாறு பாராட்ட வைத்தன.

''கதாநாயகி காஃபித் தோட்டத்தில் கூலி வேலை செய்பவள் தானே! எனவே, சுற்றுலா வந்த வாலிபர் அவளை இங்கு சந்திப்பதாக அக்காட்சி அமைக்கலாம். பூங்காவிலும், ஏரியிலும் சிருங்காரக் காட்சிகளைப் படமாக்கலாம் '' என்றார், இயக்குநர். உதவி இயக்குநர் உடனே அதைக் குறித்துக் கொண்டார். ஒளிப்பதிவாளர், காட்சி அமைப்பைப் பார்க்கும் சிறிய கண்ணாடியினால் காட்சிகளை எப்படி அமைக்க வேண்டும் என்பதனை அப்போதே சரி பார்த்துத் தன்னுடைய மனக் கண்ணில் பதிய வைத்துக் கொண்டார்.

'' ஊம்; அடுத்த இடத்திற்குச் செல்லலாம் ! '' என்றார் இயக்குநர். வண்டி நகர்ந்தது. இயக்குநர் திரைப்படத் தொழிலில் அனுபவம் மிக்கவர் என்றாலும், ஏர்க்காட்டுக்குப் புதியவர். இப்போது தான் முதல் முதலாக அவர் ஏர்க்காட்டிற்கு, அதுவும் படப்பிடிப்பிற்காக வந்திருந்தார். சென்னையில் கடும் வெய்யிலில் பணியாற்றிப்பழக்கப் பட்ட அவருக்கு இங்குள்ள '' ஜில்லென்ற '' இதமான பருவநிலை உற்சாகத்தைத் தந்தது. சாலையோரங்களில் பற்பல வண்ணத்தில் பூத்துக் குலுங்கும் காட்டுப் பூக்களும், இல்லங்கள்—பூங்காக்களில் எழில் சிந்தும் டாலியா—சாமந்திப்பூ வகைகளும், வண்ணப் படத்திற்கு வளமான காட்சிகளாகத் தென்பட்டன. வண்ணப்படத்திற்கு மட்டுமல்ல. ஏர்க்காட்டிற்குச் சுற்றுலா வருவோர் அனைவரையும் கவர்ந்து இழுக்கும் காந்த சக்தி அந்த அழகு மலர்களுக்கு நிச்சயம் உண்டு!

ஊர்தி, மலையின் ஒரு பகுதிக்கு வந்தது. பூஞ்செடிகளுக்கு மத்தியிலுள்ள சிறிய பாதை வழியாக அவர்களை அழைத்துச் சென்றார் உதவி இயக்குநர். அங்கு ஒரு பாறை மீது வட்ட வடிவமாக இரும்புக் கம்பிகளினால் கட்டப்பட்டிருந்தது; அங்கிருந்து மலைச் சரிவுகளிலுள்ள எழில் மிகு இயற்கைக் காட்சிகளைக் காணுவதற்காக! '' ஐயா, இதுதான் ' பெண் இருக்கை ' ; அதாவது ' லேடீஸ் சீட் ' என்றார் உதவி இயக்குநர்.

'' என்ன லேடீஸ் சீட்டா..?''

'' ஆமாம் · முன்பு இங்கு இந்தக் கம்பி வைத்துக் கட்டப்படவில்லை. வெறும் மொட்டைப் பாறைதான் இருந்தது. அந்தப் பாறை மீது அமர்ந்து, இயற்கைக் காட்சிகளை அனுபவிக்கலாம். பாறை இருக்கைதான் லேடீஸ் சீட் என்று பெயர் பெற்றது. இங்கிருந்து பார்த்தால் பாம்பு போல் வளைந்து செல்லும் மலைச்சாலையும், மாக்னசைட், கனிப்பாறையும் தூரத்தில் மேட்டூர் அணையின் நீர்த்தேக்கமும் தெரியும். இன்னொரு சுவையான விஷயம். கலைஞரின் ' மந்திரி குமாரி ' திரைப்படத்தில் '' வாராய் நீ வாராய் ! '' என்று அழைத்துச் செல்லும் வில்லனை, மந்திரி குமாரி மலையிலிருந்து தள்ளும் காட்சி வருகிறதே, அது இந்த இடத்தில் தான் படமாக்கப் பட்டது · ''.

'' அப்படியா? எங்கே பார்ப்போம்.... '' இயக்குநர் அந்த இடத்திலிருந்து மூவாயிரம் அடிக்குக் கீழுள்ள தரையில், தொலை தூரத்தில் தெரியும் ' மாக்னசைட் ', சுரங்கப் பகுதிகளையும் மற்றவற்றையும் தொலை நோக்காடியில் பார்த்தார்.

'' வில்லன் அந்தச் சுரங்கத்திற்கு வெடி வைக்கப்போகிறான். அதை இங்கிருந்து ஒரு '' ஸூம் '' போட்டுப் படமாக்கினால்........ பிரமாதமாய் இருக்கும் இல்லையா ? ''

'' சந்தேகமே இல்லீங்க ! எனக்கும் அதே யோசனைதான் தோன்றிற்று · '' உதவி இயக்குநரும் ஒளிப்பதிவாளரும் சேர்ந்து ஒப்புதல் அளிக்கிறார்கள்.

''அடுத்தது எங்கே ?'' இயக்குநர் கேட்கவும், '' பகோடா முனை'' என்றார் ஒளிப்பதிவாளர்.

'' நேரமானதும் பக்கோடா நினைவு வந்துவிட்டதா?'' இயக்குநர் குறுக்கே மடக்க, '' இல்லீங்க ! பகோடா கோபுரம் மாதிரி கல்லால் கோபுரம் செய்து வைத்திருப்பாங்க. அதனுல்தான் அந்தப் பெயர்....'' என்று விளக்கினுர் உதவி இயக்குநர்.

'' அதனுல் என்ன ? அங்கேயே சாப்பிட்டால் போச்சு; உல்லாசப் பயணம் வந்தது போலிருக்கும் '' என்ருர் இயக்குநர். பாம்புபோல் வளைந்து வளைந்து செல்லும் அம்மலைப் பாதையில் உற்சாகமாகவே பாய்ந்து ஓடியது உந்து வண்டி.

இயற்கை அழகும், இசை பாடிடும் புள்ளினங்களின் குரலும் கவின்மிகு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. தன்னை மறந்த இயக்குநர் ஒரு திரைப்படப் பாடலை ராகத்தோடு பாடினுர். சென்னையில் படப்பிடிப்பின்போது சதா கடுகடு வென்றிருக்கும் இயக்குநரின் மனத்தையும் கனிய வைத்த ஏர்க்காட்டின் சூழ்நிலையை வாயார வாழ்த்திக் கொண்டு வந்தனர் ஒளிப்பதிவாளரும் உதவி இயக்குநரும்.

பகோடா முனையிலுள்ள பழைய கோவிலும் மொட்டை மரங்களுங்கூடக் கலை அம்சத்தோடு காணப்பட்டன.

அங்கிருந்து நோக்கினுல், வெகு துரத்தில் ஆங்காங்கே பரந்து கிடக்கும் மலைப் பகுதிகளும், குக்கிராமங்களும், நகர்ப்புறமும் ரம்மியமாகக் காட்சியளித்தன. அனைவரும் உணவருந்த அமர்ந்தனர்.

உணவோடு போராடியதாலோ என்னவோ உதவி இயக்குநருக்குச் சண்டைக் காட்சியின் நினைவு வந்துவிட்டது.

'' என்னங்க ! இந்த இடத்திலே வில்லன், கதாநாயகனேடு மோதும் காட்சிகளைப் படமாக்கினுலென்ன ? இதோ இந்த மொட்டை மரத்தில் தொங்கிக் கொண்டு சண்டையிடுவதைப் பள்ளத்தாக்கின் பின்னணியுடன் படமாக்கினுல் அற்புதமாக அமையுமே '' என்ருர் அவர்.

'' அருமையான ஐடியா அய்யா ! அப்படியே செய்வோம் '' என்று ஆமோதித்தார், இயக்குநர்.

இந்நேரத்தில் அங்கு தலையைச் சொறிந்தபடி நின்ருன் ஒரு இளைஞன். அவன் கையில் தேன் தட்டுகளும், ஒரு கூடையில் வால் பேரிக்காய்களும், கொய்யாப்பழங்களும் இருந்தன. ஏர்க்காடு பகுதிகளில் நடக்கும் வெளிப்புறக் காட்சிப் படப்பிடிப்புகளில் துணை நடிகனுகத் தலைகாட்டுபவன், அந்த இளைஞன். திரைப்பட இயக்குநர் வந்திருக்கிருர் என்பதை அறிந்து அங்கு வந்திருந்தான். '' இங்கே இந்தப் பழங்கள் நிறைய விளையுதுங்க. இது நம்ம தோட்டத்திலே உள்ளது. ஐயாவுக்காக எடுத்து வந்தேன்!'' மீண்டும் தலையைச் சொறிந்தான். உதவி இயக்குநர் புரிந்து கொண்டார். '' சண்டைக் காட்சிகள் படமாக்கும் போது வா பார்த்துக்கலாம் '' என்ருர்.

'' இங்கு வேறு என்னென்ன முக்கிய பகுதிகள் உள்ளன ? உண்ட மயக்கத்தோடு கொஞ்சம் கேட்கலாம். ''—இயக்குநர் கேட்க, உதவி இயக்குநர் விவரித்தார்.

'' கிளியூர் அருவி இருக்குதுங்க. 75 அடி உயரத்திலிருந்து விழுகிறது. துள்ளிவரும் அருவியின் அழகே அழகு ! பின்னணியில் குகைபோன்ற பாறைகளும் உள்ளன. சூரிய வெய்யிலில் அக்காட்சி படத்திற்கு மிகப் பொருத்தமாக இருக்கும்.

' ஆர்த்தர் இருக்கை ' என்று மற்ெறுரு முனை உள்ளது. அங்கிருந்து பார்த்தால் பாங்கான பள்ளத்தாக்கும், தோட்டத்தின் நடுவேயிருக்கும் சிங்கார மாளிகைகளும், பெரிய ஏரியும் நன்கு தெரியும்.

இங்கு ' மாண்ட் போர்ட் ' என்ற ஆண்கள் பள்ளியும், மகளிருக்கான ' புனித இதய' ப் பள்ளியும் உள்ளன. இரண்டும் உலகப்புகழ் பெற்றவை. பல்வேறு நாட்டிலிருந்து மாணவர்கள் இப்பள்ளிகளில் வந்து பயிலுகின்றனர்.

அப்புறம் லூப்.... . ''

'' அது என்னய்யா குடும்ப நலத் திட்டத்தைக் குறுக்கே கொண்டு வர்றீங்க . ''

'' அந்த லூப் இல்லீங்க. இது லூப் ரோடு. இந்தச் சாலை பெரிய ஏரி அருகே ஆரம்பமாகிறது. 'அப்படியே காரிலோ, சைக்கிளிலோ ஒய்யாரமாகச் சென்ருல், நாகலூர், காவேரி சிகரம் வழியாகச் சென்று மீண்டும் பெரிய ஏரிக்கே வந்து சேருகிறது ; வளைவான சாலை!''.

''ஆமாம், இதற்கு ஏர்க்காடுன்னு எப்படிப் பெயர் வந்தது ?''

'' இந்த மலைப்பகுதிக்குச் சேர்வராயன் மலை என்பது பொதுப் பெயர். மலை உச்சிமீது (50000 அடி உயரத்தில்) சேர்வராயன் கோயிலிருப்பதால் இதற்குஅந்தப் பெயர் வந்தது. இந்த மலைப் பகுதிகளில் மொத்தம் 67 கிராமங்கள் உள்ளன. அதில் இந்தப்பகுதி, ஏரியை ஒட்டி உள்ளதால் ஏர்க்காடு(ஏரி+காடு) என்று ஆயிற்று.1820-ம் ஆண்டில்



இருந்து 1829 வரை எம். டி. காக்பர்ன் என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார். அவர்தான் இந்தப்பகுதி முன்னேறக் காரணமாக இருந்தவர். அவர் இங்கு ' கிரெஞ்ச் ' என்ற பெயரில் ஓர் இல்லம் அமைத்தார். அந்த மாளிகையும் அதைச் சுற்றியுள்ள காஃபித் தோட்டமும் இன்றுங்கூட அதே ' கிரெஞ்ச் ' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. காக்பர்ன், வீடு மட்டும் கட்ட வில்லை. அரேபியாவிலிருந்து காஃபியைக் கொண்டு வந்து பரப்பவும், தென் ஆப்பிரிக்காவிலிருந்து ஆப்பிள் போன்ற பழ வகைகளைக் கொண்டு வந்து பயிரிடச் செய்யவும் காரணமாக இருந்தார்.

''அவரைத் தொடர்ந்து பல மேலை நாட்டினர் இங்கு வந்து ஓய்வு இல்லங்கள் அமைத்தனர். ஏர்க்காடும் ஒரு சிறந்த சுற்றுலாப் பகுதியாக மாறியது. இப்போது சுற்றுலா வருபவர்களுக்காகத் தமிழக அரசு பல வசதிகளைச் செய்து வருகிறது. நல்ல சாலைகள், பூங்காக்கள், முதலியன அமைத்து வருகின்றனர். அண்ணு பூங்காகூடச் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டது தான். நம்மைப்போல் படப்பிடிப்பாளர்கள் மட்டுமல்லாது ஏராளமான சுற்றுப்பயணிகளும், கோடை காலத்தில் ஓய்வு எடுக்க வருகிறவர்களும் இங்கு வருகிருர்கள். சேலம் இங்கிருந்து 19 மைல் தான். அடிக்கடி பேருந்து வசதியும் உள்ளது. பிப்ரவரியிலிருந்து ஜூன் முடிய நல்ல பருவநிலை இருக்கும்.''

'' இங்கு தங்குவதற்கு வசதிகள் உள்ளனவா ?'' இயக்குநரின் கேள்வி.

'' இருக்கின்றன ; அரசினரின் சுற்றுலா மாளிகையிருக்கிறது. அதில் வசதியான அறைகள் உள்ளன. இரயில்வேயினர் தங்கள் தொழிலாளர்களுக்காக ஓய்வு இல்லம் அமைக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். அதுதவிர ' அனைத்துலக இளைஞர் விடுதி ' ஒன்றையும் இங்கு ஏற்படுத்த முயற்சி நடக்கிறது. அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு, பார்வையிழந்தோர் பள்ளி ஒன்று அமைக்கவும் திட்டமிட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க அதன் அமைப்பாளர் திரு தேஷ்முக் சமீபத்தில் இங்கு வந்து இடங்களைப் பார்வையிட்டுச் சென்ருர்.''

'' ஏதோ மருந்துத் தைலம் தயாரிக்கிறதாகக்கூடக் கேள்விப் பட்டேனே . ''

''ஆமாம். இந்திய விஞ்ஞானத் தொழில் ஆய்வுக் குழுவினர் ' ஜெரேனியம் ' என்ற செடியிலிருந்து தைலம் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்கள். தாவரயியல் ஆய்வும், இங்கு உள்ளது. அதில் நூற்றுக்கணக்கான பூச்செடிகளையும் மருந்துச் செடிகளையும் பயிரிட்டு ஆய்வு செய்கின்றனர்.''

'' மழை வரும் போலிருக்கு; நாம் புறப்படலாம்!'' இயக்குநர் ஆணையைத் தொடர்ந்து ஊர்தி புறப்படுகிறது.

'' அய்யா, வண்டியை எங்கே போகச் சொல்ல ? '' உதவி இயக்குநர் கேட்க, '' கிள்ளியூர் அருவிக்குப் போகட்டும்!'' என்று இயக்குநர் பதிலுரைத்தார்.

'' நாளைக்குச் சென்னை போக ஏற்பாடு செய்யலாமா ? '' உதவி இயக்குநர் மீண்டும் கேட்டார்.

'' இவ்வளவையும் சொல்லி விட்டு உடனே சென்னைக்குப் போகணும்னு சொல்றீங்களே ! நாலு நாளைக்கு ஏர்க்காட்டிலே தங்கியிருந்து ஏர்க்காட்டின் இயற்கையழகையும் இனிய சூழ்நிலையையும் அனுபவித்துவிட்டுப் போகலாமே ? உங்களுக்குச் சம்மதந்தானே . '' என்று இருவரையும் வினவினுர், இயக்குநர்.

'' கரும்பு தின்னக் கூலியா ? ஜாலியா தங்கிப் போகலாம் !'' என்று சொல்லியவாறு பலமாகத் தலையசைத்தார்கள் ஒளிப்பதிவாளரும், உதவி இயக்குநரும்.

சிலுசிலுவென்ற ஏர்க்காட்டின் இதமான காற்று அவர்களின் உள்ளத்திற்கு மேலும் மகிழ்வூட்டியது. அவர்களை மட்டுமல்ல, சுற்றுலா வரும் எவரையும் கவரக்கூடியது இந்த எழில்மிகு ஏர்க்காடு.

ஓய்வு ஊதிய உயர்வு.

ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் குறைந்த பட்ச ஊதியம் ரூ. 20 ஆக இது வரை இருந்து வந்தது. அதை ரூ. 30 ஆகத் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. 1970 மார்ச் திங்கள் முதல் இது அமுலாகிறது.

வெண்பாப் போட்டி- 3

ஈற்றடி : **காணக் குளிர்ந்ததே கண் !**

முடிவு நாள் : 16—11—1970

பரிசு: ஓராண்டு '**தமிழரசு**' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
" தமிழரசு " அலுவலகம்,
அரசினர் அச்சகம்,
சென்னை-1.

குறிப்பு: நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும்; முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா !

வண்ணப் படங்களில்

39 ஆம் பக்கத்தில்

1. தமிழகம் வந்த 'அனைத்துலக நிதி' யின் நிர்வாக இயக்குநர் திரு சுவிட்சருக்குத் தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் அளித்த விருந்தில், தமிழக முதல்வரும் தொழிலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டனர்.

2. சென்னைக்கு வந்த ரிசர்வ் வங்கித் தலைவர் திரு எஸ். ஜெகநாதன் அவர்களுக்குத் தமிழக முதலமைச்சர், இராஜாஜி மண்டபத்தில் 18—10—70 அன்று அளித்த தேநீர் விருந்தில், முதல்வர், ரிசர்வ் வங்கித் தலைவர், கூட்டுறவு அமைச்சர் ஆகியோர்.

3. தமிழகத்தில் வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவி பற்றி சென்னைக் கோட்டை அமைச்சரவை அறையில் 19—10—70 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தமிழக முதல்வர், ஏனைய அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருடன் ரிசர்வு வங்கித் தலைவர் கலந்துரையாடினார்.

4&7 மதுரையில் சுற்றுலா வளர்ச்சிக் குழுவின் 14-வது கூட்டத்தைத் தமிழக ஆளுநர் அவர்கள் 18—10—70 அன்று துவக்கி வைத்து உரையாற்றினார். சுற்றுலா அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து, மத்திய சுற்றுலா அமைச்சர் டாக்டர் கரன் சிங் ஆகியோரும் உள்ளனர்.

5. ஆஸ்திரேலியா சென்று தமிழகம் திரும்பிய நமது சட்டமன்ற மேலவைத்தலைவர் திரு சி. பி. சிற்றரசு அவர்களை, முதல்வரும் ஏனைய அமைச்சர்களும் சென்னை விமான நிலையத்தில் வரவேற்கின்றனர்.

6. குடிசைப்பகுதி மாற்று வாரியத் துவக்க விழா. வீட்டு வசதி வாரியத் தலைவர் வரவேற்புரை ஆற்றுகிறார். அந்த விழாவில் கலந்து கொண்ட தமிழக முதல்வர், உணவு-உள்ளாட்சி அமைச்சர், வாரியத் தலைவர், திரு. அரங்கண்ணல் திரு. முரசொலி மாறன் ஆகியோர்.

42 ஆம் பக்கத்தில்

1. செங்கல்பட்டு மாவட்டம், அகரம் கிராமத்தில் நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்தை, முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் தமிழக ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் துவக்கி வைக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் திரு சி. வி. எம். அண்ணாமலை அருகில் இருக்கிறார்.

2. சென்னையில், தமிழகப் புலவர் குழுவுக்கு நடந்த வரவேற்பின்போது, முதல்வர் நிவாரண நிதியிலிருந்து புலவர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு ரூபாய் வழங்கினார் தமிழக முதல்வர். மகா வித்வான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் முதல்வரிடமிருந்து நூறு ரூபாய் அடங்கிய கைப் பையைப் பெறுகிறார்.

3. உலகின் தரமான பொருட்கள் நாள், சென்னை இராஜாஜி மண்டபத்தில் 14-10-1970 அன்று தமிழக ஆளுநரால் துவக்கி வைக்கப்பட்டது. அதனையொட்டி நடைபெற்ற கண்காட்சியை ஆளுநர் பார்வையிடுகிறார்.

4. சென்னை, அடையாறு, கோட்டூர் பகுதியில், சமூக சேவை மையத்தின் இளையினைப் பொதுப்பணி அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் திறந்துவைத்து, ஏழைகளுக்கு வழங்குவதற்கான உடைகளைப் பார்வையிடுகிறார். அருகில் மறைத் திரு பி.டி. அருளப்பா இருக்கிறார்.

5. அனைத்திந்திய ஓமியோபதி மருத்துவ மாநாடு சென்னை இராஜாஜி மண்டபத்தில் அக்டோபர் 9-ஆம் நாள் நடைபெற்றது. தமிழக முதல்வர் அம் மாநாட்டினைத் துவக்கி வைக்க, வேளாண்மை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் விஞ்ஞானக் கருத்தரங்கினைத் துவக்கி வைத்தார்கள். முதல்வரும், வேளாண்மை அமைச்சரும் ஓமியோபதிக் கண்காட்சியைப் பார்வையிடுகின்றனர்.

6. 7. செங்கல்பட்டு மாவட்டம், திம்மாவரத்தில் நவீன அரிசி ஆலையைக் கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் திறந்து வைக்கிறார். தமிழ் நாடு கூட்டுறவுக் கொள்முதல் கழகத் தலைவர் திரு. மன்னை. நாராயணசாமி எம்.எல்.சி. அருகில் இருக்கிறார்.

மையப் பக்கங்களில்
ஏர்க்காடு.

1. மலைப்பகுதி மாளிகை.

2. அண்ணா பூங்காவில் ஓர் ஆரணங்கின் சிலை.

3. & 9. ஏரியிலே ஒய்யாரமான படகுச் சவாரி.

4. வண்ண மலர்த் தோட்டம்.

5. ஏரியில் நீந்தும் சுற்றுலாப் பயணிகள்.

6. ஏரிக்காடு என்ற பெயர் பெற்றது இதனால்தான்!

7. காஃபித் தோட்டம்.

8. 'பெண் இருக்கை' யிலிருந்து இயற்கை அழகைக் கண்டு மகிழும் சுற்றுலாக் குழுவினர்.

10. அண்ணா பூங்கா.

11. 'பெண் இருக்கை' யின் பழைய தோற்றம்.


AND SPLENDOUR OF SCENERY

ஏழையின் புன்னகை

"ஏழையின் புன்னகையிலே இறைவனைக் காண்கிறேன்'' எனச் சொன்னார் அறிஞர் பெருந்தகை.

இன்று, அந்த ஏழையின் முகத்திலே புன்னகை பூத்திடச் செய்ய வேண்டும் என்ற இலக்குடன், ''குடிசைப் பகுதி மாற்று வாரியம்'' ஏற்படுத்தியுள்ளது தமிழ் நாடு அரசு.

தமிழகத்திற்குப் பலசிறப்புகள்—பெருமை தரும் தலங்கள்—உண்டு. அவற்றில் சிங்காரச் சென்னை மாநகரமும் ஒன்று. ஆனால் அந்தச் சிங்காரச் சென்னையின் திருவுருவின் அழகைக் குறைப்பதாக உள்ளன நகரமெங்கும் பரந்து கிடக்கும் பல குடிசைப் பகுதிகள். நகரத்தினை அழகுபடுத்தும் பணியிலுள்ள தொழிலாளர்கள், பல மாடிக் கட்டடங்களை உருவாக்கும் புனிதக் கரங்கள், செல்வ வளத்தினைப் பெருக்கிடும் தொழிற் கூடங்களில் அயராது உழைத்து வரும் சகோதரர்கள், சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கும் சாக்கடைப் பகுதிகளுக்கு மத்தியில் குடிசைஅமைத்து வாழும் நிலை, விஞ்ஞான யுகத்தில் வேதனைப்பட வேண்டிய அவல நிலையேயாகும்!

இந்த நிலையை மாற்றுவதற்குக் குடிசைகளுக்குப் பதில், வசதியான குடியிருப்பு இல்லங்களை அமைத்துக் கொடுக்கும் பணியில் அரசு ஈடுபட்டது. ஆனால், இதுகாறும் அந்தப் பணியைத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் பல்வேறு பணிகளிடையே மேற்கொண்டிருந்தது.

எந்தப் பணியையும் விரைவில் முடித்திட வேண்டும் என்ற வேக மிக்க இந்த அரசு, இத் திட்டத்தையும் ஒரு குறுகிய கால வரையறைக்குள் முடித்துவிட வேண்டும் என்று விரும்பியது.

அதன் பலனாகக் குடிசைகளை மாற்றி அமைக்கும் பணிகளுக்கு மாத்திரம் தனியாக ஒரு வாரியத்தை—குடிசை மாற்று வாரியத்தைத் தமிழ் நாடு அரசு துவக்கியுள்ளது. கடந்த 19—10—70 அன்று மாலையில் வீட்டு வசதி வாரியத்தில், இந்தக் குடிசை மாற்று வாரியத்தினைத் துவக்கி வைத்தார்கள், . தமிழ் நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள்.

இந்தியாவிலேயே குடிசைகள் மாற்றுத்திட்டத்திற்காக முதலில் தனி வாரியம் நியமித்துள்ளது என்ற பெருமை இதன் மூலம் தமிழகத்திற்குக் கிடைக்கிறது.

15 உறுப்பினர்களைக் கொண்ட இந்த வாரியத்தின் தலைவராகத் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வாரியம், தனது முதல் கட்டப் பணியாகச் சென்னை சைதாப்பேட்டைப் பகுதியில், உள்ள வெங்கடாபுரத்தில் புதிய குடியிருப்புகளை நிர்மாணிக்கிறது. 30 லட்ச ரூபாயில் 402 இல்லங்கள் கட்ட இதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்று மாடி, நான்கு மாடிக் கட்டடங்களாக இவை கட்டப்

படும். ஒவ்வொரு கட்டடத்திலும் 18, 28, 42 என்று பல இல்லங்கள் இருக்கும்.

ஓர் இல்லத்தில் ஒரு பொது அறை, ஒரு சமையல் அறை, குளியல் அறை, கக்கூஸ், வராந்தா ஆகியவை இருக்கும்.

40 ரூபாய் வாடகை மதிப்புள்ள இந்த இல்லம், குடிசையில்வாழும் ஏழை மக்களுக்கு 10 ரூபாய் வாடகைக்கு விடப்படும். மீதி வாடகை நட்டத்தை அரசே ஏற்றுக்கொள்ளும்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு பகுதிகளிலுள்ள குடிசைகளை இந்த வாரியம் மாற்றி அமைக்கும். 7 ஆண்டு காலத்திற்குள் இத் திட்டங்கள்அனைத்தையும் செயல் படுத்திக் குடிசைவாழ் மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்த இவ்வாரியம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது. பரிசுச் சீட்டிலிருந்து கிடைக்கும் இலாபத்தில் 50 லட்ச ரூபாய் உட்பட, ஒன்றரைக் கோடி ரூபாய், முதல் ஆண்டில் இதற்காகச் செலவிடப்படும்.

வெங்கடாபுரம் திட்டத்தில் இதுவரை 72 குடியிருப்பு இல்லங்கள் கட்டிமுடிக்கப்பட்டுக் குடிசை வாழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது 252 குடியிருப்புகள் கட்டப்படவிருக்கின்றன.

கால்கோள் விழாவினைத் துவக்க வந்த முதல் அமைச்சரை, சைதை நடராஜன் நாதசுரக் குழுவினரின் இனிய நாதம் வரவேற்க, வாணங்கள் முழங்க, மத்தாப்புக்கள், ஒளிவீசித், தோரணங்கள் கட்டப்பட்ட சாலையின் இரு மருங்கும் பூப்பொறிகளை அள்ளி வீசப், பூக்கள் தூவி, மாலை அணிவித்து வரவேற்றனர் அப்பகுதிக் குடிசை வாழ் மக்கள். அவர்களது வருங்கால வாழ்வினை மலரச் செய்யும், செம்மைப் படுத்தும் முதல்வர் அல்லவா அவர்! எனவே தான் வரவேற்பிலே அத்துணை உற்சாகம்; பூரிப்பு !

கட்டடங்கள் எழும்பவிருக்கும் பகுதிகளைச் சுற்றிப் பார்த்த பின், விழா மேடைக்கு வந்தார் முதல்வர்.

விழா, ''நீராரும் கடலுடுத்த'' என்னும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. உணவு—உள்ளாட்சி அமைச்சர் திரு. ப.உ. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

விழாவில் முதல்வர் பேசும் போது, '' இது புனிதமான நாள் என்றால், அது இரு கருத்துக்கு இடமின்றி எல்லாரும் ஏற்றுக் கொள்ளத் தக்க நற் கருத்தாகும். சென்னை நகரின் முகத்தை மாற்றும் திட்டம்என்று பாராளுமன்ற உறுப்பினர்மாறன் குறிப்பிட்டார். இப்போது சென்னை நகரம் அழகான முகம் படைத்த தென்றாலும் ஆயிரக் கணக்கான குறு மருக்கள் நிறைந்ததுபோல், குடிசைகளில் ஏழை மக்கள் துன்பங்களிடையே வாழ்வது, பொலிவிழந்து கிடக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஏழையின் வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டுமென்ற நீண்ட நெடு நாளைய ஆசைக் கனவு, இன்று நிறை வேறுகிறது. வீட்டு வசதி வாரியம் என்ற பெயரால் நல்ல பல காரியங்களைச் செய்து முடித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் எனது நண்பர், முன்னாள் அமைச்சர் மாண்புமிகு வெங்கட்ட ராமன் அவர்களை, அண்ணாவின் வழி வந்தவன் என்ற காரணத்தால் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாகவும் முனைப்பாகவும் இந்தக் காரியம் செயல் பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதலில் சென்னையிலும் அடுத்தபடியாக நமது தமிழகத்தின் மற்ற பகுதிகளுக்கும் இந்தப்பணிகளைத் தொடர்ந்திட அந்த வாரியத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

என்னைப் பொறுத்தவரையில் நான் யாரை மறந்தாலும், குடிசை வாழ் பகுதி மக்களை மறக்க முடியாது. 1967-ல் நான் இந்த வெங்கடாபுரம் பகுதியிலுள்ள கோட்டூரிலே கொலைசெய்யப்பட விருந்த போது என்னைக் காப்பாற்றிய இடம் ஏழையின் குடிசைதான். என்னைக் காப்பாற்றிய குடிசையை நான் உயிருள்ள மட்டும்மறக்க மாட்டேன். இது எனது நன்றிக் கடன் என்று சொன்னாலும் மிகையாகாது.

குடிசை மாற்றுத் திட்டத்திற்காக 1970-71-க்கு சுமார் ஒரு கோடி ரூபாய் அளவில் ஒதுக்கியிருந்தோம். பரிசுச் சீட்டிலிருந்து 50 லட்சம் சேர்த்து ஒன்றரைக் கோடி ரூபாய் செலவிட முடிவு செய்துள்ளோம். அடுத்த ஆண்டும் சேர்த்து 5 கோடி ரூபாய் குடிசை மாற்றுவதற்காகப் பயன் படுத்தப் படும். 7 ஆண்டுக் காலத்திற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கத் திட்டமிட்டிருக்கிறோம்

இது ஏழு ஆண்டுத் திட்டம், ஏழை ஆண்டுத் திட்டம் என்றாலும் பொருத்தமாகவே யிருக்கும்.

ஆனால் இந்த நிதி கூடப் போதாது ! இதற்கான முதலமைச்சர் நிதிக்கு குதிரைப் பந்தய சங்கத்தார் 2 லட்சம் ரூபாய் தர இசைந்துள்ளனர்.

இது போல் சென்னை மாநகரிலுள்ள வாரி வழங்கும் தன்மை படைத்தவர்கள் இந்த வாரியத்திற்கு வாரி வழங்கிட வேண்டும்.

இது தவிர எல்.ஐ.சி. யிடமிருந்தும் கடன் உதவி பெறலாமென நினைக்கிறோம். அதோடு மத்திய அரசிடமிருந்தும் பெருந்தொகையை எதிர்பார்க்கிறோம்.

நான் பந்தயக் குதிரை போல் ஓடக் கூடியவன் என்று அடிக்கடி குறிப்பிடுவேன். எனவே இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பந்தய மைதானத்தில் ஜீப் காரில் தொடர்வது போன்றுவது தொடர வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏழைகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் வண்ணம் ஏழாண்டுக்காலத்திற்குள் இத்திட்டத்தை முடிப்போம் என்று இந்த நேரத்தில் சூளுரை எடுத்துக் கொள்வோம் '' என்று கூறினார்.

துப்பும் மீன்கள்.

புழுவைப் பிடிப்பதற்காக நீரை அதன்மீது உமிழும் ஒருவகை மீன்கள் உள்ளன. தண்ணீருக்கு மேலுள்ள செடியிலுள்ள புழுவின் மீது குறிபார்த்துத் தண்ணீரை உமிழ்கின்ற இவற்றின் குறி ஒருபோதும் தவறுவதேயில்லை. புழுவின்மீது நீர் தாக்கியதும் புழு தண்ணீரில் விழுகிறது. உடனே மீன் பாய்ந்து சென்று அந்தப் புழுவை விழுங்கிவிடுகிறது.

உணவு உள்ளாட்சித் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :—''இதய சுத்தியோடு துவங்கப்பட்ட திட்டமிது. இந் நாட்டின் அடித் தளத்திலுள்ள மக்களுக்கு மறுமலர்ச்சி—புது வாழ்வு ஏற்படுத்தும் நோக்கத்தோடு செய்யப்பட்டது. சென்னையை அழகு படுத்துவது மட்டும் இதன் நோக்கமல்ல. சுகாதாரமற்ற நிலையினைப்போக்கி முன்னேற்ற மடையச் செய்ய வேண்டும் என்பதும் இதன் நோக்கமாகும். எனவே சென்னை நகர மக்கள் அனைவருமே இதனால் பயனடையப் போகின்றனர்.

முதல்வர் கலைஞர் அவர்கள் எங்களோடு கலந்து ஆலோசனை செய்து, சட்ட வல்லுநர்களின் ஆலோசனை கேட்டு, அதிகாரிகளுடன் பேசி, இந்த வாரியம் ஏற்படுத்துவதைத் தவிர இதற்கு வேறு வழியில்லை எனக் கண்ட பின்பே இதனைத் துவக்க முடிவு செய்தார்கள். சுறுசுறுப்பான திரு. அரங்கண்ணல் அவர்களை இதற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது பாராட்டத்தக்கது.

குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. வாரிய உறுப்பினர் திரு முரசொலி மாறன் எம்.பி. ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. டி. வி. வாசுதேவன் வரவேற்புரை நிகழ்த்த, மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு. ஸ்ரீதர் நன்றி கூறினார்.

உறுதியான

உயர்ந்த

செங்கற்களுக்கு

காவேரி

பிரிக் ஒர்க்ஸ்

தொழிலகம்:
கொள்ளிடச்சாலை,
(அன்பில்)
தொலைபேசி எண் :
இலால்குடி-62.

அலுவலகம்:
77. மதுரை சாலை,
திருச்சிராப்பள்ளி-8.
தொலைபேசி எண் :
6926.

சிறு சேமிப்பு ஓர் ஒளிவிளக்கு

குல விளக்காம் உங்கள் மகன் கல்வி பெற....

திரு விளக்காய் உங்கள் மகள் மணவாழ்வு பெற....

பெருவிளக்காய் உங்கள் வருங்காலம் சீர் பெறவே....

ஒளிவிளக்காய் வழிகாட்டும் சிறுசேமிப்பு...

இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

இயக்குநர்
சிறு சேமிப்பு நிறுவனம்
சென்னை-9

சாதனைச் சரிதம் பாரீர்

பாசன வசதி பெருகுது! பசுமைப் புரட்சி ஓங்குது!

தமிழ்நாடு அரசு

பொதுப் பணித் துறையின்

புதிய நீர்ப் பாசனத் திட்டங்கள்

மதுரை மாவட்டம்	பாலாறு-புரந்தலாறுத் திட்டம்...	ரூ. 256 இலட்சம்
	பரப்பலாறுத் திட்டம்	ரூ. 37 இலட்சம்
	வைகைக் கால்வாயைச்சீரமைத்தல்	ரூ. 400 இலட்சம்
தருமபுரி மாவட்டம்	சின்னாறுத்திட்டம்	ரூ. 108 இலட்சம்
வடஆர்க்காடு மாவட்டம்	தண்டரை அணைக்கட்டுத் திட்டம்.....	ரூ. 47 இலட்சம்
திருச்சி மாவட்டம்	கொல்லிமலை அணைக்கட்டுத் திட்டம்...	ரூ. 255 இலட்சம்
	பொன்னியாறுத் திட்டம்	ரூ. 46 இலட்சம்
இராமநாதபுரம் மாவட்டம்	வைப்பாறுத் திட்டம்	ரூ. 23 இலட்சம்
தென்னார்க்காடு மாவட்டம்	நந்தன் கால்வாய் பொதுப் பணித் திட்டம்......	ரூ 32 இலட்சம்
தஞ்சாவூர் மாவட்டம்	தஞ்சைக் கால்வாய்களைச் சீரமைத்தல்	ரூ 4,980 இலட்சம்

தமிழ்நாடு அரசு உடனடியாக நிறைவேற்றும் இத்திட்டங்களால்
20,000 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்; பயனடையும்!

தமிழகம் எங்கும் பசுமைப் புரட்சி!
உணவு உற்பத்தியில் ஒப்பற்ற வளர்ச்சி!!

பயன் மிகு பருத்தி

'வெள்ளைத் தங்கம்' என்று சிறப்பாகக் கூறப்படும் பருத்தியின் தேவை நாளுக்கு நாள் பெருகுகிறது. நமது பஞ்சாலைகளின் தேவையை ஈடுசெய்யும் அளவுக்கு இந்தியாவில் பருத்தி உற்பத்தியாகவில்லை. இதனால் ஆண்டு தோறும் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள பருத்தியை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறோம். இந்நிலை மாறவேண்டுமானால் பருத்தி மகசூலைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பருத்தி உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெறுவதற்குப் பொறுக்கு விதைகளை உபயோகிக்க வேண்டியதும், இரசாயன உரமிடுவதும், பயிர்ப்பாதுகாப்புச் செய்வதும் மிகவும் இன்றியமையாதவைகளாகும். எனவே பருத்தி மகசூலைப் பெருக்குவதற்குக் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பாக மானாவாரிப் பருத்தியின் மகசூலைப் பெருக்குவதற்கு 'பாரதி' (எம்.சி.யு. 6), 'கே 7' என்ற பருத்தி ரகங்களை விதைக்குமாறு 'தமிழரசு' இதழில் பரிந்துரைக்கப் பட்டிருந்தது. நாட்டு ரகப் பருத்தியைப் பயிரிட்டு ஏக்கருக்கு ரூ. 50 முதல் ரூ. 75 வரை நிகர லாபம் பெறுபவர்களே தமிழ்நாட்டில் ஏராளம். கே. 7 பருத்தியைப் பயிரிட்டால் ஏக்கருக்கு ரூபாய் 250-க்கு மேலும், பாரதி பருத்தியைப் பயிரிட்டால் ஏக்கருக்கு ரூபாய் 500-க்கு மேலும் நிகர லாபம் பெற முடியும். எனவே மானாவாரியாக மேற்படி ரகங்களைப் பயிரிடுமாறு மீண்டும் வற்புறுத்த விரும்புகின்றோம்.

'பாரதி' பருத்திக்கு வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளியும், வரிசையில் செடிக்குச் செடி 25 சென்டி மீட்டர் (10 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். கே 7 பருத்திக்கு வரிசைக்கு வரிசை 45 செ.மீ. (1½ அடி) இடை வெளியும், வரிசையில் செடிக்குச் செடி, 15 செ.மீ. (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

விதைகளை 'கொர்ரு' கலப்பை மூலமோ அல்லது விதைக்கும் கருவி மூலமோ அக்டோபர் மாதத்தில் விதைத்து விடுதலே சிறந்தது.

கோ. 1 உளுந்தை மானாவாரிப் பருத்தியுடன் கலப்புப் பயிராக விதைப்பதனால் ஏக்கருக்கு 150 கிலோ உளுந்து கிடைக்கும். இதன் மூலம் சுமார் ரூ. 225 அதிக வருமானம் கிடைக்கும். ஆனால் இவ்வாறு கலப்புப் பயிர் செய்ய அதிகமாக ஆகக்கூடிய செலவு ரூ. 20 மட்டுமே. ஆகவே கோ. 1 உளுந்தை மானாவாரிப் பருத்தியுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம்.

கலப்புப் பயிர் செய்ய மூன்று வரிசைப் பருத்தி, ஒரு வரிசை கோ. 1 உளுந்து வீதம் விதைக்க வேண்டும். இவ்வாறு கலப்புப் பயிர் செய்வதனால் பருத்திக்கு எந்த விதக் கெடுதலும் ஏற்படாது.

கம்பு அறுவடைக்குப் பிறகு பருத்தி சாகுபடி செய்தால் பருத்தியின் மகசூல் பெருகும். சோளம் அறுவடைக்குப் பின்பு பருத்தி சாகுபடி செய்தால், பருத்தியின் மகசூல் 19 சத அளவுக்குக் குறைந்து விடும். சோளத்துடன் அவுரியை (இண்டிகோ) வளர்ப்பதனாலோ அல்லது பருத்திக்கு ஏக்கருக்கு 60 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரமிடுவதனாலோ சோளத்தினால் ஏற்படும் தீங்கினை அகற்றிவிடலாம். எனவே குறிப்பிட்ட வயலில் பருத்தி சாகுபடி செய்வதற்கு முன்பு, அந்த வயலில் முந்தின பயிர் என்ன என்பதை அறிந்து அதற்கேற்பச் சாகுபடி செய்வதே நல்லது.

இறைவையாகப் பயிரிடப்படும் எம்.சி.யு. 5 பருத்திக்கு விதை ஊன்றிய உடனே நீர் பாய்ச்ச வேண்டும். விதை ஊன்றிய 3-வது அல்லது 4-வது நாளில் இரண்டாம் முறை நீர் பாய்ச்ச வேண்டும். பொதுவாக அடுத்த 25 நாட்களுக்கு நீர்ப்பாசனத் தேவை இல்லை. அதன் பிறகு 10 அல்லது 12 நாட்களுக்கு ஒரு முறை வீதம் விதை ஊன்றிய 130 நாட்கள் வரை நீர் பாய்ச்சவும்.

பருத்தி விதை விதைத்த பத்து நாட்களில் முளைக்காத இடங்களில் புதிதாக விதை ஊன்றவும். விதைத்த 21-ஆவது நாளில் இறைவைப் பருத்தியானால் குழிக்கு 2 செடிகளை மட்டும் விட்டு விட்டு மற்றவைகளை நீக்கவும். மானாவாரிப் பருத்திக்குக் குழிக்கு ஒரு செடியே போதுமானது.

விதைத்த 20-ஆவது நாளில் களைக் கொட்டினால் களை எடுக்கவும். விதைத்த 40-ஆவது நாளில் செடிகளுக்கு மண் அணைக்கவும். மண் அணைப்பதற்கு 'ஜூனியர் ஹோ' என்னும் இடையுழவுக் கருவியை முதலில் செலுத்தி அதன் பின்னால் பார்கலப்பையைப் பயன்படுத்தவும். மானாவாரிப் பருத்திக்கு 'தந்துலு' என்ற கருவியை முதலிலும், அதன் பின்னால் நாட்டுக் கலப்பையையும் ஓட்டி மண் அணைக்கலாம். விதைத்த 60-ஆவது நாளில் மற்றுமொரு களை எடுக்கவும்.

இறைவைப் பருத்திக்கு 12 கிலோ தழைச் சத்தினை அளிக்க 60 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 27 கிலோ யூரியா உரத்தை மேலுரமாக இடவேண்டும். விதைத்த 40 முதல் 60 நாளில் மேலுரமிடலாம்.

இறைவைப் பருத்திக்கு விதைத்த 2-வது வாரத்தில் 0·025 சதம் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' (100 மில்லி லிட்டரை 100 லிட்டர் தண்ணீரில் கலக்கவும்) தெளித்து, தத்துப்பூச்சி, பேன், திரிப்ஸ் ஆகிய பூச்சிகளைக் கட்டுப் படுத்தவேண்டும்.

விதைத்த 4-வது வாரத்தில் கார்பரில் 0·1 சதவீத மருந்தை (1 கிலோ) யும், 500 கிராம் நனையும் கந்தகத்தையும் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அதன்பின் 15 நாட்களுக்கொருமுறை வீதம் 8 தடவை மருந்து தெளிக்கவும்.

மானாவாரிப் பருத்திக்கு விதைத்த ஒரு மாதம் கழித்து 2 பங்கு கார்பரில் தூள், 1 பங்கு கந்தகத் தூள் வீதம் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ மருந்தைத் தூவவும். 15 நாட்களுக்கொருமுறை இதே அளவு மருந்தை 5 தடவை தூவவும்.

காலை நேரம் பனிப்பதத்தில் பருத்தியை எடுக்க வேண்டும். அப்படிச் செய்வதால், சருகுகள் ஒட்டாமல் சுத்தமான பருத்தியை எடுக்க முடியும். பின்பு ஒரு சில மணி நேரம் பருத்தியை நிழலில் உலர்த்தவும். நிறமிழந்து கெட்டுப்போன பருத்தியையும், பூச்சிகளினால் சேதமடைந்த பருத்தியையும் தனியே பிரித்து எடுத்துவிடவும். நல்ல பருத்திக்கு நல்ல விலை எப்போதும் கிடைக்குமாதலின், தரமான பருத்திகளையே சேகரியுங்கள்.

பருத்தி மகசூல் எடுத்து முடிந்த பிறகு, சரியான நேரத்தில் பருத்திச் செடிகளை நிலத்திலிருந்து பிடுங்கி எடுத்து விட வேண்டும். குளிர்காலக் கம்போடியா அல்லது கருங்கண்ணிப்பருத்திச் செடிகளை ஜூலை மாதக் கடைசிக்குள்ளாக நிலத்திலிருந்து பிடுங்கி எடுத்து விட வேண்டும். இவ்வாறு செய்வதனால் பூச்சிகளும், நோய்களும் அடுத்துச் சாகுபடியாகும் பயிருக்குப் பரவுவதைத் தடுக்க முடியும்.

மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு பருத்தி மகசூலை உயர்த்தினால் உங்கள் வருமானமும் பெருகும். அதே நேரத்தில் பஞ்சாலைகளும் அந்நிய நாட்டுப் பருத்திக்காகக் காத்திருக்காமல், நமது நாட்டுப் பருத்தியைக் கொண்டே செயல்படமுடியும். வெளி நாடுகளிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்வதனால் ஏற்படும் அந்நியச் செலாவணியைக் கட்டுப் படுத்தவும் முடியும். விரைவில் நம் நாட்டுப் பருத்திகளை வெளிநாடுகளுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கவும் இயலும். எனவே அந்நன்னாளை எதிர் நோக்கிச் செயல்படுவோமாக!

கடலை உடைக்கும் இயந்திரம்

தமிழ்நாடு சிறு தொழில் வாரியத்தின், பொறியியல்- தச்சுத் தொழிற்கூடம் ஒன்று சேலத்தில் இயங்கி வருகிறது. தோற்றத்தில் சிறிதாகக் காணப்படும் இத் தொழிற்கூடத்தின் சாதனை குறிப்பிடத் தக்கது.

பள்ளிகளுக்கு வேண்டிய பெஞ்சுகள், மேஜைகள், நாற்காலிகள், கரும்பலகைக்கான நிலைகள் ஆகியவற்றோடு, நவ நாகரீக சாப்பாட்டு மேஜைகள், (போமிகா ஒட்டப்பட்டது,) நாற்காலிகள், கட்டில்கள் முதலியவற்றையும் இங்கு தயாரிக்கின்றனர். இப் பொருட்கள் மட்டும் மாதந்தோறும் சுமார் 60,000 ரூபாய்க்குத் தயாரிக்கப் படுகின்றன.

கட்டடங்களின் கூரைக்கான இரும்புச் சாரத்தினையும் இவர்கள் தயாரிக்கின்றனர். தமிழகம் முழுவதும் இதுவரை சுமார் ஆயிரம் பள்ளிகளுக்கு இவர்கள் இந்தச் சாரம் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். சேலத்திலும், சுற்று வட்டாரத்திலும் பல திரைப்பட அரங்குகளுக்கு இரும்புச் சாரம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

நிலக்கடலை உடைக்கும் இயந்திரமும் இவர்களது தயாரிப்பில் ஒன்றாகும். சாணை பிடிப்பவர், காலால் சக்கரத்தை இயக்குவது போல் இயக்கினால், இந்த இயந்திரத்தில் போடப்படும் நிலக் கடலைகளைத் தோல் நீக்கிப் பருப்புகளைத் தனியாகக் கொட்டும். 375 ரூபாய் விலையுள்ளது இந்த இயந்திரம்.



PSG

அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

விவரங்களுக்கு எழுதுங்கள்:

பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

PSG the hallmark of high standard

விற்பனைக் கிளைகள்:

311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.
பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.
13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.

VSK PSG 213

கூடித் தொழில் செய்தால் கோடி நன்மை பெறலாம்

"தமிழகத்தில் நம்முடைய விவசாயிகள் முற்போக்கானவர்கள். நாம் கணக்கைப் போட்டு முடிப்பதற்குள் அவர்கள் கணக்கைப் போட்டு நமக்கே சொல்லுகிறார்கள். எத்தகைய நவீன விவசாய முறையானாலும் அவற்றை ஏற்றுச் செயல்படுத்திட அவர்கள் தயங்குவதில்லை. மாறிய நிலைக்கேற்ப வசதிகளைக் கொடுத்திடுக என்று நம்மை அவர்கள் கேட்டபடி இருக்கிறார்கள்."

7—2—1968-ல் சென்னையில் தீவிர சாகுபடித் திட்ட அதிகாரிகளின் மாநிலக்கருத்தரங்கில், மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றும்பொழுது உதிர்த்த மணி முத்துக்கள் தான் இவை. கனிந்த அனுபவத்தின் அடிப்படையில் எழுந்த கருத்துக் கருவூலம் அது!

அண்ணாவின் கூற்றுக்குச்செயல் வடிவம் கொடுத்து, உழவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் தொண்டுள்ளத்துடன் செய்து தரும் புனிதப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, சீரிய முறையில் பணியாற்றி வருகிறது, கோவைமாவட்டம் துடியலூர் கூட்டுறவு வேளாண்மை நிறுவனம்.

அந்நிறுவனத்தில் விவசாயிக்கு வேண்டிய அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கின்றன. அங்கே உறுப்பினராகச் சேரும் விவசாயிக்கு, வேளாண்மைக்காக என்னென்ன தேவையோ, அத்தனையும், சிரமமின்றி, அலைச்சல் இன்றிக் காலாகாலத்தில் ஒழுங்காகக் கிடைக்க வழி செய்கிறது இந்நிறுவனம்.

விவசாயிக்குக் கடன் கொடுக்கிறார்கள். அதையும், கால விரயமின்றி, விவசாயிக்குத் தேவையான நேரத்தில் கொடுக்கிறார்கள். கடன் மட்டும் கொடுத்து விட்டால் போதுமா வேளாண்மை செய்ய? மற்ற உதவிகளும் வேண்டுமல்லவா? அவற்றையும் கொடுக்கிறார்கள். நல்ல தரமான விதைகள் கொடுக்கிறார்கள். உயர்ந்த உரம் கொடுக்கிறார்கள். பூச்சி மருந்துகள் கொடுக்கிறார்கள். தெளிப்பான்கள், டிராக்டர்கள் வாடகை முறையில் கொடுக்கிறார்கள். அவை பழுதுபட்டால் அவற்றைப் பழுது பார்த்துத் தருகிறார்கள். விளைச்சல் அறுவடையானபிறகு, விவசாயியிடம் விளைச்சல் பொருள்களை வாங்கிப் பத்திரமாக நல்ல முறையில் சேமித்து வைத்துப் பின்பு நல்ல விலைக்கு விற்றுப்பணமும் கொடுக்கிறார்கள். இதைச் சுருக்கமாகச் சொன்னால், வேளாண்மை செய்யும் விவசாயி மனித உழைப்பை மட்டும் தான் கொடுக்கிறார். மற்ற அனைத்தையும் இந்நிறுவனம் அளிக்கிறது. மற்ற மற்ற வேளாண்மைக் கூட்டுறவு நிறுவனங்களில் பணம் மட்டும் தான் கடனாகக் கொடுப்பார்கள். ஆனால் இந்த நிறுவனத்திலோ விவசாயிக்கு வேண்டிய அனைத்தையும் கொடுக்கிறார்கள்.

கோவையிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ள துடியலூரில் 1955 ஏப்ரலில் துடியலூர் கூட்டுறவு கிராம வங்கியாகத் தோற்றுவிக்கப்பட்ட இந்நிறுவனம், பின்பு துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவா நிறுவனமாகப் பெயர் மாற்றப்பட்டது. இந்த நிறுவனத்தின் செயல் எல்லை 13 வருவாய்க்கிராமங்களையும் 56 சிற்றூர்களையும் தன்னகத்தே கொண்டது. இந்தஎல்லைக்குள் உள்ள மக்கள் தொகை 66,518. பெரிய நாயக்கன் பாளையம், சர்க்கார் சாமக்குளம், பேரூர் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமங்கள் இந்நிறுவனத்தின் செயல் எல்லையினுள் அடங்கியுள்ளன.

இந்நிறுவனத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்க ஒருவிதச் சிரமமும் கிடையாது. விவசாயிகள் அவர்களாகவே உறுப்பினராய் வந்து சேர்கிறார்கள். யாரும் போய் "உறுப்பினராகச் சேருங்கள்" என்று கேட்க வேண்டிய தேவையில்லை. இன்று இந்நிறுவனத்தில் 5,068 உறுப்பினர்கள் உள்ளனர். அந்த உறுப்பினர்கள் செலுத்தியுள்ள பங்கு மூலதனம் மட்டும் ரூ. 4,68,114.

விவசாயிக்கு வேண்டிய முதல் தேவை கடன் வசதி. அக்கடன் தொகையும் காலா காலத்தில், தேவையான நேரத்தில் சிரமமின்றிக் கிடைத்தால், அதைவிடப் பெரிய உதவி விவசாயிக்கு வேறு கிடையாது. இந்தக் கடன் வழங்கும் பணியை இந்நிறுவனம் ஒழுங்காக, அழகாகச் செய்கிறது. 1969-70-ல் மட்டும் சுமார் பதினேழே கால் இலட்சம் ரூபாய் கடனாக விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

நீண்ட காலக் கடனாக உயர்ந்த பட்சமாக ரூபாய் பத்தாயிரம் அளிக்கிறது. குறைந்த காலக் கடனாக ஓர் உறுப்பினர் அதிகப்பட்சமாக இரண்டாயிரம் ரூபாய் பெறலாம்.

உறுப்பினர் மனுச் செய்த ஒரு மாதத்திற்குள் நீண்ட காலக் கடனும், பதினைந்து நாட்களுக்குள் குறுகிய காலக் கடனும் அநேகமாகக் கொடுத்து வருகிறார்கள். மற்ற நிறுவனங்கள் எல்லாம் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு மனுச் செய்து வாங்க வேண்டும். இங்கே கதையே வேறு! தங்களுடைய மேற்பார்வை அலுவலர்களை விட்டு விசாரித்து இயக்குநர் குழுவின் அனுமதி வாங்கி, உடனே கடனைக் கொடுத்து விடுகிறார்கள். "நீங்கள் மனுச் செய்து கொண்ட கடன் தொகை தயாராக இருக்

கிறது. வந்து வாங்கிக் கொண்டு செல்லவும்'' என்று கடன் கேட்டுள்ள உறுப்பினர்களுக்குத் தகவல் அனுப்பிக் கடன் தொகையினை வழங்குகிற நிறுவனம் எங்களுடையது ஒன்று தான்'' என்று பெருமையுடன் சொல்கிறார்கள் நிறுவன நிர்வாகிகள்.

இதற்கென்று தகவல் அட்டை அச்சடித்தே வைத்திருக்கிறார்கள்! வேளாண்மைத் தொழிலில் உரிய காலத்தில் கிடைக்கின்ற கடன் உதவிதான் மிகவும் முக்கியம். கடன் வழங்குவதை இந் நிறுவனம் ஒழுங்காகச்செய்கிறது. கடன் கேட்டுள்ள விவசாயி வெட்டியாக அலைவதில்லை. இதுதான் இந் நிறுவன வெற்றியின் இரகசியம். இந்த நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள், விவசாயிகளிடையே சேமிப்பு உணர்வினை ஏற்படுத்துவதாகும். விவசாயிகள் தாங்களே முன் வந்து இந்தச் சேமிப்பில் சேர்ந்திருக்கிறார்கள். இந்த வகையில் சுமார் பதினொரு இலட்சம் ரூபாய் நிலையான சேமிப்பாக (fixed deposits) இதுவரை சேர்ந்திருக்கிறது. ''விவசாயிகளுடைய சேமிப்பு அனைத்தும் இங்கே தான் இருக்கு. அவர்களுடைய இன்சூரன்ஸ் தொகையைக் கூட நாங்களே அவர்கள் சார்பில்கட்டி விடுகிறோம்'' என்கிறார் நிறுவனச் செயலாளர் திரு. அய்யனார் அவர்கள்!

பண விஷயத்தில் தான் இப்படி மனநிறைவான முறையில் பணி நடக்கிறது என்பதில்லை. விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்குகிறார்கள். தரமான விதைகளை தேசிய விதைகள் நிறுவனத்தினிடமிருந்து (National Seeds Corporation) வாங்குகிறார்கள். அவை விவசாயிகளுக்குத் தரப்படுகின்றன. அம்மோனியம் சல்பேட், யூரியா, கால்சியம், அம்மோனியம், நைட்ரேட் என். பி. கே. கலவை உரங்கள் வழங்குகிறார்கள். 1969-70-ல் மட்டும் இந்நிறுவனம் 2,19,500 ரூபாய் பெறுமானமுள்ள உரங்களை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

இது தவிர, இந்நிறுவனமே பல்வேறு பயிர்களுக்கு வேண்டிய கலப்பு உரங்கள் தயார் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறது. இக்கலவை உரத்திற்கு ''அசோகா மார்க்'' கலவை உரங்கள் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்நிறுவனத்தின் செயல் எல்லைக்குள் உள்ள விவசாயிகளுக்கும் கோவை மாவட்டத்தில் மற்றப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கும் இக்கலவை உரத்தினை விற்பனை செய்கிறார்கள். இப்பணி, ஏஜெண்டுகளாக உள்ள 80 கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடைபெறுகிறது. 1969-70-ல் மட்டும் இக்கலவை உரம் 2501 டன்கள் தயார் செய்யப்பட்டு, உறுப்பினர்களுக்கும் ஏஜெண்டுகளாக உள்ள சங்கங்களுக்கும் 15,63,930 ரூபாய் மதிப்புள்ள கலவை உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.



விசைத் தெளிப்பான்கள் பழுது பார்க்கப்படுகின்றன.

உரத்திற்கு அடுத்த படியாக வருவது பூச்சிக் கொல்லி மருந்து (Pesticides). இதை விவசாயிக்கு விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கங்களில் துடியலூர் கூட்டுறவு நிறுவனம் முன்னணியில் நிற்பதுடன், முதல் முதலில் இவ்வேலையை ஏற்றுச் செய்த சங்கங்களில் இதுவும் ஒன்றாகும். இம்மருந்துகளைத் தயார் செய்யும் நிலையங்களிடமிருந்து அவற்றை வாங்கி, மலிவு விலையில் விவசாயிகளுக்குக் கொடுக்கிறது இந்நிறுவனம்! 1969-70-ல் ரூ. 2,33,180 மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்துகளை இந் நிறுவனம் விவசாயிக்கு விற்பனை செய்துள்ளது. இம் மருந்துகளை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதையும் விவசாயிகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

இந்நிறுவனத்திற்குச் சொந்தமாகவே 150 தெளிப்பான்கள் (Sprayers) உள்ளன. விவசாயிகளுக்கு, லாப நட்டமில்லாத முறையில் இவை வாடகைக்கு விடப்படுகின்றன. உழவர்களுக்கு நவீன விவசாய முறைகளையும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் எடுத்துக் கூறுவதில் இந்நிறுவனம் தனி அக்கறை செலுத்துகிறது. சொந்தமாகத் தெளிப்பான்கள் வைத்திருக்கும் விவசாயிகளுக்குத் தேவைப்படும் துணைக்கருவிகள் கொடுத்துதவவும், தெளிப்பான்கள் பழுதாகிப் போனால் பழுது பார்த்துத்தரவும் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்று இங்குள்ளது. தவிர, ஊராட்சி ஒன்றியங்கள், மற்ற விவசாயப் பண்ணைகளைச் சார்ந்த தெளிப்பான்களும் பழுது பார்த்துத் தரப்படுகின்றன. இதற்காகச் சுமார் 25,000 ரூபாய் மதிப்புள்ள துணைக் கருவிகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கருவிகள் 'பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தித் தெளிப்பான்களைப்பழுது பார்ப்பவர்கள் மிகவும் திறமை மிக்க ஊழியர்கள். அவர்களின் தொண்டினால், சமுதாயத்துக்கு மிகுந்த நன்மை கிடைத்து வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கார்ப்பரேஷனின் உதவியுடன், இந் நிறுவனத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் நிலையம் ஒன்று புதிய திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதற்காக 2.25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். 'இன்னும் ஒரு மாதத்தில் இதை ஆரம்பித்து விடுவோம்' என்கிறார்கள் நிறுவன நிர்வாகிகள்.

'' பூச்சிக் கொல்லி மருந்துகள் சில சமயங்களில் கிடைப்பதில்லை. மிக அதிக விலையில் கறுப்பு மார்க்கெட்டில் தான் கிடைக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்காக, எப்பொழுது தேவையோ அப்பொழுது கிடைக்கின்ற முறையில் —அதாவது ஆண்டு பூராவும் கிடைக்கிற மாதிரி ஏற்பாடுகள் செய்துள்ளோம். நமது மாநிலத்திலேயே கூட்டுறவுத் துறையில் எங்கள் நிறுவனம் ஒன்றுதான் இதைச் செய்கிறது; மற்றதெல்லாம் தனியார் துறைகள். இந்த மருந்துகள் எல்லாம் பவுடர் போன்ற தயாரிப்புகள். இதைத் திரவ அமைப்பிலும் செய்ய இருக்கிறோம். அதாவது, எண்டிரின், பாலிடால் மாதிரி. இதற்கான திட்டமும் இருக்கு'' என்கிறார் செயலாளர்.

'' நல்ல தரமான கால்நடைத் தீவனம் நாங்களே தயார் செய்கிறோம். இதற்காக ஒரு தீவனம் தயாரிக்கும் நிலையமே உள்ளது. இந்தத் தீவனத்தைத் தயார் செய்து, விஞ்ஞான முறைப்படிச் சேமித்து வைத்து, விவசாயிகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும், மற்றக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குகிறோம். 1969-70-ல் 135 டன்கள் மாட்டுத் தீவனம் தயார் செய்யப்பட்டு, மாடு வளர்ப்போருக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது. இதே மாதிரி, கோழித் தீவனமும் தயார் செய்யப்படுகிறது. 1969-70-ல் 66 டன்கள் கோழித் தீவனம் இந்நிறுவனத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது.''

'' இன்னும் ஒன்று சொல்ல வேண்டும். நீண்ட இழை உகண்டா பருத்தி எம். சி. யூ. 5



தலைவர் பழனிச்சாமி கவுண்டர்.

இரகம் பருத்தி இருக்கிறதே— அந்த இரகத்தைக் கோவை மாவட்டத்தில்தான் பயிரிடுகிறார்கள். தமிழகத்தில் வேறு எந்த மாவட்டத்திலும் பயிரிடவில்லை என்று உறுதியாகக்கூறமுடியும். மேலும், கோவை மாவட்டம் தான் பருத்திக்குக் கேந்திரமான இடமாயிற்றே! அரசினரிடமிருந்து சுத்தமான, தரமான, அந்தப்பருத்தி விதைகளை வாங்கி விவசாயிகளுக்கு நாங்கள் கொடுக்கிறோம். இதற்கென்று 2,500 ஏக்கர் நிலம் என்று இலக்கு நிர்ணயித்துள்ளோம். அதை எங்களுடைய மேற்பார்வையில் வைத்துள்ளோம். இப்பருத்தி பயிரிட மூல விதைகள், மருந்துகள், உரங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு வழங்குகிறோம். விளைச்சலான பிறகு அந்தப் பருத்தியை நாங்களே அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்வோம். இதற்காகப் பயிரிடுவோருக்கு நல்லவிலை கொடுக்கிறோம். அவற்றை விலை கொடுத்து வாங்குவதில் எங்களுடன் யாரும் போட்டி போட முடியாது. அவ்வளவு நல்ல விலை தருகிறோம். அப்படி வாங்குகிற பருத்தியை இங்கே எங்களுடைய பஞ்சு பிரிக்கிற தொழிற்சாலைக்குப் பயன்படுத்துகிறோம். இந்த நீண்ட இழைப் பருத்தியை எல்லா மில் காரர்களும் வாங்கிக் கொண்டு போகிறார்கள். இதில் இடைத் தரகர்களே கிடையாது! எல்லாம் வாங்குபவர்கள், விற்பவர்கள் என்று நேரடி முறையில் தான் நடக்கிறது.

''டிராக்டர்களையும் இங்கே பழுது பார்த்துத் தருகிறோம். டிராக்டர்களை இந்தப் பக்கத்தில் ரொம்பவும் பயன்படுத்துகிறார்கள். டிசம்பர் 1969-ல் இந்த டிராக்டர் பழுது பார்க்கும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆகஸ்ட் திங்கள் முடிய ஒன்றரை இலட்சம் ரூபாய், டிராக்டர் வாடகையின் மூலம் வாங்கியிருக்கிறோம். மழைபெய்து இருந்தால் இன்னும் அதிகமாகி இருக்கும்.

கால்நடைத் தீவனம் கலக்கப்படுகிறது.



'' எங்கள் நிறுவனம் நல்ல முறையில் விவசாயிகளுக்கு உதவி வருவதைக் கண்ணுற்ற 'கேர்' (CARE) நிறுவனத்தார் சுமார் எட்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள விவசாயக் கருவிகளை இந்நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். டிராக்டர்கள், இயந்திரக் கலப்பைகள், டிரெய்லர்கள், மருந்தடிக்கும் கருவிகள், கரும்பு நடவு இயந்திரம், கல் உடைக்கும் இயந்திரம் போன்ற விவசாயக் கருவிகளை வழங்கியுள்ளனர்.

'' அக்கருவிகளைப் பராமரிக்கவும், விவசாயிகள் இவற்றை உபயோகிப்பது சம்பந்தமாகப் பயிற்சி அளிக்கவும் ஒரு

தொழிற்சாலையும், பயிற்சிக்கூடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

"நடைமுறையில் உள்ளது போக, செயல் படுத்தப்பட வேண்டிய புதிய திட்டங்கள் பல உள்ளன. பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் நிலையம் இரண்டேகால் இலட்சம் ரூபாயில் ஆரம்பிக்கப் போகிறோம் என்று முன்பே சொன்னேன். மண் ஆய்வுக் கூடம் (Soil Testing Laboratory) ஒன்று ஆரம்பிக்கத் திட்டமுள்ளது. மண்ணைப் பரிசோதனை செய்து என்னென்ன உரம் அந்தந்த மண்ணுக்குப் போடலாம் என்று விவசாயிகளுக்குக் கூறுவதற்காகவே இந்த நிலையம் ஏற்படுத்தப்படுகிறது. பாறை துளைக்கும் பிரிவு (Rock Blasting Unit) ஒன்று ஏற்படுத்துவதுபற்றிப் பரிசீலித்துக்கொண்டு வருகிறோம். இதற்கு 5 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். துளை போடும் கருவிகள் வாங்க வேண்டும். இவற்றைப் பயன்படுத்தி 300 அடி ஆழம் வரையில் கூடக் கிணறுகள் தோண்டலாம். இன்னொரு புதிய திட்டத்தைச் சொல்ல வேண்டும். கூட்டுறவுப் பால் வழங்கு நிறுவனம் இல்லாத இடங்களில், எங்களுடைய உறுப்பினர்களுக்கு உயர்ந்த இரகக் கறவை மாடுகள் வாங்கிக் கொடுத்து, அதன் மூலம் அவர்களுக்கு உபரி வருமானம் கிடைக்கச் செய்யும் படியான ஒரு திட்டமும் பரிசீலனையில் உள்ளது. அத்துடன், விவசாயிகளுக்குத் தேவையான பல்வேறு விவசாயக் கருவிகளையும் இங்கேயே தயார் செய்து விநியோகம் செய்ய ஒரு திட்டம் தீட்டியுள்ளோம்.

"இறுதியாக இதைத்தான் என்னால் சொல்ல முடியும். எங்களுடைய நிறுவனத்தின் இயக்குநர்கள், கூட்டத்திற்கு வருவதற்காக அளிக்கப்படுகிற படிப்பணத்தைக்கூட வாங்கிக் கொள்வதில்லை. ஒரு குடும்பமாகத் தொண்டு உணர்வுடன், சுயநலமின்றிப் பணியாற்றுகிறார்கள். இந்த நிறுவனத்தின் தலைவர் திருவாளர் என். வி. பழனிச்சாமி கவுண்டர் அவர்கள் தான் இந் நிறுவனத்தின் வெற்றிக்கே முழுக்கமுழுக்கக்காரணம் ஆவார்.

"தொடக்கத்திலிருந்து எங்களுடைய நிறுவனம் இலாபத்திலேயே பணியாற்றி வந்துள்ளது. 1969-70-ல் மட்டும் ஒரு லட்சத்து ஏழாயிரம் ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது. இதற்கெல்லாம் என்ன காரணம்? சேவை உணர்வுதான்!"

நிறுவனச் செயலாளர் தன் நீண்ட பேச்சைமுடித்துக்கொண்டு "ரொம்ப நேரம் உங்களைக் காக்க வைத்துட்டேனுங்க... காபி சாப்பிடுங்க!" என்றார். அவர் அன்புடன் அளித்த காப்பியைச் சாப்பிட்டுவிட்டு வண்டியில் ஏறும் பொழுது இந்த நிறுவனம் போல் தமிழகத்தில் எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களும் தொண்டுள்ளத்துடன் சுயநலமின்றிப் பாடுபட்டால்... 'வாடித் தொழிலின்றி வறுமையிற் சாவதெல்லாம் கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால்--தோழர்களே' என்ற புரட்சிக் கவிஞரின் இதயக்குமுறல் இன்பத் தென்றலாக நிச்சயம் மாறி விடாதா? என்ற எண்ணம் எழாமலில்லை.



துவளும் நடை, தவள நகை, பவள இதழ்த் தையலான குறவஞ்சி தன் நாட்டு வளத்தைக் குறிப்பிடும் பகுதியில் குற்றாலமலை நம் கண்முன்னே எழுகின்றது. குற்றாலக் குறவஞ்சியில் கவிச்சுவை தேனருவியாய்ப் பாய்கிறது. நாட்டு மக்களேயன்றி, மரம் செடி கொடிகளும் விருந்துபச்சாரம் செய்யும் விந்தையைக் காணவிழைவோர் கீழ்வரும் குற்றாலக் குறவஞ்சிப் பாடலை நோக்கின் விளங்கும்.

"சூழமேதி இறங்கும் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினில் பாய
கொழும்ப லாக்கனி வாழையில் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
வருவிருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடும்"

வளமிக்க பகுதி குற்றாலம் ஆகும். இருவிழி பருகும் விருந்தாய், இயற்கை சிங்காரம், எவர்க்கும் அயர்வைப் போக்கும் மருந்தாய் இருக்கும் இம்மலையின் அழகினைப் பாடாத தமிழ்க்கவிஞர்களே இல்லை எனலாம், இயற்கை அன்னை தாலாட்டுப் பாடுவதுபோல் அமைந்துள்ள குற்றால நீர்வீழ்ச்சிப் பக்கத்திலே உள்ள மேட்டுப்பாங்கான இடத்தில், 1960-ஆம் ஆண்டு பிப்ரவரி 9-ஆம் நாள் 25 ஏக்கர் நிலப்பரப்பில் குற்றாலம் மாதிரி பழப் பண்ணை அமைக்கப்பட்டது. அதுநாள் வரை வனத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்த இப்பகுதி வேளாண்மைத்துறைக்கு மாற்றப்பட்டது. இயற்கையில் வளர்ந்து செழித்திருந்த மரஞ்செடி கொடிகளை அகற்றி மண்வளப் பாதுகாப்புத் திட்ட வேலைகள் செய்து பல புதிய உயர் இனக் கன்றுகள் நடப்பட்டன. கருமேகம் சூழ்ந்து கவினுறும் இம்மலைப் பிரதேசத்தில் பல வகையான பழச்சாகுபடிகள் நடைபெற்று வந்தபோதிலும், இங்குள்ள வெப்ப நிலைக்கு ஏற்பத் திருந்தியமுறையில் அவ்வாறு பயிர் செய்யலாம் என்பதை எடுத்து வலியுறுத்திக் காட்டவே இப்பண்ணை நல்லதொரு முறையில் நிறுவப்பட்டது.

நம்மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இதர மாதிரிப் பண்ணைகளின் தொடர்ச்சியாக இப்பண்ணை அமைந்து இப்பகுதிமக்களுக்குப் பயன்படக் கூடிய உயர்ரகப் பழக் கன்றுகளை உற்பத்தி செய்து, வினியோகம் செய்து வருகிறது. இந்தப் பண்ணை திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்ட வேளாண்குடி மக்கள், பழக்கன்றுகளும், மலைப் பிரதேசச் செடிகளும் வேண்டிய அளவிற்கு வாங்கிப் பயனடையும் வகையில் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இப்பண்ணை மேற்குத் தொடர்ச்சி மலையின் 'மழை மறைவுப்' பகுதியில் அமைந்திருக்கிறது, தென்மேற்கு, வட கிழக்குப் பருவக் காற்றின் மூலம் சராசரி 40 அங்குல மழை பெய்வதால், இப்பகுதி பழச்சாகுபடிக்கு ஏற்ற இடமாக அமைந்துள்ளது. பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்கள் மழையே இல்லாவிடினும், ஏனைய காலங்களில் வேண்டிய மழை பொழிகிறது.

இப்பண்ணை கடல் மட்டத்திலிருந்து 1,200 அடி முதல் 1,850 அடி உயரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. 20 முதல் 25 சதவிகித சரிவுப் பகுதியாக உள்ளது. பழச்சாகுபடிக்கு ஏற்ப 5 முதல் 6 அடி வரையிலும் தாவர மக்கு நிறைந்த செம்மண் நிலமாகவும் இருக்கிறது.

தேனருவியைத் தாண்டி ஐந்தருவி அமைந்துள்ளது. இவ்வைந்தருவியிலிருந்து 2 பர்லாங் தூரத்தில் நல்ல சாலை வசதியோடு அமைந்துள்ளது தான் இந்தப் பழப் பண்ணை.

"கோடையிலே இளைப்பாறிக்
கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே"

என்று வள்ளலார்பாடியதற்கு இணங்க கோடையின் வெப்பத்தைத் தணித்துக் கொள்ள வரும் மக்களுக்கு. இப்பழப் பண்ணை அமைந்துள்ள இடம் உல்லாசப் பயணத்திற்குச் சிறந்த இடமாகவும் அமைந்து இன்பம் பயக்கிறது. இங்கு இப்பகுதியின் உச்சியில் 'படப்பிடிப்பு' நடைபெறுவதுண்டு. இதன் மூலமும் இதற்கு வருவாய் கிட்டுகிறது, 2½ ஏக்கர் பரப்பில் தரமான பலவகைப் பழச் செடிகளும், அலங்காரச் செடிகளும் அடங்கிய பெரிய நாற்றங்கால் ஒன்று இருக்கிறது. இந் நாற்றங்காலில் இருந்து கிடைக்கும் செடிகள் மக்களுக்கு முறைப்படி விற்கப்பட்டு, பழமரங்கள் உற்பத்தியாவதற்கு வழிவகை செய்யப்படுகின்றன, இந் நாற்றங்காலுக்கும் பழமரங்களுக்கும் ஐந்தருவி ஆற்றிலிருந்து தண்ணீர் இறைக்கப்படுகிறது. 1,800 அடி உயரத்தில் உள்ள இம்மலைப் பகுதியில்

ஒரு கிணறு வெட்டப்பட்டு அக்கிணற்றிலிருந்து தண்ணீர் வழங்கப்படுகிறது,

தரமான உயர்ரகப் பழக் கன்றுகளை இவ்வட்டார மக்களுக்குப் பயனளிக்கும் அளவிற்கு உற்பத்தி செய்து விநியோகம் செய்வதோடு, நாற்றங்கால் ஒன்று நிறுவிப் பலவித அலங்காரச் செடிகளும் ஏனையவும் உற்பத்தி செய்து வழங்கப்படுகின்றன.

இது தவிர, பாக்குக் கன்றுகள் கொண்ட நாற்றங்கால் ஒன்றும், ஏலக்காய் நாற்றங்கால் ஒன்றும் இணைந்து இத்துடன் நடைபெற்று வருகிறது. குறைந்த விலையில் தரமான உயர் ரகக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மா, பலா, வாழை, எலுமிச்சை, கொடி எலுமிச்சை, மாதுளை, மங்குஸ்தான், கமலா ஆரஞ்சு, கொய்யா, சப்போட்டா, ஆகிய பழமரங்கள் பயிரிடப்படுகின்றன.

வாசனைப்பொருள்களான ஜாதிக்காய், கிராம்பு. இலவங்கப்பட்டைச் செடி ஆகியவை பேணி வளர்க்கப்படுகின்றன. வானுற ஓங்கி வளர்ந்துள்ள கமுகு மரங்கள் சாரிசாரியாய் அமைந்து அழகுறக் காட்சி அளிக்கின்றன.

கன்றுச் செடிகளின் கையிருப்பு மதிப்பு ரூ. 8,074-50 ஆகிறது. இவ்வகைகளில் 4,921 கன்றுகள் வெளியாருக்கு 1969-70-ல் விற்பனை மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

மங்குஸ்தான் மாட்சி :—

இம் மாதிரிப் பழப் பண்ணைப் பகுதியை ஒட்டி அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான பகுதியில்தான் மங்குஸ்தான் பழ மரங்கள் 5 இருக்கின்றன. பொதுவாகப் பழங்கள் எல்லாம் மனிதனுக்குத் தேவையான உயிர்ச் சத்துக்களை அளிக்கின்றன என்றாலும், மங்குஸ்தான் பழங்களின் பயன் குறிப்பிடத்தக்கதாய் உள்ளது.

இரப்பர் போன்ற தடித்த தோலை நீக்கினால் இளஞ்சிவப்பு நிறமுள்ள பழச்சுளைகளைக் காணலாம். மிகக் குளிர்ச்சியான பகுதியில் வளர்வதனாலோ என்னவோ, இப்பழம் மிகுந்த குளிர்ச்சியுடையதாய் இருக்கின்றது, உடல்நிலை வெப்பம் அதிகம் இருப்பவர் உண்டால், வெப்பத்தைத் தணிக்கிறது. 'மூலம்' உள்ளவர்கள் சாப்பிட்டால் அவர்களுக்கு வேறு மருந்தோ, அறுவைச் சிகிச்சையோ தேவையில்லை. மூல வியாதிக்கு இது அருமருந்தாய்ப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வளவு சிறந்த மருந்தாய்ப் பயன்படுவதால், இதனை எங்கும் பயிரிடலாம் என்றால், மலைப்பிரதேசத்தில் மட்டுமே வளரும் தன்மை பெற்றிருக்கின்றது. ஒரு பழம் அரை ரூபாய் முதல் 1 ரூபாய் வரை விலை போகிறது. , குற்றாலம் செல்வோர் பெரும்பாலும் இதனைச் சுவைக்காமல் வருவதில்லை எனலாம்.

இவ்வாறு மாதிரிப் பழப்பண்ணை பல வகைப் பழ மரங்களை மக்களுக்கு வழங்கி இனவிருத்தி செய்ய உதவுவதோடு, பயனுள்ள பழவகைகளையும் மக்களுக்கு வழங்கி வருகிறது. இதுபோன்ற பழப் பண்ணைகளை மேலும் தொடங்கும் முயற்சியில் நம் அரசு நல்ல கவனம் செலுத்தி வருகிறது.

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்

DR. S. K.

கலந்து சாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கை பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லாவெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்— விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்

டாக்டர் S காளிமுத்து, R.M.P.(IND), V.V.C., A.M.I.H.

பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.

போன்: 316 தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ்:

41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை–1

போன்: 21448

தொலைபேசி எண்: 440. தந்தி: ERUMBULTD

திண்டுக்கல் அயர்ன் அண்டு ஹார்டுவேர்ஸ் (பி) லிமிடெட்

(பதிவு எண் 4267)

பதிவுபெற்ற அலுவலகம்—T.S. No. 583

ரயில்வே ஸ்டேசன் ரோடு

திண்டுக்கல்-1 (தமிழ்நாடு)

எங்களிடம் இரும்பு (அண்டு) எஃகு சரக்குகள் விலை சகாயமாகவும் 'ராம்கோ' சிமிண்ட் மூடைகள் அரசு நிர்ணய விலையிலும் கிடைக்கும்

TNGST. No 435885

CST No. 583 DT—1-5-1961

ஐ·ஆர்·5

ஐ. ஆர். 5 நெல், பிலிப்பைன்ஸ் நாட்டில் 'லாஸ் பேனஸ்' என்ற இடத்திலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தால் உருவாக்கப்பட்ட இரண்டாவது உயர் விளைச்சல் ரகமாகும். 'பெட்டா' என்னும் இந்தோனேசியா நாட்டின் உயர் ரகத்துடன், 'டாங்காய் ரோடான்' என்னும் மலேசியா நாட்டு ரகத்தைக் கரு இணைப்பு முறை மூலம் உருவாக்கப்பட்டதே ஐ. ஆர். 5. இந்நெல்லிற்கு ஆரம்ப காலத்தில் குறிக்கப்பட்டிருந்த எண் ஐ. ஆர். 5-47-2 என்பதாகும். பின்பு, இந்நெல்லிற்கு அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனம் அதிகார பூர்வமாக ஐ. ஆர். 5 என்று பெயரிட்டது.

ஐ. ஆர். 5 நெல் நடுத்தர உயரமுள்ளது. ஐ. ஆர். 8-ஐ விடச் சற்று உயரமாக வளரக் கூடியது. இதன் உயரம் 130 முதல் 140 செண்டிமீட்டர் இருக்கும். இதன் வயது 150 நாட்கள். ஐ. ஆர். 5-ன் நாற்று வீரிய சக்தி மிகுந்தது; அதிகமாகத் தூர் கிளைக்கும் தன்மையுடையது; ஐ. ஆர். 8-ஐ விட ஓரளவுக்கு 'பிளாட்' நோயைத் தாங்கிக் கொள்ளும் தன்மையுள்ளது; இது, கோ. 25 நெல்லை விடச் சராசரியாக 30 முதல் 40 சத வீதம் அதிக மகசூல் கொடுக்கும். இதன் அரிசி நடுத்தரப் பருமனுள்ளது. அரிசி வெள்ளையாய் இருக்கும்.

ஐ. ஆர். 5 நெல் ரகம் கோயம்புத்தூர், அம்பாசமுத்திரம், ஆடுதுறை ஆகிய ஆராய்ச்சி நிலையங்களில் முதலில் சோதனையாகப் பயிரிட்டுப் பார்க்கப்பட்டது. அச்சோதனைகளில் ஐ. ஆர். 5 ரகம் ஏக்கருக்கு 2,500 கிலோ முதல் 2,800 கிலோ வரை மகசூல் கொடுத்துள்ளது. பல்வேறு சோதனைகளுக்குப் பிறகே, தமிழ்நாட்டில் இந்த ரகத்தைச் சம்பா, தாளடி அல்லது பிசானம் பருவங்களில் பயிரிடுமாறு தமிழ் நாடு அரசின் வேளாண்மைத் துறை பரிந்துரைத்தது.

தமிழ்நாட்டில் பெரும்பாலான உழவர் பெருமக்கள் தாளடியில் ஒரு டன்னுக்கும் குறைவாகவே மகசூல் பெற்று வருகின்றனர். இதற்குக் காரணம் பல இருப்பினும், தாளடிப் பருவத்திற்கேற்ற உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடாததே தலையாய காரணமாகும். தாளடிப் பருவத்திற்கேற்ற ரகங்களில், உயர் விளைச்சல் தரும் ஐ. ஆர். 5 நெல்லே தலைசிறந்ததாகும். ஐ. ஆர். 5 பயிரிட்டால் தாளடி மகசூல் மேலும் பெருகுவது திண்ணம்.

தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு 13,818 ஏக்கரில் ஐ. ஆர். 5 நெல் பயிரிட்டு, பல உழவர் பெருமக்கள் 2 டன், 2½ டன் என்று மகசூல் பெற்றுள்ளனர். இந்த ஆண்டில் 2,22,000 ஏக்கரில் ஐ. ஆர். 5 நெல் பயிரிடத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை திட்டமிட்டுள்ளது.

எனவே, தாளடிப் பருவத்தில் ஐ. ஆர். 5 நெல் பயிரிடுமாறும், கீழே குறிப்பிட்டுள்ள சாகுபடி முறைகளை மேற்கொண்டு மகசூலைப் பெருக்கி, பெரு லாபம் பெறுமாறும் உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நிறைந்த மகசூலுக்குச் சிறந்த விதைகள்

சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள விதைகளையே உபயோகிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்குகளிலும், தேசீய விதைக் கார்ப்பரேஷனால் அங்கீகரிக்கப்பட்ட விதை உற்பத்திப் பண்ணைகளிலும் இருந்து விதைகளை வாங்குவதே நல்லது.

ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ விதை தேவைப்படும். விதையை ஊற வைப்பதற்கு முன்னர் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து கலக்க வேண்டும். விதையுடன் தொற்றியுள்ள நோய்களை இம் மருந்து அகற்றும்.

உறுதியான நாற்றுகள்

சிறந்த முறையில் நாற்றங்கால் தயாரிக்கப்படவேண்டும். சிறந்த முறையில் தயாரிக்கப் பட்ட நாற்றங்காலில்தான் நல்ல திடமான நாற்றுகள் வளர முடியும். நல்ல மகசூல் பெறச் சிறந்தமுறையில் நாற்றங்கால் தயாரிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

ஒரு ஏக்கர் நடவு செய்ய வேண்டுமானால், 12 சென்ட் பரப்பில் நாற்று விடவேண்டும். 12 சென்ட் பரப்புள்ள நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எரு, அல்லது கம்போஸ்ட் எரு இட வேண்டும். எரு இட்ட பின் நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் உழுது நன்கு சேருக்கவும்.

நாற்றங்காலை நன்கு சேருக்கிய பின், ஒரு சென்ட் அளவுள்ள (54 அடி × 8 அடி) 12 மேடைப் பாத்திகளாக அமைக்கவும். ஒரு மேடைப் பாத்திக்கு ஒன்றரைக் கிலோ வீதம், 18 கிலோ முளைவிட்ட விதைகளை 12 பாத்திகளிலும் விதைக்க வேண்டும். நாற்றுப் பறிப்பதற்கு 10 நாட்களுக்கு முன், சென்ட்க்கு அரைக் கிலோ வீதம் அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இட வேண்டும்.

நாற்றுகளைப் பாதுகாக்க . . .

நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் 0·05 சத 'பாரத்தியான்' மருந்து (100

மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

நாற்றின் வயது 28 முதல் 30 நாட்கள் ஆகும்பொழுது பறித்து நடவு செய்ய வேண்டும். நாற்றுப் பறிக்கும்பொழுது நாற்றுகளைத் தரையிலோ, அல்லது குச்சியிலோ அடிக்கக் கூடாது. நாற்று முடிகளைக் கட்டுவதற்கு நாற்றுகளை வளைத்துக் கட்டக் கூடாது ; வாழை நார் அல்லது வைக்கோலினுல் கட்டவேண்டும்.

நடவு வயலைத் தயாரிக்க....

நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்கவும்.

ஏக்கருக்கு 5 வண்டி (2,300 கிலோ) தழையுரம் அல்லது 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு இட வேண்டும்.

கடைசி உழவிற்கு முன்பு 21 கிலோ மணிச் சத்து அளிக்க 130 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தையும், 21 கிலோ சாம்பல் சத்து அளிக்க 35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் இட்டுச் சேற்றுடன் நன்கு கலக்கு மாறு உழ வேண்டும். நடுவதற்கு முன்பு 27 கிலோ தழைச் சத்து அளிக்க 135 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 60 கிலோ யூரியா உரமிட வேண்டும். அல்லது 46 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட்டையும், 35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் கடைசி உழவில் இட்டுவிட்டு, நடுவதற்கு முன்பு 43 கிலோ யூரியாவை இட வேண்டும். இம்முறையினுல் உரமிடும் செலவு குறையும்.

வரிசையில் நடவு செய்தால் வாளிப்பான கதிர் !

வரிசைக்கு வரிசை 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும், பயிருக்குப் பயிர் 1 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு, இரண்டு இரண்டு நாற்றுகளாக நடவு செய்யவும்.

இடையுழவு

நடவு செய்த 15-வது நாள் முதல் களையும், 35-வது நாள் இரண்டாம் களையும் எடுக்க வேண்டும். தேவையானுல் 2-ம் களையெடுத்த 15 நாட்களுக்குப் பின் மூன்றும் களை எடுக்கலாம். ஜப்பானிய இடையுழவுக் கருவிகளை உபயோகித்து வரிசைகளுக்கு இடையில் இடையுழவு செய்தால், பயிர்கள் புதிய வேர் விடவும், தூர் கிளைக்கவும் வழி பிறக்கும்.

மேலுரமிடுவதால்... ?

நடவு செய்த 21-வது நாள் 9 கிலோ தழைச் சத்து அளிக்க 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியாவை முதல் முறையாக மேலுரமாக இட வேண்டும். இரண்டாம் முறையாக மேலுரமிடப் பயிர் சூல் கட்டும் பருவத்தில் அதாவது தொண்டைக் கதிர் சமயத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு 9 கிலோ தழைச் சத்துக் கொடுக்கும் 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியா போட வேண்டும்.

போதிய அளவு நீர்

நடவு வயலுக்கு 4 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சலாம். ஒவ்வொரு முறையும் வயலில் 5 சென்டி மீட்டர் (2 அங்குலம்) உயரம் தண்ணீர் இருக்கும்படி நீர் பாய்ச்ச வேண்டும்.

அரிசன மக்களுக்குப் புதிய சலுகை

தமிழ்நாடு பொதுப் பணிகள் குழு (சர்வீஸ் கமிஷன்) நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ள அரிசன மக்கள் (S.C. & S.T.) கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கத் தமிழ் நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தீர்மானம் உடனடியாக அமுலுக்கு வருகிறது.

இதுவரை ஒரு குறிப்பிட்ட அளவு அவர்கள் கட்டணம் செலுத்தி வந்தார்கள். இந்தப் புதிய ஆணைப்படி இனி அவர்கள் இத்தேர்வுகளுக்குக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

உரிய காலத்தில் மருந்து தெளிப்பது

வந்த பின் காப்பதை விட வருமுன் காப்பதே பூச்சி, நோய்களினுல் ஏற்படும் சேதத்தைக் குறைக்கும். சேதம் குறைந்தால் உற்பத்தி பெருகுவது இயற்கையே. எனவே, நடவு செய்த 15-வது நாள் 0·05 சத பாரத்தியான் (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது 0·04 சத என்ட்ரின் (200 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் நீரில் கலந்து) மருந்தை 'குமான்' போன்ற பூசணக் கொல்லி மருந்துடன் கலந்து தெளிக்க வேண்டும். இம் மருந்துகளை 20 நாட்களுக்கு ஒரு முறை வீதம் கதிர் வரும் வரை தெளிக்க வேண்டும். கதிரில் உள்ள மணிகளில் பால் பிடிக்கும்போது ஏக்கருக்கு 9 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சத தூளைத் தூவ வேண்டும்.

மேலே கூறப்பட்ட பயிர்ப் பாதுகாப்பு முறைகள் தடுப்பு முறைகளாகக் கூறப்பட்டவைகளேயாகும். அவ்வப்பொழுது பயிரில் தோன்றும் பூச்சி; நோய்களைக் கட்டுப்படுத்த உங்கள் ஊர்ப்பணியாளரையோ அல்லது வேளாண்மை வளர்ச்சி அலுவலரையோ அணுகி, அறிந்து, தேவையான மருந்துகளை வாங்கி வந்து, முறையாகக் கலக்கித், தேவையான அளவு தெளிக்க வேண்டும்.

காலத்தில் அறுவடை

கதிர்கள் நன்முக முற்றிய உடன் அறுவடை செய்துவிட வேண்டும். இதனுல் நெல் ப ஙி கள் வயலில் உதிர்ந்து சேதமாவதைத் தடுக்கலாம்.

மேலே கூறப்பட்டுள்ள ஐ. ஆர். 5 நெல்லின் சாகுபடி முறைகளை மேற்கொண்டு தாளடி மகசூலைப் பெருக்கி, நாடு நலம் பெறவும், நமது வாழ்வு வளம் பெறவும் முயன்றிடுவோமாக !

எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்



செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு. எதிர்காலம் பற்றிய அச்சமில்லை. புன்னகையுடன் வருங் காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இனபச் சூழ்நிலை எப்படி வந்தது ? பிறக்கும் போதே அதிர்ஷடத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர் ? இலலை. வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்றேர், திட்டமிட்டும் பொருளைச் சேர்த்தனர், திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய் குறைவாக இருப்பினும், குடும்பம் விரிவாகவிலலை. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர், பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில பதது லடசம் பேர் குடும்ப நலத் திட்டத்தால பயனடைந துள்ளனர். வளமிகக நிறைவாழ்வும் எழில் குன்று இன்னுடனும் பெற்று மகிழ்கின்றனர். பெற்றேரும் குழந்தைகளும் இனிமைமிக்க எதிர் காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்.

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம் ; பாதுகாத்திடுங்கள் ! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள் ; நண்பர்களிடம் கேளுங்கள் !

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள் பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனிவு காட்டுவர், கருத்துரை தருவர், கருவிகளும் கிடைக்கும், பயன் பெறுக !

திட்டமிட்ட குடும்பம தெவிட்டாத இன்பம்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

World Poetry Society

INTERCONTINENTAL

Africa - Anglo America - Asia - Europe - Latin America - Oceania

Whose Voice for Peace is 'POET'

PROCLAIMS THAT THE ELECT

Mr. M. Karunanidhi

Chief Minister, Government of Tamil Nadu, Madras, India

Having Graciously Served World Poetry with Special Merit

As invincible Contemporary Leader of Tamil Culture

Was Granted The

Distinguished Service Citation

"Poetic Magic breathing Tamil linguistic Splendour & Glory"

Conferred in the Manner of an

ANCIENT ARTHURIAN COURT OF HONOUR

Convened By Our

CONTEMPORARY WORLD ROUND TABLE OF PARNASSIAN KNIGHTS

Where Knights of East & West mass Orphic Arms of Peace in Poetry

Sealed and Effective this 14th day of April, 19 69

for the Council of Award Judges and Board of Regents



Chancellor
Urbana, Illinois, U.S.A

Founder - President
Madras, INDIA

உலகில் சிறந்த கவிஞர்

உலகக் கவிதைத் துறையில் சிறந்த பணி புரிந்தமைக்காக 1969-ம் ஆண்டின் சிறந்த உலகக் கவிஞராகத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிஅவர்களை, உலகக் கவிதைக் கழகம் தேர்ந்தெடுத்துள்ளது.

உலகக் கவிதைக் கழகத்தின் தலைவர் டாக்டர் ஆர்வில் சி. மில்லர் அமெரிக்காவிலிருந்து இதற்காகச் சென்னைக்கு நேரில்வந்து தமிழக முதல்வரைச் சந்தித் துவிருதையும் பாராட்டு மடலையும் வழங்கினார்.

பாராட்டு மடலில் " தமிழ் நாட்டின் உண்மையான அரசவைக் கவிஞரைப்போன்று நீங்கள் உங்கள் அற்புதக் கவிதைகளில் தமிழ் மொழியின் எல்லாப் பெருமைகளையும் மாண்பையும் இழையோட விட்டிருக்கிறீர்கள். தமிழ் மொழியில் நிறைந்து இருக்கின்ற பெருமைகளையும் பேரொளி அலங்காரங்களையும் உங்கள் மயக்கும் கவிதைகளில் கொட்டி வர்ணித்திருக்கிறீர்கள்.

ஆருயிரம் ஆண்டுகளாகப் பெருமை பெற்ற தமிழ்ப் பண்பாட்டின் தன்னிகரில்லாத—வெல்ல முடியாத தலைவராகவே உங்களை ஆறு கண்டங்களிலுமுள்ள ஆறுகோடித் தமிழர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் " என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

உலகக் கவிதைக் கழகம் 100 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டது. இவ் விருதினை வழங்கியதற்கு டாக்டர் மில்லருக்கு நன்றி தெரிவித்துத் தனது புத்தகங்களின் ஆங்கில மொழி பெயர்ப்புகளான " நெருப்பு ", என்ற சிறுகதைத் தொகுப்பு, " முத்துக்கள் " என்னும் கவிதைத் தொகுப்பு " நாம்முன்னேற முன்னேற என்ற அரசியல்—சமூகப் பேச்சுக்கள், " தி.மு.க. வரலாறு " என்ற நான்கு நூல்களையும் முதல்வர் அன்பளிப்பாக வழங்கினார்.

உலகக் கவிதைக் கழகத்தின் நிறுவனர்—தலைவர் ஆகிய டாக்டர் கிருஷ்ண சீனிவாசம் உடனிருந்தார்.

உழவர் பெருமககள் அஞ்ச வேண்டாம்

உழவர் பெருமக்கள் எவ்வளவு நெல்தர முன் வந்தாலும் அதை வாங்கிக் கொள்வதென்று தமிழ் நாடு அரசு முடிவு செய்துள்ளது. இம்முடிவினை மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 20-10-1970 அன்று ஓர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் அறிக்கை வருமாறு :—

தஞ்சை மாவட்டத்தில் குறுவை அமோக விளைச்சலின் காரணமாக நெல் விற்பனையில் சற்றுத் தேக்க நிலை ஏற்பட்டிருப்பதாலும், விலைச்சரிவு ஏற்படக் கூடும் என்ற அச்சம் பரவலாக ஏற்பட்டிருப்பதாலும் உருவாகியுள்ள சூழ்நிலையை அரசு ஆழ்ந்து கவனித்துக் கீழ்க் கண்ட முடிவினை மேற்கொண்டுள்ளது.

இந்திய உணவு வாரிய மூலமும், தமிழ் நாடு அரசின் மூலமும் நெல்லைக் குறிப்பிட்ட விலைக்கு வாங்கிட எடுத்துள்ள முயற்சியில் இந்திய உணவு வாரியம் வேகமாகச் செயல்படவில்லை என்பதுதமிழ்நாடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. ஆகவே, தமிழ் நாடு அரசின் கணக்கில் இந்திய உணவு வாரியம் அறிவித்துள்ள அதே விலைக்கு ஒரு லட்சம் டன் அரிசிக்கான நெல்லை வாங்குவதென்றும், மேற்கொண்டும் உழவர் பெருமக்கள் தருவதாயின் அதனையும் வாங்குவதென்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதற்காக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கட்கும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தாக்கீது அனுப்பப் பட்டுள்ளது.

எனவே, உழவர் பெருமக்கள் தங்களிடம் உள்ள குறுவை நெல்லை குவிண்டால் (100 கிலோ) ரூபாய் 51·00 வீதம் (அதாவது 57 கிலோ கொண்ட மூட்டை ரூபாய் 29·07 வீதம்) தமிழ் நாடு அரசுக்கோ அல்லது இந்திய உணவு வாரியத்திற்கோ விற்றுவிடலாம். விலை குறைந்து விடுமோ என்று அஞ்சிடத் தேவையில்லை.



தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி என்ற மூன்று வகை இசைக் கருவிகளைக் கொண்டு நமது பண்டைத் தமிழ்ச் சான்ருேர் ஏழிசைகளையும் இசைத்துப் புகழ் படைத்தனர் என்பதை நாம் நன்கறிவோம்.

ஆனுல் அற்புதமான ஒரு நரம்புக்கருவி-யாழ், வீணை, அல்லது சீறியாழ் (பிடில்) போன்ற —கருவியினின்று எழும்பும் இன்னிசை ஒத்ததோர் இசையினைக் கல்லிலின்றும் எழுப்ப இயலும் என்ற பேருண்மையை நாம் அறியுந்தோறும் வியப்பே மேலிடுகின்றது.

அந்த இசையைக் கேட்கும்போது நமது உள்ளத்திலே உவகை அலை எழும்புகிறது. பண்டு தொட்டு

கல்லினை இசைத்துக் காட்டுகிறுர் ஒரு லலவர்.

குமரி மாவட்டத்தில், கன்னியாகுமரிக்கு மிக அண்மையிலுள்ள சுசீந்திரம் கோயிலுக்குள்ளே செல்வோர் அங்குச் சிற்பி சமைத்த பதுமைகளைத் தவிர, இசை எழுப்பும் இரு வேறு கல் தூண்களையும் காண இயலும். மெல்லிய சிறு சிறு தூண் பகுதிகளைத் தட்டினுல் 'சலதரங்கம்' வாசிப்பது போன்ற பிரமை ஏற்படுகின்றது.

இதில் தேர்ச்சியும், பயிற்சியும் பெற்ற சிலர் இந்தக் கல்லிலே இசை எழுப்பிக் காட்டும் பணியினை மிகச் சிறப்பாகச் செய்து காட்டுகின்றனர்; சசீந்திரம் தாணுமாலயன் கோயிலுக்குச் செல்வோர்க்குக் கண்ணுக்கு மட்டுமின்றிச் செவிக்கும் விருந்து கிடைக்கும் அரும் வாய்ப்பு உண்டு.

இன்று வரை, கற்களைச் செதுக்கிச் சிற்பங்கள் பற்பல பொற்புடன் வடித்திடவல்ல கல் தச்சர்களைத் தமிழ் நாடுபோல் பிற நாடுகள் கண்டதே யில்லை என்பர். அதே சிற்பிகள் கல்லையும் இசை பாடச் செய்ய முடியும் என்ற உண்மையினைச் சிற்சிலகோவில்களில் மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர்.

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்

1/4 சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை—81.

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க் மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க் ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670—52671—52672—52673

தந்தி : MONARCH

நம் நாட்டு மக்கள் உணவு முறையில் சேர்த்துக் கொள்ளும் காய்கனிகளுக்கும் ஏனைய நாட்டினர் உணவுகளில் சேர்த்துக் கொள்ளும் காய்கனிகளுக்கும் இடையே பெரும் வேறுபாடு உண்டு. அண்மையில் அமெரிக்க நாட்டிலிருந்து வெளிவரும் ஏடு ஒன்று இந்த விவரத்தைப் புள்ளி விவரங்களுடன் விளக்கி உள்ளது.

நம் மக்கள் காய்கறிகளையோ கனிவகைகளையோ பெருமளவில் உட்கொள்ளாததற்கு நமது நாட்டுப் பொருளாதாரச் சூழ்நிலையும் ஒருகாரணம் என்ருலும், சில, பழைய பழக்க வழக்கங்களும் காரணமாகும். அதனுல், நம் நாட்டில் காய்கறிகளை அதிகமாக உட்கொள்ளும் பழக்கம் கிடையாது என்று உறுதியாகச் சொல்லவும் முடியாது.

அறியாமையோடு கலந்த சில பழக்க வழக்கங்கள்தான் இதற்குக் காரணம்.

நம் நாட்டில், வழக்கத்தில் உள்ள சில காய்கறிச் சமையல் முறைகளைப் பாருங்கள்; எவ்வளவு காய்கறிகளைச் சேர்த்துக் கொள்கிருேம் என்பது விளங்கும்.

மகாராட்டிரம், குசராத் மாநிலங்களில் வழங்கும் சமையல் முறைகளில் ஒன்று 'ஊந்தீயூ' என்பது.

ஊந்தியூ தயாரிக்கும் முறை

தேவையான பொருள்கள்.

சேப்பங் கிழங்கு—115 கிராம்.
உருளைக் கிழங்கு—240 கிராம்.
சர்க்கரை வள்ளிக்கிழங்கு—225 கிராம்.

சின்னக் கத்தரிக்காய்—225 கிராம்.

வாழைக்காய்—3

வெந்தயக் கீரை—1 கொத்து.

இரட்டை பீன்ஸ்—115 கிராம்.

பீன்ஸ்—115 கிராம்.

மாவு—115 கிராம்.

மிளகாய்ப் பொடி—2 தேக்கரண்டி.

மஞ்சள் பொடி ½— தேக்கரண்டி.

சோடா-பை-கார்பனேட்—1 சிட்டிகை.

சர்க்கரை—2 தேக்கரண்டி.

எலுமிச்சம்பழம்—1

தேங்காய்—115 கிராம் (½ மூடி)

கொத்தமல்லித்தழை—1 கொத்து
பூண்டு—30 கிராம்,

பச்சை மிளகாய்—5 லிருந்து 10 கிராம்.

இஞ்சி—சிறிதளவு.

பெருங்காயம்— ¼ தேக்கரண்டி.

நல்லெண்ணெய்—120 மி.லி.

செய் முறை.

(1) சேப்பங்கிழங்கு, உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு இவைகளைத் தோலைச் சீவவும்.

(2) சேப்பங் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு இவை இரண்டையும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

(3) கத்தரிக்காயின் காம்புகளை வெட்டவும்; வாழைக்காயைத் தோல் சீவாமல் இரண்டாக வெட்டிக் கொள்ளவும்.

(4) உருளைக் கிழங்கு, கத்தரிக்காய், வாழைக்காயைச் சீவிக் கொள்ளவும்.

(5) வெந்தயக் கீரையைக் கழுவி, உப்புத் தெளிக்கவும்.

(6) உப்பு, ஒரு சிட்டிகை மஞ்சள் பொடி, கொஞ்சம் எண்ணெய், வெந்தயக் கீரை, மாவை, ஒன்ருகச் சேர்க்கவும்.

(7) கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரைச் சேர்த்துக் குழம்பாக்கிக் கொள்ளவும்.

(8) துருவிய தேங்காய், கொத்தமல்லித் தழை, பூண்டு, இஞ்சி, பச்சைமிளகாய், சர்க்கரை சோடா-பை-கார்பனேட்டு, பெருங்காயம், இவைகளைப் போட்டு நன்ருகக் கலக்கவும்.

(9) மூன்று பாகமாகப் பிரிக்கவும், கத்தரிக்காய் உருளைக் கிழங்கு, வாழைக்காய் இவைகளை இரண்டு பாகமாகப் பிரித்துக் கொள்ளவும்.

(10) சேப்பங்கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு இவைகளை மீதியிருக்கும் பாகத்துடன் கலக்கவும்.

(11) எண்ணெய்யைச் சூடாக்கிக் கொள்ளவும்.

(12) சூடானவுடன், மசாலாவை வதக்கவும்.

(13) 30 மி. லி. தண்ணீரைக் கொதிக்கவிட்டு, இரட்டை பீன்ஸ், பீன்ஸ், ஒரு சிட்டிகை சோடா போட்டு வேக வைக்கவும்.

(14) சுத்தரிக்காயை வேக வைக்கவும்.

(15) எல்லாக் காய்கறிகளேயும் நன்ருகக் கலந்து வேக வைக்கவும்.

சுவையாக உள்ள இந்த 'ஊந்தியூ'வை எட்டுப் பேர் சாப்பிடலாம்.

காய்கறிக் கிச்சடி.

தேவையான பொருள்கள்.

அரிசி—225 கிராம்.
துவரம்பருப்பு—55 கிராம்.
கடலைப் பருப்பு—55 கிராம்.
பயத்தம் பருப்பு—55 கிராம்.
மசூர் பருப்பு—55 கிராம்.
கக்கரி விதை—55 கிராம்.
தக்காளி—115 கிராம்.
உருளேக் கிழங்கு—115கிராம்.
சர்க்கரை வள்ளிக் கிழங்கு—115 கிராம்.
வெண்டைக்காய்—115 கிராம்.
கேரட்—115 கிராம்.
வெங்காயம்—225 கிராம்.
உப்பு—சுவைக்கு ஏற்றபடி.
மஞ்சள் பொடி—1 தேக்கரண்டி.
கொத்தமல்லி, சீரகப்பொடி—1 தேக்கரண்டி.
சீரகம்—½ தேக்கரண்டி.
பச்சைமிளகாய்—5
கொத்தமல்லித் தழை—சிறிதளவு
இஞ்சி—1 துண்டு.
பூண்டு—சில.
லவங்கப்பட்டை—1 துண்டு.
கிராம்பு—10
மிளகு—10
தேங்காய்—பாதி மூடி.
நெய்—115 கிராம்.

செய்முறை.

(1) பருப்புக்களையெல்லாம் முதல் நாள் இரவு ஊற வைக்கவும். அரிசியைக் கழுவி, ஊற வைக்கவும்.

(2) சர்க்கரைவள்ளிக் கிழங்கு, உருளேக் கிழங்கு, கேரட் முதலிய கக்கரிக் காய்களை நறுக்கவும்.

(3) தக்காளி வெண்டைக் காய்களை நறுக்கவும்.

(4) வெங்காயத்தை உரிக்கவும். கிராம்பு, மிளகு, லவங்கப்பட்டையை நசுக்கிக் கொள்ளவும்.

(5) இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய், கொத்தமல்லித் தழையை நறுக்கிக் கொள்ளவும்.

(6) தேங்காயைத் துருவி, கொஞ்சம் தனியாக வைத்து மீதியைப் பால் பிழிந்து கொள்ளவும்.

(7) நெய்யைச் சூடாக்கிக் காய் கறிகளை வதக்கவும். உப்புத் தண்ணீரைத் தெளிக்கவும்.

(8) துவரம் பருப்பையும், பயத்தம் பருப்பையும் வேக வைக்கவும்; பிறகு பயத்தம் பருப்பு, மசூர் பருப்பைக் கலக்கவும்.

(9) வெங்காயத்தை வதக்கவும்; சீரகப் பொடி, மசாலா, துருவிய தேங்காய், இவைகளைப்போடவும் பொன் நிறமானவுடன் மஞ்சள் பொடி, கொத்தமல்லிப் பொடி உப்பைப் போடவும்.

(10) பருப்பு, அரிசி, தேங்காய்ப் பால் வதக்கிய வெங்காயம் இவைகளைப் போட்டுப் போதுமான தண்ணீரை விடவும்.

(11) பாதி வேகும்போது காய்கறிகளைப் போடவும்.

(12) அரிசியில் காய்கறிகள் வெந்ததும், கெட்டியானவுடன் சாப்பிடவும், மிகச் சுவையாக இருக்கும்!

—அஞ்சனு

உங்களுக்குத் தெரியுமா?

பத்து ரூபாய் நாணயம்

உணவு வேளாண்மைக் கழகத்தின் (Food and Agriculture Organisation) ஆண்டு விழாவை முன்னிட்டு, இந்திய அரசு அக்டோபர் மாதம் 16-ந் தேதியன்று, சிறப்பு நினைவுச் சின்னமாக புதிய பத்து ரூபாய் நாணயம் ஒன்றினை வெளியிட்டு உள்ளது.

இந்த நாணயத்தின் முன் பக்கத்தில் அசோக தூணின் உருவமும், பின் பக்கத்தின் நடுவில் நன்கு மலர்ந்த தாமரை, அதன் உச்சியில் உதய சூரியன், இரு பக்கங்களிலும் தானியக் கதிர்கள் ஆகிய உருவங்களும் பொறிக்கப்பட்டு இருக்கின்றன.

புதிய கேழ்வரகு

புரதச் சத்து மிக்க புதிய கேழ்வரகு கோயம்புத்தூரில் உள்ள வேளாண் ஆராய்ச்சி நிலயத்தில் உருவாக்கப்பட்டு, சென்ற ஆண்டில் வெளியிடப்பட்டது. இதன் பெயர் கோ-9 கேழ்வரகு (ராகி).

இப்புதிய கேழ்வரகின் தானியம் வெண்மை நிறமானது. இதில் 11·8 சதம் புரதச் சத்து உள்ளது. இப்புரதச் சத்து ஏறத்தாழ கோதுமையில் உள்ள சத்திற்குச் சமமாகும்.

தானியம் வெண்மையாய் இருப்பதால், இதிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருள்கள், பசியைத் தூண்டுவதாக உள்ளது.

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்றார் செவ்விய அறிவுச் செந்நாப் போதார். ஐம்பொறிகளுள் 'செவிக்கே' மிகுந்த சிறப்புண்டு. கண்ணால் காணப்படு வனவற்றைக் 'கண் செல்வம்' என்றோ, மூக்கால் முகரப்படுவனவற்றை 'மூக்குச்செல்வம்' என்றோ, வாயால் உண்ணப்படுவனவற்றை 'வாய்ச் செல்வம்' என்றோ, உடலால் தீண்டி உணரப் படுவனவற்றை 'உடற் செல்வம்' என்றோ எவரும் இயம்பியதில்லை; இயம்புவதும் ஏற்புடையதன்று. ஆயின் மன வளத்தையும், நலத்தையும் பெருக்கிப் பேணும் பெற்றி படைத்த செவியால் பெறும் கேள்வியோ செல்வமாகின்றது. 'செல்வம்' என்றவுடன் பெறுவதில் ஆர்வமும் பேணிக் கொள்வதில் விருப்பமும் எழும் என்பதனால், திருவள்ளுவர், கேள்வியைச் 'செவிச் செல்வம்' என்று பாராட்டி, மக்களை அதனைப் பெறுமாறு ஊக்கப்படுத்துகின்றார். புற வாழ்க்கைக்குரிய பிற செல்வங்களினும் அக வாழ்க்கைக்குரியதாகிப் புற வாழ்வையும் உயர்த்தும் செல்வம் சிறந்ததாகலான் அத்தகைய கேள்வியைச் செல்வங்களில் எல்லாம் சிறப்புடைய செல்வம் என்று திருவள்ளுவர் உயர்த்துகின்றார்.

"எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"

கேட்பதன் மூலம் பெறத்தக்க அறிவைத் தக்க முறையில் தேடிப் பெற்றால், பயனுள்ள நன்மையடைய முடியு மென்பது, பட்டறிவு தருகின்ற படிப்பு. நம் நாட்டில் பல முக்கியமான செய்திகள், செவி வழியாகவே பரவி வந்துள்ளன. வாழையடி வாழையாக வந்த இந்தப் பழக்கம், அறிவியல் ஊழியான இக் காலத்தில், சமுதாய வளர்ச்சிக்கான வகையில் மிகத் திறம்பட வளர்ந்துள்ளது. "காசிநகர்ப் புலவர் பேசுமுரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" எனக் கவித்தேர்ச் சாரதி பாரதி எதிர்கால ஆக்கத்திற்கு உரிய கருத்தைத் தன் பாட்டுத்தொடரில் பதித்துச் சென்றுள்ளார். இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பிறகு நினைத்தபோது எங்கும் நிறையும் வானொலியின் பெரும் பேராற்றலை, பொழுது போக்குக்காக மட்டுமல்லாமல், சமுதாய வளர்ச்சிக்கான அடிப்படைக் கல்வி வளர்ச்சியைக் கொடுக்கும் கருவியாகவும் பயன் படுத்துவதில் விரைவும், வேகமும் காட்டப்பட்டன.

கானடா, ஆத்திரேலியா போன்ற நாடுகளில், வானொலி கேட்கும் குழுக்கள், ஊர் மக்களுக்குப் பல அரிய காரியங்களைச் சாதிப்பதற்கு உறு துணையாக இருந்து வருகிறதென்பதை அறிந்து, ஆராய்ந்த ஐக்கிய நாடுகளின் கல்வி சமூக, கலாச்சார நிறுவனம், இத்தகைய மன்றங்களை, உழவர்கள் நிறைந்த இதர நாடுகளுக்கும் பரப்பி, அதன் மூலம் பயனடையச் செய்ய வேண்டுமென நினைத்துச் செயல் படுத்த முனைந்தது.

அதன் படி, 1956-ஆம் ஆண்டு இந்தியாவில், 150 ஊர் வானொலி மன்றங்கள் முன்னோடியாகத் தொடங்கப்பட்டன. அந்த மன்றங்கள் செயற்பட்ட முறையும், அவற்றால் அடையும் பயனும், மக்களின் கருத்துக்களும், பிரச்சினைகளும் ஆய்வு செய்யப்பட்டன.

வேளாண்பெருமக்கள் தோற்றுவிக்கும் பசுமைப் புரட்சி, இருபதாம் நூற்றண்டின் இறுதிக் காலத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பெருகிவரும் மக்கள் தொகைக்குப் பகிர்ந்தளிக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும். இத்தகு நோக்கங்களை நிறைவேற்றப் புது உழவுக் கருவிகள் வேண்டும். ஆராய்ச்சிப் பண்ணைகளில் உருவாக்கப்படும் மிகு விளைச்சல் தரும் வீரிய வித்துக்கள் வேண்டும். இவற்றோடு தொழில் நுட்ப அறிவும் தேவை. இத்தகைய தொழில் வளர்ச்சிக்கான செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள வகைசெய்யும் அமைப்பு முறையே கிராம வானொலி மன்றங்களாகும்.

மன்றங்களுக்கென ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைக் கேட்கவும், அறிவு வளர்ச்சிக்கான கருத்துக்களையும், பயனுள்ள செய்திகளையும் அவ்வப்போது அறியவும் அறிந்தவற்றைத் தமக்குள் விவாதிக்கவும், எழும் ஐயப்பாடுகளைக் கேள்விகளாகக் கேட்டுப் பதில் அறிந்து, பயனுள்ளவற்றை நடைமுறைக்குக் கொண்டுவந்து பலன் காணவும், வேளாண்பெருமக்களும், உழவுத் தொழிலுக்குப்பின் நிற்கும் பிறதொழில் செய்பவர்

களுமான, 20 உறுப்பினர்களைக் கொண்ட குழுவே ஊர் வானொலி மன்றமாகும்.

முன்னோடியாகத் தொடங்கப்பட்ட ஊர் வானொலி மன்றங்களைப் பற்றிய ஆய்வுகள் நற்பயனளிப்பவையாக இருக்கவே 1959-ஆம் ஆண்டு நாடெங்கும் ஊர் வானொலி மன்றங்களை அமைத்துச் செயல்படுத்தும் பொறுப்பு, மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. வளம் மிக்க வேளாண்மைக் கருத்துக்களை ''வானொலி மூலம் கேளாத செவியென்ன செவியோ '' என்று கருதும் அளவுக்கு வளர்ந்துள்ளசெவி வழி அறிவைப் பரப்ப, தமிழக அரசு, வானொலி மன்றங்களை அமைப்பதற்கெனவே எல்லா ஊராட்சிகளுக்கும், உட் கடை ஊர்களுக்கும் வானொலிப் பெட்டிகளை வழங்கியிருப்பதில், அனைத் திந்தியாவிலேயே முன்னணியில் நிற்கிறது. வட்டார அளவில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வானொலி மன்றங்களை அமைப்பதற்கான பொறுப்பாளர்களாவார்கள்.

அரசின் பல்வேறு துறைகளின் அலுவலர்களையும் அரசுச் சார்பற்றவர்களையும் கொண்ட குழுவின் கருத்துரைக் கேற்ப, ஊர் வானொலி மன்றங்களுக்கான நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டு, ஒலிபரப்பப்படுகின்றன.

1962-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில், ஊர் வானொலி மன்ற அமைப்பாளர்க்கெனப் பயிற்சி கொடுக்கப்பட்டது. 1964-ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் நடந்த ஊர் வானொலி மன்றக் கருத்தரங்கில், மன்ற அமைப்பாளர்கள், தலைவர்கள், மன்றங்களுடன் தொடர்பு கொண்ட அரசு அலுவலர்கள், வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் தீர்மானித்தபடி, மன்றங்களின் வளர்ச்சிக்கான பல பயனுள்ள கருத்துக்கள் மேற்கொள்ளப்பட்டன.

1964-ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய வானொலி நிலைய நிர்வாகிகள் மாநாட்டில் இயக்குநர் தலைவர் திரு பி. பி. பட், ஊராட்சிகளில் வானொலி மன்றங்களை அமைப்பதில், தமிழ் நாடு சிறப்பாகப் பணியாற்றி வருகிற தென்பதைக் குறிப்பிட்டார்.

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு.... ரூ. 8·00

அரை ஆண்டு... ரூ. 4·00

தனிப்பிரதி... 35 காசுகள்

விவரங்களுக்கு:-

இயக்குநர்,

செய்தி, விளம்பரத்துறை,

தமிழ் நாடு அரசு - சென்னை, 9

ஊர் வானொலி மன்றங்கள் பெறும் வெற்றியைத் தொடர்ந்து உடனுக்குடன் உழவுச் செய்திகளை வழங்குவதற்கெனவே, அனைத்திந்திய அடிப்படையில் வானொலி நிலையங்களில் தீவிர விவசாய ஒலி பரப்புத் திட்டம், 'பண்ணையும் இல்லமும்' என்ற பெயரில் 1966-ஆம் ஆண்டு முதல் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 500 ஊர் வானொலி மன்றங்களைத் தொடங்குவதெனக் குறி எல்லை உறுதி செய்யப்பட்டது.

1967-ஆம் ஆண்டு முதலாக, ஊர் வானொலிமன்றங்களிடையே புதியதொரு மலர்ச்சியை ஏற்படுத்துவதில் தீவிரக் கவனம் செலுத்தப்பட்டது. அவ்வாண்டு முதல் வானொலி மன்றங்களின் ஆண்டு விழாவும், அதனையொட்டிய கருத்தரங்கும் நடத்தப்பட்டு, மாவட்ட அளவில் நற்பணியாற்றும் முதன்மையான ஊர் வானொலி மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வானொலிப் பெட்டிகள் பரிசளிக்கும் திட்டம் தொடங்கப் பெற்றது.

1967-ஆம்ஆண்டில் திருச்சிராப்பள்ளியிலும், 1968-ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சூலூரிலும், 1969-ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியிலும், கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட வானொலிமன்றங்களுக்குப் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. தொடர்ச்சியான முயற்சிகள் வானொலி மன்றங்களிடையே ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தோற்றுவித்துள்ளன.

தமிழகத்தில் பசுமைப் புரட்சிக்கு அடிகோலிய, எ.எஸ்.டி. 5 ஏ.டி.டி. 27, ஐ.ஆர். 8, கருணை போன்ற பொறுக்கு விதை நெல் ரகங்கள் எங்கும் பரவி, மிகு விளைச்சல் பெற்றுள்ளதற்கு, வானொலிமன்றங்களின் வாயிலாக ஒலிபரப்பப்பட்ட வேளாண்மைச் செய்திகளே அடிப்படையாகும். ஊர் வானொலி மன்றங்கள், உழவர் பெருமக்களுக்கான கல்வி நிலையங்களாக இயங்கி, உழவுத் தொழிலுக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் ஊட்டுவதில்உற்ற துணையாகப் பயன்படுகின்றன. மன்றங்களின் வளர்ச்சி பெருகி வருவதே இதற்குத் தக்க சான்றாகும்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் குறிப்புகளின்படி, தமிழகத்தில், ஏறத் தாழ 15,000 ஊர் வானொலி மன்றங்கள் இயங்குவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில், மாலையில் 7-30 முதல் 8 மணி வரை ஒலிபரப்பப்படும் மன்ற நிகழ்ச்சிகளில், உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், மற்றவர்களும், ஆர்வத்துடன் கலந்து கொள்வதைக் காணமுடிகிறது. ஊர் வளர்ச்சிக்கெனச் செயல்படும், அரசின் பல் வேறு துறைகளின் வல்லுநர்களுக்கும், மக்களுக்கு மிடையே தொடர்ச்சியானதோர் உயிர் இணைப்பை வானொலி மன்றங்கள் ஏற்படுத்துகின்றன.

எனவே, ஊர் வானொலி மன்றங்களை, ஊர்கள் தோறும் தொடங்குவதும், நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கேட்கச் செய்வதும், நமது எதிர்காலத்தை வளப்படுத்துவதாகும்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பசுமைப் புரட்சி மேலும், வளமுடையதாக அமைய 'வானொலி' பயனுள்ள சாதனமாகும். வாழ்வு தரும் உழவு செழிக்கும் வகையில் வானொலி மன்றங்கள் வளர்வதாகுக !

'' வானொலியின் வாரா நன்மைகள் உளவோ ?''.

பிச்சைகள் பலவிதம்

டக், டக், டக் என்று எனது அறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. தேர்வுக்கு மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்த நேரம். 'யார்' என்றேன். வெண்கலச் சிரிப்பொலியே வெளியிலிருந்து கேட்டது ; மீண்டும் 'யார்' என்றேன். டக், டக், டக்! இதுதான் பதில். பொறுமை இழந்த நான் படாரெனக் கதவைத் திறந்தேன். இருபது இருபத்திரண்டு வயது இருக்கும் ; இள வயது மங்கை ; தலையிலே முக்காடு ; முகத்தில் முறுவல் ; ஒரு கணம் திகைத்தேன். என் உடல் பின் வாங்கியது ; அனுமதியின்றியே அவள் என் அறையினுள் நுழைந்து விட்டாள் ; கண்ணாடி வளைக்கரத்தை நீட்டிப் 'பைசா பைசா' என்றாள். பேசியதோ எனக்குப் புரியாத இந்தி மொழி ; மிரள மிரள விழித்தேன். பக்கத்தறைத் தோழர்கள், நாங்கள் இருவரும் நிற்கும் கோலம் கண்டால் என்ன நினைத்துவிடுவார்களோ, என்ற வெட்கம் ; அச்சம். 25 காசுகளைக் கரங்கள் நடுங்கக் கொடுத்தேன். அவள் நகர்வதாகக் காணோம். என் சட்டையைப் பிடிக்கும் அளவுக்கு நெருங்கி விட்டாள். மேலும் 25 காசு கொடுத்து எப்படியோ அவளை வெளியேற்றி விட்டேன் ; பிச்சை எடுக்கும் முறைகளிலே இதுவும் ஒன்று போலும் ; அதிகாரப் பிச்சை !

ஆண்டுகள் சில கடந்து சென்னைக்கு வந்தேன். புரசை உந்து வண்டி நிலயத்தில் 22-ஆம் எண்ணுள்ள வண்டிக்காகக் காத்திருந்தேன். நிறை மாதக் கர்ப்பிணி ஒருத்தி; அவளோடு ஒரு மூதாட்டி ; 'ஐயா பிள்ளைப் பேறு ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் ; புண்ணியம் உனக்குண்டு' என்ற பல்லவி. ஏதாவது தாருங்கள் என்ற அனுபல்லவி. அவளுடைய நிலை நோக்கப் பரிதாபமாக இருந்தது. நம் சகோதரிகளுக்கு இந்த மாதிரி நிலை ஏற்பட்டால்? என் சிந்தனை எப்படி எல்லாமோ குழம்பியது ; வண்டி வந்தது ; ஏறுங்கள் என்றேன். அவர்களுக்கும் சேர்த்து டிக்கட்டு எடுத்தேன். ஆனால் எழும்பூர் நிலயம் வந்ததும் முகத்தைச் சுளித்துக் கொண்டு அக்கர்ப்பிணி தன் சகாவோடு இறங்கி விட்டாள் ; என்ன காரணமென எனக்குத் தெரியவில்லை ; மறுநாளும் அவர்களை அதே நிலையில் கர்ப்பிணியின் வயிற்றைக் காட்டி, கையை நீட்டிப் பல்லைக்காட்டிக் காசு கேட்கும் காட்சியைக் கண்டேன். இதுவும் ஒரு வகைப் பிச்சை. ஏமாற்றுப் பிச்சை !

மாலை நேரம்; மவுண்டு ரோட்டிலே நடந்து கொண்டிருந்தேன். சுமார் நாற்பது வயதுடைய ஒரு ஆங்கிலோ இந்தியர் ; ஐரோப்பிய பாணியிலே உடை ; காலில் பூட்ஸ், தலையில் தொப்பி; ஆனால் அனைத்தும் அழுக்கடைந்தவை; கையிலே சுமார் மூன்று வயதுக் குழந்தை ஒன்று ; சிவந்த நிறம் ; செம்பட்டை மயிர் ; அக்குழந்தையைக் காட்டித், 'தாயில்லை' என்று சொல்லிப் பிச்சை கேட்டார். பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது ; வாழ்ந்து கெட்டவர் போன்ற தோற்றம். 50 காசு கொடுத்தேன்; கனிந்து நன்றி செலுத்தினார். மறுநாளும் அவரை அங்கே காண நேர்ந்தது. பஸ் வர நேரமாயிற்று ; என்னிடத்தே தம் வாழ்க்கை நிலை பற்றிச் சொன்னார். ''ரயில்வே அச்சகத்தே மெஷின்மேன் வேலை பார்த்தேன் ; வேலை போயிற்று; வேலை கிடைத்தால் பிச்சை எடுப்பதை விட்டுவிடுவேன் '' என்றார்; எனக்கோ இரக்கம் தோன்றியது. என் நண்பர் ஒருவரின் அச்சக முகவரியைக் கொடுத்து அங்கே வருமாறு சொன்னேன் ; ஒரு ரூபாய் வேண்டும், வண்டிச் செலவுக் கென்றார் ; கொடுத்தேன் ; பின்னர் ஆறுமாதங்கள் வரை அவரைச் சந்திக்கவில்லை ; ஒரு நாள் அவரை மீண்டும் காண நேர்ந்தது ; கையிலே குழந்தை இல்லை ; '' என்ன ? அச்சக வேலைக்கு ஏன் வரவில்லை '' என்றேன். 'எனக்கேன் அந்த வேலை' என இகழ்ச்சியாக ஆங்கிலத்திலே சொன்னார்; இந்தப் பிச்சைக் காரரைத் திருத்த முடியுமா? இது சோம்பற் பிச்சை!

புரட்டாசி மாதச் சனிக்கிழமைகளிலே, ஆடி மாத வெள்ளிக்கிழமைகளிலே, கிருத்திகை போன்ற தினங்களிலே, பித்தளைப் பாத்திரத்தைப் பொன் போலத் துலக்கி மஞ்சள் குங்குமம் பொட்டு வைத்து 'கோவிந்தா, கோவிந்தா' என்றும், மாரியம்மனுக்குக் காணிக்கை என்றும் ஒரு கூட்டம் புறப்பட்டு வரக் காண்கிறோம்.

கடவுள் பெயரைச் சொல்லிக் கேட்கும் பிச்சை இது ; தில்லையம்பலவனையே பிச்சாண்டியாகத் தத்துவ ஞானிகள் கண்டதன் உண்மை தெரிந்தவர்களோ இவர்கள்! ஆலயங்களின் வாசலிலே குளக்கரைகளிலே, பள்ளிகளின் முன்னிலையிலே, மாதாகோவில் வீதிகளிலே இவ்வாறு பலவகைப் பிச்சைக்காரர்களைப் பார்க்கிறோம்.

'ஈயெனஇரத்தல் இழிந்தன்று' என்பது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழன் கண்ட தலையாய பண்பு ; 'நாவிற்கு இரவின் இளிவந்ததில்' என்றார் வள்ளுவர். ஆனால் இன்றுவரை இரப்பவர் பெருகி வருவதையே காண்கிறோம். ஈவாரும் ஏற்பாரும் இல்லாச் சமுதாயத்தைக் கம்பன் காவியத்திலே தான் காண்கிறோம். 'ஏற்பது இகழ்ச்சி' எனப் பிள்ளைப் பருவத்திலேயே உள்ளத்தில் பதிய, ஔவைப் பிராட்டி கூறினாள். எனினும் சூழ்நிலை காரணமாகவோ, சோம்பல் காரணமாகவோ, பிச்சைக்காரர்கள் நாள்தோறும் பெருகியே வருகிறார்கள்.

பிச்சை எடுத்தல் ஒரு பெரிய தொழில்போல வளர்ந்து வருகிறது. பிச்சைக்காரர்களை நல்ல உடல் வளம் படைத்தவர்கள், நோயாளிகள், அதையே தொழிலாகக் கொண்டவர்கள் என மூவகையாகப் பிரிக்கலாம். நோயாளிகளில் பலரும் தொழுநோயாளர்கள். முடவர், குருடர் போன்ற அங்க ஈனர்களும் இக்கூட்டத்திலே உண்டு.

வருந்திப் பொருள் தேடுவதை விட இதில் வசதியாகப் பொருள் தேடுபவர் பலர்; பம்பாய் நகரத்திலே நாளொன்றுக்கு ரூபாய் இருபதுவரை பிச்சைக்காரர்கள் சம்பாதிக்கிறார்கள் என ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. உத்திரப்பிரதேசத்திலே, இறந்த ஒரு பிச்சைக்காரனிடம் ரூபாய் 2,000 வரை இருந்ததாகப் பத்திரிகைச் செய்தி படித்திருக்கிறேன். பாங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் பிச்சைக்காரர்களும் இருக்கிறார்களாம்.

சென்னை நகரைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய பத்தாயிரம் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்களைக் குறைக்க அல்லது ஒழிக்க அரசாங்கம் பல வழிகளில் பாடுபட்டு வருகிறது. இவர்களுக்கென ஆவடியிலே மேல்பாக்க விடுதி ஒன்று இருக்கிறது. மாநகராட்சி மன்றம் பிச்சைக்காரர்களுக்காக இராயப்பேட்டையில் ஒரு விடுதியை நடத்தி வருகிறது. இவை தவிர மார்வாரிகள் சங்கத்தின் ஆதரவில் ஒட்டேரியில் 'தயா சதன்' என்ற விடுதியும் நடைபெற்று வருகிறது. ஆவடி விடுதியில் ஏறக்குறைய 900 பிச்சைக்காரர்களும், இராயப்பேட்டை விடுதியில் 600 பேரும், தயா சதனில் சுமார் 500 பேரும் தங்கி வருகின்றனர். இந்த விடுதிகளில் அவர் தம் வாழ்வு மலர்ச்சி அடைய, மானத்துடன் சமூகத்தில் வாழப் பல தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தையல் வேலை, பாய் முடைதல், தச்சு வேலை போன்ற கைத் தொழில்கள் இவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. இரத்தலின் இழிவும், மானத்தோடு வாழ்தலின் சிறப்பும் இவர்கட்கு நல்ல முறையில் எடுத்துக் கூறப்படுகின்றன.

அரசினரும், இந்தச் சமுதாயத்திலே அனுதாபம் உள்ளவரும் பிச்சைக்கார இனத்தையே மாற்றி அமைக்கப்பல துறைகளில் பாடுபடுகின்றனர். பிச்சைக்காரர்களை வண்டிகளிலே ஏற்றி அவ்வப்போது இந்த நிலையங்களில் காவல் துறையினர் கொண்டு வந்து சேர்ப்பதைக் காண்கிறோம். ஆயினும் ஊரைச் சுற்றிச் சோம்பேறி வாழ்வை நடத்தி வந்த பிச்சைக்காரர்கள் பலரும் இவ்விடுதிகளில் தங்க மனமின்றி ஓடிச் சென்று விடுகின்றனர். இது மிகவும் வருந்தத்தக்கதல்லவா?

நமது இரக்க உள்ளம் பிச்சைக்காரர்கள் பெருக ஓரளவு தூண்டுகோலாய் இருப்பது உண்மை! காணும் பிச்சைக்காரர்கட்கெல்லாம் காசு வழங்குவது தவறு ; பிச்சைக்காரர்கள் புனர் வாழ்வு விடுதிகளுக்கு நாம் பொருளை வழங்கலாம். அவர்கட்கு உடை, உணவு வகைகளை அனுப்பலாம்; வாரத்தில் ஒருநாளோ மாதத்தில் ஒரு நாளோ அவரவர் வசதிப்படி உணவு முதலியன வழங்கலாம்.

இந்த விடுதிகள் அவற்றை ஏற்றுச் செம்மையான முறையில் அவர்கட்கு உதவி வருகின்றன. தனிப்பட்ட பிச்சைக்காரர்கள் பாதையோரங்களிலும், கோவில் குளக்கரைகளிலும் வளர்ந்து சூழ்நிலையைப் பாழாக்குவதற்கு நம் தரும சிந்தனையைச் செலுத்தாமல்அவர்கட்குப் புதுவாழ்வளிக்க முயலும் இந்த நிலையங்கட்குப் பொன்னாலும் ஏனைய பொருள்களாலும் உதவுவதே நாம் உண்மையாகச் செய்யும் அறன்; அறவுளத்தைக் கால நிலைக்கு ஏற்றபடி மாற்றிப் பயன்படுத்தலே அறிவுடைமையாகும். நமது அரசு நல்ல முறையில் விடுதி அமைத்துப் பிச்சைக்காரர்களுக்கு நல்வாழ்வு காட்ட முயலும் போது நாம் தனிப்பட்ட முறையில் பிச்சைக்காரர்கள் வளரத் தருமம் செய்து, சமூகத்திலே நோயும், சோம்பலும், ஒழுக்க வீனங்களும் வளர வழி வகுப்பது சமூகத்திற்குச் செய்யும் தீமையே தவிர அது ஒருநாளும் தருமமாகாது.

கண் காட்சி!

பொருட் காட்சிகளைக் கண்காட்சி என்று குறிப்பிட்டாலும், உண்மையான கண் காட்சி உள்ள இடம் எழும்பூர் கண் மருத்துவ மனை தான்! சுமார் 50 ஆண்டுகளுக்குமுன் துவக்கப்பட்ட இந்தக் கண் காட்சி (கண் மியூசியம்) மிகச் சிறந்த கண்காட்சிகளில் ஒன்றாகும்.

பல்வேறு நோய்களினால், பாதிக்கப்பட்ட கண்கள், கண் ஓவியங்கள் முதலியன தகுந்த குறிப்புகளுடன் அங்கு வைக்கப்பட்டுள்ளன.

மார்போடு மார்பாக ஒட்டிக்கொண்டு பிறந்த இரட்டைக் குழந்தை ஒன்றுக்கு நெற்றியில் கூட்டல் அடையாளம் (+) போன்ற நெற்றிக்கண் உள்ளது. அதுவும் அங்கு பாதுகாக்கப்பட்டுள்ளது.

கண் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு இந்தக் கண் காட்சி மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது.



எல்லோரும் விரும்புவது,
மேன்மையானது, முதன்மையானது

அசோக் லேலண்ட் காமெட்...பயணிகள் போக்குவரத்திற்கு. இந்தியா முழுவதும் அரசினர் போக்குவரத்து நிர்வாகங்கள், மற்ற போக்குவரத்து நிர்வாக உரிமையாளர்கள் விரும்பித் தேர்ந்தெடுப்பது.

சிறப்பான காரணங்கள்

இதையே வாங்குங்கள். ஓர் அணியையே உருவாக்குங்கள். இதற்காக வருந்தமாட்டீர்கள்

வன்மை...நம்பகம்...சிக்கனம்
உள்ள
அசோக் லேலண்ட் காமெட்

AL-5003 Rev

‘தமிழரசு’ துவக்கியுள்ள வெண்பாப் போட்டியில் இரண்டாயிரத்து முப்பதுக்கும் மேற்பட்ட கவிஞர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ‘தமிழரசு’ இதழின் சார்பில் நன்றி கூறிக்கொள்கிறோம்.

‘நல்லரசைப் பெற்றேமே நாம்’ என்ற ஈற்றடியை வைத்து எழுதப்பட்ட வெண்பாவில், திரு இறைவன் எழுதிய வெண்பா பரிசு பெறுகிறது. பரிசு பெற்ற வெண்பாவும், வெளியிடுவதற்குத் தகுதி படைத்த நூற்றுக் கணக்கான வெண்பாக்களில் இட நெருக்கடி காரணமாகச் சில வெண்பாக்களும் இங்கே வெளியிடப்படுகின்றன.

[ஆ-ர்.]

வெண்பாப் போட்டி

1. நல்லரசைப் பெற்றேமே நாம்

● நாதிமுறை யற்றவர்க்கு நல்லநிலந் தான்தந்து
வீதிமுறை வாழ்ந்தவர்க்கு வீடுதந்து—சாதிமுறை
இல்லாமல் செய்து தமிழ் ஏற்றமுற வைத்தவோர்
நல்லரசைப் பெற்றேமே நாம்.
—இறைவன், பனையபுரம்.

வெட்டக் கனிபெடுக்கும்; வேண்டுந் தொழில்வளர்க்கும்
சட்டம் ஒழுங்கமைதி தங்குவிக்கும்—முட்டின்றி
வல்லதமிழ் காக்கும்நம் வாட்டமெலாம் போக்குமொரு
நல்லரசைப் பெற்றேமே நாம்.
—புலவர் தா. வாசுதேவன், பி. ஏ. நயினார்பாளையம்.

பேரறிஞர் அண்ணாதான் பெற்றளித்த பேரரசைப்
பார்புகழ ஆள்கின்றார் பண்புடனே—சீர்கொண்ட
செல்வம் கொழித்திடவே சேலம் கனிகண்ட
நல்லரசைப் பெற்றேமே நாம்.
— எஸ். டி. சிவசங்கரன், கொக்கிரகுளம்.

முப்பால் வழிசென்று மூதறிஞர் நம்அண்ணன்
தப்பாது கண்டார் தமிழரசை ; —இப்பதியில்
இல்லாமை இல்லாமை ஆக்கக் கலைஞரின்கீழ்
நல்லரசைப் பெற்றேமே நாம்.
— ந. செனார்த்தனன், அரக்கோணம்.

அஞ்சுகத்தாய் பெற்ற அழகுதமிழ்ச் சொல்வல்லோன்
பஞ்சமதைப் போக்கவே பாடுபட்டுக்—கஞ்சமலைக்
கல்லெடுத்தான் கல்லக் குடிகொண்டான் தன்செயலால்
நல்லரசைப் பெற்றேமே நாம்.
— நாராயணன், கோவை-1.

தன்னாட்சி பெற்றால் தமிழ்வாழும்; நாடுயரும்
பொன்னார் தமிழர் புகழ்மேவும்—என்றுய்ந்து
தில்லி அரசோடு திறமுடன் போராடும்
நல்லரசைப் பெற்றேமே நாம்.
— இரா. வைத்தியநாதன், பொற்களாக்குடி.

முன்னம் தமிழாட்சி மும்மன்னர் தாமீந்தார்
பின்னும் தமிழாட்சிப் பேறுண்டோ—நன்மணஞ்சேர்
முல்லை முகிழ்த்ததுபோல் மூன்றுண்டு முன்புதான்
நல்லரசைப் பெற்றேமே நாம்.
—சி. மு. இராசு, சீரணம்பாளையம்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் என்றுரைத்த
வள்ளுவர் சொன்ன வழிநின்றே—தொல்லுலகீர்
எல்லாரும் எந்நாடும் எம்மதமும் போற்றுகின்ற
நல்லரசைப் பெற்றேமே நாம்.
—ப. முருகேஸ்வரி பழனிச்சாமி, திருநெல்வேலி-1.

மக்கள் குறைநீக்கி மாண்புமிக அன்பினொடு
சிக்கலின்றி நற்பணிகள் செய்வதனால்—தக்கதெனப்
பல்லரசும் பாராட்டும் பண்பார் தமிழகத்தில்
நல்லரசைப் பெற்றேமே நாம்.
—இ. மணிவாசகம், சைதாப்பேட்டை. (வ.ஆ.)

கஞ்சமலை என்கின்ற காரிகையே! நின்மடியில்
துஞ்சும் இரும்பைத் துயிலெழுப்பி—நெஞ்சுவக்க
வல்லமையைக் காட்ட வகைசெய்தே பாடுபடும்
நல்லரசைப் பெற்றேமே நாம்.
— ஆரணி பாத்திமா தங்கம், ஆரணி.

தொழிலோங்கப் பஞ்சம் தொலைந்தோட நாட்டில்
எழிலோங்க எங்கும் தமிழாய்—மொழிவோங்க
வெல்லத் தமிழினம் ; வேரறுக்க ஏழ்மையினை
நல்லரசைப் பெற்றேமே நாம்.
—ஆ. ச. அரங்கநாதன், எம்.ஏ., பொன்மலை.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்.
(இறைவன், தேர்வீதி, பனையபுரம், முண்டியம்பாக்கம் வழி, விழுப்புரம் வட்டம்).

நன்மை பயத்தலால் ; நல்லோர் புகழ்தலால் ;
வன்மை யரசாய் வளர்தலால் ;—மென்பூவாம்
அல்லி மலர்போல் அழகார் தளிர்மாதே !
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—இரா. இராதாகிருட்டிணன், கீழ்விசாரம்.

படியரிசித் திட்டம் பசுமைப் புரட்சி
படிப்போ டிலவசமாம் " பட்டா "—படிப்படியாய்
எல்லாத் துறைகளிலும் ஏற்றமொடு மாற்றஞ்செய்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—இரா. இளங்கோ, ராமாபுரம்.

பேரறிஞர் ஏற்றிவைத்த பேரொளியாம் நம்மரசு
தீராத துன்பமதைத் தீர்த்துவைக்கும்—பாரதத்தின்
வல்லமையை ஏற்றவழி கூறும் தமிழரசாம்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—அ. காந்தி, பி.எஸ்.ஸி.,பி.டி.,தேவத்தூர்

நெஞ்சத்தில் தைத்த நெடுவேல் பறித்தெடுத்(து)
அஞ்சப் பகைவென்ற ஆண்மையென—அஞ்சவந்து
கொல்லும் வரட்சியையும் குன்ற வளமாக்கும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—புலவர் ஆ. பழனி, காரைக்குடி.

உழைப்போர் திருக்கரமாய் ஊரையே மாற்றிப்
பிழைப்போர் பகையாய்ப் பெருமை—தழைக்கின்ற
வல்ல தமிழுக்கு வான்மழையாய்த் தான்விளங்கும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—சி. முத்துச்சாமி, கா. பழையூர்.

கொற்றம் குடிதழுவக் கோலோ சமன்தூக்கச்
சுற்றமாய் மக்களெலாம் சூழ்ந்திருக்கட்—பற்ருேடு
கல்வித் தரமுயரக் கன்னித் தமிழ்முழங்க
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—அ. ம. ஜார்ஜ், கோவை.

தொழில்பெருக்கி வேளாண் துறைபெருக்கிக் கல்வி
எழில்பெருக்கி எல்லா வளத்தின்—வழிபெருக்கும்
வல்லரசைப் பெற்ருேமே ; வாழ்வாங்கு வாழ்விக்கும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—தமிழாலயன், எழும்பூர், மதுரை மாவட்டம்

நாடும் மொழியும் நற்றமிழர் தம்வாழ்வும்
பீடுறவே முன்னைப் பெருமையெலாம்—கூடிவர
அல்லல் களைகின்ற ஆதவனைப் போலிங்கு
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—அழ. சிதம்பரம், சிந்தாதிரிப்பேட்டை.

கூவம் மணக்கும் ; குடிநீர்க் குறைதீர்க்கும்
ஆவலுடன் திட்டமிட்டே ஆற்றுகின்ற—யாவினையும்
வல்லரசு நாடெல்லாம் வாழ்த்து வரவேற்க
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—எஸ். எம். சுகுமாரன், சென்னை-53

தொல்வழியில் வென்ருண்ட தூய தமிழ்மன்னர்
நல்வழியில் நின்ருண்ட நம்மண்ணு—செல்வழியில்
செல்லரசை வெல்லரசைச் சீரார் தமிழரசை
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—தமிழேந்தி, காங்கேயம்.

ஏருழவன் வாழ்வுயர ஏனைத் தொழில்சிறக்கச்
சீர்மிகுந்த பொங்குதமிழ்ச் செம்மையுறப்—பார்புகழும்
வல்லரசாய்க் காந்தி வழிநடக்கும் கொள்கையுடன்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—இளம்பரிதி, பழனி.

சாதிமுதல் பேதமெல்லாம் சாய்க்கும் தமிழரசை
நீதிமுறை பேணும் நிலையரசை,-மேதினியில்
எல்லார்க்கும் எல்லாம் இனிதளிக்கப் பாடுபடும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—தமிழ்வடிவு, தாராபுரம்.

அரும்பாலை நீர்சுரக்க ஆழ்கிணறு தோண்டி
இரும்பாலை யொன்றினையும் ஈந்து—கரும்பான
வல்லகரம் நீட்டி வறியோர் தமையணைக்கும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—மார்க்கண்டேயன், பசுமலை.

நாட்டில் வளம்பெருக்கி நற்றமிழ்த்தாய்ச் சீர்பெருக்கி
பாட்டாளி மக்கள் பலன்பெருக்கி —ஏற்றமுடன்
பல்லரசும் நம்பெருமை பார்த்துப் பரவுதற்கு
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—மா. மு. தபசு, நான்குனேரி.

மத்தியில் கூட்டரசும் மாநிலத் தன்னரசும்
மெத்தபுகழ் மேதினியில் மேவிடும்—முத்தமிழின்
சொல்லரசர் அண்ணுவின் சொல்லைச் செயலாக்கும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—புலவர் ஏ. பார்த்தசாரதி, கரூர்.

எத்தனையோ ஆண்டுகளாய் ஏங்கித் தவித்திருந்த
முத்தமிழின் சீரை முரசொலித்து—சத்தியத்தில்
வல்லரசாய் மக்களை வாழ்விக்க வந்திட்ட
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—வாதிராஜ், பழனி.

மக்கள் நலம்பேணி மங்காத் தமிழ்முழங்கி
சிக்கல் களைவதிலே செம்மையுற்று—மிக்கநலம்
பல்துறையும் நாட்டிப் பகையிடத்தும் பண்பாற்றும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—ந. ஜபார், சித்தையன் கோட்டை.

தாய்மொழி போற்றுவதால் தாழ்வை யகற்றுவதால்
ஓய்வின்றி நாட்டுக் குழைப்பதனுல்—நோய்நீக்கிப்
பொல்லா வறுமையினைப் போக்குவதால் பூங்கொடியே
நல்லரசைப் பெற்ருமே நாம்.
—நா. மரகதம், வெள்ளகோவில்.

கலப்பு மணமக்கள் கண்கலங்கி நின்று
கலக்க முருவண்ணம் காக்க—மலர்க்குழலீ
வெல்லத் தமிழ்வாழ வெல்லும் குறள்வாழ
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—கழுக்குன்ற வாணன், ஆயர்பாடி.

எல்லாமும் எல்லாரும் எய்திடவே ; இந்நாட்டில்
இல்லாமை இல்லாமல் செய்திடவே—நல்விதமாய்
எல்லாரும் வாழ்ந்திடவே ; என்றென்றும் பாடுபடும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—அ. சே. அ. பண்பழகன்,இராயப்பேட்டை.

கன்னித் தமிழும் கலைபலவுங் கைத்தொழிலும்
பொன்னி வளனும் புதுமையுற—மன்னுமுயர்
வல்லரசுங் கண்டு வரிசை புகழ்பாட
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—புலவர் சி. இரத்தினவேலனுர், சென்னை-19.

தண்ணுவான் செந்நாவான் தங்கும் புகழ்நாவான்
அண்ணுவால் வந்த அருளரசைக்—கண்ணுக
நல்லுயிர்கள் காத்து நலம்யாவும் சேர்த்தளிக்கும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—அறிஞரடியான், அரிக்காரன்வலசு.

கண்ணுன அண்ணு கருத்தை நனவாக்க
எண்ணியே தொண்டுசெய்வோர் எத்துணைபேர்
—மண்ணுலகில்
நல்லக் குடிகொண்டான் காக்கும் தமிழ்நாட்டில்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—வி. இராமகிருட்டிணன், தேதியூர்.

தெள்ளுதமிழ்த் தேன்பரப்பும்; தீரமுடன் தொண்
டாற்றும்
நல்லுணர்வே நாடெங்கும் நாட்டிவரும்—பல்லரசும்
இல்லையினை என்றேத்தும் ; இன்றமிழர் நாட்டினிலே
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—முத்துவடிவன், கீரனூர்.

கல்லக் குடிகண்டோம் கன்னித் தமிழ்மகளின்
நல்ல நடம்கண்டோம் நாடெங்கும்—உள்ளபடி
வல்லரசுக்(கு) ஈடாக வாழ்கின்ருேம் இன்றிங்கே
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—ஆர். செங்கமலை, வேப்பந்தட்டை.

கொற்றம் செழிக்கக் குடிமக்கள் தொல்லையெல்லாம்
முற்றும் தொலைக்க முதலமைச்சாய்—நற்றமிழ்ச்
சொல்லரசைப் பெற்றதொடு தூய தமிழ்வளர
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—சி. மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

நாடும் மொழியும் நலஞ்செய் துறைபலவும்
பீடுபெறல் நோக்கிப் பிறநாட்டார்—ஏடுகளும்
வல்லாட்சி வாழ்த்த வளமார் தமிழரசாம்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

நற்றமிழை வாழ்த்திடவும் நல்லுழவர் சீரனைத்தும்
பெற்றிடவும், கல்வி பெருகிடவும்—மற்றிங்கே
சொல்லரிய திட்டங்கள் தோன்றிவளம் செய்திடவும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—கோடைப்பொருநன், கோடைக்கானல்.

இன்பத் தமிழுயர ஏற்ற நெறிதழைக்கத்
துன்ப நிலையகலத் தொண்டாற்றி—எண்டிசையும்
நல்லறிஞர் பாராட்ட நம்கலைஞர் ஆளுகின்ற
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—கோபி, புது சித்தாப்புத்தூர்.

தேனூர் தமிழ்மணத்தைத் திக்கெட்டும் கொண்டேகிக்
கோனூர்ந்த செந்தமிழைக் கோலேந்தி—ஆனூர்ந்த
நெல்வயலைத் தெண்ணீரை நேர்பெருக்கி ஏர்காக்கும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—பெ. இராசசுந்தரம், திருவேற்காடு.

சீரார் உருக்காலை சேலத்தில் கண்டதனுல்
ஏரார் தொழிலுமெழி லெந்தமிழும் - பாரோர்தாம்
பல்வகையில் பாராட்டப் பண்புடனே ஏற்றமுற
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—ஆர். வெங்கடாசலபதி, வழுதாவூர்.

ஈரா யிரமாண்டெம் இன்றமிழ்த்தாய் நோன்புசெய்து
பேரறிஞர் அண்ணுவைப் பெற்றதனுல்—பாராண்டாள்
வல்லரசும் போற்ற வளர்தமிழ் நாட்டினிலே
நல்லரசைப் பெற்ருேமே நாம்.
—பேகன், மதுரை-1.


சொட்டு சொட்டுன்னு
சொட்டுது பாரு இங்கே
மழை கொட்டு கொட்டுனு
கொட்டுது பாரு அங்கே..
மச்சான், கைக் குழந்தையை வச்சுக் கிட்டு இந்த ஓட்டைக் குடிசையில் எப்படித் தாங்குறது ?
மீனாட்சி! இன்றையப் பொழுதை எப்படியாவது தள்ளுவோம். காலையிலே வீட்டுக்காரரைப் பார்த்து புதுசா கூரை போடச் சொல்றேன்
சரி மச்சான்..
ஒழுகத்தான் செய்யும்! நீ தர்ற 15 ரூபா குடக் கூலிக்கு மாடி வீடு கட்டித் தரு வாங்களோ! போ... போ..


என்ன மச்சான் ஆச்சு ?
நம்ம செலவிலே கூரை போடச் சொல்றாரு; பணத்துக்கு எங்கே போக ?
கவலையை விடு மச்சான்! ஏதோ குடிசை மாற்று வாரியமாம். தமிழக அரசு ஏற்படுத்தியிருக்காம். அதிலிருந்து ஒரு அய்யா வந்தாரு. நமக்த குடிசைக்குப்பதிலா புது வீடு தர்றாங்களாம் சொன்னாரு.
குடிசையெல்லாம் வீடாகும் போதினிலே நாங்க தெருவோரம் குடியேறத் தேவையில்லே!
குடிசைப் பகுதி மாற்று வாரியம் வெங்கடாபுரம்.
கோ...

திக்கும் செந்தமிழால் திக்கெட்டும் சென்றேதி
எத்திசையும் எத்திடவே இந்நாட்டில்—முத்தமிழைப்
பல்லாண்டாய்க் காத்தளித்த பார்புகழ் அண்ணுவின்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—பாக்கியமணாளன், மட்டப்பாறை

முத்தமிழைப் பேச்சாக மூச்சாகக் கொண்டேநல்
உத்தமர்கள் உள்ளம் உவந்திடவே—எத்திசையும்
நல்ல புகழ்நாட்டி நாளும் நலம்நாடும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—சி. கந்தசாமி, நாச்சியார் கோவில்.

பாரெங்கும் கண்டார் பசுமைப் புரட்சியினை ;
ஊரெங்கும் கல்வி ஒளிவிளக்காம்—பேர்பாடப்
பல்கும் தொழிலோடு பைந்தமிழ்த்தாய் கோலாச்சும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—கே. சின்னசாமி, காட்டுஎடையார்.

பாட்டாளி பாடுபடப் பக்கத் துணையிருந்து
கூட்டாளி போலக் குறைதீர்த்து—நாட்டினிலே
செல்வர் வறியோர் அனைவரையும் சீர்படுத்தும்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—ச. வீரப்பன், போதுபட்டி.

திக்குஞ் செந்தமிழில் தேவர் திருக்குறளை
எத்திக்குங் கற்க எடுத்தெழுதி—இத்தரையில்
பொல்லாத நீக்கிப் புகழோங்கச் செய்கின்ற
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—புலவர். வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

வாழையடி வாழையாய் வாட்டும் வறுமையினுல்
கூழையே யுண்ணுங் குடிகளாம்—ஏழைகளின்
அல்ல லகற்றி அழகான வாழ்வுபெற
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

வாழ்வாங்கு வாழும் வழிவகைகள் ஆய்ந்தெடுத்துத்
தாழ்வில் வளமை தழைக்கவும்—ஏழ்மையாம்
இல்லாமை கல்லாமை இல்லாதே ஆக்குகின்ற
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—ஏ. எம். சிதம்பரநாதன், பூதப்பாண்டி

உண்ணுமல் நன்கு உடுத்தாமல் நாட்டுநலம்
எண்ணுமல் வாழ்ந்த இழிநிலைபோய்—அண்ணுவின்
சொல்லுறுதி கேட்டுத் துணைவாக முன்வந்த
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

கண்ணு யிரமுடைய காவலர்போல் நம்அமைச்சர்
அண்ணு வழிநின்றே ஆளுகின்ருர்—எண்ணுத
பொல்லாப்பு வந்தாலும் போக்கும் திறமுடைய
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—சே. சேகுராசர், எம். ஏ., மதுரை.

இல்லை யுணவென்றே ஏங்கிய மாந்தருள்ளம்
இல்லையத் தொல்லையென இன்புற்றே—சொல்லுமுயர்
வல்லரசை , வெல்லரசை , வள்ளுவனுர் காட்டிடுமோர்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—ஆ. குறள்பித்தன். காரைக்குடி.

கண்ணிற் கருமணியாய்க் கன்னித் தமிழ்காத்து
மண்ணிற் றமிழினத்தின் மாண்புயர்த்தித்—திண்ண
முடன்
சொல்லடங்கா நற்செயல்கள் சோர்வின்றி யாற்றுகின்ற
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—முல்லை நடவரசு, தும்மலப்பட்டி.

மூவரசே ஆள்வதுபோல் முத்தமிழும் சீர்சிறக்க
ஆவின் முறைகேட்டே ஆண்டதுபோல்—காவிரிக்கும்
பல்வளம்போல் நற்செயல்கள் பாரெல்லாம் போற்று
கின்ற
நல்லரசைப் பெற்ருேமே நாம் ;

—ப. சின்னச்சாமி, ஏரிப்பாளையம்.

சீரணியை முன்னடத்தித் தேசநலத் தேரேறிச்
சேரலரை நட்பாக்கிச் சேவைஎனும்—தாரணிந்து
சொல்லரசன் அண்ணுவின் தூயவழி ஆட்சிபுரி
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—ஜ. க. பெருமாள்சாமி, பவானி.

எங்கும் தமிழ்மணக்க; எத்திசையும் வாழ்த்தொலிக்க
தங்க இரும்பாலை தந்திட்ட—சிங்கநிகர்
கல்லக் குடிகொண்ட காவலனுல் நம்நாட்டில்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

—புலவர் ஆ. பே. காந்திதாசன், பல்லவ
ராயன்பட்டி.

சொல்லரசை, வெற்றிச் சுவையரசைப், பாரெல்லாம்
வெல்லரசை, ஆளும் வினையரசைக்—அல்லலுற்ருேர்
பொல்லா நிலையகலப் பூத்த தமிழரசாம்
நல்லரசைப் பெற்ருேமே நாம்.

பூவேதான் பூவை

"வேணாமணாளன்"

மண்ணிற்குள் இருக்கின்ற எந்தச் சத்தும்
வளர்கின்ற செடியாக மலராய்ப் பூத்துக்
கண்ணிற்கும் மூக்கிற்கும் விருந்தை நல்கிக்
கையாலே தொட்டாலே மென்மை பாய்ச்சி
அன்னத்தில் பட்டாலே இனிக்கும் நல்ல
அருந்தேனை ஊட்டுகிற மலர்கள் தாங்கும்
வண்ணம்போல் முன்பிறவி தனிலே பூவாய்
மலர்ந்தே நீ தொடர்ந்தாயோ சொல்லேன், பெண்ணே!

நீராக நெருப்பாக உயிராய் மற்ற
நீளுலகில் எல்லாமாய் நிறையும் ஒன்றே
யாராலும் அளத்தலரும் காற்றும் அன்ருே !
இணையில்லாக் காற்றேபோல் தாயாய்ப் பெண்ணும்
வாராது வந்தணையும் துணைவி யாகி
வானம்போல் பரந்தகன்ற உறவாய் எல்லாம்
பாராளும் பெண்மானே ! பிறப்பில் முன்னர்
பரவு நலக் காற்றேயோ ! பகர்வாய் பாவாய் !

தான்தழைத்துக் குலைதள்ளிக் கன்றும் ஈன்று
தமிழ்ப்பெண்போல் தலைவணங்கும் வாழை போன்றும்,
ஊன்தனிலே உஞற்றிமிக ஈன்று மாய்ந்தும்
உவந்துமுகம் முறுவலிக்கும் முத்துப் போன்றும்,
மேன்மேலும் அகழ்ந்தாலும் மேனி தாங்கும்
விரிந்தகன்ற அகிலத்து நிலமே போன்றும்,
வான்மருவும் நலமெல்லாம் வாய்க்க எல்லா
வகைப்பிறப்பும் எடுத்தேயோ பெண்ணாய்ப் பூத்தாய் !

போரும் வெற்றியும் !

நமது 'தமிழரசு' அக்டோபர் முதல் இதழில் வெளியான "சேலம் கனிந்தது" "இரும்பின் கதை" என்ற கட்டுரைகள் மிக்க பயனுள்ள கட்டுரைகள்.

சேலம் என்ற பேச்சு தமிழ் மக்களின் இதய மூச்சாக இப்போது அமைந்துவிட்டது. இந்தப் பேச்சைத் தடுத்து நிறுத்தி, நமது மூச்சையும் நிறுத்திவிட யார் யாரோ முயன்றனர். அவர்கட்குத்தான் தோல்வி!

"பொருதுவதே போராகும், பொருத்தமுள்ளோர் பொருதுதலே அதற்குரிய சட்டமாகும்" என்று புலவர் கரந்தை கணேசன் "சேலம் இரும்பெடுத்துச் செய்திட்ட போர்வாள்" கவிதையில் இந்த இதழில் குறிப்பிடுகிறார். ஆம்! "பொருதுவதே போராகும், அதுவும் பொருத்தமுள்ளோர் பொருதுதலே போராகும்!" நாம் தொடுத்த போர் அந்தப் போர்தான்! அதனால் தான் வெற்றி.

—ந. தருமலிங்கம், எம்.எல்.ஏ., முத்துப்பேட்டை.

இனிது இனிது, படித்தல் இனிது !

'தமிழரசு' இதழில் வெளியாகும் ஒவ்வொரு கட்டுரையும் படிக்கப் படிக்க இனிமையாக இருக்கிறது. முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை ஒவ்வொரு எழுத்தும் விடாமல் படிக்க வேண்டியவையாக உள்ளன.

" இனிமை; படிக்கப் படிக்க இனிமை "

—அ. சுப்பிரமணியம், தும்பலப்பட்டி.

ஜவஹருக்கும் மலர் தருவீர் !

செப்டம்பர் திங்களில் 'தமிழரசு' அண்ணனுக்கு மலர் எடுத்தது. அக்டோபர் திங்களில் 'தமிழரசு' அண்ணலுக்கு மலர் எடுத்துள்ளது. நவம்பர் திங்களில் ஜவஹருக்கும் மலர் எடுத்து, 'தமிழரசு' ஒரு புதிய பாதையை ஆரம்பித்து வைக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

—எஸ். எஸ். மணி, திருவனந்தபுரம்.

பாராட்டப்படவேண்டிய ஏடு.

கொண்டாட வேண்டிய விழாவைக் கொண்டாட வேண்டிய நேரத்தில் கொண்டாடி, அதன் சிறப்பை வெளியிட வேண்டிய நேரத்தில் 'தமிழரசு' இதழில் வெளியிட்ட நீங்கள் பாராட்டப் படவேண்டியவர்கள்தான்.

—சோலைமலை, அழகர்கோவில்.

சூடு தந்த குளிர்ச்சி !

'சூடான காபியைப் படித்தேன்; படிக்கும்போது உள்ளம் குளிர்ந்துவிட்டது. காபியின் வயது 2820 என்று அறிந்ததும் வியப்படைந்தேன். இதுபோன்று அரிய செய்திகளை எல்லாம் தந்துவரும் 'தமிழரசை' வாழ்த்தாமல் இருக்க முடியாது.

—மரகதவல்லி, மதுரை.

கண் திறந்தது !

கண்போல் காப்போம், கண்ணை கண்ணல்லவோ இரண்டு கட்டுரைகளையும் படித்தேன். மூட நம்பிக்கையில் மூழ்கிப் போன எனது கண்களைத் திறந்துவிட்டன அந்தக் கட்டுரைகள். கருடப் பார்வையுள்ள எனது ஒரே பெண் குழந்தையை இன்றே கண் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அதன் பின்னர்தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன். எனக்கு உதவி செய்த ஏடு 'தமிழரசு'.

—ஆர். பரமசிவம், புரசை.

நெல்லும் பெயராகும் !

"என் மகன் பெயர் ஐயா ரெட்டு"-படிக்கப் படிக்கச் சுவையாக இருந்தது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்னும் மொழிக்கிணங்க உணவு தரும் நெல்லைச் சிறப்பிக்க, அதன் பெயரைத் தனது மகனுக்கே சூட்டியுள்ள விவசாயி வாழ்க, வளர்க! அவர்தம் மகன் நீடு வாழ்க!

—திரவியம், தென்கரை.

ஞானோதயம் தந்த ஞானோதயம் !

'ஞானோதயம்' சிறு கதை என் இதயத்தைக் கவர்ந்தது. முதல்வரின் மதுரைப் பட்டமளிப்பு விழாக் கருத்தைக் கதையாக்கிய சோம. மகாதேவன் பாராட்டுக்குரியவர். இவ்வாறு நமது அமைச்சர்கள் தரும் திட்டங்களைத், தொடர்ந்து கதை வடிவாக்கித் தருமாறு தமிழ் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

—அ. மோகன், செய்யாறு.

உள்ளம் கவர் 'தமிழரசு.'

'தமிழரசைப்' பார்க்கும் பொழுது அடையும் மகிழ்ச்சியும், பூரிப்பும் விவரிக்க முடியாது.

'தமிழரசு' ஓர் இலக்கிய ஏடாக மட்டும் வளராமல், அரசு ஆக்கப் பணிகளையும் அழகாகத் தெரியப் படுத்துகிறது.

யாருக்கும் புரியக்கூடிய தமிழில் மலர்ந்து, சாமான்ய மக்களும் வாங்கக் கூடிய விலையில் அமைந்திருக்கும் 'தமிழரசு' ஏற்றமும், எழிலும் கொண்டு தரமான வாசகர்களின் உள்ளத்தையும் எண்ணத்தையும்கவர்ந்து விடுகிறது; 'தமிழரசு'க்கு எனது பாராட்டுக்கள்.

—அ. சேக்மைதீன், வத்தலக்குண்டு.

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை

Registered No. M. 8657

தமிழரசு

உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2

SANKAR I C CEMENT



உறுதியானது, நிலையானது-ஆனாலும் மலிவானது

சங்கர் சிமெண்ட்

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2
23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை 18

FDSIC 1444TM

10132/55
18 NOV 1970
715

தமிழரசு

மலர் 1 1970 நவம்பர் 16 இதழ் 10

இந்த இதழில்

நேருவின் இறுதி வேண்டுகோள்
குடிசைக்குக் கலசமா?
பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவும்
நாளொன்றுக்கு 40 டன் அரிசி
ஊசி வாங்கலையோ ஊசி
கொடுத்ததைக் கொடுத்தார்கள்
காலத்தை வெல்லும் கலை
பாப்பா, பாப்பா, ரொட்டி!
தீயவை அணைக்கும் படை
வாதத்தை வென்றிடுவோம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!
குளமும் குறளும்
வெண்பாப் போட்டி

முதல்வர் எழுதும்
இனியவை இருபது

முகப்பில்:
சின்னக் குழந்தையுடன்
சிரித்து மகிழும் நேரு

இந்த தேசத்தின் மக்கள் என்னை நேசிக்கிறார்கள். நடைமுறை இலக்கணங்களைத் தாண்டிய பேரன்புக் கொடையை அவர்களிடமிருந்து பன்முறை நான் பெற்றிருக்கிறேன். முற்றுகவோ அல்லது சிதலமாகவோ நான் திருப்பித் தர முடியாத நன்கொடை அந்த அன்பு.

இந்த உலகத்தின் நேசர்களுக்கு மத்தியில் அதைத் திருப்பித் தந்தவர்கள் யார்? அது "தரமுடிகிற" ஒன்றே தவிர "திருப்பித் தர முடிகிற" ஒன்றல்ல. என்னுடைய போக்குகளோடு பலர் உடன்பாடு கொண்டிருக்கிறார்கள் ; சிலர் மாறுபட்டு விமர்சித்திருக்கிறார்கள். என்றாலும் கூட எல்லா இந்தியர்களும் என்னையே நான் இழக்கின்ற அளவிற்கு அவர்களுடைய அன்பை எனக்குத் தந்திருக்கிறார்கள்.

ஒன்றைமட்டும் நான் கூற முடியும். எஞ்சியிருக்கும் எனது வாழ்காலத்தில் இந்த மக்களுக்கு, இவர்களுடைய அன்புக்குத் தகுதியற்றவனாக நான் நடந்து கொள்ளமாட்டேன்.

எனது பல்வேறு நண்பர்கட்கும், தோழர்கட்கும் ஆழமான அன்பைத் தர நான் கடமைப்பட்டவன். நாங்கள் அனைவரும் எல்லா நிலைகளிலும் தோழர்களைப் போலவே சுகதுக்கங்களைப் பகிர்ந்துகொண்டவர்கள்.

எனது மரணத்திற்குப் பிறகு மதச் சடங்குகள் தேவையில்லை.

அத்தகைய நம்பிக்கைகள் எனக்கில்லை. அவை நமக்கும் பிறருக்குமிடையே வேறுபாட்டையும், நம்மில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தன்மையினையும் உருவாக்கிவிடும் என நான் கருதுகிறேன்.

நான் இறக்கும்பொழுது எனது உடல் எரிக்கப்படவேண்டும். நான் ஒரு வேளை ஏதாவதொரு அயல் நாட்டில் இறந்து விட்டால் என் உடல் அங்கேயே எரிக்கப்பட்டு, எனது 'அஸ்தி' (சாம்பல்) அலகாபாத்திற்கு அனுப்பப்படவேண்டும். அதில் ஒரு சிறு பகுதியைக் கூடப் புனிதமாகக் கருதிப் பாதுகாக்கக் கூடாது. எனது அஸ்தியின் ஒரு பகுதி கங்கையில் கரைக்கப்பட வேண்டும். அதன் பெரும் பகுதி இந்திய பூமியின் விளை நிலங்களில் உரமாகப் பயன்பட வேண்டும்.

நான் எனது பால்ய காலத்திலேயே அலகாபாத்தில் சிந்திசைக்கும் கங்கை, யமுனை நதிகளோடு உறவு கொண்டேன். நான் வளர வளர அந்த உறவும் மலர்ந்தது. எனது அஸ்தியைக் கங்கையில் கரைக்கச் சொல்வது இந்த உணர்வுகளின் பின்புலத்தில்தான். இதில் மதத்தின் உணர்வுகள் சிறிதும் இல்லை.



அந்த ஜீவநதிகளின் நுரையுமிழும் நீர்ப்பெருக்கின் ஒரு பகுதியாக மாறி விட்ட இந்த தேசத்தின் சரித்திரம், இதிகாசங்கள், நமது பரம்பரைகள், நாடோடிப் பாடல்கள், கிராமியக் கதைகள் இவைகளைப் பற்றியெல்லாம் நான் அடிக்கடி சிந்திக்கிறேன். இந்த மகத்தான செல்வங்களை அந்த நதிகளோடு நிரந்தரமாக இணைத்து விட்ட கால வழிக் கனவுகளை நான் தரிசிக்கிறேன்.

அந்த ஜீவநதிகளின் பல்வேறு நிலைகளையும், பருவ கால மாற்றங்கள் அங்கே பிரதிபலிப்பதையும் கூட நான் கவனத்தோடு ரசித்திருக்கிறேன்; குறிப்பாக கங்கை நதி இந்தியாவின் நதி—இந்த மக்களின் 'செல்லப்பிள்ளை.' பல இனங்

களைப் பற்றிய ஞாபகக் குறிப்புகளும், இந்தியத் தாயின் நம்பிக்கைகளும், சஞ்சலங்களும், அவளுடைய இனிய பாடல்களும், வெற்றி தோல்விகளும் கங்கையோடு தான் பிறந்தன. அவளுடைய மடியில்தான் அவை வளர்ச்சி பெற்றன.

எப்போதும் ஓடிக் கொண்டிருக்கிற—எப்போதும் மாறுபடாத, அந்தப் புனித கங்கைதான் இந்தியாவின் கால முதிர்ச்சி பெற்ற பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் 'குறியீடாக' விளங்குகிறாள். நான் நேசித்த இமாலயத்தின் பனி போர்த்த சிகரங்களையும் ஆழமான பள்ளத்தாக்குகளையும் அவள்எனக்குநினைவுபடுத்துகிறாள்.

காலைச் சூரிய வெளிச்சத்தில் இதழ் மலர்ந்து நடனமாடி, மாலை நிழல்மடியில் இருள், சோகம் இவற்றின் ரகசியமாகி, மழைக் காலத்தில் சின்னஞ்சிறிய அமைதியோட்டம் மிகுந்த ஓடையாகி, பருவக் காற்றின் விசிறலில் கடலை நிகர்த்து. அதன் அறிவாற்றலையும் பெற்று விளங்கும் 'அவள்' நிகழ்காலச் சமவெளியில் கடந்த காலத்தின் ஞாபகச் சின்னமாக எதிர்காலக் கடலை நோக்கிச் 'சங்கம யாத்திரை' செய்பவளாக எனக்குத் தோற்றுகிறாள்.

நான் பழைமைவாதி இல்லையெனினும் இந்தியா, அவளுடைய ஆத்மாவையும், உடலையும் வருத்தும் எல்லா இன்னல்களிலிருந்தும் விடுபட வேண்டுமென்று விரும்புகிறேன். எனவே பழமையோடு என் தொடர்புகளை முழுமையாகத் துண்டித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. ஞாபகத்தின் வசப்படாத சரித்திரத்தின் விடியற்பொழுதில் உருவாக்கப்பட்ட இந்தியாவின் உடைக்க முடியாத நெடிய சங்கிலியில் நம் அனைவரையும் போல் நானும் ஒரு தொடரே. அந்தத் தளையினையே கருவூலமாக்கி, அதிலிருந்து மனக் கிளர்ச்சியினையும் பெறுவதால் நான் அதை உடைத்தெறிவதைப் பற்றிய சிந்தனைக்கு இடமில்லை. எனது விருப்பங்களுக்குச் சாட்சியமாகவும், இந்தியாவின் பரம்பரைப் புகழ் மிக்க பண்பாட்டிற்கு நான் செலுத்தும் வீர வணக்கமாகவும் எனது 'அஸ்தி' அலகாபாத்தின் கங்கையில் வீசியெறியப்பட வேண்டும். இந்தியாவின் கரைகளைத் தனது நெடிய அலைவீச்சால் புனிதப்படுத்திக் கொண்டிருக்கும் பெருங்கடலுக்கு அது கொண்டு செல்லப்பட வேண்டும். இது எனது வேண்டுகோள்.

எனது அஸ்தியில் பெரும் பகுதி விமானத்தின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, ஆகாயத்திலிருந்து உழவர்கள் பாடுபடும் வயல்வெளிகளில் வீசப்படவேண்டும். எனது அஸ்தி அங்கே இந்த தேசத்தின் மண்ணோடும், புழுதியோடும் கலந்து என்றும் இந்தியாவைப் பிரியாதிருக்க வேண்டும்.

உலகப் பெருந்தலைவர்கள் வரிசையில் சிறப்புமிக்க இடம் பெற்று இந்தியத் துணைக்கண்டத்திற்குத் தனிப் புகழிடம் தேடிக் கொடுத்துப், பூசல்கள் பிளவுகளால் நாடு கேடடையாமல் பாது காத்துப், பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படாமல் தடுத்து வந்த மாபெரும் காவலர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்.

நேரு பெருமகனுருக்கு நாம் காட்ட வேண்டிய மரியாதை உணர்வைச் சொல்லாலும் செயலாலும் நேர்மையாலும் நன்னெறியாலும் அனைவரும் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

(சென்னை மத்திய சிறையிலிருந்து அண்ணா விடுத்த இரங்கற் செய்தி.)



8. கொடுங்கோலன் நீரோ.

ரோம் நாட்டு வரலாற்று வானிலே ஒளி சிந்தும் நிலவாக சீசரும், மினுமினுக்கும் தாரகைகளாக அந்தோணியும், கிளியோபாத்ராவும் திகழ்ந்தனர். அந்த வரிசையில் நீரோவும், மார்க்கஸ் அரிலீயஸும் இடம் பெற்றுள்ளனர்.

நீரோ என்றதும் "ரோம் தீப்பற்றி எரியும்பொழுது யாழ் வாசித்தான்" என்ற வாசகங்கள் தான் நினைவுக்கு வரும்.

கி.பி.64 ஜூலைத் திங்கள் 18-ஆம் நாள் ஐரோப்பாவின் தலைவி என்றும், அழியாவரம் பெற்றஅழகுத் திருநகர் என்றும், ஏழு குன்றுகளின் மீதெழுந்த எழில் நகரம் என்றும் வரலாற்றுப் புலவர்களால் வருணிக்கப்பட்ட ரோம் நகரம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது.

> வானளாவிய தேவாலயங்கள்—
> வனப்பு மிக்க அரண்மனைகள்—
> வீர மறவரின் விளையாட்டரங்கங்கள்—
> வேல்விழி மாதருடன் உலவிக்குலவிய கவின்மிகு மாளிகைகள்—
> பளிங்குக் கல் மாடங்கள்—
> பனி மலர்த் தோட்டங்கள்—
> பாவாணரின் நூலகங்கள்—
> கலைப் பொருள் கூடங்கள்—

அத்தனையும் எரிந்தன.

> சாய்கின்ற கட்டடங்களின் பேரோசை;
> சாவின் மடியில் இளையோரும் முதியோரும் ஆடவரும் பெண்டிரும் அழுது அரற்றுகின்ற ஓலங்கள்;

எங்கும் கேட்டன.

நள்ளிரவில் பற்றிய தீ நாளெல்லாம் எரிந்தது.

மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, ஓடி ஒளிய இடம் இன்றித் தவித்தனர்.

ஆனால், இத்தனைக்கும் கலங்காமல், தீ அண்டாத உப்பரிகையில் நின்று கொண்டிருந்தான் நீரோ.

கனலைக் கண்டதும் அவனுடைய கண்களில் ஒருபுதுமலர்ச்சி!

"ஆகா! எத்தனை அழகான தீ ஜ்வாலைகள்? என் அருமைத் தலைநகரம் எரிகின்ற அழகே அழகு! ட்ராய் நகரம் அடியோடு பற்றி எரிந்த அற்புதக்காட்சி என் நினைவுக்கு வருகிறது.

என் நெஞ்சில் புதுமையான கவிதை ஒன்று ஊற்றெடுக்கிறது. "யாரங்கே! அந்த யாழைக் கொண்டு வா!" என்று கூறி, வந்த யாழை மீட்டிப் பாடிடலானான் நீரோ மன்னன்.

இது என்ன கொடுமை என்று கேட்கத் தோன்றும் நமக்கு.

> "மழை வளங் கரப்பின் வான் பேரச்சம்
> பிழையுயிர் எய்திற் பெரும் பேரச்சம்"

என்று அஞ்சி வாழ்ந்த அரசர்களின் தண்ணிழற் கொடையின் கீழ் வாழ்ந்தவர்களல்லவா நாம்! அப்படித்தான் தோன்றும்.

1967-ல் சென்னை நகரிலும் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும் தீ பரவிற்று.

> தானாக ஏற்பட்ட தீயா? கொடியவர் இட்ட தீயா? ஏழைகளின் குடிசைகளில் ஏன் தீயிட்டனர்?
> அவர்களின் அல்லலில் என்ன இன்பம் காண இங்ஙனம் செய்தனர்?

என்ற கேள்விக் குறிகள் நீண்டு கொண்டே போயினவே யன்றித் தீக்குக் காரணத்தையோ, தீயிட்டவரையோ முழுமையாகக்கண்டு கொள்ள முடியவில்லை. "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்று அறிவுரைத்த அவராலேயே இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லையே!

காரணத்தைக் காணத் துடித்த என் மனத்தில்

> "முன்னையிட்ட தீ முப் புரத்திலே
> பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே
> அன்னையிட்ட தீ அடி வயிற்றிலே
> யானுமிட்ட தீ மூள்க மூள்கவே"

என்ற பட்டினத்து அடிகளின் பாடல்தான் நினைவுக்கு வந்தது.

கற்புக்கரசி கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வழக்குரைத்துத், தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலைநாட்டிக் கணவனை இழந்த கவலை ஆவேசமாக மாறி நகரமெல்லாம் சுற்றித் திரிந்தாள்! அப்பொழுது

> "பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர்
> மூத்தோர் குழவி யெனு மிவரைக் கைவிட்டுத்
> தீத்திறத்தோர் பக்கமே சேர்க"

என்று மதுரையைப் பற்றி எரிந்த தீயைப் பார்த்துக் கதறிய காட்சியும். எல்லையற்ற துன்ப நிலையிலும் தமிழ்ப் பெண் ஒருத்திக்கு இருந்த அனுதாப உணர்வும் என் நினைவில் வரத் தவறிடவில்லை. அந்தத் தீக்குப் பின்னர் மதுரை நகரம் புதுப்பிக்கப்பட்டது என்று வரலாற்றுக் குறிப்புக்கள் காணக் கிடக்கின்றன.

ஒவ்வொரு தீயும் ஏற்பட்ட பிறகு. தீயால் அழிக்கப்பட்ட இடங்கள் புது நகரங்களாக உருப்பெற்றன என்பதுதான் வரலாறு. பாவம் அது புரியாதவர்கள் தீயிட்டு அரசைக் கவிழ்க்க முடியும் என்று ஆருடம் கணித்தனர்!

"ரோம்நகரைமுற்றிலும் அழித்துவிட்டுப், புதிய நகர் ஒன்றைக் கட்டி, அதற்கு "நீரோ போலிஸ்" (Nero Polis) என்று பெயரிடவேண்டுமென்று நீரோவுக்கு ஓர் ஆசை. அதனால் அவனே ரோமுக்குத் தீவைத்துவிட்டான்" "ட்ராய் நகரம் எரிந்ததை அகக் கண்ணால் கண்ட நீரோ புறக் கண்ணால் கண்டு கவிதை ஒன்று எழுத வேண்டுமென்ற எண்ணத்தில் ரோம் நகருக்குத் தணலை மூட்டி விட்டான்" — இப்படியெல்லாம் பேசப்பட்டன வீதியோரங்களில். நகரை எரித்து அழித்ததே அவன் தான் என்ற எண்ணம் எங்கும் எழலாயிற்று.

இது உண்மை தானா?

வரலாற்று அறிஞர்களில் சிலர் உண்டு என்பர்; சிலர் இல்லை என்பர். அப்படியானால் ரோம் நகருக்குத் தீயிட்ட கொடியவர்கள் யார்?

நீரோ மன்னன் ரோம் நகரில் வாழ்ந்த கிருத்துவர்கள்தான் இதற்குக் காரணம் என்று கூறி, அவர்களைப் பழி வாங்கினன். சரித்திர ஆசிரியர்கள் இந்த நடவடிக்கையை "முதல் கிருத்துவ அடக்குமுறை அட்டூழியம்" (First Christian Persecution) என்று வர்ணிக்கிறனர். நூற்றுக்கணக்கான கிருத்துவர்கள் கொல்லப்பட்டனர். மிருகங்களின் தோல்களுக்கிடையே மனிதர்களை அடைத்து நாய்களிடம் எறிந்தான் நீரோ.

சிலரைச் சிலுவையில் அறைந்தான்.
சிலரை உயிருடன் கொளுத்தினன்.
சிலரை வெடிமருந்துகள் வைத்துக்கொன்முன்.

இதையெல்லாம் பார்த்த மக்கள் தீயினும் கொடியவன் நீரோ என்றனர். ஒன்பது நாட்கள்தான் ரோம் நகரில் தீ எரிந்தது. ஆனால், ரோம் சாம்ராஜ்யத்தைப் பற்றிய நீரோ என்னும் தீ, பதினன்கு ஆண்டுகள் எரிந்தது. அந்தப் பதினன்கு ஆண்டுகள் ரோமானியருக்கு வனவாசக்காலமாக இருந்தது. கொடுமைக்கு ஆளானோர், கொல்லப்பட்டவர், கசக்கி எறியப்பட்ட மலர்கள் கணக்கிலடங்கா!

நீரோவின் தாய் அக்ரிப்பானு சிறந்த அழகி. அழகு தான் அன்றைய ரோமாபுரி அரண்மனைக்கு நுழைவுச் சீட்டு. அதை அவள் பெற்றிருந்தாள்.

கம்பீரமான உருவம்!
கமலக் கண்கள்!
கருநிறக் கூந்தல்!
புன்னகை அதரம்!

என்று அவளின் அழகை வர்ணித்துக்கொண்டே போகலாம்.

அகஸ்டஸ் பேரரசனின் பேத்தியல்லவா அவள்! அவளது உள்ளமும் உடலும் பண்பட்டு விரிந்த மலராகி மணம் பரப்பியதும் டோமிட்டஸ் என்பவனை மணம் செய்து கொண்டு வாழ்ந்தாள். ஒரு மகனையும் ஈன்முள்.

அக்ரிப்பானுவுக்குக் கணவன் என்னும் விலங்கு கத்தரிக்கப்பட்டு விதவைக் கோலம் என்னும் தோற்றம் கிடைத்தது.



அகஸ்டஸ் ஆண்ட காலம் பொற்காலம்

அழகும் சரசமும் ஒருங்கிணைந்த அவள், அரண்மனைக்கு நுழைவுச் சீட்டு பெற அதிக நாட்கள் ஆகவில்லை.

கிளாடியஸ் ஆட்சிக்கு வந்ததும் சாகசங்கள் பல புரிந்து அரசனின் அன்புக்குப் பாத்திரமாகி அரசியானுள்.

அரசன் கிளாடியஸ்ஸோ அக்ரிப்பானுவின் அடிமையானுன்.

நீரோ, கொடுங்கோலன் [illegible] என்னும் ஒரு கவிஞன், [illegible]

அரசி அக்ரிப்பானுவின் கட்டளைக்காக வெளிநாட்டவரும் வீரர்களும்—ராஜதந்திரிகளும் காத்திருந்தனர்.

உலகின் பல பாகங்களிலிருந்தெல்லாம் அவளை மகிழ்விப்பதற்காகப் பரிசுப் பொருள்கள் வந்து குவிந்தன.

அக்ரிப்பானுவின் ஆதரவு பெற்றோருக்கே அரசவையிலே இடம் கிடைத்தது. அவளின் முன்னுள் காதலர்கள் ரோம் செனேட் சபை அங்கத்தினர்கள் ஆனார்கள். அறிஞர்களும் திறமைசாலிகளும் இடம் பெற்றிருந்த செனேட் சபையில் அக்ரிப்பானுவின் சொந்த வாழ்க்கைக்கு உதவியவர்கள் இடம் பெற்றனர்.

பாப்பையா புகழ்மிக்க குடியில் பிறந்தவள். எழில் மிக்கவள். ரூபஸ் கிரிஸ்பினஸ் என்பவனை மணந்து கொண்டாள். பாப்பையாவை மணம் செய்து கொண்டதும், அதிர்ஷ்டத்தையே அணைத்துக்கொண்டதாக அவன் கருதினுன்.

ஆனல் கொஞ்சநாட்களிலேயே ஆத்தோ என்ற ஆணழகன், நீரோவின் நண்பன், பாப்பையாவின் இரண்டாவது கணவன் ஆனுன். நண்பனை வஞ்சித்துப் பாப்பையாவையும் மணந்து கொண்டான் நீரோ.

ஆக்டேவியா என்பவள் நீரோவின் முதல் மனைவி. அடக்கமும், அன்பும், அறிவும், பண்பும் கொண்ட ஆக்டேவியாவை நீரோவுக்குப் பிடிக்கவில்லை. பாப்பையா, மெசாலினு போன்றவர்கள் தேவைப்பட்டார்கள். ஒருநாள் ஆத்திரத்தில் கர்ப்பிணியாக இருந்த ஆக்டேவியாவைக் காலால் உதைத்துக் கொன்றுவிட்டான் நீரோ.

அவனை மணக்க மறுத்த மூன்றாவது பெண் ஒருத்தியும் கொல்லப்பட்டாள்.

நான்காவதாக ஒருத்தியை மணக்க, அவளுடைய நாயகன் கொல்லப்பட்டான். இப்படி தனக்கு ஆசைநாயகிகளாக வர மறுத்தவர்களையும், வருவதற்குக் குறுக்கே தடையாக நின்றவர்களையும் கொன்று குவித்தான் நீரோ.

பதினேழாவது வயதில், செனேக்கா (Senaca) என்னும் அறிவுமிக்க, ஆசானின் துணையாலும், புரஸ் (Burres) என்னும் ஆற்றல்மிக்க தளபதியின் உதவியாலும், அன்னையின் தயவாலும் ஆரம்பத்தில் நீரோவின் ஆட்சிச்சக்கரம் சிறப்பாகவே சுழன்றது.

ஆனல், அந்நிலை நீடிக்கவில்லை. அக்ரிப்பானுவின் பிடியிலிருந்து நீரோவை மீட்க செனேக்காவும் புரஸ்ஸும் முயன்றனர். தன் பிடியிலிருந்து மகன் விலகிப் போகிறுன் என்று தெரிந்த அக்ரிப்பானு, பிரிட்டானிகஸ் என்பவனுக்கு முடிசூட்டச் சூழ்ச்சி செய்தாள். பிரிட்டானிகஸ் நீரோவால் கொல்லப்பட்டான்.

ஆக்டேவியா, பாப்பையா இவர்கள் அழகில் மயங்கிக் கிடக்கிறுன் தன்மகன்; தனக்கு அரசவையிலும் நாட்டிலும் செல்வாக்கு இல்லை என்பதை உணர்ந்த அக்ரிப்பானு செல்வாக்குப் பெறுவதற்காக மகனையே மயக்கத் திட்டமிட்டாள் ஒரு காதலியைப்போல, என்ற சரித்திரக் குறிப்புகளைப் படிக்கும்போது நம் மனம் கூசத்தான் செய்கிறது.

அக்ரிப்பானுவின் செயலை வெறுத்த நீரோ அவளை ஒழித்திட ஏற்பாடு செய்தான். பட்டத்தரசிகள் செல்லும் படகிலே அக்ரிப்பானுவை ஏற்றி, அனுப்பிவைத்தான். திட்டமிட்டபடி, படகு இடையிலே உடைந்தது; பலர் இறந்தனர். ஆனல் அக்ரிப்பானு உயிர் தப்பினுள். பின்னர் நீரோவினுல் அனுப்பப்பட்டவன், அக்ரிப்பானுவைக் கொலை செய்யச் சென்முன்.

"நீரோ என்ற கொடியவனைப் பெற்ற இந்த வயிற்றைக் கிழித்தெறி" என்று மனம் நொந்து கதறினுள்; கொலையுண்டு மாண்டாள். ஆடம்பர வாழ்க்கையின் இருப்பிடம், ஆபாசத்தின் களஞ்சியம் அழிந்தது.

தன்மகனைத் பெயரளவில் அரசனுக்கித் தானே ரோம் சாம்ராஜ்யத்தை ஆள வேண்டுமென்ற தீய எண்ணத்தால் கணவனுக்கே நஞ்சிட்டாள் அந்தக் காரிகை—பின்னர், தானும் தன் மகனுல் கொலை செய்யப்பட்டு மாண்டாள்.

நீரோவின் வரலாற்றில் செய்யப்பட்ட கொலைகள் ஏராளம், ஏராளம். ஆற்றல் மிக்க தளபதி புரஸ்ஸும் மாண்டு போனுன். ஆசான் செனேக்காவும் அரசியலை விட்டு ஒதுங்கியிருந்தான். பின்னர் அவனும் தற்கொலை செய்து கொண்டு மாளவேண்டி நேர்ந்தது.

அலுவலர்கள், அரசியல் வித்தகர்கள், புகழ்பெற்ற புலவர்கள், படைவீரர்கள் பலர் அவனுல் கொல்லப்பட்டனர். செனேட் உறுப்பினர்கள் அத்தனை பேரையும் அழிக்கப் போகின்முனே நீரோ என்ற அச்சம் பரவியது. ரோம் மக்களுக்கு அவன் மேலிருந்த ஆத்திரமும் வெறுப்பும் வளர்ந்து கொண்டே போயின. நீரோ என்ற பெயரே பலருக்கு

வைகறைப் பொழுதில் துயில் எழுவது முதல் நடு இரவில் உறங்கப் போவது வரை நாட்டு நலனே கவனமாக, கருமமாக இருந்த மார்க்கஸ் அரிலியஸ்

எரிச்சலை யூட்டிற்று. நீரோ கொலைகாரன், கொடுங்கோலன் என்ற பெயரினைச் சுலபத்தில் பெற்றுவிட்டான்.

கிரேக்கத்திற்குச் சென்று, ஒலிம்பிக் முதலான விளையாட்டுகளில் பங்கெடுத்துக் கொண்டு கி.பி.67-ல் தாயகம் திரும்பினான். ஆனால், அவனுக்கெதிராகப் படைவீரர்களும், கிளர்ச்சிக்காரர்களும் திரண்டு நின்றனர்.

ரோம் சாம்ராஜ்யச் சேனையின் அதிபனாக வீற்றிருந்த கால்பா புரட்சிக் கொடியைப் பறக்க விட்டுவிட்டான்.

"மக்களை மதியாத மன்னனை நானும் மதியேன்—அவனை முறிபடித்து மக்களின் துயர் தீர்ப்பேன்" என்று கூறிக் கொண்டு ரோம் நகரை நோக்கிப் படையுடன் புறப்பட்டான்.

மது, மங்கை என்று அந்தப்புரத்திலே காலம் கழித்துப் பாடலிலும், உல்லாசத்திலும், பொழுதைப் போக்கிக் "கொலை செய்வதற்கு அஞ்சாதவனாகிய நீரோவின் முடிவு நெருங்கிக்கொண்டே வந்தது. அப்பொழுது, அவனுக்கு வயது முப்பத்து ஒன்று.

புரட்சிக்காரர்களால் விரட்டப்பட்ட நீரோ நச்சுக்கிண்ணத்தோடு உலவினான்; தற்கொலை செய்துகொள்ள யத்தனித்தான்; இறக்க மனம் வரவில்லை. மெய்க்காவல் படையினரையும், நண்பர்கள் பலரையும் அடைக்கலம் தருமாறு வேண்டினான். அனைவரும் மறுத்துவிட்டனர். வேறு வழியின்றி, டைபர் நதியில் குதித்து உயிரை மாய்த்துக்கொள்ளத்திட்டமிட்டான். அங்கும் அவனுக்கு இறக்கத் துணிவில்லை. இறுதியில் ஒரு வேலையாள் அவனுக்குப் புகலிடம் தந்தான்.

"அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு" ஆண்ட நீரோ நான்கு மைல்கள் நடந்து நடை மெலிந்து நடு இரவில் அவன் வீட்டை நண்ணினான்.

"நீரோவைப்பிடித்துவந்து நிர்வாணமாக ஓரிடத்தில் கட்டிச் சாகும் வரை அவனைச் சாட்டையால் அடிக்க வேண்டு"மென்று செனேட் சபை தீர்ப்பளித்தது. எதிரிகளின்கரங்களால் சாகவிரும்பாத நீரோ தன் கைவாளை நெஞ்சில் பாய்ச்சிக் கொண்டு மாண்டு போனான்.

நீரோ, கொடுங்கோலன், கொலைகாரன் எனினும் ஓர் கவிஞன், கலா ரசிகன், நடிகனும் கூட. கிரேக்கக் கலையில், இலக்கியத்தில், மிகுந்த ஈடுபாடு உள்ள

அக்ரிப்பானாவின் அடிமையாகிய கிளாடியஸ்

வன். ஏழைகளுக்குத் தாராளமாக நன்கொடை வழங்கினான். ரோம் நகரம் பாதிக்கு மேல் தீயினால் அழிக்கப்பட்ட பிறகு, அதனை அழகு மிக்க எழில் நகராக ஆக்கியதில் அவனுக்கு மிகுந்த பங்கு உண்டு. ஆனால் பாவம்; நீரோ மன்னனுடைய கொலை வெறி, அவனுடைய நல்லியல்புகளையெல்லாம் மறைத்துவிட்டது! நாகரிகச் சமுதாயம் என்று சொல்லிக் கொண்ட ரோமாபுரியர்களில் நீரோ போன்ற இரக்கமற்ற, பண்பற்ற மன்னர்கள் பலர் இருந்தனர் என்ற எண்ணத்தைப் போக்குவதைப்போல், நீரோவுக்குப் பிறகு மார்க்கஸ் அரிலீயஸ் என்ற மன்னன் ரோம் சாம்ராஜ்யத்தைச் சிறப்பாக ஆளத்தொடங்கினான். மத்திய தரைக்கடல் நாடுகளின் மணியும் பொன்னும் மார்க்கஸ் அரிலீயஸின் கால்களில் கிடந்தன.

அரிலீயஸ் இறுதிவரை எளிமையாக உடுத்தான், சிக்கனமாக வாழ்ந்தான். வைகறைப் பொழுதில் துயில் எழுவது முதல் நடு இரவில் உறங்கப் போவது வரை நாட்டு நலனே அவன் கவனமாக, கருமமாக இருந்தது. எளியோரின் வரிச் சுமையைக் குறைக்க, அடிமைகள், பெண்டிர், குழந்தைகள், வாழ்வு சிறக்கச் சட்டங்கள் பல இயற்றினான். அரசியல் எதிரிகளுக்கும் தண்டனை தருவதில் சலுகை காட்டினான்.

ஆடம்பரங்களை அடியோடு தவிர்ப்பீர் (Block out vain pomp), பசியை ஒழிப்பீர் (Quench apetite), அறிவை அறிவால் கட்டுப்படுத்துவீர் (Keep reason under its own control) என்பன அரிலீயஸின் மூன்று முக்கிய மந்திரங்களாகும்.

மார்க்கஸ் அரிலீயஸ் ஒரு தத்துவ மேதை, அமைதியை விரும்பியவன் அவன். ஆனால் அமுகத்து அஞ்சுகின்ற கோழை அல்லன். வாழ்நாள் முழுதும் அவன் புரிந்த இலக்கியப் பெருமைகளே இதற்குச் சான்று. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், தன் எண்ணங்களையெல்லாம் எழுத்தோவியமாக்கியவன். அவன் தனக்குத்தானே எழுதிக்கொண்ட உபதேச உரைகளைச் "சிந்தனை" என்னும் தலைப்பில் நூலாகக் கண்ட பொழுது அவனுடைய அறிவாற்றலை மேதினியே போற்றிற்று.

(தொடரும்)

காலத்தை வெல்லும் கலை

மதுரை மாநகர்! சங்கம் வைத்துத்தமிழ்வளர்த்த மதுரை! அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியை வளர்த்தமையால் மதுரம்-இனியது-எனப் பெயர் பெற்ற மதுரை. மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் தன்னகத்தே கொண்டு செல்வம் கொழித்து நின்றமையால் நான் மாடக் கூடல் எனப் புகழ்பெற்ற மதுரை.

வெற்றி உலா வந்த அந்த வீரமறவர் கூட்டம் இன்று அங்கு இல்லை. நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்று நீதிக்கும் நேர்மைக்கும் இலக்கணமாய் வாழ்ந்த நக்கீரப் புலவன் நம்மிடையே இல்லை. தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்கள், கலையை வளர்த்திட்ட நாயக்க மன்னர்கள், வீர ராணி மங்கம்மாள் ஆகியோர் இறந்து பட்டனர்.

ஆனால் அவர்கள் வளர்த்த இன்பத்தமிழ், அவர்கள் உருவாக்கிய கலைக்கோயில்கள் இன்றும் அங்குக் கொலு வீற்றிருக்கின்றன. வானளாவி நிற்கும் மீனாட்சியம்மன் கோயிலின் கோபுரங்களும் எழில் சிந்தும் நாயக்கர் மகாலும் கூறாமல் கூறிடும் வீர காவியங்கள் எத்தனை எத்தனையோ!

புகழ்மிக்க இந்த மதுரையம்பதிக்குத் தங்கப் பதக்கத்தில் முத்துப் பதித்தது போல் புதிய சிறப்பொன்று விரைவில் வந்தடையவிருக்கின்றது. இருபதாம் நூற்றுண்டின் கண்டுபிடிப்பான அந்தக் கலையின் பெயர் 'ஒலி-ஒளிக்' கலையாகும். சன் எட் லுமீர் (Son et Lumiere-Sound and Light) என்று பிரெஞ்சு மொழியில் கூறப்படும் இக்கலையின் நோக்கம், பலவண்ண மின் விளக்கு ஒளியின் மூலமாகவும், இசை-உரையாடல் ஆகிய ஒலிகளின் மூலமாகவும் பார்ப்போரை வரலாற்றுக்காலத்திற்கே அழைத்துச் செல்வதாகும்.

சரித்திரப் புகழ்பெற்ற மாவீரர்கள் எழுப்பிய வரலாற்றுச் சின்னங்கள், காலத்தை வென்ற கலைஞர்கள் விட்டுச்சென்ற கலைச் சின்னங்கள் உலகெல்லாம் பரந்து கிடக்கின்றன. அவற்றை, நாள் தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுப் பயணிகள், ஆய்வாளர்கள், பல்கலைப் பயிலும் மாணவர்கள், பக்தர்கள் பார்த்துப்பரவசமடைகின்றனர்; பாராட்டுகின்றனர்; பயன் பெறுகின்றனர். ஆனால், அவற்றைப் பார்ப்போர் அனைவரது உள்ளத்திலும் ஓர் ஏக்கம், நிறைவேறா ஓர் அவா, குடிகொள்கிறது. இந்த வரலாற்று நாயகர்களுடன் வாழும்பேறு கிட்டவில்லையே! அவர்கள் வாழ்ந்த நாகரீக வாழ்வினை நேரிலே காண முடியவில்லையே என்ற ஏக்கம்தான், அது! பலருக்கு அந்தச் சின்னங்களின் பின்னணியில் பின்னிக்கிடக்கும் பெரிய வரலாறு தெரிவதில்லை.

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு.... ரூ.8·00

அரை ஆண்டு...ரூ.4·00

தனிப்பிரதி...35 காசுகள்

விவரங்களுக்கு:

இயக்குநர்,

செய்தி, விளம்பரத்துறை,

தமிழ் நாடு அரசு – சென்னை, 9

இந்தக் குறைபாடுகளை நீக்கி ஒரு நிறைவினை ஏற்படுத்த வேண்டும், பண்டைக்கால வரலாற்றைக் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்று பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர் ஒருவர் விரும்பினார். அவர் விருப்பத்தில் மலர்ந்ததே இந்தக் கண்டுபிடிப்பு!

வரலாற்றுச் சின்னங்களைப் பற்றிய விளக்கங்களை அவர் 'டேப்ரிக்கார்'டில் பதிவு செய்தார். தனது வரலாற்றுக்கான வலிவு தர, ஒளியமைப்பைத் துணைக்கொண்டார். சம்பவத்தின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு வரலாற்றுச் சின்னத்தை ஒளிமயமாக்கி, 'டேப்'பில் உள்ள பின்னணிக் குரலை இணைத்து ஓட விட்டார்; விளைவு—பிரமிக்கத்தக்க அளவில் மகத்தானதாக அமைந்தது.

இன்று பிரான்சு நாட்டில் மட்டும் சுமார் பன்னிரண்டு இடங்களுக்குமேல் இந்த 'ஒளி ஒலி' அமைப்பு சுற்றுப்பயணிகளைக் கவரும் மிகப்பெரும் சாதனமாக அமைந்துள்ளது. பிரான்சைப் பின்பற்றி இங்கிலாந்து, அமெரிக்கா, எகிப்து, பெல்ஜியம், கிரேக்கம், இத்தாலி, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஸ்வீடன் போன்ற பல நாடுகள் இந்தக் கலையைத் தங்கள் நாட்டுக் கலைச் சின்னங்களுக்கு உயிரூட்ட நிறுவியுள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தில் தற்போது டெல்லி, செங்கோட்டையில் சரித்திரப் புகழ்பெற்ற ஆறு கட்டடங்களில் இது அமைக்கப்பட்டுள்ளது. 1965-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அன்றைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியால் அந்த ஒளி-ஒலி அமைப்புத் துவக்கி வைக்கப்பட்டது. இப்போது ஆந்திரத்தில் உள்ள விஜயவாடாவில் ஒன்று உள்ளது.

அடுத்து, தமிழகத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இதனை அமைக்க அரசு திட்டம் தீட்டியுள்ளது. சுமார் 22 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்த அமைப்பிற்கு மத்திய அரசு 18 லட்சமும் தமிழக அரசு 4 லட்சமும் செலவு செய்ய விருக்கின்றன. நாலாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் நிறுவப்படும் இந்த ஒலி-ஒளி அமைப்பு மதுரைக் கோவிலின் அழகுக்கே அணிசெய்வதோடு பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு-வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளையும்



கவரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த ஒலி-ஒளி அமைப்பினை உருவாக்குவதே தனிக்கலை. திறமைமிக்க தொழில் வல்லுநர்கள் பலர் இணைந்து மாதக்கணக்கில் நுணுக்கமாகச் செயல்பட்டு உருவாக்குவர், இந்த அரிய படைப்பினை! முதலில் வரலாற்று வர்ணனைகளும் (உரை நடையில்) இசையும் ‘டேப்’பில் பதிவு செய்யப் படுகின்றன. பல தரப்பட்ட ஒலியில் இவை பதிவு செய்யப்படும் ; இனிய சம்பவங்களை விளக்கிடும் காட்சிகளுக்கான வர்ணனை மெல்லிய மிருதுவான குரலிலும், இனிய இசையுடனும் பதிவுசெய்யப்படும். வீர முழக்கங்கள், களத்தினில் நடைபெறும் போர்க்காட்சிகள் போன்றவை முரசு அதிர, வீரம் பொங்கும் குரலில் பதிவு செய்யப்படும்.

எடுத்துக்காட்டாகக் கற்புக்கரசி கண்ணகி, பாண்டிய மன்னனின் அரண்மனை புகும் காட்சியைச் சொல்லும் போது கோபத்தைக் குறிப்பிடச் சிவப்பு ஒளியும் வீரமிக்க உரையாடலும் பயன் படுத்தப்படும்.

இந்தக்காட்சி அமைப்புகள் திரைப்படங்களைப் போன்று இரவில் காட்டுவதற்கென்று அமைக்கப்படுபவை. குறிப்பிட்ட சில மணி நேரங்களில் மட்டும் காட்டப்படும். இந்தக் காட்சிகளுக்காக, மிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு எதிரில் மிகப் பிரகாசமான மின் விளக்குகளைப் பொருத்துவர். பகல் நேரங்களில் அவை அந்த இடங்களின் சூழ்நிலையைப்பாதிக்காமல் இருக்க மறைத்து வைக்கப்படும். இதற்காகத் தனி இருக்கைகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி அவற்றின் உட்புறத்தே

விஜயவாடாவில் உள்ள காந்தி மலை—பகல் தோற்றம்

இந்த விளக்குகளை, அமைத்திடுவர். பகலில் மூடி வைக்கப்படும் இவ் விளக்குகள், காட்சி துவக்கும்போது திறக்கப்படும்; கலைச் சின்னங்களின் அழகும், நவீன அமைப்புக்களினால் அவற்றின் பழம் பெருமையும் சிதைக்கப்படாமலிருக்கவே இந்த ஏற்பாடுகள்! சூழ்நிலைக்கு ஏற்றபடி, நீலம் சிவப்பு, மஞ்சள் ஆகிய வர்ணங்கள் விளக்குகளுக்குப் பயன் படுத்தப்படும்.

உரையாடல், இசை பதிவு செய்யப்பட்ட ‘டேப்’ அடங்கிய ஒலி அமைப்புகள் கட்டடங்களின் உள்ளே ஒரு தனி அறையில் அமைக்கப்பட்டிருக்கும்; அங்கிருந்து தேவைப்படும் இடங்களுக்கு ஒலி பெருக்கிகள் இணைக்கப்படும். காட்சி துவங்கும் போது ஒலியும் ஒளியும் இணைந்து செயல்படும். எடுத்துக் காட்டாக விசுவநாத நாயக்க மன்னன் மதுரைக் கோவிலைச் செப்பனிடும் காட்சி விளக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம்.

காட்சி-1. ‘‘இதோ வருகிறார் விசுவநாத நாயக்க மன்னர்..’’ என்று கம்பீரமான குரல் ஒலிக்கும். பின்னணி இசையும் அதற்கொப்ப இசைக்கும். அதே நேரத்தில் அவர் வருவதாகக் காட்டப்படும் பாதை மாத்திரம் விளக்கால் ஒளி வீசப்படும். அவர் செல்லுவதைக் காட்டுவதுபோல் ஒளி தொடர்ந்து சென்றுகொண்டிருக்கும்.

காட்சி-2. கோபுரம் கட்டப்படுகிறது என்பதைக் காட்டும் போது கோபுரத்தின் அடித்தளத்திலிருந்து மெள்ள மெள்ள ஒளியினை மேலே வளர விடுவார்கள். கோபுரம் உருவாவது போன்ற பிரமையை-கற்பனையை அது பார்ப்போர் மனத்தில் உருவாக்கும்.

இது சொல்லி விளக்கக்கூடிய கலை அல்ல. பார்த்து, கேட்டு, ரசித்திட வேண்டிய அரிய, பெரிய, நுணுக்கமான கலை.

சுற்றுலாச் சொர்க்கமான ரோமாபுரி சென்று வந்த முதல்வர் தமிழகத்தையும் சுற்றுலாச் சொர்க்கமாக ஆக்கிட வேண்டுமென்று அவாக் கொண்டுள்ளார். மதுரைக் கோவிலில் ஒளி-ஒலி

இரவில், ஒலி—ஒளி அமைப்பினால் கிடைக்கும் தோற்றம்

அமைப்பை விரைவில் செயல்படுத்திட வேண்டுமென்பது அவரது திட்டம்.

மதுரையில் இந்த ஒளி-ஒலி அமைப்பு ஏற்படுத்தப்படுவது, மதுரை மாநகருக்கு மட்டுமின்றித் தமிழகத்திற்கே பெருமையைத் தேடித்தரும் என்பதில் ஐயமில்லை.



எளிய மருந்து

துளசி ஓர் அற்புதமான மூலிகை ; நாடெங்கும் தானே முளைத்து வளர்வது ; வெப்பமான இடங்களிலும் வேர்விட்டுச் செழிப்பது ; வீட்டிலும் வளரும்; காட்டிலும் வளரும்.

அதில் சிறிது காரமும் துவர்ப்பும் உண்டு ; கற்பூரத்தை வாயிலிட்டால் 'விறுவிறு' என்றிருக்குமல்லவா ? அதைப்போன்று நாக்கிலே ஒரு விதச் சுவை தோன்றும்.

துளசியில் கருந்துளசி, வெள்ளைத் துளசி என்பவை மிகச் சிறந்தவை ; வெண் துளசியை நற்றுளசி என்று சொல்வார்கள். இவை தவிர நிலத் துளசி, நாய்த் துளசி, முள் துளசி செந்துளசி, கல் துளசி எனவும் பல பிரிவுகள் உண்டு. இச் செடி ஏறக்குறைய இரண்டு மூன்றடி உயரம் வரை வளரும்.

துளசியிலே பயன் படாத பொருளேயில்லை; அதனைத்தழுவி வரும் காற்றே நோய்களை நீக்கும் ; 'துளசி யிருக்குமிடத்தில் துளிக் கொசுவும்' கிடையாது என்பார்கள் ; துளசி வாசனையால் கொசுவும் ஓடி விடுமாம்.

துளசி இலையை அரைத்துக் கால் முதல் அரை அவுன்ஸ் சாறு பிழிந்து கால் அல்லது அரைத் தேக்கரண்டி தேன் சேர்த்துக் காலை மாலை பருகலாம்.

துளசியைப் பாலிலிட்டுக் காய்ச்சிப் பருகினால் பாலிலுள்ள குற்றங்கள் நீங்கும் ; கபத்தைக் கரைக்கும்.

இலையை நீராவியில் வேகவைத்துப் பிழிந்து எடுத்த சாற்றுடன், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ. இவை ஒவ்வொன்றும் அரை அரிசி 'எடை' சேர்த்துச் சிறு குழந்தைகளுக்குக் கொடுக்க, கபக்கட்டு, இருமல், காய்ச்சல், மூச்சுத் திணறல், இழுப்பு, கணை, மாந்தம் இவற்றில் எவை இருந்தாலும் அவற்றை நீக்கும்.

அரைத் தேக்கரண்டி காலையும் மாலையும் பருக வேண்டும்; நோய் நீங்கும் வரை பருகவேண்டும்.

எத்தனையோ பேர் பொடி போடுகிறார்கள் ; பொடி விஷயம் நாட்டிலே பெரிய விஷயமாக இப்போது இருக்கிறது ; புகையிலைக்குப் பதிலாகத் துளசியை உலர்த்திப் பொடி செய்து மூக்கிற்கு இட்டால் மூக்கடைப்பு, பீனசம் முதலியவை நீங்கும்.

துளசிச் சாற்றைப் பூண்டுச் சாற்றுடன் கலந்து இரண்டோர் துளிகள் காதில் ஊற்றி வந்தால் காது நாற்றம், குத்தல், காதில் சீழ் வடிதல் முதலியன நீங்கும்.

துளசிச் சாற்றையும் அளவாகத் தேனையும் கலந்து அஞ்சனம் போல் கண்களுக்குத் தீட்டின் கண்வலி குணமாகும்.

துளசி இலையால் உடலில் வெப்பம் சிறிது உண்டாக்கி, கோழையை அகற்றி, வியர்வையைப் பெருக்கி, பசியையும் ருசியையும் உண்டாக்கும் ; உண்ட உணவை விரைவில் செரிக்கச் செய்யும் ஆற்றல் துளசிக்கு உண்டு.

''வில்வாதி குடிகா' எனும் மருந்தில் துளசிப் பூ சேர்க்கப்படுகிறது ; இம் மருந்து விஷக்கடி, பேதி, வாந்தி, செரியாமை, இடு விஷங்கள் முதலியவற்றை நீக்க வல்லது. மேலும் துளசிச் செடியை அப்படியே செடி முழுவதும் (சமூலம்) உபயோகித்துச் சுப்ர வடி எனும் மாத்திரை செய்யப்படுகிறது. இம் மாத்திரை இருமல், தொண்டைக்கட்டு, நீர்க்கோவை, ஆஸ்த்மா, போன்ற நோய்களை நீக்கும்.

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்பார்கள்; அதுபோல் சிறிய துளசி இலை—பெரும் பெரும் நோய்களைக் குணப் படுத்தி வருகிறது. அந்தத் துளசியின் பேராற்றலைத் தொகுத்துச் சொல்கிறது இந்தக் கட்டுரை.

'' பிள்ளைப் பேற்றின் பின்னர் தாய்மார்கள் வேதனைப் படுவதுண்டு ; அப்போது துளசி விதையைக் குளிர்ந்த நீரிலரைத்துக் கொடுக்க வேதனை குறையும்; பொடியிருமல் போகும் ; நீரிழிவு நீங்கும் ; வெப்பம் குறையும்.

துளசியில் நற்றுளசி கபம், வயிற்றுளைச்சல். அஸ்திகதசுரம், தாகம், சுர மாந்தம், அரோசகம், ஆகியவற்றை நீக்கும்.

நிலத் துளசி கணைச் சூடு, பல பித்த நோய்கள், குளிர் காய்ச்சல், வாத சுரம், சிறு குழந்தை கட்குமுத் தாய்ப் பாலால் வரும் மாந்தம் முதலியவற்றை நீக்கும்.

நாய்த் துளசி, பொடியிருமல், கோழை, சன்னி, வாதசுரம் இவைகளைப் போக்கும்.

முள் துளசி எலி விடம், வெட்டுப்புண் காயம் ஆகியவற்றை மாற்றும்.

செந்துளசி கபப் பெருக்கு, வாத பித்த கப நோய்களை நீக்கும்

கருந் துளசி இருமல், இரைப்பு, நெஞ்சில் கோழை சேருவதனாலுண்டாகும் 'குறு குறு' என்ற சத்தம், கிருமி, இருமலினால் ஏற்படும் கேவல், மார்புச் சளி, சூலை, சன்னி, பாத சுரம் ஆகியவற்றை நீக்கும்.

பொதுவாகக் கருந் துளசியும், வெள்ளைத் துளசியுமே மிகுதியும் பழக்கத்தில் இருப்பவை ; வெள்ளையை விடக் கருந்துளசியே சாலச் சிறந்தது. துளசியின் குணத்தைத் தொகுத்துச் சொல்வோம். காரமும் துவர்ப்புமுள்ள இந்த இலைச் சாறு இதயத்திற்கு வலிமை யூட்டும்; உடலில் சிறிது வெப்பத்தை ஊட்டிப் பித்தத்தை ஒரு சிறிது பெருக்கிப் பசியை உண்டாக்கும். குஷ்டம், மூத்திரத் தடை, இரத்தக் கோளாறுகள் இவற்றை நீக்குவதுடன் பசி, ருசி பெருக்கி உண்ட உணவை எளிதில் செரிக்கச் செய்யும். வயிற்றுப் பூச்சிகளை அகற்றும்; கோழையை அறுக்கும். உணர்ச்சியும் சுறுசுறுப்பும் ஊட்டும்.

அற்புதமான இந்த மூலிகை நமக்கு இயற்கை அளித்த செல்வமல்லவா ?

727

வாழ்வோம் வாரீர்!

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

நிழலிருந்தால் பூங்காவை நினைப்ப தில்லை !
நிறமிருந்தால் வயிரத்தை அணிவ தில்லை !
அழகிருந்தால் மலரெடுத்துச் சூடல் இல்லை
அழல்,வெப்பம் இல்லையென்றால் மதிப்ப தில்லை !
குழல்,கீறல் பட்டதென்றால் இசைப்ப தில்லை !
குறைபட்ட காவியத்தைப் படிப்ப தில்லை !
எழுமான உணர்வற்ற பேரை எல்லாம்
இங்கெவரும் மனிதரெனச் சொல்வ தில்லை !

உருள்தேருக் கச்சாணி வேண்டும் ! மக்கள்
உயிர்வாழ்வுக் கதுபோல மானம் வேண்டும்.
அருங்கவியில் உயிரில்லா எழுத்தை எண்ணி
அலகிடுதல் இலக்கணத்தார் வழக்க மில்லை !
பெருமானம் அற்றவரை எண்ணிப் பார்க்கும்
பிழைச்செயல்கள் நுழைபுலத்தார் செய்வ தில்லை !
வருபாட்டில் அசைச்சொல்போல் பயனி ழந்து
வாழ்வதுமோர் வாழ்வாமோ ? வெட்கக் கேடு !

தன்மானம் எனுந்தண்டின் மேலி ருக்கும்
தாமரைப்பூ இவ்வாழ்க்கை ! தண்ட றுந்தால்
என்றைக்கும் முடிவல்லால் ? மானம் என்னும்
எழில்நரம்பை எடுத்தெறிந்தால் வாழ்க்கை வீணை
இன்னிசையை எழுப்பாது ! குப்பை சேரும் !
இருவிழியுள் கருமணிகள் மானம் ! கெட்டால்
புன்விழிகள் பொட்டையெனப் போகும் ! சாகும் !
பூவுலகம் எங்கணுமே இருட்டே தோன்றும் !

தன்னிலையில் தாழாமை தாழ்ந்து விட்டால்
தரித்தாவி வாழாமை மானம் என்னும்
பொன்மொழியைச் சிரமேற்று வாழும் போது
புகழ்ச்செயல்கள் மின்னலிடும் ; இருட்டு மாயும் !
வென்றிபெற மனந்துடிக்கும் ! தொப்பை யைப்போல்
வீணுக்குத் தொங்குகின்ற வாழ்க்கை இல்லை !
பின்னலுறும் இழிசெயலைக் கருத்த ரித்துப்
பிழைசெயும் குறுநோக்கும் மடிந்து போகும் !

பிறந்தோர்கள் எல்லாரும் பிறந்தோர் இல்லை !
பெருஞ்செயல்கள் புரிந்தோரே பிறந்தோர் ஆவார் !
இறந்தோர்கள் எல்லாரும் இறந்தோர் இல்லை !
இழிசெயல்கள் புரிந்தோரே இறந்தோர் ஆவார் !
இறவாமை பெறவேண்டில் மானந் தன்னை
இழவாமை தழுவுகின்ற செயல்பு ரிந்தே
அறவழியில் நழுவாமை வேண்டும்—அந்த
அழகான வாழ்க்கையினை வாழ்வோம் வாரீர்!



கொடுத்தனைக்

தென்னகத் திரைப்படத் தொழில் இந்தியத் துணைக்கண்டத்தில் சிறந்து விளங்கும் பெரும் தொழிலாகும்.

தென்னகக்கலைஞர்களின் அருந்திறனை அனைத்து இந்தியாவிலுள்ளோரும் ஒப்புக்கொள்ளுவர். அத்தகு கலைஞர்களின் கலைப் பணிகளை ஊக்குவிக்கவும், தரமான படைப்புகளை உருவாக்க ஆர்வம் காட்டவும், அப்பணியில் ஈடுபட்டிருப்போரைப் பாராட்டிச் சிறப்பிக்கவும் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு திட்டத்தை வகுத்து வெளியிட்டார்கள்.

ஆண்டுதோறும் சிறந்த தமிழ்ப் படங்களுக்கும், கலைஞர்களுக்கும் பரிசளிக்கும் திட்டம் அது.

1967-ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இத்திட்டத்தின்படி 1969-ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படம், கலைஞர்களுக்கான பரிசு அளிப்பு விழா 4-11-70 அன்று சென்னை மியூசிக் அகாடமியில் நடைபெற்றது.

விழாவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் தலைமை வகித்தார்கள்.

சிறந்த திரைப்படங்கள் சிறந்த கலைஞர்களுக்கான பரிசுகளை மேதகு ஆளுநர் அவர்கள் அளித்தார்கள்.



விழாவுக்கு வந்திருந்தவர்களைச் செய்தித் துறை இயக்குநர் வரவேற்றார். சிறந்த படங்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவின் தலைவரான டாக்டர் மு.வரதராசனார் அவர்கள், குழுவுக்கு முழு உரிமையும் அளிக்கப்பட்டிருந்ததையும், சிறந்த படங்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசின் குறுக்கீடு எந்தவகையிலும் ஏதுமில்லை என்பதையும் எடுத்துரைத்தார்.

தென்னிந்திய திரைப்படவர்த்தகச் சங்கத் தலைவர் திரு. ஏ. எல். சீனிவாசன், சிறந்த திரைப்படங்களுக்குப் பரிசு அளிக்க வேண்டும் என்றகோரிக்கை முன்புறக்கணிக்கப்பட்டதையும் இன்று திரையுலகத் தினரின் வேண்டுகோள் நிறைவேற்றப் படுவதையும் எடுத்துரைத்து அரசின் திட்டத்தைப் பாராட்டினார்.

கொடுத்தார்கள்

பரிசுகளை வழங்கிய ஆளுநர், இது போன்ற பரிசளிப்பு தரமுள்ள படங்களைத் தயாரிக்க உதவும் என்று குறிப்பிட்டார்.

1969-ஆம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பரிசு 'அடிமைப் பெண்' திரைப்படத்திற்கும், இரண்டாவது பரிசு 'அக்கா தங்கை' படத்திற்கும் மூன்றாவது பரிசு 'தெய்வ மகன்' படத்திற்கும் அளிக்கப்பட்டன.



சிறந்த நடிகைக்குரிய பரிசு திருமதி சௌகார் ஜானகிக்கும், சிறந்த இயக்குநருக்குரிய பரிசு திரு. ப. நீலகண்டனுக்கும், கதாசிரியருக்குரிய பரிசு திரு. பாலமுருகனுக்கும், வசனகர்த்தாவுக்குரிய பரிசு திரு. சொர்ணத்திற்கும், சிறந்த இசையமைப்பாளருக்குரிய பரிசு திரு. கே. வி. மகாதேவனுக்கும், பாடலாசிரியருக்குரிய பரிசு திரு. அ. மருதகாசிக்கும், சிறந்த துணை நடிகருக்குரிய பரிசு திரு. சுந்தரராஜனுக்கும், சிறந்த துணை நடிகைக்குரிய பரிசு செல்வி பண்டரிபாய்க்கும், சிறந்த பாடகருக்குரிய பரிசு திரு. எஸ். பி. பாலசுப்பிரமணியத்திற்கும், சிறந்த பாடகிக்குரிய பரிசு திருமதி கே. பி. சுந்தராம்பாளுக்கும், சிறந்த ஒளிப் பதிவாளருக்குரிய பரிசு திரு. மார்க்கஸ் பார்ட்லேக்கும், சிறப்புப் பரிசு குழந்தை நட்சத்திரமான பேபிராணிக்கும் அளிக்கப்பட்டன.

பரிசு பெற்ற கலைஞர்களைப் பாராட்டிப் பேசிய தமிழக முதல்வர் அவர்கள் இன்றைய அரசு, நாட்டுக்கும் கலைக்கும்

"பிறர் சுமை அகற்றும் பண்பு"

கடந்த 4—11—70 மாலை, 'மியூசிக் அகாடமி'யில் தமிழ்த் திரைப்படத்துறைக் கலைஞர்கட்குப் பரிசு அளிப்பு விழா மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் தலைமையில் சிறப்புமிகு திரைக் கலைஞர்கள் பாராட்டுப் பெறுவதைக் காண மக்கள் பெருங்கூட்டமாகக் குழுமியுள்ளனர். டாக்டர் மு. வ. அவர்கள் வரவேற்புப் பேச்சை ஆரம்பிக்கின்றார். உடனே விழாக் குழுவைச் சேர்ந்த ஒருவர் ஆள் உயர மாலை ஒன்றை அவருக்கு அணிவிக்கிறார். மாலையைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டே மேலே பேச்சைத் தொடர்கின்றார், தமிழ்ப் பேராசிரியர். மாலை கொஞ்சம் கனத்த மாலைதான். அந்தச் சுமையையும் தாங்கிக்கொண்டு வரவேற்புரையையும் நிகழ்த்துகின்றார். இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனிக்கின்றார்கள். உடனே சைகை மூலம் டாக்டர் மு.வ.வின் அருகில் உள்ள ஒருவருக்கு ஏதோ சாடை காட்டுகிறார். அந்த நண்பருக்கு முதலில் என்னவென்று புரியவில்லை. மறுபடியும் முதல்வர் சைகை செய்கிறார். இப்போது அந்த நண்பருக்குப் புரிந்துவிட்டது. அவர் உடனே டாக்டர் மு.வ.விடம் ஓடி அவரது கையிலிருந்து மாலையை வாங்கிச் சுமையை அகற்றுகிறார். நிம்மதியடைந்த முதல்வர் பேராசிரியரின் சொற்பொழிவைக் கவனிக்கிறார்.

எக்காரியத்திலும் பிறருக்குச் சுமை இல்லாது பணியாற்றி, அடுத்தவர் பாரம் அகற்ற என்றும் ஆவன செய்யும் தமிழக முதல்வரது இனிய பண்பு கண்டு வியந்தோம்.

—எல்லைவேலன்.

என்பதை உணர்கிறேன். மக்களின் இந்த வரிப்பணத்தை மக்களுக்கே திருப்பித்தர எண்ணியுள்ளேன்." இதிலிருந்து முத்துராமலிங்கத் தேவர் கல்லூரிக்கு 10 ஆயிரம் ரூபாயும் பின்தங்கிய மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மீதி 20 ஆயிரம் ரூபாயும் பயன்படுத்த முதலமைச்சரிடம் அளிக்கிறேன்" என்று கூறி முதலமைச்சர் அவர்களிடம் அளித்தார்.

மூன்றாவது சிறந்த படமான 'தெய்வ மகன்' திரைப்படத்திற்குப் பரிசாகப் பெற்ற ரூ. 10 ஆயிரத்தைத் திரு. பெரியண்ணன் அவர்கள் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அளித்தார்.

சிறந்த நடிகைக்கான பரிசைப் பெற்ற திருமதி சௌகார் ஜானகி தமக்குக் கிடைத்த ரூபாய் 5 ஆயிரத்தையும் 'பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு நிதி'க்கு அளித்தார்.

அரசு தங்களுக்குக் கொடுத்த பரிசுத் தொகையை நல்ல பணிகளுக்குத் திருப்பித் தந்த கலையுலகத்தவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். கொடுத்ததைக் கொடுத்தார்கள் என்றால் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? 'தரத்தரக் கோடி கோருவர்' என்ற பழங்கருத்து, மாறிக் கொண்டுவருகிறது என்பது தெளிவாகிறது!

பாடுபட்டவர்கள் அனைவரையும் மதிப்பதில் அரசியல் கண்ணோட்டத்துடன் காரிய மாற்றுவதில்லை என்பதை விளக்கினார்கள். 1967-ஆம் ஆண்டில் புதிய அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டபொழுது விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை புகுந்த 605 பேருக்குத்தான் உதவி வழங்கப்பட்டது. இப்பொழுது 6,002 பேருக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது என்பதையும் முதல்வர் எடுத்துரைத்தார்கள்.

அரசியல் துறையிலும் கலைத் துறையிலும் நாட்டுக்காகப் பாடுபட்டவர்களைப் பாராட்டுவதில் இந்த அரசு கட்சிக் கண்ணோட்டத்துடன் நடந்து கொண்டதில்லை என்பதைப் பல்வேறு ஆதாரங்களுடன் முதல்வர் அவர்கள் விளக்கினார்கள்.

'அடிமைப் பெண்' படத்திற்கான முதற்பரிசைப் பெற்ற புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில் 'அடிமைப் பெண்' படத்திற்காக 30 ஆயிரம் ரூபாய் தரப்பட்டுள்ளது; இது மக்களிடம் வாங்கப்பட்ட வரிப் பணம். கலைஞர்கள் மக்களின் ஓர் அங்கம் என்பதை நினைவுபடுத்தவே இந்தப் பரிசுத் தொகை

இந்திய, வெளிநாட்டுப் பத்திரிகைகளையும்,
நூல்களையும் மலேசியா, சிங்கப்பூர்,
புருணை, ஹாங்காங், தென்வியட்நாம்
முதலான நாடுகளில் வினியோகம்
செய்யும் ஓர் சிறந்த நிறுவனம்

இஸ்மாயில் புக் டிப்போ

அஞ்சல் தொடர்பு :
MESSERS ISMAIL BOOK DEPOT
G.P.O. BOX—149
SINGAPORE

"பாப்பா பாப்பா ரொட்டி" நாள் தோறும் வீடு தேடி வந்து குழந்தைகளுக்கு ரொட்டிகளை, சீரணித் தொண்டர்களும், சமூகப் பணியில் ஈடுபட்டிருக்கும் மகளிரும் அளிக்கிறார்கள்.

சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கு இந்த ரொட்டி அளிக்கப்படுகிறது.

'கேர்' நிறுவனத்தினர் அளிக்கும் பால் பவுடரைக் கொண்டு, மைய அரசின் மாடர்ன் ரொட்டி தொழிற்சாலையில் குழந்தைகளுக்காகச் சத்துணவு மிக்க இந்த ரொட்டி தயாரிக்கப்படுகிறது.

சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் வாழும் 40,000 குழந்தைகளுக்கு இந்த ரொட்டி அளிக்கப்படுகிறது. பின்னர் தமிழ் நாடு முழுவதும் விரிவாக்கப்படும்.

ஆறுமாதம் முதல் 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இந்த ரொட்டி அளிக்கப்படும்.

குடிசைப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் உடல் வலு குன்றியிருப்பதை எண்ணி, அவர்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவளிக்க இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் 150 மையங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு இடத்திலிருந்தும், குழந்தைகளுக்கு ரொட்டி வழங்கப்படுகிறது.

ஏறத்தாழ 32,000 குழந்தைகளுக்குச் சீரணித் தொண்டர்கள் மூலம் ரொட்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீதிக் குழந்தைகளுக்குச் சமூகப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் மகளிர் மன்றங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

ரொட்டி வழங்க வேண்டிய வீடுகளில் உள்ள குழந்தைகளுக்கான அடையாள அட்டையும் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்காக இப்பொழுது ரூ. 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

" குழந்தைகளின் உடலுக்கு வலுவேற்றுவோம், குடிசைகளை மாற்றி ஒளியேற்றுவோம்" என்ற நம் அரசின் இலட்சியப் பாதையில், இது ஒரு மைல் கல்லாகும்.

இன்றையக் குழந்தைகள் தான் நாட்டின் எதிர்காலத் திருவிளக்குகள் என்பதை உணர்ந்து அவர்களுக்குச் சத்துணவை அளிக்கும் இந்தத் திட்டம், வசதி வாய்ப்பு குறைந்த ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள், இத்திட்டத்தினைச் சென்னை நகரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாடங்கி வைத்தார்கள்.

733



(1)

ஓவ்வொருவரிடமும், பற்பல ஆற்றல்கள் உள்ளன. அவை நீறுபூத்த நெருப்புப்போல் உள்ளன. அவை சுடர்விட்டு ஒளிர வழியொன்று கண்டனர். அதுவே, கல்வி.

நெ.து. சுந்தரவடிவேலு

துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

கல்வி,' மனிதனுக்குள் மறைந்து கிடக்கும் அறிவு நுட்பங்கள், செயலாற்றல்கள், குணசீலங்கள், ஆகியவை முழு வளர்ச்சி பெறத், துணை நிற்கவேண்டும்.

எங்கோ, அடர்ந்த காட்டில், பருவத்திற்குப் பருவம், கண்ட பக்கம் மாறியோடும் காட்டு ஓடைக்கு சிறப்பேது ! பயனும் தீங்கானதாகலாம். அதுவே, மெல்ல மெல்ல, அடங்கி ஒரே வழி ஓடும் சிற்ருருகும்போது, சிறப்புப் பெறுகிறது ; பயன் விளைவிக்கிறது. மேலும் ஓடிப், பேராற்றில் கலந்துவிடும்போது, பெருஞ்சிறப்பு வந்தடையும் ; பெரும் பயன் விளையும்.

மனிதனது அறிவு இயல்புகளும், செயற்திறங்களும் ஊறிப் பொங்கி, நினைத்தபோது, நினைத்த பக்கம், உடைத்துப் பாய்ந்தால், சிறப்பில்லை ; பயனும் கெடுதியாகலாம் ; மாருகத், தன்னுள்ளே, ஊறிப் பொங்கும் இயல்புகளும் திறங்களும், தான் வாழும் சமுதாயத்தின் கரைகளுக்குக் கட்டுப் பட்டுச், சமுதாயத்திற்குப் பயன்படும்போது, சிறப்புப் பெறுகிறது. அத்தகைய நிலையில், தனிமனித வளர்ச்சி, சமுதாய வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் துணை நிற்கிறது.

மனிதன், தனி ஆள்மட்டு மல்ல ; குடும்பத்தின் உறுப்பினன் ; சமுதாயத்தின் உறுப்பினன். அவன், தன்னறிவால், தன்னுற்றலால், தன் உழைப்பால், தன்னையையும் குடும்பத்தையும் காத்துக் கொள்ள வேண்டும். மனித உழைப்பு சமுதாயத்திற்குத் தீங்காக இருத்தல் ஆகாது ; உதவியாக இருக்க வேண்டும். எனவே, சமுதாயத்தின் நியாயமான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் நம் உழைப்பு இருக்க வேண்டும் ; நம் கல்வியும் பயிற்சியும் அத்தகைய உழைப்பிற்கு, உதவியாக நிற்கவேண்டும்; முட்டுக் கட்டைகளாகக் கூடாது.

கோடியில் ஒருவரே, கல்வி கற்ற பண்டைக்காலத்தில், அந்த ஒருவருக்கு, மற்றவர்கள் சோறு போட்டு, உடைகொடுத்துக் காத்துவிட முடியும். அந்த ஒருவர், இதையும் அதையும் ஒப்புவித்தலின் மூலம், காப்பாற்றப்பட வேண்டியவராகி விடுவார் ; உழைக்காமலே வாழ்வதற்கும் உரியவராவார்.

பண்டைய நிலையா இன்று? 'எல்லோரும் கற்போம்', என்கிற நிலை, விரைந்து உருவாகி வருகிறது. சில ஆண்டுகளில், எல்லோரும் பதிஞறு வயது வரையாவது, படித்துக்கொண்டிருக்கும் நிலை, நிலைத்துவிடும். அது நல்லதுமாகும். அப்புறம், படித்தவர் என்பதற்காக, யாரை யார் தாங்கிக் கொண்டிருக்க முடியும்? எல்லோரும் உழைத்தே, எல்லோரும் வாழ முடியும். எதிர் காலத்தில் படிப்பாளியின் மறு தோற்றம் பாட்டாளி என்கிற நிலையைக் கவனத்திற்கொண்டு, கல்வியின் கூறுகளை, முறைகளை வகுக்க வேண்டும்.

' கல்வி, கல்விக்காக ' என்கிற கொள்கை, ' காயலாங்கடை'க்குப் போய் வெகு நாளாகி விட்டது. கோடிச் செல்வர் வீட்டு மக்களுக்கும் கூட, 'கல்வியைக் கல்விக்காக'ப் பெற முயல்வதில்லை. தங்கள் கோடியைச், செம்மையாகப் பேணிக் காத்துப், பலகோடியாக்குவது எப்படி, என்று தெரிந்து கொள்ளவே படிக்கிறார்கள்.' தொழில் நிர்வாகம்,' வாணிக நிர்வாகம்' ஆகிய படிப்புகள் செல்வர்களின் உந்துதலால் பிறந்தவை. அந்தச் சீமான்கள் கூட நிர்வாக நுட்பங்களைத் தெரிந்து கொண்டு போவதோடு நிற்பதில்லை. பெருமைக்காகிலும், பட்டங்களை அடுக்கிக் கொள்ள விரும்புகிருர்கள்.

தமிழ் நாட்டின் கல்வித் துறையை மக்கள் துறையாக இயங்கவைத்துப் பல மறுமலர்ச்சித் திட்டங்களை உருவாக்கிய பெருமை திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களைச் சாரும். தமிழகத்தை அகில இந்தியாவிற்கும் முன்னோடியாக்கிய, இலவச மதிய உணவுத் திட்டம், சீருடைத் திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம்—இவை இவரது சிந்தனையிற் பிறந்தவை.

சென்னைப் பல்கலைக் கழகம் பாட திட்டங்களைச் சீரமைக்கும் பணியில் இப்போது ஈடுபட்டுள்ளது. இந்த நேரத்தில் துணைவேந்தரின் 'கல்விச் சிந்தனைகள்' நம் வாசகர்களையும் சிந்திக்க வைக்கும் என்பது திண்ணம். நான்கு கட்டுரைகளில் துணைவேந்தர் நமக்கு அவரது எண்ண அலைகளை அளிக்க இருக்கிருர்.

செல்வ அரசுகளைப் பராமரிப்பதற்காகப், செல்வர்களுக்குக் கல்வி தேவைப்பட்டால், மற்றவர்களுக்கு, வறுமையிலிருந்து விடுபட, இழிவிலிருந்து தப்பியோடக் கல்வி தேவை. மிகமிகத் தேவை ; இன்றியமையாத தேவை. கல்வியொன்றே அவர்களுக்குக் கதி. அது இல்லையேல், வாழையடி வாழையாகக் கொத்தடிமைகளாக உழலும் அவல நிலையே.

பொல்லாத சூழ்நிலைகளுக்கிடையில், கல்லாமலே நின்றிருந்தால், அம்பேத்கார் அரசியல் சட்ட பிரம்மாவாகி இருக்க முடியுமா? தாழ்த்தப்பட்டோரை உயர்த்தி, பெருநிலை ஒரு நிலைக்குக் கொண்டுவருவது கல்வியே. ஒதுக்கப்பட்டோரை அழைத்து அவையில் நிறுத்துவது கல்வியே. பின்தங்கிவிட்டோரை முன்னே வந்து வாழ்வாங்கு வாழச் செய்வது கல்வியே. 'பள்ளத்தில் வீழ்ந்திருப்போரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்ளச்செய்வது, வெள்ளத்தின் பெருக்கைப் போல், கவிப் பெருக்கும் கலைப் பெருக்கும் மேவுதலே?' பாரதி காட்டிய இவ்வழி நம் எல்லோருக்கும் பொதுவழி. சிறப்பாகத், தாழ்த்தப்பட்டோர்க்கும் பின்தங்கியவர்க்கும் கல்வி வெள்ளம் தேவை. புதுவெள்ளம் தெளிந்த நீராக ஓடாது. அதற்காக, வெள்ளமே இங்கு நெடுநாள் வாழ்ந்துவிட முடியாது. புதுவெள்ளத்தில் சிக்கிச் சீரழியாமல் பார்த்துக் கொண்டால், சில நாட்களில் நன்னீரின் நற்பயனைக்காணலாம். செல்வர்க்கே, பட்டங்களை அடுக்கிக்கொள்ளுதல் தேவைப்பட்டால், ஏழைக்கு அதுவன்றே மாமருந்து ?

வாய்க்கால் கரை வரதனும், குப்பைமேட்டுக் குப்பனும் அங்கிருந்து நீங்கி நகருக்குச் சென்று, கல்வி கற்றபின், எங்கேபோவது எப்படி பிழைப்பது என்று ஏங்க விடலாமா? ஆகாது. வேலை வாய்ப்பினைப் பெருக்க வேண்டும். திட்ட வளர்ச்சிகள், இக்கண்ணேட்டத்திலும் தீட்டப்பட வேண்டும்.

வேலை வாய்ப்புப் பெருக்கமே, பட்டதாரிகள் வாழ்வை வளப்படுத்தி விடாது. அவர்கள் கல்வியும், வேலை வாய்ப்பினுக்கு உதவியாக இருக்க வேண்டும். பொறியியல் கல்வியை எடுத்துக் கொள்வோம். அது 'கொள்கை'க்கல்வியாக நிற்கலாமா? 'அனுபவக்' கல்வியாக இருக்கவேண்டும். எந்தக் காலத்து அனுபவக் கல்வியாக இருப்பது? சென்ற நூற்ருண்டு இயந்திரங்களைப் பற்றி அறியும் கல்வியாகவும் இருக்கக் கூடாது; அந்த இயந்திரங்களைச் செய்யும், இயக்கும் அனுபவக் கல்வியாகவும் இருக்கக் கூடாது. நடைமுறையில் உள்ள இயந்திரங்களை அறியவும், செய்யவும், இயக்கவும் துணை செய்கிற மாதிரி பொறியியல் கல்வி அமைய வேண்டும். பொறியியல், அறிவியல் துறைகளில், அண்மைக் கால வளர்ச்சி, முன்னர் எப்போதும் கண்டறியாத அளவு பெருகியுள்ளது. இது பெரிதும் மேனுடுகளில் நிகழ்வது. இதற்கேற்ற வாய்ப்பு அங்கே உண்டு. ஆண்டுக்கு ஆண்டு, வளர்ந்து வரும் அறிவியல் உண்மைகளைச், செல்வமும், இயந்திர வசதிகளும் உடைய மேனுடுகளில் கூடப்பாட நூல்களிலும் பாடத் திட்டங்களிலும் இருந்து முழுமையாகக் கற்றுக் கொள்வதில்லை. நூலக நூல்களிலும், சுடச்சுட விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை வெளியிடும் இதழ்களிலும் இருந்தே, அன்றுவரை வளர்ந்துள்ள தொழில் அறிவியல் உண்மைகளைத்தெரிந்துகொள்ளுகிருர்கள்.

(—இன்னும் வரும்)

குழந்தைகள் நாளில்

இந்த
எதிர்காலத்
திருவிளக்குகளின்
வாழ்வில்
ஒளியேற்ற

அயராது பாடுபட

உறுதியேற்போம்!

உழைப்போம்!

வெற்றி காண்போம்!

கீர்த்தி நிலைத்தது!

மேத் திங்கள் இருபத்து ஏழாம் நாளன்று நம் செவிகளை அந்தச் சோகச் செய்தி தாக்கிற்று. செய்தி அன்று அது; செந்தீ! ஜனநாயகப் பாதுகாவலர் ஜவகர் காலமாகிவிட்டார். நம்பத்தான் முடியவில்லை. ஆனால் நடந்துவிட்டதே! மறைவது இயற்கை. மண்ணுவது திண்ணம். மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள். இப்படி எந்த ஆறுதல் வார்த்தைகளாலும் அணைபோட்டுத் தடுக்க முடியாத சோக வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது.

அத்தகைய பெருஞ் செல்வத்தை இழந்திருக்கிறோம். நம்பிக்கை நட்சத்திரம் மறைந்துவிட்ட ஏமாற்றத்தில் பெருமூச்சு விடுகிறோம். கடும் புயலில் சிக்கிய படகாகத் தவிக்கிறது நாடு. உலகத் தாய் கண்ணீர் வடிக்கிறாள்.

உலகம் வல்லூறுகளின் வேட்டைக் காடாக—நாய், நரிகள் விருந்துண்ணும் ரணகளமாக-மாறிவிடக் கூடாது எனப் பாடுபட்டு, அவர் பறக்கவிட்ட வெண் புறா, சிறகடித்துத் துடிதுடிக்கிறது, அவர் மறைந்த செய்தி கேட்டு! இமயம் முதல் குமரி வரையில் உள்ளோர் இதயங்களில் எல்லாம் இடம் பெற்றிருக்கும் உரிமையை உத்தமர் காந்தியாருக்குப் பிறகு பெற்றிருந்த ஒரே மனிதர்—ஒரே தலைவர்—பண்டித நேரு. அவர் இன்றில்லை. அவர் பேணி வளர்த்த ஜனநாயகக் கொள்கை இருக்கிறது. அதனை மேலும் சீர்பெறச் செயல்படுத்துவதுதான் இருப்பவர்கள் மறைந்தவருக்குச் செய்யும் மரியாதையாகும். மறைந்தவர் இந்த மண்ணுக்கு ஆற்றிய பணிகள் ஏராளம். இன்னும் ஆற்ற வேண்டிய இன்றியமையாத பணிகளும் இருக்கின்றன.

அவர் தொட்ட பணிகளைத் தொடர்ந்து வெற்றி காண்பதுதான் அவருக்கு உளமார அமைக்கும் நினைவுச் சின்னமாகும். ஜனநாயகச் சோலையில்—பகுத்தறிவு மேடை கட்டி—சமாதானக் கொடியை உலகமறிய உயர்த்திப் பிடித்தவர் மறைந்த உத்தமர். அவருக்கு நாம் காட்டுகின்ற நன்றி அந்தச் சோலை வாடாமல் மேடை சரியாமல் பாது காப்பதேயாகும். இன்னும் எத்தனையோ வேலைகளை நாடு அவரிடம் எதிர்பார்த்தது. அதற்குள் இயற்கை தன் வேலையை முடித்துக் கொண்டது. கிரீடம் நொறுங்கி விட்டது, கீர்த்தி நிலைத்து விட்டது. வாழ்க நேருவின் பெயர்!

[நேரு அவர்கள் மறைந்த பொழுது கலைஞர் கருணாநிதி அவர்கள் வானொலியில் ஆற்றிய உரை.]

சென்னை, தண்டையார்ப்பேட்டையில் நாலு மாடிக் கட்டடம்! அதிலே ஒரு திருடன் புகுந்து தப்பி விட்டான். திருடன் எங்கே இருக்கிறன் என்பது தெரியவில்லை. மொட்டை மாடியிலுள்ள நீர்த் தேக்கத் தொட்டிக்குள் புகுந்திருக்கலாமென்று ஊகம். மொட்டைமாடிக்குச் செல்ல வழியில்லை. திருடனை எப்படிப் பிடிப்பது என்றும் தெரியவில்லை.

தீயணைக்கும் படையினருக்குத் தகவல் தந்தனர், காவல் துறையினர். அங்கிருந்து விரைந்து வந்தது பெரிய சுழல் ஏணியுள்ள தீயணைக்கும் ஊர்தி.

கட்டட அருகில் ஊர்தியை நிறுத்தினர். இயந்திரத்தை இயக்கியதும் ஊர்தி மீதிருந்த ஏணி, வானை நோக்கி உயர்ந்தது. நாலாவது மாடியைத் தொடும்படி ஏணியை அமைத்துவிட்டு, அதன் மீது தீயணைக்கும் படை வீரர்கள் ஏறினர்; பாய்ந்து சென்றனர். நீர்த் தேக்கத்திற்குள் பதுங்கியிருந்த திருடனைப் பிடித்தனர்.

ஆம். இது ''தீ''யணைக்கும் படை மாத்திரமல்ல! ''தீயவை'' அணைக்கும் படையுமாகும்.

சைனு பஜாரை அடுத்த கிடங்குத் தெருவில் ஒரு விபத்து நேர்ந்



தது. சந்துகளுக்கு ... இருந்த மூன்று மாடி வ... ஒரு கிழவர் இருந்தார். ... ரால் வெளியே வர முடிய... அவர் உயிர் தப்புவது ... என்ற நிலையில் 101-க்குத் ... பேசியில் செய்தி வந்த... யணைக்கும் படையினர் வி... சென்றனர். சுழல் ஏணியை ... கினர். அதன் நுனியில் ... பை போன்ற துணியில... தொட்டிலில் வயதான அந்... தரைத் தூக்கிவைத்து ... கீழே இறக்கினர். அவர் ... தப்பினார்.

பகல் இரண்டு மணி. ... னையை அடுத்த வியாசர்பா... குடிசைகள் தீப்பற்றி எ... ஒரு குடிசையில் 80 வயது... யின் அழுகுரல் கேட்டது. ... யைச் சுற்றியோ தீ! கெ... விட்டெரியும் தீ! என்ன... வது என்று புலப்படவில்லை... சையைப் பிரித்தெறிந்து உ... புகுந்து அந்த மூதாட்டி... காப்பாற்றினர் தீயணை... படையினர்.

மனித உயிர் மட்டும் ... இவர்களுக்கு முக்கியம். அ... பிராணிகளிடமும் பாசமு... மும் உண்டு!

சமீபத்தில் ஒரு நிகழ்ச்சி.

நுங்கம்பாக்கத்தில் பி... அன்பரின்வீடு: பூனைக்குட்டி... பிரியமாக வளர்த்து வந்... அவரது அருமை மிகு பூனை ... நாள் கிணற்றில் விழுந்து ... தளித்தது. அன்பரின் உள்ள... அதுபோல. வாளியைக் க... இறக்கிப் பார்த்தார். பயனி... 101-க்கு தொலைபேசியில் தக... தந்தார். ஆபத்துக்கு உத... தீயணைக்கும் படை வீரர்கள் ... லோடு வந்தனர். அந்தச் சின்... சிறு பிராணியைக் காப்பாற்றி... யவரிடம் ஒப்படைத்தனர். ... ருக்கு எல்லையில்லா மகிழ்... பூனையும் ''மியாவ்'' "மியா... என்று தனது இன்னிசை ... முழங்கிற்று. பணி முடிந்... நெருப்பணைக்கும் படையின... பயணம் தொடர்ந்தது.

இதுபோல் பாதாளச் சாக்க... யில் விழுந்த தொழிலாளி... நீரில் மூழ்கியோர், பள்ளங்க... தவறி விழுந்த பசுக்கள்—இ... அவர்கள் காப்பாற்றியுள்ள ... களின் எண்ணிக்கை எண்... அடங்காது.



விபத்தில் சிக்கியவரை சாக்குப் பை போன்ற தொட்டிலில் வைத்து இறக்குகிறார்கள்.

பலர் நாளிதழ்களில் படித்திருப்பர். சின்னாட்களுக்கு முன் அம்பத்தூர், ஆவடி பகுதியில் நச்சு வாயுள்ள கிணற்றில் விழுந்து உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தவரை தீயணைக்கும் படையினர் காப்பாற்றிய செய்தி அவைகளில் இடம் பெற்றிருந்தன. முகமூடியணிந்து, மூச்சுவிடப் பிராண வாயுக் குழாய்களை இணைத்துக் கிணற்றில் இறங்கி அவரைக்காப்பாற்றினர், இந்தக் குழுவினர்.

அயராது உழைக்கும் இந்த ஊழியர்களை நாடிவரும் மற்றொரு அவசர உதவி, நோயாளிகள், கர்ப்பிணிகள் ஆகியோரைஅவசரமாக மருத்துவ மனையில் கொண்டு சேர்க்கும் அரும்பணி. இரவு 12 மணியாக இருக்கும். கர்ப்பிணிக்கு பிரசவ வேதனை ஏற்படும். உடனடியாக ரிக்ஷாவோ, டாக்சியோ கிடைக்காது. அந்த இரவில் என்ன செய்வார் கணவர்? விரைந்து சென்று தொலைபேசியில் 101 எண்ணைச் சுழற்றினால் தீயணைக்கும் அலுவலகத்தில் மணி எதிரொலிக்கிறது. அவருடைய கோரிக்கைக்கு இணங்கி இல்லம் நோக்கிநோயாளி வண்டி (Ambulance) விரைந்து வருகிறது.

இதேபோல் கவலைக்கிடமான நிலையில் நோய்வாய்ப்பட்டிருப்போரை அவசரமாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல இரவு பகல் எந்நேரமும் இந்த வண்டி தயாராக இருக்கிறது. இந்த ஆண்டில் இதுவரை இம்மாதிரி உதவி நாடி வந்தோரின் எண்ணிக்கை 2,756. விபத்துக்களுக்காக வந்த கோரிக்கை 443. ஆண்டு முழுவதற்கும் சுமார் 4,000 கோரிக்கைகள் இவ்வகைகளில் வருவதுண்டு, சென்னையில் மட்டும்!

விபத்துக்களில் சிக்குண்டு காயமடைந்தோரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல இவர்கள் கட்டணம் வசூலிப்பதில்லை. பிற நோயாளிகளிடம் குறைந்த அளவு கட்டணம் வசூலிக்கிறார்கள்.

ஆண்டு ஒன்றுக்கு இவர்கள் காப்பாற்றும் மனிதர்களின் எண்ணிக்கை சுமார் 300 இருக்கும். விலங்குகள் 50 இருக்கும். விபத்து பற்றிக் காலதாமதமாகித் தகவல் தருவதால் இவர்கள் செல்லு முன் தீப்பற்றி உயிர் நீப்போர் பலருண்டு. உடனடித் தகவல் தரப்பட்டால் காப்பாற்றுவது சற்று எளிது.

இவ்வாறு இரவும் பகலும் இருபத்து நான்கு மணி நேரமும் கடிகாரத்தில் சுற்றிக்கொண்டே இருக்கும் வினாடி முள்போலத், தமிழ் நாட்டில் தீயணைப்புப் படையைச் சேர்ந்த நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் துறையின் முதுகெலும்பு போன்றவர் தான் ''தீயணைப்போர்''('Fire man')

தீயணைப்போரின் முதன்மையான கடமை, தீவிபத்திலிருந்து உயிர்களை மீட்டுக் காப்பாற்றுதல், பிறகு உடைமைகளைக் காப்பாற்றுதல், கடைசியாக மனிதாபிமானத்துடன் பொதுமக்களின் பீதியைப் போக்கும் அளவுக்குத் தங்களாலான உதவி

சுழல்ஏணி இயந்திரம் புறப்படத் தயாராகிறது.



புரிதல், இவைகள்தாம். இத்தகைய கடமைகளைச் சரிவரச் செயலாற்றத் தீயணைப்போருக்குக் கடும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் தமது பணியின் போது மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருக்கவும், தீவிபத்து நேரும் இடங்களில் மனம் கலங்காது திறமையுடன் பணியாற்றவும் இந்தப் பயிற்சி உதவுகிறது. கட்டுப்பாட்டுடன் பணியாற்ற முடியாத இளம் வாலிபர்கள் தீயணைப்புத் துறைக்குத் தகுதியற்றவர்களாவர்! கட்டுப்பாட்டுடன் பெறும்பயிற்சியானது தீயணைப்போர் பலமணி நேரங்கள் தொடர்ந்து தீவிபத்து நேர்ந்த இடங்களில் பணியாற்றப் போதிய உடல் வலிவும் தைரியமும் தருகிறது.

பகைவர்களிடமிருந்து நம் நாட்டைக் காத்திட அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் போர் வீரரைப் போன்றவரான இந்தத் தீயணைப்போர் ''தீ'' யெனும் பகைவனிடமிருந்து பொதுமக்களின் உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு எந்த நேரத்திலும் தன்னைத் தயாராக்கிக் கொண்டிருக்கிறார். பகைவரின் படையெடுப்பு எந்த நிமிடத்திலும் ஏற்படலாமென்று ஒவ்வொரு நிமிடமும் மிகுந்த கண்காணிப்புடன் எல்லையைக் காத்து வரும் போர் வீரரைப்போல் தீவிபத்து எந்த நேரத்திலும், ஏற்படலாமென எதிர் பார்க்கும் தீயணைப்போர், அதைச் சமாளிக்கத் தம்மைத் தயாராக்கிக் கொண்டிருக்கும்போது அவரது மனநிலை எப்படியிருக்குமென வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஆகவே, தீயணைப்புக்காகத் தம்மையும் தாம் கையாளும் தீயணைப்புச் சாதனங்களையும் தயார் நிலையில் வைத்துக்கொள்ளத் தீயணைப்போர் எவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது, என்பதைத் தீயணைப்பு நிலையத்துக்கு நேரில் சென்று பார்த்தால் தான் நன்கு விளங்கும்.

எத்திறப்பட்ட விபத்தானாலும் காலதாமதமின்றித் துரிதமாகத் தீயணைப்பு நிலையத்துக்குத்தொலைபேசி மூலம் தகவல் கொடுப்பது முதன்மையான ஒத்துழைப்பாகும். விபத்து நேர்ந்த இடத்துக்குத் தீயணைப்புத் துறை வண்டிகள் இடையூறு ஏதுமின்றி விரைவாக வரும் அளவுக்குச் சாலையில் உள்ள தடங்கல்களை அகற்றுவதும் பெரிய ஒத்துழைப்பாகும். கடைசியாக இத்துறையினர் தங்கள் பணியில் துரிதமாகச் செயல்படப் பொது மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

ஓய்வு நேரத்தைக் கூட வீணாக்காமல், இவர்கள் தங்கள் மனத்தை அலைய விடாமல், பாய் முடைதல், தேனீ வளர்த்தல், காய்கறித் தோட்டம் அமைத்தல், சோளம் கரும்பு போன்றவைகளைப் பயிரிடுதல், கோழிப்பண்ணை அமைத்தல் போன்ற குடிசைத் தொழில்களை விருத்தி செய்து நாட்டுக்கு மகத்தான சேவை செய்கிறார்கள்;



நீந்தக் குழாய்கள் மூலம் ஒரு மைல் தொலைவிற்குத் தண்ணீர் கொண்டு வரலாம்.

தமிழ் நாட்டில் இன்றைய நிலையில் மொத்தம் 58 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. சென்னை நகரில் மட்டும் 12 தீயணைப்பு நிலையங்களும், இத்துறையில் பணியாற்றுபவர் பயிற்சி பெற ஒரு தீயணைப்புப் பயிற்சிக் கூடமும், தீயணைப்பு வண்டிகளில் பழுதுகள் ஏற்பட்டால் அவைகளைத் துரிதமாகச் செப்பனிட ஒரு தீயணைப்புத் தொழிற் கூடமும் இருக்கின்றன. தமிழ் நாட்டில் இன்னும் பல இடங்களில் தீயணைப்பு நிலையங்களை நிறுவிட நகராண்மை, பஞ்சாயத்துக் கழகங்களிலிருந்து எண்ணற்ற விண்ணப்பங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அரசினர் இலாகாவினரோடு கலந்தாலோசித்து, தமிழ் நாட்டில் எந்தெந்த இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அவசியம் நிறுவ வேண்டும், அவைகளில் எந்தெந்த நிலையங்கள் முன்னதாக நிறுவப்பட வேண்டுமென்று, நகரங்களில் ஏற்படவிருக்கும் தீ விபத்து ஆபத்துக்களின்படி வரிசைப்படுத்தி ஒரு பட்டியல் தயாரித்திருக்கிறார்கள். அந்த வரிசைக்கிரமப்படி வருடத்துக்கு இரண்டு மூன்று இடங்களில் தீயணைப்பு நிலையங்களை நிறுவிக்கொண்டு வருகிறார்கள். தமிழக அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து ஆண்டுதோறும் இரண்டு அல்லது மூன்று தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இன்னும் 10 ஆண்டுகளுக்குள்ளாகத் தமிழ் நாட்டில் அனேக தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுத் தமிழ் நாட்டுக் கிராமப்புறங்களுக்குப் போதிய தீப்பாதுகாப்பு ஏற்படுமென எதிர்நோக்குவோமாக!

குடிசைக்குக் கலசமா?

அ. மறைமலையான்

முதல் மணி அடித்து விட்டது.

இன்னும் சில விநாடிகளில் வண்டி வந்து விடும். இதில் எப்படியும் ஏறியாக வேண்டும்.

கண்ணப்பரின் நெஞ்சுக்கூடு தடதடவென்று ஆடிற்று; அதிர்ந்தது.

இந்த வண்டியையும் தவற விட்டு விட்டால், பிறகு மறு நாள் காலை ஏழு மணிக்குத்தான் வண்டி. அதுவரை, கார் விபத்தில் சிக்கி, மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, சாவுப் பந்தலின் திட்டாணி மேடையில் ஏறி நிற்கும் அவருடைய இதயத் தாமரை—இன்னுயிர் மனைவி—இமைகளை மூடாமல் பிழைத்திருப்பாள் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?

கண்ணப்பரின் கண்கள் குளமாயின; உள்ளம் குலுங்கி நொறுங்கியது; நினைவுகள் அலைகளாகச் சீறிப் பாய்ந்து, சுழல்களாக வளைத்து மடித்து எங்கோ இழுத்தன; அழுத்தின.

ஐம்பது வயதைத் தாண்டி விட்டோம் என்கிற அநுபவ முதிர்ச்சி—அறிவுச் செறிவு—எல்லாமே, கட்டு அவிழ்ந்த வண்டிச் சக்கரமாக அவரை ஆக்கிவிட்டுக் கழன்று விழுந்தன. ஐந்து வயதுச் சிறுவனைப் போல அவர் தேம்பித் தேம்பி அழுதார்.

அவர் இப்போது அழுவது மனைவியைப் பறிகொடுக்கப் போகிறோமே என்பதற்காக மட்டுமா? அல்ல! அமைதி வழியும் அவளது மலர் முகத்தைக் காணும்பொருட்டு இந்த வண்டியில் ஏறப் பயணச் சீட்டு வாங்க எட்டணவுக்குக் கூட வழியில்லாமல் போனோமே என்கிற தம் இழி நிலைக்கும் சேர்த்துத் தான் அவர் அழுகிறார்.

இவ்வளவுக்கும் வயிறு ஒட்டி, கன்னம் வற்றி, காது அடைத்து, கண் பஞ்சடைந்து, பசி நெருப்பிலே எரிந்து கருகும் பரம ஏழை அல்லர்; பாட்டாளி இனத்தவர் அல்லர்; பல பாட்டாளிகளுடைய பசியை ஆற்றுகின்ற பணக்காரர்தாம் அவர். அவரது மேனியிலே எப்போதும் பட்டுத் துணிகளே பளபளக்கும்; கழுத்திலே தங்கச் சங்கிலியும், கை விரலில் பச்சைக்கல் வைர மோதிரமும் மின்னித் தெறிக்கும். பணக்காரச் செழுமையின் மொத்த வடிவமாக—பகட்டுக் கவர்ச்சியின் திரட்டுப் பாலாகத் தான் அவர் வெளியே வருவார்.

ஆனால் இன்றைக்கோ?

மனைவி மங்களம் கார் விபத்தில் சிக்கி ஒரு சிறு நகரத்தின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறாள் என்று தந்தி வந்தது தான் தாமதம். போதை மருந்து தரப்படாமல் அறுவைச் சிகிச்சைக்கு ஆளானவனைப்போல அவரது கால்கள் தரையில் பாவவில்லை; மூளையும் நிதானமாக வேலை செய்யவில்லை. வயற்காட்டிற்குப்போய் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த தம் பண்ணை ஆளை அழைத்து வந்து, செய்தி சொல்லிவிட்டுக் கிளம்புவோம் என்கிற பொறுமை கூட அவருக்கு இல்லை. வேலைக்காரியிடம் மட்டும் 'வீட்டைப் பார்த்துக் கொள்' என்று கூறிவிட்டுப் பரபரப்புடன் கிளம்பிவிட்டார் கையில் ஒரு தோல் பையுடன்.

அந்தச் சமயம் பார்த்துச், சாலையில் ஒரு சைக்கிள் வந்தது; அதன் பின்னிருக்கையில் தொற்றிக் கொண்டார் அவர். தம்முடைய சிற்றூரிலிருந்து இரண்டு மைல் தொலைவுக்கு இப்பால் உள்ள இந்தப் புகை வண்டி நிலையத்திற்கு வந்து பார்த்தால்.. அதில் பணம் இல்லை. 'செக்' புத்தகம் மட்டும் அவரைப் பார்த்துச் சிரிக்கிறது.

அதை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்?

பகல் நேரமாக இருந்தாலும் அந்த ஊரிலேயே தமக்குப் பழக்கமான சிலரிடம் போய்ப் பணத்திற்கு வழி செய்து விடலாம்.

இப்போதோ இரவு பத்து மணிக்குமேல் ஆகிவிட்டதே!

அதோ, வண்டியும் வரப் போகிறதே!

இதை விட்டால், பிறகு தம் மனைவியை உயிரோடு அவரால் பார்க்க முடியுமா? ஒரே ஒரு வார்த்தையாவது அவளிடமிருந்து கேட்க முடியுமா?

புகைவண்டி நிலையத்தில் வந்து நிற்கும் அவர் யாரைப் போய்க் கடன் கேட்க முடியும்? யாரும் அறிமுகம் ஆனவர்களாகவும் அவர் கண்களில் தென்படவில்லையே!

அவருக்குள்ள ஒரே வழி, பயணச் சீட்டு வாங்காமலே வண்டியில் ஏறுவதுதான். அப்படி ஏறிய பின்னர் டிக்கட் பரிசோதகரிடம் எப்படித் தப்புவது? அவர் எங்காவது இடையிலேயே இறக்கி விட்டு விட்டால்?

மேலும், தம் வாழ்நாளிலேயே அவர் சீட்டு வாங்காமல் பயணம் செய்ததே இல்லை. அவர் பணக்காரர்தாம் என்றாலும் பாதை மாறி நடந்தவர் அல்லர்; அரசாங்கத்தை ஏமாற்றிச் சட்டத்தின், கழுத்தை நெரித்துச் சவமாக்கி அதன் கல்லறைமீது 'சிபாரிசுகள்'

என்னும் செங்கற்களை அடுக்கித் தம் செல்வாக்கு மாளிகையை எழுப்பிக்கொண்டவரும் அல்லர். 'வானம் பொழிகிறது; பூமி விளைகிறது; வயலில் உழுகிறவனின் வயிற்றிலும் அடிக்க மாட்டேன்'—என்கிற நேரான வழியில் சீராக வளர்ந்தவரே அவர்.

தமக்கு இப்படி ஒரு தவிப்பு—தத்தளிப்பு—சோதனை—ஏற்படும் என்று அவர் நினைக்கவே இல்லை.

அவருக்குச் சற்று தூரத்தில், அவரைப் போலவே அந்த வண்டியில் ஏறுவதற்காகச் சிலர் நின்றுகொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் போய்,

"ஒரு எட்டணா இருந்தால் கொடுங்கள்"—என்று எப்படிக் கேட்பது?

அவருடைய வளமான உடம்பையும் உடையையும் பார்த்துவிட்டு அவர்கள் இளக்காரமாகச் சிரித்துவிட்டால்......?

"போ. போ."—என்று கேவலமான முறையில் கையை அசைத்து விட்டால்......?

"என்னய்யா, பார்த்தால் பெரிய பணக்காரர் மாதிரி இருக்கிறீர்; நீரே கையை நீட்டிப் பிச்சை கேட்கிறீரே! உமக்கு வெட்கமாக இல்லை?"

—என்று முகத்தில் அறைந்தாற்போல் கேட்டுவிட்டால்...?

அதைவிட வேறு என்ன அவமானம் இருக்கிறது? உயிரையே அவர் விட்டுவிடலாமே!

ஆனால் உயிருக்கு மன்றாடி, வாழ்வின் விளிம்பிலே நூல் இழையில் தொற்றிக்கொண்டு, 'இறப்பு'—என்னும் படுபாதாளத்தில் விழப்போவது இந்தக் கணமோ அடுத்த கணமோ என்கிற நிலையில், தன் கணவரின் முகத்தைக் கடைசியாக ஒரு முறையாவது காணமாட்டோமா என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருப்பாளே அவருடைய அந்த அருமையான மனைவி.

"அய்யோ! மங்களம்! நான் பாவியாப் போயிட்டேண்டி!"—என்று வாய்விட்டே கதறிவிட்டார் அவர்.

முகத்தைத் துண்டினால் மூடிக்கொண்டு அந்த சிமெண்ட் பெஞ்சின் ஓரத்தில் முடங்கியவராகக் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

• • •

இரண்டாவது மணியும் அடித்துவிட்டது.

"இரவுப் பகலவன்" என்று சொல்லும் அளவுக்குப் பெரிய வெளிச்சத்துடன் வெகு தூரத்திற்கு அப்பால் வரும் வண்டியின் முன் விளக்கும் தெரியலாயிற்று.

கண நேரத்தில்..........

சரக்....சரக்.... என்னும் புடவை ஒலி;

மல்லிகை மணம்; 'சில்'லென்னும் வீச்சு.

"அய்யா, பெரியவரே! வண்டி வந்து விட்டது; எழுந்திருங்கள்"

—வளையல் குலுங்கும் இளங்கரம் தம் தோளைத் தொட்டுச் சற்றே உலுக்குவதை உணர்ந்தார் கண்ணப்பர்.

நம்பிக்கை அனைத்தும் நைந்துபோன தளர்ச்சியுடன் முகத்தில் வழிந்த கண்ணீரைத் துண்டினால் துடைத்தவாறே, திரும்பி, நேராக அமர்ந்து அந்த அழகுப் பதுமையை ஏற இறங்கப் பார்த்தார்.

"வண்டி வந்து என்னம்மா ஆகப் போகுது? ஆயிரக் கணக்கிலே சொத்து இருந்தும் ஒரு அரை ரூபாக் காசுக்கு வக்கு இல்லாமே இங்கே குந்திக் கிடக்கிறேனே! சாகப் போகிற என் தங்கத்தைக் கடைசியாப் பார்க்கிற புண்ணியம் கூடச் செய்யாத பாவி ஆயிட்டேம்மா, பாவி ஆயிட்டேன்!"

'அடப் பாவமே! அதனாலேதான், இத்தனை நாழியா இங்கே அழுதுக்கிட்டே இருந்தீங்களா? நான் பக்கத்திலேதான் நிற்கிறேன். என்கிட்டே ஒரு வார்த்தை கேட்கக் கூடாதா?"

"முன் பின் தெரியாத உன் கிட்டே எந்தத் தைரியத்தோடம்மா நான் கேட்பேன்? என்னையும் ஒரு பிச்சைக்காரனா நீ நினைச்சுட்டா ......?"

"சரி சரி. நீங்க எந்த ஊருக்குப் போகணும்?"

ஊரின் பெயரைச் சொன்னார் கண்ணப்பர்.

சிட்டாய்ப் பறந்தாள் அந்தப் பாவை.

அவள் பயணச் சீட்டை வாங்கி வருவதற்கும் ரயில்வண்டி நிலையத்தில் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

இருவரும் ஏறிக்கொண்டார்கள்.

அது இரவு வண்டியானதால் கூட்டமே இல்லை. காலியாகக் கிடந்த இருக்கைகளில் எதிர் எதிராக அமர்ந்து கொண்டனர்.

வண்டி சீறிக்கொண்டு கிளம்பிற்று.

"உன் பேர் என்னம்மா?"

—என்று கேட்டார் கண்ணப்பர்.

"மலர்விழி"—என்றாள் அவள்.

"நல்ல தமிழ்ப்பேரா இருக்கே! உன் அப்பாவுக்கு நல்ல தமிழ்ப்பற்றுப் போல இருக்கு!"

"வெறும் சாதாரணப் பற்று இல்லே; வெறியே உண்டு. ஆங்கில மொழியாதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய அயர்லாந்துக்காரர்களின் உணர்ச்சி, நம் நாட்டு மக்களுக்கு இன்னும் முழுசா வரலையே என்று அடிக்கடி புலம்புவார். ஆனா.........."

"என்னம்மா 'ஆனா'....?"

"இப்ப உள்ள மறுமலர்ச்சி நிலைமைகளெல்லாம் அவர் காணக் கொடுத்து வைக்கலே! 1948-ல் நடந்த மொழிப் போராட்டத்திலே அவர் மண்டையில் சரியான அடி. அதனாலேயே பிறகு இறந்து விட்டார்."

—மலர்விழியின் கண்கள் பனித்தன.

அவளுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் கண்ணப்பரும் திக்கித் திணறினார்.

வண்டியோ பந்தயக் குதிரையாகப் பறந்தவண்ணம் இருந்தது.

வெளியே ஒரே கும்மிருட்டு, ஏழையின் வாழ்வைப் போல.

• • •

சில மணித்துளிகள் ஆவியாயின.

ஏதோ ஒரு நினைவின் மின்னல் வெட்டு!

கண்ணப்பர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"அம்மா, மலர்விழி! நீ மட்டும் வரலேன்னா என் கதி என்ன ஆகியிருக்கும் தெரியுமா? கடைசி நேரத்திலே நான் கட்டினவளைப் பார்க்க முடியாமல் போச்சேங்கிற ஏக்கத்திலே நான் மாரடைப்பு வந்து செத்தாலும் செத்துப் போயிருப்பேன். நீ செய்திருக்கிற இந்த உதவியை நான் மறக்கவே முடியாது. அதுக்குக் கைம்மாறு நானும் உனக்கு ஏதாவது செய்ய வேணாமா?"

—என்று சொல்லியவாறே தம் விரலில் மின்னிக்கொண்டிருந்த பச்சைக்கல் மோதிரத்தைக் கழற்றினார்.

"ஒன்னும் வித்தியாசமா நினைக்காதே! தட்டாமல் இதை நீ ஏற்றுக் கொள்ளணும்."

—என்றவர், சட்டென்று மலர்விழியின் கரத்தைப் பற்றி உள்ளங்கையில் மோதிரத்தை வைத்துத் திணித்தார்.

மலர்விழிக்குத் திகைப்பின் அதிர்ச்சி. என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தாள்.

கண நேரந்தான்..........

"மோதிரம் சாதாரணமானது என்று யாருக்கும் பரிசாகக் கொடுத்திடாதே! அசல் வைரம்; இன்னைக்கு நிலவரத்திலே இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாது."

—கண்ணப்பரின் இந்த வார்த்தைகள் அவளது காதுமடல்களில் அலை மோதியதும்..

மலர்விழியின் சிவந்த இதழ்களில் ஒரு வரண்ட முறுவல் இழையோடியது.

"நான் இன்று செலவழித்த எட்டணாவுக்கு இரண்டாயிரம் மதிப்புள்ள இந்த மோதிரம் ஈடாகுமா?"

—சிரித்தவாறே கேட்டாள் அவள்.

கண்ணப்பருக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

''பார்க்கப் போனுல், என்னுடைய எட்டணுவுக்காக உங்களிடம் இந்த மோதிரத்தை வாங்கிக் கொள்வதும் ஒரு வகையில் ' பிச்சை ' தானே?''

'' அய்யய்யோ ! அப்படியெல்லாம் நினைக்காதேம்மா. தெய்வம் போல வந்து எனக்கு நீ உதவி செய்தே. உனக்கு நான் வேறே எப்படிக் கைம்மாறு செய்ய முடியும்? ''

'' உங்களைப் பொறுத்தவரை இது சாதாரணக் கைம்மாரு இருக்கலாம். ஆனுல் என்னைப் பொறுத்தவரை இது தகாத பேராசையின் சின்னம். மேலும் இந்த விலை உயர்ந்த மோதிரத்தை என் விரலிலே மாட்டிக்கொண்டு நான் வீட்டுக்குப் போனுல், இது நேரான வழியில்தான் வந்தது என்று யாராவது நம்புவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா ? ஐம்பது வயதைத் தாண்டிய பெரியவர்தான் எனக்கு, நன்றிக் கடனுகத் தந்தார் என்று நான் சத்தியம் செய்தாலும், என் தாயே கூட என்னைச் சந்தேகப் படமாட்டாளா ? கோபுரத்திற்குக் கலசம் வைக்கலாம் ; ஆனுல் குடிசைக்குக் கலசம் வைக்கலாமா ? அதனுல் கலசத்துக்குள்ள மதிப்பே போய் விடாதா ? நானே வெறுங் குடிசை ; இப்படி வைர மோதிரத்தைப் போட்டுக் கொள்வதற்கெல்லாம் ஆசைப்படலாமா ? ....இதோ நான் இறங்க வேண்டிய ஊரும் வந்து விட்டது. நான் வரட்டுமா ? ''

ஒரு குலுங்குக் குலுங்கி வண்டி நின்றது.

தன் கையிலிருந்த பச்சைக்கல் மோதிரத்தைக் கண்ணப்பரின் கையில் திணித்துவிட்டு மலர்விழி இறங்கி விட்டாள்.

உயர்திரு 'தமிழரசு' நிர்வாக அதிகாரி அவர்களுக்கும் அதைச் சேர்ந்த அனைவருக்கும் K. N. கணேசன் வணக்கமாக எழுதிய கடிதம். நலம் ; நலமறிய அவா. தாங்கள் 16—10—70 'தமிழரசு இதழில்' என்னைப்பற்றியும், என் குடும்பத்தைப்பற்றியும் பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் செய்த விவசாயத்தையும், முன்னுக்குவந்த காரணத்தையும் காட்டிப் பாராட்டி இருக்கிறீர்கள். என் விவசாயத்திற்கு வழிகாட்டிய முன்னுள் முதலமைச்சர் அண்ணு அவர்களையும், அதிகாரிகளையும் கொண்டுதான் இந்த விவசாயத்தில் வெற்றி பெற்றதை நான் மறக்க முடியாது. தவிர இந்நாட்டிற்கு விவசாயமே முக்கியம் என்று அண்ணு அவர்களே எடுத்துக் காட்டினுர்கள் என்பதை மறக்க முடியாது. அதே போல் இன்று முதல் அமைச்சர் பொறுப்பில் இருக்கும் அண்ணன் கருணுநிதி அவர்களுக்கு இதை ஒரு வேண்டுகோளாகக் கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்திற்கு முதல் இடம் கொடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
அன்பன்
K. N. கணேசன்,
20—10—70.

களம்பூர்,
போளூர் வட்டம் (வ.ஆ.)

இருளில் அவள் நடந்து சென்றது கறுத்த அட்டைப் புழுக்களுக்கு நடுவே, ஒரு பட்டுப்புழு ஊர்வதுபோலத் தோன்றியது.

கண்ணப்பர், அவள் சென்ற திக்கையே பார்த்த வண்ணம் இருந்தார்.

அவர் விழிகளிலிருந்து நீர் வழிந்தது.

' மற்றவர்களின் இரத்தத்தை உறிஞ்சுவதில் இன்பங் காணும் அட்டைகள் நிறைந்த இந்த உலகத்தில், கைம்மாறு விரும்பாத இப்படி ஒரு மனிதப் பிறவியா.....?''

கண்ணப்பரின் நினைவோட்டம் போலவே, அந்தப் புகைவண்டியும், மிக விரைவாக ஓடத் தொடங்கியது.

பிச்சைக்காரர்களுக்குத் தொழில் கற்றுக் கொடுக்கும் மறு வாழ்வு இல்லங்கள் அமைக்கும் திட்டத்தினை முதல்வர் கலைஞர் கருணுநிதி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இதற்காக ஆறு ஆதரவு இல்லங்கள் தமிழகத்தில் அமைக்கப்படும். (1) செங்கல்பட்டுக்கும் காஞ்சிக்கும் இடையே, (2) சென்னை நகருக்கும் வேலூருக்கும் இடையே, (3) கள்ளக்குரிச்சிக்கும் திருக்கோவிலூருக்கும் இடையே, (4) தர்மபுரிக்கும் கிருஷ்ணகிரிக்கும் இடையே, (5) தஞ்சைக்கும் புதுக்கோட்டைக்கும் இடையே, (6) மதுரைக்கும் சிவகாசிக்கும் இடையே ஆக ஆறு இடங்களில் இந்த இல்லங்கள் அமைக்கப்படும்.

முதல் கட்டமாகத் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் இந்த இல்லங்களில் அனுமதிக்கப்படுவர். தமிழகம் முழுவதும் சுமார் 5,000 தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் இருப்பரெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களுக்குச் சிகிச்சையளிப்பது, பேணிப் பாதுகாப்பது, தொழில் புரியச் செய்வது ஆகிய பணிகளை இந்த ஆதரவு இல்லங்கள் மேற்கொள்ளும். இதற்காக 1970-71-ஆம் ஆண்டில் 40 லட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

படிப்படியாக, வேலை செய்ய இயலாத அங்கவீனப் பிச்சைக்காரர்கள், ஊனமின்றிப் பிச்சை எடுப்பவர்கள் ஆகியோரும் இந்த இல்லங்களில் சேர்க்கப்படுவர்.

இதற்காகப் ''பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு நிதி '' ஒன்று ஏற்படுத்தப்படும். இந்து, கிறித்தவர், முஸ்லிம்களின் கோவில்கள், திரைப்பட அரங்குகள், உள்ளாட்சி நிறுவனங்கள், அறநிலையங்கள், சமூக சேவை நிலையங்களிடமிருந்து நிதி வசூலிக்கப்படும். இதன் மூலம் 30 லட்ச ரூபாய் வசூலிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் தமிழகத்தை நோய் போல் வாட்டிடும் பிச்சைக்காரர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்.

கர்ப்பம் தரிப்பதைத் தடுப்பதற்காகக் கருப்பையில் '' லூப் '' போன்ற ஒரு பொருளை அமைப்பது புதிதானதல்ல.

அரபு நாடுகளில் நெடுந் தூரப் பயணத்தின்போது, ஒட்டகம் கர்ப்பம் தரித்து விடாமலிருப்பதற்காக அதன் கர்ப்பப் பையில் கூழாங்கல்லை வைக்கும் பழக்கம் பல நூற்றுண்டுகளாகப் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. எனவே, இவ்வகைக் கருத் தடைகளுக்கு இது தான் முன்னேடி எனலாம்.

1880-ல் ஐரோப்பிய டாக்டர்கள் காளான் வடிவில் செய்யப்பட்ட ஒரு வகை உலோகத்தைக் கருப்பையில் வைத்துக் கருத்தடைக்குப் பயன்படுத்தலாமென்று கண்டுபிடித்தார்கள். ஆனுல், அவை பயன் படுத்தப்படவில்லை.

நாற்பது ஆண்டுகளுக்குப் பின் 1920-ல் இராஃபென்பெர்க் என்ற ஜெர்மன் டாக்டர், பட்டு நூல் சுற்றப்பட்ட ஒரு வகை வளையத்தினைக் கருத்தடைக்குப் பயன் படுத்தலாமெனக் கண்டுபிடித்தார். ஆயினும் இது பிரபலமாகவில்லை.

1959-ல் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் லீப்ஸ் என்பவரும் டாக்டர் மார்க்குலீஸ் என்பவரும் பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தி தற்போதைய '' லூப் '' பைக் கண்டு பிடித்தார்கள். இன்றைய '' லூப் '' பிற்கு இவர்களே முன்னேடிகள்.

'' லூப் '' என்று வழக்காற்றில் சொன்னுலும் இவற்றிற்குப் பொதுவான பெயர் I. U. C. D. (கருப்பையில் பொருத்தப்படும் கருத்தடைக் கருவி என்பது பொருள்). லிப்ஸ் கண்டுபிடித்ததுதான் லூப்.

ஆனுல், மற்றவையும் வழக்காற்றில் இதே பெயர் பெற்றன. இதில் வட்ட வடிவம், ஆங்கில எழுத்தான ''எஸ்'' போன்றது, புழுவைப் போல் நெளிந்தது இப்படிப் பத்து வகையுள்ளன:

படாதது. நீருடன் சிறிது தொலைவு நடந்ததும் கலம் விரிசல் கண்டு, உள்ளிருந்த நீரெல்லாம் கண நேரத்தில் வழிந்தோடியது; அவள் முகத்தையும், உடையையும் நனைத்தது. பச்சை மண் கலம், பெய்த அப்போது நீரைக் கொள்ளுமே யாயினும், விரைவில் கரைந்து, நீரை வெளியாக்கும் ; கலமும் அழியும். பசுமண் கலத்திலுள்ள நீரானது மொள்ளும்போது தெளிவாக இருப்பினும், சிறிது போதில் கலங்கலாகும். முறையற்ற முறையில் சேர்த்தாருடைய பொருளை பசுமண் கலத்திலுள்ள நீருக்கு ஒப்பாக்கினுர் திருவள்ளுவர். அக்கலத்தில் உள்ள நீர் கலங்கலாவதோடு கலத்தையும் உடைக்கும். அதே போன்று ஈவிரக்கமின்றித் தவருன வழியில் சேர்த்தபொருள் தானும் பயன்படாது தன்னைச் சேர்ந்தவனையும் அழிக்கும்.

> "சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
> கலத்துள் நீர்பெய்திரீஇ யற்று."

''வஞ்சனை வழியில் பொருளைச் சேர்த்துக் காப்பாற்றுதல் பச்சை மண் கலத்துள் நீரைவிட்டு அதைக் காப்பாற்றி வைத்தாற்போன்றது''— வள்ளுவரின் இவ்வாய்மொழியை உணர்ந்த பின்பும் வஞ்சனையால் பொருள்தேட எவர்க்கும் எண்ணம் தோன்றுமோ?

குளத்தில் ஒருவன் குளித்தான். தன் மேலுள்ள அழுக்கைப் பன்முறையும் தேய்த்து நீக்கினுன். புறத்தூய்மை இன்றியமையாது வேண்டிய ஒன்றுதான். ஆனுல் அவன் அகம் தூய்மையாக இருக்கிறதா? புற உடம்பை நீரைக்கொண்டு தூய்மையாக்கிக்கொள்ளலாம். மனம் தூய்மையாக இருக்க என்ன வழி? வாய்மை மேற்கொண்டால் அகம் தூய்மையாகிவிடும்.

> "புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
> வாய்மையால் காணப் படும்."

உடலைத் தூய்மை செய்த நீரோ தன் பணியை முடித்துக்கொண்டு நகர்ந்து விடுகின்றது. உள்ளத்தைத் தூய்மை செய்யும் நீரோ அதனை விட்டு அகலாமல் என்றும் நிலைத்துக் காணப்படுகிறது. அதனுல்தான் '' வாய்மையாற் காணப் படும் '' என்று எடுத்தியம்புகிருர் புலவர்.

அகத்தே கறுத்துப், புறத்தே வெளுத்திருந்த உலகரனைவரையும் மனக்கண் முன் நிறுத்தி வள்ளுவர் எண்ணிப் பார்த்தார். காவிரியில், வையையில், இன்னும் உள்ள புண்ணிய நீர் நதிகளில் ஆடி, மூழ்கித் தம் உடலை மட்டும் தூய்மை செய்து, உள்ளத்தே அத்தூய்மை இல்லாதிருப்பின் யாது பயன் ?

> "மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
> மறைந்தொழுகும் மாந்தர் பலர்."

மனமாசு கூடாது ; அகற்றப்படவேண்டியது. மனத்தே மாசற்றிருத்தலே அறமாகும்.

ஆழமும் அகலமும் கொண்ட அந்தக் குளத்தின் ஒரு பகுதிக்கு யாருமே செல்லத் துணியவில்லை. காரணம் அங்கேதான் பற்றியது விடாமைக்கு மூர்க்கனேடு ஒருங்குவைத்து எண்ணப் படும் முதலைகள் வாழ்ந்தன. உயிரினங்களைப் பற்றி அறிந்து கொள்வதிலே ஆர்வம் மிகக் கொண்ட வள்ளுவர் அப்பகுதி நோக்கிச் சென்ருர். கரைமேலே நின்று கண்களைப் படர விட்டார். அப்போது வெயிலிலே இதமாகப் படுத்துக் கிடந்த சில முதலைகளை அவர் பார்த்தார். பெரிய முதலையின் திறந்த வாய்க்குள்ளே, ஒரு காக்கை, அதன் பற்களுக்கிடையே சிக்குண்டு கிடந்த துணுக்குச் சதைப் பகுதிகளைக் கொத்திக் கொத்தி எடுத்துக் கொண்டிருந்தது. இன்னும் இரண்டொரு முதலைகளும் வெயிலில் காய்ந்து கொண்டிருந்தன. காக்கைகள் அவற்றைக் கொத்தத் தொடங்கின. வலிய முதலைகள் மறுபடியும் தண்ணீருக்குள் மறைந்தன. தண்ணீருக்குள் தனியாதிக்கம் நடத்திய முதலைகள் தரைப் பகுதியை எட்டியவுடன் சிறு காக்கையாலுங்கூட எதிர்க்கப்பட்டன ; இடருக்கு உள்ளாக்கப்பட்டன. காக்கை தண்ணீருக்குள் கால் வைக்குமா ? வைத்தாலும் முதலைகள் முன் நிற்க முடியுமா ? தண்ணீரில் வலிமைகொண்டு விளங்கும் முதலை—எல்லாவற்றையும்—பரியதும் கூர்ங் கோட்டதுமாகிய யானையையும்—வென்றுவிடுகின்றது. தரையிலோ எளிய பிற உயிர்களாலும் அது வெல்லப்படுகின்றது. அரசியல் அலுவலில் பழுத்த பட்டறிவு வாய்ந்த வள்ளுவர் இக்காட்சியைக் கொண்டே ஓர் அரிய கருத்தை ஆக்கித்தந்தார். ' இடமறிந்து' வேந்தன் செயற்படவேண்டும். வேந்தன் என்ன-எவருக்கும் இடமறிதல் இன்றியமையாதது. தத்தமக்கு வாய்ப்பான இடத்தில்தான் ஒன்றை நிறைவேற்றிக்கொள்ளும் வலிமையைப் பெற முடியும் : வாகை சூடவும் முடியும்.

> "நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
> நீங்கின் அதனைப் பிற."

குளத்தில் ஓரிடத்தில் கொக்கு ஒன்று ஒற்றைக் காலில் தவம் புரிவதுபோல நின்றது. ஓடு மீன் ஓட உறுமீன் வரும் அளவும் வாடியிருந்தது ; ' ஒடுங்கி இருந்தே உன்னியது முடிக்கும் ' அக் கொக்கு, மீன் தென்பட்டதும் கவ்விப் பிடித்தது. கொக்கின் அந்த நிலையைக் கண்ட செந்நாப் போதார் உலக மக்கள் கொள்ள வேண்டிய உயர்ந்த நீதியொன்றைக் கூறினுர். '' பொறுத்திருக்கும் காலத்தில் கொக்குபோல் அமைதியாக இருக்கவேண்டும் ; காலம் வாய்த்தபோது அதன் குத்துப் போல் தவருது செய்து முடிக்க வேண்டும். ''

> "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
> குத்தொக்க சீர்த்த இடத்து."

குளத்தின் மற்ருெரு முனையில் ஒருவன் மீன் பிடித்துக்கொண்டிருந்தான். தூண்டிலில் புழு ஒன்றினைக் குத்தி உள்ளே முழுகவிட்டிருந்தான். தூண்டில் முள்ளை, அதில் குத்தியுள்ள இரை மறைத்தது. புழுவினைப் பார்த்த மீன் அதை இரை என்று எண்ணியதே தவிர, உள்ளே இருக்கும் இரும்பு முள்ளைத் தன்னையே அழிக்க இருக்கும் கருவியை அறியவில்லை. இரை கிடைத்தது என்ற மகிழ்ச்சியோடு எவ்விக் குதித்து விழுங்கியது ; தூண்டிலில் மாட்டிக் கொண்டது. இக்காட்சியைக் காட்டிச் சூதாடுபவர்களுக்கு அறிவுரை கூற எண்ணினுர் வள்ளுவர். '' தம்பி ! சூதிலே உனக்கு வெற்றி

கிடைப்பதாகவே இருந்தாலும் அதை விரும்பாதே ! அவ்வாறு கொள்ளும் வெற்றியால் மகிழ்ந்து மேலும் இப்பழிச் செயலைச் செய்ய விழைவது தூண்டிலில் உள்ள புழுவை இரையெனக் கொண்டு மீன் விழுங்குவதற்கு ஒப்பாகும். சூதை நீ மேற்கொண்டால் தூண்டிலிற் சிக்கிய மீனுவாய் ! அதை வெறுத்தொதுக்கு '' என்ருர்.

> "வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
> தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று."

அகன்று பரந்திருந்த நீர்நிலையை அவர் கூர்ந்து நோக்கினுர். குளத்திற்குக் கரையில்லாதிருந்தால் என்ன நிலை ஏற்படும் என்று எண்ணிப்பார்த்தார். கரை இருப்பதால்தானே நீர் தேங்கி நின்று பலருக்கும் பயன்படுகிறது. கரையில்லாதிருந்தால் ஓடி வரும் நீர் ஒரு பயனுமின்றி வீணுகிவிடுமே. உருண்டு வரும் நீரைத் தேக்கிக் காக்கக் குளக்கரை உதவுவது போல, ஒருவனிடம் சேரும் செல்வத்தைப் பாதுகாக்க உதவுவது எது என்ற சிந்தனை தோன்றியது. சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மையே ஒருவன் செல்வத்தை நிலைத்திருக்கச் செய்யும் கரையாகும். கரை உயர உயர நீர் மிகுந்து தேங்குமாறு போல, சுற்றத்தாரோடு மனம் கலந்து பழகும் தன்மை மிகமிக ஒருவனிடம் சேரும் செல்வமும் மேலும் மேலும் பயன்தரும்.

> "அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
> கோடின்றி நீர்நிறைந் தற்று."

சுற்றத்தோடு நெஞ்சு கலத்தல் இல்லாதவன் வாழ்க்கை, குளப்பரப்பு கரையின்றி நீர் நிறைந்தாற் போலும் !

வள்ளுவரின் சிந்தனை மேலும் படர்ந்தது. குளத்திற்குத் தண்ணீர் வரும் வழிகளைப் பார்த்தார். உள்ளே வந்து சேர்ந்த தண்ணீரின் அளவைக் கண்டார். மதகுகள் வழியே வெளியோடும் நீரையும் கவனித்தார். வந்து சேரும் நீரைவிட வெளிச் செல்லும் நீரின் அளவு குறைவாக இருந்தால்தானே நீர் மட்டம் உயரும். உட்புகும் நீரைவிட வெளியே செல்லும் நீர் அதிகமானுல் குளத்தில் நீர் தேங்கிநிற்க முடியாதல்லவா ? செல்வம் சேர்ப்போர் இதை நன்கு கவனிக்க வேண்டும். வருவாய் குறைவாக இருந்தாலும், செலவு அதைவிடக் குறைந்திருப்பின் கவலையில்லை ! செலவு, வரவைவிட அதிகமானுல் அழிவுதான் மிஞ்சும் ! இந்த அரிய கருத்தை அவர் கூறினுர்.

> "ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
> போகாறு அகலாக் கடை."

பத்துப் பத்துக் குறள் வீதம் அதிகாரம் வகுத்த வள்ளுவரின் சிந்தனையில், குளத்தைக் கண்டபோது எழுந்த பத்துக் குறட்பாக்களைக் கண்டோம். அப்பத்தும் கூடி நமக்குப் பயன் விளைவிக்குமாக !

அடுத்த இதழில் தொடங்குகிறது !

அனைத்து இந்தியாவுக்கும் வழிகாட்டியாக விளங்கும் நம் அரசு ஆற்றிவரும்

நன்மைகள் ஆயிரம் ஆயிரம் என்பதை விளக்கும்

ஆதாரபூர்வமான கட்டுரைத் தொடர்



சாதனைச் சரித்திரத்துக்குச் சான்றுதரும் பட்டயம் இது !

குளமும் குறளும்

சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பினை உடைய இயற்கை, பண்டைத் தமிழிலக்கியங்களில் பேரிடம் பெற்றுச் சிறந்தது. இயற்கையைச் சிறப்பித்துப் பாடியதோடமையாது, புலவர்கள், அதை வாழ்க்கையில் நடைபெற்ற இன்ப துன்ப நிகழ்ச்சிகளோடு ஒருங்கிணைத்தும் காட்டியுள்ளனர். புலவர் ஒருவர், காட்டு வழியே நடந்து சென்றார். நாட்டில் மாவீரன் ஒருவன் மாண்ட செய்தி அவருக்கு எட்டியது. மாண்டவன் வீரஞ்செறிந்தவன் என்பதோடு இரவலர்க்கு வரையாது வழங்கிய வண்மையாளன். அவன் மறைவால் ஏற்பட்ட வருத்தச் சுமையோடு வழிநடந்த புலவர், எதிரே முல்லைக் கொடியொன்று பூத்துக் குலுங்கியதைக் கண்டார். மலரால் நிறைந்திருந்த கொடி மகிழ்ச்சியோடு இருப்பதாக எண்ணிய அவர், ''நாடே கையறு நிலையில் கலங்கிக்கொண்டு இருக்கும்போது நீ பூக்கலாமா?'' என்று மனம் குமைந்து கேட்டார். ''கொள்ளை மணங்கூட்டி வெள்ளை நிறங்காட்டி நிற்கும் முல்லையே! குவலயமே கண்ணீர் வடிக்கிறது! இளையோர் உன்னைச் சூடார்; வளை யணிந்தோர் வந்து சூழ்ந்து நின்னைக்கொய்யார். தன்னுடைய யாழ்க் கோட்டால் மெல்ல வளைத்துப் பாணன் பறிக்கமாட்டான்; பாடினியும் அணியமாட்டாள். பெருவீரன்—கொடையாளன்—சாத்தனுடைய மறைவால் ஞாலமே வருத்தத்திலாழ்ந்திருக்கும்போது, நீ மட்டும் பூத்துச் சிரிக்கலாமா? இது நியாயமா'' என்று அவர் பாடியதைப் படிக்கும்போது இயற்கையோடு புலவர்கள் இரண்டறக் கலந்த தன்மை நமக்கு நன்கு புலனாகிறது. மனத்தை உருக்கும் அந்தப் புறநானூற்றுப் பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி யணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே

(புறம் 242)

(ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைக் குடவாயிற் கிரத்தனார் பாடியது). அளியோடும், கிளியோடும், மானோடும், மலரோடும் தம் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் மக்களை நம் மாத்தமிழ் இலக்கியங்களில் காண்கிறோம்.

இவ்வாறான இயற்கை கலந்த இலக்கியம் தமிழின் தனிச் சொத்து என்று அறிஞர் கூறுவர். பி. டி. சீனிவாசன் என்பார் கூறினார்:

''கிறித்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலிருந்து எளிய ஊர்ப்புறம் சார்ந்த வாழ்க்கை பழுதுறாது தொடர்ந்தது. சமஸ்கிருதப் பண்பாட்டுடனான தொடர்பைத் தடுக்க இயலா நிலை யேற்பட்ட காலத்தும் தமிழ்க் கவிதையுலகு சுற்றுப்புறத்திலிருந்த பகட்டற்ற காட்சிகளிலிருந்தே பாடுவதற்கான உள் தூண்டுதலைப் பெற்று வந்தது. செயற்கை சார்ந்த சமஸ்கிருதக் கவிதைகள் பண்டைத் தமிழரின் எழிலார்ந்த கவிதைகளைச் சிதைத்தமையால் இத்தனித் தன்மை சில நூற்றாண்டுகட்குப் பின்னர் மறைந்தது.''

" The simple rural life of the pre-christian centuries continued intact and not withstanding its contact with Sanskrit culture the Tamil muse still sought inspiration from the humble scenes around, which it deserted a few centuries later when the artificial poetry of Sanskrit destroyed the beautiful poetry of the early Tamils "

தம்மைச் சூழ்ந்திருந்த எளிய காட்சிகளையும், பொருள்களையும் கொண்டு அரிய கருத்துக்களைக் கூறுவது தமிழ்ப்புலவர் அனைவர்க்கும் இயல்பே யாயினும், அவர்களுள் திருவள்ளுவர் தலைசிறந்து நின்றார். அவர் ஒரு கண்ணாடித் தரை போன்ற கண்கவர் குளத்தருகே சென்று நின்றார், நீர்ப் பரப்பில் ஒட்டி உறவு கொண்ட வண்ணம், கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் பூத்துக் கிடந்தன. நீர் மட்டம் உயர்ந்தபோது கூடவே கொடிகளும் நீண்டு சென்றன. இக்காட்சியைக் கொண்டு அவர் சிறந்ததொரு கருத்தை விளக்கினார். நீர்ப் பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவின வாகும். அதுபோல் மக்கள் வாழ்க்கையின் உயர்வு அவர்களுடைய ஊக்கத்தின் அளவினதாகும்.

''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு,''

குளத்திலிருந்த நீரைப் பலரும் வந்து மொண்டு சென்றனர். அள்ளிப் பருகி மகிழ்ந்தனர். மக்கள் மட்டுமல்ல, விலங்குகளும் அக்குளத்தில் நீரருந்தி மகிழ்ந்தன. தேங்கியிருந்த நீர், கால்களிற் பாய்ந்து சென்று நிலத்தை வளப்படுத்தியது. இவற்றைக் கண்ட வள்ளுவர், பேரறிவாளன் கையில் சேர்ந்த பணம், குளத்தில் சேர்ந்த நீருக்கு ஒப்பு என்றார். தன்னை நாடிவருபவர்க்குக் குளிர்ந்த இயல்போடு மலர் முகங்காட்டித் தாகம் தீர்த்தும், தானே சென்று 'தாயினும் பரிந்து' பாய்ந்து, வயலுக்கு வளம் ஊட்டியும் உதவும் குளத்து நீர் போல, அறிவாளரிடம் சேர்ந்த பொருள் அவரை நாடி வருவோர்க்கும் இனிதாகப் பயன்படும்; அவரிடமிருந்து பிரிந்து பல தொழில்களாகப் பெருகிப் பல்லாயிரவர்க்குப் பயனுமளிக்கும்.

''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு''

என்பது உயிர்மொழியல்லவா? அக்குளத்தில் மங்கை ஒருத்தி மண்குடத்தில் நீர்மொண்டு தலையிற் சுமந்து சென்றதை வள்ளுவர் கண்டார். அந்நாட்களில் பெண்கள் தலையிற் குடம் சுமந்து நீர் கொண்டுவருதல் உண்டு. இன்றும் கூட ஊர்ப் புறங்களில் இதைக் காண முடியும். அப்பெண் சுமந்த குடம் நன்கு சுடப்

ஊசி வாங்கலையோ ஊசி!

"ஊசிவாங்கலையோ ஊசி ஊசி", '' பாசிமணி அம்மோ பாசிமணி'' என்ற பல்லவியைப் பாடிக் கொண்டு நகரத் தெருக்களில் கூட்டம் கூட்டமாகச் செல்லும் கும்பல் நம் கண்களைக் கவராமல் போவதில்லை. ஆணும் பெண்ணும் அரை நிர்வாணம் ; ஆண்கள் பெரும்பாலும் கோவணத் தாண்டிகள் ; தலையிலும் கழுத்திலும் அணிந்துள்ள பாசி மணிகளிலும், கொண்டை முடிச்சிலும் ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானமான வாழ்வு ; இடுப்பிலே தொங்கவிட்ட குழந்தை ; இதில் தம்பதிகளிடையே வேறுபாடு கிடையாது ; குடும்ப பாரத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும் சமரச உள்ளம் ; தகர டப்பாக்கள் ; அதிலே எச்சிற் சோறு ; எலும்புத்துண்டுகள்; யாதும் ஊர் ; இடமெல்லாம் அவரிடம்;சேத்துப்பட்டு புகை வண்டி நிலையம், கோட்டைக் கடற் கரையின் பின்புறப் பக்கம் போன்ற இடங்களிலே கிழிந்த கோணிக்குடிசைகளிலே வாழும் இவர்கள் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே தமிழகத்தே வாழ்ந்து வரும் மரபினர்; நீலகிரி தோடர் போன்றோர் பேசும் மொழி ; குறிஞ்சி நில மக்கள் என அகப் பொருள் இலக்கண நூலில் குறிப்பிடப்படும் ''குறவர் குறத்தியர் '' மரபு ; ஏன் ? ''குறவர் குடிசை நுழைந்தாண்டி அந்தக் கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி '' என வடலூர் வள்ளலார் கும்மியிலும் நுழைந்தவர்கள். தமிழ், தெலுங்கு போன்ற மொழிக் கலப்புடைய இப் பழங்குடி மக்கள் இன்று தெருத் தெருவாய், ஊர் ஊராய்த் திரிகின்றனர். கண்ட கண்ட எச்சிற் சாதத்தைச் சேர்த்து வைத்து உண்கின்றனர்; விழாக்காலங்களில் வெளியே எறியப்படும் எச்சிற் சோற்றிலேயே காலம் தள்ளுவோரும் பலர். கூடை முடைதல், பாசி மணி கோத்தல், ஊசி விற்றல் போன்ற பரம்பரைத் தொழிலுடையவர்கள்; பலர் திருட்டுத் தொழிலும் உடையவர்கள்.

அணிலை, அதுபோன்ற குரல் எழுப்பிப் பிடித்துத் தலையை உடனேயே அமுக்கிக் கொன்று பச்சையாகவே இவர்கள் தின்பது பரிதாபமாக இருக்கும் ; அண்மையிலே பூனைகளை இவர்கள்பிடித்துத் தின்பதை அறிந்த காவல் அதிகாரிகள் கவனமாக இருக்க வேண்டுமெனப் பொதுமக்களுக்கு பத்திரிகை வாயிலாக எச்சரிக்கை விடுத்ததை அறிவோம்; இன்னும் இவர் தம் குலப் பெருமை ' குற்றாலக் குறவஞ்சி ' போன்ற இலக்கியங்களிலே காணலாம் ; 'கழுதை தேய்ந்து தேய்ந்து கட்டெறும்பானது' போலத்தமிழிலக்கியங்களால் பாராட்டப் பெற்ற இம்மரபினர் குலம் இன்று தாழ்ந்துஇழிநிலைக்கு வந்துள்ளது. நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவே நின்று ஆள்வது இன்றையத் தமிழரசு. கல்லாரையும் பொருள் இல்லாரையும் கற்றாராய்ப் பொருளுற்றாராய்ச் செய்வது இன்றையத் தமிழரசு. எனவே நரிக் குறவர்களுக்குப் புது வாழ்வு வழங்கத் தமிழக அரசு முன்வந்துள்ளதில் வியப்பில்லை.

சோழவரம் பகுதியிலுள்ள ஒரக்காடு கிராமத்து நரிக்குறவர்கள் தூதுக்குழு ஒன்று மாவட்ட ஆணையாளரைச் சந்தித்துத் தம் குறைகளைக் கூறியது. தங்க இடம் தந்தால் பல்வேறிடங்கட்கு செல்லாது ஓரிடத்தில் தங்கி ஒழுங்காக வாழ்வதாகத் தூதுக்குழு கூறியது.

மத்தியத் திட்டத்தின்படி ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 ஏக்கர் நிலமும். ரூ. 5,000 மதிப்புள்ள வேளாண்மைக்குரிய கருவிகளையும் அளிக்கலாம். ஆரம்பத்தில் நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த 8 குடும்பங்களுக்கு அது போன்ற வசதிகளை வழங்க ஆலோசனை கூறுவதாய் மாவட்டஆணையாளர் கூறியுள்ளார் ; அன்றியும் அக் குடும்பங்களுக்குத் தேவையான நிலம் ஒரக்காடு கிராமம் அருகே உள்ளது என்றும் அவர் கூறினார்.

நரிக்குறவர் குடும்பக் குழந்தைகளுக்குக் கல்வி போன்ற ஏனைய வசதிகளையும் பொருளாதார உயர்வையும் வழங்குவதில் அரசுக்கு ஆர்வம் உண்டெனவும் கூறினார்.

தங்கள் நிலத்துக்குப் பட்டா வழங்க வேண்டும்; ஆடு வாங்கக் கடனுதவி தரவேண்டும் ; குழந்தைகள் படிக்கப் பள்ளிக்கூட வசதிகள் தரவேண்டும் என அவர்கள் மாவட்ட ஆணையாளரிடம் வேண்டியிருப்பது அவர்களின் எதிர்கால வாழ்வு முன்னேற்றத்தின் அறிகுறியல்லவா?

'அரசு அன்று கேட்கும், தெய்வம் நின்று கேட்கும்' என்ற உண்மை உரை தமிழகத்தைப் பொறுத்தவரை பொய்த்துப் போகவில்லை. முதலமைச்சர் அவர்கள் மக்கள் முறையீட்டை குறைபாட்டை அவ்வப்பொழுதே ஆய்ந்து முடிவெடுக்க மனுநீதி முறை கொண்டு வந்துள்ளதை நாமறிவோம். காலம் கடத்தாது குறைகளைத் தீர்த்தல் ஆள்வோர் கடமையல்லவா? ஊர் ஊராக மர நிழலிலே மன்றங்கள் அமைத்து மக்கள் குறை தீர்க்கப்படுதல் கண்கூடு. எனவே, குறவர் இனத்தின் முறையீட்டையும் தீர்க்கத் தமிழக அரசு உடனேயே முன்வந்துள்ளமை கவனிக்கத்தக்கது. சென்னையருகே 16 கல் தொலைவிலுள்ள சோழவரத்தை அடுத்து உரக்காடு என்ற சிற்றூர் உள்ளது. முதல் முயற்சியாக இங்கே குறவர்களுக்காக ஒரு குடியிருப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்பில் இருபத்திரண்டு குடும்பங்கள் தங்கியிருக்கின்றன. பண்டைய இலக்கியங்களில் இவர்கள் தொழில் பேசப்படுகிறது. தேனும் தினையும் சேகரிப்பர். மண்ணுள் புதைந்த கிழங்குகளை அகழ்ந்தெடுப்பர்; மூங்கில் நெல் விளைப்பர், இவ்வாறு இயற்கையாகவே வேளாண்மையில் தாளாண்மையுடைய இக் குறவர் இனத்தார் இன்று உரக்காடு குடியிருப்பில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளதுமகிழ்ச்சிக்குரியது. நெல் பயிரிடுகின்றனர். அதோடு நில்லாது வகை வகையான காய் கறிகளையும் விளைவிக்கின்றனர். இன்று நல்ல வருவாய் தரும் தொழில்களாகக் கோழி வளர்ப்பும், ஆடு வளர்ப்பும் உள்ளன. அமெரிக்கா முதலான அயல் நாடுகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பெருந்தொழிலாக ஆடு மாடு, கோழி வளர்த்தல் நடைபெறுகின்றன. விஞ்ஞான ரீதியில் செய்யப்படும் இத்தொழிலால் அந்நாட்டு உணவு நெருக்கடி அகல்வதோடன்றிச் செல்வச் செழிப்பும் ஏற்படுகின்றது. எனவே, பயன் மிகத் தரும் கோழி ஆடு வளர்ப்பிலும் இக் குறவர் குலத்தினர் ஈடுபட்டிருக்கிறார்கள். நாட்டுக்கு இழுக்குத் தேடித் தரும் வகையில் நாடோடியாய்த் திரிந்து வந்த இவர்கள் எதிர் காலத்தே தமிழகத்துக்குப் பெருமையும் வருவாயும் தேடித் தரும் இனத்தவராய் மாறுவர் என்பதில் ஐயமில்லை. கடுகு சிறுத்தாலும் காரம் போகாதல்லவா? பழந்தமிழினத்தவரான இக்குறவர் இனத்தவர் வருங் காலத்தே தம் பழம் பெருமையைக் காத்து நாட்டிற்கு நல்லதோர் பெயரை நாட்டுவர் என உறுதியாக நம்பலாம்.

749

வண்ணப் படங்களில்

39-ஆம் பக்கத்தில்

1. துறையூரில் அரசினர் மருத்துவ மனையைத் தொழிலமைச்சர் மாதவன் அவர்கள் திறந்து வைத்தார்கள். சட்டமன்றக் கொறடா அழகமுத்து அவர்களும், அன்பில் தருமலிங்கம் அவர்களும், மேலவைக் கொறடா பராங்குசம் அவர்களும் அவ்விழாவில் பங்கேற்றனர்.

2. சீரணித் தொண்டர்களால் நல்லூர்ப்பேட்டையில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தை 1-11-'70 அன்று தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

3. அக்டோபர் 29-ஆம் நாள் தீபாவளி விழாவையொட்டி சென்னை நகரிலுள்ள பல்வேறு அனாதை இல்லங்களைச் சேர்ந்த 550 குழந்தைகளுக்கு, தமிழ்நாடு ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள், தமது மாளிகையில் தேநீரும், பிஸ்கோத்தும் வழங்கினார்கள்.

4. சென்னை ராஜாஜி மன்றத்தில் 24-10-1970 அன்று நடைபெற்ற தமிழ்நாடு நகர் மன்றத் தலைவர்களின் மாநாட்டைத் துவக்கி வைத்து உரையாற்றுகிறார் தமிழக முதல்வர்.

5. பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து திரும்பிய கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைத் தமிழக முதல்வர் அவர்களும் ஏனைய அமைச்சர் அவர்களும் விமான நிலையத்தில் வரவேற்கும் காட்சி.

6. 16-9-1969 முதல் 15-9-1970 வரை, கடமையாற்றும் வேளைகளில் கொல்லப்பட்ட காவலர்களின் நினைவு நாள் 21-10-1970 தமிழக மாநில காவல் துறை அதிகாரியின் அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. கடமையாற்றி மறைந்த காவலர்க்கு மரியாதை செலுத்தும் காவலர்களின் அணி வகுப்பு; மாநில அதிகாரி நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செய்கிறார்.

மையப் பக்கங்களில்

உவகை தரும் உதகையின் பல்வேறு காட்சிகள்.

42-ஆம் பக்கத்தில்

1. அனைத்துலக நிதியின் நிர்வாக இயக்குநர் திரு சுவிட்சருக்கு, தமிழ் நாடு ஆளுநர் அளித்த விருந்தின் போது சுவிட்சர், தமிழக முதல்வர், தொழிலமைச்சர் ஆகிய மூவரும் உரையாடும் காட்சி.

2. சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு சி. ஆர். கோலப்பா, மேலவை உறுப்பினராகப் பதவி யேற்றார். மேலவைத் தலைவர் திரு சி. பி. சிற்றரசு அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற பதவி ஏற்பு நிகழ்ச்சியில் தமிழக முதல்வரும் கல்வி அமைச்சரும் கலந்து கொண்ட காட்சி.

3. பீகார் மாநில அமைச்சர் திரு என். பி. சின்கா, தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர் நாவலர் அவர்களை 31-10-1970 அன்று சந்தித்தார்.

4. பிலிப்பைன்ஸ் நாட்டுக் குடியரசுத் தலைவரின் செயலாளர் திரு அலெக்ஜான்ட்ரோ மெல்குர் அவர்கள் 22-10-1970 அன்று சென்னைக்கு வருகை தந்தபோது, அன்னாரை விமான நிலையத்தில் வரவேற்றார், தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் திரு கே. வி. சுப்பையா அவர்கள்.

5. எழும்பூர் சேவா நிலையம் ஆதரவில் அக்டோபர் 30-ஆம் நாளன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி தயாளு அம்மையார் அவர்கள் குடிசைவாழ் குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

6. ஒரிசா அமைச்சர் திரு மஜ்ஹாய். தமிழ்நாடு அரசு உணவமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்களைச் சந்தித்தார்.

7. ரோம்நாட்டு உள்துறை அமைச்சர் திரு கார்னில் ஒனேசு 16-10-1970 அன்று சென்னைக்கு வந்தபோது, அன்னாரை விமான நிலையத்தில் வரவேற்றார் தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள்.

8. நவம்பர் திங்கள் முதல் நாளன்று தென்னார்க்காடு மாவட்டம் நெல்லிக்குப்பத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தைச் செயல்படுத்தும் பணியை, தமிழ் நாடு அரசு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள் தலைமையில், தொழிலாளர் நல அமைச்சர், திரு என். வி. நடராசன் அவர்கள் துவக்கி வைத்தார்.

9. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளை வேளாண்மைத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் சந்தித்தார்கள்.

10. அமெரிக்க நாட்டின் ஏற்றுமதி இறக்குமதித் துறை இயக்குநர் திரு ஜான் சி. கிளார்க், தமிழ்நாடு அரசின் தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்களைச் சந்தித்தார்.

இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான குடியானவர்களையும் தொழிலாளர்களையும் நம்மில் பலர் "பாமர ஜனங்கள்" என்கிற பெயரில் அடக்கிவிடுகிறோமல்லவா? கஷ்டப்படுவதற்கென்றே பிறந்த விகாரமான ஒரு மிருகமாக அவர்களை நாம் மதிக்கிறோம். அவர்கள் நெடுங்காலமாகவே பூமிக்குப் பாரமான மிருகங்களாக வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் அப்படித்தான் இருக்கிறார்கள். நாம் அவர்களிடம், "அனுதாபம்" காட்டுகிறோம். அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஓர் உபகாரியின் தோரணையில் பேசுகிறோம். ஆனால், அப்பாமர மக்களும் நம்மைப்போல் தனித்தனி மனிதர்கள் என்பதை நாம் உணர்வதில்லை.

கிராமங்களிலுள்ள மண் குடிசைகளிலும், பட்டணங்களிலுள்ள சேரிகளிலும் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு அரசியல் என்றால் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் அன்றி வேறு யாதாக இருக்க முடியும்?

—நேரு

751



உருப்பெறுகின்றன. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதனை மேற்கொண்டிருக்கிறது. எனவே, சென்னையில் "4 நட்சத்திர உணவு விடுதி'' கட்டும் திட்டத்தை உடனே மேற்கொள்ளும்படிச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாமல்லபுரத்தில் சுற்றுலா வசதிகள் செய்ய 1964-65ல் அளிக்கப்பட்ட திட்டத்திற்கு இன்னும் மத்திய அரசு ஒப்புதல் தராமல் இருக்கிறது. தேசீய சுற்றுலாத் திட்டங்கள், தேசீய விமானப் போக்குவரத்துத் திட்டங்களை மேற்கொள்ளும் குழுக்கள் அமைக்கும்போது மாநிலங்களிலிருந்து அரசின் பிரதிநிதிகள், பொதுமக்கள், தனி வணிகர்கள் அதில் சேர்க்கப்பட வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டம் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்து, திட்டம் தயாரிக்க மூன்று குழுக்களை நியமித்தது. போக்குவரத்து, உணவு, தங்குமிட வசதிகள் மற்றும் சுற்றுலாப் பணிகள் பற்றி ஆய்வு செய்து தம் அறிக்கையை இந்தக் குழுக்கள் தயாரித்துத் தலைவருக்குச் சமர்ப்பிக்கும்.

மதுரையில் 22 லட்சம் செலவில் ஒளி-ஒலி அமைப்பு

மதுரை மீனாட்சி கோவிலில் ஒலி-ஒளிக் காட்சிகளை அமைக்க மத்திய அரசு 4-வது திட்டத்தில் 22 லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது. இத் தகவலை மதுரை நகராட்சி அளித்த வரவேற்பின்போது மத்திய அரசு சுற்றுலா அமைச்சர் டாக்டர் கரன்சிங் தெரிவித்தார்.

இந்த ஒலி-ஒளி அமைப்பு என்பது வண்ண விளக்கு ஒளியில் அங்குள்ள சின்னங்களைக் காட்டும்போது அதன் வரலாற்றைப் பற்றிய வர்ணனையும் இசையும் பின்னணியில் ஒலி பரப்பப்படும். மேனாடுகளில் மிகப் பிரபலமான இக் காட்சி அமைப்பு தற்போது டெல்லி செங்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது. இது மதுரைக் கோவிலில் அமைக்கப்பட்டால், வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

கோயமுத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த பேரூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பாப்ப நாயக்கன் புதூரில் சீரணிப்படையினரால் ரூ. 10,500 மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கும் பள்ளிக் கட்டிடத்திற்கு விவசாய அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் 21—9—1970-ல் அடிக்கல் நாட்டினார்கள். வட்டாரச் சீரணித் தலைவர் திரு. தங்கமாணிக்கம் சீரணியின் நோக்கம் குறித்து விளக்கவுரை யாற்றினார். சுத்தமாக வைக்கப்பட்டுள்ள கோகுலம் அரிசனக் குடியிருப்பிற்கு வானொலிப்பெட்டி ஒன்றை மேற்படி விழாவில் அமைச்சர் பரிசளித்தார். பரிசைத் தெலுங்கபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு மருதாசலம் ஏற்றுக்கொண்டார்.

வெண்பாப் போட்டி-4

ஈற்றடி : எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

முடிவு நாள் : 2—12—1970

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் அச்சகம்,
சென்னை-1.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா!



' திருநாள் ' என்றால் புதிய சிற்றுண்டிகள் செய்ய வேண்டும் என்ற ஆசை ஏற்படுவது இயற்கை.

நாம் முன்பு அறிந்திருந்த பழைய சிற்றுண்டி முறைகளையே எத்தனை நாளைக்குச் செய்து கொண்டிருப்பது என்ற எண்ணம் ஏற்படுவதே தவறு என்று எவரும் சொல்வதில்லை.

' புதியன புகுவது ' உலக இயல்புதானே! இதோ சில ' நவீன களிகள் '— அதாவது ஆங்கிலத்தில் ' புட்டிங் ' குகள் என்று அழைக்கப்படும் சிற்றுண்டிகள் தயாரிக்கும் முறை விவரிக்கப்படுகிறது.

எங்கும் கிடைக்கக் கூடிய முட்டை' பால், சர்க்கரை போன்ற பொருள்கள் கொண்டும்தயாரிக்கப்பட்டும் சிற்றுண்டிகளே இவை.

இச் சிற்றுண்டிகளுக்காகப் பயன் படுத்தப்படும் வெனிலா எசென்ஸ், செர்ரி பழங்கள் ஆகியவை கடைகளில் கிடைக்கும்.

நாம் பாயசம் சாப்பிடுவது போல் மேலை நாட்டினர் உணவு அருந்திய பின் சுவையான சிற்றுண்டியாக ' இந்தப் 'புட்டிங்' கை சாப்பிடுகிறார்கள்.

சென்னை அடையாறிலுள்ள சமையற் கலை இயல் தொழில் நுட்பக் கூடத்தில் ' புட்டிங் ' தயாரிக்கப் பயிற்றுவிக்கும் முறையினை பயிற்சியாளர் திருமதி உமா. நடராஜன் இங்கு விவரிக்கிறார்.

ஆல்பர்ட் புட்டிங்

தேவையான பொருள் :

மைதா மாவு—175 கிராம்.
முட்டை—2

சர்க்கரை—115 கிராம்.

வெண்ணெய்—115 கிராம்.

ஆப்ப சோடா—½ தேக்கரண்டி.

வெனிலா எசென்ஸ்—2, 3 சொட்டுகள்.

காய்ந்த செர்ரிப் பழங்கள்—20 கிராம்.

பால்—தேவையான அளவு கலப்பதற்கு.

செய்முறை :

ஒரு வாயகன்ற பாத்திரத்தில் வெண்ணெயையும், தூள் செய்த சர்க்கரையையும் நன்றாக அடித்துக்கொள்ளவேண்டும்.

முட்டைகளை உடைத்து, அடித்து வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சர்க்கரைக் கலவையுடன் நன்றாகக் கலக்க வேண்டும்.

மாவையும், சோடாமாவையும் நன்றாகச் சலித்து வைத்துக் கொண்டு, செய்து வைத்த கலவையுடன் மெதுவாகக்கலக்க வேண்டும். வெனிலா எசென்சையும் கலக்கவும்.

ஒரு ஜெல்லி அலுமினியப் பாத்திரத்தில் நன்றாக வெண்ணெயைத் தடவி அதில் துண்டங்களாக வெட்டப் பட்ட செர்ரிப் பழங்களை அலங்காரமாக அடுக்கவும்.

கலவை, மரக்கரண்டியிலிருந்து தானாகவே கீழே விழும் பக்குவத்தில்இல்லாவிடில் அந்தப் பக்குவத்திற்குக் கொண்டு வருவதற்குப் பாலை சேர்த்துக் கலக்கவும்.

பின் அந்த அலங்காரமாக வைக்கப்பட்ட ஜெல்லிப் பாத்திரத்தில் இந்தக் கலவையைக் கொட்டி, மேலே எண்ணெய்த் தாளினால் (grease proof paper) வாயை இறுக்கமாகக் கட்டிவிடவும்.

பின்னர் ஓர் இட்லிப்பாத்திரத்திலோ, வாணலியிலோ ஒன்றரை மணி நேரம் ஆவியில் வேகவைக்கவேண்டும். பாத்திரத்தை அழுத்தமாக மூட வேண்டும்.

பின்னர், எடுத்துக் கவிழ்த்தால் பார்க்கவும் மிக அழகாக இருக்கும். அதைச் சூடாகவே சிறிது ஜாம் சாசுடன் பரிமாறவும். இது உண்ண மிகவும் சுவையானது.

காபினெட் புட்டிங்.

தேவையான சாமான்கள் :

ரொட்டி—225 கிராம்.

முட்டை—2

வெண்ணெய்—30 கிராம்.

பால்—300 மில்லிலிட்டர்.

சர்க்கரை—115 கிராம்.

காய்ந்த திராட்சைப் பழம்—50 கிராம்.

முந்திரிப் பருப்பு—30 கிராம்.

வெனிலா எசென்ஸ்— 2, 3 சொட்டுகள்.


உவகை தரும் உதகைக் காட்சிகள்


SCENIC SPLENDOUR OF OOTY

செய்ம்முறை :

ஒரு ஜெல்லிப் பாத்திரத்தில் வெண்ணெய் தடவி அதனடியிலும் பக்கவாட்டத்திலும் திராட்சையையும், முந்திரிப் பருப்பையும் வைத்து அலங்கரிக்கவும்.

ரொட்டித் துண்டுகளில் வெண்ணெய் தடவி ஓரங்களை லேசாக வெட்டி எடுத்துவிட்டுப் பின் சிறிய துண்டங்களாக வெட்டிக்கொள்ளவும்.

வெட்டியதுண்டங்களை அந்தப் பாத்திரத்தில் அடுக்கிச் சிறிது சர்க்கரையையும், திராட்சைப் பழங்களையும் நடுவில் தூவவும்.

ஒரு பாத்திரத்தில் முட்டைகளை அடித்துக் கொண்டு, மீதியுள்ள சர்க்கரையையும், சூடான பாலையும் சேர்த்து நன்ருகக் கலக்கவும். வெனிலா எசென்ஸையும் ஊற்றவும்.

பின்னர் இந்த முட்டைக் கலவையை ரொட்டித் துண்டங்களின் மேல் ஊற்றி அரை மணி நேரம் ஊறவைக்கவும்.

மோல்டின் மேல் ஓர் எண்ணெய்த் தாளினுல் (Grease proof paper) நன்ருக மூடி ஆவியில் 1 மணி நேரம் நன்கு வேக வைக்கவும்.

வெந்தவுடன் எடுத்து ஆறிய பின் ஒரு தட்டில் கவிழ்க்கவும். இது அழகாகவும் உண்ண மிகவும் சுவையாகவும் இருக்கும்.

கா.ஃ.பி மௌசி.

தேவையான பொருள்கள் :

பால்— அரை லிட்டர்.

முட்டை—2

ஜெலட்டின் (Geletine)— 15 கிராம். (2 தேக்கரண்டி)

கிரீம்—15 கிராம்.

காய்ந்த செர்ரிப் பழங்கள்— 10 கிராம்.

சர்க்கரை—100 கிராம்.

காபி — டிக்காக்ஷன் — வாசனைக்கு ஏற்ற அளவு.

"எங்க வீட்டுக்காரர் சாயங் காலம் ஆறு மணிக்குத் தான் பெட் காப்பியே சாப்பிடுவார் !"

"என்னடியம்மா அதிசயமா இருக்கு"

" அதிசயம் ஒண்ணுமில்லே ! அவருக்குத் தொழிற்சாலேயில் நைட் ட்யூட்டி. காலேயிலே வந்து படுத்தாருன்ஞு சாயங் காலம் ஆறு மணிக்குத் தான் எழுந்திருப்பாரு !"

செய்ம்முறை :

சூடான தண்ணீரில் ஜெலட்டினை நன்ருகக் கரைத்து வைத்துக் கொள்ளவும்.

முட்டையின் வெள்ளைக் கருவைத் தனியாகவும், மஞ்சளைத் தனியாகவும் பிரித்து எடுத்துக் கொள்ளவும்.

மஞ்சள் கருவையும், சர்க்கரையையும் நன்ருக ஒரு பாத்திரத்தில் மரக் கரண்டியிஞல் கலந்து கொள்ளவும். அதில் மீதமான சூடான பாலை ஊற்றிக் கலக்கவும்.

இந்தக் கலவையை மிதமான சூட்டில் கரண்டியின் பின்புறம் ஒட்டும் வரை கெட்டியாக்கிக் கொள்ளவும். அடுப்பிலிருந்து இறக்கியபின் ஊறவைத்த ஜெலட்டினையும் காப்பி டிக்காக்ஷனையும் கலந்து நன்ருகப் பனிக்கட்டியின் (ஐஸ்) மேல் ஆறவைக்கவும்.

ஆறிய பின்னர் வெள்ளைக் கருவை நன்ருக அடித்து மெதுவாகக் கலக்கவும். அதை ஜெல்லி அலுமினியப்பாத்திரத்தில்ஊற்றி ஐஸ் பெட்டியின் குளிர் அறையில் (Freezer) ஒரு மணி நேரம் வைக்கவும்.

பின்னர் கெட்டியான பின் எடுத்துத் திருப்பி, கிரீமை ஊற்றி மேலே செர்ரிகளை அலங்காரமாக வைக்கவும். கமகம என்ற காஃபி மணத்துடன் உண்ண இனிதாகவிருக்கும் பண்டமிது.

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்

1/4 சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை—81.

உயர்ந்த தரமுள்ள
" கோபுரம் " மார்க் மைதா, சூஜி
மற்றும்
" கப்பல் " மார்க் ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670—52671—52672—52673

தந்தி : MONARCH

சுற்றுலா வளர்ச்சிக்குச் சிறப்புக் கூட்டம்

சுற்றுலா இன்று உலகில் மிகப் பெரிய தொழிலாக வளர்ந்துள்ளது. பல மேலை நாடுகளில், முக்கிய வருவாய் தேடித் தருவதாகச் சுற்றுலா உள்ளது. ஆனல் பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியா மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளது.

சுற்றுலாவினை வளர்ச்சியடையச் செய்ய இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முயன்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநிலத்தில் இதன் கூட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு, இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 14-வது கூட்டம், மதுரை மாநகரில் கடந்த 18—10—1970 அன்று நடைபெற்றது. மைய அரசின் சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் கரன்சிங் அவர்கள் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் இந்தக் கூட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். தமிழகத்தின் வேளாண்மை-சுற்றுலா அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

மதுரை, பாண்டியன் உணவு விடுதியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தின் முதல் நாள் நிகழ்ச்சிகளில் எல்லா மாநிலங்களிலுமிருந்து வந்த சுமார் 100 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து 4 நாட்கள் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கான வழி முறைகள் எடுத்துக் கூறப்பட்டன.

தமிழக ஆளுநர் அவர்கள் தமது துவக்க உரையில் ''தமிழகத்தின் சிற்பக்கலைச் சிறப்புகள் நிறைந்த கோயில்கள், கடற்கரையோரப் பட்டினங்கள், சரித்திரப் புகழ்பெற்ற நினைவுச் சின்னங்கள், எழிலான மலைப் பகுதிகள், வன விலங்குகள் உள்ளன. இவ்வளவு சுற்றுலா அம்சங்கள் உள்ள தமிழகத்தைச் சொர்க்கம் ஆக்க முடியும். அதற்கு மத்திய அரசு உதவியளிக்க முன்வர வேண்டும். இதில் துணிந்து முதலீடு செய்யும் பணம் வீண் போகாது.

அயல் நாட்டினர் வருவதற்கான விசா நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும். விமானம் மூலம் செல்ல வசதியில்லாச் சுற்றுலாப் பகுதிகளுக்கு ஹெலி காப்டர் விமானங்கள் விட முயல வேண்டும். விமானக் கட்டணம், உணவு விடுதிகளுக்கான கட்டணங்களைக் குறைக்கவேண்டும்.

முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளிடமிருந்து நாம் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஜப்பானுக்கு ஆண்டுதோறும் 7 லட்சம் சுற்றுப் பயணிகள் வருகின்றனர். அதன் மூலம் 135 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணி வருமானமாகக் கிடைக்கிறது.

நம் நாட்டில் வெளிநாட்டுப் பயணிகளைக் கவருவதோடு உள்நாட்டுக்குள்ளேயே சுற்றுலாப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இதற்கான இளைஞர்கள் விடுதி, ஒய்வு இல்லங்களை அமைக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

மத்திய அமைச்சர் டாக்டர் கரன்சிங் பேசும்போது ''சென்ற ஆண்டு சுற்றுப் பயணிகள் வருகை 30 சதவீதம் அதிகரித்துள்ளது. 1973 இறுதிக்குள் ஆண்டுக்கு 4 லட்சம் பயணிகள் என்ற இலக்கினையும், 1980-க்குள் 10 லட்சம் பயணிகள் என்ற இலக்கினையும் அடைந்து விடலாம். ஆனல் 1973-ல் வரக் கூடிய பயணிகளுக்கு 10,000 தங்கும் அறைகள் தேவைப்படும். இப்போது நமது நாட்டில் உணவு விடுதிகளில் இதற்காக உள்ள அறைகள் 6,000 தான். எனவே மேலும் பல உணவு-தங்கும் விடுதிகள் அமைக்கப்பட வேண்டும்.

தரமுள்ள கைவண்ணப் பொருட்கள் விற்கப்பட வேண்டும். வெளி நாட்டவரைக் கவரக் கூடிய கலை நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடைபெற வேண்டும். இதைத் தனியார்தான் செய்ய முடியும்.

கடந்த ஆண்டு சுற்றுலா மூலம் 34 கோடி ரூபாய் வருவாய் வந்துள்ளது. அடுத்த சில ஆண்டுகளுக்குள் 100 கோடி ரூபாய் வருமானத்தை எய்த முடியும். ஆனல் உலக வருவாயான 11,000 கோடி ரூபாயுடன் ஒப்பிட்டால் இது ஒரு சதவீதம் தான் வரும்.

சுற்றுப் பயணிகளுக்கு வட நாடு பழக்கப்பட்டதொன்ருக இருப்பினும், தென்னகம் முக்கியத்துவத்திலோ, அழகிலோ எந்த விதத்திலும் குறைந்ததல்ல'' என்று குறிப்பிட்டார்.

தமிழக அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் சிறப்புரையாற்றும் போது, தமிழகம் புறக்கணிக்கப்படுவதை எடுத்துரைத்தார். அமைச்சர் பேசியதாவது: ''நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சரணலயங்கள் முதலியவைகளில் சுற்றுலா வசதிகள் செய்ய 50 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனல், ஒன்றே முக்கால் லட்சம் வரை ஒதுக்கப்படலாம் என்று முன்பு கூறப்பட்டிருந்தும் தமிழகத்திலுள்ள முதுமலை சரணலய வளர்ச்சித் திட்டத்திற்கு இதில் எதுவும் ஒதுக்கப் படவில்லை.

சென்னையில் மிகப் பெரிய உணவு விடுதி கட்டும் திட்டத்தையும் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கைவிட்டு விட்டது என்பதை அறிகிறேன். அதே சமயத்தில் இதற்குப் பின் உருவான சில உணவு விடுதித் திட்டங்கள் பிற மாநிலங்களில்

அந்தப் பெரியவர் தனது கண்ணாடியைச் சரிசெய்து கொண்டு மீண்டும் பார்த்தார். அவருக்குப் பிடிபடவில்லை, எப்படித் திடீரென்று அந்தப் புதிய கட்டடம் தோன்றியது என்று !

அவருக்குச் சொந்த ஊர் திருச்சி. செங்கல்பட்டிலுள்ள தனது மகள் வீட்டிற்கு வந்திருந்தார். மாலை வேளை. காலார நடக்கலாமென்று கல்லூரியில் படிக்கும் தனது பேரன் கனகசபையுடன் புறப்பட்டார். காஞ்சிப்பாதையில் நடந்த அவர்கள் இரண்டு மைல் தொலைவிலுள்ள திம்மாவரம் வந்து விட்டனர். அவ்வூரில் உள்ள புதிய கட்டடம் தான் பெரியவரைச் சிந்தனை செய்ய வைத்தது.

"இது என்னடா ! புதுசா பெரிய கட்டடம் ? போன தடவை நான் வரும்போது இல்லையே ?''—தனது பேரனிடம் கேட்டார் பெரியவர்.

"இப்போக் கட்டினதுதான் தாத்தா, அது! நவீன அரிசி ஆலைன்னு பத்திரிகையிலே படிச்சிருப்பீங்களே !''

"ஓ ! அதுவா.... கூட்டுறவு அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் திறந்து வைச்சாருன்னு, படிச்சேன்.........அதுவா இது ?''

"ஆமாம் தாத்தா ! தமிழ் நாட்டிலே 16 நவீன அரிசி ஆலைகள் இருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் இதுதான் முதல் ஆலை. தமிழ்நாடு கூட்டுறவு கொள்முதல் விற்பனை (மார்க்கெட்டிங்) சங்கத்தார் இதனை நடத்துகிறார்கள்''

"அந்தக் காலத்திலே ஆலையும் கிடையாது, ஒண்ணும் கிடையாது ! உங்க பாட்டி நெல்லை அவுச்சு உரலிலே போட்டுக் குத்துவா ! அந்தச் சம்பாச் சோத்தை உருட்டி உள்ளே போட்டா தனி மணமாயிருக்கும். உடலுக்கும் வலு! இப்போ மில்லு கில்லுன்னு வந்து சத்தை எல்லாம் எடுத்துப்பிட்டு அரைச்சுத் தள்ளுறாங்க ! அந்தச் சக்கையைச் சாப்பிட்டு உன்னுட்டம் நோஞ்சான்களா பிள்ளைங்க இருக்காங்க ! வேறு என்ன பலன் இந்த மில் அரிசியிலே !''

"நீங்க சொல்றது சாதாரணமா நம்ப ஊரிலே உள்ள அரிசி ஆலை, அதுதான் ரைஸ் மில் ! அதிலே நெல் குத்தினு தவிட்டுச் சத்தெல்லாம் போயிடும் ! இந்த நவீன ஆலையிலே அரைக்கிற அரிசி அப்படி இல்லே! கைக்குத்தல் அரிசியில் இருக்கிற எல்லாச் சத்துக்களும் இந்த அரிசியில் இருக்கின்றன. விவரமாச் சொன்னா, நெல்லிலே 22 முதல் 24 சதவீதம் உமியும், மீதி, அதாவது தவிடு சேர்ந்து 76 முதல் 78 சதவீதம் அரிசியும் இருக்குது. சாதாரண ரைஸ் மில்லில் அரைக்கும்போது உமி, தவிடு எல்லாம் போக 66 சதவீதத்திலிருந்து 69 சதவீதம் அரிசிதான் தேறும். ஆனால் நவீன அரிசி ஆலையில் அரைத்தால் 72 சதவீதம் அரிசி தேறும்.''

"டேய் ! பரவாயில்லேடா நீ ! உன்னைப் பட்டணத்திலே கல்லூரியிலே சேர்க்கிறேன்னு உங்கப்பா சொன்னதும் நீயும் காலைப்பிடிக்கிற கால் சட்டையும் பொம்பிளையாட்டம் பூப்போட்ட சட்டையும் போட்டுக்கிட்டுத் தான் திரிவே, எதுக்கு வெட்டிச் செலவுன்னு நினைச்சேன் ! நீ விஷயத்தோடதான் படிக்கிறேங்கிறது இப்போதான் தெரியுது !''

"உடையை வைச்சு உள்ளத்தை எடை போடக் கூடாது தாத்தா ! காலமாற்றம் அப்படித்தானிருக்கும் ! நாங்க எவ்வளவு கற்றுக்கணும்—முன்னேறணுமுன்னு துடிக்கிறோம் தெரியுமா ? சமீபத்திலே சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியிலே மாணவர்களே ஒரு பொருட்காட்சியை அமைச்சிருந்தாங்க ! அவங்க செய்து வைத்திருந்த இயந்திரங்களைப் பார்த்தவங்க அப்படியே அசந்து போயிட்டாங்க......''

"டேய்......டேய் ...... நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன் ; நீ அதுக்குள்ளே படபடக்கிறியே ! நீ என் பேரண்டா ! புத்திசாலியாத் தான் இருப்பேன்னு எனக்குத் தெரியும்..........ம்.......... பேச்சு எங்கேயோ துவங்கி வேறே எங்கேயோ போய் விட்டதே ! ஆமாம் .... எதனாலே பழைய அரிசி ஆலைக்கும் புதிய அரிசி ஆலைக்கும் இவ்வளவு வித்தியாசம், அது தெரியுமா ? ''

"தாத்தா ! பழைய மாதிரி அரிசி ஆலைகள் இரண்டு வகை உண்டு. ஒன்று "ஹல்லர்" எனப்படுவது. இது, இரண்டு கனமான உருளைகளாலானது. ஒன்றுக்குள் ஒன்று இருக்கும். வெளியே இருக்கிற உருளை சுழலும்; உள்ளே இருக்கிறது அப்படியே இருக்கும். உள்ளே உள்ள உருளையில் கத்தி மாதிரி அமைச்சிருப்பாங்க. இந்த ரெண்டு உருளைக்கும் இடையே இடைவெளியை அதிகப்படுத்தினால் அரையும் குறையுமா அரைபடும். ரொம்ப நெருக்கினால் அரிசி அதிகம் அரைக்கப்பட்டு குறுணைகளாய் நொய்யாய் ஆகி அதிகச் சேதாரம் ஆகிவிடும்.

"ஷெல்லர்" என்பது மற்றொரு வகை. இது உமி நீக்கி; இரு சாணைத் தட்டுகளைக் கொண்டது. இதிலும் இதன் இடைவெளியைப் பொறுத்தே அரைவையின் திறமையிருக்கும்.

"ஆனால் நவீன அரிசி ஆலையில் உள்ள அரைவை இயந்திரம் மெல்லிய மிருதுத்தன்மை வாய்ந்த அமுங்கி விரியும் சுழல் ரப்பர் உருளைகளைக் கொண்டது. அதோடு சிறந்த நெல் பிரிப்பான்கள், நுண்ணிய முறையில் சத்தும் சாரமும் கெடாமல் மெருகேற்றும் இயந்திரங்கள் உள்ளன.

முதலில், நெல் குதிரிலிருந்து, சுத்தம் செய்யும் பொறிக்கு

நெல் அனுப்பப்படுகிறது. அங்கு சுழல் சல்லடை, அதிரும் சல்லடை, தூசி உறிஞ்சி ஆகியவை உள்ளன. நெல்லில் கலந்திருக்கும் பதர், கல், மண், வைக்கோல் போன்றவைகளைத் தட்டியும் சலித்தும் புடைத்தும், தேவையற்றவைகளைக் களைந்தும் நெல்மணிகளை மட்டும் அரைவைக்கு அனுப்புகிறது.

அவை உமி நீக்கும் பொறிக்கு வருகின்றன. அது அரிசி உடையாமல் உமியை நீக்குகிறது. உமியை உறிஞ்சும் பொறி உமியை உறிஞ்சி அப்பால் உமிழ்கிறது.

அடுத்து அரிசி மாத்திரம் மெருகேற்றும் பிரிவுக்கு வருகிறது. அங்கு நமக்கு வேண்டிய அளவு தவிடு நீக்கி சுத்தமான வெண்மையான அரிசியை நாம் பெறலாம். இதில் உயிர்ச் சத்தான வைட்டமின் பி. 1 நீக்கப்படாமல் தங்குகிறது. அடுத்து இது தரம் பிரிக்கும் பகுதிக்கு வருகிறது. அங்கு குறுணைகள் பிரிக்கப்படுகின்றன . நவீன ஆலையில் குறுணைகள் 5 சதவீதத்திற்கு மேற்படுவதில்லை. அரிசி 72 சதவீதத்திற்கு மேல் தேறும்.

முழு அரிசி தரும் சக்தியை ஒப்பிட்டால், நவீன அரிசி ஆலைகள் பழைய அரிசி ஆலைகளில் 'ஹல்லர்' வகையைவிட சுமார் 6.3 சதவீதம் அதிகப் பச்சரிசியையும் 13.3 சதவீதம் அதிக புழுங்கல் அரிசியையும் கொடுக்கின்றன. 'ஷெல்லர்' வகையைவிட 1.5 சதவீதம் அதிகப் புழுங்கலையும் 4.4 சதவீதம் அதிகப் பச்சரிசியையும் கொடுக்கின்றன.'

"ஓகோ ! அப்படியா? இதிலே சத்தும் கெடுறதில்லே. லாபமும் அதிகம். ஆமா, சில அரிசி நாற்றமடிக்குதே அது ஏன் ? ''

"அது பழைய அரிசி ஆலைகளில் அரைப்பதில் ஏற்படுவது?''

"அது தான் ஏன்னு கேட்கிறேன் ? ''

"அதுவா தாத்தா ! நெல்லை இரண்டு அல்லது மூன்று நாட்கள் சிமெண்ட் தொட்டியில் ஊற வைப்பாங்க. அப்புறம் அவிக்கிறதுக்காக இரும்புத் தொட்டிகளில் கொட்டி நீராவி மூலம் வேக வைப்பாங்க! அதனால் நெல்லு அதிகமாப் புளித்து, அரைத்து வரும் அரிசியிலும் துர்நாற்றம் வீசுது ''.

"ஏன் மூணு நாள் ஊற வைச்சு அவிக்கணும்?''

"ஊற வைக்கும் நேரத்தைக் குறைத்தால் நெல்லானது புழுங்காமல் பலம் குறைந்து அரைவையின்போது இடிந்து குறுணைகளாகிவிடும்.''



ஒருவருக்கு ஒரு நாளைக்கு அரை கிலோ அரிசி தேவை எனக் கொண்டால் ஓர் ஆண்டுக்குத் தேவை 180 கிலோ அரிசியாகும்.

இந்தியாவில் நெல் விளையும் நிலம் 3 கோடியே 40 லட்சம் ஹெக்டர். தமிழகத்தில் நெல் விளையும் நிலம் 27.7 லட்சம் ஹெக்டர்.

தமிழகத்தில் ஓர் ஆண்டு உற்பத்தியாகும் அரிசி 45 லட்சம் டன்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் தற்போது 50,000 அரிசி ஆலைகள் உள்ளன. இவை தவிர நவீன அரிசி ஆலைகள் 26 உள்ளன.

தமிழகத்தில் 9,574 பழைய வகை அரிசி ஆலைகளும் 16 நவீன ஆலைகளும் உள்ளன.

"ஓகோ...... உங்க புது ஆலைகளில்என்ன பண்ணுறுங்க?''

"அப்படிக் கேளுங்க சொல்றேன். இந்த ஆலைகளில் நெல்லை 70 முதல் 75 செண்டிகிரேட் வெப்பநிலையிலுள்ள நீரில் 3 அல்லது 3½ மணி நேரம் இங்குள்ள இரும்புத் தொட்டிகளில் ஊறவைத்து வேக வைக்கிறுங்க. தண்ணீரை வடிகட்டியபின் 3 முதல் 5 நிமிட நேரத்திற்கு நீராவி செலுத்தப்படுகிறது.

"இந்த முறையில் அரிசி பலம் பெற்று, உடையாமல் முழு அரிசியாகக் கிடைக்கிறது. துர்நாற்றம் அடிப்பதில்லை. புழுங்கல் அரிசி தயாரிக்கும் நேரம் 72 மணியிலிருந்து 7 மணியாகக் குறைகிறது.''

"இந்தப் புது ஆலை உருவாக்க எவ்வளவு செலவாயிற்று தெரியுமாடா, கனகு ? ''

"ஓ ! தெரியுமே. பன்னிரண்டு இலட்ச ரூபாய். ஒரு மணிக்கு 2 டன் வீதம் ஒரு நாளைக்கு 40 டன் அரைக்கும் திறனுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள 16 நவீன அரிசி ஆலைகளில் 9 தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ளன. அவை தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவுக் கொள்முதல் விற்பனைச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ்ச் செயல்படுகின்றன. மீதி ஏழும் தமிழ்நாடு கூட்டுறவுக் கொள்முதல் விற்பனைச் சங்கத்தின் நிர்வாகத்திலுள்ளன.''

"ஆமா! இதிலே வீட்டு உபயோகத்திற்குக் கொஞ்சமா அரைக்க முடியாதே !''

"அந்த மாதிரி மிளகாய்ப் பொடி, மஞ்சள்தூள், சீயக்காய் அரைப்பதற்குப் புதுசா ஓர் ஆலையை இந்தச் சங்கம் விரைவிலே செங்கல்பட்டு மாவட்டத்திலே ஏற்படுத்தப் போகுது. ஆனா இந்த அரிசி ஆலைகளில் அரசாங்கம் கொள் முதல் செய்யும் நெல், கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கும் நெல் ஆகியவை அரைக்கப்படுகின்றன. மூன்று "சிப்டு" வேலை செய்கிறதுன்னா பார்த்துக்குங்களேன் ! ''

"அயராது உழைக்கும் உழவர் குடிப் பெருமக்களுக்கு இந்த அரிசி ஆலை அதிக அரிசியைக் கொடுக்கிறது. அரிசியை வாங்கி உண்ணுகிறவர்களுக்கும் அதிகச் சத்துள்ள அரிசியாகக் கொடுக்கிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் ! ''

"சரியாகச் சொன்னிங்க தாத்தா ! அதனால்தான் இன்றையத் தமிழக அரசு இந்தப் பணியை மிகவும் உற்சாகப் படுத்துகின்றது. ஆகவே வாழ்க கூட்டுறவு ! வளர்க பசுமைப் புரட்சி ! ''

இந்த விவசாயிகளிடையே பொதுவாகக் காண்பது என்ன?



ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்ப் செட்டும், அதன்மூலம் கிடைத்த சுபிட்ச வாழ்வும்.

நாடெங்கும் உள்ள விவசாயிகளின் வாழ்வை வளம் கொழிக்க வகை செய்வது, பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும் நம்பகமான ஓர்த்திங்டன் - சிம்ப்ஸன் பம்பு செட்டுகள்.

ஈடு இணையற்றது என்ற புகழ் பெற்ற 'மானோபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்டிரிப்யூகல் பம்புகளையும் **பெஸ்ட்** அளிக்கிறது. ஓர்த்திங்டன் - சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப் - பாட்டுடன் தயாரிக்கப்படுபவை, விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப் பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது, **பெஸ்ட்!**



பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.
(ஸ்தாபிதம்: 1879)
13/15, நார்த் பீச் ரோடு.
சென்னை - 1

தமிழ்நாட்டில் கிளைகள் :
6/434, திருச்சி ரோடு, கோயம்பத்தூர்
49 - D, மதுரை ரோடு, திருச்சி - 1.

FocusBC191Tam

"கத்தரிக்காய் கிலோ முப்பது பைசா.
நாட்டு வெங்காயம் நாற்பது பைசா.
உருளைக் கிழங்கு ஒரு ரூபா,
கடலை எண்ணெய் லிட்டர் நான்கு ரூபா,
நல்லெண்ணெய் லிட்டர் ஐந்து ரூபா,
தேங்காய் எண்ணெய் ஆறு ரூபா."

"என்னப்பா இது ! பாட்டைக் கேட்க ரேடியோ வைத் திருப்பினால் காலை நேரத்திலே கத்தரிக்காயும் வெங்காயமும் வருகிறது ?"

"ஓகோ, அதுவா ஜோதி ! பொருள்களின் விலையைப் பொதுமக்கள் அறிய ஒலி பரப்புகிறார்கள். இதனால் விற்போர்க்கும் வாங்குவோர்க்கும் நன்மை."

"ஆமாம், வானொலி நிலயத்திற்கு எப்படி அப்பா இந்த விலைகள் எல்லாம் தெரியும் ?"

"புள்ளி விவரத் துறையினர் கொடுக்கிறார்கள் ; அதை அவர்கள்............"

"புள்ளி விவரத் துறையா ? அது என்னப்பா?"

"புள்ளி என்றாலே முக்கியமானது, சிறப்பு வாய்ந்தது என்ற பொருளில் நாம் வழங்குகிறோமல்லவா ? நம்மூர்ச் சோமசுந்தரம் அவர்களைச் சாதாரணமாக, சோமுவா, அவர் இவ்வூரில் பெரிய புள்ளியாயிற்றே ! என்று சொல்லுகிறோமல்லவா ? அவர் விரலசைத்தால் வீடசையும், நாவசைத்தால் நாடசையும் ; ஆகவே, அவர் முக்கியமானவர் என்பதைக் குறிக்க அவரை ஒரு பெரிய புள்ளி என்கிறோம். அதுபோலப் புள்ளி விவரத் துறையும் அரசாங்கத்திலே ஒரு முக்கியமான துறை. நாட்டின் செல்வம், தொழில், வளம், வாழ்வு, வாணிபம் போன்ற பலவற்றின் ஏற்ற இறக்கத்தை எடுத்துக்காட்டுவது ; புல்லின் நுனியில் உள்ள சின்னஞ் சிறு பனித் துளியில் காலைக் கதிரொளியிலே நெடிய மரத்தையே காணலாம் ; புள்ளி விவரத்தின் வாயிலாக ஒரு நாட்டையே காண முடியும் ; அதன் ஏற்ற இறக்கம், வாழ்வு, தாழ்வு, அனைத்தையும் காட்டும் கண்ணாடி அது. "ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு" என்பார்கள் ; குதிரைக்குக் கடிவாளம் போலக் கணக்கு, வாழ்வுக்குக் கடிவாளம் ; அளவறியா வாழ்வு அழியும் ; எனவே புள்ளி விவரத் துறை அன்றாட, மாதாந்தர, ஆண்டைய நாட்டின் நிலையை நன்கு காட்டும் கருவி."

"சரி அப்பா ; இது எப்படி மக்களுக்கும் அரசுக்கும் பயன்படுகிறது ?"

"ஜோதி, இதோ பார் ; வேளாண்மைத் துறையிலே புள்ளி விவரம் மிகவும் உதவுகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு நிலப் பரப்பில் என்னென்ன பயிரிடப்படுகின்றன ; அப்பயிர்களில் விளைச்சலின் உயர்வு—தாழ்வு, விலை ஏற்றம்—இறக்கம் முதலியன விஞ்ஞான முறையில் கணிக்கப்படுகின்றன. உதாரணமாகக் கடந்த ஐந்தாண்டுகளில் நெல், கரும்பு, பருத்தி இவற்றைப் பற்றிச் சொல்லட்டுமா ?

1962-63-ல் ஹெக்டர் ஒன்றுக்கு **1,510** கிலோ நெல் விளைந்தது ; மொத்தம் **40,24,170** மெட்ரிக் டன் நெல் கிடைத்தது.

1963-64-ல் ஹெக்டர் ஒன்றுக்கு **1,480** கிலோ நெல் விளைந்தது ; மொத்தம் **38,76,340** மெட்ரிக் டன் விளைந்தது.

1964-65-ல் 1,537 கிலோ ; **40,36,150** மெட்ரிக் டன்.

1965-66-ல் 1,409 கிலோ ; **35,24,220** மெட்ரிக் டன்.

Shilpi BOB 21/70 Tam

1966-67-ல் 1,410 கிலோ ; 37,90,950 மெட்ரிக் டன்.

நெல்லைப் பற்றிச் சொல்லிவிட்டேன் ; கரும்பைப் பற்றிச் சொல்லுகிறேன் .

1962-63—ஹெக்டர் ஒன்றுக்கு *8,404* கிலோ. மொத்தம் *4,04,530* மெட்ரிக் டன்.

1963-64—ஹெக்டர் ஒன்றுக்கு *8,543* கிலோ. மொத்தம் *6,26,300* மெட்ரிக் டன்.

1964-65—ஹெக்டர் ஒன்றுக்கு *8,464* கிலோ. மொத்தம் *8,29,110* மெட்ரிக் டன்.

1965-66—ஹெக்டர் ஒன்றுக்கு *9,456* கிலோ. மொத்தம் *9,54,960* மெட்ரிக் டன்.

1966-67—ஹெக்டர் ஒன்றுக்கு *9,755* கிலோ. மொத்தம் *8,31,490* மெட்ரிக் டன்.

இனி பருத்தியைப் பற்றிச் சொல்லுகிறேன்.

1962-63—ஹெக்டர் ஒன்றுக்கு *167* கிலோ. மொத்தம் *3,53,180* மெட்ரிக் டன்.

1963-64—ஹெக்டர் ஒன்றுக்கு *160* கிலோ. மொத்தம் *3,59,860* மெட்ரிக் டன்.

1964-65—ஹெக்டர் ஒன்றுக்கு *171* கிலோ. மொத்தம் *3,57,440* மெட்ரிக் டன்.

1965-66—ஹெக்டர் ஒன்றுக்கு *169* கிலோ. மொத்தம் *3,00,930* மெட்ரிக் டன்.

1966-67—ஹெக்டர் ஒன்றுக்கு *192* கிலோ. மொத்தம் *3,34,810* மெட்ரிக் டன்.

'' ஆமாம் அப்பா, இது தெரிந்தால் என்ன பயன் ?''

'' என்ன ஜோதி ! கல்லூரிக்குப் போகும் நீ சின்னப்பிள்ளை போல் கேட்கிறாயே ? நம் நாட்டுக்கு எந்தெந்தப் பொருள் எவ்வளவு எவ்வளவு தேவை? அவற்றில் எவ்வளவு கிடைக்கிறது ? குறைவா ? கூடுதலா ? தேவையானால், அவற்றை உற்பத்தி செய்ய வேண்டுமா ? அல்லது இறக்குமதி செய்ய வேண்டுமா ? என்றெல்லாம் அரசும் மக்களும் அறிய இப் புள்ளி விவரங்கள் உதவுமல்லவா !

''வியாபாரிகள் திடீரெனச் சாமான்கள் விலைகளை ஏற்றி விடுகின்றனர். மக்கள் கூக்குரலிடுகின்றனர். இவ்வாறு அங்காடிகளிலே விலை ஏற்றப் பட்டது முறையா என்பதை ஆய்ந்து அரசுக்குத் தெரிவிப்பது இப் புள்ளி விவரத் துறையின் பணிகளில் ஒன்று. இதற்காக அங்காடிப் புலனாய்வுத் திட்டம் என ஒன்று இருக்கிறது ; ஆய்வாளர் அங்காடிகட்குச் சென்று விலைகளை ஆய்ந்தறிந்து அரசுக்கு அறிவிக்கின்றனர். பொருள்களின் விலை அன்றாடம் வானொலியிலும் ஒலி பரப்பப்படுகிறது ; இன்று நீ கேட்ட கத்தரிக்காய் விலை அறிவிப்பு, அதுதான் !

''தானிய உற்பத்திச் செலவு என்னகிறது என்பதை இத் துறையினர் ஆய்கின்றனர் ; இதனால் நெல் முதலியவற்றின் கொள்முதல் விலையை அரசு நிர்ணயிக்க முடிகிறது.

''இன்னும் ஒரு விஷயம். தொழில் துறையிலும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. 50-க்கு மேற்பட்டவர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களைப்பற்றிய புள்ளி விவரங்கள் ஆண்டுதோறும் திரட்டப்படுகின்றன. இதன் வாயிலாகத் தமிழகத்தில் ஏறக்குறைய 65 சத வீதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளிகளின் விவரங்கள் கிடைக்கின்றன. அன்றியும் தமிழகத்திலே ஆண்டுதோறும் தொழில்களில் ஈடுபட்டிருப்போர் எண்ணிக்கை, உற்பத்திக்கான மூலதனம், மொத்த உற்பத்தியின் மதிப்பு, அதன் மூலம் கிடைத்த லாபம் முதலியன கணிக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக ஆலைத் தொழிலில் 1967-ம் ஆண்டில் 7,484 லட்ச ரூபாய் உற்பத்திக்கென முதலீடு செய்யப்பட்டது. அதன் விளைவாக ஏற்பட்ட உற்பத்தியின் மதிப்புமொத்தம் 17,296 லட்சம் ரூபாய். எனவே, 3,207 லட்ச ரூபாய் லாபமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு தொழிலுக்கும் புள்ளி விவரங்கள் எடுக்கப்படுகின்றன.

''நம் அன்றாட வாழ்க்கைத் தரத்தில், அதாவது விலைவாசிகளினால் நமது வாழ்க்கைச் செலவின் ஏற்ற இறக்கங்களை ' வாழ்க்கைத் தரக் குறியீட்டெண் ' என்று கூறுகிறோம். இக் குறியீட்டெண்கள் தொழிற்சாலைத் தொழிலாளிகளின் ஊதிய நிர்ணயத்திற்குப் பெரிதும் உதவுகிறது.

''மேலும் அரசாங்கத்தின் பொருட்டுப் பல்வேறு திட்டங்களின் பலாபலன்களை ஆராய்ந்து நிர்ணயிக்கும் பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.

''இது தவிர, மக்கட் தொகை ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.''

'' அப்படியென்றால் என்ன அப்பா ?''

'' மக்கள் எங்கெங்கே எவ்வளவு இருக்கிறார்கள்? அவ்வாறு ஓரிடத்தில் கூடுதலாகவும், மற்றோரிடத்தில் குறைவாகவும் இருக்கக் காரணம் என்ன ? இவை அவ்வப்போது மாறக் காரணங்கள் என்ன? என்பவற்றை ஆராய்வது தான். இது தவிர 'மனித சக்தி' ஆய்வும் செய்யப்படுகிறது. இதனால் பிற்காலத்தே நமக்கு ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு மக்கள் ஈடுபடுவார்கள் என்பதை அறிய முடிகிறது. அவ்வாறு முன்னரே அறிந்துகொள்வதன் வாயிலாக இம்மக்கட்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வகையில் திட்டங்கள் வகுக்க இவ்வாராய்ச்சி பெரிதும் உதவுமல்லவா ?

1969-ஆம் ஆண்டு தமிழக அரசு வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட சிறந்த புள்ளி விவரத் தொகுப்பொன்றை இத்துறையினர் வெளியிட்டனர். இது புள்ளிகள், வரைபடங்கள் வாயிலாகத் தமிழகத்தின் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்தை எடுத்து விளக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

தமிழக வருமானம், வேளாண்மை, போக்குவரத்து, வாணிபம், முதலிய துறைகளில் சீரிய முன்னேற்றம் இவ் வெளியீட்டில் விளக்கப்பட்டிருக்கிறது.

இவையன்றியும், நாட்டின் பல்வேறு துறைகளிலுள்ள புள்ளி விவரங்கள் அனைத்தையும் இவ்விலாகாவிலிருந்து பெறலாம் ! இப் புள்ளி விவரங்கள், வணிகப் பெருமக்கள், பொதுமக்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், தொழிலாளர் சங்கங்கள், உழவர் பெருமக்கள், ஆகியோருக்குப் பயன்படுவதற்கு மேலாக மாநில அரசு செம்மையாய் நடைபெறச் சிறந்ததோர் கலங்கரை விளக்கம் போல இப் புள்ளி விவரத் துறை பொலிகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.



" காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையிலே, பிற நாடுகளுக்கு மரக்கலங்களின் மூலம் அனுப்புவதற்காகச் செந்நெல் மணிகள் மலை மலையாகக் குவித்துவைக்கப் பட்டிருந்தனவாம்! தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று புகழப்படும் தஞ்சை மாவட்டத்தில் கரிகால் சோழன் காலத்திலே வேலி ஆயிரம் கலம் நெல் விளைந்ததாம் !!

அன்று தமிழகம் பல நாட்டினரின் பசிப் பிணியைத் தீர்த்து வைத்து, உலகெங்கும் ஒளி பரப்பிக் கொண்டிருந்தது ! தமிழகத்தின் உழவர் பெரு மக்கள் பசிப் பிணி மருத்துவர்களாக விளங்கி வந்தனர். அன்று உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் இல்லை ; இரசாயன உரங்கள் இல்லை; பூச்சிகளையும், நோய்களையும் தடுத்திடும் மருந்துகள் இல்லை. ஆயினும் இயற்கை எருவையும், காவிரி ஆற்றின் நீரையும் கொண்டே அன்று தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்கள் ஒரு வேலி நிலத்தில் 1000 கலம் நெல் விளைவித்துள்ளார்கள்!

ஆனால் காலப் போக்கினாலே, இயற்கையின் மாறுபாடுகளினாலே 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாக்' காவிரியும் பொய்த்து விட்டது ! தஞ்சை மாவட்டத்தின் மண்வளமும் குன்றிவிட்டது! இதன் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தின் நெல் உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது ; களஞ்சியங்கள் நிரம்பவில்லை ; பிற நாட்டினரின் பசிப் பிணியைப் போக்கியவர்கள், பிற நாட்டு அரிசியை எதிர்பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டது. சுருக்கமாகச் சொல்லப் போனால் தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்களைப் பற்றுக்குறை என்னும் இருள் கவ்விக்கொண்டது என்றே சொல்லலாம்.

அந்த இருளிலும் உணவு உற்பத்திப் பெருக்கம் என்ற பெரும் பயணத்தை, நெடுநாட்களாகவே தளரா முயற்சியுடன் தொடர்ந்து வருகின்றனர் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள். இருட்டிலே பெரும் பயணம் செய்து கொண்டிருந்தவர்களுக்கு ஆடுதுறை-27 என்ற விண்மீன் வழிகாட்டியது! ஆனால் பயணம் தொடரத் தொடர ஆடுதுறை-27 என்ற விண்மீனின் ஒளியும், சரிவரத் தெரியவில்லை. ஆனாலும் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருந்தனர். அந் நிலையிலே ஐ. ஆர். 8 என்னும் நிலவு தோன்றியது! அதுகண்ட பயணிகள் (உழவர் பெரு மக்கள்) பெரு மகிழ்ச்சி அடைந்தனர்.

உணவு உற்பத்திப் பெருக்கம் என்ற பயணத்தை ஐ.ஆர்.8 என்னும் நிலவின் ஒளியிலே சற்றுச் சுறுசுறுப்பாக மேற்கொண்டனர். ஆனால் நிலவு ஒளியிலே நீண்ட நேரம் நடந்து செல்வது சலிப்பை ஏற்படுத்தியது: சீக்கிரம் பகலவன் தோன்ற மாட்டானா ? ஒளி கிடைக்காதா ? நம் பயணம் வெற்றி பெறாதா ? இத்தகைய எண்ணங்களுடனும், ஏக்கத்துடனும் அவர்கள் பயணம் செய்து கொண்டே இருந்தனர்.

அவர்களின் ஏக்கத்தைப் போக்கிட 'விடிவெள்ளி' தோன்றிவிட்விட்டது ! விடி வெள்ளி தோன்றி விட்டாலே விடியப் போகிறது என்பது உறுதியே ! விரைவில் உதய சூரியன் தோன்றுவான் ! ஒளி கிடைத்துவிடும் ; அதன்பின் தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்கள் 'உணவு உற்பத்திப் பெருக்கம்' என்ற பயணத்தில் வெற்றி பெற்று விடுவார்கள். அந்த விடி வெள்ளியாக நான் தோன்றியுள்ளேன் ! "

இந்தப் பேச்சைக் கேட்டு, அனைத்து நாட்டு நெல் ரகங்களின் கருத்தரங்கிற்கு வருகை தந்திருந்த எல்லா நெல் ரகங்களும் தங்கள் இருக்கையில்



நிமிர்ந்து உட்கார்ந்தனர். ஆளைப் பார்த்தால் மிகவும் குள்ளமாய் இருக்கிறான்; ஆனால் அவன் பேச்சைப் பார்த்தால் பெரும் செயல் வீரன் போலிருக்கிறதே! இவன் யாராயிருக்கும் என்று ஒவ்வொரு ரகமும் பக்கத்தில் இருந்த ரகங்களிடம் கேட்க ஆரம்பித்தன. இதனால் கருத்தரங்குக் கூடத்திலே சிறிது சத்தம் ஏற்பட்டது. சத்தம் எழுந்ததால் பேச்சாளரின் பேச்சிலே தடை ஏற்பட்டது. பேச்சாளர் சத்தம் ஏற்பட்ட காரணத்தை அறியக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கியவரை நோக்கினார். அதைப் புரிந்து கொண்ட தலைவர் ''தயவுசெய்து அனைவரும் சத்தம் போடாமல் இருக்கும்படிக் கேட்டுக் கொள்கின்றேன். அப்பொழுது தான் பேச்சாளரின் கருத்துக்களை நாம் அறிய இயலும்'' என்றார்.

அப்பொழுது ஜப்பான் நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு நெல் எழுந்து, ''தலைவர் அவர்களே, பேச்சாளர் யார் என்ற விவரம் அறியவே தற்பொழுது சற்றுக் கூச்சல் ஏற்பட்டுவிட்டது. அதற்காக வருந்துகின்றேன். பேச்சாளர் யார் என்ற விவரங்களைக் கூறி விட்டு மேலே தொடர்ந்து பேசும்படிக் கேட்டுக் கொள்கின்றேன்'' என்றார்.

உடனே தலைவர் எழுந்து, ''பிரதிநிதிகளே பேச்சாளரைப் பற்றி அறிமுகம் செய்து வைக்காமைக்கு வருந்துகின்றேன். பேச்சாளர் இது போன்ற கருத்தரங்கிற்குப் புதியவராதலின், அவருக்குத் தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொள்ளும் பழக்கம் தெரிந்திருக்க நியாயமில்லை. எனவே பேச்சாளரை, முதலில் அவரைப் பற்றிக் கூறுமாறு கேட்டுக் கொண்டு, பின் பேச்சைத் தொடருமாறு கேட்டுக் கொள்கின்றேன்'' என்றார்.

பேச்சாளர் பேச்சைத் தொடங்கத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு 'மைக்' கின் அருகில் நெருங்கி நின்று, ஒரு கையால் 'மைக்'கைப் பிடித்துக்கொண்டு கம்பீரமாகப் பிரதிநிதிகளைப் பார்த்துவிட்டுப் பேச ஆரம்பித்தார்.

''நண்பர்களே! என் பெயரை அறிய அனைவரும் ஆவலுடன் உள்ளீர்கள் என்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் நான் இப்பொழுது என் பெயரைச் சொல்ல மாட்டேன். என் பெயரைக் கடைசியில் தான் வெளியிட விரும்புகின்றேன். அதுவரை என் பெயர் 'சஸ்பென்ஸ்' ஆக இருக்கும். அன்புள்ளவர்களே! நான் யார் என்று அறிய ஆர்வம் காட்டாதீர்கள்! நான் என்ன சொல்கிறேன் என்பதைச் சிந்தியுங்கள்! பேரறிஞர் சாக்ரட்டீஸ் சொன்னது போல் யார் சொன்னார், எவர் சொன்னார், என்று பார்க்காமல், என்ன சொன்னார் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதைத்தான் என் நாட்டின் பேரறிஞர் அண்ணாவும் வலியுறுத்தி வந்தார். எனவே என் கதையைக் கேளுங்கள். என்னைப் பற்றி அறிந்து கொண்டால், அது உங்களுக்கும், என் நானிலத்திற்குமே நன்மை பயக்கும். நான் கூறுவது தற்புகழ்ச்சி போல் தோன்றலாம். ஆனால் உண்மையைக் கூறுவது தவறாகாது. எனவே, என் பெயரைக் கூறாமல், பேச்சைத் தொடர அனுமதி அளியுங்கள் என்று உங்களை அன்புடன் வேண்டுகின்றேன்'' என்றார் பேச்சாளர்.

''சரி! சரி! உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்'' என்றனர் தலைவர் உட்பட அனைவரும்.

நீதிபதி : நீ திருட்டுக் குற்றத்திற்காக வருவது இது 200-வது தடவை. உனக்கே கேவலமாக இல்லை ?

திருடன் : கேவலமாகத்தான் இருக்கு! இந்தத் தடவை எப்படியாவது மாட்டிக்கக் கூடாதுன்னு ரொம்பத் தந்திரமாத் திருடுனேனுங்க எசமான். ஆனா இந்தப் போலீசுங்க எப்படியோ மடக்கிட்டாங்க.

'' என் கதையைக் கூறுவதற்கு முன்பு பீடிகையாகத் தஞ்சை மாவட்டத்தைப்பற்றியும், அதன் சாகுபடி பற்றியும் சற்று விளக்கமாகக் கூற வேண்டியுள்ளது. தயவுசெய்து கவனமாகக் கேளுங்கள்.

தஞ்சை மாவட்டத்தில் சாகுபடியாகும் நிலத்தின் மொத்தப் பரப்பு 19.15லட்சம் ஏக்கராகும். இதில் பெரும் பகுதி நெல் சாகுபடிக்கே பயன்படுத்தப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் பரம்பரை பரம்பரையாக 3 இலட்சம் ஏக்கரில் குறுவையும், 9 இலட்சம் ஏக்கரில் சம்பாவும், 2.70 இலட்சம் ஏக்கரில் தாளடியும் ஆக மொத்தம் 14.70 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. நான் முன்பே கூறியபடி நாளுக்கு நாள் தஞ்சை மாவட்டத்தின் நெல் உற்பத்தி குறைந்து வந்துள்ளது. சராசரியாக ஏக்கருக்கு ஒரு டன் கூட விளையவில்லை. அந்த நிலையிலே தான் தஞ்சை மாவட்டத்தின் நெல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆடுதுறையிலே ஓர் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைத் துவக்கினர். அதிக உற்பத்திக்கு விதையே மூலகாரணமாக உள்ளதால், ஆராய்ச்சியாளர்கள் ஆடுதுறை-3, ஆடுதுறை-20, ஆகிய குறுவை ரகங்களை வெளியிட்டனர். உழவர் பெருமக்களும் அவைகளின் மகசூல் திறன் கண்டு உளமுவந்து ஏற்றனர்.

அடுத்து, அறிவியல் வளர்ச்சியின் காரணமாகத் தோன்றிய இரசாயன உரங்கள் தஞ்சை மாவட்டத்தில் சிறுகச் சிறுகப் பரவின. அதன் காரணமாகத் தஞ்சை மாவட்ட நெல் உற்பத்தியும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்தது.

இந்நிலையிலே 1960-ஆம் ஆண்டில் 'போர்டு' நிறுவன உதவியுடன் தஞ்சை மாவட்டத்தில் ''தீவிர சாகுபடி மாவட்டத் திட்டம்'' (Intensive Agricultural District Programme) துவக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் உழவர் பெருமக்களுக்கெல்லாம் சாகுபடிப் பருவத்திற்கு முன்பே எந்தெந்தப் பருவத்தில் என்னென்ன ரகங்களைப் பயிரிட வேண்டும், அந்த ரகங்களின் மகசூலைப் பெருக்க எப்படி எப்படி உரமிட்டு மருந்து தெளிக்கவேண்டும், சாகுபடிச் செலவுகளுக்குத் தேவையான கடன் உதவியை எங்கு எப்படிப் பெற வேண்டும் என்றெல்லாம் தீர்மானித்துப் பண்ணைத் திட்டங்கள் (Farm Plan) தயாரிக்கப்பட்டன. இத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேளாண்மை, கூட்டுறவு, நீர்ப்பாசனம், நிலவருவாய், மின்சாரம் ஆகிய பல்வேறு துறையினரும் ஒன்றுபட்டு உழைத்தனர். இந்த ஒருங்கிணைந்த முயற்சிகளின் காரணமாகத் தஞ்சை மாவட்டத்தில் 1960-61-ம் ஆண்டு முதலே ஆண்டு தோறும் பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி பூஞ்சாள மருந்துகள் ஆகியவைகளின் உபயோகம் பெருகி, மகசூலும் பெருக ஆரம்பித்தது.

ஆயினும் ஆராய்ச்சியாளர்களும், உழவர் பெருமக்களும் இரசாயன உரங்களின் முழுப் பயனையும் பெற உரமேற்கும் திறனுடைய சிறந்த ரகம் தேவை என்று உணர்ந்தனர். ஆராய்ச்சியாளர்கள் 'நோரின்-8' என்ற ஜப்பானிய ரகத்தையும், தமிழ் நாட்டின் புகழ் பெற்ற ரகமான ஜி.இ.பி. 24-ஐம் கரு ஒட்டுச் சேர்த்தனர். அதன் பயனாகத் தஞ்சை மாவட்டத்தின் குறுவைக்கு ஏற்ற ஆடுதுறை-27 என்ற விண்மீன் தோன்றியது.

தஞ்சை மாவட்டத்தில் 1964-ம் ஆண்டில் 200 ஏக்கரில் முன்னோடித் திட்டமாக ஆடுதுறை-27 நெல் பயிரிடப்பட்டது; அதில் கிடைத்த மகசூல் நம்பிக்கையூட்டியதன் காரணமாக 1965-66-ம் ஆண்டில் 5,000 ஏக்கரில் பயிரிடப்பட்டது; அடுத்த ஆண்டில் (1966-67) இரண்டு இலட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டது; ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டு வந்த நிலத்தை இரு போகமாக்கி முதற் போகத்தில் ஆடுதுறை-27 நெல்லைப் பயிரிட்டதால், நான்காவது ஆண்டிலேயே (1967-68) ஆடுதுறை-27 நெல் 4.25 இலட்சம் ஏக்கரில் பரவியது. ஆடுதுறை-27 நெல் உழவர் பெருமக்களின் வருமானத்தைப் பெருக்கி, வாழ்வை உயர்த்தியது.

இருட்டிலே நடப்பவர்களுக்கு விண்மீனின் ஒளிகூட வழி காட்டும் என்பது போல, ஆடுதுறை-27 என்னும் விண்மீனின் ஒளியில் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள் உணவு உற்பத்திப்பெருக்கம் என்ற பயணத்தைத்தொடர்ந்தனர். காலப் போக்கிலே விண்

அது பெரிய குடும்பம். ஆண்டு தவறாமல் அம்மா ஆஸ்பத்திரிக்குப் போய் குழந்தை பெற்றுத் திரும்புவது வழக்கம்.

இந்தத் தடவை குளிர்சுரத்திற்காக அப்பா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

அவர்களது ஐந்து வயதுப் பையன் அம்மாவிடம் கேட்டான், "அப்பா எப்போம்மா பாப்பாவுடன் திரும்புவார் ?"

மீனின் ஒளி முழுவதும் பயணம் செய்பவர்களுக்குக் கிட்டவில்லை. அவ்வப்போது மேகக் கூட்டங்கள் திரண்டு, விண்மீனின் ஒளியை மறைத்து விடுகின்றன. ஆமாம். ஆடுதுறை-27 என்ற விண்மீனின் முழு ஒளியையும் (மகசூலையும்) பெற முடியாமல், மேகம் (மழை) தடுத்து விடுகிறது.

ஆடுதுறை-27 ரகம் வாளிப்பான கதிர்களைக் கொண்டு மகசூல் அதிகம் கொடுத்தாலும், தண்டு வலுவின்றி அறுவடைச் சமயத்திலே சாய்ந்து விடுகிறது. அறுவடை நேரத்திலே பெய்யும் ஐப்பசி மாதப் பெரு மழையினால் கதிர்கள் நீரிலே மூழ்கி மணிகள் முளைத்துச் சேதம் ஏற்படுகின்றன. எனவே அதிக உரமிட்டுப் பயனடைய இயலாத நிலை ஏற்பட்டது. இது தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களுக்கு ஒரு பெரும் கவலையைத் தோற்றுவித்தது. அதிக உரமிட்டாலும் பயிர் சாயாத ஒரு ரகம் கிடைக்காதா என்று ஏங்கினர். ஆனால் பயணத்தை நிறுத்தாமல் துணிவுடன் தொடர்ந்தனர்.

திடீரென ஒளி அதிகமாகத் தெரியவே, பயணம் செய்பவர்கள் ஆர்வமுடன் ஒளிவந்த திக்கினை நோக்கினர். அந்த ஒளி பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து தோன்றியது.

அந்த ஒளிக்கு உரியவர் இக் தரங்கிற்குத் தலைமை தா. ஐ.ஆர்.8 என்னும் நிலவேய இது வரை வேறெந்த ர அளிக்காத அளவுக்கு அதிக சூல் அளித்து 'அதிசய லெ என்று பெயர் பெற்ற நம் தீ (ஐ.ஆர். 8) அதிகமாகச் சா டாலும் களைத்துப் படுத்து மாட்டார்! அதாவது அதி மிட்டாலும் சாய்ந்துவிட டார்! நீரிலே மூழ்க மாட்ட அப்படி மூழ்கினாலும் நம் தீ அளிக்கும் மணிகள் முளை விடாது! நம் தலைவர் த யின் குறுவைக்கும் சம்பாவு ஏற்றவராக இருந்தார்!'' எ கூறிவிட்டுத் தலைவரைப் பே ளர் நோக்கினார்.

பேச்சாளரின் பாராட்டு கேட்டவுடன் தலைமை தா ஐ.ஆர். 8 ரகம் சற்று க மாக ஆசனத்தில் நிமிர்ந்து கார்ந்தது; பேச்சாளர் மீண் பேச்சைத் தொடர்ந்தார்.

'' ஐ.ஆர் 8 ரகம் பயிர் உணவு உற்பத்தியைப் பெ லாம் என்று எண்ணினர் தஞ் மாவட்ட உழவர் பெருமக் பலர் ஐ.ஆர். 8 ரகம் பயிரிட பெரும் பயனும் அடைந்த ஆனால் எல்லோருக்கும் ஐ.ஆ நெல் பயனளிக்கவில்லை. அ குக் காரணம் பல உள. அவற் முதன்மையானது ஐ.ஆர். 8 தின் வயதேயாகும்'' என்று விட்டுத்தலைமை தாங்கிய ஐ. 8 ரகத்தைச்சற்று ஏளனம பார்த்தார் பேச்சாளர்.

தலைவரின் முகம் வாடிய பேச்சாளர் தலைவரின் காலை வதாகக் கருதிப் பிரதிநிதிக முகத்திலே மகிழ்ச்சிதோன்றி மீண்டும் பேச்சாளர் தொட தார்.

'' ஐ.ஆர் 8 நெல்லின் வ 135 நாட்களாகும். குறுவை ஐ.ஆர். 8 நெல் பயிரிட்ட தாளடி நடவு பின்னால் தள் போகும். இதன் காரணம தாளடிக்குக் கடைசி காலத் போதிய தண்ணீர் கிடைக்க ஜனவரி இறுதியில் மேட்டூர் அ யில் தண்ணீர் நிறுத்தப்ப விடுவதே இதற்குக் காரண கும். எனவே தாளடியைக் கா தில் நடவேண்டியுள்ளது. தா யைக் காலத்தில் நட வே மானால், ஐ.ஆர். 8 நெல்லை

ரக் குழாய்க்கிணறு, கிணறு, ரய்க் கிணறு ஆகிய பாசன ஒகளைக் கொண்டு மேட்டூர் ன திறப்பதற்கு முன்பே றுவிட்டு நடவு செய்து விட ண்டும். இது எல்லா உழவர் ந மக்களுக்கும் சாத்தியமா? ஒநிதிகளே நீங்களே சிந்தித் பார்த்து முடிவு செய்யுங்கள்!

ல்லாயிரக் கணக்கான உழவர் ந மக்கள் 100 முதல் 110 -கள் வயதுடைய ரகங்களைக் வைப் பட்டத்தில் பயிரிட் ல் தான், இரண்டாம் போக ன தாளடியைத் தண்ணீர் தட் பாடின்றிச் சாகுபடி செய்ய யும். எனவே ஐ.ஆர். 8 ல் தஞ்சை மாவட்டத்தின் ரும்பாலான உழவர் பெரு களுக்கு ஏற்றதாக இல்லை.''

பிரதிநிதிகள் பலத்த குரலில் த்தனர். தலைவர் முகம் மிக வாடிவிட்டது. மீண்டும் ச்சாளர் தொடர்ந்தார்.

'' அடுத்து நீர் தேங்கும் நிலங் ல் (வடிகால் வசதியற்ற), ஐ. ர். 8 நன்கு மகசூல் கொடுப்ப லை. தஞ்சை மாவட்டத்தின் ரும்பாலான நிலங்களில், அது குறிப்பாகப் பழைய டெல் ப் பகுதியில் நீர் தேங்கிநின்று கிறது. இதனாலும் ஐ.ஆர். 8 றதாக இல்லை. இது மட்டுமா? னும் ஒரு குறையும் ஐ.ஆர். ரகத்திற்கு உள்ளது. ஐ.ஆர். 8 ரகத்தைப் பயிரிட அதிக உரமும், அதிக மருந்தும் தேவைப்படுவ தால் சாகுபடிச் செலவும் அதிக மாகிறது. அதிகம் செலவுசெய்ய இயலாத ஏழை உழவர்களும் ஐ. ஆர். 8 ரகத்தை விரும்பவில்லை.

அதிகம் செலவு செய்து ஐ.ஆர் 8 ரகம் பயிரிட இயலாத ஏழை உழவர்கள், ஆடுதுறை-27 போன்ற ஒரு நெல் கிடைக்காதா என்று ஏங்கினர்.



ஐ. ஆர். 8 என்னும் நிலவின் ஒளியிலே பயணத்தைத்தொடர்ந் தாலும், நீண்ட நேரத்திற்கு நிலவு ஒளியிலே நடக்க விரும்ப வில்லை தஞ்சைமாவட்ட உழவர் பெருமக்கள். அதாவது நீண்ட நாள் வயதுடைய நம் தலைவரை (ஐ. ஆர். 8) அவர்கள் சாகுபடி செய்ய விரும்பவில்லை! வேண்டா வெறுப்புடன் பயணத்தைத் தொடர்ந்தனர்.

ஆனால் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களின் பயணத் திற்கு வழிகாட்டும் தீவிர சாகு படி மாவட்ட திட்ட அலுவலர் களிடம் ஐ. ஆர். 8 நெல்லைப் போன்று குட்டையான, வலு வுள்ள தண்டுடன் கூடிய, அதிக உரமேற்று அதிகமகசூல்அளிக்கும் தன்மையுடைய, 110 நாட் களுக்குள் விளையக்கூடிய ஒருரகம் கிடைத்தால் தஞ்சையின் மகசூல் திறனைப் பெருக்கலாமே என்ற சிந்தனை தோன்றியது! இனிமேல் தான் என்கதை ஆரம்பமாகிறது கவனமாகக் கேளுங்கள்!

சிந்தனையைச் செயலாக்கினர் தஞ்சை தீவிர சாகுபடித் திட்டத்தைச் சார்ந்த வேளாண் மைத்துறை அலுவலர்கள்! 1969-ம் ஆண்டின் துவக்கத்தில் பல்வேறுவேளாண்மை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், அனைத்து இந்திய நெல் அபிவிருத்தித்திட் டத்திற்கும், ஆடுதுறை—27-ன் வயதுடைய ஆனால் ஐ. ஆர் 8-ன் உருவம் உடைய புதிய நெல் ரகம் கிடைக்குமா என்று வினவப் பட்டது. பல இடங்களிலிருந்து பல்வேறு பரிந்துரைகள் வந்தன. கட்டாக்கிலுள்ள மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனம் (C.R.R.I.), டி. 141 என்ற ரகத்தையும், குட்டையான 'தைச்சுங் நேடிவ்-1' என்ற ரகத்தையும் இணைத்து உருவாக்கிய 'பத்மா' என்ற ரகத்தை அனுப்பியது. அனைத்து இந்திய நெல் அபிவிருத் திட்டத்தினர் ஆடுதுறை—27 ரகத்தையும், 'தைச்சுங் நேடிவ் -1' என்ற ரகத்தையும், இணைத்து உருவாக்கிய சி. ஆர். 84—309 என்ற ரகத்தையும், திருர்குப்பம் 6 (TKM-6) என்ற ரகத்தையும் 'தைச்சுங்நே டிவ்-1' என்ற ரகத்தையும் இணைத்து உரு வாக்கிய ஐ. இ. டி-355 என்ற ரகத்தையும் அனுப்பினர். கோவை நெல் ஆராய்ச்சி நிபு ணர்ஆடுதுறை-27 ரகத்தையும் ஐ.ஆர்..8 ரகத் தையும் இணைத்து உருவாக் கிய கல்ச்சர் 11321 என்ற ரகத்தை அனுப் பினர்.

மேற்படி 4 ரகங்களில் எது சிறந்தது என் பது மட்டுமல் லாமல், தஞ்சையின் பல்வேறு மண்வாகுகளிலும், பல்வேறு பயி ரிடும் பருவங்களிலும் எது சிறந்தது என்றும் தெரியவேண்டி யிருந்தது. கோவையிலோ, கட் டாக்கிலோ, ஹைதராபாத்திலே சிறந்தது என்றால், தஞ்சையிலும் அப்படித்தான் இருக்கும் என்று கண்ணை மூடிப் பின்பற்றாமல், தஞ்சையின் பல்வேறு இடங்களி லும் மேற்படி 4 ரகங்களையும் பயிரிட்டுப் பார்க்க நினைத்தனர்.

தஞ்சை மாவட்டத்திற்கான ஆராய்ச்சியை ஆடுதுறையில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் தான் சாதாரணமாக நடத்துவார்கள். நிறுவன ஆராய்ச்சியையும் கவ னித்துக்கொண்டு, தஞ்சையின்பல் வேறு இடங்களிலும் ஆராய்ச்சி செய்ய ஆடுதுறையில் வசதி போதவில்லை.

எனவே மேற்படி ரகங்களைப் பரிசோதிக்கத் தீவிர சாகுபடித் திட்டத்தின்வேளாண்மைத்துறை அலுவலர்களே முன்வந்தனர். முன்னேடி உழவர்களின் வயலில் 4 ரகங்களையும் பயிரிட்டுப்பார்க்க வேளாண்மை விரிவாக்க அலு வலர்களுக்குப் பயிற்சி அளித் தனர். 1969-ம் ஆண்டு குறு வைப் பட்டத்தில் தஞ்சையின் எல்லா வட்டாரங்களிலுமாகச் சேர்த்து 120 இடங்களில் ஆடுதுறை-27 நெல்லுடன் ஒப்பிட்டு மேற்படி 4 ரகங்களை யும் பயிரிட்டுப் பார்க்கப்பட்டது. ஒரு பகுதியில் ஆடுதுறை- 27 நெல்லுக்குப் பரிந்துரைக்கப்படும் உர அளவிலும், மற்றொரு பகுதி யில் ஐ. ஆர்-8 நெல்லுக்குப் பரிந்துரைக்கப்படும் உர அள விலும் இரசாயன உரமிட்டு, அவைகளின் உரமேற்கும் திறனை ஆராய்ந்தனர்.

கல்ச்சர் 11321 என்ற ரகமே எல்லாவகையிலும் சிறந்தது என்பது புலனாகியது. அதன் பின்பு ஒவ்வொருவோளாண்மைக் கோட்டத்திலும், 4 ரகங்களையும் சோதனையாகப் பயிரிட்டுப் பார்த்த உழவர் பெருமக்களும், வேளாண்மை விரிவாக்க அலு வலர்களும்கொண்ட கருத்தரங்கு கள் நடைபெற்றன. அக்கருத் தரங்குகளிலெல்லாம் கல்ச்சர் 11321 என்ற ரகமே சிறந்தது என்று தீர்ப்பு வழங்கினர். ஏனெ னில் கல்ச்சர் 11321 என்றரகம், மற்ற ரகங்களைக்காட்டிலும் அதிக மகசூல் அளித்ததோடு, ஆடு துறை-27-க்குப் பரிந்துரைக்கப் படும் உர அளவில் 12·6 சதமும், ஐ.ஆர். 8-க்குப் பரிந்துரைக்கப் படும் உர அளவில் 25·5 சதமும் ஆடுதுறை 27ரகத்தைவிட அதிக மகசூல் கொடுத்தது.

எனவே தமிழ்நாடு வேளாண் மை ஆராய்ச்சிக் குழுவினர் கல்ச்சர் 11321 என்ற ரகத்தை கோ-33 என்று அங்கீகரித்தனர். ஆனால் உழவர் பெரு மக்களோ, உழவுக்கு முத லிடம் அளித்து உழவர் பெருமக் களின் வாழ்வை உயர்த்த முய ன்றுவரும் தமிழ் நாடு முதலமைச் சரின் பெயரை யொட்டிகல்ச்சர் 11321 க்கு 'கருணை' என்று செல்லப் பெய ரிட்டனர்.

'' அந்தக் 'கருணை' ரகம் தான் நான்!'' என்று பேச்சா ளர் கூறியதும் பலத்த கை யொலி எழுந் தது. சற்று நேரத்திற்குப் பின்னர் 'கருணை' மீண்டும் பேச்சைத் தொடங்கியது.

'' அன்பு நண்பர்களே! இறுதி யாக ஒரு சிறிது கூறி என் சிற் றுரையை முடிக்க விரும்புகின் றேன். நான் குட்டையானவன். நம் தலைவரைப் போன்றுசெங்குத் தாகவே நிற்பேன். எந்த மழை யிலும் சாய மாட்டேன். கதிரில் ஆடுதுறை-27 போன்று தொங்கு வேன்.

என்கதிரில் உள்ள 1000 மணிகளை நிறுத்துப்பார்த்தால் 17·4 கிராம் இருக்கும். 72·6சதம் அரிசி கொடுப்பேன். என் அரிசி வெண்மையாகவும், சாப்பாட்



டிற்கு ஏற்றதாகவும் இருக்கும். நம் தலைவரிடம் 9·4 சதம் புரதச் சத்து தான் உள்ளது. ஆடுதுறை -27 ரகத்திடம் 9·62சதம் புரதச் சத்து உள்ளது. ஆனால் என்னிடம் 10·58 சதம்புரதச்சத்து உள்ளது!

ஏழை உழவர்கள் ஆடுதுறை-27 நெல்லுக்கு உரமிடும் அளவு இட்டாலும், பணக்காரர்கள் ஐ.ஆர். 8-க்கு உரமிடுவதுபோல் இட்டாலும் ஏற்றுக்கொண்டு, உழைப்புக்குத் தகுந்த கூலி கொடுப்பது போல், அவரவர்கள் உரமிட்டதற்குஏற்ப மகசூல் கொடுப்பேன்! இந்தஆண்டில் ஏறத்தாழ 20 000 ஏக்கர்களில் என்னைப் பயிரிட்டார்கள். நான் ஆடுதுறை-27 நெல்லை விட ஏக்கருக்கு 4½ மூட்டை அதாவது ரூ.128·00 அதிக வருமானம் தான் கொடுப்பேன் என்று என் தகுதியைக் குறைத்தே சொன்னார்கள். ஆனால் நான் விடுவேனா? 19—10—1970 தேதி வரை கிடைத்த பயிர் அறுவடைச் சோதனைகளின்படி, ஏக்கருக்கு சராசரியாக 1·94 டன் மகசூல் கொடுத்துள்ளேன் என்று தீவிர சாகுபடித் திட்ட இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அவர்கள் கூறுவதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன், ஏனெனில் அவர்கள் என் திறமையைக் குறைத்தே மதிப்பிடுகிறார்கள். அவர்கள் கூறுவதைவிட அதிகமாக நான் மகசூல் கொடுத்துள்ளேன் என்பதை விளக்கிடத் தகுந்த ஆதாரமாக அதிக மகசூல் பெற்றுள்ள சில உழவர் பெருமக்களையும் இக்கரத்தரங்கிற்குக் கூட்டிவந்துள்ளேன். இடைவேளைக்குப் பின் அவர்களை விசாரித்து என் திறமையை நீங்கள் அறிந்து கொள்ளலாம். தீவிர சாகுபடித் திட்ட இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் கூறுவதையே நீங்கள் ஒப்புக் கொண்டால் கூட ஆடுதுறை-27ரகத்தைவிட நான் ஏக்கருக்கு 600கிலோவுக்குமேல் அதிக மகசூல் கொடுக்கின்றேன். ஆடுதுறை 27-ன் சராசரி ஏக்கர் மகசூல் 1·3 டன்தான். எனவே ஏக்கருக்கு அதிக மகசூல் 600 கிலோ என்று எடுத்துக் கொண்டு, தஞ்சைமாவட்டத்தில் ஆடுதுறை 27 பரப்பு (5·10 லட்சம் ஏக்கர்) முழுவதிலும் என்னைப் பயிரிட்டால், உபரியாக ஏறத்தாழ 3 இலட்சம் டன் அதிக நெல் கிடைக்கும்! எனவே உணவு உற்பத்திப் பெருக்கம் என்ற பயணத்தை மேற்கொண்டுள்ள தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள் என்னை ''விடிவெள்ளி'' யாகவே கருதுகின்றனர். அனுசரணை ஆராய்ச்சி மூலம் என்னை உருவாக்கியவர்கள் அடுத்து சம்பாவிற்கும் ஏற்றரகத்தை உருவாக்க விருக்கிறார்கள். சம்பாவுக்கு ஏற்ற ரகம் வெளிவந்தவுடன் தஞ்சை மாவட்டத்தில் பகலவன் தோன்றி விடுவான். தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களின் நெடும் பயணம் வெற்றி பெற்றுவிடும்! இத்துடன் என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.''

(பலத்தகையொலி)

கடலைப் பருப்பு உற்பத்தி பெருகிட

தமிழ் நாட்டில் சுமார் 2,006 ஹெக்டர் நிலப் பரப்பில் கடலை (கொண்டைக் கடலை) சாகுபடி செய்யப்படுகிறது. தற்பொழுது தமிழ் நாட்டில் கோயம்புத்தூர், சேலம் ஆகிய இரு மாவட்டங்களில் மட்டுமே பெரும்பரப்பில் கடலை பயிரிடப்படுகிறது. ஏறத்தாழ, 1,000 டன் கடலைப்பருப்பு ஆண்டு தோறும் தமிழ் நாட்டில் உற்பத்தியாகிறது. இந்த உற்பத்தி தமிழ் நாட்டின் தேவையை எப்படி ஈடு செய்ய முடியும்? எனவே தான் வட மாநிலங்களிலிருந்து பெருமளவில் கடலைப் பருப்புகளை இறக்குமதி செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம். இதனால் தான் கடலைப்பருப்பு விலை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது!

தமிழ் நாட்டிற்குத் தேவையான கடலைப்பருப்பு முழுவதையும் நாமே உற்பத்தி செய்ய முடியாதா? முடியும்! எப்படி?

ஒவ்வொரு உழவர் பெருமகனும் தன் குடும்பத்திற்கு வேண்டிய கடலைப் பருப்புகளைத் தன் நிலத்திலேயே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். கடலைச் சாகுபடி செய்ய இயலாத மாவட்டங்களின் தேவையை ஈடு செய்ய கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி மாவட்ட உழவர் பெருமக்கள் மேலும் பெரும்பரப்பில் கடலைச் சாகுபடி செய்ய முன்வரவேண்டும். கடலைப் பருப்பின் உற்பத்தியைப் பெருக்கக் கீழ்க் கண்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு கடலைச் சாகுபடி செய்தால், கடலைப்பருப்பு இறக்குமதியை வெகு விரைவில் நிறுத்திட இயலும்!

மானாவாரியாகக் கடலை விதைக்க நவம்பர் மாதம் மிகவும் ஏற்றது. இம்மாதத்தில் 'கோ-1' என்னும் பொறுக் விதையைச் சாகுபடி செய்தால் கடலைப் பருப்பின் உற்பத்தியைக் கணிசமாக உயர்த்திடலாம்.

'கோ-1' கடலையின் வயது 100 நாட்கள். ஹெக்டருக்கு 35 கிலோ விதை விதைக்க வேண்டும். ஹெக்டருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு, 22 கிலோ மணிச்சத்து கொடுக்க 138 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். விதைகளை 45 சென்டி மீட்டர் × 20 சென்டி மீட்டர் இடைவெளியில் விதைப்பது நல்லது.

கடலையின் முக்கியப் பூச்சி காய்த்துளைப்பான். இதைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு 25 கிலோ டி.டி.டீ. 5 சதத் தூளைத் தூவ வேண்டும். அல்லது 0·1 சத டி.டி.டீ. மருந்தை (1 கிலோ நனையும் டி.டி.டீ., 50 மருந்தை 500லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கலாம். அல்லது கார்போபினைத்தியான் 2 சதத் தூளை ஹெக்டருக்கு 25 கிலோ வீதம் தூவலாம்.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு கடலைச் சாகுபடி செய்து கடலைப் பருப்பின் உற்பத்தியைப் பெருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மறைந்த மாமேதை நேருவின் தோற்றங்கள்



யும் முடித்துக்கொண்டுசென்னை திரும்பினேம்.

தற்பொழுது தஞ்சைமாவட்டமெங்கும் சுமார் 5·10 இலட்சம் ஏக்கரில் ஆடுதுறை-27 பயிரிடப்பட்டு வருகிறது. ஆடுதுறை-27 ஏக்கருக்கு சராசரியாக 1·3 டன் மகசூல்தான் கொடுத்துள்ளது. ஆனல் 'கருணு' நெல் ஏக்கருக்கு சராசரியாக 1·94 டன் மகசூல் அளித்துள்ளது. 'கருணு' நெல் ஆடுதுறை-27-ஐ விட ஏக்கருக்குச் சராசரியாக 600 கிலோ அதிகமாக மகசூல் கொடுக்கும் என்பது தெளிவாகியுள்ளது. எனவே, 5·10 இலட்சம் ஏக்கர் பரப்பிலும் 'கருணு' பரவும் போது ஏறத்தாழ 3 இலட்சம் டன் நெல் அதிகமாகக் கிடைக்கக்கூடும் என்று புகைவண்டியில் வரும்போதே கணக்கிட்டுக் கொண்டிருந்தேன்.

"1972 க்குள் பிற மாநிலத்திற்கும், பிற நாடுகளுக்கும் அரிசி அனுப்பும் அளவுக்குத் தமிழ்நாடு முன்னேறும்" என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் கூறியது எனக்குத் திடீரென நினைவுக்கு வந்தது. எதிர்காலம் பற்றி அண்ணு அவர்களின் கணிப்பு எவ்வளவு உண்மை என்பதை எண்ணி வியப்பிலாழ்ந்தேன்! அண்ணுவின் தீர்க்கதரிசனத்தை எண்ணியதும் என் கண்களில் நீர் மல்கியது. என் பயணம் தொடர்ந்தது. பயணத்தின் முடிவாக இக் கட்டுரையும் பிறந்தது!

(மாணிக்கம்).

11–8–70 அன்று 75 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாகத்தூவினராம். அவர் 3 முறை பயிர்ப் பாதுகாப்பும் செய்தாராம்.

அவர் 1-7-70 அன்று நாற்றங்காலில் மருந்து தெளித்ததாகவும், 2-8-70 நடவு வயலில் முதல் முறை மருந்து தெளித்ததாகவும், 21-8-70 அன்று இரண்டாம் முறை மருந்து தெளித்ததாகவும், 11-9-70 அன்று அதாவது விதைத்த 84-ம் நாளில் மருந்து தூவியதாகவும், கூறுகிருர். 6-8-70 அன்றும், 25-8-70 அன்றும் களை எடுத்ததாகவும் கூறுகிருர்.

அந்த தேசிய செயல் விளக்கத் தளையை (1 ஏக்கர்) பல உழவர் பெருமக்களின் முன்னிலையிலும் பத்திரிகை நிருபர்களின் மத்தியிலும் அறுவடை செய்யப்பட்டதாகவும், அதிலிருந்து 3,497·5 கிலோ மகசூல் கிடைத்ததாகவும் திரு. பழனிசாமி பெருமிதத்துடன் கூறினர்.

" கருணுநெல் தஞ்சை மாவட்டத்தில் ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கப் போகிறது. பொதுவாக மேட்டூர் அணை காலந் தாழ்ந்தே திறக்கப்படுவதால், ஆடுதுறை-27 நெல்லின் சாகுபடியைக் காலந் தாழ்ந்தே மேற்கொள்ள நேரிடுகிறது. ஐப்பசி மழையில் ஆடுதுறை-24 நெல் சேதமுற்றே வந்தது. இதனுல் ஏற்பட்ட சேதம் கண்டு தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்கள் ' வெண்ணை திரண்டு வரும் போது தாழி உடைந்த ' கதையாகப் போய்விடுகிறதே என்று கவலைப்பட்டு வந்தனர். எங்கள் கவலை தீர்க்க வந்த 'கருணு' வின் புகழ் விரைவில் பரவும் " என்ருர் திரு. பழனிசாமி.

' கருணு நெல் பயிரிட்டு அதிக மகசூல் விளைவித்த அவருக்குத் ' தமிழரசு ' சார்பில் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துப் பேட்டியையும், படப் பிடிப்பை

திரு பழனிசாமி அவர்கள் பயிரிட்டிருந்த 'கருணு'வைப் பார்த்து பல உழவர் பெருமக்களும், அலுவலர்களும் பாராட்டியுள்ளனர் (வட்டத்திற்குள் தெரிபவரே திரு பழனசாமி).

குற்றாலத்துப் பழப்பண்ணையில் மங்குஸ்தான் பழம் அபூர்வமாகக் கிடைக்கும் விந்தையையும், மூல வியாதிக்கு மிக முக்கியமென்பதையும், பயன் மிகு பருத்தி விளைவிக்க ஏற்பாடு செய்ய முன் ஆலோசனைகளையும் எடுத்துக் காட்டிய விடத்து, வலியிழந்தவன் வேகம் பெறுவான் என்பது உறுதி.

—பெ.சு. தியாகராசன்,
அருப்புக்கோட்டை.

கவிஞர்களுக்கோர் ஏடு!

'நல்லரசைப் பெற்றோமே நாம்' ஈற்றடி வெண்பாக்கள் அனைத்தும் கடைந்தெடுத்த நன் முத்துக்கள். இம் முத்துக்களுள்ளும் தலையாய ஆணி முத்தைத் தெரிந்தெடுப்பதில் தாங்கள்—நீதியை நிலைநாட்ட—எத்துணை ஈடுபாடு செலுத்தியிருக்க வேண்டும் என்பதை நினைக்க நெஞ்சு சிலிர்க்கிறது.

இப்பகுதியின் மூலம் குடத்து விட்ட விளக்காயிருக்கும் கவிஞர் பெருமக்களை வெளிக்கொணரும் 'தமிழரசு', 'இலக்கியத்தின் விடி வெள்ளி' யாகுமென்று சொன்னால் நூற்றுக்கு நூறு விழுக்காடு உண்மையேயாகும். 'தமிழரசு', தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் ஒவ்வொருவரும் படித்துப் பெருமைப் படக்கூடிய 'தமிழ்' ஏடாகும்,

—ச.ஆ. கேசவன், கு.கழுகாசல
புரம்.

கூகம் என்று பெயர் சொல்லுவோம்'

இலக்கியம் கண்டது கூகமடா
இடையில் வந்தது கூவமடா
அலட்சியம் இன்றிப் பெயர்சூட்ட
அரசும் துணிந்திட
வேண்டுமடா
கண்டோம் இதுவரை கூவமதை
கேட்டோம் பழமைக் கூகமதை
தந்தால் நல்லது தமிழரசே •
தாரணி போற்றும் எமதரசே.

—திருச்சி இரட்டையர்.

மருந்துபோல் உதவும் 'தமிழரசு'

'பற்களைப் பாதுகாப்பது எப்படி' என்னும் கட்டுரை கண்ணுற்றேன்! பற்களைப் பாதுகாக்காவிடில் அதனால் ஏற்படும் தீமைகளையும், நிவர்த்தி செய்யும் முறைகளையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கும் விதம் கண்டு வியப்புற்றேன். மக்களின் உடல்நலம் பேணலில் நடமாடும் மருத்துவமனையாக விளங்கிவரும் தமிழரசு இதழில் மக்களுக்கு நன்மை தரும் உடற்கூறு மருத்துவக் கட்டுரைகளை அடிக்கடி வெளியிடுவது போற்றுதலுக்குரியது. மருந்துபோல் உதவும் தமிழரசு வாழ்க.

—த. சிவசுப்பிரமணியன்,
மண்ணச்சநல்லூர்.

பார்த்தோம்

படித்தோம்



கதைப் போட்டி துவக்கினால் என்ன?

அரசின் சாதனைகளையும், தொடர்ந்து அது ஆற்றிவரும் பணிகளையும் சிறப்பாகத் தொகுத்து வெளியிடப்படும் 'தமிழரசு' தமிழகத்தின் எல்லா நூலகங்களிலும் இடம் பெற வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாட்டை வளர்க்கும் கருத்தை மையமிட்டுப் பல சிறு கதைகள், தேசிய சேமிப்பிற்குப் போட்டிக் கதைகள் ஆரம்பிக்கலாமே!

—என்.பி.எஸ். மணியன்,
திருத்தணி.

கடல் கடந்தார்க்கும் களிப்பு தரும் ஏடு

'தமிழரசு' இதழ்" மிகவும் பிரமாதமான பகுதிகளை ஏந்தி வருவதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தென்னகத்தின் ஆட்சி முறைகளையும், கல்வி முன்னேற்றத்தையும், தொழில் மேம்பாட்டையும், சுற்றுப் பயணிகளைக் கவரும் இடங்களையும் விளக்கிடும் கருத்து மிக்க கட்டுரைகளும், முதல்வரின் இனியவை இருபதும், என்போன்ற மலேசிய நாட்டில் வாழும் பல இலட்சக் கணக்கான தமிழர்களை மகிழ்ச்சி அடையச் செய்கின்றன.

—மு. செல்லத்துரை, மலேசியா.

பயன் தந்த வேண்டுகோள்

நம் தமிழக அமைச்சர்கள் பழனிப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்யவந்தபோது, 'பாலாறு — புரந்தரலாறு' திட்டத்தை நிறைவேற்றிட வேண்டினோம். தமிழ்ப்பாட்டால் வாழ்த்தினோம். 'தமிழரசில்' அத்திட்டம் செயல்பட வருவது குறித்துப் பாராட்டாத மக்கள் இல்லை.

வாழ்க தமிழ (க)ரசு.

—புலவர் மு. சிக்கந்தர்,
கோரிக்கடவு.

அரவணைக்கும் அரசு.

இரத்தலின் இழிவையும், மானத்தொடு வாழ்தலின் சிறப்பையும் எடுத்துக் கூறி அவர்களது வாழ்வு மலர்ச்சியடைய, மானத்துடன் சமூகத்தில் வாழப் பல தொழில்களில் பயிற்சியும் அளித்துப் பிச்சைக்காரர்களை நல்வழிக்குத் திருப்பும் நமது அரசை என்னவென்று சொல்ல?

—கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

'போட்டிகள்' பெருகுக!

'தமிழரசு' குடும்ப நல இதழாக அமைந்து விட்டதாலும், அதையே நாட்டு நல் இதழாக மக்கள் பாவிப்பதாலும், சிறுவர், சிறுமியர், இளைஞர்கள் ஆகியோரது பொது அறிவைத் தட்டியெழுப்ப, கதை, கவிதை, கட்டுரை ஆகியவற்றுக்கான போட்டிகள் நடத்தப்பட வேண்டும் எனப் பொதுமக்கள் சார்பில் அன்புடன் வேண்டுகிறோம்.

—மு.ஞானசேகரன், மறையூர்.



கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எங்கு பார்த்தாலும் பசுமையான தோற்றம்! பசுமையான தோற்றத்திற்கு இடையிலே செந்நிறத்தாலும், பொன் நிறத்தாலும் ஆன சில பகுதிகள் திட்டுத் திட்டாகத் தோன்றின! இவ்வியற்கைக் காட்சி கண்ணிற்குக் குளிர்ச்சியையும், மனத்திற்கு மகிழ்ச்சியையும் அளித்துக் கற்பனையையும் தூண்டிவிட்டது!

பச்சைப் பசேலென்ற பட்டாடை உடுத்தி நிலமகள் என் எதிரே நின்றிருந்தாள்! அவள் உடுத்தியிருந்த பச்சைப் பட்டாடையிலே, செந்நிறத்தால் ஆன சரிகையால் பூவேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது! அந்தச் செந்நிறப் பூக்களின் நடுவில் பொன் மணிகள் தைக்கப்பட்டிருந்தன! நிலமகளின் அழகை என்னவென்று வர்ணிப்பது? இப்படி எண்ணிக் கொண்டிருந்த நேரத்திலே, நாகைப் பட்டிணத்திலிருந்து சிக்கல் நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்த எங்கள் 'வேன்' திடீரென்று நின்றது. அதனால் ஏற்பட்ட அசைவினால் என் நினைவு அலைகள் துண்டிக்கப் பட்டன. வேனை விட்டு இறங்கியதும், எங்களை வயல் வரப்புகளில் அழைத்துச் சென்றார் தீவிர சாகுபடித்திட்ட வேளாண்மைச் செய்தி அலுவலர் திரு மணி அவர்கள்.

பசுமையான தோற்றத்தில் வளர்ந்து வரும் சம்பா நெற் பயிர்கள் தான் நிலமகளின் பச்சைப்பட்டாடை போலவும், விளைந்து தலைசாய்ந்து கிடக்கும் ஆடுதுறை-27 நெல்லின் காட்சி அப்பச்சைப் பட்டாடையிலே செந்நிற சரிகையால் செய்யப்பட்ட பூவேலைப்பாடு போலவும், ஆடுதுறை-27 நெல் வயல்களுக்கு நடுவில் சில வயல்களில் பயிரிடப்பட்டு விளைந்து அறுவடைக்குத் தயாராக நிற்கும் ஐ.ஆர். 8 நெல்லின் காட்சி செந்நிறச் சேலையின் நடுவில் பொன்மணிகளைத் தைத்திருந்தது போலவும் காட்சி அளித்தன!

என்னுடன் வந்தவர்கள் ஐ.ஆர். 8-ன் அழகிலே சொக்கி அதை நோக்கி நடந்தனர்! ஆனால் என்னைக் கவர்ந்தது, ஆடுதுறை 27 நெல் வயலுக்கும் ஐ.ஆர். 8 நெல் வயலுக்கும் இடையிலே செந்நிற மணிகளைக் கொண்டு செங்குத்தாக நின்ற நெற்பயிர்கள் தான்! அப்பயிர்கள் மிகவும் கட்டையாகத் தான் இருந்தன; ஆனால் வாளிப்பான கதிர்களையும், செழுமையான மணிகளையும் கொண்டிருந்தன. காலைக் கதிரவனின் செந்நிற ஒளியிலே, மணிகள் மின்னிக்கொண்டிருந்தன! காலை இளந்தென்றலிலே கதிர்கள்/ தலையசைத்து வரவேற்புக் கூறுவது போல் இருந்தது! கால் சட்டையை சுருட்டி விட்டுக் கொண்டு வயலிலே இறங்கிச் சில கதிர்களை எடுத்துப் பார்த்தேன். அத்தனையும் செந்நிற நன் மணிகள்; ஒரு பதர் கூடக் காணப்படவில்லை. அடுத்து தூர்களில் ஏதாவது பயன் கொடுக்காது உள்ளதா (Unproductive tille என்று பல இடங்களிலே பார்த்துக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது என்னுடன் வந்தவர்கள் "என்ன சார், குட்டையான நெல்லைப் போய் பார்க்கிறீர்களே, இங்கே வந்து இந்த நெல்லைப் பாருங்கள்" என்றனர்.

"நாம் இங்கு வந்துள்ளதே இந்தக் குட்டையான நெல்லைப் படம் பிடிக்கத்தான்" என்றேன். "இதையா சார் படம் பிடிக்கப் போகிறோம்" என்றார் கேமராமேன் ஜெகதீசன்.

"ஆமாம்" என்றேன்.

கேமராமேனின் முகம் வாடி விட்டது. இருப்பினும் கேமராவை வரப்பிலே நிறுத்தி வைத்து எந்தக் கோணத்தில் எடுக்கலாம் என்று பார்த்துக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் வேளாண்மைச் செய்தி அலுவலர் என்னருகில் வந்து "இவர்தான் இந்த வயலின் சொந்தக்காரர். பழனிவேல் முதலியார் என்று பெயர்" என்று ஒரு உழவர் பெருமகனை அறிமுகப்படுத்தினார். நான் வணக்கம் செலுத்தினேன்; அவரும் வணக்கம் செலுத்தினார்.

"நாங்கள் உங்கள் வயலில் விளைந்துள்ள 'கருணா' நெல்லைப் படம் பிடிக்கவும், 'தமிழரசு'பத்திரிகைக்காக உங்களைப் பேட்டி காணவும் சென்னையிலிருந்து வந்துள்ளோம். உங்களுக்குத் தடையேதும் இல்லையே" என்று கேட்டேன்.

"தடைசொல்ல என்னங்க இருக்கு? நல்ல ரகத்தை எங்களுக்கு அளித்த அரசாங்கத்தின் முயற்சிக்கு நாங்கள் என்றும் துணையாக இருப்போம்" என்றார்.

கேமராமேன் எந்தக்கோணத்தில் படம் பிடிக்கலாம் என்று முடிவு செய்து விட்டார். ஆனால் மேகக் கூட்டம் வெளிச்சத்தை மறைத்துவிட்டது. "சூரிய வெளிச்சம் தெரிய இன்னும் குறைந்தது 10 நிமிடம் ஆகலாம்" என்றார் கேமராமேன். அதற்குள் திரு பழனிவேல் அவர்களைபேட்டி கண்டுவிடலாம் என்று நினைத்து அவரை அழைத்தேன்.

"நீங்கள் எத்தனை ஏக்கரில் கருணா பயிரிட்டீங்க?"

''நான் 15 ஏக்கரில் கருணை பயிரிட்டேனுங்க.''

''சென்ற ஆண்டு குறுவையில் என்ன பயிரிட்டீங்க ?''

''ஆடுதுறை-27 பயிரிட்டேனுங்க.''

''அதை ஏன் இந்த ஆண்டு நீங்கள் பயிரிடவில்லை?''

''சார்! ஆடுதுறை-27 பயிரிட்டால், அறுவடையின் பொழுது எங்கள் வயலில் மழையினால் தண்ணீர் தேங்கி விடுகிறது. அதனால் கதிர்கள் தண்ணீரில் மூழ்கி, மணிகள் முளைத்து விடுகின்றன. மிகவும் சேதம் ஏற்பட்டுவிட்டதுங்க. அதனால்தான் ஆடுதுறை-27 நெல்லை இந்த ஆண்டு பயிரிடவில்லை.''

''கருணையில் இப்படிப்பட்ட சேதம் இருக்காது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''சென்ற ஆண்டு என் வயலில் சோதனையாக 15 சென்ட் நிலத்தில் கருணையைப் பயிரிட்டுப் பார்க்கும்படி எங்கள் வேளாண்மை வளர்ச்சி அலுவலர் கூறினார். அவர் பேச்சைக் கேட்டுச் சென்ற ஆண்டு பயிரிட்டுப் பார்த்ததில், கருணை நெல் அதிக மகசூல் கொடுக்கும் என்பதும், ஐ. ஆர். 8 நெல்லைப் போல் தலை சாயாது நிற்பதால், ஆடுதுறை நெல்லில் ஏற்படும் சேதம் கருணையில் ஏற்படாது என்பதும் புலனாகியது. அதனால்தான் இந்த ஆண்டு 15 ஏக்கரில் பயிரிட்டேன்.''

'' கருணை நெல் பயிரிட செலவு அதிகம் ஆகுதுங்களா ?''

'' அதெல்லாம் இல்லிங்க, ஆடுதுறை 27 நெல்லுக்கு ஆகும் செலவுதான் இதற்கும் ஆகியுள்ளது. ஆடுதுறை 27 நெல்லுக்குப் போடும் அளவு உரத்தைத்தான், கருணைவுக்கும் போட்டேன்.''

'' பூச்சி, நோய்த் தாக்குதல் எப்படி இருந்ததுங்க ?''

'' ஆடுதுறை-27 நெல்லில் ஏற்படும் பூச்சி நோய்கள் தான் இதிலும் வருகின்றன என்று சொல்லுகிறார்கள். ஆனால் நான் முன்கூட்டியே தடுப்பு முறையாக வேளாண்மை வளர்ச்சி அலுவலர் கூறியபடி மருந்து தெளித்து விட்டதால், என் வயலில் பூச்சி நோய்கள், அதிகம் தோன்றவில்லை.''

'' உங்களுக்கு கருணை நெல்லில் என்ன மகசூல் கண்டதுங்க?''

'' எனக்கு மாவுக்கு சராசரியாக 25 கலம் கிடைச்சுதுங்க.''

'' அப்படியானால் ஏக்கருக்கு 75 கலம் கிடைச்சுதுங்களா ?''

'' ஆமாங்க. இதில் ஆட் கூலியும் சேரவில்லைங்க. அத்துடன் மாடு கட்டிப் போரடித்த நெல்லும் சேரவில்லைங்க.''

'' அதையும் சேர்த்தால் ஏக்கருக்கு என்ன மகசூல் தேறுமுங்க?''

'' தஞ்சை மாவட்டத்தில் ஒரு கலம் நெல் நிலச் சொந்தக்காரருக்கு கிடைத்தால், 1½ மரக்கால் நெல்லை அறுத்து அடித்துத் தூற்றும் கூலியாகக் கொடுத்துவிடவேண்டுங்க. அதன் படிநான் ஏக்கருக்கு 4½கலத்திற்கு மேல் கூலியாகக் கொடுத்துள்ளேன். மாடு கட்டிப் பிணையடித்தால் ஏக்கருக்கு குறைந்தது 6 கலம் கிடைக்கலாம். இவைகளையும் சேர்த்தால் ஏக்கருக்கு 85 கலம் கிடைக்குமுங்க.''

'' ஆடுதுறை-27 பயிரிட்டிருந்தால் என்ன மகசூல் கிடைதிருக்கும் ?''

'' ஆடுதுறை-27 பயிரிட்ட போது எல்லாம் சேர்த்து ஏக்கருக்கு 45 முதல் 60 கலம்தான் கிடைக்குங்க.''

'' அப்போ ' கருணை ' நெல் ஏக்கருக்குக் குறைந்தது 25 கலம் அதிகமாகக் கொடுக்கும் என்று நம்புகிறீர்களா ?'

'' நம்புறது என்னங்க ? நடைமுறையிலேயே ஏக்கருக்கு அதிகமாக 25 கலம் நெல்லை ' கருணை ' கொடுத்திருக்கிறதே !''

'' கருணை நெல் சாப்பாட்டிற்கு எப்படி உள்ளது ?''

'' ஆடுதுறை-27 நெல்லைப் போலவே உள்ளது.''

கதிர்வளம் கண்டு களிப்புறுகிறார் திரு பழனிவேல்.

'' மார்க்கெட்டில் நல்ல விலை போகிறதா ?''

'' ஆடுதுறை-27 நெல்லின் விலைக்கே எடுத்துக்கொள்கிறார்கள்.''

'' கருணை நெல் பற்றி வேறு ஏதேனும் கூறுகின்றீர்களா ?''

'' அதிக உரமிட்டாலும், தலை சாய்ந்து சேத முறாமல், அதிக மகசூல் அளிக்கும் ரகம் கிடைக்காதா என்று ஏங்கிய எங்களுக்கு ' கருணை ' நெல் கிடைத்தது ஒரு வரப்பிரசாதமே ! அடுத்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தின் குறுவைப் பகுதியிலெங்கும் ' கருணை ' பரவினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை! ஆனால் விதை நெல்தான் அனைவருக்கும் கிடைக்குமா என்று தெரியவில்லை.''

சூரிய வெளிச்சம் தெரியவே திரு. சண்முகம், கேமராமேனைத் துரிதப்படுத்தினார். பல்வேறு கோணங்களில் படமெடுக்கப் பட்டது. படம் எடுத்து முடிந்தவுடனேயே மற்றும் இரு உழவர் பெருமக்களைப் பேட்டி கண்டேன். அவர்களும் சிக்கல் என்ற ஊரைச் சார்ந்தவர்களே. திரு. சோமசுந்தரம் என்பவர் '' எனக்குக் கூலி, போரடி நெல் சேராமல் மாவுக்கு 25 கலம் கிடைத்தது '' என்றும், சிக்கல் கிராம முனிசீப் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் எனக்கு மாவுக்கு 22 கலம் கிடைத்துள்ளது'' என்றும் தெரிவித்தனர். அவர்களும் ' கருணை ' நெல்லை மிகவும் புகழ்ந்தனர்.

அடுத்து சிக்கலில் உள்ள மாநில விதைப் பண்ணைக்குப் போனோம். அங்கேபண்ணை மேலாளர் யார் என்று கேட்டேன். வேளாண்மைச் செய்தி அலுவலர், ஒரு துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு மூட்டையைத் தூக்கிக்கொண்டிருந்த ஒருவரைக் காட்டி ''அவர்தான் பண்ணை மேலாளர்'' என்று கூறவே, “பரவாயில்லையே நமது நமது பண்ணை மேலாளர்'' என்று வியந்தேன்.

அங்குபடமெடுக்க வேண்டிய காட்சிகளை எடுக்க நேரமாகும் என்று தெரிந்து கொண்டவுடன்பொருள் வைத்தச் சேரி (பொரவச்சேரி) என்ற ஊரைச் சேர்ந்த திரு. பிச்சைக் கண்ணு அவர்கள் வயலுக்குச் சென்றோம். அவர் அங்கு இல்லாவிட்டாலும், அவருடைய தம்பி திரு. ஜெயபால் என்பவரிடம் கேட்டுகொண்டு கருணை நெல் அறுவடையைப் படம் பிடித்தோம். படம் பிடித்துக்கொண்டிருக்கும்போதே திரு. ஜெயபாலிடம் உரையாடிக்கொண்டிருந்தேன். அவர் சொன்ன விவரம் என்னை வியப்பில் ஆழ்த்தியது!



அவர்கள் இந்த ஆண்டுதான் முதன் முதலாகக் குறுவை பயிரிடுவதாகவும், அதற்கு முன்பெல்லாம் கோ-25, பி. சி. பி.1 ஆகிய நெல் ரகங்களையே பயிரிட்டதாகவும், அந்த ரகங்கள் மாவுக்கு10-15 கலம்தான்மகசூல் கொடுத்தது என்றும் கூறினார். இந்த ஆண்டு 30 ஏக்கரில் கருணை பயிரிட்டதாகவும், அதில் சராசரி மாவுக்கு 20 கலம் (கூலி, போரடி நெல் சேராமல்), கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். கருணை அறுவடை முடிந்தவுடன் ஐ. ஆர். 5 பயிரிடப் போவதாகவும் குறிப்பிட்டார். ஒரு போகம் பயிரிட்டு மாவுக்கு 10-15 கலம் எடுத்த நாங்கள், இந்த ஆண்டு குறுவையிலேயே மாவுக்கு 20 கலம் எடுத்துள்ளதால், மாவுக்கு 5-10 கலம் கூடுதலாகவும் கிடைத்துள்ளதுடன், தாளடி மகசூல் மேலும் வருமானத்தைப் பெருக்கும் என்றார். மேலும், அரசாங்கம் இரு போகச் சாகுபடித் திட்டம் கொண்டு வந்ததை வாயார வாழ்த்தினார்.

திரு. ஜெயபால் சொன்னது போதாமல், அவர்களுடைய வேலையாள் ஒருவரையும் விசாரித்தேன். அந்த வேலையாளும் ஜெயபால் சொன்னது போலவே சொன்னார். பரவாயில்லை ; இரு போகச் சாகுபடித் திட்டத்தைப் புரிந்துகொண்டு உழவர் பெருமக்கள் முயற்சி செய்கிறார்களே என்று திருப்தியடைந்துகொண்டு படத்தைப் பிடித்துக்கொண்டு மீண்டும் சிக்கல் மாநில விதைப் பண்ணைக்குத் திரும்பினோம். அங்கு ஆடுதுறை-27-ன் மகசூலுடன், ' கருணை ' நெல்லின் மகசூலை ஒப்பிட்டுக் காட்டும் வகையில், உதாரணமாக ஒரு உழவரும் அவர் மனைவியும் நெல் மூட்டைகளின் முன்னால் நின்று கொண்டிருந்ததைப் படமாக்கிக் கொண்டு சிக்கலை விட்டுப் புறப் பட்டோம்.

வழி நெடுகப் படப் பிடிப்பு. வழியில் கண்டவரிடமெல்லாம் கருணை பற்றிய விசாரணை. மாலை 3 மணிக்கு வாண்டையார் இருப்பு வந்தோம். அங்குள்ள இந்தி உணவுக் கார்ப்பரேஷனை சார்ந்த கிடங்கில் கருணை நெல்லை விற்றுவிட்டுப் பணத்தைப் பெற் றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் மாட்டு வண்டியில் திரும்பிக் கொண்டிருந்த உழவர்களைக் கண்டு அங்கும் படமெடுத்தோம். இறுதியாகத் தஞ்சைக்குத் திரும்பி வந்து இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் சில உட்புறக் காட்சி களையும் படமெடுத்தோம்.

அங்கு படம் எடுத்துக்கொண் டிருந்த நேரத்திலே, சில உழவர் பெரு மக்கள் தீவிர சாகுபடித் திட்ட அலுவலர்களையும், கருணை நெல்லையும் பா ராட்டி எழுதி யிருந்த கடிதங் களைக் காணும் வாய்ப்பு ஏற் பட்டது. அக்கடி தங்கள் ஒவ் வொன்றும் தீவிர சாகுபடித் திட் டத்தின் கடந்த ஆண்டுச் சாதனை களைப் பறை சாற்றிக் கொண் டிருக்கின்றன என்றால் தவ றல்ல!

அடுத்துத் தஞ் சை நகரிலே புளியந்தோப்பு என்ற இடத் தினைச் சேர்ந்த திரு கு. பழனி சாமி என்பவ ரைப் பேட்டி காணும் வாய்ப்பு கிடைத்தது.

அவர் இந்த ஆண்டுக் குறுவைப் பட்டத்தில் நான்கு ஏக்கரில் கருணை பயிரிட்டிருந்தாராம். அதில் ஒரு ஏக்கரில் தேசிய செயல் விளக்கத் தளை அமைத் திருந்தாராம். அவர் 19-6-70 அன்று நாற்றுவிட்டு, 14-7-70 அன்று 6 அங்குலம் × 4 அங்குலம் இடைவெளியில் அந்த தேசிய விளக்கத் தளையை நடவு செய்தாராம். மண் பரிசோதனை செய்து கிடைத்த பரிந்துரையின் படி 2,250 கிலோ தழை உரம் 75 கிலோ அமோனியம் சல்பேட்,45 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இட்டாராம் அவர். 53 வது நாளில் அதாவது

வாதத்தை வென்றிடுவோம்!

காலை வேளை. அந்த மருத்துவ மனையின் ஒரு பகுதியில் சில ஆடவர் எண்ணெய் தேய்த்த உடலுடன் நின்று கொண்டிருந்தனர். ஆவலோடு எட்டிப் பார்த்தேன். பக்கத்து அறையில் ஒருவர் எண்ணெய் பூசிய உடலுடன் படுத்திருக்க, இருவர் சுடச்சுட வெள்ளைப் பொட்டலத்தை ஒத்தடம்போல் உடலில் தேய்த்தபடி இருந்தனர். இவருக்கு ஏன் இவ்வளவு சிறப்பான கவனிப்பு என்று வியப்புடன் நான் நோக்கும்போது அங்கு வந்த சித்த வைத்திய டாக்டர் என் மனத்திலெழுந்த கேள்விக்கு விடை பகர்ந்தார். வாதத்திற்கான சிகிச்சை முறைகளில் அதுவும் ஒன்று என்பது அதன் பின் தான் எனக்குப் புரிந்தது.

சென்னை, பூந்தமல்லி நெடுஞ் சாலையில், அமைந்தகரை தாண்டி அண்ணா நகர் செல்லும் பாதை அருகே, சாலையை நோக்கியபடி கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனை. சுமார் எட்டேகால் லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த மருத்துவ மனையைத் தமிழகக் கல்வி-பொதுநல அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 17-9-1970 அன்று துவக்கி வைத்தார்கள்.

புதுமைப் பொலிவுடன் விளங்கும் இந்த மருத்துவ மனையில் வாதம், பாண்டு (சோகை), காமாலை, காசம், தோல் நோய்கள் ஆகியவற்றுடன் சுரம், வயிற்றுவலி, போன்ற நோய் நொடிகளுக்கும் சிகிச்சையளிக்கப்படுகிறது.

இந்த வாத நோயில், பக்கவாதம், முடக்கு வாதம், இடுப்புப் பிடிப்பு என்று வாத ரோகங்கள் 80 வகை உள்ளன

சிலருக்குத் திடீரென்று ஒரு பக்கத்துக் கையும் காலும் அசைவற்று நின்று விடும் ; சுரணையும் இருக்காது; தொட்டாலோ, கிள்ளினாலோ எந்த உணர்ச்சியும் ஏற்படாது. இது பக்கவாதம் எனப்படும்.

சிலருக்கு முகத்தில் வாதம் வந்தால் முகம் ஒரு புறமாக இழுத்துக்கொள்ளும் ; பேச முடியாது.

முடக்கு வாதம் அல்லது கீல் வாயு என்று சொல்லப்படும் வாதம் வேறொரு வகையானது. இது மூட்டுகளில் வரும். கை மூட்டு, மணிக்கட்டு, விரல்களின் இணைப்பு அல்லது கால் மூட்டு ஏதாவது ஒரு பகுதியில் வீக்கம் ஏற்பட்டு விடும். கால் நடக்க முடியாது. கையை நீட்டவோ மடக்கவோ முடியாது. சிலருக்கு சுரம் கூட ஏற்படுவது உண்டு. ஆனால் இந்த வகை வாதத்தில் உணர்வு இருக்கும்.

கடினமான வேலை; வெய்யிலில் அலைந்து உழைப்பது ; உடலில் ரத்தக் குறைவு ஆகியவற்றினால் ஏற்படுகிறது. ஆடவர், பெண்டிர் இரு பாலரையும் இந்நோய் தாக்குவதுண்டு.

வாத நோய்க்காரருக்கு வெந்நீர் ஆவி பிடிக்கப்படுகிறது.



நோயாளிக்குச் சிகிச்சை தருகிறார் யுனானி மருத்துவர்.

இந்தவாதம் வந்தவர்கள்இங்கு வந்தால் இவர்களுக்குப்பஞ்சகர்ம (ஐந்து வகை) சிகிச்சை முறை அளிக்கப்படுகிறது. எந்த வகை வாதத்தைச் சேர்ந்தது என்பதை ஆய்வு மூலம் கண்டுபிடித்த பின் சிகிச்சையைத்தொடருகின்றனர்.

சிலருக்கு அவ்வப்போது மருந்து கொடுத்து அனுப்பி விடுவதுண்டு. தேவைப்படுவோரை மருத்துவ மனையில் அனுமதித்துச் சிகிச்சை அளிக்கின்றனர்.

சிகிச்சையின் ஒரு பகுதி மருந்துகள் கொடுப்பது. கசாயமாகவும், சூரணமாகவும், லேகியமாகவும், தசமூலம் (பத்து வேர் சேர்ந்தது) சித்தாமுட்டி, சித்தரத்தை ஆகியவற்றை நோயாளிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

முடக்கு வாதத்திற்கு குக்கில் என்றமருந்து கொடுப்பது உண்டு.

ரசம் கலந்த மருந்தும் கொடுப்பது உண்டு.

தைலம் தடவுவது அடுத்த முறை. நாள் தோறும் காலையில் ஆமவாதத் தைலம், தன்வந்திரத் தைலம், சீரபலாத் தைலம்ஆகியவற்றை நோயாளியின் உடம்பில் தடவி அரை மணி நேரம் ஊற விடுகிறார்கள்.

அதன் பின் சில நோயாளிகளுக்கு (அவசியப்படுவோருக்கு மட்டும்) ஒத்தடமும் தரப்படுகிறது. கோதுமைத் தவிட்டை வறுத்து ஒத்தடம் கொடுக்கலாம். அல்லது நொச்சி, ஆமணக்கு, எருக்கன், புளி ஆகிய பச்சிலைகளை எல்லாம் சேர்த்து, நசுக்கி வேக வைத்துத் துணியில் கட்டி நோயாளியின் உடலில் ஒத்தடம் கொடுப்பார்கள்.

பக்கவாதத்திற்கும், முடக்கு வாதத்திற்கும் நவரக்கிழி ஒத்தடம் கொடுக்கப்படுகிறது. இதனை மருத்துவ சாஸ்திரத்தில் பிண்ட சுவேதம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பாக் கோதுமை நொய்யைக் கசாயத்தில் வேக வைத்துச் சிறிய மூட்டையாகக் கட்டி, பின் பாலும்

அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனை.



கசாயமும் கலந்த கலவையைப் பாத்திரத்தில் சூடாக்கி, அதில் இந்த மூட்டையை அமுக்கி, எண்ணெய் தடவியஉடம்பில்ஒத்தடம் போல் தடவுகிறார்கள். இதுதான் நவரக்கிழி. நாள் தோறும் 45 நிமிடமுதல் ஒருமணி நேரம் வரை இந்தச் சிகிச்சை 21 நாட்களுக்கு அளிக்கப்படும்.

இந்தச் சிகிச்சைக்குப் பின் நோயாளி வெயிலிலோ, வெளிப்புறங்களிலோ போக அனுமதிக்கப்படுவதில்லை. உடல் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் பூரண ஓய்வு தரப்படுகிறது.

21 நாள் சிகிச்சைக்குப் பின் நோயாளிகளுக்குச் சத்துணவு தரப்படுகிறது. அரிசி, கோதுமைச் சாதம், காய்கறிகள், எலும்பு அல்லது கறி சூப் கசாயத்துடன் சேர்த்துத் தரப்படுகிறது. வாயு பதார்த்தங்கள் (உருளைக்கிழங்கு வாழைக் காய் முதலியன) தவிர்க்கப்படுகின்றன.

இதுதவிரப், பத்து அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நோயாளிகளுக்குப் பேதிமருந்து தரப்படுகிறது. வஸ்தி (Medicated enima) கொடுப்பதும் உண்டு. பொதுவாகக் காலந் தாழ்த்தாது ஆரம்பக் கட்டத்திலே வந்தால்இந்தச்சிகிச்சை மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும் என்று கூறுகிறார்கள்.

இரத்தச் சோகையுள்ள பெண்ணைச் சித்தவைத்தியர் பரிசோதனை செய்கிறார்.

நாள் தோறும் சுமார் ஆயிரம் நோயாளிகள் வரும் இந்த மருத்துவ மனையில் சித்த ஆயுர்வேத யுனானி முறையில் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இதற்கான மருந்துகள் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையை ஒட்டியுள்ள இந்திய மருந்துத் தயாரிப்பு நிலையத்தில் இருந்து வருகின்றன.

34 ஏக்கர் நிலத்தினைக் கொண்டுள்ள இந்த மருத்துவ மனையின் ஒரு பகுதியில் சுமார் 10 ஏக்கர் நிலத்தில், ஒரு மூலிகைப் பண்ணையும் உள்ளது. ஆடாதோடை, வில்வ மரம், புங்க மரம், மற்றும் பல மூலிகைச் செடிகளும் மரங்களும் உள்ளன. இந்த மருத்துவ மனையிலேயே ஒரு மருந்து தயாரிக்கும் நிலையம் ஏற்படுத்தவும், 100 படுக்கை வசதி கொண்ட இதில் இன்னும் 60 படுக்கை வசதியை அதிகப்படுத்தவும் திட்டங்கள் உள்ளன என்று இந்த மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் டாக்டர் எஸ். ஏ. சுபான் உற்சாகத்தோடு தகவல் தருகிறார். இந்திய மருத்துவ முறைக்கு இன்றையத் தமிழக அரசு தரும் ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் எடுத்துக் காட்டாக இந்த மருத்துவ மனை அமைந்திருக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

புத்தகத்தின் விலை ரூ. 4 லட்சம்

1465-ஆம் ஆண்டு அச்சியற்றப்பட்ட புத்தகமொன்று விலைக்கு வந்தது. அதை அமெரிக்க நிறுவனமொன்று ரூ. 3,96,000 கொடுத்து வாங்கியுள்ளது. கத்தோலிக்க, கிறித்தவ, தத்துவ ஞானியான லாக்டான்டியஸ் எழுதிய இந்த நூலின் மகத்துவம் என்ன ? புத்தகமாக அச்சிடப்பட்ட மிகப் பழைய நூல்களில் இதுவும் ஒன்று.

ஆமாம்; இதைவிட முன்னால் அச்சிடப்பட்ட நூல் உண்டா ? உண்டு, அதுதான் பைபிள். ஜெர்மனியில்1455ல் பிரசுரிக்கப்பட்ட ஜான் கட்டன்பர்க் பைபிள் தான் உலகத்திலேயே அச்சியற்றப்பட்ட முதல் நூலாகும். இதன் நகலொன்று ஓர் அமெரிக்கர் வசமுள்ளது. இதை ரூ.180 லட்சத்திற்கு வாங்கத் தயாராக உள்ளனர்.

இலட்சம் தரும் இரத்தம்

இரத்த தானம் செய்வதன் மூலம் ஆண்டிக்கு ரூ. 90,000 பெறுகிறார், ஒரு வாலிபர். அவர் பெயர் தாமஸ். அமெரிக்காவிலுள்ள கார் நிறுவனத்தில் தொழிலாளியாகப் பணியாற்றுபவர். அடிக்கடி இரத்த தானம் செய்யும் பழக்கமுள்ளவர்.

அவரது இரத்தத்தில் மதிப்பு மிக்க இரத்த அணுக்கள் (Anti Lewis-B) இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது மருத்துவத் துறை ஆய்வுக்கு மிகவும் முக்கியமானது. எனவே பல மருந்து நிறுவனங்கள் இவரது இரத்தத்தைப்பெற ஓடிவந்தன.

எனவே இவரது இரத்தம் ஏலத்திற்கு விடப்பட்டது. டேட்ரீ ஏஜென்ட்ஸ் என்ற நிறுவனம் இவர் இரத்தத்தை ஒரு கன செண்டி மீட்டருக்கு ரூ. 11.25-க்கு வாங்கிக்கொள்வதாக ஏற்றுக் கொண்டது. அதாவது ஓர் அவுன்ஸ் இரத்தத்தின் விலை சுமார் ஆயிரம் ரூபாய் ஆகும். இதன்படி அவர் ஆண்டுக்கு 8 குவார்ட்ஸ் இரத்தம் வழங்க வேண்டும். அதன் விலை ரூ. 90,000.

வெண்பாப் போட்டி

'சாதனைக் கீடுண்டோ சாற்று' என்ற ஈற்றடியை வைத்து எழுதப்பட்ட வெண்பாவில், திரு. குழ. அண்ணாமலை எழுதிய வெண்பா பரிசு பெறுகிறது. பரிசு பெற்ற வெண்பாவும், வெளியிடுவதற்குத் தகுதி படைத்த நூற்றுக்கணக்கான வெண்பாக்களில் இடநெருக்கடி காரணமாகச் சில வெண்பாக்களும் இங்கே வெளியிடப் படுகின்றன.

(ஆ-ர்.)

2. சாதனைக் கீடுண்டோ சாற்று

இல்லை உணவிங் கெனுஞ்சொல்லை யிந்நாட்டில்
நெல்லை மிகவிளைத்து நீக்கியதால்—நல்லரசு
ஏதிதுபோ லென்றயலார் ஏத்துந் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

குழ. அண்ணாமலை, கோவை.

இல்லார்க்குப் புன்செயும் ; ஏற்றமிகு கல்விதனில்
வல்லார்க்குப் பல்பணியும் ; வாழவழி—இல்லார்தம்
வேதனைக்கு வீடு(ம்)தந்து ; வெற்றிகொள்ளும் நல்லரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இரா. கேசவன், ஓசூர்.

ஆற்றுநீர் வற்றி அழிபஞ்சம் முற்றியக்கால்
ஊற்றுநீர் பெற்றே உழவியற்றி—ஏற்றமொடு
வேதனை தீர்த்திட்ட வெற்றித் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

மு. குழந்தைவேல், கரூர்.

எங்கும் தமிழ் முழக்கி, ஏற்ற தொழில்பெருக்கித்
தங்குநிலம் ஏழையர்க்குத் தாமளித்தே—இங்கிளையர்
வேதனைகள் தீர்த்து, விளங்கும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

புலவர் த. வாசுதேவன், பி.ஏ., நயினார்பாளையம்.

நாற்ற மெடுத்து நகரை வலம்வந்த
சேற்றைப் படகுதவழ் சிற்றாறாய்—மாற்றிவிடுஞ்
சோதனை ஏற்றுத் தொழில்படூஉம் நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

சுப்பிரமணியன், புதுவை-3.

வாய்மையுடன் தூய்மையுடன் வண்மையுடன் திண்மையுடன்
தாய் நிகர்த்த நற்பரிவு தாங்கிநிதம்—செய்நந்தம்
வேதனையைத் தீர்த்து விளங்கும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

நல்லாரும் நானிலமும் நன்கு புகழ்ந்துரைக்கக்
கல்லக் குடிகொண்ட கண்ணனையார்—வல்லமையைத்
தீதற்ற நற்புலவர் செந்தமிழால் செப்புகின்ற
சாதனைக் கீடுண்டோ சாற்று.

க. அரங்கசாமி, கருவம்பாளையம்.

தக்க சமத்துவத்தைத் தான்பரப்பித் தாயகத்தோர்
எக்காலும் இன்றமிழ் போல் ஏற்றமுற—மக்கள் நம்
மாதவத்தால் வந்துதித்த மாண்பார் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

சோ. உலகப்பன், வெள்ளக்கோவில்.

வாழ்விலையோ என்றெண்ணி வாடிய நம் மக்களின் நல்
வாழ்வுக்குக் கொள்கை வகுத்திங்கே—தாழ்வுற்றோர்
வேதனையைப் போக்குமுயர் வேட்கைத் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

கு. பொன்னையா, பி.ஏ., நரிக்கல்பட்டி.

தெள்ளுதமிழ்ச் சொல்லாட்சித் தேரேறிச் செல்வதனை
உள்ளுங்கால் பேரின்பம் ஊற்றெடுக்கும்—வள்ளுவனார்
போதனையை வண்டிதொறுங் போதிக்கும் நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இல. சக்கரபாணி, மடவாளம்.

கொல்லன் உலைத்தீபோல் கூத்தாடும் பஞ்சத்தைக்
கல்வியே செந்தமிழைக் காத்ததெது?—வல்லமைசேர்
சோதனையில் சேலம் தொழில்மய மானதொரு
சாதனைக் கீடுண்டோ சாற்று.

புலவர் ச. பாலுச்சாமி, கோட்டூர்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—
திரு. குழ. அண்ணாமலை, 15/375, என். எச். ரோடு, கோயம்புத்தூர்-1

சேலம் இரும்பாலைச் சென்னைப் பெயர்மாற்றம்
ஓலமிடும் ஏழைக் குழுநிலத்தின்—மூலமாய்
வேதனையைப் போக்கி விடுவித்த நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

பூ. செந்தமிழன், கூத்தக்குடி.

போதிமரப் புத்தபிரான் போதனையைப் பின்பற்றி
நீதி நெறி மாறாமல் நேர்மையுடன்—ஓதுபுகழ்
ஏதமிலா ஆட்சிசெயும் எங்கள் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இ. அன்பரசு, சென்னை-39.

பரிசுதருஞ் சீட்டைப் பரிவுடனே ஈந்து
அரிசி மலிவாய் அடைய—இரவுபகல்
போதெல்லாம் பாராப் பொதுநலம் பேணுகின்ற
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இராமகிருட்டிணன், கந்தர்வகோட்டை.

இரும்பாலை சேலத்தில் ஏற்படுத்திச் சொந்தக்
கரும்பான தாய்மொழியைக் காத்து—வருகின்ற
சோதனையை வென்றே சுகம்சேர்க்கும் நம்அரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

மா. கணபதி, பழையனூர்.

சேலம் இரும்பாலைச் செவ்விழைநூற் பஞ்சாலை
காலம் கனிந்தளித்த கார்கருணை—ஓலஞ்செய்
வேதனைகள் ஓட்டிவிடும் வேளாண்மை மின்துறையின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

ஆ. பொன்னையன், குளமங்கலம்.

சேலம் கனிவித்துச் சீர்திருத்தப் பாதையிட்டுக்
கோலமிகு நந்தமிழில் கோலோச்சி—காலமெலாம்
வேதனைசேர் "கொல்பசியை" வென்ற தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

சியாம் மணாளன், திரு. வி.க. நகர்.

'ஆடுதுறை' நற்'கருணை' 'ஐ.ஆர் எட்டா'லெங்கும்
கூடுதலாய் நெல்லைக் குவித்திட்டே—நாடுலவும்
வேதனையும் வெவ்வறட்சிச் சோதனையும் வென்றோர்தம்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

த. மு. அகமது, கடையநல்லூர்.

இல்லாமை இல்லாத நாடாக இங்குள்ளோர்
எல்லோரும் எல்லாமும் எய்திடவே—நல்லோரின்
சோதனையில் தேறித் துலங்கித் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

ந. இராதாகிருட்டிணன், காரைக்குடி-3.

வல்லாண்மை காட்டலிங்கு வைத்தடால்மீ யாபுரம்தான்
கல்லைக் குடிபழங்கால் நந்தமென—வெல்லுதமிழ்ச்
சாதனைப் பேராகச் சார்ந்திலங்க வைத்தபெரும்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இல.க. இரத்தினவேல், திருச்சி-1.

மழையும் உப்பக்கம் காணும் உறுதியுடன்,
யாழைப் பழிக்கின்ற இன்மொழியே!—ஏழைகளின்
வேதனை தீர்த்தே விளங்கும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

வி. இரத்தினம், பெங்களூர்-21.

அன்னைத் தமிழை அரியணையில் ஏற்றியதால்
சென்னை தமிழ்நாடாய்ச் செய்ததனுல்—மன்னுகுறள்
போதனைகள் காப்பதனுல் போற்றரிய நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

ஸி.வி. அர்த்தநாரி, பி.ஏ.பி.டி., வேலூர்.

இன்பத் தமிழ்காத்தும் ஏழை நலம்காத்தும்
அன்புற்ற தாய்போல் அரவணைத்தும்—துன்புற்றோர்
வேதனைகள் நீக்க விரையும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

க. திருமேனி, தாராபுரம்.

சேலத்து மண்ணில் செழுந்தமிழர் வாழ்வுக்குக்
'காலத்தில்' புத்தாலை கண்டிட்டார்—ஞாலத்தில்
வேதனையை வீழ்த்த விழையும் கலைஞரவர்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

வெ. செகநாதன், பி.எஸ்.சி., பி.டி., போத்தனூர்.

சேலம் உருக்காலை சேதுக்கால் வாய்த்திட்டம்
கோலமுடன் சிரடையும் கூவநதி—மேலுமுயர்
தீதற்ற திட்டங்கள் தீட்டும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

செங்கைதாசன், சென்னை-2.

நற்றமிழின் வித்திட்டு நன்மைக்குத் தொண்டாற்றி
உற்றபசி நோயை உருக்குலைத்து—பெற்றுவந்த
வேதனைகள் நீங்கிடவே வேலேந்தும் நல்லரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

இரா. கருப்பசாமி, திருச்சி-14.

புஞ்செய் வரிநீக்கிப் போற்றிடும் ஆட்சிசெய்து
நஞ்செய் விளைச்சலில் நாட்டிலுள்ள—பஞ்சையர்
வேதனையைப் போக்கி விளங்கும் தமிழரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

காந்திதாசன், பல்லவராயன்பட்டி.

நெல்லுக் கிருந்ததடை நீக்கியே, நேசமுடன்
சொல்லுக்குச் சொல்தமிழின் சீர்காத்தே—எல்லையிலா
வேதனையை மாய்த்த மேன்மைத் தமிழாட்சிச்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

கோன், திருச்சி-8.

சேலத் திரும்புவரச் செந்நெல் செழித்துவரக்
கோலத் தமிழெங்கும் கொஞ்சிவரக்—காலமெலாம்
வேதனையால் வாடியவர் வாழ்வுயர ஆளுமெங்கள்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—புலவர் குறளடியான், உடுமலை.

மண்ணில் வளம்நிறைத்தும், மக்களுள் கனிஎடுத்தும்,
எண்ணரிய தாழ்வுகளால் ஏழையர்தாம்—கண்ணிறைத்த
வேதனை நீர்தடுத்தும் வீற்றிருக்கும் நல்லரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று!

—மு. சீனிவாசன், கோடைக்கானல்.

பார்வாழ ஏர்பிடிக்கும் பாட்டாளித் தோழர்கள்
சீர்பெற்று வாழ்ந்து சிறப்புறவே—நீர்வசதி
பாதிக்கா வண்ணம் பணிபுரிந்த நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று!

—ச. வீரப்பன், போதுபட்டி.

நாற்றமிகு கூவத்தை; நாட்டின்மூ டத்தனத்தை;
சாற்றரிய பஞ்சத்தைச் சாயாதே—ஊற்றெடுத்த
வேதனையை, இந்தியுடன் வீழ்த்திட்ட நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று!

—இராசகோபாலன், மேட்டூர் அணை.

எங்கும் தமிழ்முழங்க ஏழ்மை மடிந்தொழியப்
பொங்கும் கலைமலர்ப் பூரிக்கத்—துங்கமுடன்
சோதனைகள் சூழ்ந்தாலும் தூளாக்கும் நம்முதல்வர்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—க. நாகேஸ்வரன், திருத்தணி.

இரும்பாலை சேலத்தில் ஏற்படவே செய்தார்;
கரும்பான செந்தமிழில் கல்வி—தருகின்றார்;
காதிலிக்கப் போற்றுகிறார் கற்றார்; கலைஞரின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—மல்லிகை முத்தாசு, கோரிக்கடவு.

சாதிக்கின் றிங்குச் சாதனையே இல்லையென
வாதத்தில் வம்பளக்கும் வாயுடையார்—பேதமின்றிச்
சேதமிலாச் செய்கை செயலாற்று(ம்) இவ்வரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—நம்பியாரா, சென்னை-49.

கள்ளக் கருஞ்சந்தை கையூட்டே என்றுமனம்
எள்ளும் இழிதகைமை ஏகிடவே—உள்ளத்தின்
வேதனைத் தீயெல்லாம் வென்றே ஒழிப்பாரின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—தி. சு. பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை-2.

படியளந்தாய் செந்நெல் பலகண்டாய் சென்னை
குடிநீர்க்கும் காவிரியைக் கொண்டாய்—முடியாத
வேதனைகள் அத்தனையும் வென்றாய் அரசேயுன்
சாதனைக் கீடுண்டோ சாற்று!

—ஆர். சிவகாமி, திருமாநிலையூர்.

தன்நாடு தன்மொழி தன்னின முய்ந்திட
எந்நாளும் பாடுபடும் ஏற்றமிகு—தென்னரசின்
நீதகற்றும் திட்டங்கள் தேசமதைக் காப்பாற்றும்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—ஏகநாதன், வைத்தியலிங்கபுரம்.

அன்னை மொழிவளர்த்தும் அண்ணாவழி நின்றும்
தன்னை உணர்ந்த தமிழரசில்—என்னதான்
சோதனை வந்தாலும் சோராக் கலைஞரவர்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—கங்கா, இரும்பேடு.

வற்றாத நெல்விளையும் மண்சூழ்ந்த தென்னாட்டில்
மற்றவர் பாலரிசி வாங்கியுண்ணும்—பொற்கொடியே
வேதனைகள் நீர மிருவிளைச்சல் செய்திடச்செய்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—க. வி. குருசாமி, சென்னை-23.

சேலத்து நற்கனியும் தென்வேலை ஆழ்துறையும்
ஞாலத்திற் கீந்ததுவே நம்மாட்சி—காலத்தின்
வேதனைக ளெல்லாம் விலகபசு மைப்புரட்சிச்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—மணிமாறன், பம்பாய்-19.

சேலத் திரும்பாலை சீர்சால் பெயர்மாற்றம்
ஞாலத்தில் மாதமொரு நற்பரிசு!—காலத்தில்
வேதனையைத் தீர்த்தாளும் வீறுள்ள நம்மரசின்
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—பி. வெங்கிடாசலம், ஆவத்திப்பாளையம்.

செத்தும் கிடந்திட்ட சேலமிரும் பாலைதன்னை
எத்திக்கும் போற்றுவிதம் தோற்றுவித்தார்—தக்கபல
சோதனைகள் வந்திடினும் சோராது வெற்றிகண்ட
சாதனைக் கீடுண்டோ சாற்று.

—மூ. சாத்தையன், பரமக்குடி.

கஞ்சமலை என்னும் கருமி புதையலினை
நெஞ்சைப் பிளந்தெடுக்க நேர்செய்து—செந்தமிழர்
வேதனைகள் தீர விழித்துப் பணிசெய்த்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—புலவர் ஆ. பழனி. காரைக்குடி.

வீடுவழங்கி விளைச்சல் தனைப்பெருக்கிப்
பீடு பெறநிற்கப் பேரறிஞர்—ஏடுசொலும்
போதனை ஏற்றுப் புவிக்கே வழிகாட்டும்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
— பாட்சா கிருஷ்ணமூர்த்தி, பூரிப்பாக்கம்.

பண்டைத் தமிழகமாய்ப் பார்புகழ இந்நாட்டைக்
கண்டே பெரிதும் களிக்கின்ருேம்—மண்டுபுகழ்
ஆதவன்போல் நாளும் அரசு புரிந்துவரும்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—தி. பொன்னுச்சாமி, தூத்துக்குடி.

விண்ணகத்துச் சோலை விளங்கும் முழுமதியின்
தண்ணகத்தைச் சேர்ந்தார் தரைதொட்டார்—
மண்ணகத்தில்
சோதனையால் தொல்லியற்கைச் சூழலையே வென்றவர்தம்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—த. குப்பால், வேப்பங்குளம்.

நிலமற்ற ஏழை நிலம்பெற்று வாழ
நலமுறும் பட்டாவை நல்கிப்—புலம்பிடும்
வேதனையை நீக்குவதில் வீறுகொண்ட நம்மரசின்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

அள்ளும் பசிநீக்கி ஆக்கப் பணியீந்து
துள்ளுந் தமிழ்போற்றித் தொண்டாற்றி—வள்ளுவனின்
போதனையை நெஞ்சிருத்திப் பூத்த தமிழரசின்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—பேரிறைவன், பழநி.

கல்லக் குடிகண்டோம் ; காவிரும் பாலையும்
நல்லபெயர் வானொலியும் நாம்பெற்ருேம்—பல்லோரின்
வேதனைக்கு நன்மருந்தாம் வீரத் தமிழரசின்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—தமிழ்மாறன், விக்கிரவாண்டி.

வாரி பெருக்கி வறட்சியினைச் சாகடித்தே
ஊரில் குறைகளைய ஓயாமல்—சேருகின்ற
சோதனைகள் தூளாகத் தொண்டாற்றும் நம்மரசின்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.

தென்மலையின் தென்முனிவன் தெரிந்த அகத்தியமும்
முன்னவனும் முத்தமிழ் வள்ளுவனும்—கன்னல்நிகர்
போதனைகள் சாற்றுகின்ற போற்றரிய இன்ருட்சிச்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—அ. மலர் வேந்தன், அனுமந்தன்பட்டி.

கல்வி வளர்ச்சிக்கும் கைத்தொழில் மேன்மைக்கும்
மல்கும் பொருட்கள் மலிவுக்கும்—பல்விதத்தும்
பாதகம் அற்றுப் பணிபுரியும் நம்மரசின்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—இளமுகிலன், தூத்துக்குடி-2.

இல்லார்க்கு வீடுகளும் ஏழைகட்கு நன்னிலமும்
வல்லார்க்கு வேலையும் வாய்த்ததிங்கே—நல்லோரின்
போதனையை மெய்யாகப் போற்றும் தமிழரசின்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—இளங்கண்ணன், சென்னை-10.

அண்ணல் அடியொற்றி அண்ணவும் ஆங்கவரின்
தன்னலமே யில்லாத தம்பியரும்—இந்நிலத்தின்
வேதனையும் வெம்பசியும் வேரோடழித்திட்ட
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—பொ. கருணாநிதி, கோவை-12.

வந்திடுமோ ? வாராதோ ? வந்திடினும் சேர்ப்படுமோ ?
எந்தவிதம் காண்போம் இரும்பாலை ?—இந்தவகை
வேதனையைத் தீர்த்து வினைசெய் தமிழரசின்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—நா. தண்டபாணி, வடகாடு.

'ஐயாரைந் தெட்டால்' அருமைக் 'கருணா'வால்
எய்யா நிறை விளைவை ஏற்படுத்தி—ஐயாவே
வேதனையாம் தீம்பசியை வென்ற தமிழரசின்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—கே. காசியரசன், கீழப்பாலையூர்.

சேலம் இரும்பாலை, சென்னையென வானொலியில்
காலத்தே ஆசிரியர்க் காத்தளித்தல்—ஞாலத்தில்
தீதகற்றி நன்மையெலாம் சேர்க்கும் தமிழரசின்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—முத்தரசன், காரைக்குடி.

ஆறு யிரத்தைநூ ற்ருசிரியர்க் கண்மையிலே
சீராக வேலை தரவிருக்கும்—பேருன
ஓதரும் திட்டத்திற் கொப்பில்லை ; மற்ருென்றிச்
சாதனைக் கிடுண்டோ சாற்று.
—பெ. பழனிச்சாமி, இராசக்கபட்டி.

ஆத்ம திருப்தி கொண்டவர்களுக்காகவும் அறிவுக்கு வேலை. கொடுக்கமறுப்பவர்களுக்காகவும் சமூகப் பொருளியல் நிலைமைகள் காத்துக்கொண்டிருப்பதில்லை. மக்களின் கருத்துகள் நின்ற நிலையிலேயே இருக்கலாம். ஆனால் சமூகப்பொருளியல் நிலைமைகள் நின்ற நிலையிலேயே இருப்பதில்லை. அவை வேகமாக முன்னேறிச் செல்கின்றன. காலத்துக் கொவ்வாத கருத்துக்களுக்கும் உண்மையான நிலைமைக்கும் உள்ள இடைவெளி அதிகமாகிக் கொண்டே போகிறது. அந்த இடைவெளியைக் குறைத்து இரண்டையும் ஒன்று சேர்க்காவிட்டால் சமூகக் கட்டடம் இடிந்து விழுகிறது. உண்மையான சமூகப் புரட்சிகள் இப்படித்தான் ஏற்படுகின்றன. நிலைமைகள் மேற்கூறிய பக்குவத்தில் இருந்தால் புரட்சி கட்டாயம் ஏற்பட்டே தீரும். கர்நாடகமான கட்டுப்பெட்டிக் கருத்துக்கள் அதை ஓரளவு தாமதிக்கச் செய்யலாமே ஒழிய நிறுத்திவிட முடியாது. ஆனால் புரட்சிக்குரிய பரிபக்குவ நிலைமை இல்லாவிட்டால், ஒரு சிலர் என்னதான் பெரும் பெரும் முயற்சி செய்தாலும் அதை உண்டு பண்ணமுடியாது. புரட்சி தோன்றுகிறபோது உண்மையான நிலைமையை மக்களிடமிருந்து மறைத்து நிற்கும் திரை விலகுகிறது. அப்போது உண்மை அவர்களுக்குத் தெளிவாகக் காட்சி அளிக்கிறது. அவர்கள் இது வரையில் போய்க் கொண்டிருந்த பழைய போக்கு மாறியவுடனே, அவர்கள் வேகமாகச் செல்ல ஆரம்பிக்கிறர்கள். அதனால்தான், 'புரட்சிகளின்போது கருதவும் கூறவும் முடியாத பேராற்றலுடன் அவர்கள் விரைந்து முன்னேறுகிறர்கள். ஆகவே, பழைமையைக் கட்டிக்கொண்டு அழுவதாலும், முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தப் பார்ப்பதாலுமே, புரட்சி தவிர்க்க முடியாததாகிவிடுகிறது, என்பது வெளிச்சமாகிறதல்லவா ? சமூகம் மாறுதலற்றது என்னும் மூடக் கொள்கையை விட்டுவிட்டுக் காலத்துக்கேற்றவாறு அது தன்னை மாற்றிக் கொள்ளுமாயின், சமூகப் புரட்சி தோன்றவே தோன்ருது. அப்போது புரட்சிக்குப் பதிலாகச் சமூகம் இயற்கையை ஒட்டி இடைவிடாது வளரும் வளர்ச்சியைக் காணலாம். சமூகப் புரட்சியில் அரசியல் புரட்சியும், அடங்கியிருக்கிறது. ஆனால், அது சமூகத்தின் கட்டுக்கோப்பையே மாற்றிவிடுவதால் அரசியல் புரட்சியைவிட அதிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.


டேய் தங்கப்பா! என்ன பார்க்கிறே!
பொன்னியின் நடையழகை ரசிக்கிறேன்
ரசிப்பேடா! சல்லிக் காசில்லாதவன் என் பெண்ணைப்பற்றி ஒரு நாளும் கனவு காணாதே!
மாமா! நீங்களா?
என்னப்பா, தங்கப்பா! என்ன கவலையப்பா?
ஒன்னுமில்லே மணி! என்னிடம் பணமில்லேங்கிற காரணத்திலே எனக்குப் பொன்னியைத் தர மாட்டேங்கிறாரு எங்க மாமா.
உனக்கென்ன குறை? நிலமில்லையா என்ன இல்லை?
நிலமிருந்து என்ன பயன்? மழையில்லையே! விளைச்சல் இல்லையே!


இனி அந்தக் கவலையை விடு! நீர்ப் பாசனக் கூட்டுறவுக் கழகத்திலே சேரு!
என்ன? நீர்ப்பாசனத்துக்குக் கூட்டுறவுக் கழகமா?
ஆமாம்! சிறிய விவசாயிகள் சேர்ந்து அமைக்கிற கூட்டுறவு! எல்லோரும் சேர்ந்து ஒரு குழாய்க் கிணறு அமைச்சுக்கலாம்! தண்ணீர் தட்டுப்பாடும் இருக்காது; செலவும் குறைவு!
அதுக்குப் பணத்துக்கு எங்கே போறது? நிலத்தைத்தானே அடமானம் வைக்கணும்!
அதுவும் வேண்டாம். நிலத்தை அடமானம் வைக்காமலே கடன் வாங்கத் தமிழ்நாடு அரசு அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கு.
அப்படியா? அந்தக் கழகத்தில் சேர்வது தான் என் முதல் வேலை!
எழிலார்புரி நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம்
என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்! ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?
கோ...

நேருவின் மணிமொழிகள்

வாழ்க்கையே ஒரு விசித்திர மான கதம்பம்தான். நாம் அதை உள்ளது உள்ளவாறே எடுத்துக்கொண்டு முதலில் அதை அறியவும் பின்னர் அதைச் சீர்திருத்தவும் முயலவேண்டும்.

• • •

சாமானிய மக்களின் நலந்தான் நமக்கு மிகவும் முக்கியமானது. ஒரு சிலருக்காக நாம் மிகப்பலரைப் பலிகொடுக்க முடியாது.

• • •

உலகம் இருந்த இடத்திலேயே இருப்பதில்லை. யாரோ சொன்னது போல் நம்மைச் சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில் தள்ளி விட்டு அது முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

• • •

சமூகம் எப்பொழுதுமே பழமைப்பற்றுடையது. மாறுதல் என்றாலே அதற்குப் பிடிப்பதில்லை. அது தான் போகிற போக்கிலேயே போய்க்கொண்டிருக்க விரும்புகிறது. தான் போகிற போக்கு தான் சரியான போக்கு என்றும் அது உறுதியாக நம்புகிறது. ஆகவே, நிலைமையைச் சீர்திருத்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் சமூகம் தன் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறவர்களை அது தண்டிக்கிறது.

• • •

சுதந்திரம் என்பது நழுவி விடும் இயல்புடையது. கையில் இருப்பது போலத் தோன்றும்; பின்னர் பார்த்தால் இராது. வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக் கூடிய ஒன்று. அது நம்மை அடிக்கடி ஆசை காட்டி மோசம் செய்யும். நம்மைக் கொடிய சோதனைகளுக்கு உள்ளாக்கிய பின்னரே அது நமக்குக் கிடைக்கும்.

இன்று, உண்மையான விஞ்ஞானி என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஒவ்வொருவனும் கல்விக் கடலானது எல்லையற்றுப் பரந்து கிடக்கிறது என்னும் உண்மையை உணர்ந்திருக்கிறான். ஆராய்ச்சிப் பாய் கட்டிய அறிவுத்தோணியில் அமர்ந்து அவன் அதைக் கடக்க முயல்வது உண்மையேயாயினும் அவன் தன் முன்னோர்களைவிட அதிக அடக்கம் வாய்ந்தவனாகவும் தயக்கம் காட்டுபவனாகவும் இருக்கிறான்.

• • •

யந்திரமும் யந்திரக் கைத்தொழிலும் வந்தபிறகு மதத்தின்பால் காட்டப்பட்டு வந்த அலட்சியம் இன்னும் அதிகரித்தது. குருட்டு நம்பிக்கையின் அடிப்படையை விஞ்ஞானம் தகர்த்தெறிந்துவிட்டது.

• • •

சிறைவாழ்க்கை மரவாழ்க்கை; மரம் ஒரே இடத்தில் வேரூன்றி விடுகிறது. அது இடம் விட்டு இடம் பெயர்வதில்லை; பேசுவதுமில்லை. அதைப்பற்றி நினைப்பாருமில்லை. பேசுவாருமில்லை. அதைப் போலத்தான் சிறையிலிருப்பவனும். சிறையிலிருப்பவர்களுக்கு வெளியுலக நிகழ்ச்சிகள் வேடிக்கையாகவும் சிறிது திகைப்பை உண்டுபண்ணுவனவாகவும் இருக்கின்றன. அவை தூரத்தே நிகழும் வெறும் மாயத் தோற்றமாக அவர்கள் கண்களுக்குத் தென்படுகின்றன. ஆகவே, ராபர்ட் லூயி ஸ்டிவென்சன் எழுதியுள்ள கதையில் வரும் டாக்டர் ஜெகில் மிஸ்டர் ஹைட் என்னும் பாத்திரங்களைப் போல் நாங்களும் ஒன்று அசைவும் ஒன்று அமைதியுமாகவுள்ள இரு இயற்கைத் தத்துவங்களாகவும், இரு வாழ்க்கை முறைகளாகவும் இரு தோற்ற இயல்களாகவும் மலர்ச்சி அடைகிறோம்.

விஞ்ஞானம் மனிதனுடைய தேக சிரமத்தைக் குறைத்தது. அதனால் லட்சக்கணக்கானவர்களுடைய வாழ்க்கையில் கஷ்டம் குறைந்தது. விஞ்ஞானத்தினால் உலகத்தின் ஜனத்தொகை சிறப்பாகத் தொழிலபிவிருத்தி அடைந்த நாடுகளின் ஜனத்தொகை அதிகரித்தது. அதே சமயத்தில், சர்வத்தையும் நாசம் செய்யக் கூடிய அழிப்பு முறைகளையும் விஞ்ஞானம் தோற்றுவித்தது. ஆனால், அது விஞ்ஞானத்தின் குற்றமல்ல. விஞ்ஞானம் மனிதனுக்கு இயற்கையை அடக்கி ஆளக்கூடிய சக்தியை அளித்தது. அந்தச் சக்தியைப் பெற்ற மனிதன் தன்னைத்தான் அடக்கி ஆளும் வழியை அறியாமல் தவறான பாதையில் சென்று விஞ்ஞானத்தின் வரங்களையே சாபங்கள் ஆக்கிக் கொண்டான். ஆனால் விஞ்ஞானம் மட்டும் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டே இருந்தது. அதன் பயனாகப் பல்லாயிர வருடங்களில் அடையாத மாறுதலை நூற்றைம்பது வருடங்களில் இவ்வுலகம் அடைந்துவிட்டது. விஞ்ஞானம் வாழ்க்கையின் வழி, துறைகள் எல்லாவற்றையும் அடியோடு மாற்றிவிட்டது. அது உலகிலேயே ஒரு புரட்சியை உண்டு பண்ணி விட்டது.

• • •

விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்ததுமட்டுமின்றி, இயற்கையின் மீது அவன் செலுத்தக்கூடிய ஆதிக்கத்தையும் அதிகரித்தது.

• • •

ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும் நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணாடி, கலையாகும். இந்திய நாகரிகம் உயிராற்றல் பொங்கித் ததும்பிய காலத்தில் அது அழகுப்பொருள்களைப் படைத்தது. கலைகள் சிறந்தோங்கின. அவற்றின் எதிரொலி தொலை நாடுகளிலும் கேட்கப்பட்டது.

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1



Registered No. M. 8657 தமிழரசு

தித்திக்கும் தீபாவளி

1000000

10 லட்சம் ரூபாய்க்குச் சிறப்புப் பரிசுகள்

முதல் பரிசு 5 லட்சம் ரூபாய்

2-வது பரிசு 2 லட்சம் ரூபாய்

மூன்று 3-வது பரிசுகள் 3 லட்சம் ரூபாய்

இது தவிர வழக்கமான பரிசுகள் அத்தனையும் உண்டு

10 வரிசைப் பரிசுச் சீட்டுகளுக்கு

10 முதல் பரிசுகள் 10 லட்சம்

100 2-ம் பரிசுகள் 10 லட்சம்

1000 3-ம் பரிசுகள் 10 லட்சம்

5000 4-ம் பரிசுகள் 5 லட்சம்

ஆக மொத்தம் 45 லட்சம் ரூபாய்!

பரிசுகள் எண்ணிக்கை 6115

தமிழ் நாடு அரசு இதுவரை உருவாக்கிய லட்சாதிபதிகள் 189 பேர்

நீங்களும் ஒரு ரூபாயில் உங்கள் நல் வாய்ப்பைச் சோதனை செய்யலாமே!

இச்சீட்டின் விலை ரூ.1 தான்

குலுக்கல் தேதி 30-11-70

நாட்டின் வளர்ச்சித்திட்டத்தில் உங்கள் பங்கு

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

செலவு ஒரு ரூபாய்

வரவு பல லட்சம்

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத் துறை, சென்னை-9.

2-6-71

R.R. 513/70
16658/L 3 - DEC 1970
TAMIL NADU ARCHIVES LIBRARY - 3 DEC 1970 MADRAS-8

தமிழரசு

திங்கள் இருமுறை டிச. 1-1970

35

உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2



தமிழரசு

மலர் 1 1970 டிசம்பர் 1 இதழ் 11

195
R.R. 513/70 P

இந்த இதழில்

கல்விச் சிந்தனைகள்
விருந்தோம்பல் ஒரு கலை
வஞ்சியர்க்கு வாழ்வளிக்கும் பஞ்சுத் தொழில்
கிருஷ்ணகிரி அணை
மிளகாயோ மிளகாய்
பழமா பணமா
கவின்மிகு கலைக்கூடம்
கிராமியக் கலைகள்
கற்பகத்தைத் தேடி
ஆயிரம் காலத்துப் பயிர்
திரைகடலோடியும் தீந்தமிழ் தேடு
மலிவான விலையில் வலிவான பொருள்கள்
செத்த காலேஜ்
வெண்பாப் போட்டி
நன்மைகள் ஆயிரம் ஆயிரம்

முதல்வர் எழுதும்
இனியவை இருபது

TAMIL NADU ARCHIVES LIBRARY 3 DEC 1970 MADRAS-8

அட்டையில்:
தமிழகத்து கிராமியக்கலையான


யாருடி.. ஹிப்பியா?
ஹிப்பியுமில்லே ஜிப்பியுமில்லே! நம்ம பப்பியோட அண்ணன் கோபி!
சே! வெளியே தலைகாட்ட முடியலே! முதல்லே இந்தத் தாடியை எடுத்துத் தொலைக்கிறேன்!
தாடியை எடுத்துப் பயனில்லை! முதலில் ஒரு வேலையைத் தேடப்பிடி!
யாரு தருவா எனக்கு வேலை?
ஏண்டா! சிறு தொழில் துவங்க
தமிழக அரசு
உதவி செய்யுதாமே! அதற்கு முயற்சி செய்யேன்!

....அரசின் நிதி உதவியால் துவங்கிய தொழிற்கூடமிது! வேலை தேடி அலைந்த நான் பலருக்கு வேலை தரும் இத் தொழிலைத் துவங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். அரசு இதற்காக 2000 ரூபாய் முதல் 2 லட்சம் வரை கடன் தருகிறது....
வேலைக்கு ஆள் தேவைன்னு கேள்விப் பட்டோம்...
ஓ! பப்பிகூட சொன்னு! டேய்! பையா...! இவங்களை ஸ்குரு தயாரிக்கிற பிரிவுக்குக் கூட்டிப் போ!
பப்பியா...? ஆமா நீங்க....!
தாடியை எடுத்ததும் தெரியவில்லையா? நான்தான் நீங்கள் கிண்டல் செய்த ஹிப்பி..! பப்பியின் அண்ணன்.
கோ...

இனியவை இருபது

9. மாஜினி - கரிபால்டி

எட்ரூஸ்கரின் படையெடுப்பு முதல் எதேச்சாதிகாரி முசோலினியின் ஆதிக்கம் வரை விந்தைமிகு நெடுங்கதையாய்த் தொடர்கின்ற ரோமாபுரியின்வரலாற்றுக் காவியத்தின் வண்ண ஏடுகள் என் அகக்கண் முன்னால் விரிந்தன.

ரோம் நகரமெங்கும், இன்றும், இடிந்த நிலையிலும், எடுப்பாக விளங்குகின்ற நெடிதுயர்ந்த வரலாற்றுச் சின்னங்கள் என் புறக் கண்ணில் தெரிந்தன.

இவை இரண்டையும் இணைத்துப்பார்த்தேன். என் நெஞ்சகத்தில் வியப்பு அலைகள் விம்மிப் புரண்டன.

சீசரின் எழுச்சி, அகஸ்டசின் ஆட்சி, அந்தோணியின் மயக்கம், கிளியோபாத்ராவின் சாகசம், காலிகூலாவின் அட்டகாசம், நீரோவின் வெறியாட்டம், அக்ரிபானுவின் ஆபாசங்கள், அரிலியசின் அருள்நெறி, ஏஞ்சலோவின் கலைத்திறன் . . . என்று ரோமாபுரியின் வியத்தகு வரலாறு வளர்ந்து கொண்டே போகிறது, சுவைமிக்கதோர் புதினத்தைப் போல !

ஆச்சரியமும், ஆனந்தமும், அச்சமும், நிம்மதியும்,

அருவருப்பும், ஆவேசமும், அவலமும், எக்களிப்பும்,

நமக்குமாறி மாறி வருகின்றன ரோமா புரியின் வரலாற்றைப் பார்க்கும் போது.

மனித உணர்வுகளுக்குள்ளே தான் எத்தனை வேறுபாடுகள் !

அந்த வேறுபாடுகள்தான் எத்தனை மகத்தானவை !

அகஸ்டஸ் மரபிலா நீரோ தோன்றினான் ?

ஆக்டேவியா பிறந்த மண்ணிலா அக்ரிபானு பிறந்தாள் ?

நம்ப முடியவில்லை நம்மால் !

ஆனால் முற்றிலும் வேறுபட்ட உணர்வுகளைக் கொண்ட மகத்தான மனிதர்களின் வாழ்க்கைத் தொகுப்பாகவே ரோமாபுரியின் வரலாறு விளங்குகிறது.

காலத்தினால் பாதிக்கப்பட்ட சரித்திரச் சின்னங்கள் சிலவற்றை ரோமின் சில பகுதிகளில் காணும்பொழுது இதற்குக் காரணம் ரோமானியர்களின் இன உணர்வின் வீழ்ச்சி அல்லவா என்று எண்ணத் தோன்றிற்று எனக்கு !

ஆம்! ரோமானியர்களின் இன உணர்வு ஓங்கி நின்ற பொழுது அது உலகை ஆண்டது. அந்த எழுச்சி தாழ்ந்து ஒழிந்தபொழுது ரோம், சிற்றரசுகளின் முன்னால் தலைவணங்கி நின்றது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஒடேசர் என்பவனால் விரட்டப்பட்ட ரோமுலஸ் என்ற ரோமானிய மன்னனின் இறுதி ஆட்சிக்குப்பிறகு இத்தாலி சிதறுண்டது. சிறுசிறு பிரிவுகளாகி எதிரிகளுக்கு இரையாயிற்று.

பதினைந்தாம் நூற்றாண்டில் இத்தாலியை மீண்டும் இணைத்துத் தரணியை ஆளவைக்க வேண்டும் என்ற சாம்ராஜ்யக் கனவு கண்டான் மாக்கியவல்லி என்ற அரசியல் சிந்தனையாளன். ''கருமம் தான் எனக்குக் கண். கருவிகளைப் பற்றியோ, கருமத்தை அடைய அவற்றைப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றியோ எனக்குக் கவலையில்லை'' என்றவன் அவன். இத்தாலிய அரசர்களுக்குப் பேரரசு மோகம் ஊட்ட முயன்ற மாக்கியவல்லி அறத்திற்குப் புறம்பான வழிகளிலும் அரசியல் நடத்துவதை ஏற்றவன். '' நயவஞ்சகனாக இருந்துகொண்டே, நண்பன் போல நடிக்க வேண்டும். ஒரு அரசனின் நடிப்பாற்றலைப்பொறுத்துத்தான் ஆட்சியில் அவன் குவிக்கின்ற வெற்றிகள் அமையும் '' என்று 'பாடம்' சொல்லிக் கொடுத்தான் அவன் எழுதிய ''இளவரசன்'' (The Prince) என்ற நூலின் மூலம். அவனுடைய மொழிகளைக் காணும்பொழுது ''ரூஸ்ஸோ'' போன்ற அரசியல் நேர்வழிச் சிந்தனையாளர்களின் பாதையில் பயிலுவோருக்கு மனப் பதைப்பு ஏற்படும். மறைந்த பிரதமர் நேரு, மாக்கியவல்லியைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, ''அவனுடைய வாதங்கள் ஏற்க முடியாதவைதான் என்றாலும், இன்றுள்ள வல்லரசுகள் அவனுடைய சித்தாந்தங்களையே மறைமுகமாகப் பின்பற்றி வருகின்றன'' என்று எழுதியதை 1953-ல் திருச்சிச் சிறைச் சாலையில் நான் படித்தது என் நினைவுக்கு வந்தது. மாக்கியவல்லியின் தத்துவங்களை எவர் ஏற்றாலும் சரி, நாம் அதனை ஏற்பதற்கில்லை; ''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்'' என்பதை நாம் அறிந்தவர்களாதலால்!

சிதறுண்ட இத்தாலியை மீண்டும் இணைத்திட வேண்டும் என்ற இன்பக் கனவு இருவர் இதயங்களில் மீண்டும் தோன்றியது— பத்தொன்பதாம் நூற்றாண்டிலே!

அவர்களில் ஒருவன் மாஜினி. மற்றவன் மாவீரன் கரிபால்டி.

மாஜினி எழுத்துவேந்தன். தன் எழுத்தின் வேகத்தால் இத்தாலி எங்கும் எழுச்சியை ஊட்டியவன். அந்த எழுச்சிக்குச் செயல் வண்ணம் சேர்த்து வெற்றியை ஈட்டியவன் கரிபால்டி.

மாஜினி தேசீயக் கனலை மூட்டினான். அந்தக் கனலை நாடெங்கும் பரப்பி எதிரிகளை அதில் எரி சருகாக்கினான் கரிபால்டி.

இவர்கள் இருவரும் இத்தாலியின் இரு கண்கள். இத்தாலியின் இதயம் மாஜினி என்றால், அதன் ஆற்றல் மிகு கரமாக கரிபால்டி இருந்தான்.

ஆஸ்திரியரின் ஆதிக்கம் ஒரு பக்கம்!

அவர்களுக்கு அடிமையாகநாட்டின் ஒரு பகுதியை ஆண்ட பீட்மாண்டு என்ற இத்தாலிய அரசவம்சத்தினரின்ஆட்சி ஒருபக்கம்!

போப் மதகுருவின் ஆணையின் கீழ்க் கட்டுண்டு கிடந்த பகுதிகள் ஒரு பக்கம்!

நேப்பில்ஸ் மன்னரின் அடக்குமுறையில் அவதியுற்ற மக்கள் ஒரு பக்கம்!

என இத்தாலி நான்கு கூறுகளாகப் பிரிந்து, நலிந்து வாழ்ந்த காலம் அது. 'விடுதலை தவறிக் கெட்ட' தாயகத்திற்கு வீர சுதந்திர உணர்ச்சி ஊட்டி இத்தாலியை இணைத்து வாழ வைத்திட வேண்டும் என்ற எண்ணம் அந்த இரண்டு விடுதலை வீரர்களுக்கும் இளமையிலேயே எழுந்தது.

பத்து வயதிலேயே அரசியல் பக்குவம் பெற்ற மாஜினி, இருபத்தைந்தாவது வயதில், ஆட்சியாளரின் அடக்குமுறைப் பார்வைக்கு இலக்கானான்.

வழக்கறிஞர் பட்டம் பெற்ற பின்னும் தொழிலைத் துறந்து, மக்களின் விடுதலை வழக்கிற்காகப் புரட்சி என்னும் நீதி மன்றத்தில் நின்று வழக்காடிக் கொண்டிருந்த அவன் ஸாவோனா சிறைச் சாலையில் அடைக்கப்பட்டான். சிறைச் சாலை மாஜினிக்கு ஓர் சிந்தனைச் சோலை ஆயிற்று. ''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை'' யாகக் காராக்கிரகத்தைக் கருதினான்.

எதிர்காலத்தைப் பற்றிய எண்ணங்களும், திட்டங்களும் சிறையில் இருந்தபொழுதுதான் அவன் நெஞ்சத் திரையில் எழுந்தன. இளைஞர்கள் இந்த நாட்டின் இரத்த நாளங்கள். ஆர்வமும் துடிப்பும் மிக்க இளையோர்களால் தான் அதிசயங்களை உருவாக்கிட முடியும் என்ற முடிவுக்கு வந்த மாஜினி ''இளைய இத்தாலி'' (Young Italy) என்ற விடுதலைச் சங்கத்தை நிறுவிட வேட்கை கொண்டான். நாற்பது வயதுக்கு மேற்பட்டோர் அதில்உறுப்பினராவதைத் தடுத்திடவேண்டும் என்றும் தீர்மானித்தான். அன்னை பூமியின் விடுதலைக்காக அன்னியரின் உதவியினை நாடுவதை அவன் விரும்பவில்லை. ''ஒரு நாட்டின் விடுதலைக்கான விதை அந்த நாட்டு மக்களின் கரங்களாலேயே ஊன்றப் படவேண்டும். அவர்களின் பச்சை இரத்தமே, அதற்குப் பாசன நீராகப் பாய்ச்சப்படவேண்டும். அவர்களின் வீரமே விளையும் பயிருக்கு வேலியாக வேண்டும் '' என்பது அவன் கோட்பாடு.

''அத்தகையவிடுதலைப் போரில் தான் உண்மையான வெற்றி கிடைக்கும்'' என்று உறுதியாக நம்பியவன் மாஜினி. ''எந்த இனத்திற்கு உரிமைக்காகப் போராடும் உணர்வும் சக்தியும் இல்லையோ, அந்த இனத்திற்கு உரிமை வாழ்வு வாழ்கின்ற தகுதியும் இல்லை'' என்று ஆணித்தரமாகக் கூறினான்.

சிந்தனைகளோடும், சீரிய திட்டங்களோடும் சிறையினை விட்டு வெளியே வந்த மாஜினியை நாடு கடத்தியது அரசாங்கம்.

பிரஞ்சு நாட்டின் மடியில்,மார்சேல்ஸில், தஞ்சம் புகுந்தான் மாஜினி. விடுதலை எனும் யாழை மீட்டிச் ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' என்னும் இனிய நாதங்களை எழுப்பிய பிரஞ்சு நாட்டில் தாயகத்தைக் காக்கின்ற பாசறை அமையலாயிற்று. மாஜினியின் அச்சுக்கூடம் தான் அந்தப் பாசறை. தன் எழுத்துக்களால் இத்தாலி மக்களுக்கு இன எழுச்சியைத் தொடர்ந்து ஊட்டி வந்தான். ஒரு மாவீரனின் வாளின் வலிமையை விட ஓர் அறிஞனின் பேனா முனைக்கு அதிக வலிவு உண்டு என்பதனை நிரூபித்துக் காட்டினான்.

இத்தாலியிலிருந்து ஏற்கனவே துரத்தப்பட்ட விடுதலை விரும்பிகளுடன் மார்சேல்ஸில் சேர்ந்து மாஜினி புரட்சித் திட்டங்களை வகுத்தான். அவ்வாறு துரத்தப்பட்டவர்களில் ஒருவனான கரிபால்டி மாஜினியைச் சந்தித்ததும் இங்குதான்.

''நாடெல்லாம் உரிமை வேட்கையை மறந்து உறங்கியபொழுதும், தான் உறங்காத உத்தமன். விடுதலை என்னும் வேள்வித்தீயை அணையாது காத்துவந்த பெருமகன்'' என்று கரிபால்டி, மாஜினியைப் பாராட்டினான்.

''இளைய இத்தாலி'' என்ற சங்கம் மார்சேல்ஸில் உருவாயிற்று. இரண்டே ஆண்டுகளில் அதன் உறுப்பினர் தொகை அறுபதினாயிரம் ஆயிற்று. அச்சம் மிகக் கொண்ட ஆஸ்திரிய அரசு,

முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

"இளைய இத்தாலி"யில் அங்கத்தினரானோருக்கு மரண தண்டனை விதித்தது.

இத்தாலிய மண்ணின் ஒரு பகுதியை ஆண்டு வந்த இத்தாலிய மன்னனுக்கு இனத்தின் பெயரால் மாஜினி வேண்டுகோள் ஒன்று விடுத்தான்.

"புரட்சி தோன்றும் தருணம் நெருங்கி விட்டது. தலைமை தாங்க வா!" என்று.

ஆஸ்திரிய ஆதிக்கத்தை எதிர்க்கத் துணிவற்ற சார்லஸ் ஆல்பர்ட் அரசனோ அடக்கு முறைகளை ஏவி விட்டான். புரட்சியாளர்களைச் சிறையில் அடைத்தும் சித்திரவதை செய்தும், கொலைக்களம் அனுப்பியும் கொடுமைகள் புரிந்தான்.

மரண தண்டனை விதிக்கப் பட்ட மாஜினியும், கரிபால்டியும், பிரான்சிலிருந்து துரத்தப்பட்டனர்.

ஸ்விட்சர்லாந்து அவர்களுக்கு அடைக்கலம் தர மறுத்தது.

டுனிஷியாவிலும் தஞ்சம் கிடைக்கவில்லை.

மூன்று ஆண்டுகள் அந்த விடுதலை வீரர்கள் நாடுவிட்டு நாடு ஓடிக் கொண்டே இருந்தனர்.

ஆனால், அந்த நிலையிலும் அவர்கள் கரத்தில் ஏந்தியிருந்த சுதந்திரத் தீபம் சுடர்விட்டெரிந்து கொண்டிருந்தது.

இடையறாத இன்னல்களுக்குப் பிறகு இறுதியாக இலண்டன் சேர்ந்தான் மாஜினி. அங்கிருந்தவாறே இத்தாலிக்குத் தேசிய எழுச்சியினை ஊட்டும் தன் எழுத்துப் பணியைத் தொடர்ந்தான்.

ஓடிக் களைத்த கர்ம வீரன் கரிபால்டியோ தென் அமெரிக்கக் கடற்கரை ஓரத்தில் நடந்து கொண்டிருந்தான்.

ரியோ கிராண்ட் என்னும் இடத்தில் தங்கினான். ஆனால் அவனுடைய சுதந்திர உணர்வு ஓய்வு கொண்டிடவில்லை. பிரேசிலின் ஆதிக்கத்திலிருந்த அந்நாட்டு மக்கள் விடுதலை பெறவும், உருகுவே நாட்டு மக்கள் தங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்ளவும் உற்ற துணையாக இருந்தான்.

பிற நாட்டினரின் வாழ்வுக்காகப் போராடியபொழுதும், பிறந்த மண்ணின் விடுதலைக்காகவும் ஒற்றுமைக்காகவும் அவன் உள்ளம் தவித்துக் கொண்டே இருந்தது.

மாவீரன் கரிபால்டி.

தென் அமெரிக்காவில் இருந்தவாறே இத்தாலியர் சிலரைக் கொண்ட வீரர் அணி ஒன்றைத் திரட்டினான், இத்தாலியின் விடுதலைக்காக!

தாய் நாட்டின் அடிமை நிலையை உணர்த்தும் இருளாகக் கருப்பு வண்ணம்—அதனிடையே கொழுந்து விட்டெரியும் விடுதலை வேட்கையாக வெடிக்கின்ற எரிமலையின் சின்னம்—அடங்கிய புதிய கொடியொன்றினை உருவாக்கினான்.

புதிய படை!

புதிய கொடி!

மாவீரன் கரிபால்டி தன் புரட்சி வாளைத் தீட்டிக் கொண்டிருக்கிறான் மாண்டிவிடாவில்!

1848-ஆம் ஆண்டு!

ஐரோப்பாவெங்கும், எதேச்சாதிகாரத்தை எதிர்த்து மக்கள் திரண்டெழுந்த காலம் அது!

புரட்சிகள் வெடித்து மக்களாட்சி என்ற புதுமணம் பரவிய வேளை!

பொங்கி எழுந்த மக்களின் சக்தி, சர்வாதிகாரிகளைச் சரிய வைத்திட்ட ஆண்டு!

மாஜினியின் எழுத்தால், எழுச்சி பெற்றனர் இத்தாலிய மக்கள்!

"இனிப் பொறுப்பதில்லை" என்று சூளுரைத்து எழுந்தனர்.

ஆனால் அவர்களை நெறிப் படுத்தி அழைத்துச் செல்ல நல்ல தலைவன் அங்கு இல்லை!

"கரிபால்டி வருவானா?" என்ற ஏக்கக் குரல் எங்கும் கேட்டது.

கரிபால்டி வந்தான்!

"உலகத்துச் செம்பொன்னையெல்லாம் என் முன்னே கொட்டினாலும், என்னுடைய செஞ் சட்டை வீரர் அணிக்கு அது இணையாகுமோ? அத்துணை மதுகை படைத்த இவர் முன்னாலே நிற்கும் நெஞ்சுரம் மாற்றாருக்கு உளதோ?" என்று எக்காளமிட்ட வண்ணம் 1848-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தாயகம் வந்தான் கரிபால்டி!

ஆம்! பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு—

குன்றாத உரிமை உணர்வுடன்,

குன்றென அசையும் படையுடன்—பிறந்த மண்ணில் காலடி எடுத்து வைத்தான்!

எங்கணும் எழுச்சி வெள்ளம்!

ஆஸ்திரிய ஆதிக்கத்தை எதிர்த்து அனைவருமே திரண்டனர்!

சுதந்திர கீதம் விண்ணை நிறைத்தது!

கழனிகள் களங்களாயின!

ஏர்பிடித்தோரும் போர் தொடுத்தனர்!

தொழிலாளரும் தோள்களில் ஆயுதங்கள் சுமந்தனர்!

பள்ளிச் சிறார் முதல் தள்ளாத கிழவர் வரை படைக்கலன்கள் ஏந்தினர்!

ஒரு கிழமைக்குள்ளேயே, தோற்று ஓடி ஒளிந்தது ஆஸ்திரியப்பட்டாளம்!

இலண்டனிலிருந்த மாஜினி இது கேட்டு மனம் மிக மகிழ்ந்து, தாயகம் வந்தான்.

"இந்நாடு, முடியாட்சியை உதறி மக்களாட்சியை ஏற்ற பொன்னாடு" என மொழிந்தான்.

ஆனால், மாஜினியால் பிரகடனப்படுத்தப்பட்ட குடியரசு எட்டு வாரங்களே வாழ்ந்தது!!

தன் எழுத்தின் வேகத்தால் இத்தாலி எங்கும் எழுச்சியை ஊட்டிய எழுத்து வேந்தன் மாஜினி.



சிதறுண்ட ஆஸ்திரியப் படைகள் மீண்டும் சேர்ந்து வந்து தாக்கின. அவற்றிற்கு ஈடு கொடுத்துப் போராடிய கரிபால்டி புதிதாகப் பிரஞ்சு வீரர்களையும் சந்திக்க வேண்டியதாயிற்று.

பயிற்சியற்ற படைபலம்!

புதிய தெம்பினைப் பெற்றுவிட்ட எதிரிகள் எத்திசையிலும்!

இத்தாலிய நாட்டுக் குடியரசின் ஆழ்ந்து பாராளுமன்றம் சிந்தித்தது. இந்நிலையில் சரணடைவதே சாலச் சிறந்தது என்று முடிவெடுத்தது.

சரணடைவதா?

"அந்தோ! பெருமையும் தீய வாய்ப்பும் ஒருசேரப் பெற்ற என் அருமைத் தாயகமே!" என்று மனம் குமுறினான் மாஜினி. இடிந்த நெஞ்சமொடு, கலைந்த கனவோடு, அவன் இங்கிலாந்துக்குப் பயணமானான்.

வெகுண்டெழுந்த கரிபால்டியோ வெஸூவியஸ் எரிமலையைப் போல வெடித்துக் கொண்டிருந்தான் இத்தாலி நாட்டு வீதிகளில்.

"இந்நாட்டு இளைஞர்களே! கேட்டீரா சேதி! ஆஸ்திரிய ஆதிக்கம், பிரஞ்சு அரசு, போப்பின் படைகள் என்று மூன்று முனைகளில் நமக்கு எதிர்ப்பு! நம் படையில் இருப்பவரோ மூவாயிரவர்!

போர் முறையில் அதிகம் பயிற்சி பெறுதோர்! எனவே சரணடைவீர் என்று ஆணையிட்டு விட்டது மக்களவை!

ரோமாபுரியின் நீண்ட வீரகாவியத்தை மீண்டும் எழுத வல்ல மணிக்கரங்களே!

எதிர்த்துப் போராட என்னோடு வாரீர்!" என்றழைத்தான் கரிபால்டி.

"பணமோ, பதவியோ, பளிங்குக்கல் மாளிகையோ என்னோடு வருவோருக்கு நான் தரமாட்டேன். பசி, தாகம், பச்சை இரத்தம் வழிந்தோடும் போர்க்களங்கள், பயங்கர அணிவகுப்புகள் இவையே நான்

தரக்கூடிய பரிசுகள். இதயத்தால் இந்நாட்டை நேசிக்கின்ற இளைஞர்களே !. அன்னை பூமியின் மானம் காப்போம், என்னோடு வாரீர் !'' என்று அறைகூவல் விடுத்தான்.

ஆனால் ஆதிக்க வெறிபிடித்தோரால் கரிபால்டி விரட்டப்பட்டான்.

காடு, கடல் என்றும், கடும்பசி, தூக்கம் என்றும் பாராது கரிபால்டி நடந்தான் படையுடன்.

ரியோடிஜினிரா என்று ஓர் அழகிய தீவு—அங்கே அடைக்கலம் புகுந்தான்.

ஆனால் ஆஸ்திரியாவுக்குப் பயந்த அந்த அரசு அவனை அங்கிருந்து விரட்டியது.

இருநூறு வீரர்களுடன் பதின்மூன்று படகுகளில் ஏறிப் பயணமானான். எதேச்சாதிகாரத்தின்கரங்கள்நடுக்கடலிலும் அவனைப் பின்தொடர்ந்தன. கடல் கொந்தளித்ததோ என நிகழ்ந்த கடுமையான ஒரு போரில் படை வீரர்களில் நூற்றுஅறுபது பேர்களை இழந்தான் கரிபால்டி.

நோயால் வாடிய தன் மனையாளைத் தோளில் சுமந்த வண்ணம் செம்படவக் குடில் ஒன்றுக்கு வந்து சேர்ந்தான் கரிபால்டி.

அங்கு தான்—

தென் அமெரிக்காவில் அவனைக் ''கைப்பிடித்து, அவன் காரியம் யாவினும் கைகொடுத்த'' காதல் மனைவியின் ஆவி பிரிந்தது.

அன்னைத் திருநாட்டை மீட்கின்ற அற்புத வாய்ப்பை இழந்தான் !

அரிய வீரர்களை இழந்தான் !

அருமை மனைவியையும் இழந்தான் !

துயர் மண்டிய நெஞ்சமொடு, எங்கு செல்கிறோம், என்ன செய்கிறோம் என்ற உணர்வின்றியே அவன் நடந்து கொண்டிருந்தான்—இப்படி நாற்பது நாட்கள் ! !

சார்டினியாவை ஆண்ட இத்தாலியனான விக்டர் எம்மானுவல் மன்னன் தனக்குத் தஞ்சம் அளிப்பான் என எண்ணினான்.

ஆஸ்திரியாவுக்குப் பயந்த அரசன் அதற்கு மறுத்து விட்டான்.

டுனீசியா ; அங்கும் அதே நிலை !

ஜிப்ரால்டர் கரை ஓரம் ஒதுங்கினான் ;

ஆங்கில கவர்னர் அவனைத் துரத்தினான் !

ஆஸ்திரிய எதேச்சாதிகாரமும் அதற்குத் துணைபோன அரசுகளும் அவனை விரட்டிக் கொண்டே இருந்தன.

இறுதியில்—

1851-ல் நியூயார்க் நகரை அடைந்து அங்கு மெழுகுவத்தித் தொழிலில் ஈடுபடலானான் கரிபால்டி. தாயகத்தின் வாழ்வுக்காகத் தன்னையே அழித்துக் கொண்ட தான் ஒரு மெழுகு வத்தி என்பதைத் தன் தொழில் மூலம் சொல்லாமல் சொல்லிக் காட்டினான் போலும் !

1854-ல் பிறந்த பூமியான நீஸைக் (Nice) குத் திரும்பிய கரிபால்டி வேளாண்மையில் கவனம் செலுத்தினான். ஆனால் அவனுடைய நெஞ்சில் விடுதலை வேட்கை மட்டும் நீறுபூத்த நெருப்பாகவே இருந்து வந்தது.

அவனை ஊதி, மீண்டும் அங்கும் தணலை எழுப்பியவன் கவூர் என்பவன். இத்தாலியின் ஒரு பகுதியை ஆண்ட பீட்மாண்ட் வம்சத்து விக்டர் எம்மானுவல் என்னும் மன்னனின் மதியூகி அமைச்சனவன். மாஜினியையும் கரிபால்டியையும் பயன்படுத்தி ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தைத் தொலைத்து, விக்டர் எம்மானுவலை இத்தாலிய நிலப்பரப்பு முழுமைக்கும் முடி மன்னனாக்க வேண்டும் என்ற ஆசையில் கரிபால்டியை அழைத்தான் கவூர். எப்படியும் இத்தாலி முழுதும் இணைந்து அந்நியர் ஆதிக்கம் ஒழிந்தால் போதும் என்ற எண்ணம் கொண்ட கரிபால்டியும் அதற்கு இசைந்தான். ஆஸ்திரியாவை எதிர்ப்பதற்கு பிரான்சும் சம்மதம் தந்தது.

ஐயாயிரவர் கொண்ட அடல் மறவர் சேனை ஒன்றைத் திரட்டினான் கரிபால்டி.

எழுச்சிமிக்க கரிபால்டியின் படையும், எம்மானுவல் சேனையும், பிரஞ்சுப் படையும் ஆஸ்திரியாவைப் புறங்கண்டன. இத்தாலியப் பகுதிகள் மீண்டும் இத்தாலியர் வசமாயின.

ஆனால்—

இத்தாலி மீண்டும் ஒன்றாக இணைந்தால் தம் ஆதிக்கத்திற்கு ஊறு நேருமோ என்ற அச்சம் கொண்ட பிரஞ்சு அரசன் லூயி நெப்போலியன், இடையில் சண்டையை நிறுத்திவிட்டு ஆஸ்திரியரிடம் சரணடைந்தான்—கரிபால்டியின் வேண்டுகோளுக்கு மாறாக.

ஆனால் அவன் நாட்டுப் பற்றும் சுதந்திர தாகமும் தணியவில்லை. பல சிரமங்களுக்கிடையே மீண்டும் தனக்குப் பலம் சேர்த்துக் கொண்டான். நேபில்ஸிலும் சிசிலியிலும் வெற்றிபல கண்டான். அவன் வெற்றிகளை ஆங்கிலக் கவி டென்னிஸனும் புகழ்ந்து பாராட்டினான்.

மேலும் பல வெற்றிகளைப் பெற்று இணைந்த இத்தாலி என்ற அந்த இன்பக் கனவு தன் கண் முன்னால் நனவாகக் கண்டு சில ஆண்டுகளுக்குப் பிறகு 1882-ல் உயிர் நீத்தான் கரிபால்டி.

ஆனால் மாஜினிக்கு அந்த மன நிம்மதி கிடைக்கவில்லை.

கரிபால்டி வெற்றி பெற்ற இடத்தில் வாழ்ந்த மக்களோ, விக்டர் எம்மானுவல் தலைமையில் முடியரசையே ஏற்பது என்று வாக்கெடுப்பில் தீர்மானித்தனர். ஆற்றல் மிக்க அரசன் ஒருவன் அரசனாக இருந்தால்தான் அண்டை நாடுகளின் ஆதிக்க வெறிக்குப் பலியாகாமல் இருப்போம் என்று அவர்கள் கருதியிருக்கலாம். ஆனால் இணைந்த இத்தாலியில் மக்களாட்சி என்ற மங்காத ஒளிவிளக்கை ஏற்றிட நினைத்த மாஜினியோ, உடைந்த உள்ளத்தோடு பைசா நகரத்தில் தன் உடலைச் சாய்த்திட்டான். மாஜினி, கரிபால்டி என்ற இரு மாணிக்கங்களும் மறைந்தன.

(தொடரும்)



2

மருத்துவக் கல்வியைக் கவனிப்போம்; முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, 'டைபாயிட்' காய்ச்சல் கண்டுவிட்டால், நோய் இருபத்தொரு நாட்கள் இருந்து தான் இறங்குமென்று நம்பினார்கள். சென்ற இருபது ஆண்டுகளில் இந் நோயின் காரணத்தைப் பற்றியும் அதைத் தணிக்கும் வகையைப் பற்றியும் எவ்வளவோ அறிவு பெருகியுள்ளது. 'க்ளோரோமைசிடின்' என்ற மருந்தின் மூலம், சீக்கிரமே காய்ச்சலைத் தணிக்கக் கற்றுக் கொண்டுள்ளார்கள் மருத்துவர்கள்.

முன்னர் 'காக்காவலி'க்கு மருந்துவமே இல்லையென்று எண்ணினர். இப்போது அதற்கும் மருந்துகள் வந்துள்ளன.

இரத்த அழுத்தத்திற்கு மருந்து வகைகள் முன்னர் இல்லை; இப்போது உண்டு.

'செயற்கைச் சிறு நீர் அகம்' புதியகண்டுபிடிப்பு!' உறுப்பு ஒட்டு அறுவைச்' சிகிச்சை முன்னர் அறியாதது! இப்போது கையாளப்படுவது. 'இருதய-நுரையீரல்' கருவி, மருத்துவத் துறை முன்னேற்றத்தின் அடையாளம்.

சுருக்கமாகக் கூறுவதானால், மருத்துவக் கல்வி, புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப, புதுப்பிக்கப்பட வேண்டும்.

பயிர் வகைகளைப் பார்ப்போமே! 'வீரிய விதை'களும், அமோக விளைச்சல் விதை நெல்களும் அண்மைக் காலத்தில் நம்மிடம் வந்தவை.

ஐ.ஆர். எட்டு விதையில் தொடங்கி, இன்று 'கருணை' வரை வளர்த்திருக்கிறோம். பசு உரமும் தழைஉரமும், பண்டைப் பயிர்த் துணைகள். இரசாயன உரம் இன்று பெரிதும் பயன்பட்டு வருகிறது. கட்டைக் கலப்பையே முன்னர் அறிந்தது; 'டிராக்டர்' இன்று நடைமுறைக்கு வந்துவிட்டது. எனவே, வேளாண்மைக் கல்வி, இவற்றிலெல்லாம் பயிற்சி கொடுப்பதாக இருக்க வேண்டும். நில உச்சவரம்பு வந்துவிட்டபின், பெரும்பண்ணைகளில் பயிரிடும் முறைகளைவிட, சிறு பண்ணைப் பயிர்த் தொழிலில், ஆதாயம் காண்பதைப் பற்றிக் கவனஞ் செலுத்த வேண்டும். ஆகவே, பழைய, பயிர்க்கல்விப்பாடத்திட்டம் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.

இப்படியே, வேதியல், பௌதிகம், உடலியல், நிலவியல் ஆகியவற்றைப் பற்றியும் புதிய புதிய உண்மைகள், நாளுக்கு நாள் வெளியாகின்றன. அதனால் பழைய கொள்கைகள் அடிபட்டுப் போகின்றன. புதிய கொள்கைகள் உருவாகின்றன. முன்காலத்தில், எப்போதோ ஒரு முறை, இத்தகைய நிலைகள் உருவாகும். இக்காலத்திலோ, அறிவியல்துறை உண்மைகள் பெருமழையாகப் பெய்கின்றன.

நெ.து. சுந்தரவடிவேலு
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

வரலாறும், பழைய ஆமை நடையிலே நகர்வதில்லை. விரைந்து வளர்கிறது. பழைய வரலாற்றோடு நிற்பவர், திக்குத் தெரியாத இடத்தில் நிற்க நேரிடலாம். 'திட்டமிடுதல்' என் மாணவப் பருவ காலத்தில், பொருளாதார மேதைகள் அறியாதது; இன்றோ, மாணவர்கள் விவாதிப்பது.

ஒவ்வொரு துறை முன்னேற்றத்தையும் கவனித்து, கணக்கிட்டுக் கற்பித்தலே கல்லூரிகளின் கடமை. இதற்குத் துணைப்பாடத் திட்டத்தை உச்சவரம்பாகக் கொண்டால் ஏமாந்து விடுவோம். அதை மிச்சவரம்பாகவே கொள்ளவேண்டும். முன்னேறிய நாடுகளில் அப்படியே கொள்ளுகிறார்கள். பாடத் திட்டம் உருவானதற்குப் பின் வரும் உண்மைகளைச் சேர்த்துக் கற்பிக்கிறார்கள். அது எப்படி முடிகிறது? ஏற்கனவே கூறியது போல், ஒவ்வொரு அறிவுத்துறையிலும் வெளியாகும் பல நாட்டு இதழ்களையும் வாங்குகிறார்கள். அவற்றைப்படித்து, அவை வெளியிடும் ஆதாரபூர்வமான தகவல்களை, கண்டுபிடிப்புகளை, கொள்கைகளை வகுப்புகளிலே வைக்கிறார்கள். எனவே, அவர்கள் கல்வி, பாடத் திட்டத்தோடு நின்றுவிடாமல், மேலும் மேலும் வளர்ந்து வருகிறது; புதுமையும் பெற்று வருகிறது. பற்பல நாட்டு அறிவியல், பொருளியல் முதலிய இதழ்களையும் வாங்குவதற்குத் தாராளமாகச் செலவிடுகிறார்கள்.

PSG



அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

விவரங்களுக்கு எழுதுங்கள்:

பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

PSG the hallmark of high standard

விற்பனைக் கிளைகள்:

311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1. பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4. 13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.

VSK PSG 213

1965-ஆம் ஆண்டு சென்னையிலே திரைப்பட விழா நடைபெற்றது. அனைத்துலகத் திரைப்படங்களுடன், திரைப்படக் கலைஞர்களும், தாரகைகளும் சென்னைக்கு வருகை தந்திருந்தனர். அவர்களுக்கு இனிய விருந்து தரப்பட்டது. அறுசுவை உண்டியினை அனைத்துலக விருந்தினர் உண்டு மகிழ்ந்தனர்.

1968-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9 ஆம் நாள், தமிழகக் கல்வி அமைச்சர், அனைத்துலக நில நூல் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஒரு விருந்தினை அளித்தார். விருந்தின் அமைப்பும், சுவையும் அனைவரையும் கவர்ந்தன.

மாமல்லபுரம் கடற்கரையில் ஒரு நிலாச் சாப்பாடு. பல்லவ மன்னனின் கற்கோயில் எழில் தோன்ற, நிலாச் சாப்பாட்டை ரசித்து உண்டனர் விருந்தினர்.

இவ் விருந்துகளைத் தயாரித்தவர்களும், பரிமாறியவர்களும் சென்னை சமையல் கல்லூரி மாணவர்கள் என்பதைக் கேட்டால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். ஆம்! சென்னை, அடையாற்றில் உள்ள சமையல் கலையியல் கல்விக் கூடத்தில் படித்து வரும் மாணவர்கள் ஆண்டுதோறும் பல்வேறு விருந்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவர்கள் ஏற்பாடு செய்யும் விருந்து, வெளி உணவு விடுதியினர் தரும் விருந்தினைவிட மலிவாக இருப்பதோடு, விஞ்ஞான ரீதியில், சுகாதார முறையில் தயாரித்ததாகவும் இருக்கும்.

இந்தியாவிலே நான்கு இடங்களில்தான் இந்தச் சமையல் கலை, முறையான கல்விக்கூடத்தில் கற்றுத் தரப்படுகிறது. அதில் ஒன்று சென்னையில் உள்ள இந்தக் கல்விக்கூடம். மற்ற மூன்று பம்பாய், கல்கத்தா, டெல்லி ஆகிய இடங்களில் உள்ளன. தொழில் கல்வித் துறையில் இது ஒரு முக்கிய வளர்ச்சி எனக் குறிப்பிடலாம்.

தமிழக அரசும், மைய அரசும் சேர்ந்து நடத்தும் ஒரு கல்விக் கூடமாகும் இது. இந்தக் கல்விக் கூடத்திற்கான இடத்தைத் தமிழக அரசு தந்தது. கட்டடம், கருவிகளுக்கான முழுச் செலவையும் மைய அரசு ஏற்றுக் கொண்டது. ஆண்டுதோறும் ஏற்படும் நடைமுறைச் செலவுகளை மாநில அரசும் மைய அரசும் சேர்ந்து ஈடு கட்டுகின்றன.

தமிழகக் கல்வி அமைச்சரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழுவின் நிர்வாகத்தில் இந்தக் கல்விக்கூடம் நடத்தப்படுகிறது. நான்கு உறுப்பினர்கள் மாநில அரசின் பிரதிநிதிகளாகவும், நான்கு உறுப்பினர்கள் மைய அரசின் பிரதிநிதிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர். உறுப்பினர்களில் ஒருவர் அல்லது இருவர் உணவு விடுதிகளின் பிரதிநிதிகளாக நியமிக்கப்படுகின்றனர்.

சமையல் கலையைக் கற்றுத்தர அரசு இத்தனை முயற்சி செய்வதற்கு என்ன காரணம்? இன்று உலகில் மிகப் பெரிய தொழிலாக வளர்ந்து வருவது சுற்றுலாத் தொழில். சுற்றுப்பயணிகளைக் கவர்வதில் வரலாற்றுக் கலைச் சின்னங்கள், கலாச்சாரம் ஆகியவற்றோடு அறுசுவை உண்டியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். எனவே, நாகரீக உணவு விடுதிகளுக்கு முறையாக விஞ்ஞான ரீதியில் சமையற் கலையில் கற்றுத் தேர்ந்த வல்லுநர்கள் தேவைப்படுகின்றனர்.

அந்தத் தேவையை உணர்ந்துதான் அரசு, இந்தக் கல்வி நிலையத்தை ஏற்படுத்தியது. சமையல் செய்வதில் என்ன விஞ்ஞான முறை என்று கேட்கத் தோன்றும்! இக் கல்விக் கூடத்தை ஒரு முறை பார்த்தால் அதற்கான பதில் தெளிவாக விளங்கும்.

கட்டடம், கருவிகள் அனைத்தும் சேர்ந்து சுமார் 18 லட்ச ரூபாய். இந்தக் கல்விக் கூடம் தோற்றத்தில் எழில் குலுங்க இருப்பதோடு சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் வைக்கப்பட்டுள்ளது. சமையல் கலையியல் என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், இங்கு உயர்ந்த ரக உணவு விடுதி நடத்துவதற்குத் தேவையான அத்தனை தகுதிகளும் பெறத் தக்க கல்வி அளிக்கப்படுகிறது. இந்தியச் சமையல் முறை, மேலைநாட்டுச் சமையல் வகைகள் ஆகியவற்றைக் கற்றுத் தருவதோடு

தமிழ் நாட்டில் கல்லூரிகளில் நூலகக் கட்டணம் வாங்குகிறூர்கள். அந்த வசூல் குறைவென்று சொல்வதற்கில்லை. அதில் முடிந்த அளவு பெரும் பங்கைப் பிற நாட்டு அறிவியல்கல்விச்சஞ்சிகைகளுக்குச் செலவிடுதல் நல்லது.

எவ்வளவு நன்றாக ஓடினாலும், காரை அப்போதைக்கப்போது 'சர்வீஸு'க்கு அனுப்பாவிட்டால் அது பாழாகி விடும். நெடு நாளைக்கு நன்றாக ஓடாது. நெடு நாள் சும்மா கிடக்கும் கார், பல இடங்களில் துருப் பிடிக்கும், சில பகுதிகள் ஆற்றலை இழந்துவிடும். பாடத் திட்டத்தை மிச்சவரம்பாகவே கொண்டு, மாத, காலாண்டு அறிவியல் இதழ்களின் துணை கொண்டு, கல்வி கற்பிக்கும்முறையை நாம் மேற்கொண்டாலும், பாடத்திட்டத்தை அப்போதைக்கப்போது 'சர்வீஸு'க்கு அனுப்ப வேண்டும். சில வேளை, அந்த சர்வீஸ் சாதாரண சர்வீஸாக மட்டும் நின்று விடாமல், எல்லாவற்றையும் சரி பார்க்கும், ஓவரால் சர்வீஸாகவும் இருக்க வேண்டும். இன்றைய உலக மாற்ற, உண்மை வெடிக்கும், வேகத்தை நோக்கும்போது, கல்லூரிக்கல்வியின் பல நிலைப்பாடத் திட்டங்களையும், குறிப்பிட்ட காலத்தவணைக்கு, ஒருமுறை முழுமையாகச் சரிபார்த்துச் சீரமைத்தல் நல்லது. குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது பாடத்திட்டம்முழுவதையும் மறுபரிசீலனை செய்து, சீர் செய்தல் நல்லது. இதற்கிடையில்தேவைப்படும் மாற்றங்களைச் செய்யாமல் தள்ளிப்போடவும் கூடாது.

மேற்கூறிய அடிப்படையில் சென்னைப் பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களை, முழுமையாக மறுபரிசீலனை செய்து, சீரமைக்க வேண்டுமென்ற கருத்து, அப்போதைக்கப்போது தெரிவிக்கப் பட்டது. அத்தகைய கருத்து, பல்கலைக் கழகத்தின் அவைகளிலும் கேட்டது ; பிற பொது அவைகளிலும் வெளியாயின.

'ஆண்டுக்கு ஆண்டு, இந்தப் பாடத்திலும் அந்தப் பாடத்திலும் செய்யும் நீக்கும் சேர்க்கையும் போதா ; அடிப்படையில் ஒரே மாதிரி பல்லாண்டுகளாக அமைந்துள்ள நம் பாடத் திட்டம் பெரிய மாற்றத்திற்குள்ளாக வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டது. மேனாட்டுப் பல்கலைக் கழகங்களைப் பார்த்து, அவர்களைப் போன்ற பாடத் திட்டங்களைக் கொள்ள வேண்டும். என்பார் உளர்.

மேனாட்டு அளவுக்கு, எடுத்த எடுப்பிலே உயர்ந்து விட முடியாது. அங்குள்ள கருவி கரண வசதிகளுக்கு இங்கே எங்கே போவது ?



அடுத்த இதழில் . . .

தமிழ் நாடு

குடிசைப் பகுதி

மாற்று வாரியத்

தலைவரின்

சிறப்புப் பேட்டி.

அவற்றைத் தேடுகிறோமென்று சும்மா இருந்து விட வேண்டாம். அந் நாடுகளின் கல்வி நிலையைக் கருத்திலே வைப்போம். அவற்றை நோக்கி நடப்போம். இனியும் வாதமிட்டுக் கொண்டே, காலத்தைப் போக்கி விடாமல், முன்னேறுவோம். இந்தியாவில், பல பல்கலைக் கழகங்கள் எட்டியுள்ள நிலைக்காவது எட்டுவதற்கு முயல்வோம் ; அதற்கான பணிகளைத் தொடங்கிவிடுவோம்' என்போர் பலர்.

'மாற்றமென்ன பயன்? மாணவரிடம் ஊக்கம்வந்தால்அல்லவா? ஊக்கச் (Motivation) சூழ்நிலை இல்லாத போது, இருப்பதைக் கலைப்பானேன்?' என்று சலித்துக் கொள்பவர்களும் உண்டு. அக்குரல்களும் கேட்கும். ஒருமித்த குரலை எதிர் பார்த்துப் பயனில்லை, பின் என்ன செய்ய ?

நூற்றாண்டுகளாக, வல்லரசுகளாக விளங்கியவைகூட எட்டிப் பிடிக்காத சாதனைகளை—நிலாவில் இறக்கம்--நிலாவில்கார்—காரிலிருந்து தொலைக் காட்சி, நிலத்திற்கு வர—ஆன சாதனைகளைப் புரிந்துள்ள நாடுகளின்கல்வி நிலையை நாமும் நான்காண்டுகளில், பெற்று விட நினைப்பது அதிகம். எட்டு மணிக்கு வேலை தொடங்க முடியாத நாம், பல்லாண்டுகளுக்கு எட்ட முடியாத நிலை அது !

இன்றுள்ள நிலையிலே, ஒன்றுமே முடியாதென்கிற, சாக்குருவிக் கொள்கையும் ஆண்மைக் கழகல்ல.

ஊழையும் உப்பக்கம் காண்பர்
உலைவு இன்றித் தாழாது
உஞற்றுபவர்.

இதைச் சிக்கெனப் பிடித்துக் கொள்வோம். கல்வி மாற்றத்தில் முனைவோம். முடிந்த ஓட்டத்தில் செல்வோம். 'தன் வலியும் துணை வலியும் பிற வலியும் தெரிந்து செயல்புரிய' ஆணையிடுகிறூர் வள்ளுவர். 'கல்லூரிகளின் வலிவே, தன்வலி. 'அரசு, பல்கலைக் கழக மான்யக் குழு', ஆகியவை துணை வலி. மாற்றூர் வலியெதுவோ? 'மாறூர், வலியே அது. உள்ளதை விட உயர்வதற்கு, மறுப்போர் பலர் எங்கும் இருப்பர். இங்கும் இருக்கிறூர்கள். இத்தனைச் சூழல்களையும் கவனித்துப்பாடதிட்டச் சீரமைப்புச் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம்.

(இன்னும் வரும்)

அறிவுக் கண் திறந்தது

சின்னக் குழந்தையுடன் சிரித்து மகிழும் நேருவை அழகிய வண்ணத்தில் அட்டைப் படமாக்கிய சிறப்புக் கண்டேன். மனிதருள் மாணிக்கத்தின் மணிமொழிகளை வழங்கியதோடு மாமேதை நேருவின் தோற்றங்களையும் வெளியிட்டு, அண்ணு, கலைஞர் இருவரது இரங்கற் செய்திகளையும் இணைத்திருப்பது இதழுக்கு எழில் கூட்டுகிறது. ஆம்! '' நேரு மலர் '' என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தை உருவாக்கியுள்ளது ' தமிழரசு,'! அது மட்டுமா?

அரசின் சாதனை பற்றி வாதம் செய்வோர்க்கு, '' சாதனைக் கீடுண்டோ சாற்று '' என்ற வெண்பாப் போட்டியின் மூலம் சரியான மருந்து கொடுத்திருப்பதோடு வாதம் உள்ளவர்களுக்கும் அதை வென்றிட வழி கூறியிருப்பது பயனுள்ளது; பாராட்டத் தக்கது. '' கல்விச் சிந்தனை '' அறிவுக் கண்ணைத் திறக்கும் என்பது உறுதி.

—செ. டேவிட் கோவில் பிள்ளை,
தென்காசி.

நெஞ்சம் குளிர்ந்தது

நேருஜியும் குழந்தையும் வண்ணப் படத்தைத் தமிழரசு அட்டையில் கண்டு என் நெஞ்சம் குளிர்ந்தது.

தேசியத் தலைவர்களைப் பொதுவாக்கி மதிக்க வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணுவின் பொன்மொழியின் பெருமையை மேலும் ஒரு படி உயர்த்திவிட்டீர்கள் !

—அ. சேக்மைதீன்,
வத்தலக்குண்டு.

வாழ்க்கைக்கு உதவும் புள்ளி விவரம்

தங்களின் ''தமிழரசு'' இதழ் கண்டேன். தமிழகத்தைத் ' தமிழரசு ' மூலம் அறிந்து கொள்ள முடிவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். 16-11-1970 தமிழரசு இதழில் வெளியான ' பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவும் ' என்ற கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன்; அதன்மூலம் புள்ளி விவரத்துறையின் சேவையை மிகுந்த அளவில் அறிந்துகொள்ள முடிந்தது.

—வை. கிருஷ்ணமூர்த்தி,
சென்னை-33.

நல்வாழ்வு தரும் அரசு!

நாடோடி வாழ்க்கையில் நிலமெல்லாம் சுற்றி வந்த நரிக் குறவர்களுக்கு, இருக்க இடமளித்து, ஐந்து ஏக்கர் நிலத்தால் பிழைக்க வழி செய்து, அவர்களை நிலையாக ஓரிடத்தில் நிலைக்க வைக்கும் இந்த அரசு, பன்னெடுங்காலம் ஈண்டு நிலைத்திட வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றேன். வாழ்க தமிழரசு!

—பொன். இளவேற்கோ,
திருத்தணி.

ஆனல் இப்பொழுது எல்லா மாவட்டத்திற்கும் சொந்தக் காரராக ஆகிவிட்டார் அவர். ஆகவே கருணுவின் கதையை எல்லா மாவட்டத்து விவசாயிகளுக்கும் பரப்ப வேண்டும்.

—கண்ணு, அய்யம்பேட்டை.

நவரசக் குவளை.

தமிழரசு ஓர் நவரசக் குவளை. அதில் தேனும் பாலும், கன்னல் சாறும், கலந்து உள்ளது. அந்த அபூர்வ அமிர்தத்தின் எழுத்துச் சுவையை மெய்ம் மறந்து உண்டு மகிழலாம்.

வாழ்க தமிழரசு !

வளர்க அதன் பணி.

—எம். எம். மீரான்,
நாகர்கோவில்-2.

முதுமொழி பொய்க்கவில்லை !

ஏழையோர்க்கும் பட்டா, எளியவர்க்கும் பட்டா, ஏனையோர்க்கும் பட்டா, குறவருக்கும் பட்டா! ''அரசு அன்றுகேட்கும், தெய்வம் நின்று கேட்கும்'' என்ற உண்மை உரை தமிழகத்தைப் பொறுத்த வரை பொய்த்துப் போகவில்லை.

—கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

திக்கெட்டும் 'கருணு' பரவுக

'கருணுவின் கதை' தஞ்சைத் தரணியில்தான் பிறந்திருக்கிறது. ஆம் ! நம் முதல்வர் பெயரும் கருணுநிதிதான். அவரும் தஞ்சைத் தரணியில்தான் பிறந்தார்;

எதிர்பார்த்ததை வழங்கும் தமிழரசு

நவம்பர் முதல் தேதி இதழிலேயே 16ஆம் தேதி இதழுக்காக 'ரோஜாப்பூ' போட்டுக் குறிப்புக் காட்டியிருந்தீர்கள். அதைப் பார்த்தவுடன் 16-ஆம் தேதி இதழ் எப்படி இருக்குமென்று எதிர்பார்த்தோமோ அது அப்படியே இருந்தது. நாங்கள் எதிர்பார்த்ததை வழங்கும் 'தமிழரசு'க்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

—பி. சண்முகதுரை,
கோவில்பாளையம்.

கட்டப்படுகிறது. எனவே தற்போது மாணவர்கள் மையத் தொழில் நுணுக்கப்பள்ளி உணவு விடுதியில் தங்கியுள்ளனர். மாணவர்கள் உணவு விடுதியிலிருந்தாலும், வீட்டிலிருந்து வந்தாலும், மதிய உணவைக் கட்டாயம் பள்ளியில்தான் சாப்பிட வேண்டும் என்று நிபந்தனை. இதற்குக் காரணம், இங்கு பயிற்சிக்காகத் தயாரிக்கப்படும் சத்துள்ள உணவுகள் வீணாகி விடக் கூடாதே என்ற நல்லெண்ணம்தான்! இதற்காக அவர்களது சம்பளக் கட்டணத்துடன் சாப்பாட்டுச் செலவுக்கும் சேர்த்துக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தமிழக அரசாங்கம் இங்கு பயிலும் அரிசன, மற்றும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகையும் வழங்குகிறது. மேலும் இது தவிர, ஒவ்வொரு வகுப்பிலும் 10 சத வீதம் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இந்தக் கல்விக் கூடம் உதவித் தொகை வழங்குகிறது. முதலாண்டு மாணவருக்கு ரூ. 420-ம் இரண்டாவது மூன்றாவது ஆண்டு மாணவர்களுக்கு ரூ. 840-ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

இங்கு படித்தவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு உள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். நீண்ட காலமாக நமது நாட்டில் சமையல்-உணவு சிற்றுண்டி விடுதிகள் அனுபவத்தைக் கொண்டு நடத்தப்பட்டு வந்தனவேயன்றி, முறையான கல்வி பெற்று நடத்தப்பட்டு வரவில்லை. ஆனால் சுற்றுலாவின் மூலம் உணவு விடுதிகளும் உணவு விடுதிகள் மூலம் சுற்றுலாவும் வளர வேண்டிய சூழ்நிலை உள்ள இந்த விஞ்ஞான யுகத்தில் எதுவும் விஞ்ஞான முறையில் நடைபெற்றால்தான் விரைவான வளர்ச்சி அடைய முடியும். பெரிய உணவு விடுதியில் உள்ளவர்களெல்லாம் இதனை நன்கு அறிந்துள்ளனர். வெளியில் 20 ஆண்டு அனுபவம் பெற்றவரை விட இங்கு மூன்றாண்டுப் பயிற்சி பெற்றவர்கள் எல்லா வகையிலும் சிறந்தவர்களாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

அவர்கள் இதனை வரவேற்கிறார்கள் என்பதற்குப் பல சான்றுகள் கூற முடியும். பல உணவு விடுதி அதிபர்கள் தங்களது பிள்ளைகளை இங்கு சமையல் கலையியல் பயில அனுப்புகின்றனர். தென்னிந்திய உணவு விடுதிகளின் சங்கத்தார் ஆண்டுதோறும் ஒரு சிறந்த மாணவருக்கு ரூ. 300 உதவித் தொகை அளித்து வருகின்றனர் என்பது இத் துறையில் உணவு விடுதிகள் எவ்வளவு அக்கறை காட்டுகின்றன என்பதைக் காட்டும்.

ஆண்டு தோறும் கோடைக் கால விடுமுறையில் 2-வது ஆண்டு மாணவர்களையும், 3-வது ஆண்டு மாணவர்களையும் பெரிய உணவு விடுதிகளுக்குப் பயிற்சிக்காக இரு மாதங்கள் அனுப்புவது வழக்கம். பயிற்சிக் காலத்தில் உதவிச் சம்பளம் ரூ. 75 வழங்கப்படும்.

இவ்வாறு பயிற்சி பெறும் இறுதியாண்டு மாணவர்களைப் பல உணவு விடுதிகள், பயிற்சியைத் தொடர்ந்து வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றனர். ஆண்டு தோறும், பெங்களூர், மைசூர், ஹைதராபாத், பம்பாய் கல்கத்தா, டெல்லி ஆகிய பகுதிகளிலுள்ள பெரிய உணவு விடுதிகளுக்கு மாணவர்களைச் சுற்றுலா அழைத்துச் செல்வதும் உண்டு.

இங்கு பயின்ற மாணவர்கள், கன்னிமாரா, சவேரா, மேஃபேர் என்ற சென்னை உணவு விடுதிகளில் மட்டுமின்றி, டெல்லி அசோகா உணவு விடுதி, பம்பாய் கல்கத்தா மற்றும் பல பகுதிகளிலும், ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற வெளி நாடுகளிலும் நல்ல சம்பளத்துடன் பணியாற்றி வருகிறார்கள். இந்தியன் ஏர்லைன்சில் ஒருவர் உதவி ஸ்டூவர்டாகக் கைநிறையச் சம்பாதிக்கிறார். மாதம் 500—600 ரூபாய் வருமானம் இத்துறையில் சாதாரணமான ஒன்று. 1,000—1,500 என்று சம்பளம் பெறுபவர்களும் அநேகர் இருக்கின்றனர். தற்போது கப்பல் நிறுவனம் ஒன்று எங்களிடம் பயின்ற மாணவர்களைக் கேட்டார்கள். நாங்கள் அனுப்பினோம். அவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என்ற சேதி இரு நாட்களுக்கு முன்தான் வந்தது.

இங்கு பயின்ற ஜெயராமன், ஜாலி, ஜெயபிரகாஷ் என்ற மூன்று மாணவர்கள் தற்போது ஜெர்மனி நாட்டில் மேற்படிப்புக்காகச் சென்றுள்ளனர். அவர்கள் நாடு திரும்பியதும் குறைந்தது 2,000 ரூபாய் சம்பளத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ள எந்த பெரிய உணவு விடுதியும் தயாராக இருக்கும் என்று பூரிப்புடன் தெரிவித்தார், முதல்வர்.

நாமும் பூரிப்புடன் விடை பெறுகிறோம்.

வெண்பாப் போட்டி-5

ஈற்றடி : ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று

முடிவு நாள் : 15—12—1970

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் அச்சகம்,
சென்னை-1.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா!

வஞ்சியர்க்கு வாழ்வளிக்கும் பஞ்சுத்தொழில்

ஒரு பழைய வீடு. அதனுள்ளே அமைதியே உருவாகச் சுமார் 25 பெண்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். பெண்களென்றால் பேச்சுத்தான் இருக்கும் என்று நினைப்பவர்கள் இவர்களைக் கண்டால் ஏமாற்றம் அடைவார்கள். அவ்வளவு தூரம் அமைதியுடன் அமர்ந்து கருமமே கண்ணாக இந்தப் பெண்மணிகள் செயல்படுகின்றனர்.

அதற்குக்காரணம் அவர்கள் ஈடுபட்டிருக்கும் தொழில், நூற்புத்தொழில். அக்கம் பக்கம் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தால் நூல் அறுந்து விடும் என்பது ஒரு காரணம். மற்றொன்று, அதிகம் நூற்றால் அதிக ஊதியம் கிடைக்கும் என்ற ஆர்வம்.

இங்கு ஒரு பகுதியில் இயந்திரத்தின் மூலம் பஞ்சைச் சுத்தம் செய்கின்றனர்.

அடுத்த பிரிவில் சுத்தம் செய்யப்பட்ட பஞ்சைப் பட்டையாக மாற்றுகின்றனர்.

பின்னர் அதையடுத்த பிரிவில் அவை திரிகளாக மாற்றப் படுகின்றன.

கடைசிப் பிரிவில் இயந்திரங்களில் நூல் நூற்கப்பட்டுச் சிட்டங்களாகச் சுற்றப்படுகின்றன. இந்தச் சிட்டங்கள் கதர்த் துணி நெய்யும் நெசவாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

தாயும் மகளும்

முற்றிலும் பெண்களைக் கொண்டு இயங்கும் இச்சிறு தொழிலில் பணியாற்றும் மகளிர் இத்தொழிலைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் ? இதோ அவர்களையே கேட்போம் :—

''நான் முன்பு பீடி சுற்றிப் பிழைத்து வந்தேன். ஆனால் அந்தத் தொழிலை விட்டு விட்டேன். காரணம், அங்கு ஆண்களோடு வேலை செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. மேலும் பீடி இலக்கு என்று ஒரு முறை, தூளுக்கென்று ஒரு முறை; இப்படிப் பலமுறை அலைய வேண்டும். எனவே அதை விட்டு விட்டு இந்தத் தொழிலுக்கு வந்துசேர்ந்தேன். என் கணவர் இறந்துவிட்டார். இங்கு நானும் என் மகள் ரஜியாவும் வேலை செய்கிறோம். நான் நூற்புப் பகுதியில் வேலை செய்கிறேன். அவள் பஞ்சைப் பட்டையாக மாற்றும் பிரிவில் பணியாற்றுகிறாள். எங்கள் வேலைக்குத் தக்கபடி ஒரு நாளைக்கு 4 ரூபாய் கிடைக்கும். வருவாய் குறைவானாலும் கவுரவமான வேலையாக இருக்கிறது'' என்கிறார் திருமதி ஹமாஜி.

16 வயது சுகந்தி

சுகந்தி, பேருந்து ஓட்டுநரின் மகள். ''நான் படிக்கவில்லை. அப்பா என்னை இந்தத் தொழிலில் சேர்த்துவிட்டார். இங்கு வந்து 3 வருடம் ஆகிறது. 1967-ல் தான் இதை ஆரம்பிச்சாங்க. அப்ப இருந்து வேலை பார்க்கிறேன். ஒரு நாளைக்கு 10 கிலோ தயார் செய்வேன்.



மாணவர்களுக்கு 'கேக்' தயாரிக்கக் கற்றுத் தருகிறார் ஆசிரியர்.

பொதுச் சுகாதாரம், உணவுச் சத்துகள் பற்றி விரிவான படிப்பு, அடிப்படை விஞ்ஞான அறிவு, உணவு விடுதி நிர்வாகம், விருந்தினரை வரவேற்பது, உணவு பரிமாறுவது, இல்லங்களை, உணவு விடுதிகளை, அறைகளை அலங்காரம் செய்யும் கலை, உணவு விடுதியின் பொருளாதாரம், உணவு விடுதியின் நிர்வாகத்தினர் தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட சட்டம், முதலுதவிப் பயிற்சி, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழி அறிவு அனைத்தும் இங்கு கற்றுத் தரப்படுகிறது. அவை அனைத்திலும் மூன்றாண்டுக் காலம் படித்துத் தேர்ச்சி பெறுவோருக்கு 'டிப்ளமா' வழங்கப்படுகிறது.

இந்த மூன்றாண்டுப் படிப்புப் போக, 6 மாத, 3 மாதக் குறுகிய காலத் தொழில் கற்பிக்கும் திட்டமும் இங்கு உள்ளது. உணவு விடுதிகளில் பணியாற்றுவோர் மற்றும் குறுகிய காலத்தில் பயிற்சி பெற விரும்புவோர் இந்தப் பயிற்சியைப் பெறுகின்றனர். இது 6 மாதப் பயிற்சி. மேலும் புதுவகையில் விஞ்ஞான ரீதியில் சத்துள்ள உணவினைக் கணவன்மார்களுக்குப் படைத்திட விரும்பும் இல்லத்தரசிகள் வாரம் இருமுறை மாலை வேளைகளில் (2 மணி முதல் 5 மணி வரை) வந்து இங்கு பயிற்சி பெறுகின்றனர். இது 16—18 வாரப் பயிற்சியாகும்.

இந்தக் கல்விக் கூடத்தினைச் சுற்றிப் பார்த்திட உங்களையும் இதோ அழைத்துச் செல்கிறேன்.

இதுதான் வரவேற்பு அறை; அடுத்து முதல்வர் அறை. இன்முகத்துடன் வரவேற்று அழைத்துச் செல்கிறார், முதல்வர் திருகுப்புசாமி. 1963-ல் இது துவக்கப்பட்ட காலம் முதல் இதன் முதல்வராக இருந்து வருபவர் அவர். இது ஒவ்வொரு செங்கல்லாக வளர்ந்த கதை அறிந்தவர். ஆரம்பத்தில் 35 மாணவர்களோடு துவக்கப்பட்டது. இப்போது டிப்ளமா படிப்பில் 185 பேரும், பிற பயிற்சிகளில் 250 பேரும் பயில்கின்றனர்.

இனி அவரோடு செல்லுவோம். முதல் அறை சமையல் கூடம். என்ன ஆச்சரியம்! புகையும், கரியும் எங்கும் தென்படவில்லையே! சமையல் பயிலும் மாணவ மாணவியர் தூய வெள்ளை ஆடையுடன் தலையில் வெள்ளைத் தொப்பியுடன் காணப்படுகின்றனரே என்று திகைக்கிறோம்.

ஒரு மாணவர் வெங்காயம் நறுக்குகிறார். மற்றவர் முட்டையைக் கலக்குகிறார். இறைச்சியைத் துண்டிக்க, பீட்ரூட், காரட், வெள்ளரி போன்ற காய்கறிகளை அழகாக வட்ட வடிவமாக நறுக்க இயந்திரங்கள் அங்கு உள்ளன. எரி வாயுவினால் எரியும் (அடுப்பு என்று தெரியாதவாறு மூடப்பட்டுள்ளன). இட்லி, புட்டிங் ஆகியவற்றை நீராவியில் வேக வைக்கும் கருவி, இப்படிப் பல அங்கு உள்ளன. எல்லாம் எவர்சில்வர் உலோகத்தினால் ஆனவை. நமது கேள்விக் குறியைப் புரிந்து கொண்டு, 'இவை ஆஸ்திரேலிய பசிப்பிணி அகற்றும் சங்கத்தார் இலவசமாக வழங்கியவை. சுமார் மூன்று லட்சம் ரூபாய்க்குச் சமையல் கருவிகள் வழங்கியுள்ளனர். ஒவ்வொரு அறையிலும் அவர்களது உதவியினைக் காணலாம். இந்தியாவில் வாங்க முடியாத இந்தக் கருவிகளை அவர்கள் இலவசமாகத் தந்தது பேருதவியாகும்' என்று நன்றியுணர்வோடு கூறுகிறார், முதல்வர்.

அடுத்த அறைக்குச் செல்கிறோம். அங்கு சாப்பாட்டு மேஜைகளில் மாணவர்கள் வெள்ளைத் துணி விரித்து, மத்தியில் மலர் ஜாடியை வைத்து அழகு படுத்துகின்றனர். "இவ்வாறு அழகு படுத்துவதும், சமைத்ததைப் பரிமாறுவதும், இங்கு கற்றுத் தரப்படும் கலை" என்று முதல்வர் விளக்குகிறார்.

அங்கு ஒரு புது இயந்திரம் உள்ளது. காபி வழங்கும் இயந்திரம் அது. அதனுள் 5 கண்ணாடி ஜாடிகள் உள்ளன. ஒன்றில் வெந்நீர், மற்ற ஜாடிகளில் காஃபி, தேயிலை, சர்க்கரை, பால் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. கோப்பையைக் கையில் பிடித்து இதைத்திருகினால் காப்பி அல்லது தேநீர் கிடைக்கும். ஆயிரம் ரூபாய் விலையுள்ள இந்த யந்திரமும் ஆஸ்திரேலியாவின் அன்பளிப்பே!

அடுத்த இரு அறைகள், ஒன்று ஒரு படுக்கையறை; அடுத்தது இரு படுக்கைகள் கொண்டது. உணவு விடுதிகளின் மாதிரி அறைகள் இவை. படுக்கைவிரிப்புகள், சன்னல், கதவுகளுக்கான திரைகள், பூக்களை அலங்காரமாக வைப்பது ஆகியவற்றை அங்கு மாணவ மாணவியருக்கு விளக்கிக் கொண்டிருக்கிறார், பயிற்சியாளரான அம்மையார்.

அடுத்த அறையில் துணிகளைத் துவைக்கும் இயந்திரங்கள், இஸ்திரிப் பெட்டி ஆகியவை உள்ளன. ஆமாம் இதுவும் அவர்களின் பயிற்சியின் ஒரு பிரிவே.

மேலே செல்கிறோம். அடுத்த இரு அறைகள், ரொட்டிகள், கேக்குகள், இனிப்புகள் தயாரிக்கும் பிரிவு சம்பந்தப்பட்டவை. கேக்கில் பூ வேலை செய்து காட்டுகிறார் ஆசிரியர். மாணவர்கள் அக்கறையோடு கவனிக்கின்றனர்.

இதே போல் முதலாண்டு இரண்டாவது ஆண்டு, மூன்றாவது ஆண்டு மாணவர்களுக்கான பயிற்சி ஆங்காங்கே நடக்கிறது.

ஓர் அறையில் பல மேஜைகள் யார் வரவையோ எதிர்பார்த்துத் தயாராகவுள்ளன. இல்லத்தரசிகள் பயிற்சிக்கு என்று விளக்கம் தருகிறார் முதல்வர். அடுத்த அறையில் செயல்முறைத் தேர்வு (Practical Test) நடக்கிறது, என்று கேள்விப்படுகிறோம் உள்ளே எட்டிப் பார்க்கிறோம். அங்கு மாணவர்கள் மிகுந்த அக்கறையோடு சமையல் செய்துகொண்டிருக்கிறார்கள். இரு ஆய்வாளர்கள் அவர்களதுபணியைக்கண்காணிக்கின்றனர். அவர்கள் சென்னையைச் சேர்ந்த பெரிய உணவு விடுதிகளின் நிர்வாகிகள்.

அடுத்த அறையில் கணக்கியலும், தட்டச்சும் (Book Keeping and Typewriting) சொல்லித் தரப்படுகின்றன. ஒரு சுற்று வந்து விட்டோம். எதிரே பல இல்லத்தரசிகள் காரிலிருந்து இறங்கி வருகின்றனர், அவர்களது பகுதி நேரப் பயிற்சிக்காக. இந்தப் பயிற்சி பற்றி தங்கள் கருத்து என்ன என்று ஓர் இல்லத்தரசியிடம் கேட்டோம். "இந்தப் பயிற்சி எனக்கு மிகவும் பிடித்துள்ளது. கணவருக்கும், குழந்தைகளுக்கும் புதுப் புது விதமாகவும், சத்துள்ள உணவாகவும் அளிக்க முடிகிறது. இன்னொரு விஷயம், இனி சமையற்காரி என்னை ஏமாற்ற முடியாது" என்கிறார் அந்தப் பெண்மணி.

"ஆமாம். உங்கள் புதிய பாணி சமையலை உங்கள் கணவர் ரசிக்கிறாரா?"

"மிகவும் பாராட்டுகிறார். விருந்தினர் வரும்போது சிறப்பான சமையல் செய்து தோழியர்களின் பாராட்டையும் பெறுகிறேன்" என்று பூரிப்புடன் அந்த அம்மையார் பதிலளிக்கிறார்.

அறையை அழகுசெய்யும் கலை கற்றுத்தரப்படுகிறது

சமையல் செய்வது, ரொட்டிகள், கேக்குகள், மிட்டாய்கள், தயாரிப்பது பழங்களைப் பதனிடுதல், ஜாம், ஜெல்லி, பழ ரசங்கள் தயாரிப்பது ஆகியவை இவர்களுக்குச் சொல்லித் தரப்படுகின்றன.

"இல்லத்தரசிகளுக்கான இந்த வகுப்பு டிசம்பரில் முடிவடைகிறது. ஜனவரியில் அடுத்த பயிற்சி ஆரம்பம். இப்போதே அதற்காக விளம்பரப்படுத்தியிருக்கிறோம். டிசம்பர் 20-ஆம் தேதி மனுப் பெறக் கடைசி நாள்" என்று தெரிவித்தார் முதல்வர். இதற்குக் கட்டணம் ரூ. 160.50. சமையலுக்காகும் பொருட்களுக்கும் (ரூ. 115) சேர்த்து இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

மூன்றாண்டுப் படிப்பான 'டிப்ளமா' வகுப்புகளுக்கு ஜூன் மாத மத்தியில் மனுக்கள் பெறப்படுகின்றன. இதற்குக் குறைந்த பட்சத் தகுதி பள்ளி இறுதிப் படிப்பாகும் (எஸ்.எஸ்.எல்.சி). ஆயினும், பி.யு.சி. பி.எஸ். சி. படித்த மாணவர்கள் கூட இதில் சேர்கின்றனர். இங்குள்ள மாணவர்களுக்குத் தனி விடுதி இப்போது

காபி கலந்து தரும் இயந்திரம்





நடனமிடும் சிலையே—உன்
நளினமொரு கலையே!

கிறது. அணையைச் சுற்றிலும், அதைச் சார்ந்த ஏரிகளைச் சுற்றிலும் உள்ள கிணறுகளில் நீர் வற்றுவதே இல்லை.

இந்த அணைத்திட்டத்துடன் பாரூர் பெரிய ஏரி நீர்ப் பாசனத் திட்டமும் இணைந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட அளவு அவ்வப்போது கிருஷ்ணகிரி அணையிலிருந்து பாரூர் பெரிய ஏரிக்கு ஆற்றின் மூலம் தண்ணீர் விடப்படுகிறது. ஆற்றில் விடப்படும் தண்ணீர்—நெடுங்கல் என்னும் இடத்தில் உள்ள பிக்கப் அணையினுல் அமைக்கப்பட்டுள்ள கால்வாய் மூலம் பாரூர் பெரிய ஏரியை அடைகிறது. பாரூர் பெரிய ஏரி மூலம் 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

தர்மபுரி மாவட்டத்தின் நெற்களஞ்சியம் கிருஷ்ணகிரி அணைப் பகுதியாகும்.

கிருஷ்ணகிரி அணைப் பூங்கா கண் கொள்ளாக் காட்சியாக அமைந்துள்ளது. இப் பூங்காவில் ஊஞ்சல் பாலம், கற்கோட்டை போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களுடன் ஏராளமான சிலைகளும் உள்ளன. அணையை நிறுவிய தொழிலாளர்களுக்கு என நினைவுச் சின்னம் (முப்பட்டை கல்தூண்) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

சிறுவர்கள் விளையாடி மகிழச் சிறுவர் பூங்காவும் உள்ளது. குழந்தைகள் பார்த்து மகிழ ஒரு சிறு மிருகக் காட்சிசாலையும் இப்பூங்காவில் உள்ளது.

கிருஷ்ணகிரி அணையில் தமிழ் நாடு அரசின் அலுவலகம், கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையம், மீன் பண்ணை, கோழிப் பண்ணை, பட்டுப்பண்ணை, சிறிய சர்க்கரை ஆலை ஆகியவையும் உள்ளன. பயணிகள் தங்குவதற்காகப் பயணிகள் விடுதிகளும் உள்ளன.

மாடுதான் சிலை;
மழலை சிலை அல்ல!

(படமும் விளக்கமும்
மு. தொ. ஸ்டாலின்.)

புள்ளிமானுக்குப் புல் கொடுக்கும் பிள்ளைக் கனியமுது!

பேசும் புத்தகம்

பள்ளிச் சிறுவர்கள் வீட்டில் பயிலப் பேசும் புத்தகத்தை ஆங்கில - அமெரிக்க நிறுவனம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறது. படங்கள் கொண்ட இப்புத்தகத்துடன் 'டேப்' இணைக்கப்பட்டிருக்கும். எந்தப் பக்கத்தினைச் சிறுவன் படிக்க விரும்புகிருனே, அந்தப் பக்கத்தைப் புரட்டினுல், அது பற்றிய விளக்கத்தை இந்த 'டேப்' ஒலிபரப்பும்.

மெள்ளப்படிக்கும் இயல்புடைய குழந்தைகள், திரும்பத்திரும்பப் போட்டுக் கேட்டுப் படிக்கத் தகுந்தது இந்தப் புத்தகம்.

கணக்கு, பிற மொழிகள் ஆகியவை கற்பதற்கு ஏற்ற பேசும் புத்தகங்களும் உள்ளன.

மிளகாயோ மிளகாய்!

உணவுப் பொருள்களில் உறைப்புச் சுவையையும் (காரம்), மணத்தையும் ஏற்படுத்துவதற்காக மிளகாய் பயன் படுத்தப்படுகிறது. போர்ச்சுகீசியர்கள் 17-ஆம் நூற்றுண்டில், அமெரிக்காவிலுள்ள சில்லி (Chilly) என்ற மாநிலத்திலிருந்து மிளகாயைக் கொண்டு வந்து இந்தியாவில் புகுத்தியுள்ளார்கள். 'சில்லி' என்றபகுதியிலிருந்து வந்ததனுலேயே, மிளகாய்க்கு 'சில்லீஸ்' (Chillies) என்ற பெயர் வந்தது. பண்டைத் தமிழர்கள் உணவுப் பொருள்களில் உறைப்புச் சுவையையும், மணத்தையும் ஏற்படுத்த மிளகு பயன்படுத்திஞர்கள். மிளகில் உள்ள உறைப்புத் தன்மை மிளகாயில் உள்ளதால் 'மிளகாய்' என்று பெயர் ஏற்பட்டது. மிளகாய்க்குச் 'சிவப்பு மிளகு' (Red-Pepper) என்ற பெயரும் உண்டு. ஜப்பானில் மிளகாயை 'பிமென்டோ' (Pimento) அல்லது சிவப்பு மிளகு என்றே கூறுகிருர்கள். மிளகாயில் உள்ள உறைப்புத் தன்மைக்கு, மிளகாயில் உள்ள 'கேப்சைசின்' (Capsaisin) எனப்படும் பளிங்கு போன்ற, எளிதில் ஆவியாகக்கூடிய காரப் பொருள் (Crystalline Volatile Alkaloid) தான் காரணமாகும். இதனுல் மிளகாய் 'கேப்சிகம்' (Capsicum) என்றும் கூறப்படுகிறது.

அன்றுட வாழ்வில் ஏதேனும் ஒரு வகையில் மிளகாயைப்பயன்படுத்தாத குடும்பம் தமிழ் நாட்டில் இருக்க முடியாது. உலர்ந்த மிளகாயைப் பயன்படுத்துவது போலவே, பச்சை மிளகாயையும் தமிழ் நாட்டில் பெருமளவில் பயன் படுத்துகின்ருேம். மிளகாயில் வைட்டமின் 'ஏ'யும், 'சி'-யும் அதிக அளவில் உள்ளன. மிளகாய்ப் பொடி, சாம்பார்ப் பொடிஆகியவை தயாரிப்பதிலும் மிளகாய் முக்கிய இடம் பெறுகிறது. 'சாஸ்' (Sauce) எனப்படும் சுவைச் சத்து, ஆவியாகும் எண்ணெய் (Essential Oil) 'ஓலியோரெசின்' (Oleoresin) என்னும் மெழுகு, 'கேப்சைசின்' திரவம் ஆகியவைகள் தயாரிக்க மிகவும் காரமான மிளகாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆயுர்வேத மருந்துகளிலும், ஆங்கில மருந்துகளிலும் மிளகாய் உபயோகமாகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிளகாயிலிருந்து வைட்டமின் 'சி' தயாரிக்கப்படுகிறது. மிளகாயிலிருந்து புற்று நோய் தடுப்பு மருந்து (Anti-Cancer drugs) தயாரிக்கும் ஆராய்ச்சியும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஜப்பானில் வண்ணக் குழம்புகளுடன் மிளகாய்ப் பொடியைக் கலந்து சிப்பிகளைத் தடுக்கும் வண்ணக் கலவை (Anti-Oyster—Shell Paints) தயாரித்து, கப்பலின் அடிப்பாகத்தில் பூசுவதற்குப் பயன்படுத்துகிருர்கள்.

மிளகாயில் 35 முதல் 62 சதம் வரை மேல் தோலும் (Peri-Carp), 33 முதல் 56 சதம் விதையும், 4.6 முதல் 9 சதம் வரை காம்பும் (Stem) அடங்கியுள்ளது. உறைப்புப் பொருளின் பெரும் பகுதி மிளகாயின் உள்ளே இருக்கும் கருப்பைத் தடுப்புச் சுவர்களில் (Dissepi-ment) தான் காணப்படுகிறது. ஒரு பகுதி மேல்தோலிலும் காணப்படுகிறது. பெரும்பாலும் விதைகளில் அதிக உறைப்புத் தன்மை இருப்பதில்லை.

மிளகாய், உறைப்பு மிகுந்தது (Hot), உறைப்புக் குறைந்தது (Mild) என இரு வகையாகப் பிரிக்கப்படுகிறது. இந்தியா, ஜப்பான், மெக்சிகோ, நைஜீரியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, சைனு, பாகிஸ்தான், ஆகிய நாடுகளே காரம் மிகுந்த மிளகாயை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்றன. 'பாப்ரிகா' (Paprika) எனப்படும் காரம் குறைந்த மிளகாயை ஹங்கேரி, ஸ்பெயின், ருமேனியா, யூகோஸ்லேவியா, பல்கேரியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகள் உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்கின்றன. உலக வியாபாரத்தில் ஒவ்வொரு ஆண்டும் 30,000 டன் உறைப்பு மிகுந்த மிளகாய் இடம் பெறுவதாகமதிப்பிடப்படுகிறது. உறைப்பு மிகுந்த மிளகாயை இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகள் இலங்கையும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுமேயாகும். உலக இறக்குமதியில் 80 சத அளவை இவ்விரு நாடுகளுமே பெற்றுள்ளன.

உலகத்திலேயே இலங்கைதான் மிளகாய் விற்பனையாகும் மிகப் பெரிய விற்பனைக் கூடமாகத் திகழ்கிறது. உலக இறக்குமதியில் 60 சத அளவை இலங்கை ஏற்றுக்கொள்கிறது. இதுவரை இந்தியாவே, இலங்கையின் மிளகாய்த் தேவையில் 50 சத அளவை வழங்கி வந்துள்ளது. இந்தியாவிலிருந்து எற்றுமதியாகும் மிளகாயில் 95 சத அளவை இலங்கையே வாங்கி வந்துள்ளது. ஆனுல் சமீப காலத்தில் இலங்கையுடன் பாகிஸ்தானும், சீனுவும் மிளகாய் வியாபாரம் செய்யத் தொடங்கி, இந்திய விலையை விட மிகவும் குறைந்த விலைக்கு விற்கத் தொடங்கியுள்ளன. அத்துடன் இலங்கையிலும் மிளகாய் உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. இக்காரணங்களினுல் இலங்கை விரைவில் இந்தியாவுடன் மிளகாய் வியாபாரத்தை அறவே நிறுத்திவிடக் கூடும். எனவே இந்திய மிளகாயை விற்பனை செய்யப் பல்வேறு வெளி நாடுகளை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு 2 ரூபாய் கிடைக்கும்'' என்கிறார், சுகந்தி.

லலிதாவைக் கேளுங்கள்..

பஞ்சைச் சுத்தம் செய்யும் பிரிவில் பணியாற்றும் லலிதா ஓர் இளம் விதவை. ''என் கணவர் விவசாயி. அவர் திடீரென்று இறந்து விட்டார். அவர் இறந்த பின் கடந்த இரண்டு ஆண்டுகளாக இங்கு தான் வேலை செய்கிறேன். ஒரு நாளைக்கு இரண்டேகால் அல்லது இரண்டரை ரூபாய் கூலி கிடைக்கும். எங்க அப்பா ஒரு கம்பெனியில் காவல்காரராகப் பணியாற்றுகிறார். எங்கள் இருவருடைய வருமானத்தையும் வைத்துத் தான் குடும்பம் நடக்கிறது. இந்த வேலை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. காலையில் வேலைக்கு வந்தால் எந்தவிதச் சிந்தனையுமின்றிப் பணியாற்ற முடிகிறது. தொல்லையில்லாத தொழில் இது.'' என்று குறிப்பிட்டார், லலிதா.



அமைச்சரின் திட்டம்

வட ஆர்க்காடு மாவட்டக் கதர் அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது இந்த நூற்புக் கூடம். ''இந்த நூற்புக் கூடத்திற்குத் தேவையான பஞ்சு திருப்பூர் மையக் கிடங்கிலிருந்து கொண்டுவரப் படுகிறது. இங்கு ஆண்டுக்குச் சராசரி 10,000 சிட்டம் நூல் நூற்கப்படுகிறது. அதைக் கோவை, தென் ஆர்க்காடு ஆகிய இடங்களிலுள்ள நூற்பாலைகளுக்கு அனுப்பி வைக்கிறோம்.

நூற்பவர்களின் வருவாய் அதிகரிக்க இத் துறையின் அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் ஒரு புதிய திட்டத்தைக் கூறி இருக்கிறார். தற்போதுள்ள நூற்பு இயந்திரம் 6 கதிர்கள் உள்ள உலோக இராட்டையாகும். இதை 12 கதிர்களாக்கி, அதனை மின் சக்தியால் இயக்கினால் அதிக நூல் நூற்க முடியும். அதிகம் நூற்கப்படுவதால் நூற்பவர்களின் வருவாயும் அதிகரிக்கும். நூலின் விலையும் குறையும். நூல் விலை குறையும் போது, கதர்த் துணியின் விலையும் குறையும். அதன் மூலம் விற்பனை அதிகமாகும் என்று குறிப்பிட்டார். விரைவில் அரசு இந்த 12 கதிர் இயந்திரத்தை இயக்க முற்படும்'' என்று கதர் அதிகாரி திரு கிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த நூற்பாலை தவிர வட ஆர்க்காடு மாவட்டத்தில், கையினால் செய்யும் தாள்கள் தயாரிக்கும் தொழிற்கூடம் அரப்பாக்கத்தில் உள்ளது. இராணுவ வீரர்கள் குடும்பத்தினர்களுக்கு வேலை வாய்ப்புத் தரக் கம்மவான் பேட்டையில் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை உள்ளது.

குடியானக்குப்பம், பாணாவரம் ஆகிய இடங்களில் தோல் உரிப்புத் தொழிலும், எலும்பு உரம் தயாரிக்கும் தொழிலும் நடைபெற்று வருகின்றன.

விரைவில் இங்கு சோப்புத் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைய இருக்கிறது.

காவிரி, தென்பெண்ணை,
பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை,
பொருநை நதி—என
மேவிய யாறு பல வோடத்—
திருமேனி செழித்த தமிழ்நாடு.

என்று பாரதியார் புகழ்ந்து பாடிய ஆறுகளில் ஒன்றான தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி நகரின் அருகே, கிருஷ்ணகிரி அணை அமைந்துள்ளது. பெரியமுத்தூர், சின்ன முத்தூர் ஆகிய கிராமங்களைத் தன்னருகே கொண்டுள்ளதால், கிராம மக்கள் சிலர் இவ்வணையை 'முத்தூர் அணை' என்றும் கூறுவர்.

கிருஷ்ணகிரியிலிருந்து சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் 4 மைல் வந்து, பிறகு மேற்கே 2 மைல் சென்றால் கிருஷ்ணகிரி அணையை அடையலாம். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், அண்டை மாநிலங்களான மைசூர், ஆந்திராவிலிருந்தும், இவ்வணையைக் காணத் தினமும் ஏராளமான உல்லாசப் பயணிகள் வருகின்றனர்.

தற்போது கிருஷ்ணகிரி அணை அமைந்துள்ள இடத்தில் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தின் போதே ஓர் அணை கட்டத் திட்டமிடப்பட்டது. அப்போதைய திட்டத்தின் சான்றுகள் ஆங்காங்கே இன்றும் காணப்படுகின்றன. தாம்சன் திட்டம் என்ற பெயரோடு அப்போதிருந்த ஆங்கிலேய கலெக்டர் தாம்சன் இத்திட்டத்தை வகுத்தார்.

காவேரிப் பட்டணத்திலுள்ள ஒரு தெருவுக்குத் தாம்சன் பேட்டை என்று பெயர். அதன் பெயர்க் காரணத்தை அறியும்போது— கலெக்டர் தாம்சன் அப்போது இவ்விடத்தில் சில நாட்கள் முகாமிட்டுத் தென்பெண்ணை ஆற்றில் அணை கட்டத் திட்டம் வகுத்ததாகவும், அதனாலேயே காவேரிப் பட்டணத்தில் அவர் முகாமிட்டு இருந்த இடத்திற்குத் தாம்சன் பேட்டை என்று பெயர் வழங்கப் படுகிறது என்றும் கூறுவர்.

அழகாகக் காட்சி அளிக்கும் கிருஷ்ணகிரி அணையின் நீளம் 3,290 அடி. அதில் கல் அணையின் நீளம். 951 அடி. மண் அணையின் நீளம் 2,339 அடி. நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 2,410 மிலியன் கன அடி. அணையின் உயரம் 105 அடி. 8 நீர் வழிந்தோடிகள் உள்ளன. அணையில் தண்ணீர் நிற்கும் உயரம் 52 அடி. இந்த அணையைக் கட்ட 1,84 லட்சம் ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டது. ஆனால் ரூ. 1,54 லட்சம்தான் செலவிடப்பட்டது.

இந்த அணையில் இருந்து இடது பக்கம் ஒரு கால்வாயும், வலது பக்கம் ஒரு கால்வாயும் செல்லுகின்றன. இடது கால்வாயின் நீளம் 11 மைல், 3 பர்லாங், 70 அடி ; வலது கால்வாயின் நீளம் 8 மைல், 6 பர்லாங், 110 அடிகளாகும். இரு கால்வாய்கள் மூலம் 9,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி ஏற்பட்டு உள்ளது. 26 ஏரிகள் இந்த அணையிலிருந்து நீர் பெறுகின்றன. இந்த அணையினால் காவேரிப்பட்டணம் வட்டாரம் பெரும்பயனை அடை



இலங்கைக்கு அடுத்தாற்போல் அதிக மிளகாய் இறக்குமதி செய்யும் நாடு அமெரிக்க ஐக்கியநாடுகள்தான். தற்பொழுது அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்சிகோ, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்தே மிளகாயை வாங்கி வருகின்றன. ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 'சான்டகா' (Santaka) ரகமே, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிகவும் புகழ் பெற்றுள்ளது. 'சான்டகா' ரக மிளகாய், செடிகளில் மேல் நோக்கிக் காய்க்கிறது. ஜப்பானிய மிளகாய் உற்பத்தியில் இந்தரகம் 90 சத அளவுக்கு இடம் பெற்றுள்ளது. ஜப்பானில் மிளகாயின் உள் நாட்டுத் தேவை நாளுக்கு நாள் பெருகிவருகிறது; அத்துடன் மிளகாய்ச் சாகுபடி செய்வதற்கு ஆகும் செலவும் அதிகமாகி வருகிறது ; தொழிற்சாலைகள் பெருகி சாகுபடியாகும் நிலத்தை ஆக்கிரமித்து வருவதால், மிளகாய்ச்சாகுபடியாகும் பரப்பை அதிகப்படுத்த இயலவில்லை ; ஜப்பானிய உழவர்கள் அதிக லாபம் தரும் பயிர்களைச் சாகுபடி செய்யவே விரும்புகிறார்கள் ; ஜப்பானிய இளைஞர்கள், மிளகாயைக்கைகளால் பொறுக்கி எடுக்கும் வேலையை விரும்பாமல், தங்களுடைய விருப்பத்திற்கேற்ப வேறு வேலைகளுக்குப் போய்விடுவதால், அறுவடைக்குத் தேவையான கூலியாட்களும் கிடைக்கவில்லை. இக் காரணங்களினால், ஜப்பானிய மிளகாயின்விலை சமீப காலத்தில் அதிகமாகிக்கொண்டே வருகிறது. இதனால் ஜப்பானிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மிளகாயின் அளவும்குறைந்துகொண்டே வருகிறது.



நோய் தாக்காத மிளகாய்



நோய் தாக்கிய மிளகாய்

இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு இந்திய மிளகாயை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். இந்திய மிளகாய், ஏறத்தாழ ஜப்பானிய 'சான்டகா' ரகத்திற்கு இணையானது. அமெரிக்க இறக்குமதியாளர்களின்கருத்துப்படி இயல்பு வெப்ப அளவின் (Intrinsic heat) அடிப்படையில், இந்திய ரகங்கள், ஜப்பானிய ரகங்களுக்குச் சமமாக உள்ளனவாம். ஆனால் ஜப்பானிய மிளகாய், இயந்திரத்தின் மூலம் உலர்த்தப்படுவதால் மேல் தோல் கண்ணாடிபோல் பளப்பளப்பாக இருப்பதுடன், மிளகாயின் நிறத்தை (Extractable Colour) அப்படியே பிழிந்து எடுப்பதற்கு ஏற்ற வகையிலும் விளங்குகிறது.

'அமெரிக்கர்கள் தங்கள் கண்களாலேயே சாப்பிடுகிறார்கள்'. (Americans eat with their eyes.) என்று சொல்லப்படுகிறது. மணம், நயம், ஊட்டச்சத்து, முழுமை ஆகியவைகள் நிறத்துடனேயே தொடர்பு கொண்டுள்ளதால், அமெரிக்கர்கள் பளபளக்கும் சிவப்பு நிறத்தையே விரும்புகின்றனர். நிறமே உணவைச் சாப்பிடும் அளவுக்கு சிறப்புறச் செய்வதாகவும், மகிழ்ச்சியுடன் எதைச் சாப்பிடுகிறார்களோ அவைகளே எளிதில் செறிப்பதாகவும் அமெரிக்கர்கள் கருதுகிறார்கள். எனவே பளப்பளப்பான சிவப்பு நிற மிளகாயையே அமெரிக்க இறக்குமதியாளர்கள் விரும்புகிறார்கள். மேலும், அமெரிக்க இறக்குமதியாளர்கள், பொதுவாக, மிளகாய்ப் பழங்களைப் பறித்தவுடனேயே மிளகாயின் காம்பு, வட்டம் (Calyx) ஆகிய புல்லிகளை அகற்றிவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். காம்புகளும், புல்லி வட்டமும் இல்லாதிருந்தால், மிளகாயை இறக்குமதி செய்தவுடனேயே அரைத்துப் பொடியாக்கலாம் என்றும், காம்புகளுடனும், புல்லி வட்டங்களுடனும் மிளகாயைப் பொடி செய்தால், மிளகாய்ப் பொடியில் நார்ப் பொருள்கள் அதிகமாகிச் சுவையைக் கெடுத்து விடும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆந்திரப் பிரதேசத்தில் 'லாம்' என்ற இடத்திலுள்ள மிளகாய் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பெற்ற ஆரம்ப சோதனைகள், மிளகாயை 36 முதல் 40 மணிக்குள் 46 முதல் 48 டிகிரி சென்டிகிரேடு வெப்பத்தில் இயந்திரம் மூலமாகச் செயற்கை முறையில் உலர்த்தலாம் என்பதைப் புலனாக்கியுள்ளது. இயந்திரத்தின் மூலமாக உலர்த்துவதால் மிளகாயை விரைவாக உலர்த்த முடிவதுடன் நல்ல நிறத்தையும் அளிக்கிறது. எனவே, காம்பு, புல்லி வட்டம் இல்லாமல் மிளகாயைப் பிரித்து இயந்திரம் மூலம் உலர்த்தினால், இந்திய மிளகாய்க்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நல்ல தேவை ஏற்படக்கூடும்.

இந்தியாவில் மிளகாய் உற்பத்தி

இந்தியாவில் சுமார் 6,73,600 ஹெக்டர் பரப்பில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. இதிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 4,02,900 டன் மிளகாய் உற்பத்தியாகிறது. இந்த உற்பத்தியில் 2.5 சத அளவு மட்டுமே ஏற்றுமதியாகிறது. சராசரியாக ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் மிளகாயின் அளவு 9,215 டன்களேயாகும். இதனால் ஆண்டுதோறும் சுமார் 2.59 கோடி ரூபாய் (1960-61 முதல் 1966-67 வரையுள்ள ஆண்டு சராசரி) வருமானம் இந்தியாவிற்குக் கிடைக்கிறது.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் மிளகாயில் 95 சத அளவை இலங்கை வாங்கிக்கொள்கிறது. ஏடன், பாக்ரீன், குவாய்ட், தென் ஆப்பிரிக்கா, சான்சிபார், பெம்பா, மோரிஸ் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, யூ.கே. ஆகிய இதர நாடுகளும் இந்தியாவின் மிளகாயை இறக்குமதி செய்கின்றன. ஏற்றுமதியை அதிகரித்து அந்நியச் செலாவணியை அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் (1973-74), 16,000 டன் ஏற்றுமதி செய்து ரூபாய் 4.80 கோடி வருமானம் பெறுமளவுக்கு ஆண்டு தோறும் படிப்படியாக வளரத் திட்டமிடப்பட்டுள்ளது.

அது போலவே, பெருகி வரும் மக்கட் தொகையின் தேவையையும் ஈடு செய்ய வேண்டியுள்ளது. இந்தியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 830 கிராம் மிளகாய் தேவைப்படுவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இதன்படிப் பார்த்தால், இந்தியாவின் உள் நாட்டுத் தேவையை ஈடு செய்ய ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் மிளகாய்க்குமேல் தேவைப்படுகிறது.

நமது உற்பத்தியைவிடத்தேவை அதிகமாக இருப்பதனாலேயே, தற்பொழுது பற்றாக் குறை நிலவுகிறது. இதன் காரணமாகவே, மிளகாய் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.

தமிழ் நாட்டின் நிலைமை.

இந்தியாவில், மிளகாய் சாகுபடியாகும் பரப்பளவைப் பொறுத்தவரையில் தமிழ் நாடு 4-வது இடத்திலிருந்தாலும், உற்பத்தியைப் பொறுத்த வரையில் தமிழ் நாடே முதல் இடம் வகிக்கிறது. 1966-67-ம் ஆண்டின் புள்ளி விவரப்படி அந்த ஆண்டில் மகாராட்டிராவில் 1,70,200 ஹெக்டரிலும், ஆந்திராவில் 1,46,700 ஹெக்டரிலும், மைசூரில் 95,300 ஹெக்டரிலும், தமிழ் நாட்டில் 71,320 ஹெக்டரிலும் மிளகாய் சாகுபடியாகியுள்ளது. ஆனால் அந்த ஆண்டில் தமிழ் நாட்டில் 96,160 மெட்ரிக் டன், மகாராட்டிராவில் 90,900 மெட்ரிக் டன், ஆந்திராவில் 86,700 மெட்ரிக் டன், மைசூரில் 25,000 மெட்ரிக் டன் மிளகாய் உற்பத்தியாகியுள்ளது. இதற்குக் காரணம் தமிழ் நாட்டில் ஹெக்டர் மகசூல் உற்பத்தி அதிகமாக இருப்பதேயாகும் என்பதைப் பின் கண்ட புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன.

	சராசரி ஹெக்டர் மகசூல் (கிலோவில்).
மகாராட்டிரா	534
ஆந்திரப் பிரதேசம்	591
மைசூர்	262
தமிழ் நாடு	1,339
அனைத்து இந்தியச் சராசரி	598

உற்பத்தி பெருகுகிறது

தமிழ் நாடு அரசின் பசுமைப்புரட்சித் திட்டத்தால் ஆண்டுக்கு ஆண்டு உணவு தானியங்களின் உற்பத்தி அதிகரித்துக் கொண்டு வருகிறது.

1968-69-ல் 53 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டது. அதில் 36·5 லட்சம் டன் அரிசி.

1969-70-ல் உணவு தானிய உற்பத்தி 63 லட்சம் டன்னாகவும், அதில் அரிசி மாத்திரம் 45 லட்சம் டன்னாகவும் உயர்ந்தது.

1970-71-ல் உணவு தானிய உற்பத்தியை 67 லட்சம் டன்னாக (அரிசி 49 லட்சம் டன்) உயர்த்தத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தியாவின் மொத்த உற்பத்தியில், ஏறத்தாழ 23 சத அளவைத் தமிழ்நாடு கொடுக்கிறது. இந்தியாவில் பயிரிடப்படும் பல்வேறு ரகங்களில் மிகவும் முக்கியமானது 'சன்னம்' எனப்படும் ரகமே. இந்த ரகத்தைப் பெருமளவில் பயிரிடுவது தமிழ்நாடும், ஆந்திரப் பிரதேசமுமே. 'சன்னம்' எனப்படும் ரகம் ஆண்டு தோறும் 1.8 இலட்சம் டன் மகசூல் அளித்து இந்தியாவின் மொத்த உற்பத்தியில் ஏறத் தாழ 45 சத அளவுக்கு இடம் பெறுகிறது;

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தேவைக்கு மேல் மிளகாய் உற்பத்தியானாலும், மற்ற மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையின் காரணமாகத்தமிழ் நாட்டிலும் மிளகாய் விலை ஏறிவிட்டது. ஆந்திரத்து மிளகாயும் மைசூர் மிளகாயும் தமிழ் நாட்டின் தூத்துக்குடி துறைமுகம் மூலமாகவே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ் நாட்டில் மிளகாய் சாகுபடியாகும்பரப்பில் 75சதப்பரப்பு இறைவையாகப் பயிரிடப்படுகிறது. தமிழ் நாடெங்கும் மிளகாய் பயிரிடப்பட்டாலும் பரப்பளவைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டமே முதலிடத்தில் உள்ளது. ஆனால் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் திருநெல்வேலி மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. தமிழ் நாட்டின் மொத்த உற்பத்தியில் 75 சதஅளவை இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய 4 மாவட்டங்களும் அளிக்கின்றன.

தமிழ் நாட்டில் நீண்ட பழம் உடைய சம்பா ரகம் (சாத்தூர் சம்பா). உருண்டையான பழம் உடைய குண்டு அல்லது முண்டு ஆகிய இரண்டு ரகங்களுமே முக்கியமாகப் பயிரிடப்படுகின்றன. இவ்விரு ரகங்களுமேஇலங்கைக்கு ஏற்றுமதியாகின்றன. சாத்தூர் நீண்ட வகை, மெல்லிய சிறிய வகை என சம்பா ரகத்தில் 2 வகை உண்டு. இவை இரண்டுமே உறைப்பு உள்ளவை (Hot). ஆனால் சிறிய வகை உறைப்பு மிகுந்தது. இவை இரண்டுமே 'சாண்டகா' ரகத்திற்குச் சமமானவை. குண்டு மிளகாய் (குடை மிளகாய்) உறைப்பு குறைந்தது (Mild). இது

'பாப்ரிகா' ரகத்திற்கு ஒப்பானது. எனவே தமிழ் நாட்டின் 2 ரக மிளகாய்க்கும் மேல் நாட்டில் பரவ வாய்ப்பு உள்ளது.

எத்தனையோ ரக மிளகாய்கள் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்பட்டு வந்தாலும், அவைகளுள் தற்பொழுது உள்ள நிலைமையில் 'கே. 1' (கோவில் பட்டி-1) மிளகாய் ரகமே பல வகைகளுள் சிறந்து விளங்குகின்றது.

மற்ற ரகங்களைக் காட்டிலும் கே. 1 மிளகாயில் உறைப்புத் தன்மையும், நெடியும் அதிகமாக உள்ளது; நல்ல அழுத்தமான பளபளப்பான சிவப்பு நிறமுடையது ; இச்சிவப்பு நிறம் நீண்ட நாட்களுக்கு மங்காமலிருக்கும். இக்குணங்கள் இருக்கும் ரகங்களையே குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் பெரிதும் விரும்புவதால், கே. 1 மிளகாயைப் பயிரிட்டு, அவைகளை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் பெருமளவில் சம்பாதிக்கலாம்.

கே. 1. மிளகாயில் விதையளவும் அதிகம். நாட்டு ரகத்தில் ஒரு மிளகாயில் 60 விதை என்றால், கே. 1 மிளகாயில் 73 விதைகள் இருக்கும். இதனால் அரைத்துப் பொடியாக்கும் போது மிளகாய்ப் பொடி விகிதம் மற்ற உள்நாட்டு ரகங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கும். தற்பொழுது தமிழ் நாட்டின் மிளகாய்ப் பொடிக்கும், சாம்பார்ப் பொடிக்கும் வெளிநாடுகளில் நல்ல தேவை ஏற்பட்டுள்ளதால், கே. 1 மிளகாய் இவ்வகையிலும் நல்ல வருமானத்தைத் தமிழ் நாட்டிற்கு ஈட்டிக் கொடுக்கும்.

கே. 1 மிளகாய் சம்பா ரகத்தைச் சேர்ந்தது; நீளக்காய் உடையது ; மற்ற நாட்டு மிளகாய் வகைகளைக் காட்டிலும் 20 சத விகிதம் அதிக மிளகாய் வற்றல் தரவல்லது. இந்த ரகம் ஏக்கருக்கு 771 கிலோ உலர்ந்த மிளகாய் (சுமார் 52 மூட்டைகள் வற்றல்) கொடுக்கும். இது நாட்டு சாத்தூர் சம்பா மிளகாயைக் காட்டிலும் 116 கிலோ வற்றல் (சுமார் 8 மூட்டை) அதிகமாகக் கொடுக்கிறது.

நாட்டு ரக மிளகாயில் 'திரிப்ஸ்' என்ற தவிடு போன்ற நுண்ணிய சென்னுப் பூச்சிகள் 'இலை சுருட்டு' நோயை விளைவிக்கின்றன. ஆனால் கே. 1 மிளகாய் 'திரிப்ஸ்' பூச்சியின் தாக்குதலை ஓரளவுக்குத் தாங்கும் சக்தியுடையது. 'பழ அழுகல் நோய்', 'நுனியிலிருந்து காய்தல்' ஆகிய நோய்களையும் அதிக அளவில் எதிர்த்துத் தாங்கிக் கொள்ளும் வல்லமையுள்ளது கே. 1 மிளகாய்.

இத்தகைய சிறப்புக் குணங்களைக் கொண்ட 'கே. 1' மிளகாயை முக்கியப் பட்டம் (செப்டம்பர்-அக்டோபர் விதைப்பு), கோடைப்பட்டம் (மார்ச்-ஏப்ரல் விதைப்பு), ஆடிப்பட்டம் (ஜூன் ஜூலை விதைப்பு) ஆகிய மூன்று பட்டங்களில் விதைக்கலாம். இதன் வயது 180 நாட்கள் (6 மாதம்). கே. 1 மிளகாயைப் பயிரிட்டு மகசூலைப் பெருக்கக் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம்.

நாற்றங்கால்.

நாற்றங்கால் தயாரிக்க மேட்டுப்பாங்கான நிலத்தைத் தேர்ந்தெடுங்கள். நாற்றங்காலை நன்கு உழுது புழுதியாக்கவும். ஒரு ஏக்கர் மிளகாய் நடவேண்டுமானால், ஒரு சென்ட் நாற்றங்கால் போதுமானதே. ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு ஒரு வண்டி கம்போஸ்ட் எரு இடவும். 180 சென்டி மீட்டர் (6 அடி) நீளம், 120 சென்டி மீட்டர் (4 அடி) அகலமுள்ள மேட்டுப்பாத்திகளை அமைத்து நீர் பாய்ச்சுவதற்கு ஏற்ற ஊடு வாய்க்கால்களையும் அமைத்துக் கொள்ளவும். 500 கிராம் கே. 1 மிளகாய் விதையை 1 கிராம் அக்ரசான் மருந்துடன் கலந்து ஒரு சென்ட் நாற்றங்காலில் விதைத்து, பின்பு சலித்த குப்பை எருவை மென்மையாகப் பரப்பி விதையை மூடவும். மெல்லிய பூவுடைய பூவாளியால் முதல் இருமுறை நீர் தெளித்து, பிறகு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஊடு வாய்க்கால் மூலம் நீர் பாய்ச்சவும். மண்ணின் ஈரத்தைப் பொறுத்து நீர் பாய்ச்சி வரவும். தண்ணீர் பாத்திகளில் தேங்கி நிற்காவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். 'பைட்டலான்' என்ற மருந்தினால் (500 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) விதைத்த 10-வது நாளும், பின்பு 15 நாட்களுக்கு ஒரு முறையாகவும் நாற்றங்காலை நனைக்கவும். மிளகாய் 'திரிப்ஸ்' பூச்சியைக் கட்டுப்படுத்தவும், வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் என்டரின் மருந்தை (1 மில்லி லிட்டர் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும். நாற்றுவிட்ட 40 முதல் 45 நாட்களுக்குள், நாற்றைப் பறித்து நடவு செய்யவும்.

இலங்கை அரசு மூன்று புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. அதில் ஒன்று தமிழர் வாழ் பகுதியான இலங்கைத் தீவின் வட பகுதியில் இருக்கும். மற்ற இரண்டும், கிழக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் அமைக்கப் படும்.

தமிழர் பகுதியில் தனிப் பல்கலைக் கழகம் அமைவது, இலங்கைத் தமிழர்களின் கால் நூற்றாண்டுக் கனவினை நனவாக்குவதாகும்.

நடவு வயல்.

மிளகாய் நடவேண்டிய வயலை நன்கு புழுதியாகும் வரை உழுது விடவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி (10 'டன்) தொழு எரு, 100 கிலோ சூப்பர் பாஸ்பேட், 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். அதன் பின் வரப்புக் கட்டும் கருவியினால் (Bund former) 9 அடி நீளம், 9 அடி அகலம் உள்ள சதுரப் பாத்திகள் அமைத்து தண்ணீர் பாய்ச்சுவதற்குத் தேவையான ஊடு வாய்க்கால்களை அமைக்கவும். அல்லது 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடை வெளிக்கு ஒரு பார் வீதம், பார் அமைக்கும் கருவியால் (Ridge Plough) பார் அமைக்கவும்.

வேர்கள் பழுதாகாமல் நாற்றைப் பறித்துப் பாத்திகளில் 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளியில் வரிசை பிடித்து, வரிசையில் செடிக்குச் செடி 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளி விட்டு நடவு செய்யவும். பார்கள் அமைத்திருந்தால், பார்களின் ஒரு பக்கச் சரிவில் செடிக்குச் செடி 45 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு நாற்றுகளை நடவு செய்யவும்.

மிளகாய் வயலுக்கு 3 முறை, கைக்களை எடுக்கவும் ; 3 முறை நிலத்தைக் களைக் கொத்தால் கொத்திக் கொடுக்கவும்.

மேலுரமிடுதல்.

மிளகாய் நாற்று நட்ட 50-வது நாள், 14 கிலோ தழைச் சத்து அளிக்க 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 30 கிலோ யூரியா உரமிட வேண்டும். நாற்று நட்ட 75-வது நாள் மீண்டும் 14 கிலோ தழைச்சத்து அளிக்க 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 30 கிலோ யூரியா உரமிட வேண்டும். செடிகளைச் சுற்றிலும் சற்றுத் தூரத்தில் மேற்படி இரசாயன உரங்களை வளைய முறையில் இட்டு (Ring Method) மண்ணால் மூடவும்.

மிளகாய்ச் செடிக்கு வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சவும். நிலத்தில் ஈரம், மழை முதலிய வற்றைப் பொறுத்து நீர் பாய்ச்சும் இடைவெளி நாட்களை அதிகமாக்கிக் கொள்ளலாம் ; ஆனால் வயலில் தண்ணீர் தேங்கி நிற்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு.

கே. 1 மிளகாயைப் பொறுத்த வரையில் கீழே குறிப்பிட்டுள்ள பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுவது மிகவும் அவசியமாகும்.

'திரிப்ஸ்' என்ற பூச்சி தளிர் போன்ற இலைகளின் சாற்றை உறிஞ்சி விடுகிறது. இதனால் இலைகள் முரணித்துச் சுருண்டு விடும். இதைச் 'சுருள் நோய்' என்றும் 'முருள் நோய்' என்றும் கூறுகின்றனர். இப்பூச்சிகள் இலையின் அடிப்பாகத்தில் அதிகமாகக் காணப்படும். இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'ரோகார்' என்ற மருந்தை (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) நாற்று நட்ட ஒரு மாதம் கழித்தும், பின்பு 15 நாட்களுக்கு ஒரு முறையாகவும் மொத்தம் 6 முறை தெளிக்கலாம். அல்லது 10 சத பி.எச்.சி. தூளை ஏக்கருக்கு 10 கிலோ வரை தூவலாம். அல்லது என்டரின் மருந்து (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) மேற்கூறிய படி 6 தடவைகளில் தெளிக்கலாம்.

'காய்துளைக்கும் புழு' இலையைத் தின்று, மிளகாயைக் காம்பின் அருகில் துளைத்து விடும். இதனால் பழம் வெளிர் நிறமாகி விழுந்து விடும். இதனால் பெருஞ்சேதம் ஏற்படும். இப்புழுக்களை ஆரம்பகாலத்தில் பொறுக்கி எடுத்துக் கொன்று விடலாம். இவைகளைக் கட்டுப்படுத்த டி.டி.டீ. 50 சதம் (450 கிராம் மருந்தை 225 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும். மேலும் புழுக்க்ள் காணப்படின் மீண்டும் ஒரு முறை டி.டி.டீ. தெளிக்கவும். முன் தடுப்பாக 2 முறை டி.டி.டீ. 50 சதம் தெளிப்பதே மேல்.

'நுனியிலிருந்து வாடல் நோய்,' 'பழ அழுகல்நோய்' ஆகியவைகள் தாக்கினால் கிளையின் நுனிப்பாகம் மேலிருந்து வாடிக்கொண்டு வரும். பழம் அழுகித் தாக்கப்பட்ட பாகம் வெளிர் நிறமாகி விடும். இதனால், மகசூல் குறைவதுடன், தரமும் குறைந்து விடும். இதைக் கட்டுப்படுத்த நாற்று நட்ட ஒரு மாதம் கழித்து 'பைட்டலான்' (250கிராம் மருந்தை, 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது ஜினப் (150 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும். பின்பு 15 நாட்களுக்கு ஒரு முறையாக 5 முறை தெளிக்கவும்.

'சாம்பல் நோய்' தாக்கப்பட்ட இலைகளின் அடிப்பாகத்தில் மென்மையான சாம்பல் போன்ற படிதல் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த நீரில் கரையக் கூடிய கந்தகம் (1 கிலோ மருத்தை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்கவும்.

'வாடல் நோய்'(Wilt) தாக்கப்பட்ட செடி முழுவதுமே வாடி விடும். இதை உழவர் பெருமக்கள் கவனித்து உடனே பைட்டலான் மருந்தை (450 கிராம் மருந்தை 180 லிட்டர் தண்ணீரில் கரைத்து) அல்லது நீரில் கரையக் கூடிய செரசான் 0·1 சதம் (1 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்க வேண்டும். அத்துடன் செடிகளைச் சுற்றிலும் தரையையும் நனைக்கவேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் மற்றச் செடிகளையும் இந்நோய் விரைவில் தாக்கும்.

யாருக்கு உதவி?

தம்பா நகர வீதியில் லட்ச ரூபாய் மதிப்புள்ள புத்தம் புதிய ரேஸ் கார் ஓடாமல் நின்றுகொண்டு இருந்தது. ஓட்டுகிறவர் எவ்வளவோ முயன்றும் இயந்திரம் வேலை செய்யவில்லை. அருகில் நின்ற போலீஸ்காரர்கள் அரை பர்லாங் 'தூரம் சிரமப்பட்டுத் தள்ள, கார் புறப்பட்டது.

கார் மறைந்த பின்தான் போலீஸாருக்குத் தெரிய வந்தது, அது திருட்டுக் கார் என்று!

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு கே. 1 மிளகாய் சாகுபடி செய்தால், விதை விதைத்த 3மாதம் கழித்து முதல் தடவையாக மிளகாய் பறிக்கலாம். காய்களாகவே பறிப்பதென்றால் 3 அல்லது 4 நாட்களுக்கு ஒரு முறையும், பழங்களாக எடுப்பதென்றால் 10 நாட்களுக்கு ஒரு முறையும் பறிக்கலாம். ஒரு ஏக்கரிலிருந்து சுமார் 3,000 கிலோ பச்சை மிளகாய் கிடைக்கும். பழமாக எடுத்துக் காயவைத்து வற்றலாக ஆக்கினால் ஒரு ஏக்கரிலிருந்து சராசரியாக 771 கிலோ மிளகாய் வற்றல் கிடைக்கும்.

எனவே, மிளகாய் விலையைக் குறைக்க, கே. 1 மிளகாய் பயிரிட்டு நாட்டுக்கு நல்லது செய்யுங்கள் என்று உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். கே. 1 மிளகாய் உழவர் பெருமக்களின் வருமானத்தையும், தமிழ் நாட்டின் வருமானத்தையும் பெருக்க வழிவகுக்கும்.

தோலணிகள் காலணிகள்

வேலூர் கிறித்தவ மருத்துவ மனைக்கு எதிர்ப்புறத்தில் ஒரு சிறிய கடை. • கதர்-கிராமத் தொழில் வாரியத்தினால் நடத்தப் படும் இந்தக் கடையின் முன் பகுதியில் சிறிய இடத்தில் அழகான, விதவிதமான காலணிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

அருகில் சென்று வினவும் போதுதான் அதன் மகத்துவம் தெரிகிறது. காலணிகளும் தோல் பைகள் முதலியனவும் கொள்ளை மலிவாக இங்குக் கிடைக்கின்றன.

பெண்களுக்கான அழகிய காலணியின் விலை ரூ. 8·50. வெளியில், அதாவது தனியார் கடைகளில் இதன் விலை ரூ. 13.

பஞ்சாபி ரகச் செருப்பு இங்கு ரூ. 15·95 (வெளியில் 22·65).

உயர்ந்த ரக அம்பாசிடர் ஷூ ரூ. 23·50 (வெளியில் 45 முதல் 50 ரூபாய் வரை விற்கப்படுகின்றன).

தோலினாலான வெள்ளை நிற டென்னிஸ் ஷூ ரூ. 15·13 (வெளியே ரூ. 32·50).

பெரிய தோல்பை (documentary bag) ரூ. 22·50 (வெளியில் ரூ. 35-க்குக் குறைவாகக் கிடைக்காது!)

ஆனந்தா என்ற பெயருள்ள அழகான கடிகார தோல்பட்டை (ஸ்டிராப்) யின் விலை இங்கு ரூ. 3·50 (வெளியில் 5·70 இருக்கும்).

டிரான்சிஸ்டருக்கான தோல் பை, காமிராவிற்கான தோல்பை, ஜேம்ஸ்பாண்ட் ரகப் பெட்டி ஆகியவைகூட இங்கு செய்யப்படுகின்றன.

இவை தரத்திலும் அமைப்பிலும், மிகப் பெரிய நிறுவனங்களில் தயாராகும் பொருட்களுக்கு ஈடாகவுள்ளன.

நான்கு தொழிலாளர்கள், இரண்டு தையல் இயந்திரங்களின் துணை கொண்டு தயாரிக்கும் இந்தத் தோல்பொருட்கள் ஓர் ஆண்டுக்கு 50,000 ரூபாய்க்கு விற்பனை ஆகின்றன. ஆண்டுக்கு லாபம் ரூ. 12,000. இங்கு தயாராகும் காலணிகள், தோல் பை முதலியன தமிழகமெங்கும் உள்ள சிறப்பங்காடிகள், குறளகம் ஆகியவற்றிற்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன.

இங்குச்செல்கிறவர்கள் யாரும் இந்தப் பொருட்களின் தரத்தையும் மலிவான விலையையும் பார்த்த பின் வாங்காமல் திரும்ப மாட்டார்கள்.

இத்தொழிலில் இன்னும் சில புதிய நுணுக்கங்களையும், உத்திகளையும் கையாளுவதற்காகத் தமிழ்நாடு அரசு 8 பேர்களைத் தேர்ந்தெடுத்து ஆக்ராவிற்கு ஒரு மாதப்பயிற்சிக்காக அனுப்பிவைக்கிறது. அதில் இத்தொழிற்கூடத்தைச் சேர்ந்த தொழிலாளர்களான ஈ.எஸ். ஜெயராமன், ஈ. கே. சுப்பிரமணி, ஈ. கே. காந்தராஜ், எஸ். கந்தசாமி ஆகியோரும் செல்கின்றனர்.

பரம்பரையாக இத்தொழிலைச் செய்துவரும் இத் தொழிலாளர்களுக்குப்பெயர் பெற்ற நிறுவனங்களின் பொருட்களை மிஞ்சும் வண்ணம் சிறந்த காலணிகளைத் தயாரிக்க வேண்டுமென்ற ஆர்வமும், ஆற்றலும் ஒருங்கே அமைந்துள்ளன.

அறுசுவை உண்டிகள் என்பவை, என்னவோ, அவற்றின் சுவைகளுக்கேற்ப அமைந்த ஆறு வகைச் சுவைகளைக் குறிக்கின்றன. ஆயினும் அந்த அறு சுவையை உண்டாக்கக் கூடிய காய்கறி வகைகளும் செய்முறைகளும் வேறுபடும் பொழுது எத்தனையோ விதத்தில் மாறுபட்டு, வேறுபட்ட சுவைகளை அளிக்கின்றன.

அச்சுவைகளை உண்டாக்க நாம் சமையல் செய்யும் காய், ஒரே காயாக இருப்பினும் ஒவ்வொரு விதத்தில், அதுவும் புதிய பல முறைகளில் நாம் செய்ய முற்படும் போது அதனதன் தனித்தனி ருசியை, நாம் பகுத்துணர முடிகின்றது.

இங்கே கீழே கொடுக்கப்பட்டுள்ள காய்கறி உணவு வகைகள் நாம் தினம் தினம் செய்து சாப்பிட்ட போதும், வேறு முறைகளில் செய்யும் பொழுது சுவை கூடுகின்றன. மகாராஷ்டிரம்—குஜராத் மாநிலங்களில் இவ்வுணவு வகைகள் அதிகமாக நடைமுறையில் உள்ளன.

தக்காளி உருளைக் கிழங்கு கூட்டு

தேவையான பொருள்கள்.	(அளவுகள் பத்துப்பேருக்கு).
உருளைக்கிழங்கு.	1 கிலோ,
தக்காளி ..	360 கிராம்.
கொத்தமல்லித் தழை.	ஒரு சிறு கட்டு.
பச்சைமிளகாய்.	20 கிராம்.
இஞ்சி ..	7 கிராம்.
மஞ்சள்பொடி.	2 டீஸ்பூன்.
மிளகாய்ப்பொடி	½ கிராம்.
கடுகு	½ ஸ்பூன்.
உப்பு	ருசிக்குத் தக்கபடி.
சர்க்கரை ..	1½ ஸ்பூன்.
எண்ணெய் ..	100 கிராம்.

செய்முறை—

வாணலியை அடுப்பில் வைத்து அது சிறிது சூடு கண்டவுடன் மேற்குறிப்பிட்ட அளவில் உள்ள எண்ணெய்யை அதில்ஊற்றி நன்ருகக்காய்ந்தவுடன்(சுட்டவுடன்) கடுகை, (உளுத்தம் பருப்பும் சிறிது சேர்த்துக் கொள்ளலாம். வேண்டுமானுல் கடலைப் பருப்பும் 1½ டீஸ்பூன் சேர்த்துக் கொள்ளலாம்) தாளிக்கவும்.

பின்னர் நறுக்கி வைத்துள்ள உருளைக்கிழங்கை நன்ருக அலசிய பின் அவ்வாணலியில் விட்டு நன்ருகச் சுருளச் சுருள வதக்கவும். பின்னர் 1 டம்ளர் தண்ணீர் விட்டு, வதக்கிய கிழங்கை வேக வைக்கவும். தக்காளியையும் நறுக்கிக்கொண்டு மீதிப் பொருள்களையும் அதில் போட்டு மெதுவான சூட்டில் வேக விடவும். இவையெல்லாம் சேர்ந்து நன்ருக வெந்து, கொதி வந்தவுடன், அதில் ஒருமூடி தேங்காய்த் துறுவலைப் போட்டுக் கிண்டி இறக்கி வைத்தபின்னர் உண்டு மகிழவும்.

வெஜிடபிள் பட்டீஸ்

தேவையான பொருள்கள்.	அளவுகள் (பத்துப் பேருக்கு)
உருளைக்கிழங்கு.	800 கிராம்.
ரொட்டி ..	80 கிராம்.
பச்சைப் பட்டாணி அல்லது	180 கிராம்.
காய்ந்த பட்டாணி,	90 கிராம்.
பச்சை மிளகாய்.	95 கிராம்.
இஞ்சி ..	ஒரு துண்டு.
வெங்காயம் ..	100 கிராம்.
எலுமிச்சம் பழம்.	சிறிதளவு.
கரம் மசாலா ..	ஒரு சிட்டிகை

உருளைக் கிழங்கை வேக வைத்து உரித்த பின் நன்ருக நசுக்கி வைத்துக் கொள்ளவும். ரொட்டியைத் தண்ணீரில் நனைத்து, பிறகு பிழிந்து, உருளைக் கிழங்கோடு சேர்க்கவும். உப்பையும், எலுமிச்சம் பழச் சாற்றையும் அதில் ஊற்றி நன்ருகக் கிண்டிவிடவும்.

பட்டாணியை உரித்து நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாயையும் இஞ்சியையும் நன்ருக அரைத்து வைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு, நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தை நன்ருகச் சுருளச் சுருள வதக்கி, அது பொன் நிறமானவுடன், அரைத்து வைத்துள்ள பச்சை மிளகாயையும் இஞ்சியையும் அதில் போடவும்.

அதில் பட்டாணியையும், உப்பையும் போட்டு, பட்டாணியை வேக வைக்கவும். நன்ருக வெந்தவுடன் கொத்தமல்லித்தழை, கரம் மசாலா இவைகளைப் போட்டு நன்ருகக் கலக்கவும். உருளைக்கிழங்கையும் பட்டாணியையும் சமமாகப் பிரித்துக் கொண்டு, உருளைக் கிழங்கைக்கிண்ணம்போல்செய்து கொண்டு (குழிவிட்டுக்கொண்டு) அதில் பட்டாணியைப் போட்டு மூடவும். பொன் நிறமாகும் வரை பொரித்தபின் இறக்கி உண்ணவும்.

கீழே தரப்பட்டுள்ள அசைவ உணவு மிகவும்சுவையானதாகும்.

பருப்பு கீமா.

தேவையான பொருள்கள்—

	அளவுகள். (எட்டுப் பேருக்கு.)
அறுத்த கறி	500 கிராம்.
உளுத்தம் பருப்பு.	100 கிராம். (1 கோப்பை.)
வெங்காயம்	225 கிராம்.
பூண்டு	10 கிராம்.
இஞ்சி ..	10 கிராம்.

தேங்காய் ..	55 கிராம்.
பப்பாளி விதை.	5 கிராம்.
கிராம்பு ..	2
கொத்தமல்லி.	10 கிராம்.
இலவங்கப் பட்டை.	2 செ.மீ.
மிளகாய் வற்றல்.	3 கிராம்.
மஞ்சள் பொடி.	¼ டீஸ்பூன்.
சீரகப் பொடி.	¼ டீஸ்பூன்.
கொத்தமல்லித் தழை.	1 கொத்து.
எண்ணெய்	45 கிராம்.
புளி ..	5 கிராம்.
உப்பு ..	ருசிக்குத்தக்க படி.

செய்முறை—

உளுத்தம் பருப்பைக் கழுவி ஒரு மணி நேரம் ஊற வைக்கவும்.

கொத்தமல்லி, மிளகாய் வற்றல், மஞ்சள் பொடி, சீரகம் ஆகியவற்றை வறுத்துப் பொடி செய்து கொள்ளவும். இஞ்சியையும், பூண்டையும் அரைத்துக் கொள்ளவும். தேங்காயையும் பப்பாளியையும், தனித்தனியாக அரைத்துக் கொள்ளவும்.

வெங்காயத்தை நன்ருக நறுக்கிக்கொள்ளவும்.

நறுக்கிய கறியை ஒரு பாத்திரத்தில் போட்டு, கறி பவுடரையும், பூண்டு, இஞ்சியையும் போடவும். சிறிது வெங்காயத்தை வைத்துக்கொண்டு மீதியைப் போடவும்.

சாதாரணச் சூட்டில் கறியை வேக வைக்கவும். உளுத்தம் பருப்பை ஊற வைத்த தண்ணீருடன் ஊற்றவும். பருப்பு நன்ருக வெந்தவுடன், தேங்காயையும், பப்பாளி விதைகளையும், உப்பையும் போடவும்.

புளித் தண்ணீரையும் விடவும். நன்ருகக் கொதிக்க விட்டுக் கொத்த மல்லித் தழையைப் போடவும்.

எண்ணெய்யை ஊற்றி, மீதி வெங்காயத்தையும், கிராம்பு, ஏலக்காயையும் கலக்கவும்.

நன்ருகக் கலக்கிக் கறியுடன் சேர்த்துச் சாப்பிடவும்.

—புவனேசுவரி.

சோகத்தை மாற்றுவோம்

சிலருக்கு உடல் பலவீனமாகி விடும். சிறிது நடந்தாலும், வேலை செய்தாலும் மிகவும் களைப்பாக இருக்கும். மேல் மூச்சு வாங்கும். ஏதாவது சாப்பிட்டால் சரியாகச் சீரணமாகாது. ஒன்று பேதியாகும் அல்லது மலச்சிக்கல் ஏற்படும். முகம் உடம்பெங்கும் வெளிறி விடும். கண், உள்ளங்கை, உள்ளங்கால் பகுதிகள் வெள்ளையாக இரத்தமின்றித் தோன்றும்.

இந்த நோயை 'பாண்டு' என்றும் சோகை என்றும் கூறுவர். ஆங்கிலத்தில் 'anaeamia' என்று குறிப்பிடுகிருர்கள்.

சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணு இந்திய மருத்துவ மனையில் இதற்குச் சிகிச்சையளிக்கப்படுகிறது. நாள் தோறும் சுமார் இருபது முதல் முப்பது பேர் இந் நோய்வாய்ப் பட்டவர்கள், இந்த மருத்துவ மனைக்குச் சிகிச்சை பெற வருகின்றனர்.

இவர்கள் இங்கு வந்ததும் மருத்துவர்கள் இவர்களை ஆய்வு செய்கின்றனர். எந்த வகைச் சோகை நோய் என்பதைத் தெரிந்து கொள்கின்றனர். அதன் பின் அதற்கு வேண்டிய சிகிச்சையளிக்கப்படுகிறது.

நோயாளிக்கு வயிற்ருேட்டம் அல்லது மலச்சிக்கலிருந்தால் முதலில் அதற்குச் சிகிச்சை தரப்படுகிறது.

பேதியுள்ளவர்களுக்கு அரிசி நொய்க் கஞ்சி,'ஆரோரூட்' கஞ்சி ரொட்டி முதலியவை உணவாகக் கொடுக்கிருர்கள். உணவில் காரம், புளிப்பு எதுவும் சேர்க்கப்படுவதில்லை.

மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு உணவுடன் பழங்கள், குறிப்பாகச் சாத்துக்குடி தரப்படுகிறது. அதிலும் குணமாகாவிட்டால் மலக்கூடார லேகியம் அளிக்கப்படுகிறது.

நாக்குப் பூச்சியிருந்தாலும், இந்த நோய் ஏற்படுவதுண்டு. எனவே, அம்மாதிரி உள்ளவர்களுக்கு அதற்காகத் தனியாக மருந்து கொடுக்கிருர்கள்—வாயு விடங்கம் சூரணத்தைக் கொடுக்கிருர்கள்.

ரத்தச் செறிவுக்காக அன்ன பேதி செந்தூரத்தை பஸ்பம் செய்துகொடுக்கிருர்கள். அயக்காந்தம் லோகமண்டூரம் ஆகியவையும் இதற்காகத் தரப்படுகின்றன. மலக் கட்டுள்ளவர்களுக்குப் பஞ்ச தீபாகினி லேகியமும் (பசிக்காக) பேதியுள்ளவர்களுக்கு வில்வாதி லேகியமும் தரப்படுகின்றன.

இவை தவிரச், சோகை நோய் உள்ளவர்களுக்குச் சத்துள்ள உணவு தர வேண்டியது மிகவும் அவசியம். தக்காளி சூப், கல்லீரல் சூப், அல்லது கால் எலும்பு சூப் ஏதாவது கொடுக்கிருர்கள். சாப்பாட்டுடன் காய்கறி வகைகள் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. சில நோயாளிகளுக்கு, வேக வைக்காத பச்சைக் கல்லீரலிலிருந்து சாறு எடுத்தும் கொடுப்பதுண்டு.

இவ்வாறு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கொடுக்க வேண்டும். இரண்டு வார காலத்திலேயே நோயாளியின் உடல் நிலையில், இரத்த ஓட்டத்தில் முன்னேற்றம் ஏற்படும். தொடர்ந்து நல்ல சத்துணவு அளித்து வந்தால் நோயாளி பூரண குணமடைவது திண்ணம்.

கல்லீரல் சூப் தயாரிக்கும் முறை

ஓர் ஆளுக்கு வேண்டிய அளவுகள் :—

கல்லீரல்—200 கிராம்.
சீரகம்—10 கிராம் (கால் தேக்கரண்டி)
மிளகு—10 கிராம்.
இஞ்சி—ஒரு சிறு துண்டு.
மஞ்சள் தூள்—சிறிதளவு

கல்லீரலைச் சிறிய துண்டுகளாக வெட்டி ஒரு தம்ளர் தண்ணீரில் போட வேண்டும். அத்துடன் சீரகம், மிளகு, இஞ்சி ஆகிய பொருட்களை அம்மியில் வைத்து லேசாக நசுக்கிப் போட்டு சுமார் அரை மணி நேரம் வேகவிட வேண்டும். அதன்பின் சிறிது மஞ்சள் தூளைச் சூப்பில் தூவி இறக்கிவிட வேண்டும். ஈரலைப் பிழிந்து விட்டு சூப்பை மட்டும் நோயாளிக்குக் கொடுக்கலாம்.

இந்தச் சூப்பை நாள் தோறும் காலை உணவுக்கு அரை மணிக்கு முன் வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும். இரண்டு மூன்று மாதங்களுக்குக் கொடுக்கலாம்.

பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் தொழிற்சாலைகளைத் தான் பொதுவாக எங்கும் பார்க்க முடியும். தொழிற்சாலையின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், அதன் மூலம் அதிக வருவாய் அடையவேண்டும் என்பதே அவற்றின் லட்சியமாக இருக்கும்.



ஆனல் வேலூரில் உள்ள கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிற்கூடம் இதற்கு விதி விலக்கு. இவர்களது முக்கியக் குறிக்கோள், விவசாயிகள் புதிய முறைகளைப் பயன்படுத்தி அதிக அளவில் பழங்களை உற்பத்தி செய்யவேண்டும், அதன் மூலம் விவசாயிகளின் வருவாய் பெருகவேண்டும், வாழ்க்கை நிலை உயரவேண்டும், ஆலையின் உற்பத்தியும் வருவாயும் அதிகரிக்க வேண்டுமென்பதே.

1969-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாள் இயங்கிடத் துவங்கிய இந்தக் கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிற்கூடத்தில் 532 விவசாய உறுப்பினர்கள் உள்ளனர். இங்கு மாம்பழமும், தக்காளியுமே பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு முக்கியக் காரணம் அவை இவ் வட்டாரத்திலே பயிரிடப்படுவதுதான்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தற்போது 1,524 ஏக்கரில் தக்காளியும், 8,489 ஏக்கரில் மாம்பழமும் பயிரிடப்படுகின்றன. ஆயினும் இந்த வேளாண்மையில் ஈடுபட்டிருப்போருக்குப் போதிய வருவாயில்லை. எந்த முறையில் பயிரிட்டால் அதிக வருவாய் கிட்டும் என்பதும் அவர்களுக்குத் தெரிவதில்லை. பழைய முறையிலே வேளாண்மை செய்து வருகிருர்கள். இதன் மூலம் மகசூல் குறைவு; வருவாய் சிறிது; விவசாயிகளின் வாழ்க்கை நிலையிலும் முன்னேற்றமில்லை.

விவசாயிகளின் கூட்டுறவில் நடைபெறும் இத் தொழிற்கூடம் இந்த நிலையை மாற்ற விரும்புகிறது.

நமது நாட்டிற்கு (இந்தியா முழுமைக்கும்) 7 கோடியே 30 லட்சம் டன் பழங்கள் தேவை. ஆனல் உற்பத்தியாவதோ 2 கோடி டன். அதிலும் கால் பங்கு அழுகியும் சேதமடைந்தும் விடுகின்றது.

தேவையை அதிகரிப்பதற்குச் சரியான வழி, பழங்கள் உற்பத்தியைப் பெருக்குவது. சேதமடைதல்-அழுகுவதைத் தவிர்ப்பதற்கு ஏற்ற வழீ பழங்களைப் பதனிடுதல்.

அமெரிக்காவில் 40 சதவீதம் பழங்களைப் பதனிடுகிருர்கள். நம் நாட்டிலோ மொத்தத்தில் 5 சதவீதம் பழங்களைத்தான் பதனிடுகிருேம்.

பழங்களைப் பதனிடத் தரமான சுவையான, நல்ல நிறமுள்ள பழங்கள் தேவை. ஆனல் விவசாயிகள் அவர்களுக்குக் கிடைக்கும்



ஏதாவதொரு பழத்தின் விதைகளைப் பயிரிடுகிருர்கள். அதனுல் தரமான பழங்கள் கிடைப்பதில்லை.

விவசாயிகளின் கூட்டுறவால் அமைக்கப்பட்ட இந்தப் பழம் பதனிடும் தொழிற்கூடம் இதற்காகப் புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இதற்கென வட ஆர்க்காடு மாவட்டம், ஒடுகத்தூர் பகுதியில் 100 விவசாயிகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர். 100 ஏக்கர் நிலத்தில் அவர்கள் தக்காளி பயிரிடுவார்கள். அவர்களுக்குத் தேவையான தரமான தக்காளி விதைகளைத் தேசீய விதை வாரியத்திடம் வாங்கித் தரப்படும். முதலில் 'பூசாருபி', ''பெஸ்ட் ஆஃப் ஆஃப்'' என்ற இரு தக்காளி விதைகளைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். இந்த வகைத் தக்காளிகளின் பழங்கள் தரமானவை; சுவை மிக்கவை; அத்துடன்அதிக விளைச்சல் தரக்கூடியவை. எனவே இதன்மூலம் விவசாயிகளுக்கு மிகு விளைச்சலும், நல்ல வருவாயும் கிட்டும்; ஆலைக்கும் தரம் மிக்க பழங்கள் கிடைக்கும்.

மா, நீண்ட காலப் பயிராகையால் அதற்கு நீண்ட காலத் திட்டமொன்றும் வகுக்கப்படுகிறது.



இந்தியாவுக்கு இது புதிது

இங்கு தக்காளிப் பழத்தில் நாலு வகையும், மாம்பழத்தில் ஆறு வகைப் பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

அதில் தக்காளித்திரட்டு (கட்டியானது) மாம்பழத் திரட்டு ஆகியவை இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எங்கும் தயாரிக்கப்படுவதில்லை. இங்குதான் முதல் முறையாகச் செய்யப்படுகின்றன. விதை, தோல், தண்ணீர் ஆகியவை நீக்கப்பட்டுக் கட்டியாகத் தயாரிக்கப்படுபவை, இந்தத் திரட்டு. பழரசப் பானங்கள் மற்றும் இந்தப் பழங்களிலிருந்து தயாரிக்கப்படும் இதர வகைகளுக்கு இவற்றைப்பயன்படுத்தலாம். மேலை நாடுகளில் இவற்றிற்குக் கடுமையானகிராக்கி இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தக்காளிச் சாறு, தக்காளித் திரட்டு, தக்காளி கச்சப், மாம்பழரசம், மாம்பழச் சாறு, மாம்பழ ஜாம்,சர்க்கரைப் பாகில் போட்ட மாம்பழத் துண்டுகள், உப்பு நீரில் ஊறப்போட்ட மாம்பழத் துண்டுகள் ஆகியவை இங்கு தயாரிக்கப்படும் பிற பொருட்களாகும்.

செக்கசுலோவேக்கிய நாட்டு இயந்திரங்களுடன் 22 லட்ச ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற்கூடத்தில் இதுவரை ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்ட பண்டங்களை மத்திய உணவு இயல் ஆய்வுக் கழகம் ஆய்ந்து இவை தரமானதயாரிப்புகள்என ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே வருகிற டிசம்பர் திங்கள் முதல், வணிக ரீதியில் விற்பனைக்கான தயாரிப்புகளில் இத் தொழிற்கூடம் முனையும்.

மணிக்கு 2 டன் பழச் சாறுகள் தயாரிக்கக், கூடியவை இங்குள்ள இயந்திரங்கள். நாளொன்றுக்கு 50 டன் பழரசங்கள், திரட்டுகள் தயாரிக்கப்படும்.

இங்கே இருக்கின்ற இயந்திரங்கள் அத்தனையும் தாளுக இயங்கக் கூடியவை. பழங்களை இயந்திரத்தின் முதல் பகுதியான கழுவும் பகுதியில் கொட்டி விட்டால் அதன் பின் பணியாளர்கள் எவரும் பழங்களைத் தொட வேண்டியது இல்லை. தொடவும் முடியாது. முதலில் கழுவி, அப்புறம் துண்டுகளாக நசுக்கி, விதைகளையும் தோல்களையும், காய்ப் பகுதிகளையும் நீக்கிப் பின், நீரை ஆவியாக்கிக் கடைசிப் பகுதியில் பழத்திரட்டைத் தகர டப்பாக்களில் அடைத்துத் தந்து விடுகிறது, இயந்திரம். பழரசங்களுக்குத் தனியான இயந்திரமுள்ளது. அதுவும் தானியங்கியே! புட்டிகளிலோ, டப்பாக்களிலோ அழகாக அடைத்துத் தருகிறது.

''விஞ்ஞான முறையில் தரமுடன், சுவையுடன், நல்ல நிறத்துடன் தயாரிக்கக் கூடிய இந்தத் தொழிற்கூடம் நாட்டிலுள்ள இவ்வகைத் தனியார் தொழிற்கூடங்கள் எட்டிப்பிடிக்கமுடியாத அளவுக்குத் தயாரிப்பில் ஈடுபடும்; கோடிக்கணக்கில் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தரும். இதன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகு பலன் பெறுவர்; தயாரிப்புகளை வாங்குவோருக்கும் தரமான சுவையான பழரசப் பண்டங்கள் கிடைக்கும்.'' என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார் இளைஞரான அதன் நிர்வாகி திரு. துரைசாமி. ஆலையின் பிரமாண்ட அமைப்பும் அதன் ஊழியர்களின் சுறுசுறுப்பும் அதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

சுமார் எட்டரை ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இந்தஆலையில், தொழிற்கூடப் பகுதி போக மீதி இடத்தை இவர்கள் தரிசுநிலமாக வைத்திருக்க வில்லை. பள்ளமான இடத்தில் நெல் பயிரிடுகிருர்கள். மேட்டுப் பகுதியில்தக்காளிக்கான மாதிரிப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தக்காளியை எந்த முறையில் பயிரிட வேண்டும் என்று விவசாயிகள் தெரிந்து கொள்ள, இந்தப் பண்ணை முன் மாதிரியாக விளங்கும். இவை தவிர, சுற்றியுள்ள இடங்களில் உயர்ந்த ரக மாமரங்களை நட்டுள்ளனர்.

'நாஃப்கோ (NAFCO) என்ற பெயரில் வெளிவர இருக்கும் இந்தப் பழச்சாறுகளும், பழரசப் பானங்களும் விரைவில் தமிழகத்தில் மட்டுமல்லாமல் அனைத்துலகத்திலும் புகழைப் பரப்பும் என்பது திண்ணம்.

கடலும் காசும்

அன்புள்ள 'தமிழரசு' வாசகர்களே ! சென்ற 16-10-70-ல் வெளியான ''கல்கத்தா செல்லும் கட்லா'' என்ற மீனைப்பற்றியும், கூட்டுறவுச் சங்கம் பற்றியும் தெரிந்து இருப்பீர்கள்.

இப்பொழுது அமெரிக்கா, ஜப்பான் செல்லும் இராலைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்.

கடலூர் பழைய நகர் ஒரு துறைமுகப் பட்டினம். இங்கு அயல் நாடுகளில் இருந்து சரக்குக் கப்பல் வந்து போவது வழக்கம். தற்சமயம் இங்கு மீன்பிடித் தொழில் அதிகமாக நடைபெறுகிறது. அரசினரால் தவணை முறையில் வழங்கப்படும் விசைப் படகுகள் இங்கு சுமார் நூற்றுக்கு மேல் உள்ளன.

தினசரி கடலுக்குச் சென்று வரும் விசைப் படகின் ஓசை காலை 5 மணி முதல் மாலை 4மணி வரை கேட்டவண்ணமிருக்கும். விசைப் படகில், கடலில் சென்று, இரால் மீன் பிடித்து வருவார்கள். மீன்களைக் கூடை கூடையாக ஏலம் விடுவார்கள். இராலை வியாபாரிக்கு 1 கிலோ இரால் தலையுடன் ரூ. 7·50-க்கு விற்பனை செய்வார்கள். இப்படி விற்பனை செய்யப்பட்ட இரால், வியாபாரியிடம் போனதும் இராலின் தலையை அகற்றி விடுவார்கள். இதற்காக கேரளத்தைச் சார்ந்த இரால் பதனிடும் கம்பெனி கடலூரில் ஒன்று உள்ளது. அங்கு இராலின் தலையைக் கிள்ளி விடுகின்றனர். 1 கிலோ தலை கிள்ளிய இரால் ரூபாய் 13·50க்கு விற்பனை செய்யப்படுகிறது. இப்படி விற்பனை செய்யப்பட்ட இராலைச் சுத்தம் செய்து அதைத் தரம் பிரித்து பாலிதீன் பைகளில் மடித்து, அட்டைப் பெட்டியினுள் வைத்துக் குளிர் சாதனப் பெட்டியில் வைத்து விடுவார்கள். குறிப்பிட்ட நேரம் சென்ற பின் நன்ருகப் பெட்டிகளில் அடைத்துச் சிப்பஞ் செய்து பல காட்டன்களாகபெரிய அட்டைப் பெட்டியில் வைத்துக் கேரளம் அல்லது சென்னைத் துறைமுகம் வழியே அயல் நாடுகளுக்கு அனுப்புகிருர்கள். அயல் நாடுகளில் இராலுக்கு நல்ல கிராக்கியுள்ளது. நல்ல விலையும் கிடைக்கிறது.

மீனவர் சமுதாயம் வளர்ச்சி பெற அரசு பாடுபடுகிறது.

சென்னையில் இரால் பதனிடும் தொழிற்சாலை ஒன்றினை அரசு கட்டியுள்ளது. அது தனியார் துறைக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் இரால் விலையைப் பார்த்தால் பவுன் விலைக்கு இணையாக உள்ளது. இது அமெரிக்கா, ஜப்பான், முதலிய அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

தற்போது இரால் விற்பனையால் மீனவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. கடலில் இன்னும் பல விலையுயர்ந்த பொருள்களும் உள்ளன. கடல், மீனவ மக்களுக்குப் பணத்தை அள்ளித் தரும் கருவூலமாகும்.

—எச். எம். சதகத்துல்லா,
கடலூர் பழைய நகர்.

தான்யப் பாதுகாப்பு, தானிய விளைவிப்பைப்போல் அதே அளவுக்கு முக்கியமானது.

எவரெஸ்ட்

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் தானியச் சேமிப்புப் பத்தாயங்கள், நடைமுறைக்கேற்ற, உன்னதப் பாதுகாப்புள்ள தானியச் சேமிப்பு முறையாகும்.

எவரெஸ்ட் தானியச் சேமிப்புப் பத்தாயங்களின் தனிச் சிறப்புகளை நோக்குங்கள் :

- எல்லா வகைத் தானியங்களின் பாதுகாப்பான சேமிப்புக்கும் உகந்தென நிபுணர்களால் அங்கீகரிக்கப்பட்டவை.
- பல்வேறான தானிய வகைகளைத் தனித்தனியே வைப்பதற்கு இலகுவான உள்ளறைகள் அமைந்தவை.
- சிமெண்ட், செங்கல், அல்லது மரப் பீடத்தின் மீது எளிதில் நிறுவத் தக்கவை.
- பூச்சிகள், எலிகள், ஈரம் ஆகிய எதுவும் பாதிக்கமுடியாதவை.
- தானியங்கள் தனியே வெளியே பாயத்தக்கவை.
- நிரந்தரமானவை—ஆயுட்காலமுழுதும் நீடித்திருப்பவை.

எவரெஸ்ட்

ஆஸ்பெஸ்ட்டால் சிமெண்ட் தயாரிப்புகள்.

நாடுநெடுகப் பரவிய வினியோக அமைப்பையும், தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப உதவியையும் பின்பலமாகக் கொண்டுள்ளன.

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் லிட்,
(டர்னர் & நியூவால் க்ரூப்பின் ஒரு உறுப்பினம்)
பம்பாய் • கல்கத்தா • ஜபல்பூர் • சென்னை • நியூ டெல்லி
போத்தனூர் (கோயம்புத்தூர் மாவட்டம்).

Focus—Q.11TM

நல்லெண்ணெய் விலை குறைய..

நாட்டுமக்களிடையே நல்லெண்ணெயின் உபயோகம் நாளுக்கு நாள் பெருகி வருவதால், நல்லெண்ணெயின் தேவை அதிகமாகிக் கொண்டே வருகிறது. இதன் காரணமாகவே நல்லெண்ணெயின் விலையும் நாளுக்குநாள் கூடிக்கொண்டே இருக்கிறது.

நல்லெண்ணெயின் விலையைக் கட்டுப்படுத்துவதென்பது நம் தமிழ் நாடு அரசினுல் மட்டும் முடிந்துவிடக் கூடிய காரியமல்ல. அனைத்து இந்திய ரீதியில் மத்திய அரசினுல்தான், நல்லெண்ணெயின்விலையைக் கட்டுப்படுத்த இயலும். ஆயினும் தமிழ்நாடு அரசு நல்லெண்ணெய் விலையைக் குறைத்திடும் நோக்குடன், எள் உற்பத்தியைப் பெருக்கிட முயன்று வருகிறது. எள் உற்பத்தி பெருகினுல் நல்லெண்ணெய் விலையும் கணிசமாகக் குறைந்து விடும்.

எனவே, எள் உற்பத்தியைப் பெருக்கி-அதன் மூலம் நல்லெண்ணெய் உற்பத்தியைப் பெருக்கி—நல்லெண்ணெய்விலையைக்குறைத்திட முயற்சி செய்யும் தமிழ்நாடு அரசுக்குத் துணை புரிய வேண்டுமென்று உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

தற்பொழுது தமிழ்நாட்டில் ஏறத்தாழ 1,13,000 ஹெக்டர் பரப்பில் எள் சாகுபடி செய்யப்பட்டு 36,000 மெட்ரிக் டன் எள் உற்பத்தியாகிறது ; ஒரு ஹெக்டரில் கிடைக்கும் மகசூல் 322 கிலோவாகவே உள்ளது. சில முன்னேடி உழவர்கள் இரசாயன உரமிட்டு, பொறுக்கு விதைகளை விதைத்து, பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் மேற்கொண்டு ஹெக்டருக்கு 1,000 கிலோவுக்கு மேலும்மகசூல் எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. ஆகவே, அந்த முன்னேடி உழவர்களைப்போலவே எல்லா உழவர்களும் இரசாயன உரமிட்டு, பொறுக்கு விதைகளை விதைத்துப் பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் மேற்கொண்டால் தமிழ் நாட்டின் தற்போதைய எள் உற்பத்தியைக் குறைந்தது 2 மடங்காகப் பெருக்க இயலும்.

தமிழ் நாட்டில் கார்த்திகை, மார்கழி மாதங்களில் குளிர் மிகவும் அதிகமாக இருக்கும். இக் குளிர்காலத்தில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் மானுவாரியாகவும், இறைவையாகவும் எள் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதிகளிலெல்லாம், டி.எம்.வி. 2 (திண்டிவனம்-2) என்ற பொறுக்கு எள் விதையைக் கார்த்திகை மாதத்தில் (நவம்பர்-டிசம்பர்) விதைத்து மகசூலைக் கணிசமாகப் பெருக்கலாம். இதன் வயது 80 முதல் 85 நாட்களேயாகும்.

அடுத்து, மார்கழி மாதத்தில் (டிசம்பர்-ஜனவரி) திருச்சிராப்பள்ளி, சேலம், ஓசூர், கோயம்புத்தூர் (ஒருசில பகுதிகள்)ஆகிய மாவட்டங்களில் இறைவையாக எள் பயிரிடப்படுவது பழக்கத்தில் உள்ளது. இப்பகுதிகளிலெங்கும் 'கே. ஆர். ஆர். 1' (கரூர்-1) அல்லது 'கே. ஆர். ஆர். 2' (கரூர்-2) என்ற பொறுக்கு எள் ரகங்களை இறைவையாக விதைத்தால், எள் உற்பத்தி நிச்சயமாகப் பெருகும். 'கே. ஆர். ஆர். 1'-ன் வயது 125 நாட்கள். 'கே. ஆர். ஆர். 2'-ன் வயது 110 நாட்கள்.

மார்கழி மாதம் முதல் பங்குனி மாதம் வரை (டிசம்பர் முதல் மார்ச்சு வரை) டி. எம். வி. 3 (திண்டிவனம்-3) என்ற எள் ரகத்தை மாநிலமெங்கும் (நீலகிரி மாவட்டம் நீங்கலாக) இறைவையாகப் பயிரிடலாம். இந்த ரக எள் மற்ற ரகங்களை விட அதிகமாக மகசூல் அளிக்கும் திறனுடையது. இதன் வயது 90 நாட்களேயாகும்.

நல்ல வடிகால் வசதியுடைய வண்டல் கலந்த மணற்பாங்கான நிலம் எள் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. தண்ணீர் தேங்கக்கூடிய இடங்களிலும், களர் நிலங்களிலும் எள் விதைத்தால் நலல விளைச்சல் கிடைக்காது.

எனவே, யார் யாருக்கு எள் பயிரிட வாய்ப்பும் வசதியும் இருக்கிறதோ அவர்களெல்லாம், தங்கள் பகுதிக்கேற்ற பொறுக்கு எள் ரகத்தைமேற்கூறப்பட்ட பருவத்திலும், மண்ணிலும் விதைக்கலாம். எள்ளின் விளைச்சலைப் பெருக்கக் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம்.

நிலத்தைப் பண்படுத்துதல்—எள் சாகுபடி செய்யப்படவிருக்கும் நிலத்தை நாட்டுக் கலப்பையால் 6 முதல் 8 முறை அல்லது இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை உழுது, நன்கு பண்படுத்த வேண்டும். மேடு பள்ளமில்லாமல் நிலத்தைச் சமப்படுத்தி வைக்க வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

உரமிடுதல் : மானுவாரி எள் பயிரிட ஹெக்டர் ஒன்றுக்கு(2.47 ஏக்கர்) 12வண்டி (6டன்) தொழு எரு, 22 கிலோ தழைச் சத்து (110 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 48.4கிலோயூரியா) 11 கிலோ மணிச் சத்து (68.75 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 11 கிலோ சாம்பல் சத்து (18·70 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்), 5 கிலோ மாங்கனிஸ் சல்பேட் ஆகியவைகளை அடி உரமாக இடவேண்டும். மாங்கனிஸ் சல்பேட் இடுவதால் எள்ளின் விளைச்சல் அதிகமாகும்.

Shilpi BOB 21/70 Tam

இறைவை எள் பயிரிட ஹெக்டருக்கு 24 வண்டி (12 டன்) தொழு எரு, 33 கிலோ தழைச்சத்து (165 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 72.6 கிலோ யூரியா). 22 கிலோ மணிச்சத்து (137.50 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 22 கிலோ சாம்பல்சத்து (37.4 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்), 5 கிலோ மாங்கனிஸ் சல்பேட் ஆகியவைகளை அடி உரமாக அளிக்க வேண்டும்.

விதைப்பு : மானாவாரியாக எள் பயிரிட ஹெக்டருக்கு 7 கிலோ விதையும், இறைவையாக எள் பயிரிட ஹெக்டருக்கு 6 கிலோ விதையும் விதைக்க வேண்டும். மானாவாரியாக விதைக்கும்போது செடிக்குச் செடி 9 அங்குலம்× 9 அங்குலம் இடைவெளியிருக்குமாறும், இறைவையாக விதைக்கும் போது செடிக்குச் செடி 12 அங்குலம்× 12 அங்குலம் இடைவெளியிருக்குமாறும் விதைக்க வேண்டும்.

செடி கலைத்தலும் களை எடுத்தலும் : எள் விதைத்த 10-வது நாளில் அதிகமாக உள்ள செடிகளைக் கலைத்து விட வேண்டும். விதைத்த 20 முதல் 25 நாட்களுக்குள் முதல் தடவையாக மண்ணைக் கொத்திவிட்டுக் களை எடுப்பதுடன் இரண்டாம் முறையாக அதிகமாக உள்ள செடிகளைப் பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். தேவையானால் விதைத்த 35 நாட்களுக்குள் 2-வது முறையாக மண்ணைக் கொத்திவிட்டு களை எடுக்க வேண்டும்.

நீர்ப்பாசனம்.— இறவை எள் விதைத்த உடனே நீர்பாய்ச்சவும். விதைத்த 3-வது நாள் முளைநீர் அல்லது உயிர்நீர் (Life Irrigation) பாய்ச்சவும். அதன்பின் 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் நீர்பாய்ச்சிவர வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு.— கொண்டைப்புழு, காய்ப்புழு ஆகியவைகளால் ஏற்படும் சேதத்தைத் தடுக்க எள் விதைத்த 4-ம் வாரம் முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 3 முறை டி.டி.டீ. 5 சதத்தூளை ஹெக்டருக்கு 20 கிலோ வீதம் தூவலாம் அல்லது 0·02 சத என்ட்ரின் மருந்தை (900 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை 900 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கலாம்.

திண்டிவனத்திலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கூறியவாறு டி.டி.டீ. 5 சதத் தூளைத் தூவியதனால் ஹெக்டருக்கு ரூபாய் 153·00-ம், என்ட்ரின் தெளித்ததனால் ஹெக்டருக்கு ரூபாய் 251·50-ம் அதிக லாபமாகக் கிடைத்துள்ளது.

காய்களில் சேதம் விளைவிக்கும் கட்டிக் கொசுக்களைத் (Gallfly) தடுக்க 0·02 சத என்ட்ரின் மருந்தைப் பூ பிடிக்கும் முன்பாக ஒரு முறையும், பின்பு 15 நாட்கள் கழித்து ஒருமுறையும் தெளிக்க வேண்டும். அல்லது 0·1 சத டி.டி.டீ. மருந்தை (1 கிலோ டி.டி.டீ. 50 சத நனையும் தூளை 500 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்கலாம்.

பூவிலைநோய் (Phyllobydisease) தாக்கப்பட்ட செடிகளை அறவே பிடுங்கி எரித்துவிடவும்.

அறுவடை.— காய்கள் நன்கு முதிர்ச்சி அடைந்தவுடன், சரியான சமயத்தில் அறுவடை செய்யப்பட வேண்டும். இலைகள், தண்டுப் பாகம் ஆகியவை மஞ்சள் நிறம் அடைவதும், இலைகள் உதிர ஆரம்பிப்பதும், எள் செடிகள் போதிய முதிர்ச்சி அடைந்துவிட்டதைக் குறிக்கும் முக்கிய அறிகுறிகளாகும். இந்நிலைக்குப்பின் அறுவடை செய்யத் தாமதமானால், முற்றிய காய்கள் வெடித்து, விதைகள் சிதறி மகசூல் குறைய ஏதுவாகும்.

போதிய முதிர்ச்சியடைந்தவுடன் செடிகளை அறுவடை செய்து, அவற்றின் வெட்டப்பட்ட அடிப்பாகம் வெளிப்பக்கமாக இருக்கும்படி வைத்து வட்டவடிவமான குவியலாக (குதிரி) அடுக்கி, மேலே பாரத்துடன் சில நாட்கள் விட்டு வைப்பது சாதாரணமாக வழக்கத்திலுள்ளது. இவ்வாறு செய்வதனால், சரிவர முதிர்ச்சியடையாத ஒன்றிரண்டு காய்களும், குவியலின் உட்பகுதிகளில் ஏற்படும் அதிக வெப்பம், புழுக்கம் முதலியவைகளின் காரணமாகப் போதிய முதிர்ச்சியடைய வழி பிறக்கிறது. 4 –5 நாட்களுக்குப் பின்னர், குவியலைக் கலைத்துச் செடிகளை வெய்யலில் 2 அல்லது 3 நாட்களுக்கு உலரவைக்கவும். இதனால் காய்கள் வெடித்து அதனுள்ளிருக்கும் விதைகள் அனைத்தும் கீழே கொட்டிவிடும். உலரும் செடிகளை மூங்கில் தடியால் அடித்தால், விதை கீழே உதிர்ந்துவிடும். பின்பு விதைகளைச் சேகரித்துச் சுத்தப்படுத்தி, மேலும் ஒன்றிரண்டு நாட்களுக்கு வெய்யிலில் உலர்த்திப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

விதை எள் எடுக்க, அறுவடை செய்த நன்கு முற்றிய எள் செடிகளை நேரடியாக வெய்யலில் உலர்த்தி, எள்ளினைச் சேகரிக்க வேண்டும். குவியல் முறையிலிருந்து எடுக்கப்படும் எள் விதைப்பதற்குச் சிறந்ததல்ல.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு, எள் உற்பத்தியைக் குறைந்தது இருமடங்காகப் பெருக்கி நல்லெண்ணெய் விலையைக் குறைக்குமாறு உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

டாக்டர் : உங்க மனைவிக்கு உடம்பு பலவீனமாயிருக்கு! இந்த டானிக்கை வாங்கிக் கொடுங்க

ஆசாமி : ஐயய்யோ! வேண்டாம் டாக்டர்! இப்பவே என்னால் சண்டை போட முடியலே......



39-ம் பக்கத்தில்

நேரு பிறந்த நாள் விழாக் காட்சிகள்.

(1 & 3) நேருவின் பிறந்த நாள் நவம்பர் 14-ஆம் நாள் தமிழகமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை மாநகராட்சி நேரு அரங்கத்தில் சிறுவர் அணிவகுப்பைக் (படம்-3) கண்டு களிக்க வந்த பெருந்திரளான மக்கள் கூட்டத்தின் மகிழ்ச்சிக்கு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கையசைத்து நன்றி தெரிவிக்கும் காட்சி. வேளாண்மைத் துறை அமைச்சரும், நகரத்தந்தையும் படத்திலுள்ளனர்.

(2) சென்னை, இராசாசி மண்டபத்தில் நடந்த புத்தக ஓவியக் கண்காட்சியில் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள்.

(4, 5, 6, 8) பல்கலைக் கழக நூற்றாண்டு அரங்கில் நடை பெற்ற இயல், இசை, நாடக விழா. (படம்-4) மெல்லிசை மன்னர் திரு. எம். எஸ். விசுவநாதன் இசைக் குழுவினரும் திரைப்படப் பாடகர்களான திரு. டி. எம். சவுந்தரராஜன், திருமதி பி. சுசிலா இன்னிசை விருந்தளிக்கின்றனர். (படம்-5) வெண்புரு நாடகத்தில் திரு. சண்முக சுந்தரம், கவிஞர் கண்ணதாசன். (படம்-6) கவியரங்கத்திற்கு தலைமை வகித்து முதல்வர் தலைமைக் கவிதை படிக்கிறார், (படம்-8) அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முதல்வர் பேருரை.

(7) புத்தக-ஓவியக் கண் காட்சியில் சிறுவர்கள் சூழச் சிரித்து மகிழும் முதல்வர்.

42-ஆம் பக்கத்தில்

(1) குழந்தைக்குச் சத்துணவு வழங்குகிறார் தொழிலாளர் பிற்பட்டோர் நல அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள்.

(2) நகரியக்குழு மகப்பேறு இல்லத்தினை, மேட்டூரில், முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைக்கும் காட்சி. மின்துறை அமைச்சர் திரு ஓ. பி. இராமன் அவர்களும் படத்திலுள்ளார்.

(3) பிரிட்டிஷ் கவுன்சிலின் தென்னிந்திய வட்டாரப் பிரதிநிதியான திரு. டெரிக்ஹக்ஸ், 11–11–1970 அன்று தமிழகக் கல்வி-பொது நல அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைச் சந்தித்து உரையாடினார்.

மூளை வைத்தியத்திற்குப் புதிய கருவி:

குழந்தைகள் மூளையில் துர்நீர் தேங்கி, தலை வீங்குவது, கண்பார்வை யிழப்பது, மூளை பாதிக்கப்படுவது போன்ற ஒரு நோயுண்டு. பெரும்பாலும் இந்நோய் பிறவியிலேயே ஏற்படுவதுண்டு. இதற்கான அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான மிக முக்கிய 'வால்வ்' வெளிநாட்டிலிருந்துதான் இதுவரை வாங்கப்படுகிறது.

தற்போது இந்தக் கருவியை இந்தியாவிலேயே செய்ய முடியுமென்று அனைத்திந்திய வைத்திய அறிவியல் நிலையத்தார் கண்டுபிடித்துள்ளனர். இந்நோயினால் பாதிக்கப்படும் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு இந்தக் கண்டு பிடிப்பு ஒரு அரு மருந்தாக அமையும்.

வண்ணப் படங்களில்...

(4) மரக்காணத்தில் சூணாம்பேடு நெடுஞ்சாலைப் பாலத்தினைப் பொதுப் பணி அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் திறந்து வைத்தார்.

(5) சேலத்தில் 5–11–1970 அன்று நடைபெற்ற வேளாண்மை—அரிசன நலக் கருத்தரங்கில் சிறந்த அரிசன நலப் பள்ளிக்கான கேடயத்தை அறநிலைய அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள் வழங்கிடும் காட்சி.

(6) கோவை மாவட்டத்தைச்சேர்ந்த சத்திய மங்கலத்தில் 15 ஆயிரம் நிலம், வீட்டு மனைப் பட்டாக்களைக் தமிழக முதல்வர் வழங்கினார். ஒரு குடுகுடுப்பைக்காரர் முதல்வரிடம் பட்டாப் பெறுகிறார்.

(7) அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை 9–11–1970 அன்று சென்னையில் தமிழக முதல்வர் துவக்கி வைத்தார். அது போழ்து, கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் கூட்டுறவு சிறப்பு மலரினை முதல்வருக்கு வழங்கினார்.

(8) பாலாறு குடி தண்ணீர்ப் பெருக்குத் திட்டத்தினை, தாம்பரத்தில் பொதுப்பணி அமைச்சர் 8–11–1970 அன்று துவக்கி வைத்தார்.

(9) நாமக்கல்லில், அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரியை முதல்வர் துவக்கிவைக்கிறார்.

(10) அனைத்துலக நிதி வாரியத்தின் துணைத் தலைவர் திரு. லாடிஸ் லாஸ்வான் ஹாஃப் மேன் தொழிலமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களை 13–11–1970 அன்று சந்தித்து உரையாடுகிறார்.

மையப் பக்கத்தில்

திருக்குற்றாலக் காட்சிகளும், தென்காசிச் சிற்பங்களும்.



அந்தச் சிறு கிராமத்தில்.... உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும், உண்மை மனிதர்கள் இருந்தார்கள்—சத்தியமும் சாந்தியும் அவர்களது நித்திய வாழ்வின் இரண்டு கால்களாகப் பணி செய்தன.

வீரமும் தீரமும் அவர்கள் இரண்டு கண்களாகக் காவல் செய்தன. உடம்பிலே வலிமை, உள்ளத்திலே எளிமை, உழைப்பிலே பெருமை, ஒற்றுமையிலே ஆசை, உபகாரத்திலே தாராளம், நெஞ்சிலே வீரம், நினைவிலே ஈரம்.

இத்தகைய கிராம மக்கள் வாழையடி வாழையாக வளர்ந்து அனுபவித்த பழம் பெருங் கலைகளை இன்னும் உயிரோடு காணுகிறோம்; கேட்கிறோம்; ரசிக்கிறோம்; மகிழ்கிறோம்.

பெருமை மிக்க உழவர் பெருமக்கள் பாரம்பரியமாக

வளர்த்த பெருங் கலைகளின் பழைய வடிவங்களை இன்னும் காணுகின்றோம். அவர்களது மழலைக் கீதங்களை இன்றும் ரசிக்கிறோம்.

வடிவமும், பொருளும் பழமையாக இருப்பினும் அதில் அடங்கியுள்ள ஜீவனுள்ள கலையம்சத்தின் கனிவு, என்றும் புதுமையானது; புதுமைக்கும் புதுமையானது.

பழமையின் அடித்தளத்தை வைத்துக்கொண்டுதான் புதுமையை வளர்க்கிறோம். முதல் ஆலமரத்தின் ஆதி விதையிலிருந்தே ஆயிரமாயிரம் ஆலமரங்கள் முளைக்கின்றன. மீண்டும் அதே சிறிய, பழைய விதைதான் புதிய மரத்துக்குக் காரணமாய் விளங்குகிறது. அதே போல் கலைகளில் பழமை, புதுமை என்பதில்லை. பயிர் நடுவதும் அறுப்பதும் பழமை என்று ஒதுக்கிவிட்டால் பயிர் வளர முடியாது. பழமையான முறைகளிலிருந்து புதிய நெறிகள் தோன்றுவது போல், நமது பழமையான கிராமீயக் கலை முறைகளிலிருந்து தற்காலத்திய பல்வேறு புதிய கலை அமைப்புகளும் தோன்றி உள்ளன.

நமது பழைய கலைகளையும், பண்பாடுகளையும் ஒழித்து விட்டால் புதிய கலைகள் வாழ முடியாது; வளர முடியாது. கலைகளின் பழைய உருவத்தை இன்றும் நமது கிராமங்களில் காண முடிகிறது.

பாவக் கறை படாத கிராமத்தின் இயற்கைச் சூழ்நிலையில் எழுந்து பரவும் இந்த இன்பக் கலையைச் சுவைத்து ரசித்து அனுபவிக்கும் மகாகவி பாரதியார் கிராமியப் பாட்டியல் பற்றிய தொரு பட்டியலையே நம்முன் வைக்கிறார்.

"காற்று மரங்களிடைக்
காட்டு இசைகளிலும்
ஆற்று நீரோசை அருவி
யொலியினிலும்
நீலப் பெருங்கடலெந்
நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே உதிக்கும்
இசையினிலும்
மானுடப் பெண்கள்
வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில்
ஊறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின்
இசையினிலும், நெல்லிடிக்குங்
கொற்றொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணமிடிப் பார்தஞ்
சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார்
பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள்
வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர்
கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு
வீணைமுதலா மனிதர்
வாயினிலுங் கையாலும்
வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும்
நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப்
பறிகொடுத்தேன் பாவியேன்".

என்று படம் பிடித்துக் காட்டுகிறார். இந்தக் கவிதையில் பொதிந்துள்ள கவியின் கனவு, இக்கலைகளை மக்கள் எல்லாரும் எப்படி ரசனைப் பார்வையோடு அணுக வேண்டுமென்று நமக்குச் சொல்லித் தருகிறதல்லவா?

இந்தக் கிராமியக் கலைஞர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். இன்று நகர்ப்புறத்துப் பெயர் பெற்ற நட்சத்திரங்களைப் போலவே அவரவர்கள் கலையில் அவரவர்கள் பாணியில் அவர்கள் ஆற்றல் மிக்கவர்கள். கிராமத்தில் இவர்கள் நட்சத்திரக் கலைஞர்கள். அவர்களை நாமும் நேரில் காண வேண்டும். கண்டால்தான் உண்மை புலப்படும்.

நகர மக்களைப் போல், கலை வேறு, காரியம் வேறு என்று கிராம மக்கள் பிரித்து வைக்க முடியாது. காரணம், அவர்களது உழைப்பு ஓய்வறியாதது. அவர்கள் காலம் மிகவும் அரியது—அவர்கள் நிமிட நேரத்தையும் வீணாக்காமல், நிலத்தில் பாடுபட்டால் தான், நிலம் விளையும்—பயன் பெருகும் — ஆயிரக்கணக்கான நகர மக்களுக்கு உணவளிக்க முடியும்.

வயலில் நாற்று நட்டபின் அதை அறுத்துக் களஞ்சியத்தில் சேர்க்கும் வரை நிலத்தை விட்டு அவர்கள் நகர முடியாது. எப்படி ஒரு வீட்டன்னை உலையில் அரிசியைப் போட்டுவிட்டு நடுவில் வேறு வேலை பார்க்க முடியாதோ, அதே போல் நிலத்தில் நடவு செய்துவிட்டால் அறுவடை முடியும் வரை வேறு எதிலும் விவசாயிகள் ஈடுபட முடியாது. அதனால் விவசாயப் பெருமக்கள் தங்கள் கலையை, தாங்கள் செய்யும் வேலையுடன் கூடவே இணைத்துக் கொள்ளுகின்றனர். பயிர்த் தொழிலில் பாடுபடும் பொழுது பாடும் இன்பத்தையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

பாமர மக்களின் இந்த உயிர்க் கலைகளை நாம் உயர்வு தாழ்வு பாராட்டாமல் போற்றி ஆதரிக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட கவிதையில் எதிரொலிக்கும் கவிஞனின் களிப்புமிகுந்த எழுச்சியுள்ளம் இதற்கான தூண்டுதல் போல அமையும் என்பதில் ஐயமில்லை.

தென்னாட்டின் வனப்புமிக்க கிராமச் சூழ்நிலையில் வானளாவி முழங்கும் கிராமியப் பாடலைக் கேட்போம்.

"ஆத்துவெள்ளம் நாளைவரத்
தோத்தங் காணுதே—மலை
யாளமின்னல் ஈழமின்னல்
சூழமின்னுதே
நேத்தும் இன்றும் கொம்பு
சுத்திக் காத்தடிக்குதே-நல்ல
நீர்ப் படும்சொரித்தவளை
கூப்பிடுகுதே".

பழஞ் சிறப்புமிக்க கிராமியப் பாடல் இது. இந்த கிராமியப் பாடல்முறையை ஒட்டி ஒரு பட்டணக்கவிஞர் பாடும் மற்றொரு பாட்டினைக் கேட்போம். இப்பாட்டு காவேரி நதியைப் பற்றியதாகும்.

"சத்தியத்தைப் போலஎங்கள்
காவேரி
இத்தரையைக் காவல்செய்யும்
காவேரி
புத்தம்புதுப் பொன்னியம்மா!
காவேரி-உன்
சித்திரமே சிங்காரப்
பூஞ்சோலை
கம்பனுக்குக் கவிதருவாள்
காவேரி-எம்
கண்களுக்கு ஒளிதருவாள்
காவேரி.

மேலைமலைக் காற்றரசன்
பூசைசெய்வான்-காவேரிக்கு
மேகராஜன் ஓடிவந்து
குடைபிடிப்பான்
கவிராசர் நூலாடை போர்த்
திடுவார்-காவேரியைக்
கடலரசன் கைகூப்பிக்
கும்பிடுவான்.

கோயில்குளம் கோட்டை
வாசல் கொத்தளங்கள்-
காவேரி—எம்
தாயின்அருள் தந்தபெரும்
சீதனமாம்
ஆயகலைப் பாட்டோடு
நாட்டியமும்-எம்
அன்னைபாடும் தாலாட்டுப்
பாடல்களாம்!

ஆடிமாதம் ஓடிநாங்க நாத்து
நட-காவேரியே
தேடிவந்து காத்தருளும்
தேவியம்மா
ஏரிகுளம் எல்லாம்உன்
கருணைபெற-காவிரியே
வாரிவாரி பாரிபோல
தாராய்நீ"

இந்தியாவின் ஆத்மா கிராமங்களில் தான் இருக்கிறது என்பது அண்ணல் மகாத்மாவின் நம்பிக்கை. இந்த ஆத்ம ஜோதியை அணையாமல் காப்பது நமது உழவர் பெரும்படை. பட்டின வாசிகளைப் பட்டினிவாசிகளாக்கி விடாமல், உணவு படைக்கும் உழவர் பெருமக்களின் திருவிழா தான் **பொங்கல் பெருவிழா.** அன்று நாடெங்கும் உழவர் பெருமக்கள் மகிழ்ச்சி கொள்ளும் திருநாள். ஆண்டு முழுவதும் அவர்கள் செய்த உழைப்பின் பலனைக் கண்ணாரக் கண்டு களிக்கும் நல்ல நாள். இவ்வுலகம் செழித்து ஓங்க வேண்டுமானால் விவசாயப் பெருமக்கள் செழிப்புற வேண்டும். ஒரு நாட்டின் அமைதியும் பண்பாடும் பெருக வேண்டுமானால் பயிர்த் தொழில் பெருக வேண்டும். காவேரியின் வளமான இயல்புகள் பெருக வேண்டுமானால் விவசாயம் செழித்து ஓங்கவேண்டும். பணியில் ஈடுபடும் பொழுது கூடப் பக்தன் மனை வழிபடுதல் போல விவசாயப் பெருமக்கள் தமது அன்றாட அலுவல்களுடன் கலைகளையும் இணைத்துக் கொள்ளுகின்றனர்.

அங்கே வேலையோடு கீதம் கேட்கும். உழவோடு ஒலி முழங்கும். நடவோடு இசை நடக்கும். ஏற்றத்தோடு ஏழிசை இயங்கும். ஆயிரம் மந்தை மேயும். அங்கே ஆயன் குழல் இசை ஊறும். ஆம். பரந்த மேடையே அவர்களது கலை அரங்க மண்டபம். ஆகாயமே அணிவேய்ந்த அழகு விதானம். சூரியனும் சந்திரனும் சுடர்கின்ற நட்சத்திரங்களும், அந்த விதானத்திலே ஒளிவீசும் விளக்குகள். கரையேற்ற காடும், மலையும், நதியும் வனமும் அவர்களது கிராமீய அரங்கின் காட்சி ஜோடனைகள்.

பயிர்த் தொழிலிலும் பாட்டு; பண்ணை வயலிலும் பாட்டு; தோப்புத் துரவிலும் பாட்டு; வாய்க்கால் வரப்பிலும் பாட்டு, வண்டிப் பாட்டு, பரம்படிக்கும் பாட்டு-வரம்புயர்த்துப் பாட்டு, மடை திறக்கும் பாட்டு, நீர் பாய்ச்சும் பாட்டு-நாற்றுநடும் பாட்டுகளை எடுக்கும் கானம், கதிர் பிடிக்கும் பாடல், அறுவடைப் பாட்டு, களமடிக்கும்

கிராமியக் கலைகள்

கவிஞர் எஸ்.டி.சுந்தரம்

கலையுணர்ச்சி என்று கூறும் பொழுது ஏதோ மேட்டு வீட்டு மாடியில் வாழும் ஒரு சில சுகவாசிகளுக்கே உரிய ஆடல்-பாடல், திரைப்படம் முதலியவை தான் கலை என்று எண்ணிவிடக் கூடாது. கலை நுணுக்கங்களை நன்கு அறிந்து புகழ் பெற்ற ஒரு கலைஞர், மக்கள் நெருக்கம் நிறைந்த நகரங்களில் ஒரு சில பிரமுகர்களின் முன்னிலையில் ஆடிப் பாடி அவர்களை மகிழ் விப்பதுபோல் நடிக்கலாம். பிரமுகரும் புரிந்து கொண்டது போல் தலையாட்டி ரசிக்க முயலலாம்.

ஆனல் எங்கோ ஒரு மலையோரத்திலே, ஏதோ ஓர் ஆற்றங் கரையிலே, ஊர் பேர் தெரியாத ஓர் ஏழை ஆடு மேய்ப்பவன் ஊதும் அபசுரமற்ற அந்த வேய்ங் குழலின் தூய்மையான கீதத்தை வறட்டு நகரங்களில் கேட்கவே முடியாது. அதில் ஓங்கி எழும் ஒலி அலைகளும் இயற்கையால் உந்தப்பட்டு எழுந்த இதய கீதமேயாகும். ஆக, பண்பாடும், கலையுணர்வும், பண்டிதனுக்கு மாத்திரம் சொந்தமல்ல. பாமரனுக்கும் இதில் ரசனையுண்டு, பங்குண்டு.

கிராமங்களில் வாழும் கோடான கோடி ஏழை எளிய மக்களுக்கும் கலையுணர்ச்சி உண்டு; அழகுணர்ச்சி உண்டு. இன்னும் சொல்லப் போனல் நாகரிகம் அடைந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நகர வாசிகளுக்கு இருக்கும் கலையுணர்ச்சியை விட, கிராமத்தையே நம்பி நிலமகளின் உண்மைப் புதல்வராக வாழும் அந்த ஏழையின் கலையுணர்ச்சி தூய்மை வாய்ந்தது; கள்ளங் கபடம் அறியாதது. பச்சைக் குழந்தையின் பரிசுத்தமான சிரிப்பைப் போன்றது. நமது கிராம மக்கள் போற்றி வளர்க்கும் சிறந்த கலைகளுக்குப் பெரிதும் விளம்பரம் இல்லாமலிருக்கலாம்; ஆனல் உண்மையின் எளிமை ஏராளமாக இருப்பதைப் பார்க்கிறோம்.

குழந்தையின் சிரிப்பிலே ஓர் அளவு இருக்காது; ஆடம்பரம் இருக்காது. சிரிப்புக்கு இலக்கணம் சொல்லுகிறார்களே சிலர்—குறுநகை—மென்னகை--புன்னகை—நன்னகை — வெண்ணகை—வெறிநகை— என்று இத்தகைய பாகுபாடுகளைப் பச்சைக் குழந்தையின் சிரிப்பிலே காண முடியாவிட்டாலும்—எல்லையில்லாததொரு பேரன்பின் தெளிவைப், பாசத்தின் காந்த ஒளியைக் குழந்தையின் சிரிப்பிலே காணலாம்.

ஒரு ஜீவநதியின் முதல் ஊற்றைப் போன்றது குழந்தைகளின் குமிழ்ச் சிரிப்பு. அறிவுள்ள மனிதன் அமைத்துள்ள ஆயிரமாயிரம் பல்கலைக் கழகங்களில் கற்ற தத்துவங்கள் எல்லாம் கூடக் கொண்டு வர முடியாத மன நிம்மதியைக் கொண்டு வரும் சர்வசக்தி வாய்ந்த ஒரு படைப்புக் கலை தான் குழந்தையின் கொள்ளை மலர்ச் சிரிப்பு.

அதைத்தான் மகாகவி பாரதி, 'உன் முல்லைச் சிரிப்பாலே என் மூர்க்கந் தவிர்த்திடுவாய்' என்று தன் மெய்ப் பொருள் அனுபவத்தைக் கூறுகிறன்.

அந்தக் குழந்தைச் சிரிப்புக்குள்ள அதே சக்தியைத் தன்னகத்தே கொண்டு கள்ளங் கபடமற்ற கிராம மக்களின் மனங்களுக்கு அமைதியை வாரி வாரி வழங்கும் வளர்கலையூற்றுக்களாக விளங்குகின்றன நமது கிராமியக் கலைகள். அவற்றையே மக்கள் கலைகள் (Folk Arts) என்று அழைக்கிறோம்.

அன்று—

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன், அங்கே முறையான நாடகக் கொட்டகைகள் இல்லை; —மூலைக்கு மூலை முணகும் ரேடியோக்கள் இல்லை—சிந்தையைத் துளைக்கும் சினிமாக்கள் இல்லை. பார்ப்பவன் நெஞ்சைப் பிழியும் பேசும் படங்கள் இல்லை. பூமி அதிர்ச்சி உண்டாக்கும் பூகம்ப நடனமில்லை. காதுகளை அதிர வைக்கும் கச்சேரி மேடைகள் இல்லை.

பாடல்; இப்படிப் பாட்டாளிகள் வாழும் கிராமம் முழுவதும் ஒரே பாட்டு மயமாக முழங்கும்.

அறுவடை முடிந்ததும் திருவிழாக்கள் துவங்கும். தை மாதம் வரை கிராம மக்களின் உழைப்போடு இணைந்திருந்த கலை உணர்ச்சி, மாசி, பங்குனி மாதங்களில் இறைவன் திருவிழாக்களோடு சங்கமமாகி ஆடத் தொடங்கி விடுகின்றது.

ஆம். அறுவடை வரையில் பாடல் மயமாய் இருந்த மக்கள் கலை இப்பொழுது ஆடல் மயமாக மாறிவிடுகிறது. இசைமயமாயிருந்த கலை அறுவடை முடிந்ததும் கூத்து மயமாக மாறுகிறது.

எப்போதும் இயங்கிக்கொண்டே இருக்கும் சுறுசுறுப்பான சுபாவம் படைத்தவர்கள் அல்லவா இவர்கள். ஆதலால் உழவன் உழைப்பியக்கம் முடிந்ததும், எல்லையற்ற பொருளின் இயக்கமாகத் தங்களது கலைகளை மாற்றிக் கொள்ளுகிறார்கள். வயிற்றுப் பசி தீர்க்கும் அறுவடையை முடித்து உழவர் பெருமக்கள் உயிர்ப் பசிக்குரிய விடை தேடிக் கடந்திருக்கும் பொருளைப்பற்றிக் கருத முற்படுகிறார்கள்.

இந்த மூன்று மாதங்களில்(மாசி முதல் சித்திரை வரை) கிராமங்களில் எங்கும் வாலிபர்கள் மஞ்சி விரட்டு முதலிய வீர விழாக்களை நடத்துவார்கள். அவை முழங்கும் வெற்றிப் பறையுடன் தொடங்கும். கிராமங்களில் இருக்கும் சிறுசிறு கோயில்கள் புதுப்பிக்கப்படும். அந்தக் கோயில்களில் பொங்கல் அடுப்பு சூடேறி ஒளி வீசும். குமரிப் பெண்கள் கும்மி கொட்டுவர் - கோலாட்டம் போடுவர் - கூட்டமாக நடனமாடுவர், அதற்குப்பின் நடுத்தர வயதினர் -குறிஞ்சி நிலக் கடவுள் குமரனுக்குக் காவடி எடுப்பர். ஆயிரமாயிரம் காவடிகள் அணி அணியாகக் கிளம்பி தாளந் தவறாத அற்புத நடனத்தைத் துவக்கும். அந்த அமர கானத்தின் சூழ்நிலையில் ஆகாயமளாவி எழும் ஆனந்தக் கீதங்களுக்குத்தான் எத்தனை வடிவங்கள், எத்தனை உத்திகள். நொண்டிச் சிந்து, ஆனந்தக் களிப்பு, காவடிச்சிந்து, தையாண்டி மேளம் முதலிய நூற்றுக் கணக்கான முறைகளில் எத்தனை எத்தனை லயக் கோலங்கள், இசை நுட்பங்கள்! இனிய நுணுக்கங்கள்! ஆயிரக்கணக்கான

காவடிகள், மயில் தோகை விரித்து மலையேறிச் செல்லும் பொழுது அம்மலையே மயிலுருவம் கொண்டு ஒரு பெரிய மலை மயிலாக மாறி ஆடுவது போன்ற தோற்றம் ஏற்படும்.

பொங்கலில் அம்மனுக்குக் கரகம் எடுப்பார்கள்-அம்மன் கரக ஆட்டத்தின் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்தாலும் சலிக்காத பேரின்பமாக இருக்கும். அதன் பாடலில் இன்பத்தின் பேரெழுச்சி உண்டாகும். மழை பொழியவும் சுகம் பெருகவும் மாவிளக்கு ஏற்றி வரங் கேட்கும் கரகப் பாடல்கள், சக்திக் கவிதைகள் ஆகும். தேர்த் திருவிழாக் காலங்களில், புரவி நாட்டியம், காளை நடனம், மயிலாட்டம், ஒயில் கும்மி, சிலம்பாட்டம் முதலியன நடைபெறும்.

அடுத்தது வில்லுப்பாட்டு. இது கிராம மக்களுக்காக நடத்தப்படும் சரித்திர வகுப்பு என்று கூறலாம். அரிச்சந்திரன் கதை முதல் அந்தத் தொகுதி சட்டசபை வேட்பாளர் சங்கதி வரை, கட்டபொம்மன் கதை முதல் காந்தி மகான் கதை வரையில் வில்லுப்பாட்டில் பாடப் பெறும். விரிவுரைகளும், விளக்க உரைகளும் இரவு முழுவதும் நடக்கும். இதயம் சலிக்காமல் மக்கள் கேட்டுச் சுவைப்பார்கள்.

அதற்குப் பின் தெருக்கூத்து. இது தான் நாடகக் கலையின் ஆதி உருவம். இவர்களுக்கு ஒலி பெருக்கி ,இரவல் குரல் எதுவும் தேவையில்லை. அவர்களே பாடுவார்கள். முன்பு எல்லாம் இவர்களது குரல் நீள் தொலைவுவரை கேட்கும். இப்பொழுது கூட ஒரு மைல் சுற்றளவுக்குக் கேட்கும்படி கணீரென்று குரல் சுருதியோடு சேர்ந்து பாடும் கூத்தபிரான்கள் இருக்கிறார்கள். பார்ப்பதற்குக் கூட்டம் இருந்தால் போதும்-விடிய விடியக் கொட்டி முழங்கும் கோல எழில் கூத்து நடக்கும். அடேயப்பா! ஒவ்வொரு அங்க அசைவிலும், நடிப்பின் அஸ்திவாரத்தையும் சிகரத்தையும் போட்டுக் காண்பிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். இவைகளையெல்லாம் பிரதிபலிப்பதைப்போல் மற்றொரு பக்கம் பொம்மலாட்டம் நடைபெறும். உலக ஆட்டத்தின் உணர்வின் துடிப்பாக விளங்கும் பொம்மலாட்டம், கலையின் பல கிளைகளில் உருவாகும். இன்னும் எத்தனையோ வகையான இன்பக் கலைகளைக் கிராம மக்கள் வாழையடி வாழையாக வளர்த்துக் காப்பாற்றுகிறார்கள்.

இக்கலைகளின் பெருமைக்கு மேலும் பெருமை செய்யுமுறையில் தமிழரசின் ஆதரவில் இயங்கும் தமிழ் நாடு சங்கீத நாடகச் சங்கம் 1967 தைப் பொங்கலில் மூன்று நாட்கள் பொங்கல் திருவிழாவினை உழவர் திருவிழாவாகக் கிராமியக் கலைகளின் திருவிழாவாகவும் நடத்தியது. மிகப் பெரிய கலைஞர்கள் டில்லியிலிருந்தும் மற்ற ஊர்களிலிருந்தும் வந்து சுவைத்துப் போற்றினர்கள்.

கிராமியக் கலைஞர்களுக்கு அரசின் சார்பில் சிறப்பு விருதுகளையும் சங்கீத நாடக சங்கம் தகுந்த கலைஞர்களுக்கு வழங்கிச் சிறப்புச் செய்கிறது.

கிராமியக் கலைஞர்களுக்கு மேலும் மேலும் ஆதரவு தருவது நமது கடமை.



வெள்ளைப்பூண்டைச் சாதாரணமாக எல்லா இல்லங்களிலும் அதிலும் பெரும்பாலும் அசைவ உணவுச் சமையலுக்குப் பயன்படுத்துவது வழக்கம். ஆனால் பலருக்கு வெள்ளைப் பூண்டின் சத்தும், மருந்துச் சக்தியும் தெரிந்திருக்காது.

சளி பிடிப்பதன் அறிகுறி தென்பட்டால், பல்லுக்கு இடையில் கன்னத்தின் இரு புறமும் சிறு துண்டு பூண்டினை ஒதுக்கிக்கொண்டால் சில மணி நேரங்களில் சளி பறந்துவிடும்.

இரத்த அழுத்தம் அதிகம் உள்ளவர்களுக்கு அழுத்தத்தைக் குறைக்கிறது. இரத்த அழுத்தம் மிகக் குறைவாக உள்ளவர்களுக்கு அதிகப்படுத்துகிறது.

பூண்டை மலமிளக்கியாகப் பயன்படுத்தலாம். உணவு நன்றாகச் சீரணமாக அது உதவுகிறது.

முகப் பரு உள்ளவர்கள் முகப் பருவில் சிறு துண்டு பூண்டைப் பல முறை தடவினால் முகப் பரு மறையும். தழும்பும் இருக்காது.

பூண்டில் உடம்புக்குத் தேவையான கலோரி சத்து அதிகம் உள்ளது. ஒரு பூண்டில் 14 கலோரி சத்து உள்ளது. புரதச் சத்து 6.7 சதவீதம் உள்ளது.

ஆயுர்வேத—சித்த மருந்து வகைகளில் பூண்டு பெரிதும் பயன்படுத்தப் படுகிறது. தினமும் ஒரு பூண்டு பயன்படுத்தி வந்தால் உடல் கோளாறு, மனக் கோளாறுகளை அது விரட்டிவிடும்.



வேலூர், கல்லூரி விரிவுரையாளர் கல்லூரி முடிந்ததும் நேராக வந்தார், கற்பகத்தைத் தேடி!

ஆந்திர மாநிலத்திலுள்ள குண்டக்கல் பகுதியைச் சேர்ந்த ஒரு குழுவினர், உறவினர் ஒருவரை வேலூர் மருத்துவமனையில் பார்த்துவிட்டு நேராகக் கற்பகத்தைப் பார்க்க வந்து விட்டனர்.

அமெரிக்க சமாதானக் குழுவைச் சேர்ந்த இளைஞர் பார்க்கர் கற்பகத்திடமே ஐக்கியமாகி விட்டார்.

இவர்களை மட்டுமல்ல ! நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்களைக் கவரும் கற்பகம், வேலூரில் நடுநாயகமாக உள்ள சிறப்பு அங்காடி.

மற்ற சிறப்பங்காடிகளுக்கும் இதற்குமுள்ள வித்தியாசம், பிற அங்காடிகளில் கடைகள் உட்புறங்களிலிருக்கும். இங்குள்ள கடைகள் நாற்புறமும் சாலையைப் பார்த்தபடி வெளிப்புறமாக உள்ளன. பலன் ? காற்றோட்டமுள்ள அமைப்பு ; சாலையில் வருவோரைக் கவர்ந்திழுக்கும்

தன்மை. நாற்புறத்தில் எங்கிருந்து வந்தாலும், ஏதாவது ஒரு பகுதியைப் பார்க்கக்கூடிய வசதி.

முட்டை முதல் பரிசுச்சீட்டு வரை இங்குக் கிடைக்காத பொருளே இல்லை எனலாம். மொத்தம் 16 பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இந்த அங்காடியின் கீழ்ப் பகுதியில் மருந்துகள், பிளாஸ்டிக் பொருட்கள், மளிகை சாமான்கள், மின்சாரப் பொருட்கள், சைக்கிள்கள், புத்தகங்கள், மேஜை, நாற்காலிகள், எண்ணெய்க் கடைகள் உள்ளன.

மாடியில் துணிக்கடை, எவர் சில்வர்- அலுமினிய- பித்தளைப் பாத்திரங்கள், பொம்மைகள், தைத்த சட்டைகள், உடுப்புகள், செருப்பு, தோல் பெட்டிகள் ஆகியவை உள்ளன.

''தேன் இருக்கிறதா?'' என்று கேட்டார் ஒரு அம்மையார் !

'' காஷ்மீர் தேன் வேண்டுமா? குடகுத் தேன் வேண்டுமா ? '' என்று ஆர்வத்துடன் எடுத்துக் காட்டினார் விற்பனையாளர்.

மற்றொரு பக்கத்தில் ஈராக்கிலிருந்து தருவிக்கப்பட்டு பிளாஸ்டிக் தாளில் சுற்றப்பட்டு முத்திரையிடப்பட்ட பேரிச்சம் பழங்களை விலைக்கு வாங்கினார் ஒரு வாடிக்கையாளர்.

மளிகைச் சாமான்கள் அனைத்தும் கண்ணாடிபோல் வெளியே தெரிய, பிளாஸ்டிக் பைகளில் வைக்கப் பட்டுள்ளன.

'' அம்மா ! தாகமா இருக்கும்மா '' என்று அடம் பிடிக்கிறான் சிறுவன்.

'' காபி வேணுமா ? ஐஸ்கிரீம் வேணுமா ?'' என்று தாய் அன்பு ததும்பக் கேட்கிறார். ஆம். இரண்டும் அங்கே கிடைக்கும். ஐஸ் கிரீமிற்காகத் தனிப்பகுதியும், ஓர் உணவு, சிற்றுண்டி விடுதியும் அங்கே உள்ளன.

நாளொன்றுக்கு 17,000 முதல் 20,000 ரூபாய் வரை விற்பனை செய்கிறது, இந்த அங்காடி. கடந்த மாதத்தில் தீபாவளியையொட்டி ஒரே நாளில் 43,000 ரூபாய்க்கு விற்பனை ஆகியுள்ளது. தீபாவளிப் பட்டாசு மாத்திரம் 17 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளது, சென்ற மாதத்தில்.

இங்கே அதிகமாக விற்பனை செய்யும் பகுதி வீடுகளுக்குத் தேவையான மளிகைப் பொருள்கள், அலங்காரப் பொருட்கள் விற்கும் பகுதிதான். இருப்பினும் பலவித வண்ணத்தில் பளபளப்பாகக் காட்சியளிக்கும் பிளாஸ்டிக் பொருட்களைப் பார்த்த எவரும் எதையாவது வாங்காமல் வருவது கடினமே ! சிறுவர்- சிறுமியரைக் கவரும் பொம்மைகளில் தான் எத்தனை விதங்கள் ! பொம்மைகள் மட்டுமா ? சிறுவர்களின் அறிவை வளர்க்கக் கணக்குப்போடும் புதுமையான விளையாட்டுச் சாதனங்கள் எத்தனை எத்தனை அங்கு உள்ளன!

துணைவியாருடன் அங்காடிக்கு வந்த விரிவுரையாளர் குருசிங்கிடம் ''நீங்கள் இங்குதான் பொருட்கள் வாங்குவது வழக்கமா'' என்று கேட்க, ''ஆமாம்'' எனது இல்லம் ஒரு மைல் தொலைவிலுள்ளது, இருப்பினும் பெரும்பாலான பொருட்களை இங்குதான் வாங்குகின்றேன் '' என்று பதிலளித்தார்.

காரணம், ''இங்கு நம்பிக்கையோடு வாங்கலாம். குறைந்தவிலையில் தரமான, சுத்தமான பொருட்கள் கிடைக்கின்றன. அதோடு கூட்டுறவு முறையில் நடக்கும் இந்த அங்காடியை வரவேற்க வேண்டியது, ஆதரிக்க வேண்டியது நமது கடமையல்லவா?'' என்றார் விரிவுரையாளர்.

குறைந்த விலையாக இருப்பதற்குக் காரணமென்ன ?

சிறப்பங்காடியின் பொது நிர்வாகி திரு. கே. நடராஜன் இதற்குச் சிறப்பாகத் தெளிவாக விளக்கம் தந்தார்.

''புளி முதல் பிளாஸ்டிக் வரை எல்லாப் பொருட்களையும் நாங்கள் அவை உற்பத்தியாகுமிடத்திலேயே வாங்குகிறோம். எடுத்துக் காட்டாக மிளகாய் வற்றலை இராமநாதபுரத்திலிருந்தும், புளியை மைசூரிலிருந்தும், தனியாவை குண்டூரிலிருந்தும் வாங்குகிறோம். பிளாஸ்டிக் பொருட்கள், மருந்துகள், பொம்மைகள் முதலியவற்றை, அவற்றின் தயாரிப்பாளர்களிடமிருந்தே மொத்தமாகப் பெறுகிறோம்.

பருப்பு வகைகளையும், மற்றும் பல பொருட்களையும் எங்களுக்குத் தேசியக் கூட்டுறவு உபயோகிப்போர் கழகமும், மாநிலக் கூட்டுறவு உபயோகிப்போர் கழகமும் மொத்தமாக வாங்கித் தருகின்றன. எனவே விலைமலிவாக இருக்கிறது. சுத்தமாகத் தரமாக இருப்பதற்குக் காரணம், தரமான பொருட்களையே வாங்குகிறோம். அத்தோடு வாங்கும் பொருட்களைச் சுத்தம் செய்து வைத்திருக்கிறோம் '' என்று விளக்கினார், பொது நிர்வாகி.

மாதம் சுமார் ரூபாய் நாலரை லட்சத்திற்கும் ஆண்டுக்குச் சுமார் 50 லட்சமளவிலும் விற்பனை செய்துவரும் இந்தச் சிறப்பங்காடி, லாபத்துடனேயே நடைபெறுகிறது என்று அவர் பூரிப்புடன் குறிப்பிட்டார்.

அதிக அளவுப் பொருட்கள் வாங்க விரும்புவோருக்கு மூன்று சக்கர சைக்கிள் வண்டிகள் மூலம் வீடுகளில் விநியோகம் செய்யும் திட்டத்தையும் விரைவில் அமல் படுத்த இருக்கின்றனர்.

மாலை ஆறு மணி : அங்காடி பொங்கி வழிகிறது, பொதுமக்கள் கூட்டத்தால். முகமலர அகமலர ஒவ்வொரு கடையாக ஆடவரும் பெண்டிரும், சிறுவர்களும் சுற்றிவந்து, ஒவ்வொரு பொருளாகப் பார்த்து வாங்குவது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. ஆமாம்! கற்பகத்தை நாடிச் சென்று பொருட்கள் வாங்குவது, இன்பமான லாபமான ஒரு பொழுதுபோக்கு.

841

இவ்வளவு அமோக விளைச்சலுக்கு உதவியது எது?

புத்திசாலியான விவசாயி விவேகமாகத் தேர்ந்தெடுத்த ஒர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்

விஷயமறிந்த விவசாயிகள்
பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும் நம்பகமான ஒர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகளையே கேட்டு வாங்குகிறார்கள்.

ஈடு இணையற்றது என்று புகழ் பெற்ற 'மானேபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்டிரிப்யூகல் பம்புகளையும் **பெஸ்ட்** அளிக்கிறது.
ஒர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படுபவை.
விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப்பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது, **பெஸ்ட்!**



பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.
(ஸ்தாபிதம் : 1879)
13/15, நார்த் பீச் ரோடு, சென்னை-1
தமிழ் நாட்டில் கிளைகள்:
6/434, திருச்சி ரோடு, கோயமுத்தூர்.
49-D, மதுரை ரோடு, திருச்சி.1

Focus.BC.192 Tam

மேல்துண்டைத் தலையிலே கட்டிக் கொண்டு, தோளிலே நனைந்த மண்வெட்டியோடு, உழைத்துக் களைத்துப் போன சோர்வுடன் முற்றத்தில் வந்து நின்ற நாச்சிமுத்துக், கிழவன், வீட்டை ஏறிட்டுப் பார்த்தான்.

அவனே பாடுபட்டுக் கட்டிக் கொண்ட கெட்டிக் கட்டடம். முன்பக்கம் இருமருங்கிலும் திண்ணைகளுக்கு மேல் ஓட்டுச் சாய்ப்பு; தலைவாசல் கதவு ஒருக்கணித்திருந்தது.

ஆயாசத்தோடு படிகளில் ஏறி, நீள அகலமான வலது பக்கத்துத் திண்ணையின் மூலையில் மண்வெட்டியை வைத்து விட்டு, தலைத்துணியை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்துக் கொண்டே ஓரமாகக் கிடந்த பலகைக் கட்டிலிலே உட்கார்ந்தான் கிழவன்.

தோட்டத்திலே இல்லையென்றால், கிழவனை இந்தத் திண்ணையிலேதான் பார்க்க முடியும். சற்றுப் பாதுகாப்பாகத் தெருவின் பக்கமாக மூங்கில் தட்டி அடைப்பு இருக்கிறது.

உள் பக்கமாகச் சுருட்டிக்கட்டியிருந்த சாக்குத் திரையை அவிழ்த்து விட்டு, அலுப்போடு கட்டிலிலே படுத்துக்கொண்டான் கிழவன். ஒன்றுமே வேண்டாம், இப்படியே கண்ணயர்ந்தால் போதும்போலிருந்தது அவனுக்கு. ஆனால் கண்களை மூடும் போது, கவலைகளே வந்து மோதுகின்றன.

இப்பொழுதெல்லாம் மகன் வடிவேலுவை நினைக்கும்போது, கிழவனுக்கு நிம்மதியே இருப்பதில்லை.

உள்ள விவசாயத்தைப் பார்க்கச் சிறுவயதிலிருந்து உடம்பு வளையாமலே போய் விட்டது. பொழுது விடிந்ததிலிருந்து அடையும் வரையிலும் வடிவேலுவுக்கு எத்தனையோ ஒன்றுக்கும் உதவாத வேலைகள் இருந்து கொண்டே இருக்கும். மடிப்புக் கலையாமல் உடுத்திக்கொண்டு, இரண்டு மைல் நடந்து சென்று டவுனில் காபி குடிக்க வேண்டும். அப்புறம் அங்கே நாலு பேரோட குந்தி, ஊர் விவகாரம், நாட்டு நடப்பையெல்லாம் பேசித்தீர்க்க வேண்டும். இது, நாளைக்குச் சோறு போடப் போகிறதா ?

கிழவன் தனியாளாகவே நின்று பாடுபட்டுத் தேடிக் கொண்ட புன்செய்யில், சர்க்காரிலிருந்து கடனை வாங்கிக் கிணறு வெட்டி, தண்ணீர் இறைவைக்கு மின்சார மோட்டாரும் போட்டு, இன்றைக்கு முப்போகம் விளையும் தோட்டமாக, போன வருடமே ஒரே தவணையாகக் கடனையும் அடைத்து, சொத்து வில்லங்கம் இல்லாமல் இருக்கிறது. கிழவனது மூச்சு இருக்கும் வரையிலும் இந்தக் கட்டுக் கோப்புக் குறையாமலே இருக்கலாம். அதன்பிறகு, பிறந்த மகன் இதையெல்லாம் கட்டிக் காத்துக் கொள்ளப் போகிறனா ?

நல்ல காலம்.

வடிவேலுவுக்கு ஒரே மகள் செண்பகவல்லி.

இருக்கும் நிலத்தில் பாடுபட்டு, இருப்பது கரையாமல் பாதுகாக்கும் உழைப்பாளிக்குப் பேத்தியைக் கட்டிக்கொடுத்துவிட்டால் நிம்மதியாகக் கண்களை மூடலாம்.

பொழுது இருட்டிவிட்டது.

படுத்த படியே தலையைத் திருப்பி, வாசல் பக்கமாகப் பார்த்தான் கிழவன்.

வீடு இப்படியா இருண்டு கிடக்க வேண்டும்! விளக்கை ஏற்றிவைக்காமல் இந்தப் பெண் செண்பகம் உள்ளே என்ன செய்கிறாள் ?

கிழவன் ஒருச்சாய்ந்து படுத்துக் குரல் கொடுக்க முற்பட்ட போது, பேத்திப் பெண்ணான செண்பகவல்லியே தலை வாசல் கதவைத் திறந்து வெளியே வருவது நிழற்படமாகத் தெரிந்தது. அதே சமயம், வாசற்படியோரமாக முற்றத்தில் நின்று, யாரோ செண்பகம் என்று கிசுகிசுத்த குரலில் அழைப்பதும் கேட்டது.

கிழவன் நிமிர்ந்து பார்த்தான்.

செண்பகவல்லி, கிழவன் இங்கே கட்டிலில் படுத்திருப்பதை அறியாதவளாக, திண்ணையோரமாகப் போய் நிற்கிறாள்.

கிழவனுக்குப் புரிந்து விட்டது.

மேலத்தெரு கன்னையாவின் இளைய மகன் சுப்பையா, இன்றைக்கு வாசலுக்கே வந்து விட்டான்.

" உன்னைப் பாக்குறதுக்கு எத்தனை தடவை இந்தத் தெரு வழியா வந்துக்கிட்டிருக்கேன். வாசலுக்காவது வந்து நிக்கிறியா ? " என்று கேட்கிறன் அவன்.

" திண்ணையிலே வந்து நின்னு தாத்தா சத்தம் போடுவாரு! இன்னம் தாத்தா தோட்டத்திலே யிருந்து வரலே" என்கிறள் செண்பகம்.

" உங்கம்மா ?"

" கடைக்குப் போயிருக்காங்க ",

" செண்பகம் " என்கிறன் அவன்.

" என்ன "

அவன் கவலையுடனே தான் சொல்கிறன்.

தாகக் கேள்வி. அவன் பெற்ற மகன் தங்கராசுவுக்குப் படிப்பும் ஏறாமல், அவன் வேலை செய்யவும் பழகாமல், ஒதிய மரமாகவே வளர்ந்து விட்டான். இன்றைக்கு இங்கே ஊருப்படியாக இருக்கும் தோட்டம் கண்ணுக்குத் தெரிந்து விட்டது பெருமாள்சாமிக்கு. மகனை முன்னால் வைத்துக் கண்ணி வைத்து விட்டான்.

இங்கே பிறந்த மகன் வடிவேலு, தோட்டத்திலே கருத்தோடு பாடுபடுவான் என்ற நம்பிக்கையும் இல்லாதிருக்கும் போது, அவனது ஒரே மகளுக்கு வரப்போகும் மருமகனாவது, பாடுபடுகிறவனாக இருக்க வேண்டாமா?

இதையெல்லாம் நினைத்துப் பார்க்க வடிவேலுவுக்குத் தெரியாது. எட்டுத் திசையிலும் சுற்றி வருகிறவன், வீட்டிற்குள் நுழைந்துவிட்டால், பெண்டாட்டியின் கைக்குள் அடக்கமாகி விடுவான்.

அவளுக்கிருக்கும் அவசரமே வேறு. இந்தச் சொத்துக்களைக் கட்டியாளத், தனது தம்பியை இங்கே கொண்டுவந்து உட்கார வைப்பதிலேயே முனைந்து நிற்கிறாள்.

இருப்பதையும் இழந்துவிட்டு நிற்கும் போதுதான் அவளுக்குப் புரியும். அப்போது மண் குதிரையாக நிற்கப் போகும் வடிவேலு என்ன செய்யப்போகிறான்?

இன்றளவும், தகப்பனிடம் எதிர்நின்று முகம் பார்த்துப் பேசமாட்டான். அந்த பயபக்தியெல்லாம் உண்டு. இருந்து என்ன செய்ய?

முன்னும் பின்னுமாக நினைத்துக் கொண்டே—தன்னை மறந்து அயர்ந்து விட்டான் கிழவன்.

• • •

கிழவன் கண் விழித்தபோது, விளக்கின் சுடர் குறுகியிருந்தது.

எதிரே—தலை மட்டத்துக்கு மேலே, படுக்கை வசமான ஜன்னல். திண்ணையை ஒட்டிய உள் அறையில் காற்று வசதிக்காக அது எப்போதும் திறந்தே இருக்கும். அந்த அறைக்குள்ளே தான் வடிவேலு படுத்துக்கொள்வது.

அறைக்குள்ளே விளக்கின் ஒளி தெரிகிறது. பேச்சுக்குரலும் கேட்கிறது.

கிழவனுக்குக் கேட்காத அளவுக்கு, அடக்கமாகப் புருசனிடம் ஏதோ சொல்லுகிறாள் மருமகள். அவன் கேட்டுக்கொண்டே இருக்கிறான்.

மருமகள் முடிவு செய்துவிட்டாள். மகனும் மறுத்துச் சொல்லவில்லை.

வெகுநேரத்திற்குப் பிறகு தான்—அந்த அறைக்குள்ளே விளக்கு அணைகிறது.

• • • •

காலையிலிருந்தே சின்னத்தாய் மிகுந்த உற்சாகத்துடனும், பரபரப்புடனும் காணப்பட்டாள். முதல் காரியமாக, மகள் செண்பகவல்லியை இழுத்துப் பிடித்து உட்கார வைத்து, சீவிச் சிங்காரித்து விட்டாள். அத்துடன், மாப்பிள்ளையாக வரப்போகிற தம்பியின் அழகையும், அறிவுத் திறனையும்பற்றி அடுக்கடுக்காகச் சொல்லிவைத்தாள்.

டவுனுக்குச் சென்று, அங்கு தாமதியாமல், பெரிய பையில் காய்கறி இலைக்கட்டோடு சீக்கிரமே வந்து சேர்ந்தான் வடிவேலு. அதன் பிறகுதான் வெளியே சென்றிருந்த கிழவனும் வந்து சேர்ந்தான்.

எதிர்பார்த்தபடியே உச்சிப் பொழுதுக்குள் மாப்பிள்ளை வீட்டார் வந்து இறங்கிவிட்டார்கள்.

வடிவேலுவும் சின்னத்தாயும் விழுந்து விழுந்து உபசரித்தார்கள்.

> என்னுடைய மதம், சிறைச்சாலை போல மற்றவர்களை வெளியே ஒதுக்கும் மதமல்ல! அதன் வாசல் எப்போதும் திறந்தே கிடக்கும். கடவுள் படைப்பிலே மிகத் தாழ்ந்த உயிருக்கும் அங்கே இடமுண்டு; ஆனால் இறுமாப்பு, சாதித் திமிர், நிறத் திமிர், மத விரோதம் ஆகியவற்றிற்கு அங்கே இடமில்லை.
>
> —காந்தியடிகள்

திண்ணையிலேயே பீத்தமடைப் பாயை விரித்துப், பெருமாள்சாமியும், உடன் வந்த ஆண்களும் உட்கார்ந்து கொள்ளக், கொண்டு வந்த வரிசைகளை முன்னால் வைத்து விட்டுப் பெண்கள் வீட்டிற்குள்ளே போய்விட்டார்கள்.

"நம்ம தங்கராசுவுக்கு—உங்க பேத்தியைப் பொண்ணு கேட்டு வந்திருக்கோம்!" என்று சொல்லிப் பக்குவமாக அடியெடுத்து வைத்தான்.

கிழவனும் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"எல்லாரும் ஒண்ணுபட்டு வர்றப்ப-நான் சொல்றதுக்கு என்ன இருக்கு?" என்றான் கிழவன்.

"என்ன மாமா அப்படிச் சொல்லிட்டிங்க. உறவுமுறை விட்டுப் போகக் கூடாதுன்னு தான் நாங்களும் படியேறி வந்திருக்கோம். இந்த வீட்டிலே, உங்க சொல் இல்லாமத் துரும்பு கூட அசையுமா?" என்று சொல்லிக் குழைந்தான் பெருமாள்சாமி.

கையைத் துடைத்தவாறு வழி நடையில் வந்து நின்ற சின்னத்தாயின் அபிநயத்தைப் புரிந்துகொண்ட வடிவேலு முடிவை நோக்கிப் பாய்ந்தான்.

"நாங்க போடுற நகையைத் தான் போடுவோம். கல்யாணச் செலவையும் நீங்கதான் ஏத்துக்கணும்" என்றான்.

"அது சரிதான் மாப்பிள்ளை—நமக்குள்ளே என்ன இருக்கு? உங்க சம்மந்தம் கிடைக்கிறதே எங்களுக்குப் பெரிசு" என்று ஆமோதித்தான் பெருமாள்சாமி.

கிழவன் எதுவும் பேசவில்லை.

"நாளைக்கித் தை பிறக்குது. மாசக் கடைசியிலே முகூர்த்தத்தை வச்சுக்கலாம்!" என்று சொல்லிப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்க முயன்றாள் சின்னத்தாய்.

அப்போது, கையில் தேங்காய்-பழம் தட்டுகளோடு பெரும் கூட்டமே தெருவை அடைத்துக் கொண்டுவர, முன்னால் வந்த கன்னையா, இந்த வீட்டுப் படிகளில் தானே ஏறி வருவதைக் கண்டு, சின்னத்தாய் முன்னால் வர, வடிவேலு ஒன்றும் புரியாமல் எழுந்து நின்றான்.

கன்னையா, திண்ணையில் கூடி இருந்தவர்களை ஒரு சுற்றுப் பார்த்துவிட்டு, கொண்டுவந்த தட்டுகளை ஒரு பக்கம் ஓரமாக இறக்கிவைத்து, தானும் உட்கார்ந்து கொண்டு, "என்ன வடிவேலு திகைக்கிறே- என் மகன் சுப்பையாவுக்குப் பெண் கேட்டு வந்திருக்கோம்" என்று பதட்டமில்லாமலே சொன்னான்.

"உள்ளூரிலே பெண்ணு கொடுக்கிறதா யாரும் சொல்லலையே" என்று சொல்லி எட்டி வந்து நின்று குமுறினாள் சின்னத்தாய்.

"எனக்கு உங்க குடும்பத்திலே பெண்ணு எடுக்கணும்னு ஆசை இருக்கு. முறையோட கேட்டு வந்திருக்கேன்" என்று அமைதியாகவே சொன்னான் கன்னையா.

பெருமாள் சாமிக்குக் கோபம் வந்து விட்டது. கிழவனின் பக்கமாகத் திரும்பினான்.

"நான் எங்கேயும் பார்க்காத நாடகமா இருக்கு. நாங்க பெண்ணுகேட்டு வந்து உட்கார்ந்திருக்கோம். இந்த நேரத்திலே இவரும் தட்டைத் தூக்கிட்டு வரணுமா? சொல்லி வச்சது மாதிரியில்ல இருக்கு" என்றான்.

"இதிலே சொல்லி வைக்கிறதுக்கு என்னங்க இருக்கு. வீட்டிலே பொண்ணுன்னு இருந்தா, நாலு பேரு கேட்டுத் தான் வருவாங்க. மத்தது பெத்தவங்க விருப்பத்தைப் பொறுத்தில்ல இருக்கு" என்று சொல்லிக் குறுக்கே புகுந்தான், கன்னையாவோடு வந்து உட்கார்ந்து விட்ட இன்னொருவன்.

"அதைத்தான் சொல்றோம். இங்கே பொண்ணு கொடுக்கிறதா இல்லை. தட்டைத் தூக்கிட்டுப் போங்க" என்று ஆங்காரத்தோடு இரைந்தாள் சின்னத்தாய்.

"பொண்ணு கேட்டு வந்த மாதிரித் தெரியலையே?" என்று தொடர்ந்தான் வடிவேலு.

கிழவன் அமைதியாகவே மகனைத் திரும்பிப் பார்த்தான்.

"கொஞ்சம் பொறுமையா இருடா வடிவேலு. இப்ப உன்னோட முடிவு என்ன அதைச் சொல்லு" என்று கேட்டான்.

"அதான் காலையிலேயே சொல்லிட்டேனே-செண்பகத்தை, தங்கராசுக்குத் தான் கொடுக்கணும்" என்று தீர்மானமாகவே சொன்னான் வடிவேலு.

"உன்னோட முடிவு என்னம்மா?" என்று மருமகளைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான் கிழவன்.

சின்னத்தாய் இந்த மட்டிலும் பிரச்சனை தீரப் போகிறதே என்பதில் அமைதி அடைந்தவளாக "தம்பிக்குப் பெண் கொடுக்க எனக்குச் சம்மதம் தான்" என்றாள் முன்னுக்கு வந்து.

"உன் தம்பியைக் கட்டிக்கப் பெண்ணுக்கும் சம்மதமா?," என்று மேலும் கேட்டான் கிழவன்.

"ஆமா" என்றாள் சின்னத்தாய் அழுத்தமாக.

"அப்பச் செண்பகத்தையும் கூப்பிடம்மா. அதுகிட்டயும் ஒரு வார்த்தை கேட்டுக்கலாம். அதோட முடிவே முடிவா இருக்கட்டும்" என்றான் கிழவன் அடுத்து.

ஒருவாறு, மாமனாரின்போக்கைப் புரிந்து கொண்ட சின்னத்தாய், ஆவேசம் வந்தவளாக, "நல்லாக் கேட்டுக்கிங்க" என்று சொல்லி விட்டு வீட்டுக்குள் பாய்ந்து சென்றாள்.

"சுத்தி வளைச்சுப் போறீங்க மாமா?" என்றான் பெருமாள் சாமி கோபத்துடன்.

கிழவன் சிரித்தான்.

"சுத்தி வளைச்சாலும் எட்டின மட்டுக்கும் தான் கைக்குள்ளே சிக்கும் மாப்பிள்ளை! கல்யாணம்ங்கிறது ஆயிரம் காலத்துப் பயிர். நெடுகலும் வாழப் போற பொண்ணுகிட்ட கேட்டுக்கிறது தான் முறை. எப்பவும் நிறைவோட இருக்கும். அதிலேயும் இப்ப ரெண்டு பக்கமும் பெண்ணு கேட்டு வந்திருக்கிறப்ப . . . பெண்ணோட விருப்பப்படி முடிவு செய்கிறது தான் ஒத்ததா இருக்கும்" என்றான் கிழவன்.

அதற்குள்ளாகத் தெருவெங்கும் கூட்டம் சேர்ந்து விட்டது.

உள்ளே மகளுக்குச் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி முடித்து, அவள் வாயால் 'சம்மதம்' என்று பல முறை சொல்ல வைத்து, திருப்தியுடன் மகளைத் திண்ணைக்கு இழுத்து வந்தாள் சின்னத்தாய்.

பேத்தியைக் கண்டதும் கிழவன் எழுந்து முன்னால் வந்தான்.

தாத்தாவை நிமிர்ந்து பார்த்து விட்டு மீண்டும் தலை குனிந்து கொண்டாள் செண்பகவல்லி. தாயின் கை, தோளில் அழுத்துவதால் ஏற்படும் படபடப்பில், அவளது உடலே நடுங்கிக் கொண்டிருந்தது.

கிழவன் குனிந்து, தட்டுகளிலிருந்த சிவந்திப் பூவையும் மல்லிகைப் பூவையும் சிறிது சிறிது கிள்ளியெடுத்து, தனித்தனியாக, விரித்த உள்ளங்கைகளில் வைத்துக்கொண்டு, குனிந்த தலையோடு நிற்கும் பேத்திப் பெண்ணைப் பார்த்து, "நீ வாழப் போற பொண்ணு. இப்ப உன்னோட விருப்பம் தான் முக்கியம். தங்கராசுவைக் கட்டிக்கணுமுன்னா சிவந்திப் பூவை எடு. சுப்பையாவைக் கட்டிக்கணுமுன்னா மல்லிகை பூவை எடம்மா" என்றான்.

அத்தனை கண்களும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்க, செண்பகவல்லி தலை நிமிர்ந்தாள். தாத்தாவைப் பார்த்தாள். திரும்பித் தாயையும் பார்த்தாள்.

"மனசுக்குப் பிடிச்ச பூவை எடேன். இதிலே என்ன திகைப்பு வேண்டியிருக்கு" என்று சொல்லி மகளின் தோள்பட்டையை அழுத்தினாள் சின்னத்தாய்.

"எடுக்கிற பூவை உங்கம்மா கையிலே தான் கொடம்மா" என்றான் கிழவன்.

தெருவெங்கும் நிறைந்துவிட்ட கும்பல் நெருங்கியடித்துக் கொண்டு முன்னால் வந்தது.

"எடம்மா செண்பகம்" என்று சொல்லி வடிவேலுவும் நெருங்கி வந்தான்.

செண்பகவல்லி கையைத் தூக்கினாள். தாத்தாவின் வலது கையிலிருந்த மல்லிகைப்பூவையெடுத்து வடிவேலுவின் கையில் கொடுத்து விட்டு, வெட்கமும் திகைப்பும் சூழ்ந்து கொள்ள, மெய் மறந்து நின்று விட்ட தாயையும் கடந்து வீட்டிற்குள்ளே ஓடி விட்டாள்.

அப்புறம் என்ன ?

வீடு வாசல்—மாடுமனை—காடு கரை யென்று இருப்பவையெல்லாமே, கிழவனது சுய உழைப்பில் தேடிக்கொண்ட சொத்துக்களாக அவனது பெயரிலேயே இருக்கும் போது, அங்கே, யாரால் வேறு என்ன மறுத்துப் பேச முடிந்தது?

''முன்னாலேயெல்லாம் ஒரு நாளைக்கி ரெண்டு ஏக்கர் வரப்பு வெட்டுவேன். இப்ப உன்னை நினைச்சுக்கிட்டு வேலையே ஓட மாட்டேங்குது'' என்கிறான்.

செண்பகவல்லி 'களுக்'கென்று சிரிக்கிறாள்.

''அதுக்கு நான் என்ன செய்யட்டும்?''

''உன்னோட மனசிலே இருக்கிறதையும் சொல்லு''

''நானும் உங்களைத்தான் நினைச்சுக்கிட்டிருக்கேன். நாம நினைக்கிறது நடக்குமான்னு தான் ஏக்கமா இருக்கு'' என்கிறாள் அவள்.

''அப்படி நடக்கலையின்னா உன்னை நினைச்சே செத்துப்போயிடுவேன் செண்பகம்.''

''நல்லாயிருக்கு. இதைச் சொல்லத்தான் இந்த நேரத்திலே வந்திங்களா? தாத்தா வர்றநேரமாச்சு—விளக்குக்கூடப் பொருத்தாம இருக்கேன்'' என்று அவசரத்துடனே சொல்லிவிட்டு வீட்டிற்குள் திரும்புகிறாள் செண்பகம். அவனது தலையும் மறைந்து விடுகிறது.

கிழவன் எழுந்து உட்கார்ந்தான்.

இவள்—வாசலுக்கு வந்து பேசும்போது—அவன் நெருங்கி வந்து நிற்கத்தானே செய்வான். இப்படி எத்தனை நாட்களாகப் பேசுகிறார்களோ!

வாசலுக்கு வந்து விட்டுப் போகும் இந்தச் சுப்பையாவின் தகப்பன் கன்னையா, கிழவனோடு ஒத்த வயது. கன்னையாவுக்கு இரண்டே ஆண் மக்கள். மூத்தவன் கல்யாணத்தைச் செய்து கொண்டு தனியே போய்விட்டான். இளையவன் சுப்பையா படுபயல்—படிக்கவில்லை யென்றாலும், விவசாயத்தில் கருத்தோடு பாடுபடுகிறவன். நல்ல உழைப்பாளி.

இப்போது வேலையே ஓடவில்லையாம். இங்கே வந்து நிற்கிறான்.

கிழவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

அப்போது கையில் விளக்கோடு திண்ணைக்கு வந்த செண்பகவல்லி கிழவன் கட்டிலிலே உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் திகைத்துப் போனவளாகத் தடுமாற்றத்துடன் நின்றாள்.

கிழவன் தலை நிமிர்ந்து பேத்தியைப் பார்த்தான்.

தூக்கிப் பிடித்திருந்த விளக்கொளியில், வெட்கத்தாலும், பயத்தாலும் சிவந்து விட்ட அவளது முகம் தெளிவாகவே தெரிந்தது.

கிழவன் அவளிடம் கேட்க நினைத்தது உள்ளடங்கிப் போய் விட்டது.

செண்பகவல்லியும், நெஞ்சு படபடக்க, விளக்கைக் கம்பியிலே மாட்டிவிட்டு மெதுவாக உள்ளே நழுவினாள்.

அதே நேரத்தில் கடைக்குச் சென்றிருந்த மருமகள் சின்னத் தாயும் திரும்பிவிட்டாள்.

இடுப்பிலே சுமந்து வந்த நார்ப் பெட்டியைத் திண்ணையின் விளிம்பிலே இறக்கி வைத்துவிட்டு, முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, கிழவனைத் திரும்பிப் பார்த்தாள் சின்னத் தாய்.

''சோறு போடட்டுமா'' என்று கேட்டாள்.

''எனக்குச் சோறு வேண்டாம்மா!'' என்றான் கிழவன் திரும்பிப் பார்த்து.

''உடம்பு சொகமில்லையா? கசாயம் வச்சுத் தரட்டுமா?'' என்று பரிவோடு கேட்டுத், திண்ணையிலேறிக்கட்டிலருகேவந்தாள் சின்னத்தாய்.

மக்கள் தொகைப் பெருக்கம்

தற்போது உலக மக்கள் தொகை 360 கோடியாக உள்ளது. இன்னும் 75 ஆண்டுகளில் மக்கள் தொகை 1,400 கோடியாகப் பெருகும் என்று இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானி டாக்டர் ஜான் எலாரைன் மதிப்பிட்டிருக்கிறார்.

இந்தப் பரிவுக் கெல்லாம் குறைவில்லை. கிழவன் இல்லையென்றால் தோட்டம் விளையுமா?

கிழவன் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

''காலையிலேயிருந்து உன் புருசன் எங்கேம்மா போயிட்டான்? களை எடுக்க ஆள் விட்டா பக்கத்திலே நிக்க வேண்டாமா?'' என்று கேட்டான்.

''அவருஎப்பத்தான் எங்கிட்ட சொல்லிட்டு போனாரு? நானும் கேட்டுக் கேட்டுத் தவிச்சுப் போயிட்டேன்'' என்ற சின்னத் தாய், அடுத்து, மாமனாரிடம் எதையோ சொல்ல முற்படுகிறவளைப் போலச் சுவரோரமாக ஒதுங்கி நின்றாள்.

''என் கண்ணுக்குப் பிறகு இந்த காடுகரையெல்லாம் என்ன ஆகப் போகுதோ? அதை நினைச்சுத்தான் எனக்குக் கவலையா இருக்கு'' என்று கவலையுடனே சொன்னான் கிழவன்.

இந்தக் கவலை அவளது மனத்தில் பட்டதாகத் தெரியவில்லை.

''என் சித்தப்பன் மகன் தங்கராசுவுக்கு நம்ம செண்பகத்தைப் பெண்ணு கேட்டு நாளைக்கு வரப் போறாங்களாம். சொல்லி அனுப்பிச்சிருக்காங்க'' என்று இடையிலே சேதி சொன்னவள், கம்பியிலே தொங்கிக்கொண்டிருந்த விளக்கின் சுடரைத் தூண்டி விட்டாள்.

சற்று நிதானித்துக், கிழவன் மருமகளை ஏறிட்டுப் பார்த்தான்.

''வரட்டும்மா. செண்பகத்துக்கும் தள்ளிப் போடாம கல்யாணத்தை முடிச்சிப் போடணும். நானும் இதைத்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன்'' என்றான் கிழவன் பொதுப்படையாக.

இந்த அளவிலேயே சின்னத் தாய் பூரித்துப் போனாள்.

''நாலு நாளைக்கி முன்னாலே இவரும் போயிட்டு வந்திருக்காரு. ஒண்ணுக்குள்ளே ஒண்ணு கொடுத்தாத்தான் எப்பவும் நிறையும்ன்னு இவரும் நினைக்கிறாரு'' என்று மேலும் கூறினாள்.

''எங்கிட்ட வடிவேலு அப்படியொன்னும் சொல்லலையே!'' என்று கேட்டுத் திரும்பினான் கிழவன்.

'' ஊரெல்லாம் உக்காந்து பேசத்தான் அவருக்கு நேரம் சரியா இருக்கு. ஆகவேண்டிய காரியத்தைச் சொல்றதுக்கு நினைவிருக்குமா?'' என்று அங்கலாய்த்துக் கொண்ட சின்னத் தாய், இறக்கி வைத்திருந்த பெட்டியைத் தூக்கிக்கொண்டு, உள்ளே போய்விட்டாள்.

கிழவன் மறுபடியும் சாய்ந்து படுத்துக்கொண்டான்.

எப்படியும், செண்பகவல்லியை, தன் சித்தப்பன் மகனுக்குக் கொடுத்து, வீட்டோடு இழுத்து வைத்துக் கொள்ள

வேண்டுமென்ற துடிப்பு இவளுக்கு. இவளது சித்தப்பன் பெருமாள்சாமி வாய்த்தாட்டியக்காரன். பெற்றவன் இரண்டு ஏக்கர் நன்செய்யாவது சேர்த்து வைத்து விட்டுத்தான் போனான். வயலிலே இறங்காமல் ஊர் சுற்றிக் கொண்டே திரிந்தால் கட்டுபடியாகுமா? இப்போது இருக்கும் சொத்துக்குச் சரிக்குச் சரியாகக் கடனும் கூடியிருப்ப

இனிய மாலைப் பொழுது. சென்னை அரும்பாக்கம் புறநகர்ப் பகுதியில் ஓர் இல்லத்தின் மொட்டை மாடி. அமெரிக்க மங்கை செல்வி சுசன் நீல்ட் ஊதா நிறக் கைத்தறிப் புடவை அணிந்து, புத்தகம் ஒன்றினைப் புரட்டிக் கொண்டிருக்கிறார். அருகில் சென்று பார்த்தால் அது ஒரு தமிழ் நூல்! பக்கத்தில் தமிழ் வார, மாத இதழ்கள், புதினங்கள் கிடக்கின்றன.

அன்று, முத்தும், மணியும் வாசனைத் திரவியங்களும் வாங்க, மரக்கலங்களில் திரை கடலைத்தாண்டித் தமிழகம் நாடி வந்தனர், யவனர்களும், ரோம் நாட்டவர்களும், எகிப்தியரும்.

இன்று தமிழைத் தேடி அமெரிக்காவிலிருந்து எண்ணாயிரம் மைல்கள் கடந்து அரும்பாக்கம் வந்திருக்கிறார் செல்வி சுசன் நீல்ட். வைணவக் கல்லூரிப் பேராசிரியர் திரு ஜி. விசுவநாதனின் இல்லத்தில் தங்கித் தமிழ்பயிலும் இவரைத் திரு விசுவநாதனின் குடும்பத்தினர் '' சுசன் .. .. சுசன்'' என்று அன்புடன் செல்லமாக அழைக்கின்றனர். செல்வி நீல்டும் அவர்களது குடும்பத்தினரில் ஒருவராய் மாறிவிட்டார்.

' தமிழரசு ' இதழுக்காகப் புகைப்படம் எடுக்கச் சென்றபோது, 'என்னுடைய குடும்பத்தினரோடு சேர்த்து எடுக்க வேண்டுமென்று, நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டார்.

'' தம்பி! என்ன வெட்கம் இப்படிவா, படம் எடுக்கலாம் '' என்று விசுவநாதனின் மூன்று வயது மகனைச் சகோதர பாசத்தோடு தமிழில் அழைத்த பாங்கு அவர் அக் குடும்பத்தோடு ஒன்றிவிட்டதை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

சிறுவனிடமும் அவனது பாட்டியிடமும் சுசன் உரையாடுவது தமிழில்தான்.

இதோ! தமிழரசுக்கு அவர் அளித்த பேட்டியைப் படியுங்கள்.

நிருபர் : அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் எந்த அளவுக்குத் தமிழ் இடம் பிடித்துள்ளது?

செல்வி சுசன் நீல்ட் : வெகுகாலமாக இந்திய மொழிகள் என்றால் சமஸ்கிருதமும், இந்தியும் என்றுதான் அமெரிக்கர்கள் நினைத்து வந்தனர். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் இந்த இரு மொழிகள் பற்றிய ஆய்வும், கல்வியும்தான் இருந்து வந்தன. இந்திய நாட்டினைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பும் அறிவியல் வல்லுநர்கள் இவ்விரு மொழிகளின் உதவியையே நாடினர். அண்மைக் காலத்தில்தான் தென்னிந்திய மொழி பற்றியும் குறிப்பாகத் தமிழைப் பற்றியும் அவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நிருபர் : தமிழ் கற்க அங்கு வசதிகள் உள்ளனவா?

சுசன்: நான் பயின்ற சிகாக்கோ பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிற்றுவிக்க மூன்று பேராசிரியர்கள் உள்ளனர். தமிழ் நாட்டைச் சேர்ந்த டாக்டர் ராமானுஜம், திரு ஈ. அண்ணாமலை ஆகியோரும், செக்கோசுலோவேக்கியா நாட்டினைச் சேர்ந்த திரு கமில் சுவலபில் அவர்களும் தமிழ் பயிற்றுவிக்கின்றனர். அவர்களது ஆர்வத்தின் காரணமாகப் பல மாணவர்கள் இந்த மொழியைப் பயில முன்வந்துள்ளனர்.

முதலாண்டு வகுப்பில் பத்துப் பன்னிரண்டு மாணவர்களும், இரண்டாவது மூன்றாவது ஆண்டு வகுப்புகளில் மூன்று நான்கு மாணவர்களும் பயின்று வருகின்றனர். இதே போன்று அமெரிக்காவிலுள்ள வேறு பல் கலைக் கழகங்களிலும் தமிழ் பயில வசதிகள் இருப்பதாக அறிகிறேன்.

நிருபர் : தமிழ்படிக்கவேண்டுமென்ற ஆவல் உங்களுக்கு எப்போது ஏற்பட்டது?

சுசன் : அமெரிக்காவில் நான் படிக்கும்போது எனக்குத் தென்னிந்தியா என்று ஒன்று இருப்பதே தெரியாது. நான் ' அரசு ' (Government) என்ற முக்கிய பாடம் எடுத்துப் படித்த மாணவி. 1964-ல் இந்தி படிப்பதற்காக இந்தியா வந்தேன். உத்திரப் பிரதேசத்தில் தங்கியிருந்து ஓராண்டு இந்தி கற்றேன்.

அப்போது ஒரு முறை டெல்லிக்கு வந்தேன். அங்கு சில தமிழர்களுடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. அத்துடன் கர்நாடக இசையினைக் கேட்கும் வாய்ப்பும் ஏற்பட்டது. அந்த இசை என்னைக் கவர்ந்தது. தமிழைப் பற்றியும், 'தமிழ் நாட்டைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அப்போதுதான் முதன் முதலில் ஏற்பட்டது.

அமெரிக்க அறிஞர்களும் வட நாட்டவரும், தமிழ்மொழியையும், தென்னகத்தையும் அலட்சியப் படுத்துவதாக என் மனத்தில்பட்டது. அந்த உணர்வு தமிழைப்பற்றியும் தென்னிந்திய வரலாறு பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை மேலும் அதிகப்படுத்தியது.

நான் அமெரிக்கா திரும்பினேன். இரண்டாண்டுகள் சிகாக்கோ பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்றேன்.

நிருபர் ; சென்னைக்கு எப்போது வந்தீர்கள் ?

சுசன் : சென்னைக்கு நான் முதலில் ஒரு முறை வந்து மூன்று மாதங்கள் தங்கியிருந்துவிட்டுச் சென்றேன். இப்போது இரண்டாவது முறையாக வந்திருக்கிறேன். தற்போது நான் இங்கு வந்து சுமார் ஐந்து மாதங்கள் ஆகின்றன. அடுத்த ஜூன்வரை இங்கு தங்கியிருப்பேன்.

நிருபர் : சென்னையில் எங்கு தமிழ் பயில்கின்றீர்கள் ?

சுசன் : எனது ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியம் வாரம் இரு முறை இங்கு வந்து எனக்குத் தமிழ் சொல்லித் தருகிறார்.

நிருபர் : இது எத்தகைய கல்வி? கல்விக் கூடங்களில் முறையாகப் பயிலுவது போன்றா?

சுசன் : நீங்கள் கேட்பது புரிகிறது. தமிழ் மட்டும் கற்பது எனது குறிக்கோள் அல்ல. தமிழகத் தென்னக வரலாறு பற்றியும், குறிப்பாக சென்னை நகரின் வளர்ச்சி பற்றியும், அதிலும் குறிப்பாக 1800-1860 ல் ஏற்பட்ட புதிய மாறுதல் பற்றியும் ஆய்வு செய்து அது பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை (Thesis) அளிப்பதே எனது இந்தக் கல்வியின் நோக்கம். எனவே, தமிழ் பற்றிய அறிவு, தமிழ் எழுதப் படிக்கத் தெரிவது இதற்கு உதவும் என்பது எனது எண்ணம். அதற்குத் தேவையான அளவில் தேவையான முறையில் தமிழைக் கற்கிறேன்.

எனக்குத் தற்போது எல்லாரிடமும் உரையாடத் தக்க அளவு தமிழ் தெரியுமென்று சொல்ல முடியாது. ஆனால் எளிமையாக உள்ள தமிழ் நூல்களைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். அப்படிப்பட்ட நூல்களையும், தமிழில் வரும் வார இதழ்களையும், சிறுகதைகளையும் அவ்வப்போது படித்து வருகிறேன்.

நிருபர்: நீங்கள் தமிழ் அறிஞர் யாரையாவது சந்தித்திருக்கிறீர்களா ?

சுசன் : டாக்டர் மு.வ. டாக்டர் ராகவன் ஆகியோரை அடிக்கடி சந்திக்கிறேன். ஆராய்ச்சி சம்பந்தமாகத் தமிழக ஆவணக் காப்பக இயக்குநரையும் சந்திப்பது உண்டு.

எனது இந்த ஆய்வில் அவர்கள் மிகவும் துணையாக இருக்கின்றனர். இன்னும் பலரைச் சந்திப்பேன்.

சென்னையின் வரலாறுபற்றி நான் தெரிந்து கொள்ள விழைவதால், பழைய மன்னர்களின் பரம்பரையில் வந்தவர்கள், பழமையான குடும்பத்தினரைச் சேர்ந்தவர்களையும் சந்திக்க விரும்புகிறேன். அப்படிப்பட்டவர்கள் எவரேனும் இருந்தால் என்னைச் சந்தித்தால் எனது ஆராய்ச்சிக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

நிருபர் : கர்நாடக இசை உங்களைக் கவர்ந்ததாகச் சொன்னீர்களே ! இங்கு கர்நாடக இசை கேட்டீர்களா ?

சுசன் : ஒரு மாற்றம் ! கேட்பதோடு மட்டுமின்றி கர்நாடக இசை பயிலவும் செய்கிறேன். திருமதி ஆர். வேதவல்லிதான் எனது ஆசிரியை.

நிருபர் : சென்னையைத் தவிர மற்ற எந்தெந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தீர்கள் ?

சுசன் : எனது குடும்பத்துடன் —அதுதான் திரு விசுவநாதன் தம்பதியருடன் தஞ்சாவூர், கும்பகோணம் • ஆகிய ஊர்களுக்குச் சென்றிருந்தேன். அவ்வூர்களின் இயற்கை அழகு, பச்சைப் பசேலென்ற நெல் வயல்கள், வானுயர்ந்த, கலை அழகுமிக்க கோபுரங்கள் என்னை மிகவும் கவர்ந்தன.

பொதுவாக உத்தரப்பிரதேசத்தைவிடத் தமிழகம் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. அதற்கு மற்றொரு காரணம், இங்குள்ள மக்கள். பெண்கள் இயல்பாக இனிமையாக நெருங்கிப்பழகுகிறார்கள். இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

தமிழகத்தில் என்னைக் கவர்ந்த மற்றொன்று, அழகுமிக்க உங்கள் சேலைகள். காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்— ஆகா . . என்னே அழகு. முடிந்தால் நான் ஊர் திரும்பும்போது தமிழ் நூல்களுடன் தமிழகத்துச் சேலைகளையும் எடுத்துச்செல்வேன்.

நிருபர் : எங்கள் உணவு உங்களுக்குப் பிடிக்கிறதா ? அதனை நீங்கள் விரும்பி உண்பது உண்டா ?

சுசன் : ஓ! நான் காலையில் ராகிக் கஞ்சி குடிக்கிறேன். அரிசிச் சாப்பாடு எனக்கு மிகவும் பிடிக்கிறது. ஆனால் எனக்கு நன்றாக மென்று நிதானமாகச் சாப்பிட்டுப் பழக்கம். அதற்குச் சப்பாத்திதான் வசதியாகயிருக்கிறது. நீங்கள் விறுவிறு என்று சாப்பிட்டுவிடுகிறீர்கள். எங்களது பழக்கம் சாப்பிடுவதை ஒரு கலையாக — குடும்பத்தினர் அனைவரும் அமர்ந்து பேசிக்கொண்டே—மெள்ள உணவை அருந்துவது.

நிருபர் : உங்கள் தமிழ்க் கல்வியை எந்த விதத்தில் பயன்படுத்தப் போகிறீர்கள் ?

சுசன் : நான் ஆய்வு அறிக்கை அளித்தபின், ஒருவேளை தமிழ் ஆசிரியராக மாறினாலும் மாறுவேன். பின்புதான் அதுபற்றி முடிவு செய்ய வேண்டும்.

நிருபர் : இங்குள்ள அமெரிக்கர்களைச் சந்திப்பது உண்டா ?

சுசன் அம்மையாரும் விசுவநாதன் குடும்பத்தினரும்

சுசன் : எனது தோழி ஒருத்தி—அவள் பெயரும் சுசன்தான்—இங்கு மலையாளம் கற்க வந்திருக்கிருள். நாங்கள் இருவரும் சந்தித்துக்கொள்வோம். மற்றபடி பொதுவாக ஓர் அமெரிக்கர்—மற்ளெருரு அமெரிக்கரைக் காரணமின்றிப் பார்க்க விரும்புவதில்லை.

நிருபர் : நீங்கள் திரு விசுவநாதனின் இல்லத்தைத் தேர்ந்தெடுத்தது எப்படி ?

சுசன்: திருமதி விசுவநாதனின் உறவினர் அமெரிக்காவில் இருக்கின்ருர். அவர் மூலமாக இவர்களைத் தெரிந்து கொண்டேன். மேலும், சென்னை நகருக்குள் தங்குவதை விடப் புற நகர்ப் பகுதியிலுள்ள குடியிருப்புகளில் ஒருவித கிராமியச் சூழ்நிலை உள்ளது. அது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

இங்கு நான் வெளியில் வந்தால் பெண்கள் என்னைப் பொதுவாகக் கேட்கும் கேள்விகள் சில. "அமெரிக்காவிலிருந்து தனியாகவா வந்தே?"

"உனக்கு வயது எவ்வளவு ?"

"உனக்கு எப்போ கல்யாணம் ?"

இவற்றிற்கெல்லாம் எனது பதில், ஒரு புன்முறுவல்தான்!

ஆமாம். புன்முறுவலோடு தமிழகம் வந்து, புன்னகையுடன் தாய் நாடு செல்லவிருக்கும் செல்வி சுசன் நீல்ட், நிச்சயம் தமிழகத்தின் நல்லுறவையும் எடுத்துச் சென்று அமெரிக்க மண்ணில் பரப்புவார் என நம்பலாம்.

தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்

Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கை பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லாவெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ

டாக்டர் S. காளிமுத்து, B.M.P.(IND), V.V.C.,A.M.I.H.

பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.

போன்: 16 தந்தி : சித்தர்

சென்னை கிளை ஆபீஸ் :

41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1

போன் : 21448

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்

1/4 சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை—81.

உயர்ந்த தரமுள்ள

"கோபுரம்" மார்க் மைதா, குஜி

மற்றும்

"கப்பல்" மார்க் ஆட்டா

கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670—52671—52672—52673

தந்தி : MONARCH

சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையில் ஒருகல்லூரிஇருக்கிறது. 1851-ஆம் ஆண்டிலிருந்து செயல் படுகிறது. அதாவது சென்னையில் அதுதான் மிகப் பழமையான கல் லூரி. அதற்குப் பெயர் என்ன தெரியுமா? ''செத்த காலேஜ்''!

சென்னையில் நீண்ட நெடுநாட்களாக வாழ்கின்ற மக்கள் அன்புடன் அழைக்கும் பெயர் ''செத்த காலேஜ்'. இதே எழும்பூர் பாந்தியன் சாலையில் தான் மிகப் பெரிய மருத்துவ மனையும் இருக்கிறது. புதுப்புது உயிர்கள் நாள் தோறும் இந்த மருத்துவ மனையில் தோன்றி, தமிழ்ச் சமுதாயம் என்னும் பெருங்கடலில் சங்கமமாகிக் கொண்டே இருக்கின்றன. புது உயிர்கள் தினந்தோறும் உற்பத்தியாகிக் கொண்டேஇருக்கும் இந்த மருத்துவ மனைக்கு அடுத்த கட்டடத்தில் தான் இந்த 'செத்த காலேஜ்' இருக்கிறது! இந்தக் ''காலேஜ்'' தான் சென்னை மியூசியம் என்பது. இந்த மருத்துவ மனை போலவே, இந்த மியூசியமும் மிகப் பழமையானது. இந்த 'அரும் பொருட்காட்சிச் சாலை' தோன்றி சுமார் 120 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1951-ல் இந்தக் காட்சிச் சாலையின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்டது. இந்த நூற்றாண்டு விழாவைத் துவக்கி வைத்தவர் அன்றையப் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆவார்கள். அவ்வமயம், இந்த மியூசியத்தைச் சார்ந்த தேசியக் கலைக் கூடமும் (National Art Gallery) பொதுமக்களுக்குத் திறந்துவைக்கப்பட்டது.

சென்னை மாநகருக்குச் சுற்றுலா வருவோர் அன்றும் இன்றும் கண்டு களிக்கின்ற முக்கியமான இடங்களில் சென்னை மியூசியமும் ஒன்று. அந்தக் காலத்தில் சென்னை மாநகரம் இவ்வளவு பெரிய நகரமாக இல்லை. சென்னைக்கு இன்று வருவோரின் சிந்தனைக்கும் கண்களுக்கும் விருந்தாகப் பல்வேறு இடங்கள் உள்ளன. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலைவேறு. அன்று, சென்னையில் முக்கியமான காட்சி சாலைகள் சென்னை மியூசியம், மூர் அங்காடியை அடுத்து உள்ள மிருகக் காட்சிச் சாலை (Zoo), லொடக் லொடக் என்று வீதியின் நடுவே ஓடிக்கொண்டிருந்தடிராம்வண்டி, மெரினுக் கடற்கரை, அடையாறு ஆலமரம் இவைதான். அன்றும் இன்றும் அருமையான காட்சிப் பொருளாகத் திகழ்வது, இந்த மியூசியம்!

பல விசித்திரமான இடங்கள் சென்னையில் உள்ளன. பாந்தியன் சாலையை அடுத்துச் சென்ருல் காலேஜ் ரோடு என்று ஒன்று உள்ளது. இன்று அந்தக் காலேஜ் ரோடில் 'மகளிர் கிறித்துவக் கல்லூரி' உள்ளது. ஆனல், அதன் காரணமாக 'காலேஜ் ரோடு' என்று பெயர் பெறவில்லை. மியூசியம் போலவே நீண்ட நெடுநாட்களுக்கு முன்னுல் அந்தச் சாலையில், இன்று கல்வி இயக்குநர் அலுவலகம் உள்ள இடத்தில் ஒரு காலேஜ் இருந்தது. வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் கல்லூரி ஒன்று அங்கே இருந்தது. அதனுல் அந்தச் சாலைக்கே 'காலேஜ் ரோடு' என்று பெயர் வந்தது; இன்றும் கல்வி இயக்குநர் அலுவலகம் இருக்கும் இடம் 'பழையகல்லூரிக் கட்டடங்கள்'' (Old College Buildings) என்றே அழைக்கப்படுகிறது.

சென்னை பழம்பெரும் நகரமல்லவா? அதனுல் பழைமை வாய்ந்த பல இடங்கள் சென்னையில் உள்ளன. இந்த இடங்களில் சென்னை மியூசியமும் ஒன்று. மிருகக் காட்சிச் சாலையை மக்கள் ''உயிர் காலேஜ்'' என்றும், இந்த அரும் பொருட்காட்சிச் சாலையை 'செத்த காலேஜ்' என்றும் செல்லமாக அழைக்கத் தொடங்கினர். அந்தக் காலத்தில் சென்னைக்குப் போய் வந்தால் 'செத்த காலேஜ் பார்த்தியா' 'உயிர் காலேஜ் பார்த்தியா' என்று ஊரில் கேட்காமல் இருக்க மாட்டார்கள். அந்த அளவுக்குப் புகழ் வாய்ந்தது இந்த மியூசியம். இன்றைக்கும் அதே



''என்ன ராமையா சௌக்கியமா?''

''ஐயா! வாங்க! வாங்க !! எப்போ வேலூர் வந்தீங்க? என்ன சமாச்சாரம்?''

''நான் வந்து இரண்டு நாளாச்சு. பையன் வேலை விஷயமாத்தான்...''

''தம்பி படிச்சு முடிச்சிட்டுதா? இங்கே என்ன வேலை கிடைக்கும்னு பார்க்கிறீங்க?''

''வேலை இல்லை ஐயா? தமிழ் நாட்டிலே தொழில் எவ்வளவு வளர்ந்துக்கிட்டு வருது! அரசாங்கம் எவ்வளவு உதவிகள் பண்ணுது! அதைப் பயன் படுத்திக்கிறதை விட்டு விட்டு யாரிடமாவது போய் வேலை பார்க்கிறதுக்கா பி.காம். படிக்க வைச்சேன்?''

''தெரியாமக் கேட்டுட்டேன்! மற்ற படிச்ச பையன்கள் வேலை தேடி அலையிறது மாதிரி உங்க பையனையும் நினைச்சிட்டேன். ஆமாம். வேலூருக்கு வேறு என்ன விஷயமாய்...''

''வேலூரிலே தொழிலை ஆரம்பிக்கலாம்னு திட்டம். வாடகைக்கு நல்ல இடம் பார்த்திட்டோம். ஆனால் அலுவலகத்திற்கு வேண்டிய மேஜைகள், நாற்காலிகள், பீரோக்கள் இவைகளெல்லாம் வாங்கணும். பட்டணத்திலே வாங்கி அனுப்பினா போக்குவரத்துச் செலவு எக்கச்சக்கமா வருமேன்னு யோசனை பண்ணிக்கிட்டிருக்கேன்.''

''கவலையை விடுங்க. வேலூரிலேயே வாங்கலாம்டு''

''யோவ் எனக்குநிறையப் பொருட்கள் தேவை. பெரிய தொழிலாத் தொடங்குகிறோம்.''

''அதுதான் கவலை வேண்டாம்' னேன். நம்ம 'டான்சி', அதுதான் தமிழ் நாடு சிறு தொழில் வாரியத்தின் தொழிற்கூடம் ஒன்று வேலூரிலேயிருக்கு. அங்கு இரும்பினால் செய்த பீரோக்கள், மேஜைகள், நாற்காலிகள் மற்றும் அலுவலகத்திற்கு வேண்டிய எல்லாப் பொருட்களும் கிடைக்கும்.''

மலிவான விலையில் வலிவான பொருட்கள்

''அப்படியா ராமையா! எனக்குத் தெரியாதே! ஆமாம். விலைகள் எல்லாம் எப்படி?''

''வெளியே 600 ரூபாய் விற்கிற இரண்டு டிராயர் இரும்பு மேஜை இங்கு 475 ரூபாய்க்குக் கிடைக்கிறது. அலுவலகங்களுக்கு ஏற்ற பல வகையான மேஜைகள், நாற்காலிகள், பைல் ரேக்குகள் அங்கு உள்ளன. பீரோ 300 ரூபாயிலிருந்து 700 ரூபாய் வரை உள்ளது. 300 ரூபாய் பீரோ வெளியே 400, 450 ரூபாய் இருக்கும். பெரிய பீரோக்கள் வெளியில் 900 ரூபாய் இருக்கும். நல்ல வலுவான இரும்புத் தகட்டில் செய்திருக்காங்க.''

''வேறு என்னென்ன செய்யிறுங்க?''

மைசூர் செல்லும் அஞ்சல் பெட்டிகள்.

''இரும்புக் கட்டில்கள், மருத்துவ மனைகளுக்கு வேண்டிய தள்ளு வண்டிகள், சிறிய அலமாரிகள், இரும்புப் பணப்பெட்டிகள், சைக்கிள்கள்...''

''பணப்பெட்டியும், சைக்கிளும் நமக்குத் தேவைதான். ஆமாம். இதை யாரும் வாங்கிப் பயன் படுத்தியிருக்கிறுங்களா?''

''என்ன அப்படிக் கேட்டுப்பிட்டிங்க? இங்குள்ள பல உணவு விடுதிகளில் தங்கும் அறைகளுக்கான கட்டில்கள், மேஜை, நாற்காலிகள் இங்கிருந்துதான் வாங்கிப் போட்டிருக்காங்க. மருத்துவ மனைக்குப் பல பொருட்கள் வாங்குகிறுர்கள். திரைப்பட அரங்கம், அரசினர் அலுவலகம் ஆகியவற்றிற்கும் இங்கிருந்துதான் வாங்குகின்றனர். சொல்ல மறந்துட்டேனே! மைசூர் மாநிலத்திற்கான அஞ்சல் பெட்டிகள் இங்குதான் தயாராகின்றன. ஆண்டுதோறும் இங்கேதான் இதற்கான ஆர்டர் வருது. அப்புறம் இந்த ஆண்டு குவைத் நாட்டிற்காக 2 டெலி பிரிண்டர் மேஜைகளைக் கூடச் செய்கின்றனர். இங்கு விற்பனையாவதில் மூன்றில் ஒரு பங்கு பொருட்கள் தனியார் வாங்குவதுதான். தற்போது நாலு லட்சத்திற்கு இங்கு ஆர்டர் கையிலிருக்கிறதாம்.''

''நேரில் போய்ப் பார்க்கலாமா?''

''தாராளமா. நான் கூடக் காலையில் ஒரு சைக்கிள் வாங்கப்போயிருந்தேன். அப்போ ஒரு பெரிய அதிகாரியின் மனைவியார் வந்து நேரிலேயே சில பொருள்களுக்கு ஆர்டர் கொடுத்தார்கள், அவர்கள் வீட்டுக்காக.''

''ஆர்டர் கொடுத்தா அனுப்பிடுவாங்களா?''

''ஆமாம், உள்ளூர் மட்டுமல்ல. வெளியூராயிருந்தாக்கூட பக்கத்துப் பார்சல் ஆபீஸ் வரை அவர்கள் செலவிலேயே அனுப்பி வைப்பாங்க.''

''சென்னைக்கு அனுப்பி வைப்பாங்களா?''

''ஓ, தாராளமாக! ஆனால் சென்னையில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலையில் அவர்களது விற்பனை நிலையம் ஒன்று இருக்கு. அங்கே கூடப் பார்த்து வாங்கலாம்.''



மலிவான விலையுள்ள வலிவான அலமாரிகள்

''இது அரசாங்க வாரியம் நடத்துறதுன்னு சொன்னிங்களே! வேறே எங்கேயாவது இருக்கிறதா?''

சைக்கிள்கள் தயாராகின்றன



''பீரோ செய்வதற்கு ராஜபாளையம்,பழனி ஆகிய இடத்திலும் தொழிற்கூடங்கள் உள்ளன. மற்றபடி வெவ்வேறு இடங்களிலுள்ள தொழிற்கூடங்களில் வெவ்வேறு பொருட்கள் தயாரிக்கிறுர்கள்.''

''இந்தத் தொழிற்கூடத்தில் எவ்வளவு தயாரிக்கிறுர்கள்?''

''சென்ற ஆண்டு (1969-70) 17 லட்சம் ரூபாய்க்குத் தயார் செய்திருந்தார்கள். அதிலே 1·2 லட்ச ரூபாய் லாபம். நடப்பு ஆண்டிலே 22 லட்சத்திற்குத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். சாதாரணமாக ஆண்டுக்கு 2,500 சைக்கிள் தயாரிப்பாங்க; அல்மைரா 1,000 தயாராகும்; நாற்காலிகள் சுமார் 3,000; கட்டில்கள் 2,000 தயாரிப்பாங்க.''

''ஆமாம்! குறிப்பிட்ட அளவிலே தானே அவங்க தயாரிச்சு வைச்சிருப்பாங்க''

''ஆமாங்க. பீரோவை எடுத்துக்கிட்டா $4\frac{1}{2}$ அடி, 6 அடின்னு ஏதோ சில அளவுகள் வைச்சிருக்காங்க. ஆனால் நிறையப் பொருட்களுக்கு நீங்க ஆர்டர் கொடுப்பதானு, உங்களுக்குத் தேவைப்படும் அளவுகளில் செய்து தருவார்கள். திருப்திதானே·''

''மிகவும் திருப்தி. முதலில் ஒரு டாக்சி பிடியும். நேரில் போய்ப் பார்த்துவிட்டுஅங்கேயே வாங்கிவிடுவோம்.''

தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ 8·00
அரைஆண்டு ரூ 4·00
தனிப்பிரதி 35 காசுகள்
இயக்குநர்,
செய்தி, விளம்பரத் துறை,
தமிழ்நாடு அரசு - சென்னை.9

புகழுடன், மேலும் பல முன்னேற்றங்களுடன் காண்போர்கண்ணையும், சிந்தனையையும் கவரும் எழிற்கூடமாகத் திகழ்கிறது.

மாநில அளவில் நடத்தப்பெறும் காட்சிச் சாலைகளுள் சென்னை மியூசியம் தான் மிகப் பெரியது; மிகப் பழமையானது. தினந்தோறும் சராசரி இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் இந்தக் கண்காட்சி சாலையைக் காண வருகின்றனர். பாந்தியன் சாலையில் இந்தக் காட்சி சாலையைப் பார்க்க உள்ளே நுழைந்தால், நம் கண்ணைக் கவருபவை, நிழல் தரும் பெரிய பெரிய மரங்களும், பச்சைப் பசேலென்றுள்ள கொடிகளும் செடிகளும் தான்! இந்த இடத்திலிருந்து சற்றுத் தள்ளிச் சென்றால் சென்னை மாநகரின் அசுர வேகம், கலகலப்பு எல்லாம் உண்டு. கூப்பிடு தூரத்தில் சென்னை எழும்பூர் ரயிலடி. ஒரே பரபரப்பினை ஊட்டும் சூழ்நிலை. இதன் மத்தியில், அழகின் திரு உருவாக, அமைதியின் பிறப்பிடமாக, தமிழகத்தின் அரும் பெரும் கலைச் செல்வங்களை, காட்சிப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டு கம்பீரமான தோற்றத்துடன் திகழ்கிறது இந்த மியூசியம். நாளொன்றுக்கு இரண்டாயிரம் பேருக்கு மேல் இக் காட்சி சாலையினைக்காண வருகிறார்கள். சிறப்பான நாட்களில், காணும் பொங்கல் நாளன்றும், துவாதசி நாளன்றும் மற்ற மற்ற நாட்களிலும் இங்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் வருகிறார்கள். எப்பொழுது பார்த்தாலும் சுற்றுலாப் பேருந்துகள் நின்று கொண்டே இருக்கின்றன. திருப்பதியில் ஏழுமலையானைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பும் பக்த கோடிகள் சென்னை வந்தால் தவறாமல் இந்த மியூசியத்திற்கு வந்து பார்க்கிறார்கள். இந்த மியூசியத்திற்கு வந்து விட்டால் சுற்றுலாக்காரர்களுக்கு நல்ல வேட்டை தான்! அமைதியான இடம், மனத்திற்கு ரம்மியமான சூழ்நிலை, உள்ளே மரமும், கொடியும்செடியுமாகக் குளுகுளு என்றுஇருக்கிறது. கம்பீரமான கட்டடங்கள், அக் கட்டடத்தினுள்ளே பார்த்துக் களிக்க வேண்டிய காட்சிப் பொருள்கள் ஏராளமாக உள்ளன.





"இது ஒரு பெரிய மியூசியம். ஒரே வகையான, ஒரே ரீதியான காட்சிப் பொருள்கள் இங்கு வைக்கப்படவில்லை. பல்வேறு வகையான பொருள்கள் பல்வேறு கோணங்களில் கண்டு ரசிக்கத் தக்க வகையில் அமைந்துள்ள இந்த மியூசியம். இது ஒரு பல நோக்குக் காட்சிச்சாலை. (Multi Purpose Museum). மாநில அளவில் நடத்தப் பெறும் காட்சிச் சாலைகளினுள், இந்த மியூசியம் தான் மிகவும் பழைமையானது; மிகவும் பெரியது. அத்துடன் புதுக்கோட்டை மாநிலம் தமிழகத்துடன் இணைக்கப்பட்டதும், புதுக்கோட்டையில் இருந்த பொருட்காட்சிச் சாலையும் சென்னைக்காட்சிச் சாலையுடன் இணைக்கப்பட்டு விட்டது. இன்று பல முன்னேற்றங்களை, பல புதிய அம்சங்களை இந்த மியூசியத்தில் சேர்த்துள்ளோம். இது வெறும் காட்சிச் சாலை மட்டும் அல்ல. அறிவுக்கு விருந்தூட்டும் அற்புதப்படைப்புகள் பலவற்றைத் தன்னுள்ளே கொண்டுள்ளகலைக்கருவூலமாகும். புத்தகத்தைப் படித்தால் தான் அறிவு வளருமென்பதில்லை. இப் படிப்பட்ட காட்சிச் சாலைகளும் சிறந்த அறிவாலயங்கள் தான்" என்று பெருமிதத்துடன் கூறுகிறார், காட்சிச் சாலைகளின் இயக்குநராகஉள்ள திரு எஸ். டி. சத்தியமூர்த்தி அவர்கள். அவர் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை



என்பது இந்தக் காட்சிச் சாலையை ஒரு முறை சுற்றிப் பார்த்து விட்டு வந்த பிறகு நன்றாகத் தெளிவாகப் புரிகிறது,

காவி நிறக் கலவை பூசப்பட்ட அந்தப் பிரம்மாண்டமான கட்டடத்தினுள் புகும் பொழுதே, ஏதோ தெய்வத் தமிழ் நாட்டின் திருக்கோயில்களினுள் புகுந்துவிட்டோமா என்ற பிரமை நம்மை அறியாமலேயே நமக்கு ஏற்படுகிறது: பாரத நாட்டின் சிற்பக்கலையின் மகோன்னதம், சிலைசெய்யும் திறன், பெருமிதம், அத்தனையையும் அங்கு காணலாம். இந்த அரங்குக்கே சிறப்பூட்டும் முறையில் அவை அமைந்துள்ளன. சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் தொடங்கி, அண்மைக் காலம் வரையில், சிற்பக் கலை, சிலை வடிக்கும் கலையின் வரலாற்றை வடித்துக் கொடுக்கின்ற வகையில் பல்வேறு சிற்பங்கள், சிலைகள் இந்த அரங்கில் காணப்படுகின்றன:

நாட்டு வரலாறு, மக்களின் கலைத் திறன் கற்பனைச் செறிவு, இக்கலைச் சிற்பங்களில் அப்படியே தத்ரூபமாக விளையாடிக் கொண்டிருக்கின்றன. படிமக் கூடத்தை (BronzeGallery) இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். விசாலமான மண்டபத்தில் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட அறைகளில் படிமங்களான சிலைகள் நம் சிந்தனையைக் கிளறி விடுகின்றன. செங்கை மாவட்டம் திருவாலங்காட்டிலிருந்து கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ள நடராசர் சிலை இக்காட்சிச் சாலைக்கே மணிமகுடமாகத் திகழ்கிறது எனலாம். கூத்தபிரானின் அந்தச் சிலை நமக்குக் கதைகதையாகச் சொல்கிறது. சிலையின் ஒவ்வொரு அசைவும், பார்ப்போரின் இதயத்தை யெல்லாம் கிறங்க வைத்து விடுகிறது.

கம்பீரமான தோற்றத்துடன் ஒரு காலைத் தூக்கி நின்றாடும் நிலையில் உள்ள அழகின் திரு உருவாக அமைந்துள்ள ஆடலரசனின் அந்தச் சிலையைப் பார்ப்பதற்காக மட்டுமே இந்தக் காட்சிச் சாலைக்கு ஒரு முறை போய்விட்டு வரலாம். இங்கே புத்தர் காலச்சிலைகள் உள்ளன. சோழர் காலச் சிற்பங்கள், சிலைகள் உள்ளன. தமிழ் நாட்டின் வரலாற்றுப்பின்னணியைத் தெளிவாகக் காட்டும் வகையில் சிற்பங்கள், சிலைகள், எழுத்து வடிவங்கள், செப்பேடுகள், பழங்கால நாணயங்கள் எல்லாமே கலைக் கண்ணோட்டத்துடன் இந்த அரங்குக்குள் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன.

மனித இன வரலாற்றினைச் சுட்டிக் காட்டும் பிரிவு (Anthropology) மிக முக்கியமான ஒன்றாகும். கற்காலம் தொட்டு மனித இனத்தின் வரலாற்றை இங்குள்ளபொருட்கள்நமக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் சென்னை மியூசியம் தான் மிகப் பழமையான நிறுவனம் என்று சொல்லப்படுகிறது. செங்கை மாவட்டம் அதிராம்பாக்கத்தில் கண்டெடுக்கப்பட்ட பழங் கற்கள் (Palacolith) 1863-ம் ஆண்டில் புரூஸ் ஃபுட் என்ற ஆங்கிலேயரால் சேகரிக்கப்பட்டு இந்தக் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் வதியும் பழங்குடிகளான தோதவர்கள் கையாண்டு வரும் கருவிகள், மட்பாண்டங்கள், நகைகள் இரும்புக் கருவிகள், எல்லாமே இங்கே தொகுத்து

வைக்கப்பட்டுள்ளன. பழங்கால வரலாற்றில் ஈடுபட்டுள்ள மாண வர்களுக்கும், ஆராய்ச்சியாளர் களுக்கும் இவை பெரிதும் பயன்படும்.

பழங்கால நாணயங்கள் சேக ரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள பிரிவுகள் பண்டைக்கால மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. திராவிட நாட் டின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு காலங்களில் பயன் படுத்தப் பட்ட பழங்கால நாண யங்கள் ஏராளமாக உள்ளன. இவற்றில் குப்தர் கால நாணயங் கள் பெரும்பாலனவை. ஆந்திர மாநிலத்தில் இராசமகேந்திர புரம் அருகில் உள்ள தௌலேஸ் வரம் என்ற ஊரில் கிடைத்த 127 தங்க நாணயங்கள் அண்மை யில் இந்தக் கருவூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. கீழைச் சாளுக்கிய மன்னர்கள், முதலாம் இராசராசசோழன், குலோத் துங்க சோழன் முதலிய மாமன் னர்கள் காலத்தவை இவை.

இயற்கைப் பொருள்கள் பல வும் வைக்கப்பட்டுள்ளன. மிருகங் கள், தாவரங்கள், கற்கள் என்று சிறு சிறு பிரிவுகளாக உள்ள இப்பிரிவு சிறுர்களுக்குப் பெருமகிழ்ச்சி ஊட்டுவதாகும். இங்கே ஒரு பெரிய யானை யின் எலும்புக் கூட்டினைக் கொண்டு வந்து அரங்கின் மத்தியில் வைத்திருக்கிறுர்கள். சுமார் 11 அடி உயரம் உள்ளது இது. வட ஆர்க்காடு மாவட்டம் செங்கம் பகுதியில் வசித்து வந்த மிகப்பெரிய யானை ஒன்று திடீரென்று திமிர் பிடித்து ஓடி பலரைச் சாகடித்து விட்ட தாம். அதைச் சுட்டு அந்த எலும்புக் கூட்டைக்கொண்டு வந்து வைத்திருக்கிறுர்கள். இன்னும் கடல் சிங்கம், கடல் கன்னி, பறக்கும் அணில் எல் லாம் இங்கே பார்க்கலாம். பாம்பு வகைகள் தான் எத்தனை உள்ளன! எல்லாம் உயிரில்லா தவைதான். குழந்தைகள், சிறு வர்கள் எல்லாம் மிகவும் வியப் புடன், அதே சமயம் அச்ச மின்றி அவற்றைக்கண்டு களிக் கின்றனர்.

தனிச் சிறப்புடன் திகழ்வது குழந்தைகள் அரங்கு (Childrens Gallery). இது அண்மையில் துவக் கப்பட்டது. பள்ளி மாணவர் கள் பார்த்து ரசிக்க வேண்டிய எல்லாப் பொருட்களும் இங்கே உள்ளன. மண் வளம் பற்றி விளக்கும் பொருட்கள், இந்திய நாட்டின் கனிவளம், சிறு சிறு வடிவங்களில் அமைந்துள்ளன. கற்காலப் பிராணிகளின் அமைப்பு கள், அந்தக்காலப்பழக்கவழக்கங் களைக் காட்டும் பொருள்கள், மனிதன் அன்று தொட்டு இன்று வரை பயன் படுத்திவந்த, வரும் போக்குவரத்துக் கருவிகளின் 'மாதிரி அமைவு' கள் எல்லாம் அழகான கண்ணடிப் பெட்டி களில் வைக்கப்பட்டுள்ளன.

ஒரு கண்ணோட்டம்

சென்னையின் மக்கள் தொகை—சுமார் 21 லட்சம்.

குடிசைகளில் வாழ்வோர்—சுமார் 7 லட்சம்.

சென்னையிலுள்ள வீடுகளின் எண்ணிக்கை—சுமார்1,15,000

குடிசைப்பகுதிகள்—491

வீட்டுவசதி வாரியம்
இதுவரை திட்டியுள்ள திட்டங்கள்—59.

(மதிப்பீடு—ரூ. 963 லட்சம்.)

இது வரை நிறைவேற்றியது—24 திட்டங்கள்.

(செலவிடப்பட்ட தொகை—ரூ.755 லட்சம்.)

இது வரை கட்டப்பட்ட குடியிருப் புகள்—7,454

சென்னை நகரிலுள்ள எல்லா குடிசைப் பகுதிகளையும் மாற்றத் தேவை ரூ. 60 கோடி.

அஞ்சல் தலைகள் ஏராளமாகச் சேகரிக்கப்பட்டு அஞ்சல் தலைகள் அரங்கில் (Philatelic Gallery) வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவு அண்மையில் புதிதாக இங்கு சேர்க்கப்பட் டுள்ளது. இந்தப் பிரிவில் உலகத்தின் எல்லா நாடுகளி லிருந்தும் சேகரிக்கப்பட்ட நாற் பத்து மூன்றுயிரம் அஞ்சல் தலை கள் உள்ளன ; இந்த மாதிரி பெருவாரியான அளவில் உள்ள அஞ்சல் தலைகள் பிரிவு இந்தி யாவில் வேறு எந்த மியூசியத் திலும் இல்லை.

இந்தக் காட்சிச் சாலையைச் சேர்ந்த இரசாயனப் பொருள் கள் ஆய்வுக்கூடம் (Chemical Conservation Laboratory) தனிச் சிறப்பு வாய்ந்தது. இக் காட்சிச் சாலையில் வைக்கப் பட்டுள்ள பழம் பொருட்கள் கெட்டுப்போகாமல், இரசாயன முறையில் பாதுகாத்து வைக் கின்ற பணியினை இந்த ஆய்வுக் கூடம் செய்கிறது.

உலகத்தின் எல்லா நாடு களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட 43,000 அஞ்சல் தலைகள், உல கத்தின் வேறு எங்குமே இல்லாத வகையில் மிகவும் சிறப்புவாய்ந்த தென்இந்திய படிமத்திலான சிலை கள், உலகப் புகழ் பெற்ற பழங் கற்களாலான பொருள்கள், அம ராவதி ஸ்தூபத்திலிருந்து சேக ரித்து வைக்கப்பட்டுள்ளபெரிய அளவில் உள்ள புத்தர் காலச் சிற்பங்கள் இவை அத்தனையும் சென்னை அரும் பொருட்காட்சிச் சாலையின் சிறப்புக்கு மணி மகு டங்களாகத் திகழ்கின்றன.

புத்தர் பெருமானின் அழகுச் சிலையிலிருந்து கடற் பாசி வரை, அத்தனையும் தன்னகத்தே கொண் டுள்ள சென்னை மியூசியம்—வெறும் கண்காட்சிச் சாலை மட்டு மல்ல, சுற்றுலா வருவோர்க்கு அது ஒரு சுவர்க்கம். சின்னஞ் சிறுர்களுக்கு ஓர் அறிவாலயம் ; படித்த மக்களுக்கு அது ஒரு பயிற்சிக்கூடம்.

எல்லாமே இங்கே, இந்தக் காட்சிச் சாலையில், பழைமையான வைதான். பழம் பொருட்கள் காட்சிச் சாலை. அதனுல் பழம் பொருள்கள் தான் உள்ளன. இந்த அரும் பொருட்களஞ்சியத் தைப் பார்க்க வருவோர்க்கு ஒரே ஒரு குறைதான் இருக்கமுடி யும். மணிக்கணக்காகச் சுற்றிப் பார்த்துவிட்டு மன நிறைவுடன் காட்சிச் சாலையை விட்டு வெளியே வரும் பொழுது "செத்த காலே"ஜைப் பார்த்த நினைவோடு நாம் திரும்பவில்லை. காலத்தால் சாகடிக்க முடியாத காலேஜைப் பார்த்த நினைவோடு தான்வருகிறேம்!

வெண்பாப் போட்டி

'காணக் குளிர்ந்ததே கண்' என்ற ஈற்றடியை வைத்து எழுதப்பட்ட வெண்பா வில், திரு. ந. ஜாபர் எழுதிய வெண்பா பரிசு பெறுகிறது. பரிசு பெற்ற வெண்பா வும், வெளியிடுவதற்குத் தகுதி படைத்த நூற்றுக்கணக்கான வெண்பாக்களில் இட நெருக்கடி காரணமாகச் சில வெண்பாக் களும் இங்கே வெளியிடப் படுகின்றன.

(ஆ-ர்.)

3. காணக் குளிர்ந்ததே கண்

மென்மைத் தளிருடலும் மின்னும் இளநகையும்
சின்னக் கருவிழியும் சேர்ந்திலங்கி—இன்னமுதும்
நாணச் சுவையளிக்கும் நன்மழலைச் செல்வமதைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

ஏழைச் சிரிப்பில் இறைவன் உளன் என்னும்
ஊழை வெலுஞ்சொல் ஒளிபெறவே—கூழைத்தான்
காணத் துடித்தழுவார் கையில் நிலப்பட்டா
காணக் குளிர்ந்ததே கண்.

—உலகன், ஈரோடு.

பாசனத்தால் நீர்பெருக்கிப் பாடுபடு வோர்க்குநிலச்
சாசனத்தால் சீர்பெருக்கித் தண்டமிழ்சிம்—மாசனத்தார்
நாணற் கரையெல்லாம் நன்செய்யாய் மாற்றுவதைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—செவ்வேள், புதுவை-3.

முத்துத் தமிழ்வளர்த்த முன்னேர்க்குச் சென்னையிலே
பத்துச் சிலைவைத்துப் பாங்குறவே—எத்திக்கும்
பேணப் பெருமையுடன் பீடுபெறும் நம்மரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எ. மாணிக்கம், விசூர்.

உட்குழிந்த கன்னம் உலர்ந்த வயிறெல்லாம்
தட்டில் உணவால் தழைத்தனவே—முட்டின்றி
வேணவா நீக்க விளையும் நிலமகளைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—முத்தரசன், காரைக்குடி.

காய்ந்திட்ட ஏரிகுளம் கால்வாய்கள் தூரெடுத்துப்
பாய்ந்தநீர் குன்றுப் பசுமையுடன்—சாய்ந்தகதிர்
காணப் புதிதாம் கருணைநெற் கண்டுமுதல்
காணக் குளிர்ந்ததே கண்.

—கரு.சோமு, அம்பத்தூர்.

பஞ்சநீர் ஆடுதுறை பத்மா கருணைவும்
அஞ்சுடனே ஐஆரெட் டாம்நெல்லும்—தஞ்சையில்
மாணக் கொழிக்கும் மருத நிலந்தன்னைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—கோ. பாவை. ஆயங்குடிப்பள்ளம்

விண்ணிலவிற் காலூன்றி வீரக் கொடிநாட்டி
மண்ணெடுத்துப் பேசி மகிழ்ந்துலவி—வண்ணமுடன்
காணப்படம் பிடித்துக் கண்குளிர வந்தவரைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—பழ. மு-முத்தழகப்பன், சென்னை-28.

கல்வி, நிலப்பட்டா, கட்டுமனை, ஆழ்கிணறு
நல்ல குடிநீரும், நற்றெழிலும்—பல்வேறு
கோணத்தில் முன்னேறக் கூட்டுறவும் ஏர்வளமும்
காணக் குளிர்ந்ததே கண்.

—க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

ஏற்ற தொழிலாளர் ஏருழுவர்—ஏழைபலர்
போற்றுதமி ழாட்சிநிதிப் பொன்பெற்று—வேற்றயலார்
நாணத் தமிழ்நாட்டில் நன்மையடைந் தின்பமுறல்
காணக் குளிர்ந்ததே கண்.

—ஐ. க. பெருமாள்சாமி, பவானி.

சிந்தையினில் ஆர்வம் செழித்துவளம் பெற்றேங்கச்
செந்தமிழ்க்குத் தொண்டு தினம்புரிந்த—முந்தையரின்
மாணற் புதச்சிலைகள் மன்னுசென்னை மாநகரிற்
காணக் குளிர்ந்ததே கண்.

—மாதையூரான், திருவாமாத்தூர்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு. ந. ஜாபர், தெற்கு முஸ்லீம் தெரு,
சித்தையன் கோட்டை அஞ்சல், திண்டுக்கல் வட்டம்.

839

ஆளும் அரசலகில் ஆயிரந்தான் ஆனலும்
நீளும் தமிழரசின் நேராமோ ?—நாளும்
மாணக் குடிபுரக்கும் மாக்கலைஞர் நல்லரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—வே. கா. அப்துல்ரசாக், ஈரோடு-5.

சாதி சமயச் சழக்கொழித்துச் சீர்திருத்தக்
காதல் மணங்கள் கமழ்ந்திடவே—மேதகுசீர்
பேணும் பரிசும் பிறவும் திருமணத்தைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—இல. க. இரத்தினவேல், திருச்சி-1.

பொங்கு கடல்தாண்டிப் பூதலத்தோர் போற்றிடவே
மங்காத் தமிழ் பரப்பும் சிங்கமென—எங்கும்
நாணமிகு சாதிதனை நன்ருய் ஒழிப்பவனைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—உ. வி. செயக்குமார், பழனி.

அப்போது ஆண்டார் அரசர் தமிழகத்தைத்
தப்பாமல் ஆளும் தமிழரசை— இப்போது
காண அயலார் கடைப்பிடிக்கு மாட்சிதனைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எம். செல்வம், இடையகோட்டை.

காலைக் கதிரொளியில் கந்தன் திருவடியும்
மாலை மதியில் மலர்முகமும்—நீலமுறு
மாணக் கடலில் மயிலின் திருநடமும்
காணக் குளிர்ந்ததே கண்.

—சி. சுவாமிநாதன், சென்னை-17.

அம்பொன் குறளாம் அறிவுயர்த்தும் நற்சிலம்பாம்
கம்பன் சுவையார் கவியமுதாம்—இம்மூன்றைப்
பேணப் புவியனைத்தும் பேசப் புகழ்ந்தேத்தக்
காணக் குளிர்ந்ததே கண்.

—அ. கிருஷ்ணன், கனியூர்.

செங்கோலுஞ் செந்தமிழுஞ் சேர்ந்தவிதழ்ச் செம்மலர்தேன்
பொங்கிவழிந் தாளவரும் பொன்னருவி—தங்குபுகழ்
மாணப் பெருவளஞ்சேர் மாக்கடலின் தண்ணொளியைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எழிற்கோவன், ஒசூர்

எப்பாலும் சொல்ல வியலாத ஆட்சிமுறை
முப்பா லரசு மொழிந்ததுபோல்— இப்போது
பேணக் கிடைத்தநம் நாட்டின் பெருமையைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—நந்தி, வெங்கல்பாளையம்.

எங்குந் தமிழ் முழக்கம் ; இன்பத் தமிழ்நாடு ;
பொங்கும் வளங்கள் பொருள்வளர்ச்சி—தங்கம்நாம்
பூணும் கலப்பு மணத்திற்கும் போற்றுதலைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—அர. கலியபெருமாள், இலால்குடி.

கூவம் மணம்வீசக் கோட்டையினில் செந்தமிழின்
மேவு புகழ்மணக்க மேம்படுத்தி—மேவாரும்
மாணப் புகழ்ந்துரைக்கும் மாண்புத் தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—பா. முருகையன், சென்னை-1.

நெற்றி வியர்வை நிலத்தின்கண் சிந்திஏர்
பற்றி உழும்நல்ல பாட்டாளி—வெற்றியுடன்
மாணநிலப் பட்டாவை வாங்கிப் பெறுமின்பம்
காணக் குளிர்ந்ததே கண்.

—அன்பு. செயராமன், அரக்கோணம்.

மலையின் அருவி ; மழலைச் சிரிப்பு ;
கலையில் நமதரசு காட்டும்—விலைமதிப்பாம் !
நாணயம்போல் நாட்டினிலே நாயகத்தின் பல்வளத்தைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ப. சின்னச்சாமி, ஏரிப்பாளையம்

சேரிகள் எல்லாமே செவ்வனே நீங்கிவர
மாரியினல் மக்களுமே மாண்புறவே—சீரிலங்கப்
பேணும் மனைப்பட்டா பேசுகலை ஈண்டுயரக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ம. இரா. தர்மலிங்கம், வித்யாலயம்.

அன்னம் இலாவயிறும் ஆடை யிலாமெய்யும்
இன்னம் இலாவண்ணம் ஏற்றவே—மன்னுலகில்
மாண மகிழ்ச்சிகொள் மாந்தரை ராக்கனவில்
காணக் குளிர்ந்ததே கண்.

—கி. கா. இராசேந்திரன், சென்னை-7.

வளமிழந்து வாழ்விழந்து வீழ்ந்ததமிழ் மக்கள்
வளம்பெற்று வாழ்வாங்கு வாழ—விளக்கேற்ற
" வானமெழு ஞாயிறென " வந்த தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—வா. அ. நத்தோடு, கடையநல்லூர்.

முத்தமிழ் வாழ்த்த, முழங்குகடல் சீர்பாட
மெத்த புகழ்த்தென்றல் மேல்தழுவ—எத்திக்கும்
நாண வளங்கொழிக்கும் நாட்டில் தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—கே. சின்னசாமி, காட்டு எடையார்.

பொட்டில்லை ; பூச்சூடச் சுற்றத்தார் ஒப்பவில்லை ;
கட்டினேன் காரிகைக்குப் பொற்ருலி—சுட்டெடுத்த
ஆணிப்பொன் பூமுகத்தில் ஆனந்தப் புன்முறுவல்
காணக் குளிர்ந்ததே கண்.

—வெ. செகநாதன், குறிச்சி-போத்தனூர்.

கண்டுநிகர் அண்ணு கண்குளிரச் சென்னையிலே
கண்டதமிழ் மாநாடு, கண்டனையா—என் நண்பா !
காணருங் காட்சியாம் கண்கொள்ளா ஊர்வலமாம்
காணக் குளிர்ந்ததே கண்.

—வி. ஆர். துரை, திருப்பத்தூர்.

அன்னைத் தமிழை அரியணையில் வைத்தவரை
செந்நெல் விளைவுமிகச் செய்தவரை—நன்னெறியே
பூணுகின்ற நெஞ்சினரை, கற்புடைய பூவையரைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—திருவாட்டி செல்லம் பாண்டியன், மதுரை.

காலைக் கதிரைக் கடலினிலே, செந்தமிழைக்
கோலோச்சும் ஆட்சிக் கொலுவினிலே—சீலத்தைப்
பேணுகின்ற நெஞ்சினிலே, பேரின்பம் தொண்டினிலே
காணக் குளிர்ந்ததே கண்.

—பேகன், மதுரை-1.

முன்னம் தமிழ்காத்து மூவேந்தர் நாடாண்டார்
இன்னும் தமிழ்காக்க யாமுண்டென்—றின்னமுதாய்ப்
பேணித் தமிழ்வளர்த்த பேரறிஞர் நற்சிலையைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—சிகோ. ஆறுமுகம், இராசபாளையம்.

தேன்சொட்டும் செந்தமிழின் தேர்ந்த தமிழிதழே !
வான்முட்ட வாழ்த்துகிறேன் வாழ்க நீ !—நான்முகப்பில்
பேணப் பெருமைமிகு பேசுவதில் நாவலரைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

பாடச் சிறந்தது பைந்தமிழே ; நன்மைகள்
கூடப் பிறந்தது கூட்டுறவே—ஆடகப் பொன்
பூணத் தகுந்தது பூவுடலே ; ' நல்லரசைக் '
காணக் குளிர்ந்ததே கண்.

—மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

கல்லடியும் சொல்லடியும் காட்டாருய்க் கண்டாலும்
நல்லதைச் செய்திடுவீர் நாளுமென்றே—சொல்லிஉயர்
நாணலாய் வாழ்ந்திட்ட நல்லறிஞர் அண்ணுவைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எம். ஆரோக்கியசாமி, மட்டப்பாறை.

பொட்டல் நிலமெல்லாம் பூத்துக் குலுங்குவதைக்
கட்டுக் கலங்காணுங் காட்சிதனைத்—தொட்டவிடம்
மாணச் சிறக்கும் ; மகராச ஞட்சியினைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ஆனந்தக் கூத்தன், கோபாலசமுத்திரம்.

பொட்டிட்டுப் பூச்சூடிப் புன்னகையும் தான்கொண்டு
மட்டில்லா ஆவல் மனத்தடக்கி—கட்டழகி
நாணம் மிகுந்து எனையழைத்தாள் ஆங்கவளைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ச. வீரப்பன், போதுப்பட்டி.

காலையிலே கண்மலர்ந்து கஞ்சி குடித்துவிட்டே
ஆலைக்கே ஓடும் அவனுக்கு—மாலையிலே
பேண வருகின்ற பீடுதரும் கூலியினைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எம். சண்முகன், பெரியசேமூர்.

சிங்கா தனத்திற் செழுந்தமிழே நீயமர்ந்து
செங்கோற் பிடித்தாளுஞ் சீர்மைதனைப்—பொங்குகலை
வாணர் கணமெல்லாம் வாழ்த்திசைப்ப நின்னெழிலைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—திரு. மு. நம்மாழ்வார், கோயம்புத்தூர்-1.

பூட்டிய வாரசையப், பூங்குழல் சீரசைய,
நாட்டியக் காலாட, நாற்புறமும்—ஓட்டுவிழி
நாணச், சிவக்க நடைபோடும் நங்கைமுகம்
காணக் குளிர்ந்ததே கண்.

—க. தனபால், இரும்பேடு.

சீவித் தலைமுடித்துச் சீரார் திலகமிட்டே
ஓவியம் போலுடுத்தி ஓடிவந்த—காவியமே
நாணல்போல் நங்கை நடக்கும் ஒயிலழகைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எச். எலிசபெத், சென்னை-12.

" வான்மழையின் வாடைக்கும் வன்கதிரின் கோடைக்கும்
ஊன்கரைய மெய்யளிப்பான் ஊக்கமிகப்—பான்மைசூழ்
மாண்போடு விதிமுறை மாற்றிநல் வீட்டுமனை
காணக் குளிர்ந்ததே கண்."

—அமிழ்தப்பன், சென்னை-18.

சாதிமுறை யெல்லாந் தவிர்த்துத் தடையெதிர்த்து
நீதிமுறை யொன்ருல் நிலமளிக்கும்—ஓதுமுயர்
மாணப் பெருமை மலியுந் தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—சி. இரத்தினவேலனர், சென்னை-12

பனிமொழியைப் பாராப் பிரிவுத்தீ வாட்ட
தனிமைச் சிறையில் தவித்தேன்—இனிதின்று
நாணமுடன் இன்பூட்ட நாடிவந்த பெண்ணவளைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—க. தமிழ்ச் செல்வன், குறும்பூண்டி.

நாவளத்தால் நல்ல தமிழ்வளர்த்துச் சங்கத்துப்
பாவளர்த்த நாட்டில்வெண் பாவளர்த்து—கோவளத்தால்
வேணதெலாஞ் செய்து விளம்பும் தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—சத்திரமனை, சித்திரகவி, மேட்டுப்பாளையம்.

வெப்பக் கதிரால் வெடித்திட்டே காய்ந்தவ்யல்
செப்பரிய நிர்மாணச் செய்முறையால்—இப்பொழுது
நாநிலமும் நெல்விளையும் நன்னிலமாய் மாறியதைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—அ. சாரங்கபாணி, திண்டுக்கல்-2.

" வங்கக் கடலலைகள் வந்து தழுவுகின்ற
மங்காப் புகழுடைய மல்லையில்—எங்கணுமே
காண்பார் உளம்கவரும் கற்றளியைச் சிற்பத்தை
காணக் குளிர்ந்ததே கண்."

—காந்திதாசன், பல்லவராயன்பட்டி.

ஆமை முதுகின் வரியொப்ப அங்கங்கே
பூமி வெடிப்புற்ற போதினிலும்—ஊமைபோல்
நாணித் தலைகுனிந்த நல்லகதிர் நாட்டின்கண்
காணக் குளிர்ந்ததே கண்.

—ரெ. அழகப்பன், திருவொற்றியூர்.

துள்ளிக் குதித்துத் துணையாக ஆடியவள்
அள்ளும் பருவம் அடைந்தவுடன்—மெள்ளமெள்ள
நாணி வளைந்தாள் நகங்கடித்து நின்றிட்டாள்
காணக் குளிர்ந்ததே கண்.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

அன்பும் அகிம்சை அறவழியே காட்டித்தன்
என்பும் நமக்கீந்தே கினரே—அன்பில்லார்
நாணவே காந்திமகான் நல்வழிபோம் நம்மரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—வெ. ஜெகந்நாதன், காட்டிடையார்.

பத்தினிக்கும் பாவலர்க்கும் பைந்தமிழின் காவலர்க்கும்
சித்த மினிக்கச் சிலையெடுத்த—புத்தரண்ணு
பூணப் புகழ்ந்த பசுமைப் புரட்சியினைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—தொ. முத்துசாமி, தாத்தையங்கார்பேட்டை.

பஞ்சொத்த மெல்லிய பாதந் தொடுகின்ற
குஞ்சந் தவழ்கின்ற கூந்தலாள்—மஞ்ஞைபோல்
நாணமொடு மெல்ல நடந்துவரும் பேரழகைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—இலமா. பூங்குன்றன், சென்னை-28.

சிந்தை விருந்தாகச் சீரணிதேர், ஊர்திகள்
சுந்தரச் சென்னையில் சூழ்ந்ததம்மா—எந்தெந்தக்
கோணத்தில் காந்தியக் கொள்கைகள் ! அத்தனையும்
காணக் குளிர்ந்ததே கண்.

—ஏ.. சேவியர், திருச்சி-8.

எண்ணக் குளிர்ந்த திதயம்; இதழமுதை
உண்ணக் குளிர்ந்த துடலெங்கும்—வண்ணவிழி
நாணிச் சிவந்த நளின முகத்தாளைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—குழ. அண்ணாமலை, கோவை.

அண்ணு மலையருகே ஆடிச் சிறப்போடு
வண்ணம் மலிந்து வளங்கொழிக்கும்—தண்வயலில்
பூணும் கதிர்மணிகள் பூத்துக் குலுங்குவதைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—பி. ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஆரணி.

கண்ணிற்கு மையிட்டுக் காதில் குழையணிந்து
பண்ணுடனே மெல்லிசையால் பாடுகின்ற—பெண்மகளே
நாணமுடன் நின்று நகைப்பூட்டும் நின்னுருவைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—இரா. பசுபதி, ஆயக்காரன்புலம்-2.

ஒற்றுமையை நாடும் உலகக் கவிவிருதைப்
பெற்றேதான் நாட்டிற்குப் பேர்சேர்த்துச்—சுற்றம்போல்
பேணி அரசாளும் பெம்மான் கலைஞரைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—மு. அ. முகில்வண்ணன், செய்துங்கநல்லூர்.

சீராட்சி எங்கும் சிறப்பாட்சி—நம்கலைஞர்
பேராட்சி பைந்தமிழ் பேசுமாட்சி—நேராட்சி
மாணுட்சி மக்கள் மகிழாட்சி ஓராட்சி
காணக் குளிர்ந்ததே கண்.

—அபமு. போடிநாயக்கனூர்

' பட்டா ' வழங்காட்சி ; பாட்டாளி நல்வாழ்வின்
திட்டம் வகுத்தாட்சி திண்முரசு—கொட்டுதடா
மாணப் பெருமையெல்லாம் மட்டில் பெருங்காட்சி
காணக் குளிர்ந்ததே கண்.

—இ. பண்டாரம், கருங்குளம்

உங்களுக்குத் தெரியுமா ?

கரையும் தாள்

தண்ணீரில் போட்டதும் கரையக் கூடிய தாளை பென்சில்வேனியா நாட்டு நிறுவனம் ஒன்று கண்டு பிடித்துள்ளது. இந்தத் தாளுக்கு 'டிசால்வோ' (கரையும்) என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தத் தாளில் செய்த பையில் சர்க்கரைபோட்டுக் கொண்டுவந்தால், இனிப்பு சிற்றுண்டி செய்யப் பையை உடைத்துச் சர்க்கரையைக் கொட்ட வேண்டியதில்லை. அப்படியே பையோடு போட்டுவிடலாம். பையும் சர்க்கரையும் அப்படியே தண்ணீரில் கலந்துவிடும்.

மிக ரகசியக் குறிப்புகளுக்கும் (Very Secret documents), விவசாயப் பொருட்களுக்காகவும், இரும்புக் குழாய்களை ஒட்டவைக்கவும் (வெல்டிங்) இந்தத் தாள்களைப் பயன்படுத்தலாம் என்று அந்த நிறுவனம் தெரிவிக்கிறது.

புதிய தொலைபேசி

புதிய தொலைபேசிக் கருவியை தமிழ்நாடு கண்டு பிடிப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு பி. கருணாகரனும், திரு பி. சூரியநாராயணனும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மற்ற தொலைபேசியைப் போல், இதில் பேச்சு வாங்கியை (receiver) எடுத்துக் காதிற்கும் வாய்க்கும் நேராக வைத்துக் கொண்டு பேச வேண்டியதில்லை. எண்களைச் சுழற்றிவிட்டு தொலைபேசிப் பெட்டியில் (cabinet) நேரடியாகப் பேசலாம். இதில் பேசும் போது நண்பருடன் எதிரில் அமர்ந்து பேசுவதுபோல் தெளிவாகயிருக்கும். தொலைபேசியில் பேசும் உணர்வு ஏற்படாது. இந்தத் தொலைபேசியின் விலை ரூ. 196 என்று தெரிகிறது.

மருத்துவத்திற்குப் பரிசுச் சீட்டு !

பரிசுச் சீட்டிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து சென்னை நகருக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக 25 லட்சம் ரூபாயும் தமிழகத்தின் பிறபகுதிகளுக்காக 50 லட்சம் ரூபாயும் தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. ஏழை மக்களுக்குப் பயன்தரும் இத்திட்டம் விரைவில் அமுலுக்கு வரும்.

வருங்காலத்தை உருவாக்குவதற்காக சேமிக்கக்
கற்றுக்கொடுங்கள் அவர்களுக்கு !
அவர்களுக்குக் கவலையில்லாத வாழ்வு. நாளைக்கோ ? வருங்கால
உணர்வை அவர்கள் உள்ளத்தில் புகட்டுங்கள். சேமிக்கக் கற்றுக் கொடுங்கள்.
ஆம். ஸ்டேட் பாங்கிலே

சேவை புரிவதற்கே
ஸ்டேட் பாங்க்

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (T.N.S.I.D.C.) என்ற அமைப்பைஉருவாக்கியதில் நமது தொழிலமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் பெரும் அக்கரைகாட்டியுள்ளார்.இந்தநிறுவனம் சிறு தொழிலுக்குத் தேவையான உள்நாட்டுக் கச்சாப் பொருட்களைப் பல்வேறு இடங்களிலிருந்து சேகரித்து நியாயமான விலையில் விநியோகிக்க முற்பட்டுள்ளது. சாதாரணமாக அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய பொருள்களை நியாய விலைக்குச் சிறு தொழில்களுக்குக் கிடைக்கச் செய்துள்ள இந்தஏற்பாடு வரவேற்கத் தகுந்தது. அது மட்டுமல்ல சிறு தொழில்களின் பல்வேறு இறக்குமதி லைசன்ஸுகளை நன்கு ஒன்று சேர்த்து ஒட்டுமொத்தமாகச் சர்வதேச அரங்கில் இறக்குமதிப் பொருள்களுக்குப் பேரம் செய்து,குறைந்த விலையில், துரித காலத்தில் மேற்கண்ட பொருள்களை இறக்குமதி செய்து சிறு தொழில்களுக்குக் கொடுக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. தற்போதுள்ள தொழிற் பேட்டைகளுக்கு அருகில் சிறு ஷெட்டுகள் அமைத்துப் படித்துப் பட்டம் பெற்ற எஞ்சினியர்களில் புதிதாகத் தொழில் ஆரம்பிக்க விரும்புவோர்களுக்கும் உதவி செய்ய நமது தமிழக அரசு முன்வந்துள்ளது.

சிறு தொழில்களின் நிதித் தேவைகளை நிறைவு செய்யத் தமிழ்நாட்டுத்தொழில் முதலீட்டு நிறுவனம் (TNIIC) மூலம் தாராளமான முறையில் தொழிற்சாலை ஷெட்டுகள் அமைக்கவும், இயந்திரங்கள் வாங்கவும், கடன் கொடுப்பது என்று நமது அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. இந்த முடிவு விரைவில் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம். இந்த நிறுவனத்தின் கடன்களைப் பெறும் சிறு தொழில் உரிமையாளர்கள் பத்து வருடங்களில் கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் வகையிலே ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அறிகிறோம். இது தவிர நமது ஸ்டேட் பாங்க், சிறு தொழில்களுக்காகக் கச்சாப் பொருள்கள் வாங்குவதற்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கும்அன்றாடத்தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நிதி உதவி செய்ய வெகுவாக முன் வந்துள்ளது.

நம் அரசு, சிறுதொழில்கள் பதிவு செய்யப்படுதல் இது வரை இருந்த கால தாமதத்தை வெகுவாகக் குறைக்கநடவடிக்கை எடுத்துள்ளது. அதோடு மட்டுமல்ல, சிறுதொழில்களுக்கான கச்சாப்பொருள்களுக்காக மத்திய அரசின் லைசென்ஸ் அதிகாரிகளிடம் தேவையான சிபாரிசு செய்து அவைகள் கிடைக்க ஆவனசெய்து வருகிறது. சுருங்கக் கூறவேண்டுமானல், நமது மாநில அரசு சிறு தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது.

தமிழகத்தில் பெரும்பான்மை தொழில்கள் இயந்திர சாதனங்களை அடிப்படையாகக்கொண்டு உற்பத்தியில் ஈடுபடும் தொழில்கள். ஏற்பட்ட தொழில் தேக்கத்தில் இந்த எஞ்சீனியரிங் தொழில்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே நமதுஅரசு எல்லாத்துறையிலும்ஒருமுகமான வளர்ச்சி காண எண்ணி, ரசாயனம், பிளாஸ்டிக், ரேடியோ சம்பந்தமான தொழில்கள் தன் இயங்கு (Instrumentation Industries) இயந்திரங்கள் கொண்ட தொழில்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ரேடியோக்களுக்கும், டெலிவிஷன்களுக்கும் தேவையான உபபொருள்களைஉற்பத்தி செய்வதில் நமதுஅரசு முக்கியத்துவம் காட்டி அதற்காக ஒரு தொழிற் பேட்டை அடையாறில் தோற்றுவிக்க முடிவெடுத்துள்ளது.ரசாயனபொருட்கள் சம்பந்தமான தொழில்களுக்கு ஊக்கமூட்டுவதற்காக நமது அரசு சமீபத்தில் ஒரு கருத்தரங்கை நடத்தியது.

பொருளாதார முன்னேற்றத்திற்கு...

இது சம்பந்தமான தொழில்களுக்கும் சாயம், சோப்பு சம்பந்தமான பல தொழில்களுக்கும் இந்த மனுக்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம். இந்த மனுக்கள்மீது உத்தரவு பெற்றுக் கூடிய சீக்கிரம் இத் தொழில்கள் உருப்பெறும் என்று நம்புகிறோம். நமது தமிழக அரசு பொதுவாகச் சிறு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டுவதற்கு ஒரு சிறு தொழில்(S.I.B.) வாரியத்தினையே அண்மையில் அமைத்திருக்கிறது. இந்த குழு அடிக்கடி சிறு தொழில் வளர்ச்சியைப் பரிசீலனை செய்வதோடு, அந்த வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளவற்றை நிவர்த்திக்கவும் ஆவன செய்ய முற்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலும், மாவட்டஅதிகாரிகள் தலைமையில் சிறு தொழில் வளர்ச்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறு தொழில் ஆரம்பிப்பதற்கான நிதி உதவி, சர்க்கார் பதிவு, பஞ்சாயத்து அனுமதி, மின்சார விநியோகம் ஆகியவற்றில்புதிய மனுதாரர்களுக்குத் தொல்லை ஏதும் ஏற்படாமல் இந்த மாவட்டக் குழு கவனிக்கும், என்று எதிர்பார்க்கலாம். தற்போது ஏற்பட்டுள்ள நல்ல வாய்ப்புக்களை உபயோகித்து மிக வெற்றிகரமாக வளர்ந்து வரும் விவசாயத் துறையின் பொருளாதாரத்தோடு இணைத்து ஒரு பலம் பொருந்திய தொழில்துறை வளர்ச்சியை உண்டாக்குவது சிறு தொழில் அதிபர்களுக்குள்ள முழு முதற் கடமையாகும். வளர்ந்து வரும் நம் தமிழகத் தொழில் துறையிலே மணலியில் எண்ணைசுத்திகரிப்பு ஆலையும்நமது மாநிலத்தில் தொழில் வானத்திலே விடி வெள்ளியாகப் பளிச்சிட்டுவரும் சேலம் இரும்பாலையும் சிறு தொழில் வளர்ச்சிக்கும் மிக பெரிய வாய்ப்புகளையும் சாத்தியக்கூறுகளையும் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. இவற்றை உபயோகித்துத் தொழில் வளர்ச்சிக்காக ஆவன செய்வது நமது சிறு தொழில் அதிபர்களின் கடமையாகும். தமிழகத்தின் தொழில் நுணுக்க ஞானமும்,அதன் தொழிலாளர்களின் அறிவு விலாசமும் எல்லாரும் அறிந்ததே.

நமது மாநில அரசினர் தமிழகத்தின் ஏழ்மைக்கும் பின் தங்கிய பொருளாதார நிலைக்கும் தீர்வு காணச் சிறு தொழில்வளர்ச்சியை ஓர் முக்கிய முயற்சியாக எடுத்து ஆவன செய்கிறார்கள், என்ற நம்பிக்கையைச் சிறு தொழில் அங்கங்களின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

—திரு எம். எஸ். பார்த்தசாரதி.

பட்டமளிப்பு மண்டபத்தில் பரிசளிப்பு விழா

வங்கக் கடலருகேயமைந்த வனப்பு மிக்க சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாப் பட்டமளிப்பு மண்டபத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் 21-ம் நாள் மாலை இந்தியத் திரைப்படக் கலைஞர்கள் குழுமியிருந்தனர். இந்திய அரசு நடத்தும் 17-வது தேசியத் திரைப்படப் பரிசளிப்பு விழா, டில்லி நகருக்கு வெளியில் இரண்டாவது முறையாகச், சென்னையில் முதன் முறையாக எழிலும் ஏற்றமும் நிறைந்த வகையில் நிகழ்ந்தது.

திரைப் படத் தயாரிப்பில் முன்னணியில்திகழ்வது தமிழகம். பல ஆண்டுக் காலமாகத் திரைப் பட வுலகில் தொடர்பு கொண்டு பல திரைப்படங்களை எழுதித் தயாரித்துப் புகழ் பெற்றவர் தமிழ் நாட்டு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள். கலைக் கோயிலாம் தமிழகத்தின் தலைநகரில் கலையுலகில் பெருமை பெற்ற கலைஞர், இந்திய அரசு தேர்ந்தெடுத்த சிறந்த திரைப் படங்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசளித்த காட்சியின் மாட்சி மிகச் சிறப்பாக அமைந்தது.

மத்திய செய்தி-ஒலி பரப்பு அமைச்சர் சத்திய நாராயண சின்கா தலைமையேற்றுக் கூறியதாவது :—

"திரைப் படத் தயாரிப்பில் அதிக அளவில் நாம் படங்களைத் தயாரித்த போதிலும் போதுமான அளவு முன்னேற்றம் அடையவில்லை. நமது திரைப் படங்கள், மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்களின் தோல்விகளையும் சாதனைகளையும் துயரங்களையும் சிக்கல்களையும்உண்மையாகப் படம் பிடித்துக் காட்டுவதாய் அமைய வேண்டும்."

பின்னர் தமிழ் நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், பரிசளிப்பதற்கு முன்னர் சீரிய கருத்துரையாற்றினார்.

"இந்த ஆண்டுப் பரிசளிப்பு விழா, கலைகளில் சிறந்த சென்னையில் நிகழ்வது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். கலை உலகத்தோடு எனக்குள்ள தொடர்பு குறித்து நீங்கள் அறிவீர்கள். வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சீரிய முறையில் சித்தரிக்கும் திரைப் படங்களை ரசிப்பதில் என்றுமே நான் தவறியதில்லை.

எந்தத் துறையானாலும் புதுமையான சோதனை முறைகளைப் புகுத்துவது அவசியமானது. திரைப் படத் துறையிலும் புதுமைகளைப் புகுத்திச் சிறந்த படங்களைத் தயாரித்து வெளியிட வேண்டும். கிராமப்புற மக்களுக்கு அவர்கள் எது போன்ற படங்களை விரும்புகின்றனர் என்பதை அறிந்து அதற்கு ஏற்பப் படங்களைத் தயாரிக்கலாம். கிராமப்புறங்களில் உள்ள மக்கள் அதிக அளவில் சினிமா பார்க்க விரும்பினாலும் அங்கெல்லாம் போதுமான அளவில் சினிமாக் கொட்டகைகள் இல்லை. அதைத் தீர்க்கத் 'திரைப்பட அரங்குகள் நிதி நிறுவனம்' ஒன்றை அமைக்க இருக்கிறோம். இந்த நிறுவனம் முதலில் கிராமப் புறங்களில் சினிமாக்கொட்டகைகளைக் கட்ட நிதி உதவும் . பிறகு, குறைந்த செலவில் திரைப் படம் தயாரிப்பவர்களுக்கு நிதி உதவும்." இவ்வாறு குறிப்பிட்டுப் பரிசு பெறுபவர்களை வாழ்த்தி உரையை முடித்துப் பின்னர் பரிசுகளை வழங்கினார்.

மத்திய அரசின் ராஜாங்க அமைச்சர் குஜ்ரால் இவ் விழாவில் கலந்து கொண்டு, திரைப்பட வளர்ச்சிக்குத் தமிழக அரசு ஆற்றி வரும் உதவிகளைப் பாராட்டிப் பேசினார்.

1969-ம் ஆண்டுக்கான பரிசுகள் கீழ்க்கண்ட திரைப் படங்களுக்கு வழங்கப்பட்டன.

சிறந்த படம்—புவன்ஷோமே (இந்தி)

2-வது சிறந்த படம்—தீபராத் திரிர் கப்யா—(வங்காளி).

வட்டாரப் பரிசுபெற்றபடங்கள்:

தமிழ்—இருகோடுகள்.
மலையாளம்—அடிமைகள்.
கன்னடம்—கஜ்ஜபூஜா.
தெலுங்கு—ஆதர்சகுடும்பம்.

பரிசு பெற்ற கலைஞர்கள் :—

சிறந்த நடிகர்—உத்பல் தத் (இந்திப் படத்தில் நடித்தவர்)

சிறந்த நடிகை—மாதவி முகர்ஜி (வங்காளப்படத்தில் நடித்தவர்).

சிறந்த பின்னணிப் பாடகர்—எஸ். டி. பர்மன். (ஆராதனா இந்திப்படம்)

சிறந்த பின்னணிப் பாடகி—கே.பி. சுந்தராம்பாள். (துணைவன்).

மேலும், திரு. ஜெமினி கணேசன் சௌகார் ஜானகி உள்ளிட்ட சிறந்த நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும் திரைக் கதை அமைப்பாளருக்கும் ஒளிப் பதிவாளருக்கும் இந்திய அரசின் சார்பில் தமிழக முதல்வர் பரிசுகளை வழங்கினார்.

இறுதியில் நடன நிகழ்ச்சியுடன் விழா முடிவுற்றது.



இந்திய மாநிலங்களிலேயே அனைத்து இந்தியாவுக்கும் 'வழி காட்டியாகத் திகழும் மாநிலம் எது என்று கேட்டால் நாம் நெஞ்சுயர்த்திச் சொல்லலாம்—

"தமிழ்நாடு"—என்று.

* அரசியல் அமைதி
* பசுமைப் புரட்சி
* கல்வி வளர்ச்சி
* ஊரெங்கும் மின் இணைப்பு
* குடும்பநலத் திட்ட வெற்றி
* குடிநீர் வடிகால் வசதி
* தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல்வேறு உதவிகள்.

இப்படி ஒவ்வொரு துறையிலும் புதிய புதிய சாதனைகளைப் பெருக்கி ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது தமிழ்நாடு!

இப்பொழுது நிலவிடும் நம் நாட்டின் பொதுவான நிலையில் நம் மாநிலத்தின் வளர்ச்சி மகத்தானதாக விளங்குகிறது.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களால் இந்தியாவின் பொருளாதாரச் செலவாணிப்போக்கில் ஒரு மேலான நிலை காணப்பட்டது. ஆனால், திட்டங்கள் தேங்கிய காரணத்தால் ஒரு மந்தமான, சாதாரணச் சூழ்நிலை உருவாகியதைநாட்டினர்அறிவர்.

இந்நிலையிலும் தமிழ் நாட்டின் வளர்ச்சி மிகச் சிறந்ததாக விளங்குகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழ்நாடு அரசின் நிருவாகத் திறனும், வகுக்கப்பட்டுள்ள கொள்கைகளும் நமக்கு இப்பெருமையைத் தேடித் தந்து வருகின்றன.

மற்ற மாநிலங்களின் வளர்ச்சியோடு நம் மாநிலத்தின் வளர்ச்சியை ஒப்பு நோக்கி, நம் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

எந்தச் செயலை எடுத்துக் கொண்டாலும் நம் மாநிலம் வழிகாட்டியாகத் திகழ்கிறது என்பதையும் இக்கட்டுரைத் தொடரில் காணலாம்.

எடுத்துக்காட்டாக உங்கள் கையில் உள்ள "தமிழரசு" இதழை எடுத்துக் கொள்ளுங்கள். துவக்கத்திலேயே விற்பனையாளர்கள் வாயிலாக 50,000 பிரதிகள் விற்பனையாகும் நிலையும், விரைவில் ஒரு லட்சம் பிரதிகளாக வளரக்கூடிய சூழ்நிலையும் அரசு ஏடுகளின் வரலாற்றில் கேள்விப்பட்டதுண்டா? இதுபோன்ற இதழ் வேறு எந்த மாநிலத்திலிருந்தாவது வெளி வருகிறதா?

அரசு ஏடு என்றால் புள்ளி விவரப் பட்டியல் மட்டுமே இருக்க வேண்டும். காணக் கவர்ச்சியற்றதாக அமைதல் வேண்டும் என்ற பழைய கோலத்தை மாற்றி, மற்ற மாநிலங்களுக்குத் 'தமிழரசு' ஏடு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

மைய அரசு சார்பில் நடைபெறும் ஏடுகள்கூட அழகான வெள்ளைத் தாளில் அச்சடிக்கப்படுகின்றனவே தவிர மக்கள் விரும்பி வாங்கிப் படிக்குமளவுக்கு அவை வெளிவரவில்லை என்பதாக அந்தத் துறையில் உள்ளவர்களே சொல்லுகின்றனர்.

அரசு ஆற்றிடும் பணிகளை நாடறியச் செய்ய இதுபோன்ற ஏடுகள் தேவை என்பதை வலியுறுத்தி வெளி மாநிலத்திலிருந்து இங்கு வருகை தந்தவர்கள் நம் முயற்சியைப் பாராட்டியுள்ளனர்.

'தமிழரசு' இதழ் போன்ற இன்னொரு நன் முயற்சியே— தமிழக அரசின் செய்தித் தொகுப்புத் திரைப்படமான 'செய்திக் கதிர்' வெளியீடு.

மைய அரசு வெளியிடும் செய்திப் படம் தவிர மாநில அளவில் வேறு எந்த மாநிலமும் செய்திப்படம் தயாரிக்கவில்லை. ஆனால், தமிழ்நாடு அரசுதான் முதன் முதலாகச் செய்திப்படம்தயாரித்து வருகின்றது.

மைய அரசு செய்திப்படத்தில் தமிழகத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள், செய்திகள் தொடர்ந்து இடம்பெற வாய்பில்லை; இடம் பெற்றாலும் இரண்டு நிமிடங்களுக்கு மேல் இடம் பெற முடிவதில்லை. பரந்த நிலப் பரப்பான இந்த நாட்டில் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளையும் தொகுத்துக் காட்டுவது எளிதல்ல. எனவே தமிழக அரசின் சாதனைகளையும் நிறைவேற்றியுள்ள பணிகளையும் நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு அறிவிக்கும் கருவியாகச் 'செய்திக்கதிர்' அமைந்துள்ளது.

தமிழக அரசின் முதல் செய்தித் தொகுப்பு வெளியீட்டு விழாவில் இன்றைய முதல்வரும் அன்றையப் பொதுப்பணி அமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில் 'செய்தி' என்ற சொல்லுக்குக் கலை நயத்துடன் கூடிய புதிய விளக்கம் ஒன்றை அளித்தார்கள்.

அந்த விளக்கம் இதுதான்: "செய்யப்படும் செயல்கள் அனைத்தும் தீ போல் பரவுவதால்தான் 'செய்தி' என்ற சொல் உண்டாகியிருக்கும்"

ஆமாம், உண்மையான செய்திகள் வேகமாக மக்களிடம் பரவ வேண்டியது அவசியம் அல்லவா?

அந்த வகையிலும் தமிழ்நாடு அனைத்து இந்தியாவுக்கும் வழிகாட்டியாகத் திகழ்கிறது.

இப்படிப்பட்ட செய்திகளை இங்கே தொகுத்துக் கோடிட்டு மட்டும் காட்டப்போவதில்லை.

அச்சாதனைகளின் விளைவுகளையும் விவரிக்கப் போகிறோம். அதன் வெற்றிகளையும் காட்டப் போகிறோம்.

முதன் முதலாக..." ....

நம்நாடு விவசாய நாடு என்று சொல்லிக் கொண்டு தொழில் நாடுகள்' என்று சொல்லப்படும் நாடுகளிலிருந்து உணவு தானியங்களை எதிர் பார்த்துக் கொண்டிருந்த களங்கத்தைக்—கசப்பான நிலையை— நம் மாநில அளவில் மாற்றி அமைத்து வெற்றி பெற்ற விவரத்தை விளக்கமாகக் காண்போம், அடுத்த இதழ்களில்!

தமிழரசு

முகவரி மாறுகிறது!

✦

டிசம்பர் 1உ முதல்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

"தமிழரசு" அலுவலகம்,

அரசினர் தோட்டம்

சென்னை-2.



'வருவார் கொழுநர் எனத்திறந்தும்
வாரார் கொழுநர் என அடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ'

பரணிபாடிய செயங்கொண்டார் ஓர் உயிர்சித்திரத்தையே நம்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் இக்கவிதையில். போருக்குச் சென்றிருக்கிறான் கணவன். போர் முடிந்து வீரர்கள் ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இரவு நேரம். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. எப்படி வரும்? வீதியில் சரக்........ சரக்.....என்று சத்தம்—தன் கணவன்தான் வந்து விட்டானோ என்று கதவுக் குடுமியைப் பிடித்துத் திறக்கிறாள். அவன் இல்லை. வேறு யாரோ? கதவை மூடுகிறாள்! இபபடிக் கதவைத் திறப்பதும் மூடுவதுமாக விடியற்காலை வரை நடக்கிறது. அதனால் கதவின் குடுமியே தேய்ந்து விட்டதாம்! பிரிவினால் வாடும் உள்ளத்திற்குத்தான் அந்த இரகசியம், அந்த வேதனை புரியும். சின்னஞ் சிறு கவிதையில் ஒரு நாடகமே உருவாகி நம்முன்னால் நடிக்கப் படுகிறது......!

சென்னை மாநகரில் பாந்தியன் சாலையில் உள்ள கலை அரங்கத்தினைச் (National Art Gallery) சுற்றிப் பார்த்துக்கொண்டே வரும்பொழுது..... இப்படி ஒரு நாடகம் நம் முன்னேயே நடிக்கப்படுவது கண்டு திடுக்கிட்டோம். காதலனைப் பிரிந்து வாடும் பெண்! "சீக்கிரம் திரும்பி வந்து விடுகிறேன்" என்று சொல்லிப் போனவன் வரவில்லை. கள்ளங் கபடமற்ற வெள்ளை மனது படைத்தவள் அவள். கவலையே இன்னதென்று அறியாமல் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த இளமான். இன்று அந்த இளம் உள்ளத்திலே இனம் புரியாத ஒரு தவிப்பு; சொல்ல முடியாத ஓர் ஏக்கம். நினைவு, அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. இந்த உலக நினைவே மறந்து விட்ட ஓர் அதியற்புத நிலை; அத்தனையும் வடித்தெடுத்துப் பார்ப்போர் இதயத்தைக் கசக்கிப் பிழியும் சித்திரம் ஒன்றினைக் கண்டு பிரமித்து நின்று விட்டோம். காவியப் புகழ் பெற்ற சகுந்தலையின் ஓவியம் அது. ராஜா ரவிவர்மா தீட்டிய ஓவியம். கவிதையில் தான் நாடகத்தைத் தீட்ட முடியும் என்பதல்ல; ஓவியத்திலும் நாடகத்தைத் தீட்ட முடியும் என்பதற்கு அந்த ஓவியமே சான்று. இப்படிப் பட்ட அருமையான கலைச் செல்வங்கள், அழியாப் புகழ் பெற்ற ஓவியங்கள் பலவற்றை இந்தக் கலை அரங்கில் காணலாம். சென்னை வந்து மியூசியத்தைப் பார்ப்பவர்கள் அதைச் சார்ந்துள்ள இக்கலை அரங்கினைப் பார்க்காமல் போகக் கூடாது. அவ்வளவு அருமையான கலைச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது இந்தக் கலை அரங்கம்!

இக்கலை அரங்கு, படைக்கப் பட்டிருக்கும் கட்டடமே காணுதற்கரிய கம்பீரமான கட்டடம் ஆகும். மொகலாயக் கட்டடக் கலையின் எழில் ஓவியமாகத் திகழ்கிறது. மிக விசாலமான படிக்கட்டுகளிலே ஏறி உள்ளே சென்றால்...... அரியதொரு கலைக் கூடத்தினுள் நுழைகின்ற உணர்வு நம்மையறியாமலேயே

ஏறபடுகறது. பசைசப பசேலென்று......நிழல் தரும் பெரிய மரங்கள்.. மரகதப்படுதா விரித்தாற் போன்ற பசும் புல்வெளி.... உள்ளத்தைச் சில்லரிக்கும் இளங்காற்று இன்பகீதம் இசைக்க, அமைதியான சூழ் நிலையில்.... அரியதொரு கலைப் பூங்காவாகத் திகழ்கிறது இக் கலைக்கூடம்.

ஓவிய மன்னன் இராஜா ரவிவர்மாவின் அழியாப் புகழ் பெற்ற அமர ஓவியங்கள் பல, வண்ண வண்ண நிறங்களில் நம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கின்றன.

துஷ்யந்தனை நினைத்து ஏங்கும் சகுந்தலையின் ஓவியம் ஓர் அமர காவியம். 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்ற கதை தான். அந்த ஓவியத்தை விட்டு அப்படி இப்படி நகர முடியாது! விட்டுச் செல்ல மனம் வராது. தூரிகை எடுத்து அந்த ஓவிய மன்னன் எப்படித்தான் இதை வரைந்தானோ? அவன் தூரிகையிலிருந்து எழுந்த கோடுகள்.. நம் இதய நாடிகளையே வருடி விடுகின்றன. அந்த ஓவியங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கும் பொழுது!...., நம் நினைவெல்லாம் எங்கோ ஓடி விடுகிறது. பல நூற்றுண்டுகளுக்கு முன்னுல் ரோமாபுரியின் சிறப்புமிக்க உலகப் புகழ் பெற்ற ஓவியர்கள் லியனுர்டோவின்ஸி.. மைக்கேல் ஏஞ்சலோ .... தங்களுடைய கைவண்ணத்தால், அழியாப் புகழை ஈட்டிக் கொண்ட ஈடு இணையற்ற அக்கலைஞர்களின் நினைவு, இராஜா ரவிவர்மாவின் ஓவியங்களைக் காணும்போது ஏற்படாமல் இல்லை. ரோமாபுரியில் உள்ள விமானநிலையத்திற்கே லியனுர்டோ வின்ஸி விமான நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டுத் திகழ்வதும் நம் நினைவுக்கு வராமலில்லை.

ரவிவர்மா தீட்டிய சித்திரம்.

ராய்-சௌத்திரியின் கைவண்ணத்தால் உருவான சிலை

காதல்பிரிவால்வாடும் காரிகையின் ஓவியம் மட்டுமல்லாமல்.. அன்புக் குழந்தையை அரவணைக்கும் தாய் ....சீவி முடித்துச் சிங்காரிக்கும்எழில் மங்கை.. இப்படி எத்தனை எத்தனையோ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயிரோவியங்கள் பலவும் உள்ளன.

அதைவிட்டு அடுத்த பிரிவுக்குள் நுழைந்தால், இந்திய ஓவியக் கலையை வரலாற்றுப் பின்னணியுடன் நாம் நுகர முடிகிறது. ஓவியக் கலையின் சீரும் சிறப்பும் முகலாயர்கள் காலத்தில் உச்ச நிலையில் இருந்தன. அவற்றை வடித்தெடுத்துக் காட்டும் அற்புத ஓவியங்கள் பலவற்றை நாம் காண்கிறோம். இதயத்தோடு இரகசியம் பேசும் இரசபுத்திரக் காலத்து ஓவியங்கள், தஞ்சை மராட்டிய மன்னர் காலத்து ஓவியங்கள், முழுமலர்ச்சி பெற்றுத் திகழ்ந்த தக்கணத்து ஓவியங்கள் எல்லாமே இங்கே நம்மிடம் பேசாமல் பேசிக்கொண்டிருக்கின்றன.

ராய் சௌத்திரி—இந்தப் பெயர் ஓவிய உலகில் தனி இடம் பிடித்துக் கொண்டு விட்ட பெயராகும். சென்னை ஓவிய, சிற்பக்கல்லூரியின் முதல்வராகப் பலகாலம் பணியாற்றிய திரு ராய் சௌத்திரியின் கைவண்ணம் பெற்றுத்திகழும் இருசிலைகள் இங்கே வைக்கப்பட்டுள்ளன. '' வறுமையின் கொடுமை '' என்ற தலைப்பிட்ட சிலையின் முன்னுல் நிற்கும்பொழுது நம்மையறியாமலேயே கண்களில் நீர்பொங்குகிறது.

ஓவியக் கலைபற்றிப் பழம்பெரும் நூலான தொல்காப்பியம் பேசுகிறது. நாட்டை ஆண்ட மன்னர்களே சிற்பக் கலையில், ஓவியக் கலையில் வல்லவர்களாக விளங்கினுர்கள். அந்தச் சங்கிலித் தொடர் அறுந்துபடவில்லை. மாறுக, மேலும் பொலிவு பெற்றுத் திகழ்கிறது. இந்த உண்மையைத்தான் கூறுமல் கூறுகிறது இந்த ஓவியக் கலையரங்கம்!

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக, எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.

டெக்ஸ்டூல்

டீசல்



என்ஜின்கள்

உழைப்பிற் சிறந்தவை

டெக்ஸ்டூல் என்ஜின்கள் அரசாங்கக் கடனுதவி கொண்டு வாங்க மத்திய சர்க்காராலும், மாகாண சர்க்கார்களாலும் அங்கீகாரம் பெற்றவை. இப்படி வாங்கப்பட்ட ஏராளமான டெக்ஸ்டூல் என்ஜின்கள், எல்லா மாகாணங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஜில்லாவாரியாக ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைகளுக்கு விண்ணப்பிக்கவும்

டெக்ஸ்ட்டூல் கம்பெனி லிட்

கோயமுத்தூர்-6

Registered No. M. 8657

R.R. 565/70
17 DEC 1970

தமிழரசு

ங்கள் இருமுறை டிச. 16 1970. 35 காசு

திட்டம் திட்டங்களிற் சில...

வீடுகள் கட்ட உதவித் தொகை

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பூர்வகுடி மக்களுக்கும் தீப்பிடிக்காத மலிவு வீடுகள் கட்டுவதற்குக் கடனுகவும், மானியமாகவும் உதவி அளிப்பதெனத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

ஒற்றையறை கொண்ட வீட்டிற்கு ரூ. 940 கொடுக்கப்படும். இதில் ரூ. 250 கடனுகவும் எஞ்சியதொகை மானியமாகவும் கருதப்படும். நூறு மாதத் தவணைகளில் இது திரும்ப வசூலிக்கப்படும்.

இரு அறைகள் கொண்ட இல்லத்திற்கு ரூ. 1,805 வீதம் உதவி அளிக்கப்படும். இதில் ஒரு பகுதி கடனுகவும் ஒரு பகுதி மானியமாகவும் கொடுக்கப்படும்.



ஆராய்ச்சிக் கழகம்

மரவள்ளிக் கிழங்குச் செடிகளைப் பொதுவாகப் பாதிக்கும் நோய்களைத் தடுக்க ஆலோசனை கூறச் சேலத்தில் 5 லட்ச ரூபாய் செலவில் ஜவ்வரிசி ஆராய்ச்சிக் கழகம் அமைக்கத் தமிழக அரசு தயாரென முதலமைச்சர் கூறியுள்ளார்.

நாடோடிகள் நலத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ்ச் செங்கற்பட்டு மாவட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ரூ. 75,000 அனுமதி அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒரக்காடு, உத்திர மேரூர், வயலூர், ஆகிய இடங்களில் நாடோடிகளுக்காகக்குடிசைகள் கட்டிக் கொடுக்கப்படும். அவர்கள் வேளாண்மை செய்யக் கருவிகள், எருதுகள், விதைகள், உர வகைகள் வாங்க இத்தொகை பயன்படுத்தப்படும்.



வட்டியில்லாக் கடன்

தாழ்த்தப்பட்டவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வட்டியில்லாக்கடன் திட்டம் ஒன்றைத் தமிழக அரசுகொண்டுவந்துள்ளது. 22 முதல் 50 வயது வரையுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தொழில் தொடங்க ரூ.500 முதல் 10,000 வரை கடன் தொகை வழங்கப்படும்.

செருப்புத் . தயாரிக்குந் தொழிலுக்கு ரூ. 500; பல சரக்குக் கடை வைக்க ரூ. 1,000; மின்சார, காஸ் வெல்டிங் யூனிட் ஏற்படுத்த ரூ. 3,000; அச்சகம் ஆரம்பிக்க ரூ. 5,000; லேத் தொழிற்சாலை ஆரம்பிக்க ரூ. 10,000; கடன் தொகை தரப்படும். சொந்தப் பொறுப்பில் ரூ. 1,000 வரையும், அதற்கு மேல் வேண்டுவோருக்குச் சொத்து அடமானம் பேரிலும் கடன் தரப்படும்.

நிலமற்றேருக்கு

கோயம்புத்தூர் மாவட்டத்தில் காடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 13,000 ஏக்கர் தரிசு நிலங்கள் விரைவில் நிலமில்லாத விவசாயிகளுக்கு வழங்கப்படும்.



ஊழியருக்கு வரி விலக்கு

சென்னை நகரில் மட்டும் மாதம் ரூ. 300 அல்லது அதற்குக் குறைவாகச் சம்பளம் வாங்கும் ஊழியர்கள் அனைவருக்கும் தொழில் வரியை ரத்து செய்யத் தமிழ் நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் ஒரு லட்சம் பேர் பயன் அடைவர்.

சேரிக்குப் பதில் சிறந்த வீடுகள்

சென்னை நகரில் உள்ள சுமார் 600 சேரிப் பகுதிகளில் சென்னை மாநகராட்சிக்கும் தமிழ் நாடு அரசிற்கும் சொந்தமான இடங்களில் உள்ள ஏறத்தாழ 100 சேரிகளைச் சீரமைக்கும் வேலை உடனடியாகத் துவக்கப்படும். இதற்காகச் சுமார் ரூ. 3 கோடி செலவிடப்படும்.



உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2

உறுதியானது. நிலையானது-ஆனாலும் மலிவானது

சங்கர் சிமெண்ட்

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட். தன் பில்டிங். சென்னை-2

23 ஆண்டுகள் நிலைத்தது — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது'

சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ', சென்னை-18

தமிழரசு

மலர் 1. 1970 டிசம்பர் 16 இதழ் 12.

தமிழ் நாட்டு ஆவணக் காப்பகம்
17 DEC 1970
எழும்பூர், சென்னை

தமிழ்நாட்டில் தமிழுக்கு எதிர்ப்பா?
—அமைச்சர் திரு.செ. மாதவன் கட்டுரை

பாட்டுக்கொரு புலவன்

இரத்தம் தந்து இன்னுயிர் காப்போம்

கவிஞன் விலை குறித்தால்?

கல்விச் சிந்தனை

நன்மைகள் 1000, 1000

ஊட்டச்சத்துள்ள உணவுபெற
வீரிய ஒட்டு மக்காச்சோளம்

வாழ்க தாய்மை! வளர்க மழலைகள்!

அன்ன பூரணி

குடிசையும் கோபுரமாகும்

வெண்பாப் போட்டி

மற்றும் வழக்கமான பகுதிகளுடன்

முதல்வரின் பயணக் கட்டுரை

இனியவை இருபது

முகப்பில்:
சென்னைக் கடற்கரையில்
உள்ள பாட்டுக்கொரு
புலவன் பாரதியின்
உருவச் சிலை.

சிறுவர்க்கேற்ற திரைப்படம் தேவை !

திரைப்படங்கள் நல்ல பிரச்சார சாதனங்கள். இந்தக் கருத்தை ஏற்க மறுக்கும் சிலர் இருக்கலாம். கல்வி மற்றும் நல்ல பண்புகளைப் போதிக்கத் திரைப்படங்கள் சிறந்த கருவிகளாக விளங்குகின்றன.

உலகில் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய மனம் ஒன்றுதான் என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

குழந்தை தான் மனிதனுக்குத் தந்தை என்று வேர்ட்ஸ்வோர்த் கூறியுள்ளார்.

பெரும்பான்மையான குழந்தைகள், வறுமையில் சிக்கிடும் ஏழைக் குழந்தைகள். அந்த நல்ல மலர்கள் வறுமையால் வாடுகின்றன.

அவர்களுக்கு எல்லா வாய்ப்பும் கிடைக்கிற சமுதாயம் அமைய வேண்டும்.

இங்கு, குழந்தைகளுக்கான திரைப் படங்கள் அதிகம் தயாரிக்கப்படவில்லை. அதற்கான வாய்ப்புக்கள் நம் நாட்டில் அதிகமாக உள்ளன. வால்ட் டிஸ்னி, சிறுவர்கள் படம் எடுத்தாலும் வயதானவர்களும் பார்த்து மகிழும்படி இருப்பதை நாம் அறிவோம்.

அந்த வகையில் நம் நாட்டிலும் சிறுவர்களுக்கான திரைப்படங்களைத் தயாரித்தளிக்கத் திரைப்பட அதிபர்கள் முன்வர வேண்டும்.

817

10. முசோலினி.

"என் தாய்த் திருநாடும் வையத்து நாடுகளும் குடியாட்சியைப் பெற்று உய்யும் நாள் எந்நாளோ?'' என்று ஏங்கித் தவித்தான் மாஜினி.

அவன் பிறந்த இத்தாலியில்—

''குடியரசா? அது அழுகிக் கொண்டிருக்கும் ஒரு பிணமல்லவா?'' என்று ஏளனம் புரிய ஒரு பிள்ளை பிறந்தான் 1883-ம் ஆண்டு.

அவனுடைய தந்தை ஒரு கொல்லர். அன்பு மகனோ, மாறுபட்ட கருத்துப் படைத்தோரை எல்லாம் இரக்கமின்றிக் கொல்லும் தொழிலை மேற்கொண்டான் பின்னாளில்.

பட்டறையில் பலர் கூடுவர்.

உலைக்களத்தில் தணலை எழுப்பியவண்ணம் கனல்மிக்க அரசியல் கருத்துக்களை உதிர்த்துக் கொண்டிருப்பார் தந்தை. சூடேறிய இரும்பைச் சம்மட்டியால் அடித்தவாறு ஏழைகள் அடிமைகளைப் போல் வாழுகின்ற அவல நிலையையும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தையும் பற்றி அலசிக் கொண்டிருப்பார் அவர். சுற்றி நிற்போர் பலரும் கேட்டுக் கொண்டிருப்பர். உலைக்களத்தின் சூடு அவர்களின் உடலில் பாயும்.

ஓரமாக நின்று கேட்டுக் கொண்டிருப்பான் அவர் மகன் முசோலினி. அவன் உள்ளத்திலும் புரட்சியின் அனல் வீசும். இத்தாலியை இணையற்றதோர் நாடாக மீண்டும் மாற்றிட வேண்டும் என்ற ஆவேசம் எழும்.

அருமைத் தாயகம் வறுமையில் உழல்வதைக் கண்டு நாட்டுப் பற்று உடையோருக்கு ஆவேசம்வருவது இயற்கைதான்.

ஆனால் அந்த ஆவேசம் அறநெறியில் செயல்பட வேண்டும். அது வன்முறைக்கு வித்திட்டு நாச வழி நடக்குமானால், கரையற்ற காட்டுவெள்ளம் கணக்கற்ற வயல்களை அழித்துவிட்டுக் கடலில் சென்று விழுவதைப் போலத் துயர்களை மட்டுமே விளைவித்துவிட்டு இறுதியில் நாட்டு வரலாற்றினைக் களங்கத்தில் ஆழ்த்திவிடும்.

கடமை என்பது உணர்ச்சியின் செயல்வடிவம்.

அந்த உணர்ச்சி வெள்ளம் புரண்டு வரும் கால்வாயின் இரு கரைகளே கண்ணியமும் கட்டுப்பாடும்.

தாய் நாட்டின் நிலையை உயர்த்த எண்ணுபவனுக்கு இந்த மூன்றும் இருந்தாக வேண்டும்.

ஆனால் இத்தாலியைப் புகழ் வானத்தில் ஏற்றிட எண்ணிய அந்தச் சிறுவனுக்கோ வன்

முறையில் மட்டுமே நாட்டமிருந்தது.

''உலக அமைதியா? அது கோழைகளின் முகமூடி, செயலற்றவரின், செயலாற்ற அஞ்சுவோரின் ஏமாற்று வாதம்'' என்பது அவன் நம்பிக்கை.

''போர் என்பது மனித உணர்ச்சிகளின் உச்ச நிலை. அந்த உணர்ச்சியைத் தூண்டி, வாழ்வா சாவா என்னும் நிலையில் மனிதனை நிற்கவைத்து மகத்தான செயல்களை ஆற்றுவது தான் முன்னேற்றம்'' என்றான் அவன்.

கருத்து வேறுபட்ட அரசியல் வாதிகளை ஆயுதங்களைக் கொண்டு தாக்குவதோ வெடி குண்டுகளை எறிந்து கொல்லுவதோ தவறானதல்ல என்று உறுதியாகக் கருதினான் அவன்.

ஆரம்பப் பள்ளியில் பயிலும் பொழுது நெஞ்சில் கிளர்ந்த ஆவேசம் அவன் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டபோது மேலும் பெருகி வளர்ந்தது.

தொழிலுக்காக அண்டை நாடான சுவிட்சர்லாந்துக்குச் சென்ற சமயம், அங்கே எழுச்சி மிக்க அரசியல் சொற்பொழிவுகளை நிகழ்த்தலானான் அவன். வன்முறையின் அடிப்படையில் நாட்டின் வாட்டத்தைப் போக்கிடும் வழிகளைச் சொல்லலானான். அச்சமுற்ற அரசு அவனை வெளியேற்றியது.

இலத்தீன், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், ஆங்கிலம் போன்ற பலமொழிகளையும் கற்றிருந்த முசோலினி பிரான்சுக்குச் சென்றான். அங்கும் வன்முறைக்கு வித்துக்களை ஊன்றலானான். எனவே அங்கிருந்தும் அவன் வெளியேறிட நேர்ந்தது.

தாயகம் திரும்பியதும் போர்ப்படையில் சேர்ந்தான். பயிற்சி முடிந்ததும் மீண்டும் ஆசிரியன் ஆனான். ஆனால் அரசியலில் இறங்கிச் சாதனைகள் நிகழ்த்த எண்ணிய நெஞ்சம் ஆசிரியத் தொழிலில் அமைதியின்றித் தவித்தது. அந்நாளைய இத்தாலியின் அவல வாழ்வினை மாற்றிடத் துடித்தது.

அறிவும் ஆற்றலும் அற்ற சில சந்தர்ப்பவாதிகள் இத்தாலிய அரசியலில் அன்று செல்வாக்குப் பெற்றிருந்தனர். ''எளியோர் பலரை வலியோர் சிலர் வதையே புரிகுவதா?'' என்று நம்மிடையே வாழ்ந்து மறைந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கேட்டதையே முசோலினி வேறு பாணியில் கேட்டான்.

இத்தாலியின் பெரும்பகுதி வறுமையில் வாடிக் கொண்டிருந்தது. அதனால் கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்பட்டது. எனவே, பொதுவுடைமை இயக்கத்தின் கருத்துக்கள் வேகமாகப் பரவி வந்தன.

எந்த அளவுக்கு ஒரு நாட்டின் ஏழ்மை அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்குப் பொதுவுடைமைத் தத்துவம் வேகமாகப் பரவும். வறுமை மாற மாற அதன் வேகமும் குறைந்துவிடும்.

ஆஸ்திரியாவின் எல்லையைப் பற்றிய கட்டுரையொன்றினை எழுதி ஆஸ்திரிய அரசாங்கத்தின் கண்டனத்திற்கு உள்ளாகி, அங்கிருந்து வெளியேற்றப்பட்ட முசோலினி, தாயகம் வந்ததும் பொதுவுடைமை இயக்கத்தில் பற்றுக் கொண்டான்.

விரைவில் பொதுவுடைமைக் கட்சிக் கோபுரத்தின் கலசமானான்.

ஓட்டமான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இத்தாலிய அரசு போர் தொடுக்க முன்வந்தது. பொதுவுடைமை இயக்கம் இதனை எதிர்த்தது. 'போர்லி' என்னும் பொதுவுடைமை ஏட்டின் ஆசிரியனாக இருந்த முசோலினி போரை எதிர்க்கும் இந்த இயக்கத்தில் பெரும்பங்கு பெற்றான்.

ஆவேசம் மிக்க முசோலினியின் எழுத்துக்கள் அரசுக்கு அதிர்ச்சியைத் தந்தன. ஓராண்டுச் சிறைவாசம் பரிசாகப் பெற்றான் முசோலினி. சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் "அவந்தி" என்னும் ஏட்டின் ஆசிரியனானான். ஆரம்பித்த சில திங்களுக்குள் இலட்சம் பேர் "அவந்தி"யின் சந்தாதாரர் ஆயினர்.

ஓட்டமான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இத்தாலிய நாடு புரிந்த போரை எதிர்த்தவனாயினும் முசோலினியின் இதயத்தில் போரின்மேல் கொண்ட பற்று வெளிப்படுவதற்கு ஒரு தருணம் வந்தது.

1914-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் உலகப் போர் தொடங்கியது.

பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் மூன்றும் ஓர் அணியில் திரண்டன.

ஜெர்மனி, ஆஸ்திரியா, அங்கேரி ஆகியவை எதிர் அணியில் இருந்தன.

ஜெர்மனியுடனும். ஆஸ்திரியாவுடனும் ஏற்கெனவே ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தபடி இத்தாலி ஜெர்மனியின் அணியில் சேருமென்றே எவரும் நம்பினர்.

பொதுவுடைமை இயக்கத்தினர் "போரில் இத்தாலி சேரக்கூடாது" என்னும் பிரச்சாரம் செய்து வந்தனர். முசோலினியோ, போரில் கலந்துகொண்டு இத்தாலி, பிரிட்டன்- பிரான்சின் பக்கம் சேரவேண்டும் என்று ஒரு எண்ணத்தைப் பரப்பிடலானான். பொதுவுடைமைக் கட்சியினர் வெகுண்டனர். கட்சியிலிருந்தும் "அவந்தி" ஏட்டின் ஆசிரியப் பீடத்தினின்றும் அவனை அகற்றினர்.

முசோலினி அயர்ந்தானில்லை.

"இத்தாலிய மக்கள்" என்னும் பத்திரிகையைத் தொடங்கினான். தன் கொள்கையை வலியுறுத்திக் கிளர்ச்சியை ஊட்டும் கட்டுரைகள் வரையலானான். 'இத்தாலிய நாட்டின் எல்லைகள் சில ஆஸ்திரிய நாட்டின் வசம் இருக்கின்றன. ஆஸ்திரியாவுக்கு எதிர் அணியில் நிற்போருடன் ஒத்துழைத்து. போரில் வென்று அந்த எல்லைகளை மீட்டிட இதுவே நல்ல தருணம், இதனை நழுவ விடுவது ஆண்மைக்கும் அறிவுக்கும் இழுக்கு" என்று எங்கும் எழுச்சிமிக்க உரைகள் நிகழ்த்தலானான்.

முசோலினியின் கட்சியே இறுதியில் வென்றது. 1915-ம் ஆண்டு இத்தாலி ஆஸ்திரியாவுக்கும் ஜெர்மனிக்கும் மாறாக பிரான்சின் அணியில் சேர்ந்தது.

பிரான்சின் கைக்கூலி என்றனர் சிலர் முசோலினியை.

முசோலினி தன் அந்தரங்கத்தை விளக்கத் தானே படையில் சேர்ந்தனன். சின்னாளில் உயர் பதவி பெற்ற முசோலினி ஆஸ்திரியாவுடன் நடந்த சண்டையில் படுகாயமுற்று இல்லம் திரும்பினான்.

ஆனால் தனது ஏட்டின் மூலம் ஆஸ்திரியப்படையை இத்தாலிப் படை முறியடிக்க ஒரு தூண்டுதலாக இருந்தான் முசோலினி—எனினும்—

1919-ம் ஆண்டு போர் முடிந்து வெர்சேல்ஸ் நகரில் ஒப்பந்தம் முடிந்ததும் போரில் நிகழ்ந்த வரவு-செலவுக் கணக்கைப் பார்த்த இத்தாலியர் திடுக்கிட்டனர்.

அப்பெரும்போரில் இறந்துபட்ட இத்தாலியர் எண்ணிக்கை ஆறு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம். உடல் உறுப்புக்களை இழந்தோர் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம். படுகாயமடைந்தோர் பத்து இலட்சம் பேர். இவற்றிற்கு விலையாக இத்தாலிக்குக் கிடைத்ததோ ஜரா என்ற ஒரே பிரதேசந்தான்.

இத்தாலியின் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது. ஏமாற்றம் எரிச்சலாக உருவெடுத்தது; போரில் நசித்துப் போன பொருளாதாரத்தைப் போரின் விளைவாக எழுந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏக்கத்தோடு பார்த்தது.

எரிச்சல் எரிமலையாயிற்று; கலகங்கள், குழப்பங்கள். எங்கணும் எழுந்தன.

வேலை நிறுத்தங்களும் கடையடைப்புகளும் சங்கிலிபோல் தொடர்ந்தன.

தொழிலாளரின் எழுச்சி, பொதுவுடைமை இயக்கத்தின் போர்க் கருவியாயிற்று.

கலகங்களை அடக்கவும், நாட்டின் நிலையைச் சீர்படுத்தவும் மனமும் ஆற்றலுமின்றி அரசு இருந்தது—பெயரளவில்.

நாட்டின் நிலையைப் பயன்படுத்திப் புதிய தத்துவம் ஒன்றினைத் தயாரிக்கலானான் முசோலினி.

போர்முடிந்து வீடு திரும்பிய படைவீரர்களைக் கொண்டு பாசிசப் படை ஒன்றை உருவாக்கினான்.

"இன்னலுறும் இத்தாலி இன்ப வாழ்வு பெற இதோ ஓர் அருமருந்து" என்று பாசிசத்தைப் பட்டிதொட்டி எங்கும் பரப்பிடலானான்.

பாசிசம் என்பது என்ன? அதன் அடிப்படைக் கொள்கைகள் என்ன?" என்பாருக்கு முசோலினியே விடைதந்தான் 1920-ல்.

"பாசிசத்துக்கு நிலையான கொள்கை என்று எதுவும் இல்லை. இத்தாலியை எப்படியும் முன்னேற்றுவதுதான் இதன் ஒரே குறிக்கோள்" என்பதாக ரோம் நகரத்தின் வீதியெங்கும் தீவிரப் பிரச்சாரம் செய்தான். ரோம் நகரில் இந்த இடத்தில்தான் எப்போதும் நின்று அவன் பிரச்சாரம் செய்வது வழக்கம், என்று இந்திய தூதரக நண்பர்கள் காட்டியது என் நினைவுக்கு வந்தது.

ஆவேசத்தோடு அவன் பேசிய அனல் தெறிக்கும் பேச்சுக்கள் பாசிசக் கட்சியை வளர்க்கப் பெரிதும் பயன்பட்டன.

1921-ல் தேர்தல் வந்தது.

முப்பது பேர்களுடன் பாராளுமன்றத்தினுள் நுழைந்தான். அங்கு புயலாக வீசினான். ஆளும் கட்சியினருக்குப் பயங்கரக் கனவாக விளங்கினான்.

அடுத்த தேர்தல் வரும்வரை காத்திருக்க முசோலினியின் மனம் இடந்தரவில்லை. மக்களாட்சி முறையில் நம்பிக்கையற்றவனாயிற்றே அவன்!

பாசிசத்தின் பணிகளை மேலும் வன்முறைச் சார்புடையதாக்கினான். கருஞ்சட்டைப் படையினர் ஆயுதங்கள் தாங்கி, ஓட்டு முறையால்பெறமுடியாத அரசை வேட்டு முறையால் பெறத் துவங்கினர்.

நகரங்களெல்லாம் மெள்ள மெள்ளப் பாசிசப் படையின் வசமாகி வந்தன.

1922-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் பாசிஸ்டு படை ரோமை நோக்கி நடைபோட்டது. அதிர்ச்சியடைந்த அர்சாங்கம் இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது. ஆனால் முசோலினியின் எழுத்திலும் பேச்சிலும் மயங்கி இருந்த இத்தாலிய அரசர், "முசோலினியால் மீண்டும் இத்தாலி ஒரு சாம்ராஜ்யம் ஆகக்கூடும்" என்ற ஆசையில், இராணுவச் சட்டத்தை ரத்து செய்தார். அமைச்சரவையின் விலகலை ஏற்று, முசோலினிக்கு அழைப்பு விடுத்தார்.

முசோலினியின் அமைச்சரவை பதவி ஏற்றது. பதவி ஏற்றதும் பாராளுமன்றத்தில் முசோலினி நிகழ்த்திய முதல் பேச்சு அவனது எதிர்காலத் திட்டங்களைத் தெளிவாக்கி விட்டது.

"நான் நினைத்தால்—இந்தப் பாராளுமன்றத்தை ஒழித்துக் கட்டமுடியும். ஆனால் உறுப்பினர்களான உங்களையெல்லாம் ஏன் இங்கே விட்டு வைத்திருக்கிறேன் என்றால், நீங்கள் கடமை உணர்வோடும், நேர்மையோடும் பணியாற்றி எனக்கு உதவுவீர்கள் என்ற காரணத்தால்........ நேற்றைய ஆட்சியை நாங்கள் ஒழித்ததைப் போல, இன்றைய ஆட்சியையும் நீங்கள் ஒழிக்க முடியும் என்று கனவு காணுகிறீர்கள். அந்த முயற்சியில் ஈடுபடுவோர்

மிகக் கடுமையான தண்டனைக்குள்ளாவர்." என்பதுதான் அந்தப் பேச்சு.

எதிரிகளை ஒழித்துக் கட்டுவதில் இட்லருக்குச் சற்று இளைத்தவன்/ முசோலினி.... ஒழிக்கப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கையை ஒப்பிடும்பொழுது. ஆனால் எதிரிகளை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவன் எவர்க்கும் சளைத்தவனல்ல.

"காளான்களைப் போலே இத்தனை கட்சிகள் ஏன் இந்த நாட்டில்? இத்தாலி உருப்பட ஒரே ஒரு கட்சி மட்டும் இருந்தால் போதுமே? இத்தாலி கட்சி என்னுடையதாக இருக்கட்டும்" என்று அவன் நினைத்தான்.

எதிர்க்கட்சிகள் சட்டவிரோதமாக்கப்பட்டன.

பத்திரிகைச் சுதந்திரம் பறிபோயிற்று.

பாராளுமன்றம் பெயரளவில் இருந்தது.

பாசிஸ்ட் கவுன்சில் நாடாளும் உறுப்பாக இருந்தது. அதன் முழு அதிகாரம் பெற்றவனாக முசோலினி இருந்தான்.

அவனை எதிர்ப்பவர்கள் எல்லாம் பாசிஸ்ட் இயக்கத்தின் பயங்கரத் தாக்குதலுக்கு ஆளாயினர். அரசியல் படுகொலைகள், களவு, சொத்துக்கள் நாசம் போன்ற கொடுஞ்செயல்கள் நாட்டு முன்னேற்றத்தின் பெயரால் பாசிஸ்ட் இளைஞர்களால் நடத்தப்பட்டன. பாசிசத்தின் கணைகளுக்குப் பலியானோர் தவிர எஞ்சியிருந்தோரை, 'நாட்டுத் துரோகம்' என்ற பெயரால் நாடு கடத்தினான் முசோலினி.

வாழத் தகுதியற்ற மூன்று தீவுகள் முசோலினியின் அரசியல்பகைவர்களுக்காக ஒதுக்கப்பட்டன. மூன்றே ஆண்டுகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் முசோலினியின் எதேச்சாதிகார ஆட்சியின் கரங்களில் சிக்கி மாண்டனர்.

தகிடுதத்தங்கள் பல புரிந்து, எதிரிகளை நிர்மூலமாக்கித் தேர்தலை நடத்தினான்—அமோகமான வெற்றி பெறுவது அவனுக்கு எளிதாயிற்று.

ஆனால் முசோலினியின் தாகம் அப்பொழுதும் அடங்கவில்லை.

"என்னுடைய ஆணை வழியில் தானே இத்தாலி இயங்கிக் கொண்டிருக்கிறது? அப்படி இருக்க ஒப்புக்கு ஏன் நீங்கள் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள்?" என்று ஒரு நாள் பாராளுமன்றத்தையும் கலைத்துவிட்டான் முசோலினி. ஜனநாயக மாளிகையின் கடைசிக் கதவும் சாத்தப்பட்டுவிட்டது.

இத்தனை கொடுமைகளுக்கும் இடையேயும் சில நன்மைகளும் காண முடிந்தது முசோலினியின் ஆட்சியில்.

முசோலினி ஏற்றமிகு கூட்டுறவுச் சங்கங்களும் இயந்திரக் கலப்பைகளும் தந்து ஏர்முனைக்குப் புதியதோர் தெம்பை ஏற்றினன்; கைத்தொழில்களுக்குப் புதிய விறுவிறுப்பை ஊட்டினன்.

வரிகளைக் குறைத்தான்; மருத்துவ வசதிகளைப் பெருக்கினன். வேலையில்லாத் திண்டாட்டத்தை விரட்டினன். நிர்வாகத்தில் நல்ல ஒழுங்கையும் சிக்கனத்தையும் புகுத்தினன். முதன்முறையாக இத்தாலியில், இரயில்கள் குறித்த நேரத்தில் குறித்த நிலையத்தை அடைந்தது முசோலினியின் காலத்தில்தான். இன்னும் பலப்பல நன்மைகளைப் புரிந்தான்.

இத்தனை நன்மைகளுக்குப் பிறகும் முசோலினியை வரலாறு இகழ்வதற்குக் காரணம் சனநாயக உரிமைகளை அவன் பறித்ததுதான். உரிமைகளைக் கொடுத்துவிட்டு வசதிகளை அனுபவிப்பது கோழைகளின் தொழிலல்லவா? ''கண்களை விற்றுச் சித்திரம் வாங்கினல் கைகொட்டி நகையாரோ?''

அஞ்சா நெஞ்சம் படைத்த சனநாயகவாதிகள் அங்கும் இங்கும் எழுப்பிய சலசலப்புகளைக்கண்டு முசோலினி அஞ்சினனில்லை. சர்வதேச சக்திக்கே சவால்விட்டவனாயிற்றே. ஒரு சில வல்லரசுகள் மட்டுமே ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதித்த சர்வதேச சங்கத்தை எதிர்த்து ஏளனம் செய்தான் முசோலினி.

இட்லரின் ஆதிக்கத்திற்கும் அவன் தலைவணங்கிடவில்லை. அயல் நாடான ஆஸ்திரியாவை ஆக்கிரமித்துக் கொள்ள முயன்ருன் இட்லர். ஆனல் வலிமைமிக்க ஜெர்மன் ஏகாதிபத்தியம் தன் எல்லைக்கு அருகே வருமானல் இத்தாலியின் உரிமைக்கு ஊறுவிளையும் என்று கருதிய முசோலினி, ஆஸ்திரியா ஜெர்மன் ஆதிக்கத்திற்கு அடிபணியாத சுதந்திர நாடாக இருப்பதையே இத்தாலி விரும்புகிறது என்று முழங்கினன்.

முசோலினியுடன் கலந்துரையாடி அவனை வசப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் 1934-ம் ஆண்டு இட்லர் முசோலினியை வெனிஸ்நகரில் சந்தித்தான். அங்கு நடந்த பேச்சில் முசோலினிக்கே வெற்றி கிடைத்தது. ஆஸ்திரியாவில் நாஜிகளின் ஆரவாரம் அடங்கத் தொடங்கியது.

ஆனல் 1935-ம் ஆண்டில் முசோலினி எத்தியாப்பியாவை வளைத்துக் கொண்டபொழுது பிரிட்டனும் பிரான்சும் இத்தாலியின் பகைநாடுகளாயின. அந்தப் பகையைத் தடுக்க முசோலினி இட்லருடன் கூட்டுச்சேர வேண்டியதாயிற்று.

ஆதிக்க மோகம் கண்களை மறைக்க முசோலினி 1939-ஆம் ஆண்டில் அல்பேனியாவை ஆக்கிரமித்துக் கொண்டான். அந்த வெற்றியின் எக்களிப்பில் அடுத்த ஆண்டு கிரேக்கத்தின் மீது படையெடுத்தான். ஆனல் எங்கும் கண்டிராத எதிர்ப்பினை முசோலினி அங்கு சந்திக்க வேண்டி வந்தது. இறுதியில் இட்லரின் துருப்புகளின் துணையுடன் முசோலினி கிரேக்கத்தில் புகுந்தான்;

சர்வாதிகாரி முசோலினியின் ஆதிக்கம் சரியத் தொடங்கியது. ஆப்பிரிக்காவில் அவன் பெற்ற தோல்விகள் அவற்றிற்கு அடிப்படையாக அமைந்தன. இதற்கிடையே உள்நாட்டில் முசோலினிக்கு எதிர்ப்பு வலுத்தது. பாசிஸ்ட் கவுன்சிலிலிருந்த பலர் முசோலினியைக் கவிழ்க்கச் சமயம் பார்த்திருந்தனர்.

1943-ம் ஆண்டு இத்தாலியின் ஒரு கோடியான சிசிலித்தீவில் நேச நாடுகளின் படைகள் வந்து இறங்கின. இத்தாலியின் படைகள் உலகத்து நாடுகளில் எல்லாம் நடக்க வேண்டும் என்று விரும்பினன் முசோலினி. ஆனல், உலகத்து நாடுகளின் படைகளெல்லாம் இத்தாலியில் வந்து குழுமியிருந்தன. இந்த நிலையில் ஆட்சியைக் கைப்பற்றி முசோலினியைச் சிறை வைத்தனர், பாசிஸ்ட் கவுன்சில் உறுப்பினர்கள். ஆனல் இத்தாலி இரண்டாவது உலகப் போரில் தொடர்ந்து ஈடுபடுவதை விரும்பிய இட்லர் படைகளை அனுப்பி தந்திரமாக முசோலினியை மீட்டு, முசோலினிக்குச் சற்று மதிப்பு எஞ்சியிருந்த வட இத்தாலிக்கு, அவனை அழைத்துச் சென்ருன். அங்கேசென்று ஒரு பொம்மை அரசாங்கத்தினை அமைத்தான் முசோலினி. ஆனல், அந்தப் பொய்யான வாழ்க்கையும் நெடுநாள் நீடிக்கவில்லை. 1943-ம் ஆண்டில் இட்லரின் ஆதிக்கம் தகர்க்கப்பட்ட பிறகு தப்பி ஓட முயன்ருன். ஆனல் சுவிட்சர்லாந்து எல்லையை நோக்கி அவன் ஓடிக்கொண்டிருந்தபொழுது இத்தாலியின் வீரர்கள் அவனைச் சுட்டுக் கொன்றனர்.

அந்தச் சர்வாதிகாரியின் உடல் மிலான் நகருக்கு எடுத்துவரப்பட்டுத் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டது. பலரின் ஏளனத்திற்கு ஆளாயிற்று;

''குடியரசு ஓர் அழுகிக் கொண்டிருக்கும் பிணமல்லவா'' என்று கேலி பேசியவனின் உடல் அங்கே அழுகிய வண்ணம் காற்றில் ஆடிக்கொண்டிருந்தது.

உலகப்படத்தில் இத்தாலியை உற்று நோக்கினல் அது ஒரு பூட்ஸ் அணிந்த காலைப்போன்ற தோற்றமளிக்கும்;

அந்தக் காலடியின் கீழ் அவனியைக் கொண்டுவர வெறியாட்டம் ஆடிய ரோமாபுரியின் வீரன்தான் முசோலினி.

சில நாட்களுக்குப் பிறகு, முசோலினியின் பிணம், அவனுடைய குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது, சர்வாதிகாரிகளுக்காக எழுப்பப்பட்ட சமாதிகளில் முசோலினியின் சமாதியே இறுதியானதாக இருக்கவேண்டும் என்பதே இன்றைய இத்தாலியின் வேண்டுகோளாக இருக்கிறது என்று எண்ணிக்கொண்டே வந்தேன்;

அதற்குள் கார் நாங்கள் தங்கியிருந்த ஓட்டலை வந்தடைந்தது. திவோலித் தோட்டத்திலிருந்து ரோம் நகர் வரை வந்த பயணத்தின்போது என் மனத்திரையில் எழுந்த இத்தாலியின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிய எண்ண அலைகளும் ஓய்ந்தன. மறுநாள் சுவிட்சர்லாந்தில் உள்ள சூரிக் நகர் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றிய எண்ணத்துடன் ஓய்வெடுக்கச் சென்றேன்.

(தொடரும்)

தமிழ் நாட்டில் தமிழுக்கு எதிர்ப்பா?

தாய்நாட்டில் தாய்மொழிக்காகப் போராடும் விந்தை நிலை உலகிலேயே தமிழனுக்குத்தான் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணுகிறேன்.

தமிழ் மொழியில் பேசுவது, எழுதுவது என்பதைத் தாழ்வாகக் கருதிய காலம்—எல்லாம் தமிழ், எங்கும் தமிழ், இன்பத் தமிழ் எங்கள் உயிர் என முழக்கமிடுபவர்கள் மக்கள் வெள்ளத்தில் மிதந்து சென்றகாலம்— தாய்மொழி தமிழ்மொழி வேண்டும் ; ஏற்றுக் கொள்கிறோம், ஆனல் ''உலகில் அறிவியல் கருத்துக்களை அறிந்துகொள்ள வேண்டாமா? தமிழில் அறிவியல் கருத்துக்களை, விஞ்ஞான நுட்பங்களைக் கொணர்வது இயலுமா?'' என்று ஐயவினு எழுப்பித் தமிழ் நாட்டில் குட்டையைக் குழப்பி வரும் காலம்—இப்படிப் பல்வேறுபட்ட காலக் கட்டங்கள் கருத்துக் குழப்பங்களைத் தமிழர் உள்ளத்தில் தோன்றச் செய்து வருவதைத் தமிழ்நாட்டில் கண்டு வருகின்றோம்.

அந்நியர் ஆட்சி விரட்டப்பட்டு சுதந்திர நாட்டில் கடந்த இருபத்திரண்டு ஆண்டுக் காலமாக மொழிப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணவில்லை. பயிற்சி மொழி, படிக்கின்ற மொழிகள் பற்றி இன்னும் முடிந்த முடிவில்லை. இதன் விளைவு இன்றைய இளம் தலைமுறையினர் அல்லலுக்கு ஆளாகின்றனர். எதிர்காலச் சமுதாயம் எப்படி உருவாகவேண்டும் என்பதே முடிவாகவில்லை.

இத்தகைய சிந்தனைகள் உள்ளத்தில் வேதனை மிகச் செய்கின்றன. வேதனை உள்ளத்தோடு நொந்து வாடும் நம்மை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் சொல்லம்பு கொண்டுதாக்கும் சிலர் தமிழ் நாட்டிலேயே உள்ளனர்.

சில நாட்களுக்கு முன் ஒரு ஆங்கில நாளிதழின் தலையங்கத்தில் எழுதப்பட்ட கருத்துக்கள் இத்தன்மையினவாக இருந்தன. நான் கூறிய சில கருத்துக்களை அடிப்படையாக வைத்து, காழ்ப்புக் கக்கப்பட்டிருக்கின்றது. காழ்ப்புணர்ச்சி மிகுதியில் உண்மை மறைக்கப்பட்டுவிட்டது. சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையைக்கூட அறியமுயலாமல் ஆத்திரத்தில் நமக்கு அறிவூட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மத்திய கல்விக் கூடங்களின் தேவை பற்றி ஆராயத் தொடங்கி, தமிழ் பயிற்சிமொழியாவதைக் குறை கூறி, குறுகிய எண்ணமுடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டி, அகில பாரத உபதேசம் செய்து, விவரம் தெரியாதவராக்கி முடித்திருக்கிருர்கள்.

தொழிலமைச்சர்

திரு. செ. மாதவன்

நான் சில கருத்துக்கள் கூறிப் பல நாட்களுக்குப் பின் இப்படிப்பட்ட விமர்சனம் திடீரென்று வருவதே வியப்பைத்தந்தது. விமர்சனத்தில் ஆத்திர உணர்ச்சி மிகுந்திருந்தது கவலையைத் தந்தது. ஆனல் விமர்சித்தவர்கள் பற்றிய நினைவு வந்தவுடன், எதிர்பார்க்க வேண்டிய கருத்துக்கள் தாம் என அமைதி அடைந்தேன்.

மத்திய அரசு நடத்தும் பள்ளிகளைப்பற்றி, நடத்த எண்ணும் கல்லூரிகளைப்பற்றி நான் தெரிவித்த கருத்துக்கள் விமர்சிக்கப்பட்டுள்ளன. மத்தியக் கல்லூரிகள் எப்படித்தோன்றப் போகின்றன என்பதைத் தெரிந்துகொள்வதற்குள்ளாக எதிர்ப்பேன் என்பதா, என வினு எழுப்பி, அமைதியோடு ஆலோசிக்க அறிவுரை தரப்பட்டுள்ளது. தெரிந்து கொள்ளவில்லை என்று சொல்லிவிட்டு, ஏன் வேண்டும் மத்திய கல்லூரிகள் என்பதற்கு விளக்கமும் தரப்பட்டுள்ளது. வேடிக்கையாக இருக்கின்றது.

இந்த விளக்கம் எங்களுக்குத் தெரிந்திருந்த காரணத்திலேலே தான் இந்தக் கொள்கையின் அடிப்படையையே நாங்கள் எதிர்த்து வருகிறது என்பதை ஆத்திரத்தில் மறந்து விட்டார்கள். அந்தஆத்திரத்தில் ''மாதவன் தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாகத் திணித்து வருகிறார்'' என்று எழுதப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் அனைத்திலும் தமிழ் பயிற்சி மொழியாக ஆக்கப்படவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. இன்றைக்கு அமுல் நடத்தப்படும் பயிற்சி மொழிக் கொள்கை முந்திய ஆட்சிக் காலத்திலிருந்தே அரசுக் கல்லூரிகளில் இருந்து வருவதையும், தமிழகச் சட்டமன்றத்தில் தமிழ் பயிற்சி மொழித் திட்டம் ஐந்து ஆண்டுக்காலத்தில் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதையும் ஆங்கில மோகத்தில் மறந்து விட்டார்கள். நான் கல்வித் துறைப் பொறுப்பேற்ற நாளில் எந்தவிதமான புதிய கொள்கையும் உருவாகவில்லை. எனினும், ஏதோ தனிப்பட்ட முறையில் நான் புகுத்துவதாகக் கற்பனை செய்து விட்டார்கள். தமிழ் நாட்டில் இப்படியும் சிலர்!

பல்கலைக் கழக மானியக் குழு பற்றி என்ன கூறினேன் என்று அறியாமலேயே அறியாமைப் பட்டம்சூட்டிவிட்டார்கள். ஒரே இந்தியா, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே உடை, ஒரே உணவு என்று கூக்குரலிடும் சில வெறியர்களின் சாயல் விமர்சனத்தில் தெரிகின்றது. தாய் நாட்டில் தாய் மொழிக்கு எதிர்ப்பா என்ற வேதனைதான்.

அந்த நாளிதழின் தாக்குதல் மூலம் பயிற்சிமொழிக் கொள்கை பற்றியும், கல்வித் துறையில் மத்திய மாநில அரசுகளின் அதிகார வரம்புகள் பற்றியும் தமிழ் மக்களைச் சிந்திக்க வைக்க ஒரு வாய்ப்புக் கிடைத்ததில் பெருமகிழ்ச்சி.

நமது நாட்டில் பயிற்சிமொழி விவாதத்திற்குரிய ஒரு பிரச்சினையாக ஆகிவிட்டதற்குக் காரணம், இடைக்காலத்தில் வெள்ளையர் ஆட்சி ஏற்பட்டிருந்தது தான் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆங்கிலம் கல்வித் துறையில் ஆக்கிரமிக்க நேரிட்ட சரித்திர நிகழ்ச்சி இப்போது நமக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

எத்தனை மொழிகள் கற்க வேண்டும் என்பதைத் தேவையையும், அவசியத்தையும் பொறுத்துத் தீர்மானிக்க வேண்டும். அரசியல் ஆதிக்க உணர்வுகளின் அடிப்படையில் தீர்மானிக்கக் கூடாது. இதன் காரணமாகத்தான் மும்மொழித் திட்டத்தை நாம் நிராகரித்தது.

அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு ஆட்படாது, தமிழரின் நன்மை கருதி, நமது அரசு இருமொழித் திட்டத்தை நாட்டுக்குத் தந்தது. அந்த அடிப்படையில் பயிற்சி மொழித் திட்டத்தையும் அணுக வேண்டும். முன்னரே குறிப்பிட்டபடி ஆங்கில ஆதிக்கம் நமது நாட்டில் ஏற்பட்டிருக்காவிட்டால் இந்தப் பிரச்சினைக்கே இடமிருந்திருக்காது.

கற்போர் தங்களுடைய தாய் மொழியில்தான் கல்விப் பயிற்சி பெற வேண்டும் என்பதில் உலகில் எந்தக் கல்வி நிபுணரும் வேறுபட்ட கருத்துத் தெரிவித்ததில்லை. ஆங்கிலத்திற்காக முனைந்து வாதாடும் அறிஞர்களும் இதற்கு மாறுபட்ட கருத்தை இதுவரை தெரிவிக்கவில்லை. சரித்திர நிகழ்ச்சி தந்துவிட்ட ஆங்கில மொழி இருக்கட்டும் என்று வாதாடுகின்றார்களே தவிர, தாய்மொழியில்—இப்போதோ எப்போதோ——கல்விப் பயிற்சி அமைய வேண்டுமா வேண்டாமா என்பது பற்றிக் கருத்துத் தெரிவிப்பதில்லை. தாய் மொழியில் தான்—தமிழ் மொழியில் தான் எல்லா மட்டங்களிலும் இன்றோநாளையோ கல்விப் பயிற்சி தரவேண்டும் என்பது நமது உறுதியான கொள்கையாகும்.

இது மொழிப் பற்றின் அடிப்படையிலோ அல்லது சிலர் கற்பிப்பதுபோல் மொழி வெறியின் அடிப்படையிலோ அமைந்த கருத்தல்ல. கல்வி நிபுணர் கோத்தாரி அவர்கள் தலைமையில் இந்தியத் துணைக் கண்டத்தின் கல்வி நிபுணர்களையும் இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்சு ஆகிய நாடுகளைச் சேர்ந்த கல்வி நிபுணர்களையும் கொண்டு மத்திய அரசு நிறுவிய கல்விக் குழுவின் அறிக்கை நம் கொள்கைக்கு ஆதரவாக அமைந்துள்ளது. அறிஞர் குழுவின் அறிவுரைகளைக் காண்போம் :—

''மாணவர்கள் சுலபமாக அறிவு பெறுவதற்குப் பயிற்சி மொழி வகை செய்ய வேண்டுமானால், தாய்மொழிதான் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும்'' என்றும், ''பாட மொழியாக அயல் மொழி இருக்குமானால், மனப்பாடம் செய்வதிலேயே மாணவர்கள் கவனம் செல்லுமே ஒழிய, கருத்தைக் கிரகிப்பதில் செல்லாது'' என்றும் அறிஞர் குழு அறிவித்து உள்ளது.

உலகக் கல்வி நிபுணர்களே இவ்வளவு தெளிவாக ஒப்புக்கொண்ட பிறகு பயிற்சிமொழி பற்றி ஐயங்களை எழுப்பிச் சமுதாயத்தில், குறிப்பாக மாணவர்கள் உள்ளத்தில் குழப்பம் செய்ய முயல்வது - நாட்டின் நலனுக்கு எதிரானது என்றே கருதுகின்றேன். இத்தகைய குற்றம் செய்பவர்களைச் சமுதாயம் கண்டிக்கத் தவறினால் எதிர்காலத் தமிழர் சமுதாயத்திற்குப் பெரும் தீங்கு விளையும் என நம்புகிறேன். அறிஞர்கள் தந்த முடிந்த முடிவுக்குப் பின்னும் ஐயங்களை எழுப்புவது அறிஞர்களுக்கு அழகாமோ?

பிறிதொரு சாரார் தாய்மொழி தான் பயிற்சி மொழியாக அமைய வேண்டும் என்பதை முழுக்கவும் ஒப்புக்கொண்டு, ஆனால் இம் மாற்றம் ஏற்படும் போது மாணவர்களைப் பாதிக்காது, கல்வித் தரம் குன்றி விடாது பார்த்துக் கொள்ள வேண்டும் என விரும்பும் நல்லறிஞர்கள். இவர்களுடைய கருத்துக்களை ஏற்று மதித்து நடக்கத் தமிழக அரசு என்றைக்கும் தயாராக இருக்கின்றது.

ஆனால், இத்தகைய கருத்துடையோர் இத்திட்டம் நிறைவேறுவதற்கு உருவான வழிமுறைகளை இதுவரை தந்திலர்; மெதுவாகப் போகவேண்டும், அவசரம்கூடாது திணிக்கக் கூடாது என்று எச்சரிக்கைகள் தருவதோடு நின்றுவிடுகின்றார்கள். உருப்படியாக இவர்கள் சொல்வதெல்லாம் பயிற்சி மொழி பற்றி முடிவு செய்வதை மாணவர்கள் பெற்றோர்கள் விருப்பத்திற்கு விட்டுவிடுங்கள் என்பதுதான். இதன் விளைவாகத் திட்டமிட்ட முயற்சி இல்லாமல் குழப்பம்தான் மிஞ்சும் என்பது திண்ணம். மாணவர்களை வழிப்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் விருப்பம் என்று கூறி, கல்லூரிகளில் நிலையற்ற தன்மையை உருவாக்கலாமா?

இதுகுறித்தும் கோத்தாரி கல்விக் குழு கூறும் கருத்துக்கள் நோக்கற்பாலன. ''பயிற்சி மொழி மாற்றத்தில் நீண்ட காலத் தாமதம் ஏற்பட்டால், இந்தப் பிரச்னை மேலும் சிக்கலானதாகவும், சிரமமானதாகவும் ஆகி விடும்'' என்று அக்குழு கூறியிருக்கிறது. இதை உணர்ந்த காரணத்தால்தான் தமிழக அரசு முதற் கட்டமாக அரசுக் கல்லூரிகளில் படிப்படியாகத் தமிழ்மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டு வருகின்றது.

தமிழ் நாட்டில் தனியார் நடத்தும் கல்லூரிகள் 94. அரசுக் கல்லூரிகள் 39. தனியார் கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழி விரும்பும் மாணவர்களுக்குத் தரப்படுகின்றது. அரசுக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் படிப்படியாகத் தமிழ் பயிற்சிமொழி வகுப்புக்களைத் தோற்றுவித்து வருகின்றோம். இப்படிச் செய்வது ''கட்டாயத் திணிப்பு'' என்று அலறுபவர்கள், இதைவிட வேறு சிறந்த திட்டம் தமிழைப் பயிற்சி மொழியாக்கத் தந்தார்களா என்றால், இல்லை. குற்றம் சொல்லித் திட்டத்தைக் குலைக்க விரும்புகிறார்களே தவிர, இவர்களுக்கு நல்லெண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறும்போது, இடைக்காலத்தில் பல இடர்கள் விளையலாம்-பல பிரச்சினைகள் உருவாகலாம்-பலசிக்கல்கள் ஏற்படலாம், மறுக்கவில்லை. இவைகளுக்குத் திட்டமிட்டு, வழிமுறைகள் கண்டாக வேண்டும். உதாரணமாகத் தமிழில் பாடநூல்கள் வெளி வர வேண்டும். தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக வேண்டும். இவைகளைத் திட்டமிட்டு நிறைவேற்ற முடியும்.



இதைத்தான் கோத்தாரி கல்விக் குழு அறிக்கை குறிப்பிடுகின்றது. இந்த அடிப்படையில் தமிழில் பாட நூல்கள் தோன்ற, தாய் மொழியில் எல்லா மாவட்டங்களிலும் பயிற்சியளிக்கத் திட்டங்கள் தருபவர்கள் வழி நின்று நடக்கத் தமிழகஅரசு காத்து நிற்கின்றது. ஆக்க பூர்வமான ஆலோசனைகள் தராது, குறைகள் கூறித் தமிழ் ஆக்கம் பெறுவதைந் தடுத்துவிட எண்ணுவது மடமையாகும்

தமிழக அரசு புதிய பாட நூல்கள் தமிழில் வெளிவர, ''புத்தகக் கழகம்'' ஒன்று ஏற்பாடு செய்துள்ளது. மொழி பெயர்ப்பாக இல்லாது மொழியாக்கம் செய்யப்பட்ட நூல்கள் வெளிவர வேண்டும். மதுரைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக மாநிலத்தில் உள்ள கல்லூரி ஆசிரியப் பெருமக்களுக்கு ஆண்டுதோறும் தமிழில் கற்பிப்பதற்கான பயிற்சி நடைபெறுகின்றது. பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஒன்று கூடி விவாதித்துக் குறிப்புகளைத் தமிழில் தொகுத்துத் தமிழ் பயிற்சி மொழி வகுப்புகளைச் சிறப்புடன் நடத்தத் துணை செய்து வருகிறார்கள்.

இத்தனை முன்னேற்பாடுகளும் செய்து வருகின்றோம். இதற்குத் துணை நிற்காவண்ணம் தொல்லை தருவோர்கள் தமிழகத்தில் இருப்பது வெட்கப்படவேண்டிய நிலையாகும். இத் திட்டத்திலுள்ள சிரமங்களையும் உணர்ந்து ஊக்கம் தரும் கருத்துக்கள் மேற்சொன்ன கல்விக் குழுவின் அறிக்கையில் இருப்பதைக் காணலாம். இந்த உறுதியோடுதான் தமிழ் பயிற்சி மொழித் திட்டம் நிறைவேற்றப்படுகின்றது.

கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்கள் பயன்தரும் ஆலோசனைகளைத் தரவேண்டும். தமிழ் அறிஞர்கள் பிறமொழி அறிவியல் நூல்களைத் தமிழ் மொழியில் கொணர முன்வர வேண்டும். மாணவர் உலகம் குழப்ப வாதிகளின் கூற்றுக்களைப் புறக்கணித்துப் புத்துலகம் காணப் புறப்படுதல் வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்கள் அரசியல் வண்ணம் பூசிக் கொள்கைக்கு மாசு ஏற்பட வழி வகுத்துவிடக் கூடாது. எதிர்காலத் தமிழ் உலகத்தின் நன்மையை மட்டும் கருதி நமது பயிற்சி மொழித் திட்டங்கள் அமைந்திடல் வேண்டும்.

தமிழில் பயிற்சி பெற்றோர்க்கு அரசு அலுவலகங்களில் அரசுத் துறை நிறுவனங்களில் வேலைக்கு முன்னுரிமை தரும் திட்டம் உருவாகி வருகின்றது. இடையிலே எதிர்ப்படும் இடுக்கண்கள் எதிர்காலத் தமிழர் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகத் தரப்படும் விலை என்று கருதி முனைந்து செயல்பட வேண்டும்.

தாய்மொழியின் இன்றியமையாமை பற்றி விரிவாகக் கூறினாலும், ஆங்கிலத்தின் அவசியத்தைச் சிறிதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. கல்வித் துறையில் ஆங்கில மொழிப் பயிற்சிக்குச் சிறப்பான இடம் கொடுக்க வேண்டும். தமிழக அரசு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பாடம் தொடங்கப்படுகின்றது. ஆங்கிலத்தில் பாடம் கற்பிக்கஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆங்கில அறிவு மாணவர்களுக்கு - அதிக அளவு ஊட்ட, மேலும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், ஆங்கிலம் பயிற்சிமொழியாக இருந்தால்தான் ஆங்கில அறிவு மிகுதியாகப் பெற முடியும் என்பதை ஏற்க முடியாது. மாணவர்களுக்கு ஆங்கில அறிவு மிகுதியாகக் கிடைக்க வேறு ஆலோசனைகள் கூறினாலும் அரசு ஏற்றுச் செயல்படுத்தும்.

தமிழில் பயிற்சி பெற்றோர் வெளி, மாநிலங்களுக்கு—வெளி நாடுகளுக்கு வேலைக்குச் செல்ல முடியாது என்ற வாதம் மாணவர்களையும் மயங்கச் செய்கின்றது.

தமிழகத்தில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக ஏற்றுக்

கொண்டு விடுவதாலேயே இந்தப் பிரச்சினை தீர்ந்து விடாது. வெளி நாடுகளுக்குச் செல்வதைப் பொறுத்தும் சிந்திக்க வேண்டும். கற்ற மாநிலங்களில், வெளிநாடு மன் செல்ல விரும்புவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆங்கில அறிவு மிகுதியாகத் தொடக்கப் பள்ளியிலிருந்தே தருவதன் மூலமும், இத்தகைய விருப்பமும் அதற்கேற்ற தகுதியும் உள்ளவர்களுக்கு மேலும் ஆங்கிலத்தில் தனிப் பயிற்சி கொடுப்பதன் மூலமும்தான் இதற்குப்பரிகாரம் காண முடியும்.

திட்டமிட்டுச் செயல்பட்டுத் தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட வேண்டும். அதே சமயத்தில் ஆங்கில மொழியில் மாணவர்கள் சிறந்த அறிவு பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த இரு மொழித் திட்டம் தான் தமிழர் சமுதாயத்துக்குப் பயன்தரும்.

அரசியல் சட்டப்படி கல்வித் துறை மாநில அரசின் பொறுப்பு என எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. ஆனல். இந்திய நாடு முழுமைக்கும் சீரான கொள்கை வகுக்க வேண்டும் என்ற வாதத்தின் அடிப்படையில் மத்திய அரசின் கல்விக் கொள்கைகளை, மொழிக் கொள்கைகளை மாநிலங்களில் புகுத்தும் முயற்சி அனுமதிக்கப் படலாமா ? மாநிலங்கள் கூடி கல்வி வளர்ச்சி பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்வது, நல்ல கருத்துக்களை இந்திய நாடு முழுதும் செயல்படுத்துவது, இதற்கு மத்திய அரசு துணை நிற்பது—இவையெல்லாம் வரவேற்கத்தக்கவைகளே.

தமிழக அரசின் கல்வித் திட்டத்தில் சிறுபான்மையோர் நன்மைக்காகப் பிற மொழிகள் கற்பதற்கும், பிற மொழிகளைப் பயிற்சி மொழிகளாக் கொள்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, இந்தி, குஜராத்தி, மராட்டி, ஆங்கில மொழிகளைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகள் இப்போதும் தமிழ்நாட்டில் இயங்கி வருவது இதற்குச் சான்ருகும். ஆனல், இவைகள் எல்லாம் மாநிலக் கல்வித் துறையின்கீழ் செயல்படுகின்றன.

மத்தியஊழியர்கள் வசதிக்காக பிற மொழிகளைப் பயிற்சிமொழிகளாகக் கொண்ட தனிப் பள்ளிகளை நடத்த விரும்பினுலும் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனல் அப்பள்ளிகள் மாநில அரசின் கல்வித் துறையின்கீழ் இயங்க வேண்டும். மத்திய அரசின் விருப்பம் இதுவல்ல. அவர்களது கல்விக் கொள்கைகளை மாநிலங்களில் திணிப்பதுதான் மத்திய அரசின் விருப்பமாகும். இதற்கு நாமும் துணை போக வேண்டும் என்று சிலர் விரும்புகின்றனர். எப்படி இயலும் ?

இப்போது மத்திய அரசுப் பள்ளிகள் எப்படி இயங்குகின்றன எனப் பார்ப்போம். மத்திய அரசின் கல்வி அமைச்சகம் தனது மேற்பார்வையில் மத்திய அரசுப் பள்ளிகளை நடத்துகிறது. மத்தியப் பள்ளிகளின் நிர்வாகக் குழுவிற்குத் தலைவர் மத்திய அரசின் துணைக் கல்வி அமைச்சர். மத்தியப் பள்ளிகளில் கட்டாயமாகப் பயிற்றுவிக்கப்படும் மொழிகள் ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம். மத்திய அரசுஊழியர்களின் தாய்மொழி தமிழாகவோ, தெலுங்காகவோ, வங்காளியாகவோ இருக்கலாம். ஆனல், அந்தத் தாய்மொழி பயிலுவதற்கு மத்தியப் பள்ளிகளில் வாய்ப்பு கிடையாது ! எனினும், இந்தியையும், சமஸ்கிருதத்தையும் கட்டாயம் படிக்க வேண்டும் !

இவ்வாறு தாய்மொழியைப் புறக்கணிப்பதுதான் நல்ல கல்வி முறையா ? கல்வி நிபுணர் குழுவினர் தாய்மொழியில் கல்வி பற்றிக் கூறியுள்ள பரிந்துரைக்கு மாருன செயலன்ருே இது !

கல்வி மான்யக் குழுவின் செயல் திட்டங்களையும் ஆராய்வது நல்லது. பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவியளிப்பதற்கென்றும், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கென்றும் நிறுவப்பட்ட கல்வி மான்யக்குழு நேரடியாகப் பல்கலைக் கழகங்களுடன் மட்டுமே தொடர்பு கொண்டு செயல்படுகிறது. நியாயமாகவும், சட்டப்படியும் மாநில அரசுகளின் வழியாகத்தான் அந்த நிதி உதவி அளிக்கப்பட வேண்டும். ஆனல், அவ்வாறு நடைபெறுவதில்லை. ஏன் ? பல்கலைக் கழகத்தின் கல்விக் கொள்கைகளையும் திட்டங்களையும் மத்திய அரசு தன் விருப்பம் போல் அமைப்பதற்குக் கல்வி மான்யக் குழுவைக் கருவியாகப் பயன்படுத்துகிறது.

நாடாளுமன்றத்தின் 1956-ம் ஆண்டு பல்கலைக்கழக மான்யக் குழுச் சட்டத்தின்கீழ் இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின்-12 வது பிரிவுப்படி பல்கலைக் கழகங்களின் கல்வி வளர்ச்சி ஒருங்கிணைந்து வளர்ச்சி பெற்றிட, கல்வித்தரம் சீர்பட்டு வளர்ந்திட இந்த அமைப்பு பணியாற்ற வேண்டும். இதில் யாருக்கும் ஆட்சேபனையில்லை.

ஆனல், இவைகளைப் பெறுவது எப்படி ? நாட்டில் பல பகுதிகளைச் சேர்ந்த கல்வி நிபுணர்களைக்கொண்டு ஏற்றுக்கொள்ளத்தக்க கல்விக் கொள்கைகளை உருவாக்கி நம்மைப் பின்பற்றச் சொன்னல் அதில் பொருளுண்டு. பணத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்கு ஒரு அமைப்பா ? அதன் மூலம் கல்விக் கொள்கைகளை உருவாக்குவதா ? இந்தக் குழுவின் பரிவுரைகள் செயல்படுத்தப்படாவிட்டால் 14-வது பிரிவுப்படி மான்யங்கள் நிறுத்தப்படும். இதற்கு என்ன பொருள் ? மான்யக் குழு தன்னுட்சி உரிமை பெற்ற அமைப்பு என்று வாதிடலாம். ஆனல் 20-வது பிரிவுப்படி மத்திய அரசு ஆணயிடும் கொள்கைகளைத்தான் அடிப்படைக் கொள்கைகளாக ஏற்று மான்யக்குழு செயல்பட்டாக வேண்டும். ஆகவேதான், இந்த அமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்கின்ருேம்.

பண உதவியைப் பொறுத்த வரை பல துறைகளுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக் கொண்டுள்ளதைப் போலப் பல்கலைக் கழகக் கல்வி வளர்ச்சிக்கும் மாநிலங்கள் மூலம் திட்டங்களை நிறைவேற்றப் பணம் ஒதுக்கப்பட வேண்டும். நாட்டின் பிற பகுதிகளோடு பிற நாடுகளோடு தொடர்பும் வேண்டும். அதற்கு ஆங்கில மொழி அறிவும் வேண்டும். தாய்மொழியில் பயின்று, சிந்தித்து, ஆற்றல் பெருகி, அறிவியல் கருத்துக்களை அளவற்றுப் பெற்று, உலகம்போற்றும் பேரறிஞர்கள் நம் தாயகத்தில் தோன்றிடவும் செய்தல் வேண்டும். தேவைக்கேற்ற மொழிகளையும் கற்க வேண்டும். ஆதிக்கம் செலுத்த வரும் ஆதிக்க மொழியை எதிர்த்துத் தமிழகத்தின் தன்மானமும் காத்திட வேண்டும்.

தேர்ச் சாரதிபோல் தலைப் பாகை—
திசை நோக்கும் பெரும் விழிகள்
திருகிவிட்ட கூர் மீசை—
தேன்தமிழ்பால் தணியாத பேராசை!

ஏட்டுக்குள்
வீட்டுக்குள்— தமிழ்
நாட்டுக்குள்
இதயக் கூட்டுக்குள்
இடம்பெற்ற பாட்டுக்கொரு புலவன்!

பாவாணன்!பாரதிரக் கவிதைச் சாட்டை கொண்டு;
பரங்கியரைப் பழமைகளைத் தாக்கித் தகர்த்திட்ட
பத்தொன்பதாம் சித்தன்—பாரதியார்!
அவர் நினைவுநாள் இன்று! ஆம்; மகாகவி
மறைந்தநாள்!

இன்றைக்கு எண்பத்தைந்து ஆண்டுகட்கு முன்பு
பிறந்து, நாற்பதுக்கும்
ஓராண்டு குறைவாக வாழ்ந்து, நாட்டு மக்களின்
நாடிநரம் பெல்லாம்
உயிரேற்றித் துடிப்பேற்றிச் சென்றுவிட்டவர்
பாரதியார்.

ஆண்டுக்கொரு முறை என்றல்ல; ஆடுகின்ற மயிலைக் காணும்போதும்—கூவுகின்றக் குயிலை ரசிக்கும்போதும்—ஓடுகின்ற மழலையைப் பார்க்கும் போதும்—பாரதியார் நினைவு வந்தே தீரும். குயில் பாட்டும், குழந்தைப் பாட்டும் மறக்கக் கூடியவைகளா!

''பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!

ஆகா—விளையும் பயிருக்கு அவர் இடுகின்ற வீர உரம் எப்படிப்பட்டது பார்த்தீர்களா ? நீல வானமும், நெடிய கடலும் அவர் நினைவை ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன!

கலைஞர் மு.கருணாநிதி

" நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்:
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்."

சின்னஞ் சிறு மனப்பறவை எவ்வளவு ஆர்ப்பாட்டமாகப் பறக்கிறது? எவ்வளவு தெம்பான வார்த்தைகள் எழில் கூட்டிக்கொண்டு மனப் பறவையின் உற்சாகப் பயணத்திற்கு ஊக்கமளிக்கின்றன!

தாயின் மணிக்கொடி பறக்கும் போதெல்லாம் அந்தத் தமிழ்க் கவி வேந்தனின் எழுச்சி கீதம் கேட்டுக்கொண்டேயிருக்கும்.

" தாயின் மணிக்கொடி பாரீர்—இதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்."

காக்கைச் சிறகும்—வெள்ளைப் பூனையும் அவர் தம் கவிதை வரிகளை சுருக்கென்று நம் நெஞ்சில் பாய்ச்சும்!

காணி நிலமும்—கரும்புத் தோட்டமும் அவர் பாடலை எதிர் நிறுத்தி நம்மைப் பாடாய்ப் படுத்தும்!

'விடுதலை' என்ற நான்கு எழுத்துக்களுக்கு, எழுத்துக்கு எழுத்து எரிமலைக் கனலை உருவாக்கி வடித்தவர் பாரதியார்.

எங்கோ நடந்த புரட்சியின் முடிவை இங்கே எழுதிக் காட்டி, தோள் தட்டி நிற்கும் விடுதலை மறவர்க்கு அவர் தந்துள்ள போர்க்கருவி எத்துணை வீறு கொண்ட பாடலாக எழுகின்றது!

451

"இம் என்றுல் சிறை வாசம், ஏனென்றுல்
வனவாசம், இவ்வா றங்கே
செம்மை யெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் திர்ந்த போதில்
அம்மை மனங் கனிந்திட்டாள்; அடி பரவி
உண்மை சொல்லும் அடியார் தம்மை
முதுமையிலும் காத்திடுதல் விழியாலே
நோக்கிஞள், முடிந்தான் காலன்."

கொடியவர்களின் முடிவுக்கு மகிழ்ந்து, பாரதி காட்டிய மங்கல முரசமென்போம் இந்தப் பாடலை !

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் தேரீரோ ?

எனச் சங்கநாதம் செய்து, செத்த பிறகு, சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருக்கும் பித்த மனிதரைச் சாடியவர் பாரதி!

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமும் இன்றி வஞ்சனை சொல்வாரைக் கடிந்துரைக்கும் கர்மவீரர்.

சிந்தையிற் கள் விரும்பிச் 'சிவசிவ' என்பவரை சீறிச்சாடும் செந்தீ அவர்!

"இரும்பைக்காய்ச்சி உருக்கிடுவோர்—
இயந்திரங்கள் வகுத்திடுவோர்—
கரும்பைச் சாறு பிழிந்திடுவோர்—
கடலில் மூழ்கி முத்தெடுப்போர்—
மண் எடுத்துக் குடங்கள் செய்திடுவோர்—
உண்ணக் காய் கனி தந்திடுவோர்—
உழுது நன்செய் பயிரிடுவோர்—
எண்ணெய் பால் நெய் கொணர்ந்திடுவோர்—
இழையை நூற்று நல்லாடை செய்திடுவோர்—
பாட்டும் செய்யுளும் கோத்திடுவோர்—
நாட்டிலே அறம் கூட்டிடுவோர்"—

—இவர்கள் அனைவரையும் தெய்வங்கள் என்றே தொழுதவர் பாரதியார்.

பழம்புலவர்கள் எல்லாம் சொர்க்கம் செல்ல வரம் கேட்பர் ; பாரதியோ சொர்க்கத்தையே இந்தப் புவிமீது கொண்டுவந்து வைக்கும் வரம் பெற்ருர்.

ஏழைகள் வாழ்வே அவருக்குச் சொர்க்கம்! இந்தச் சூழ் நிலையில் எழுகின்ற கவிஞர்கள்தான் மக்கள் கவிஞர்களாகிருர்கள். அவர்கள் கடல் முத்தைக் கண்டவுடன் அதனை உழைக்கின்ற ஏழைகளின் வியர்வை முத்துடன் ஒப்பிடவே முந்தி நிற்பர்! அவர்கள், கோவைக் கனியைப் பாவையின் இதழுக்கு ஒப்பிடுவதைவிடக் கொள்கைக்கெனக் குமுறி நிற்கும் வீரனின் சிவந்த விழிகளுக்கு ஒப்பிடுவதையே சிறந்ததெனக் கருதுவர்! ஆண்டவனைப் பற்றி ஆயிரம் பாடல் எழுதுவதும், ஒரு நாட்டின் அடிமைத்தளை முறிவதற்காக ஒரு பாட்டு எழுதுவதும் ஒன்றே தான் என எண்ணிச் செயல்படுவர் மக்கள் கவிஞர்!

அவர்களின் முதல்வரே, பாரதியார்!

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

எனும் குறள் படித்தார்.

"தனியொருவனுக் குணவில்லையெனில்—இந்த
ஜெகத்தினை அழித்திடுவோம்"

என்ற குரல் கொடுத்தார்.

"இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்"

என்கின்ற குறளுக்கு ;

"தின்னவரும் புலி தன்னையும் அன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய்"

என்று எளிய நடையில் விளக்கம் தந்தார்.

"நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்"

எனக் கூறி அவ்வண்ணம் வாழ்ந்து காட்டியவர் அவர்.

உரைகூற ஒரு புலவர் அருகில் இல்லாவிடில் பழந்தமிழ்நூல் படித்திட முடியாதென்ற நிலையிலிருந்தபோது, பசுமரத்தாணிபோல் நெஞ்சத்தில், பாய்ந்து பதியும் கருத்துக்களை எளிய தமிழ்ச் சொற்களால் பாடிக்காட்டி, அவ்விதமே தமிழகத்தைப் பழக்கிய பெருமை பாரதிக்கு உண்டு. கத்தியை உச்சி மட்டும் தூக்கிக் கர்ச்சனை புரியும் படைத்தளபதியின் கட்டளைக்குப் பணிந்து களம் செல்லும் வீரர்களைப் போல்—பாரதியின் கவிதை மொழி கேட்டுப் பட்டாளத்து வீரரெல்லாம் தோற்றுப் போகும், பான்மையிலே பரங்கியரை எதிர்ப்பதற்கு அணி திரண்ட தமிழகத்துக் காட்சிதனை மறப்பதற்கு யாரால் முடியும்? எவரால் முடியும் ?

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே"

நாட்டுப்பற்றும்—சுதந்திரக் கனலும் ஒவ்வொரு வரியிலும் ஒளிவிடுகிறதன்ருே ; இந்நாடு விடுபட்டே தீரும் என்ற கவிஞரின் தீர்க்க தரிசனம்,

"ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே!"

என்ற நம்பிக்கை மிகுந்த சுதந்திரப் பள்ளாக அன்றே ஒலித்தது !

கனல்கொட்டி எழுதினர்—அனல்தெறிக்கப் பேசினர். துள்ளிவரும் வேல்போல—ஆவேசத்தை அள்ளிவரும் வாள்போலச்—சொல்லடுக்கிச் சூடேற்றிக் கவிதைகளைச் சுழல வைத்தார். அந்நியரின் தலை சுழல ஆட்டிவைத்தார்.

நெருப்புமிழும் நெஞ்சத்துடன் பகைவர்களை எதிர்த்தபோதும், நெறியற்ற சொல் ஒன்றும் அவர் எழுத்தில் இருந்ததில்லை, பூண்டுவிட்ட விடுதலைப் போர்க் கோலத்திலும் பூவிதழாம் நல்ல தமிழ் எடுத்துப் போர்முரசில் சூட்டிவிடப் பாரதி தவறியதில்லை.

எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் ஆணவ உரைகள் அண்டியதில்லை. இழி மொழிகள், அவர் எழுத்தேடுகளின் பக்கம் எட்டிப் பார்த்ததுமில்லை. கவிதைக் கணைகள் கிளம்பும்—அவை கண்யத்தோடு கிளம்பும்.

எதிரிகளைப் பண்படுத்தும் எழுத்து, புண்படுத்தும் எழுத்தல்ல பாரதியின் எழுத்து ; தளையும் தொடையும் தெரிந்து விட்டால் தலைகீழ் நிற்கும் கவியுலகம் பாரதியின் காலத்தில் இல்லை.

பாரதியின் நோக்கு நிமிர்ந்த நோக்கு—உள்ளமோ அடக்கத்தின் கருவூலம், அவர் விழிகள் அம்பெனக் கூர் காட்டும்—ஆனல் அன்பினை மழைபோல் பொழியும். யார்க்கும் தலைதாழ்த்தா வணங்காமுடி, ஆயின் தமிழுக்கு—நல்ல தமிழர்க்குத் தெண்டனிடும் தேன் தமிழன்.

பூமிக்கு எழுதுவது
புகழுக்கு எழுதுவது

என்ற நிலை மாற்றி நாட்டுப் போருக்கு எழுதிய கவிவீரன் !

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தைமனிதர் தலைகவிழ்ந்தார்".

இப்படிப் பெண்ணுரிமைக்காகப் புயல் கொள்கின்ற புலவன், இதோ தென்றல் தாங்கி வருகின்ற காட்சி கண்போம் :—

"சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே"—

தென்றலென வந்த பாரதி, இதோ, சிந்து பாடும் அருவியாக ;

"பாயும் ஒளி நீ எனக்கு
பார்க்கும் விழி நான் உனக்கு
தோயும் மது நீ எனக்கு
தும்பியடி நான் உனக்கு—
வீணையடி நீ எனக்கு
மேவும் விரல் நான் உனக்கு"

மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்ருய், கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவாய், பாரதியின் இன்பக் கனவாய், இதோ ஒரு பாடல்...............

"சிங்களத் தீவினுக்கோர்பாலம் அமைப்போம்—
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்.
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்.
சிந்துநதியின் மிசை நிலவினிலே
சேர நன்னுட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்".

பாரதியின் வாரிசாம் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் ;

"பாரதியார் உலக கவி அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாழ்ந்தோர்
ஒருருக்கு ஒரு நாட்டுக்கு உரியதான
ஒட்டைச் சாண் நினைப்புடையார் அல்லர்"

என்று பாடி மகிழ்ந்தார்—தமிழரையும் மகிழ வைத்தார்.

"சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு"—

பாரதி இனிக்க இனிக்கப் பாடிய தமிழ்நாடு...... இன்று இந்த மண்ணுக்குரிய பெயராய்........ மாநிலத்தின் புகழ் செதுக்கித் திகழ்கின்ற காட்சி கண்டு களிக்கின்றோம்......பாரதியை வாழ்த்து கின்றோம்.

யார் பாடினாலும்—அவர் எதைப் பாடினாலும்—பாரதி, விட்டதை அல்ல; தொட்டதைத் தானே பாடுகின்றார் என்ற நினைப்பு நமக்கு வராமல் இல்லை.

மறைந்த மகாகவிக்கு நாம் செலுத்தும் மரியாதை அவர்தந்த கருத்துக்களை மறக்காமல்......மறைக்காமல் இருப்பதுதான்!

அவர், சாதிகளைச் சாடினார்; நாம் அதனை முழுமையாக ஒழித்தோமா?

அவர், வீர சுதந்திரம் வேண்டி நின்றார். பெற்றதைப் பேணிக் காத்திட நாம் நம்மைச் சரியாகத் தயார் படுத்திக் கொண்டோமா?

பெண்ணடிமை தீர்க என்று கூவினார் முற்றிலும் தீர்த்தோமா?

"வெட்டுக்கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பல பொருளும் குடைந்தெடுப்போம்"

என்றார்; இன்னும் அதில் குறைவைத்துள்ளோம்.

அவர் எண்ணியவைகளை யெல்லாம் நாம் செய்து விடப்போகிறோமா? அல்லது அவரே மீண்டும் எழுந்து வந்து நமக்கு உணர்த்தினால்தான் நாம் விழிப்போம் என்ற கருத்தில்;

பாரதி சென்ற திக்கு நோக்கி........

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிக்கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமைக்கண்டு பொங்குவாய் வா வா வா"

என்று அவரை அழைக்கப் போகிறோமா? அழைப்பதற்கு முன்பு அவர் இதோ வந்து விட்டார்—அவர் கவிதைகளில் சிரிக்கிறார்—பாடல்களில் நடக்கிறார்—எழுத்துக்களில் நிற்கிறார்—எண்ணங்களில் நிறைகிறார்.

அந்த மாவீரர் முன்னிலையில்
மனிதனை மனிதன் மதித்திடக்
கற்றுக்கொள்வோம்—
அரசியல் பண்பு போற்றுவோம்—
ஜனநாயக மரபு காத்திடுவோம்—
அவர் தொட்டபணி தொடர்வோம்;

நலிவற்ற நாடு—வலிவுற்ற மக்கள்—தாழ்வற்ற இனம்—வாழ்வுற்ற மொழி—இந்தக் குறிக்கோள் வென்றிட பாரதி நாளில் உறுதி மேற்கொள்வோம்.

வாழ்க பாரதியின் புகழ்! வாழ்க!!

இரத்த தானம்

இன்னுயிர் காப்போம்

சென்னையில் மஞ்சட்காமாலை நோய் பரவலாகப் பற்றியிருந்த நேரம். சென்னை, எழும்பூரிலுள்ள சிறுவர் மருத்துவமனைக்குப் பத்து வயதுச் சிறுவனொருவன் மயக்கமான நிலையில் எடுத்து வரப்பட்டான். அவனுக்கு மஞ்சட்காமாலை நோய். உடலிலுள்ள இரத்தம் முழுவதும் கெட்டுவிட்டது. உயிர் தத்தளிக்கும் நிலை! இனிப் பிழைப்பது அரிது என்று கைவிடப்பட்டபின் துயரில் மூழ்கிய பெற்றோர், இறுதி முயற்சியாகச் சிறுவர் மருத்துவமனைக்கு அவனைக் கொணர்ந்தனர்.

மருத்துவ மனையில் கைதேர்ந்த டாக்டர்கள் அவனை ஆய்வு செய்தனர். உடலிலுள்ள இரத்தம் அனைத்தையும் மாற்றிப் புதிய இரத்தத்தை ஓடவிடுவதுதான் அச்சிறுவனைக் காப்பாற்றக் கூடிய ஒரே வழி எனக் கண்டனர்.

சிகிச்சை தொடங்கியது. சிறுவனின் உடலிலுள்ள நோய் குடி கொண்ட இரத்தத்தைச் சிறுகச்சிறுக எடுத்துவிட்டு, நல்ல, புதிய இரத்தத்தை உடலில் பாய்ச்சினர். தொடர்ந்து சிகிச்சை நடந்தது. சிறுவன் பிழைத்து எழுந்தான். பெற்றோரின் உள்ளத்தில் பாலை வார்த்தான். சிறுவனுக்கு இரத்தம் தந்து உதவிய கொடையாளரை மனமார வாழ்த்தினர், பெற்றோர்.

சில குழந்தைகளுக்குத் தாயின் கருவில் உருவாகும் போதே, தாய்மூலமாக மஞ்சட்காமாலை நோய் தொற்றிக் கொள்வதுண்டு. பிறக்கும் போதே அக்குழந்தைகள் மஞ்சட்காமாலையுடன் பிறந்துவிடும். அந்தக் குழந்தைகளுக்கு இம்முறையில், இரத்த மாற்றச் சிகிச்சை செய்தால்தான் அவை பிழைக்கும். குழந்தையின் தொப்பூழ்க் கொடிமூலம் இந்த இரத்தமாற்றம் செய்வார்கள். முதலில் 20 கன சென்டிமீட்டர் சுத்த இரத்தத்தைக்குழந்தையின் உடலுக்குள் செலுத்துவார்கள். பின் 10 கன சென்டிமீட்டர் கெட்ட இரத்தத்தை வெளியே எடுப்பார்கள். இவ்வாறு ஒரு தடவைக்கு 300 க.செ.மீ. ஆக, நான்கு முறை இரத்தமாற்றம் செய்யப்படுகிறது.

சென்ற ஆண்டு மட்டும், இந்தச் சிறுவர் மருத்துவ மனையில் இம்மாதிரி இரத்த மாற்றச் சிகிச்சை 15 குழந்தைகளுக்கும், 4 சிறுவர்களுக்கும் செய்யப்பட்டுள்ளது. மஞ்சட்காமாலைக்கு மட்டுமல்ல; வெட்டுக்காயங்களினால் அளவுக்கு மீறி இரத்தம் இழந்தவர்கள், விபத்துகளில் காயமடைந்தவர்கள், தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், இரத்தச் சோகையுள்ளவர்கள் ஆகியவர்களைக் காப்பாற்றவும் அறுவைச் சிகிச்சைகளின் போதும் நோயாளிகளுக்கு இரத்தம் செலுத்தப்படுவதுண்டு.

பிறந்தது முதலே இரத்தக் கோளாறுடன் பிறக்கும் குழந்தைகளும் உண்டு. சென்னையைச் சேர்ந்த ஒரு சிறுவன் பிறந்தது முதல் கடந்த 14 ஆண்டுகளாக இந்த இரத்த மாற்றத்திலேயே உயிர்வாழ்ந்து வருகிறான். இரத்தக் கோளாறு தவிர, மற்றபடி அவனுக்கு வேறு எந்த நோயும் கிடையாது. பிற சிறுவர்களைப்போல் பள்ளி சென்று பயின்று வருகிறான்.

சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் மற்றொரு குழந்தையும் இதே வகையிலுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐந்து வாரங்களுக்கு ஒரு முறை அந்தச் சிறுமிக்கு (தற்போது வயது 2) இரத்தம் செலுத்தி வருகிறார்கள்.

இவ்வாறு தேவைப்படும் நேரத்தில் நோயாளிகளுக்கு இரத்தமளிக்க இரத்தம் எங்கேயிருந்து கிடைக்கிறது?

அதற்காகத்தான் நாடுமுழுவதும் பல இடங்களில் இரத்த சேமிப்பு வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் இதுவரை 8 இரத்தச் சேமிப்பு வங்கிகள் இயங்கி வந்தன. சிறுவர் மருத்துவமனையில் அண்மையில் துவக்கப்பட்ட வங்கியைச் சேர்த்து 9 வங்கிகளாகின்றன.

இதுவரை சிறுவர் மருத்துவமனைக்கென்று தனியாக இரத்த சேமிப்பு வங்கி இருக்கவில்லை. தேவைப்படும்போது வேறு மருத்துவமனையிலுள்ள இரத்தச் சேமிப்பு வங்கிகளிலிருந்து பெற்றுவந்தனர். ஆனால் சில சந்தர்ப்பங்களில் தேவையான பிரிவைச்சேர்ந்த இரத்தம் கிடைப்பது அரிதாகையால் அறுவைச் சிகிச்சைகள் ஒத்திப் போட நேரிடுகின்றன.

எனவே இந்தச் சிறுவர் மருத்துவ மனைக்கென்று தனியாக இரத்தச் சேமிப்பு வங்கியைத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. கடந்த நவம்பர் திங்கள் 24-ஆம்

481

871

சேகரிக்குமுன் இரத்தம் ஆய்வு செய்யப்படுகிறது

நாள் இந்த வங்கியைத் தமிழகக் கல்வி-பொதுநல அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். தமிழக அரசின் பொதுநலத் துறைச் செயலாளர் திரு. அம்பாசங்கர் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார். எழும்பூர் சிறுவர் மருத்துவ மனைக்கே உரிய எழிலுடன் சிறப்பாக இந்த விழாவினை நடத்தினர், அதன் இயக்குநர் டாக்டர் பால கோபால ராஜு. டாக்டர்கள் எம். எஸ். ராமகிருஷ்ணன், நரசிம்மாச்சாரி ஆகியோர் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றனர். மருத்துவக் கல்லூரி இயக்குநர் டாக்டர் ரத்தினக்கண்ணன் வரவேற்புரை வழங்கினர். இரத்தச் சேமிப்பு வங்கிப் பொறுப்பை ஏற்றுள்ள டாக்டர் விமலா ராமலிங்கம் நன்றியுரையாற்றினர்.

மருத்துவமனை நுழைவாயிலில் பல வண்ணப் பூக்களால் பூக்கோலமாக வரவேற்பு அமைக்கப்பட்டிருந்தது. கண்ணுக்கு விருந்தாக — எழிலோவியமாக விளங்கியது. விழாவின் முக்கிய பிரமுகர்களுக்கான முதல்வரிசையில் இளஞ்சிறுர்கள் (மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர்) இடம் பெற்றிருந்தது இளஞ்சிறுர்களின் உடல் நலத்தில் இம்மருத்துவமனையினர் காட்டும் அக்கறையை எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

சிறுவர்களுக்கான இந்த இரத்த வங்கியில் ஒரு மாதத்திற்குக் குறைந்தது 200 புட்டி இரத்தம் சேகரித்து வைக்கப்படும். (குழந்தைகளுக்குத் தேவையான புட்டியில் 175 க.செ.மீ. ரத்தமிருக்கும்.) தற்போதைய இரத்தத்தேவை 200 புட்டிகள். ஆனல் விரைவில் இந்த அளவு, மாதத்திற்கு 1,500 புட்டிகளாக உயரும்.

இருபது ஆண்டுகளுக்கு முன் இரத்தச் சேமிப்பு வங்கி துவக்கப்படும் போது, தமிழகம் முழுவதும் ஆண்டுக்கு இரத்த தானம் செய்ய முன் வந்தவர்களின் எண்ணிக்கை ஐயாயிரம். இன்று ஆண்டுக்கு 40,000 பேர் இரத்த தானம் செய்கிருர்கள். ஆனல் இரத்தத் தேவையைக் கணக்கிடும்போது, இது மிகவும் குறைந்த அளவாகும். தற்போது நமது மருத்துவமனைகளில் மிக மோசமான நிலையிலுள்ள நோயாளிகளுக்கு மட்டுமே இரத்தம் தரப்படுகின்றது. மற்றவர்களுக்கு இரத்தம் தருவது அனுவசியச் செலவாகக் கருதப்படுகிறது. ஆனல் சிலவகை நோய்களுக்கு முதல் கட்டத்திலேயே இரத்தம் வழங்கினல் நோய் துரிதமாகக் குணமாகும். அப்படிப் பயன்படுத்த நேரிடும்போது இரத்தத் தேவை மிக அதிகமாகும்.

மேலைநாடுகளில் இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு மக்கள் மிகுந்த ஆதரவு அளிக்கின்றனர். சமூக நிலையங்களும் மிகவும் ஒத்துழைக்கின்றன. ஒரு குறிப்பிட்ட வகை இரத்தம் தேவை என்று வானெலியில் அறிவிப்பார்கள். உடனடியாக அந்த வகை ரத்த முள்ள பொது மக்கள் பலர் மருத்துவ மனைக்கு விரைந்து வந்து வரிசையில் காத்து நின்று இரத்தம் வழங்குவார்கள்.

ஆனல் நமது நாட்டிலுள்ள நிலைவேறு. இங்கும் செஞ்சிலுவைச் சங்கம் போன்றவைகள் இரத்த சேமிப்பிற்கு மிகுந்த ஊக்கமளிக்கின்றன. இரத்த தானம் செய்பவர்களுக்கு அரசு 350 க.செ.மீ.க்கு (ஒரு நபர் ஒரு முறை தரக்கூடிய அளவு) ரூ. 7 வீதம் தருகிறது. ஆயினும் நம் நாட்டில் படித்தவர்கள் கூட இரத்த தானம் செய்ய அதிக அளவில் வருவதில்லை. இரத்தம் கொடுத்தால் உடல் மெலிந்து விடும், வலுக் குறைந்து விடும் என்ற பயம் ஒரு காரணம். இந்த அச்சத்திற்குத் தேவையே இல்லை. சிறுவர் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கியில் முதல் இரத்ததானம் செய்தவர் அங்கு பணியாற்றும் டாக்டர் சாந்தவதனம். அவர் இதற்கு முன்னல் எட்டுத்தடவைகள் இரத்த தானம் செய்துள்ளார்.

"இரத்த தானம் செய்வதனல் வலுவிழந்தோ, களைத்தோ போய் விடுவதில்லை. இரத்தம் எடுக்கப்பட்டவுடன் நாம் பணியாற்ற எழுந்து செல்லலாம். முதல் இரண்டுநாள் வழக்கத்தைவிடச் சுறுசுறுப்பாகக்கூட இருக்கும்" என்று குறிப்பிடுகிருர், டாக்டர் சாந்தவதனம்.

ஒரு மனிதனின் உடலில் சுமார் ஆறு லிட்டர் இரத்தமிருக்கிறது. ஆனல் டாக்டர்கள் எடுப்பதோ அதில் மிகக் குறைந்த அளவு (350 க.செ.மீ.). 100 பவுண்டு எடைக்குக் குறைவாக உள்ளவர்களிடமும், 18 வயதுக்குக் கீழ்ப் பட்டவர்களிடமும் இரத்தம் எடுப்பதில்லை. ஒரு முறை இரத்தம் கொடுத்தவர் மூன்று மாதத்திற்குப் பின்தான் மறு முறை இரத்தம் வழங்கலாம்.

பொதுவாக இரத்தத்தில் நான்கு வகைகள் உண்டு. (1) எ. பிரிவு, (2) பி. பிரிவு, (3) எ.பி. பிரிவு, (4) ஒ பிரிவு. இதில் 'எ. பி.' மிகவும் அரிதான ஒன்ருகும். 'ஒ' பிரிவு தான் வெகு எளிதில் கிடைக்கக் கூடியது.

இரத்த தானம் செய்தவரின் இரத்தம் எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்று ஆய்ந்தறிந்து, அவரிடமிருந்து எடுத்த இரத்தத்தைத் தனி புட்டியில் சேகரித்து அது எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்று குறிப்பிட்டு, அதன் பின் அதனைக் குளிர்பதனப் பெட்டியில் வைத்திருப்பர். ஒருவாரம் இந்த இரத்தம் கெட்டு விடாமல் இருக்கும். அதற்குப் பின் இதனை இரத்தம் செலுத்தப் பயன்படுத்துவதில்லை. பின்பு அங்கிருந்து "கிங் இன்ஸ்டிடியூட்"டுக்கு அனுப்பி விடுவார்கள். அங்கு அதன் செல்கள் பிரிக்கப்பட்டு 'பிளாஸ்மா'வை மட்டும் தேவைப்படுபவர்களுக்குப் பயன்படுத்துவார்கள். 'பிளாஸ்மா'வை ஆறு வாரங்களுக்குப் பயன்படுத்தலாம்.



இரத்தம் எடுக்கும் குழாய்கள் சுத்தம் செய்யும் கருவிகளில் வைக்கப்படுகின்றன

இன்னுயிரினைக் காக்கும் இந்த இரத்த தானத்தினைத் தாராளமாக வழங்க முன்வருவது பொது மக்களின் கடமையாகும். அதன் மூலம் மரண வாயிலில் நிற்கும் பல உயிர்களைக் காப்பாற்றிய பெருமை அவர்களைச் சாரும்.

வெங்காயத்தில் உள்ள சத்து

நூறு கிராம் எடையுள்ள சிறிய வெங்காயத்தில் கீழ்க் கண்ட சத்துக்கள் அடங்கியுள்ளன:—

புரதச்சத்து—1·8 கிராம்.
கொழுப்பு—0·1 கிராம்.
கால்சியம்—40 மில்லி கிராம்.
ஆக்சாலிக் அமிலம்—1·0 மில்லிகிராம்.
பாஸ்பரஸ்—60மில்லிகிராம்.
இரும்புச்சத்து—1·2 மில்லிகிராம்.
சோடியம்—4·0மில்லிகிராம்.
பொட்டாசியம்—127 மில்லிகிராம்.
தையாமின்—0·8 மில்லிகிராம்.
ரைபோபிளாவின்—0·02 மில்லி கிராம்.
நிக்கோட்டினிக் அமிலம்—0·50 மில்லி கிராம்.
வைட்டமின் 'சி'—2·00 மில்லி கிராம்.
வைட்டமின் 'ஏ'—25ஐ.யூ.

893

மின்னலின் சின்ன இழை!

மகளின் திருமணம். கைத்தறி அங்காடிக்குக் குடும்பத்துடன் சென்று பட்டாடை தேர்ந்தெடுக்கிறார் குடும்பத் தலைவி. நல்ல தரமான பட்டுப் புடவைகள் நூற்றைம்பது முதல் ஆயிரம் ரூபாய் வரை பல வகையில் உள்ளன.

கட்டித் தங்கத்தைத் தட்டி ஒட்டவைத்தது போன்று தகதக வென்று மின்னிடும் பட்டுப்புடவையினைத் தேர்ந்தெடுக்கிறார், இல்லத்தரசி. அனைவருக்கும் திருப்தி தரும் எழிலான சேலை, அது.

மெல்லிய, நேர்த்தியான, தரமான, உறுதியான பட்டின் அழகிற்கு அழகு செய்வது, அதன் இழையோடு இணைந்து செல்லும் சரிகையாகும், யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்று கூறுவது போலப் பட்டாடை புத்தாடையாக இருக்கும் போதுள்ள மதிப்பினை, கிழிந்துபோன பின்னும் இழப்பதில்லை. பாத்திரக் காரர்கள் கிழிந்த பட்டுச் சேலை வேட்டிகளை விரும்பி வாங்குவதற்குக் காரணம் அதிலுள்ள தங்கச் சரிகைகளே.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகம் பட்டு நெசவில் ஈடு இணையற்று விளங்கி வந்துள்ளது. இருப்பினும், இதுகாறும், நமது பட்டு நெசவுக்குத் தேவையான தங்கச் சரிகைகள், குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த சூரத் பகுதியிலிருந்துதான் வாங்கப்படுகின்றன. இந்தச் சரிகைத் தொழில் மூலம் அங்கு ஆண்டுக்கு 10 கோடிரூபாய் வருவாய்கிடைக்கிறது. அங்கு சரிகைத் தொழில் குடிசைத் தொழிலாக இயங்கி வருகிறது. தமிழகம் மட்டும் சூரத்திலிருந்து ஆண்டுக்குச்சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள சரிகைகளை விலைக்கு வாங்குகிறது. இந்த நிலையை மாற்றி, சரிகைத் தொழிற்சாலையைத் தமிழகத்தில் அமைக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

நெசவுக்குப் பெயர் போன காஞ்சியை விட வேறு எந்தத் திருத்தலம் இதற்குப் பொருத்தமாக இருக்க முடியும்? எனவே காஞ்சியிலேயே இந்தத் தொழிற்கூடத்தினை அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது.

ஐந்து ஏக்கர் நிலத்தில் ரூபாய் 25 லட்சம் முதலீட்டில் இந்தத் தொழிற்கூடம் தனியார் துறையில் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் அமைக்கப்படும். இதில் பதினேழரை லட்சம் ரூபாய்க்கு இயந்திரங்கள் அமைக்கப்பட்டு ஏழு லட்சம் ரூபாய் முதலீடாக ஒதுக்கப்படும்.

இந்தச் சரிகை தயாரிக்க என்னென்ன தேவை? வெள்ளி, தங்கம், மிக நுண்ணிய தரமான பட்டு நூல் ஆகியவை. முதலில் வெள்ளி உருக்கப்பட்டு கம்பியாக்கப்படுகிறது. பின் அதன்மீது தங்க முலாம் பூசப்படுகிறது. இறுதியாகப் பட்டு நூல் வெளியே தெரியாவண்ணம் இதனுடன் சேர்க்கப்பட்டுச் சரிகை இழை தயாராகிறது. இதற்கு ஆண்டுக்குச் சுமார் 180 கிலோ தங்கமும், சுமார் 25,000 கிலோ வெள்ளியும் மற்றும் பட்டுநூல், ரசாயனப் பொருட்கள் ஆகியனவும் தேவைப்படும். காஞ்சி மண்ணில் இந்தச் சரிகைத் தொழிற்கூடம் தோன்றும் நன்னாள் வெகு தொலைவில் இல்லை.

தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ 8.00
அரைஆண்டு ரூ 4.00
தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி, தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

கவிஞன் விலை குறித்தால்...

கவிஞர்
ஈரோடு தமிழன்பன்

பங்குனிபோல் கொதிப்புடைய தைமூர், கோரப்
படுகொலைப்போர் என்கின்ற மரணத் தொட்டில்
எங்கெங்கும் அமைத்துவந்தான்! ஆவி நீக்க
இயந்திரக்கூர் வாளோடு நாள்க ழித்தான்!
சிங்கத்தின் நகங்களைவாய்ச் சொல்லும் பாய்ந்து
சீறுபுலி ஆவேசத் தைத்தன் கண்ணும்
பங்கிட்டுக் கொள்ளச்செய் திருந்தான், சாவுப்
பதிகங்கள் இரத்தவெழுத் தாலே செய்தான்!

சமர்கண்டு சரித்திரத்தில் இடமும் கண்ட
சாமர்க்கண் டரசனவன் நெருப்பு நெஞ்சன்!
சமைத்துவைத்த சாப்பாட்டை ஒருகை பார்த்தால்
சாதனையா? சாகசமா? அதுபோ லத்தான்
நமைச்சல்போர்த் தைமூருக்கு மற்ற நாட்டை
நசுக்குவதும் பொசுக்குவதும்! கண்ணை மூடல்
இமைக்குமிகச் சுலபமன்றோ! தைமூ ருக்கும்
எதிர்ப்பவரை உதிர்ப்பதெலாம் அப்ப டித்தான்!

கொடும்பருந்தின் நிழலினிலே இருப்ப துண்டா
கொல்கொதிப்பு? தைமூரின் நிழலும் கூட
நடுப்பகல்தான்! சகாராதான்! அதனால் அந்த
நாசப்போர் நேசன்தன் கனவு நீண்டு
தொடும்நாடும் கரிந்துவிடும்! அவனைப் பற்றிச்
சொன்னாலே வெறுப்பாகும்; உயிர்ந டுங்கும்!
எடுத்துவிட்டான் வாளென்றால் மயானக் காட்டின்
இமைசிரிக்கும்! விழிமகிழ்ச்சி விழாஎ டுக்கும்!

ஆயிரமாம் பயங்கரங்கள் திரண்டு வந்தால்
அதனுருவம் தைமூரின் வாழ்க்கை நூலின்
பாயிரமாய் இருந்திடலாம்! பாத கங்கள்
பல்லவியாய்த் திரும்பத்தி ரும்பச் செய்த
தீயநெஞ்சில் பதங்கள்ப ரிமாறும் பாட்டுத்
தித்திப்பும் சிலவேளை தொட்ட துண்டு!
காயப்போர் இரைச்சலுக்கே உரிய காதைக்
கவிக்கிண்ணம் ஆக்கியவன் வைத்த துண்டு!

ஆடம்ப ரப்பொருள்கள் மட்டும் தன்னை
அபகரிக்க இடந்தந்தான்! கொழுத்த மேனி
மேடையிலே மாணிக்க மணிகள் முத்து
வெள்ளிச்சவிழா நடத்துவதை ஆத ரித்தான்!
' ஆடைப்பூ ' இதழ்ச்சிவப்புத் திராட்சைச் சாற்றை
அருந்துவதும் அவனுக்கு மிகப்பி டிக்கும்!
பாடல்செய் ' கிர்மானி ' படைத்து வைக்கும்
பளிங்குச்சொல் வரிசைமிக மிகப்பி டிக்கும்!

தங்கச்சிங் காசனத்தில் பெருமை மோதத்
தைமூர்உட் கார்ந்திருந்தான் ஒருநாள்! வாளால்
அங்கபங்க அறுவடைகள், மரண வாசல்
அலங்கரிப்புச் செய்தவர் இருந்தார்! இன்பச்
சங்கீதத் தோரணங்கள் தொடுக்க வல்ல
சரமழைபெய் பாவாணர் நிறைந்தி ருந்தார்
அங்கிருந்தான் கிர்மானி! அவனைப் பார்த்தே
அதிசயமாய் ஒருகேள்வி தைமூர் கேட்டான்!

சந்தங்கள் சந்திக்கும் சந்த னப்பாச்
சரந்தொடுக்கும் கிர்மானி! என்னை நீயோர்
சந்தையிலே விற்பதற்கு விருப்பங் கொண்டால்
சாற்றுகின்ற விலைஎன்ன இருக்கும் என்றான்!
' எந்தநிலை ஆனாலும் எங்கள் வேந்தே
ஈரைந்து தஸ்கருக்கு மேல்போ காது
சந்தையிலே!' எனக்கவிஞன் வணிகன் ஆனான்!
சண்டைமன்னன் தோள்குலுங்கச் சிரித்துக் கொண்டான்!

'சித்திரச்சொல் சிற்பங்கள் செதுக்கும் நீ,வி
சித்திரமாய் விடைவேடிக் கைசெய் இன்றாய்!
சத்தியமாய்ச் சொல்கின்றேன் எனதி டுப்புக்
கச்சைக்கே சரியாகும் என்னை விற்க
வைத்தவிலை ஈரைந்து 'தஸ்கர்' என்றான்!
மதுரப்பாக் கிர்மானி, 'யானும் சொன்ன
அத்தொகையே அதற்குத்தான் அரசே!' என்றான்.
அங்கிருந்தோர் தங்களுக்குள் நகைத்துக் கொண்டார்!





வளமான வளர்ச்சிக்கும் அதிக உற்பத்திக்கும் சிறந்தவை

ரோவிமிக்ஸ்
டிரேட் மார்க்

மற்றும்

ரோவிஸால் ஓரல்
டிரேட் மார்க்

ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு:
உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் குறைந்த செலவிலும் அளிக்க கனிஜங்களால் கெடாத ரோவிமிக்ஸ் விடமின் பவுடர் வகைகளில் ஒன்றைத் தீனியுடன் கலக்கவும்.

ரோவிஸால் ஓரல்—அதிகப்படியான விடமின்களுக்கு:
ஒட்டுண்ணிகள் அல்லது தொற்று நோய் பற்றுதல், மருந்து ஊட்டுதல், அதிகச் சூடு, அதிகக் குளிர்ச்சி, ஈரம் அல்லது வறட்சி, சிறகுகளை உதிர்த்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மறு இடத்திற்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்குக்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.

தயாரிப்பாளர்கள்:
ROCHE ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
பம்பாய்-34 WB

மற்ற விவரங்களுக்கு கீழ்க் காணும் ஏக வினியோகஸ்தர்களுக்கு எழுதுங்கள்:
VOLTAS வால்டாஸ் லிமிடெட்
கெமிக்கல்ஸ் டிவிஷன், த.பெ. 7803,
பம்பாய்-33 (DD).
த.பெ. 125, பெங்களூர்-1
த.பெ. 385, புது டில்லி-1
த.பெ. 1898, சென்னை-1
த.பெ. 34, கொச்சி-3
த.பெ. 606, கல்கத்தா-1
த.பெ. 35, கான்பூர்-1
த.பெ. 90, சிகந்திராபாத்-3

ஒருநாள் இரவு மணி 2 இருக்கும். நான் இரவின் அமைதியில் எழுதிக் கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென "ஐயய்யோ! என்ன செய்வேன்! ஓடி வாங்களேன்!" என்று ஒரு குரல் கேட்டது. எழுதிக்கொண்டிருந்ததை நிறுத்தி விட்டு, வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தேன்.' பக்கத்திலிருந்த குடிசையிலிருந்து அழுகுரல் வந்து கொண்டிருந்தது. என்னவென்று அறிந்து கொள்ள விரும்பிக் குடிசையை நோக்கிவிரைந்தேன். பக்கத்துக் குடிசைகளிலிருந்தவர்களெல்லாம் அங்கு ஓடி வருவதற்கும், நான் அந்தக் குடிசையை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது. அந்தக் குடிசையின் சொந்தக்காரர் ராமசாமி தன்னுடைய 3 வயது ஆண் குழந்தையை மார்புடன் அணைத்துக் கொண்டு அழுது கொண்டே வெளியே வந்தார்.

"ராமசாமி ஏன் அழுது கொண்டே வருகிறாய்? என்ன நேர்ந்தது?" என்றேன்.

"பையனுக்கு ஜுரம் சார். ராத்திரி சாப்பிட்டுவிட்டுநல்லாத்தான் படுத்தான். இப்போ உடம்பில் கையை வைக்க முடியவில்லை. இங்கே பாருங்க சார். குழந்தைமுழிச்சது முழிச்சபடியே இருக்கு; பேசமாட்டேங்குறான் சார்" என்று அழுதுகொண்டே கூறிவிட்டுக் குழந்தையை என்னிடம் காட்டினார்.

"பயப்படாதே ராமசாமி. குழந்தைக்கு ஒரு ஆபத்தும் வராது. நீ தைரியமாயிரு" என்று கூறிக் கொண்டே குனிந்து குழந்தையைத் தொட்டுப் பார்த்தேன். காய்ச்சல் கடுமையாகவே இருந்தது. குழந்தையின் கண்களைத் தொட்டுப் பார்த்தேன். கண்களில் அசைவே இல்லை. ஆனால் குழந்தை திணறித் திணறி இலேசாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தது.

"சார்! ஒரு பத்து ரூபாய் கடன் கொடுத்து உதவுங்க சார்! ஆஸ்பத்திரிக்குப்போய்க் காட்டிப் பார்க்கிறேன். ஒரு வாரத்தில் ரூபாயைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்றார் ராமசாமி.

"ராமசாமி, நீ புறப்படத் தயாராக இரு; நான் பணம் எடுத்துக்கொண்டுவருகின்றேன்" என்று சொல்லி விட்டு வீடு நோக்கி ஓடினேன்.

பணத்தை உடனே எடுத்து வந்து, "ராமசாமி இந்தா பணம்; சீக்கிரம் புறப்படு!" என்றேன். பணத்தைப் பெற்றுக் கொண்ட ராமசாமி மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டு புறப்பட்டார்.

அப்பொழுது "ஏ! ராமசாமி, குழந்தையை இப்படிக்கொடு; நான் பார்க்கிறேன்!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

அக்குரலுக்கு உரியவர் அக்குடிசைப் பகுதியில் வாழும் வயது முதிர்ந்த பாட்டி! ராமசாமி குழந்தையைப் பாட்டியிடம் கொடுத்தார். பாட்டிகுழந்தையை எடுத்துக் கொண்டு தெரு விளக்குக் கம்பத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். இந்தப் பாட்டி வேறு பெரிய டாக்டர் மாதிரி நினைச்சுக்கிட்டு குழந்தையைப் பார்க்கிறதால் காலதாமதமாகிறதே; குழந்தைக்கு என்ன ஆகுமோ? என்றுஎண்ணிய நான் அந்தப்பாட்டியை மனமாரத் திட்டிக் கொண்டிருந்தேன்.

தெரு விளக்கு வெளிச்சத்தில் குழந்தையை நன்கு பார்த்து விட்டு ராமசாமியை நோக்கி, "இந்தக் காய்ச்சலை நிறுத்த, கடன் வாங்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போறியா?" என்று கேட்டார் அந்தப் பாட்டி.

"குழந்தை பிழைக்க வேணுமானால் கடன் வாங்காமல் என்ன செய்வது?" என்றார் ராமசாமி.

"அட போடா வேலையத்தவனே! நீயும் உன் பெண்டாட்

டியும் வண்டி இழுக்கப் போய் விட்டீங்க. நேற்று பூரா இந்தப் பய சாக்கடையில்விளையாடிக்கிட்டிருந்தான். அதனுலே காய்ச்சல் வந்திருக்கும்; நான் கூட இந்தப் பயலே வீட்டுக்குப் போடா என்று ரெண்டு தடவைவிரட்டிப்புட்டுத் தான் போனேன். கொஞ்சம் பொறு. இந்த ஜுரத்தை 15 நிமிடத்திலே இறங்க வைக்கிறேன்!'' என்று கூறிக்கொண்டே பாட்டி, ராமசாமியிடம் குழந்தையைக் கொடுத்தார்.

'' இந்தப்பாட்டியின் கழுத்தை நெரிச்சுப் போடணும்டா! எதிலும் குறுக்கிடுது!'' என்ருர் ஒரு வாலிபர்.

''அவனெவண்டா என் கழுத்தை நெரிக்கிறவன்? வாடா என் முன்னடி பார்க்கலாம்!'' என்ருர் பாட்டி.

'' வாலிபப் பசங்க விளையாட்டுக்குச் சொல்ருனுங்க பாட்டி! நீ போய் உன் மருந்தைக் கொண்டு வா சீக்கிரம்'' என்ருர் ஒரு பெரியவர்.

அந்தப்பாட்டி தன் வீட்டிற்குப் போய்விட்டுச் சற்றுநேரத்திற்குப் பின்பு திரும்பிவந்து, குழந்தையை வாங்கித் தன் மடியில் கிடத்தி நெற்றியிலும், தலையிலும், ஏதோ பசை போன்ற ஒரு பொருளைத் தடவினர். இரண்டு நிமிடங்களிலேயே குழந்தையின் கண்கள் அசைய ஆரம்பித்து மூடி மூடித் திறந்தன. ஆனல் குழந்தை அழவும் இல்லை; பேசவும் இல்லை.

'' இனிமேல் கொஞ்சம் கொஞ்மாக ஜுரம் குறைந்து விடும்! ராமசாமி 15 நிமிடத்திலே உன் மகன் பேசுவான் பாரேன்!'' என்ருர் பாட்டி.

ராமசாமி குழந்தையையே கவனித்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாகக் கழிவதாகத் தோன்றியது! அவர் மனைவியின் கண்களில் கண்ணீர் ஆருகப் பெருகி வடிந்து கொண்டிருந்தது!

"தம்பி! இப்போ குழந்தையைத் தொட்டுப் பாருங்கோ'' என்று என்னை நோக்கிக் கூறினர் அந்தப் பாட்டி.

நான் குழந்தையைத் தொட்டுப் பார்த்தேன். அனலாய்க் கொதித்துக் கொண்டிருந்த உடம்பு சாதாரண நிலையில் இருந்தது. ''பாட்டி! நீ சொல்லியது போலவே 15 நிமிடத்தில் காய்ச்சல் விட்டு விட்டதே!'' என்று வியந்தேன்.

அப்போது குழந்தை 'அம்மா' என்று அழைத்துக் கொண்டே எழுந்திருக்க முயன்றது.

'' ராமசாமி இனிமேல் பயமில்லை! இங்கே குளிர்காற்று வீசுது! குழந்தைக்கு ஆகாது. குழந்தையை எடுத்துக் கொண்டு போய் குடிசைக்குள் படுக்க வைத்துப் பால் கொடுக்கச் சொல்லுப்பா'' என்ருர் பாட்டி.

ராமசாமி தன் குழந்தையை எடுத்துக்கொண்டு குடிசையினுள் நுழைந்தார். கூட்டமும் கலைந்து விட்டது. நான் மட்டும் அந்தப் பாட்டியின் அருகில் நின்றுகொண்டிருந்தேன்.

'' நேரமாயிட்டுதே, நீ போகலையா தம்பி?'' என்ருர் பாட்டி.

'' பாட்டி! என்ன மருந்து போட்டே என்று சொல்லு'' என்றேன்.

'' வெங்காயம்!''—இதுதான் பாட்டியின் பதில்.

தந்தைபெரியாருக்குக் கோபம் வந்தால் 'வெங்காயம்' என்று சொல்லுவார். அதுபோல் இந்தப் பாட்டியும் கோபம் வந்தால் 'வெங்காயம்' என்று சொல்லுமோ என்று எண்ணி ''பாட்டி! கோபித்துக் கொள்ளாதே! மருந்துப் பெயரைச் சொல்லு'' என்றேன்.

'' அதான்சொன்னேனே வெங்காயம் என்று''—பாட்டி கூறினர்.

'' வெங்காயத்திலா பாட்டி இவ்வளவு சக்தி இருக்கிறது?''

'' வெங்காயத்தின் மகிமை உங்களுக்கெல்லாம் தெரியாது தம்பி!''

'' காய்ச்சலை நிறுத்தும் சக்தி வெங்காயத்திற்கு உண்டு என்பது உங்களுக்கு எப்படிப் பாட்டி தெரிந்தது?''

'' எங்க அப்பா அந்தக் காலத்தில் கப்பலில் வேலை செய்து வந்தார். அப்போ அந்தக் கப்பலில் இருந்த மாலுமிகளிடமிருந்து வெங்காயத்தை நன்கு அரைத்து நெற்றியில் பூசினல் காயச்சல் விட்டு விடும் என்பதைத் தெரிந்து வந்து என்னிடம் சொன்னர். அதன்படி நான் செய்து வருகின்றேன். நல்ல குணம் தெரிகிறது! நீயும் இனிமேல் செய்து பார்'' என்று சொல்லிக்கொண்டே பாட்டி தன் வீட்டிற்கு வேகமாகத் திரும்பிப் போனர்.

பாட்டியிடம் முழு விவரத்தையும் தெரிந்து கொள்ள முடியவில்லையே என்ற மன வருத்தத்துடன் வீடு திரும்பிப் படுக்கையை விரித்துப் படுத்தேன். வெங்காயத்தின் பயன் இன்னும் என்னென்ன இருக்குமோ என்ற எண்ணம் தோன்றியது. இப்படிப்பட்ட அரிய பொருளின் பயனை நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிவிக்காமல் இருந்த பெரியவர்களை நினைத்து வருந்தினேன்.

மறுநாள் வெங்காயத்தின் சக்திகளை அறிந்து கொள்ள விரும்பிப் பல்வேறு புத்தகங்களைப் படித்துப் பார்த்தேன். வெங்காயம் பல நாடுகளில் பல்வேறு வகைகளில் பயன்பட்டு வந்த விவரங்கள் எனக்குக் கிடைத்தன. அவைகளைத் தொகுத்து உங்களுக்குப் படைத்துள்ளேன்.

தலையில் ஏற்படும் வழுக்கை (baldness) முதல் நச்சுப் பாம்பு கடி வரை பல்வேறு நோய்களுக்கும் வெங்காயத்தைப் பயன் படுத்துமாறு டாக்டர்கள் பரிந்துரைத்ததாக வரலாறு கூறுகிறது.

ஒரு நகரத்திற்குப் பெயர் வெங்காயம்

யூதர்களுக்கு வெங்காயம் என்ருல் மிகவும் விருப்பமாம்! அதனுல் வெங்காயத்தின் பெயரை வைத்து ஒரு நகரத்தையே அமைத்தார்களாம்! வெங்காயம் 'ஆனியன்' (Onion) என்று கூறப்படுகிறது. எனவே, 'ஆனியன்' என்ற பெயரில் ஒரு நகரம் கி. மு. 173-ஆம் ஆண்டில் சூயஸ் வளைகுடாவில் கட்டப்பட்டதாம். இந்த நகரைக் கட்டியவரின் பெயர் ஆனியாஸ் (Onias) எனப்படுகிறது. இந்நகரம் 343 ஆண்டுக் காலம் இருந்ததாம். என்னே வெங்காயத்தின் பெருமை!

பழங்காலத்தில் மாலுமிகள் சொறிநோயினல் (Scurvy) தாக்கப்படுவதை வெங்காயம் தடுத்துள்ளதாகத் தெரிகிறது.

சமீபத்தில் நியூகேசில் பல்கலைக்கழகத்தில் டாக்டர்கள் அடங்கிய குழு ஒன்று, வேக வைத்த அல்லது வறுக்கப்பட்ட வெங்காயத்தை மருத்துவ மனை மருந்துக் குறிப்புகளிலும் பயன் படுத்தலாம் என்று கண்டு பிடித்துள்ளது. இரத்தக் குழாயின் உள்ளே இரத்தம் உறைந்து (இறந்து) கட்டியாகப் போய் விடுவதைக் (Clots) கரைத்து விடக் கூடிய சக்தியை இரத்தத்திற்கு வெங்காயம் ஏற்படுத்துவதாக அந்த டாக்டர்கள் கூறியுள்ளனர். எனவே 'கரோனரி திராம்பாசிஸ்' எனப்படும் பயங்கர வியாதியை எதிர்க்கும் புதிய ஆயுதமாக சாதாரண வெங்காயத்தைப் பயன் படுத்தலாம்.

மத்தியப் பிரதேச மக்கள் வெய்யிலின் கொடுமையிலிருந்து (Sun-stroke) தப்புவதற்காகத் தங்கள் சட்டைப் பைகளில் வெங்காயத்தை வைத்திருப்பதாகக் கேள்விப்படுகிருேம்.

வெங்காயம் வியாதியைக் குணப்படுத்துவதுடன், ஏழை மக்களின் வலிமை தரும் மருந்தாகவும் (Tonic) இருக்கிறது என்ற நம்பிக்கை மனித குலத்தில் நெடுங்காலமாகவே நிலவி வருகிறது.

'கிஷா' (Giza) என்ற இடத்தில் உள்ள மாபெரும் பிரமிடுகளைக் கட்டிய வேலையாட்களுக்கு வெங்காயமும், பூண்டும் உண்பதற்காகக் கொடுக்கப்பட்டதென வரலாறு கூறுகின்றது. பிரமிடுகள் கட்டுவது மிகவும் கடுமையான வேலையாகும். அவ் வேலைக்குத் தேவையான சக்தியையும், வலிமையையும் வெங்காயமும், பூண்டுமே கொடுத்ததாக அவர்கள் நம்பினர்களாம்.

மோசஸும், ஆரானும் இஸ்ரேலியர்களை எகிப்தில் இருந்து அழைத்துச் சென்று சினய் பாலைவனத்தில் விட்டு விட்டபோது, இஸ்ரேலியர்கள் வெங்காயத்தை நினைத்து நினைத்து ஏங்கினர்களாம்.

ரோம் நாட்டிலிருந்து பிரிட்டனுக்குத் தங்களுடன் வெங்காயத்தைக் கொண்டு செல்லும் அளவுக்கு, ரோமானியர்களும் வெங்காயத்திடம் பற்று வைத்து இருந்தனராம். வெங்காயத்தைப் பார்த்த முதல் பார்வையிலேயே, ஆங்கிலேயர்கள் வெங்காயத்தை விரும்பி விட்டார்களாம். இதனல் அரசாங்க விருந்துகளிலும் வெங்காயம் இடம் பெற்றதாம். முதலாவது எலிசெபெத் மகாராணியின் காலையுணவில் ஒரு தட்டு மாட்டிறைச்சியும், ஊறுகாயாகச் செய்யப்பட்ட வெங்காயமுமே இடம் பெற்றிருந்தனவாம். அவைகளை உண்டபின் அவர் 'பீர்' என்னும் மது அருந்தித்திருப்தி அடைந்தாராம்.

1941-ல் வெங்காயமும் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்ததாம். அப்பொழுது சைரில் பிரிஸ்பை (Cyril Frisby) என்பவர் ஒரு கூடை வெங்காயத்தை லண்டன் ஸ்டாக் எக்சேஞ்சில் 'போர் ஆயுதவார நிதிக்காக' (Aid for the war weapon week) ஏலம் விட்டாராம். அந்த ஏலத்தில் ஒவ்வொரு வெங்காயத்திற்கும் 3,000 பவுன் கிடைத்ததாம்.

இலண்டனில் 1664-ல் ஏற்பட்ட 'பிளேக்' நோயின்போது பெரும்பாலும் எல்லா வீட்டிலும் யாராவது இறந்து கொண்டே இருந்தார்களாம். ஆனல் அப்பொழுது 'பிளேக்' நோய் தொற்ருத இடம் வெங்காயமும் பூண்டும் விற்கப்பட்ட கடைகளேயாம்.

இப்படிப் பலவகையிலும் நண்பனைப் போல் உதவும், வெங்காயத்தை உங்கள் வீட்டில் உபயோகப்படுத்த மறவாதீர்கள். வெங்காயம் உணவுப் பொருள்களில் சுவையும், மணமும் ஏற்படுத்தக் கூடிய பொருளாகப் (Condiment) பயன் படுகிறது. இது ஓர் எளிய மருந்தாகவும் பயன் படுகிறது. வாணிகக் காய்கறிகளில் ஒன்ருகவும் இது விளங்குகிறது.

வெங்காயத்தை இந்தியா, ஆப்கானிஸ்தானம், சோவியத் குடியரசின் டாஜிக், உஸ்பெக், மேற்கு டைன் ஷான் ஆகிய நாடுகள் பெருமளவில் சாகுபடி செய்கின்றன. இந்தியாவில் 90,557 ஹெக்டர் பரப்பில் வெங்காயம் சாகுபடியாகிறது. இந்தியாவில் மகாராட்டிரம், தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், பீகார், பஞ்சாப் ஆகிய மாநிலங்களே வெங்காயத்தை முக்கியமாகப் பயிரிடுகின்றன.

இந்தியாவிலிருந்து ஆண்டு தோறும் ரூபாய் 2·50 கோடி மதிப்புள்ள வெங்காயம் இலங்கைக்கு அனுப்பப்படுகிறது.

வெங்காயத்தில் இரண்டு வகை உண்டு. அவை சிறிய வெங்காயம் (நாட்டு வெங்காயம்), பெரிய வெங்காயம் (பெல்லாரி வெங்காயம்) எனப்படும். சிறிய வெங்காயத்தில் சிவப்பு, வெள்ளை என இருவகைகள் உள்ளன.

தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் சிறிய வெங்காயத்தை உபயோகித்து வருவதால், சிறிய வெங்காயத்தின் தேவை பெருகி வருகிறது. சில சமயங்களில் சிறிய வெங்காயம் கிலோ ரூபாய் 1·20-க்கு

தங்கத்தைவிட விலை அதிகம்

நெதர்லாந்து நாட்டில் 1 கிலோ 'பெட்டூனியா' (Petunia) என்னும் பூச்செடியின் ஒட்டு வீரிய விதை ஏறத்தாழ 90,000 பிளாரின்ஸ் (சுமார் 1·8 இலட்சம் ரூபாய்) விலைக்கு விற்கப்படுகிறதாம்.

அந்நாட்டில் 'பெகோனியா' (Begonia) என்னும் மற்ருெருபூச்செடியின் ஒட்டு வீரிய விதை 1 கிலோ 1,60,000 பிளாரின்ஸ் (சுமார் 3·31 இலட்சம் ரூபாய்) விலையில் விற்பனையாகிறதாம்.

ஆனல் அந்த நாட்டில் 1 கிலோ தங்கத்தின் விலை 4,200 பிளாரின்ஸ் (சுமார் ரூபாய் 9,400) மட்டுமேயாகும்! எனவே, நெதர்லாந்து நாட்டில் தங்கத்தின் விலையைவிட பூச்செடியின் விலை அதிகமாக உள்ளது வியப்புக்குரிய செய்திதானே!

மேலும் விற்கிறது. பெரிய வெங்காயம் பெரும்பாலும் நகர்ப் புறங்களிலேயே அதிகமாக விற்பனையாகிறது. பெரிய வெங்காயம் சாதாரணமாக கிலோ ரூ. 1·20-க்கு மேல் விற்கிறது. எனவே அதிக மகசூல் உற்பத்தி செய்து அதிக வருமானம் பெற விரும்பும் உழவர் பெருமக்கள் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளலாம்.

சாகுபடி முறைகள்

மண்: வெங்காயம் பயிரிட, நன்கு இளக்கமுள்ள குறுமண், செம்மண், வண்டல் மண் ஆகியவை ஏற்றது. வடிகால் வசதியுள்ளதும், களிமண் அதிகமில்லாததுமான மற்ற வகை மண்களிலும் வெங்காயத்தைப் பயிரிடலாம்.

பருவம் : சிறிய வெங்காயத்தை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். ஆனால் ஜூன்-ஜூலையிலும், டிசம்பர்-ஜனவரியிலும் பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும். டிசம்பர் ஜனவரியில் பயிரிட்டால் அதிக மகசூல் பெறலாம்.

பெல்லாரி வெங்காயத்தை ஜூன்-ஜூலை, டிசம்பர்-ஜனவரி பருவங்களில் பயிரிடுவதே சிறந்தது.

வயது : சிறிய வெங்காயத்திற்கு மூன்று மாதங்கள். பெரிய வெங்காயத்திற்கு 5 முதல் 6 மாதங்கள்.

விதையளவு : சிறிய வெங்காயம் பயிரிட ஏக்கருக்கு 450 கிலோ முதல் 550 கிலோ வரை விதை வெங்காயம் வேண்டும்.

பெல்லாரி வெங்காயம் பயிரிட வேண்டுமானால், பெல்லாரி வெங்காயத்தை நேரடியாக நடக்கூடாது. பெல்லாரி வெங்காய விதைகளை நாற்று விட்டே நட வேண்டும். ஒரு ஏக்கர் பெல்லாரி வெங்காயம் பயிரிட 2·25 கிலோ விதையை 5 சென்ட் நிலத்தில் நாற்று விட வேண்டும்.

நிலம் தயார் செய்தலும், உரமிடுதலும் : நிலத்தை 4 அல்லது 5 முறை இரும்புக் கலப்பையால் நன்கு, உழுது புழுதியாக்கவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 10 முதல் 15 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு, 25 கிலோ அமோனியம் சல்பேட், 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட்டு உழுது விடவேண்டும். அதன் பின் சிறிய வெங்காயம் பயிரிட பார் கலப்பையினுல் 30 சென்டி மீட்டர் (1 அடி) இடைவெளிகளில் பார் பிடிக்கவும். பெல்லாரி வெங்காயம் பயிரிட 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடை வெளிகளில் பார்பிடிக்க வேண்டும்.

விதையூன்றுதல் : சிறிய வெங்காயம் பயிரிட பார்களில் இரண்டு பக்கங்களிலும் 10 சென்டி மீட்டருக்கு (4 அங்குலம்) ஒன்று வீதம் விதை வெங்காயத்தை ஊன்ற வேண்டும். சில இடங்களில் தண்ணீர் விட்டு, பின்பு ஊன்றுவதும் உண்டு.

பெல்லாரி வெங்காயம் பயிரிட ஒரு மாத வயது உடைய நாற்றுகளை பார்களின் இரண்டு பக்கங்களிலும் 15 சென்டி மீட்டர் (5 அங்குலம்) இடைவெளிக்கு ஒன்று வீதம் நட வேண்டும்.

நீர்ப்பாசனம் : வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சலாம். மண்ணில் உள்ள ஈரம், மழை ஆகியவைகளுக்கு ஏற்ப நீர்ப்பாசன இடைவெளி நாட்களை மாற்றிக் கொள்ளலாம்.

மேலுரமிடல் : சிறிய வெங்காயம் நட்ட ஒரு மாதத்திற்குப்பின் 25 கிலோ அமோனியம் சல்பேட் இட்டுத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பெல்லாரி வெங்காயம் நட்ட ஒரு மாதத்திற்குப் பின் 45 கிலோ அம்மோனியம் சல்பேட் உரமிட வேண்டும்.

பின்செய் நேர்த்தி : களைகள் இல்லாதவாறு பயிரைப் பாதுகாக்க வேண்டும். நட்டு ஒரு மாதம் கழித்து வெங்காயம் சேதமாகாதவாறு கவனமாக மண் அணைக்க வேண்டும். நடவு செய்த 45 முதல் 60 நாட்களில் சிறிய வெங்காயத்தில் பூங்கொத்துகள் தோன்றும். இப்பூங்கொத்துகளைக் கிள்ளி எடுத்து விட்டால் வெங்காயம் நல்ல பருமனாக வளர்ந்து, அதிக மகசூலை அளிக்கும். இப்பூங்கொத்துகளை சமையலுக்குப் பயன் படுத்தலாம்.

பயிர்ப் பாதுகாப்பு : வெங்காயத்தை முக்கியமாகத் தாக்கும் பூச்சி ‘ திரிப்ஸ் ’ என்னும் செடிப் பேனேயாகும். இப்பூச்சிகள் வெங்காயத் தாள்களில் உள்ள சாற்றினை உறிஞ்சி விடுவதால், தாள்கள் வெளுத்துக் காய்த்துப்போகும். இதனால் வெங்காயத்தின் நல் வளர்ச்சி தடைப்பட்டு, அதன் மகசூல் குறைந்து விடும். இந்தப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 10 கிலோ பி. எச். சி. 10 சத தூளைத் தூவலாம் அல்லது 3·2 கிலோ பி.எச்.சி. 50 சத மருந்தை 352 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். அல்லது 360 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை 360 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

வெங்காயத்தைத் தாக்கும் முக்கிய நோய் இலைப் புள்ளி நோயாகும் (Leaf spot). இதைத் தடுக்க 1 சத போர்டோ கலவை அல்லது தாமிர பூஞ்சாள மருந்தைத் தெளிக்கலாம். தற்பொழுது வெங்காயத்தில் புதிதாக ‘இலைக் கருகல் நோய்’ (leaf blight) ஒன்றும் தோன்றியுள்ளது., இதைத் தடுக்க ஏக்கருக்கு 1 கிலோ டைத்தேன் இஸட்-78 அல்லது சினப் மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

அறுவடை : வெங்காயத் தாள்கள் பழுப்பு நிறமடைந்து சாய்வது பயிரின் முதிர்ச்சியைக்காட்டுவதாகும். இதன் பின் நீர்ப்பாசனம் தேவை இல்லை. மணற்பாங்கான இடங்களில் வெங்காயத்தைக் கையினால் பிடுங்கி விடலாம். மற்ற மண்களில் வெங்காயத்தை களைக் கொத்தினால் தோண்டவும். இலைகளையும் வேர்களையும் அறுத்த பின் வெங்காயத்தை நிழலில் பரவலாக வைத்து 4 நாட்களுக்கு உலர வைக்கவும்.

மகசூல் : சிறிய வெங்காயம் ஏக்கருக்கு 4,000 கிலோ முதல் 5,500 கிலோ வரை மகசூல் கொடுக்கும். பெல்லாரி வெங்காயம் 5,000 முதல் 7,000 கிலோ வரை மகசூல் கொடுக்கும்.

பல வகையிலும் பயன்படும் வெங்காயத்தை மேற் கூறிய முறைகளில் சாகுபடி செய்து மகசூலைப் பெருக்கி, வருவாயையும் பெருக்கி வளமாக வாழுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

எவரையும் கவரும் எளிய கலை!

பெருகிவரும் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த ‘‘அளவோடு பெற்று வளத்தோடு வாழ வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு வலியுறுத்த அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. மக்களை எளிதில் கவரக் கூடிய சாதனங்களான, திரைப்படம், நாடகம், இசை, போன்றவைகளைப் பிரச்சாரக் கருவிகளாகக் கொண்டுள்ளனர். இந்த வரிசையில் புதிதாக இப்பொழுது சேர்க்கப்பட்டிருப்பது பொம்மலாட்டம். சமீபத்தில் புது டில்லியில் நடந்த பொம்மலாட்ட நிகழ்ச்சி ஒன்றில் நவீன உத்திகளோடும், நகைச் சுவையோடும் ஒரு பிரச்சாரக் காட்சியைக் காண்பித்தார்கள்.

ராம்லால் ஒரு பெரிய குடும்பத்தின் தலைவர். ஆனால் ஏழை விவசாயி. அவருக்கு 6 குழந்தைகள் இருக்கின்றன. விவசாயத்தில் போதிய வருமானம் இல்லாததால் தன்னுடைய ஆட்டை அடகு வைத்துக் கடன் வாங்குகிறார். அப்படியும் தனது குடும்பத்திற்கு முழு அளவில் உணவு அளிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில் தற்கொலை செய்து கொள்ள முயல்கிறார். அப்பொழுது அவர் நண்பர் அர்ஜுன் ‘‘திட்டமிட்ட குடும்பத்தின் பயனைப்பற்றிச்’’ சொல்லுகிறார். அதற்கிணங்க ராம்லால் பெருகி வரும் தனது குடும்பத்தை நவீன முறைகளினால் கட்டுப்படுத்தி மகிழ்ச்சியாக வாழ்கின்றார்.

மிகச் சாதாரணமான சிறிய கதைதான். ஆனால் அதை நடத்தும் பாங்கு, கையாளப் படும் உத்திகள் நகைச்சுவையோடுகூடிய வசனங்கள் (ஆம், பொம்மைகள் பேசுகின்றன) இனிய இசை எல்லாம் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. இதைவிட இந்த பொம்மலாட்ட நிகழ்ச்சியை நடத்துபவர் ஓர் அமெரிக்கர் என்பதை அறியும் போது நம் வியப்பு இன்னும் பலமடங்காகிறது.

பில் பெர்டு (Bill Baird) என்ற இந்த அமெரிக்கர் 1922-ம் ஆண்டிலிருந்தே இக் கலையில் ஆர்வம் மிகக் கொண்டு சிகாகோ (Chicago) பல்கலைக்கழகத்தில் பொம்மலாட்டக் கலையில்

சிறப்பாகத்தேறிப் பட்டம் பெற்றவர். உலகின் பல்வேறு பகுதிகளிலும் பயணம் செய்திருக்கும்

நிகழ்ச்சியை நடத்தும் பில்பெர்டு

இவர் சொல்வது, ‘‘இந்தியாவில் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே மிகச் சிறந்தமுறையில் பொம்மலாட்டக்கலை இருந்திருக்கிறது. என்னுடைய கலை அறிவை உதயப்பூரைச் சேர்ந்த பொம்மலாட்டக்கலைஞர் ஒருவரிடம்தான் முழுமையாக வளர்த்துக் கொண்டேன்’’.

எளிய மக்களைச் சிறந்த முறையில் கவர்வது பொம்மலாட்டம் தான் என்ற கருத்தைக் கொண்ட இவர் லக்னோ அருகில் டியோரி என்ற கிராமத்தில் நடந்த நிகழ்ச்சிக்குப்பின் சுமார் 600 குடும்பத்தினர் இதுபற்றிச் சிந்திக்கவும், விவாதிக்கவும் தொடங்கியிருப்பதைச் சான்றாகக் காட்டுகிறார்.

படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் ஏற்ற வகையில் வசனங்களை மாற்றித் தேவையான அளவு நகைச்சுவையைக் கூட்டி அல்லது குறைந்து, எந்த இடத்திலும் நிகழ்ச்சியை நடத்தத் தயாராயிருக்கும் இவர் நியூயார்க் நகரில், தினசரி ‘‘ஹவுஸ் புல்’’லாகும் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பொம்மலாட்ட அரங்கின் (தியேட்டர்) உரிமையாளர். ஆர்வமும், சுறுசுறுப்பும் கொண்ட இந்த 65 வயது ‘‘இளைஞர்’’ ஒரு புகழ் பெற்ற டெலிவிஷன் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும்கூட. இவர் தயாரிக்கும் கார்ட்டூன் படங்களும்—சிறுவர், சிறுமியர், கணிதப் பாடம் எளிதில் உணர்ந்துகொள்ள எடுக்கும் படங்களும் புகழ்பெற்றவை.



பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் பிறந்த ஒரு கலை எப்படி வெளிநாட்டவர் ஒருவர்கைபட்டு நவீன மேடைஉத்திகளுடன் சிறப்பாகப் பெயர் பெற்றிருக்கிறது என்பது அவர் சமீபத்தில்அனைத்துலக (International) குடும்ப நலத் திட்ட நிறுவனத்திற்காக இந்த நிகழ்ச்சியை ஆங்கிலத்தில் நடத்திக் காட்டிய போது புலனாயிற்று.

—எழிலன்.

—படங்கள் ‘ஸ்பான்’

வான் என்ற சொல்லுக்கு மழை என்ற பொருள் உண்டு. மழையின்றி மாநிலம் இல்லை. பொன்னையும் பொருளையும் குவித்து வைத்திருந் தாலும் உணவின்றேல் உயிரேது ? உணவை விளைவிக்க அடிப்படைத் தேவை நீர். அரசும் பண்டு தொட்டு இன்றுவரை பல்லாற்ருனும் நீர் வளத்தைப் பெருக்குவதையே தன் தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. ஆற்றல் கொண்டு கிளர்ந்து செல்லும் தன்படைக்குத் தடையாக நின்ற இமயத்தைக் கடிந்து அதன் உச்சியில் புலிக்கொடி பொறித்த பொன்னிவளவ ஞய கரிகால் பெருவளத்தான், காவிரிக்குக் கரை யமைத்துக் கழனிகளுக்கு நீர் வழங்கும் பணியையே தன் உயர் பணியாக—உயிர்ப் பணியாகக் கொண்டான். '' நீர்இன்று அமையாது உலகு '' என்பதைக் குடவுலவியஞர் என்ற பெரும்புலவர் பாண்டிய மன்னன் நெடுஞ் செழியனுக்கு எடுத்துரைக்கும் தன்மை நினைந்து மகிழ்தற்குரியது. '' வேந்தே! உன் பெயர் இவ் வுலகில் நிலைபெற்று நிற்க வேண்டுமென்ற வேட்கை உனக்கிருப்பின், நீ செய்ய வேண்டுவது இதுதான் ! உடம்புக்கு நீர் இன்றியமையாதது. அவ்வுடம்போ உணவை முதலாக உடையது. உணவு என்பது நிலத்தோடு கூடிய நீர். எனவே நீரையும் நிலத்தையும் ஒன்ருகக் கூட்டி யவர்கள் இவ்வுலகத்துக்கு உடம்பையும் உயிரை

சிலம்பொலி சு. செல்லப்பன் எம்.ஏ., பி.டி.

யும் படைத்தவராவர். ஆதலால் செழிய ! நிலங்குழிந்தவிடத்தெல்லாம் நீர் நிலைகளை விரைந்து தளைத்தோர் தம்பெயரை இவ்வுலகத் தோடு தளைத்தவராவர் '' என்பது அப்புற நானூற்றுப் புலவரின் கூற்று. உண்ணுகின்ற நீர்நிறைந்த கிணறுகளைத் தோண்டியவர்களைச் '' சாவா உடம்பெய்தியவர்கள் '' எனத் திரி கடுகம் உவந்து வாழ்த்துகிறது. ' வரப்புயர ' என்ற ஔவை வாழ்த்தின் வளத்தை நாம் அறிவோம். அவ்வாழ்த்தின் விரிவுரையாக—

'' வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயருஞ்-சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்கு முலகு ''

என்ற சிறுபஞ்ச மூலப் பாடல் அமைகிறது.

மழை, பார்மகளுக்குப் பச்சைப் பட்டாடையை நெய்துதரும் நெசவாளி ! விண்முட்டும் முகடுகளில் மஞ்சுபடிந்து 'மழைபொழிவதால் அருவிகள் தோன்றி மலைகள் அழகு பெறுகின் றன. '' அருவிகள் வயிரத் தொங்கல், அடர் கொடி பச்சைப் பட்டே '' எனப் புலவர்கள் பாடிக் களிக்கின்றனர். அருவி நீர் பெருக்கெடுத் தோடிச் சமவெளிகளில் பாய்ந்து வயல் களை வளப்படுத்துகின்றது. வயல்களில் வாழை மரங்கள் செழித்து வளர்ந்து குலைகளைத் தள்ளு கின்றன. ' வளைந்து தொங்கும் தாறுகள் யானை களின் துதிக்கைகளை நினைவூட்டுகின்றன. முற்றி அடி சாய்ந்துள்ள செந்நெற்கதிர்கள் குதிரை களின் பிடரியை ஒக்கின்றன. நெல் மூட்டைகளை அடுக்கிச் செல்லும் வண்டிகளோ தேர்களாகின் றன. நெல்லறுப்பாரும், கட்டுகளைச் சுமப்பாரும் எழுப்பும் ஒலி போர்க்களத்தில் காலாட் படை யினர் எழுப்பும் ஒலியை ஒத்திருக்கிறது. ' இவ்வாறு, கருங்கதலியாகிய யானைப்படை, செந் நெற் கதிர்களாகிய புரவிப்படை, வண்டிகளா கிய தேர்ப்படை, வினைஞர்களாகிய காலாட்படை என்ற நாற்படையையும் இயக்கிச் செல்லும் தானைத் தலைவஞக மருதம் அமையக் காரண மாயிருப்பது மழையேயன்ருே? மழையின்றேல் ' நானிலம் '' என்பதற்கு பொருளேயிருக்காது. அவை தம் பொலிவிழந்து ஒரே நிலமாக, பாலையாகி விடும். உலக இயக்கத்திற்கே காரண மாக மழை அமைவதால் வள்ளுவர் அதனை '' அமிழ்தம் '' என்கிருர்.

'' வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று ''

மழையின் சிறப்பை வள்ளுவர் மழையின்மை யால் ஏற்படும் விளைவுகளைக் கொண்டு விளக்கு கிருர். மழையின்றேல் உலகத்தைப் பசி வாட்டும். உழவர்கள் ஏர் கொண்டு உழ மாட்டார்கள். '' மேழி பிடிக்கும் கை, முகம் சோர்ந்து நிற்கும் ; கலப்பை பிடிக்கும் கை கவினிழந்து நிற்கும்.'' பசும்புல்லின் தலையை யும் காண முடியாது. கடலும் தன் வளங் குன்றிப் போகும். இவ்வளவேன் ? வானோர்க்கு நடக்கும் திருவிழாவும் நடைபெருது. ஆம். பசி வந்திட்டால் பக்தியும் பறந்துபோம் ! பசித்தவனுக்கு உணவே பெருந் தெய்வமாய்த் தோன்றும்!

எளிய சிறுபாடல் ஒன்றைக் கண்ணுற்றேன். பாட்டு, தொடங்கியிருந்த முறையே அதைப் படிக்கத் தூண்டியது. '' தானதான தத்துவம்! இந்தத் தத்துவத்தைத் தப்பு என்ருல் தடி யெடுத்து மொத்துவோம் '' என்று தொடங்கு கிறது பாடல். பாடலை இயற்றியவருடைய தத்துவத்தை ஒப்புக் கொள்ளாவிட்டால் நமக்கு என்ன கிடைக்கும் என்பதை எடுத்த எடுப்பி லேயே கூறிவிடுகிருர். அவர் கூறும் அரிய தத்து வம்தான் என்ன ? '' உள்ள தெய்வம் கல்லடா '' என்கிருர். உண்மைதான் ! கோவிலில் அமைந் திருக்கும் தெய்வ உருவங்கள் கல்லால் ஆனவைகள் தாமே ! அடுத்து ' உலாவும் தெய்வம் செம்படா' எனக் குறிக்கிருர். கோவிலில் உள்ள தெய்வம் கல்லாலானது ; அது உலா வராது. உலாவி வரும் தெய்வ வடிவோ செம்பாலாயது. இவை இரண் டுமே பேசா வடிவங்கள். பேசக்கூடிய தெய்வங்கள் உண்டா ? உண்டு என்கிருர். அவை எவை என்பதை அவரே எதிரில் இருப்பவனை நோக்கிக் கூறுகிருர். '' பேசும் தெய்வம் நீயடா, நானடா.'' கோவிலில் உள்ள கற்றெய்வமும், உலா வரும் செம்புத் தெய்வமும் பேசமாட்டா. பேசும் வடிவங்கள்—தெய்வங்கள்—நீயும் நானும்

தான். இவை போகட்டும். இவற்றை விடப் பெரிய தெய்வம் ஒன்று உண்டு. அது எது தெரியுமா ? அதுதான் சோறு.'' பெரிய தெய்வம் சோறுடா '' என்று பாடல் முடிகிறது.

பசி வரும்போது, அனைத்து நெறிகளையும் மறந்து உணவையே கருதும் எண்ணம் தோன்றிவிடுகிறது.

'' சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு ''

என்ற குறட்பா மூலம் இக்கருத்து விளக்கம் பெறுகிறது. இம்மட்டோ? மழை பெய்யவில்லையாயின் தானமுமில்லை. ஏன்? தவம் கூட இல்லையாகும்.

கைம்மாறு கருதாது உதவி செய்பவர்களை மழைக்கு நிகராக்குகிறார் வள்ளுவர். தமக்கு உதவும் மழைக்கு உலகத்தார் என்ன கைம்மாறு செய்கின்றனர்? ஒன்றுமில்லையே! அது போன்றே மழை போன்றவர் செய்யும் உதவிகளும் கைமாறு வேண்டாதவையாம்! புகழ்பொருந்திய செல்வர் உற்ற சிறிய வறுமை, மேகம் வறுமை மிகுந்தாற் போன்ற தன்மை உடையது என்பார். அன்பு பூண்ட காதல் வாழ்க்கையில் தலைவன் தலைவிபால் காட்டும் அன்பு. உயிர் வாழ்கின்றவர்க்கு மேகம் மழை பெய்து காப்பாற்றுதலைப் போன்றது என்றுரைப்பார். எட்டுத் தொகையில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் நற்றிணையின் முதற் பாடலில் ஒரு தலைவி தம்மையின்றியமையாத நிலையைத் தனக்குத் தந்துவிட்ட தலைவனை எண்ணுகின்றாள். தலைவனில்லாமல் தானில்லை என்பதனை விளக்க உலகம் உணர்ந்து அறிந்து கொண்டிருக்கின்ற உவமை ஒன்றனைக் காட்டுகின்றாள்.

''நீர்இன்று அமையாது உலகெனின் யார்
யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு''

என்னும் குறட்பாவைப் பலமுறை படித்துப் படித்து நெஞ்சிலே பதித்துக் கொண்டவள்போலத் தோன்றும் அவள்,

''நீரின் றமையா உலகம் போலத்
தாமின் றமையா நந்நயந் தருளி''

என்று பேசுகின்றாள். வான மழை வையகக் காதலுக்கும் உவமையாகி வாழ்விக்கிறது; வாழ்கிறது.

இன்று உலகில் அழகுப் போட்டிகள் நடைபெறுகின்றன. செய்தித் தாள்களில் அவ்வப்போது ஆணழகன் தேர்வு, உலக அழகி தேர்வு என்ற செய்திகளைக் கண்ணுறுகிறோம். பொருள்களின் அளவுகளைமதிப்பிட நீட்டலளவை, நிறுத்தலளவை, முகத்தலளவை போன்ற அளவைகள் நடைமுறையில் உள்ளன. அழகை மதிப்பிட அளவுகோல் உண்டா? ஆனால் ஒன்று; போட்டியில் கலந்துகொள்பவர்களில் கருப்புநிறம் உடையோரைக் காணமுடிவதில்லை. மேடைமீது கருமை நிறம் கொண்டோர் நின்றால் ''நெருப்புக் குளியல்! இதற்குப் போட்டி வேறா?'' என்று கூறிவிடுவர். எவ்வாறோ மக்களில் சிவப்பு நிறம் உடையவர்களை அழகியோர் என்று எண்ணும் நிலை வளர்ந்து விட்டது. வள்ளுவரோ கருமையைத் தான் அழகு என்று குறிப்பிடுகிறார். தன்னுடைய ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறட் பாக்களிலும் 'எழில்' என்ற சொல்லை இரண்டு இடங்களில் மட்டுமே கையாளுகிறார். எழில் என்பதற்குப் பொருள் அழகு" என்பதாம். நுட்பமான மாட்சியுடையதாய், ஆராயவல்லதான அறிவு இல்லாதவனுடைய அழகு, மண்ணால் புனையப் பெற்ற பாவைக்கு ஒப்பானதாகும்.

''நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று''

இஃது எழில் என்ற சொல்லைக் கையாண்டுள்ள ஓரிடம். மற்றோரிடத்தில் அழகே உருக்கொண்டது என்ற வகையில் எழில் என்ற சொல்லைக் கையாளுகிறார். விண்ணில் மிதந்து செல்லும் கருமேகத்தை அழகின் திரட்சியாக-எழிலியாக-வள்ளுவர் காண்கிறார்.

''நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்
தெழிலி
தான்நல்கா தாகி விடின்''

கருமேகத்தை அவர் அழகு என்று எண்ண யாது காரணம்? அக் கருமேகத்தின் செயலைக் கருத்தில் கொணர்ந்து காண்கிறார். நீருண்ட கருமேகம், சூலுற்ற மாது போல செல்கிறது. இடையில் மலை தடுக்கிறது; உடன் மழையாக மாறுகிறது; நீராகப் பெருக்கெடுத்து ஓடி, நிலங்களில் பாய்ந்து நெல்லையும், கரும்பையும் மற்றும் பல்பொருள்களையும் விளைவிக்கிறது. மழையாக மாறும்போது மேகம் அழிகிறது. தன்னை அழித்துத் தண்ணீராக மாறி, மண்ணை வளமாக்கி மக்கள் குலத்துக்குப் பயனாகிறது. இவ்வாறாகத் தாம் அழிவதாயினும் வருந்தாது, பிற உயிர்கள் வாழப் பெருந் தொண்டாற்றுபவர்களே அழகுடையவர்கள் ஆவார்கள். ஒப்புரவால் கேடு வரும் என்றால், அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக் கொள்ளும் தகுதியுடையது என்கிறார் திருவள்ளுவர்.

அழகு என்பது நிறத்தினால் அல்ல; உலகுக்குப் பயன்படும் தன்மையால் என்பதை வலியுறுத்தத் தான் போலும் வள்ளுவர் மேகத்தை 'எழில்' என்றார். ஈகைப் பண்பால் எழில் பெற்று விளங்குகின்ற வானத்தின் ஈடற்ற நிலைமையை வள்ளுவர் உள்ளம் ஓரிடத்திலே மட்டும் எண்ணி நின்று விடாமல் நெடுக நினைந்து செல்கின்றது. செங்கோன்மையைப் பற்றிச் சிந்தித்துப் பேசும் வள்ளுவனார்-அரசன் விளையும் பொருள்களைத் தக்காங்கு வகுத்துத் தந்து பாதுகாப்பினைக் குடிகளுக்கு வழங்க முடியும்; ஆயின் அவ்வரசனும், குடிகளும், மற்ற உயிர்களும், தத்தமக்குள்ளே ஒருவரையொருவர் நோக்கி வாழும் நிலையினராக இருப்பினும், ஒருமித்த நிலையில் எதனை நோக்கி வாழ வேண்டியிருக்கின்றது; வானத்தையல்லவா? அதனால்-''வான்நோக்கி வாழும் உலகெல்லாம்'' என்றார். அருள் இல்லாது ஆட்சி செய்யும் அரசனின் கீழ் வாழும் குடிகளின் பொலிவிழந்த தன்மைக்கு மழைத்துளி பெறாத உலகை எடுத்துக்காட்டாக்குகின்றார். மங்கல வாழ்த்துப் பாட வந்த சேரன் தம்பியும் தன் காப்பியத்தில், திங்களைப் போற்றிச் செங்கதிரைப் போற்றி நிற்காமல், ஒளிப்பொருள்களாகிய இவற்றோடு ''மாமழை போற்றுதும்; மாமழை போற்றுதும்'' என்கிறார். வள்ளுவர் வழி நின்று பாடும் அவரோடு நாமும் சேர்ந்து ''மாமழை போற்றுவோமாக!''

905

3

'கல்லூரிப்பாட திட்டங்கள் மாற்றப்படவேண்டும்; புதிய உண்மைகள், கண்டுபிடிப்புகள், கருத்துகள், இடம்பெறவேண்டும். பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போனவற்றை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருத்தல் தவறு ' இதுதான் தெளிந்தோர் கருத்து.

பாடத்திட்டங்கள் நவீனமாக வேண்டுமென்றால், புதிய உண்மைகளுக்கு இடங் கொடுக்க வேண்டுமென்றால், உளுத்துப்போன பழைய செய்திகளும், தகவல்களும் இடம் விட்டு நகரவேண்டும். பழைய செய்திகளின் அடிப்படையில் பாட நூல்களை எழுதியுள்ள நம்மவர்களும் உண்டு. புதிய பாடமுறை வரும்போது, பழைய பாட நூல்கள் பயனற்றுப் போகும். ஆசிரியருக்கும் நட்டம்; நூல் வெளியிட்டாருக்கும் நட்டம். இருசாராரின் தன்னலத்திற்கும் எதிரானவை, புதிய பாட திட்டங்கள்.

பாட நூல்கள் எழுதாதவர்களுக்கும், பழைய பாடங்களே இருப்பதுவசதி. ஏன்? பல்லாண்டுகளாகச் சொல்லிக் கொடுத்த பாடங்களைக் கற்பிப்பது எளிது. வகுப்பிற்கு வகுப்பு ஆயத்தஞ் செய்து கொண்டிருக்கவே தேவையில்லை. புதிய பழக்கங்களை மேற்கொள்ளப்புதிய தனிச் சிந்தனை தேவை ; அதைவிட அதிகம் துணிச்சல் தேவை. அதேபோல், புதுப்பாட முறைக்கு, புதுப்புதுச் சிந்தனை தேவை. பழகாத பாடங்களாகையால், அவைகளை சமாளிக்க துணிச்சல் தேவை. எந்தச் சமுதாயத்திலும் இவை இரண்டும் பரவலான உணர்ச்சிகள் அல்ல. உள்ளத்தைக் காக்கும் இயல்பினரே, ' மாறார் '. 'அவர்கள் உளர்' என்பதை உணர்ந்து, அவர்கள் மனப் போக்கை ஓரளவு மாற்ற, ஒழுங்கான, திட்டமிட்ட முயற்சிகளை முன்னேறிய நாடுகள் மேற்கொள்ளுகின்றன. நாம் இவ்வழியில் செய்ய வேண்டியதைப் பின்னர், காண்க.

' மாறாரும் ' ' தன்னலக்காப்பரும்' உள்ள சூழ்நிலையே எங்கும். அதற்காகச் செய்யவேண்டியவற்றைச் செய்யத்தவறக்கூடாது அதில் காலதாமதமும் கூடாது என்று, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு கருதியது. விளைவு ?

இவ்வாண்டு, ஜூன் திங்கள், ' கல்விக்குழு'க்கள் மாற்றியமைக்கப்பட்டன. அக்குழுக்களில் பிற பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்களும் உண்டு. ஏன் ? புதிய காற்று வீசுவதற்காக. ஒவ்வொரு பாடத் துறைக்கும் ஒரு குழு உண்டு. அக் குழுக்களை மாற்றி அமைக்கும்போது,

'ஒவ்வொரு பாடத்திட்டத்தையும், முழுமையாக, மறுபரிசீலனை செய்யவும், அதைக் கூடிய அளவு தற்காலப்பாட மாக்கித் தரும்படி கல்விக் குழுக்களைக் கேட்டுக் கொள்ள" முடிவுசெய்யப்பட்டது. பொருள் என்ன ? இதை, இதை இப்படி இப்படி மாற்ற வேண்டுமென்று, ஆட்சிக்குழுப் பெரியவர்கள் ஆணையிடாமல், கல்விக் குழுக்களிலுள்ள நிபுணர்களின் சிந்தனைக்கும், ஆலோசனைக்கும், கருத்துக்கும் பாடதிட்ட மாற்றங்கள் விடப்பட்டன.

துணை வேந்தர், எல்லாக்கல்விக் குழுக்கூட்டங்களிலும் கலந்து கொள்ள உரிமை உடையவர். கருத்து தெரிவிக்கவும் உரிமை உடையவர். ஆயினும், கல்விக் குழுக்களின் முதற்கூட்டங்களில் கலந்து கொண்டு, 'கருத்தினைச் சொல்லும்சாக்கில், கட்டுப்படுத்த விரும்பவில்லை. எனவே, பேராசிரிய நிபுணர்களே, தங்களுக்குள் ஒளிமறைவின்றிப் பேசி முடிவு எடுக்க விட்டு விட்டோம்.

குழுக்கூட்டங்கள் நடந்தன. ஒவ்வொன்றிலும் மனம் விட்டுப் பேசினர். பாடத்திட்டங்களை மாற்றிப் புதியதாக்க வேண்டுமென்று ஒப்புக்கொண்டனர். அதற்கான உட்குழுக்களை அமைத்தனர். அவை, ஒவ்வொரு நிலை பாடத் திட்டத்தையும் விரிவாக அலசிப் பார்த்துப்புதுப்பிக்க வழி சொல்லும்.

மாற்றமென்றால், உள்ளதை உள்ளபடியே,

நெ.து. சுந்தரவடிவேலு
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

துலக்கிப் பளபளக்க வைப்பதா? அல்லது சில பாடங்களுக்கு அதிக நேரத்தை ஒதுக்கி, முன்னிலும் அதிகமாகவும் சீராகவும் கற்க வகை செய்வதா ? பிந்தியதாயின், அதிக நேரத்தை எப்படிக் கண்டு பிடிப்பது ? இக் கேள்விகள் எழுந்தன. இவற்றிற்குப் பொதுவிடைகள் காண வேண்டும், இல்லாவிட்டால் குழப்பம் விளையும். பட்டப் படிப்பில் வேதியல் பாடத்திற்கு ஓரளவு காலமும் பௌதீக பாடத்திற்கு வேருேரளவு காலமும் ஒதுக்கினுல் என்னவாகும் ? வேதியல் மாணவர்களுக்குக் கிடைக்கும் மொழிப்பாடக்காலம் ஒன்ருகவும், பௌதீக மாணவர்களுக்குக் கிடைக்கும் மொழிப் பாடக் காலம் வேருகவும் அமையும். இப்படி ஒவ்வொரு பாடப் பிரிவிற்கு ஒவ்வொரு வகையாக, மொழி நேரம் ஒதுக்குதல், நிர்வகிக்க முடியாததாகும். வெவ்வேறு பிரிவு மாணவர்களுக்கும், தாம் படிக்கும் மொழி அளவு சரியா, தம்மைவிட மற்ருெரு பிரிவினர் அதிக இலாபம் பெற்று விடுவார்களோ என்று அச்சமும் குழப்பமும் ஏற்படும். ஆகவே எல்லோருக்கும் பொதுவான அடிப்படையில், மொழி நேரத்தையும், பாடநேரத்தையும் பங்கிட்டு விட்டால், அதற்கேற்ப, மொழிப்பாடத் திட்டங்களையும், பிற பாடத் திட்டங்களையும் மாற்றியமைக்க முடியும். இதுவும் ஒருமித்த கருத்து.

பாடங்களுக்கு நேரங்களைப் பங்கிடுதல், பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் பொறுப்பு. அப்பொறுப்பினை மேற்கொள்ளும் முன்னர், உரியவர்களின் ஆலோசனையைக் கேட்கும் மரபினை மேற்கொண்டது. ஆட்சிக் குழுவின் ஆலோசனைப்படி, கல்விக்குழுக்களின் தலைவர்களோடு, துணைவேந்தர் கலந்து ஆலோசித்தார்.

முதலில், மொழிபற்றிய கல்விக் குழுக்களின் தலைவர்கள், தனியே, துணைவேந்தருக்கு ஆலோசனை கூறினுர்கள். அவர்கள் நான்கு திட்டங்களை, ஆய்ந்தார்கள். அவை வருமாறு:

(1) பட்டப்ப்படிப்பில் மொழிப் படிப்பைக் கட்டாய நிலையிலிருந்து நீக்கிவிடுவது ; விரும்பும் மாணவர் விரும்பும் மொழியைப் பாடமாக்கிக் கொள்ள விட்டுவிடுதல். இதுவே மேனுடுகளில் நடைமுறையிலிருக்கும் முறை.

(2) இப்போதிருப்பதுபோல், இருமொழிகளையும் இதே அளவு கட்டாயப்படுத்துவது.

(3) இப்போதிருப்பதுபோல் இருமொழிப் படிப்பைக் கட்டாயமாக்குவது. ஆனுல், ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கும் காலத்தைக் குறைத்துக் கொள்வது.

(4) ஒரு மொழியை மட்டும் கட்டாயமாக்குவது ; அதற்கும் ஒதுக்கும் காலத்தைக் குறைப்பது. மற்ருெரு மொழியை விரும்பியவர்க்கு மட்டும் கற்றுக் கொடுப்பது.

மேற்கூறிய நான்கின், நன்மை தீமைகளை மனம்விட்டுப் பேசினுர்கள், குழுத்தலைவர்கள்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா ஆகியவை தொழிற்துறையில் ஓங்கியுள்ள நாடுகள். அந்நாட்டவர் யாரும், வேலை தேடிக்கொண்டு, பிற நாட்டிற்குப் போகவேண்டிய தேவை இல்லை. ஆகவே அவர்களுக்குத் தம் தம் தாய்மொழி அறிவு போதும். பிற மொழி அறிவு, நம்மளவு, தேவையில்லை. தாய்மொழி அறிவை போதுமளவு பள்ளியிலே பெற்று விடுவதால், கல்லூரியில் தாய் மொழிப்படிப்பு கட்டாயமாக்கத் தேவையில்லை. நாம் அந்த நிலையில் இல்லை. நாம் வேலைதேடி வெளியே போகவேண்டியநிலையில் இருக்கிருேம். நம்நாடோ அந்நாடுகளைப் போல் ஒரு மொழி நாடல்ல. பல மொழிநாடு, இந்நிலையில் நம் மாணவர்கள் பிற மொழிப் பகுதிகளுக்குப் போக வேண்டும். மேலும் அந் நாடுகளில், தம், தம் தாய்மொழி ஆட்சிமொழியாகி பலநூற்ருண்டுகள் ஆகிவிட்டன. எனவே ஆட்சி மொழியும், மக்கள் மூச்சுமொழியாகிவிட்டது. அந்நாடுகளின் மொழி முறையைப் பின்பற்றும் நிலை, இன்னும் உருவாகவில்லை என்பது அவர்கள் கருத்து.

கற்பிக்கும் முறைகளைச் செம்மைப் படுத்துவதால் கற்கும் திறத்தை வளர்க்க முடிந்தால், இப்போது ஒதுக்கும் கால அளவிலேயே, 'பாடங்களை' த் தற்கால அளவிற்குக்கற்றுக்கொடுக்கலாம். பாடங்களில் ஏற்படும் திறன் குறைவாக இருந்தால் உலக வாய்ப்புப் போட்டிகளைச் சமாளிக்க முடியாது. மொழித் திறன் பாடத்திறன் குறைவை முழு அளவு ஈடு செய்யாது. இன்றையப் பாடங்களுக்கு அதிக நேரம் தேவை. முன்னிலும் அதிக நேரம் தேவை. மொழி நேரப் பங்கீட்டை அப்படியே வைத்திருந்தால், பாடங்களுக்குப் போதிய நேரம் கிடைக்காது. எனவே மொழி நேரத்தை ஓரளவு மாற்ற வேண்டும் என்பது வெளியாயிற்று.

மொழி நேரத்தை மாற்றுவது மொழித்திறனைப் பாதிக்காத வகையில் அமைக்க முடியுமா என்பதும் பேசப்பட்டது.

முன்பெல்லாம், நம் பல்கலைக் கழகத்தில் கூட, அறிவியல் பட்ட மாணவர்களுக்கு ஒரு மொழியே —ஆங்கிலமே— கட்டாயமாக இருந்தது. அதற்கும் இப்போது ஒதுக்கும் அளவு நேரம் ஒதுக்கவில்லை. வாரத்திற்குச் சிலமணிகளே ஒதுக்கினுர்கள். இதையும் சுட்டிக்காட்டி ஆலோசித்தார்கள்.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு, தொடங்கிய அம்முறை விடுதலை பெற்ற சூழ்நிலைக்குப் பொருந்தாது என்பதாலே, சில ஆண்டுகளாக, அறிவியல் மாணவர்களுக்கும் இருமொழி முறை வந்துள்ளது. ஒருமொழியென்ருல், ' ஆங்கிலமே ' அனேகமாக இடம் பெறும், இன்றுள்ள உணர்ச்சி நிலையில்.

இன்றைய மாணவர், நாளைய அலுவலர். அந்த அலுவல், இங்கா அங்கா ? எங்கே என்பதை உறுதியாகக்கூற முடியாது. இப்போதைய நிலையில் வெளிநாட்டு அலுவலுக்கும் வழி விடவேண்டும். இதுவா ? அதுவா ? என்று ஒரு மொழிக் கொள்கையை மேற்கொள்வது, பேச்சுக்குக் கவர்ச்சியாக இருக்கலாம். எதிர்கால வாழ்க்கைக்குப்போதுமா என்பது இன்னும் தெளிவாகாத ஒன்று. எனவே, விடுதலைக்கு முந்திய நிலைக்குத்திரும்புதல் தீங்காக முடியுமென்று நிபுணர்கள் கருதினர். மிச்சம் என்ன ?

இப்போது போல், இனியும் இருமொழி முறையைத் தொடர்வது. ஒவ்வொரு மாணவரும் இருமொழி கற்றுத் தேறவேண்டும். மற்ருென்றையும் நினைவு படுத்திக் கொண்டோம். அது என்ன ?.

பி.ஏ., பி.எஸ்.சி. பட்டப் படிப்பு, மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பிரிவு தமிழ் அல்லது தெலுங்கு முதலிய இந்திய மொழியோ அல்லது ஜெர்மன், பிரஞ்சு போன்ற பிற மொழியோ. இரண்டாம் பிரிவு, ஆங்கிலம், மூன்ரும் பிரிவில், வரலாறு, பொருளியல் ஆகிய கலைப் பாடங்கள் கற்கலாம். அல்லது வேதியல், பௌதீகம், கணக்கு ஆகிய அறிவியல் பாடம் படிக்கலாம். இவ்விரு தொகுப்புகளை விட்டு விட்டு, மூன்ரும் பிரிவில் கூட மொழிப்பாடத்தையே படிக்கலாம். பன்னிரண்டாம் பிரிவில் தமிழ் மொழியையோ ஆங்கில மொழியையோ பிறிதொருமொழியையோ, பிற பாடங்களுக்குப் பதிலாகப் படிக்கலாம். அதாவது மாணவர் ஒருவர், முழுக்கமுழுக்க மொழிப் பாடங்களோடு நின்று விடலாம். அவருக்கும் பட்டம் உண்டு. எடுத்துக் காட்டாக, தம்பியொருவர், முதற் பிரிவில் தமிழும், இரண்டாம் பிரிவில் ஆங்கிலமும், மூன்ரும் பிரிவிலும் ஆங்கிலமும் படிக்கலாம். இரண்டாம் பிரிவில் ஆங்கிலம் படித்து மூன்ரும் பிரிவில் ஆங்கிலம் படிக்கும் போது, இரண்டிற்கும் பாடத் திட்டத்தில் வேற்றுமையிருக்க வேண்டாமா? இரண்டாம் பிரிவில் மொழி கற்பதற்கு முதலிடமும், மூன்ரும் பிரிவில் இலக்கியக் கல்விக்கு முதலிடமும் கொடுப்பதே முறை என்று கருதினுர்கள் மொழி நிபுணர்கள். 'மொழி கற்பதற்கும் இலக்கியம்' வேண்டுமென்பதை அறியாதவர்கள் அல்ல அவர்கள். மொழி கற்கும்போது இலக்கியத்தைக்கையாளும் முறை வேறு. இலக்கியக் கல்வியின் போது இலக்கியத்தைக் கையாளும் முறை வேறு ; இவற்றைக் கருதி, ஆங்கிலத்தில், சேக்ஸ்பியரின் நாடகத்தையும், மில்டனின் கவிதையையும், மூன்ரும் பிரிவில் இணைத்து விட வேண்டும் என்கிருர்கள். இரண்டாம் பிரிவு ஆங்கிலத்திலிருந்து இவற்றைமூன்ரும் பிரிவுக்கு மாற்ற முடிவு செய்தார்கள். நடுநிலையிலிருந்து காண்போர் யாரும்இந்த பிரிவுமாற்றத்தைத் தீங்காகக் கருதமாட்டார்கள். யாருக்கு இலக்கியத்தில் விருப்பமோ, அவருக்கு நிறைய இலக்கியமும் மற்றவர்களுக்கு, மொழித் திறனுக்கு வேண்டிய அளவு நடைமுறை ஆங்கிலமும் தர, நிபுணர்கள், தன்னிசையாக செய்த முடிவிற்கு மாருக, நம் உணர்ச்சிகளைவளர்த்துக்கொள்ள தேவையில்லை.

இன்சூரன்ஸ் ஏஜெண்ட் :

உங்கள் அலுவலகச் சாமான்கள் எல்லாவற்றையும் இன்சூர் செய்துவிடட்டுமா ?

அலுவலக நிர்வாகி :

அந்தக் கடிகாரத்தைத்தவிர.. வேலைசெய்பவர்கள்தான் எப்போதும் அதைப் பார்த்த வண்ணமிருக்கின்றனரே..

ஆங்கில மொழிக்கு வாரத்தில் ஆறு மணி என்பது, ஏற்கனவே கூறப்பட்ட ஆலோசனை. இப்போது திடீரென முளைத்ததல்ல. அதை இப்போது ஒப்புக்கொண்டார்கள். அவ்வளவே! ஆங்கில மொழிக்குச் சமமான நிலை தமிழ் முதலியமொழிகளுக்கும்கொடுக்க முடிவு செய்தார்கள். அந்த அளவிற்கு உலகம் அறிந்தவர்கள் மொழி நிபுணர்கள்.

மொழிபற்றிக் கலந்துரையாடும் போது, மொழி வகுப்புகள் மிகப் பெரிதாக இருக்கும் குறை சுட்டிக் காட்டப்பட்டது. இக்குறை இதற்குமுன் பல முறை காட்டப் பட்டது. வகுப்புக்கு நூறு மாணவர்கள் என்பது சமாளிக்க முடியாத நிலை என்பதிலே கருத்து வேற்றுமையிராது. எவ்வளவுக்குக் குறைக்கலாம் என்பதை, மொழிக் கல்விக்குழுக்கள் கலந்து பேசி முடிவு செய்ய உரிமை கேட்கப்பட்டது. அவ்வுரிமை கொடுக்கப்பட்டது. 'பிரிவு' தோறும்ஒதுக்கும் ஆங்கிலப் பாட நேரம் குறைந்தாலும், வகுப்பு உச்ச எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம், குறிப்பிட்ட எண்ணிக்கைஉள்ள வகுப்புக்கு அதிகப் பிரிவுகள் தேவைப்படும். அது கல்லூரிக்கு மொத்த ஆங்கிலப் பீரீடுகளும் 'தமிழ் மணி'களும் குறையாது காக்கும். எனவே, ஆசிரியர் நீக்கப்படத் தேவை ஏற்படாது.

(இன்னும் வரும்)

தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்.

* * *

பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ் மொழியில்
பெயர்த்தல் வேண்டும்;

* * *

இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்.

* * *

எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

— பாரதியார்.

வண்ணப் படங்களில்

42-ம் பக்கத்தில்

1. சென்னைக்கு வருகை தந்த மேற்கு ஜெர்மனி நாட்டுப் பத்திரிகையாளர்கள் முதல்வர் கலைஞரை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடிடும் காட்சி (26-11-1970).

• • •

2. சென்னையில் குருநானக் கல்லூரிக்கு, முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில், தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். படத்தில் ஆளுநர் உரையாற்றுவதைக் காணலாம். கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் படத்தில் உள்ளார்கள்.

• • •

3. தேசிய மாணவர் படையின் 22-வது ஆண்டு விழா நேரு அரங்கத்தில் நடைபெற்றது. மாணவர் படையின் அணி வகுப்பினைக் கல்வியமைச்சர் பெற்றுக் கொள்ளும் காட்சி(22-11-1970)

• • •

4. இந்தியப் பயிற்சி நிறுவனத்தில் (ஐ.டி.ஐ.) ஆறாவது அனைத்திந்தியத் திறமைப் போட்டியில் தமிழகம் முதல் மாநிலமாக வெற்றி பெற்றது. மைய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் திரு. சஞ்சீவையாவிடம் வெற்றி பெற்ற மாணவர் பரிசு பெறுகிறார். மாநிலத் தொழிலாளர் நல அமைச்சரும், தொழிலமைச்சரும் அருகே உள்ளனர். (28-11-1970).

• • •

5. மன நோயுள்ளவர்கள் பற்றிய மூன்றாவது தேசியமாநாடு சென்னை இராஜாஜி மண்டபத்தில் 4-12-1970 அன்று நடைபெற்றது. அதையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சியினை தமிழ் நாடு ஆளுநர் அவர்களும், வேளாண்மை அமைச்சர் அவர்களும் பார்வையிடுகின்றனர்.

• • •

6. சிம்லாவில் நடந்த அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டியில் வெற்றிவாகைசூடித் திரும்பினர் தமிழகக்காவல்துறை வீரர்கள். 23-11-1970 அன்று அவர்கள் சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் வந்திறங்கியதும் காவல் துறைத் தலைவர் திரு ஆர். எம். மகாதேவன் மாலைசூட்டி வரவேற்றார்.

• • •

7. இளங்குற்றவாளிகள் நல்வழிக் கழகத்தின் 15-வது ஆண்டு விழா பெரம்பூரில் உள்ள காவல் துறை ஆணையாளரின் அலுவலகத்தில் நடைபெற்றது (23-11-1970). அதில் அமைச்சர் திரு கே. வி. சுப்பையா உரையாற்றுகிறார்.

• • •

39-ம் பக்கத்தில்

1 & 2. சென்னையில் கடந்த நவம்பர் திங்கள் 22, 23 தேதிகளில் இடைவிடாது பெய்த பெரு மழையினால் சேதம் அடைந்த பகுதிகளை, முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிஅவர்களும் உணவு-உள்ளாட்சி அமைச்சர் திரு ப.உ.சண்முகம் அவர்களும், வேளாண்மை-அரிசனநல அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்களும் பார்வையிடுகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல்வர் உணவு வழங்குகிறார்.

• • •

3. சென்னை தேனாம்பேட்டையில் மாநகராட்சிப் பூங்காவினை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். நகரத் தந்தை திரு. வை.பாலசுந்தரம், குடிசைப்பகுதி வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ., திரு வி. முனுசாமி எம். சி., ஆகியோரும் உடன் உள்ளனர்.

• • •

4. முதல் 7 வரை திருவண்ணாமலையில் நிலமற்ற ; ஏழை மக்களுக்கு முதல்வர் பட்டா வழங்கிடும் காட்சி.

• • •

6. பட்டா பெற்ற நிலமற்ற ஏழைகளில் சிலர்.

• • •

மையப் பக்கத்தில்

வைகை அணைக் காட்சிகள்

வெண்பாப் போட்டி-6

"பொங்கல்...... எனத் தொடங்கிக் கரும்பு" என முடியும் வகையில் நேரிசை வெண்பா அனுப்புமாறு வேண்டுகிறோம்.

முடிவு நாள் : 2—1—1971.

பரிசு : ஓராண்டு தமிழரசு அன்பளிப்பு.
வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு : முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா !


வைகை அணைக் காட்சிகள்
VIEWS OF VAIGAI DAM



மகளிர் பகுதி

இந்த இதழின் இன்ருெரு பகுதியில் வெங்காயத்தின் மகிமை வெளியாகியுள்ளது.

அந்த மகிமைக்குரிய வெங்காயத்தை நாம் பலவகையில் பயன்படுத்தி வருகிருேம். புதியவகை உணவுகளாக உள்ள சப்பாத்தி போன்றவற்றை நாம் தயாரிக்கும்போது, அவற்றிற்குத் தருந்தாற்போல் கறிவகைஉடன் இருப்பின் உணவின் சுவை மேலும் அதிகமாவது இயற்கையே. சப்பாத்திக்கு ஏற்ற வெங்காய 'குக்கும்பர்' செய்து சாப்பிட்டால் அதன் சுவையே தனி! வெங்காயம் சேர்ந்த ஒரு சில உணவுப் பொருள்கள் பற்றிய குறிப்பினை இப்பகுதியில் விளக்கியுள்ளோம்.

வெங்காய குக்கும்பர்

தேவையான பொருள்கள்
(அளவு 8 பேர்களுக்கு)

வெங்காயம்—550 கிராம்
கொத்தமல்லிக்கீரை—சிறிய கட்டு ஒன்று
பச்சை மிளகாய்—10 கிராம்
எலுமிச்சம்பழம்—4 மூடிகள்
தக்காளி—¼ கிலோ
உப்பு—ருசிக்குத் தக்கபடி

செய்யும் முறை :—

வெங்காயத்தைப் பொடிசாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். (நீளவாகிலும் அறியலாம், குறுக்கு வசத்திலும் அறியலாம்) நன்கு பொடிசாக இருக்கவேண்டும். பச்சை மிளகாயை, நீளவாக்கில் நறுக்கி, பின்னர் பொடிசாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். தக்காளியைச் சிறுசிறு துண்டங்களாக நறுக்கவும். கொத்தமல்லித் தழையைப் பொடிசாகக் கிள்ளி வைத்துக்கொள்ளவும். இவையெல்லாவற்றையும் ஒன்ருக ஒரு கிண்ணத்தில் போட்டு, உப்பையும் உடன் சேர்த்து, எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து ஊற்றி நன்ருகக் கிளறி விட்டுச்சப்பாத்திசாப்பிடுவதற்கு வைத்துக்கொள்ளலாம். இதனை மட்டன் குழம்பு வைக்கும் போதும் தயாரித்துச் சாதத்திற்கு வைத்தும் உண்ணலாம்.

உருளைக்கிழங்கு பிரியாணி

தேவையான பொருள்கள்
(அளவுகள் 8 நபர்களுக்கு)

புலவு அரிசி—450 கிராம்
பயத்தம்பருப்பு—225 கிராம்
உருளைக்கிழங்கு—450 கிராம்
நெய்—30 கிராம்
பூண்டு—பெரிய பூண்டு 3
தேங்காய்—1 தேங்காய்
இஞ்சி—1 துண்டு
வெங்காயம்—120 கிராம்
கொத்தமல்லி—½ கொத்து
தயிர்—60 கிராம்
லவங்கப்பட்டை—1 துண்டு
மஞ்சள் பொடி—1 சிறிய ஸ்பூன்
மிளகாய் பொடி—6 கிராம்
உப்பு—ருசிக்குத்தக்கபடி

செய்யும் முறை:—

அரிசியைக் கழுவிச் சுத்தம் செய்துகொள்ளவும். பருப்பையும் நன்ருகக் கழுவிக் கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கி வைத்துக்கொள்ளவும். நெய்யை நன்ருகக் காயவைத்து, அதில் வெங்காயத்தைப் போட்டு நன்கு வதக்கி எடுத்துவைத்துக்கொள்ளவும். பின்னர் அரிசியையும், பருப்பையும் போட்டு நன்ருக வறுக்கவும். அதனில் அவ்வரிசியும், பருப்பும் வேகுமளவிற்குச் சுடுதண்ணீரை ஊற்றவும். பின்னர் மிளகாய்ப் பொடி, மஞ்சள் பொடி, லவங்கப்பட்டை, இஞ்சி, இவைகளைப் போட்டு ஆறவைக்கவும். உருளைக்கிழங்கை வேக வைத்துத் தோலை உரித்தபின் நன்ருக நசுக்கிவிட்டு, மறுபடியும் வேகவிடவும். அரிசி வெந்தவுடன் உருளைக்கிழங்கையும் உப்பையும் போடவும். அவ்வப்போது கிண்டிக்கொண்டே இருக்கவும். பக்குவமடைந்ததும் இறக்கி, கொத்தமல்லித் தழையையும், வதக்கிய வெங்காயத்தையும் போட்டுக் கிண்டவும். பின்னர் உண்டால் நன்ருக இருக்கும்.

அசைவம்
மட்டன் பஜ்ஜி

தேவையான பொருள்கள்

இறைச்சி (கொத்துக்கறி அல்லது கைமா)—300 கிராம்
தேங்காய்ப்பூ—½ முடி
பொட்டுக்கடலை—1 பெரிய ஸ்பூன்
வெங்காயம்—5 கிராம்
வெள்ளைப்பூண்டு—2
பெருஞ்சீரகம்—1 சிறிய ஸ்பூன்
கசகசா—1 சிறிய ஸ்பூன்
பச்சைமிளகாய்—6 கிராம்
உப்பு—ருசிக்குத்தக்கபடி
முட்டை—4
கறிவேப்பிலை—சிறுகொத்து
மிளகாய்த் தூள்—1 சிறிய ஸ்பூன்
மஞ்சள்பொடி—1 சிறிய ஸ்பூன்
எண்ணெய்—200 கிராம்

செய்யும் முறை :— தேங்காய்ப்பூ, கழுவிச் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி, பொட்டுக்கடலை, வெங்காயம், பச்சைமிளகாய், பெருஞ்சீரகம், கசகசா, வெள்ளைப்பூண்டு, உப்பு இவற்றையெல்லாம் ஒன்றாகப்போட்டு, கோளா உருண்டைக்கு அறைப்பது போல் நன்றாக அறைக்கவேண்டும். பின்னர் அதில், மிளகாய்ப் பொடி, மஞ்சள் பொடி, கருவேப்பிலை எல்லாவற்றையும் போட்டு, நன்றாகப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். பின்னர் முட்டையை உடைத்து ஊற்றி நன்றாக அடித்து வைத்துக் கொண்டு அதில் சிறிதளவு உப்பு கலந்துகொண்டு, அறைத்து வைத்துள்ள இறைச்சியைச் சிறு சிறு உருண்டைகளாக எடுத்து, நீளவாக்கில் பஜ்ஜிபோல் தட்டி வைத்துக்கொள்ளவும். வாணலியின் எண்ணெய்யை ஊற்றி நன்றாகக் காய்ந்தவுடன், அடித்து வைத்துள்ள முட்டையில், கட்டி வைத்துள்ள மட்டனை நனைத்து எடுத்துக்காய்ந்துள்ள எண்ணெய்யில் போட்டு, வறுத்து எடுத்து வைத்துச் சாப்பிடவும்.

பாரதியார் கூறும் பயிற்சிமொழி !

தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவவேண்டுமானால், சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோரெல்லாரும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதை அனுஸரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை. ஐரோப்பிய ஸ்திரீயாகிய மிஸ்ஸஸ் பெஸண்ட் கூடச் சிலதினங்களின் முன்பு பெங்களூரில் செய்த பிரசங்கமொன்றிலே தமிழ் பாஷையை மிகவும் வியந்துகூறி, நாமெல்லோரும் தமிழ்ப் பயிற்சியில் தக்கபடி சிரத்தை செலுத்தாமல் இருப்பது பற்றி வருத்தப்பட்டதாகத் தெரிகிறது. இப்படி நம்மைப் பார்த்துப் பிறர் இரக்கப்படும்படியான அவமான நிலை விரைவில் நீங்கவேண்டுமென்று தேவர்களை வணங்குகிறோம்.

(பாரதியார் அவர்கள், மேற்கூறியவாறு 8–3–1916 அன்று காளிதாசன் என்ற புனை பெயரில் எழுதியுள்ள கட்டுரையில் ஒரு பகுதி).

பாரதியாரின் தமிழ்ப்பற்று

தமிழ், தமிழ், தமிழ்—என்று எப்பொழுதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால், புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை புதிய புதிய இன்பம்—தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.

• • • •

தம்பி—நான் ஏது செய்வேனடா; தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனைவிட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு ஸம்மதமில்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது.

• • • •

தம்பி—தமிழ்நாடு வாழ்க என்றெழுது. தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது. தமிழ் நாட்டில் வீதி தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன—கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுது. தமிழ் நாட்டில் ஒரே ஜாதிதான் உண்டு. அதன் பெயர் தமிழ் ஜாதி.

(அமரகவி பாரதியார் அவர்கள், நெல்லையப்பருக்கு 19–7–1915 அன்று எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்).

அன்னபூரணி

வ. சம்பந்தம்

படுக்கையை விட்டு நெட்டி முறித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார் ராமசாமி. பொழுது பலபலவென்று விடிந்து கொண்டிருந்தது. மார்கழி மாதக்குளிர் மார்கழி மாதத்தில் தான் வர வேண்டுமென்று ஏதாவது வரைமுறை உண்டா என்ன ? கார்த்திகை மாதமே குளிர ஆரம்பித்துவிட்டது. கடந்த வாரம் பெய்த மழையினால் சுற்றுப்புறம், சூழ்நிலை எல்லாமே குளிர்ந்திருந்த காலை நேரம் .... அரையாண்டுத் தேர்வு சமயம் ; பக்கத்து வீட்டுப் பையன் படிக்கிறேன் என்று எழுப்பும் உரத்த சத்தம் காலை வேளையில் காதுக்கு நாராசமாக இருந்தாலும் - மனத்திற்கு இதமாக இருந்தது ராமசாமிக்கு. என்னவோ தெரியாது! படிக்கின்ற பையன்களைப் பார்த்தாலே அவருக்கு ஓர் அலாதி மகிழ்ச்சி. வீதியிலே 'அம்மா.. பால் ' என்ற குரல். ரங்கநாயகி கதவைத் திறந்து பால் வாங்கிக் கொண்டிருந்தாள். வேலைக்காரர்கள் இருந்தார்கள். இருந்தாலும், இதெல்லாம் அவள் கையால்தான் நடக்க வேண்டும். அப்படி அவளுக்கு ஒரு வழக்கம். ரங்கநாயகி அந்த வீட்டின் இரண்டாவது மருமகள். படுசுட்டிப் பெண். அதிகமாகப் படிக்கவில்லையென்றாலும் புத்திக் கூர்மை மிகுந்தவள். அந்தப் பெரிய வீட்டிலேயே அவள் மீது ராமசாமிக்கு ஒரு தனிப்பிரியம். எதையுமே கச்சிதமாகச் செய்து முடிப்பாள். கலகலவென்று அந்த வீட்டில் அவள் தொட்ட இடமெல்லாம் துலங்கிக் கொண்டிருந்தது. பால் வந்து விட்டது. இன்னும் பத்து நிமிடங்களுக்கெல்லாம் 'மாமா காப்பி' என்று ஆவி பறக்கும் காப்பியை எடுத்துக் கொண்டு வந்து நிற்பாள் ரங்கநாயகி. படுக்கையை விட்டு எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொள்ளச் சென்றார் ராமசாமி.

அந்த வீட்டில் அவருக்கு ஒரு கவலையும் கிடையாது. மூன்று பிள்ளைகள், இரண்டு பெண்கள் அவருக்கு. பெண்கள் இருவரையும் நல்ல இடத்தில் கொடுத்து விட்டார். பையன்கள்...... பையன்களா அவர்கள்? திருமணமாகிக் குழந்தைகள் பெற்றுப் பெரிய பெரிய பிள்ளைகளாக வளர்ந்து விட்டார்கள். மூன்று பிள்ளைகளையும் மணி மணியாக வளர்த்திருந்தார் அவர். இன்று அவர்கள் நல்ல நிலையில், நல்ல உத்தியோகத்தில் இருக்கின்றார்கள். மூன்று பிள்ளைகளும் பெரியவர்களாகி விட்டாலும், அப்பாவின் அரவணைப்பிலேயே, ஒரே வீட்டிலேயே ஒன்றாக வாழ்ந்து வந்தனர். மூன்று பிள்ளைகளின் குடும்பமும் ஒரே வீட்டில் ! சகோதரர்கள் ஒற்றுமையாக இருப்பது அப்படி ஒன்றும் வியப்பிற்குரியதல்ல ; வீட்டுக்கு வந்த மூன்று மருமகப் பெண்களும் ஒற்றுமையாக, எந்தவித மனக் கிலேசமுமின்றி, அழகாகக் குடும்பத்தை நடத்திக்கொண்டு சென்றனர். 'நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்' என்ற கவிஞனின் கூற்றுக்கு இலக்கணமாக, இலக்கியமாகத் திகழ்ந்தது ராமசாமியின் குடும்பம் !

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு 'கூடத்துக்கு வந்தார் ராமசாமி. பேரப் பிள்ளைகள் பள்ளிப் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தனர். 'மாமா.. காப்பி' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் ரங்கநாயகி. 'மாமா இன்னைக்கு என்ன சமையல்.... என்ன மெனு ? சொல்லுங்கள்' என்றாள். ராமசாமி அவளை ஏறிட்டுப் பார்த்தார். களை சொட்டும் முகம்—அதற்குள்ளாகச் சீவி முடித்துப் பொட்டிட்டு அலாதி ஒளி வீசிக் கொண்டிருந்தது, அந்த முகத்தில்! ராமசாமியின் அருமை மனைவி அன்னபூரணி காலமாகி ஆண்டுகள் ஐந்து உருண்டோடி விட்டன. ரங்கநாயகிதான் இப்பொழுது சமையலறைக்குப் பொறுப்பு. மூத்த மருமகள் சொர்ணம் முன்பு பார்த்துக் கொண்டிருந்த 'மானேஜ்மென்டை' ரங்கநாயகியிடம்ஒப்புவித்து விட்டாள். கூடத்தில் ராமசாமியின் அருமை மனைவி அன்னபூரணியின் திரு உருவப் படம் பெரிய அளவில் மாட்டப் பட்டிருந்தது. அந்தப் படத்தை ஏறிட்டுப் பார்த்தார் ராமசாமி. பளிச்சென்று மங்களகரமான முகம். காலச்சுவுக்கினால் அடிபட்டுச் சற்று கன்றிப் போயிருந்தாலும் ஒளி குன்றாத முகம். தமிழ்க் குடும்பத்தின் போன தலைமுறையின் எடுத்துக் காட்டாக,

917

பெரிய குடும்பத் தலைவியின் உணர்வுகளைபிரதிபலிக்கும்முகம்! நெஞ்சத்து உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு ரங்கநாயகி கேட்ட கேள்விக்கு பதில் சொல்லிவிட்டுக் காப்பியை பருகி விட்டுக் கூடத்தில் உள்ள சாய்வு நாற்காலியில் வந்தமர்ந்தார் ராமசாமி.

''அப்பா.......... கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன். திரும்பி வீட்டுக்கு வந்துட்டு தான் ஆபீசுக்கு போகணும்''. மூத்த பிள்ளை முருகேசன் அப்பாவிடம் சொல்லிவிட்டுக் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான். அவன் சென்ற நடையழகையே பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார் ராமசாமி. முருகேசன் மூத்த பிள்ளை. வயது 40 இருக்கும். இன்று அவன் ஒரு பெரிய. இஞ்சினியர்....நினைவு அலைகள் ராமசாமியின் எண்ணக் கடலிலே உருண்டு உருண்டு ஓடி வந்தன.

.அந்தக் காலத்தில் அதாவது ராமசாமிக்குத் திருமணமாகி, அன்னபூரணியைக் கைப்பிடித்துக் குடும்பப் பொறுப்பேற்ற பொழுது, அவருக்கு வருமானம் ஒன்றும் அதிகமாகக் கிடையாது. வசதிகள் அவ்வளவு கிடையாது. வாய்ப்புகளும் அவ்வளவு கிடையாது. சாதாரண மத்தியதரக் குடும்பம் என்று கூடச் சொல்ல முடியாது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்ச் சமுதாயத்தில் இலட்சோப இலட்சம் குடும்பங்களிலும் இதே நிலைதான். சமுதாய அமைப்பு முறை அப்படி. சமுகத்தில் கீழ் மட்டத்தில் இருந்தவர்கள் கீழ் மட்டத்திலேயே இருந்தனர். மேல் மட்டத்தைப் பிடித்துக் கொண்டவர்கள்அதை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். அது மட்டுமல்ல; கீழே உள்ளவர்கள் எங்கே மேலே வந்து விடுவார்களோ; நம்மைப் போல் அவர்களும் படித்து எங்கே உயர்ந்து விடுவார்களோ என்ற அச்ச மேலீட்டால் சுயநல உணர்வுடன் சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டவர்கள், ஏமாளிகளாகக் கீழே இருந்தவர்களைப் படிக்க விடாமல், அண்டவிடாமல் அழுத்தி வைத்துக் கொண்டிருந்த காலம். பற்பல புரியாத விஷயங்களை யெல்லாம் பெரிசு பெரிசா எடுத்துச் சொல்லி உபதேசங்களை வாரி இறைத்துக் கீழே உள்ளவர்களைத் திசை திருப்பி விடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்களும் நம்மைப் போல் படித்து விட்டால் எங்கே விஷயங்களைத் தெரிந்து கொள்வார்களோ என்ற குரோத உணர்வில் அவர்களுடைய அறிவுக் கண்களை மூடி வைக்க, உச்சத்தில் இருந்தோர் அரும்பாடுபட்டுக் கொண்டிருந்த காலம்! இந்தச் சூழ்நிலையில் வசதியற்ற பிரிவைச் சேர்ந்த ராமசாமி எதிர்நீச்சல் போட்டுத் தெளிவுடன் செயலாற்றி வெற்றி கண்டார். தான் சிறு வேலையில் இருந்தாலும், சம்பளம் குறைவாகப் பெற்றாலும், பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பதற்காக அவர் அரும்பாடுபட்டார். அதற்குத்தான் எத்தனை எதிர்ப்புகள்! எத்தனை ஏசல்கள் அந்தக் காலத்தில்! . ஆனால், ராமசாமி இதற்கெல்லாம் மசியவில்லை. தன் இலட்சியத்திலேயே கண்ணாக இருந்தார். தன் குடும்பத்தை, தன் பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதிலே எந்த விதத் தியாகத்தையும் செய்யத் தயங்கவில்லை அவர். அவருக்குக் குறைந்த சம்பளம். குடும்பத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டும். மூன்று பிள்ளைகளையும் படிக்க வைக்க வேண்டும். கல்லூரியில் படிப்பதென்பது , அதற்கான வாய்ப்புகள் வசதிகள், சமுகத்தில் ஒரு பகுதியினருக்குத் தான் முடியும், என்றிருந்த மோசமான காலம். மூன்று பிள்ளைகளையும் அரும்பாடுபட்டுப் படிக்க வைத்தார். மூத்த பிள்ளை இஞ்சினியர். இரண்டாவது பிள்ளை டாக்டர். மூன்றாவது பிள்ளை வக்கீல் · பிற்பட்ட சமுதாயத்தை உயர்த்த வேண்டும். அதற்கு, அந்தச் சமுதாயத்தில் அனைவரும் நன்றாகப் படிக்க வேண்டும் ; அதுதான் அடிப்படைத் தேவை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்ட ராமசாமி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டு இன்று வெற்றி கண்டு விட்டார். ஆனால், அதையெல்லாம் பார்க்க, கண்டு மகிழ, இன்று அவருடைய அருமை மனையாட்டி அன்னபூரணி தான் உயிரோடு இல்லை. கஷ்ட காலத்தில் அவள் அவருக்கு உறுதுணையாக இருந்தாள். நன்றாக இருக்கும்பொழுது இல்லை. தன் மனைவியின் திரு உருவப் படத்தைப் பார்த்ததும் அவர் கண்களில் நீர் கலங்கியது. பேரப் பிள்ளைகள் பார்த்து ''ஏன் தாத்தா கண் கலங்குகிறீர்கள்'' என்று கேட்டுவிடுவார்களோ என்று அவசரம் அவசரமாகக் கண்ணில் வழிந்தோடும் நீரைத் துடைத்துக் கொண்டார்.

''யாரோ வந்திருக்காங்க தாத்தா உங்களைத் தேடிக் கொண்டு'' பேரப் பிள்ளை மணி ஓடி வந்தான்.

வந்தவர் யார் என்று பார்த்தார் ராமசாமி. அடையாளம் புரியவில்லை. நல்ல இளவயதுப் பையன். வயது இருபது இருபத்திரண்டுதான் இருக்கும். அடக்க ஒடுக்கத்துடன் கரங்கூப்பி நின்றான்.

''யார் தம்பி தெரியலியே?..''

''ஐயா..உங்களுடன் கோயமுத்தூரில் ஒன்றாக இருந்த ராசமாணிக்கம் பேரனுங்க! இப்ப கும்பகோணத்தில் இருக்கோம். இங்கே சென்னையில் ஒரு வேலைக்காக வந்திருக்கேன். அது சம்பந்தமா உங்களைப் பார்க்கச் சொன்னாங்க தாத்தா....லெட்டர் கூடக் கொடுத்திருக்காங்க!'' .... என்று அடக்கத்துடன் ஒருகடிதத்தை நீட்டினான்.

'' அப்படியா......கொண்டா தம்பி....'' என்று கடிதத்தை வாங்கிப் படித்தார்.

'' தம்பி இராசமாணிக்கம் பேரனா நீ.. ரொம்ப மகிழ்ச்சி.. ....நல்ல சமயத்துக்கு வந்தே. நான் கட்டாயம் சொல்றேன்'' என்று விவரத்தைக் குறித்துக் கொண்டார்.

'' ரொம்ப நன்றிங்க ..நான் வரேனுங்க.... வந்து பார்க்கிறேனுங்க..'' என்று கரங் கூப்பி விடை பெற்றுக் கொண்டான் அந்தப் பையன்.

அவன் போவதையே சற்று நேரம் வெறிக்கப் பார்த்துக் கொண்

டிருந்தார் ராமசாமி. ''பையன் பி. ஏ. படிச்சிருக்கான். நம்ப பையன், கட்டாயம் அவனுக்கு ஏதாகிலும் செய்யணும்'' என்கிற மனத்தில் இயற்கையாகவே ஏற்பட்டு விட்ட ஒன்று. வளர்ந்து வரும் இன்றையச் சமுதாயத்தில் அவன் ஓர் அங்கம். பல எதிர்ப்புகளிடையேமெள்ளத் தலை தூக்கி ஊன்றிக் கொள்ளப் பார்க்கும் சமுதாயத்தில் அவனும் ஒருவன். ராமசாமியின் எண்ண அலைகள் மீண்டும் உருண்டு உருண்டு ஓடி வரத் தொடங்கின. அன்றைக்கு நம்மையெல்லாம் படிக்கவே கூடாது என்ருர்கள். பல காரணங்களைக் கூறி நம்மை நசுக்கி வைத்திருந்தார்கள். இன்று நம்ப பிள்ளைங்க நிறையப் படிக்கிருங்க..ஆனுல், கைதூக்கிவிட ஆள் இல்லாமல் திண்டாடுகிருர்கள். வேலையின்மை— வேலை வாய்ப்பு இல்லாத நிலை இன்று பரவலாக உள்ளது. உண்மைதான். ஆனுல், வாழ்விலே வசதி படைத்தவர்கள், நம்மைச் சேர்ந்தவர்கள் பெரிய பெரிய பொறுப்பில் வந்துள்ளவர்கள், தான் இந்த பொறுப்புக்கு வரக்காரணமாக இருந்த, அடித்தளமாக இருந்த, சில பல இலட்சியங்களை எண்ணிப் பார்த்துத் தான் வந்த பாதையைச்சற்றுத் திரும்பிப் பார்த்துத் தங்களாலான உதவிகளை, தங்களாலானதை, சுயநல உணர்வைச் சற்று ஒதுக்கித் தள்ளிச் சமுதாய உணர்வுடன், தான், தன் குடும்பம் என்று எப்பொழுதும் வரையறுத்துக் கொள்ளாமல்— தன் சமுதாயத்தில் வாய்ப்பு இல்லாத காரணத்தால் திண்டாடிக் கொண்டிருக்கும் பிரிவினரையும் கை தூக்கிவிட முன் வந்தால் இந்தப் பிரச்னையை ஓரளவாவது தீர்க்க முடியாதா என்ன? பாரம்பர்யம் பாரம்பர்யமாக நின்று நிலவி வரும் சமுதாய உணர்வு என்ற சங்கிலித் தொடர் அறுந்துபடாமல் பார்த்துக் கொள்வார்களேயாஞல்— தமிழ்ச் சமுதாயம் நிச்சயம் ஏறுநடை போடும். இது சமுதாயப் பிரச்னை. வசதி படைத்தவர்கள், தேவை என்றில்லாதவர்கள் சற்று விலகி நின்று, சற்று விட்டுக்கொடுத்து வசதியற்றவர்களுக்கு இடம் கொடுத்தால்— வழி வகுத்துக் கொடுத்தால் என்ன?''

....நினைவு அலைகள் நெஞ்சத்திலே மிதக்க, பக்கத்திலே இருந்த தினத்தாளைப் புரட்டிஞர் ராமசாமி. தினசரியிலேயே 'ஆசிரியருக்குக்கடிதங்கள்' என்ற தலைப்பில் வரும் கடிதங்களை அவர் படிக்காமல் இருக்க மாட்டார். முதலில் அதைத் தான் பார்ப்பார். அப்படி ஒரு பழக்கம் அவருக்கு. நாட்டின் நிலவரங்களை, மக்களின் இதய நாடித்துடிப்பை அக் கடிதங்களிலே காணலாம் என்ற உணர்வு அவருக்கு! ஆனுல், குறிப்பாக அதுவும் சில மாதங்களாகப் பொறுப்புள்ள பத்திரிகைகள் என்று சொல்லிக் கொள்ளும் பத்திரிகைகளில் வெளியாகும் கடிதங்கள்— அவற்றில் கண்டுள்ள விஷயங்கள், அவருடைய நல்லிதயத்திற்கு வேதனையையே தந்து விட்டிருக்கின்றன. அன்றைய பத்திரிகையில் ஒரு கடிதம் குறிப்பாக அவர் கவனத்தைக் கவர்ந்தது. ''அரிசி விலை ஏறிவிட்டது என்று அந்த விலை ஏற்றத்தைப் பற்றிக் காரசாரமாகத் தீட்டியிருந்தார் அந்தக் கடிதத்தில் ஒரு நண்பர். ''விலைவாசி அதிலும் குறிப்பாக அரிசி விலை விஷம்போல் ஏறிவிட்டது..... அரசு என்ன தூங்கிக் கொண்டிருக்கிறதா?'' என்று நெருப்பை அள்ளிக் கொட்டியிருந்தார் அந்தக் கடிதம் எழுதியிருந்தவர். அந்தக் கடிதத்திற்கு அந்த நாளிதழ் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துப் போட்டிருந்தது.

அதைப் படித்ததும் ராமசாமிக்கு உள்ளம் கசந்தது. இந்த அறுபதாண்டு வாழ்விலே அவர் சகலத்தையும் பார்த்தவர். நல்லது கெட்டது இரண்டையும் பார்த்தவர். ஏற்றம், இறக்கம் இரண்டையும் அனுபவித்தவர். தன்னுடையது மட்டுமல்ல, சமுதாயத்தில் வளர்ச்சியை, வீழ்ச்சியை, மறுபடியும் ஏற்றத்தை எல்லாம் நேரில் கண்டு அனுபவித்தவர். அந்தக் காலத்தில், அவர், இருபதாண்டுக் காளையாக இருந்த காலத்தில் இருந்த வாழ்க்கை நிலையும் அவருக்குத் தெரியும்.

அவர் நினைவு எங்கெங்கோ ஓடியது....முப்பதாண்டுகளுக்கு முன்னுல் கோவையில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது யுத்த காலம். அடிப்படைத் தேவையான பொருள்கள் கூட மக்களுக்குக் கிடைக்காது. அரிசியைக் கண்ணுல் பார்ப்பதே குதிரைக் கொம்புதான்! அன்று ஒருநாள் வீட்டில் ஒரு குண்டுமணி அரிசி கூட இல்லை. எங்கோ ஒரு கடையில் அரிசி போடுகிருர்கள் என்று கேள்விப்பட்டு அவர் மனைவி அன்னபூர்ணி பையை எடுத்துக் கொண்டு அந்தக் கடையை நோக்கிப் போனவள் வெகு நேரமாகியும் வீடு வந்து சேரவில்லை. ஆபீசிலிருந்து வீடு திரும்பிய ராமசாமி செய்தி கேட்டுத் துடிதுடித்துப் போய் விட்டார். அந்தக் கடையை நோக்கி ஓடிஞர். கூட்டம் சொல்ல முடியாது. அந்த நெரிசலில் அன்னபூரணியைக் காணோம்! அங்குமிங்கும் அவளைத் தேடிக் காணுமல் அலைந்து விட்டு வீடு திரும்பும் பொழுது அன்னபூரணி வெறும் பையுடன் கை, கால் சோர வீதியில் வந்து கொண்டிருந்ததைக் கண்டார். அவள் முகத்தில் களை தட்டிப்போயிருந்தது. அந்த முகம் அவருக்கே பிடிக்கவில்லை. அன்று கடை ரொட்டி உணவு தான் வீட்டில்! அந்த நாளை ராமசாமி தன் வாழ்நாளில் என்றுமே மறந்ததில்லை. தமிழ்ப் பெண்கள் ஒரு படி அரிசிக்காக வீதியில் அலைவதா? தமிழ்க் குடும்பங்களுக்கு இவ்வளவு பெரிய சீரழிவா? பெண்மைக்கு நாம் கொடுக்கும் மதிப்பா இது....? அவர் உள்ளம் குமுறியது. அந்தக் கசப்பான அனுபவம்- இன்று நினைத்தாலும் அவர் நெஞ்சைப் பிளந்துவிடும் போலிருந்தது!

அதன் பிறகு கால ஓட்டத்திலே எவ்வளவோ சம்பவங்கள்.... எவ்வளவோ நிகழ்ச்சிகள்.... பாலத்திற்கடியில் எவ்வளவோ தண்ணீர் ஓடி விட்டது. அவருக்கு எல்லாமே நினைவிருக்கிறது. அன்று கோவையின் வீதிகளிலே தன் மனைவி ஒரு படி அரிசிக்காக அலைந்ததை விட, மிகப் பெரிய சீரழிவு சென்னை நகரிலே, தினந்தோறும் நடந்துகொண்டிருந்த காட்சியை அவர் நேரில் பலமுறை பார்த்தவர். அன்ருவது யுத்த காலம். பொருள்கள் கிடைக்கவில்லை. இது அமைதியான காலம். அந்தக் காலத்தில் தான் இதே சிங்காரச் சென்னையில், பண்புக்கும் பெண்மைக்கும் உறைவிடமான ஆயிரமாயிரம் அன்னபூரணிகள், தமிழ்க் குலத்தின் தாய்மார்கள் நட்ட நடுவீதியில், இரவென்றும், பகல் என்றும் பாராமல், ஒரு படி அரிசிக்கு ஆலாய்ப் பறந்து கொண்டிருந்த காட்சி; அரிசிக் கடைகளில் நடு இரவில் கூட கையில் பையுடன் தாய்மார்கள் கியூ வரிசையில் காத்துக் கிடந்திருந்த கொடுமைகளை அவர் பார்க்கவில்லையா? இதை விடச் சீரழிவான செயல் தமிழகத்தில் எப்பொழுதுமே நடந்தது கிடையாதே! ஆனுல் அந்த நிலையை மாற்றி, மக்களைப் பிடித்திருந்த பீடையான உணவுப் பற்ருக்குறையை விரட்டிப் பசுமைப் புரட்சிக்கு வழி வகுத்து, மனம் குளிர வைத்துள்ள இன்றுள்ள நிலையை நினைத்துப் பார்க்கும்பொழுது யாருக்குத் தான் பூரிப்பில்லாமல் இருக்கும்? நன்றி உணர்வு உள்ள எந்த உள்ளமும் இதை வாழ்த்தாமலிருக்க முடியாது?

''என்ன, அப்பா கொஞ்சம் கோபமாக இருக்கிறதாத் தெரியுது'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் ராமலிங்கம். அவருடைய இரண்டாவது மகன். ஊரில் செல்வாக்குள்ள டாக்டர். நல்ல கைராசிக்காரன். எதற்குமே கவலைப் பட்டுக்கொள்ளமாட்டான் எப்பொழுதும் சிரித்த முகம். அப்படி ஒரு டைப்!

''ஒன்றுமில்லை ராமலிங்கம். என்ன ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டுவிட்டாயா? போயிட்டு வாப்பா''— என்று அன்பொழுக மகனை அனுப்பி வைத்துவிட்டு உள்ளே நுழைந்தார் ராமசாமி. வீட்டில் பசங்கள் பள்ளிக்கூடம் செல்கிற நேரமாகி விட்டது. ஒரே ரகளை. அத்தனையிலும் ஒரு மனநிறைவான சூழ்நிலை. அது தான் அவருக்குப் பிடித்திருந்தது. அந்த மனேரம்யமான சூழ்நிலை; அதை அடைய அவர் பாடுபட்டது— அந்த உழைப்பின் பின்னணியில் புதைந்து கிடக்கும் நிகழ்ச்சிக் கோவைகள்— எண்ணத்துகள்கள்— நெளிவு சுளிவுகள்— எதிர் நீச்சல்கள்— எல்லாமே ஒரு சுவையான நாடகத்தையே அவர் மன அரங்கிலே நடமாட விட்டுக்கொண்டிருந்தன.

''மாமா....குளிக்க வாங்க.. பாய்லரில் தண்ணீர் பிடிச்சுட்டேன்....'' ரங்கநாயகியின் அன்புக் குரல்! ''இதோ வந்துட்டேன்....உன் மூத்தார், அதான் முருகேசன் திரும்பி வரேன்னு போயிருக்கான்.... வந்தாச் சொல்லு.... ஒரு சங்கதி அவங்கிட்டே சொல்லணும்..'' காலையில் வந்த பையன். அவன் இண்டர்வியூ விஷயத்தைப் பற்றி பெரிய மகனிடம் சொல்ல வேண்டும். அது என்னவோ இனம் புரியாத ஒரு கடமை உணர்வு அவரை விட்டு என்றுமே போனதில்லை! எந்த வேலையை எடுத்தாலும் நாம் நாலு பேருக்குப் பயனுள்ளவனுக இருக்க வேண்டும்; சமுதாயத்தில் கீழே உள்ளவர்களைத் தூக்கிவிடவேண்டும் என்ற உணர்விலே ஊறிப் போனவர் அவர்....

> **குடும்பநலக் குலுக்கல்.**
>
> குடும்ப நலத் திட்டத்தில் பங்கேற்பவர்கள்பலனடைய ஒரு பரிசுச் சீட்டுத் திட்டத்தை மேற்கு வட்டார ரயில்வேயினர் கொண்டுவந்துள்ளனர். இதன்படி, குடும்ப நல அறுவைச் சிகிச்சை, லூப், கருத்தடைக் கருவிகள் பயன்படுத்தும் ரயில்வே ஊழியர்களுக்கு அந்ததிட்டங்களுக்குத் தக்கபடி வெவ்வேறு வரிசையில் எண்கள் தரப்படுகின்றன. மூன்று மாதத்திற்கு ஒரு முறை இந்த எண்கள் குலுக்கி எடுக்கப்படுகின்றன. மொத்தம் 22 பரிசுகள் ரூ 15 முதல் ரூ 200 வரை பரிசுகள் வழங்கப்படுகின்றன.

குளித்துவிட்டு ''டிபன்'' சாப்பிட உட்கார்ந்தார். மல்லிகைப் பூப்போல் இட்லியை எடுத்து இலையில் வைத்தாள் ரங்கநாயகி. அதை விண்டு சாப்பிடும் பொழுது.... இன்று என்னவோ பழங்கால நினைவுகள் அவர் முன்னே பளிச்சிட்டன. கோவையிலே அன்று ஒரு நாள் அன்னபூரணி பையை எடுத்துக் கொண்டு படி அரிசிக்காக வீதி வீதியாக அலைந்தது எல்லாமே அவர் நினைவில் நர்த்தனமாடின. அவர் கண்களில் நீர் கலங்கியது. ரங்கநாயகி அதைக் கவனித்துவிட்டாள். படுசுட்டியாயிற்றே! அந்த உள்ளத்தின் வேதனை அவளுக்குப் புரியவில்லை. மாமா சில சமயங்களில் தான் இப்படிக் கண் கலங்கி அவள் கண்டிருக்கிருள் .... மாமியின் நினைவு வந்திருக்கும் என்று அவள் எண்ணிஞள்.

''ஏன் மாமா..ஒரு மாதிரியா இருக்கீங்க..இட்லி சாப்பிடுங்க ..என்னங்க இது..கண்களிலே கண்ணீர்..மாமியை நினைச்சுட்டீங்களா மாமா..சொல்லுங்க என்ன செய்றது..உங்களுக்குத் தெரியாததா?''..அவள் குரலும் கம்மிப் போயிருந்தது.

ராமசாமி ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் அமைதியாக இருந்தார். மௌனமாக டிபனை முடித்துக் கொண்டு ரங்கநாயகி கொடுத்த காப்பியை சாப்பிட்டுவிட்டு சோபாவில் வந்தமர்ந்தார். ரங்கநாயகியும் கூடத்துக்கு வந்தாள்.

''அம்மா....ரங்கம்....உன் மாமி அன்னபூரணியின் நினைவு எனக்கு வந்து விட்டதா என்று தானே கேட்டாய்? அவளை நான் மறக்க முடியுமா? அன்னபூரணி என் வாழ்வோடு ஒன்றிப் போனவள். என் சுக துக்கங்களில் எல்லாம் என்னேடு தோளோடு தோள் கொடுத்து நின்றவள். இன்று நாம் நல்ல நிலையில் இருக்கிருேம். என் வாழ்விலே நான் மனநிறைவுடன் இருக்கிறேன் என்ருல் அவள்தானம்மா இதற்கெல்லாம் முழுக்க முழுக்க காரணம். அவள் இருந்த காலத்தில் நம் குடும்பத்தில் இவ்வளவு வசதி கிடையாது. குழந்தைகளை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும்; நன்ருகப் படிக்க வைக்கவேண்டும் என்பதிலே அவள் சகல தியாகங்களையும் செய்து என்னுடன் சேர்ந்து அரும்பாடு பட்டாள். அவள் இல்லாமல் இருந்திருந்தால் நான் இல்லை..'' இந்தக் குடும்பமே இல்லை.. அவர் கண்களில் நீர் கலங்கியது. ரங்கநாயகி கற்சிலையாக நின்று அவர் வாயையே பார்த்துக்கொண்டிருந்தாள். ராமசாமி பேசிக் கொண்டே போஞர்.. ''அவளுக்குப் பின் இந்த வீட்டுக்கு மருமகளாக நீ வந்திருக்கிருய். நீ விஷயம் தெரிந்த பெண். பத்திரிகை படிக்கிருய். உலக விவகாரம்

உனக்கு மற்ற மருமகள்களை விடத் தெளிவாகத் தெரியும். அதனுல்தான் அம்மா இதையெல்லாம் உன்னிடம் நான் சொல்கிறேன். இன்று நான் நினைத்ததெல்லாம் காலம் சென்ற என் மனைவி, உன் மாமியார் அன்னபூரணியைப் பற்றி அல்ல..அவள் இந்த ஒரு குடும்பத்திற்குத்தான் ஒளி விளக்காய் இருந்தாள். ஆனுல் இந்தத் தமிழ் நாட்டிற்கே ஒளி விளக்காய் நின்று படியளக்கும் அன்னபூரணியைப் பற்றித்தான் இன்று என் நினைவெல்லாம்! பசுமைப் புரட்சிப் பசுமைப் புரட்சி என்று பத்திரிகையிலே அடிபடுகிறதே, ரங்கம் படித்திருப்பாய். இன்று அந்த பசுமைப் புரட்சி நம் செந்தமிழ் நாட்டில் நடக்குதம்மா! என்னுடைய அறுபதாண்டுக் காலத்தில்—அதுவும் வாழ்வின் வசந்த காலத்திலிருந்து எண்ணிப் பார்க்கிறேன். நம்ம குழந்தைகள் படிக்கிருர்கள். நன்றுகப் படிக்கிருர்கள். அந்தக் காலதில் இதுவே ஒரு பெரிய விஷயம். இன்று நாட்டில் ஏராளமாக அரிசி கிடைக்கிறது. வளமான பாதையில் நடக்க நாம் ஆரம்பித்திருக்கிருேம். எத்தனைச் சிக்கல்களுக்கிடையே எத்தனைக் குறைபாடுகளுக்கிடையே....இந்தக் காரியங்கள் நடைபெற வேண்டியுள்ளது தெரியுமா? நல்லது செய்ய வேண்டும்; அதுவும் இன்றே செய்ய வேண்டும் என்ற இதய சுத்தியான தொண்டுள்ளம் இருக்கிறதே; அதுதான் பெரிய விஷயம். என்னுடைய அன்னபூரணி மறைந்து விடவில்லையம்மா....உயிருடன் இருக்கிருள். அதை நான் உணருகிறேன். தமிழகத்தின் எல்லா வீடுகளிலும் இன்று நீக்கமற நின்று நிலவிக் கொண்டு இருக்கிருள். முழுமையான உருவுடன் உண்மையான அன்னபூரணியாகவே இன்று காட்சி கொண்டுள்ளாள்! அதை யாரும் அழிக்க முடியாது. நன்றி உணர்வு இல்லாதவர்கள்—பொய்ம்மையிலேயே வாழ்பவர்கள் வேண்டுமானுல், பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கலாம். ஆனுல் உண்மையைத் திரைபோட்டு மறைத்து விட முடியாது .... இது தானம்மா சாதனை! இல்லையாம்மா....எதை எதையோ நினைத்தேன்..... உன்னிடம் கொட்டிவிட்டேன் போ.... முருகேசன் வந்து விட்டானு பார். காலையில் நம்ப ஊர் பையன் ஒருவன் வந்திருந்தான். அவனைப் பற்றி முருகேசனிடம் சொல்லனும்....''

''சரி மாமா....'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே சமையற்கட்டிலே நுழைந்தாள் ரங்கநாயகி. இனம் புரியாத ஒரு மன நிறைவுடன் நாற்காலியில் சென்றமர்ந்தார் ராமசாமி. அவர் தலைக்கு மேலே அன்னபூரணியின் திருஉருவப் படம் ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.



வாழ்க தாய்மை வளர்க மழலைகள்!

யாழினும் இனியதென இன்புற்று மகிழ்ந்து, பேறுகளிலெல்லாம் பெரும் பேறென இறும்பூது எய்தி, மழலைச் செல்வங்களைக் கண்டு, மழலை மொழி கேட்டுப் பாராட்டி, மகிழும் வள்ளுவப் பெருந்தகை, அவையத்து முந்தியிருக்கும் பெருநிலையினை அக்குழந்தைகள் பெறுதற்குரிய வழி வகை காண வேண்டிய பெருங் கடனையும் நினைவுறுத்திச் சென்றுள்ளார்.

'' தம்மில், தம் மக்கள் அறிவுடைமை, மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது '', என்று சமுதாயம் வருங்காலத் தலைமுறையினர்க்குச் செய்ய வேண்டிய பணியினை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இன்றைய குழந்தை நாளைய தந்தை. '' நாளைய தந்தைக்கு இன்றைய குழந்தைதான் தகப்பன்'' என்றுன், இயற்கை வளர்ச்சியில் இறைவனைக் கண்டு மகிழ்ந்த இயற்கைப் பெருங் கவிஞன் வேர்ட்ஸ் வொர்த். குழந்தைப் பருவத்தில் உருவாகும் குணங்கள்தாம் குமரப் பருவத்தையும், வாழ்வின் பிற்பகுதியையும் உருவாக்குகின்றன, அல்லது உருக் குலைக்கின்றன. கள்ளங் கபடமற்ற குழந்தைகள் தாம் பின்னர் அற வழி நின்று அமைதி நெறி காத்த அண்ணல் காந்தி, உலக நாடுகளுக்கு உயர் நெறி காட்டிய உத்தமர் நேரு, கேட்டார் வியந்து கேளாரும் வேட்ப மொழிந்த சொல்லாளர் அறிஞர் அண்ணு முதலாய மாதிலம் போற்றும் மாமேதைகளாக உருவாகின்றனர் ; உருவாக்கப்படுகின்றனர்.

வள்ளுவர் வழி நின்று வருங் காலத் தலைவர்களாம் குழந்தைகளைப் பேணிக் காக்க நம் அரசு வகுத்துள்ள திட்டங்கள் பல. செலவிடும் நிதியும் அதிகம். பள்ளி செல்லும் வயதுக்கு உட்பட்ட மழலைச் செல்வங்களின் அறிவு வளர்ச்சிக்குத் துணை புரியும் வகை யறியாது பெற்ருேர் தவிக்கின்றனர். அப்பெரும் பொறுப்பினை அரசு மேற்கொண்டு திட்டங்கள் பல தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. பாலர் பள்ளி (Pre-schools) எனப்படும் அறிவாலயத்தின் தொடக்க நிலையங்கள்பலவற்றை அரசு திறந்துள்ளது. பாலர் பள்ளித் திட்டம் (Pre-school Programme) என்னும் மழலைக் கல்வித் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

இப் பாலர் பள்ளித் திட்டத்தின் கீழ் 1,040 ஊராட்சிகளில் பயிற்சி பெற்ற பணிப் பெண்கள் மழலைச் செல்வங்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர். இட வசதி இல்லாததால் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், தாய், சேய் நல விடுதிகள், சமுதாய மன்றங்கள், சாவடிகள், கோயில் மண்டபங்கள் ஆகிய இடங்களில் இப் பாலர் பள்ளி நடைபெற்று வந்தன.



சில இடங்களில் மரத்தின் நிழலே மழலைப் பள்ளியாக அமைந்ததும் உண்டு. இக்குறையினைக் களைவதற்கு ' கேர் ' (காப்பு) நிறுவனமும் முன் வந்துள்ளது. பாலர் பள்ளிகளுக்கென ஆயிரம் கட்டடங்கள் கட்டித் தரக் காப்பு நிறுவனம் முன் வந்துள்ளது. முதற் கட்டமாக 115 பள்ளிகளுக்கு மனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பதினைந்து பள்ளிகள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

இம் மழலைப் பள்ளிகளில் உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் '' கேர் '' நிறுவனம் திட்டமிட்டுள்ளது. நான்காவது திட்டக் காலத்தில் ஆயிரம் பாலர் பள்ளிகள் திறப்பதென அரசு திட்டம் வகுத்துள்ளது. ஆண்டு தோறும் 200 பள்ளிகள் திறக்கப்படும். இப் பள்ளிகளில் பணியாற்றுவதற்காக 190 சமூக நலப் பணிப் பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர். தற்சமயம் தமிழ் நாட்டில் 116 பாலர் பள்ளிகள் நடைபெறுகின்றன. தமிழ் நாடு முழுவதும் 1,100 மழலைச் செல்வங்கள் இப்பள்ளிகளில் பயில்கின்றனர். இப் பள்ளிகளுக்காக 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 1.72 லட்சம். 1971-72-ஆம் கல்வி ஆண்டில் ரூ. 1·52 லட்சம் செலவில் மேலும் 200 பள்ளிகள் திறக்கப்படும்.

சிறுவர் நலக் கூட்டு நடைமுறைத் திட்டம்

பதிறுறு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் உடல் நலனைப் பேணி, அறிவு நலனைக் காத்து, உடல் வளத்துடன் அறிவு நலமும் அரும் பண்புகளும் கொண்ட ஆற்றல் மிக்க இளைஞர்களை உருவாக்கிக் காப்பதற்கெனச் சிறுவர் பாதுகாப்பு இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நோக்கத்துடன் பூந்தமல்லியில் சிறுவர் நலக் கூட்டு நடைமுறைத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

பதிறுறு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இத் திட்டத்தில் இடம் பெறுகின்றனர். ஆறு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கே முதலிடம் தரப்படுகிறது. மகளிர் நலத் துறை, பொது நலத் துறை, சத்துணவுத் திட்டம் ஆகியவற்றின் ஊக்கமிக்க கூட்டு முயற்சியில் இத் திட்டம்

செயற்படுத்தப்படுகிறது. இச் சிறுவர் பாதுகாப்பு இல்லங்களில் 50 தாதியர்பணியாற்றுகின்றனர். மத்திய அரசின் நிதி உதவியுடன் துவக்கப்பட்ட இத்திட்டம் 1968 முதல் மாநில அரசின் நிதி உதவியுடன் மட்டுமே செயல் பட்டு வருகிறது.

சிறுவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. சத்துணவுத் திட்டத்திஞல் இந்த இல்லங்கள் பயன் பெற் றுள்ளன. சிறுவர்களுக்கு முட்டை, மீன் முதலியன வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் ரூ. 500 செலவில் கல்விச் சாதனங்களும் சமையல் பாத்திரங்களும் வழங்கப்பட் டுள்ளன. சிறுவர் இல்லங்களுக் கான கட்டடங்கள் கட்டுவதற் காக ரூ. 90,000 ஒதுக்கப்பட் டுள்ளது. சிறுவர்களுக்கென நூலகங்கள், பூங்காக்கள் அமைப் பதற்கும் நிதிஒதுக்கப்பட்டுள்ளது.

மழலைகளைப் பேணிஞல் மட் டும் போதுமா ? மகளிரை மறக்கலாமா? சேயைப் பேணிடும் அரசு தாயையும் பேணும் நோக் குடன் மகளிர்-குழந்தைகள் கூட்டு நலத் திட்டம் ஒன்றினை நான்காவது ஐந்தாண்டுத் திட் டத்தில் இணைத்துள்ளது. இவ் விணைப்புத் திட்டத்தின் கீழ் உணவு நடைமுறைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின்படி ஆறு மாதக் குழந்தைகள் முதல் ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படும். தாயா கப் போகும் பெண்டிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கப்படும்.

இருபத்தைந்து ஒன்றியங்களில் மகளிர் மன்றங்களின் ஒத் துழைப்புடன் செயல்படவிருக் கும் இத்திட்டத்திற்கென 1970-71-ல் ரூ. 1.7 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. சிறுவர் நலம் பேணுவோம் ! செம்மை வாழ்வு காண்போம் ! வாழ்க தாய்மை; வளர்க மழலைகள்!

உங்களுக்குத் தெரியுமா?

மாம்பழ அன்னை வாராவதி

சென்னையில் மாம்பழ அன்னை வாராவதி என்று ஒரு வாராவதி (பாலம்) இருக்கிறது உங்களுக்குத் தெரியுமா?

சென்னை சைதாப்பேட் டையிலுள்ள மர்மலாங் பாலம் தான் அது. மாம் பழ அன்னை (Our Lady of mangoes) தான் மாமில் லான்ஞவாக மாறி பின் மர்மலாங் என்று மாறிய தாகக் கூறப்படுகிறது.

1726-ல் பீட்ரஸ் உஸ்கன் என்ற ஆர்மோனியக்கார ரால் கட்டப்பட்டதால் இந்த வாராவதி ஆர்மே னியன் வாராவதி என்றும் முதலில் அழைக்கப்பட்டது.

பெரியது எது?

இந்தியாவிலேயே மிகப் பெரிய அனல் மின் நிலையம், நெய்வேலி அனல் மின் நிலை யம் தான்.

இங்கு சென்ற ஆண்டு 224 கோடி கிலோவாட் (K.W.) மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.

மின்சாரத் தட்டச்சு

மின்சாரத்திஞல் இயங் கும் தட்டச்சு (டைப்ரைட் டிங் இயந்திரம்) செய்யும் முயற்சியில், சென்னையி லுள்ள "இந்துஸ்தான் டெலி பிரிண்டர்'' நிறுவனம் ஈடுபட்டுள்ளது. விரைவில் இந்த மின்சாரத் தட்டச்சு இயந்திரத்தை இந்த நிறு வனம் தயாரிக்கும்.

இதுவரை இந்த நிறு வனத்தில் அஞ்சலகங்கள், நாளிதழ்கள், வணிக அலு வலகங்கள் பயன்படுத்தக் கூடிய டெலி பிரிண்டர் களைத் தயாரித்து வந்தன. இந்த ஆண்டு சுமார் 48 லட்ச ரூபாய்க்கு 'டெலி பிரிண்டர்கள்' அனுப்பும் படி வெளிநாடுகளி லிருந்து ஆணைகள் வந்துள் ளன. கேட்டுள்ள நாடுகள் குவைத், ஈரான், இலங்கை, பூட்டான், நேப்பால், ஏமன் ஆகியவையாகும்.

டாலர் வரலாறு

அமெரிக்கா, கனடா மற் றும் பல நாடுகளில் பணத்தை டாலர் என்று அழைக்கின்றனர். டாலர் என்ற பெயர் எப்படி வந் தது?

ஜெர்மன் மொழியில் 'தால்' என்ருல் பள்ளத் தாக்கு என்று பொருள். 1519-ல் முதல் முறையாக இந்த நாணயங்கள் பொகி மியா நாட்டிலுள்ள தூய ஜோச்சிம் என்ற பள்ளத் தாக்கில்தயாரிக்கப்பட்டன. அதஞல் அவை ஜோச்சிம் தாலர் என்று அழைக்கப் பட்டது. பின் அது 'தாலர்' என்று பெயர் பெற்றது. ஆங்கிலத்தில் அது டாலர் ஆக மாறி அந்தப் பெயரே நிலைத்துவிட்டது.

கண், மூக்கு, பல்

பெண்களுக்கு கண் இமை யின் முடிகள் கரு கரு வென்று வளர வேண்டுமா? இரவில் படுக்கப் போகு முன் கண்ணிலும், இமையி லும் விளக்கெண்ணெய் சில துளிகள் விடவேண்டும். முடி அழகாக வளரும்.

சளி பிடிப்பதைத் தடுக்க, கடுகு எண்ணெய்யை மூக்கு நுனியில் தடவுங்கள்.

பற்கள் பளபளவென்று விளங்க, பல் பொடியுடன், சிறிதளவு உப்பும் எலுமிச் சஞ் சாறும் சேர்த்துப் பல் துலக்கலாம்.

வழிகாட்டும் தொழில் நிறுவனம்

லார்சன்-டூப்ரோ நிறு வனச் சார்பில் சிறு சேமிப் பில் முதலீடு செய்யும்படி ஒன்றரை லட்ச ரூபாயினை மாநில சிறு சேமிப்பு ஆலோ சனைக் குழுவின் துணைத் தலைவர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் , அந் நிறுவனத்தின் அதிகாரி திரு. ஏ. கே. நடராஜன் வழங்கியுள்ளார். இதுவரை இந்த நிறுவனம் சிறு சேமிப் யில் பத்து லட்சம் ரூபா யினை முதலீடு செய்துள்ளது.

அண்டிப் பிழைக்கும் ஆடு



கீழைக்கரிசல் என்ருல் என்ன தெரியுமா ? ஏதோ ஊரின் பெயரென்றுதானே எண்ணு கிறீர்கள் ; உண்மைதான். ஆஞல், அது ஊரின் பெயர் மட்டுமல்ல ; ஒருவகை ஆட்டின் பெயருமாகும்.

கீழைக்கரிசல், அருப்புக் கோட்டைத் தாலூகாவிலுள் ளது.. இங்கு வளர்க்கப்படும் ஆட்டின் வயிற்றின் கீழ்ப்பகுதி கருமையாக இருப்பதால் இந்த வகை ஆட்டினைக் கீழைக்கரிசல் என அழைக்கிருர்கள்.

கீழைக்கரிசல் ஆடுகள் இராம நாதபுரம், பரமக்குடி, முது குளத்தூர், திருமங்கலம், உசிலம்பட்டி, நிலக்கோட்டை, மண்டபம், கமுதி, அருப்புக் கோட்டை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

இந்த இனத்தின் அபிவிருத் திக்காகத் தமிழக அரசு பல திட்டங்களை வகுத்துச் செயற் படுத்தி வருகிறது. இவற்றை விஞ்ஞான ரீதியில் அபிவிருத்தி செய்ய, செட்டிநாடு, புதுக் கோட்டை, அபிசேகப்பட்டி, சாத்தூர், நாங்குனேரி, காட்டுப் பாக்கம் ஆகிய இடங்களி லுள்ள அரசாங்கப் பண்ணை களில் இவை வளர்க்கப்படு கின்றன. சிற்றூர்களிலே ஆட்டிறைச்சி மிகுதியாய்க் கிடைக்கும் வகையில் இங்குச் சிறந்த ஆட்டுக்கடாக்களை உற் பத்தி செய்து கிராமங்களுக்கு வழங்கி ஆட்டின் தரத்தை உயர்த்துவதே இந்தப் பண்ணை களின் நோக்கமாகும்.

இந்த ஆட்டைப் பார்த்த வுடனேயே கீழைக்கரிசல் ஆடென அடையாளம் தெரிந்து கொள்ளலாம். இவ்வினத்தைப் பற்றி, செட்டிநாட்டு மாநிலக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தி லுள்ள இனவழி ஆய்வுப் பிரிவி னர் வரையறுத்துக் கூறியுள்ள னர்.

பொதுவாக, இந்த இனம் நடுத் தர அமைப்புள்ளது. நிலக் கோட்டைப் பகுதியில் சிறிது குட்டையான ஒருவகையும் இந்தக் கீழைக்கரிசல் இனத்தில் காணப்படுகிறது. தமிழகத்தே வெப்பமான பகுதிகளில் சாதாரணமாகக் காணப்படும் உரோம இன ஆடுகளைச் சேர்ந் தவை இவை எனக் கூறலாம். இந்த ஆட்டின் நிறம் பொதுவா கத் தவிட்டு நிறம். ஓரங்களில் கருமை நிறம் காணப்படும். கறுப்பு நிறம் வயிற்றின் அடிப் பாகத்திலும், கண்ணின் உட் பக்கத்திலும், வாயின் ஓரங்களி லும், தாடை நெஞ்சுப் பகுதி களிலும், காதின் ஓரங்களிலும், முழங்காலுக்குக் கீழே கால்க ளின் உட்பக்கத்திலும் காணப் படுகிறது. இந்த இன ஆட்டில் எவற்றின் மீதேனும் எங்சேனும் வெள்ளைநிறம் காணப்பட்டால் அது அந்த இனத்தின் குறை பாடாகவே கருதப்படுகிறது. இந்த ஆட்டின் தலை மேற்புறம் அகன்றும், கீழ்ப்பாகம் குறுகி யும் இருக்கும் ; மேலுயர்ந்த நெற்றி இதற்குண்டு. காதுகள் மெல்லியதாய், நடுத்தர அளவின தாய் கீழேதொங்கும்தன்மையன.

முதுகின் மேற்புறத்தில் நீண்ட மயிர் நிறைந்து காணப்படும். தோள் உறுதியாக அமைந்து முதுகினும் உயர்ந்து தோன்றும். முதுகு தலைப் பாகத்திலிருந்து தாழ்ந்து அமைந்திருக்கும். கடாக் களின் கொம்பு கரடு முரடானது; கருமையாய் தலைக்குச் சிறிது வெளிப்புறம் வளைந்து முறுக்கிச் சுருண்டிருக்கும். பெண் ஆட்டிற்குப் பெரும்பாலும் கொம்புகள் இல்லை. எனினும், இதுபற்றி ஆராய்ந்தபோது 312 பெண் ஆடுகளில் 15 ஆடு களுக்குக் கொம்புகள் இருந்தன எனத் தெரிய வந்தது. கடாக் களின் இடது கொம்பு 45.4 சென்டி மீட்டர் நீளமுள்ள தாயும் வலது கொம்பு 44.1 சென்டிமீட்டர் நீளமுள்ளதா யும் காணப்படுகின்றன. இவ் வாட்டின் வால் குட்டையானது. ஓரத்தில் கருமை நிறம் காணப் படும். கடாவின் வாலின் நீளம் 10.2 சென்டிமீட்டர் ; ஆண் ஆட்டின் வாலின் நீளம் 9.05 சென்டிமீட்டர்.

விலங்குகள் மிகவும் பயனுள் ளவை. பசு பாலைத் தரும். நாய் வீட்டைக் காக்கும். மாடும் குதிரையும் வண்டி இழுக்கும். ஆடோ உண்ணப் பால் தருகிறது. அதனை உணவா கவும் பயன் படுத்துகின்றனர். அதன் கொம்பு, குளம்பு, எலும்பு, கொழுப்பு, தசை அனைத்தும் பயன்படுகின்றன. அதன் தோலும் மயிரும் நமக்கு எப்போதும் உதவுகின்றன என்ருல் ஆட்டைப் போல பிறருக்குதவும் விலங்குகள் ஏதேனும் உண்டா ?

'' அண்டிப் பிழைக்கும் நம்மை,
ஆடு—இதை
ஆதரிக்க வேணுமடி பாப்பா'

தைக்கக் கற்றுக் கொள்வதற்கு முன்னமேயே . . .

சேமிக்கக் கற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டாள்.

என்ன சேமிக்கிருள் என்பது பெரிதல்ல; சேமிக்கும் பழக்கத்தைத் தொடங்கி விட்டாளே அதுவே பெரிது. உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் இன்னமும் சேமிக்கக் கற்றுக் கொடுக்கவில்லையா என்ன? ஸ்டேட் பாங்கிலே அவர்களுக்கென ஒரு சேமிப்புக் கணக்கைத் துவக்குங்கள். சேமிக்கும் பழக்கத்தை எந்தச் சிறுவயதிலும் தடையின்றித் துவக்கலாம்.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

Aiyars S. 101 TM

ஊட்டச்சத்துள்ள உணவுபெற வீரிய ஒட்டு மக்காச் சோளம்

மனித இனத்தின் நல்வாழ்வுக்குப் புரதச் சத்து (Protein) மிகவும் இன்றியமையாததாகும். புரதச்சத்துப் பற்றுக் குறையிஞலேயே உடல்நலமின்மையும், அறிவு வளமின்மையும் ஏற்படுவதாக ஊட்டச் சத்து வல்லுநர்கள் (Nutritional experts) கூறுகிருர்கள்.

உலகில் உள்ள மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் புரதப் பசியிஞல் (Protein hunger) வாடுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு வேளாண்மைக் கழகமும் (F A.O.), உலகச் சுகாதாரக் கழகமும் (W. H. O.) கணக்கிட்டுள்ளன. புரதச் சத்து மிக்க உணவுகள் மக்களுக்குக் கிடைக்க ஒவ்வொரு நாடும் முயற்சி செய்ய வேண்டும் என்று அக்கழகங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. எனவே, புரதச் சத்துமிக்க உணவு தானியங்கள் மக்களுக்குக் கிடைத்திடவேண்டுமென்பதற்காகவே, புரதச் சத்து மிக்க வீரிய ஒட்டு மக்காச் சோளத்தையும் தமிழ் நாட்டில் சாகுபடி செய்வதற்கு ஆவன செய்து வருகிறது தமிழ் நாடு அரசு.

மக்காச் சோளத்தில் அரிசியைவிட அதிக அளவு புரதச் சத்தும், வைட்டமின்களும், கொழுப்புச் சத்தும் அடங்கியுள்ளன என்பதைப் பின்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

100 கிராமில் உள்ள சத்துக்கள்.

	மக்காச் சோளம்.	அரிசி.
புரதச் சத்து (கிராம்)	11·1	6·8
கொழுப்புச் சத்து (மில்லி கிராம்)	3·6	0·5
வைட்டமின்—'ஏ' (ஐ.யூ.)	1502	..
வைட்டமின்—'பி-1' (மில்லி கிராம்)	0·42	0·09
வைட்டமின்—'பி-2' (மில்லி கிராம்)	0·10	0·03
கால்சியம் (மில்லி கிராம்)	10	10
இரும்பு (மில்லி கிராம்)	2·0	3·1

அரிசியைவிட அதிக அளவு சத்துக்களைக் கொண்டிருக்கும் மக்காச் சோளத்திலிருந்து பூரி, பக்கோடா, பஜ்ஜி, போண்டா, தோசை, இட்லி, தேன்குழல், கட்லட், முறுக்கு, ரொட்டி போன்ற பல்வேறு சுவையான உணவுப் பொருள்களைத் தயாரிக்க முடியும். அவைகளை நாம் அன்ருடவாழ்வில் பயன்படுத்திஞல் கலப்பு உணவுப் பழக்கம் ஏற்பட்டு உடல் வளமும், மனவளமும் பெறுவதுடன் அரிசியின் தேவையையும் குறைத்திட இயலும்.

நன்ருக விளைந்த ஓர் ஏக்கர் நெற்பயிரை விட, ஏக்கருக்கு 3,600 கிலோ மகசூல் கொடுக்கக்கூடிய வீரிய ஒட்டு மக்காச் சோளம், 5 அல்லது 6 மடங்கு அதிகமான மக்களுக்குச் சுலபமாக உணவளிக்கும்.

மக்காச் சோளம் மனித இனத்திற்குச் சத்துள்ள உணவுகளை அளிப்பது போலவே, கால்நடைகளுக்கும் சத்துள்ள சிறந்த தீவனத்தைக் கொடுக்கிறது. ஓர் ஏக்கர் மக்காச் சோளத்தட்டையை நல்ல முறையில் பதனப்படுத்தி ''சைலோ'' தயாரித்து, அவைகளைக் கறவை மாடுகளுக்கு அளித்தால், ஏக்கருக்கு 1,820 கிலோ மகசூல் கொடுக்கக்கூடிய நெற்பயிரிலிருந்து கிடைக்கக்கூடிய உணவை விட 8, அல்லது 9 மடங்குஅதிகமான மக்களுக்கு வேண்டிய உணவை, பால், வெண்ணெய் போன்றவை மூலம் பெற முடியும். மேலும் அக்கால்நடைகளிலிருந்து கிடைக்கும் தொழு உரத்தைச் சேமித்து மறுபடியும் நிலத்திற்கு இட்டால் தொடர்ச்சியாக மக்காச் சோளத்தையே பயிரிட இயலும்.

மக்காச் சோளம் மனித இனத்திற்கு வேண்டிய உணவாகவும், கால்நடைகளுக்கு வேண்டிய தீவனமாகவும் பயன்படுவதுடன், பல்வேறு வகையான தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் மலர்ந்திடவும் வழி வகுக்கும். இதஞல் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதுடனும், உழவர் பெருமக்களின் வருமானமும் பெருகுவதுடனும், தமிழ்நாடு தொழில் துறையில் மேலும் ஒரு படி முன்னேற முடியும்.

மக்காச் சோளம் பயிரிடுவதால், ஓர் ஏக்கரிலிருந்து 3,600 கிலோ தானியத்தையும், 15 முதல் 20 டன்கள் வரை தீவனத்தையும் 100 முதல் 110 நாட்களில் எளிதாக உழவர் பெரு மக்கள் பெறக்கூடும். கோவை மாவட்ட உழவர் பெரு மகன் ஒருவர், ஓர் ஏக்கர் நிலத்தில் 4,630 கிலோ மக்காச் சோளம் விளைவித்துள்ளார் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அதிலிருந்து ரூபாய் 4,630 அவருக்கு வருமானம் கிடைத்துள்ளது. செலவு போக அவருக்கு நிகர லாபமாக ரூபாய் 4,000 கிடைத்துள்ளது.

மக்காச் சோளத்தைப் பயிரிடத் தமிழ் நாட்டில் வாய்ப்பும் வசதியும் அதிகமாக உள்ளன. இதை எந்தப் பருவத்திலும் பயிரிடலாம். நீர்ப்பாசன வசதி மட்டும் இருக்குமாஞல், மக்காச் சோளத்தை ஓர் ஆண்டில் மூன்று போகம் பயிர் செய்யலாம். ஓர் ஏக்கரில், ஓர் ஆண்டில் மூன்று போகம் மக்காச் சோளத்தைப் பயிரிட்டால், குறைந்தது ரூபாய் 6,000 நிகர லாபமாகக் கிடைக்கும்.

தற்பொழுது மக்காச் சோளத்தை இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) வாங்கிக் கொள்கிறது. அரசாங்க அனுமதி

யுடன் மக்காச் சோளத்தை மற்ற மாநிலங்களுக்கும் அனுப்ப முடியும். விரைவில் கோவை மாவட்டத்தில், கூட்டுறவுத் துறையில் ஒரு மக்காச் சோளத் தொழிற்சாலையும் துவங்கப்படவிருக்கிறது. எனவே, மக்காச் சோளத்திற்கு நல்ல எதிர்காலம் உள்ளது.

நல்ல வடிகால் வசதியும், தண்ணீர் தேங்காத நிலங்களும், உவர் அல்லது களர் இல்லாத நிலங்களும் மக்காச் சோளம் பயிரிட ஏற்றவையாகும். பெரும்பாலும் மக்காச் சோளப் பயிரை அதிகப் பூச்சிகளும், நோய்களும் தாக்குவதில்லை. குருத்துப் புழு மட்டும் தான் தாக்குவதாகத் தெரிகிறது. பூசண நோய் எதுவும் தாக்குவதாகத் தெரியவில்லை. இதனாலேயே வீரிய ஒட்டு மக்காச் சோளத்தின் பரப்பு . பின்கண்டபடி ஆண்டிற்கு ஆண்டு தமிழ் நாட்டில் பெருகி வருகிறது.

			ஏக்கர்.
1966-67	..	..	2,213
1967-68	..	..	3,969
1968-69	..	..	19,628
1969-70	..	..	29,140

உலகெங்கும் "பசுமைப் புரட்சி" தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவைகளுள் வீரிய ஒட்டு மக்காச் சோளமும் ஒன்று. எனவே, தமிழ் நாட்டில் தோன்றியுள்ள பசுமைப் புரட்சி மேலும் பரவிடவும், உழவர்ப் பெரு மக்களின் வருவாய் பெருகிடவும், தமிழ் நாட்டினரின் உடல் வளமும் மன வளமும் பெருகிடவும் வீரிய ஒட்டு மக்காச் சோளம் பயிரிடுமாறு கேட்டுக்கொள்வதுடன், கீழ்க்கண்ட சாகுபடி முறைகளையும் பரிந்துரைக்கின்றோம்.

விதை:

தமிழ் நாட்டில் வீரிய ஒட்டு மக்காச் சோளம் பயிரிட விரும்புகிறவர்கள், 'தக்காண மக்காச் சோளம்' அல்லது 'ஹை-ஸ்டார்ச்' என்னும் ரகங்களையே பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இந்த ரகங்களின் வயது 100 முதல் 110 நாட்களேயாகும்.

நல்ல தரம், தூய்மை, அதிக முளைப்புத் திறன் கொண்டதும், அத்தாட்சி பெற்றதுமான விதையையே (Certified seeds) விதைப்பதற்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். அத்தாட்சி பெற்ற விதைகளை வேளாண்மைத்துறையின் கிடங்குகளிலிருந்தோ, தேசிய விதைக் கழகத்திடமிருந்தோ (National seeds Corporation), தேசிய விதைக் கழகத்தின் அனுமதி பெற்ற விதை உற்பத்தியாளர்களிடமிருந்தோ பெற்றுக்கொள்வதே சிறந்தது. விதைகளை வாங்கிய உடன் விதைப் பையின் மேல் கீழ்க்கண்ட விவரங்கள் அடங்கிய அட்டை கட்டப்பட்டிருக்கிறதா என்று பார்த்து வாங்க வேண்டும்.

(1) அத்தாட்சியான ரகத்தின் பெயர்.

(2) லாட் நம்பர்.

(3) விதையில் கலந்துள்ள மற்ற பொருள்களின் சதவீதம்.

(4) முளைப்புத் திறன்.

விதைகள் கெட்டுவிடாமல் இருக்க விதைப் பைகள் நன்கு 'சீல்' வைக்கப்பட்டிருக்கிறதா என்றும் பார்த்து வாங்க வேண்டும்.

ஓர் ஏக்கர் மக்காச் சோளம் பயிரிட வேண்டுமானால் 8 கிலோ விதைகள் வேண்டும். ஒவ்வொரு முறையும் புதிய வீரிய ஒட்டு மக்காச் சோள விதைகளையே வாங்கி உபயோகிக்க வேண்டும். சென்ற தடவை மகசூலுக்காகப் பயிரிட்ட பயிரிலிருந்து கிடைத்த விதைகளைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், பின் வரும் சந்ததி பயிரின் வீரியம் குறைந்து, மகசூலும் பெருமளவில் குறைந்து விடக்கூடும்.

நிலம் தயாரித்தல்:

நிலத்தை இரும்புக் கலப்பையினால் சுமார் 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) ஆழத்திற்கு உழுது கட்டிகளை உடைத்து விட்டுப் புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எரு அல்லது கலவை எரு இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும். அதன் பின் வயலில் பாத்திகளையும், பாசன வாய்க்கால்களையும் அமைக்க வேண்டும். அல்லது பார் அமைக்கும் கலப்பையினால் (Ridge plough) 60 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளிக்கு ஒரு பார் வீதம் அமைக்க வேண்டும்.

உரமும் உரமிடுதலும்

மக்காச் சோளப் பயிருக்குத் தேவையான தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து ஆகிய மூன்று முக்கியச் சத்துக்களையும் தேவையான அளவு இடுவது மிகவும் அவசியமாகும். இச்சத்துக்களின் தேவை நிலத்திற்கேற்ப மாறுபடும். ஆகவே, மண் மாதிரி எடுத்து, பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பி அதிலுள்ள சத்துக்களைத் தெரிந்து கொண்டு, அதற்கேற்ப தேவையான அளவு உரமிடுவதே மிகவும் சிறந்த முறையாகும்.

மண் பரிசோதனை செய்ய இயலாவிட்டால், வீரிய ஒட்டு மக்காச் சோளத்திற்குப் பொதுவாகப் பரிந்துரைக்கப்படும் அளவாகிய 54 கிலோ தழைச் சத்து, 27 கிலோ மணிச்சத்து, 18 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை இட வேண்டும். வளமான நிலமாக இருந்தாலும், வீரிய ஒட்டு மக்காச்சோளம் நல்ல மகசூல் கொடுக்க வேண்டுமானால்,மேற்கூறிய அளவு இரசாயன உரமிடுவது மிகவும் அவசியமாகும்.

அடியுரம் :—ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து (90 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 41 கிலோ யூரியா), 27 கிலோ மணிச் சத்து (190 கிலோ கிலோ சூப்பர் பாஸ்பேட்), 18 கிலோ சாம்பல்சத்து (30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்) ஆகியவைகளை விதை ஊன்றுவதற்கு முன்பு இடவேண்டும்.

பாத்தி அமைத்திருந்தால், மேற்கூறிய அளவு 3 சத்துக்களும் அடங்கிய உரக்கலவையை மக்காச் சோளம் விதைக்கப் போகும் வரிசைகளின் ஒரு பக்கமாக 5 முதல் $7\frac{1}{2}$ சென்டி மீட்டர் (2 முதல் 3 அங்குலம்) அகல இடம் விட்டு, 5 முதல் $7\frac{1}{2}$ சென்டிமீட்டர் (2 முதல் 3 அங்குலம்) அகலமும், 5 முதல் $7\frac{1}{2}$ சென்டி மீட்டர் (2 முதல் 3 அங்குலம்) ஆழமும் உள்ள சிறு பள்ளம் (Small furrows) தோண்டி, அதில் உரக் கலவையைத் தூவி மண்ணால் மூடி விட வேண்டும்.

பார் அமைத்திருந்தால் மேற்படி உரக் கலவையை பார்களின் (Ridge) நடுவில் உள்ளக் கிடங்கில் தூவி மண்ணால் மூடி விடவும்.

மேலுரம் :—மக்காச் சோளம் விதைத்த 45 நாட்களுக்குப் பிறகு பயிர்கள் சுமார் 18 அங்குல உயரம் இருக்கும் பொழுது 18 கிலோ தழைச் சத்தை (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 41 கிலோயூரியா) முதல்தடவையாகஇடவேண்டும். அதன்பின் மகரந்தம் கொண்ட நார்கள் உருவாகும் பொழுது இரண்டாம் தடவையாக 18 கிலோ தழைச் சத்தை (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 41 கிலோ யூரியா) இடவேண்டும்.

மேலுரத்தை இடும்பொழுது பயிரின்மேல் உரம் படக்கூடாது. தண்டின் அருகிலும் உரமிடக் கூடாது. தண்டிலிருந்து 25 சென்டி மீட்டர் (10 அங்குலம்) இடைவெளி விட்டுத்தான் இரசாயன உரங்களை வரிசைகளுக்கு இடையில் தூவவேண்டும். அமோனியம் சல்பேட் உபயோகித்தால் 111 அடி நீளத்திற்கு அரை லிட்டர் வீதமும், யூரியா உபயோகித்தால் 275 அடி நீளத்திற்கு அரை லிட்டர் வீதமும் தூவலாம்.

மாண்புமிகு முதலமைச்சர் மக்காச்சோளக் கதிரைப் பார்வையிடுகிறார்.

மேலுரத்தை $2\frac{1}{2}$ சென்டி மீட்டர் (1 அங்குலம்) முதல் 3.75 சென்டி மீட்டர் (1 அங்குலம்) ஆழத்தில் இட வேண்டும். இவ்வாறு செய்ய, வரிசைகளின் இடையே இரசாயன உரங்களைத் தூவி மேல் மண்ணைக் கொத்திவிட்டு, உரம் மேற்கூறிய ஆழத்தில் நன்றாகக் கலந்து விடும்படி செய்ய வேண்டும். இதன் மூலம் பெருத்த மழை பெய்தால்கூட வாய்வு நிலையிலிருக்கும் தழைச் சத்து மழை நீரினால் அடித்துச் செல்லப்படுவதைத் தடுக்க முடியும்.

விதைப்பு.

மக்காச் சோள விதைகளை வரிசைக்கு வரிசை 60 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளியிலும், வரிசையில் விதைக்கு விதை 25 சென்டி மீட்டர் (10 அங்குலம்) இடைவெளியிலும், 3.75 சென்டி மீட்டர் ($1\frac{1}{2}$ அங்குலம்) ஆழத்திலும் விதைக்க வேண்டும். மக்காச் சோளம் முதிரும் சமயத்தில் ஏக்கருக்கு 29,000 பயிர் இருக்குமாறு விதைக்க வேண்டியது அவசியம். பாத்திகளில் விதைப்பதை விட, பார்களின் சரிவில் விதைகளை ஊன்றுதலே சிறந்தது.

பின் செய் நேர்த்தி.

விதைத்து 2 முதல் 3 வாரம் கழித்து மண்ணைக் கொத்தி விட்டு களைகள் இருந்தால் அகற்றிவிடவும். எப்பொழுதும் களைகள் இல்லாமல் மக்காச் சோள வயலை வைத்திருக்க வேண்டும். வயலை $2\frac{1}{2}$ முதல் 5 சென்டி மீட்டர் (1 முதல் 2 அங்குலம்) ஆழத்திற்கு மேல் கொத்தி விடக்கூடாது.

நீர்ப்பாசனம்.

விதைகளை ஊன்றிய உடனேயே நீர்ப் பாய்ச்சவும். அதன் பின் 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறைவீதம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மக்காச் சோளப் பயிர் நிலத்தில் போதிய ஈரமின்றி வாடும்படிவிடவே கூடாது. மக்காச் சோளம் பூக்கும் பருவத்தில் நீர்ப்பாசனம் செய்யத் தவறவே கூடாது. கதிர் உருவாகும் தருணத்தில் மக்காச் சோளப் பயிருக்கு அதிகத் தண்ணீர்தேவைப்படுவதால், பூத்த பின் கதிரில் மணி முற்றும் வரை தேவையான அளவு தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் அவசியமாகும்.

வடிகால் வசதி.

நீர்ப்பாசனத்தைப் போலவே வடிகால் வசதியும் மக்காச் சோளத்திற்கு அவசியமாகும். மக்காச் சோளம், தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் நன்கு வளராது. எனவே, நல்ல மகசூல் பெற போதிய வடிகால் வசதி மிகவும் இன்றியமையாததாகும்.

கனத்த மழைக்குப் பின் வெகு விரைவில் தண்ணீரை வடிக்க வயலைச் சுற்றியுள்ள வரப்புகளைத் தேவையான இடங்களில் வெட்டி, நீரை வடித்து விட வேண்டும். அத்துடன் கூட நிலமட்டத்திலிருந்து 90 சென்டி மீட்டர் (3 அடி) ஆழம் வரைத் தண்ணீர் தேங்காமல் இருக்க வடிகால் வாய்க்கால்களை அமைத்து, அவைகளின் மூலம் நீரை வடித்து விடவும்.

பயிர்ப் பாதுகாப்பு.

மக்காச் சோளப் பயிர்களைப் பெரும் பாலும் குருத்துப் புழுவும், கதிர் துளைக்கும் புழுவுமே (கம்பளிப் பூச்சி) தாக்கி சேதம் விளைவிக்கின்றன. இவைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய தடுப்பு முறைகளை அறிய உங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க அலுவலரையோ அல்லது ஊர்ப் பணியாளரையோ கலந்தாலோசியுங்கள்.

மக்காச் சோளத்தில் தண்டு அழுகல் நோய் காணப்படுவதைத் தடுக்க விதைத்த 35-வது நாளிலும், 45-வது நாளிலும் ஆக 2 முறை டைபட்டலான் மருந்தைத் (2½ கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளித்து மண்ணை நனைக்கவும்.

மக்காச் சோளக் கதிர்களுக்கு பறவைகள், குரங்குகள், குள்ள நரிகள் ஆகியவைகளாலும் பெரும் சேதம் ஏற்படக் கூடுமாதலின், அவைகளிலிருந்தும் மக்காச் சோளத்தைக் காப்பாற்ற வேண்டும்.

அறுவடை.

கதிரைச் சுற்றியுள்ள இலைகள் இளம் பசுமை நிறத்திலிருந்து பழுப்பு நிறமாக மாறிக் காய்ந்த பின்னர் கதிர்களை அறுவடை செய்யவும்.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு மக்காச் சோள மகசூலைப் பெருக்கிப் பெரும்பயன் அடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673
தந்தி: MONARCH

Sarath

வெளிநாடு செல்லும் வேலூர்க் காலணிகள்

வேலூரில் செய்யப்படும் காலணிகளுக்கு அமெரிக்காவிலிருந்து அழைப்பு வந்துள்ளது. சுமார் 50 ஆயிரம் ரூபாய்க்கு மகளிர்க்கான நவநாகரீகக் காலணிகள் ஆடவர்களுக்கான அழகிய காலணிகள், தோல்பைகள் அனுப்பும்படி வேலூரில் உள்ள கதர் வாரியத்தின் தொழிற்கூடமான காலணி அலகிற்கு அந்த வேண்டுகோள் வந்துள்ளது.

இந்த ஆணை கிடைத்ததற்கு முக்கியக் காரணம் இந்தத் தொழிற் கூடத்தில் செய்யப்படும் காலணிகளும், தோல் பொருட்களும் எழிலோடு இருப்பதுடன் மிகக் குறைந்த விலையில் கிடைப்பதும் முக்கிய காரணமாகும். ஒருமுறை அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஜோசப், வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு வந்தார். அவர் ஒரு நாள் மாலையில் இந்தத் தோல் அங்காடிக்கு வருகை தந்தார். தரமான தோலினால் மலிவான விலையில் செய்யப்பட்ட காலணிகள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. தனக்கு ரூ. 23.50-ல் ஒரு காலணியும், தனது துணைவியாருக்காக ஒரு அழகுப் பையும் வாங்கினார். அமெரிக்கா திரும்பியதும் அவர் இந்தக் காலணி அங்காடியின் சிறப்புப் பற்றி எடுத்துரைத்தார். அதன் பலன் இம்மாதம் 2-ம் தேதி இந்த ஆணை வந்தது. அமெரிக்காவுக்குப் பத்து ரகங்களில் பல்வேறு காலணிகளும் தோல் பொருட்களும் அனுப்பும்படி அந்த ஆணையில் கேட்டிருந்தனர். அவர்கள் விரும்பிக் கேட்ட பொருட்களின் மொத்த மதிப்பு 50,000 ரூபாய் இருக்கும்.

" அமெரிக்காவைத் தொடர்ந்து சோவியத் நாட்டிற்கும், மற்றைய வெளிநாடுகளுக்கும் காலணிகள் ஏற்றுமதி செய்யக் கடும் முயற்சி எடுத்து வருகிறோம்.

இங்கு வருகை தருகிறவர்களில் காலணிகளின் மலிவான விலையைப் பாராட்டாதார் யாருமிலர். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் எல்லிஸ் மேரி, இங்குள்ள காலணிகள் போல் நேர்த்தியான எழிலுடன் மலிவான காலணிகளை எங்கும் பார்த்ததில்லை என்று பாராட்டினார். அவர் தேர்ந்தெடுத்த காலணி எட்டரை ரூபாய்தான் என்றதும் "ஆகா.. எவ்வளவு குறைந்த விலை" என்று ஆச்சரியப்பட்டார். குடியாத்தத்தைச் சேர்ந்த கல்லூரி முதல்வர், விலை மலிவாகயிருப்பதனால் அவருக்கு நாலாண்டுகளுக்குத் தேவையான காலணிகளை அப்போதே வாங்கிவிட்டார். மக்கள் விரும்பும் வகைகளிலும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றாற்போலும், அதிக லாபம் கருதாமலும் நாங்கள் தோல் பொருட்களைத் தயாரிக்கிறோம். அதுதான் அனைவரையும் கவரும் எங்களது தொழில் ரகசியம்" என்கிறார் காலணி அலகின் ஆர்வமிக்க நிர்வாகி பொன்னுசாமி.

அடடா — என்ன — புதுமை!

மருத்துவ உலகில் வளர்ந்து வரும் 'பிளாஸ்டிக் சர்ஜரி' என்னும் புதுவகை அறுவைச் சிகிச்சைபற்றி இந்தக்கட்டுரையில் எடுத்துரைக்கிறார், சென்னை, பொதுமருத்துவமனை முதல்வர் டாக்டர் பி. ஆர். பாலகிருட்டிணன்.

[டாக்டர் . வேலனும், அவர் தந்தையும் உரையாடுகிறார்கள்.]

தந்தை: என்னப்பா வேலா! ஒருநாள் போலத் தாமதமாக வருகிறாயே, ரொம்ப வேலையா? உன் யூனிட்டில் கூட அவசரகேஸ் என்றெல்லாம் உண்டா?

டாக்டர் வேலன்: என்னப்பா அப்படிக் கேட்டு விட்டீங்க? வேலை அதிகமில்லாமலா இருக்கும்? இல்லை, அவசர கேஸ் இல்லாமலிருக்குமா?

தந்தை: என்ன இருந்தாலும் நீ இருதய நோய்களுக்கான சிகிச்சை நிபுணராகவோ, மூளைநோய் சார்ந்த சிகிச்சை நிபுணராகவோ வந்து உயிர் காக்கும் முயற்சியில் ஒப்பற்ற தொண்டு செய்யவேண்டும் என்று தான் கனவு கண்டேன்.

வேலன்: எங்கள் பிளாஸ்டிக் சர்ஜரியும் நீங்கள் குறிப்பிட்டவைகளுக்குச் சற்றும் குறைந்ததில்லை அப்பா. நாங்களும் சிறந்த சேவைதான் செய்கிறோம். நீங்கள் ஒரு நாளைக்கு என்னுடன் அரசினர் பொது மருத்துவ மனைக்கு (G.H) வந்து பாருங்களப்பா! அப்பொழுது தான் எங்கள் சேவை உங்களுக்குப் புரியும்.

தந்தை: முகத்தை இளமையாக மாற்றிக் கொள்வதற்கும், சப்பையாகவோ, கோணல் மாணலாகவோ அமைந்துவிட்ட மூக்கை அழகு படுத்திக் கொள்வதற்கும் உதவும் ஆபரேஷன் முறைகளில் அத்தனை பெரிய சேவை அமைந்திருக்கிறதென நான் ஒத்துக்கொள்ளமாட்டேன்.

வேலன்: அப்பா! நீங்கள் தான் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் செய்வதும் மகத்தான சேவை தான் என்பதை விளக்கிக் கூறுகிறேன், கேளுங்கள். அப்புறம் நீங்களும் ஆமோதிப்பீர்கள்.

பிளாஸ்டிக் சர்ஜரி என்ற சிகிச்சை முறை எந்தெந்த விதத்திலெல்லாம் உபயோகமாகிறது என்று அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கடந்த ஐம்பது வருடங்களாக இதன் வளர்ச்சி பெரிதும் விரிவடைந்திருக்கின்றது.

முதலாவது, இரண்டாவது உலக மகாயுத்தத்தில் இந்த அறுவைச் சிகிச்சை அதிக அளவில் பயன்பட வாய்ப்புகள் ஏற்பட்டன. அதன் மூலம் இம்முறை பெரிதும் வளர்ச்சியடைந்தது.

உடலை விகாரப்படுத்தும் பெரிய காயங்கள், பூரவலான நெருப்புப் புண்கள் அல்லது வடுக்கள், பிறவியிலேயே காணப்படும் அங்கக் குறைபாடுகள், தோல் புற்று நோய்கள், தொழு நோயால் ஏற்படும் உறுப்புக் குறைவுகள் எல்லாவற்றிற்குமே இச்சிகிச்சை முறை வரப்பிரசாதமாக உள்ளது.

பிறவியிலேயே வெகு கோரமாகத் தோற்றமளிக்கும் பிளந்த உதடுகளையும், பிளந்த மேலண்ணங்களையும், சீரிய வகையில் அளவுகள் எடுத்து, நுண்ணிய முறையில் எலும்புகள் வரை ஊடுருவிச் சரிசெய்கிறார்கள். சிறு குழந்தையாக இருக்கும்போதே இவ்விதம் செய்து பிரமிக்கத் தக்க வகையில் சரி செய்கிறார்கள். அந்தக் குழந்தையா என்று ஆச்சரியம் ஏற்படும் அளவிற்கு உதடுகளின் உருவ அமைப்பைச் சீராக அமைக்கிறார்கள்.

குறைபாடமைந்த மூக்கை எடுத்துக் கொள்வோம். அமைப்பு மாறி அமைந்துவிட்ட அழகற்ற மூக்கையும், நெருப்பாலும், விபத்தாலும், வெட்டுக்காயங்களினு

னும், புற்று நோயின் கொடுமையினலும் சின்னபின்னப்படுத்தப்பட்ட மூக்கையும், மூக்கில் முறிந்துவிட்ட எலும்புகளையும்சரி செய்கிறுர்கள். உடம்பின் வேறிடத்திலிருந்து தோலையும், திசுக்களையும் எடுத்துப் புதிய மூக்கையே உருவாக்கவும் செய்கிறுர்கள். இதுபோல் தாடை எலும்பு முறிவையும், முக எலும்புகளின் சேதத்தையும் சரி செய்கின்றனர்.

பிறவியிலேயே வெளிக்காதுகள் சிலருக்கு இருக்காது. காதுத் துளை மட்டுமே இருக்கும். மிகச் சிறியதாகவோ, மிகப் பெரியதாகவோ இருக்கும். அழகற்று, அமைப்புமற்றுக் கோணலாணலாயிருக்கும்; அல்லது காயங்களால், விபத்துக்களால், புற்று நோயால் காது அழிந்திருக்கும்.

பிளந்த உதடுள்ள சிறுமி.

அப்போது முடிந்தால் அறுவைச் சிகிச்சை மூலமாகவோ அல்லது பிராஸ்திசிஸ் (Prosthesis) என வழங்கும் செயற்கைப் பாகங்களைக் கொண்டோ காதுகளை இயற்கையாகத் தோன்றும்படிச் செய்கிறுர்கள்.

சிலருக்கு மேல் கண்ணிமை பிறவியிலேயோ, நோய் காரணமாகச் செயலற்றமையாலோ, தொங்கிய நிலையில் கண்பார்வையை மறைக்கக்கூடும். சிலருக்கு முகத்தில் குறிப்பிட்ட நரம்புகளோ தசைகளோ செயலற்றுப் போன நிலையில் கண்களை மூடஇயலாமல் கண்ணிமைகள் விலகியே நிற்கும். நெருப்புக் காயங்கள், கட்டிகள், புற்று நோய், விபத்துக்கள் இவைகளால் கண்ணிமைகள் பாதிக்கப்படக்கூடும்; அப்போது தோல், திசுக்கள், தசை நாண்கள் இவற்றை வேறிடங்களிலிருந்து கொணர்ந்தோ, திசை திருப்பியோ கண்ணிமைகளை நன்முறையில் அமைத்துக் கண்களைப் பாதுகாக்கிறுர்கள். வேறு சிலருக்கு, ஒட்டிய இமைகளைச் சற்றே பிரித்துச் சிறிய கண்களை அழகிய கண்களாக அமைத்துத் தருகிறுர்கள். சேதமடைந்த புருவங்களையும் திரும்பச் சீரான முறையில் அமைக்கிறுர்கள்.

கைகளிலும், விரல்களிலும் ஏற்படும் பெரிய காயங்களையும், அகண்ட தோலிழப்பையும் சீரிய முறையில் சரி செய்து, பழைய நிலைக்குக் கொண்டுவருகிறுர்கள். சமீபத்தில் ஒருவர் கட்டை விரல் ஒன்றை விபத்தில் இழந்து விட்டார். இழந்தவிரலைப்புதிதாக உருவாக்க உடலின் வேறிடங்களிலிருந்து சருமத்தையும், எலும்புத் துண்டையும் எடுத்துப் புதிய விரல் அமைத்தார்கள். அவ்வாறு அமைக்கப் பட்டதன் மூலம், அவர் முடமாகாமல் தப்ப முடிந்தது.

சில தினங்களுக்கு முன் தீ விபத்தில் சிக்கி முகம், மார்பு முதலான இடங்களில் தோல் அழிந்து விட்ட நிலையில் வந்த ஒருவருக்கு உடலின் மற்ற பகுதிகளிலிருந்து தோலை எடுத்துப் பொருத்தித் தீப்புண்களை ஆற்றினேம். தீப்புண்கள் விரைவாகக் குணமாக இம்முறை பெரிதும் உதவுகிறது.

தந்தை : ஏன் அந்தத் தோல் தானுக வளராதா? நாளடைவில் புண்கள் தானுகவே ஆருதா ?

வேலன்: அந்தமாதிரி, பெருத்த அளவில் சேதமடைந்துவிட்ட இடங்கள் ஆற வெகு காலம் பிடிக்கும். தவிரவும் சரியான பிறகும் கூட பெரிய வடுக்களாகவே மாறும். அத்துடன் அருவருப்பான தோற்றத்தையும் தரும். இந்தச் சிகிச்சை, சீக்கிரம் குணமடைய வைப்பதோடு வடுக்களையும் தவிர்க்கிறது.

தந்தை : ஒருவருக்குத் தோல் ஒட்டுப்போட அவரது தோல் தான் பொருந்திவருமா ?

வேலன் : அவரது தோலும், திசுக்களும் என்ருல் மிகவும் சிறந்தது. பொருத்தமுள்ள மற்றவர்களிடமிருந்தும் எடுத்துப் பொருத்தலாம். ஆனல் இம்முறை அத்தனை வெற்றியடைவதில்லை. எனினும் தாற்காலிகமாகப் பெரிய காயங்களை மூட இது உதவக்கூடும்.

பெரியம்மையால் புள்ளி விழுந்து விகாரப்படுத்தப்பட்ட முகத்தையும், நிறையப் பருக்களால் அழகற்றுவிட்ட முகத்தையும் 'பிளாஸ்டிக்' சர்ஜரி மூலம் சீர் செய்து விடுகிறேம்.

சிறிய அளவில் தோல், சதை சேதங்களை, அருகிலுள்ள ஆரோக்கியமான இடங்களிலிருந்து சருமத்தை எடுத்துப் பொருத்தலாம். உதாரணமாகக் கன்னம், மூக்கு, கண்ணிமை இவை சிறிய அளவில் அழிய நேரும்போது, அருகிலுள்ள நெற்றித் தோலை எடுத்துச் சேதமான பகுதிகளில் இட்டு நிரப்பலாம். சேதமடைந்த முழங்கைக்கு வயிற்றுப் பகுதியிலிருந்து

உதட்டுப் பிளவு சரிசெய்யப்பட்ட குழந்தை.

சருமத்தையும், விபத்துக்குள்ளான கால், பாதம் முதலியவற்றுக்குத் தொடைப் பகுதியிலுள்ள சருமத்தையும், முகவாய்க்கு நெஞ்சிலுள்ள சருமத்தையும் எடுத்துப் பொருத்தலாம்.

தந்தை : நீ சொல்வது புரிகிறது வேலா! பெரிய அளவில் காயங்களும், புண்களும் நேர்ந்தால்............. ?

வேலன் : உதாரணமாக முகத்தில் பெரிய அளவில் தோலழிவு நேர்ந்ததென வைத்துக் கொள்வோம். அதற்கு முதலில் தன்மையும் நிறமும் பொருந்துகிறதாஎன்றுபார்த்துக் கைகளில் உள்ள தோலை நீளமாக வெட்டியெடுத்து,

அதை ஒரு பட்டைத் தோலாகவோ அல்லது குழாய் வடிவிலோ மாற்றியமைத்து ஒரு முனையை முகத்தில் தேவையான இடத்தில் ஒட்டித் தைக்கிறுர்கள். இரண்டு, மூன்று வாரம் கழித்து ஒட்டிய இடத்தில் இரத்த ஓட்டம் கண்டவுடன் கைப் பகுதியிலேயே விட்டு வைத்த மறு முனையைத் துண்டித்து, அந்த நீண்ட தோல் துண்டை முகத்தின் தேவையான இடத்திலெல்லாம் பரப்பி, நுண்ணிய முறையில் முகத்தின் உருவ அமைப்பைத் தந்து பொருத்தி விடுவார்கள். இதைப்போல் தொடையிலிருந்தும், வயிற்றிலிருந்தும், உடலின் மற்ற எந்தப் பகுதியிலிருந்தும் சருமத்தையும் சதையையும் தேவையான இடத்திற்குப் படிப்படியாகக் கொண்டு செல்லலாம்.

வாயிலும், முகத்திலும் காணும் புற்று நோய் காரணமாகவோ, அதற்குச் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை காரணமாகவோ முகத்தின் பெரும் பகுதியை இழந்துவிட்டுப், பார்க்கவே கூசும் பயங்கர உருவத்தோடு வாழ்பவர்களுக்கு, சற்றுக்காலமேயாயினும், புனர்வாழ்வு வாழ "பிளாஸ்டிக் சர்ஜரி" உதவுகிறது.

நாம் வாழும் பகுதியில் மிகுந்து காணப்படுவது தொழு நோய். இத் தொழு நோயால் முடங்கிவிட்ட விரல்களுக்கும், கைகளுக்கும், சில தசைநாண்களை வெட்டியெடுத்துத் தேவையான இடங்களில் பொருத்தித் தைப்பதன் மூலம், தசை அசைவுகளைத் திசை திருப்பிப் புது வாழ்வு அளிக்கிறுர்கள்.

பெரிய தீப்புண்களோடு ஆபத்தான நிலையில் வந்தவர்களுக்கும், பின்னல் தீப்புண்கள் ஆறி அருவருப்பான வடுக்களாகி நின்று விட்ட நிலையில் உள்ளவர்களுக்கும் வியக்கத்தக்க வகையில் அழகிய உருவையும், அதன் மூலம் பயனுள்ள வாழ்வையும் தருகிறுர்கள்.

இழந்த கண், மூக்கு, காது முதலிய பாகங்களை அழகிய முறையில் அமைக்க பிளாஸ்டிக் சர்ஜரியால் இயலாத போது பிராஸ்திசிஸ் (Prosthesis) எனப்படும் செயற்கைப் பகுதி

மூக்கிழந்த அம்மையார் பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் மூக்குப் பெற்றுள்ள தோற்றம்

களால்—இவை அக்ரிலிக் ரெசின் (Acrilic resin), பிளாஸ்டிக், முதலியவற்ருல் ஆனவை—இயல்பாகத் தோன்றும்படிப் புதிதாக உருவாக்குகிறுர்கள்.

தொங்கிய கன்னங்களையும், சுருக்கம் கண்டு தளர்ந்துபோன முக அமைப்பையும் கூட அழகிய முறையில் மாற்றியமைக்க முடிகிறது.

பிறவியிலேயே காணும் பிறவி உறுப்புக்களின் குறைபாடுகளை நீக்கவும், நன் முறையில் அமையாத அல்லது பெருத்த அளவில் அமைந்துவிட்ட மார்புகளைச் சீராக்கவும் பிளாஸ்டிக் சர்ஜரி மிகவும் உதவுகிறது.

சிறிய காயங்கள்கூட பெருத்த அளவில் வடுக்களைத் (Keloids) தோற்றுவிக்கும் நிலை சிலருக்கு அரிதாகக் காணப்படுகிறது. அதீத முறையில் தோன்றி விட்ட இந்த வடுக்களையும், பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் அழகிய முறையில் சரி செய்கிறேம்.

தாழ்வுஉணர்ச்சியுள்ளவர்களுக்கும்—இனி எதிர்காலமே இல்லை என்ற நிலையில் மனமுடைந்து போனவர்களுக்கும், பிளாஸ்டிக் சர்ஜரி முறை புத்துயிரும், புனர் வாழ்வும் அளித்து, சமூகத்தின் பயனுள்ள குடிமக்களின் தகுதியைத் தருகிறது.

தந்தை : வேலா! நமது அரசினர் பொது மருத்துவமனையில் இத்தனையும் நடைபெறுகிறதென்பதை இன்றுதான் அறிந்தேன். இப்போதுதான் எனக்கு நிறைவும் மகிழ்வும் ஏற்படுகின்றன.

அடுத்த இதழில்
புதிய பகுதி!
'கேளுங்கள் கொடுக்கப்படும்'

நேயர்களின் விஞக்களுக்கு விடையளிக்கும் பகுதி இது;
விஞ அனுப்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புக.

ஆசிரியர்
தமிழரசு
அரசினர் தோட்டம்
சென்னை-2

கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம்-வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

கதர் கிராமத் தொழில் துறை
உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

233

இன்றைய தமிழ்நாடு அரசு, உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறவும், வருவாய் பெருகிடவும் செய்துள்ள நன்மைகள் ஒன்றல்ல! இரண்டல்ல!! ஆயிரம்! ஆயிரம்!!

''ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்!'' என்பது போல், தமிழ்நாடு அரசு ஆயிரமாயிரம் நன்மைகள் செய்திருப்பினும் அவைகளில் சிலவற்றை ஈண்டு எடுத்துரைக்கின்றோம்.

1. குறைகேட்டு நிறைசெய்ய முன் வந்த முதல் அரசு இது!

''உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது'' என்ற வழக்கத்திலிருக்கும் பழமொழியை மாற்றி, ''மேழி பிடிக்கும் கை, மேதினி ஆளும் கை!'' என்ற புதுமொழிக்கேற்ப உழவர் பெருமக்களின் நிலையை உயர்த்திட வேண்டுமானால், அவர்களின் குறைகளை முதலில் கேட்டறிந்து, அக்குறைகளைப் போக்கி நிறை செய்திட, அதையும் விரைவாகச் செய்திட வேண்டும் என்று விரும்பிய தமிழ்நாடு அரசு மாவட்டந்தோறும், உழவர் பெருமக்களும், அலுவலர்களும் அடங்கிய கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து, குறைகள் என்னென்னவென்பதனையும் அவைகளை அகற்றிட என்னென்ன செய்யலாம் என்பதனையும் மிகவும் விரிவாகக் கலந்தாலோசித்தது. உழவர்களின் குறைகளை முதலில் கேட்டு, அதன்பின் அக்குறைகளை எப்படிப் போக்கலாம் என்பதை அலுவலர்களுடன் கலந்தாலோசித்துப் பின்பு இருதரப்பினரையும் ஒருங்கே கூட்டிக் குறைகளை அகற்றிட ஆவன செய்த அரசு தமிழ்நாடு அரசுதான் என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

அன்று மனுநீதிச் சோழன், நீதி கேட்ட இடத்திலேயே நீதி வழங்கியதாகவும், குறை சொல்லப்பட்ட இடத்திலேயே குறைபோக்கி நிறை செய்ததாகவும் வரலாறு கூறுகிறது. அதே போல் குறைகளை எடுத்துச் சொல்லிய இடத்திலேயே, அவைகளை அகற்றிட ஆணை பிறப்பித்தது இந்த அரசே என்பதை வரலாறு கூறும். வேளாண்மைக் கருத்தரங்குகள் குறைகளை அகற்றிடப் பயன்பட்டதுடன், எதிர் காலத் திட்டத்திற்குத் தேவையான அனுபவங்களை உழவர் பெருமக்களிடமிருந்து பெறுவதற்கும் பயன்பட்டன. இன்று செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அக்கருத்தரங்குகளிலே தான் விதை ஊன்றப்பட்டது என்பதும் நினைவு கொள்ளற்குரியதாகும்.

2. உலகில் எங்கும், என்றும் இதுவரை நடைபெறாத அமைதி புரட்சியை உருவாக்கியதும் இந்த அரசே!

காலம் நமக்குக் கற்றுத் தந்த பாடத்தையும், உழவர் பெருமக்களின் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டு வந்த தஞ்சை மாவட்ட நன்செய் நிலங்களிலே, இருபோக சாகுபடித் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிட்டார். அதன் பயனாய் எடுத்த எடுப்பிலேயே, முதல் ஆண்டிலேயே, தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 2·1 இலட்சம் ஒருபோக சம்பா நிலத்தில் இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது.

''இது உலகிலே எங்கும், என்றும், இதுவரை நடைபெறாத நிகழ்ச்சி மட்டுல்ல; அமைதியாக நடைபெற்றுள்ள உழவுப் புரட்சியுமாகும்'' (Silent Revolution in Agriculture).

இப்படிப் புகழ்ந்துள்ளது ஒரு பத்திரிகை! நம் நாட்டுப் பத்திரிகை அல்ல அது! அமெரிக்க நாட்டுப் பத்திரிகை! அப்பத்திரிகையின் பெயர் 'லுக்' ("LOOK"). நாளொன்றுக்கு

60 இலட்சம் பிரதிகள் அச்சாகி விற்பனையாகின்ற மாபெரும் பத்திரிகை அது. அப்பத்திரிகையே இவ்வாறு புகழ்ந்துவிட்ட பின்பு மற்றவர்கள் புகழ்ந்து கூறியுள்ளதை ஈண்டு விளக்குதல் வீணே என்று விட்டுவிடுகிறோம்.

இந்தத்திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசுக்கு ஏதாவது அதிகச் செலவாகியிருக்கும் என்று நினைக்கலாம். அதுதான் இல்லை! ஏற்கெனவே இருந்த அலுவலர்களையும், குறைந்த வசதிகளையும் கொண்டே இந்த அமைதிப் புரட்சி நடைபெற்றுள்ளது என்பதை நினைக்கும்போது, இத்திட்டத்திற்குக் காரணமான இன்றைய அரசினை அண்டை மாநிலத்தவரும், அயல்நாட்டவரும் பாராட்டுவதில் தவறேதும் காணமுடியுமா?

இந்த வெற்றியின் காரணமாக இருபோக சாகுபடித் திட்டத்தை சாத்தனூர் அணை, கிருஷ்ணகிரி அணை, வீராணம் ஏரிப்பகுதி, வைகை அணைப்பகுதிகளிலும், பரம்பிக்குளம் ஆளியாறு பகுதிகளிலும், தாமிரபரணி பாசனப்பகுதிகளிலும், புள்ளம்பாடி வாய்க்கால் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினால் விளைந்த பயன் உழவர் பெருமக்களுக்கு அதிக வருவாய் கிடைத்தது மட்டுமல்ல; நாட்டில் நிலவி வந்த உணவுப் பற்றுக்குறையும் மறைந்து விட்டது!

3. ''புஞ்சை விளையின் பஞ்சம் தீரும்!'' என்பதை உணர்ந்து புஞ்சை நில மேம்பாட்டிற்கும், புஞ்சை நில உழவர் பெருமக்களின் வருவாய்ப் பெருக்கத்திற்கும் வழி செய்த முன்னோடி அரசு இது!

சென்ற ஆண்டுதான், இந்தியாவின் திட்டக் குழு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலாவது, புஞ்சை நிலமேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கவேண்டும் என்று நினைத்தது. ஆனால், இந்த அரசு, மொத்தம் சாகுபடியாகும் நிலப்பரப்பில் ஏறத்தாழ 60 சத அளவு பங்கு பெறும் புஞ்சை நிலங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திலேயே புஞ்சை நில மேம்பாட்டிற்கு வழி செய்யும் நோக்கின் முதல் முயற்சியாகப் புஞ்சை நிலங்களுக்குரிய வரியை நீக்கியது! மற்ற மாநிலங்கள் செய்யாததைச் செய்து காட்டியது. புஞ்சை நிலங்களில் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்கும் மண்வளப் பாதுகாப்பு முறைகளை பெரும்பரப்பில் மேற்கொண்டு வந்தது. இந்த ஆண்டில் புஞ்சை நில உழவர் பெரு மக்களும் பயனடைய வேண்டுமென்பதற்காக புஞ்சை நிலங்களுக்கு ஏற்ற உயர் விளைச்சல் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1·5 இலட்சம் ஏக்கரில் புஞ்சை நிலங்களிலும் அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல் வாய்ந்த எச்.பி. 3 கம்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது மட்டுந்தானா? கோவில்பட்டிப் பகுதியில் முன்னோடித் திட்டமாக மானாவாரிச் சாகுபடித் திட்டமும் (Dry farming scheme) செயல்படுத்தப்படுகிறது. இன்னும் பல திட்டங்களை விரைவில் செயல்படுத்தவும் திட்டமுள்ளது.

4. மற்ற மாநிலங்கள் செய்யாததைச் செய்து மாற்றாரும் புகழும் பேறு பெற்ற அரசு இது!

ஐ.ஆர். 8 நெல் அதிக மகசூல் அளிக்கும் என்பதை அனைத்து மாநிலங்களும் அறிந்திருந்தாலும் ஐ.ஆர். 8 நெல் சாகுபடி செய்ய மற்ற மாநிலங்கள் சுணங்கின. ஆனால் தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டு செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் ஐ.ஆர். 8 நெல் பயிரிடும் தீவிரத் திட்டத்தைச் (Crash Programme) செயல்படுத்தியது. மேற்படி மூன்று மாவட்டங்களிலும் இத்திட்டத்தில் பங்குபெற்ற உழவர் பெருமக்களுக்குத் தேவையான விதை, உரம், பூச்சி பூஞ்சாள மருந்துகள் ஆகியவைகளை உழவர் பெருமக்களின் வீட்டு வாசலிலேயே லாரிகளில் கொண்டு போய்க்கொடுக்கப்பட்டது. லாரிகள் 'நடமாடும் வேளாண்மைக் கிடங்காகப்' பயன்படுத்தப்பட்டு உழவர்களின் வீட்டை நோக்கி வந்து. உழவர்களின் வீட்டுக் கதவைத் தட்டி விதை வேண்டுமா? உரம் வேண்டுமா? பூச்சிப் பூஞ்சாள மருந்து வேண்டுமா? வாங்கிக் கொள் இதோ! கடன் வேண்டுமா? வாங்கிக்கொள் இதோ! என்று கேட்டுக் கொடுத்த இது போன்ற நிகழ்ச்சி உலக வரலாற்றில் நடைபெற்றதாகக் காணேம்! இத்தகைய சலுகைகளைத் தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டில் செய்ததன் காரணமாக மேற்படி 3 மாவட்டங்களிலும் ஐ.ஆர்.8 நெல் சாகுபடி செய்யத் திட்டமிட்டிருந்த குறிக்கோள் அளவு 3·5 இலட்சம் ஏக்கராக இருக்கச் சாதனையோ ஏறத்தாழ 8 இலட்சம் ஏக்கராக இருந்தது! இம்முயற்சி வெற்றி பெற்றதனலேயே 1½ ஆண்டு காலம் வறட்சியால் வாடிய தமிழ்நாடு, உணவுப் பற்றுக்குறை நீங்கி, உணவுக் கட்டுப்பாட்டினை (Food Control) அகற்றும் அளவுக்கு உயர்ந்தது.

இந்தியாவிலேயே முதன் முதலாக இத்தகைய மாபெரும் திட்டம் தீட்டிச் செயல்படுத்திக் காட்டியதால், மாற்றாரும் தமிழ்நாடு அரசைப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் புகழ்ச்சி ஒன்றும் நமக்குத் தேவையில்லை. உணவு பற்றுக் குறையைப் போக்கிவிட்டோம் என்ற திருப்தி கிடைத்ததே அதுவே போதும்! அத்திருப்தி மேலும் பல திட்டங்களை நிறைவேற்றிடும் தெம்பினை அளித்துள்ளது!

''தட்டுங்கள் திறக்கப்படும்! கேளுங்கள் கொடுக்கப்படும்'' என்ற நிலையில்லாமல், தமிழ்நாடு அரசே தன் அலுவலர்களை அனுப்பி, உழவர்களின் கதவைத் தட்டி, தேவையென்ன சொல்லுங்கள்! தருகிறோம் வாங்கிக் கொள்ளுங்கள்! என்றது. இதனால் அல்லவோ அரிசி கிடைக்கவில்லை என்ற நிலை மாறி எங்கும் அரிசி தேவையான அளவு கிடைக்கும் நிலை மலர்ந்து உள்ளது! உழவர் பெருமக்களின் வருமானமும் உயர்ந்துள்ளது!

5. உழவர் பெருமக்களுக்காக நட்டத்தை ஏற்றுக்கொள்ளும் அரசல்லவோ இது!

இந்த அரசு புதிதாக அமைவதற்கு முன்பு தமிழ் நாட்டில் இரசாயன உரங்கள் கிடைக்கவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே இரசாயன உரங்களைத் தேவையான அளவு தேவையானபொழுது கிடைக்கச் செய்தது.

இரசாயன உரங்களின் விலையில் 10 சத அளவை மத்திய அரசு உயர்த்திய பொழுது, தமிழ்நாடு அரசு அந்த விலை உயர்வை ஏற்றுக் கொண்டு பழைய விலையிலேயே 31-3-69 வரை விற்கச் செய்தது. இரசாயன உரங்களின் விலையேற்றத்தினால், உழவர் பெருமக்கள் அல்லலுறக் கூடாதே என்ற நல்லெண்ணத்தில், தமிழ்நாடு அரசே அதிக விலையை ஏற்றுக் கொண்ட வகையில் ஏற்பட்ட நட்டத்தைக் கணக்கிட்டால், தமிழ்நாடு அரசு ஏழை உழவர் வாழ்வு வளம்பெற எதையும் தாங்கிக்கொள்ளும் என்பது புரியும். மற்ற மாநிலங்கள் செய்யாததைச் செய்த தமிழ்நாடு அரசு உழவர்களின் அரசு என்று கூறவும் வேண்டுமோ?

இன்னொரு வகையிலும் தமிழ்நாடு அரசு உழவர் பெருமக்களின் நல்வாழ்விற்காக நட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

இன்றைய அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கு முன்பு பூச்சி பூஞ்சாள மருந்துகள் விற்பனையின்போது உணவுப் பயிர்களுக்கு 25 சதமானியமும், வாணிகப் பயிர்களுக்கு 50 சத மானியமும் கொடுக்கப்பட்டது. கருத்தரங்குகளின் பொழுது உழவர் பெருமக்கள், உணவுப் பயிர்களுக்கு வழங்கப்படும் மானியத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, தமிழ்நாடு அரசு எல்லாப் பயிர்களுக்கும் ஒரே அளவில் அதாவது 35 சத மானிய விலையில் பூச்சி பூஞ்சாள மருந்துகளை விற்க ஆவன செய்தது. இதனால் ஏற்பட்ட நட்டத்தையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டது.

சமீபத்தில் மத்திய அரசு பூச்சி, பூஞ்சாள மருந்துகளுக்கு அளிக்கப்பட்டு வரும் தள்ளுபடியை (subsidy) நிறுத்திவிடுமாறு எல்லா மாநில அரசுகளுக்கும் அறிவித்துள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசு உழவர்களின் நலனை முன்னிட்டு இத்தள்ளுபடியை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டு வரை அளிக்க முடிவு செய்துள்ளது. ஆனால் தள்ளுபடியை ஆண்டிற்கு ஆண்டு 5 சதவீதம் குறைக்கவும் முடிவு செய்துள்ளது. மத்திய அரசு இதற்கான மானியம் கொடுப்பதை நிறுத்தி விட்டால், தமிழ்நாடு அரசே, இதனால் ஏற்படும் நட்டத்தையும் ஏற்றுக்கொள்ள முன் வந்துள்ளது.

இவ்வாறு பலவகையில் உழவர் பெருமக்களின் நலனைக் கருதி, நட்டத்தை ஏற்றுக்கொள்கிறது தமிழ்நாடு அரசு என்பதைத் தெளிவுபடுத்துகிறோம்.

6. நன்மைகளை விரைந்து செய்வதும் தமிழ்நாடு அரசே!

மத்திய அரசு ஒவ்வொரு மாநிலமும் நான்காவதுஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டிற்குள் எவ்வளவு ஏக்கரில் உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட வேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்திருக்கிறது. அந்த இலக்கினை இந்த ஆண்டிலேயே எய்திட தமிழ்நாடு அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. அதாவது 1973-74-ல் நிறைவேற்ற வேண்டிய இலக்கினை 1970-71-லேயே

தமிழ்நாடு அரசின் புதிய முயற்சி!

தமிழ்நாட்டின் தேவையை நிறைவு செய்யும் அளவுக்குப் பருப்பு வகைப் பயிர்களின் விளைச்சலைப் பெருக்கிடும் முதல் முயற்சியாகத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் 5·35 இலட்சம் ஏக்கர் பரப்பில் பருப்பு வகைகளைப் பயிரிட ரூபாய் 24·98 இலட்சம் செலவிடப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தரமான பொறுக்கு விதைகளை உழவர் பெருமக்களுக்கு உரிய நேரத்தில் வழங்குவதற்காக, ரூபாய் 24 இலட்சம் செலவில் விதைகளை வாங்கி, அடக்க விலைக்கே விற்பனை செய்யப்படும் என்றும், பூச்சி பூஞ்சாள மருந்துகளை 15 சதத் தள்ளுபடி விலையில் விற்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் துணைகொண்டு, வர இருக்கும கோடைப் பருவத்தில் பருப்பு வகைப் பயிர்களைப் பயிரிட்டுப் பருப்பு உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுக்க வேண்டுமென உழவர் பெருமக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

நிறைவேற்றிவிட்டு மற்றெல்லா மாநிலங்களுக்கும் முன்னேடியாக விளங்க முயற்சி செய்து வருகிறது. சென்ற ஆண்டில் சுமார் 22 இலட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஆண்டு 40 இலட்சம் ஏக்கரில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில்மட்டும் தான் விரைவா? எல்லாத் திட்டங்களிலுமே விரைவாகத்தான் தமிழ்நாடு அரசு செயல்படுகிறது! சென்ற ஆண்டில் சுமார் 1.82 இலட்சம் ஏக்கரில் ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. ஆனல் இந்த ஆண்டில் 14 இலட்சம் ஏக்கரில் ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்கும் மாபெரும் முயற்சியில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மத்திய அரசால் அனுப்பப்பட்டு, சென்னை வந்த மத்திய அரசின் அலுவலர்கள் மேற்படி இரு மாபெரும் திட்டங்களையும் வெற்றிகரமாக நடத்தமுடியுமா? என்று ஐயத்துடன் கேட்டனர். அப்பொழுது எப்படி நிறைவேற்றப் போகிறேம் என்பதை விளக்கியவுடன், மத்திய அரசின் அலுவலர்களெல்லாம், தமிழ்நாடு அரசின் முயற்சியைப் பாராட்டியதுடன், தமிழ்நாடு அரசு விரைந்து செயல்படுவது கண்டு வியப்புறுவதாகவும் கூறியுள்ளனர். இப்படி விரைந்து செயல்படுவதனுலேயே, உணவுப் பற்றுகுறை நீங்கி உபரி நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் நாட்டிற்குள் எங்கு வேண்டுமானுலும் அரிசி எடுத்துச் செல்லும் நிலையும், உணவுக் கட்டுப்பாடு நீக்கமும், பொது ஏலத்தில் அரிசி விற்கும் நிலைமையும் மலர்ந்துள்ளது. இந் நிலைமைகளெல்லாம் தமிழ்நாடு அரசு செய்த நன்மைகளால்தான் என்று சொல்லவும் வேண்டுமோ?

7. நீர்த் தீர்வையை நீக்கியதும் தமிழ்நாடு அரசே!

ஒரு போகம் சாகுபடி செய்யப்பட்டு வந்த நிலங்களில் இரு போகம் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்கு இரண்டாம் போகச் சாகுபடிக்குரிய நீர்த் தீர்வையைத் தள்ளுபடி செய்து கொடுக்கப்பட்டதும், மற்ற மாநிலங்களில் செய்யப்படாத தன்மையேயாகும்.

8. ஏழை உழவர்களும் எளிதில் கடன் பெற சட்டத்தைத் திருத்தியதும் தமிழ்நாடு அரசே!

பெருநிலக் கிழார்களே முன்பெல்லாம் அரசாங்கத்திலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் கடன் பெற முடிந்தது. சிறு அளவு நிலம் உள்ள ஏழை உழவர்களுக்கு அக் கடன்களெல்லாம் கிட்டாத நிலையில் எட்டாத தூரத்தில் இருந்தது. அவர்களுக்குப் போதிய சொத்து மதிப்பு இல்லை என்ற காரணத்தினுல், அவர்களுக்குக் கடன் கொடுப்பதைச் சட்டம் அனுமதிக்கவில்லை. சிறு அளவு நிலம் வைத்துள்ள உழவர்களும் கடன் பெற்று உணவு உற்பத்தியைப் பெருக்கித் தானும் வாழ்ந்து, மற்றவர்களும் வாழ வழி செய்ய முன்வர வேண்டும் என்பதற்காக இன்றையத் தமிழ்நாடு அரசு சட்டத்தையே திருத்தி உள்ளது. இந் நிகழ்ச்சி இங்கன்றி, வேறெங்கும் உண்டோ?

தமிழ்நாட்டில் மேலும் இரு புதிய அணைக்கட்டுகள்!

தமிழ் நாட்டில் கருப்பநதி, பிளவுக்கல் ஆகிய இரு அணைக்கட்டுத் திட்டங்களையும் மேற்கொள்ளத் திட்டக் குழுவின் அனுமதி கிடைத்து விட்டது என்ற செய்தியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு கருணநிதி அவர்கள் 5-12-70 அன்று அறிவித்துள்ளார்கள்.

கருப்பநதித் திட்டத்திற்கு ரூபாய் 140 இலட்சமும், பிளவுக்கல் திட்டத்திற்கு ரூபாய் 76 இலட்சமும் செலவு ஆகும்.

கருப்பநதித் திட்டத்தின் பயனுகத் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டத்தில் ஏற்கனவே பயிராகும் நிலமான 8,600 ஏக்கர்களுக்கு உறுதியான பாசன வசதியும், புதிதாக 2,900 ஏக்கர்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

பிளவுக்கல் திட்டத்தினுல் ராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் வட்டத்தில் பழைய பாசனப் பகுதியில் 7,600 ஏக்கர்களும், புதிதாக மேலும் 1,500 ஏக்கர்களும் பயனடையும்.

9. பாசன வசதியைப் பெருக்குவதும் தமிழ்நாடு அரசே!

தமிழ் நாட்டில் பெரிய நீர்ப்பாசன வசதிகளை அமைத்திட மேலும் வாய்ப்பு இல்லையாதலின் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை (Minor Irrigation Schemes) நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. பூமிக்கடியில் உள்ள நீரை வெளியே கொண்டுவந்து 'பசுமைப் புரட்சி' நாடு நெடுகிலும் பரவிட தமிழ்நாடு அரசு, சமுதாயக் கிணறுகள், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதிலும், பாசனக் கிணறுகள் தோண்டுவதிலும் தீவிரம் காட்டுகிறது. பழைய அணைகளை விரிவு படுத்தவும், மேலும் புதிய அணைகளைக் கட்டவும் பெருமுயற்சி நடக்கிறது.

கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் அமைத்து, அது திறம்படச் செயல்படச் சட்டமும் இயற்றியுள்ளது தமிழ்நாடு அரசே! இதனுல் சிறு உழவர்களும் உற்பத்தியைப் பெருக்கிட இயலும். இந்தியாவிலேயே முதன்முதலாக இத் திட்டத்தை செயல்படுத்தியதற்காக இந்தியப் பிரதமர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அவர்களே தமிழ்நாடு அரசை வாழ்த்தியுள்ளார்.

உலக வங்கி (World Bank) யிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கடன் கிடைத்தபின் காவிரி ஆற்றுப் புனரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும். அது நிறைவேறிவிட்டால், என்றும் தமிழ்நாடு மற்றவர்களை உணவுக்காக எதிர்பார்க்காத நிலை உருவாகும். அதுவே, தமிழ்நாடு அரசு இதுவரை செய்துள்ள நன்மைகளுக்கெல்லாம் சிகரமாக விளங்கும்.

உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்காக இப்படி எத்தனையோ நன்மைகளை தமிழ்நாடு அரசு செய்து வருகின்றது. மற்றவர்கள் பாராட்டிற்காக அல்ல! கடமையை உணர்ந்து செய்கிறது!

(தொடரும்)

ஏர்நிலையைத் தான்பெருக்கி, ஏழையரின் வாழ்வுயர்த்தி,
நேர்மைத் தமிழின் நிலையுயர்த்தி-ஊர்புகழ
முத்தாட்சி செய்யும் முதல்வர் கலைஞரையே
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சி. கண்ணன், கரூர்.

மதுவாடை இல்லாமல் ; மாறுகின்ற கட்சிச்
சதுராட்டம் இல்லாமல் சாற்றும்-புதுமைகள்
புத்துணர்ச்சி யோடு புரியும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மருதூர் மணிவண்ணன், விழுப்புரம்.

வட்ட முழுமதியில் வாலாட்டும் பாம்பென்றே
இட்ட கதையெல்லாம் இன்றில்லை-தட்டியதும்
பத்திரமாய்த் தானியங்கும் பேருந்தின் சாதனையை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—எம். சண்முகம், சென்னை-10.

பிச்சை யெடுப்போர், பிணியோர் மறுவாழ்வு
மெச்சப் பெறுவதுடன் மேன்மையுறக்-கச்சிதமாய்
நத்திப் புதுத்திட்டம் நாட்டுந் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கா. ப. கவுண்டப்பா, நரிக்கல்பட்டி.

வேலையில்லாத் திண்டாட்டம் வேலையற்றுப் போகுதுகாண்
ஆலையில்லை என்றகுறை அற்றதுகாண் -பாலையெல்லாம்
வித்திட்டமோக விளைச்சல்காண் நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சுப்பிரமணியன், புதுவை.

தஞ்சமென்று வந்தோரைத் தாய்போல் அரவணைத்துப்
பஞ்சமின்றி வாழ்விக்கப் பல்தொழிலால்-வஞ்சமின்றி
எத்திறத்தும் வேலைதர ஏற்ற தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—இ. சூசைமாணிக்கம், சிறுகுடி.

இல்லை நிலமில்லார், கல்வியிலார் என்னுஞ்சொல்
' இல்லை ' எனும்நிலையை எய்திடவே-நல்லமைச்சர்
நித்தம் உழைக்கும் நிலையால் ' தமிழரசை '
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—கோ. கலியாணசுந்தரன், திருமணமங்கலம்.

காட்சிக் கெளியர் கடுஞ்சொல்லும் இல்லாராய்
ஆட்சி முறைசெய்யும் ஆற்றலர்-மாட்சிசேர்
உத்தமராம் நம்கலைஞர் ஓங்குபுகழ் ஆட்சியினை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—எ. எம். சிதம்பரநாதன், பூதப்பாண்டி.

சட்ட மொழுங்கு சமதர்மத் தத்துவங்கள்
திட்டமென்னும் தோட்டத்தில் சிங்கார-மொட்டவிழ்ந்து
தித்திக்கும் பூக்காடாய்ச் சீர்பரப்பும் நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கணபதி, திருச்சி-8.

ஆன்றபுகழ்க் காந்தி அரும்பியநாள் ; நேருமகான்
தோன்றியநாள் ; இன்பச் சுதந்திரநாள் :—மூன்றுக்கும்
குத்து விளக்கேற்றிக் கோலவிழாக் காண்அரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கருப்பன்செட்டி, திருச்சிராப்பள்ளி-15.

பஞ்சப் பகையைப் பழிவாங்கி நாட்டையே
தஞ்சையென மாற்றும் தமிழரசை-நஞ்சுவிலை
வித்தான வேலையிலா மைதீர்க்கும் வித்தகரை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—பா. தங்கம்மாள், நத்தம் கோவில்பட்டி.

நெறிநின்று நேசக் கரங்கொண்டு மக்கள்
குறைவென்று கூர்த்த மதியால்-நிறைகொண்டோர்
அத்திப்பூப் போல அமைத்த தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—த. குப்பால், வேப்பங்குளம்.

ஆட்சி முறையில் அமைதி ; அதன் வழியே
காட்சியென நிற்கும் கடமைவெற்றி—மாட்சியால்
தித்திக்கும் வள்ளுவத்தின் தெள்ளுதமிழ் நல்லரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—இரா. கேசவன், ஒசூர்.

தாழ்ந்த நிலையகற்றித் தஞ்சைக் களமாக்கி
ஏழ்மைப் பசிபோக்கி, ஏழைக்கும்-வாழ்வுதர
வித்திட்டு மேதினியில் வெற்றிகண்ட நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—பேரிறைவன், பழனி.

செந்தமிழைப் போற்றுதலால் சீர்வளத்தைக் கூட்டுதலால்
சிந்தையுள்ளக் கோலோச்சும் செம்மையால்-இந்தியத்துள்
தித்திக்கும் திட்டங்கள் தீட்டும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—ம. தென்னவன், துவாக்குடிமலை.

ஆடுதுறை மகளே அன்புஜெயா பத்மாவை
நாடும் ' கருணை 'வை நாடுவதால்-பாடுநலம்
பத்தையுங் காக்கப் பாழ்பசியைப் போக்கரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—கே. காசியரசன், தேவங்குடி.

முன்னோடி அண்ணனுக்கு முத்தான நூற்றாண்டும்
பின்னாலே நேருவுக்குப் பெற்றதினம்-கொண்டாடி
தித்திக்கும் வெற்றிவிழா செய்துயர்ந்த சாதனையை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மு. ப. தமிழ்வேந்தன், திருச்சிற்றம்பலம்.

நரிக்குறவர் கல்வி நலம்பெற்றுத் துய்க்க
ஓரக்காட்டில் தங்கும் உறையுள்-அரசுகட்டும்
தித்திக்கும் செய்தி செவிக்கின்பம் ஊட்டுவதால்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மு. சிக்கந்தர்பாட்சா, கோரிக்கடவு.

கல்லும் கவிபாடும் வண்ணக் கவின்கோயில்
மல்லையிலே தோற்றுவித்தான் மாமல்லன் !-சொல்லரிய
கைத்திறனை, நம்முன்னோர் கண்ட கலைவாழ்வை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—அமராவதியான், அரக்கோணம்.

எவர்மனமும் நோகாமல் யார்பகையு மின்றித்
தவறெதுவும் நேராமல் தாய்போல்-கவனமுடன்
அத்தனை மக்களையும் ஆதரிக்கும் நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—வீ. இரத்தினம் பி.ஏ., பி.எல். பெங்களூர்-21.

எங்கும் குழப்ப மெதிர்நோக்கி நின்றாலும்
இங்கே யமைதியென்று மோங்கிவரும்-மங்காத
முத்தமிழ் நாட்டின் முதல்வரின் ஆட்சியை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

பிச்சை எடுப்பார்க்கும், பின்தங்கி வாழ்வார்க்கும்,
குச்சில் உழல்வார்க்கும், கூர்மதியால்-மெச்சுபுகழ்
தித்திக்கும் நல்வாழ்வு சேர்க்கும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

கன்னிக் கடலழகைக் , கற்றூர் திருக்குறளை
மின்னும் எழிற்காஞ்சி மென்பட்டை-கன்னலெனத்
தித்திக்கப் பாட்டியற்றும் திங்கலைஞர் ஆட்சியினை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—செல்வி லட்சுமி மீனாட்சி, எம்.ஏ., நாகர்கோவில்.

நாவாற் பழியுரைத்தார் நாணத், தலைவைத்த
பூவால் இடைதுவளும் பூங்கொடியே—மூவாண்டில்
வெற்றி பல குவித்த வீரத் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—குழ. அண்ணாமலை, கோவை.

பிச்சை புகுவார் பெருநோய் பிடித்திட்டார்
இச்சகத்தில் நாதியிலை என்றிருந்தார்-அச்சமற
இத்தரையில் பூத்த இனிமைத் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—அர. கலைச்செல்வி, கருவம்பாளையம்.

வலிவாய்நல் லாட்சி மலர்ந்ததனால், நாட்டைப்
பொலிவாக்கும் பல்திட்டம் போட்டு-நலிவகற்றிச்
சத்தான முத்துத் தமிழை வளர்ப்பதனால்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மா. கணபதி, சங்கமங்கலம்.

சொல்லும் செயலும் சுயஆட்சி செய்திறனும்
நல்லபல திட்டங்கள் நாடுதலும் -எல்லாமும்
தித்திக்கும் எங்கள் திருத்தமிழர் ஆட்சியினை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—சி. இராமகிருட்டினன், மேல்பட்டாம்பாக்கம்.

ஊர் தோறும் மின்விளக்கால் ஒண்ணொளி பாய்ச்சுவதால் ;
தேர்வீடாய் மென்குடிலைச் சீர்செயலால் ;-பார்புகழும்
முத்தமிழைப் போற்றுவதால் ; முற்போக்காம் நல்லரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—இரா. முருகு கணேசன், மேட்டுப்பட்டி.

மூத்த தலைமகனே, முன்னவனே, அண்ணாவை
வாய்த்த கடற்கரையில் வைத்திறைஞ்சிப்-பூத்தாவி ;
அத்திக்கை வாழ்த்தி ; அரசோச்சும் பெற்றிதனை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—தாமரைக்கண்ணனார், சென்னை-7.

எத்தனையோ திட்டங்கள் ஈடில்லா நற்பணிகள்
இத்தரையோர் காண இறைமாட்சி—அத்தனையும்
ஒத்த தமிழரசை ஓயாப் பணியமைச்சை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—மு. குழந்தைவேல், கரூர்.

சேலத்தாள் சீர்த்தியுற செய்யா எகமகிழக்
காலத்தா லீங்குக் களிப்பெய்த—சீலத்தால்
தித்திக்க ஆளும் தமிழரசைக் கண்டுதான்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—புலவர் பரமசிவம், முத்துநாயக்கன்பட்டி.

' ஏடா, என் தம்பி எடடாபே னாவை 'யென
வாடா திருக்க வழிசொன்னார்—நாடெல்லாம்
தித்திக்கும் அவ்வண்ணா சிந்தைவழிச் செல்வதனால்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—உலகன், ஈரோடு.

செந்நெல் செழிக்குதுகாண் சீர்சிறப்பால் வாழ்வெல்லாம்
கன்னல் சுவையில் களிக்குதுகாண்—மின் வளத்தால்
முத்தமிழர் நாட்டரசு முப்பாலும் இன்பமென
எத்திக்கும் போற்றுதுண்கா இன்று.

—மு. புகழேந்தி, திருமயம்.

பூந்தமிழிற் கல்வி, புதுமுறையில் நெல்விளைவு,
ஏந்தும் ஒழுங்கமைதி, ஏற்றவளம்—வேந்தமைய
ஒத்துழைக்கும் நாட்டாரின் ஓங்குபுகழ், ஆள்வினையை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு

ஆங்கிலேயர் காலந்தொட் டாகாமற் போனசில
பாங்கான திட்டங்கள் பார்மகிழத்—தாங்கியே
சித்திக்க வைக்கவந்த சீர்மிகு நல்லரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—பாக்கியலக்குமி, மானூர்.

முத்தமிழில் வல்ல முதல்வர் கலைத்திறனும்,
பத்திரிகைச் சாதனத்தைப் பண்செய்த—வித்தையன்றே !
புத்துணர்ச்சி ஊட்டும் புதுமைத் ''தமிழரசை''
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—நாவுக்கரசன், தேவகோட்டை.

செந்தமிழில் ஆட்சிகண்டோம்; செந்நெல் மிகுதிகண்டோம்,
வந்ததிரும் பாலை; வறட்சி மழைத்—தொந்தரவும்
சித்திக்க வில்லை; செயல்திறத்து நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

பூ. அண்ணாமலை, மேலச்சேரி.

பட்டா வழங்கியே பாமரரை ஆதரித்தும்
கட்டாயக் கல்விக் கரைகண்டும்—முட்டாமே
தித்திக்கும் செய்தொழில்கள் செய்யும் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—சோ. பாலசுப்பிரமணியன், மணக்குடி.

மிஞ்சும் நல் விஞ்ஞானம் மெச்சும்நல் வானியல்
அஞ்சும் பொறியாலே ஆயமதி—விஞ்சையை
அத்திக்கும் இத்திக்கும் உத்திக்கும் பாரின்கண்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—ஆ. பீ. யூ. அப்துல்காதர், மேலப்பாளையம்.

முன்னைப் பழமொழியை, மூவா மொழிக்குயிலை,
தன்னே ரில்லாத் தமிழ்மயிலை,—இன்னுயிரைப்
புத்தரசாம் எங்கள் புலமைத் தமிழரசால்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—கழுக்குன்றவாணன், ஆயர்பாடி.

கத்துங் கடல்வளமும் காவிரிநன் நீர்வளமும்,
முத்துக் கனிவளமும் மூத்துவர—இத்தரையோர்
தித்திக்குஞ் செந்தமிழில் தீங்கவிதை பாடிவர
எத்திக்கும் போற்றதுகாண் இன்று.

—தி. க. பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை-2.

உறுபசிக்கு நெல்லீந்தும் உற்றநோய் தீர்த்தும்
செறுபகைகுத் தேர்ந்தவினை செய்தும்—மறுவிலாப்
புத்துலகு காட்டும் புதுமைப் புகழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—எ. பார்த்தசாதி, கரூர்.

தண்டமிழைப் போற்றித் தளராது முன்னேற
வண்டமிழர் வாழ்வு வளமாக—மண்மீது
தித்திக்கும் திட்டங்கள் தீட்டித் தருவதனல்
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—அழகனர், கள்ளிக்கோட்டை-2.

முத்தமிழ் வித்தகரை மூதாட்டி அவ்வையைப்
பத்தினிக் கண்ணகியைப் பாரறிய—இத்தரையிற்
பத்துச் சிலையமைத்த பல்லவர்கோன் அண்ணுவை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—ச. நாராயணன், கோவை.

வாழைக் குணத்தவனை வல்லா ரினத்தவனைத்
தாழை மணத்தவனைத் தண்ணிலவை—ஏழையுளம்
தித்திக்குந் தேனைத் திரைகாணுத் தெள்ளமுதை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

—செல்வி ம. மாயா, ஆர்க்காடு.

சாலைநிலை வாழ்ந்தவர்க்குச் சாதகமாய் வீடுகட்டி
வேலைநிலை இல்லார்க்கு வேலைதந்தும்—பாலைநிலை
இத்தரையில் நீக்கிட்ட இன்பத் தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று.

நாகலிங்கம் பி.ஏ., மதுரை-13.

அரிசி விலையை அளவாய்த் தடுத்து
வறியோரும் வாங்கியுண்ணும் வண்ணம்—அருஞ்செயலைத்
தித்திக்கும் பாங்கில் செயல்படுத்தும் நம்மரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—பெ. பழனிச்சாமி, இராசக்காபட்டி

சீர்திருத்த நன்மணங்கள் சேர்த்திட்டார் சட்டத்தில்
ஊர்திருத்தச் சீரணியும் உண்டாக்கிப்—பார்திகைக்கத்
தித்திக்கும் சீர்தமிழ்க்குச் சேர்ந்த தமிழரசை
எத்திக்கும் போற்றுதுகாண் இன்று

—மு. க. தாசன், பூண்டி.



குடிசையும் கோபுரமாகும்!

நொச்சிக்குப்பம்—

உலகிலேயே இரண்டாவது அழகிய கடற்கரை என்று சொல்லப்படும் சென்னை மெரீனு கடற்கரையின் தென் கோடியில் அகில இந்திய வானெலி நிலையத்திற்கு எதிரில் தொடங்கி—

பழம் பெரும் மாதாகோவிலான சாந்தோம் சர்ச்சின் பின்புறத்தின் வடக்குப் பகுதி வரை நீண்டு கிடக்கும் குடிசைப் பகுதியின் பெயர்தான் நொச்சிக்குப்பம்; இப் பகுதியில் மீனவர்களும் ஆதி திராவிட மக்களும் வாழ்கின்றனர்.

நண்பகல் பன்னிரண்டு மணி

வெய்யிலின் கொடுமை அதிகமாகத்தான் இருக்கிறது.

மேல் துண்டை தலைப் பாகையாகச் சுற்றிக் கொண்டு அந்தக் குடிசைப் பகுதிகளின் சின்னஞ்சிறு பாதையில் நுழைந்து வருகிருர், அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தலைவருமான திரு இராம. அரங்கண்ணல் அவர்கள். கையிலே குழந்தையுடன் இருக்கும் தாய்மார்கள், வேலையில் ஈடுபட்டிருக்கும் முதியவர்கள், இளைஞர்கள் எல்லாருமே கையெடுத்துக் கும்பிட்டு அவரை வரவேற்கின்றனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. எனினும் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் அலுவலர்கள் அங்கே பணியில் ஈடுபட்டிருந்தனர். நொச்சிக்குப்பத்தில் புதிய குடியிருப்புகள் கட்டப்பட விருப்பதால் குடிசைகள் காலி செய்யப்பட்டன. அந்தக் குடிசைவாழ் மக்கள் தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்துக்கொள்ளக் குடிசைப் பகுதி மாற்று வாரியம் பணம் வழங்கியுள்ளது.

புதிய குடியிருப்புகள் கட்டித் தர வழிவகுத்த வாரியத் தலைவரை அப்பகுதி மக்கள் நன்றியுடன் வரவேற்றதில் வியப்பேது ?



விரைவில் நொச்சிக்குப்பம், அயோத்தியா குப்பம், டொம்மிக் குப்பம் பகுதியிலுள்ள குடிசைப் பகுதிகள் வீடுகளாக மாற்றியமைக்கப்படும் என்றும் அதற்கான திட்டங்கள் செயலாக்கப்படுவதையும் குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் விவரித்தார்.

காலை 7 மணியிலிருந்து வரும் பார்வையாளர்கள் 50 பேரைச் சந்தித்து முடிப்பதற்குள் மணி பத்தாகி விடுகிறது. வீட்டிலிருந்து அவருடைய சொந்தத் திரைப்படத் தயாரிப்பு அலுவலகத்திற்குச் சென்று விட்டு, அங்கிருந்து அரை மணி நேரத்திற்கெல்லாம் ஒரு நண்பரின் திருமணத்தில் கலந்து கொள்ளச் செல்கிருர். அதன் பிறகு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தலைவர் பணி தான். வேலை நடக்கும் இடங்களுக்கு எல்லாம் சென்று விட்டு, நாள் தோறும் அலுவலக வேலைகளையும் கவனிக்கச் செல்கிருர்.

''குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவருக்கு ஊதியம் உண்டா? வேறு வசதிகள் உண்டா?'' என்று கேட்கிறோம்.

'' வெளி மாநிலங்களில்

அதிகாரச் சார்பற்ற வாரியத் தலைவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம், கார் வசதி, வீட்டு வசதி முதலியன அளிக்கப்படுகின்றன என்று எனக்கு அறிவிக்கப்பட்டது. கொள்கை அளவில் ஒப்புக்கொண்ட நான் எனக்கு ஊதியமும் வேண்டாம்; வேறு வசதிகளும் வேண்டாம் என்று சொல்லி விட்டேன். நான் என்தொழில் மூலம் ஓரளவு வசதி பெற்றிருப்பதால் தேவையில்லை என்று சொல்லி விட்டேன். எனக்குப் பின்னால் இப்பதவிக்கு வருபவர்களுக்கு இவை அளிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டேன்.

வேறு மாநிலங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டுள்ளனதா ?

இல்லை, தமிழ்நாட்டில்தான் முதன் முதலாகக் குடிசைப்பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. Metropolitan Develeping Authority என்ற அமைப்பு கல்கத்தாவில் அமைக்கப்பட்டுள்ளது. பம்பாயிலும் ஓர் அமைப்பு உள்ளது. ஆனால், அவை வாரியம் போன்று செயல்படவில்லை.

கீழ்த்திசை நாடுகளுக்கு முதன் முதலாகத் திரு அரங்கண்ணல் அவர்கள் சென்றபொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த நாடுகளின் வீட்டு வசதி அமைப்புத் திட்டங்களைக் கவனித்து வரும்படிச் சொன்னார்கள்.

குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் திரு அரங்கண்ணல் அவர்கள் சிங்கப்பூர் தலைமையமைச்சருக்கு அந்த நாட்டு வீட்டு வசதி அமைப்புகளைப் பற்றித் தகவல் எழுதச் சொல்லிக் கடிதம் எழுதியிருந்தார்.

சிங்கப்பூர் தலைமையமைச்சர், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் வெற்றியுடன் நடைபெற வாழ்த்துக்களைத் தெரிவித்து அந்நாட்டு வீட்டு வசதிகளைப் பற்றிய புத்தகங்களை அனுப்பியுள்ளார்.

குடிசைப் பிரச்சினை அகில உலகப் பிரச்சினை என்பதையும் ஐசுவரிய நாடான அமெரிக்காவிலும் இப்பிரச்சினை இருக்கிறது என்பதையும் எடுத்துரைத்த திரு அரங்கண்ணல் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் இப்பிரச்சினை இருப்பதை விவரிக்கிறார். அந்த நாடுகளில் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயன்று வரும் முறைகளையும் நன்கு அறிந்திருக்கிறார்.

ஏழு ஆண்டுகளில் சென்னை நகரிலுள்ள குடிசைகளை மாற்றி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரிலுள்ள குடிசைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டவுடன் அடுத்து ஒவ்வொரு பெரு நகரமாக எடுத்துக் கொண்டு குடிசைப் பகுதி வாரியம் செயல்படும்.

சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளைப் பற்றி முழு விவரங்களை அறிய மாநகராட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியே வாரியத் தலைவர் கடிதம் எழுதியுள்ளார்.

குடிசைப் பகுதி உள்ள இடம் தனியார் இடமா ? அரசு இடமா ? கோவில் நிலமா? மாநகராட்சி இடமா ? என்பதையெல்லாம் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே, நேரடியாக ஒவ்வொரு வட்டத்திற்கும் சென்று தாமே நிலைகளை அறிந்து வருகிறார் வாரியத் தலைவர்.

இப்பொழுது உள்ள கணக்குகள் எல்லாம் 1964-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டவைகளாக இருக்கின்றன. ஆகவே, உடனடியாகப் புதிய தகவல்கள் திரட்டப்படுகின்றன.

குடிசைப்பகுதி மாற்றுவாரியத் தலைவர், ஒவ்வொரு பணிக்கும் காலம் வரையறுத்து உடனே செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்.

'' இப்படிக் காலத்தை வரையறுத்துப் பணிகளை முடிக்க முடியுமா ? '' என்று வினவுகிறோம்.

''எங்களைப் பொறுத்தவரையில் இரண்டு சொற்கள்—எங்கள் வேலையின் வேதாந்தமாக அமைந்துள்ளன. அவை சிக்கனம்—சீக்கிரம் என்பவை! எங்கள், அலுவலகத்தில் இந்தச் சொற்களை எங்கும் காணலாம்'' என்கிறார்.





புதிய வீடுகளைக் கட்டுவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க, ஒரே பகுதியிலும் வீடுகள் கட்டப் பல ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

வீடுகள் கட்டப் போதிய செங்கற்கள், கம்பிகள் உடனடியாகக் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படுகிறது. திருமழிசையிலுள்ள அரசு செங்கற் சூளை உற்பத்தித் திறனை மேலும் பெருக்கினாலும் பற்றாக்குறை ஏற்படும் போலுள்ளது. எனவே, நகருக்கு வெளிப்பகுதிகளில் ஒப்பந்தக்காரர்களே சூளை அமைத்துச் செங்கற்களை உற்பத்தி செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர், இடம் ஒதுக்கித் தரவும் வாரியத் தலைவர் முயற்சி செய்து வருகிறார்.

சிலருக்கு இப்பொழுது வியாசர்பாடிப் பகுதியில் தற்காலிகக் குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளது. வேறு குடியிருப்புகள் கட்டப்பட்டவுடன் அப்பகுதிகளுக்கு அனுப்பப்படுவர்.

குடிசைப் பகுதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தொழிற்சாலை அதிபர்களும் ஒத்துழைக்க வேண்டும். தமது தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருப்புகள் கட்டித் தருவதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் இராம. அரங்கண்ணல் குறிப்பிட்டார்.

கூவம் நதியின் கரையோரமிருந்த குடிசைகளைத் தவிர பக்கிங்ஹாம் கால்வாய்க் கரையில் 6,000 குடிசைகளுக்கு மேல் உள்ளன என்பதைத் தெரிவிக்கும் வாரியத் தலைவர், இப்பிரச்சினையில் வெற்றி காணப் பல்வேறு வகையில் அயராது பாடுபட வேண்டும் என்கிறார்.

அவர் சொல்லாமலேயே நாம் புரிந்து கொள்கிறோம்.

குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கத் தனிப்பட்டவர்களும், தனிப்பட்ட நிறுவனங்களும் உதவி அளிக்கலாம் என்ற கருத்தைத் தெரிவிக்கிறார் இவர்.

பி.எல். 480 போன்றவற்றிலிருந்து அளிக்கப்படும் உதவியைக் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அளிக்க முயற்சி செய்யலாம் என்ற கருத்தைத் தெரிவித்துவரும் திரு அரங்கண்ணல் அவர்கள், மைய அரசும் குடிசைகளை மாற்றியமைக்கப் பெருமளவில் உதவ வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

பத்து ஆண்டுகளுக்கு மேல் குடிசை வாழ்வோர் சங்கத் தலைவராக இருந்து பணியாற்றிய அரங்கண்ணல் அவர்கள் குடிசைவாழ் மக்களின் பிரச்சினைகளைப் பெரிதும் உணர்ந்திருக்கிறார். அதனால் எதையும் சிந்தித்துக் காலதாமதமின்றிச் செயல்படுத்த விரும்புகிறார்



இன்னும் எட்டு மாத கால அளவில் பல புதிய புதிய குடியிருப்புகள் உருவாகவிருக்கின்றன. குடிசைப் பகுதிகள் மறைய இருக்கின்றன.

இவ்வாண்டு, அரசு ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயுடன் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து 50 லட்சமும் சேர்த்து ஒன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய பல குடியிருப்புகளை உருவாக்கக் குடிசைப் பகுதி மாற்றுவாரியம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

வீடுகள் கட்டத் தேவையான மரங்கள் பெற நம் காட்டிலாகாவிடம் கேட்கப்பட்டுள்ளது. போதாமைக்கு மத்தியப் பிரதேசக்

காட்டிலாகாவிடமும் வாங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

குடிசை என்றல் இகழ்ச்சி ஒருகாலத்தில்! ஆனல், இக் குடிசை கோபுரமாகிறது.



முதலமைச்சர் சொன்னதுபோல் "இது ஏழு ஆண்டுத் திட்டம் மட்டுமல்ல ஏழை ஆண்ட திட்டம்."

ஏழு ஆண்டுகளில் நகரில் வாழும் ஏழை எளிய மக்களின் குடியிருப்புப் பிரச்சினை முழுமையாகத் தீரும் என்பது உறுதி! உறுதி! உறுதி!

குடிசை மாற்றுவாரியத் தலைவரின் சலியாத ஆர்வமும், அயராத உழைப்பும், அவர் பிரச்சினைகளை அணுகும் முறையும் நமக்கு இதைத்தான் சொல்கின்றன.

குடிசைப் பகுதி மாற்று வாரியம் - யார்? எவர்?

தலைவர்

குடிசைகளை மாற்றியமைக்கும் பணிகளுக்காகக் "குடிசைப்பகுதி மாற்று வாரிய"த்தைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இதன் தலைவராகத் தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர் திரு இராம. அரங்கண்ணல் நியமிக்கப் பட்டுள்ளார்.

மற்ற உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:

அலுவல் தொடர்பற்ற உறுப்பினர்கள்.

திரு கி. மனேகரன், எம்.பி., திரு முரசொலி மாறன், எம்.பி., திரு வி. முனுசாமி, எம்.சி., திரு சைதை சம்பந்தம், திரு நடராஜன், எம். சி.

அலுவல் தொடர்புள்ள உறுப்பினர்கள்.

தமிழ் நாடு அரசின் தொழிலாளர் நலத் துறைச் செயலாளர், வருவாய்த் துறைச் செயலாளர், பொது நல-குடும்ப நலத் துறைச் செயலாளர், ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறைச் செயலாளர், சமூக நலத் துறைச் செயலாளர், நிதித் துறையின் பிரதிநிதி, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர், சென்னை மாநகராட்சி ஆணையாளர், நகரமைப்பு இயக்குநர் ஆகியோர்.

திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் 11—12—1882 அன்று பிறந்தவர் சி. சுப்பிரமணிய பாரதியார்.

1904-ஆம் ஆண்டில் மூன்று மாதங்கள் பாரதியார் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியுள்ளார். தமிழாசிரியரான அவருக்கு மாதம் பதினேழரை ரூபாய் சம்பளம்.

"விவேக பாநு', என்ற திங்களிதழில் பாரதியார் எழுதியுள்ள 'தனிமை இரக்கம்' என்ற கவிதை 1904-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெளியாகியுள்ளது. முதன் முதலில் அச்சில் வந்த கவிதை இதுதான் என்று சொல்லப்படுகிறது.

பாரதியாருக்கு திருமணமான பொழுது அவருக்கு வயது பதினன்கு என்று அவர் மனைவியார் குறிப்பிட்டுள்ளார்.

சக்திதாஸன், காளிதாஸன் என்ற புனைபெயர்களில் பாரதியார் கட்டுரை எழுதியுள்ளார்.

1912-ஆம் ஆண்டில்தான் பாரதியார் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலியவைகளை எழுதியுள்ளார்.

பாரதியார் தமது 'இந்தியா' பத்திரிகை சந்தா விவரத்தை இப்படி அறிவித்திருந்தார்—

	ரூ.	அ.	பை.
எல்லா கவர்ன்மெண்டாருக்கும்	50	0	0
ஜமீன்தார்கள், ராஜாக்கள் முதலியவர்களுக்கு	30	0	0
மாதம் ரூ. 200-க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு	15	0	0
மற்றவர்களுக்கு	3	0	0

பண்டைக் காலச் சிற்பக் கலைகளை வெளியிடுங்கள்

டிசம்பர் முதல் இதழ் முகப்பில் கண்ணைக் கவரும் வண்ணத்தில் கரகக்காவடி ஆட்டக்காரர்களைப் போட்டு அந்த ஆட்டங்களுக்கான விளக்கத்தைக் ''கிராமியக் கலைகள்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்ததைப் படிக்கப் படிக்கத்தேனமுதுபோல் இருந்தது. இதுபோன்ற தமிழகத்தின் பண்டைக்காலச் சிறப்புக் கலைகளைத் 'தமிழரசு' இதழில் வெளியிட வேண்டுமென வாசகர்களின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன்.

எம். டோம்ராஸ், ஊத்துக்குளி.

அரசு இதழின் மேன்மை.

இரண்டு நா[illegible]களுக்கு முன்பு திண்டுக்கல் [illegible] 'தமிழரசு' [illegible] படிக்க வாய்ப்புக் கிடைத்தது. கவர்ச்சியான [illegible]டன் கருத்தைக் கவரும் கட்டுரை—கவிதைகளோடு [illegible]ப்பாக இருக்கிறது வெண்பாப் போட்டி இளம் கவிஞர்களுக்குத் துணை புரியும் மிக நல்ல ஏற்பாடு. அரசு வெளியிடக்கூடிய இதழ் இவ்வளவு [illegible] இருக்கிறதே என்று வியக்கும் [illegible] இருக்கிறது. ஏ[illegible] வியாபார நோக்கத்துடன் வெளியிடப்படுகின்ற இதழ்களுக்கு எவ்விதத்திலும் குறை காண இயலாத விதத்தில் அவ்வளவு சிறப்பாக இருக்கிறது.

அழகனூர், கோழிக்கோடு-2

வார இதழாக வெளியிடுங்கள்:

டிசம்பர் 1-ஆம் நாள் இதழில் தமிழக முதல்வரின் 'இனியவை இருபது' பயணக் கட்டுரையின் வேகம், இனிமை என் நெஞ்சினை விட்டகல மறுக்கிறது. நன்மைகள் ஆயிரம் ஆயிரம் கட்டுரைத் துவக்கமே விறுவிறுப்பாக உள்ளது. தமிழரசை வார இதழாக வெளியிடுவீர்களா?

—இரா. செகனுதன், மதுரை-13.

வாழ்விழந்தவர்கள் வாழ வழி செய்யும் தொழில்.

''வஞ்சியர்க்கு வாழ்வளிக்கும் பஞ்சுத் தொழில்'' என்ற கட்டுரை, அபலைப் பெண்களுக்கும், அனுதையாகிவிட்டோம் என்று ஏங்கும் மகளிர்களுக்கும் தரமான வாழ்வை உண்டு பண்ண வழிசெய்கிறது. பெண்களைக் கொண்டே செயலாற்றி வரும் இச்சிறு தொழிலகத்தினுள் பணிபுரியும் மங்கையரின் பேட்டி மூலம் அவர்களது ஏழ்மை நிலை இத்தொழிலின் மூலம் ஓரளவு சீர்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகிறது. இதுபோன்ற சிறு தொழில்கள் பலவற்றைத் தமிழக அரசு ஆரம்பித்து வாழ்விழந்த பல பெண்களுக்கு வாழ வழி செய்து கொடுக்க முயற்சி செய்ய வேண்டுமெனத் தமிழரசு மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆ. மணிமேகலா, மதுரை-16

உழவர் பெருமக்களுக்கு ஊக்கம் தரும் தமிழரசு

தமிழரசு 1-12-70 இதழில் வெளிவந்த 'நல்லெண்ணெய் விலை குறைய' என்ற கட்டுரை உழவர் பெருமக்களுக்குப் பயன் தருவதுடன், [illegible]எள்'', பயிரிடும் காலம், அதற்குத் தேவையான மண், உரம் முதலியவைகளைப் பற்றியும், அதனைப் பாதுகாக்கும் வகையினையும் சீரிய முறையில் விளக்குகிறது. இதுபோன்ற கட்டுரைகளைத் 'தமிழரசு' இதழில் வெளியிட்டு உழவர் பெருமக்களுக்கு ஊக்கம் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

புரு. சுந்தரம், நந்திவரம்.

அயல் நாட்டவரின் தமிழ் ஆர்[illegible]

'திரைகடலோடியும் தமிழ் தேடு' என்னும் கட்[illegible]யைப் படித்தேன். அமெரிக்க மங்கை பல்லாமைல்கள் கடந்து வந்து நாட்டின் தலைநகரில் தங்[illegible] கற்பதை நோக்குங்கா[illegible] நாட்டினருக்குத் தம[illegible] மீதுள்ள ஆர்வமும், மேன்மையும் புலப்ப[illegible] அம்மையார் அளித்த[illegible]யின் மூலம் அவரின் உற்சாக[illegible] அவருக்குத் தமிழின் மேல் உ[illegible] ஆர்வமும் படிப்பவரை வியக்கச் செய்கின்றது. தமிழ் நாட்டில் தமிழை எதிர்ப்பவர்கள் இக் கட்டுரையினைப் படித்துத் தங்களின் கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டும். இதற்கு வழிவகுத்த 'தமிழரசு'-க்கு மிக்க நன்றி.

கு. லீலா, மணியக்காரன்பட்டி.

கவிஞர்களின் வேண்டுகோள்.

டிசம்பர் முதல் இதழில் இடம்பெற்ற ''காணக் குளிர்ந்ததே கண்'' ஈற்றடி வெண்பாக்கள் யாவும் பழந் தமிழ்ப் பாங்கும் புதுமை நோக்கும் உடையதாக அமைந்திருந்தன.

இவ்வெண்பாப் போட்டியில் வெளியிடத் தகுதி பெற்ற எல்லா வெண்பாக்களையும், பின்பு நிரல்படத் தொகுத்து வெளியிட்டால் மிகச் சிறப்புடையதாக இருக்கும். அவ்வாறு நூல் வடிவில் வெளியிட ஆவன செய்யுமாறு கவிஞர்கள் சார்பில் வேண்டிக் கொள்கிறேன்.

அண்ணுதாசன், மானமதுரை

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர் : அச்சக, எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.

[illegible]

மலர் 1 இதழ் 1-12

ஜனவரி-டிசம்பர் 1970

டெல்லி

1970

ஏம்பா! ஒரு டாக்சி வாங்கிடறதுதானே! ஏன் இதில் இவ்வளவு துன்பப்படணும்?
பணத்துக்கு எங்கேம்மா போவேன்?
இரண்டாயிரம் ரூபாய் இருந்தா தமிழ்நாடு டாக்சி டிரைவர்கள் கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்து புது டாக்சி வாங்கிடலாமே!
இரண்டாயிரமா? அடேயப்பா!
என்னப்பா இந்த வயசிலே வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாதவன் போல பேசறியே! நீ இப்போ எவ்வளவு சம்பாதிப்பே...!
தினம் நாலு, ஐந்து ரூபாய் கிடைக்கும்.

கொஞ்சம் சிரமப்பட்டுப் பணம் சேர்த்து முதலில் இரண்டாயிரம் கட்டினா டாக்சி தருவாங்க. அப்புறம் மீதிக் கடனை அடைக்கலாம்.
எப்படியாம்மா? அந்தக் கூட்டுறவு ஆபீசு எங்கே இருக்கு
சேப்பாக்கத்திலே இருக்கு! முதலில் இரண்டாயிரத்தைச் சேரு!
அம்மா சொன்னமாதிரி எப்படியாவது வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிப் பணம் சம்பாதிச்சு டாக்சி வாங்கிட றேன் இது உறுதி! வர்றேம்மா!
சில ஆண்டுகளுக்குப் பின்...
யாரு?
நான்தாம்மா! வடிவேலு! அம்மா யோசனைப்படி டாக்சி வாங்கிட்டேன், நீங்கதான் முதல் சவாரி! வாங்க ஆபீசிலே விட்டுடறேன்!
FOR HIRE
கோ...

Registered No. M. 8657